# விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியும் முதலாளித்துவத்தின் முரண்பாடுகளும்

புத்தகம்—1

முதலாளித்துவத்தின் முரண்பாடுகளும்
கம்—1

# விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியும் முதலாளித்துவத்தின் முரண்பாடுகளும்

## புத்தகம்-1

NORWAY
SIGNATURE
EELAN BOOKS

சர்வதேச தத்துவார்த்த மாநாடு மாஸ்கோ
21-23 மே, 1979

EELAN BOOKS
SIGNATURE
NORWAY

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
41-பி, சிட்கோ எஸ்டேட், சென்னை-600 098

முதற்பதிப்பு : மே, 1988
உரிமைப் பதிவு

Code No. B 254

தமிழாக்கம் :
டாக்டர் சி. இராமகிருஷ்ணன்

Tamil Translation of
THE SCIENTIFIC TECHNOLOGICAL
REVOLUTION AND THE
CONTRADICTIONS OF CAPITALISM

Original Published by
PROGRESS PUBLISHERS, MOSCOW

செட் விலை : ரூ. 50-00 (இரண்டு பாகங்கள்)

அச்சிட்டோர் :
ஜீவோதயம் அச்சகம்,
சென்னை-600 005

## சர்வதேச தத்துவார்த்த மாநாடு, மாஸ்கோ, 21-23, மே. 1979

ஆசிரியர் குழு :

கலைக்கழக உறுப்பினர் என். என். இனோசெம்ட்சேவ்
—தலைமைப் பதிப்பாசிரியர்

வி. ஏ. மார்ட்டினோவ், முனைவர், விஞ்ஞா.
—(பொருளாதாரம்) துணைப் பதிப்பாசிரியர்

ஓ. என். பைக்கௌவ், முனைவர், விஞ்ஞா. (வரலாறு)

ஜி. ஜி. டிலிஜின்ஸ்கி, முனைவர், விஞ்ஞா. (வரலாறு)

ஐ. டி. ஐவனோவ், முனைவர் விஞ்ஞா. (பொருளாதாரம்)

கே. ஜி. கொலோட்கோவ்ஸ்கி, வேட்பாளர், விஞ்ஞா.
(வரலாறு)

ஜி. ஐ. மிர்ஸ்கி, முனைவர், விஞ்ஞா. (வரலாறு)

எஸ். எம். நிகிடின், முனைவர், விஞ்ஞா. (பொருளாதாரம்)

ஏ. ஐ. ஷாபிரோ, வேட்பாளர், விஞ்ஞா. (பொருளாதாரம்)

பதிப்பாசிரியர் கலைக்கழகச் செயலாளர்

எல். எஸ். வொரோன்கோவ், வேட்பாளர், விஞ்ஞா.
(வரலாறு)

## பொருளடக்கம்

## விஞ்ஞான – தொழில் நுட்பப் புரட்சியின் பொதுப் பிரச்சினைகள்


பக்கம்

**பி. என். பொனமரேவ்** தொடக்கவுரை 1

சோவியத் ஒன்றியத்தின் விஞ்ஞான கழகத்தின் உலகப் பொருளாதாரம் - சர்வதேச உறவுகள் நிறுவனத்தின் ஆராய்ச்சிக் கட்டுரை

உலகில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் சாரமும், விதிகளும் 33

**என். என். இனோசெம்ட்சேவ்**

இன்றைய நிலையில் விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியும், முதலாளித்துவத்தின் பொருளாதார, சமூக-அரசியல் முரண்பாடுகள் ஆழமாதலும் 142

**பேராசிரியர். ஆட்டோ ரீன்ஹோல்ட்**

விஞ்ஞான—தொழில் நுட்பப் புரட்சியும், முதலாளித்துவத்தின் பொருளாதார, சமூக முரண்பாடுகள் தீவிரமடைதலும் 165

**பேராசிரியர். தாவோ வான் தப்**

விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியும், ஏகாதிபத்தியத்தின் பிற்போக்குக் கொள்கைகளும், சீன எல்லை விரிவுப் பிற்போக்குக் கொள்கைகளும் 182

**பேராசிரியர். ஜாக்குவெஸ் நாஜெல்ஸ்**

மேற்கு ஐரோப்பாவின் தொழிலிலும், விவசாயத்திலும், விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் விளைவுகள் 192

**கலைக்கழக உறுப்பினர். ரடோவன் ரிச்டா**

அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் கீழ் விஞ்ஞானத்தின் எதிர்காலம் 202

**டி. டி. டிமோ:பியேவ்**

விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின்சமூக இயல்புகளும், தொழிலாளி வர்க்கமும் 218

**கிரிகோரியாஸ் :பராக்கோஸ்**

விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின்மீது கிரேக்கப் பொருளாதாரத்தின் வளர்ந்துவரும் சார்புநிலை 231

**பேராசிரியர். ஜோசப் நைபிலாஸ்**

முதலாளித்துவத்தின் கீழ் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சிச் சாதனைகளின் பயன் 242

**பெர்ட் ராமெல்சன்**

விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் பொருளாதார, சமூக விளைவுகள் 249

**பேராசிரியர். ஒ.என். பைக்கோவ், டி.எஸ்.சி. (வரலாறு)**

விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியும், போர், சமாதானம் ஆகியவை பற்றிய பிரச்சினையும் 260

**பேராசிரியர். ட்யூடோரெல் போஸ்டோலாசி**

முதலாளித்துவ முறை நெருக்கடியின் இன்றைய படிநிலையும், புதிய சர்வதேச பொருளாதார ஒழுங்கமைப்பை நிறுவுவதன் பிரச்சினைகளும். 271

**ஜெய்மிஃபுச்**

லத்தீன் அமெரிக்காவின் பிரச்சினைகள் 295

**சில்வானோ ஆண்டரியானி**

விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியும், முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளி வர்க்கத்தின் நிலையும் 299

**பேராசிரியர். யுடாக்கா ஃபுகுடா**

விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியும், தொழிலாளி வர்க்கமும் 314

**பேராசிரியர். மில்கோ டாஸ்கலோவ்**

விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியும், அரசு ஏகபோக ஒழுங்கு முறையின் நெருக்கடியும் 327

**யுஜினியோ ட்ரையானா**

விஞ்ஞான - தொழில் நுட்ப சாதனைகளும், இன்றைய ஸ்பெயின் நாட்டு முதலாளித்துவமும் 344

**ஹென்ரிக் சோலஜ்**

ஒரு நேரடியான உற்பத்தி சக்தியாக விஞ்ஞானம் வளர்வதன் இயக்கவியல். 351

**ஜீன் சார்லஸ்ருபர்ட்**
**பெர்னாட் மார்க்ஸ்**

பிரான்சில் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியும், அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் நெருக்கடியும், நெருக்கடியிலிருந்து மீளும் வழிகளும். 357

## விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியும், தொழில் சார்ந்த மறுஉற்பத்தித் தொடர்பான பிரச்சினைகளும்

**பேராசிரியர். லுட்ஸ் மையர்**

நெருக்கடியின் இயல்பும், அரசு-ஏகபோகக் கட்டுப்பாட்டு வளர்ச்சியில் சில புதிய போக்குகளும் 388

**டாக்டர் மிரோஸ்லாவ் ரம்ளர்**

அரசு-ஏகபோக ஒழுங்குமுறையின் இன்றைய நெருக்கடியில் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியும், அதன் சாரமும், பங்கும் 410

**சாம். ஆரோ னோவிச்**

முதலாளித்துவத்தின் கீழ் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி பற்றிய ஆராய்ச்சியின் சில செய்முறை நூல் கூறுகள் 426

**பேராசிரியர் ஜாக்குவெஸ் நாஜெல்ஸ்,**
**கிளாடின் சைப்ரஸ்.**

நெருக்கடி நிலைகளில் ஐரோப்பிய பூர்ஷ்வாக்களின் பொருளாதார, சமூகக் கொள்கைகளும், அரசியல் மறுசீரமைப்பு செய்தலும், ஏகபோக "சிக்கனமும்", வீணாக்குதலும், ஒன்றிணைந்த பன்னாட்டுச் செயல் முறையின் வளர்ந்துவரும் முக்கியதத்துவமும் 433

**ரால் கொன்சாலஸ் சொரியானோ**

மட்டான வளர்ச்சி பெற்றுள்ள முதலாளித்துவ நாடுகளில் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் பொதுவான சிறப்பியல்புகள் 466

**பேராசிரியர். எஸ். எம். நிகிடின்**

விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியும், முக்கியமான முதலாளித்துவ நாடுகளில் ஆராய்ச்சியும், மேம்பாடும் 482

**பேராசிரியர் கிறிஸ்டோஸ் ஃபாண்டுலிஸ்**

விஞ்ஞான - தொழில் நுட்ப முன்னேற்றமும், முதலீட்டுக் கொள்கையும் 495

**பேராசிரியர். வி. ஏ. மார்ட்டினோவ்.**

இன்றைய வளர்ச்சிப் படிநிலையில் முதலாளித்துவ முறையில் காணப்படும் முரண்பாடுகள் தீவிரமடைதல் 514

**டாக்டர் ஹெல்மட் பெர்ன்ட்**

*1970 களில் தொழிற் பொருட்கள் மிகுதியாகக் குவிந்த பிரச்சினையின் சில கூறுகள்.* 531

**பேராசிரியர். ஐ. ஏ. சோகோலோவ்**

*முதலாளித்துவத்தின் இன்றைய முரண்பாடுகள்* 539

**டாக்டர் காடலின் சாபோ**

*முதலாளித்துவ வாணிப நிலையங்களிடையே பல்வகைப்படுத்துதல்.* 552

**ஜான் பிட்மான்**

*அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மீது விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் தாக்கம்* 572

**பேராசிரியர். வி. எம். யுசோஸ்கின்**

*விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியும், இன்றைய முதலாளித்துவத்தில் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பணவீக்கமும், முரண்பாடுகளும்* 58[illegible]

**பேராசிரியர் ஸ்வெட்டோஸ்லாவ் ரௌபால்**

*விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியும், முதலாளித்துவத்தின் முரண்பாடுகள் தீவிரமடைவதும்* 598

**போ தியோ**

*கட்டமைப்பு நெருக்கடியின் காரணங்களும், நெதர்லாந்து நாட்டில் பொருளாதாரக் கொள்கை தொடர்பான பிரச்சினைகளும்.* 609

**பேராசிரியர் யு. வி. ஷிஷ்கோவ்**

*விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியும், முதலாளித்துவப் பொருளாதார சூட்சுமத்தில் இன்றைய நெருக்கடியும்.* 624

**பேராசிரியர் எம். எம். மாக்சிமோவா.**

விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியும், இன்றைய முதலாளித்துவத்தின் வெளிநாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளும் 637

**பேராசிரியர் ரோமன் மோல்டாவன்**

விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியும், சர்வதேச பொருளாதாரக் கூட்டுறவைத் தீவ்ரப்படுத்துவதன் அவசியமும் 649

**பேராசிரியர் டிபர் பாலன்காய்**

விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி: இன்றைய படிநிலையில் முதலாளித்துவத்தின் பொருளாதார-சமூக முரண்பாடுகள் 655

**பேராசிரியர். வி. என். ஷெனயேவ்**

விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியும், மூன்று ஏகாதிபத்தியப் போட்டி மையங்களுக்கிடையில் நிலவும் முரண்பாடுகளும் 676

**டாக்டர் ஸ்டாயில் கோட்சேவ்**

விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி: ஏகாதிபத்தியங்களுக்கிடையே நிலவும் முரண்பாடுகளை ஆழப் படுத்துகிற ஒரு காரணி 687

**பேராசிரியர். பி. ஐ. க்வாய்நிக்**

ஏகாதிபத்தியமும், வளரும் நாடுகளும்: சர்வதேச பொருளாதார உறவுகளில் போராட்டத்திற்கான விருப்பத்திற்கும், சமரச இணக்கத்திற்கான விருப்பத் திற்குமிடையில் நிகழும் போராட்டம் 694

**வி. ஜி. பாவ்லோவ்**

இயற்கை வளங்கள் பற்றிய உலகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் சோஷலிச நாடுகளின் பங்கு 709

**ஏ. ஜி. மிலேய்க் கோவ்ஸ்கி**

பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரமும், விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியும் 719

**டாக்டர். மோனிகா செஸ்டக் கோவா**

ஏகபோக மூலதன மறு உற்பத்தியின் மீது, விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் செல்வாக்கு தொடர்பான பூர்ஷ்வாக்களின் கருத்துகளைப் பற்றிய திறனாய்வு 737

**கே. பி. கோஸ்லோவா**

1970 களில் பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்தில் ஏற்பட்ட நெருக்கடியும், பொருளாதார சிந்தனை வளர்ச்சியில் புதுமையான போக்குகளும் 749

**ஐ. எஸ். காரோலேவ்**

பணவியல் உறவுகளின் செயற்களத்தில் அரசு ஏகபோகக் கட்டுப்பாட்டின் நெருக்கடி 761

விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியும், இன்றைய படிநிலையில் முதலாளித்துவத்தின் பொருளாதார, சமூக, அரசியல் முரண்பாடுகள் மோசமாதலும் என்ற தலைப்பில் அமைந்த சர்வதேசத் தத்துவார்த்த மாநாடு சோவியத் யூனியன் விஞ்ஞானக் கலைக்கழகத்தின் உலக பொருளாதாரம், சர்வதேச உறவுகள் நிறுவனத்தில் 1979-ம் ஆண்டு மே மாதம் 21-23 தேதிகளில் நிகழ்ந்தது.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டிப் பொலிட்டிக்கல் பீரோவின் மாற்று உறுப்பினரும், சோவியத் யூனியல் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக்கமிட்டிச் செயலாளருமான கலைக்கழக உறுப்பினர் போரிஸ் பொனமரேவ் அவர்கள் மாநாட்டைத் துவக்கி வைத்தார்கள். சர்வாங்கக் கூட்டத்தில் உலக பொருளாதாரம், சர்வதேச உறவுகள் நிறுவனத்தின் டைரக்டரான கலைக்கழக உறுப்பினர் நிக்கோலய் இனோசெம்ட்சேவ் அவர்கள் ஓர் அறிக்கையை சமர்ப்பித்தார்கள்.

சோவியத் யூனியன் விஞ்ஞானக் கலைக்கழகம் மாஸ்கோ பல்கலைக்கழகம், லெனின்கிராட் பல்கலைக்கழகம், இன்னும் இவைபோன்ற உயர்கல்வி சார்ந்த நிறுவனங்களிலிருந்து வந்த சிறப்புமிகு சோவியத் சிந்தனையாளர்கள் ஆய்வுரைகளை வாசித்தளித்தனர்.

சோஷலிச நாடுகளிலிருந்து பிரதிநிதிக் குழுவினர் வந்திருந்தனர். கம்யூனிஸ்ட் கட்சிகள், தொழிலாளர் கட்சிகளிலிருந்து 28 பிரதிநிதிகள் வந்து கலந்து கொண்டனர். முதலாளித்துவ நாடுகளிலிருந்தும், வளரும் நாடுகளிலிருந்தும் அறிஞர் பலர் வந்து பங்கேற்றனர்.

பின்வரும் மூன்று பிரிவுகளாக நடந்தது மாநாடு :

**1. விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியும், மறுஉற்பத்தியின் பிரச்சினைகளும்.**

**2. விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியும், முதலாளித்துவத்தின் சமூக, பொருளாதார முரண்பாடுகள் மோசமாதலும்.**

**3. விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியும், மனித இனத்தின் உலகளாவிய பிரச்சினைகள் கடுமையடைதலும்.**

கூட்ட நடவடிக்கைகளின் பிரசுரத்திற்குப் பொறுப்பானவர்கள் **ஏ. ஐ. பெலயேவ், எஸ் ஐ. கப்ரனோவ், ஏ.எம். கரபாஷ்கின், ஐ.வி.காமனேவ், ஏ. பி. ஒக்னேவ், ஐ. ஒய். ஷெய்மான் ஆகியோர் ஆவர்.**

# விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் பொதுப் பிரச்சினைகள்

**பி. என். பொனமரேவ்.**

*பொலிட் பீரோ மாற்று உறுப்பினர், சி. பி. எஸ். யு. மத்திய கமிட்டிச் செயலாளர், கலைக்கழக உறுப்பினர்.*

## தொடக்கவுரை

மதிப்பிற்குரிய தோழர்களே,

ஒரே சீராக வளர்ந்துவரும் சமாதானம், சமூக முன்னேற்றம் ஆகியவற்றிற்கான இயக்கத்திற்கு எந்தப் பிரச்சினைகளைப் பற்றிய ஆராய்ச்சி இன்றியமையாது தேவைப்படுகிறதோ அந்தப் பிரச்சினைகளுக்காகவே இந்த மகாநாடு நடத்தப்படுகிறது. உலகின் புரட்சிப் போக்கின் பொதுவான போக்கின் தொடர்பிலே இந்தப் பிரச்சினைகளை விரித்துரைப்பதற்கு சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி மாபெரும் முக்கியத்துவம் அளிக்கிறது.

சோஷலிச சமூகத்தைச் சேர்ந்த நாடுகள் புதிய பொருளாதார, சமூக முன்னேற்ற எல்லைகளை அடைந்துள்ளன. அவைகளிடையே இன்னும் நெருக்கமான ஒத்துழைப்பு ஏற்பட்டுள்ளது.

முதலாளித்துவ நாடுகளில் உள்ள தொழிலாளி வர்க்கத்தினராலும், தேசிய விடுதலை இயக்கத்தினாலும் நாம் கண்டறிந்து கொள்ளக்கூடிய வகையில், இன்றைய உலகின்

சமூக அரசியல் மாற்றங்களுக்கான பணி ஆற்றப்பட்டு வருகிறது.

இந்த அனைத்துத்துறைகளிலும் இன்றைய பிற்போக்கு சக்திகளின் வல்லரணாகவும், தோற்றுவாய் ஆகவும் விளங்குகிற ஏகாதிபத்தியத்திடமிருந்து முற்போக்கு சக்திகள் எதிர்ப்பைச் சந்திக்கின்றன. ஏகாதிபத்திய அமைப்பினுள்ளே நடைபெறும் புறநிலையான சமூக-பொருளாதார நிகழ்ச்சிப் போக்குகளைப் பற்றிய சரியான அறிவைப் பெறுவது தொழிலாளி வர்க்கத்தின் நலன்களுக்காகவும், உழைக்கும் மக்களின் நலன்களுக்காகவும் போராடி வருகிற கம்யூனிஸ்டு களுக்கு மிகவும் இன்றியமையாததாக விளங்குகிறது. விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியையும் அதன் விளைவு களையும் பற்றி சரியாக அறிந்து கொள்வது குறைவான பங்கு கொண்ட விஷயமல்ல. நெருக்கடிகளுக்குக் காரணம் என்ன? அதன் தோற்றுவாய்கள் எவை? இந்த ஆயுதப் போட்டிக்குக் காரணம் என்ன? இந்த வேலை இல்லாத் திண்டாட்டத்திற்கும், வாழ்க்கைச் செலவுகள் உயர்ந்து கொண்டே போவதற்கும் காரணங்கள் எவை என்று பல்லாயிரக்கணக்கான மக்கள் கேட்கின்றனர். விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியினால் மோசமாக்கப்பட்டுள்ள அல்லது வெளிப்படுத்தப்பட்டுள்ள முரண்பாடுகளைப் பற்றி ஆராய்வது, இவையனைத்தின் உண்மையான காரணங்களை அறிந்து கொள்ளவும் உதவும். அத்துடன் உழைக்கும் மக்களின் நலன்களுடன் ஒத்திசைவானதும், சர்வதேசப் பதற்றத்தணிவு நடவடிக்கைகளை ஒன்றிணைக்கும் வேலை யுடன் ஒத்திசைவானதும், சோஷலிச அடிப்படையில் சமுதாயத்தை மாற்றியமைப்பதற்கான போராட்டத்தை முன்னேற்றுவதனுடன் ஒத்திசைவானதுமான ஒரு பொருளாதாரக் கொள்கையை நிறைவேற்றவும் உதவும்.

விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் பிரச்சினை களைப் பற்றியும் சோஷலிச சூழ்நிலைகளிலும், முதலாளித்துவ சூழ்நிலைகளிலும், அதன் முக்கியமான

பங்கைப்பற்றியும், சோவியத் கம்யூனிஸ்ட்கட்சி தொடர்ந்து தன்கவனத்தைச் செலுத்தி வருகிறது. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 23, 24 வேலைத்திட்டத்திலும், 23, 24, 25-வது கட்சிக் காங்கிரஸ்களின் ஆவணங்களிலும், நவீன காலங்களின் இந்த மாபெரும் வளர்ச்சி பற்றிய அடிப்படை மதிப்பீடுகள் செய்யப்பட்டுள்ளன. சோவியத் அறிஞர்கள் இதுபற்றித் தொடர்ச்சியாகவும், பல்வேறு கோணங்களிலிருந்தும், ஆராய்ந்து வருகிறார்கள். நாங்கள் எங்கள் சகோதரக் கட்சிகள் இந்தப் பிரச்சினைகளைப்பற்றி மேற்கொண்டுள்ள ஆராய்ச்சிகளையும் மிகவும் கவனமாகப் பின்பற்றி ஆராய்ந்து வருகிறோம். சென்றகால அனுபவத்தின் அடிப்படையில் பார்த்தால், மார்க்சிய—லெனினிசப் பகுத்தாய்வின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளும், முன்னறிவிப்புகளும் முழுதும் உண்மையானவைதான் என்று நிரூபிக்கப்பட்டுள்ளன. இதில் சந்தேகத்திற்கிடமில்லை.

இப்பொழுதெல்லாம் விஞ்ஞான - தொழில்நுட்பப் புரட்சியின் சில அம்சங்கள் மிகவும் தெளிவாக வெளிப்பட்டுள்ளன என்பதையும், வேறு சில அம்சங்கள் இப்பொழுதுதான் மேலெழுந்து வெளிப்படுகின்றன அல்லது உருவெடுத்து வருகின்றன என்பதையும் நாம் அனைவரும் அறிவோம். எனினும் இப்பொழுதே கூட பொருளாயத உற்பத்தியிலும், சமூக அரசியல் வளர்ச்சியிலும் அதன் மிகப் பெரும செல்வாக்கைப்பற்றிப் பேச இயலும்.

**விஞ்ஞான-தொழில் நுட்பப்புரட்சியின் உள்ளடக்கத்தைக் கீழ்க்கண்டவாறு வரையறுத்துக் கூறலாம் :**

—பொருளாதாரத்தில் விஞ்ஞானத்தின் பங்கில் பெரும் புரட்சிகரமான மாற்றங்கள்; அதை உடனடியான உற்பத்தி சக்தியாக மாற்றுதல்.

—உற்பத்தியின் தொழில்நுட்பத் துறையில் பெரும் மாறுதல்கள், அடிப்படையில் புதிதான சக்தி மூலங்கள்,

உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கில் உழைப்பின் இயல்பையும், மனிதனின் இடத்தையும் மாற்றக்கூடிய தானியங்கி மயமாக்குதல்.

—மன உழைப்பின் உற்பத்தித்திறனை வளர்த்து, விஞ்ஞான வழியில் சமூக நிகழ்ச்சிப் போக்குகளின் நிர்வாகத்தை நடத்துவதற்கான பொருளாயத, தொழில் நுட்ப அடிப்படைகளை அமைக்கும் சைபர்நாட்டிக் துறையை வளர்த்தமைத்தல்.

—மனித செயல்களின் அனைத்துத் துறைகளிலும் விஞ்ஞானமும், தொழில் நுட்பமும் ஆற்றும் பங்கில் ஏற்பட்டுள்ள மாபெரும் மாற்றங்கள்.

விஞ்ஞான–தொழில் நுட்பப் புரட்சி என்பது அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு சமுதாய நிகழ்ச்சிப் போக்கு என்பதனால், உற்பத்தி சக்திகளில் நிகழ்ந்துள்ள மாற்றங்களைப் பற்றி மட்டுமே ஆராய்ந்தறிவதுடன் நிறுத்திக் கொள்ளக் கூடாது. அதனுடைய வர்க்க உள்ளடக்கம் பற்றிய பிரச்சினைகளும், விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றத்துக்குப் பின்னால் உள்ள தூண்டுகோல் களைப் பற்றிய பிரச்சினைகளும், பல்வேறு சமூக சூழ்நிலை களில் அவற்றின் சாதனைகள் பயன்படுத்தப்படும் வழி முறைகளும்கூட மிகவும் இன்றியமையாதனவாகும்.

18-வது நூற்றாண்டிலும், 19-வது நூற்றாண்டிலும் நிகழ்ந்த தொழிற்புரட்சியும், அதன் விளைவாகத் தோன்றிய விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றங்களும், பூர்ஷ்வா சமுதாய உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியின் ஒரு வடிவமே ஆகும். இப்போது விஞ்ஞான-தொழில் நுட்பத் துறைகளின் மீது முதலாளித்துவம் செலுத்தி வந்த ஏகபோக உரிமை முற்றுப்பெற்று விட்டது. இன்று விஞ்ஞான-தொழில்நுட்பப் புரட்சியானது சோஷலிசத்திற்கும், முதலாளித்துவத்திற்கும் இடையிலான ஒரு போட்டிக்களமாக இருக்கிறது;

வரலாற்றுப் போர்க்களமாகவும் இருக்கிறது. லியோனித் பிரெஷ்னேவ் குறிப்பிட்டதைப் போல, "நவீன ஏகாதிபத்தியத்தின் பல முக்கியமான முனைப்புக் கூறுகள் என்பவைகள், அது புதிய சூழ்நிலைகளுக்கு ஏற்பவும், இரண்டு சமுதாய அமைப்பு முறைகளுக்கிடையே நடைபெறும் போராட்டச் சூழ்நிலைகளுக்கேற்பவும் தன்னைத் தானே தகவமைத்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளாகிறது என்ற உண்மையினால் விளக்கப்படக்கூடியவைகளாக இருக்கின்றன"[1]

இந்தப் போராட்டத்திலே சோஷலிசமானது பல முக்கியமான விஞ்ஞான தொழில் நுட்பத்துறைகளின் தலைமையையும், திசைகளின் தலைமையையும் கைப்பற்றிக் கொண்டு விட்டது.

**ஏகாதிபத்தியத்தின் பொருளாதாரத்திலும் சமூக உறவுகளிலும் அரசியல் நெறியிலும் விஞ்ஞானத் தொழில் நுட்பப் புரட்சியின் முக்கியமான விளைவுகளை** சுருக்கமாக வரையறுத்துக் கூற முயன்றால் அவைகளைக் கீழ்க்கண்டவாறு கூறலாம்.

—உலகில் தன்னுடைய நிலைமையைக் காப்பாற்றிக் கொள்வதற்கும், தன்னுடைய அமிதலாபத்தைப் பன்மடங்கு பெருக்கிக் கொள்வதற்கும், உழைக்கும் மக்களைச் சுரண்டுவதைத் திறமை மிக்கதாக ஆக்குவதற்கும், அரசு - ஏகபோக முதலாளித்துவத்தினால் வேணடுமென்றே தூண்டிவிடப்பட்ட விஞ்ஞான - தொழில் நுட்ப வளர்ச்சி.

—முன் என்றுமில்லாத வகையில் உற்பத்தி மற்றும் மூலதனத்தை ஓரிடத்தில் குவித்தல், புது வகையான ஏகபோகங்களின் மிகுதியாகப் பெருகிவரும் பங்கு—பன்னாட்டு இணையங்களின் தொகுதிகள்.

—பொருளாதார ஒன்றிணைப்பின் மூலமும், சர்வதேசத் தொழிற்பிரிவினையின் மூலமும் உற்பத்தியையும், பரிவர்த்

தனையயும் சர்வதேசமயமாக்குதலை விரைவு படுத்துவதும், உற்பத்தியின் தனித்துறை அமைப்பும்.

—மேலும் அதிகமான அளவில் நாடுகளிடையே முதலாளித்துவ வளர்ச்சியில் நிலவும் ஒரு சீரற்ற தன்மை, நவீன முதலாளித்துவப் பொருளாதார சக்திகளின் மூன்று மையங்களிடையே — அதாவது, அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா, ஜப்பான் என்ற நாடுகளாகிய அந்த மையங்களிடையே கூர்மையாகி வருகின்ற ஏகாதிபத்தியங்களுக்கிடையிலான போட்டி.

—மிகுதியாக வளர்ச்சியடைந்துள்ள முதலாளித்துவ அரசுகளுக்கும் புதிதாக விடுதலையடைந்துள்ள நாடுகளுக்குமிடையே பொருளாதார இடைவெளி அதிகரித்தலும், புதிய காலனியாதிக்கச் சுரண்டலின் பரவலும்.

—முக்கியமான சர்வதேச உறவுகளின் பிரச்சினையான போரும், சமாதானமும் பற்றிய பிரச்சினையைப் புதிய வரம்புக்குக் கொண்டு வந்து விடும்படியான போர்முறையில் ஏற்படும் ஒரு புரட்சி.

—முதலாளித்துவ முறையின் கீழ், கடுமையான சூழ்நிலை நெருக்கடி, ஆற்றல் நெருக்கடி, மூலப்பொருள் நெருக்கடி, உணவு நெருக்கடி ஆகிய நெருக்கடிகளை விளைவிக்கும் வகையில் மனிதனுக்கும், இயற்கைக்கும் இடையில் ஏற்படும் பரஸ்பர செயல் தொடர்புகள் மோசமடைதல்

—இவையனைத்தின் விளைவாகவும், உற்பத்தியின் சமூகத்தன்மைக்கும், முதலாளித்துவச் சுரண்டல் வடிவத்திற்கும் இடையில் முரண்பாடு கூர்மையடைதலும், அதையொட்டி, சமூக ரீதியான எல்லா விரோதங்களும் வளர்ச்சியடைதலும். குறிப்பாக உழைப்புக்கும், மூலதனத்திற்கும் இடையிலான விரோதம்.

**இராணுவ இயந்திரம் மூலம் சமுதாயத்தின் இயற்கைச் செல்வங்களைப் பெருமளவில் வீணாககுவது,** வரலாற்று

அடிப்படையில் வழக்காறற்றுப்போனதன் மிகவும் தெளிவான, முன்னெச்சரிக்கை செய்கிற வெளிப்பாடாகவும், எனவே தீவிரமான மக்கள் எதிர்ப்புச் செயலாகவும், எனவே மனிதத் தன்மையற்றதாகவும் உள்ள முதலாளித்துவத்தின் இயல்பாக விளங்குகிறது. விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் சாதனைகளின் விளைவாக நமக்களிக்கப் பட்டுள்ள சிறந்த வாய்ப்புகளுக்கும், முதலாளித்துவ முறையின் கீழ் அவைகள் பயன்படுத்தப்படும் முறைகளால் தோற்றுவிக்கப்படும் அபாயங்களுக்குமிடையே தலையை கிறுகிறுக்கச் செய்யும் வேறுபாடுகள் உள்ளன.

முதலாளித்துவ நாடுகளில் ஏற்பட்டுள்ள விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றத்திற்கும், ஏகாதிபத்திய இராணுவ முஸ்தீபுகளுக்குமிடையேயுள்ள உட்தொடர்பைப் பற்றிப் பேசும் பொழுது, மார்க்சும்—எங்கெல்சும், போர்க் கருவிகளுக்கும், உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்குமிடையே யுள்ள தொடர்பைப்பற்றி மிகவும் சிறப்பாக விளக்கி யுள்ளதை நினைவு கூர்வது ஏற்புடையதாகும். "இராணுவம் மற்றும் கப்பற்படையைத்தவிர வேறு எதுவும் இவ்வளவு தெளிவாக, அதிகமாக பொருளாதார முன்தேவைகளைச் சார்ந்திருக்கவில்லை. அனைத்திற்கும் மேலாக ஆயுதங்கள், கூட்டுச் சேர்க்கைகள் அமைப்பு, யுத்தி, தந்திரங்கள் அனைத்தும் அந்த நேரத்தில் உற்பத்தியிலும், செய்திப் போக்குவரத்திலும் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களைச் சார்ந்துள்ளன"[2] என எங்கெல்ஸ் 'டூரிங்குக்கு மறுப்பு' என்ற நூலில் எழுதினார்.

எங்கெல்ஸ் இந்த உட்தொடர்பின் மறுபக்கத்தையும் தெளிவாக விளக்கினார். அதாவது விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றத்தில் இராணுவத் தன்மை நிறைந்த புரட்டுதலைத் தோற்றுவிக்கிற முரண்பட்ட சமுதாய அமைப்புகளை உடைய சமுதாயங்களில் "மனிதனைக் கொன்று குவிக்கும்" தொழில் பெற்றிருந்த சிறந்த முக்கியத் துவத்தை விளக்கினார்.

இன்றையநாட்களில் ஏகாதிபத்தியம், இதுவரை என்றும் கண்டிராத அளவு போர்க்கருவிகளையும், இயந்திரங்களையும் தயாரித்துள்ளது. அவர்களது அணு ஆயுதக் கிடங்கில் உள்ள கையிருப்பின் அளவு அவர்கள் ஹிரோஷிமாவில் போட்ட அணுகுண்டின் அழிவு சக்திபோல இரண்டு மில்லியன் மடங்கு அதிகமான அழிவு சக்தி கொண்டவை யாகும். ஏகாதிபத்திய நாடுகளில் விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சிக்காக ஒதுக்கப்பட்ட நிதியின் ஒருபெரும் பகுதி. இராணுவ நோக்கங்களுக்காகவே செலவு செய்யப் படுகின்றன. இந்த விஞ்ஞான சிந்தனைகளின் பயன்கள் அனைத்தும் இராணுவப் பெருக்கம் என்ற மலோச் தெய்வத் தின் சிலையால் (குழந்தைகளைப் பலிகொண்ட செமிடிக் இனத்தவரின் சிலை) விழுங்கப்படுகிறது. நேரடியாக இராணுவத்துறையில் வேலைக்கமர்த்தப்பட்ட 400,000 பலம்கொண்ட விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள் மற்றும் சிறப்புத்துறைத்திறன் பெற்றோரையும் உள்ளடக்கியதாக உள்ளது.

குன்றெனக் குவிக்கப்பட்டுள்ள இந்தப் பெருமளவு ஆயுதங்களைச் சேகரிக்க, ஏகாதிபத்திய நாடுகளால் செலவழிக்கப்படும் தொகை தவிர்க்க முடியாதவாறு வளர்ந்து கொண்டே போகிறது. 1949-லிருந்து 1977 வரை நேடோ நாடுகளின் இராணுவச் செலவுகள் 19, 400, 000, 000 டாலரிலிருந்து 174, 700, 000, 000 டாலராக வேகமாக உயர்ந்துள்ளது.

1978 மே மாதத்தில் ஐ. நா. பொதுச்சபையின் ஆயுதக் களைப்பைப்பற்றிய தனிச் சிறப்பான கூட்டம் நியூயார்க்கில் நடந்து கொண்டிருந்த நேரத்தில் நடந்த நேடோ கவுன்சில் 1993 வரைக்குமான ஒரு நீண்டகால ஆயுதப் பெருக்கம் பற்றிய திட்டம் ஒன்றை அங்கீகரித்தது. அந்தத் திட்டத்தின் அடிப்படையில் நேடோ நாடுகள் தங்களுடைய இராணுவச் செலவை ஆண்டு ஒன்றுக்கு 3 சதவிகிதம் பெருக்கி

வருகின்றன. இராணுவ நோக்கங்களுக்காக மேலும் அதிகமாக 80, 000, 000, 000 டாலர்கள் செலவு செய்வ தென்ற தீர்மானமும் மேற்கொள்ளப்பட்டது.

மீண்டும், மீண்டும் மனித இனம் இந்த உலகிலேயே நிலவுவதற்கான சூழ்நிலைகளையே ஒழித்துவிடக் கூடிய ஓர் உலகப்போர் பற்றிய லெனினுடைய எச்சரிக்கையினைக் கருத்தில் கொள்ள வேண்டிய அவசியத்தை, விஞ்ஞான-தொழில்நுட்பப் புரட்சியின் சாதனைகளை இந்த இராணுவ வெறியர்கள் பெருங்கேடு விளைவிக்கும் முறையில் பயன் படுத்துவது, நமக்கு வலியுறுத்துகிறது. லெனின் இந்தப் பேராபத்தைப்பற்றி முதல் உலகப் பெரும்போரின் விளைவு களிலிருந்து உய்த்துணர்ந்தார். "வரலாற்றிலேயே முதன் முறையாக தொழில்நுட்பத்தின் சாதனைகள் இவ்வளவு பெருமளவில், இவ்வளவு அழிவுத்திறனுடன் பல கோடிக் கணக்கான மக்களின் உயிர்களை அழித்தொழிப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது."[3] என்று 1918-லேயே எழுதினார். சென்றகாலத்திய ஆயுதங்களின் அழிவுசக்தியைக் காட்டிலும் இன்றைய ஆயுதங்களின் பயங்கரமான அழிவு சக்தி மிக அதிகமாக வளர்ந்துள்ளது என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். அணுகுண்டுகளும், ஹைட்ரஜன் குண்டுகளும் முன்னரே இருக்கின்றன. இப்போது அவர்கள் நியூட்ரான் குண்டுகளையும் உற்பத்தி செய்யத் தொடங்கி யுள்ளனர். ஒருசில விநாடிகளில் ஏவுகணைகள் இந்தப் பூதாகாரமான அழிவு சக்திகளின் மொத்தங்களை ஆயிரக் கணக்கான கிலோ மீட்டர்கள் தாங்கி, விரைந்து, முன்னேறிச் செல்ல முடியும்.

பல தலைமுறைகளாகப் பயன்பட்டு வந்த ஆயுதங்கள் புதிய மிகவும் சக்கி வாய்ந்த, உறுதியாக அழித்துவிடும் தன்மை கொண்ட, விலை மதிப்புமிக்க ஆயுதங்களால் ஈடுசெய்யப்பட்டுள்ளன. சைபர்னெத்தியத்தின் அடிப் படையில் புதிய அமைப்புகளின் தொகுதிகள் மேம்பாடடையச் செய்யப்பட்டுள்ளன. இவைகளில் வழி

நடத்திச் செல்லும் ஏவுகணைகள் ஒருடஜன் அல்லது அதற்கு மேற்பட்ட தனித்தனி இலக்குகளைத் தாக்கக்கூடிய பல தலைகளைக் கொண்ட இயங்கும் MX ஏவுகணைகள், கடலிலிருந்து பயன்படுத்தக் கூடிய டிரைடென்ட் 2 அணுவாயுத ஏவுகணை முறை ஆகியவையும் அடங்கும். இந்த வகை நீர்மூழ்கிக்கப்பல்கள் 24ஏவுகணைகளைக் கொண்டவை. இவை ஒவ்வொன்றும் எட்டு அல்லது ஒன்பது வெவ்வேறு திசைகளில் சென்று தனித்தனி இலக்குகளைத் தாக்கக் கூடிய தலைகளைக் கொண்டவை. அழிவு சக்திகள் நிறைந்த, அடிப்படையிலேயே புதியவகை ஆயுதங்களான லாசர், மின்காந்த, இரசாயன மற்றும் பிறவகைக் கருவிகளையும் மேலும் கண்டுபிடித்து, வளமைப்படுத்துவதற்கான பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மனித இனத்தை அடியோடு ஒழித்துக்கட்டக் கூடிய இந்த சாதனங்களை உற்பத்தி செய்வதற்காகப் பயன்படும் பணம். ஒருநாளைக்கு 1,000,000,000 டாலர் என்ற அளவையும் கடந்து விட்டது. எனினும் கோடிக்கணக்கான மக்களின் வறுமையும், பட்டினியும் அப்படியேதான் இருந்து வருகிறது. வரலாறு காணாத மிக அதிகமான உற்பத்தித் திறன் பெருக்கமும், விஞ்ஞான - தொழில் நுட்ப முன்னேற்றமும், வளர்ச்சியடையாத பிற்பட்ட நாடுகளும் அருகருகில் காணப்படுவதையும் நாம் அறிவோம். முதலாளித்துவமும், ஏகாதிபத்தியமும், ஆயுதப் போட்டியும் அது தோற்றுவித்துள்ள உலகப்போர் அபாயமுமேதான் இந்த மாபெரும் குற்றங்களைச் செய்யும் குற்றவாளிகள்.

இந்த ஆயுதப் போட்டியைத் தோற்றுவிப்பது ஏகாதிபத்தியம்தான்; வேறுயாருமல்ல. ஏகாதிபத்தியம் வளர்த்துப் பெருக்கியுள்ள இராணுவத்தொழில் அமைப்புகள் ஏகாதிபத்தியத்தின் ஒன்று குவிக்கப்பட்ட ஆக்கிரமிப்பு இயல்பின் வெளிப்பாடேயாகும். எந்த விலையிலும் அமித லாபத்திற்கான போட்டியைத் தொடங்கியதில் முதன்மை யானதும் ஏகாதிபத்தியம்தான்.

பல ஆண்டுகளாக இராணுவ தொழிற்சாலை அமைப்பு களின் வளர்ச்சி, பொருளாதாரத்தை நிலையானதாக ஆக்கக் கூடிய ஒரு சக்தியுடையது என்றும், அது மக்களுக்கு வேலை கொடுக்க உதவுகிறது என்றும், சந்தையை விரிவு படுத்த உதவுகிறது என்றும் கருதப்பட்டது. "ஆயுதங் களைப் பெருக்குவதன் மூலம் வாழ்க்கையைச் சிறப்புறச் செய்வது" என்ற முழக்கத்தை நியாயப்படுத்துகிற கோட்பாடு ஒன்றுகூட இருந்தது. எனினும் உண்மையில் இந்த வாதங்கள் முழுமையும் அடிப்படை ஏதும்இல்லாதவை என்று, நிலவுகிற நடைமுறை தெளிவாகக் காட்டியுள்ளது. முடிவாக ஆராய்ந்து பார்த்தால் இராணுவமயமாக்குதல் உற்பத்திப்பெருக்கத்தை வளரவிடாமல் தடுத்ததுடன் மக்களுடைய வாழ்க்கைத்தரத்தைக் குறைக்கும் தன்மை கொண்டதாக இருந்தது.

1970-களில் நடந்த உலக முதலாளித்துவத்தின் நெருக் கடியில் ஏற்பட்ட முனைப்பான வளர்ச்சியினால் அனைவரும் அறியுமாறு வெளிப்பட்டவற்றால் இது மிகவும் தெளிவாகியது.

எந்தவித நெருக்கடியும் இல்லாத, ஒன்றிணைந்த பொருளாதார வளர்ச்சியையும், அனைவருக்கும் வேலை வாய்ப்பையும் அளிக்கக்கூடிய விஞ்ஞான மற்றும் தொழில் நுட்பங்களின் இன்றைய சாதனைகளால் புதிய ஒரு முதலாளித்துவம் தோன்றியுள்ளது என்று பூர்ஷ்வா மற்றும் சீர்திருத்தவாத சிந்தனைச் செம்மல்கள் 1950-களின் பிற்பகுதியிலும் 1960-களிலும் அறிவித்ததை நாம் அனைவரும் நினைவில் வைத்திருக்கிறோம்.

மேலை நாடுகளில் இன்று காணப்படும் அரசியல் போக்குகள் அனைத்திலும் பரவியுள்ள மனமகிழ்வூட்டுவ தான "முதலாளித்துவத்தின் பொருளாதார வித்தை"க்கு கம்யூனிஸ்ட்டுகள் மட்டுமே இரையாக மாட்டார்கள். முதலாளித்துவத்தின் வியத்தகு மாற்றங்கள் பற்றி

பூர்ஷ்வாக்கள் மிகவும் மகிழ்ந்து குலாவிய வேளையின் உச்சகட்டத்தில் நம்முடைய கட்சியின் 23-வது காங்கிரசில் சொற்பொழிவாற்றும்போது "முதலாளித்துவப் பொருளாதாரத்தினுள் இயல்பாகவே மறைந்து நிற்கும் அழிவு சக்திகள் இன்று கூடச் செயல்படத்தான் செய்கின்றன. புது எழுச்சியிலிருந்து அது தப்ப முடியாது"[4] என்று லியோனித் பிரெஷ்னேவ் கூறினார். 1970-களில் முதலாளித்துவத்தை மூழ்கடித்துக்கொண்டிருந்த நெருக்கடி நிகழ்ச்சிப்போக்கு என்ற சரிந்துவரும் பெரும் பனிப்பாறைபற்றி விஞ்ஞான பூர்வமாக முதன் முதலில் முன்னறிந்து கூறியவர்கள் என்று பெருமையுடன் கூறிக்கொள்ளும் உரிமையுடையவர்களாகக் கம்யூனிஸ்டுகள் இருக்கிறார்கள்.

மிக அதிகமாக வளர்ச்சியடைந்திருந்த அரசு ஏகபோக பொருளாதாரத்தையும் முக்கியமான நாடுகளையும், மையங்களையும் கூட ஒரே சமயத்தில் தாக்கிய 1974—1975-ல் தோன்றிய உலக பொருளாதார நெருக்கடிதான் போருக்குப் பிந்தியகாலத்தில் ஏற்பட்ட நெருக்கடிகளிலெல்லாம், நீண்டதும், படுமோசமானதும் ஆகும். முதலாளித்துவ உற்பத்தி முறையில் அடங்கிய இயல்பான பொருளாதார முரண்பாடுகள் 1970-களில் மிக அதிகமான, வழக்கத்திற்கு மாறாக ஆழ்ந்ததன்மை கொண்டதாகவும் ஆயிற்று என்பதைத் தெளிவாகக்காட்டியது. அதேவேளையில், **அதுவும் குறிப்பாக விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சியின் அடிப்படையில்,** மேலும் அதிகமான அளவு அதன் முரண்பாடுகளை ஆழப்படுத்தவும், எவ்வித ஐயப்பாடுமின்றி சிக்கல் நிறைந்ததாக ஆக்கவும் கூடிய, முதலாளித்துவ சமுதாயத்தில் நிலவுகிற அடிப்படையிலேயே புதுமையான பொருளாதார சூழ்நிலைகளின் மொத்தத் தொகுதிகள் தோன்றி வளர்ந்தன.

இந்த விஷயம் பற்றிப் பல்வேறு நாடுகளில் உள்ள மார்க்சீய சிந்தனையாளர்கள் திரும்பத்திரும்ப ஆராய்ந்து வருகிறார்கள். ஏனெனில் சென்ற 25 ஆண்டுகளோடு ஒப்பிடும் பொழுது இப்போது தோன்றியுள்ள பொருளாதார

நெருக்கடி, மறுஉற்பத்தி செய்யும் சூழ்நிலையில் ஒரு குறிப்பிடத்தக்க பெரும் மாற்றங்கள் நிறைந்த நீண்டகால வெளியைப் புகுத்தியிருக்கிறது.

பொருளாதார வளர்ச்சி விகிதம் ஒப்பீட்டில் மிகக் குறைந்த அளவில் உள்ளது. வேலையில்லாத் திண்டாட்டம் எல்லையற்றதாகவுள்ளது. பணவீக்கம் மிக அதிக அளவில் உள்ளது. உற்பத்தித்திறன் அளவிற்குக் குறைவாக உள்ளது. பன்னாட்டுச் செலுத்தல் நிலையும், வாணிபப் பற்றாக் குறையும் முடிவற்றதாகவும், எல்லையில்லாததாகவும் உள்ளன.

அனைத்திற்கும் மேலாக, அந்தக் குகை வழியின் எதிர் வாசல் மிகத்தொலைவில் கூட கண்ணுக்குத் தெரியவில்லை.

சுழல்முறையில் தோன்றும் நெருக்கடியோ அல்லது அதன் பின்னர் தோன்றும் பொருளாதார மந்தமோ, சிறிதளவு புத்துயிர் பெறுதலோ, உற்பத்தி வளர்ச்சியோ, குறிப்பாக இந்த உற்பத்தியில் வேகமாகப் புகுத்தப்பட்ட விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் சாதனைகள் புகுத்தப்பட்ட காலத்திற்கு முந்திய காலத்தில் குவிக்கப் பட்ட முரண்பாடுகளைத் தீர்க்க முடியவில்லை. வழக்கமாக முதலாளித்துவம் பின்பற்றும் வேறுமுறைகளாலோ அவைகள் நிச்சயமாகத் தீர்க்கப்பட முடியாது. ஏனெனில் அவைகளிற்பல விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியுடன் மிக நெருக்கமான தொடர்புடையவை. அவை வியாபாரச் சுழலின் கட்டமைப்புக்குள் அடங்காது, அதை மீறி நிற்பவையாக உள்ளன. அவைகள் ஒரு குறிப்பிட்டகால ஒழுங்கில் நிகழ்வதில்லை. மாறாக அவை நீண்டகாலத் தன்மை கொண்டவை; தீர்க்க முடியாதவை; கட்டமைப்பு இயல்புடையவை இது எரிபொருள், ஆற்றல், மூலப் பொருட்கள் உணவு, பணத்தொடர்பான விஷயங்கள், சூழ்நிலைப் பாதுகாப்பு நெருக்கடி பற்றிய விஷயங்கள் ஆகியவற்றிற்கும் பொருந்தும். இரும்பு எஃக்குத் தொழில்,

பஞ்சாலைத்தொழில், காலணித் தொழில், மற்றும் பிற "பழைய" தொழிற் தொகுதிகளின் கிளைத்தொழில்களில் உலகம் முழுதும் ஏற்படும் துறை நெருக்கடிகளுக்கும் கூட இது பொருந்தும்.

முடிவில் விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் தோற்றத்தினால், உலக முதலாளித்துவத்தின் புதிய கால வெளியில் உலக பொருளாதார வளர்ச்சி பல்வேறு வகையான, கூர்மையான நெருக்கடி நிகழ்ச்சிப் போக்குகளின் சிக்கலான இழைப்பின்னல்கள் நிறைந்து சிறப்புடையதாக விளங்குகிறது; சூழல் தன்மை கொண்ட நீடித்தவை, நடைமுறையிலானவை, கட்டமைப்பான உள் நாட்டுத் தொடர்புடையவை; சர்வதேசத் தொடர்புடையவை.

இங்கே நாம் முதலில் புதிய ஓர் வளர்ச்சிக்கு நம் கவனத்தைத் திருப்ப வேண்டும் — மிகப் பெரும் வேலையில்லாத் திண்டாட்டமும், பணவீக்கமும் பின்னிப் பிணைந்திருப்பது. சென்ற காலத்தில் வேலையில்லாத் திண்டாட்டம், மிகுதியான உற்பத்தியினால் ஏற்பட்ட நெருக்கடியின்போது அதிகமாக உயர்ந்தது. வழக்கமாக அது பொருளாதார நெருக்கடி குறையும்போதும், பொருளாதார வளர்ச்சியின் போதும் மிகக் குறைந்தது. எனினும் இப்போது, 1970-களின் தொடக்க ஆண்டுகளில், வளர்ந்த முதலாளித்துவ நாடுகளில் தோன்றிய வேலையில்லாதோரின் படை, நெருக்கடிக்குப் பின்னுள்ள காலத்தில் குறைவதற்குப் பதிலாக, பெருமளவு உயர்ந்து 18 மில்லியன் எல்லையையும் கடந்து விட்டது.

சென்ற காலத்தில் முதலாளித்துவ பணவீக்க உயர்வு, வழக்கமாக உற்பத்தி வேகமாக வளர்ச்சியடைந்த காலத்தில் தோன்றின. நெருக்கடி காலத்தில் வழக்கமாக விலைகள் சரிந்தன. மிகவும் சிறப்பாகக் கூர்மையான போர் பிற்கால சீரழிவுகள் மட்டுமே விதிவிலக்காக அமைந்தன. ஆனால் இப்பொழுதோ உற்பத்தி குறைந்து கொண்டே போகும் போது கூட விலைவாசிகள் உயர்ந்து கொண்டேயுள்ளன.

இம்மாதிரியான ஒரு நிலை ஏகாதிபத்தியத்தின் பொருளாதாரக் கொள்கையிலும் ஒரு நெருக்கடியைத தோற்றுவித்துள்ளது. பொருளாதாரத்தில் ஏற்படும் நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்கான பல "கோட்பாடுகளும்" முயற்சிகளும், ஏகாதிபத்தியங்களுக்கிடையிலான ஒப்பந்தங் களும் கூட பயனற்றவையாய் போய்விட்டன. உண்மையில் அரசு ஏகபோக ஒழுங்கமைப்பு முறையும் கூட மிகுதியாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

பூர்ஷ்வா பொருளாதார சிந்தனை ஒருவழிப்பாதையின் இறுதிக்குச் சென்று விட்டது. 1930-களில் ஏற்பட்ட நெருக்கடியின்போது வேலையில்லாத் திண்டாட்டத்தையும், சமூகக் கேடுகளையும் ஒழிப்பதற்கு ஒரு சீர்திருத்தவாதத் திட்டம் ஒன்றையாவது தோற்றுவித்திருந்தார்கள். ஆனால் இப்பொழுதோ உண்மையில் அம்மாதிரியான எந்தவிதத் திட்டமும் இல்லை.

**பன்னாட்டு இணையங்கள்** இன்றைய முதலாளித் துவத்தின் விஞ்ஞான தொழில்நுட்ப விசையின் முக்கியமான "முன்னோடிகளாக" மேலும் மேலும் ஆகிக் கொண்டு வருகின்றன என்ற உண்மை, உழைக்கும் மக்களின் நோக்கி லிருந்து பழிப்பிற்குகர்ததாகவும், சர்வதேச உறவுகள் என்ற நோக்கிலிருந்து அபாயகரமானதாகவும் விளங்குகிறது. மேலும் அவைகள் இந்த நெருக்கடி நிகழ்ச்சிப்போக்கு மோசமாகிக் கொண்டு வருவதற்கும் காரணிகளாகவும் விளங்குகின்றன. பலநாடுகளைச் சூழ்ந்து கொண்டுள்ள அவர்களுடைய பொருளாதார வலிமையும், ஆணவமும், பூர்ஷ்வா அரசுகளுடைய கொள்கைகளுடன் கூட மோதல் களுக்குள்ளாகின்றன. அவைகள் பெரும்பாலான சமயங் களில் மரபு வழியாக நிறுவப்பட்ட பொருளாதாரத்தை ஒழுங்குபடுத்துகிற, சட்டதிட்டங்களை மீறுகின்றன. சர்வதேச உற்பத்தியில், வியாபார உறவுகளிலும் குறிப்பாக நிதித்துறையில் எதிர்பாராத சிரமங்களை உண்டாக்கு கின்றன. பிரிட்டிஷ் பவுன், பிரான்ஸ் நாட்டு ஃப்ரான்க்,

மற்றும் அமெரிக்க டாலர் ஆகியவற்றின் கூர்மையான நெருக்கடிகளின்போது இந்த பன்னாட்டு இணையங்களின் நிதி தொடர்பான ஊகவாணிகத்தின் பங்குபற்றி யாவரும் அறிவார்கள்.

**வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் தேசிய சுதந்திரத்திற்கும் பொருளாதார விடுதலைக்கும் இந்த மாபெரும் பன்னாட்டு ஏகபோகங்கள் ஒரு பெரும் பயமுறுத்த லாகவே வளர்ந்து வருகின்றன.** அவைகள் இன்றைய புதிய காலனி ஆட்சியாளர்களின் முக்கியமான அதிரடிப் படை களாகவும் விளங்குகின்றன. புதிதாக விடுதலையடைந்த நாடுகளில் உள்ள சில அந்நிய நாட்டுச் சுரங்கத் தொழில் நாட்டுடைமையாக்கப்பட்ட போதிலும் அந்த நாடுகளில் இந்தப் பன்னாட்டு ஏகபோகங்களின் வலிமை இன்னும் மிகுதியானதாகவேயுள்ளது. ஈரானில் இருந்ததைப் போன்று அவைகள் நிலப்பிரபுத்துவ—அதிகாரவர்க்கத்தினரின் ஆட்சி யாளர்களிடையே நெருங்கிய உறவை நிறுவிக் கொள் கின்றன. சில இடங்களில் தேசிய பூர்ஷ்வாக்களின் பிற்போக்காளர்களிடையே நெருங்கிய உறவுகளை ஏற்படுத்திக் கொள்கின்றன. அவர்களுக்குத் தங்களுடைய பங்குகளை வழங்கி அவர்களைத் தங்களுடைய அடுத்த பங்காளிகளாக ஆக்கிக் கொள்கின்றன. பன்னாட்டு ஏகபோகங்களின் அமைப்புகள் வளர்முக நாடுகள் தொழில் மயமாவதைக் கட்டுப்படுத்துவதற்குப் பெரிதும் விரும்பு கின்றன. அவைகளைத் தங்களுடைய நலன்களுக்குப் பயன் படுத்திக் கொள்ள விரும்புகின்றன. தொழிலாளர்களும், மூலப்பொருட்களும் மிகுதியாகத் தேவைப்படும் தொழிற் கூடங்களையும் சூழ்நிலைக் கேடு விளைவிக்கக் கூடியதொழிற் சாலைகளையும் இந்த நாடுகளுக்கு மாற்றுவதற்கான ஏற்பாடுகள் பெருமளவில் நடந்து கொண்டிருக்கின்றன.

தொழிற்சாலை முதலாளித்துவ நாடுகளுக்கும், வளர்முக நாடுகளுக்குமிடையே பொருளாதார வளர்ச்சி மட்டங்களி லுள்ள இடைவெளி வளர்ந்து கொண்டே வருகிறது.

போருக்குப்பிந்திய ஆரம்ப ஆண்டுகளில், அவைகளிடையில் 1 : 10 ஆக இருந்த தலா வருமானம் 1970-களின் இடையில், 1 : 13 ஆகப் பெருகியது. வளர்முக நாடுகளின் நிலப்பகுதி களில் தொழில் சார்ந்த ஆற்றல் உற்பத்தி ஏகாதிபத்திய நாடுகளின் உற்பத்தியில் எட்டில் ஒரு பங்கிற்குக் குறைவாகவே இருக்கிறது.

ஏகாதிபத்தியம், அதன் ஓரங்களிலிருந்த பழைய காலனி நாடுகளை,சர்வதேச வேலைப்பகுப்பில் தங்களுக்குத் தாழ்ந்த ஒரு நிலையில் வைத்துப் பாதுகாக்கவே பெரிதும் முயன்று வருகிறது.இந்த இலட்சியங்களுக்காக தொழில் நுட்ப அடிப் படையில், தாய் நாடுகளில் உள்ள அடிப்படைத் தொழில் களின் மீது மிகுதியாக சார்ந்திருக்குமாறு செய்யக் கூடிய, தங்களுடைய உபதொழில்களை வளர்முக நாடுகளில் இந்தப் பன்னாட்டு ஏகபோகங்கள் தொடங்குகிறார்கள். இந்தப் "புதிய தொழில் நுட்பக் காலனி ஆதிக்கமுறை", முன்னாள் காலனிகள் முடிவாக விடுதலை பெறுவதற்குப் புதிய,பெரும் தடைகளை உருவாக்கி வருகின்றன.

இந்தச் சூழ் நிலையில் சர்வதேசப் பொருளாதார உறவுகளை ஜனநாயக அடிப்படையில் மறுசீரமைப்பதற் கான கோரிக்கை, ஒரு புதிய சர்வதேசப் பொருளாதார அமைப்பிற்கான கோரிக்கை, பன்னாட்டு இணையங்களின் கொள்ளைக்கார நலன்களின் மீதும், அவர்களின் செயல் களின் மீதும் சார்ந்துள்ள ஏகாதிபத்திய வாதிகளின் தந்திரங்களைத் தோற்கடிப்பதையே முதலில் தன்னுடைய குறிக்கோளாகக் கொண்டிருக்க வேண்டும். இந்தக் கோரிக் கைகள் சோவியத் ஒன்றியத்தினாலும், சோஷலிச சமுதாயம் முழுமையாலும் சர்வதேச கம்யூனிச இயக்கத்தினாலும், விடுதலை இயக்கத்தினாலும் முழுதும் ஆதரிக்கப் படுகின்றன.

பல்வேறு நாடுகளின் ஒரு சீரற்ற பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் ஒரு காரணியாக இந்த

விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றம் எப்போதுமே இருந்து வருகிறது. முடிவாக ஏகாதிபத்தியங்களுக்கிடையே யுள்ள முரண்பாடுகளுக்குப் பின்னுள்ள தூண்டு கோலாகவும் திகழ்கிறது. இப்பொழுதெல்லாம் முதலாளித்துவ நாடுகள் அவைகளைச் சரிசெய்ய முயன்று வருகின்றன. குறிப்பாக சோஷலிசத்திற்கும், தொழிலாளி வர்க்கத்திற்கும், தேசிய விடுதலை இயக்கத்திற்கும் எதிராக ஒன்றிணைவதன் மூலம் அந்தமுரண்பாடுகளைச் சரி செய்து கொள்ள முயல்கிறார்கள். அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு நெருக்கமாகவுள்ள மேற்கு ஐரோப்பாவிலும், ஜப்பானிலும் உள்ள பகுதியினரும், அமெரிக்க ஐக்கிய நாடுகளும் இந்த இலட்சியங்களுக்காக ஒன்றிணைப்பு நிகழ்ச்சிப் போக்குகளைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன் படுத்த முயற்சிக்கிறார்கள். ஏகாதிபத்தியத்தின் சர்வதேச உறவுகளில் காணப்படுகிற மையநோக்கிய இயல்பையும், அட்லாண்டிசம் என்று அழைக்கப்படுகிற கொள்கையையும், நேடோ கூட்டையும் தொடர்ந்து ஆதரித்து வருவதிலும் இது தானாகவே வெளிப் படுகிறது.

எப்படியாயினும், முதலாளித்துவ முறைக்குள்ளேயே நிலவுகிற பொருளாதார அரசியல் நலன்களுக்கிடையே மோதல் ஏற்படுவது தவிர்க்க முடியாததும், தீர்க்க முடியாததும் ஆகும். இப்போது எல்லோரும், எல்லோரையும் எதிர்த்து மேற் கொண்டுள்ள நாணய முறைக்குரிய, வாணிப மற்றும் சுங்கவரிச் சண்டைகள் புதியதோர் சுற்றை அடைந் துள்ளன. அதனுடைய தாக்கம், யு. எஸ். உடைய நிலையை ஒப்பீட்டில் மிகவும் அதிகமாகப் பலமிழக்கச் செய்துள்ளது. தொழில் மற்றும் நிதித்திறனில் அது இது வரை பெற்றிருந்த மிகப்பெரும் சாதகங்கள் நாம் காணக்கூடிய அளவு மிகவும் சுருங்கி விட்டது. இருப்பினும், யு.எஸ். முன்னைப்போலவே, வெளி நாடுகளில் செய்துள்ள முதலீட்டில் ஒருபெரும் பங்குடையதாகவுள்ளது. எனவே ஏகபோக லாபத்திலும், பெரும் பங்கு பெறுகிறது. இன்றுகூட யு. எஸ். தான்

முதலாளித்துவ உலகத்தின் தலைவராகவும் இராணுவ வலிமை மிக்க சக்தியாகவும் விளங்குகிறது.

பலம் இன்மையைக் கூட யு.எஸ். தன் வலிமையைப் பெருக்கிக் கொள்ளப் பயன்படுத்திக் கொள்கிறது. உதாரணமாக சரிந்து கொண்டிருந்த டாலரின் பரிவர்த்தனை மதிப்பைச் சரிசெய்வதில் மாற்றுவிகிதங்களில் உள்ள வளர்ந்துவரும் வேறுபாடுகள்கூட யு.எஸ். இன் பண்டங்களைக் கிராக்கியானவை ஆக்குவதற்குப் பயன்படுத்தப்படுகிறது. உண்மையிலேயே அதுதான் இன்றைய அமெரிக்க "டாலர் இராஜதந்திரத்தின்" மையக் கூறுகளில் ஒன்றாக விளங்குகிறது. டாலரின் விலை ஏற்ற இறக்கத்தைத் தவிர்ப்பதற்கு பொதுச் சந்தையைச் சேர்ந்த எட்டு நாடுகள், மேற்கு ஐரோப்பிய "நாணய ஸ்திரத்தன்மை மண்டலம்" ஒன்றை ஏற்படுத்தியுள்ளன. இந்த நடவடிக்கை அறிவிக்கப்படாத பணவியல் நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்ட போரின் ஒருபடியே எனத் தெளிவாகத் தெரிகிறது.

என்றுமில்லா அளவு அதிகமாக வளர்ந்து வரும் எண்ணெய் நுகர்வு, விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் மற்றொரு விளைவேயாகும். இது எண்ணெய்க் கிணறுகள் காணப்படும் இடங்களுக்கான போராட்டத்தை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது. அமெரிக்கா எண்ணெய் வளமிக்க இடங்களை ஏராளமாகக் கைவசம் வைத்திருந்த போதிலும் எண்ணெய் வெட்டியெடுத்தலின் அளவை உயர்த்துவதற்கென அந்நாடு தீவிரமான, முற்போக்கான நடவடிக்கைகள் ஏதும் எடுக்க முன்வரவில்லை. அது பிற நாடுகளின் எண்ணெய் வளத்தைக் கைப்பற்றிக் கொள்ளத் தான் எண்ணுகிறது. அது அவ்வாறு செய்யும்போது மத்திய கிழக்கு நாடுகளின் உள்விவகாரங்களிலும், லதீன் அமெரிக்க நாடுகள், வேறுபிற வட்டாரங்கள் ஆகியவற்றின் உள்நாட்டு விவகாரங்களிலும் தலையிடுகிற ஒரு கொள்கையைப் பின் பற்றி வருகிறது. உண்மையில் அதுவே இன்றைய அமெரிக்க "எண்ணெய் ராஜதந்திரத்தின்" சாரம் ஆகும்.

ஏகாதிபத்தியங்களுக்கிடையேயான முரண்பாடுகள் தீர்க்கப்பட முடியாதவை. நாடுகளிடையேயான வளர்ச்சியை ஒரு சீரற்றதன்மை கொண்டதாக ஆக்குகிற, ஒரு குறிப்பிட்ட சந்திப்பில் அந்த முரண்பாடுகளை மிகவும் கூர்மையானதாக ஆக்குகிற விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி உண்மையில் முதலாளித்துவ உலகின் ஆளும் குழுவினர் மற்றும் தலைவர்களின் பிற்போக்குத்தன்மையின் உருவங்களையும், முறைகளையும் பாதிக்கவே செய்கிறது. ஆனால் அவர்களிடையே காணப்படும் முரண்பாடுகளை ஒழித்துக்கட்டுவதற்காக அவர்கள் செய்யும் முயற்சிகளும், முதலாளித்துவப் பொருளாதாரத்தின் உள்ளேயே இயல்பாகவே நெருக்கடி ஆட்சி செய்யும் தன்மையை மாற்றுவதற்கு அவர்கள் செய்யும் முயற்சிகளும் வீணானதாகவே உள்ளன. முதலாளித்துவ உலகில் தொடர்ச்சியாக மாநாடுகள் நடத்துவது, உச்சநிலைக் கூட்டங்கள் நடத்துவது போன்ற அரசுகளுக்கிடையேயுள்ள உறவுகளை ஒழுங்குபடுத்துவதற்காக ஒரு முழுமையான அமைப்பு முறை இருந்த போதிலும், முதலாளித்துவ முறையில் தோன்றும் பொருளாதாரக் கொந்தளிப்புகளும், பொது நெருக்கடிகளும் தொடர்ந்து இருந்து கொண்டுதான் இருக்கின்றன. இந்தத் துன்பத்திலிருந்து மீள்வதற்கு விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியைப் பயன்படுத்தும் அனைத்து முயற்சிகளும் இந்தத் துன்பத்தை மிகுதிப்படுத்துகிறதே தவிர குறைக்கவில்லை.

நம்முடைய மாநாட்டின் நோக்கத்தின் வரம்பிற்குள் இருந்து கொண்டே பொதுவாக உலகில் உள்ள சோஷலிச நாடுகள் அல்லாத நாடுகளில் உள்ள தொழிலாளி வர்க்கத்தினர் மற்றும் ஜனநாயக சக்திகளின் நிலைமையையும், அவர்களின் திறமையையும் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி எவ்வாறு பாதிக்கிறது என்பதைப் பற்றிக் கூற விரும்புகிறேன்.

**விஞ்ஞான-தொழில்நுட்பப் புரட்சி முதலாளித்துவ சமுதாயத்திலுள்ள வர்க்கங்கள் தெளிவாகப் பிரிக்கப்படுவதை**

விரைவுபடுத்தியுள்ளது. இது குறிப்பாக புதிய உற்பத்தி முறையைத் தோற்றுவிக்கும் புதிய தொழில்களைத் தன் வயமாக்குவதன் மூலம், கூலிக்கு அமர்த்தப்படுகிற தொழிலாளிகளின் எண்ணிக்கை வட்டமும், தொழிலாளி வர்க்கமும் வளர்ச்சியடைவதன் மூலம் அறியமுடிகிறது. மத்திய தரவர்க்கம் வேகமாகவும், தீவிரமாகவும் பாட்டாளி வர்க்கமாக ஆக்கப்பட்டு வருகிறது. அவர்கள் ஏகபோகங்களின் மீது சார்ந்திருப்பதும், அவ்வாறே தீவிரமடைந்து வருகிறது. அதனுடைய நிலையின் காரணமாக அறிவு ஜீவிகள் கூட்டமும்கூடத் தொழிலாளி வர்க்கத்திற்கு நெருக்கமானதாகி வருகிறது. அதே வேளையில் இன்றைய இயந்திரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் பல தொழிலாளர்கள் மன உழைப்பு மட்டத்திற்கு உயர்ந்து வருகிறார்கள்.

விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றத்தின் விளைவாக ஏற்படும் பொருளாதார வளர்ச்சி, சமூக சமத்துவமற்ற தன்மையையும், வருமானங்களுக்கிடையே காணப்படும் இடைவெளியையும் குறைப்பதற்கு வழி செய்கிறது என்று பெருமை பேசுகிற பூர்ஷ்வா சிந்தனையாளர்களின் கூற்றுகள் பொய்யாகி விட்டன என்பதை எல்லோரும் அறிந்துகொள்ள முடியும். அதற்கு நேரெதிரானவையே இப்பொழுது நடைபெற்றுள்ளன. முதலாளித்துவ சமுதாயத்தில் உள்ள பெரும்பாலான உழைக்கும் மக்களின் வருமானத்திற்கும், மேல் மட்டத்தவர்களின் வருமானத்திற்குமிடையேயுள்ள வேறுபாடுகள் வளர்ந்து கொண்டே வருகின்றன. இதற்கான சான்றுகளைத் தருகிற புள்ளி விவரங்களை நாம் அனைவரும் அறிவோம். பிரிட்டனில் அனைத்து தனிப்பட்ட செல்வத்தின் 75 சதம், மக்களின் 5 சதம் பேர்களின் கையிலும்; பிரான்சில் உள்ள பணக்காரக் குடும்பங்களின் வருமானம் தொழில் மற்றும் அலுவலகங்களில் உழைக்கும் உயர்மட்டத் தொழிலாளியின் வருமானத்தைப் போல 80 மடங்கு அதிகம் என்பதையும் யு. எஸ். இணையங்களின் இலாபம் சென்ற

ஆண்டு மட்டும் 25 சதம் கூடியிருக்கிறது என்பதையும், அதே வேளையில் கூலியின் மட்டமும சம்பளத்தின் மட்டமும் 7 - சதம் என்ற விகிதத்தில்தான் உயர்கிறது என்பதையும், இந்தச் சம்பள உயர்வு கூட பணவீக்கத்தினால் விழுங்கப் பட்டு விடுகிறது என்பதையும் நாம் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

**முதலாளித்துவ சூழ்நிலையில் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியைத் தொடர்ந்து தொழிலாளி வர்க்கம் மற்றும் அனைத்து உழைக்கும் மக்களும் தீவிரமாகச் சுரண்டப் படுகின்றனர்.** சுரண்டல் மிகுதியான அளவு வேறுபட்ட மறைமுகமான உருவங்களைக் கையாள்கிறது. சிக்கலான, மிகுதியான திறமை படைத்த தொழிலாளிகளைச் சுரண்டு வது என்ற திசை வழி கொண்டதாக உள்ளது. வேலை புதிய முறையில் அமைக்கப்படுகிறது. உடல், நரம்பு, மனம் தொடர்பான வியாதிகளை மிகுதியாகத் தோற்றுவிக்கிற முதலாளித்துவ இயந்திரமயமாக்கும் புதிய முறை பின் பற்றப்படுகிறது.

இருப்பினும் ஒரு விதிபோல கூலியும், சம்பளமும் உழைப்புத்திறனின் உயர்வுக்குப் பின்னால் வெகு தொலைவிலேயே நொண்டி நொண்டி நடந்து வருகிறது. குறிப்பாக ஏகபோகங்கள், உழைக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தின் மீதுள்ள கெடுபிடிகளை இரட்டிப்பாக்கிய போதும் உற்பத்தியைத் தீவிரப்படுத்தி, வேலை வாய்ப்புகளைக் குறைக்கத் தொடங்கிய போதும் அவைகளிடையே இருந்த இடைவெளி மிக அதிகமாக ஆயிற்று.

**விஞ்ஞான-தொழில் நுட்பப்புரட்சி உழைக்கும் மக்களுக்கு அவர்களுடைய சமூக பொருளாதார நிலைகளைச் சீர்குலையச் செய்வதோடு, அவர்களுடைய வாழ்க்கையையும் நிலையற்ற தன்மை கொண்டதாக ஆக்குகிறது.** இங்கே முக்கியமான காரணியாக விளங்குவது வேலையில்லாத் திண்டாட்டம் தான். சென்ற காலத்தைப் போலல்லாமல் மக்கள் தொகை யின் அனைத்துப் பகுதிகளுக்கும் அது பரவுகிறது. குறிப்பாக

அது இளைஞர்களை மிகுதியாகப் பாதிக்கிறது. மக்கள் தொகையில், சிறந்த உடல் திறனுடைய மிகவும் சுறுசுறுப்பான பகுதியினர் ஒரு உடல் உழைப்பு நிறைந்த சுறுசுறுப்பான வாழ்க்கையைத் தொடங்கு முன்னரே "தேவையற்ற தலைமுறை"யாக ஆகி விடுகின்றனர். முதன் முறையாக விஞ்ஞானங்களிலும், தொழில் நுட்பத் துறைகளிலும் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களுக்கும், அறிவியற் துறைப் பணியாளர்களுக்கும் கூட வேலையில்லாத் திண்டாட்டம் தோன்றி ஒரு பயங்கரமான பிரச்சினையாக வளர்ந்துள்ளது. முதலாளித்துவம், முன் எப்போதும், இந்த அளவு அதிகமாக, மிகுதியாகப் படித்தவர்களிடையே வேலையில்லாதவர்களைக் கொண்டதாக இருந்ததில்லை என நாம் உறுதியாகக் கூறலாம்.

சென்ற கால் நூற்றாண்டு காலத்தில் தொழிலாளி மக்களின் பொருளாயத நிலையில் 1970-களில் ஒரு பயங்கரமான வீழ்ச்சியை நோக்கிய மாற்றம் தோன்றியதென்பது தெளிவு. அது இரண்டு வகையில் அரிக்கப்படுகிறது: ஒரு தீராத நோயாக ஆகி, வளர்ந்து வரும் வேலையில்லாத் திண்டாட்டத்தாலும்; வாழ்க்கைச் செலவின் மிக அதிகமான உயர்வாலும், உயரும் விலைகளும், வரிகளும் உண்மையான வருமானம் உயர்வதற்கு ஒரு தடையாக விளங்குகின்றன. யு. எஸ், பிரிட்டன் இன்னும் அவை போன்ற நாடுகளின் உண்மை சம்பளத்தில் மிக அதிகமான, நிலையான வீழ்ச்சி காணப்படுகிறது. இது உதவித்தொகை, அல்லது ஓய்வூதியம் பெற்று வாழ்வோரைப் பெரிதும் வயிற்றில் அடிக்கிறது. அவர்களிற் பெரும்பாலோர் ஏழ்மைக் கோட்டின் ஆரம்பத்திலோ அல்லது அதற்குக் கீழோ தான் வாழ்கிறார்கள். மிகவும் அதிகமாக வளர்ச்சியடைந்துள்ள முதலாளித்துவ நாடுகளில்கூட இம்மாதிரியான பல லட்சக் கணக்கானவர்கள் உள்ளனர்.

**மேலும் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி, பழைய சமூக முரண்பாடுகளை மிகுதியாக வளர்ப்பதோடு மட்டுமல்லாமல்,**

புதியவற்றையும் தோற்றுவிக்கிறது. ஒருபுறம் அது மக்களுடைய பொருளாயத, ஆன்மீகத் தேவைகளின் வளர்ச்சியை விரைவுபடுத்துகிறது: புதிய பண்டங்களைப் புகுத்தியும், சேவைகளையும், கல்விக்காகச் செலவிடும் தொகையை அதிகப்படுத்தியும், மருத்துவ சிகிச்சைக்கும், ஓய்வு காலத்திற்கும் செலவிடும் தொகையை அதிகப் படுத்தியும் 'அவ்வாறு' விரைவுபடுத்துகிறது. மறுபுறம் இந்த இன்றியமையா விருப்பங்களுக்கும் அவைகள் நிறைவு செய்யப்படுவதற்குமிடையே நிலவுகிற முரண்பாடுகளைத் தவிர்க்க முடியாதவாறு வளர்த்துக் கூர்மையாக்குகிறது. பெரும்பாலான சமயங்களில் மனிதனுடைய பகுத்தறிவுக்கு உகந்த நலன்களின் நோக்கிலிருந்து மனிதனுக்குத் தீங்கு விளைவிப்பதாகவும், அல்லது உண்மையில் மனிதனுக்குத் தேவையற்றதாகவும் உள்ள நுகர்வின் உருவங்கள் அல்லது பொருட்கள் தொழிலாளி மக்களின் மீது திணிக்கப் படுகின்றன. அதேவேளையில் உடல்நலப் பாதுகாப்பு, கல்வி, சமூகப் பாதுகாப்பு, சூழ்நிலைப் பாதுகாப்பு, நகராட்சி நிர்வாகம், போக்குவரவு, விடுமுறை நாட்களைச் செலவிடும் முறைகள் இன்னும் இது போன்ற சமூகத்தேவைகள் போது மான அளவு நிறைவு செய்யப்படவில்லை.

மற்றொரு விஷயமும் குறிப்பிடத்தகுந்த முக்கியத்துவம் நிறைந்ததாகவுள்ளது: உழைக்கும் மக்களின் கல்வித்தரம் உயர்வதாலும், அரசியல் விழிப்புணர்ச்சியாலும், சோஷலிச உதாரணத்தினாலும், அவர்களின் தன்மான உணர்வும், மதிப்பும் உயர்ந்துவருகிறது. அதுபோலவே, பாதுகாப்பான சுவைமிக்க, நுகரத்தகுந்த வாழ்க்கைக்கான ஒரு படைப் பாற்றல் மிக்க தொழில் அல்லது வேலைக்கென முயல்வதும் உயர்ந்து வருகிறது.

விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியினால் வளர்க்கப் பட்ட புதிய தேவைகளுக்கும், அவைகளைப் பெறுவதற்கான குறுகிய எல்லைகளுக்குமிடையேயுள்ள இடைவெளி முதலாளித்துவ சமுதாயத்தில் காணப்படுகிற, மனம்

வெறுக்கக் கூடிய தீய பழக்கங்களான மதுபானப் பழக்கம், உடலுக்கு ஊறு விளைவிக்கும் மருந்துஉண்ணும் பழக்கம், குற்றங்களைச் செய்வது இன்னும் இதுபோன்ற தீமைகளை மேலும் அதிகரிக்கச் செய்கிறது. அடக்கு முறைக்குப் பயன் படக் கூடிய இயந்திரங்களான காவல்கட்டுப்பாடு, இன்னும் இதுபோன்றவற்றிற்காக, குறிப்பாக பொதுமக்களுக்கான தகவல் மற்றும் செய்தி சாதனங்கள் மூலம் பொது மக்களுடைய உணர்வுகளைக் கட்டுப்படுத்துவதற்காக நவீன விஞ்ஞான தொழில் நுட்ப சாதனைகளை மேலே கண்ட விஷயங்களுடன் இணைத்து ஆட்சி வட்டாரங்கள் மிகவும் அதிகமான அளவு பயன்படுத்துகிறார்கள். இவையனைத்தும் அரசு அதிகாரத்தை மையப்படுத்துவதையும்,அதிகார வர்க்க மயமாக்குவதையும் உயர்த்துகிறது. நெருக்கடியை மிகைப் படுத்துகிறது. பூர்ஷ்வா ஜனநாயகம் சிதைந்தழிய வழி செய்கிறது. ஜனநாயக உரிமைகளுக்கும், சுதந்திரத்திற்கும் புதிய பயமுறுத்தல்களைத் தோற்றுவிக்கிறது.

**சர்வதேசமட்டத்தில் விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சி உழைப்புக்கும் மூலதனத்துக்குமிடையேயான வர்க்கப் போராட்டத்தின் நிலைகள் மீதும் அதன் இயல்பு மீதும் மேலும் அதிகமான செல்வாக்கைச் செலுத்துகிறது.** வர்க்கப் போராட்டத்தின் உள்ளடக்கம் குறிப்பிடத் தகுந்த அளவு பரந்ததாக ஆகியுள்ளது. வேலை செய்வதற்கான உழைக்கும் மக்களின் உரிமை, தொழிலாளர்கள் தொழில் நிறுவனங்களைக் கட்டுப்படுத்துவதற்கான உரிமை, சமூகப் பேணலையும், கல்விமுறையையும், சுகாதார முறையையும் ஜனநாயகத்தன்மை கொண்டதாக ஆக்குவது ஆகிய கோரிக்கைகளை உள்ளடக்கியதாக இருக்கிறது. வர்க்க சக்திகளின் புதிய அணி ஒன்று உருவாகி வருகிறது. உலகம் முழுமையிலும் பரவிவரும் ஏகபோகத்தின் ஆதிக்கக் குழுக்களை, மிகவும் சக்திவாய்ந்த, உணர்வு பூர்வமான, ஒன்றிணைக்கப்பட்ட, சர்வதேச ஏகபோக எதிர்ப்பு சக்தி யாகவும், பரந்த உடல் உழைப்பு மற்றும் மனஉழைப்பு

தொழிலாளர்களின் கவனத்தின் மையமாகவும விளங்குகிற சர்வதேசத் தொழிலாளிவர்க்கம் புறவயமாக மிகவும் அதிகமான வலிமையுடன் எதிர்க்கிறது.

விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சிச் சூழ்நிலையில் தொழிலாளி வர்க்கமானது, புதிய தொழில் நுட்ப உற்பத்தி மற்றும் கலாச்சாரப் பக்குவத்தின் புதிய மட்டத்திற்கு உயர்ந்திருக்கிறது. அதனுடைய செயல்களின் பயனைப் பெருக்க புதிய வழி முறைகளைக் கையாள்கிறது. "தொழிலாளி வர்க்கமே, முதலாளித்துவப் பொருளாதார முறையின் மையத்திலும் நரம்பு மண்டலத்திலும்,பொருளாதார அடிப்படையில் ஆதிக்கம் வகிக்கிறது"[5] என்று 1919லேயே லெனின் எழுதினார். அது இன்று மிகச்சிறந்த நடைமுறை உண்மையாக விளங்குகிறது. விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சி இப்பொழுது மிக அதிகமான அளவு, பொருளாதார முறையின் அடிப்படைச் சங்கிலிப் பிணைப்புகளின் உட்தொடர்பை மிகுந்த வலிமையுடையதாக ஆக்கி இருப்பதனால் அது இரண்டு மடங்கு உண்மையாக விளங்குகிறது. அதுவும் சர்வதேச மட்டத்தில் அனைத்து ஒழுங்கின்மைகளுக்கும், சீர்குலைவுகளுக்கும் தொழிலாளி வர்க்கம் மிகுந்த உணர்வுடையதாக விளங்கும் இந்த நாட்களில்,மிகுந்த முக்கியத்துவம் உள்ளதாக விளங்குகிறது

நாடுகளிடையேயான ஏகபோகங்களின் பல்வேறு நாடுகளில் உள்ள தொழில் அமைப்புகளில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள தொழிலாளி மக்களின் வேலை நிறுத்தப் போராட்டங்களையும் வேறு சில செயல்களையும் ஒன்றிணைப்பதுதான் இன்று நம்முன்னுள்ள மிகவும் இன்றியமையாத பிரச்சினையாகும். அல்லது வேறு மாதிரி கூறினால் மண்டல அல்லது சர்வதேசமட்டத்திலான நடைமுறையில் பயன்படக்கூடிய தொழிலாளி மக்களின் கூட்டான செயல்முறைதான் இன்றியமையாததாகும். குறிப்பாக பிற நாடுகளின் பொருளாதார அரசியல் வாழ்க்கையில் அமெரிக்க ஏகபோகங்களுடைய

ஊடுருவலுக்கும், தலையிடுதலுக்கும் எதிராக தொழிலாளி மக்கள் மற்றும் ஜனநாயக சக்திகள் இணைந்து போராடுவது மிகவும் இன்றியமையாதது ஆகும்.

அண்மை ஆண்டுகளில் நடைபெற்ற வர்க்கப் போராட்டங்களின் வரலாறு, அதனுடைய நலன்களுக் காகவும், அதனுடைய உரிமைகளுக்காகவும் தொழிலாளி வர்க்கம் நடத்திய போராட்டங்களில் நாம் கண்டறிந்து கொள்ளக்கூடிய அதனுடைய மிக வலிமையான செயல் திறனை வெளிப்படுத்தியுள்ளது. முதலில் 1930-களில் இருந்த நிலைக்கு மாறாக வேலையில்லாத் திண்டாட்டம் மிகுதியாக இருந்தபோதிலும், முதலாளித்துவம் வேலை நிறுத்தங்களின் வேகத்தைக் குறைக்க முடியவில்லை. இரண்டாவதாக, சில நாடுகளில் தொழிலாளி மக்கள் முன்னர் பல போராட்டங் களின் மூலம் பெற்றிருந்த ஊதிய உயர்வையும், சமூக அரசியல் உரிமைகளையும் பறித்துக்கொள்ள ஆட்சியாளர் செய்த முயற்சிகளை தோற்கடித்திருந்தனர். இது தொழிலாளி வர்க்கத்தினரின் சிறந்த அமைப்புகள் வளர்ந்திருப்பதாலும், போராடும் மனப்பான்மை வளர்ந்திருப்பதாலும் தான் என்று அறிய முடிகிறது. மேலும் இன்று நிலவுகிற சர்வதேச நிலையும்—அதாவது நிலவுகிற சோஷலிசத்தின் வெற்றி—இந்த வெற்றிகளுக்குக் காரணமாய் உள்ளது. நிலவுகிற சோஷலிசத்தின் ஒரே சீரான முன்னேற்றம், பூர்ஷ்வாக் களைத் தொழிலாளி மக்களுடனான உறவுகளில் மிகவும் கவனமாக இருக்கும்படி—அதாவது நேரடியான மோதல் களைத் தவிர்க்கவும், சில சலுகைகளைத் தருவதற்கான, தந்திரங்களையும், உத்திகளையும் கையாளும்படிச் செய்கிறது.

தோழர்களே, விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சி இன்றைய சமுதாயத்தின் பொருளாதாரத்திலும், அரசியலிலும், கலாச்சாரத்திலும், சர்வதேச உறவுகளிலும், மிக அதிகமான செல்வாக்கைச் செலுத்தி வருகிறது.

சமூக முன்னேற்றத்தின் முற்போக்கான சக்தியாகவும், சோஷலிசம், கம்யூனிசம் என்ற பெரும் இலட்சியங்களை மேற்கொண்டவர்களாகவும், புதிய சமுதாயத்தை உருவாக்கு பவர்களாகவும் விளங்குகிற, தொழிலாளி வர்க்கம் ஒரே நேரத்தில் விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியினுடைய காரணமாகவும், விளைவாகவும் விளங்குகிறது விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் மூலம் வெளிப்பட்டுள்ள மனிதனின் மேதைத்தன்மைகளின் சாதனைகளை மனித இனத்தின் நலனுக்குச் சேவைசெய்வதில் பயன்படுத்துவதில் அதற்கு ஒரு முக்கியமான பங்குள்ளது.

விஞ்ஞான -தொழில்நுட்ப முன்னேற்றங்களின் பயனை முதலாளிகள் பயன்படுத்தும் முறைகளால் தோற்றுவிக்கப் பட்ட அபாயகரமான நெருக்கடி நிலைகளை முடிவுறச் செய்வது என்ற மாபெரும் சவாலை மனித இனம் முழுமையும் எதிர்நோக்கி நிற்கிறது. இன்றே, இப்பொழுதே அதை ஒழிப்பதற்கான வழியைக்காண வேண்டும். விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியினால் தோற்றுவிக்கப்பட்டுள்ள பிரச்சினைகளின் தீர்வு கீழ்கண்டவற்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

— தொழிலாளி வர்க்கத்தின் வாழ்க்கையையும், வேலையையும், உண்மையாக உயர்த்தக்கூடியதாகவும், பாட்டாளி வர்க்கத்தின் நலன்களையும், அனைத்து உழைக்கும் மக்களின் நலன்களையும், அனைத்து மக்களின் நலன்களையும்,உண்மையாக நிறைவு செய்யக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

—சமூக முன்னேற்றத்திற்குரிய புதிய வாய்ப்புகளையும், அரசுகளின் ஜனநாயகத்தையும், தேசிய சுதந்திரத்தையும் விரிவுபடுத்தவும் வலிமையுறச் செய்யவும் திறமைபடைத்த தாக இருக்க வேண்டும்.

—சமுதாய வாழ்விலிருந்து போரையே அடியோடு ஒழித்துக் கட்டக்கூடியதாகவும், ஆயுதப் போட்டியைத் தடுத்து

நிறுத்தக்கூடியதாகவும், நாடுகளிடையே நிலவும் அமைதியையும் சமாதானத்தையும் நம்பிக்கைக்குரியதாக ஆக்குவதற்கு உதவுவதாகவும் இருத்தல் வேண்டும்.

இந்தப் பிரச்சினைகளை ஆராய்வதற்கும்,தீர்ப்பதற்கும் ஏற்ற சிறந்த வழி, விஞ்ஞான சோஷலிச கோட்பாட்டின் அடிப்படையில், மார்க்சீய-லெனினிய முறையில் அதைப் பகுத்தாராய்ந்து அறிவதேயாகும். செயல் திறன்மிக்க சர்வதேச ஒற்றுமை மூலமும், ஒருவருடைய கடமையை நிறைவேற்றுவதற்கு ஒரு சர்வதேச அணுகுமுறையைப் பின்பற்றுவதன் மூலமும், இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய முயற்சிகள் மேலும் அதிகப் பயனுள்ளவையாக ஆக்கப்படுகின்றன. சமாதானத்திற்கும், பதற்றத்தணிவிற்குமான ஒரு கொள்கையைத் தொடர்ந்து ஒரே சீராகப் பின்பற்றுவது முன்னெப்போதைக் காட்டிலும் இப்போது இன்றியமையாததாகவுள்ளது. மனித இனம் இந்நிலவுலகில் வாழ்வதையே அடியோடு அழித்துவிடக்கூடிய போருக்கான தயாரிப்பாக விளங்கும். இடைவிடாத ஆயுதப் பெருக்கத்திற்காக விஞ்ஞான-தொழில்நுட்பப் புரட்சியைப் பயன்படுத்துவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். நிச்சயமாக, உழைக்கும் மக்களின் உண்மையான நலன்களை அடிப்படையாகக் கொண்டிருக்கும் வரை, ஏகபோகங்களின் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடுவதற்கான தேவையை வலியுறுத்தும்வரை,விஞ்ஞான-தொழில்நுட்பப் புரட்சியைப் பயன்படுத்துவதில் சுரண்டும் கொள்கையையும், நடைமுறையையும் எதிர்க்கும் வரை ஏகபோகங்களுக்கு எதிரான பொருளாதார மாற்றுத் திட்டங்களால் மிகவும் சிறப்பான பங்காற்ற முடியும்.

இந்தக் காலத்தில் மக்கள் விரும்புகிற எதையும் கொடுத்துதவக்கூடிய செயல் திறனும், நாடுகளுடைய சிறப்பிற்கும், முன்னேற்றத்திற்கும் தேவையான அனைத்தையும் கொடுத்துதவக்கூடிய விஞ்ஞான - தொழில் நுட்ப அறிவும், உற்பத்தித்திறனும் நிறைந்திருக்கும் ஒரு வரலாற்றுப் படி

நிலைக்கு மனித இனம் வந்திருக்கிறது. இன்றைய உற்பத்தி சக்தி வலிமை வாய்ந்ததாகவும், படைப்பாற்றல் மிக்க தாகவும் விளங்குகிறது. அதை மக்களுடைய நலனுக்காகப் பயன்படுத்த வேண்டும் என்பது இன்றைய காலத்தின் இன்றியமையாத் தேவையாகும். விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் விளைவாகத் தோற்றுவிக்கப் பட்டிருக்கிற விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள், தொழிலாளர்கள் ஆகியோருடைய உழைப்பின் பயனாக வெளிப்பட்டுள்ள மனிதனின் மேதைத்தன்மை உழைக்கும் மக்களுக்குச் சொந்தமானதாக இருக்க வேண்டும். அது இனத்திற்கு மனித எதிராக ஒரு சில ஏகபோகங்களால் பயன்படுத்தப்படக் கூடாது.

இந்த மேலான இலட்சியங்களுக்காக முற்போக்கு சக்திகள் போராடும்போது, விஞ்ஞான - தொழில் நுட்ப முன்னேற்றத்தைத் தொழிலாளி மக்களின் நலனுக்காகப் பயன்படுத்துகிற, சோஷலிசம் பெற்றிருக்கிற பெரும் நடைமுறை அனுபவங்கள் அவைகளுக்கு உறுதுணையாக நிற்பதைக் காணமுடியும்.

சோஷலிச சூழ்நிலையில் விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சி சரியான வழியையே பின்பற்றுகிறது. சோஷலிசம் அதை சமுதாயத்திற்கும், மக்களுக்கும் சேவை செய்யுமாறு செய்கிறது. அது, இங்கே உண்மையிலேயே வளர்ச்சியுற்ற, மனிதாபிமானம் மிக்க சோஷலிச சமுதாயத்தைக் கட்டுவதற்கு இன்றியமையாத, சக்திவாய்ந்த கருவியாக விளங்குகிறது.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 24-வது காங்கிரஸ் சோஷலிச சமுதாய அமைப்பின் அனுகூலங்களுடன் விஞ்ஞான-தொழில்நுட்பப் புரட்சியை இணைக்கும் பொதுவான கடமையை முக்கியமான ஒரு பணியாக்கியது. இந்தப் பணியை நிறைவேற்றும்போது, சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியுடன், சோவியத் நாட்டு மக்கள்

அனைவரும் இணைந்து சோவியத் மக்களின் வளர்ந்து வரும் வேறுபட்ட பொருளாயத மற்றும் கலாச்சாரத் தேவைகளை முழுதும் நிறைவு செய்வதற்கான வாய்ப்புகளை மேலும் அதிகமாக உண்டாக்கி, நம்முடைய மாபெரும் பொருளாதார வளர்ச்சிக்குச் சிறிதுகூட இடைவெளி யில்லாத, மனதைப் பெரிதும் கவர்ந்து மகிழ்விக்கும் வளர்ச்சியை அளித்திருக்கிறார்கள்.

தோழர்களே, நடைமுறைப் பிரச்சினைகளுக்குச் சரியான தீர்வு காண்பதற்குத் தத்துவம்தான் ஒரு இன்றியமையாத் திறவுகோலாகும் என்பது மார்ச்சீய-லெனினிய சிந்தனை யாளர்கள் ஏற்றுக் கொள்ளும் ஒரு விதியாகும். இன்றைய கடமைகளை வரையறுப்பதற்கும், நிரந்தர சமாதானம், சமூக முன்னேற்றம் ஆகியவற்றிற்காகப் போராடும் வழி முறைகளை வகுப்பதற்கும் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் பிரச்சினைகள் பற்றியும், அதனுடைய சமூக-பொருளாதார விளைவுகளைப் பற்றியுமான தத்துவார்த்த ஆராய்ச்சி மிக இன்றியமையாதது ஆகும்.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 25-வது காங்கிரசில் லியோனித் பிரெஷ்னேவ் "ஒரு சிறந்த கொள்கையைக் காட்டிலும் நடைமுறைக்குச் சிறப்பாகப பயன்படுவது வேறு எதுவும் இருக்க முடியாது என்று மக்கள் கூறுவது சரியே"[1] என்று கூறினார். நம்முடைய மாநாட்டில் விவாதிக்கப்படும் பிரச்சினைகளுக்கு இது பயன்படுத்தப்பட முடியும், என நான் நம்புகிறேன்.

தோழர்களே, உங்கள் பணியில் நீங்கள் வெற்றிவாகை சூட வாழ்த்துகிறேன்.

நன்றி

## அடிக்குறிப்புகள்

1. எல். ஐ. பிரெஷ்னேவ் : **லெனினது வழியைப் பின் பற்றி-** மாஸ்கோ 1972. பக். 158.

2. எங்கெல்ஸ் : **டூரிங்குக்கு மறுப்பு-** முன்னேற்றப் பதிப்பகம் மாஸ்கோ- 1977. பக். 205

3. வி. இ. லெனின் : **தொகுப்பு நூல்கள்-** தொகுதி 27. பக். 422.

4. **சோவியத் ஒன்றிய கம்யூனிஸ்ட் கட்சியின் 23-வது காங்கிரஸ் :** நோவாஸ்த்தி பிரசுராலயம்- பக். 19.

5. வி. இ. லெனின் : **தொகுப்பு நூல்கள்-** தொகுதி 30. பக். 274

6. லியோனித் பிரஷ்னேவ் : **ஆவணங்களும், தீர்மானங்களும், சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி 25-வது காங்கிரஸ்.** நொவோஸ்தி பிரஸ் ஏஜென்சி பதிப்பகம், மாஸ்கோ, 1976, பக்கம் 57.

## சோவியத் ஒன்றியத்தின், விஞ்ஞான கழகத்தின், உலகப் பொருளாதாரம்-சர்வதேச உறவுகள் நிறுவனத்தின் ஆராய்ச்சிக் கட்டுரை

### உலகில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் சாரமும், விதிகளும்

1. இந்த நிலவுலகின் உருவத்தையே புரட்சிகரமாக மாற்றி இருக்கிற, வளர்ந்து வரும் உலகின் புரட்சிப் போக்கின் பின்னணியில், அடிப்படையான சமூகமாற்றங்கள் நிகழ்ந்து வரும் விசைத்திறமிக்க ஓர் சகாப்தத்தில், இன்றைய விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி முன்னேறி வருகிறது. மனித இன வரலாற்றில் முதன்முதலாக ஒரு வளர்ந்த சோஷலிச சமுதாயத்தைக் கட்டியமைத்தவர்களான சோவியத் மக்கள், கம்யூனிசம் என்ற பெரும் மாளிகையை எழுப்பி வருகிறார்கள். ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகிய கண்டங்களில் உள்ள பல அரசுகள் சோஷலிசம் என்ற புதிய சமுதாயத்தைக் கட்டி வருகின்றன. பல வளரும் நாடுகளில்—குறிப்பாக சோஷலிச முன்னேற்றப் பாதையைத் தேர்ந்தெடுத்துக் கொண்ட நாடுகளில், தீவிரமான சமூக - பொருளாதார - அரசியல் மாற்றங்கள் நடைபெற்று வருகின்றன. வளர்ந்த முதலாளித்துவ நாடுகளில் இன்று உள்ளதைப்போல தொழிலாளி மக்களின் போராட்டங்களின் வேகமும், பொதுவான ஜனநாயக இயக்கத்தின் வேகமும் வேறு எப்பொழுதும் இருந்ததில்லை.

சமூக உறவுத்துறைகளில் ஏற்படும் மேலான, புரட்சி கரமான மாற்றங்களும், விஞ்ஞானத்திலும், தொழில் நுட்பத்திலும் நிகழும் பெரும் மாற்றங்களும் இணைந்து செல்வதே நம் காலத்து தனிச் சிறப்பு வாய்ந்த இயல்பாகும். 20-ம் நூற்றாண்டின் துகிர்க் கொடியாக விளங்குகிற சமூகப் புரட்சி, விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியுடன் பிரிக்க முடியாதவாறு பிணைக்கப் பட்டுள்ளது. உலகின் இரண்டு எதிரெதிரான சமுதாய அமைப்பு முறைகளின் வரலாற்று அடிப்படையிலான போட்டிச் சூழ்நிலையிலும், எதிர்ப்புச் சூழ்நிலையிலும், சோஷலிசத்தின் நிலைகளின் ஒன்றிணைப்பும், விரிவாக்கமும் நடைபெற்றுவரும் சூழ்நிலையில் அது நிறைவேற்றப் படுகிறது. மேலும் சோவியத் ஒன்றியமும், சோஷலிச நாடு களும், விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சி தொடர்பான பல பெரும் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளன. இதை அனைவரும் ஏற்றுக் கொள்கின்றனர்.

விஞ்ஞானத்தில் நிகழ்ந்துள்ள புரட்சிகரமான மாற்றங் களும், உற்பத்தி சக்திகளிடத்தில் தொழில் நுட்ப அறிவு பெருகி வளர்வதும், பல்வேறு வகையான பொருளாயத உற்பத்தித் துறைகளின் மேலான மாறுதலுக்கு இட்டுச் சென்றுள்ளது. பொருளாதார செயல் முறைகளில் மிகப் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. சமுதாயத்தின் கட்டமைப்பையும் மாற்றியுள்ளது. வர்க்க சக்திகள் மற்றும் அரசியல் சக்திகளின் அணிகளில் மாற்றங்களை ஏற்படுத்தி யுள்ளது. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 24-வது காங்கிரசின்போது, லியோனித் பிரெஷ்னேவ் ஆற்றிய பேருரையில் "விஞ்ஞான வளர்ச்சியாலும், அதன் புதுமைக் கண்டுபிடிப்புகளாலும், உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள புரட்சி, மிகவும் அதிகமான முக்கியத்துவம் உடையதாகவும், ஆழமுடையதாகவும் விளங்குகிறது"[1] என்று கூறினார்.

2. விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சி, உற்பத்தி சக்திகள், ஆன்மீகத்துறை போன்ற பிற சமுதாய விஷயங்

களில் நிகழ்கின்றவை, அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு ஒன்றிணைந்த சமுதாயப் புலப்பாடாகும். இயல்பாகவே வளரும் தேவைகளும், உணர்வும் கொண்ட மனிதனே இன்றைய புரட்சியின் மையக்கருவாக விளங்குகிறான். மிகவும் சிக்கலான, இன்றியமையாத காரியங்களின் தீர்வுகளில் மேலும் மேலும் தீவிரமாக அவன் ஈடுபடுகிறான். நாடுகளின் நலன்களுக்கும், மனிதன், சமுதாயம், இயற்கை ஆகியவற்றின் உட்தொடர்புகளின் முக்கியமான இயல்புகளுக்கும் ஒத்திசைவாகவுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய அதன் முன்னேறிய அமைப்புகளின் தொடர்ந்த போராட்டங்களிலிருந்து, இன்று தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகரமான மனிதநேயம் பிரிக்க முடியாததாகவுள்ளது.

சமுதாயத்தில் விஞ்ஞானம் ஏற்கும் பங்கில் நிகழ்ந்துள்ள மாற்றமே இன்றைய விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் தனிச்சிறப்பான இயல்பாகும். அது ஒரு பொருளாயத சக்தியாகவும், உற்பத்தி சக்திகளின் முன்னேற்றத்தில் பங்கு கொள்ளும் முக்கியமான காரணியாகவும் செயல்படுகிறது. மேலும் அது சமுதாய நிகழ்ச்சிப் போக்குகளின், விரைவான முன்னேற்றத்திறனில் மிகுதியான உயர்வை ஊக்குவிக்கும ஓர் ஆன்மீக சக்தியாகவும் விளங்குகிறது.

பிரிக்க முடியாத "விஞ்ஞானம் - தொழில் நுட்பம் - உற்பத்தி" ஆகியவற்றின் இணைப்பு உருவாவதற்கான ஒரு விஞ்ஞான அறிவு, தொழில் நுட்பப் படைப்புத்திறன், உற்பத்தி ஆகியவற்றின் ஒன்றிணைந்த சேர்க்கை நிகழ்ந்துள்ளது. அதனுடைய உட்பகுதிகள் பிரிக்க முடியாதவாறு இணைந்ததாகவும் சிக்கலானதாகவும் உள்ளன. விஞ்ஞானம் அதில் உடனடியான உற்பத்தி சக்தியாகச் செயல்படுகிறது.

உலகை அறிந்து கொள்வதில் பண்பியல் அடிப்படையிலான ஒரு புதுப் படிநிலையையும், புதிய கண்டுபிடிப்புகளை நடைமுறையில் பயன்படுத்துவதையும் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி குறிக்கிறது. விஞ்ஞானக்

கண்டுபிடிப்புகளின் அளவும், அதனுள் அடங்கியிருக்கும் அறிவின் கிளைகளும் எண்ணில் அடங்காதவை. எனவே அதற்கு நிகரான வேறொன்று இல்லை. இவைகள், பொருளின் ஆழ்ந்த உட்பகுதியை மனித மனம் துருவி ஆராய்ந்து பார்ப்பதையும், நுண்ணுயிர்ப் பகுதிகளையும், அகிலத்தையும், அண்டவெளியையும், பிரபஞ்சத்தையும் ஆராய்ந்து பார்ப்பதையும் உள்ளடக்கியதாகவுள்ளன. உயிருள்ள நுண்ணுயிரின் புரியாத புதிர்களைத் தெளிவாக விளக்குவதையும் உள்ளடக்கியதாக இருக்கிறது. ஏராளமான புதிய விஞ்ஞான ஆராய்ச்சித் திசைகளும், கிளைகளும் தோன்றி வலிமையடைந்திருக்கின்றன — குறிப்பாக மரபு வழியான ஆராய்ச்சித்துறைகளின் சந்திப்புகளில், அறிவைப் பெறுவதற்கான முறைகளும், தொழில் நுட்ப சாதனங்களும் புரட்சிகரமாக மேம்பாடடையச் செய்யப்பட்டுள்ளன. கணக்கியல், பல விஞ்ஞானங்களின் கிளைகளில் புகுத்தப் பட்டுள்ளது. விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப சிந்தனையின் சிறப்பான ஒரு கிளையாகத் திகழும் பையோனிக்ஸ் முக்கியத்துவம் பெற்று வருகிறது. பொங்கி வழியும் செய்திகள் ஒரு பெரும் பனிப்பாறை போன்று இருக்கின்றன. கம்ப்யூட்டர்கள் தோன்றியுள்ளன. அவைகள் விரைவாக மேம்பாடடையச் செய்யப்பட்டு வருகின்றன. செய்திகளைச் சேகரித்து, ஒருங்கிணைத்து, சேமித்து பகுப்பாய்வு செய்யும் மிக விரைவான சாதனங்கள் பரந்த அளவில் வளர்ந்து வருகின்றன. சைபர் நத்தியம் நடைமுறைக்கு வந்து மேம்பாடடைந்து வருகிறது.

படைப்பாற்றல் கொண்ட விஞ்ஞான செயல் முறைகள், கூட்டுத்தன்மை கொண்டதாக ஆகிவருகின்றன. மிகவும் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்டதாக ஆகிவருகின்றன. அவற்றின் தொழில் நுட்ப வசதிகள் நாளும் வளர்ந்து வருகின்றன. முதலுக்கும் — உழைப்போர்க்கும் உள்ள விகிதத்தைப் பொருத்தவரை விஞ்ஞானச் செயல்முறைகள், இப்பொழுதேகூட பொருளாயத உற்பத்தியின் முன்னேறிய கிளைகளை வந்தடைந்து விட்டன.

அடிப்படையிலேயே விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளின் வலிமையின் விளைவாக, புதிய யுக்திகளும், தொழில் நுட்பமும், மேம்பாடடையச் செய்யப்படுகின்றன. உற்பத்திக் கருவிகளும், உற்பத்தி முறைகளும், உழைப்பின் இலட்சியங்களும், உற்பத்திப் பொருட்களும், புரட்சிகரமாக மாற்றப்பட்டுள்ளன. விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியானது ஆற்றல் உற்பத்தித்துறையில் பெருமளவில் ஊடுருவியுள்ளது. அணுச்சிதைவு முறையைப் பயன்படுத்துவதனால் கிடைக்கும் ஆற்றலைப் பெருக்குவதன் மூலம், மனித இனத்தின் ஆற்றல் தோற்றுவாய்களைப் பெருமளவு நிரப்பியுள்ளதோடு, அணுசக்தியை தன் வயப்படுத்துவதற்கு முதற்படியாகவும் அமைகிறது. இரசாயனத்தில் ஏற்பட்டுள்ள விரைவான முன்னேற்றம், மூலப் பொருட்களின் பெருக்கத்தை உறுதிப்படுத்தியுள்ளது. உழைப்பின் லட்சியங்களின் மீது செல்வாக்கைச் செலுத்தும் காரணிகள் மாறியுள்ளன; முன்னரே நிர்ணயிக்கப்பட்ட பண்பியல்புகளைக் கொண்ட பொருட்களை உற்பத்தி செய்யும் முறைகளை ஆட்சி செய்ய முடிகிறது. விவசாயத்தையும், மரபுவழி அணுப்பொறியியலையும் இரசாயனமயமாக்கியதானது மனித இனத்தின் உணவுப் பொருட்களைப் படைக்கும் திறனை வளர்ப்பதற்குரிய விஞ்ஞான தொழில் நுட்ப சூழ்நிலைகளை மிக அதிகமான அளவு பெருக்கியுள்ளது. உழைப்பு சாதனமும், தொழில் தொகுதி அமைப்புகளும் வேகமாக வளர்ந்து வருகின்றன. திட்டங்களின் அடிப்படையில் கட்டுப்படுத்தப்பட்ட இயந்திரங்களும், கருவிகளும், இயந்திர மனிதர்களும், கம்ப்யூட்டர்களும் பெருமளவு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மின்னணுவின் வளர்ச்சியும், விரைவான மேம்பாடும், பரவலாக அதைப்பயன்படுத்துவதும், அதனை நுண்பதிப்பு செய்யும்முறையும், ஒரு சிறு கருவியின் அலகைப் படைப்பதிலிருந்து, பெரிய உற்பத்தித் தொழில் அமைப்புகள்வரை கம்ப்யூட்டர் மூலம் கட்டுப்படுத்துவதையும் உள்ளிட்ட, உற்பத்தியின் தானியங்கி முறையின் அடிப்படையிலேயே புதிய ஓர் படிநிலையைத்

தோற்றுவித்துள்ளன. விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சி நடைபெறும் காலத்தில், கட்டுப்படுத்தும் இயந்திரங்கள், இயந்திர நுட்பங்கள் ஆகியவற்றின் தனிச்சிறப்பான உற்பத்தி விரிவாக்கம் செய்யப்படுகிறது.

விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் சாதனைகளைப் பயன்படுத்துவது சென்ற சில பத்தாண்டுகளில் பொருளாதார வளர்ச்சியின் முக்கியமான காரணியாக விளங்குகிறது. படைப்பாற்றல் மிக்க விஞ்ஞான தொழில் நுணுக்கச் செயல்களின் சாதனைகளானவை உணவு, உடை, மக்களுக்கான வீட்டுவசதி, செய்திப் போக்குவரவுக்கான முறைகள், வாய்ப்புகள், உற்பத்தித் திறனற்ற துறைகளை மாற்றுவது ஆகியவற்றைப் பெருக்கப் பெரிதும் உதவியுள்ளன.

சமுதாயத்தின் அடிப்படை உற்பத்தி சக்தியான மானுட சக்தியை மாற்றியமைப்பதுடன் இணைந்ததாகச் (இந்த உற்பத்தியின் பொருளாயதக் கூறுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்) செய்துள்ளன. விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் தேவைகளுக்கு ஒத்திசைவாக, மானுட சக்தியின் திறமை வளங்களைப் பெருக்குவதற்கு உதவக்கூடிய பொதுக் கல்வி மட்டமும், கைத்திறனும் வளர்ச்சியடைந்து வருகின்றன. உழைப்பின் உற்பத்தித்திறன் வேகமான நடையுடன் முன்னேறிச் செல்கிறது. உழைப்பு பன்முகத்தன்மை வாய்ந்ததாகவும், திறமை மிக்கதாகவும் ஆகிவருகிறது. கல்வியும், செயலாட்சித்துறையும் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் ஒன்றிணைந்த பகுதிகளாக விளங்குகின்றன.

3. புதிய பத்தாண்டுகள் அடிப்படையான ஆய்வுகளிலும், நடைமுறைப் பயன் தொடர்பான ஆய்வுகளிலும் மாபெரும் சாதனைகள் நிறைந்ததாக இருக்கும் என்று நம்புவதற்கான சான்றுகள் ஏராளமாக உள்ளன.

கணக்கியலிலும், இயற்பியலிலும் பெறப்பட்டுள்ள வெற்றிகள், மிக அதிகமான உற்பத்தித்திறன் கொண்ட

பல்வகைப் பதனம் செய்கிற தொழில் தொகுதிகளையும், வளர்ச்சியடையச் செய்வது, பயன்படுத்துவது ஆகிய நிகழ்ச்சிப் போக்குகளை மிக எளிதாக்கும்; புதிய தகவல் தொகுப்புத் தோற்றுவாய்களுடைய கட்டமைப்பு, எண்ணிக்கையில் நிகழும் மாற்றங்களுக்கு எளிதில் தகவமைத்துக் கொள்ளக்கூடிய செயற்திட்ட அமைப்பு முறைகள் ஆகியவற்றின் வளர்ச்சியைக் கைகூடும் செயலாக்கும்; ஒளியியல் சார்ந்த தகவல் சாதனங்களைப் பரவலாக ஆக்குவதையும், தன்னுடைய நினைவில் உள்ள வற்றைத் தானே எழுதிக் கொள்ளும் கருவிகளையும் பன்நோக்கு வாசகர்களையும், உயர் அழுத்த மின் கம்பித் தொகுப்புகளையும், ஆற்றலை மாற்றுகிற நேரடி முறைகளை வளரச் செய்வதையும், பரப்புவதையும் கைகூடும் செயலாக ஆக்கும். இயைபியக்கத்தை ஊக்கும் ஆற்றல் துறையிலும், அணுத்திரண்மம் சார்ந்த பல்பொருள் கூட்டை ஒன்றிணைக்கும் துறையிலும் இரசாயனத்துறையும் தொழில் நுட்பத்துறையும் பெருமளவு புதிய இன்றியமையாத அறிவைத் தோற்றுவிக்கும். உயிரியலிலும், அதனை ஒட்டிய விஞ்ஞானங்களிலும் ஆழ்ந்த, புரட்சிகரமான மாற்றம் ஒன்று நிகழ்ந்து முன்னேறும்; பரம்பரை, நினைவாற்றல், உயிரியல், தகவல் நிகழ்ச்சிப் போக்குகள், நோய் தடுப்பியல், முதுமை பற்றிய இயல். ஆகியவற்றை எளிதாக்கும். புரதச்சத்துக்களை ஒன்றிணைப்பதிலும், புதிய உடலுறுப்புக்களையும், உயிரமைப்புகளையும் படைப்பதிலும், உயிரினக் கிளர்ச்சியூட்டுகிற பரந்த கூட்டுப் பொருட்களின் துணுக்குறும் உருவங்களையும், நிகழ்ச்சிப் போக்குகளையும் வளர்ச்சியடையச் செய்வது, பயன்படுத்துவது ஆகியவை இலகுவாகும்.

உற்பத்தி நிகழ்ச்சிப் போக்குகளின் தீவிரம், சிறந்த அளவுரு தொடர்பான, தொழில் நுட்ப வளர்ச்சியின் விளைவாகவும் (மிகுந்த விரைவு, வெப்பம், அழுத்தம் முதலியன) பதப் படுத்துவதற்குப் புது முறைகளைப் பயன்

படுத்துவதன் விளைவாகவும், மின் அரிப்பு, மின் ஒளிக்கதிர், லாசர்கதிர், ஒலியைவிட விரைவான வேகமுடைய முறைகள் ஊனீர்தொடர்பானவை, காந்தத்துடிப்பு முறைகள், வெடித்தல்கள், தொழிற் தொகுதிகளின் ஒழுங்கிற்கு ஏற்ப ஒழுங்கமைக்கப்பட்ட உயிரியல் இரசாயன முறைகள் முதலியவற்றைப் பயன்படுத்துவதன் விளைவாகவும் பெருமளவு உயர்ந்து வளரும். உயர்ந்த அளவுருக்களை யுடைய தொழில் நுட்பச் செயல்முறைகளைப் பரவலாகப் பயன்படுத்துவது, கம்ப்யூட்டர்களின் முன்னேற்றத் தினாலும், புதிய "பரம்பரை" இயந்திர மனிதர்களின் முன்னேற்றத்தினாலும் உந்தப்பட்ட உற்பத்தி வசதிகளில், சிக்கலான, முழுமையான தானியங்கலைப் பயன்படுத்து வதைக் கட்டாயமாக்கும்.

பெருக்கிகளை வளர்ச்சியுறச் செய்வதும், அணுவெப்ப சேர்க்கை முறையைப் பயன்படுத்துவதும், சூரியவெப்ப ஆற்றல் நீரக எரிபொருட்கள் ஆகியவற்றைப் பயன்படுத்து வதும் வருங்காலத்தில் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியில் ஒரு பெரும் மேலான செல்வாக்கைச் செலுத்தும். செயற்கை உணவுப் பொருட்களுக்கான தோற்றுவாய்களைத் தேடுவது குறிப்பாக மனிதனுக்கு வேண்டிய உணவாகப் பயன்படுகிற புரதப் பொருட்களைத் தேடுவது தீவிரமடையும். இயற்கை வளங்களின் புதிய வகையாகக் கருதப்படுகிற உலகப் பெருங் கடல்கள் எவ்வளவு அதிகமாகப் பயன்படுத்த முடியுமோ அவ்வளவு அதிகமாகப் பயன்படுத்தப்படும். மூடிய உற்பத்திச் சுழல்களையுடைய, கழிவுப் பொருட்களில்லாத தொழில்களின் வளர்ச்சியையும் உள்ளிட்ட புதிதாக வளர்ச்சி யடைந்துள்ள யுத்திகள், தொழில் நுட்பங்கள், சூழ்நிலைப் பாதுகாப்பு அளவுருக்களின் பெருக்கமும், மேம்பாடும் தொழில் நுட்ப முன்னேற்றத்தின் திசையாக இருக்கும்.

4. விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியானது அடிப்படையிலேயே உலகில் உள்ள அனைத்து நாடுகளின் குழுக்களையும் உள்ளடக்கிய ஒரு சர்வதேச நிகழ்ச்சியாகும்.

கம்யூனிச அமைப்பு முறையிலேதான் அது முழு அளவில் முன்னேறச் செய்யப்பட முடியும். மனிதனை மனிதன் சுரண்டுகிற, இலாபத்தை நோக்கமாகக் கொண்ட முதலாளித்துவம் அதைச் செய்ய இயலாது. எங்கே விஞ்ஞானமும், தொழில் நுட்பமும் சமுதாயத்திற்குச் சேவை புரிகிறதோ, விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சிக்கு முழு அளவில் உதவக்கூடிய மனிதனின் ஒன்றிணைந்த சீரான வளர்ச்சிக்கு எந்த உயர்ந்த சமூக— பொருளாதார அமைப்பு முறை உதவுகிறதோ, அந்த அமைப்பு முறையில்தான் அது பெரும் வளர்ச்சியடைய முடியும். சோஷலிசப் புரட்சியை முதன் முதலில் தோற்றுவித்த நாடு,ஒரு குறுகிய வரலாற்றுக் கால இடைவெளியில் அந்த நாட்டின் பிற்பட்ட தன்மையை வென்று உலக விஞ்ஞான முன்னேற்றத்தின் முன்னணிக்கு முன்னேறி. மனித இனம் முழுமைக்கும் விண்வெளியைத் திறந்து விட்டுள்ளது என்பது இயல்பான விதிக்கு உகந்ததாக வுள்ளது.

இரண்டு வேறுபட்ட சமூக-பொருளாதார அமைப்பு களையுடைய இருவகையான அரசு முறைகள் நிலவுவதே, இன்றை உலகத்தின் உண்மையாகும்; இந்தக் கோளின் ஒரு பெரும் பகுதியில் அதனுடைய உள்ளார்ந்த பிற்போக்குக் கொள்கையில் விருப்பமும், ஆக்கிரமிப்பு மனப்பான்மையும் கொண்ட ஏகாபத்தியம் நிலவுகிறது. இயற்கையின் புரியாத சக்திகளை அறிந்து கொள்வதில் இதுவரை கண்டிராத முன்னேற்றமும், விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சிக்கான பெரும் வாய்ப்புகளும், மனிதனுக்கு நிகழக்கூடிய பேராபத்துக்களுடன் நெருங்கிய தொடர்புடையனவாக விளங்குகின்றன என்பதை இந்த நிலை காட்டுகிறது.

விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் முன்னேற்றங் களின் பல்வேறு சாதனைகளை, ஆக்க நலன்களுக்குப் பயன் படுத்தாமல், அழிவுச் செயல்களைத் தீவிரப் படுத்துவதை நோக்கமாகக் கொண்ட, ஏகாதிபத்தியத்தின் கொள்கை யினால் தோற்றுவிக்கப்பட்டுள்ள, உலகைப் பயமுறுத்துகிற

அணுவெப்பப் போராட்டமே உலகிற்குத் தோற்றுவிக்கப் பட்டுள்ள பெரும் அபாயமாகும். குவித்து வைக்கப்பட்டுள்ள ஆயுதங்களைக் கருத்தில் கொண்டு பார்த்தால், ஒரு புதிய உலகப் போரைத் தவிர்ப்பது மனித இனத்தின் முன்னேற்றத் திற்கு ஒரு இன்றியமையா நிபந்தனையாகவும், எந்த ஒரு துறையிலும் முன்னேற வேண்டுமாயின் அதற்குரிய முதற் கூற்றாகவும், உலகின் புரட்சி இயக்கத்தின் விரைவான முன்னேற்றத்திற்கு ஒரு இன்றியமையா நிபந்தனையாகவும் உள்ளது.

மக்களுடைய நலனுக்கும், சமுதாய நலனுக்கும், விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றத்தின் அனைத்து சாதனைகளையும் பயன்படுத்துவதைத் தடுப்பது முதலாளித்துவ உற்பத்தி உறவுகள்தான்.

உற்பத்தி சக்திகளின் வேகமான வளர்ச்சியாலும், நாகரிகத்தின் போக்கில் நிகழும் விரைவான வளர்ச்சியாலும் தோற்றுவிக்கப்பட்ட ஏராளமான உலகப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு முதலாளித்துவ முறை பல தடங்கல்களை உண்டாக்குகின்றது. முதன்முதலாக சூழ்நிலைப்பாதுகாப்பு பற்றிய பிரச்சினை, உலகில் வளர்ந்து வரும் மக்கள் தொகைக்குத் தேவையான ஆற்றல், இயற்கை வளங்கள், உணவுப் பொருட்கள் ஆகியவற்றை ஏற்பாடு செய்தல், மற்றும் உலகப் பெருங்கடல், அண்டவெளி ஆகியவற்றைப் பயன்படுத்தல் ஆகிய பிரச்சினைகள் உள்ளன.

உலகமக்கள் தொகையில் பெரும்பாலோரைக் கொண்ட வளரும் நாடுகளின் பிற்பட்ட தன்மையை வெல்வதற்கு ஏற்ற செயல்களைச் செய்வதற்கான, விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றங்களின் சாதனைகளைப் பயன்படுத்து வதற்குரிய வழிகளில் முதலாளித்துவம் பெரும் தடைச்சுவர் களை எழுப்புகிறது.

**5.** விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி முதலாளித் துவத்தின் கீழ் அதனுடைய சமூக-அரசியல் முரண்பாடுகள்

தீவிரமடைவதற்கு வழி செய்கிறது. கீழே விளக்கப் பட்டுள்ளதைப் போல 1970-களில் இந்த நிகழ்ச்சிப் போக்கு ஒரு குறிப்பிட்ட முறையில் வெளிப்பட்டது. ஒருபுறம் விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சி, பொருளாதாரம் சமூகத் தன்மையடைவதைத் தீவிரமாக்குகிறது. மறுபுறம் அது ஏகபோக முதலாளிகளால் தங்களுடைய நிலைகளைப் பலப்படுத்திக் கொள்வதற்குப் பெரிதும் பயன்படுத்தப் படுகிறது. விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சி முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி நிலையின் போது வளர்ச்சியடைகிறது என்பதனால் புறவயமாக அந்த நெருக்கடியைத் தீவிரமடையச் செய்வதற்கு வழி கோலுகிறது.

உற்பத்தி சக்திகளை உற்பத்தி முறையின் தொடக்க நிலையில் உள்ள புரட்சிகரமான கூறாக, மார்க்சீய-லெனினிய சிந்தனை கருதுகிறது என்பது யாவரும் நன்றாக அறிந்ததே. அதே வேளையில் கார்ல் மார்க்சும், பிரெடெரிக் எங்கெல்சும், லெனினும் முதலாளித்துவ முறையின் முரண் பாடுகளைத் தீவிரமடையச் செய்து, முடிவில் அதனுடைய வீழ்ச்சியையும், உண்டாக்குகிற தோற்றுவாய்கள் உர்பத்தி சக்திகளின் தேக்கத்திலோ அல்லது அதன் முன்னேற்றத்தைத் தடை செய்வதிலோ இல்லை. ஆனால் உற்பத்தி சக்தி களுக்கும், முதலாளித்துவத்தின் உற்பத்தி உறவுகளுக்கு மிடையில் நிகழும் வளர்ந்து வரும் போராட்டத்தில்தான் உண்டு என்பதைக் கண்டனர். இன்று இவ்வாறான அணுகு முறை மிகவும் முக்கியமானதாகவுள்ளது. முதலில் சமூக உற்பத்தியின் வீச்சும், வளர்ச்சி விகிதமும் கணக்கிட முடியாத அளவு வளர்ந்துள்ளன. இரண்டாவது சமூக-பொருளாதார-விஞ்ஞான-தொழில் நுட்ப வளர்ச்சிகளுக் கிடையிலுள்ள பிணைப்புகள் என்றுமில்லாத அளவுக்கு வளர்ந்துள்ளன.

18 - வது நூற்றாண்டிலும், 19 - வது நூற்றாண்டின் ஆரம்பத்திலும் நடைபெற்ற தொழிற்புரட்சி முதலாளித்

துவத்திற்கான தொழில் - நுட்ப அடிப்படையை ஏற்படுத்தி, நிலப் பிரபுத்துவ வர்க்கத்தின் நிலைகளை அழித்தது. இப்போது முன்னேறி வந்து கொண்டிருக்கும் விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சி முதலாளித்துவத்தின் கட்டமைப்பிற்குப் பொருந்துவதாக இல்லை. முடிவில் அதன் அடிப்படைகளை அழித்தே விடக்கூடியதாக விளங்குகிறது. ''முதலாளித்துவத் தொழில் நுட்பம், மிக அதிகமான அளவில் நாள்தோறும் உழைக்கும் மக்களைக் கூலி - அடிமைத் தனத்திற்குள் பிணைத்து வைத்திருக்கிற சமூகச் சூழ்நிலைகளை மீறி வளர்ந்து வருகிறது''[2] என்று லெனின் எழுதினார். மனித இனத்தின் வருங்காலத்தைப் போல் விஞ்ஞானம் தொழில் நுட்பம் ஆகியவற்றின் வருங்காலமும், சோஷலிசத்தின் வளர்ச்சியையும், கம்யூனிசத்தின் வளர்ச்சியையும் பொருத்ததாகவே உள்ளது.

6. ஆனாலும் இன்றைய முதலாளித்துவத்தின் மிகவும் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்ட உற்பத்தி சூட்சுமத்தையும், அதன் வலிமை வாய்ந்த தொழில் அடிப்படையையும், தொழில் நுட்ப அடிப்படையையும், விஞ்ஞான அடிப்படையையும், குறைத்து மதிப்பிடுவது தவறானதாகவே இருக்கும். சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 25-வது காங்கிரசில் சொற்பொழிவாற்றியபோது லியோனித் பிரஷ்னேவ் ''முதலாளித்துவம் 'தானாகவே அழிந்து விடுவதைப்' பற்றிப் பேசுவது எப்போதும் கம்யூனிஸ்டுகளின் மனதிலிருந்து வெகு தொலைவிலேயே இருக்கும். இன்னும் அது சில சேமப் படைகளைக் கையிருப்பில் வைத்திருக்கிறது''[3] என்று கூறினார்.

1970-களின் மத்திய பகுதிகளில் ஏற்பட்ட உலக பொருளாதார நெருக்கடியானது, மறு உற்பத்திச் சூழ்நிலை சீர்குலைவை இயல்பாகக் கொண்ட ஒரு காலத்தை — முதலாளித்துவப் பொருளாதார வளர்ச்சியில் ஏற்படுத்தியது. முந்திய 25 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த கால வெளியுடன் ஒப்பிடும் பொழுது, முதலாளித்துவத்தின்

கீழ் காணப்படும், பொருளாதார, சமூக, அரசியல் முரண் பாடுகள் மேற் கொண்டு அதிகமாகத் தீவிரமடைவதைத் தடுக்க முடியாவிட்டாலும் கூட, இன்றைய முதலாளித்துவம், பொருளாதார வளர்ச்சிக்கான வாய்ப்புகளையுடையதாகவே தான் உள்ளது. அடுத்த பத்தாண்டுகளில் விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றம், குறிப்பாக விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் செல்வாக்கின் விளைவாக உருவாகும் புதிய சமூகக் கோரிக்கைகள் தொழிற்துறையில் வளர்ச்சி யடைந்துள்ள முதலாளித்துவ நாடுகளின் பொருளாதார வளர்ச்சியில் ஒருபெரும் செல்வாக்கைச் செலுத்தும்.

முக்கியமான முதலாளித்துவ நாடுகளின் ஆட்சி யாளர்கள் பின்னர் தொடர்ந்து வரக்கூடிய பொருளாதார ஒன்றிணைவு நிகழ்ச்சிப் போக்கையும் உள்ளிட்ட அரசு ஏகபோக பொருளாதாரக் கட்டுப்பாடுகளைத் தீவிரப் படுத்துவதற்கும், விரிவாக்கம் செய்வதற்கும் தேவையான புதிய வழிகளையும், முறைகளையும் தேடுவதற்கு முயற்சிப் பார்கள். உலக பொருளாதார மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய நிறுவனம் 1990 வரையும், அதிலிருந்தும் உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தின் வளர்ச்சி பற்றித் தயாரித்துள்ள முன்னறிவிப்பின்படி 1950-களோடும், 1960-களோடும், முதலாளித்துவப் பொருளாதாரத்தின் வளர்ச்சியை ஒப்பிடும்போது குறிப்பிடத்தக்க அளவு குறைந்த வேகமே உடையதாக இருப்பினும், முதலாளித்துவப் பொருளாதாரம் அடுத்து வரும் 20 ஆண்டு களில் மிக அதிகமான அளவில் முன்னேற முடியும் எனக் காட்டுகிறது.

1957, 1960, மற்றும் 1969 ஆகிய ஆண்டுகளில் மாஸ்கோவில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானங் களும், 1 76-ல் பெர்லினில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் மாநாட்டின் ஆவணங்களும், பிற சகோதர மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சிகளின் திட்ட ஆவணங்களும், ஏகாதிபத்தியம் உறுதியான, அபாயகரமான

ஒரு எதிரியாக உள்ளது என்பதைக் குறித்துக்காட்டியுள்ளன. நீண்ட தொடர்ச்சியான, கடினமான ஒரு போராட்டத்தின் மூலமே, அதைப் புரட்சிகரமான முறையில் வீழ்த்த முடியும். இந்தப் போராட்டத்தின் வெற்றிகரமான வளர்ச்சிக்கு, அனைத்துப் புரட்சிகர சக்திகளையும், ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளையும், ஜனநாயக சக்திகளையும், மக்களின் போராட்டங்களை வழிநடத்திச் செல்கிற கம்யூனிஸ்ட் மற்றும தொழிலாளிகள் கட்சிகளின் விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்ட, தொலைநோக்குடைய செயல் களையும் ஒன்றிணைப்பது மிகவும் இன்றியமையாதது ஆகிறது.

7. உலகில் நடந்து வரும் விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் வீச்சும், அதன் பெரிய சமூக முக்கியத்துவமும், அதனுடைய சாதனைகளை சோஷலிசப் பொருளாதார அமைப்பின் நலன்களுடன் இணைப்பது என்ற மிக முக்கிய மான பிரச்சினை, முதலாளித்துவ நாடுகளில், அதனால் தூண்டிவிடப்பட்ட பொருளாதார மற்றும் சமூக மாற்றங் களின் ஆழம் ஆகிய அனைத்துக் காரணிகளும், அதனுடைய முக்கிய இயல்புகளையும், விளைவுகளையும் பற்றிய மார்க்சீய-லெனினிய பகுப்பாய்வு சரியானவைதான் என நிரூபித் துள்ளன.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியும், சோஷலிச நாடுகளின் கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளும், உலக கம்யூனிஸ்ட் இயக்கமும், தங்களது உண்மையான, விஞ்ஞான, படைப்பாற்றல் மிக்க கொள்கைகளுக்கும், செயல்களுக்கும ஏற்ப விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் பிரச்சினைகளில் மிக அதிகமான கவனம் செலுத்தி வந்திருக்கின்றன. இன்னும் செலுத்தி வருகின்றன. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி காங்கிரசுகளின் நடவடிக்கைகளிலும், கம்யூனிஸ்ட்கள் நடத்திய ஏராளமான கூட்டங்களின் ஆவணங்களிலும், பல மார்க்சீயப் பகுப்பாய்வு மையங்களின் செயல் முறைகளிலும் அது பிரதிபலிக்கிறது.

விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் பிரச்சினைகளை மார்க்சீய - லெனினிய சிந்தனைகளின் மீது சார்ந்தும், அரசியல் பொருளாதாரத்தின் அடிப்படையிலும், அதனின்றும் பிரிக்க முடியாத இன்றைய, குறிப்பான வர்க்கப் பகுப்பாய்வுடனும், பூர்ஷ்வாக்களிடையேயும், சிறு பூர்ஷ்வாக்களிடையேயும் காணப்படுகிற பல்வேறு உருவிலுள்ள புரட்டர்கள், சீர்திருத்தக்காரர்கள், திருத்தல்வாதிகள் ஆகியோரை எதிர்த்துப் போராடிக் கொண்டும், தீவிரமாகக் கம்யூனிஸ்ட்கள் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள்.

**விஞ்ஞான - தொழில் நுட்ப முன்னேற்றமும், அரசு - ஏகபோக முதலாளித்துவத்தின் பொருளாதார முரண்பாடுகளும்**

8. விஞ்ஞான முன்னேற்றமும், தொழில் நுட்ப முன்னேற்றமும் சமூகப் பிரிவுகளைத் தோற்றுவிப்பதற்கும், உழைப்பை சமூகத் தன்மையுடையதாக ஆக்குவதற்கும் சாதகமாக உள்ளன. உற்பத்தியை ஒருமுனைப்படுத்துதல், அதில் சிறப்புத் திறமை பெறுதல், அதில் ஒத்துழைப்பு ஆகிய நிகழ்ச்சிப் போக்குகளைத் தீவிரப்படுத்துவதற்கும் அடிப்படையாகத் திகழ்கின்றன. பல்வேறு பொருளாதார சங்கிலிக் கண்ணிகள் ஒன்றுக்குள் ஒன்று சார்ந்திருப்பதையும் தீவிரப்படுத்துகின்றன. எனினும் முதலாளித்துவத்தின் கீழ் அரசு உற்பத்தி செய்வதோடு மட்டுமல்லாமல், நிதித்தொழில் தொகுதிகளாகவும் ஆகியுள்ள பெரிய நிறுவனங்கள், தங்களின் மூலதனத்தை மிக அதிக அளவில் ஒருமுனைப் படுத்தியிருக்கின்றன. யு எஸ். பொருளாதாரம் ஏறத்தாழ 200 இணையங்களால் ஆட்சி செய்யப்படுகிறது. மேற்கு ஜெர்மனியில் ஏறத்தாழ 100 கம்பெனிகள் நாட்டிலுள்ள கூட்டுப் பங்குக் கழகங்களின் மொத்த மூலதனத்தின் மூன்றில் இரண்டு பங்கைக் கட்டுப்படுத்துவதாகவுள்ளன. தொழில் தொகுதி மட்டத்தில், தனிநபர் ஏகபோகம், சமூகத்தன்மையடைவதன் வளர்ச்சி, உர்பத்தியையும், விலையையும் ஒரு சில பெரும் நிறுவனங்கள் ஒழுங்குபடுத்தும் இயந்திர நுட்பத்தின் வளர்ச்சியிலும், தானாகவே வெளிப்படுகிறது.

ஏகபோகங்களின் குழுக்களில் கலந்துகொள்வோரிடையே நிலவுகிற உறவுமுறைக்குள் போட்டியும், கூட்டுறவும் ஒரு மிகுதியான, சிக்கலான முறையில் பிணைக்கப்பட்டுள்ளன. சிறிய நடுத்தர கம்பெனிகள், ஏகபோகங்களுக்குட் பட்டவையாயுள்ளன. அவைகள் தனிச்சிறப்பான உற்பத்திப் பொருட்களை அளிப்போராகவும், வியாபாரப் பிரதிநிதி களாகவும் பணியாற்றுகின்றன. தொழில் மற்றும் நிதி மூலதனம் இணைவதன் அடிப்படையில் நிதி ஆதிக்கக்குழு கையில் பொருளாதார சக்தியை ஒருமுனைப்படுத்துதலைப் பெருமளவு பெருக்கியுள்ளது. அதேவேளையில் ஏகபோகங் களின் மேல்தட்டினர்க்கு உரிமையாகவுள்ள விஞ்ஞான செயல் திறனின் மையப்படுத்துவதன் அளவு, உற்பத்தி மூலதனம் ஆகியவை மையப்படுத்தப்படுவதன் அளவைக் காட்டிலும் மிகுந்ததாகவுள்ளது.

சர்வதேச ஏகபோகங்களால் இப்பொழுது மிகப் பெரும் பங்காற்றப்படுகிறது. அவைகளில் மிகவும் முக்கியமான பங்கு யு. எஸ். பன்னாட்டு ஏகபோகங்களைச் சேர்ந்ததாக உள்ளது. பண்டங்களின் உற்பத்தியையும், சேவைகளின் பெருக்கத்தையும் சர்வதேசமயமாக்குவதற்கான கால்வழி களில் ஒன்று, விஞ்ஞான-தொழில் நுட்ப சாதனைகளைப் பயன்படுத்துவதற்கு முயலும் பன்னாட்டு நிறுவனங்களின், வெளி நாட்டுக் கிளைகளையும், பிரிவுகளையும் விரிவாக்கம் செய்வதும், இலாபங்களைப் பெருக்குவதற்கு சர்வதேச வேலைப் பகுப்பு அளிக்கிற வாய்ப்புகளைப் பயன் படுத்துவதும் தான்.

மிக அதிகமான அளவு ஏகபோகமயமாக்குவதனால், முதலாளித்துவத்தின் முரண்பாடுகளின் புதிய உருவங்கள் வெளிப்படுகின்றன. சந்தையின் மீது பிடிப்பொன்றைப் பெற்றுக் கொண்டபின், அவர்களுடைய மேலாதிக்கத்தை நிலைநாட்ட ஏகபோகங்கள் தொடர்ந்து தாக்குதலை மேற் கொள்கின்றனர். ஒரு ஏகபோகப் போட்டி, விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றத்திற்குத் தூண்டுகோலாகவும்,

அதே நேரத்தில் அதை மிகப் பெருமளவு சிதைக்கின்ற ஒரு பெரும் சக்தியாகவும் விளங்குகிறது. தனியார் துறையில் பல தொழில் நுட்பப் புதுமைகளைப் புகுத்த மறுப்பதும், புது வகை நுகர்வோரைத் தோற்றுவிப்பதும், மக்களுடைய விருப்பங்களைச் சூழ்ச்சித்திறனுடன் மாற்றுவதும், பொருட்களின் அறநெறி அடிப்படையிலான தரத்தைக் குறைப்பதும், இந்தப் போட்டியைப் பின் தொடர்கின்றன. அது இயற்கை மற்றும் மனித சக்திகளை வீணாக்குவதற்கு வழி செய்கிறது. முதலாளித்துவ முறையின் கீழ் இயந்திர மயமாக்குதல் மிக அதிகமான அளவு வேலையில்லாத் திண்டாட்டத்திற்கும், உயிர்வாழ் சூழ்நிலைக் கேட்டிற்கும் ஒரே சீராக வழி செய்கிறது.

9. விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியும், அதன் சிறப்பான பலன்களை ஏகாதிபத்திய மூலதனம் பறித்துக் கொள்வதும், பூர்ஷ்வா அரசின் பொருளாதாரப் பணி விரிவாக்கம் செய்யப்படுவதை இன்றியமையாதது ஆக்குகின்றன. அதனுடைய மரபு வழி உருவங்களுடன் கூடவே, விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றம், அரசு ஏகபோகத்தினால் கட்டுப்படுத்தப்படுவதும், தனியார் நிறுவனங்களின் எல்லைகளையும் கடந்து பெரும் அளவு மாற்றங்களை மேம்பாடடையச் செய்வதையும், பயன் படுத்துவதையும், உறுதிப்படுத்துவதற்கான விருப்பமும் முக்கியத்துவம் பெறுகிறது. விஞ்ஞானத்துறையில் தேசியக் கொள்கையின் கூறுகளைப் புகுத்துவதும் கூடப் பெரும் முக்கியத்துவம் பெற்று வருகிறது. அரசு விஞ்ஞான ஆராய்ச்சிக்கும், வளர்ச்சிக்கும், குறிப்பாக அடிப்படை விஞ்ஞானங்களின் துறைக்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகையில் பாதியை அல்லது பெரும் பகுதியைத் தானே மேற்கொள்கிறது. (இந்த அரசின் செலவினங்களில் பெரும் பகுதி பொருளாதாரத்தை இராணுவ மயமாக்குவதற்காகச் செலவு செய்யப்படுகிறது என்பது குறிப்பிடத்தகுந்தது.) மேலும் அது வகைதொகைகளை மையப்படுத்துவது, அரசு

களின் செயல் முறைகளையும், தனியார் நிறுவனங்களின் செயல்முறைகளையும் ஒன்றிணைப்பது ஆகிய காரியங்களை நிறைவேற்றுகிறது. மேலும் அரசு, விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றத்திற்கான நீண்ட கால முதலீடு செய்யும் நிகழ்ச்சிப் போக்கை ஒழுங்குபடுத்த முயல்கிறது. பல நாடு களில் அரசு, முதலீட்டில் கால்பகுதி அல்லது அரைப் பகுதியைத் தானே மேற்கொள்கிறது. இன்று எரிபொருள், ஆற்றல் தொழில் தொகுதிகளிலும், போக்குவரத்துத் தொழில் துறையிலும் அரசு பங்குகொள்வதென்பது சிறந்த முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது. ஆற்றல் பற்றிய நீண்ட காலத்திட்டங்கள் பல நாடுகளில் விரிவுபடுத்தப் பட்டுள்ளன. திறன் படைத்த தொழில வித்தகர்களுக்குப் பயிற்சி அளிப்பதில் அரசு வகிக்கும் பங்கு குறைவானதல்ல. 1960 - 1970களில் மட்டும் வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளின் மொத்த தேசிய உற்பத்தியில், கல்விக்காகச் செலவிடப்பட்ட தொகையில் அரசின் பங்கு 3.5 லிருந்து 5.5 சதமாக உயர்ந்தது.

10. விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் பயன் களைத் தங்களுடைய நலன்களுக்குப் பயன்படுத்த வேண்டு மென்ற ஏகபோகங்களின் விருப்பம், முதலாளித்துவ மறு உற்பத்தியில் ஏராளமான முரண்பாடுகளைத் தோற்று வித்துள்ளது. உற்பத்தியின் சமூகத் தன்மைக்கும், தனி நபர் முதலாளித்துவம் உழைப்பின் பயனைச் சுரண்டுவதற்கு மிடையிலுள்ள முக்கியமான முரண்பாடு மேற்கொண்டு தீவிரமடைந்து, பொருளாதார வளர்ச்சிக்கு மிகையான முரண்பட்ட ஒரு இயல்பைத் தந்துள்ளது.

முதலாளித்துவத்தின் கீழ் மக்கள் தொகையில் பெரும் பாலோருடைய நுகர்வின் குறுகிய எல்லைகளினால், தொழில் நுட்ப முன்னேற்றமும், பல தொழிற் சாலைக் கிளைகளின் வளர்ச்சியும் கட்டுப்படுத்தப்படுகின்றன. தனி நபர் வருமானத்தின் உயர்வு விகிதம் குறைந்து கொண்டே இருக்கும் வேளையில், என்றும் உயர்ந்து கொண்டே வரும்

பொருட்களின் உற்பத்திப் பெருக்கம், வருங்கால வருமானத்தை அடிப்படையாகக் கொண்டே நிகழ முடியும். பொருட்கள், மனித சக்தி ஆகியவற்றைச் சுரண்டுவதும், சூறையாடுவதும் உற்பத்தியை மேற்கொண்டு விரிவாக்கம் செய்வதற்குச் செலவை உண்டாக்குகின்றன.

1960-களிலும், 1970-களின் ஆரம்ப காலத்திலும், ஏறத்தாழ அனைத்து தொழிற் சிறப்பு மிக்க முதலாளித்துவ நாடுகளிலும் தீவிர உற்பத்திப் பெருக்கம் ஏற்பட்டது. அது அந்த நாடுகளில் போர்பிற்காலத்திலேயே மிகவும் தீவிரமான ஒரு உலகப் பொருளாதார நெருக்கடியாக 1974-1975இல் மாறியது. அந்த நெருக்கடி அனைத்து நாடுகளையும், ஏகாதிபத்தியத்தின் மையங்களையும் உள்ளடக்கியதாயிருந்தது. உற்பத்திக்கு ஏற்ற உருவில் மிகுதியாகக் குவிக்கப்பட்ட மூலதனமும், அளவுக்கு மிகுதியான உற்பத்தியும், உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தின் மிக முக்கியமான துறைகளிலும், கிளைகளிலும் தெளிவாகத் தெரியத் தொடங்கின. போர்ப் பிற்காலத்தில் முதன் முதலாக உலக முதலாளித்துவ வாணிபத்தில் மிகவும் அதிகமான விலை வீழ்ச்சி (நிரந்தர விலையில்) ஏற்பட்டது. மிக அதிகமான விகித வேகத்தில் வளர்ந்து வந்த ஜப்பான், இத்தாலி, பிரான்ஸ் ஆகிய நாடுகளில்தான் அதிகமான இடர்ப்பாடுகள் தோன்றின. இந்த நெருக்கடியின் சுமை வளரும் நாடுகளின் மீது சுமத்தப்பட்டது. மீண்டும், மீண்டும் தோன்றும் சுழன்று வரும் நெருக்கடி, எரிபொருள், ஆற்றல், மூலப்பொருட்கள், உணவு, பணவியல், நிதி, உயிர்வாழ் சூழ்நிலைக்கேடு, தொடர்ந்து வரும் பணவீக்கம் ஆகிய கட்டமைப்பு நெருக்கடியுடன் சேர்ந்து பொருளாதார நெருக்கடியை மிகவும் கவலைக்கிடமானதாக ஆக்கியிருந்தது.

பொருளாதார நெருக்கடியிலிருந்து விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியும், அரசு ஏகபோகத்தின் கட்டுப்பாடும் முதலாளித்துவத்தைக் காப்பாற்றி விடுமென பூர்ஷ்வா

பொருளாதார வித்தகர்களும், அரசியல் நிபுணர்களும் கொண்டிருந்த நம்பிக்கையை நடைமுறை வாழ்க்கை ஆழப் புதைத்து விட்டது. நெருக்கடி இன்றைய முதலாளித் துவத்தின் உடன் பிறந்த இயல்பாக உள்ளது. ஏனெனில் அவ்வாறான நெருக்கடிகளுக்கு முக்கியமான காரணங்கள் இன்றும் அப்படியேதான் உள்ளன.

1970களின் மையபாகத்தில் நிகழ்ந்த பொருளாதார நெருக்கடியின் துன்பங்கள் எவ்வளவு மோசமானவை யாயினும், நெருக்கடிக்கு வழி செய்த முரண்பாடுகளை அது சரி செய்து விடவில்லை. எனவே அது ஒரு புதிய தீவிர உற்பத்தி விரிவாக்கத்திற்கு வழி செய்ய முடியவில்லை. (அட்டவணை 1-ல் பார்க்கவும்). அந்த நெருக்கடியை ஒரு நீண்ட மந்தமான காலம் பின் தொடர்ந்தது. முதலீட்டுத் துறையில் நெருக்கடிக்கு முந்திய காலநிலைக்கு வருவதற்கு இரண்டு முதல் மூன்று ஆண்டுகள் வரை ஆயிற்று. ஆனால் சில நாடுகளில் இந்த நிகழ்ச்சிப் போக்கு இன்னும் அதிக நாட்கள் பிடித்தது. முதலீடு நிகழ்ச்சிப் போக்கில் மிக மெதுவான முன்னேற்றமே இருந்தது. அது முன்னரே நிர்ணயிக்கப்பட்டதாயிருந்தது. முதலாவதாக, போருக்கும் பிந்திய காலத்தில் இதுவரை என்றும் கண்டிராத நிலையான மூலதனத்தின், ஒப்பீட்டில் மிகுதியான குவியலின் அளவாலும், அதன் ஸ்திரத் தன்மையாலும் இந்தச் சூழ் நிலைகள் அனைத்தின் கூட்டினாலும் 1950-களுக்கும் 1960 களுக்கும் மாறாக 1970 - களில் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் மிகக் குறைந்த அளவு வேகமே உடையதாக இருந்தது.

தீவிரமாக்கப்பட்ட பொருளாதாரத்தின் நிலையற்ற தன்மையும், மிக அதிகமான, பணவீக்கமும் நிறைந்த சூழ் நிலையில் ஏகபோகங்கள் மிகக் குறைந்த இடர்களே உள்ள துறைகளில் முதலீடு செய்வதற்கு முன்னுரிமை தரும் பேரளவு, நீண்ட கால முதலீட்டுத் திட்டங்களை நிறை வேற்றுவதில் ஒரு தனிச்சிறப்பான முன்சவனம் செலுத்து

அட்டவணை-1

**வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் சராசரி உற்பத்தி வளர்ச்சி விகிதங்கள்**

**[சதவிகிதம்]**

| | உள்நாட்டு மொத்த உற்பத்தி | | தொழிற்பொருள் உற்பத்தி | |
|---|---|---|---|---|
| | 1951 — 1973 | 1974 — 1978 | 1951 — 1973 | 1974 — 1978 |
| வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகள் அனைத்தும் | 4 6 | 2.4 | 5.4 | 1.9 |
| யு. எஸ். | 3.8 | 2.4 | 4.3 | 2.3 |
| 9 நாடுகளையும் உள்ளிட்ட ஐரோப்பியப் பொருளாதார சமுதாய நாடுகள். | 4.7 | 2.0 | 5.7 | 1.0 |
| ஜப்பான் | 9.9 | 3.8 | 12.0 | 1.2 |

கின்றன. இவையனைத்தும் வேலை வாய்ப்பு பற்றிய பிரச்சினையை, குறிப்பாக பொருளாயதப் பொருள் உற்பத்தித் துறையில் தீவிரமடையச் செய்து விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்ற எல்லைகளைக் குறுக்கி விடுகின்றன.

11. சென்ற சுழலில் திரண்டு வெளிப்பட்ட முரண்பாடுகள் அல்லது நீண்ட நாட்களாக முதிர்ந்திருந்த முரண்பாடுகளை அண்மைக் காலத்தில் ஒரு பொருளாதார ஒழுங்கின்மை பிரதிபலித்தது. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 24 வது காங்கிரசில் குறிப்பிடப்பட்ட பண வீக்கமும், வேலையில்லாத் திண்டாட்டமும், மேலே சொன்ன முதிர்ந்த முரண்பாடுகளைத் தொடர்ந்து வளர்ச்சியடைந்தன. (அட்டவணை 2-உம் 3-உம் பார்க்கவும்)

இப்போது பணவீக்கம் பண்பியல்புகளில் புதிய தன்மைகளைப் பெற்றிருக்கிறது. மேலும், உற்பத்திக் காலங்களில் குறைந்த பளுவை ஏற்றுவது என்னும் முறையும், பொது மக்களிடையே நிலவும் பெரும் வேலையில்லாத் திண்டாட்டமும், இன்றைய முதலாளித்துவத்தின் முனைப்பான, நிரந்தரமான பொருளாதார சமூக அரசியல் பிரச்சினைகளில் ஒன்றாக ஆகியுள்ளன; பணவீக்கம் என்பது பல்வேறு காரணிகளின் செயல்களுடன் நெருக்கமான உறவு கொண்டதாகவுள்ளது. முதன் முதலில் அது வேகமாக வளர்ந்து வரும், மேற்கொண்ட உற்பத்திக்குப் பயன்படாத நுகர்வின் வளர்ச்சியுடன், குறிப்பாக ஆயுதப் போட்டியின் விரைவான வளர்ச்சியுடன் நெருக்கமான தொடர்புடையதாகவுள்ளது. முக்கியமான பொருளாதாரத் துறைகளில் ஏகபோகங்கள் விலைகளை ஒழுங்குபடுத்துவது குறைந்த முக்கியத்துவம் வாய்ந்ததல்ல. முதலாளித்துவப் பொருளாதாரத்தின் வீச்சின் முழுமையிலும் பரவியிருக்கிற பணவீக்க சக்திகளின் ஆட்சி முதலாளித்துவத்தின் நிதி, கடன் வசதி ஆகியவற்றின் இணைப்பு வளையங்களில் பழுவை அதிகரிக்கிறது. எனவே அவை புதிய பெரும் அதிர்ச்சிகளுக்கு வழி கோலுகின்றன.

## அட்டவணை-2

### பெரும் முதலாளித்துவ நாடுகளில் வாழ்க்கைச் செலவின் ஆண்டு வளர்ச்சி விகிதங்களின் சராசரி [சதவிகிதம்]

| | 1961 — 1970 | 1971 — 1977 | 1978 தொடக்க நிலைப் புள்ளி விவரங்கள் |
|---|---|---|---|
| யு. எஸ். | 2.7 | 6.6 | 9.0 |
| பிரிட்டன் | 4.0 | 13.9 | 8.3 |
| பிரான்ஸ் | 3.5 | 9.0 | 8.9 |
| மேற்கு ஜெர்மனி | 2.5 | 5.6 | 2.6 |
| இத்தாலி | 3.9 | 13.1 | 11.6 |
| ஜப்பான் | 5.7 | 10.7 | 3.8 |

### அட்டவணை-3

### பெரிய முதலாளித்துவ நாடுகளில் வேலையில்லாதோரின் எண்ணிக்கை

[அதிகார பூர்வமாகப் பதிவு செய்யப்பட்டது — ஆயிரங்களில்]

| | 1970 | 1975 | 1976 | 1977 | 1978 தொடக்க நிலைப் புள்ளி விவரங்கள் |
|---|---|---|---|---|---|
| யு. எஸ். | 4, 088 | 7, 830 | 7, 288 | 6, 856 | 6, 194 |
| பிரிட்டன் | 612 | 978 | 1, 359 | 1, 489 | 1, 494 |
| பிரான்ஸ் | 262 | 840 | 934 | 1, 072 | 1, 106 |
| மேற்கு ஜெர்மனி | 149 | 1, 074 | 1, 060 | 983 | 1, 004 |
| இத்தாலி | 609 | 654 | 732 | 1, 545 | 1, 544 |
| ஜப்பான் | 590 | 1, 000 | 1, 080 | 1, 100 | 1, 263 |

ஆதாரம் : உலகப் பொருளாதாரம் மற்றும் சர்வதேச உறவுகள் 19:9, எண் 6, பக். 34- ரஷ்யமொழியில்

ஏகபோக முதலாளித்துவத்தின் பொருளாதார வளர்ச்சி அனுபவங்கள் முழுமையும், குறிப்பாக 1970-களில் ஏற்பட்ட அனுபவங்கள் முழுமையும் ''ஏகாதிபத்தியமானது வர்க்கப் போராட்டம், தேவை, வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவற்றின் இணையற்ற தீவிர நிலையையும், உயர்ந்த வாழ்க்கைச் செலவையும், டிரஸ்ட்டுகள் மூலமான அடக்கு முறைக்கு வலிமையூட்டுதலையும், இராணுவ ஆதிக்கத்துக்கு வலிமை யூட்டுதலையும்தான் தொழிலாளி வர்க்கத்துக்காகக் கொண்டு வந்திருக்கிறது''[4] என்ற லெனினது கூற்றின் ஏற்புடைமையை நமக்குத் தெளிவாகக் காட்டுகின்றன.

12. 1970 - களில் நிகழ்ந்த முதலாளித்துவப் பொருளாதாரத்தின் முரண்பாடுகள் தீவிரமடைந்து நிலவுகிற அரசு ஏகபோக முதலாளித்துவத்தின் அமைப்பு முறையின் மிகுதியான நெருக்கடியைத் தகவமைத்துக் கொண்டுள்ளது. வளர்ந்துள்ள விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் தேவைகளுக்கும், உற்பத்தியின் சமுதாயமயமாக்கப்பட்ட மட்டத்திற்கும் ஒத்திசைவானதாயில்லை. அரசு ஏகபோக முதலாளித்துவத்தின் நெருக்கடி கீழே கொடுக்கப்பட்டுள்ள வற்றால் வெளிப்படுத்தப்படுகிறது.

— மரபு வழியாக வந்த நெருக்கடி எதிர்ப்பு மற்றும் பணவீக்க எதிர்ப்புக் கொள்கையும், கெயின்சுடைய நோய் தீர்க்கும் மருந்துகளின் அடிப்படையில் மொத்த தேவை அளவை அடிப்படையாகக் கொண்ட முழு வேலைவாய்ப்புக் கொள்கையும்கூட அவைகளின் மதிப்பை அவைகளே குறைத்துக் கொண்டன.

— போர் பிற்காலத் தந்திரமான பொருளாயத உற்பத்தியின் அனைத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சி விகிதங் களை மேம்பாடடையச் செய்தல் தோல்வியடைந்துள்ளது.

— அரசு ஏகபோகம் பொருளாதாரம், விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்குத் தேவையான முக்கியமான காரணிகளின் அமைப்பு முறை,

விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியினுடைய அனைத்து ஆக்கத்திறனையும் உபயோகித்துப் பயன் பெறமுடியா திருப்பதைக் காட்டுகிறது. உலகத்தின் கட்டமைப்பு நெருக்கடிகளினால் தோற்றுவிக்கப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு - அதாவது எரிபொருள், ஆற்றல், மூலப்பொருட்கள், உயிர்வாழ் சூழ்நிலைப் பாதுகாப்பு மற்றும் பெரும் அளவு மையப்படுத்தப்பட்ட நீண்ட கால அடிப்படையிலான அரசின் செயல் முறைகள் பண முதலீடுகள் ஆகியவற்றில் நெருக்கடி தேவைப்படுகிற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இந்த அமைப்பு முறை தன்னைப் போதுமான அளவு தகவமைத்துக் கொள்ளவில்லை என நிரூபித்து விட்டிருக்கிறது.

— பல்வேறு முடிவுகளைச் சரியான நேரத்தில் ஏற்றுக் கொள்வதையும், நிறைவேற்றுவதையும், அரசு இயந்திரத்தின் பகுதியான நிர்வாக அதிகார வர்க்கத்தினரின் எண்ணிக்கையை அதிகரிப்பதும், அங்கு நிலவும் லஞ்ச ஊழல்களும், பின் தள்ளி விடுகிறது. மேலும் பொருளாதாரச் செயல் முறைகளின் பல்வேறு அம்சங்களைக் கட்டுப்படுத்து வதற்கான அரசு இயந்திரங்களின் ஒன்றிணைக்கப்படாத செயல்கள் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் தன்னியல்பான தன்மையைத்தான் தூண்டிவிடுகின்றன.

— அரசு ஏகபோகக் கட்டுப்பாடுகளை ஒழுங்கு படுத்துகிற முறைகளை நியாயப்படுத்துவதற்கான பூர்ஷ்வா கோட்பாடுகள்—குறிப்பாக கெயின்சுடைய கோட்பாடுகள் ஒரு நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கின்றன.

13. இன்றைய முதலாளித்துவம் ஒரு மிகவும் சிக்கலான இரண்டும் கெட்டான் நிலையில் உள்ளது. ஒருபுறம் வளர்ந்த நாடுகள், விஞ்ஞான, தொழில் நுட்ப வளர்ச்சி யினாலும், உற்பத்தியின் கீழ்கட்டமைப்பின் வளர்ச்சி யினாலும், —குறிப்பாக, ஆற்றல், போக்குவரவு, விரிவாகி வரும் விஞ்ஞானத்தை மிகுதியாகப் பயன்படுத்தும் தொழில்கள், தொழிலாளர்களை மிகுதியாகப் பயன்படுத்தும்

தொழில்களைப் புத்தமைப்பது, ஆற்றலை மிகுதியாக நுகரும் தொழில்களை மிக அதிகமான விகிதத்தில் வளர்ச்சி யடையச் செய்வது ஆகிய முக்கியமான நிகழ்ச்சிகளால் பொருளாதார மறுசீரமைத்தல் பற்றிய பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன. பெருங்கடல்களின் மூலப்பொருட் களைக் கண்டறிந்து பயன்படுத்துவதற்கும், புதுவகையான ஆற்றல்களைக் கையாள்வதற்கும், பயனுள்ள வகையான சர்வதேச செய்தி மற்றும் தகவல்போக்குவரவையும், போக்குவரவுகளையும் வளர்ப்பதற்கும், பழைய நிலைக்குத் திருப்புவதற்கும், சேமித்தல், செய்திகளைத் திரட்டுதல் ஆகியவற்றுடன் தொடர்புள்ள நீண்டகால அரசு கட்டுப்பாடு தேவைப்படுகிறது. இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பது சர்வதேசக் கூட்டுறவு இல்லாமல் முடியாது. மறுபுறம் உற்பத்தி உறவுகளின் தனிநபர் முதலாளித்துவ இயல்பும், ஏகபோக முதலாளித்துவத்தின் குறுகிய தன்னல விருப்பங்களும், அரசு நிதித்துறையின் நெருக்கடிகளும், பொருளாதாரத்திற்குள் அரசின் தலையீட்டை விரிவுபடுத்து வதற்கான வாய்ப்பை ஒரு வரம்பிற்குட்பட்டதாக ஆக்கு கிறது.

அரசு ஏகபோக முதலாளித்துவத்தினுடைய பழைய முறையை மறுபடியும் புனைவதன்மூலம், இந்த இரண்டும் கெட்டான் நிலையைத் தீர்க்க முதலாளித்துவம் முயற்சிக் கிறது. குறிப்பாக நேரடியான அரசு கட்டுப்பாடு, அல்லது தொழில் தொகுதிகளுக்கு நிதியுதவி அளிப்பது, ஆகியவற்றின் சில வகைகளைக் கட்டுப்படுத்துவது அல்லது ஒரு வரம்பிற்குட்படுத்துவது, அல்லது குறிப்பிட்ட முறையில் நிதியுதவி செய்வது, தொழிற் தொகுதிகளின் கலப்பான உருவங்களை விரிவாக்கம் செய்வது போன்ற நடவடிக்கைகளில் தெளிவாகத் தெரிகிறது. மறைமுகமான ஒழுங்குமுறைகள், சட்டத் தொடர்பான, நிர்வாகத் தொடர்பான சட்டமும் விதிமுறைகளும் சிறந்த முக்கியத்துவம் அடைந்து வருகின்றன. முதலாவதாக மனித

ஆற்றலின் விலை என்ற பகுதியில் "வருவாய் கொள்கை", "சமூகக் கட்டுப்பாடு" ஆகியவற்றின் உதவியுடன் உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையிலுள்ள உறவுகளை ஒழுங்குபடுத்துவதும் முக்கியத்துவம் பெறுகிறது.

முதலீடு செய்வது, தேவை ஆகியவற்றைக் கட்டுப் படுத்துவது என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு, தன்னிச்சையான போட்டியின் மிகப் பயங்கரமான விளைவை நீக்குவதைத் தன்னுடைய நோக்கமாகக் கொண்டிருக்கிற, நெருக்கடி பற்றிய மரபுவழியான பேரியல் பொருளாதார முறையின் அடிப்படையில் கட்டுப் படுத்துவது, பெரிய ஏகபோகங்களை ஒன்றிணைக்கும் நோக்கத்துடன், அவற்றிடையேயும், அவைபோன்றவற்றி டையேயும், பொருளாதார உறவுகளின் புதிய உருவங்களை வளர்க்கவும் நோக்கங்கொண்ட அரசு நடவடிக்கைகளுடன் மேலும், மேலும் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளது. தொழில் முயல்வோரின் சங்கங்களின் ஒத்துழைப்புடன், அரசு நிர்வாகம் பழைய தொழிற்சாலைகளை மறுசீரமைப் பதற்கும்,புதுப்பிப்பதற்குமான பகுதித்துறைத் திட்டங்களை விரிவுபடுத்துவதில் பங்கேற்கிறது. (இரும்பு எஃகு தொழிற் சாலை; பஞ்சாலைகள்; கப்பல்கட்டும் தொழிற்சாலைகள்.) விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்ப முன்னேற்றத்தில் முன்னணியில் நிற்கும், புதியதொழிற்சாலைகளை நிறுவு வதிலும் அவைகளுக்கு உதவுவதிலும் பங்குகொள்கிறது. (அணுசக்தி, விண்வெளித் தொழில், தகவல் பற்றிய அறிவியல் முதலியவை.) தனி ஏகபோகங்களுக்கு மேற் கொள்வதற்கு அபாயம் நிறைந்ததாகவுள்ள விலையுயர்ந்த பொருட்களை உற்பத்தி செய்வதையும், விற்பனைசெய் வதையும் உறுதிப்படுத்தும், அரசு அதிகாரவர்க்கத்தினால் வளர்க்கப்பட்ட தனியார் மூலதனமும், அரசும் இணைந்து கூட்டாகப் பங்குபெறுகின்ற சர்வதேச திட்ட நிகழ்ச்சிகளின் எண்ணிக்கையில் ஒரு பெருக்கம் ஏற்பட்டுள்ளது. (கன்கார்ட்ஸ், யூரோபஸ், விண்வெளித் தகவல் அறிவிப்புக் கலங்கள்)

பொருளாதாரத்திற்குள் அரசுத் தலையீட்டின் காரணமாக அரசுக்குப் புதிய கடமைகளும், புதிய முறை வழிகாட்டுதலும் வெளிப்படுகின்றன. எனவே ஒழுங்கு கட்டுப்பாடு முறைகளைத் நேர்ந்தெடுப்பதில் முன்னுரிமைகளில் மாறுதல்களுக்கு வழி செய்கிறது. 1950-களிலும் 1960-களிலும் வரவு செலவுத் திட்டங்களையும், கடன் வசதிகளையும் மொத்தத் தேவையை ஒழுங்குபடுத்தும் பிரச்சினையில் பயன்படுத்துவது தனிச் சிறப்பான இயல்பாய் இருந்தது. ஆனால் 1970-களில் முதலாளித்துவ நாடுகளின் அரசுகள், பெரும்பாலான சமயங்களில், விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் முன்னேற்றத்தின் போக்கிலும், உற்பத்தியின் கட்டமைப்பிலும், மிகுந்த செல்வாக்கைச் செலுத்தக் கூடிய வரிவிதித்தல் கொள்கையையும், தேசிய வருவாயை மறுபகிர்வு செய்யும் வேறு முறைகளையும் பின்பற்றத் தொடங்கினர்.

எனினும் விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியில் இயல்பாகவே அடங்கியுள்ள சமுதாய முன்னேற்றத்திற்கான வாய்ப்பிற்கும், ஏகபோகங்களின் விருப்பங்களுக்குமிடையே முரண்பாடுகள் உள்ளன. குறிப்பாக ராணுவத் தொழில் தொகுதியின் விருப்பங்களினால், அந்த விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் சாதனையினைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பும் விருப்பங்களினால் ஏற்படும் முரண்பாடுகள். இந்த முரண்பாடுகளை சோஷலிசத்திற்கு சமுதாயம் மாறும் மாற்றமே தீர்க்க முடியும்.

14. ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகிய கண்டங்களில், புதிதாகச் சுதந்திரம் அடைந்துள்ள நாடுகளின் பிற்பட்ட நிலையை வெல்வதற்கும், அவற்றின் பொருளாதாரத்தை நவீனமயமாக்குவதற்கும், பட்டினியையும், ஏழ்மையையும், எழுத்தறிவின்மையையும் நோயையும் ஒழிப்பதற்கும், அங்கு நிலவுகிற வேறு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியானது முன்னெப்போதுமில்லாத வாய்ப்பு

களைத் தருகிறது. ஆனால் முதலாளித்துவத்தினாலும், பெரும்பாலும் அவைகளையே சார்ந்திருக்கிற வளரும் நாடுகளாலும் இந்த வாய்ப்புகள் தடை செய்யப் படுகின்றன.

சர்வதேச தொழிலாளர் நிறுவனம் 1970-களின் நடுப் பகுதியில் தந்துதவிய புள்ளி விவரங்களின்படி, பகுதிநேரம் வேலையில்லாதோரின் எண்ணிக்கையும், முழுதும் வேலை யில்லாதோரின் எண்ணிக்கையும் ஏறத்தாழ 300, 000, 000 அல்லது ஏறத்தாழ தொழிலாளி மக்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்காகும். இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகரிக்கச் செய்வதிலும் சமூக-பொருளாதார உறவுகளின் பிற்பட்ட தன்மையைப் பாதுகாப்பதிலும், முதலாளித்துவ முறையில் இயந்திர மயமாக்குதல் மூலம் ஏராளமான லாபம் பெறுவதைத் தன்னுடைய இலட்சியமாகக் கொண்ட வெளிநாட்டு மூலதனத்தின் கொள்கைகளும், உள்நாட்டு மூலதனத்தின் கொள்கைகளும், ஒரு முக்கியமான பெரும் பங்கு வகிக்கின்றன.

வளரும் நாடுகளில் தொழில் நுட்பப் புரட்சியின் புரட்சி கரமான மாற்றங்களைப் பயன்படுத்தும், அயல் நாட்டினால் குழப்பப்பட்ட பகுதியின் இயல்பும், உளநாட்டியல்பும், அவர்களுடைய பொருளாதாரத்தின் "புதிய" மற்றும் "மரபுவழி"த் துறைகளிடையே; மனித சக்தி வகை தொகை களுக்கும், உற்பத்திச் செல்வங்களுக்குமிடையே; தொழிலுக்கும், விவசாயத்திற்குமிடையே; உற்பத்தித்திறன் மிக்க பகுதிகளுக்கும், உற்பத்தித்திறன் குறைந்த பகுதிகளுக்கு மிடையே; ஏற்றுமதிப் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழில்களுக்கும், உள்நாட்டு நுகர்வுப் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழில்களுக்குமிடையே ஒரு ஒவ்வாத தன்மைக்கு வழி வகுக்கின்றன. இந்த நாடுகளில் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி தனித்து நிற்கக்கூடிய உற்பத்தி அலகுகளைப் படைப்பதற்குத் தேவையான பண முதலீட்டின்

மட்டத்தை மிகுதியாக உயர்த்தியுள்ளது; புதிதாக விடுதலை யடைந்த அரசுகளில் பெரும்பாலானவை, உள்நாட்டுச் சந்தைகளின் தேவைகளைக் காட்டிலும் அதிகமான அளவில் அகன்ற சந்தைகளைப் பெற விரும்புகின்றன.

இந்த நாடுகள் பலவற்றில் நவீன விஞ்ஞான தொழில் நுட்ப சாதனைகளை முதலாளித்துவம் பயன்படுத்தும் போது, எதிர்மறைப் பலன்கள் உடன் செல்கின்றன. இந்தப் பொது ஒழுங்கு, குறிப்பாக பசுமைப் புரட்சியின் விளைவுகளால் உறுதி செய்யப்பட்டது. அதாவது - வெப்ப மண்டல — துணை வெப்ப மண்டல நாடுகளின் விவசாயத் தொழில் நுட்ப முறைகளில் 1960-களின் பிற்பகுதியிலும், 1970-களின் தொடக்கத்திலும் வெளிப்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றங்க்ள். வளரும் நாடுகள் சிலவற்றில் பசுமைப் புரட்சி உணவு உற்பத்தியின் பெருக்கத்திற்கு வழி வகுத்துள்ளது. எனினும் மொத்தத்தில் அது எதிர்பார்த்த மாதிரியில் நிகழவில்லை. உணவுப் பிரச்சினை மேலும் தீவிரமடைந்து தான் உள்ளது. வளரும் நாடுகள் இப்போது ஓராண்டுக்கு ஏறத்தாழ 40,000,000 டன்கள் உணவு தானியத்தை இறக்குமதி செய்கின்றன.

அவைகளின் உற்பத்திக் கட்டமைப்பின் மாறாத இயல்பினாலும், முதலாளித்துவ சர்வதேச வேலைப் பகுப்பு அமைப்பு முறையில் அவர்களுடைய கீழான நிலையாலும், புதிதாக விடுதலையடைந்த நாடுகள் முதலாளித்துவ சமுதாயத்தில தானாகவே வெளிப்படுகிற, விஞ்ஞான— தொழில் நுட்பப் புரட்சியின் விளைவுகளுக்கு முதற் பலியாகின்றன.

உலக முதலாளித்துவ பொருளாதாரத்தின் தனி ஏகபோகங்களின் சங்கங்களின் ஆதிக்க மிகுந்த சூழ்நிலையில் புதிய விஞ்ஞானமும், தொழில் நுட்பமும் வளரும் நாடு களைத் தீவிரமாகச் சுரண்டுவதற்குப் பயன்படும் கருவியாக மாறுகின்றன. விஞ்ஞான - தொழில் நுட்ப ஏகபோகங் களுக்கு "தொழில் நுட்ப ஏகாதிபத்திய"க் கொள்கை

ஒன்றைப் பின்பற்றுவதற்குரிய வாய்ப்பை நல்குகின்றன. மேலும் புதிதாக விடுதலையடைந்த நாடுகள், எப்போதுமே, தங்கள் மீது சார்ந்திருக்குமாறு செய்ய, அவற்றின் மீது புதிய உருவங்களைத் திணிக்கின்றன.

விஞ்ஞான-தொழில் நுட்பம் முன்னேறும் சூழ்நிலையில் பொருளாதாரத்தின் பழைய மரபுவழித் துறைகளின் பங்கும் ஆசியா, அமெரிக்கா, லத்தீன் அமெரிக்க நாடுகளின்பொருளா தாரத்தின் மீது இன்றும் ஆதிக்கம் செலுத்துகிற உற்பத்தி முறைகளின் பங்கும் குறைந்து கொண்டே வருகின்றன. ஆனால் அந்தநாடுகளில் சுதந்திரமாக முன்னேற்றமடையச் செய்யப்பட முடியாத புதிய தொழில் நுட்பத் தொகுதித் துறையும், உற்பத்திமுறைகளும் முன்னணிக்குக் கொண்டு வரப்படுகின்றன. உலகத்தில் நடைபெறும் மறுஉற்பத்தி நிகழ்ச்சிப்போக்கில் உற்பத்தியிலும், ஏற்றுமதியிலும் வளரும் நாடுகளின் தனிச்சிறப்பானதாக விளங்குகிற பொருட்களின் முக்கியத்துவத்தை, விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சி குறைத்து விடுகிறது. அந்தப் பொருட் களுக்கான தேவை, முதலாளித்துவச் சுழலின் போதும், உலகப் பொருளாதார நெருக்கடியின் போதும், நிகழும் கடுமையான ஏற்ற இறக்கங்களுக்கு உள்ளாகிறது. அதே வேளையில் இன்றைய விஞ்ஞானத்தின் மீதும் செய்முறைத் திறத்தின் மீதும், தொழில் நுட்பத்தின் மீதும் வளரும் நாடு களின் சார்புநிலை, வளர்ந்து கொண்டே வருகிறது. ஏனெனில் தொழில் நுட்பம் அதிக அளவில் இறக்குமதி செய்யப்பட வேண்டியதிருக்கிறது. மேலும் முதலாளித்துவ நாடுகளிலிருந்து அவைகளைப் பெறுவதற்கான நிபந்தனைகள், அவைகளை அளிக்கும் ஏகபோகங்களினால் மேலும் அதிக அளவு கண்டிப்பானதாக ஆக்கப்படுகின்றன. அவைகைள அளிக்கும் ஏகபோகங்கள் சுழலின் அம்சங்களைப் பற்றியோ, அல்லது உலகப் பொருளாதார சூழ்நிலை பற்றியோ கவலைப்படுவதில்லை. ஆகவே முதலாளித்துவ பொருளாதாரத்தில் புதிதாக சுதந்திரம் பெற்ற நாடுகள் பொருளாதார சீர்குலைவினாலும், பணவீக்கத்தினாலும், பிறநாடுகளைக் காட்டிலும் மிகுதியாகத் துன்பப்படுகின்றன.

## முதலாளித்துவத்தின் சமூக முரண்பாடுகள் பெருகுதல்

15. பூர்ஷ்வா சமூகத்தின் பொருளாயத வாழ்க்கையின் அனைத்துத் துறைகளிலும், கலாச்சார வாழ்க்கையின் அனைத்துத் துறைகளிலும், சமூக முரண்பாடுகளையும், வர்க்க முரண்பாடுகளையும் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி மிகுதிப்படுத்துகிறது என்பதை 1970களில் ஏற்பட்ட அனுபவங்கள் முழுதும் நிரூபித்து விட்டன. பொதுமக்களின் பொருளாதார சமூக நிலைகளில் உறுதியற்றதன்மை மிக அதிகமாகப் பெருகியுள்ளது. உழைக்கும் மக்கள் பெற்றுள்ள இலாபங்களுக்கு ஏற்பட்டுள்ள பயமுறுத்தல்கள் உண்மையான ஒரு அபாயமாக வளர்ந்திருக்கிறது; மக்களிற் பெரும்பாலோரின் வாழ்க்கை நிலைகள் சீர்குலைந்து விட்டிருக்கின்றன முதலாளித்துவத்தின் வர்க்க முரண் பாடுகள், எதிரெதிராகவுள்ள வர்க்கங்களின் நேரடியான பொருளாதார நலன்களின் வரம்பிற்கு வெளியே பெருமளவு சென்று விட்டன. மனித நாகரிகத்தின் தலைவிதியை நிர்ணயிக்கிற அடிப்படையான பிரச்சினைகள் தொடர்பான சமூக — அரசியல் முரண்பாடுகள் மிக அதிகமாக வளர்ந் துள்ளன.

விஞ்ஞான — தொழில் நுட்பப் புரட்சி பூர்ஷ்வா சமுதாயத்தின் கட்டமைப்பில் நிகழ்ந்துள்ள மாற்றங் களினால் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை மிகைப்படுத்தி யிருக்கிறது. அது மக்களிற் பெரும்பான்மையினரை முதலாளித்துவச் சுரண்டலுக்குள் கொண்டுவரவும், வேலைக்கமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக் கையைப் பெருக்கவும் செய்கிறது.

கூலி வேலைக்கமர்த்தப்பட்ட தொழிலாளர் படையின் மேற்கொண்ட வளர்ச்சிப் போக்குடன் — குறிப்பாக பெண் களின் உழைப்பைப் பெருமளவில் பயன்படுத்துவது என்ற உருவில், ஏகபோக மூலதனத்திற்கு உழைக்கும் மக்கள் அனைவரின் உண்மையான அடிமைத்தனம் மிகவும்

### அட்டவணை—4

**பொருளாதார அடிப்படையில் சுறுசுறுப்பான மக்கள் தொகையில் கூலிக்கு அமர்த்தப்பட்ட தொழிலாளர் எண்ணிக்கையும் சதவிகிதமும்**

| | யு. எஸ். | | பிரிட்டன் | | பிரான்ஸ் | | மேற்கு ஜெர்மனி | | இத்தாலி | | ஜப்பான் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மில்லியன் | சதவிகிதம் | மில்லியன் | சதவிகிதம் | மில்லியன் | சதவிகிதம் | மில்லியன் | சதவிகிதம் | மில்லியன் | சதவிகிதம் | மில்லியன் | சதவிகிதம் |
| 1950 | 47.0 | 73 6 | 21.0 | 91.7 | 12.3 | 65.1 | 16.8 | 71.5 | 10.5 | 54.1 | 14.0 | 39.9 |
| 1960 | 55.2 | 76.6 | 22.8 | 91.2 | 13 2 | 69.8 | 20.4 | 77.5 | 13.1 | 62.8 | 22.7 | 50.4 |
| 1970 | 70.6 | 82.2 | 23.4 | 91.4 | 15.6 | 77.1 | 22 4 | 82.3 | 13.6 | 69.1 | 33.1 | 64.2 |
| 1974-1975 | 76.6 | 90.3 | 23.9 | 92.6 | 17 2 | 80.7 | 21.4 | 84.5 | 13.8 | 72.7 | 36.1 | 68 5 |

குறிப்பு: தொடர்புள்ள நாடுகளின் தேசிய புள்ளி விவரங்களின் அடிப்படையில் கணக்கிடப்பட்டது.

தெளிவானதாக ஆகிவிட்டிருக்கிறது. ஆழ்ந்த கட்டமைப்பு மாற்றங்களும், உலகப் பொருளாதார நெருக்கடிகளின் விளைவுகளும் தொழில் தொகுதிகளின் உழைக்கும் மக்களையும், அலுவலகப் பணியாட்களையும் எதிர் கொண்டன. அதுமட்டுமல்லாது, தனிச்சிறப்பான திறமையும், உயர்படிப்பும் பெற்ற வித்தகர்களையும் கூட பொருளாயத, தொழில் தொடர்பான படித்தரத்தையும், அதன் விளைவாக சமூக படித்தரத்தையும் இழக்கும் படியாகச் செய்தது. இளைஞர்கள் பலரின் வேலைதேடும் வாய்ப்புகளையும் சீர்குலைத்தது. இந்தக் குழுக்களின் பிரதி நிதிகள் தேவையற்ற "மிகையான மக்கள்" கூட்டத்தை நிரப்புகின்றனர். பாட்டாளி வர்க்க சமுதாயத்தட்டைச் சேர்ந்தவர்களும், பாட்டாளிவர்க்கமாக மாறிவரும் மத்திய தர வர்க்க சமுதாயத் தட்டைச் சேர்ந்தவர்களும் மிகுதியாக ஆகிவிட்டனர். பெரும் மூலதனத்துடன் அவர்கள் கொண் டிருக்கும் உறவின் முரண்பட்ட இயல்பும் வலிமையடைந் துள்ளது விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் தாக்கத்தினால் விரைவாக்கப்பட்ட உற்பத்தியை ஒருமுனைப் படுத்தலும், மையப்படுத்தலும், மூலதனத்தை ஒரு முனைப் படுத்தலும், மையப்படுத்தலும் பல சிறு உற்பத்தியாளர் களை, ஏகபோக முதலாளிகளைச் சார்ந்திருக்குமாறு செய்துள்ளது.

எனவே இன்றைய முதலாளித்துவ சமுதாயத்தில் விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சி, சமூகமும், வர்க்கங் களும் தனிமைப்படுத்தப்படுவதன் வேகத்தை மிகுதிப் படுத்துகிறது. இந்தப் புரட்சியின் செல்வாக்கினால் ஒரு புதிய வர்க்க அணி வெளிப்படுகிறது. இயல்பாகவே பன்னாட்டுத் தன்மை கொண்ட நிதி ஆதிக்கக்குழு அதனால் சுரண்டப்படுகிற உடல் உழைப்பாளர்களையும் — மன உழைப்பாளர்களையும் — தொழிற்சாலையில் உழைப்பவர் களையும், படித்த அறிஞர்களையும், சிறு உற்பத்தியாளர் களையும் எதிர்த்துப் போராட வேண்டியதிருக்கிறது. உழைப்பிற்கும், மூலதனத்திற்கும் இடையே நிலவுகிற

முரண்பாடு, நாட்டில் உள்ள மக்களிற் பெரும்பாலோருக்கும் நிதி ஆதிக்க குழுவிற்குமிடையேயுள்ள முரண்பாடாக வளர்கிறது.

மிகுந்த வலிமை வாய்ந்த, உணர்வு பெற்ற, ஒழுங்கமைக்கப்பட்ட, ஏகபோகங்களுக்கு எதிரான சக்தியாக விளங்குவது தொழிலாளி வர்க்கம்தான். விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சிக்கு மிக அதிகமான சிறப்புத் தன்மைகள் நிறைந்த உழைப்பு தேவைப்படுகிறது. இது உற்பத்தியில் புறவயமாக, உழைக்கும் வர்க்கத்தின் பங்கையும், சமூக உறவு அமைப்பு முறைகள் அனைத்திலும் தொழிலாளி வர்க்கத்தின் பங்கையும் மிக அதிகமாக உயர்த்துகிறது.

புதிய பல தொழில்கள், பணிகள், படிப்புகள் விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியினால் தோற்றுவிக்கப் படுகின்றன. தொழில் வித்தகர்கள், அலுவலக சிப்பந்திகள், வேறு பல மூளை உழைப்பாளிகள் பாட்டாளி வர்க்கத்தின் அணியில் வந்து சேர்கின்றனர். அதே வேளையில் மத்தியத் தட்டில் இருக்கும் தொழிலாளிகளின் சமூக வேறுபாடுகள் வெளிப்படையாகத் தோன்றத் தொடங்குகின்றன. மேலும் இடைநிலைப் பாட்டாளிகளும், அரைகுறைப் பாட்டாளிகளும் தோன்றி, எண்ணிக்கையில் வளர்கின்றனர். பெரும்பாலான படித்த அறிஞர்களின் நிலை பாட்டாளி வர்க்கத்தைப்போன்றதாக இல்லாதிருப்பினும், அது தொழிலாளி வர்க்கத்தின் நிலைக்கு நெருக்கமாகவே வருகிறது.

மத்தியதட்டில் இருப்போரில் சிலருக்கும், தொழிலாளி வர்க்கத்திற்குமிடையேயுள்ள உறவுகள் மிக நெருக்கமான தாக ஆவதற்கு, உழைக்கும் மக்களின் பல்வேறு பிரிவினர் களின் பொருளாதார - சமூக நிலைகள் சமப்படுத்தப்படு கின்றன என்று பொருள் அல்ல. அவர்களது உணர்வு களிலும், அவர்களது மனப்பாங்கிலும் ஏராளமான வேறுபாடுகள் உள்ளன. நிர்வாகத் துறையிலும், அரசு

இயந்திரங்களிலும் வேலைக்கமர்த்தப்பட்ட வித்தகர்களின் உயர்மட்டத்தைச் சேர்ந்தவர்கள் அரசு ஏகபோகத்தில் முக்கியமான பங்கு வகிக்கிறார்கள். அதன் விளைவாக சமூக மட்டத்தில் அவர்கள் ஏகபோக பூர்ஷ்வாக்களுடன் நெருங்கி வாழ்கிறார்கள் அல்லது இணைந்து வாழ்கிறார்கள். மத்திய தட்டில் உள்ள ஒரு குறிப்பிட்ட அளவு மக்கள் தங்களை முதலாளித்துவ முறையுடன் பிணைக்கும் முக்கியமான சிறப்புரிமைகளைத் தக்கவைத்துக் கொள்கின்றனர்.

16 முதலாளித்துவத்தின் கீழ், விஞ்ஞான - தொழில் நுட்ப முன்னேற்றம் பகட்டானதாகவும், பல்வேறு வகையானதாகவும் ஆகிறது. அது கூலிக்கமர்த்தப்பட்டவர்களைச் சுரண்டும் முறையின் முன்னேற்றத்திற்கும் விரிவாக்கத்திற்கும் வழிசெய்கிறது. இந்தப்போக்கு, ஒரு குறிப்பிட்டகால அளவுக்குள் பெரும் மதிப்புள்ள பொருட்களையும், உபரிமதிப்பையும் உற்பத்தி செய்யக்கூடிய பன்முகச் சிறப்புவாய்ந்த, தொழிலாளிகளைச் சுரண்டுவதை அடிப்படையாகக் கொண்டது. பல்வேறு வகையான தொழில் திறமையும், உயர்மட்டப் பொதுக் கல்வியும் பெற்றுள்ள தொழிலாளிகள் தொழிற்சாலை உற்பத்திக்குத் தேவைப்படுகிறார்கள். கூலிக்கமர்த்தப்பட்ட மொத்தத் தொழிலாளர்களின் எண்ணிக்கையில் விஞ்ஞான தொழில் நுட்ப அறிவு நிறைந்தோரின் எண்ணிக்கை வளர்ந்து கொண்டே வருகிறது. அதேவேளையில் திறமையற்ற தொழிலாளர்களும் பெருமளவில் வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர்.

டேய்லர் — ஃபோர்டு முறைகளின் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட தொழிலாளர் சங்கங்களுடன் முதலாளித்துவமுறை இயந்திரமயமாக்கும் புதிய உருவங்கள் மேம்பாடடைந்து வருகின்றன. அவைகள் ஒருபுறம் நரம்புகளின் ஆற்றல்களைச் செலவழிப்பதையும், மன ஆற்றல்களைச் செலவழிப்பதையும், கருவிகளையும், மூலப் பொருட்களையும் திறமையாகப் பயன்படுத்துவதையும், மறுபுறம்

சுரண்டலை மிகவும் திறமையுடன் மறைப்பதையும், உறுதிப் படுத்துகிற சமூக - உளவியல் பாங்கினை தொழிற் தொகுதி அமைப்புகளில் தோற்றுவிப்பதை நோக்கமாகக் கொண் டிருக்கின்றன.

நிலவுகிற சோஷலிசத்தின் உதாரணமும், கடினமான போராட்டங்களின் மூலம் பெறப்பட்ட முதலாளித்துவ நாடு களில் உள்ள தொழிலாளி மக்களின் வாழ்க்கைத்தர உயர்வும் மனிதத் தேவைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களும் அவர்களுக்குள்ள உயர்ந்த சமூக அந்தஸ்திற்கான விருப்பத்தை உயர்த்துகிறது. சிறந்த ஆக்கபூர்வமான செயல் முறைகளில் மிகுந்த ஆர்வம்காட்டுமாறு செய்கிறது. எனினும் இந்தப் புதிய தேவைகள், இலாபங்களின் நலன் களுக்காக, உழைப்பவர்களின் செயல் முறைகளை அடக்கி வைக்கிற, உற்பத்தி அமைப்பு முறைகளின் முதலாளித்துவ உருவங்களுடன் முரண்பட்டதாகவுள்ளன. ஏகபோக வட்டாரங்கள், பரவலாக, எளிதில் மாறுபடும் இயல்புடைய வேலைப்பகுப்பு முறைகளைப் பயன்படுத்துகிறார்கள். குறிப்பாக நிர்வாகத்தில் உழைக்கும் மக்கள் பங்கு பெறுதல் போன்ற பல்வேறு போலியான முறைகளைப் பரவலாகப் பயன்படுத்துகிறார்கள். எனினும் இம்மாதிரியான தற்காலிக நோய் நிவாரணிகள், உற்பத்தியில் நிலவுகிற வர்க்க முரண் பாடுகளின் அடித்தளத்தை நீக்கிவிட முடியாது.

தொழிலாளி மக்களின் மேலான தேவைகள் உற்பத்தி சக்திகள் வளர்ச்சியின் புறநிலை விதிகளையும், உழைப்பு சக்தி மதிப்பின் வளர்ச்சியையும், மதிப்பின் இனங்களாகக் குறைக்கப்பட முடியாத அதனுடைய தன்மைகளின் இன்றியமையாத இயல்புகளையும் பிரதிபலிக்கின்றன. விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சி தொழிலாளியுடைய படைப்பாற்றல் மிக்க அறிவுத் திறமைகளைப் பயன்படுத்து வதையும், அவனுடைய உழைப்பிற்குப் பொறுப்பையும், உழைப்பில் ஆர்வத்தையும் உறுதிப்படுத்தக் கூடிய உற்பத்திக் கருவிகளையும், மனித சக்தியையும் இணைக்கக்

கூடிய ஒருமுறை தேவைப்படுமாறு செய்கிறது. ஆனால் முதலாளித்துவத்தினுள் இயல்பாகவே நிலவுகிற உறவுகளான சமூகச் சார்பும், சுரண்டலும், இதனுடன் ஒத்திசைவானதாக இல்லை. முதலாளித்துவ நாடுகளில் உள்ள பல கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஆவணங்களில் சரியான முறையில் கூறியுள்ள படி, ஏகபோகங்களின் வலிமையைக் கட்டுப்படுத்துவது, தொழிலாளி மக்களின் படைப்பாற்றல் மிக்க செயல்முறைகளை வளர்ப்பதற்குரிய வாய்ப்பைத் தோற்றுவிப்பது, உற்பத்தி நிர்வாகத்தில் அவர்கள் உண்மையாகப் பங்கு பெறுவது ஆகிய மேலான ஜனநாயக மாற்றங்களை சமுதாயத்தில் ஏற்படுத்துவதன் மூலமே இந்த முரண்பாடுகளைத் தவிர்க்க முடியும்.

**17.** விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சி உழைப்பின் உற்பத்தித்திறனை வேகமாக வளரச் செய்வதற்கான சூழ்நிலைகளைத் தந்துதவுகிறது. கூலி உழைப்பின் உற்பத்தி சக்தியைச் சுரண்டுவதன் மூலம், முதலாளிகள் மிகுந்த லாப உயர்வைப் பெறுகிறார்கள். அந்த லாப உயர்வின் வளர்ச்சி விகிதம், உண்மை ஊதியத்தின் உயர்வைக் காட்டிலும் மிகுதியானதாகவுள்ளது. இவற்றிற்கிடையே நிலவும் இடைவெளி 1970-களில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின்போது மிகுதியாயிற்று. ஒருபுறம் உழைக்கும் மக்களின் வாழ்க்கைத்தரத்தின் மீது ஒரு நெருக்கடியையும், மறுபுறம் ஏராளமான புதுமையான கருவிகளைப் புகுத்தி, உற்பத்தியில் ஒரு பெருக்கத்தையும் ஏகபோக மூலதனங்கள் தோற்றுவித்தபோது நிகழ்ந்த நிலையற்ற மீட்சியின்போது இந்த இடைவெளி மிக அதிகமாயிற்று. இலாபங்களைப் பெறுவதற்கும், உண்மை ஊதியத்திற்குமிடையே நிலவுகிற, வளர்ந்து வரும் இடைவெளி, உழைக்கும் வர்க்கத்தினர் சுரண்டப்படுவது தீவிரமடைந்து வருகிறது என்பதைப் பிரதிபலிக்கிறது.

முதலாளித்துவ மறு உற்பத்தி முறையில் நிலவுகிற முரண்பாடுகள் தீவிரமடைந்துவரும் சூழ்நிலையில்,

தொழிற் சாலைகளை, தொழில் நுட்ப அடிப்படையில் மறுசீரமைப்பது புதிய வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு வழி செய்கிறது. சர்வதேச ஏகபோகங்களின் வளர்ச்சிக்கு அடிப்படையாக விளங்கும், மூலதனம் ஏற்றுமதி செய்யப் படுவதன் வளர்ச்சி அதே பலன்களையே விளைவிக்கிறது. வளர்ந்த முதலாளித்துவ நாடுகளில் பெண்களும், இளைஞர் களும்தான் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு முதல் பலியாகின்றனர். இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தின் பெருக்கம் மதிப்புமிக்க, சிறந்த உற்பத்தித் திறன்படைத்த சக்திகளை முதலாளித்துவம் வீணாக்குவதைத் தெளிவாக வெளிப்படுத்துகிறது.

அண்மை ஆண்டுகளில் மனித சக்தியின் மறு உற்பத்திக்கான புறவய சூழ்நிலைகள் மிகவும் மோசமாகி யுள்ளன. உழைக்கும் மக்கள் வாழ்வதற்குத் தேவையான இன்றியமையாப் பொருட்கள் குறைந்து வருவதிலும், பரவி வரும் வேலையில்லாத் திண்டாட்டத்திலும், சூழ்நிலை மற்றும் நகர்ப்புற நெருக்கடி தொடர்பான பிரச்சினைகளை அதிகப்படுத்தும் விஷயங்களுடன் சேர்த்து, வேலைச் சூழ்நிலையிலும், ஓய்வுச் சூழ்நிலையிலும் நிகழ்ந்துள்ள மாற்றங்களிலும் இது தெளிவாக வெளிப்படுகிறது. தீராத பணவீக்கம், கூலி மற்றும் சமூக நலத்துறைகளில் தொழிலாளர்களின் இலாபங்களைக் குறைவுபடச் செய்கிறது. அதன் விளைவாக வேறு வேறு ஆண்டுகளில் உண்மை வருமானம் மிக அதிகமாக வீழ்ச்சியடைகிறது. முதலாளித்துவ அரசு உழைப்பவர்களின் வருமானத்தைக் கண்டிப்பான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவும், அதன் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்தவும், தொடர்ந்து மேலும், மேலும் முயன்று வருகிறது. அந்தக் காரணத்திற்காக அது "வருமானங்களைப் பற்றிய கொள்கை" ஒன்றைப் பின்பற்றி, ஏகபோக முதலாளிகளின் நலனுக்கான பொருளாதாரத் திட்டங்களுடன் தொழிற் சங்கங்களைப் பிணைக்க முயல்கின்றது.

18. விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி உற்பத்தித் துறையில் வியத்தகு மாற்றங்களைக் கொண்டு வருவதோடு மட்டுமல்லாமல் மக்கள் வாழ்வதற்குரிய சூழ்நிலைகளின் மொத்தத் தொகுதியிலும் வியத்தகு மாற்றங்களைத் தோற்றுவிக்கிறது. அதனுடைய செல்வாக்கின் கீழ் பொருளாதாரத்தின் உந்து விசையும், சமுதாய நிகழ்ச்சிகளும் எதிர்பாரா அளவு வளர்ச்சியடைகின்றன. பொருளாயத மற்றும் கலாச்சாரத் துறைகளில் புதிய பிரச்சினைகள் தோன்றுகின்றன. இதுவரை கண்டிராத சமூகத் தேவைகளும், தனிமனிதத் தேவைகளும் உருவாகின்றன. சமுதாயத்தின் பொருளாயத மற்றும் அறிவுத் தொடர்பான சிறந்த திறமை பரந்த அளவில் வளர்ச்சியடைகின்றன. ஆனால் முதலாளித்துவமும், ஏகாதிபத்தியத்தின் சர்வ வல்லமையும், சமூக நலனுக்காக இந்தத் திறமைகளைப் பயன்படுத்தும் வழிகளில் தடைகளைத் தோற்றுவிக்கின்றன. அதன் விளைவாக சமூகச் செல்வத்தின் பகிர்வு, வேலையின் இயல்பு, சூழ்நிலைகள், தொழிலாளிகளுக்கு உற்பத்தியின் விளைவாகக் கிடைக்கும் பொருளாயத நலன்கள், உற்பத்தியில் அவர்களுக்குரிய மதிப்பு நிறைந்த இடம், ஆகியவை மூர்க்கமான வர்க்கப் போராட்டங்களின் நோக்கமாக இருப்பதோடு மட்டுமல்லாமல், முக்கியமான தனி நபர் மற்றும் சமூக வாழ்க்கை முறையின் கொள்கைகளும், மாதிரிப் படிவங்களும், வாழ்க்கையின் அறநெறிகளும் கூட போராட்டங்களின் நோக்கங்களாக ஆகியுள்ளன. முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி, அதனுடைய ஆழ்ந்த வெளிப்பாடாக பூர்ஷ்வாக்களின் வாழ்க்கை முறையின் அனைத்து அம்சங்களிலும் நிகழும் நெருக்கடிகளினால் வெளிப்படுத்தப்படுகிறது.

இந்த நெருக்கடி விஞ்ஞானத்துறையையும் பெரிதும் பாதித்திருக்கிறது. பல்வேறு விஞ்ஞான சாதனைகள் மனிதனுக்கு எதிராகத் திருப்பிவிடப்பட்டுள்ளன. மேலும்

அவை பூர்ஷ்வா சமுதாயத்தில் ஒரு பெரும் அழிவு சக்தியாக விளங்குகின்றன. ஏகபோகங்கள், மேலாதிக்கம் செலுத்துவதனால் எல்லாவற்றிற்கும் மேலாக, முதன் முதலில் விஞ்ஞான ஆராய்ச்சியும், வளர்ச்சியும் போட்டியில் வெற்றி பெறுவதற்காகவே பயன்படுத்தப்படுகின்றன: இதன் விளைவாக "நுகர்வோர் குழுக்கள்" தொடங்கப்படுகின்றன. "கௌரவப்" பொருட்களுக்கு, செயற்கையாக மிகைப் படுத்தப்பட்டவையைத் தோற்றுவிப்பதே, அதன் சிறப்பியல்பாகும். மேலும் கலாச்சார அறநெறி, தர்மங்களையும் மதிப்புக்களையும் சீர்கெடச் செய்யும் பொருட்களை நுகரும்படி செய்வதும் அதன் பிற சிறப்பியல்பாகும். அதே நேரத்தில் பல்வேறு சமூக சேவைகளுக்கு வளர்ந்து வரும் தேவைகள்—மருத்துவக் கண்காணிப்பு உயிர்வாழ் சூழ் நிலையைப் பாதுகாப்பது, மேம்பாடடையச் செய்வது, தன்னாட்சி நிறுவனங்கள், போக்குவரவை ஒழுங்கமைத்தல் போன்ற தேவைகள்—முழுதும் நிறைவு செய்யப்படவில்லை.

நிலவுகிற சோஷலிசத்தாலும், தொழிலாளி மக்களின் வர்க்கப் போராட்டத்தினாலும், முதலாளித்துவ நாடுகளில் சமூகப்பாதுகாப்பு மற்றும் சேவைகளின் வளர்ச்சியின் மீது மேலும் மிகுதியான வலிமை நிறைந்த செல்வாக்கு பயன் படுத்தப்படுகிறது. இந்தக் காரணிகளின் வற்புறுத்தலினாலும், மனிதசக்தியின் மறுஉற்பத்திக்கான புறவயத் தேவைகளாலும் அரசு ஏகபோக முதலாளித்துவம், ஒரு வரிசையான சீர்திருத்தங்களை நிறைவேற்றுவதற்கும், சமுதாயத் தேவைகளுக்கென ஒரு குறிப்பிட்ட அளவு நிதியை ஒதுக்கீடு செய்வதற்கும், நிர்ப்பந்தப்பட்டுள்ளது. எனினும் அந்த நடவடிக்கைகளின் அளவு அவைகளுக்கான தேவைகளைக் காட்டிலும் மிகக் குறைவானதாகவேயுள்ளன. அவசர சமூகத்தேவைகளை நிறைவு செய்வதற்குத் தவறுவது முதலாளித்துவத்தின் சமூக முரண்பாடுகளை மிகைப்படுத்துவதற்குரிய முக்கியமான பெரும் தோற்றுவாய்களில் ஒன்றாக விளங்குகிறது.

19. பூர்ஷ்வா சமுதாயத்தின் அரசியல், கலாச்சார, சித்தாந்த நெருக்கடிகள் மிகவும் தீவிரமடைந்துவருகின்றன. மனித செயல் முறைகளுக்கு விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியினால் தோற்றுவிக்கப்பட்டுள்ள புதிய தேவைகள, முதலாளித்துவ அறநெறிகளுக்கும், சுரண்டலுக்கு இன்றியமையாத கருவியாக மனிதன் கருதப்படுகிற, மனிதனைப்பற்றிய பயன்பாட்டுக் கண்ணோட்டத்திற்கும் பொருத்தமில்லாததாகவுள்ளது. இவ்வாறான சூழ்நிலையில் முதலாளித்துவம் சமூக - மனவியல் துறையிலும், தனிநபர் மனவியல் துறையிலும் தோற்றுவித்துள்ள பல சுவைக்குதவாத முறைகள் வலிமை மிக்கதாக ஆகின்றன. போதைப்பொருட்களை உட்கொள்ளும் பழக்கம், குற்றங்கள் புரிதல், வேறு பல வழக்கத்திற்கு விரோதமான சமுதாய பழக்க வழக்கங்கள் பெரிதும் பரவலாகியுள்ளன. "பொது மக்கள் கலாச்சாரம்" என்றழைக்கப்படுகிற வன்முறைக் கலாச்சாரம், மக்களுக்கான செய்திகளைப் பரப்பும் பூர்ஷ்வா முறைகளின் தீயசெல்வாக்கினால் அதிகமாக்கப்படுகிறது. மிகவும் அதிகமாக வளர்ந்திருக்கிற, வளர்ந்து வரும் வேலையில்லாத் திண்டாட்டமும், சமூக சமத்துவமின்மையும், வேலையிலிருந்து வெளியேற்றப்பட்டதனால் வர்க்கத் தட்டுகளிலிருந்து சரிந்து விட்டவர்களின் எண்ணிக்கைப் பெருக்கத்திற்கும், அரசியல் சூதுகளுக்கு மிகவும் செழுமையான இடத்தைத் தருகிற தீவிர இடதுசாரிகள் மற்றும் வலதுசாரிகளின் ஆத்திரமூட்டலுக்கும் மிகுதியாக வழி செய்கிறது.

பூர்ஷ்வா ஜனநாயகத்தின் அழிவும், அரசியல் அதிகாரத்தில், பணித்துறைக் குழுமயமாக்குதலும் தீவிரமடைந்துள்ளன. ஆனால் அரசு ஏகபோகத்தின் மேலடுக்கு தொழில் முறைத் திசைவழி செல்வதற்கும், ஏகபோகங்களின் நலன்களைப் பிரதிபலிக்கும் ஒரு சில "தகுதியுள்ள" நபர்களின் கையில் அதிகாரத்தைக் குவித்துவைப்பதற்காக, செயலாட்சியில் தனித்திறமை பெறுவதற்கும், பெருமளவில் சமூக - அரசியல் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் மக்களிற்

பெரும்பகுதியினர் பங்குபெறுவதைத் தடுப்பதற்கும் முயல்கிறது. இவ்வகையான நடவடிக்கை அரசியல் சுதந்திரங்களைக் கட்டுப்படுத்துகிறது. மேலும் அது உழைக்கும் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கு எதிரான நேரடியான போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது.

முதலாளித்துவ சமுதாயத்தின் ஆன்மீக நெருக்கடியும், அறநெறி நெருக்கடியும், மரபு வழி அரசியல் நிறுவனங்களில் ஏற்பட்டுள்ள நெருக்கடியுடன் பிரிக்க முடியாதவாறு இணைந்துள்ளன. ஜனநாயகத்தின் ஆண்மை அழிவு பூர்ஷ்வாக் கட்சிகளிலும, அரசு இயந்திரங்களிலும் பரவியுள்ள லஞ்சஊழலின் செல்வாக்கின் கீழ் வளர்ந்துவரும் அதிகார வர்க்கமும், பொருளாதாரத்தில் நிகழும் நெருக்கடிகளைச் சமாளிக்கக் கூடிய திறமையின்மையும், நிலவுகிற அரசியல் முறைமீது மக்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தை ஏற்படுத்துகின்றன. அரசு ஏகபோக அதிகாரத்தின் சமூக அடிப்படை குறுகுவதையும், தொடர்ந்து வருகிற அரசுகளில் ஏற்படுகிற நெருக்கடிகளையும் பிரதிபலிக்கிற தீவிரமான சமூக-அரசியல் நெருக்கடிகள் முதலாளித்துவ நாடுகளின் வாழ்வில் அடிக்கடி நிகழும் நிகழ்ச்சிகளாக ஆகிவருகின்றன.

20. தொழிலாளி மக்களின் வர்க்கப் போராட்டத்தின் உள்ளடக்கம், விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியுடன் தொடர்புள்ள நிகழ்ச்சிப் போக்கின் தாக்கத்தினால் குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்துள்ளது. மரபுவழிக் கோரிக்கைகளான, சம்பள உயர்வு, குறைந்த வேலை நேரம் போன்றவற்றுடன் முதலாளிகளின் சரியான தொழில் நுட்பக் கொள்கைக்காகவும், தொழிலாளிகள் தொழிற்சாலைகளை அடக்கி ஆள்வதற்காகவும், வேலைப் பாதுகாப்பிற்காகவும், சமூகப் பாதுகாப்பை விரிவுபடுத்துவதற்காகவும், ஜனநாயகப்படுத்துவதற்கும், வேலை நீக்கத்திற்கெதிராகவும், உடல்நலப் பாதுகாப்புக்காகவும், சிறந்த கல்வி முறைக்காகவும், உயிர்வாழ் சூழ்நிலையைப் பாதுகாப்பதற்காகவும் தேவையான கோரிக்கைகள் மிகுந்த

முக்கியத்துவம் பெற்று வருகின்றன. ஏகபோகங்களுக்கு எதிரான வேறுபட்ட ஜனநாயக இயக்கங்கள்-போர் எதிர்ப்பு மனம் கொண்டோர், இளைஞர்கள், பெண்கள், குடியிருப்போர், நுகர்வோர், சூழ்நிலைப் பாதுகாப்பு வேண்டுவோர் ஆகியோரின் இயக்கங்கள்-மிகவும் தீவிரமாகிக் கொண்டு வருகின்றன. கோரிக்கைகளில் வேறுபாடுகள் மிகுந்திருந்த போதிலும் இவர்களது போராட்டம் தனி முதலாளிகளையோ, அல்லது தனி ஏகபோகங்களையோ எதிர்த்து நடத்தப்படவில்லை மாறாக அரசு ஏகபோக முறையின் சக்தி முழுமையையும் எதிர்த்துத்தான் அவர்களின் போராட்டங்கள் நடைபெறுகின்றன.

நாடு முழுவதற்குமான சக்தி வாய்ந்த முன்னணிப் படையினராகவும் அதனுடைய நலன்களை எடுத்துக் கூறுபவர்களாகவும் விளங்கும் தொழிலாளி வர்க்கத்தின் சமூக அரசியல் பங்கும், இன்றைய முதலாளித்துவ சமுதாயத்தில் வளர்ந்து வருகிறது. தொழிலாளி வர்க்கத்தின் உயர்ந்த சமூக தராதரமும் உண்மையான செல்வாக்கும், வேலை நிறுத்தங்களின் பரந்த வீச்சினாலும், தொழிற் சங்கங்களின் மிகுதியான அரசியல் முக்கியத்துவத்தாலும், பல நாடுகளில் இடதுசாரிக் கட்சிகள பெற்றுள்ள வெற்றியாலும் குறிப்பாக கம்யூனிஸ்டுகளின் வெற்றியாலும் தெளிவாக விளங்குகின்றன. 1960-களின் பிந்திய நாட்களும் 1970-களின் தொடக்க நாட்களும் பொதுமக்கள் இயக்கத்திற்கு விரிந்த செல்வாக்கை ஏற்படுத்தின. அந்தப் போராட்டங்களில் குறிப்பிடத்தக்க அளவு அறிஞர்களும், அலுவலகப் பணியாளர்களும், சிறிய பூர்ஷ்வா வர்க்கத்தைச் சேர்ந்த பலரும், பங்குகொண்டனர். தொழிலாளி வர்க்கத்தின் வளர்ந்து வரும் செல்வாக்கும், ஏகபோகங்களை எதிர்த்து நடத்திய போராட்டங்களில் அது பெற்ற வெற்றியும், பாட்டாளி வர்க்கத்தைச் சேராத பலசக்திகளின் கவனத்தைக் கவரும் மையமாக மாறுவதற்கும், அவைகளை ஒரு ஜனநாயக, ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணியில் ஒன்று சேர்க்கவும் உதவுகிற முன் தேவைகளைப் படைக்கின்றன.

ஏகபோகங்களின் சர்வாதிகாரத்தை எதிர்த்து நடைபெறும் பொதுவான போராட்டங்களில் தொழிலாளிகளின் வெற்றியும், ஜனநாயக இயக்கங்களின் வெற்றியும், தொழிலாளி மக்களின் நலன்களையும், உரிமைகளையும் பாதுகாக்க அவர்கள் மேற்கொண்ட போராட்டங்களின் வெற்றியும், ஆளும் வர்க்கத்தின் மிகக்கடுமையான சமுதாயப் போக்கை நோக்கிய இயல்பை மறுக்க முடியாது. மேலும் தொழிலாளி மக்களின் வாழ்க்கைத்தரத்தையும் அவர்களுடைய உரிமைகளையும் கட்டுப்படுத்துவதன் மூலம் பூர்ஷ்வா பொருளாதாரத்தின் நெருக்கடிகளைப் போக்குவதற்கான முயற்சிகளில் அந்த வர்க்கம் இறங்கும் அபாயத்தைக் காணாமல் விட்டு விடுதலும் கூடாது. இராணுவத்தொழில் அமைப்புகளின் வளர்ந்து வரும் செல்வாக்கும், பொருளாதாரம், ஆராய்ச்சி, முன்னேற்றம் ஆகியவற்றை இராணுவமயமாக்கலும், பதற்றத்தணிவின் போக்கைத் தடைசெய்து நிறுத்துவதற்கான தொடர்ச்சியான முயற்சியும், ஆயுதக்குறைப்பிற்கான போராட்டத்தைச் சீர்குலையச் செய்யப்படும் முயற்சியும், பொதுமக்களின் இன்றியமையா நலன்களுக்கு ஒரு பெரும் அபாயமாக விளங்குகின்றன.

21. முதலாளித்துவ சூழ்நிலையில் வளர்ந்துவரும் விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியினால் மிகைப்படுத்தப்படும், சமுதாய முரண்பாடுகளையும், போராட்டங்களையும் பகுத்தாராய்வது வளரும் நாடுகளில் நடைபெற்று வரும் நிகழ்ச்சிகள் பற்றி அறியாமல் செய்யப்பட்டால் அது முழுமையான ஒன்றாக இருக்க முடியாது. எனவே முதலாளித்துவ முறைப் பொருளாதார மேலாட்சி புதிதாக விடுதலையடைந்த தேசிய அரசுகளின் மிக முக்கியமான வரலாற்றுப் பிரச்சினைக்குச் சிறந்த தீர்வு காண்பதற்கு ஏற்றதல்ல எனத் தெளிவாகிறது—அதாவது அவைகளிடையே நீண்டகாலமாக இருந்துவரும் பிற்பட்ட தன்மையைப் போக்குவதற்கும், நவீன தொழில் நுட்ப அடிப்படையில்

அவைகளுடைய பொருளாதாரத்தை மறுசீரமைப்பதற்கும் ஏற்றதல்ல எனத் தெளிவாகிறது.

ஏகாதிபத்தியத்தின் கரையோரங்களிலிருந்த முந்திய காலனிகளின் சிறப்பு அம்சமாக விளங்கும் பல அடுக்குப் பொருளாதார சூழ்நிலைகளின் கீழ் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியின் உலகமட்டத்திற்கும், வளரும் நாடுகளில் மேம்பட்டிருக்கிற உற்பத்தி உறவுகளின் அமைப்பு முறைக்கு மிடையேயுள்ள பொருத்தமற்ற இயல்பு மிக அதிகமாக வளர்கிறது. இந்த உறவுகள் முதலாளித்துவத்திற்கு முந்திய சமூக உறவுகளின் மீதங்களின் பழுவின் கீழிருப்பதாலும், சார்ந்துள்ள முதலாளித்துவத்தின் உருக்குலைந்த உற்பத்தி உறவுகளின் கீழிருப்பதாலும், தொழில் நுட்பத்தின் புதுமையான கண்டுபிடிப்புகளை சிறப்பான முறையில் பயன்படுத்தும் முறைகளுக்கு ஒரு வலிமையான தடைச் சுவராகவுள்ளன. மேலும் பகுத்தறிவுக்குகந்த முறையில் உற்பத்தியை ஒழுங்குபடுத்துவதைப் பின்தள்ளுகின்றன. உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியைத் தடுக்கின்றன.

குறுகிய உள்நாட்டுச்சந்தை, பண்டஉறவுகள், பணவியல் உறவுகள் குறைவான வளர்ச்சியடைந்திருத்தல், பல வளரும் நாடுகளில் இன்றும் தொடர்ந்து இருந்து வரும் ஒரு இயற்கைப் பொருளாதாரம், வேலையில்லாத் திண்டாட்டம் என்ற பிரச்சினையின் புறவயமான சிக்கல் நிறைந்த தன்மை ஆகிய அனைத்தும், வளரும் நாடுகளைத் தொழில்மயமாக்கு வதற்குக் குறுக்கே நிற்கும் துன்பங்களாகும். பெரும்பாலான மக்கள், விவசாய, சிறுதொழிற்பொருட்களையும் உள்நாட்டு உற்பத்திப் பொருட்களையும் மட்டுமேதான் நுகரமுடிகிறது; அதே வேளையில வேகமாக வளர்ந்து வரும் நகர்ப்புறமக்கள் தொகை மலிவான தொழிற் பொருட்களையே நுகரவிரும்பு கிறார்கள். சுரண்டும் மேல்மட்டத்தைச் சேர்ந்தவர்கள் முக்கியமாக விலையுயர்ந்த , வெளிநாட்டு ஆடம்பரப் பொருட்களை நுகர்வதில் பெரிதும் ஆர்வம் காட்டுகின்றனர்.

முதலாளித்துவ முறையில் நவீனப் படுத்தும் நிகழ்ச்சிப் போக்கிலிருக்கும் பிற்பட்ட சமுதாயத்தின் சமூகக் கட்டமைப்பைப் பிரதிபலிக்கிற ''பிரமிட்'' கோபுரம் போன்ற சந்தையின் தேவை, உள்நாட்டுச் சந்தையின் அளவை விரிவாக்கம் செய்வதைத் தடுக்கிறது. அது மட்டுமல்லாமல், அதற்கு மாறாக அதன் வளர்ச்சியைப் பின் தள்ளுகிறது. மேலும் வளரும் நாடுகளின் பண்டங்கள் பிற வளரும் நாடுகளின் பண்டங்களுடன் போட்டியிட வேண்டியிருப்பதோடு தொழில் வளம்மிக்க முதலாளித்துவ நாடுகளின் சுங்கவரிகள் உள்ள,மற்றும் சுங்கவரிகள் இல்லாத தடைச் சுவர்களையும் சமாளிக்க வேண்டியதிருக்கிறது. அதே வேளையில் மேற்கத்திய முதலாளித்துவ நாடுகளின் வாழ்க்கை முறைப் ''பகட்டின் பயனும்'' அதன் நுகர்வோர் மாதிரிகளைப் பின்பற்றுவதும், மேல்மட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்திற்கும் உழைக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்துக்குமிடையே வளர்ந்து வரும் மிகுந்த வேறுபாடுகளும் இன்றைய அநியாயமான சமூகக் கட்டமைப்பை நாம் நன்றாகப் புரிந்து கொள்ள வகை செய்கின்றன.

தங்களுக்கே சொந்தமான அல்லது குத்தகைக்கு மேற் கொள்ளப்பட்ட சிறிய பண்ணைகளும், நடுத்தரப் பண்ணைகளும் விவசாயத் துறையின் தொழில் நுட்பத்தில் புதுமைக் கண்டு பிடிப்புகளைப் பயன் படுத்த முடியாது. அவைகள் மேலும் ஏழ்மை நிலையை அடைகின்றன. எனவே பெரிய நிலப் பிரபுக்களாலும், முதலாளித்துவப் பண்ணை களாலும், அவைகள் வெளியேற்றப் படுகின்றன. விவசாயத் தொழிலாளர்களின் அணியில் சேரும் குத்தகை விவசாயிகள் பெருமளவில் வெளியேற்றப் படுவதால் இந்த நிகழ்ச்சிப் போக்கு தீவிரமடைகிறது. நாட்டுப்புறப் பகுதிகளில் வாழ்வோரில் பலர் நகர்ப்புறங்களில் குடியேறுகின்றனர். அதன் விளைவாக கட்டுப்பாடற்ற நகர் மயமாதல் வளர்கிறது.

பொருளாதார அடிப்படையில் நியாயமற்ற, ஒரு வீங்கிப் பெருத்த நகர்மயமாக்கல், வேலை தேடிப் பெறமுடியாத மக்கள் தொகையின் பெரும்பான்மையைக் கொண்ட மக்கள் நெருக்கம் மிகுந்த மாநகரங்களைத் தோற்றுவிக்கிறது. இவையனைத்தும் பல அடுக்கு சமுதாயத்தின் உறுதியற்ற சமூக அரசியல் தன்மையை அதிகப்படுத்துகிறது.

22. முதலாளித்துவ முறை வளர்ச்சியின் இந்தப் படுமோசமான நெருக்கடி வளரும் உலகின் பல்வேறு பகுதிகளில் மிகவும் தீவிரமாக வெளிப்படுகிறது. எத்தியோப்பியாவிலும், ஆப்கனிஸ்தானத்திலும், ஈரானிலும் நிகழ்ந்த புரட்சிகள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன.

இந்த மூன்று நாடுகளிலும் நிலைமைகள் வேறுபட்டிருந்த போதிலும், இந்த பின்தங்கிய அரைகுறை நிலப்பிரபுத்துவ சமுதாயத்தை, முதலாளித்துவத்தின் அடித்தளத்தில், "வலியேதுமின்றி, மென்மையாக," விஞ்ஞான-தொழில் நுட்ப சாதனைகளைப் பயன்படுத்தி, வைக்கச் செய்த முயற்சி தோல்வியடைந்தது. இம்மாதிரியான கொள்கை, பெரும் பொருளாதார வளர்ச்சியுடனும், அதிக அளவிலான எண்ணெய் வளத்துடனும் உள்ள ஈரானில் மிகவும் தீவிரமாகப் பின்பற்றப்பட்டது. ஆப்கானிஸ்தானத்திலும், எத்தியோப்பியாவிலும் முதலாளித்துவ முறையில் நவீனமாக்குவதற்கான முதல் நடவடிக்கைகளே மேற் கொள்ளப்பட்டன. ஆனால் அந்த நாடுகள் அனைத்திலும் வேறு வளரும் நாடுகளைப் போலவே, முதலாளித்துவ முறை வளர்ச்சி சமூக சமத்துவமின்மையைப் போக்க முடியாது என்பதைத் தெளிவாக்கியுள்ளது. அது வருமானங்களில் பெரும் ஏற்றத் தாழ்வைத் தோற்றுவித்து சமுதாயத்தை வர்க்கங்களாகப் பிரிப்பதைத் தீவிரப் படுத்துகிறது. மேலும் தவிர்க்க முடியாதவாறு, அது நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம் ஆகியவற்றின் படுமோசமான இயல்புகள் இணைந்த புதிய பெரும் தனி

உரிமைகள் பெற்ற ஒரு உயர்வர்க்கம் தோன்றுவதற்கு வழி செய்கிறது. இரண்டாவதாகக் குறிப்பாக, ஈரானிலும், முதலாளித்துவ முறையைப் பின்பற்றும் வேறு பல நாடுகளிலும், முதலாளித்துவ முறையில் நவீனமாக்குவதும், வேகமாகத் தொழில் மயமாக்குவதும், எந்த வழியிலும் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்த்து விடவில்லை. முதலாளித்துவத்தின் கரையோரங்களில் உள்ள சில நாடுகளின் மிக அதிகமான தொழில் வளர்ச்சி விகிதம் அங்கிருக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தையோ, பகுதி நேர வேலையில்லாத் திண்டாட்டத்தையோ ஒழித்துக் கட்டுவதற்குப் பயன்படவில்லை. ஈரானிலும், வேறு சில வளரும் நாடுகளிலும் நிறைவேற்றப்பட்டுள்ள அரைகுறையான நிலச் சீர்திருத்தங்கள் அங்குள்ள விவசாயிகளின் நிலையை உயர்த்தவில்லை. ஆனால் சமுதாய வேறுபாடுகளை ஏற்படுத்தி, புதிய இன்னல் மிகுந்த பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளன. அதே வேளையில் முதலாளித்துவ நவீன மயமாக்கலும், வேலைப் பளுவை அதிகரித்தலும், கீழ் மட்ட வர்க்கங்களையும், நடுத்தர வர்க்கங்களையும் பெரிதும் பாதித்துள்ளன. மூன்றாவதாக விஞ்ஞான தொழில் நுட்ப சாதனைகளை குறைவாக வளர்ச்சியடைந்த சமூக கீழ்க் கட்டமைப்பைக் கொண்டதாக இருக்கும். சிறந்த பயிற்சியும் திறமையும் மிகக் குறைவாக இருக்கும்-குறிப்பாக தொழில் நுட்ப அறிஞர்களும், திறன் படைத்த தொழிலாளர்களும் குறைவாக இருக்கும் தேசிய விஞ்ஞான ஆக்கத் திறமை குறைந்திருக்கும் நிலைகள் மலிந்துள்ள, பின் தங்கிய சமுதாயத்தினால் உள்ளிழுத்துக் கொண்டு தன் வயமாக்கிக் கொள்ள முடியவில்லை. நான்காவதாக, சமுதாய உளப்பாங்கு குறைந்த முக்கியத்துவம் உடையதாய் இல்லை; பழைய மரபு வழி கலாச்சாரப்பண்புகள் தேய்ந்து சிதைந்து கொண்டிருக்கின்றன. மக்களுக்குப் புதிதான பூர்ஷ்வாக்களின் "நுகர்வோர் சமுதாயத்"தின் பண்புகள் பற்றிய புதிய, செயற்கையான முறையில் புகுத்தப்பட்ட வழிகாட்டுதல் அந்தக் கலாச்சாரச் சீரழிவைச் சீராக்க

முடியவில்லை. அதற்கு ஈடாக உடன்பாடான நடைமுறைப் பயனுள்ள திட்டச் செயல் முறைகள் எதுவும் புகுத்தப்படவில்லை.

அதே வேளையில் எத்தியோப்பியாவிலும், ஆப்கானிஸ்தானத்திலும் நடைபெற்ற புரட்சிகளின் அடிப்படையில் பொருளாதாரம் மிகக் குறைவாகவே வளர்ச்சியடைந்துள்ள நாடுகளிலும் வர்க்க, உருவாக்க நிகழ்ச்சிகள் முற்றுப் பெறாத நிலையில் உள்ள நாடுகளிலும், முதலாளித்துவ வளர்ச்சி முற்றிலும் தடைசெய்யப்பட்டு விட்டது என்று கருதுவது முற்றிலும் தவறாக இருக்கும். புதிதாக விடுதலையடைந்துள்ள பல நாடுகளில் முதலாளித்துவம் வளர்ந்து வருகிறது. அதேவேளையில் முதலாளித்துவம் வரலாற்றடிப்படையில் வருங்காலம் இல்லாததாக உள்ளது. மேலும் அது பயன்படும் ஒரு சாதனமாக இல்லை என்பதும் தெளிவு. அது சார்பு நிலையும், தாழ்ந்த நிலையும் கொண்டது அதில் நாள்தோறும பெரும் பணக்காரர்களாகிவரும், மேல்மட்டத்தவர்க்கும், பரம ஏழைகளாக வாழ்ந்து வரும் பொது மக்களுக்குமிடையேயுள்ள சமூக முரண்பாடுகள் மேலும், மேலும் தெளிவாகிவருகிறது.

## உலக முதலாளித்துவ பொருளாதாரத்தின் முரண்பாடுகள் தீவிரமடைவது

23. விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் முக்கியமான விளைவுகளில் ஒன்று, சமூக உற்பத்தி சர்வதேசத் தன்மையடைவது என்ற இன்றியமையாத முன்னேற்றகரமான நிகழ்ச்சிப்போக்கு விரைவான தாக்கப்படுவதேயாகும். மனித இனத்தின் உற்பத்தி சக்திகளின் மேற்கொண்ட வளர்ச்சிக்கான, தேவைகளைப் பற்றிச் சிந்திக்கும்போது, விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சி புறவயமாக சர்வதேச வேலைப் பகுப்பை மிகுந்த ஆழமுடையதாக ஆக்க உதவுகிறது. தேசியப் பொருளாதாரங்கள் ஒன்றுக்கொன்று சிறப்பாக உதவி செய்து கொள்வதை ஊக்குவிக்கிறது. சர்வதேச உற்பத்தியில்

சிறப்புத் திறன் பெருகுவதையும், அவைகளிடையே கூட்டுறவு நிலவுவதையும், வளரச் செய்கிறது. நாடுகளிடையே விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சியையும் பொருளாதாரப் பரிவர்த்தனையையும், தொடர்புகளையும் மேற்கொண்டு வளரச் செய்கிறது.

தொழிற்பொருள் உற்பத்தியைக் காட்டிலும் முறையே 1.4 மற்றும் 1.6 மடங்கு அதிகமாக வளர்ந்து கொண்டிருந்த, போருக்குப் பிந்திய காலத்தில் நிகழ்ந்த, சர்வதேச வாணிபத்தின் மேலான வளர்ச்சியும், மூலதன ஏற்றுமதியும், உலகப் பொருளாதார உறவுகளின் முக்கியத்துவம் வளர்ந்து வருவதற்குச் சான்றுபகர்கின்றன.

விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் போக்கில், வலிமை வாய்ந்ததாக ஆகிக்கொண்டிருந்த உற்பத்தி சர்வதேசமயமாக்கப்படுதல், உலகப் பொருளாதார அடிப்படைப்பிரிவு நாடுகளில், வேறு வேறு வகையாக வெளிப்பட்டு, வேறுபட்ட வர்க்க நோக்கங்களுக்கும், கடமைகளுக்கும் சேவைசெய்கிறது. சோஷலிச சமுதாயத்தில் அனைத்து சமூகத்தின் நலனுக்காகவும், அனைத்து நாடுகளின் நலனுக்காகவும் சர்வதேச வேலைப்பகுப்பின் நலன்களைப் பெருமளவிற்குப் பயன்படுத்துவதற்கு பரந்த வாய்ப்புகளைத் திறந்து விடுகிறது. முதலாளித்துவ நாடுகளில் அது, முக்கியமாக அடிப்படையிலேயே எவ்வளவு ஏகபோக இலாபங்களை அடைய முடியுமோ அவ்வளவு இலாபங்களை அடைவதற்கான கடமைகளுக்கு உட்படுத்தப் படுகிறது. மற்றும் அது உலக முதலாளித்துவ பொருளாதார முரண்பாடுகளை மிகைப்படுத்துவதற்கும், முக்கியமான முதலாளித்துவ நாடுகளின் மையங்களின் புதிய காலனி ஆதிக்க முறையைச் சார்ந்து, வளரும் நாடுகள் வாழ்வதைத் தீவிரமாக்குவதற்கும், முனைப்பான போராட்டங்கள் நிறைந்துள்ள இந்த மையங்களிடையே சக்திகள் பரவலாக்கப்படுவதில் மாற்றங்களைத் தோற்றுவிப்பதற்கும் உட்படுத்தப்படுகிறது.

நாடுகளிடையே உற்பத்தியில் தனிச் சிறப்புப் பெறுவதன் உதவியாலும், கூட்டுறவின் உதவியாலும், மிக அதிகமான அளவில் தீவிரமாக, இயற்கையின் சக்திகளையும், மனிதசக்திகளையும் பயன்படுத்துவதாலும், போக்குவரவின் விரைவான முன்னேற்றத்தினாலும், வேறுவகையான சர்வதேச செய்திப் போக்குவரவின் விரைவான முன்னேற்றத்தினாலும், சர்வதேச மட்டத்தில் உழைக்கும் மக்களைச் சுரண்டுவதன் அளவை உயர்த்துவதற்காக, உற்பத்தி இயந்திரத்தை நவீனமயமாக்குவதற்கான கருவிகளை முதலாளித்துவம் பெறுகிறது. எனினும், எவ்வளவு அதிகமான ஏகபோக லாபம் பெறமுடியுமோ, அவ்வளவு அதிகமான லாபம் பெறும் நோக்கம், தேசிய பொருளாதாரத்தின் ஒரே சீரான வளர்ச்சி நலன்களுடன் மிகுதியாக மோதிக்கொள்கிறது.

உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தின் கட்டமைப்பு தாறுமாறாக இருப்பதற்கும், நெருக்கடி வலுப் பெறுவதற்கும் வழி வகுக்கிறது. தேசியப் பொருளாதாரங்கள் ஒன்றின் மீது ஒன்று சார்ந்திருப்பதன் விளைவாக, சில நாடுகளின் பொருளாதார இயந்திரத்தின் ஒழுங்கின்மையால் சில எதிர்மறையான விளைவுகளை மிகுதிப்படுத்துவதும், பிற நாடுகளில் உள்ள நிலைமைகளில் எதிர்மறையான விளைவுகளை மிகுதிப்படுத்துவதும் நிகழ்கிறது. உலக முதலாளித்துவ நாடுகளின் முன்னேற்றத்தில் ஒரு சீரற்ற தன்மையை அதிகப்படுத்துகிறது.

24. முதலாளித்துவத்தின் கீழ் விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சி சூழ்நிலைகளில் பொருளாதாரச் செயல் முறைகளை சர்வதேசமயமாக்குவது, முக்கியமாக தனி ஏகபோக முறைகளின் மூலமே நிறைவேற்றப்படுகிறது. அண்மைப் பத்தாண்டுகளில் வெளிநாடுகளில் உற்பத்திக் கிளைகளையும், துணைத் தொழில்களையும் தோற்றுவிக்கிற பன்னாட்டு இணையங்கள் ஏராளமான செல்வாக்குப் பெற்றுள்ளன. இப்போது அமெரிக்காவைத் தவிர, வேறு

எந்த ஒரு முதலாளித்துவ நாட்டின் உற்பத்தி அளவைக் காட்டிலும், பன்னாட்டு ஏகபோகங்களின் உற்பத்தி மிக அதிகமாகவே உள்ளது. அவைகள் உலக முதலாளித்துவ வாணிபத்தின் ஐந்தில் மூன்று பங்கைக் கட்டுப்படுத்து கின்றன. மேலும் வாணிபத்தின் மூன்றில் ஒரு பங்கு ஏகபோகங்களுக்கிடையே நடைபெறும் அளிப்புகளாலும், இணையங்களுக்குள் இருக்கும் வெளிநாட்டுக் கிளைகளுக் கிடையில் நடைபெறும் அளிப்புகளாலும் மேற்கொள்ளப் படுகின்றன. பன்னாட்டு இணையங்கள் ஒரு வகையான தனிப்பட்ட ஏகபோகங்களின் பேரரசைத் தோற்றுவிக் கின்றன. ஒருபுறம் அவைகள் விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றங்களுக்கான சாதனமாகச் செயல்படுகின்றன. அதன் விளைவாக ஒரு சில நாடுகளின் தேசியப் பொருளாதாரத்தை அது மிகநெருக்கமானதாக ஆக்குகிறது. மறு புறம் உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தின் மேலான முரண்பாடுகளையும், நெருக்கடி நிலைகளையும், உறுதியின்மையையும் மிகைப்படுத்துகிறது.

உற்பத்தி சக்திகள் சர்வதேசமயமாக்கப்படுதல் என்ற நிகழ்ச்சி வேகமான வளர்ச்சியடைந்திருப்பது ஒரு புதிய திட்டமிட்ட பொருளாதார செயலாட்சி முறையின் புறவயமான தேவையை இன்றியமையாததாக ஆக்குகிறது. மேலும் அது உலகப் பொருளாதாரப் பிணைப்புகளை ஒழுங்குபடுத்துவதில் அரசின் பங்கை வலிமையாக்குவதன் தேவையையும் இன்றியமையாதது ஆக்குகிறது எனினும் பன்னாட்டு இணையங்களின் கட்டமைப்புக்குள் முதலாளித்துவ நிகழ்ச்சி நிரல்களைப் பயன்படுத்தச் செய்யும் முயற்சிகள் தேசிய பொருளாதாரத்தின் திட்டமிட்ட வளர்ச்சிக்கும், உலகப் பொருளாதார முழுமையின் திட்ட மிட்ட வளர்ச்சிக்கும் உதவிசெய்வதாயில்லை. ஆனால் மாறாக, முதலாளித்துவ உலகின், சில பொருளாதாரக் கிளைகள், நாடுகள், மண்டலங்கள் ஆகியவற்றின் உறுதியற்ற வளர்ச்சியை ஊக்குவிக்கும் தானே வளரும் நிகழ்ச்சிப் போக்கை அவைகள் பெருக்குகின்றன. ஐரோப்பிய

பொருளாதார கட்டமைப்பிற்குள் செய்யப்பட்ட முயற்சிகளும், மற்றும் பிற மேற்கத்திய இணைப்புக்குழுக்களின் கட்டமைப்புக்குள்ளும் பொருளாதார கூட்டுறவு மற்றும் வளர்ச்சிக்கான கட்டமைப்புக்குள்ளும் பூர்ஷ்வா அரசுகளினால் உலக முதலாளித்துவப் பொருளாதாரத்திற்கு கூட்டான விதிமுறைகளைத் தந்துதவச் செய்த முயற்சி, தேசியமட்டத்தில், அரசு ஏகபோக ஒழுங்கு நடவடிக்கைகளுக்கான முறைகளைக்காட்டிலும் குறைந்த பயனைத் தருவதாகவே ஆயிற்று.

25. பிற நாடுகளோடு ஒப்பிட்டால், ஒரு சில நாடுகள் வேகமான வளர்ச்சியடைவதற்குரிய புதிய, மேற்கொண்ட வாய்ப்புகளை விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சி தோற்றுவிக்கிறது; ஒரு சீரற்ற தன்மையைப் பெருக்குகிறது. மூன்று ஏகாதிபத்திய மையங்களிடையே நடைபெறும் போராட்டத்தைத் தீவிரமடையச் செய்கிறது: யு. எஸ்; மேற்கு ஐரோப்பா, ஜப்பான். (அட்டவணை 5 பார்க்கவும்)

ஏகாதிபத்தியங்களுக்கிடையே நடைபெறும் மரபுவழியான போட்டியுடன் வருங்காலத்தில் பெரிதும் பயன்படக் கூடிய விஞ்ஞானம் மிக அதிகமாகப் பயன்படும் உற்பத்திக் கிளைகளில் உலகத் தலைமைக்காகவும், விஞ்ஞானத்திலும், தொழில் நுட்பத் துறைகளிலும் வித்தகர்கள் பலரைப் பெற்றிருப்பதில் உலகத் தலைமைக்காகவும், உலகப் பெருங்கடல்களில் உள்ள மூலப் பொருட்களைப் பெறுவதில் உலகத் தலைமைக்காகவும், நடைபெறும் போராட்டங்களும் சேர்ந்து கொள்கின்றன. பல துறைகளில் யு. எஸ். சுக்கும் பிற முதலாளித்துவ நாடுகளுக்குமிடையே நிலவுகிற "தொழில் நுட்ப இடைவெளி", குறைந்து கொண்டே வந்தாலும், உயர்ந்த பொருளாதாரம், விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகியவற்றில், யு. எஸ். சிறப்பான திறமை பெற்றிருப்பது, — குறிப்பாக, அதிகப்படியான முதலீடும், அடிப்படையான பயன்படக் கூடிய ஆய்வு முறைகளும் தேவைப்படுகிற துறைகளில் மேலான

### அட்டவணை-5

### முதலாளித்துவப் பொருளாதாரத்தில் பெரும் ஏகாதிபத்திய மையங்களின் பங்கில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் (சதவிகிதம்)

| | 1950 | 1960 | 1970 | 1975 | 1977 |
|---|---|---|---|---|---|
| **மொத்த உள்நாட்டு உற்பத்தி** | | | | | |
| யு. எஸ். | 47.1 | 43.7 | 40.2 | 38.4 | 38.9 |
| மேற்கு ஐரோப்பா | 30.0 | 31.4 | 30.6 | 29.9 | 28.9 |
| ஜப்பான் | 3.6 | 4.7 | 8.0 | 8.9 | 9.1 |
| **தொழில் உற்பத்தி** | | | | | |
| யு. எஸ். | 52.6 | 45.7 | 41.2 | 39.2 | 41.2 |
| மேற்கு ஐரோப்பா | 26.9 | 36.0 | 33.9 | 32.9 | 31.8 |
| ஜப்பான் | 1.6 | 4.4 | 9.2 | 8.8 | 9.3 |
| **ஏற்றுமதிகள்** | | | | | |
| யு. எஸ். | 18.1 | 18.1 | 14.0 | 13.5 | 11.8 |
| மேற்கு ஐரோப்பா | 36.5 | 45.6 | 50.3 | 46.5 | 45.7 |
| ஜப்பான் | 1.4 | 3.6 | 7.7 | 7.2 | 7.9 |

திறமை பெற்றிருப்பதும் அதற்குச் சில தனி உரிமைகளை அளிக்கிறது. ஏகாதிபத்தியங்களுக்கிடையேயுள்ள முரண் பாடுகள். - பிற நாடுகளில் உள்ள அவைகளுடைய கிளைகளுக்கு இரண்டாம் நிலை முக்கியத்துவம் உள்ள பணிகளை மட்டுமே ஒப்படைத்துவிட்டு, தாய்க் கம்பெனிகளின் தொழில் தொகுதிகளில் மிகவும் முக்கியமான விஞ்ஞான-தொழில் நுட்ப ஆராய்ச்சி முறைகளை ஊக்குவிக்கிற யு. எஸ். பன்னாட்டு இணையங்களின் கொள்கையாலும் தோற்றுவிக்கப்படுகின்றன.

26. உலக முதலாளித்துவ மையங்களுடன் தொடர்புடைய விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சி, புதிதாக விடுதலையடைந்த நாடுகளில் மிகவும் பகட்டான புதிய காலனி முறைச் சுரண்டல் உருவங்கள் தோன்றுவதற்கு இடமளித்துள்ளது. இந்த நாடுகளின் பொருளாதாரத்தில் தொழில் மயமாக்கும் நிகழ்ச்சிப் போக்கை, சர்வதேச ஏகபோகங்கள் தங்களுடைய கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கவும், அதைத் தங்களுடைய நலன்களுக்குப் பயன் படுத்தவும் முயல்கின்றன. அதேவேளையில் அந்த நாடு களில் பொருளாதார விடுதலையை நோக்கிய ஓரியல்பும், ஒரு தேசிய அரசு அதன் பொருளாதாரத்தின் மீது கட்டுப் பாட்டை எவ்வளவு அளவு வலிமையடையச் செய்ய முடியுமோ அவ்வளவு அளவு வலிமையடையச் செய்ய வேண்டுமென்ற ஒருவிருப்பமும் உள்ளன. 1970-களில் வளரும் நாடுகளின் உலகில் சுரங்கத்தொழில் துறையில் இருந்த வெளிநாட்டு மூலதனத்தை தேசியமயமாக்குவது எனும் ஓர் பேரலையால் சிறப்புப் பெற்று விளங்கியது. வளரும் நாடு களின் இயற்கைச் செல்வங்களின் பெரும்பகுதி ஏற்கெனவே அவற்றின் கைகளுக்குச் சென்று விட்டது. ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்க நாடுகளில் ஏகாதிபத்தியம் மூலப்பொருட்கள் கிடைக்கும் பல இடங்கள் மீது கொண்டிருந்த பிடிப்பை இழந்து விட்டது. இது இனி மாற்ற முடியாத ஒரு நிலையாகும்; வரலாற்று

முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும். இது உலகப் பொருளாதாரத்தில் வளரும் நாடுகளின் மாறியுள்ள, முக்கியமான பங்கைத் தெளிவாக விளக்கும் சான்றாகத் திகழ்கிறது. இந்த நாடுகள் தொழில் துறையில் வளர்ச்சியுற்ற நாடுகளின் மீது சார்ந்து நிற்கின்றன என்பது நிரூபிக்கப் பட்ட உண்மையேதான். ஆனாலும் கூட, தொழில்துறையில் வளர்ச்சியுற்ற நாடுகள் பெருமளவு வளரும் நாடுகள் மீது சார்ந்துள்ளன என்பதும் நிரூபிக்கப்பட்ட உண்மையாக விளங்குகிறது.

இவைகளுக்கேற்ப, சர்வதேசக் கொள்கைகளிலும் கூட வளரும் நாடுகளின் கொள்கை நிலை மாறி வருகிறது. முன்னெப்போதிருந்ததைக் காட்டிலும் அவைகள் தங்கள் கோரிக்கைகளை, மிகவும் அதிகமாக ஒன்று சேர்ந்து முதலாளித்துவ நாடுகளுக்கு, வற்புறுத்தும் வகையில் சமர்ப்பிக்கின்றன. முதலில் இது ஒரு புதிய சர்வதேசப் பொருளாதார முறையைத் தோற்றுவிப்பதற்கான கோரிக்கை பற்றிய பிரச்சினையாகும். அதாவது சர்வதேசப் பொருளாதார உறவுகளை நியாயமான, ஜனநாயக முறையில் மறுசீரமைப்பது ஆகும் புறவயமாக ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மை கொண்டதாக உள்ள இந்தத் திட்டம் சோவியத் ரஷ்யாவினாலும், சோஷலிஸ்ட் சமூகத்தாலும், உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தாலும் ஆதரிக்கப்படுகிறது. சுரண்டலிலிருந்து விடுதலை பெறுவதற்காகவும், பொருளாதார சமத்துவத்திற்காகவும், முந்திய காலனிகள் மேற்கொண்டிருந்த போராட்டங்களின் தொடர்ச்சியே என்று அதை அவைகள் கருதுகின்றன.

27. ஏகபோக மூலதனம், உலக முதலாளித்துவ பொருளாதாரத்தின் வளர்ந்துவரும் முரண்பாடுகளைச் சமாளிக்க முடியாமல் இருந்த் நிலை 1960-களின் இறுதியிலும், 1970-களின் ஆரம்பத்திலும் சர்வதேச முதலாளித்துவப் பொருளாதார உறவுகளின் அமைப்பு முற்ற முழுமையையும் ஒரு பெரும் குழப்பத்தில் ஆழ்த்தியது:

வலிமை வாய்ந்த பணவியல் நெருக்கடி; வியாபாரத்திற்கும், செலுத்தல் நிலைக்குமிடையே நிலவிய ஒரு சீரற்ற தன்மை; பணவீக்கம் எங்கும் பரவி மேலோங்கி நிற்றல்; உலக விலைகளில் பெரும் உயர்வு ஆகியவை.

விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் செல்வாக்கினால் பெருமளவு மிகைப்படுத்தப்பட்ட பொருளாதார உறவுகளின் வட்டத்தில் உலக வளர்ச்சியின் புதிய சூழ்நிலைகளுக்குத் தன்னைத் தகவமைத்துக் கொள்ளும் பிரச்சினை 1970-களில் அதன் அத்தனை சிக்கல்களுடனும் ஏகாதிபத்தியத்தின் முன் தோன்றியது : அந்தப் பிரச்சினைகளில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

—உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தின் முரண்பாடுகள் மேலும் தீவிரம் அடைவதைத்தடுப்பதற்கு முதலாளித்துவப் பொருளாதார இயந்திரத்தை நவீனப் படுத்துவதற்கான வாய்ப்புகளை வெளிப்படுத்துவது.

—ஏகாதிபத்தியங்களிடையே நடக்கும் பயங்கரப் போட்டியைத் தளர்த்துவதும், செல்வாக்கு நிறைந்த முதலாளித்துவ சக்திகளின் இராணுவங்களை ஒன்றிணைப்பதும்.

—வளரும் நாடுகளுடன் புதிய காலனி ஆட்சிமுறைத் தொடர்புகளைப் பாதுகாப்பதற்குரிய முயற்சிகளை ஒன்றிணைப்பது.

—உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தின் கட்டமைப்பு நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு வழிகாண்பது.

—ஒரு சர்வதேசமட்டத்தில் அரசு ஏகபோகங்களின் முறைகளான பணவீக்க எதிர்ப்பு, சுழல் எதிர்ப்புக்கொள்கை ஆகியவற்றை வளர்த்தல்.

—இன்றைய முதலாளித்துவத்தின் பணவியல் முறையையும், நிதிமுறையையும், மறுசீரமைப்புச் செய்வது.

பெரும் முதலாளித்துவ நாடுகளின் ஆதிக்கக் குழுவின் சபைகளிலும், அரசுகளுக்கிடையிலும் ஒரே சமயத்தில் முதலாளித்துவத்தை புதிய சூழ்நிலைகளுக்கு ஒத்திசைவாக ஆக்குவதற்கான தீவிர முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. குறிப்பாக 1975-லிருந்து முறையானதாக ஆக்கப்பட்டுள்ள, ஆண்டுதோறும் நடைபெறும், பெரும் ஏழு நாடுகளின் (யு. எஸ். ஸையும் உள்ளிட்ட, ஜப்பான், மேற்குஜெர்மனி, பிரான்ஸ், பிரிட்டன், இத்தாலி, கனடா ஆகிய நாடுகள்) தலைவர்களின் கூட்டம், இந்தத் துறைகளில் கொள்கைகளை இணைப்பதற்குரிய இயல்பைக் காட்டுகிறது.

எனினும் இந்த முயற்சியின் விளைவாகத் தோன்றிய பலன் மிகக் குறைவேயாகும்.

உலக முதலாளித்துவத்தின் பணவியல் முறையில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தம், இந்தத் துறையில் காணப்படும் முரண்பாடுகளை நீக்குவதற்குப் பயன்படுவதாக இல்லை. ஐரோப்பியப் பொருளாதார சமுதாயத்திற்குள் ''ஒரு உறுதியான நாணய மண்டலம்'' ஒன்றை நிறுவுவது மேற்கத்திய ஐரோப்பாவிற்கும், யு. எஸ்.சுக்குமிடையே பணவியல் போரில் புதிய ஒரு படிநிலையைத் தொடங்கியுள்ளது. முதலாளித்துவ நாடுகளின் பன்னாட்டு வாணிபமும், பொருளாதார உறவுகளும், மேலும் நிலையற்றதாகி வருகிறது. வளர்ந்த முதலாளித்துவ நாடுகளில் பொருளாதாரக் காப்புகளை நோக்கிய இயல்புகள் மிக வலிமையுடன் வளர்ந்து வருகின்றன. புதிய சுங்க வரிகள் அல்லாத வேறுவகைத் தடைச் சுவர்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தில் நெருக்கடி நிலையை ஒரு குறிப்பிட்ட அளவு தளர்த்துவதை, ஏகாதிபத்தியத்தின் சக்திகளை ஒன்றிணைப்பதில் நிகழும் முன்னேற்றம் உறுதிப்படுத்த முடியும். சந்தேகமின்றி சர்வதேசப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசு ஏகபோகங்கள் மேற்கொள்ளும், தீர்வின் எந்த

உருவமும் ஒரு தற்காலிகமான ஏற்பாடாகவேயிருக்கும். ஏனெனில் இன்றைய உற்பத்தி சக்திகளின் தேவைகளுக்குத் தன்னைத் தகவமைத்துக் கொள்ள முதலாளித்துவம் மேற்கொள்ளும் எந்த முயற்சியும், விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் சூழ்நிலைகளுக்குத் தன்னைத் தகவமைத்துக் கொள்ள அது செய்யும் எந்த முயற்சியும், இந்த உற்பத்தி முறையில் உள்ள முக்கியமான முரண்பாடுகளை நீக்குவதற்குப் பயன்படாது.

### விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியும், இன்றைய உலகப் பிரச்சினைகளும்; புதிய உலகப் போர் ஒன்றைத் தடுப்பதே முக்கியமான கடமை

28. விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி இயற்கையை வெல்வதற்கான மனிதனுடைய திறமையைப் பெருக்குவதற்கு எல்லையில்லாத வாய்ப்புகளைத் தோற்றுவித்துள்ளது. எனினும் முதலாளித்துவம் ஒரு உலக சமூக அமைப்பு முறையாகத் தொடர்ந்து நிலவும் போதும், அதனுடைய மேலடுக்கு மிகவும் வளர்ச்சியுற்றுள்ள ஒருசில ஏகாதிபத்திய அரசுகளால் ஆக்கப்பட்டிருக்கும் போதும், இது பெரும் இயக்கவிசை மிகுந்ததாகவுள்ளது. இது சமுதாயத்தின் இன்றியமையா நலன்களுக்கு எதிராகத் தோன்றுகின்ற வாய்ப்புகளைப் பயன்படுத்தக் கூடிய ஆபத்தைத் தவிர்க்க முடியாதவாறு, உள்ளடக்கியதாக இருக்கிறது.

நம் நிலவுலகில் உள்ள மக்கள் தொகைக்குப் பெரும் அபாயம் இன்றையதொழில் நுட்ப வளர்ச்சியினால் தோற்றுவிக்கப்பட்டுள்ள புதிய சக்திகளின் வளர்ச்சியை, சமுதாயத்தின் நலன்களுக்காக இல்லாமல், பொது மக்களையும், இந்தப் பூமியில் வாழும் அனைத்து உயிரினங்களையும், கொள்ளை கொள்ளையாக, கூண்டோடு அழிக்கும் ஆயுதங்களை உற்பத்தி செய்யும் இராணுவ நோக்கங்களுக்காக, ஏகபோக மூலதனம் பயன்படுத்துவதனால் தோற்றுவிக்கப்படுகிறது. மிகச் சிறந்த விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளையும், புதிய தொழில் நுட்பத்தின் மாபெரும்

சக்தியையும், மக்களின் நலன்களுக்கெதிராகப் பயன்படுத்துவதன் மூலம், விஞ்ஞான - தொழில் நுட்ப முன்னேற்றத்தின் உண்மையான கருத்தையும், சாரத்தையும் சிதைக்கிறது: மனித இனத்தின் சாதனைகளை மனித இனத்திற்கெதிராகப் பயன்படுத்தத் தூண்டுகிறது. ஏகாதிபத்தியம் இந்த நிலவுலகில் நிலவுகிறவரை மனித இனம் அதன் வருங்காலம் பற்றி உறுதியாக எண்ணவே முடியாது—நிம்மதியாக வாழ முடியாது.

29. விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் சாதனைகள் இராணுவத்துறைக்குப் பரவியுள்ளதற்கும், இராணுவ தொழில் நுட்பப் புரட்சியின் பொருளாயதஅடிப்படையாக ஆகியிருப்பதற்கும் பொறுப்பை ஏகாதிபத்தியம் தான் ஏற்றுக் கொள்ள வேண்டும். அணு ஏவுகணைகள், அவைகளுடைய சக்திக்கு ஈடு இணையில்லாத வேறுபல அழிவு ஆயுதங்கள் ஆகியவற்றை மேம்பாடடையச் செய்வதும் அவற்றின் தொடர்ச்சியான வளர்ச்சியும் அவை குவித்து வைக்கப்படுவதும், போரின் பொருளாயத இயல்பையும், தொழில் நுட்ப இயல்பையும் முழுவதுமாக மாற்றியிருக்கிறது. மேலும் அது அதனுடைய பயங்கரமான விளைவுகளுடன் உலகம் முழுமையிலும் ஒரு கொடிய அணு வெப்பப் போரை மனித இனம் எதிர்கொண்டு நிற்கிறது.

கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளதோடு, ஆக்கிரமிப்பு ஏகாதிபத்திய வட்டாரங்கள் வளர்த்து விட்டுக் கொண்டிருக்கிற ஆயுதப் போட்டியும், மிக வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக அனைத்து வகையான ஆயுதங்களும் பண்பியல் அடிப்படையில் மிகவும் சிறப்பான மேம்பாடடைந்து வருகின்றன. நாள்தோறும் விரிவாகி வரும் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் சாதனைகளிலிருந்து அனுபவங்கள் பெற்று, ஆயுதப் போட்டி இப்போது, அழிவு ஆயுதங்களிலேயே மிகவும் அபாயகரமான அழிவை உண்டாக்கும் திறமை கொண்ட ஆயுதங்களின் பரம்பரையைத் தோற்றுவிக்கும் ஒருநிலையை

உண்டாக்கியுள்ளது. இன்றைய விஞ்ஞான தொழில் நுட்பம் அணு ஆயுதங்களைக் காட்டிலும் மிகக் கொடிய ஆயுதங்களை உற்பத்தி செய்யக் கூடிய உண்மையான பேரபாயம் நிலவுகிற மட்டத்தை அடைந்துள்ளது.

இராணுவ தொழில் நுட்பப் புரட்சி மேலும் அதிகமான வளத்துறைகளைப் பயன்படுத்தி வருகிறது. கடந்த 15 ஆண்டுகளில் நேடோ நாடுகளின் இராணுவச் செலவு ஏறத்தாழ மூன்று மடங்காகப் பெருகி,ஓராண்டிற்கு 200,000 மில்லியன் டாலராக உயர்ந்துள்ளது. 1978 மே திங்களில் வாஷிங்டனில் நடந்த நேடோ கவுன்சில் கூட்டத்தில், இந்த ஆக்கிரமிப்புக் குழுவின் உறுப்பினர் நாடுகளின் இராணுவச் செலவில் ஆண்டுதோறும் 3 சதவிகித உயர்வுக்கு (உண்மையான எண்களில்) வழி செய்து இராணுவ வலிமையைப் பெருக்குவதற்கான நீண்ட காலத் திட்டம் ஒன்று மேற் கொள்ளப்பட்டது.

இராணுவ தொழில் நுட்பப் புரட்சியின் தவிர்க்க முடியாத விளைவு, வழக்கமாகப் பயன்படுத்தும் ஆயுதங் களின் வளர்ச்சியும் (டாங்கிகள், விமானங்கள் முதலியன) புதிதாக மேம்பாடடையச் செய்யப்பட்டுள்ள ஆயுதங்களின் தொடர்ந்த விரைவான வளர்ச்சியும் தான் இவ்வாறாக எம். எக்ஸ். போர் முக்கியத்துவம் வாய்ந்த எல்லைகளைத் தாக்கும் ஏவுகணைகளின் அமைப்புக்கள் மைன்னியூட்மான் 3 என்ற அமைப்பு முறைக்குப் பதிலாக அமைக்கப்படும் போது அது நான்கிலிருந்து, ஆறு மடங்கு அதிகமான செலவுடையதாக இருக்கும். ஏவுகணைகளைக் கையாள்வது, அதற்கு ஒத்ததான பாதுகாப்பு முறையைப் பயன்படுத்த வேண்டுமென்பதால், யு. எஸ். மதிப்பீட்டின் படி 30, 000 மில்லியன் டாலரிலிருந்து 50, 000 மில்லியன் டாலர் வரை ஆகும். சிக்கலான, விலையுயர்ந்த இயந்திரங் களை மேம்பாடடையச் செய்வதும், வாங்குவதும், அதற்கு இசைவாக இராணுவ வீரர்களுக்குப் பயிற்சியளிப்பதும், ஆயுதப் போட்டியின் பொருளாதார எதிர்மறை

விளைவுகளை அதிகரிக்கச் செய்யக்கூடிய இராணுவச் செலவை, மேற் கொண்டு பெருமளவு உயர்த்துகிறது. அது குறிப்பாக முதலாளித்துவ நாட்டு பணவீக்க எதிர்ப்புக் கொள்கைகளின் பயனை மிகவும் குறைக்கிறது. ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்காகச் செலவிடப்படும் மொத்தச் செலவில் 40 சதவிகிதத்தைப் பயன்படுத்தும் மொத்தத் தொழிலாளர் களில் 35 சதவிகிதத்தை இராணுவத்துறை வேலைக்கமர்த்திக் கொள்கிறது. இவையனைத்துமாகச் சேர்ந்து பிறதுறைகளில் விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றத்தைக் கட்டுப் படுத்துகிறது. இப்பொழுதுள்ள மனித இனத்தின் திறமைகள் அனைத்தும் வீணாக்கப்படுவதோடு மட்டுமல்லாமல், வருங்கால மனித இனத்தின் திறமைகளும் வீணடிக்கப் படுகின்றன. இந்த நஷ்டங்களை நாம் ஈடு செய்ய முடியவே முடியாது.

இராணுவ தொழில் நுட்பப் புரட்சி வளரும் நாடுகளின் பொருளாதாரத்திலும் தீய விளைவுகளை உண்டாக்குகிறது. ஏகாதிபத்தியத்தினால் ஆயுதப்போட்டிக்குள் இழுக்கப் பட்டிருக்கிற நாடுகள் மிகச்சிக்கலான விலையுயர்ந்த ஆயுதங் களை வாங்குவதற்காக மித மிஞ்சிய செலவு செய்கின்றன. 1970-களில் நேடோ உறுப்பினர்களிடமிருந்து அவைகள் வாங்கிய ஆயுதங்களின் அளவு பலமடங்கு அதிகரித்தது. இப்பொழுது அது ஆண்டுக்கு ஏறத்தாழ 18,000 மில்லியன் டாலர் முதல் 20,000 மில்லியன் டாலர் என்ற எல்லையை அடைந்துள்ளது. இந்த நிதி, வளரும் நாடுகளின் சமூக — பொருளாதார முன்னேற்றங்களுக்கு முட்டுக்கட்டையாக விளங்கும், கூர்மையான, அவசரமான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தப்பட முடியும். அதே நேரத்தில் இந்த அரசுகள் அவைகளின் இராணுவச் செலவைக் குறைத்துக் கொண்டால், தொழில் வளமிக்க நாடுகள் இந்த நாடுகளுக்கு அளிக்கும் உதவிகளின் அளவை அதிகப்படுத்த முடியும்.

30. சோஷலிசத்தைக் காட்டிலும், இராணுவத் துறையிலும், தொழில் நுட்பத் துறையிலும் சிறப்படை

வதற்கான முயற்சியில் "சோவியத் இராணுவ அச்சுறுத்தல்" என்ற பொய்யான குற்றச்சாட்டுகள் நிறைந்த ஒப்பாரி ஒன்றை ஏகாதிபத்தியம் எழுப்புகிறது. ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு வட்டாரங்களில் உலகம் முழுமையிலும் பின் பற்றப்படுகிற அரசியல் தந்திரத்தின் ஒரு பிரிக்க முடியாத பகுதியாகவேதான் இந்த ஆயுதப் போட்டியை வளர்க்கும் கொள்கை விளங்குகிறது.

சர்வதேச நெருக்கடி அதிகரிப்பதற்கும் ஆயுதப் போட்டியின் விகிதம் மேலும் வேகமாக உயர்வதற்கும், அதன் மட்டம் மிகுதியாக உயர்வதற்கும், சீனாவின் இராணுவ ஆற்றல் வளத்தை வேகமாக வெறியுடன் பெருக்கி வருவதும், சட்டாம் பிள்ளைத்தனமான அதன் பேரரசுவாத வெளிநாட்டுக் கொள்கையும் உதவுகின்றன. உலக சமாதானத்திற்கு இந்தக் கொள்கையினால் அபாயம் தோன்றுகிறது. ஏனெனில், ஏகாதிபத்திய நாடுகளின் சில வட்டாரங்கள் "சீனத்துருப்புச்சீட்டை"ப் பயன்படுத்தலாம், என்று எண்ணி, பீகிங்கிற்கு ஆயுதங்களைக் கொடுத்துதவவும், சீனாவின் இராணுவ வளத்தைக் கட்டி, அதைப் பெருக்குவதற்குத் தேவையான விஞ்ஞான-தொழில் நுட்ப உதவிகள் செய்யவும் தயாராயிருப்பதை வெளியிட்டு வருகிறார்கள்.

ஒப்பீட்டில் மிகவும் குறுகிய காலத்தில் அணு ஆயுதங் களைத் தயாரிப்பதற்குப் போதுமான விஞ்ஞான தொழில் நுட்ப வளத்தைப் பெற்றுள்ள "அணு ஆயுத வலிமை கொண்டுள்ள நாடுகளின்" எண்ணிக்கை தொடர்ந்து பெருகி வருவது பதற்றத் தணிவிற்கும், ஆயுதக் குறைப்பிற்கும் பெரும் அபாயத்தை உண்டுபண்ணும்.

சோவியத் ஒன்றியம், இதர சோஷலிச நாடுகள், சமாதான சக்திகள் ஆகியவற்றின் முயற்சியால் ஒரு சில திசைகளில் ஆயுதப் போட்டியைக் குறைப்பதற்கான சர்வதேச ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன. எனினும் ஆயுதப் போட்டியைத் தடுத்து நிறுத்துவது, இன்னும்

முடியாததாகவே உள்ளது. மனித குலத்தின் நலன்கள், எவ்வளவு விரைவாக ஆயுதப் போட்டி நிறுத்தப்பட முடியுமோ, அவ்வளவு விரைவாக ஆயுதப் போட்டி நிறுத்தப் பட வேண்டுமெனக் கோருகிறது. உண்மையில் இது மிகவும் அவசரமான உலகப் பிரச்சினையாகும். உண்மையான ஆயுதக் குறைப்பை அடைவதைக் காட்டிலும் இந்த நிலவுலகில் வாழும் மனிதர் ஒவ்வொருவரையும் பொருத்த பணி வேறொன்றுமில்லை.

**31.** இன்றைய இராணுவ-தொழில் நுட்பப் புரட்சியின் பொருள் இரும்புச் சரக்குத் துறையில் பண்பியலாக ஒரு தூண்டுதல் ஏற்பட்டது என்பது மட்டுமல்ல. ஆனால் அதைப் பயன்படுத்துவதனால் ஏற்படும் சமூக விளைவுகளின் இயல்பிலும் கூட ஒரு தாண்டுதல் நிகழ்ந்துள்ளது என்பதும் தான். ஓர் உலக அணு ஆயுதப் போர் உலக முழுவதிலும் நாடுகள், நாட்டினங்கள் ஆகியவை தொடர்ந்து வாழ்வதைப் பெரும் ஆபத்திற்குள்ளாக்கும். உற்பத்தி சக்திகளின் பேரழிவைத் தோற்றுவிக்கும்; மனித இனம் முழுமைக்கும் சொல்லொணாத் துயரைத் தரும். சோஷலிச அரசுகளும், அனைத்து நாடுகளிலும் உள்ள தொழிலாளி வர்க்கமும், உலகெங்கணும் உள்ள மக்களிற் பெரும்பான்மையினரும், ஒரு பெரும் போர் வராமல் தடுப்பதில் பேரார்வம் உள்ளவர் களாக இருக்கிறார்கள். பூர்ஷ்வாக்களும் இதில் ஒரு குறிப்பிட்ட அளவு ஆர்வம் உடையவர்களாகத் தானிருக் கிறார்கள். ஏனெனில் இது அவர்கள் இந்தப் பூவுலகில் வாழ்வதையே இடருக்குள்ளாக்குகிறது.

உலக அரங்கில் வர்க்க சக்திகளின் அணிகளில் ஏற்பட்டுள்ள முக்கியமான மாற்றங்களும், பண்பியல் அடிப் படையிலான புதிய வகையான ஆயுதங்கள் தோற்றுவிக்கப் பட்டு மேம்பாடடையச் செய்யப்பட்டிருப்பதும், விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின், சூழ்நிலையில் பொருளாதார வளர்ச்சிக்கான தேவைகளும், இரண்டு சமூக அமைப்புகளின் அரசுகளுக்கிடையில் நிலவுகிற புறவய சூழ்நிலைகளில்

குறிப்பிடத்தக்க மாற்றங்களை இன்றியமையாததாக ஆக்கியுள்ளன. அந்த மாற்றங்களில், அவைகளின் இராணுவ மோதல்களைத் தடுப்பதற்கும் நிலையான சமாதானத்தை உறுதிப்படுத்துவதற்கும், முக்கியமான இடம் தரப்பட்டுள்ளது. முதலாளித்துவ அரசுகளும், சோஷலிஸ்ட் அரசுகளும் சமாதான சகவாழ்வு வாழ்வதற்குத் தேவையான இன்றியமையாத முன் தேவைகள் தோன்றுவது மட்டுமே, அவைகளிடையே நிலவுகிற உறவு களை மாற்றியமைப்பதை உத்திரவாதம் செய்யவில்லை. இம்மாதிரியான முன் தேவைகளை நடைமுறையில் வெற்றி பெறச் செய்வதும் அதன் விளைவாக சர்வதேச உறவுகளின் வளர்ச்சியின் வழிகள் சிறப்பானவையாயிருப்பதும் பெரும் பாலும் அகவயக்காரணிகளைப் பொருத்ததாகவும், மாறிய சூழ்நிலையைப் புரிந்து கொள்வதையும், அதற்கேற்ப வர்க்கங் களின், அரசுகளின், கட்சிகளின், சிறந்த தனி மனிதர்களின் அரசியல் நடவடிக்கைகளையும் சார்ந்ததாகவும் உள்ளது.

நம் காலத்து சோஷலிச சக்திகளின் வெற்றிகளும், பிற புரட்சிகர சக்திகளின் வெற்றிகளும் ஆயுதப்போட்டிக்கு முற்றுப்புள்ளி வைக்கும் ஒரு வாய்ப்பையும், ஆயுதக் குறைப்புக்கு மாறிச்செல்லும் ஒரு வாய்ப்பையும் தோற்றுவித் துள்ளன. சோவியத் ஒன்றியமும், சோஷலிச சமூகத்தைச் சேர்ந்த பிறநாடுகளும், இரண்டு சமூக அமைப்புகளில் உள்ள அரசுகளிடையே நிலவும் உறவுகளைச் சீர்செய்து கொள்வதைத் தீவிரமாக ஆதரித்து வருகின்றன; 'மேலும் அவைகள் சர்வதேச நெருக்கடிகளைத் தளர்த்துவதைத் தொடர்ந்து ஆதரித்தும், பின்பற்றியும் வருகின்றன, அவை களுடைய முயற்சியாலும் அனைத்து சமாதான சக்திகளின் முயற்சியாலும், சில பூர்ஷ்வா இராஜதந்திரிகளாலும் உலகத்திற்கு இருந்த அணுவாயுத வெப்பப் போர் அபாயம் பின் தள்ளப்படுகிறது.

1970-களின் முதல் அரைப்பகுதியில் சர்வதேசப் பதற்றத்தணிவில் ஏற்பட்டுள்ள தெளிவான வெற்றிகளுக்குப் பின் இந்த நிகழ்ச்சிப் போக்கின் வளர்ச்சி பின்தள்ளப்

பட்டிருக்கிறது. அத்துடன் அது மேலும் சிக்கல் நிறைந்ததாக ஆகியுள்ளது. வலுக்கட்டாயமாக வன்முறை மூலம் புரட்சிகர இயக்கங்களையும், தேசிய விடுதலை இயக்கங்களையும் அடக்குவதற்கான முயற்சிகளைக் கைவிடுவதற்கு பிற்போக்கு ஏகாதிபத்திய வட்டாரங்கள் தயக்கம் காட்டுவதும், நிலவுகிற இராணுவ அபாயம் நிறைந்த இடங்களும், தொடர்ந்து வளர்ந்து வரும் ஆயுதப் போட்டியும், நேட்டோ கூட்டின் செயல்முறைகளும், சோஷலிச சமுதாயத்தை "அழிப்பதை" நோக்கமாகக் கொண்ட சதி வேலைகளும் முதலாளித்துவ அரசுகளின் கொள்கையின் மீதுள்ள பெரும் பாறையாக விளங்குகின்றன. இன்றைய சீனத் தலைவர்களின் கொள்கைகள் ஏகாதிபத்தியத்தின் படுமோசமான பிற்போக்காளர்களின் கொள்கைகளுக்கும் ஆக்கிரமிட்பு வட்டாரங்களின் கொள்கைகளுக்கும் மிக நெருக்கமானவையாகவுள்ளன.

பதற்றத்தணிவுக்கு எதிரான இயல்புகள் சர்வதேச உறவுகளை மறு சீரமைப்புச் செய்வதற்கான புறவயமான முன்தேவைகளை ஒழித்து விடவோ அல்லது தள்ளிவிடவோ முடியாது. எனினும் பதற்றத்தணிவு நடவடிக்கைகளில் ஏற்படும் தடைகளும், ராஜதந்திர பேரத்திற்கு அதை அடிப்படையாக்கும் முயற்சிகளும் — நேரடியாகப் பதற்றத் தணிவை எதிர்ப்பதைப் பற்றிக் கவலைப்படாமல் விட்டு விட்டாலும்கூட—கெடுபிடிப்போர் மீண்டும் தோன்றியிருப்பதும் தனித்தனி நாடுகளையும், மனித இனம் முழுமையையும், இன்று எதிர்நோக்கியுள்ள பொருளாதார, சமூக, மனித நேயம் தொடர்பான உலகில் நிலவுகிற பல அவசரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதை மிகவும் சிக்கலானதாக ஆக்கிவருகின்றன. இம்மாதிரியான நிலைகளில் பதற்றத்தணிவை எதிர்ப்பவர்களை முறியடிப்பது, முக்கியமான சர்வதேசப் பிரச்சினைகளுக்கான, அமைதியான தீர்வு காண்பது, அரசியல் பதற்றத்தணிவு நடவடிக்கைகளுடன், இராணுவத்துறையிலும், பதற்றத் தணிவு நடவடிக்கைகளை இணைப்பது, ஆயுதப்போட்டியைத் தடுத்து நிறுத்துவது

ஆகியவை மேலும் மேலும் இன்றியமையாத கடமைகளாகி வருகின்றன.

32. மனித இனம் முழுமையையும் எதிர்நோக்கி நிற்கும் பிரச்சினைகளில் ஒன்று, வளரும் நாடுகளுக்கும், தொழில் உற்பத்தியில் வளர்ச்சியடைந்த அரசுகளுக்குமிடையே வளர்ந்துவரும் பெரும் இடைவெளியாகும். இது நிச்சயமாக ஒரு உலகப் பிரச்சினைதான். இதன் தீர்வு தான் உலக வளர்ச்சியில் செல்வாக்கு செலுத்தும்.

ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகிய கண்டங்களில் உள்ள வளரும் நாடுகள் சுதந்திரமடைந்த காலத்திலிருந்து பெரும் சாதனைகளைச் செய்திருக்கின்றன. முதலாளித்துவப் பொருளாதாரத்தில் அவைகளின் பங்கு மிக அதிகமாயிற்று. (அட்டவணை 6 ஐ பார்க்கவும்)

சென்ற பத்தாண்டுகளில் தொழிற் பெருக்கம் மிகுந்த முதலாளித்துவ நாடுகளில் மொத்த உற்பத்தியின் வளர்ச்சியானது விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றத்தின் அடிப்படையில எழுந்த உழைப்பின் உற்பத்தித்திறன் வளர்ச்சியினால் ஏற்பட்டது. வளரும் நாடுகளில் ஏறத்தாழ மொத்த உற்பத்தி வளர்ச்சியில் பாதி, பரப்பை அடிப்படையாகக் கொண்டு பெறப்பட்டது ஆகும். அதன் விளைவாக அந்த இரண்டு குழு நாடுகளுக்குமிடையில் தொழிலாளர்களின் உற்பத்தி விகிதத்தில் நிலவுகிற இடைவெளி அதிகரித்தது. எனவே 1950-களில் வளரும் நாடுகளில், விவசாயத்தில் தொழிலாளியின் உற்பத்தி விகிதம், வளர்ச்சியடைந்த நாடுகளின் உற்பத்தியில் 18 சதவிகிதமாக இருந்ததென்றால், 20 ஆண்டுகளில் அது 9.5 சதவிகிதமாகவே இருந்தது.

1950-களில் வளரும் நாடுகள், வளர்ந்த முதலாளித்துவ நாடுகளைவிட மொத்த உள்நாட்டுப் பொருள் உற்பத்தியில் 11-12 மடங்குகள் குறைவாக இருந்தன. 1970-களில் அது 13-14 மடங்குகளாக இருந்தது. வளரும் நாடுகள் சோஷலிசம் அல்லாத நாடுகளின் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி 2 சதமும்,

**அட்டவணை-6**

**உலக முதலாளித்துவ அமைப்பில் வளரும் நாடுகள்**

| | 1950 | 1970 | 1977 |
|---|---|---|---|
| சுதந்திரமான வளரும் நாடுகளின் எண்ணிக்கை (ஆண்டின் முடிவில்) | 41 | 96 | 113 |
| சுதந்திரமான வளரும் நாடுகளின் மக்கள் தொகை (மில்லியனில்) | 815 | 1,095 | 2,036 |
| முதலாளித்துவ உலகில் வளரும் நாடுகளின் பங்கு (GDP) மொத்த உள்நாட்டு உற்பத்தி (சதவிகிதம்) | 14.4 | 15.3 | 17.7 |
| முதலாளித்துவ உலகின் தொழிற்பொருள் உற்பத்தியில் வளரும் நாடுகளின் பங்கு (சதவிகிதம்) | 10.1 | 12.6 | 14.7 |
| முதலாளித்துவ உலகின் எண்ணெய் உற்பத்தியில் வளரும் நாடுகளின் பங்கு (சதவிகிதம்) | 40.6 | 67.2 | 73.5 |

பதிவு செய்யப்பட்ட தனிச் சிறப்புரிமைகள் ஒரு சதமும் மட்டுமே பெற்றிருந்தன. விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியினால் வழங்கப்பட்டுள்ள வாய்ப்புகளைப் பயன் படுத்துவதில் வேறுபாடு, ஒப்பீட்டில் வளரும் நாடுகள் பின் தங்கியிருப்பதற்கு முக்கியமான காரணங்களில் ஒன்றாகும். வளரும் நாடுகளின் வளர்ச்சி மட்டத்திற்கும், தொழில் வளர்ச்சி மிகுந்த நாடுகளின் வளர்ச்சி மட்டத்திற்கும் இடையில் உள்ள இடைவெளி, வேகமாக வளர்ந்து வரும் பொழுது, ஏகாதிபத்தியம் உலகின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஆதிக்கம் செலுத்தி வருவதும், புதிய காலனி ஆட்சி முறைக் கொள்கையைப் பின்பற்றி வருவதும், சர்வதேச உறவு களுக்கும், உலகப் பொருளாதாரத்திற்கும் மோசமான எதிர்மறை விளைவுகளை உண்டாக்கும். அதே வேளையில் வளரும் நாடுகளிடையே வேறுபாடுகள் அதிகமாகிக் கொண்டு வருகின்றன. அவற்றுள் சில பல்வேறு குறியீடுகளில் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் சிலவற்றிற்கு நெருக்கமாகிக் கொண்டிருக்கின்றன. அந்த நாடுகளில் ''ஏகாதிபத்தியத்தின் துணை மையங்கள்'', தங்களின் வலிமை வாய்ந்த மையங் களை இங்கு நிறுவி வருகின்றன.

33. விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் சூழ்நிலையில், மனித இனத்தின் இயற்கைச் செல்வங் களுக்கான தேவையைப் பூர்த்தி செய்யும் சிக்கலான உலகப் பிரச்சினை — அதாவது மூலப்பொருட்களுக்குரியதேவை, உணவு, உலகின் பெருங்கடல்கள், உயிர்வாழ் சூழ்நிலைகள் ஆகியவை மிகவும் முக்கியமானவையாய் விளங்குகின்றன. ஆற்றல் மற்றும் வேறு பல மூலப்பொருட்களை மிக அதிகமான அளவில் தொழிற்சாலைகள் நுகர்வதற்கும், இந்த நிலஉலகில் உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருட் களுக்கும், பெருகி வரும் மக்கள் தொகைக்கும் இடையே வளர்ந்து வரும் பெரும் இடைவெளி, உயிர்வாழ் சூழ்நிலை கேடுறுதல் ஆகியவையனைத்தும், மனித இனம் முழுமைக்குப், வருங்காலத்தில் மோசமான கேடுகளை

உண்டாக்கலாம். இப்பொழுதே கூட மிகவும் அவசரமான பணிகள் அதை எதிர்நோக்குகின்றன.

1950-1978இல் முதலாளித்துவ நாடுகளில் ஆற்றலின் அடிப்படைத் தோற்றுவாய்களின் (எண்ணெய், வாயு, நிலக்கரி, யுரேனியம்) சராசரி ஆண்டு நுகர்வு, 2.7 மடங்காகவும், உணவுப்பொருட்கள் இரண்டு மடங்காகவும், உலோகங்கள் 3 மடங்காகவும், இரசாயன மூலப்பொருட்கள் 3.6 மடங்காகவும் பெருகியது. போருக்குப் பிந்திய காலத்தில் மனித இன வரலாற்றில் அதற்கு முந்தியகாலம் முழுவதிலும், எவ்வளவு மூலப்பொருட்கள் நுகரப்பட்டனவோ அவ்வளவு பொருட்கள் நுகரப்பட்டன. 2000-க்குப் பிந்திய ஆண்டுகளில் மனிதஇனத்திற்கு, அது இதுவரை நுகர்ந்த இயற்கைச் செல்வங்களைக் காட்டிலும், அதிகமான அளவு பொருட்கள் தேவைப்படும். இம்மாதிரியான தேவைகளின் அதிகரிப்பு, நிலத்திலும், உலகப் பெருங்கடல்களிலுமுள்ள கனிப் பொருட்கள், மண், நீர் மற்றும் உயிரினவகை மூலப்பொருட்களுக்கு மிகுந்த கிராக்கியை ஏற்படுத்தியிருக்கிறது.

அதேவேளையில், நாம் காணக்கூடிய எதிர்காலத்தில் இயற்கைச் செல்வங்கள் முழுதும் தீர்ந்துவிடும் என்று கூறுவதற்கு ஆதாரம் ஏதும் இல்லை. இயற்கைச் செல்வங்களை மரபு வழியாகப் பயன்படுத்தும் முறைகள்கூட இன்னும் முழுவதுமாகப் பயன்படுத்தப்படவில்லை. இன்று கூட நிலத்தின் ஒரு பெரும் பகுதி மண்ணூலின் கண்ணோட்டத்திலிருந்து போதுமான அளவு ஆராயப்படவில்லை. இன்றைய உலகின் மூலப்பொருள் கையிருப்பைப் பற்றி நாம் கொண்டிருக்கும் கருத்தை விஞ்ஞான தொழில் நுட்பக் கருத்துக்கள் முழுதும் மாற்றிவிடக் கூடும். கிடைக்கும் புள்ளிவிவரங்களின் அடிப்படையில் வளரும் நாடுகளில் உள்ள விவசாய நிலத்தை இன்னும் 30 சதவிகிதத்திற்கு விரிவடையச் செய்ய முடியும். இன்றைய தொழில் நுட்பமட்டம் உலகப் பெருங்கடல்களில் உள்ள மூலப் பொருட்களைப் பயன்படுத்துவதற்குரிய பெரும் அளவு

முயற்சிகளை மேற்கொள்வதற்குச் சிறந்த வாய்ப்புகளை அளிக்கிறது. புதிய ஆற்றல், பொருட்கள், உணவு ஆகியவற்றின் தோற்றுவாய்களைக் காண்பதற்கு அடிப்படைத் தோற்றுவாய்கள் உள்ளன. நாம் முன்னரே அறிந்திருக்கும் இயற்கை வளங்களைப் பகுத்தறிவுக்குகந்த முறையில் பயன் படுத்த ஏராளமான வாய்ப்புகள் உள்ளன.

சமூக உற்பத்தி மட்டத்தின் விரிவாக்கமும், இயற்கை வளங்களைப் பயன்படுத்துவதன் விரிவாக்சமும், கழிவுப் பொருட்கள் மிகுதியாக வெளியேற்றப்படுவதிலும், பொருளாதாரச் செயல்களின் விளைவாகத் தோற்றுவிக்கப் பட்ட துணைப் பொருட்கள் உயிர் வாழ் சூழ்நிலைக்குப் பெருங்கேடு ஏற்படுத்துவதிலும் முடிந்திருக்கிறது பூமியின் உட்பகுதியிலிருந்து ஆண்டுதோறும் சுமார் 100,000 மில்லியன் மெட்ரிக் டன்கள் வேறுவேறான இயற்கை வளங்களை மக்கள் வெட்டியெடுக்கிறார்கள். இந்தப் பொருட்களில் ஒரு பகுதி, அதாவது 70 சதவிகிதத்திலிருந்து 90 சதவிகிதம் வரை பல்வேறு வகையான உற்பத்தி தொடர்பான கழிவுப் பொருட்களாகவும், நுகர்வு தொடர் பான கழிவுப் பொருட்களாகவும் மாறி உயிர்வாழ் சூழ்நிலைக் கேட்டை உண்டாக்குகின்றன.

34. தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப் பொருட்கள் பற்றிய பிரச்சினை இந்த நிலவுலகின் புறவய இயல்பின் தனித்தன்மைகளால் பெரும்பாலும் தீவிர மடைகிறது. முன்னரே கூறியதைப் போல, சமூக உற்பத்தித் தேவைகளின் வளர்ச்சியும் அதனுடன் இணைந்துள்ள பூமியின் இயற்கை வளங்களின் மொத்த அளவின் மீதுள்ள தேவை தொடர்பான நெருக்கடிகளும் இதனுள் அடங்கும்; சமூக உற்பத்தித் தேவைகள் பொருளாதார அடிப்படையில் மிகவும் சிறப்பாக நிறைவு பெறுவதற்கு ஏற்ற, ஒப்பீட்டில் வரம்பிற்குட்பட்ட இயற்கை வளங்களும் இயற்கை வளங்களின் பிரதேச அமைவிடங்கள், மக்கள்தொகை, தொழில் பெருக்கம் ஆகியவற்றில் உள்ள குறைபாடுகளும் இதனுள் அடங்கும்.

உலகில் உள்ள பல்வேறு நாடுகளிலும், பகுதிகளிலும் உள்ள இயற்கை வளங்கள் பற்றிய உலகப் பிரச்சினைகள் அவைகளுடைய சிறப்பான சமூக இயல்புகளை உடையதாக விளங்குகிறது. அவைகள் சமூக-பொருளாதார இயல்பு களாலேயே நிர்ணயிக்கப்படுகின்றன.

ஒரு திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு உற்பத்தியை ஒழுங்குபடுத்துவதிலும், வளர்ப்பதிலும், பெற்ற அனுபவங்களிலிருந்து சோஷலிச அரசுகள் சமூகத் திற்குக் குறைந்த செலவிலும், சமுதாய அடிப்படையில் நியாயமானதுமான முறையில் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முயல்கின்றன. ஒப்பீட்டில் குறைந்த அளவே யுள்ள மிகவும் அதிகமான இடர்ப் பாடுடனேயே வெட் டி யெடுக்கப்படக் கூடிய கனிப்பொருள் வளங்களை வெட்டி யெடுப்பதற்குச் செலவாகும் முதலீட்டை ஒரே சீராக அமைப்பதையும், ஆற்றல் பொருட்கள் ஆகியவற்றைச் சேமிப்பதற்காகத் தொழில் நுட்பத்தை ஊக்குவிப்பதையும், விவசாயத்தைத் தீவிரப்படுத்துவதையும், இயற்கையைப் பாதுகாக்கும் முயற்சிகளையும் மேற்கொள்ள விரும்புகின்றன. சோஷலிச நாடுகள், மனித இனம் முழுமைக்கும் மிகவும் இன்றியமையாத இந்தத் துறையில் சர்வதேசக் கூட்டுற விற்கும், பரஸ்பர நலன் தரும் கூட்டுறவுகளுக்கும், உதாரண மாக விளங்க வேண்டுமென்று விரும்புகின்றன. பரஸ்பரப் பொருளாதார உதவிக் குழுவின் கட்டுமானத்திற்குள் ஒத்துழைப்பின் மூலம் தொழில் நுட்பப்புரட்சியின் சாதனை களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமெனவும் விரும்பு கின்றன.

முதலாளித்துவ உற்பத்தி முறையும், முதலாளித்துவ உலகின் சர்வதேச உறவுகளும், உலகத்தின் இந்தப் பகுதியில் இயற்கை வளங்களின் உலகப் பிரச்சினைகளுடைய சிக்கலான இயல்புக்குக் காரணங்களாக விளங்குகின்றன. ஏகபோகங்களின் மேலாதிக்கமும், முதலாளித்துவ உற்பத்தியில் சுழல்கள் மீண்டும் மீண்டும் தோன்றுவதும்,

மூலதனத்தின் மிக வேகமான புழக்கத்திற்கும், எவ்வளவு முடியுமோ அவ்வளவு அதிகமான லாபத்திற்கும் வகை செய்கிற விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றத்தின் ஒரு பக்கம் மட்டுமே வளர்ச்சியடையும் இயல்பும், ஏகாதிபத்தியத்தின் வெளிநாட்டுக் கொள்கையின் அடிப் படைக்கோட்பாடுகள் இராணுவ ஆட்சிமுறை, ஆகியவை யனைத்தும் அவசரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பெரும் இடையூறுகளாகவுள்ளன.

இயற்கை வளங்களைப் பயன்படுத்துவது, ஏகாதிபத்தியத்திற்கும், வளரும் நாடுகளுக்கும் இடையிலான தீவிரமுரண்பாடுகள் நிலவுகிற முக்கியமான துறையாகும். முதலாளித்துவ உலகம் முழுமையும் போதுமான அளவு கனிப் பொருள் வளம் நிறைந்ததாக இருக்கிறது. எனினும் குறிப்பாக மூலப்பொருட்களுக்கும், எரிபொருட்களுக்கும் வெளியிடங்களையே நம்பி வாழும் ஒரு சில குறிப்பிட்ட பகுதிகளில், முக்கியமாக வளரும் நாடுகளை நம்பியிருக்கும் பகுதிகளில், அவற்றிற்கு மிகுந்த தேவைகள் உள்ளன. இந்த நாடுகளின் இயற்கைச் செல்வங்கள், புதிய காலனி ஆதிக்க முறையை எதிர்த்துப் போராடவும், சர்வதேசப் பொருளாதார உறவுகளை மறுசீரமைக்கவும், மேற்கொண்ட நிதி, இயற்கைவளங்கள், தொழில் நுட்ப அறிவு ஆகிய வற்றைப் பெறவும் உதவுகிற சாதனமாகவும் பயன்படும் மிக அதிகமான பயனுள்ள ஒரு கருவியாக விளங்குகிறது. ஏகாதிபத்தியம் அதன் முறையில் மிக அதிகமான நிதி, தொழில் நுட்ப வலிமை, விஞ்ஞானச் சிறப்பு, திறமைமிக்க மனித சக்தி, உற்பத்தித்திறன் மிக்க விவசாயம் ஆகிய நெருக்கடிகளை உண்டாக்கும் சில சாதனங்களைத் தன் கைவசம் கொண்டதாகவுள்ளது. முதலாளித்துவத்தின் இன்றைய சூழ்நிலையில் மேலே கூறிய இயற்கையான வேறுபாடுகளும், புவியியல் வேறுபாடுகளும்- தொழில் தொடர்பான, விஞ்ஞானத் திறமை, தொழில் நுட்பத் திறமை ஆகியவற்றின் வேறுபாடுகளும் அனைத்து அரசுகளின் நீதி, சமத்துவம் என்ற கொள்கைகளின் அடிப்

படையில் பரஸ்பரம் நலன்தரும் உறவுகளை அடிப்படை யாகக் கொண்ட முறையை நிறுவுவதைத்தடைசெய்கின்றன. மேலும் பலம் குறைந்த பங்காளிகள் மீது பொருளாதார, அரசியல் நெருக்கடிகளை உண்டாக்குவது போன்ற அநியாயமான பேரங்களுக்குக் கருவியாகவும் பயன்படுத்தப் படுகின்றன.

35. இயற்கை வளங்களைப் பயன்படுத்துவது தொடர்பான உலகப் பிரச்சினைகள் மீது விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் தாக்கம் இரண்டு இயல்பு களைக் கொண்டது. ஒருபுறம் விஞ்ஞானமும் - தொழில் நுட்பமும் முன்னேறுவதன் விளைவாக, குறைந்த அளிப்பே யுடைய இயற்கை வளங்களுடன் புதிய மூலப் பொருட் களையும் தன் பொருளாதாரத்திற்குள் இழுத்துக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறது. மறுபுறம் விஞ்ஞான- தொழில் நுட்பப் புரட்சி உற்பத்தித்திறனை வளர்க்கவும், எரிபொருள், மூலப்பொருட்கள் ஆகியவற்றின் நுகர்வின் திறனை உயர்த்துவதையும் கைகூடும் செயலாக ஆக்குகிறது. பொருளாயத உற்பத்திக்குரிய மூலப்பொருட்களின் அடித் தளத்தை விரிவாக்குவதையும, இந்த உலகின் மக்கள் தொகைக்குப் போதுமான உணவைக் கொடுத்துதவுவதையும் கைகூடும் செயலாக ஆக்குகிறது.

விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியை, கிடைக்கக் கூடிய இயற்கை வளங்களை மேற்கொண்ட திறமையுடன் பயன்படுத்துவதற்கான திசை வழியில் திருப்புவதற்கு ஏராளமான முதலீடு தேவைப்படும். எனவே சமுதாயச் செலவைப் பெருமளவு மறுபகிர்வு செய்ய வேண்டியதாகவும் இருக்கும். மிகக் குறைவான அளவு கனிப்பொருளேயுள்ள சுரங்கங்களிலிருந்து வெட்டியெடுக்கப்படும் மூலப் பொருட்களின் உற்பத்தியையும் உள்ளிட்ட, மூலக்கனிப் பொருளுற்பத்தியில் ஒரு பெருக்கம், உலகப் பெருங்கடல் களைப் பயன்படுத்தும் முயற்சி, இயற்கை வளங்களைச் சேமிக்கும் தொழில் நுட்ப வளர்ச்சி, ஆராய்ச்சி மற்றும்

வளர்ச்சியின் பெருக்கத்திற்கும் ஏராளமான முதலீடு தேவைப்படுகிறது. உணவு உற்பத்திப் பெருக்கமும்கூட, மூலதனமும், விஞ்ஞானமும் மிகுதியாகப் பயன்படுத்தப் படக்கூடிய ஒரு துறையாக ஆகிக் கொண்டிருக்கிறது.

உயிர் வாழ் சூழ்நிலையைப் பாதுகாப்பதற்காக ஒதுக்க வேண்டிய நிதியின் அளவு அதிகரித்துள்ளது. வளர்ந்த நாடு களில் இயற்கைப் பாதுகாப்பிற்காக, "உள்ளேயே அமைக்கப்பட்ட தொழில் நுட்பத்"துடனும், மூடிய சுழல் தொழில் நுட்பத்தையும், உற்பத்தி முறைகளையும் உள்ளிட்ட இயற்கைப் பாதுகாப்பிற்கான தேசிய மட்டத்தில் ஆகும் செலவு இப்போது தேசிய மொத்த உற்பத்தியில் சராசரி 0.5 லிருந்து 2.5 சதவிகிதமாக ஆகியுள்ளது. வளர்ந்துள்ள முதலாளித்துவ நாடுகளின் மனிதச் சூழ் நிலைப் பாதுகாப்புக் கொள்கையின் காரணமாக, சூழ் நிலைப் பாதுகாப்பிற்காக, மேற்கொண்டு நிதி ஒதுக்குவது அதிகரித்து, மொத்த தேசிய உற்பத்தியில் அவற்றின் பங்கு அதிகரிப்பதற்கு வழி செய்யும் என்று மதிப்பீடு செய்யப் பட்டுள்ளது.

இன்று மனித இனத்தை எதிர் நோக்கியுள்ள சிக்கலான உலகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முக்கியமான நிபந்தனை, சர்வதேசப் பதற்றத்தணிவை ஏற்படுத்துவதும், ஆயுதப் போட்டியை நிறுத்தவதும், விரைவுபடுத்துவதும், ஒன்றிணைப்பதும், பெருகி வரும் இராணுவச் செலவுகளை மனித இனத்திற்கு இன்றியமையாத தேவைப் பொருட்களை உற்பத்தி செய்வதற்குத் திருப்பி விடுவதும் ஆகும்.

உலகப் பிரச்சினைகளைத் தீர்ப்பது, அரசுகளுடைய சமூக - பொருளாதார முறை எதுவாயினும், அது பற்றிக் கவலைப்படாமல், அவற்றிடையே ஒரு பரந்த சர்வதேச வேலைப்பகுப்பு பொருளாதார, விஞ்ஞான, தொழில் நுட்பக் கூட்டுறவு ஆகியவை நிலவுவதை முன்கூட்டியே ஏற்றுக் கொள்கிறது. இது அதன் முறையில் உலகில் உள்ள அரசுகளின் அனைத்துக் குழுக்களின் நலன்களையும்

கருத்தில் கொண்டு இயற்கை வளங்களைப் பயன்படுத்துவதில் சர்வதேசக் கூட்டுறவை மேம்பாடடையச் செய்வது என்ற முக்கியமான பிரச்சினையைத் தோற்றுவிக்கிறது.

### விஞ்ஞான - தொழில் நுட்ப முன்னேற்றத்தின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்தின் திறமை இன்மை

36. பொருளாதார மறுஉற்பத்தியின் பிரச்சினைகளைப் பற்றி ஆராய்வதற்கு, பூர்ஷ்வா சிந்தனையாளர்களுக்கு அடிப்படையாக விளங்குகிற பொதுவான தத்துவ அடிப்படையிலான கண்ணோட்டங்களும், ஆய்வியல் ஒழுங்குமுறைக் கண்ணோட்டங்களும், தொடக்க நிலை முன்தேவைகளும், அதனுடைய வரம்பிற்குட்பட்ட தன்மையை முன்கூட்டியே நிர்ணயிக்கின்றன. ஆராய்ச்சியாளர்கள் குறுகியகால மற்றும் நடுத்தர காலச்சந்தை நிலுவை அம்சங்களைப் பேணிக்காப்பதற்கான செயல்முறை அடிப்படையிலான தொழில் நுட்ப, பொருளாதார, சார்பு நிலைகளையும், நிபந்தனைகளையும் வெளிப்படுத்துவதற்குத் தங்கள் கவனத்தைச் செலுத்துகிறார்கள். குவித்தல், பகிர்தல், பரிவர்த்தனை செய்தல், நுகர்தல் ஆகிய நிகழ்ச்சிப் போக்குகளின் சமுதாயப் புதுமைத் தன்மைகளைக் கருத்தில் கொள்ளாமல் விடுவது, மறுஉற்பத்தி நிகழ்ச்சிப் போக்கில் உள்ள முரண்பாடுகளை வெளிப்படுத்துவதில் உள்ள தடைகள், உருவங்கள் ஒருவிகிதமின்மை ஆகியவற்றைப் பற்றி ஒரு முழுமையான அரசியல் பொருளாதாரப் பகுப்பாய்வை முடியாததாக ஆக்குகிறது. இது விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் பிரச்சினைகளை ஆராய்வதற்கும் கூட ஒரு முக்கியமான விஷயமாகும்.

முதலில் பொருளாதாரச் செயல்முறைகள் மீது விஞ்ஞான, தொழில் நுட்ப சாதனைகள் எவ்வளவு செல்வாக்குடையதாகவுள்ளன என ஆராயுமாறு பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்களை நடைமுறை வாழ்க்கை

கட்டாயப்படுத்துகிறது. இரண்டாவதாக விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியினால் தோற்றுவிக்கப்பட்டுள்ள மேலான சமூக-பொருளாதார மாற்றங்களையும், முரண்பாடுகளையும் பற்றி புதுவகையான, சித்தாந்த அடிப் படையிலான விளக்கம் தருவதற்கும் அவர்களை நடை முறை வாழ்க்கை கட்டாயப்படுத்துகிறது. இந்த இரண்டு வகையான கடமைகளும், பூர்ஷ்வா, அரசியல்-பொருளாதார சிந்தனை முறைகள் ஒவ்வொன்றினாலும், அவைகளின் இயல்பான ஆய்வியல் நெறிமுறைகளை அடிப்படையாகக் கொண்டும், அவைகளின் ஏற்றுக் கொள்ளப்பட்ட பிரமாணங்களை அடிப்படையாகக் கொண்டும், ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆய்வியல் முறைகளை அடிப்படையாகக் கொண்டும் விளக்கப்படுகின்றன.

மரபு வழியான பொருளாதார ஆராய்ச்சி, தொழில் நுட்ப முன்னேற்றத்தையும் இணைத்துள்ள நிலையானது நுண்ணியல் மற்றும் பேரியல் மட்டங்களில் இன்றைய முதலாளித்துவ பொருளாதார மேலாண்மை முறையைப் போதுமான அளவு பிரதிபலிக்கும் நோக்கத்துடனும், அரசு ஏகபோக முறையின் விதிமுறைகளைக் காலத்திற்கேற்ப மாற்றியமைக்கும் நோக்கத்துடனும்தான் பின்பற்றி வருகிறது.

முக்கியமாகக் கீனஸ் வகை மாதிரிகளின் அடிப்படையில் தேவைகளின் இயல்புகளின் மீது தொழில் நுட்ப முன்னேற்றத்தின் செல்வாக்கு, முதலாளித்துவப் பொருளாதாரத்தின் சுழல் தன்மையை விளக்கப் பயன் படுத்தப்படுகிறது. அதே வேளையில் அதனுடைய உள் உறுதியற்ற தன்மையை அறிந்து, ஏற்றுக்கொண்டு இவ்வகையான மாதிரிகளின் ஆசிரியர்கள் சுழல் சூழ் நிலைகள், முழுதும் தொழில் நுட்பச் சூழ்நிலைகள் அல்லது தற்செயல் சூழ்நிலைகள் ஆகியவற்றில் நிகழும் சமநிலையி லிருந்து நீண்ட காலத்தில் விலகிச் செல்லும் காரணங் களையும், "நடுநிலை"யிலிருந்து "திரிந்து இறங்கி"ச்

செல்லும் மூலதன-சேமிப்பு வகை தொழில் நுட்ப முன்னேற்ற வகை காரணங்களுக்குக் குறைத்தனர்.

அளிப்புகளைப் பயன்படுத்துதல் மீதும், மூலப் பொருட்களைப் பயன்படுத்துதல் மீதும் அதிகமான கவனம் செலுத்திய புதிய, முன் மாதிரியான பிரமாணங்களை அடிப்படையாகக் கொண்ட, மாதிரிகளில் தொழில் நுட்ப முன்னேற்றம் இணைக்கப்பட்டுள்ள நிலையானது பொருளாதார வளர்ச்சியின் மீதும், அதன் திறமையின் மீதும் தொழில் நுட்ப முன்னேற்றத்தால் செலுத்தப்படுகிற தாக்கத்தினைப் பற்றி ஆராய்கிற, முறையான சாதனத்தின் வளர்ச்சிக்கு வகை செய்துள்ளது. இந்த மாதிரிகள் உற்பத்தியின் மிகவும் சிறந்த தொழில் யுக்திகளையும், தொழில் நுட்பத்தையும் நடைமுறையில் பயன்படுத்துவதனால், பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள பண்பியல் மாற்றங்களின் விளைவால், ஏற்பட்டுள்ள விஞ்ஞான முன்னேற்றத்தையும் தொழில் நுட்ப முன்னேற்றத்தையும் வரையறுக்க, அமைப்பு முறைகளைச் சீராக்க, மனித சக்தியின் பயிற்சியையும், கல்வியையும் மேம்பாடடையச் செய்ய, விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப முன்னேற்றத்தின் விளைவெனக் கூறப்படுகிற உற்பத்தி வளர்ச்சியின் அந்தப் பகுதியை அளப்பதற்கு முயற்சிகள் செய்வதற்கும் அடிப்படையாக விளங்குகின்றன. பொருளாதார வளர்ச்சிக்குத் தனிச்சிறப்பான காரணிகளின் பணியை விளக்கிக் கூறவும், இயற்கை வளங்களுக்குப் பதில் வேறு பொருட்களைப் பதிலமர்த்தும் மட்டத்தின் மீதும், அவைகளின் விலைகளைத் தொடர்புபடுத்துவதில் நிகழும் மாற்றங்களின் செல்வாக்கையும் விளக்க, வேறுபடுத்தப்பட்ட அளவுருக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

எனினும் மழுப்பல் போக்குள்ள "உச்சவரம்பு" உற்பத்தித் திறம் என்ற கொச்சையான கருத்துகளின் அடிப்படையில்தான் புதிய முன்மாதிரி தத்துவம் அமைந்திருக்கிறது என்ற உண்மையை இந்த அளவுகளின் நடைமுறை

முக்கியத்துவம் தள்ளிவிடவில்லை. தன் சிறப்பைத் தானே நீண்ட நாட்களுக்கு முன்னரே குறைத்துக் கொண்ட பகிர்வு பற்றிய முன்மாதிரியான கோட்பாடுகளை நவீனப்படுத்து வதற்குத் தொழில்நுட்ப முன்னேற்றம் என்ற கருத்து பயன் படுகிறது. அந்தப் பகிர்வு பற்றிய கோட்பாட்டின்படிப் பார்த்தோமானால் ஒவ்வொரு உற்பத்திக் காரணியும் (உழைப்பு, மூலதனம், நிலம்) அதனதன் ''ஊழியத்''திற் கேற்ப வருமானத்தைப் பெறுகிறது. அதே வேளையில் பகிர்வில் நிகழும்மாற்றங்கள், தொழில் நுட்ப மாற்றங்களின் பரப்பில் உள்ள சக்திகளைச் சார்ந்தது.

கீனஸ் ஆதரவாளர்களும், பூர்ஷ்வா அரசியப பொருளாதாரத்தின் புதிய, முன்மாதிரியான சிந்தனையாளர் களும் குறிப்பிட்ட விஞ்ஞான தொழில் நுட்ல் முன்னேற்றத்தின் சில விளைவுகளை சோதித்துப் பார்க்க விரும்பிய போதிலும், முதலாளித்துவ உற்பத்திமுறை முழுமையின் பரிணாம வளர்ச்சியில் அதன் செல்வாக்கைப் பிரதிபலிக்க இயலவில்லை என்பதை அவர்கள் நிரூபித்து விட்டனர். இந்தச் சூழ்நிலைகளில் விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் விளைவுகளை மிகவும் தெளிவாக விளக்கிய சமூக - நிறுவன சிந்தனை முறையென்று பொதுவாக அழைக்கப்படுகிற சிந்தனை முறையின் செல்வாக்கு பெரிதாயிற்று.

37. சமூக - நிறுவன சிந்தனை முறையைப் பின்பற்று பவர்கள் ஏற்றுக் கொள்கிற முக்கியமான கருத்து, சமூக முன்னேற்றம பற்றிய மார்க்சீய - லெனினிய சிந்தனை முறைக்கு எதிரான, பரிணாம வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட தொழில் அமைப்புகளைப் பற்றிய கருத்தாகும். ஒருபுறம் உற்பத்தியின் சமூக அமைப்பு முறையிலிருந்து பெரிதும் விலகிச் செல்கிற ஒரு அமைப்பு முறையாகும் என்றும் மறுபுறம், உற்பத்தி ''தொழில் அமைப்புகளுக்கான முக்கியமான தேவைகளுக்கு'' உட்பட்ட உற்பத்தி என்றும், ''நிறுவனங்கள்'' உற்பத்தியின் சமுதாய அமைப்பு

முறையின் எடுத்துக்காட்டாக விளங்குபவை என்றும் கூறுவதே இந்தத் தொழில் அமைப்புகள் பற்றிய கருத்தில் அடங்கிய கோட்பாடாகும். இந்தத் திட்டமுறை, விஞ்ஞானத்தையும், தொழில் நுட்பத்தையும், சமூக பொருளாதார பரிணாம வளர்ச்சியின் போக்கையும், திசையையும் நிர்ணயிக்கிற, தன்னிறைவுள்ள தானியக்க சக்திகளாகக் கருதுகிறது. இந்த நிறுவனத் திட்டமுறை, உற்பத்தியுடன் உள்ள ஏதோ ஒரு வகையான வெளிப்புற உறவாக ஆகிறது. மேலும் அது மாறுகிற உற்பத்திச் சூழ்நிலைக்கு ஏற்ப சரி செய்து கொள்ளப்படுகிறது.

பெருந்தொழில் சார்ந்த தன்மை பற்றிய கருத்துரு, "தொழிற் புரட்சி" கால சமுதாயத்தைப் பற்றிய கோட்பாடுகளையும், "தொழிற் புரட்சிக்குப் பிந்திய கால" சமுதாயத்தைப் பற்றிய கோட்பாடுகளையும் பற்றிய வேறுபட்ட வாசகங்களின் தெளிவான விளக்கங்களில் காணப்பட்டது. 1960-களில் அதனுடைய வளர்ச்சியின் உச்சியை அடைந்திருந்த "பெருந்தொழில் சார்ந்த சமுதாயம்" பற்றிய கோட்பாடுகளின் சிறப்பியல்புகள், பொருளாதார வளர்ச்சிக்கு வருந்தும் வாசகமாகத் திகழ்ந்தது. மேலும் அது முதலாளித்துவ முரண்பாடுகளைச் சமாளிப்பதற்கும், சமூகப் பிணக்குகளைத் தீர்ப்பதற்கும் பயன்படும் ஒரு கருவியாக விளங்கக்கூடிய ஒன்றின் மீது கொண்டிருக்கும் நம்பிக்கையுமாகத் திகழ்கிறது.

1970 களில் விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் அடிப்படையில், பொருளாதார வளர்ச்சி போற்றி வணங்கப்படுதல், விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் சமூக - பொருளாதார விளைவுகள் எழுப்பிய கேள்விகளுக்கு ஒரு விடைதேடிய "பெருந்தொழில் சார்ந்த நாகரிகம்" என்ற கருத்துக்களின் சிறப்புக்களைமறுமதிப்பீடு செய்வதனாலும், இரண்டு சமுதாய அமைப்பு முறைகளுச்கிடையேயான போட்டியும் போராட்டமும், தோன்றியுள்ள புதிய சூழ்நிலையாலும் பதிலமர்த்தப்பட்டது. இந்தக் கருத்

தோட்டங்கள் "பெருந்தொழில் முறைக்குப் பிந்திய சமுதாயம்" பற்றிய சமுதாயக்கோட்பாட்டின் வேறு வாசகங்களைப் பிரதிபலிக்கின்றன. மேலும் இன்றைய அரசு-ஏகபோக அமைப்பு முறையை சீர்த்திருத்துவதற்கான வழி காட்டும் முறைகளால் இணைக்கப்படுகின்றன.

"பெருந்தொழில் சார்ந்த சமுதாயத்திற்குப் பிந்திய" சமுதாயம் தொழில் நிபுணர்களுக்கும், வித்தகர்கட்கும் வழி காட்டும் பங்கு பெருகிவரும் சமுதாய வளர்ச்சியின் ஒருபடி நிலை என அதனைப் பின்பற்றுபவர்கள் விளக்கிக் கூறுகிறார்கள். விஞ்ஞானமும் "அறிவுத்திறன் நிறைந்த தொழில் நுட்பமும்" செயலாட்சியில் ஒரு பெரும் பங்கு வகிக்கிறது. "பெருந்தொழில் சார்ந்த சமுதாயத்திற்குப் பிந்திய" சமுதாயம் பற்றிய முக்கியமான கருத்து "பூர்ஷ்வா சமுதாயத்திற்குப் பிந்திய சமுதாய"மாக முதலாளித்துவ சமுதாயத்தைப் பண்பியல் அடிப்படையில் மாற்றுவதே யாகும். குறுகிய பகுத்தறிவுவாத பொருளாதார சிந்தனை படிப்படியாக மறைவதன் விளைவாகவும், உச்சநிலைலாபக் கோட்பாட்டின் விளைவாகவும், பொருளாதார நிகழ்ச்சிப் போக்குகள் தானே சந்தைகளை ஒழுங்குபடுத்தும் வட்டம் குறைவதன் விளைவாகவும், இந்த மாற்றம் தோன்றுவதாகக் கருதப்படுகிறது.

"பெருந்தொழில் சார்ந்த தன்மைக்குப் பிந்தியகால" கோட்பாட்டறிஞர்கள் பூர்ஷ்வாக்களின் அறநெறி முறை களின் வீழ்ச்சியையும், பொருளாதார நிர்வாகம் பற்றிய முதலாளித்துவக் கோட்பாடுகளையும் பொருளாதார (சேவைத்துறையின் வளர்ந்துவரும் பங்கு) மற்றும் சமூகத் துறைகளில் நிகழும் மாற்றங்களுடன் இணைக்கிறார்கள். "பெருந்தொழில் சார்ந்த சமுதாயத்திற்குப்" பிந்திய சமுதாய காலத்தை ஆதரிப்போர் முதலாளித்துவமானது "கலப்பு" உருவங்களையும், பொருளாதார செயலாட்சிக் கோட்பாடுகளின் கலப்பு உருவங்களையும் அடிப்படையாகக் கொண்ட உருவங்களையும், சமூக நிகழ்ச்சிப்

போக்கின் போக்கில் வளர்ந்துவரும் மையப்படுத்தப்பட்ட, அரசின் செல்வாக்குடன் கூடிய சந்தை சூட்சுமத்துடன் இணைந்து, சமூக அடிப்படையிலான, நிலையான ஒரு அமைப்பு முறையினால் ஈடுசெய்யப்பட முடியும், ஈடு செய்யப்படவேண்டும் என்று உறுதியாகக் கூறுகின்றனர். ஒருபுறம், ஒரு சில குறிப்பிட்ட நாடுகளில் தொடங்கி விட்ட தாகக் கூறப்படுகிற இந்தக் கருத்து இன்றைய நிலையின் சிறப்பு அம்சங்களைப் போதுமான அளவு வெளிப்படுத்து கிறது என்றும், மறுபுறம் வருங்காலத்தைப் பற்றிய விஞ்ஞானத்திற்கான திட்டமுறைகளை உண்டு பண்ணுகிறது எனவும் உரிமை கொண்டாடுகிறது. இந்தக் கோட்பாடு அதன் பல்வேறுபட்ட வாசகங்களிலும் இன்றைய முதலாளித்துவத்தின் உண்மையான முரண்பாடுகளின் உருவைத் திரித்துக் கூறவும், அவற்றை மறைக்கவும் செய்யப் படும் முயற்சிகளை அடிப்படையாகக் கொண்டது.

38. விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியினால் தோற்றுவிக்கப்பட்ட பொருளாதார சமூக முரண்பாடுகள் "மனித-இயற்கை" அமைப்பு முறையில் மிகவும் தீவிரமான முரண்பட்ட சூழ்நிலைகளைத் தோற்றுவிக்கின்றன. மேலும் 1970 களில் ஏகாதிபத்தியத்திற்கும், தேசிய விடுதலை இயக்கத்திற்கும் இடையேயிருந்த எதிர்ப்புகள் பொருளாதாரத்துறையில், புதிய பகுத்தாய்வுப் பகுதியைத் தோற்றுவித்துள்ளன-அதாவது உலகப் பொருளாதார நிகழ்ச்சிப் போக்குகளை முன்னறிவித்தலும், மாதிரி அமைத்தலும் போன்ற புதிய துறைகளைத் தோற்றுவித்துள்ளன. இந்தக் கருத்தில் மிகுந்த குறையிருந்த போதிலும், பல சமயங்களில் புள்ளி விவரங்கள் நம்ப முடியாதவையாயிருந்த போதிலும், இந்தத் துறையில் நிறைவேற்றப்பட்ட பணிகள், உலகப் பிரச்சினைகள் அனைத்தையும் சமாளிக்கக்கூடிய ஒன்றாக ஆக்குகிறது. மனிதன் எதிர்நோக்கி நிற்கும் பிரச்சினைகளை, மனித இனம் முழுமையும் எதிர்நோக்கி நிற்கும் பிரச்சினைகளை

புதிய, முழுமையான முறையில் அணுகுவதையும் கைகூடும் செயலாக ஆக்குகிறது.

இம்மாதிரிக் கருத்துக்களை வெளியிடுகிற நூல்களில் அடங்கிய பரிந்துரைகளின் ஒரு குறிப்பிட்ட பகுதி இரக்கமும், அன்பும், ஆதரவும் நிறைந்ததாகவுள்ளது — அது நாம வாழும் உலகின் தலைவிதி பற்றியும், சூழ்நிலை கேடுறுவதைப் பற்றியும் மிகுந்த கவலையைத் தெரிவிக்கிறது மேலும் அது மனித சூழ்நிலைக் கண்ணோட்டத்திலிருந்து, இன்றைய முதலாளித்துவ முறையைப் பற்றிய படுமோசமான முறை கூறத்தகுந்த இயல்புகளைக் கூறுவதில் அது சிறந்ததாக விளங்குகிறது. அவைகளிற் சிலவேறுபட்ட சமூக அமைப்புகளை உடைய அரசுகள் கூட்டாக முயற்சி செய்வதன் தேவையை ஏற்றுக் கொள்கின்றன. மனித இனம் முழுமையின் வளர்ச்சியின்போது தோன்றுகிற முரண்பாடுகளைத் தீர்ப்பதற்காக ஆயுதப்பெருக்கப் போட்டிகளை நிறுத்துவதன் அவசியத்தையும் ஏற்றுக்கொள்கின்றன. அதே வேளையில் இந்த நூல்கள் பலவற்றில், அவை ஏகபோக மூலதனத்தின் நலனைக் கருத்தில் கொண்டிருப்பதால், உலக சமூக முன்னேற்றம் பற்றி ஒரு சார்பான கண்ணோட்டமே உடையவையாயிருக்கின்றன. மேலும் அவை முதலாளித்துவத்தின் பொது நெருக்கடிகளில் உள்ள உண்மையான முரண்பாடுகளை அனைத்து வழிகளிலும் மறைக்க முயல்கின்றன.

வழக்கமாக உலகப் பொருளாதார பூர்ஷ்வா சீர்திருத்த மாதிரி வடிவங்கள் பற்றிக் கூறும் நூலாசிரியர்கள், முதலாளித்துவம் "சிறிது ஒப்பனை" செய்யப்பட்ட மற்றும் "மேம்பாடடையச் செய்யப்பட்ட"தாக இருப்பினும் நிலவுகிற நெருக்கடியை விட்டு மீளக் கூடிய வழியை முதலாளித்துவ முறையின் அடிப்படையில் காணமுடியவில்லை. கற்பனையான மாதிரிகளின் இயல்பும் அரசியல் சமூக வாத அடிப்படையில், போலித்தன்மையுடன், எல்லாவற்றிற்கும் மேலாக, நிதி ஆதிக்கக் கும்பலின் உயர்மட்டத்தில்

உள்ளோரின் நலன்களுக்கு ஏற்றவாறு உலகப் பிரச்சினை களுக்குத் தீர்வுகாண்பதற்கும், மனித இனம் அனைத்திற்கும், சமூக வர்க்கங்கள் அனைத்திற்கும், பொதுவான காரணி களின் இயக்கவியல் தொடர்புகளின் தன்மைகளைச் சிதைக்கவும், விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் முரண்பாடுகளைப் பற்றிய குறுகிய கண்ணோட்டத்தை இந்த சகாப்தத்தின் வர்க்க முரண்பாடுகளின் இடத்தில் வைக்கவும் அவர்கள் விரும்புகிறார்கள்.

உலகப் பொருளாதாரத்தின், வருங்கால விஞ்ஞானத் துறையின் ஆராய்ச்சியின் பெரும் பரப்பிலும், அதன் சோஷலிசம் அல்லாத மண்டலத்திலும், இரண்டு இயல்பு களை, மார்க்சீயவாதிகள் அல்லாதவர்கள் உருவாக்கி யுள்ளனர். அதில் முதல் இயல்பு-அதாவது "சமூக வாழ்க்கைச் சூழல் ஆய்வியலின் சோர்வு வாதம்" —சமுதாயம் தப்பிப் பிழைப்பதற்கு விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியினால் ஏற்படும் அபாயம் பற்றிய கோட்பாட்டை வெளியிடுகிறது. சமுதாயத்தின் "பெருந் தொழிற் சிறப்புக்குப் பிந்திய காலம்" பற்றிய கருத்துக்கள், உலகில் பட்டினித்துயர் ஏற்படுவதற்கான வாய்ப்புகளுக்கும் இயற்கையை மீட்க முடியாதவாறு அழித்தலுக்கும், நாம் அறிந்து கொள்ளக் கூடிய வருங்காலத்தில், பெரும்பாலான இயற்கை வளத்தைத் தீர்த்து அழித்துவிடுவதற்கும் எதிரானவையாக உள்ளன. இது 21வது நூற்றாண்டின் தொடக்கத்திலேயே இன்றியமையாததாகத் தோன்றுகிற, மனித இனம் முழுமைக்குமான பேரிடரைப்பற்றி முன்னறிந்து கூறுவதற்கு அடிப்படையாக உதவுகிறது. இந்தச் சோர்வு மனப்பான்மைக் கருத்துக்களிலிருந்து வெளிப்படும் ஆலோசனைகள் (1960-களின் பிற்பகுதியிலும், 1970-களின் தொடக்கத்திலும் ரோம் கிளப்பின் அறிக்கைகள்) பொருளாதாரம் விஞ்ஞானம், தொழில் நுட்பம், மக்கள் தொகை வளர்ச்சி ஆகியவற்றை மொத்தமாக உலகம் முழுவதிலும் அல்லது ஒரு குறிப்பிட்ட மண்டலத்தில் கட்டாயமாகக் கட்டுப்

படுத்துவது என்னும் கருத்தாகக் குறைந்து விடுகிறது. தாராளமான சீர்திருத்த சிந்தனையாளர்கள் "பூச்சிய" வளர்ச்சி அல்லது "ஒன்றிணைந்த" வளர்ச்சி என்ற கொள்கையைப் "பிழைத்து வாழ்வதற்குரிய தந்திரமாக"வும், உலகப் பொருளாதாரத்தில் வளர்ந்த நாடுகளுக்கும், வளரும் நாடுகளுக்கும் இடையில் உள்ள பொருளாதார வெளியைக் குறைப்பதற்கு வழியெனக் காண்கிறார்கள்.

மற்றொரு இயல்பு,—"தொழில் நுட்ப நன்னம்பிக்கைக் கோட்பாடு" (யு. எஸ்.சில் உள்ள ஹட்சன் நிறுவனம்) விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றத்தின் தன்னியக்கத் தன்மையையும், முதலிலும் முக்கியமாகவும் தன்னைத் தானே தகவமைத்துக் கொள்கிற சமுதாயசூட்சுமத்தையும்— முதலிலும், முக்கியமாகவும், அரசு ஏகபோக முதலாளித்துவத்தை—போலி வணக்கப் பொருளாக மாற்றுகிறது. இந்தத் துறையின் பொருளாதார சிந்தனையாளர்களால் வழங்கப்படுகிற மாற்று ஏற்பாடு, உண்மையில் உலகப் பிரச்சினைகளின் மிகுந்த வலிமையைக் கருத்தில் கொள்ளவில்லை. அதனைப் பின் பற்றுவோர் மக்களுடைய சமூக உறவுகளில் பண்பியல் அடிப்படையிலான புது அம்சங்களையும், இந்த சகாப்தத்தில் அவர்களுக்கும் இயற்கைக்கும் இடையே நிலவுகிற உட்தொடர்பையும் புறக் கணிக்கிறார்கள்.

மொத்தமாக, பூர்ஷ்வா பொருளாதார சிந்தனை விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் விளைவுகளை அதன் பகுப்பாய்வில் இணைத்துக் கொண்டு — வாழ்க்கைச் சூழல் ஆய்வியல் பிரச்சினைகளின் காரணங்களை வெளிப் படுத்திக் கொண்டு அதன் தீர்வுக்கான வாய்ப்புகளையும், உலக வளர்ச்சியின் முக்கியமான வழிகளையும் வரையறுத்துக் கூற முயற்சித்துக் கொண்டு, சமுதாய அமைப்பு முறையின், சமூக பொருளாதார இயல்பைக் கருத்தில் கொள்ளாமல், விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றத்தில் உள்ள உடன்

பாட்டு இயல்புகளையும், எதிர்மறை இயல்புகளையும், வழக்கமாக மாறாதவையாக ஆக்குகிறது. அதன் விளைவாக உலகப் பொருளாதாரத்தின் பூர்ஷ்வா திட்ட நிகழ்ச்சிகள் ஒருபுறம் வாழ்க்கைச் சூழல் ஆய்வியல், ஆற்றல் மூலப்பொருட்கள், உணவு, ஆகியவற்றில் நிகழும் நெருக்கடிகளுக்கும், பிற நெருக்கடிகளுக்கும் இடையேயுள்ள உட்தொடர்பை மறைக்கின்றன. மறுபுறம் ஏகபோக மூலதனத்தின் இயல்பு, முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி தீவிரமடைதல் ஆகிய நிகழ்ச்சிப் போக்குகளை மறைக்கின்றன. அதன்மூலம் அவைகளை வெல்வதற்குரிய உண்மையான வழிகளிலிருந்து விலகிச் செல்லுமாறு செய்கின்றன.

பூர்ஷ்வா அரசியல் - பொருளாதாரம் இன்றைய விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் உண்மையான விளக்கத்தைக் கொடுக்கவும், அரசு ஏகபோக முதலாளித்துவதின் வளர்ச்சியில் அதனுடைய தாக்கத்தை வெளியிடவும், சமூக—பொருளாதார முரண்பாடுகள் தீவிரமடைவதை வெளியிடவும் இயலாததாகவுள்ளது. இந்த முக்கியமான விஞ்ஞானத்துறையில் பூர்ஷ்வா அரசியல் பொருளாதார சிந்தனை முறைகள் அனைத்தும், கருத் தோட்டங்கள் அனைத்தும் தோல்வியடைந்து விட்டன.

### ஏகபோகங்களை எதிர்த்து நிற்கிற சக்திகளும் மனித இனத்தின் நலன்களுக்காக, விஞ்ஞான - தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தும் வாய்ப்புகளும்

39. விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் விளைவுகளும், முதலாளித்துவ நாடுகளின் சமுதாய வாழ்வின் முக்கியமான துறைகள் அனைத்திலும் அது கொண்டு வந்துள்ள மாற்றங்களும், அந்தப் புரட்சிபற்றி பூர்ஷ்வா அமைப்பு முறையை ஆதரிக்கும் அரசியல் மற்றும் கோட்பாடு அடிப்படையிலான சிந்தனையாளர்கள் வைத்திருந்த நம்பிக்கை சிதைந்து விட்டதற்கு அடையாளமாகத் திகழ்

கின்றன. விஞ்ஞான— தொழில் நுட்பப் புரட்சி முதலாளித்துவத்தின், தனித்து வாழக் கூடிய தன்மைக்கு வாய்ப்புகள் அளிக்கும் என்றும், சமூகப் பொருளாதார அடிப்படையை வழங்கும் என்றும், அது புரட்சிகரமாகத் தூக்கியெறியப்படுவதன் இன்றியமையாமையைத் தடுத்து நிறுத்திவிடும் என்றும் அவர்கள் நம்பினார்கள். உண்மையில் அது முதலாளித்துவத்திற்கே உரிய முரண்பாடுகள் தீவிரமடைந்ததையும், முதலாளித்துவத்தின் பொருளாதார சமூக — அரசியலின் நிலையற்ற தன்மையையும், அதன் பொது நெருக்கடிகளையும் ஆழப்படுத்தியிருக்கிறது. ஏகாதிபத்திய எதிர்ப்பு முன்னணி முழுமையையும் அதன் சமூக அடிப்படையையும் விரிவாக்கம் செய்திருக்கிறது.

விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் சாதனைகளையும், அதன் மீது சார்ந்துள்ள உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியையும், விஞ்ஞான-தொழில் நுட்பப்பொருளாதார, இராணுவ நிலைகளையும் சோஷலிசத்திற்கெதிராக வலுப்படுத்துவதற்காக ஏகாதிபத்தியம் முயல்கிறது. எனினும் இந்த இலட்சியம் நிறைவேறவில்லை. சோஷலிசத்தின் சார்பாக ஒரே சீராக உலக சக்திகள் அணிதிரண்டுள்ளன. அது சோவியத் ஒன்றியத்தின் விஞ்ஞானம் பொறியியலின் வெற்றிகரமான வளர்ச்சியாலும், சோஷலிச நாடுகளின் விஞ்ஞானம், பொறியியலின் வெற்றிகரமான வளர்ச்சியாலும், பொருளாதாரத்தின் வேகமான வளர்ச்சியாலும், அவைகள் பெரும் வலிமை பெற்றுள்ளதாலும், பாதுகாப்புப் படைகளின் சக்தியை மிகைப்படுத்தியிருப்பதாலுமே கைகூடியது.

ஏகாதிபத்தியம் குறிப்பாக "மனித உரிமைகளை"ப் பாதுகாப்பது என்ற முழக்கத்துடன், சோஷலிச நாடுகளுக்கெதிராக ஒரு கோட்பாட்டடிப்படையிலான தாக்குதலை மேற்கொள்ள முயன்று வருகிறார்கள். ஆனால் இங்கேயும் கூட அவர்கள் தோல்வியடைந்து வருகிறார்கள் என்பது தெளிவாக அறியக்கூடிய ஒன்றாக உள்ளது அது மிகவும்

இயல்பானதே. ஏனெனில் மனித உரிமைகளுக்கு எதிரான பயங்கரமான அனைவரும் அறிந்துள்ள குற்றங்களைப் பற்றிக் கவலைப்படாமல் விட்டாலும்கூட, மனித இனத்திற்கெதிரான படுமோசமான குற்றங்களுக்கு ஏகாதிபத்தியத்தைத்தான் குறை கூற வேண்டும்.

ஏகாதிபத்தியம் இரண்டு பெரும் உலகப் போர்களைத் தொடங்கி நடத்தியது. அதற்கு ஈடாக மனித இனம் ஒரு பெரும் விலை கொடுத்துள்ளது. அது தொடர்ந்து பல சண்டைகளை ஆங்காங்கே மேற்கொண்டு வருகிறது. மேலும் பல புதிய ஆயுதந்தாங்கிய போராட்டங்களைத் தூண்டி வருகிறது. ஏகாதிபத்தியம் பாசிசத்தை நிலை நிறுத்துவதற்கும் மக்களிடையே பொதுவான பயங்கரம் ஊட்டவும், பிற்போக்குத்தனமான சதிகளிலும், புரட்சிகளிலும் ஈடுபடவும், நாடுகளின் ஜனநாயக உரிமைகளின் மீதும், அவற்றின் சுதந்திரங்களின் மீதும், ஒரு தாக்குதலை மேற்கொள்ளவும், பொறுப்பானதாகவுள்ளது. ஏகாதிபத்தியம் தனி மனித சுதந்திரத்தையும், மனிதர்களின் தன்மான உணர்வையும், மீறி நடக்கிறது. அது சமுதாய ஒழுக்கங்களைப் பாதிக்கிறது. வன்முறையைப் போதிக்கிறது. இனவெறியையும், அராஜகத்தையும் தூண்டுகிறது.

சோஷலிசம்தான் மனித உரிமைகளுக்காக உண்மையாகப் பரிந்து பேசுவது. விஞ்ஞான-தொழில் நுட்ப சாதனைகளை, மனிதத் தன்மையற்ற அழிவுச் செயல்களுக்குப் பயன்படுத்துவதிலிருந்து ஏகாதிபத்தியத்தைத் தடுப்பதற்கான பெரும் சக்திவாய்ந்த தடைச்சுவர்களை அது எழுப்பி இருக்கிறது. சோஷலிச சமுதாயத்தைச் சேர்ந்த நாடுகள்தான் சமாதான சகவாழ்வை மேம்பாடடையச் செய்வதற்கும், வேறு சமூக அமைப்புமுறைகளைக் கொண்ட அரசுகளுடன் சர்வதேசக் கூட்டுறவை நிறுவுவதற்கும், தலைமை தாங்குவதற்கும், ஒழுங்கமைப்பதற்கும் ஒரு சிறந்த சக்தியாகத் திகழ்கிறது. விஞ்ஞான-தொழில் நுட்ப சாதனைகளை அடிப்படையாகக் கொண்டு மனித இனத்தை எதிர்

நோக்கியுள்ள உலகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அந்த நாடுகள் முயற்சிக்கின்றன.

உலக சோஷலிசத்தின் முன் உதாரணமும், செல்வாக்கும் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியை முதலாளித்துவ நாடுகளிலும், வளரும் நாடுகளிலும் உள்ள உழைக்கும் மக்களின் நலனைப் பாதிக்குமாறு, ஏகபோகங்கள் பயன் படுத்துவதைத் தடுக்கின்றன. சோஷலிசம் வேலை, கல்வி, திறமைகளின் வளர்ச்சி, சமூகப் பாதுகாப்பு, வீட்டு வசதி ஆகியவற்றிற்கான உண்மை உரிமைகளை வழங்கி உத்திர வாதம் செய்து உழைக்கும் மக்கள் அவர்களைச் சுரண்டும் வர்க்கத்தினருக்கு எதிரான, அவர்களுடைய இன்றியமையாத உரிமைகளுக்கான போராட்டத்தில் திடமான உறுதி யுடையவர்களாக இருப்பதற்குத் தூண்டுகோலாகவும் விளங்குகிறது.

40. முதலாளித்துவ நாடுகளில் விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் முக்கியமான பலன்களில் ஒன்றாக இருப்பது, சோஷலிசத்திற்கான பொருளாதார முன்தேவை களைப் பெருமளவு விரிவாக்கம் செய்திருப்பதேயாகும். விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் சூழ்நிலையில் சமுதாயத்தின் நலன்களுடன் ஒத்திசைவாகவுள்ள உற்பத்தி சக்திகளின் வழக்கமான முறையில் செயலாற்றுவதற்கு முன்னெப்பொழுதைக் காட்டிலும், இப்போது உற்பத்தி சாதனங்கள் பொதுமக்களின் உடைமையாக இருப்பதும், அதை சமுதாயம் கட்டுப்படுத்துவதும், தேவைப்படுகின்றன. லெனின் அவர்கள் முன்னரே அறிந்திருந்ததைப் போல நவீன முதலாளித்துவம் பல கிளைகளைக் கொண்ட, பல கட்டுப்பாடுகளைக் கொண்ட அமைப்பு முறையைத் தோற்று வித்துள்ளது. அதனுடைய சமூகப் பணிகள், ஏகபோகங் களின் நலன்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. எனினும் அவைகள் மேலும், மேலும் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்கின்றன. அரசு ஏகபோக ஒழுங்கு கட்டுப்பாடுகளால் தொடர்ந்து மேம்பாடடைந்து வருகிற

முறைகள் பயன்படுத்தப்படுவது, அம்மாதிரியான ஒழுங்கு கட்டுப்பாடுகளின் பகுத்தறிவற்ற தன்மையையும், அவற்றின் சமூக உணர்வின்மையையும் தெளிவாகக் காட்டுகிறது. அதாவது ஏகாதிபத்திய லாபத்தை மிகைப்படுத்துவது என்ற பிரச்சினையை கூர்மையாக முன்வைக்கிறது. ஆனால் அது மற்ற சமூக காரணங்களுக்கு உட்பட்டிருக்க வேண்டும். அதை அவ்வாறு உட்படுத்துவது முதலாளித்துவம் புரட்சிகரமாக அழிக்கப்பட்டு அதனிடத்தில் சோஷலிசம் நிலை நிறுத்தப்பட்டாலே கைகூடும்.

விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி சோஷலிச முறையில் சமுதாயத்தை மறுசீரமைக்கவல்ல சக்தியாகிய உழைக்கும் வர்க்கத்தை வலிமையடையச் செய்கிறது; அதை வளர்க்கிறது. 18-வது நூற்றாண்டின் தொழிற் புரட்சி, பாட்டாளி வர்க்கத்தைப் பெற்றெடுத்தது. முதலாளித்துவத்தின் புதை குழியைத் தோண்டுவோராக அதை ஆக்கியுள்ளது. ஒரு வர்க்க வேறுபாடற்ற கம்யூனிச சமுதாயத்தைத் தோற்றுவதற்கான வலிமையுடையதாக அதை ஆக்கியுள்ளது[5] என்று கார்ல் மார்க்ஸ் கூறுகிறார். 20-வது நூற்றாண்டானது விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் விளைவாகத் தோன்றியுள்ள உற்பத்தித் துறையில் பாட்டாளி வர்க்கத்தின் பணிகளுக்கும், முதலாளித்துவ சமூக உறவுகளின் அமைப்பு முறைகளில் அதன் நிலைகளுக்கும் இடையேயுள்ள தீர்க்க முடியாத முரண்பாடுகளை மிகத் தீவிரமாக ஆக்குகிறது. விஞ்ஞான-தொழில் நுட்ப புரட்சியினால் தோற்றுவிக்கப்பட்டுள்ள புதிய உற்பத்தி முறைகளும், நாள்தோறும் தொழிலாளி வர்க்கத்தினால் அவர்களுடைய வேலைகளில் பயன்படுத்தப்படும் புதிய உற்பத்தி முறைகளும், அவர்களுடைய கல்வி மற்றும் அறிவு மட்டத்தில் பெரும் உயர்வை எதிர் பார்க்கின்றன. இயந்திரத்தின் ஒரு பயனற்ற பகுதியாகவுள்ள தொழிலாளியுடைய பங்குடனும், அவனுடைய அடிமைத்தனத்துடனும், முதலாளித்துவ

விதி முறைகளால் கட்டுப்படுத்தப்பட்ட அவனுடைய சமூக உரிமைகள் பறிக்கப்படுவதுடனும் ஒத்துவராத அவர்களுடைய தேவைகளை மிகுதியாக உயர்த்தியுள்ளன.

இன்றைய முதலாளித்துவ நாடுகளில் உள்ள தொழிலாளி வர்க்கமும், சமூக அடிப்படையில் தொழிலாளி வர்க்கத்திற்கு மிக நெருக்கமாக உள்ளவர்களும், மனித இனத்திற்கு ஏற்ற சிறந்த வாழ்க்கை வசதிகளுக்காகவும், தகுதியான உழைக்கும் சூழ்நிலைகளுக்காகவும் வற்புறுத்தி வருகிறார்கள்; முதலாளித்துவ மேல்மட்டத்தினரின் சுயநலத்திற்கும், தன் முனைப்புக்கும் எதிராகக் குரல் எழுப்பி வருகிறார்கள்; உண்மையான சமுதாய சமத்துவம் வேண்டுமெனக் கோருகின்றனர். புரட்சிகரமான இயக்கத்திற்கெதிராக அரசு ஏகபோக முதலாளித்துவத்தினால் எழுப்பப்படுகிற பல தடைகளையும் தகர்த்தெறிந்து கொண்டு அதன் சமூக அடித்தளம் விரிவடைந்து வருகிறது. இது தொழிலாளி வர்க்கம், அதன் கட்சிகள், அதன் தொழிற் சங்கங்கள் ஆகியவற்றின் வளரும் சமூக அரசியல் செல்வாக்கினாலும் உழைக்கும் மக்களின் போராடும் மனப்பான்மையின் உயர்ந்த மட்டத்தினாலும் வெளிப்படுத்தப்படுகிறது. மேலும் சமூக வளர்ச்சியின் அடிப்படையான பிரச்சினையில் உள்ள அடிப்படையான முரண்பாடுகளைத் தீர்ப்பதற்காக, ''நாள்தோறும்'' நடைபெறும் வர்க்கப் போராட்டத்தின் போக்கு மாறுபாடடைவதாலும் இது தெளிவாக வெளிப்படுத்தப்படுகிறது.

41. விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சி உலக முதலாளித்துவத்தின் நெருக்கடியை அதன் மையங்களில் மட்டுமல்லாமல், அதன் கரையோரங்களிலும் அதிக தீவிரமாக்குகிறது. காலனி ஆதிக்கத்தின் பிடியிலிருந்து தங்களை விடுவித்துக் கொண்ட நாடுகளின் பிரச்சினைகளை முதலாளித்துவம் தீர்த்துவைக்க முடியவில்லைஎன்பதையும், அவைகளின் அன்றைய தேவை மட்டங்களை, அந்த மட்டங்களில் நிறைவு செய்து அவைகளின் சுதந்திரமான

வளர்ச்சிக்கு உறுதி செய்ய முடியவில்லை என்பதையும் ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்க நாடுகளில் நடைபெறும் நிகழ்ச்சிப் போக்குகள் நமக்குக் காட்டுகின்றன.

வளரும் நாடுகள் உலக முதலாளித்துவப் பொருளாதார அமைப்புக்குள், ஒரு சார்பு நிலையையும், ஒரு சமத்துவமற்ற நிலையையும் வகிக்கும், ஒரு பகுதியாக விளங்குகின்றன. வளரும் நாடுகளைப் புதிய உருவில் ஊடுருவி வருகிற முதலாளித்துவம் அதனுடனேயே, அதனுடைய மிகவும் மோசமான இயல்புகளைக் கொண்டு வருகிறது: அதாவது அவைகளுடைய மக்கள் தொகைக்கு வேலை வாய்ப்பு அளிக்க இயலாமை, பெரிய, பொருளாயத, சமூக சமத்துவமின்மை, ஏழைகளுக்கும், பணக்காரர்களுக்குமிடையில் நிலவுகிற மிகப்பெரும் இடைவெளி.

உலக முதலாளித்துவமும், அந்தந்த நாடுகளில் உள்ள முதலாளித்துவமும், வளரும் நாடுகளின் முக்கியமான பிரச்சினைகளை சமாளிக்க முடியாமையும் மக்கள் தொகையிற் பெரும்பகுதியினரை பட்டினி, பசி, ஏழ்மை, எழுத்தறிவின்மை ஆகியவற்றிலிருந்து காப்பாற்ற முடியாமையும் அதன் தோல்வியைக் காட்டுகின்றன. வளரும் நாடுகளில் நிலவும் ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வு, சமூக எதிர்ப்பு உணர்வை அதிகப்படுத்தி, சோஷலிச சிந்தனைகளின் மிகுந்த கவர்ச்சியை மேலும் அதிகமாக உயர்த்தியுள்ளது.

முந்திய காலனிகள், அரைகுறைக் காலனிகள் ஆகியவற்றுடைய உண்மையான, சுதந்திரமான, முற்போக்கான வளர்ச்சியை உறுதிப்படுத்துகிற சோஷலிச திசைவழிப் பாதையில் பல ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள் முன்னேறத் தொடங்கியுள்ளன.

முதலில், முதலாளித்துவத்தின் கீழ் தவிர்க்க முடியாததாக விளங்குகிற சமூக சமத்துவமின்மையும், மற்ற செல்வங்களில் சமத்துவமின்மையும், வளர்வதை இந்த

சோஷலிச திசைவழிக் கொள்கைகள் தடுத்து நிறுத்த முடிகிறது. சமுதாயம் தனித்தனி வர்க்கங்களாகப் பிரிவதை நிறுத்தவும், சமூக நீதிக்கு உத்திரவாதம் அளிக்கவும், லஞ்ச ஊழலின் பிறப்பிடமாகத் திகழும், இடைப்பட்ட ஊகவாணிபம் செய்யும் பெரிய அடுக்காகத் திகழும், புல்லுருவிகளான புதிய கொள்ளைக்கார பூர்ஷ்வா வர்க்கம் தோன்றி வளர்வதைத் தடுத்து நிறுத்தவும், இந்த சோஷலிச திசைவழி உதவுகிறது.

இரண்டாவதாக, பொதுக்கல்வி, உடல் நலப்பாதுகாப்பு ஆகியவற்றில் உண்மையான முன்னேற்றத்தை உறுதி செய்யக்கூடிய, எழுத்தறிவின்மையைப்போக்குகிற, பெரும் அளவாகவுள்ள, பொதுமக்களுக்கான, சமூக கலாச்சார, மருத்துவ சேவைகளைத் தந்துதவுவதைக் கவனித்துக் கொள்ளவும் திறமை பெற்ற, மக்களுடைய நலனுக்காக உழைக்கும் அதிகாரமே அது.

மூன்றாவதாக, வேலையில்லாத் திண்டாட்டத்தின் தீர்வுக்கானவற்றைத் தந்துதவக் கூடிய, கூட்டு உழைப்புக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட விவசாயத்தில் பெரும் அளவிலான இன்றைய உற்பத்தி வசதிகளைப் படைப்பதற்கான அனைத்தையும் உள்ளிட்ட கூட்டுறவின் பரவலை இந்த சோஷலிச திசைவழி உள்ளடக்கியது.

நான்காவதாக, சோஷலிச திசை வழியை மேற்கொண்ட அரசுகள் உற்பத்தித் துறைக்குள் நேரடியான முதலீடுகளைத் திருப்பி விடுவதற்கேற்றாற் போல பண முதலீடுகளை ஒழுங்குபடுத்தவும், அவற்றை ஊக வாணிபத்திலும், அசையாப் பொருள் வாணிபத்திலும் ஈடுபடுத்தாமல் இருக்கவும் செய்யுமாறு ஒழுங்குபடுத்தும் நிலையிலும் உள்ளன.

ஐந்தாவதாக, வளரும் நாடுகளில் உள்ள முற்போக்கான ஆட்சிகள், சோஷலிச அரசுகளின் உதவியுடன் அந்நிய ஏகபோகங்களின் சுரண்டல் தொடர்பான செயல்முறை

களைப் பெருமளவு கட்டுப்படுத்தி; அவைகள் தேசிய நலன் களை மதிக்குமாறு செய்யமுடியும்; மேலும் நிலவுகிற சமத்துவமற்ற சர்வதேச உறவுகளில் தொடர்ந்து மாற்றங் களைச் செய்ய முயலவும், உண்மையான பொருளாதார சுதந்திரத்தை அடைவதற்கான, உண்மையான நடவடிக்கை களை மேற்கொள்ளவும் முடியும்.

42. வளரும் நாடுகளின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தின் இன்றைய நிலையின் முக்கிய இயல்பு அவைகள் தனித்தனியான தல நடவடிக்கைகளை மேற் கொள்வதிலிருந்து, ஒரு கூட்டான, உலக முழுவதுமான நடவடிக்கைக்கும், பகுதிகளில் சலுகைகளுக்காகப் பேரம் பேசுவதிலிருந்து சர்வதேச பொருளாதார அமைப்பு முறையின் முழுமையையும் மறுசீரமைக்கும் கோரிக்கை களுக்கும் மாறியிருப்பதேயாகும். 1970-களின் மையபாகம், வளர்முக நாடுகள் தங்களுடைய கனிப்பொருட்கள், விவசாய மூலப் பொருட்கள் ஆகியவற்றின் ஒருபெரும் பகுதியைத் தங்களுடைய கட்டுப்பாட்டிலேயே கொண்டு வருவதற்கு உதவியது. அதன் மூலம், அவைகள் ஏகாதிபத்தியத்திட மிருந்து புதிய காலனிச் சுரண்டலுக்கான பெரும் நெம்பு கோல்களாக விளங்கியவற்றைக் கைப்பற்றிக் கொள்ள முடிந்தது.

சர்வதேசப் பொருளாதார உறவுகளை மறுசீரமைப் பதற்கான வளரும் நாடுகளின் கோரிக்கைகள், ஒரு புதிய பொருளாதார அமைப்புக்கான போராட்டத்தின் உருவமாக இப்பொழுது மாறியுள்ளன. இந்த நாடுகளால் வரையறுக்கப்பட்ட புதிய பொருளாதார அமைப்பின் திட்டச் செயல் முறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ள பெரும் வகைகளைப் பற்றியதாக உள்ளன:

— நிபந்தனையற்ற, தேசியமய உரிமையையும் உள்ளிட்ட இயற்கை வளங்களின் மீது பயனுள்ள தேசிய அரசாண்மையை நிறுவுவது.

—சர்வதேச வாணிபத்தின் நிபந்தனைகளில் முற்போக்கான மேம்பாடுகள் செய்வது-குறிப்பாக மிக அதிகமான ("நியாயமான") அளவு சரியானதெனக் கூறக் கூடிய கச்சாப் பொருட்களுக்கான விலைகளை ஏற்படுத்தி அதை உறுதியாக்குதல், முதலாளித்துவ அரசுகளின் சந்தைகளுக்கு வளரும் நாடுகளின் உற்பத்திப் பொருட்கள் சென்றடைவதற்கு ஒரு சிறந்த வழியை உறுதிப்படுத்துதல்.

—நிதி உதவியில் பெருக்கம், செலுத்தல்களைத் தள்ளி வைத்தல், முந்திய கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கான எளிய முறைகள்; மிகவும் குறைவான வளர்ச்சி பெற்றுள்ள நாடுகளின் கடன்களை ரத்து செய்தல்.

—பன்னாட்டு இணையங்களின் செயல்முறைகளின் மீது கட்டுபாடுகள் விதித்தல்; கட்டுப்படுத்தப்பட்ட வணிக பழக்க வழக்கங்களை வரம்பிற்குட்படுத்துதல்.

—தொழில்மயமாக்குதலுக்கு உதவுதல், சிறந்த தொழில் நுட்பத்தையும் தொழில் யுத்திகளையும் பெறுவதற்கான நிலைகளை உருவாக்குதல்; நாட்டில் உள்ள "அறிஞர் பெருமக்கள் வெளியேறுவ"தைத் தடுப்பது, வெளியேறிச் சென்றவர்களுக்கு நஷ்டஈடு கொடுத்தல்.

—சர்வதேச பணவியல் அமைப்பு முறையின் சீர்திருத்தத்திலும், செயலாட்சியிலும், பங்குபெறுதல், சர்வதேச பொருளாதார உறவுகளை ஒழுங்குபடுத்தும் தீர்மானங்களை நடைமுறையில் நிறைவேற்றுதல்.

—வளரும் நாடுகளிடையே கூட்டுறவு.

பல்வேறு வகையான அரசியல் வண்ணமுடைய வளரும் நாடுகளும், பொருளாதார சமத்துவத்திற்கான போராட்டத்தில் பங்கு கொள்கின்றன. இவைகளில் சோஷலிசத் திசை வழிகொண்ட நாடுகள் தேசிய ஜனநாயக பூர்ஷ்வா குடியரசுகள், பூர்ஷ்வாமயமாக்கப்பட்ட மேல்மட்ட நிலச்சுவான்தார்களின் நலன்களை வெளியிடுகிற முடியரசுப்

பகுதிகள், ஒரு பிற்போக்கு உள்நாட்டுக் கொள்கையைப் பின்பற்றும் இராணுவ எதேச்சாதிகாரம் ஆகியவை அடங்கும். இவைகளிற் சில ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கையைப் பின்பற்றுவது இல்லை. புதிய அரசுகளின் பொருளாதார நலன்கள் எப்பொழுதும் ஒத்திசைவானதாக இருப்பதில்லை.

இந்த அரசுகள் மேற்கொள்கிற இலட்சியங்களுக்கும், அந்த இலட்சியங்களை அடைவதற்கான முயற்சிகளுக்கு மிடையே பெரும்பாலான சமயங்களில் பெரும் இடைவெளிகள் உள்ளன. அவைகளுடைய பொது மேடையில் (குறிப்பிடத்தக்க குறைகள் உள்ளதாக இருப்பவை) காலனி ஆட்சியின் அடக்குமுறைகளின் விளைவு களுக்கும், புதிய காலனி முறைச் சுரண்டலுக்கும், முந்திய காலனி நாடுகளின் பிற்பட்ட தன்மைக்கும், வரலாற்றுப் பொறுப்பை நிர்ணயிப்பதில் அவைகள் முதலாளித்துவ நாடு களையும், சோஷலிச நாடுகளையும் பேதம் பிரித்துப் பார்ப்பதில்லை. எந்த உருவிலும், வளரும் நாடுகளில் நிலவிய காலனி ஆட்சி அடக்குமுறைக்கும், பொருளாதார சுரண்டலுக்கும், சோஷலிச அரசுகள் பொறுப்பல்ல. மேலும், பொருளாதார நெருக்கடிகளின் விளைவுகளுக்கோ, சர்வதேச பணவியல் அமைப்பு முறையின் ஒழுங்கின்மைக்கோ, பணவீக்கத்திற்கோ இந்த நாடுகள் துன்புற்றுவரும் உற்பத்தியில் நிலவுகிற குழப்பங்களின் வெளிப்பாடு களுக்கோ சோஷலிச நாடுகள் எந்த வகையிலும் பொறுப் பாளிகள் அல்ல. "மொத்த தேசிய உற்பத்தியின் ஒரு குறிப்பிட்ட பகுதியை வளரும் நாடுகளுக்குப் பொருளாதார உதவியாக, இன்றியமையாதவாறு மாற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் உள்ளிட்ட கோரிக்கைகளைவளரும் நாடுகள், வளர்ந்த முதலாளித்துவ நாடுகளிடம் வேண்டு கின்றன. அது தங்களின் உரிமை எனக் கூறுகின்றன. எனினும் அவைகள் எந்த வகையிலும் சோவியத் அரசிடமோ மற்றும் பிற சோஷலிச அரசுகளிடமோ அந்த

உரிமைகளைக் கொண்டாடுவதற்கு அடிப்படை ஏதும் இல்லை — கொண்டாட முடியாது''[6] என சோவியத் அரசின் ''சர்வதேச பொருளாதார உறவுகளை மறுசீரமைப்பது பற்றிய'' அறிக்கையில் குறிப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது.

அவைகளுடைய பிற்பட்ட தன்மையைப் போக்குவதற்கு மிகவும் அதிகமான மூலப்பொருட்களும், வகை தொகைகளும், வழங்கப்பட வேண்டும் என்ற வளரும் நாடுகளின் நியாயமான கோரிக்கைகள், பலமிழந்ததாக இருப்பதற்கு முக்கிய காரணம், ஆயுதப் போட்டியைக் கட்டுப் படுத்துவது, படைக் குறைப்பு, அமைதியையும், சமாதானத்தையும் பாதுகாப்பது ஆகியவற்றுடன் ஏற்ற முறையில் தொடர்பு படுத்தப் படாமல் இருப்பதுதான். ஏனெனில் இந்தப் பிரச்சினைகளுக்கும், சர்வதேசப் பொருளாதார உறவுகளைச் சீரமைப்பதற்குமிடையே ஒரு இன்றியமையா தொடர்புள்ளது. மேலும் அரசியல், இராணுவ பதற்றத்தணிவு உலகப் பொருளாதார நிலையைச் சீராக்குவதற்கு ஒரு பெரும் பங்காற்றும். சர்வதேச பொருளாதார உறவுகளை மறுசீரமைப்புச் செய்வது அதன் முறையில் சர்வதேச பதற்றத் தணிவை ஆழப்படுத்தும்.

சோஷலிச நாடுகள் விடுதலையடைந்த நாடுகளின் நியாயமான முயற்சிகளுக்கும், ஏகாதிபத்திய சுரண்டலிலிருந்து விடுதலையடைய வேண்டுமென்ற அவைகளுடைய உறுதியான முயற்சிகளுக்கும், அவைகளுடைய செல்வங்களை அவைகளுடைய நாட்டின் நலனுக்குப் பயன்படுத்த வேண்டுமென்ற விருப்பத்திற்கும் தொடர்ந்து ஆதரவளித்து வருகின்றன. ''முந்திய காலனி நாடுகளுக்கும், சார்பு நாடுகளுக்கும் வளர்ந்த நாடுகளுக்குமிடையே சமமான அரசியல் பொருளாதார உறவுகளுக்காகவும் கூட்டுறவுக்காகவும் நடைபெறும் போராட்டம், —முந்திய காலனி நாடுகள், சார்பு நாடுகள் ஆகியவற்றிற்கும், சோஷலிச நாடுகளுக்குமிடையே நீண்ட நாட்களுக்கு முன்னரே நிறுவப்பட்ட உறவுகள்—எங்களுடைய கட்சியின் பொதுவான சர்வதேசப்

பொறுப்பின் ஒரு முக்கியமான பகுதியாகும்’’ என்று லியோனித் பிரெஷ்னேவ் வலியுறுத்திக் கூறினார்.

இந்தப் போராட்டத்தின் வாய்ப்புகள், வளரும் நாடுகள், சோஷலிச அரசுகள் ஆகியவற்றின் ஒத்திசைவான செயல்முறைகளால் பெரும்பாலும் நிர்ணயிக்கப்படும். அவை இரண்டுமே அமைதி காப்பதிலும், பதற்றத்தணிவை மேலும் ஆழப்படுத்துவதிலும் ஆர்வம் காட்டுகின்றன. எந்த வகையான ஆக்கிரமிப்பையும், மேலாதிக்கத்தையும், ஒரு சில நாடுகள், வேறு சில நாடுகளால் சுரண்டப்படுவதையும், சர்வதேச உறவுகளில் காட்டப்படுகிற வேறுபாடுகள், சமத்துவமின்மை ஆகியவற்றின் பல்வேறு வகையான வெளிப்பாடுகளையும் ஒழிக்க விரும்புகின்றன. சமத்துவ அடிப்படையில் அரசுகளுக்கிடையேயுள்ள உறவுகளை ஒழுங்கமைப்பது, பரஸ்பர நலன்களிலும், உள்நாட்டு விவகாரங்களிலும் தலையிடாமல் இருப்பது ஆகியவற்றில் நம்பிக்கை கொண்டவையாயிருக்கின்றன. சோஷலிச அரசுகளிடையே நிலவும் கூட்டுறவை மேலும் பலப்படுத்துவதற்கும், ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்தில் அவைகளுடைய முயற்சிகளை ஒன்றிணைக்கவும் அவைகளுடைய பொதுவான அடிப்படை விருப்பங்கள் உதவியாக உள்ளன.

43. இன்றைய படிநிலையில் சகோதர கம்யூனிஸ்ட் கட்சிகளின் போராட்டங்களும், பிற இடதுசாரி, ஜனநாயக சக்திகளின் போராட்டங்களும் தொழிலாளி வர்க்கத்தின் இன்றியமையா நலன்களுக்கும், சமூக முன்னேற்றத்திற்கான இலட்சியங்களுக்கும், ஒத்திசைவாகவுள்ள விஞ்ஞான தொழில்-நுட்பப் புரட்சியினால் தோற்றுவிக்கப்பட்டுள்ள பிரச்சினைகளின் தீர்வுக்கு முக்கியமானதாக வளர்ந்து கொண்டிருக்கின்றன. பொதுமக்கள் இயக்கத்தை ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஒன்று திரட்டுகின்றன. முதலாளித்துவ நாடுகளில் உள்ள கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர்களின் கட்சிகள்—அரசு

ஏகபோகங்களின் கொள்கைகளுக்கு எதிரான ஜனநாயக மாற்று வழியானது பிறவற்றிற்கிடையே கீழ்க்கண்ட நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு உதவி செய்வதாக நம்புகின்றன.

—பொருளாதார முன்னேற்றத்திற்கான உண்மையான தேவைகளுக்கேற்ப தொழில் பயிற்சி முறையையும், அந்தப் பயிற்சியை மேம்பாடடையச் செய்வதன் மூலம் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைப்பது; கூலி குறையாது ஒரே மட்டத்தில் இருக்கும் போதே, வேலை நேரத்தைக் குறைப்பது; பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவது; மூலதன ஏற்றுமதியை ஒரு வரம்பிற்குட்படுத்துதல்; பொது நலப் பணிகளைப் பற்றிய திட்டச் செயல்களை விரிவாக்கம் செய்தல்—குறிப்பாக குடியிருப்பு வீடுகளைக் கட்டுவதை விரிவாக்கம் செய்தல்; பள்ளிகள், மருத்துவ நிலையங்கள், குழந்தை நிறுவனங்கள், கலாச்சார மையங்கள் ஆகியவற்றைத் தோற்றுவித்தல்; மாநகரங்களையும் நகரங்களையும் நவீனப்படுத்துதல்; சூழ்நிலையை மேம்பாடடையச் செய்தல்.

—முதன் முதலாக உற்பத்தித் திறனற்ற இராணுவச் செலவைக் குறைப்பதன் மூலம் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துதல், அதன் மூலம், வரவு செலவுத் தொகையில் விழும் துண்டைச் சரிசெய்தல், இணையங்களின் செயல் முறைகளின் மீதும், வங்கிகள் மீதும், விலைகள் மீதும், வருமானங்கள் மீதும், பயனுள்ள அரசுக் கட்டுப்பாட்டைப் புகுத்துதல், அரசின் கடன், நிதி உதவி முறைகளாலும், முற்போக்கு வரிமுறைகளாலும், முதலீட்டுக் கொள்கையைப் பொருளாதார வளர்ச்சியின் சமூக இலட்சியங்களுக்கு உட்படுத்துதல்.

—விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பத் துறையில் கொள்கை மறு ஒழுங்கு செய்யப் போராடுவது. உழைக்கும் சூழ்நிலைகளை மேம்பாடடையச் செய்வது, உழைப்பின்

உள்ளடக்கத்தை மிகுதியான செழுமையுடையதாக ஆக்குவது, உடல் நலப்பாதுகாப்பு, ஆற்றல், கச்சாப்பொருள் ஆகியவை பற்றிய பிரச்சினைகளைத் தீர்ப்பது, மனிதனுடைய சூழ்நிலையைக் காப்பது, மேம்பாடடையச் செய்வது, நகரங்களிலும், மாநகரங்களிலும் உள்ள வாழ்க்கைச் சூழ்நிலைகளை மனிதத் தன்மை நிறைந்ததாக ஆக்குவது, போன்ற சமூக நோக்கங்களுக்கும், முன்னுரிமைகளுக்கும் அதை உட்படுத்துவதற்கான போராட்டம்.

—உழைக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றமடையச் செய்வது,—முதன் முதலில் குறைந்த வருவாயுள்ள மக்கள் பகுதியின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது, குறைந்தபட்ச ஊதியத்தை உயர்த்துவது, சமூக நலன்களைப் பெருக்குவதற்கான முறையை மேம்பாடடையச் செய்வது, இளைஞர்கள், பெண்கள் ஆகியோருடைய ஊதியங்களுக்கிடையேயுள்ள வேறுபாட்டை நீக்குவது ஆகியவற்றின் மூலம், அந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது.

— முதலாளித்துவ நாடுகளிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள், சமூக அரசியல் நிறுவனங்களின் முற்போக்கான ஜனநாயக மாற்றத்திற்கு மேலே குறிப்பிட்ட நடவடிக்கைகள் அனைத்தும் தேவைப்படும் என்று கருதுகின்றன. இந்த மாற்றங்களின் முக்கியமான உள்ளடக்கம், அரசுக் கொள்கைகளிலும், தலைநிர்வாக நிறுவனங்களிலும், தொழில் தொகுதியமைப்புகளிலும், ஏகபோகங்களின் பொருளாதார அரசியல் நிலைமைகளைக் கட்டுப்படுத்துதலையும், அனைத்து உழைக்கும் மக்களின் செல்வாக்கையும், தொழிலாளி வர்க்கத்தின் செல்வாக்கையும், பெருக்குதல் ஆகும். விஞ்ஞான-தொழில் நுட்ப, சமூக— பொருளாதார முன்னேற்றத்தை சமுதாய முழுமையின் நலனுக்காகப் பயன்படுத்துவதைக் கைகூடும் செயலாக்கும் ஜனநாயகத் திட்டத்தை அறிமுகப்படுத்துவதும் ஆகும்.

இம்மாதிரியான மாற்றங்கள் கீழ்க் கண்டவற்றை முன் கூட்டியே ஏற்றுக் கொள்கின்றன:

—நிதி ஆதிக்கக் குழுவின் பொருளாதார வலிமையைக் கட்டுப்படுத்துவதன் மூலம், சொத்துரிமை உறவுகளில் முற்போக்கான மாற்றங்கள் செய்தல், பெரிய கம்பெனிகளில் பொது மக்கள் கட்டுப்பாடு முறையை அறிமுகப்படுத்துவதன் மூலம அரசு முழுமைக்குமான சமூக—பொருளாதாரத் திட்டச் செயல்களுக்கு இன்றியமையாத தேவைகளுக்குத் தனியார் துறையின் செயல்களை உட்படுத்துதல் ஒவ்வொரு அரசின் நிலைகளுக்கும் ஒத்திசைவான மட்டத்திற்கு பல நாடுகளில், இன்றியமையாத பொருளாதாரத் துறையை தேசியமயமாக்குதல்.

— எல்லா மட்டங்களிலும் உழைக்கும் மக்கள் உண்மையாகப் பங்கு கொள்வதன் மூலம், செயலாட்சியை ஜனநாயகத் தன்மையுடையதாக ஆக்குதல். சமூக—பொருளாதார பிரச்சினை பற்றிய அவர்களுடைய முடிவை மேற்கொள்வதிலும், அந்த முடிவுகளை நிறைவேற்றுவதைக் கட்டுப்படுத்துவதிலும் அமைப்பு முறைகளை ஜனநாயகமயமாக்குதல்.

44. வெளிநாட்டுக் கொள்கை, வெளிநாட்டுப் பொருளாதார உறவுகள் ஆகிய துறைகளில், ஜனநாயக மாற்று ஏற்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிபந்தனைகள்— பதற்றத்தணிவையும், ஆயுதக் குறைப்பையும் தொடர்ந்து நிறைவேற்றுவது, வேறுபட்ட சமூக பொருளாதார அமைப்புகளையுடைய நாடுகளுக்கிடையே பரஸ்பர நலன் தரும் பொருளாதார- விஞ்ஞான—தொழில் நுட்பக் கூட்டுறவை வளர்ப்பது, வளர்ந்த முதலாளித்துவ நாடுகளுக்கும், வளரும் நாடுகளுக்குமிடையே, சமமான பொருளாதார உறவுகளை ஏற்படுத்துவது.

பொருளாதார சமூக முன்னேற்றத்தின் நலன்களுக்காக சர்வதேசக் கூட்டுறவை வளர்ப்பது, உலகப் பொருளாதார

உறவுகளை ஜனநாயக அடிப்படையில் மறுசீரமைப்பது, அனைத்து நாடுகளுக்கும் சாதகமான சூழ்நிலைகளை உருவாக்குவதற்கு சர்வதேச வேலைப் பகுப்பில் விதி விலக்கின்றி ஈடுபடுதல், உண்மையான சமத்துவம், பரஸ்பர நலன்கள் ஆகியவற்றின் அடிப்படையில் சர்வதேசப் பொருளாதார உறவுகளை அடிப்படையில் மீண்டும் கட்டுதல், அவைகளுடைய இயற்கையான பொருளாதார செல்வங்களின் மீது அனைத்து நாடுகளுக்கும் உள்ள அரசாண்மைக்கும் மதிப்பளித்தல், பன்னாட்டு இணையங்கள் மீது பயனுள்ள கட்டுப்பாட்டை நிறுவுதல் ஆகிய செயல்களை மேற்கொள்வதை உள்ளடக்கியதாக வுள்ளது.

உலகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பயனுள்ள, சிக்கனமான முறையில் இயற்கைச் செல்வங்களையும், சக்தி களையும், மனித இனத்தின் நலனுக்குப் பயன் படுத்துவதற்கு தேசங்களிடையே கூட்டான முயற்சியும், அரசுகளின் கூட்டான செயல்களும் தேவைப்படும். அடுத்து வரும் சில ஆண்டுகளில் இம்மாதிரியான சர்வதேசக் கூட்டுறவுகளை வளர்ப்பதற்குத் தேவையான பயனுள்ள வழிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளவை போன்றிருக்கலாம்.

— விஞ்ஞான தொழில் நுட்ப சாதனைகள் பற்றிய செய்திகளைப் பரஸ்பரம் பறிமாறிக் கொள்ளுதல், இயற்கை வளங்களைப் பயன்படுத்துவதில் மனிதச் செயல்முறைகளின் பெரும் துறைகளில் கொள்கை பற்றிப் பரஸ்பரம் செய்தி களைப் பரிமாறிக் கொள்ளுதல், அம்மாதிரியான கொள்கையை விரித்துரைக்கவும், நடைமுறையில் பயன் படுத்தவும் தொடர்புள்ள அரசுகளுடன் கலந்தாலோசிப்பது.

— ஆற்றல் உற்பத்தியின் பொருளாயத தொழில் நுட்பத்தின் பரப்பை விரிவுபடுத்துவதில், ஆற்றலின் புதிய தோற்றுவாய்களைப் பற்றி ஆராய்வதும் மேம்பாடடையச் செய்வதும், அதனுடைய நுகர்வைச் சிக்கனப்படுத்துவது (அனைத்து ஐரோப்பிய ஆற்றல் அமைப்பு முறையை

உருவாக்குவதையும் உள்ளிட்ட) அணுசக்தி உற்பத்தியின் முன்னேறிய முறைகளை வெளியிடுவது ஆற்றலைச் சேமிக்கும், மனிதச் சூழல் பாதுகாப்பியல் அடிப்படையில் மிகவும் சிறந்ததான தொழில் தொகுதிகள், போக்குவரத்து தொடர்பான தொழில் நுட்ப நிகழ்ச்சிப் போக்குகளை அறிமுகப்படுத்துவது ஆகியவற்றில் கூட்டுறவு.

— ஒருசிறிது வீணாக்குவதுடனோ அல்லது கழிவுகளே இல்லாமலோ செய்யக் கூடிய உற்பத்தி வசதிகளைத் தொழில்ல் புகுத்துவதிலும், அதன் வளர்ச்சியிலும், முன் கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட தன்மைகளைக் கொண்ட செயற்கைப் பொருட்களை உற்பத்தி செய்வதிலும், இயற்கை வளங்களைக் காண்பதற்கான பூகர்ப்ப ஆராய்ச்சியிலும் அதன் வளர்ச்சியிலும், — குறிப்பாக நிலத்திலும், உலகப் பெருங்கடல்களிலும் அடைய முடியாத பகுதிகளை ஆராய்ச்சி செய்வதிலும் கூட்டுறவு.

— மண்ணின் உயிரியல் உற்பத்தித் திறனையும், உலகப் பெருங் கடல்களில் நீர்ப்பரப்பின் உயிரியல் உற்பத்தித் திறனையும் மேம்பாடடையச் செய்வதிலும், விவசாயப் பொருட்களை பகுத்தறிவுக்குகந்த முறையில் பயன்படுத்து வதிலும், தானாக, பரஸ்பர நலன் அடிப்படையில் அரசுகளுடைய விவசாயக் கொள்கைகளை இணைப்பதிலும் கூட்டான முயற்சிகளை மேற்கொள்வது.

— சூழ்நிலைப் பாதுகாப்புக்குத் தேவையான உயர்ந்த தேவைகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, போக்கு வரத்துத்துறை, செய்திப் போக்குவரத்துத் துறை ஆகிய வற்றின் ஆராய்ச்சியிலும். உற்பத்தி செயல் முறைகளிலும், போக்குவரத்துப் பாதுகாப்பு, போக்குவரத்து, செய்திப் போக்கு வரத்து ஆகியவற்றில் சிக்கனத்தைக் கையாளுதலை ஒன்றிணைப்பது.

மேலே குறிப்பிடப்பட்ட வழிகளிலும், வேறு வழி களிலும் பயன்படுத்துவதற்கான பெருமளவு சர்வதேசக்

கூட்டுறவின் வளர்ச்சி, மனித இனத்தின் முன்னுள்ள மிகவும் இன்றியமையாத அவசரக் கடமையாகும். அதனுடைய தீர்வு சர்வதேச பதற்றத் தணிவுக்கான போராட்டத்துடனும், வேறுபட்ட சமூக அமைப்பு முறைகளையுடைய நாடு களிடையேயான பொருளாதார உறவுகளின் வளர்ச்சி யுடனும்; சர்வதேசப் பொருளாதார உறவுகள் முழுமையின் நிலையை உயர்த்த உதவுகிற சமாதான சகவாழ்வின் பொருளாதார அடிப்படைகளை ஒன்றிணைப்பதுடனும் இணைபிரியாததாகவுள்ளது. சகோதரக் கட்சிகள், இந்த அடிப்படையான முற்போக்கான கோட்பாடுகளின் அடிப் படையில் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி உலகப் பொருளாதாரத்தில் சமூக பொருளாதார முன்னேற்றத் திற்குத் தூண்டுகோலாக விளங்கக்கூடிய அதன் இன்றியமையாத வரலாற்றுப் பணியை முழு அளவில் நிறைவேற்றவும், உலகில் உள்ள அனைத்து நாடுகளின் நலனுக்கும், ஆழமாகி வரும் சர்வதேச வேலைப் பகுப்பின் அனுகூலங்களை மிகுதியாகப் பெறுவதற்கு உதவி செய்யவும் முடியுமென நம்புகின்றன. 1976 கோடையில் பெர்லினில் நடந்த ஐரோப்பிய கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சி களின் மாநாட்டின் இறுதியான ஆவணமானது, "எல்லா மக்களுக்குமான சமத்துவம், பரஸ்பர நலம் ஆகியவற்றின் அடிப்படையில் சர்வதேச உறவுகளை ஜனநாயக மயமாக்குதலும், சர்வதேச ஒத்துழைப்பை வளர்த்தலும் ஆகிய இந்த இரு கடமைகளும் ஏகாதிபத்தியம், புதுக்காலனி ஆதிக்கம் ஆகியவற்றிலிருந்து விடுபட ஒரு சர்வதேச சமுதாயத்தை நிறுவுவதை நாடி நடைபெறும் போராட்டத்தின் முக்கியத்துவம் வாய்ந்த லட்சியங்களாகும். அந்த சமுதாயத்தில் வளர்ந்த நாடுகளுக்கும், வளரும் நாடு களுக்கும் இடையிலான ஒரு சீரற்ற தன்மைகள் வெல்லப் பட்டுவிடும். அது ஒவ்வொரு தேசத்தினுடையதுமான முழு சுதந்திரத்தையும், மனித இனப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அவற்றின் செயல் துடிப்பு மிகுந்த

பாத்திரத்தையும் அடிப்படையாய்க் கொண்டு அமையும்" என்று வலியுறுத்திக் கூறியது[8].

45. அரசு ஏகபோக முதலாளித்துவத்திற்கு ஒரு ஜனநாயக மாற்றை விரிவுபடுத்துவதும், அதை நடைமுறையில் செயல்படுத்துவதும் இன்றைய சூழ்நிலையில், தொழிலாளி வர்க்கத்தையும், அதன் அரசியல் முன்னணிப் படையையும் எதிர்நோக்கும் தத்துவார்த்த நடைமுறைப் பிரச்சினைகளை மார்க்சீய-லெனினிய சிந்தனை முறையில் பகுப்பாய்வு செய்வதை இன்றியமையாததாக ஆக்குகின்றன. அந்தப் பிரச்சினைகள் கீழே கண்டவற்றை உள்ளடக்கியதாக இருக்கும்.

— உண்மையான சமூகப் பிரச்சினைகளையும், தேவைகளையும் பகுத்தாராய்வதன் மூலம், பொருளாதார சமூக முன்னுரிமைகளை நிர்ணயித்தல்.

— அவசரமான சமூக மாறுபாடுகளை, மிகவும் பயனுள்ள, பொருளாதாரச் செயல் முறைகளுடன் இணைப்பதைக் கைகூடும் செயலாக ஆக்கத் தேவையான முறைகளை விளக்கிக் கூறுவது.

— பொருளாதாரம் அமைதியான வழியில் முன்னேறச் செய்யவும் ஆயுதக் குறைப்பின் மூலம் பெறப்பட்ட மூலப் பொருட் செல்வங்களையும் வசதிகளையும், உழைக்கும் மக்களின் நலன்களுக்காகப் பயன்படுத்துவதற்கான உச்ச நிலை முறைகளை நிர்ணயிப்பது.

— பொருளாதார நிகழ்ச்சிப் போக்குகள், சமூக நிகழ்ச்சிப் போக்குகள் ஆகியவற்றின் மையப்படுத்தப்பட்ட செயலாட்சியை, நிர்வாகத்தில் உழைக்கும் மக்கள் அனைத்துத் துறையிலும் ஜனநாயக முறையில் பங்கு பெறுதலுக்கான வாய்ப்புகளைத் தெளிவுபடுத்துதல்.

— ஏகபோக எதிர்ப்புக் கூட்டணியின் அடிப்படையை உருவாக்குகிற வேறுபட்ட வர்க்கங்களின் நலன்களையும்,

சமூக அடுக்குகளின் நலன்களையும் பற்றிய விவரமான வர்ணனை.

— முன்னரே நிறுவப்பட்ட சர்வதேச வேலைப் பகுப்பு தேசிய, உலக பொருளாதாரங்களில் ஏகபோகங்களின் பங்கு முதலிய பல காரணிகள் ஒவ்வொரு நாட்டிலும், ஜனநாயக மாற்றங்களின் நிகழ்ச்சிப் போக்கில் தோற்றுவிக்கப்படக் கூடிய செல்வாக்கின் உண்மையான மதிப்பீடு;

— சமுதாயத்தின் ஆன்மீக வாழ்வை மேம்பாடடையச் செய்யும் சிறப்பான முறைகள், தனி மனிதனுடைய சமூகச் செயல் முறைகளைத் தூண்டுதல், கலாச்சாரத்தையும் கல்வியையும் ஜனநாயகப்படுத்துதல், பூர்ஷ்வாக்களின் வாழ்க்கை முறையின் அறநெறிகள், முறைகள் ஆகியவற்றின் தீய விளைவினால் தோற்றுவிக்கப்பட்ட சமூக உளவியல் எதிர்மறை இயல்புகளை எதிர்த்துப் போராடுதலின் முறைகளை விரித்துரைத்தல்.

ஆக்கபூர்வமான பகுப்பாய்வுத் துறையில் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் வெற்றிகளும், இந்தப் பிரச்சினைகளுக்கு விஞ்ஞான அடிப்படையிலான தீர்வும், ஒரு ஜனநாயக மாற்று வழியைக் காண்பதற்குத் தேவையான, இன்றியமையாத நிபந்தனைகளாகும். விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் சாதனைகளையும் அது நல்கும் பொருளாயத, கலாச்சார வாய்ப்புகளையும், மனிதனுடைய உண்மையான நலன்களுக்கும் சமூக முன்னேற்றத்திற்கும் பயன்படுமாறு செய்வது— அதுதான் சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முன்னால்—நம் காலத்து முற்போக்கு சக்திகளுக்கு முன்னால் — உள்ள முக்கியமான சர்வதேசக் கடமையாகும்.

## அடிக்குறிப்பு

1. **சோவியத் ஒன்றியத்தின் கம்யூனிஸ்ட் கட்சியின் 24வது காங்கிரஸ்**, நோவஸ்தி பிரசுராலயம், மாஸ்கோ. 1971— பக். 69.

2. வி. இ. லெனின், தொகுப்பு நூல்கள், தொகுதி - 19 பக். 62

3. ஆவணங்களும், தீர்மானங்களும், சோவியத் ஒன்றியத்தின் கம்யூனிஸ்ட் கட்சியின் 25வது காங்கிரஸ், பக். 34.

4. வி. இ. லெனின், தொகுப்பு நூல்கள், தொகுதி - 21, பக்கம்-346.

5. கார்ல் மார்க்ஸ், பிரெடரிக் எங்கெல்ஸ், தொகுப்பு நூல்கள், தொகுதி- 6, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ 1976 பக். 496.

6. பிராவ்தா—5, அக்டோபர்—1976—பக். 4.

7. ஐரோப்பாவில் சமாதானம், பாதுகாப்பு, சமூக முன்னேற்றம் ஆகியவற்றிற்காக — மாஸ்கோ—1976, பக். 26.

8. முன்கூறிய அதே நூல்— பக். 57.

**என். என். இனோசெம்ட்சேவ்**

*சோவியத் ஒன்றியத்தின் விஞ்ஞான கலைக்கழக உறுப்பினர். இயக்குநர், உலகப் பொருதாரம் மற்றும் சர்வதேச உறவுகள் நிறுவனம்.*

## இன்றைய நிலையில் விஞ்ஞான–தொழில் நுட்பப் புரட்சியும், முதலாளித்துவத்தின் பொருளாதார, சமூக அரசியல் முரண்பாடுகள் ஆழமாதலும்

தோழர். போரிஸ் பொனொமரேவ், அவருடைய தொடக்கவுரையில் நம்முடைய கவனத்தைக் கவரக்கூடிய பல்வேறு முக்கியமான விஷயங்கள் பற்றிக் கூறினார்கள்.

உலகப் பொருளாதாரம் மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய நிறுவனம் தன்னுடைய நிலையை, இந்த மாநாட்டின் பிரச்சினை பற்றிய அதனுடைய ஆராய்ச்சிக் கட்டுரையில் வெளியிட்டுள்ளது. என்னுடைய கருத்தில் மிகவும் அடிப்படையானவை என்று நான் கருதுகிற விஷயங்களைப் பற்றி சிலவற்றைக் கூற விரும்புகிறேன்.

முதலில் உலகில் நடப்பிலிருக்கும் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சிக்கும், சமூகப் புரட்சிக்கும் இடையில் மிக நெருங்கிய பிணைப்பிருக்கிறது என்பதும், இந்த இன்றியமையாப் பிணைப்பு இன்றைய முதலாளித்துவத்தில் ஏற்படுத்தும் விளைவுகளும் உள்ளன.

சமூக உறவுகள் தொடர்பான துறைகளிலும், விஞ்ஞான தொழில் நுட்பத் துறையில் ஏற்பட்டுள்ள புரட்சியிலும், நிகழ்ந்துள்ள மிகப் பெரும் புரட்சிகரமான மாற்றங்களின் இணைப்பே நம் காலத்தின் முக்கியமான இயல்பாகவுள்ளது என உறுதியாக அந்தக் கட்டுரை வலியுறுத்துகிறது.

மின்னல் வேகத்தில் செல்லும் ஜெட் விமானங்களோ, தொலைக்காட்சிகளோ, அணுசக்தி உற்பத்தி நிலையங்களோ, மனிதர்களை ஏற்றிச் செல்லும் விண்வெளிக் கப்பல்களோ, கம்ப்யூட்டர்களோ, பிளாஸ்டிக் பொருட்களோ, இன்றைய தொழில் மற்றும் விவசாயத்தில் உள்ள தொழில் நுட்ப முறைகளோ, இன்றைய கல்வி முறையோ, செய்தியோ, நிர்வாக முறையோ, இல்லாத உலகைப் பற்றி நாம் கற்பனை செய்து பார்ப்பதுகூடக் கடினம். இல்லை, முடியவேமுடியாது என்றே கூறி விடலாம், இந்த நூற்றாண்டின் மத்தியிலிருந்து மேம்பாடடைந்து கொண்டிருக்கிற விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியே இவையனைத்துக்கும் அடிப்படையாக வுள்ளது.

நாம் சோஷலிசப் புரட்சியைப் பற்றிப் பேசினாலும், உலக சோஷலிச அமைப்பு முறை பற்றிப் பேசினாலும், தேசிய விடுதலைப் புரட்சிகளைப் பற்றிப் பேசினாலும், சுதந்திரமான பல புதிய அரசுகள் துவக்கப்பட்டதைப் பற்றிப் பேசினாலும், வளர்முக நாடுகளைப் பற்றிப் பேசினாலும், முதலாளித்துவ நாடுகளில் நடைபெறும் தொழிலாளி வர்க்க ஜனநாயக இயக்கங்களின் பேரலை களைப் பற்றிப் பேசினாலும், இந்த உலகம் முழுமையும் பரவியுள்ள சமூக மாற்றங்கள் குறைந்த முக்கியம் வாய்ந்தனவல்ல.

இன்றைய உலக நிலைக்கும், 30 அல்லது 35 ஆண்டு களுக்கு முன்னிருந்த உலக நிலைக்குமிடையே நிலவும் அடிப்படை வேறுபாடுகளும், இரண்டாம் உலகப் பெரும்

போருக்கு இறுதியிலிருந்த முதலாளித்துவ உலகத்திற்கும், 1970-களின் இறுதியிலிருந்த முதலாளித்துவ உலகத்திற்கு மிடையே இருந்த அடிப்படையான வேறுபாடுகளும் கீழ்க் கண்டவாறு இருக்கலாம்:

1. அது முதலாளித்துவம் (சென்ற காலத்திற்கு மாறாக) உலக மக்கள்தொகையில் 18 சதவிகிதம் மட்டுமே வாழ்கிற, உலக நிலப்பரப்பில் 24 சதவிகிதத்தைக் கொண்ட உலகத் தொழில் உற்பத்தியில் ஏறத்தாழ 50 சதவிகிதப் பொருட்களை உற்பத்தி செய்கிற முதலாளித்துவம் (தொழிலடிப்படையில் வளர்ச்சியுற்றுள்ள நாடுகளைப் பற்றிப் பேசினால்) உலக சமூகப் பொருளாதார அமைப்பு முறையான முதலாளித்துவம் அதற்கு எதிரான சமூக பொருளாதார அமைப்பு முறையுடைய சமுதாய அமைப்பான சோஷலிச சமூக அமைப்பு முறையுடன் இணைந்து வாழ்வதைத் தவிர்க்க முடியாது. அதனுடன் உலக சக்திகள் சோஷலிசத்தின் சார்பாக ஒரு சீராக மாறிக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் பல்வேறு துறைகளில் அதனுடன் ஒத்துழைப்பதை அதனால் தவிர்க்க முடியவல்லை.

2. அதன் பின்னால் தொக்கி நின்ற பலவற்றை இழந்து நிற்கிற (காலனிப் பேரரசுகளின் அழிவின் காரணமாக) முதலாளித்துவம் அது. அதன் பழைய கரை ஓரக் காலனி நாடுகளை இழந்து நிற்கிற முதலாளித்துவம் அது. அதனுடைய பொருளாதார அமைப்பிற்குள் பெரும்பாலான வளர்முக நாடுகளை வைத்துக் கொண்டிருக்கிற முதலாளித்துவம் அது. எனினும் அந்த முதலாளித்துவம், இப்போது முந்திய காலனி நாடுகளின் கோரிக்கைகளையும், தேவைகளையும் நிறைவு செய்ய வேண்டுமென்று மேலும் மேலும் வற்புறுத்தப்படுகிறது. அந்த முதலாளித்துவம் இந்த நாடுகளின் மீது தன் செல்வாக்கைச் செலுத்துகிறது. ஆனால் மிக அதிகமாக அந்த நாடுகளின் மூலப்பொருட் களையும், எரிபொருட்களையும் நம்பி வாழ்கிற-1970 களின்

நடுவில் முழுவதுமாக வெளிப்பட்ட சார்பு நிலையுடைய ஒரு முதலாளித்துவமே அது.

உலகில் நடைபெற்றுவரும், சமுதாய மாற்றங்களில், அனைத்துக்கும் மேலாக இரண்டு எதிரெதிரான அமைப்பு முறைகளையுடைய சமூகங்களுக்கிடையே உள்ள சக்திகளின் அணியில் ஏற்பட்ட மாற்றங்களில் விஞ்ஞான—தொழில் நுட்பப் புரட்சியின் பங்கு என்ன?.... அதன் பங்கு மிக அதிகமானது.

விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றத்தை விரைவு படுத்துவதும், விஞ்ஞான முன்னேற்றத்தை நடைமுறைச் செயல்களுக்குப் பயன்படுத்துவதும்; இயல்பாகவே சோஷலிசத்தின் சமூக பொருளாதார அரசியல்நலன்களைப் பயன்படுத்துவதுடன் இணைத்து ஒரு உண்மையான கலாச்சாரப் புரட்சியை நிறைவேற்றுவதும்தான் உலக மக்கள் தொகையில் 10 சதவிகித மக்களே வாழ்கிற நாடுகளையுடைய சோஷலிச நாடுகளின் கூட்டத்தை உலக தொழில் உற்பத்தியில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கை உற்பத்தி செய்யும் திறன் படைத்ததாகச் செய்துள்ளது என்று நான் கூற விரும்புகிறேன்.

மற்றொரு விஷயமும் முக்கியமான ஒன்றே. சோவியத் ஒன்றியம், யு. எஸ்.சைக் காட்டிலும் குறைந்த மொத்த பொருளாதார திறன் படைத்ததாக இருந்தாலும், ஏகாதிபத்தியத்தினுல் அதன் மீது திணிக்கப்பட்ட இராணுவ மோதல் சூழ்நிலையில், போர் முக்கியம் வாய்ந்த ஆயுத உற்பத்தியில், யு. எஸ். உடன் சமமான நிலைக்கு வரமுடிந்திருக்கிறது. நீங்கள் அறிந்திருப்பது போல, ஏகாதிபத்தியம் ஒரு புதிய போரைத் தூண்டுவதற்கு உண்மையான பெருந்தடையாக அது விளங்குகிறது. அது சோவியத் விஞ்ஞானமும், பொறியியலும், சோஷலிச நாடுகளின் மக்களுக்கும், மனித இனத்துக்கும், உலக நாகரிகத்திற்கும் செய்துள்ள பெரும் சேவையாகும்.

இவ்வாறாக, விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி மனித வாழ்வின் சூழ்நிலைத் தொகுதி முழுமையிலும், மிகப்பெரும் பண்பியல் மாற்றங்கள் தோன்றுவதை ஊக்குவித்து வருகிறது. வர்க்க அணிகளிலும், உலக மட்டத்திலான சமூக சக்திகளின் அணிகளிலும்கூட பெரும் பண்பியல் மாற்றங்கள் தோன்றுவதை ஊக்குவித்து வருகிறது. இந்த மாற்றங்களின் பண்பும், அவைகள் தோற்றுவிக்கிற பல பிரச்சினைகளும், எவ்வித சந்தேகமுமின்றி அனைத்துத் துறை மார்க்சீய-லெனினிய விஞ்ஞான பகுப்பாய்வுக்குரிய முக்கியமான விஷயங்களாகும்.

இரண்டாவது விஷயம் முதலாளித்துவ நாடுகளில் நடந்து வருகிற உள்நாட்டு நிகழ்ச்சிகளின் மீது விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் விளைவுகள் பற்றியதாகும்.

சென்ற சில ஆண்டுகளுக்கு முன் இருந்த முதலாளித்துவத்துடன் ஒப்பிட்டால் இன்றைய முதலாளித்துவம் மிகவும் அதிகமாக வளர்ச்சியடைந்துள்ள முதலாளித்துவ நாடுகளுக்குள் உள்ள வர்க்க, சமூக, அரசியல் சக்திகளின் அணியிலிருந்து சிறப்பான வேறுபாடுடையதாகவுள்ளது. அது மிக அதிகமாக வளர்ச்சியடைந்த அரசு ஏகபோக முதலாளித்துவம் மட்டுமல்ல இந்த முதலாளித்துவத்தில் பொருளாதார, சமூக-பொருளாதார முரண்பாடுகள் கூர்மையாகி வளர்வது, அனைத்து வழிகளிலும் அதன் இயல்பாயமைந்துள்ளது. அது மட்டுமல்லாது ஏகபோகங்களின் நலன்கள், நாட்டிலுள்ள பெரும்பான்மையான மக்களின் நலன்களுடன் மோதிக் கொள்வதும்கூட அதன் உள்ளார்ந்த இயல்பாயுள்ளது. பாசிசமும், முதலாளித்துவத்தின் அச்சுறுத்தலும் முன்னெப் பொழுதும் இல்லாத அளவில் தீவிர வலதுசாரி பிற்போக்கு முதலாளித்துவ எதேச்சாதிகாரங்களை எதிர்க்கும் ஜனநாயக இயக்கங்களின் கொந்தளிப்பும், மேலும் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி முதலாளித்துவத்தின் உள்நாட்டு சாயல் முழுமையையும், மாற்றுவதில் பெரும் பங்கு வகித்

துள்ளதோடு அது நிலவுகிற வெளிச் சூழ்நிலைகளையும் மாற்றுவதில் பெரும் பங்கு வகித்துள்ளது.

முதலாளித்துவத்தின் கீழ் விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்ற நிகழ்ச்சிப் போக்கின் சிக்கலான தன்மையும், முரண்பட்ட தன்மையும் அதனுடைய உடன்பாட்டுக் கூறுகளின் மோதல்களும், எதிர்மறைக் கூறுகளின் மோதல்களும் ஆய்வுக்கட்டுரையில் குறிக்கப் பட்டுள்ளன. முதலாளித்துவம் நிலவுவது, இயற்கையின் சக்திகளின் தொடர்பாக மனிதனுடைய அறிவு பற்றிய துறையில் இதுவரை கண்டிராத அளவு முன்னேற்றம், விஞ்ஞானம் தொழில் நுட்பப் புரட்சியின் உள்ளார்ந்த சமூக விவகாரங்களின் பொருளாயதத் துறைகளில் முன்னேற்றம் அடைவதற்கு மாபெரும் வாய்ப்புகளைத் தருவதாக இருப்பதுடன் மனித இனத்திற்கே பேராபத்தை விளைவிக்கும் அபாயமும், மனித நாகரிகம் முழுமையும் அழிந்து விடும் அபாயமும் இணைந்ததாகவுள்ளது. விஞ்ஞானத்தை இராணுவ மயமாக்குவதற்கும், விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியை ஒரு இராணுவ தொழில் நுட்பப் புரட்சியாக மாற்றுவதற்கும் அதைப் பிற்போக்கு ஆக்கிரமிப்பு நோக்கங்களுக்குப் பயன்படச் செய்வதற்கும், ஏகாதிபத்தியம் செய்கின்ற முயற்சியின் நேரடி விளைவே அது.

அதிலிருந்து ஓர் உலகளாவிய அணு ஆயுதப் போரைத் தடுப்பதிலும், நாடுகளின் அமைதியையும், பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதிலும் அனைத்து முற்போக்கு சக்திகளும், சமாதான சக்திகளும், முற்போக்கு விஞ்ஞானிகளும், பொறியியலாளர்களும் பெரும் பொறுப்புடையவர்களாக இருக்கிறார்கள். இன்றைய சகாப்தத்தின் இன்றியமையாக் கடமை அதுதான். மனித இனத்தின் முன்னுள்ள கடமைகளிலெல்லாம் முதன்மையானதும் அதுதான்.

முதலாளித்துவப் பொருளாதாரத்தின் மீது விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் விளைவு மிக உயர்ந்த

நிலையில் உள்ள இயக்கவியல் நிகழ்ச்சிப் போக்கேயாகும். அது ஏகபோகங்களின் இயல்பியல் உள்ளார்ந்ததாக இருக்கிறது. பலமுறை லெனின் குறிப்பிட்டதைப் போல தூய விஞ்ஞானத்திலும், செயல்முறை விஞ்ஞானத்திலும் உள்ள இரண்டு எதிரெதிரான இயல்புகளுக்கிடையிலான போராட்டம், ஏகபோகங்களுக்கே இயல்பான சிறப்புத் தன்மையாக உள்ளது. அதாவது, முன்னேற்றத்தை நோக்கிய ஓரியல்பும், தேக்கநிலைக்கான மற்றோரியல்பும், மற்றும் முன்னேற்றத்தைச் செயற்கையாக வேண்டுமென்றே தடுத்து நிறுத்தலும். நிச்சயமாக இந்த இயல்புகளில் முந்தியதை சோஷலிசத்துடன் ஏற்படும் போட்டி தூண்டி வருகிறது. ஆனால் முதலாளித்துவத்தின் இயல்பே அதன் முன்னேற்றத்திற்குப் பல கடுமையான கட்டுப்பாடுகளைத தோற்றுவிக்கிறது[1].

ஒருபுறம் முதலாளித்துவத்தின் கீழ் தொழில் நுட்ப முன்னேற்றம் உற்பத்தி சாதனங்களைச் சிறப்படையச் செய்வதற்கும், உழைப்பின் உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்கும், பொருளாதார செயல்திறனை வேகமாக வளர்ச்சியடையச் செய்வதற்கும், இதுவரை பயன்படுத்தப்படாத, இயற்கையின் புதிய மூலப்பொருட்களை மேலும் மேலும் அதிகமாக பொருளாதாரப் புழக்கத்திற்குக் கொண்டு வருவதற்கும் புதிய கிளைகள் பலவற்றைத் தோற்றுவிப்பதற்கும், தனிச்சிறப்புத் திறமை பெறுவதற்கும், கூட்டுறவு வளர்ச்சியடைவதற்கும், சந்தைகளை விரிவாக்கம் செய்வதற்கும், இன்னும்இது போன்ற பலவற்றிற்கும் வழி செய்கிறது.

மறுபுறம் இந்தப் புரட்சியினால் முடுக்கிவிடப்பட்ட உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி 'உதாரணமாக வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில்1913-1937இல் ஆண்டுக்கு 1 . 8 சதவிகிதமாக இருந்த தொழில் பொருள் உற்பத்தி வளர்ச்சி விகிதம், 1953-1973 இல் ஆண்டுக்கு 5.4 சதவிகிதமாக ஆகியிருந்ததை மட்டும் மனதில் கொண்டால் போதுமானதாகும்) முதலாளித்துவத்தின் கீழ் பல்வேறு முரண்பாடு

களைத் தீவிரமாக்குவதற்கு வழி செய்திருக்கிறது. குறிப்பாக, உற்பத்தியின் சமூகத் தன்மைக்கும், உழைப்பின் உற்பத்தியைச் சுரண்டும் தனி நபர் முதலாளித்துவ உருவத்தின் சுரண்டலுக்குமிடையேயான முரண்பாட்டைத் தீவிரமாக்கியுள்ளது. கீழ்க்கண்டவை அதன் தெளிவான வெளிப்பாடுகளாகும்.

— தொழில் நுட்ப முன்னேற்றத்தினால் தூண்டி விடப்பட்ட பொருளாதாரத்தின் வளர்ந்துவரும் ஏகபோகத் தன்மைகளுக்கும், உழைக்கும் மக்களிற் பெரும் பகுதியினரின் அடிப்படை நலன்களுக்குமிடையிலான முரண்பாடுகள் தீவிரமடைவது. சான்றாக, பொருளாதார நெருக்கடிகள், இதுவரை கண்டிராத பணவீக்கம், வேலையில்லாத் திண்டாட்டம் முதலியவை.

— அரசு ஏகபோகக் கட்டுப்பாடு இயந்திரத்திற்கும் (ஒரு நாடு அல்லது மற்றொரு நாட்டின் எல்லைக்குள் கட்டுப்பட்டுள்ள செயல் வட்டங்களையுடையவை) எந்த தேசிய எல்லையையும் அறியாத சர்வதேச ஏகபோகங்களின், இதுவரை கண்டிராத செயல் முறைக்கும் இடையில் காணப்படும் முரண்பாடுகள் மிகுதியாவது. விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் தாக்கத்தினால், வாழ்க்கைத்தரமும், உற்பத்தி அளவும் உயர்ந்து வருவதனால், பயனுள்ள திட்டமிடலும், முன்னறிந்து கூறலும் தேவைப்படுகிறது. ஆனால் அந்த வேளையில் அரசு ஏகபோகக் கட்டுப்பாடு குறைந்த வாய்ப்புகளை அளிக்கும் இயல்புடையதாக இருக்கிறது.

— தனித்தனி முதலாளித்துவ நாடுகளின் தேசிய பொருளாதார இயந்திரங்களிடையேயுள்ள முரண்பாடுகள் தீவிரமடைகின்றன. உலக முதலாளித்துவப் பொருளாதாரம் முழுமையின் வளர்ச்சிக்கான தேவைகளும் தீவிரமடைகின்றன. உலகப் பிரச்சினைகள் பல தீவிரமடைந்துள்ளன என்பதே அதற்கு மிகச் சிறந்த சான்றாக விளங்குகிறது: முதலாளித்துவ உலகப் பொருளாதாரத்தின் கட்டமைப்பு

நெருக்கடி (ஆற்றல், மூலப்பொருட்கள், உணவு, பணவியல், நீதி ஆகியவை தொடர்பானவை) வளர்ந்த நாடுகளுக்கும், வளரும் நாடுகளுக்குமிடையே நிலவும் முரண்பாடுகள்; இன்றைய முதலாளித்துவத்தின் முக்கியமான மூன்று கேந்திரங்களிடையே யு.எஸ்; மேற்கு ஐரோப்பா; ஜப்பான்) நடைபெறும் தீவிரமான பொருளாதாரப் போராட்டம்; பல முதலாளித்துவ நாடுகளிடையே பொருளாதார இணைப்பு வளர்வதுடன் தொடர்பான முரண்பாடுகள், இன்னும் இதுபோன்ற பல.

இந்த முரண்பாடுகள் அனைத்தும் சென்ற வாணிபச் சுழலின் விளைவாகப் பெருகியிருந்த முரண்பாடுகளுடன் — குறிப்பாக 1974-1975 களில் ஏற்பட்ட ஆழ்ந்த பொருளாதார நெருக்கடிக்கும், 1970 களின் நடுவிலும், முடிவிலும் ஏற்பட்ட பொருளாதார எழுச்சிகளுக்கும் வழி கோலின. அது தனித்தன்மை வாய்ந்தது. மேலும், இந்த நெருக்கடி (1929-1933இல் ஏற்பட்ட நெருக்கடிக்குப் பின் நிகழ்ந்த நெருக்கடிகள் எல்லாவற்றைக் காட்டிலும் கடுமையானது) போர் பிற்காலத்தில் மிகவும் வளர்ந்திருந்த அரசு ஏகபோக பொருளாதாரத்தைத் தாக்கியது. அந்த ஏகபோக பொருளாதாரம் கட்டுப்பாடு முறைகளும், தூண்டுதல் முறைகளும் கொண்டிருந்ததுதான். அதேசமயம் பகுதிச் சீர்திருத்தங்களைச் செய்யவும் முதலாளித்துவம் தயாராக இருந்தது. உற்பத்தியைப் பெருக்கும் திறனும், வளர்ச்சி விகிதத்தை உயர்த்தும் திறனும்கூட இருந்தன. முதலாளித்துவவாதிகள் தங்கள் நிலைமைகளை ஒன்றிணைத்துச் சீராக்குவது விஞ்ஞான தொழில் நுட்பத்தின் முன்னேற்றத்தைப் பயன்படுத்துவதற்கான முயற்சி ஆகிய அனைத்தும் இருந்தன. எனினும் அந்த நெருக்கடி போருக்குப்பின் கட்டிவளர்க்கப்பட்ட மிக வளர்ச்சியடைந்திருந்த அரசு ஏகபோக பொருளாதாரத்தைத் தாக்கியது.

இவ்வாறாக உலக அரசியல் மற்றும் சமூக நிலைகளில் ஏற்பட்ட முக்கியமான மாற்றங்களைக் கருத்தில் கொண்டு

பார்த்தால், குறிப்பாக முக்கியமான ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளின் முன் முதலாளித்துவத்தின் நிலைகளின் வலிமையைக் குறைப்பதையும், தனித்தனி முதலாளித்துவ நாடுகளிலும், உலக முழுவதிலும் நிலவுகிற முதலாளித்துவ முறையிலும் நிலவுகின்ற உள்முரண்பாடுகள் தீவிரமடைந் திருப்பதையும், உலகப் பிரச்சினைகள் பல தீவிரமடைந் திருப்பதையும் கருத்தில் கொண்டு பார்த்தால் (குறிப்பாக மூலப்பொருட்களும், ஆற்றலும் குறைந்த விலையில் கிடைத்தல் முடிவுற்றதும், சூழ்நிலையைப் பாதுகாக்கும் பிரச்சினை தோன்றி வளர்ந்திருப்பதும், அந்தக் காரணங் களுக்காக முதலீடு செய்வது குறிப்பிடத்தக்க அளவு பெருகி யிருப்பதும், சர்வதேசப் பொருளாதார உறவுகளை வளர்ப்பதற்கும், உலகப் பொருளாதாரம் ஒழுங்காகச் செயல்படுவதற்கும் முக்கியமான நிபந்தனையாக விளங்கும் வளரும் நாடுகளுக்கும், வளர்ந்த நாடுகளுக்குமிடையே நிலவுகிற இடைவெளியை நிரப்புவதற்கான தேவையும், நூற்றாண்டின் முந்திய 3 கால் பகுதிகளில் ஏற்பட்ட நெருக்கடிகளுடன் ஒப்பிட்டால் மறுஉற்பத்தி செய்கிற சூழ்நிலைகளில் குறிப்பிடத்தக்க ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்ட ஒரு கால வெளியை 1970 களின் மத்திய பகுதியில் ஏற்பட்ட உலகப் பொருளாதார நெருக்கடி தோற்றுவித்திருக்கிறது என்று நம்புவதற்கு அனைத்து வாய்ப்புகளும் உள்ளன.

விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் தாக்கத்தின் விளைவாக முதலாளித்துவ சமூக-பொருளாதார முரண்பாடுகள் தீவிரமடைவதுடன் தொடர்புடைய பிரச்சினைகளின் ஒரு தொகுதி—இந்தப் பிரச்சினைகள் பன்முகத்தன்மை கொண்டவையாகவும், ஆழமானதாகவும் உள்ளன—அந்த இலட்சியத்திற்கெனவே அமைக்கப்படுகிற நம்முடைய மாநாட்டின் சிறப்பான பகுதியில் விரிவாக வாதிப்பதற்கு ஏற்ற ஒரு பொருளாகும்.

முதலாளித்துவத்தில் தோன்றித் தீவிரமடைந்து வருகிற முரண்பாடுகளுக்கும், விஞ்ஞான-தொழில் நுட்பப்

புரட்சியின் வருங்கால வளர்ச்சிக்கும், முதலாளித்துவ நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்குமிடையேயான தொடர்பு மிக அதிகமான-முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது என்பது தான் அடுத்த விஷயமாகும். அந்த விஷயமும் கூட குறைந்த முக்கியத்துவம் வாய்ந்தது அல்லதான். அது தொடர்பான பிரச்சினைகளும் கூட தனிச்சிறப்பாக மறு உற்பத்தி பற்றி விவாதிக்க இருக்கும் குழுவில் விவாதிக்கப் படும். ஆனால் எங்களது நிறுவனத்தினால் மேம்பாடடையச் செய்யப்பட்டிருக்கிற ஆராய்ச்சிக் கட்டுரை மற்றும் முன்னறிவுப்புகளின் அடிப்படையில் ஒரு சில தொடக்க நிலைக் கூற்றுக்கள் இப்போது மிகவும் ஏற்புடையதாக இருக்கும்.

இன்றைய முதலாளித்துவத்தின் இன்னல்களும் முரண்பாடுகளும், நாம் தெளிவாக அறிந்து கொள்ளக் கூடியதே; மேலும் அவைகள் தவிர்க்க முடியாதவாறு மிகவும் மோசமாகின்றன. முதலாளித்துவத்தின் விஞ்ஞானம், பொறியியல் மற்றும் பொருளாதாரம் ஆகியவை அப்படியே நிலையாக நின்றுவிடும் என்றோ அல்லது மேலும் பின்தங்கி விடும் என்றோ அதற்குப் பொருள் அல்ல. முதலாளித்துவத்தின் உற்பத்தி சக்திகளில் ஓர் பெரும் தடங்கல் ஏற்படுவதை உடனடியான வருங்காலத்தில் காண முடியும் என்றோ அல்லது அடுத்த சில பத்தாண்டுகளில் காணமுடியும் என்றோ அல்லது அது தானாகவே தேக்க நிலையடைந்து விடும் என்றோ அது குறிக்கவுமில்லை. இன்றைய முதலாளித்துவத்திடம் உள்ள பெரும் வாய்ப்புகளைக் குறைத்து மதிப்பிடுவது பெரும் தவறாகும். "முதலாளித்துவம் தானாகவே சிதைந்து அழிந்துவிடும் என்று குறி சொல்வது, கம்யூனிஸ்டுகளின் மனதிலிருந்து வெகு தொலைவில் இருக்கிறது. அது இன்னும் கிடப்பில் போதுமான ஆயுதங்களை வைத்திருக்கிறது"[2] என்று சி.பி.எஸ்.யு. வின் 25வது காங்கிரசில் சொற்பொழிவாற்றும் போது லியோனித் பிரெஷ்னேவ் கூறினார்.

இந்த சேமப்படைகளில் மிகவும் முக்கியமான ஒன்று வருங்காலத்தில், விஞ்ஞானத்திலும், பொறியியலிலும், ஏற்படக்கூடிய முன்னேற்றங்களிலும், பொருளாதாரத்தில் அவைகளில் ஏற்படும் முன்னேற்றங்களை நடைமுறையில் பயன்படுத்துவதிலும், உற்பத்தி சக்திகளின் முன்னேற்றத் திலும் உள்ள வாய்ப்புகள் ஆகும். இந்த வாய்ப்புகளும் கூட மிக அதிகமே. விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் போக்கு வருகிற பத்தாண்டுகளில் மிக வேகமாகச் செல்லும் இயல்புடையதாக இருக்கும் என்பதே நம் கருத்து என்று கூற விரும்புகிறோம்.

குறிப்பாக கீழே கொடுக்கப் பெற்றவற்றை மனதில் கொண்டு பார்த்தால், முன்னரே படைக்கப்பட்டு, வேகமாக வளர்ந்துவரும் விஞ்ஞான நிகழ்ச்சிப் போக்கின் கையிருப்பு போன்ற ஒரு காரணி பொருளாதாரத்தின் மீது மேலும், மேலும் அதிகமான செல்வாக்கைக் கொண்டிருக்கும்.

—கம்ப்யூட்டர்களில் ஏற்படும் முன்னேற்றங்கள், நுண்மின்னணு இயல் மக்களிடையே வெகுவாகப் பரவுவது, இயந்திர மனிதர்களைப் பரவலாகப் பயன்படுத்துவது ஆகியவற்றின் அடிப்படையில் தானியங்கி முறை தீவிரப் படுவதும், வளர்ச்சி பெறுவதும்.

—உயிரியல் பற்றிய அறிவில் ஏற்படும் பெரும் மாற்றங்கள் உணவு உற்பத்தித் திறனில் ஒரு பெரும் உயர்வை உண்டாக்கும்.

—உற்பத்தியில் இரசாயனத்தைப் பயன்படுத்துவது, திட்டமிட்ட தன்மைகளைக் கொண்ட மூலப்பொருட்களைப் படைப்பதற்குரிய வாய்ப்புகளைப் பெருக்கும்.

—நாம் வாழும் உலகின், ஆராய்ந்து அடக்கி ஆளப் படாத மண்டலங்களான உலகப்பெருங்கடல், புவியோட்டிற் கடியில் உள்ள நில அடுக்குகளின் பகுதிகள், ஆர்க்டிக் பேராழியையும், அதற்கு அருகில் உள்ள நிலப்பரப்பு களையும் பற்றிய ஆராய்ச்சிகள் தீவிரப்படுத்தப்படும்.

— ஆற்றலைப் பெறும் புதுவழிகளை வளர்ச்சியடையச் செய்வதில் பெறும் முன்னேற்றமானது, குறிப்பாக, அணு சக்தியைப் பெருக்கும் ஆலைகளை வளர்ச்சியடையச் செய்யும் வழிகளில், வெப்ப அணு ஆற்றலை ஒன்றிணைக்கும் முறையைப் பயன்படுத்துவதில், சூரிய ஆற்றலைப் பயன் படுத்துவதில் நாம் காணக்கூடிய முன்னேற்றமானது நாம் கண்டறியக் கூடிய வரப்போகும் 20-லிருந்து 30 ஆண்டு களுக்குள்ளாக, முக்கியமானவற்றையும் உள்ளிட்ட ஆற்றல் பற்றிய பிரச்சினைகளைத் தீர்ப்பதை எளிதாக ஆக்கும்.

19.0 லிருந்து 2000 வரையுள்ள ஆண்டுகளில் முதலாளித்துவ உலகப் பொருளாரத்தின் முக்கிய போக்கு களையும், இயல்புகளையும், வளர்ச்சி விகிதங்களையும் பற்றிய உண்மையான மதிப்பீடுகள் செய்யும் நோக்கம் கொண்ட குறிசொல்லும் ஆய்வுகளே, அண்மை ஆண்டுகளில் எங்கள் நிறுவனத்தின் பணியின் முக்கியமான துறையாக இருந்து வருகிறது. சோவியத் ஒன்றியத்தின் விஞ்ஞான கழகம், விஞ்ஞான தொழில் நுட்பத்திற்கான சோவியத் ஒன்றியத்தின் அரசுக் குழு ஆகியவை மேற்கொண்டுள்ள பொதுவான ஒன்றிணைந்த பகுதியின் ஒரு பிரிவே அது— அது 2000 ஆண்டுகள் வரைக்கும் விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றம், அதன் சமூக—பொருளாதார விளைவுகள் ஆகியவற்றின் ஓர் ஒன்றிணைந்த வேலைத் திட்டமும் ஆகும்.

அதனுடைய முன்னறிவுப்புகளைத் தயார் செய்வதில் நிறுவனம் முன் கூட்டியே கீழே குறிப்பிடப்படும் விஷயங் களை உண்மையென ஏற்றுக் கொள்கிறது. இன்னும் ஏற்றுக் கொண்டே வருகிறது.

— முதலாளித்துவப் பொருளாதாரம் வருங்காலத்தில் சுழல் முறையில் வளர்ச்சியடையும், அதில் தீவிர நெருக்கடி களும், வாணிப மந்தங்களும், விலை வீழ்ச்சி காலங்களும், இன்றியமையாத முறையில் இருக்கவே செய்யும்.

— உயர்மட்ட பணவீக்கமும், தீராத வேலையில்லாத் திண்டாட்டமும், கட்டமைப்பு நெருக்கடிகளும், சமூகப்

பிணக்குகளும் மிகுதியாவதும், வெளிப்புறப் பொருளாதார முரண்பாடுகள் கூர்மையடைவதும், முதலாளித்துவ பொருளாதாரம் வளர்ச்சியடைய விடாமல் தடுத்து நிறுத்தும் காரணிகளில் சிலவாகும்.

முதலாளித்துவ உலகத்திலும், வளர்முக நாடுகளிலும் உள்ள வேறுபட்ட பகுதிகளில் நிகழக்கூடிய சமுதாயப் புரட்சிகளை மனதில் கொண்டு பார்த்தால், வருகிற பல பத்தாண்டுகளில் மேலும், மேலும் புதிய ஏகாதிபத்தியத்தின் சங்கிலியின் பல கண்ணிகள் உடைவது சிறப்பான நிகழ்ச்சிகளாக இருக்கும். கிரீஸ், ஸ்பெயின் போன்ற நாடுகளில் எதேச்சாதிகார அரசுகள் வீழ்ந்ததும், போர்த்துக்கல், அங்கோலா, எத்தியோப்பியா, ஆப்கானிஸ்தான், ஈரான் ஆகிய நாடுகளில் நிகழ்ந்த புரட்சிகளும், நாம், உண்மையென முன்கூட்டியே ஏற்றுக் கொண்ட இந்த விஷயங்கள் உண்மைதான் என்பதற்குச் சான்றாக விளங்குகின்றன.

சர்வதேச அரசியல் உறவுகளின் வளர்ச்சி வாய்ப்புகள் பதற்றத்தணிவின் விளைவுகள், இராணுவச் செலவுகளில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் எவ்வாறுள்ளன என்பதைப் பொருத்து வரும் பொருள் உரைக்கும் மதிப்பீடுகள் மாற்றம் அடைகின்றன.

பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் காரணிகளையும், அவற்றை வளர்க்கும் காரணிகளையும் பற்றி நாம் கவனம் செலுத்தினால் (விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றம்; உற்பத்தியின் அமைப்பு முறையையும், நிர்வாகத்தையும் சிறப்புறச் செய்வது; உள்நாட்டுச் சந்தையை தனிநபர் குறிப்பாக பொதுமக்கள் நுகர்வின் வளர்ச்சியின் மூலம் விரிவடையச் செய்வது; வெளிநாட்டுச் சந்தைகளின் பங்கும், பரிமாணமும் வளர்தல் — இன்னும் இது போன்ற பல.) சூழல் மாற்றங்களுக்கேற்ப சரிசெய்யப்பட்ட நீண்டகால முன்னறிவுப்புக் குறியீடுகள், முதலாளித்துவப் பொருளாதாரத்தின் வளர்ச்சி விகிதங்கள்

1950-களிலும், 1960-களிலும் இருந்ததைக் காட்டிலும் இந்த நூற்றாண்டின் இறுதியில் மிகவும் குறைந்த அளவாகவே இருக்கும். எனினும் அவை குறிப்பிடத்தகுந்த அளவாகவே யிருக்கும். முன் அறிவிக்கப்பட்ட விகிதத்தில் 1978 உடன் ஒப்பிடும்போது 2000-த்தில் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 100-லிருந்து 130 ஆக உயரலாம். உலக சோஷலிசப் பொருளாதாரத்தின் முன்னறிவிப்புகளையும் வளர்ச்சித் திட்டங்களையும், இரண்டு அமைப்புக்களிடையே ஏற்படக் கூடிய போட்டிபற்றியும் மதிப்பீடு செய்யும் பொழுது இவை களை மனதில் கொள்ளாமல் இருக்க முடியாது.

முதலாளித்துவத்தில், விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றத்தினால் ஏற்படக்கூடிய வாய்ப்புகளைப் பற்றிய குறியீடுகளைப் பொருத்தவரை, உடனடியான வருங் காலத்தில், ஆற்றலையும், பொருட்களையும் சிக்கனமாகப் பயன்படுத்துவதற்குத் தேவையான தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்துவதற்கான முக்கியத்துவம் எங்கள் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட முன்னறிவிப்பிலிருந்து மிகவும் தெளிவாகத் தெரிகிறது. அதன் விளைவாக 1980-களின் நடுப்பகுதிக்குள்ளாகவே யு. எஸ். பொருளாதாரத் திலும், வேறு வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் பொருளாதாரத்திலும் பெருமளவு கட்டமைப்பு மாற்றங்கள் இருக்கும்; இந்த மாற்றங்கள் இரும்பு எஃகு தொழில் போன்ற தொழில்களுக்குத் தேவையான பொருட்கள் வெட்டியெடுக்கப்படும் எடை ஒப்பீட்டில் குறையும். ஆற்றல், இரசாயனம், பொறியியல் ஆகிய தொழில்களின் வளர்ச்சி விகிதம் உயர்கிற திசையைக் கொண்டதாயிருக்கும். கம்ப்யூட்டர் உற்பத்தியில் ஒரு பெருக்கம் இருக்கும். யு. எஸ். சின் உற்பத்தி ஏறத்தாழ 350,000 ஆகவும், மேற்கு ஜெர்மனியில் ஏறத்தாழ 40,000 ஆகவும், ஜப்பானில் ஏறத்தாழ 60,000 ஆகவும் கம்ப்யூட்டர் உற்பத்தி எண்ணிக்கை இருக்கும். ஒருவேளை 1985 ல் திட்டமிடப்பட்டு, கட்டுப்

படுத்தப்பட்ட இயந்திரக்கருவிகள் 1978ல் இருக்கும் அளவைக் காட்டிலும் ஏறத்தாழ இருமடங்காக இருக்கும். இயந்திர மனிதர்களின் உற்பத்தியும், அலுமினியம், கட்டுமானத் தொழிலுக்கு வேண்டிய பொருட்கள் பிளாஸ்டிக், செயற்கை ரெக்சின் ஆகியவற்றின் உற்பத்தியும் குறிப்பாக மிக அதிகமாக உயரும்.

யு. எஸ்., மேற்கு ஐரோப்பா, ஜப்பான் ஆகிய நாடுகளிடையேயுள்ள முக்கியமான பொருளாதாரக் குறியீடுகளிடையேயுள்ள உறவுகளை மேலும் இன்றியமையாத மாற்றங்களுக்கு இட்டுச் செல்லக்கூடிய முதலாளித்துவத்தின் ஒரு சீரற்ற வளர்ச்சி விதி வருகிற சில பத்தாண்டுகளில் முழுதும் நடைமுறையில் வந்துவிடும். 2000 த்தில் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் தொழிற் பொருட்களின் உற்பத்தி யு. எஸ். உடைய உற்பத்தியைக் காட்டிலும் 120 சதம் அதிகமாக இருக்கும். ஜப்பானின் உற்பத்தி 47 சதம் அதிகமாக இருக்கும் (1977 ல் முறையே 95 சதவிகிதத்திற்கும் 27 சதவிகிதத்திற்கும் மாறாக): 2000த்தில் மேற்கு ஐரோப்பிய நாட்டுத் தொழிலாளர்களின் உற்பத்தித்திறன், அமெரிக்கத் தொழிலாளியின் உற்பத்தித்திறனைக் காட்டிலும் 70 சதவிகிதமாகவும், ஜப்பானிய தொழிலாளியின் உற்பத்தித் திறன் 75 சதவிகிதமாகவும் இருக்குமென நினைப்பதற்கு (1977 ல் முறையே 48 சதவிகிதமும், 38 சதவிகிதமும் ஆக இருக்கிறது) அடிப்படைகள் உள்ளன.

2000 த்தில் வளரும் நாடுகளிடையேயுள்ள சோஷலிசம் அல்லாத நாடுகளின் தொழிற் பொருட்களின் உற்பத்தியின் அளவு மிகவும் அதிகமாக, ஏறத்தாழ 25 முதல் 28 சதவிகிதம் வரை அதிகமாக இருக்கும் எனலாம். (1977 ல் 14.7 சதவிகிதமாக இருந்ததுடன் ஒப்பிடும் பொழுது); அவைகளின் ஆற்றல் உற்பத்தி 55 லிருந்து 60 சதவிகிதம் வரையும், எண்ணெய் தோண்டி எடுப்பதில் 80 சதவிகிதம் வரையும் உயரலாம்; அதே வேளையில் வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகள் வளரும் நாடுகள் ஆகியவற்றிற்

கிடையிலே ஏற்படும் இடைவெளியானது பொருளாதார வளர்ச்சியின் முக்கியமான குறிகளான உற்பத்தித் திறன் மற்றும் தனி மனித நுகர்ச்சியின் அளவுகள் உயரும் இயல்புகளைக் கொண்டதாய் இருக்கும். மேலும் இவை தவிர வளரும் நாடுகளிடையே வேறுபாடுகள் நிறைந்திருக்கும். அவைகளிற் சில, பல குறிகளைப் பொருத்தவரை, நடுநிலை வளர்ச்சி பெற்றுள்ள நாடுகளுக்கு இணையாக வளர்ந் திருக்கும்; வளரும் உலகில் மையங்கள் சில "துணை ஏகாதிபத்தியங்களாக", உருவாவதற்கான வாய்ப்புகளும் உள்ளன.

ஒரு சீரற்ற வளர்ச்சியும், ஒரு சில நாடுகள், மற்றும் ஒரு சில நாடுகளின் கூட்டம், வேறு சில நாடுகளை முந்திக் கொள்வதும், ஏகாதிபத்தியங்களுக்கிடையே நிலவும் முரண் பாடுகளையும், தொழில் துறையில் மிகுதியான வளர்ச்சி பெற்றிருக்கும் நாடுகளுக்கும், வளரும் நாடுகளுக்குமிடையே நிலவும் முரண்பாடுகளையும் மேற்கொண்டு தீவிரமடையச் செய்வதற்கான புறவய அடிப்படைகளாகும்.

அதே வேளையில் முதலாளித்துவ உலகில் மையத்தை நோக்கிச் செல்லும் இயல்பும், மையத்திலிருந்து விலகிச் செல்லும் இயல்பும் செயல்படும். முதலில் மையத்தை நோக்கிச் செல்லும் இயல்பின் கீழ், பல்வேறு நாடுகளில் உள்ள ஏகபோக முதலாளிகளின் பொதுவான வர்க்க நலன்கள் இருக்கும். எனவே அனைத்துப் புரட்சி சக்திகளின் ஒற்றுமை புறவயத் தேவையாகவுள்ளது. சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் ஒற்றுமையின் இன்றியமையாமை யும், சர்வ தேசீயத்தின் கோட்பாடுகளிலிருந்து சிறிதும் விலகாது பின்பற்றுவதன் இன்றியமையாமையும் இதிலிருந்து தெரிகிறது.

இயல்பாக அரசியல் இந்த அனைத்துக் காரணிகளுக்கும் கவனம் செலுத்தப்பட வேண்டும். இந்த மாநாட்டின் கவனத்தைக் கவரவேண்டிய தகுதியுள்ள மற்றொரு பிரச்சினையுமுள்ளது, அதாவது உண்மையான முன்னேற்றத்

திற்காக, விஞ்ஞானத்தையும், பொறியியலையும் மனித இனத்தின் நலனுக்காகப் பயன்படுத்துவதற்காக எழுந்திருக்கும் சக்திகளைப் பற்றிய பிரச்சினை; ஏகாதபத்தியங்களுடைய பிற்போக்கான வலுச்சண்டைக் கொள்கைக்கு எதிராகச் செயல்படும் சக்திகள் பற்றிய பிரச்சினை, விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் தொடர்ந்த வளர்ச்சியின் தொடர்பாக இந்த சக்திகளை எதிர் நோக்கி நிற்கின்ற கடமைகளைப் பற்றிய பிரச்சினை. அனைவரும் அறிந்திருப்பதைப்போல இது ஒரு முக்கியமான விஷயமாகும். எங்கள் நிறுவனத்தின் ஆராய்ச்சிக் கட்டுரை அதற்கு என ஒரு தனிப்பகுதியை ஒதுக்கியிருப்பது இயல்பானதேயாகும்.

அனைத்திற்கும் மேலாக உழைக்கும் மக்களின் நலனுக்காகவும், பொதுமக்கள் அனைவரின் நலனுக்காகவும், விஞ்ஞான- தொழில் நுட்ப முன்னேற்றத்தைப் பயன்படுத்துவதற்காகப் போராடுவதும், இராணுவமயமாக்கலின் வளர்ச்சியை எதிர்த்து அவர்கள் நடத்தும் போராட்டமும், ஒரு புதிய பெரும்போரை எதிர்த்து அவர்கள் நடத்தும் போராட்டமும் ஏகபோகங்களின் சர்வவல்லமை படைத்த தன்மையைக் கட்டுப்படுத்தவும், அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தைப் பேணிக்காத்து உயர்த்தவும், பொருளாதார சமூக விஷயங்களின் நிர்வாகத்தையும், பராமரிப்பையும் அனைத்து மட்டத்திலும் ஜனநாயகப்படுத்தவும் மேற்கொள்ளும் போராட்டத்துடன் இணைந்துள்ளன என்று நான் திட்டமாக வலியுறுத்திக் கூறவிரும்புகிறேன். வேறு மாதிரி சொன்னால், அந்தப்பதத்தின் பரந்த பொருளில் அது ஒன்றிணைந்த ஏகபோக எதிர்ப்பு, ஜனநாயகப் போராட்டத்தின் ஒரு பகுதியாகும்.

மேலும் விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியே தவிர்க்க முடியாதவாறு, முதலாளித்துவ சமூகத்தின் சமூகவர்க்கங்களை வேறுபடுத்துவதைத் தீவிரப்படுத்துகிறது. தொழிலாளி வர்க்கத்தின் எண்ணிக்கை, கல்வித்தரம்

திறமை, அமைப்புத்திறம் ஆகியவற்றில் வளர்ச்சி ஏற்படுதலும், அறிவு ஜீவிகள், மேசையடித் தொழிலாளிகள் ஆகிய வர்க்கங்கள் அத்துடன் தொடர்ந்து மேலும் ஒன்றுபடுதலும், பல பழைய சமூக முரண்பாடுகள் தீவிர மடைதலும், புதியவை தோன்றி வளர்தலும்—ஏகாதிபத்திய எதிர்ப்புச் செயல்முறைகளுக்கும், அனைத்து, பரந்த உழைக்கும் மக்களின் போராட்டத்திற்கும் மிகவும் சாதக மான சூழ்நிலையைத் தோற்றுவிக்கின்றன.

இந்த நிறுவனம், அதனுடைய ஆய்வுக் கட்டுரையில் முதலாளித்துவ நாடுகளில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளின் தத்துவார்த்த ரீதியில் விதிமுறைப்படுத்துதலையும், திட்டங் களுக்கான தேவைகளையும் அடிப்படையாகக் கொண்டு அரசு ஏகபோக கொள்கைக்கு எதிரான முக்கியமான ஜனநாயக மாற்று ஆலோசனைகளை உருவாக்கவும் முயற்சி செய்தது. சந்தேகமின்றி அந்த ஆலோசனைகள் தோழமை மிகுந்த வாதத்திற்கானவையே. எனவே நம்முடைய மகா நாட்டில் இந்த விஷயங்கள் உரிய இடம் பெறும் என எண்ணுகிறேன்.

வளரும் நாடுகளைப் பொருத்தவரை விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியினால் படைக்கப்பட்ட வாய்ப்பு களை அவைகள் தங்களது நலன்களுக்கு உடன்பாடாகப் பயனபடுத்துவதற்கான போராட்டமானது ஏகாதிபத்தியத் திற்கு மற்றும் புதிய காலனி முறைக்கு எதிரான போராட்டத்துடனும், சுதந்திரத்திற்காகவும், அரசாண்மைக்காகவும் நடைபெறும் போராட்டத்துடனும், மிகவும் அதிகமான நற்பயனளிக்கும், முற்போக்கான, பொருளாதார, சமூக மாறுபாடுகளுக்காக நடைபெறும் போராட்டங்களுடனும் பிரிக்க முடியாதவாறு பிணைக்கப் பட்டுள்ளது. இந்தப் போராட்டத்தில் வெற்றியடை வதற்கான நிபந்தனை, ஒரு ஜனநாயக அடிப்படையில் சர்வதேசப் பொருளாதார உறவுகளை மறுசீரமைப்புச் செய்வது ஆகும். சோவியத் ஒன்றியமும், சோஷலிச நாடு

களும் நெடுநாட்களாகவே இந்தக் கோரிக்கையை ஆதரித்து வந்திருக்கின்றன.

நாம் முன்னர் கண்டதைப் போல, கூட்டான முயற்சிகள் தேவைப்படுகிற அனைவரையும் பாதிக்கும் உலகப் பிரச்சினைகள் பல விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியினால் மிகவும் தீவிரத் தன்மையடைந்துள்ளன. இந்தப் பிரச்சினைகளில் ஏதாவது ஒன்றை வெற்றிகரமாகத் தீர்ப்பதற்கு முதலில் தேவையாக இருப்பது, ஒரு உலகப் போரைத் தடுப்பதும், ஆயுதப் பெருக்கப் போட்டியைத் தவிர்ப்பதும்தான் என்பது இந்த ஆராய்ச்சிக் கட்டுரை முழுவதிலும் எதிரொலிக்கிறது.

உலகப் பிரச்சினைகளின் மிகுந்துவரும் அவசரம், அவைகளைச் சமாளிப்பதற்கு சர்வதேசக் கூட்டுறவை, வலிமையாக்கும் பிரச்சினையை ஏற்படுத்துகிறது. இந்த விஷயம் நம்முடைய வாதத்தில் மிகுந்த முக்கியத்துவம் உடையதாயிருக்கும். அனைத்திற்கும் மேலாக விஞ்ஞான தொழில் , நுட்பப் புரட்சியும், மனித வளர்ச்சியின் உலகளாவிய பிரச்சினைகள் அதிகரிப்பதும் பற்றிய கட்டுரையில் சிறப்பாக விளக்கப்படும். ஒருவேளை இந்த விஷயமும் கூட நம்முடைய விவாதத்தில் முக்கியமான இடம் பெறும் என நினைக்கிறேன். எல்லாவற்றிற்கும் மேலாக விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி பற்றியும் மனித இனத்தின் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் உலகப் பிரச்சினைகள் மிகுதியாகத் தீவிரமடைவது பற்றியுமான விவாதத்தில் அது முக்கியமான இடம்பெறும்.

இறுதியாக ஒரு விஷயம், விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் பிரச்சினைகள் சோவியத் ஒன்றியத்தின் உள்நாட்டு வளர்ச்சியைப் பொருத்தவரையும் பிற சோஷலிச நாடுகளின் வளர்ச்சியைப் பொருத்தவரையும் இன்றியமையாததாகவுள்ளன.

சோஷலிசம், அதாவது, உண்மையான விஞ்ஞான அடிப்படையிலான சோஷலிசம் எப்போதும் அதிகமாக பல்வேறுபட்ட அறிவுத் துறைகளின் விஞ்ஞான சிந்தனை களின் பெரும் சாதனைகளிலிருந்து பிரிக்க முடியாததாக இருந்து வருகிறது. மற்றும் விஞ்ஞான சோஷலிசத்தின் கோட்பாடுகளும், கார்ல் மார்க்ஸ், பிரடெரிக் எங்கெல்ஸ், விளாடிமிர் லெனின் ஆகியோரின் நூல்களும், அவை களுடைய முறையில் உலக விஞ்ஞானத்தை மிகவும் செழுமையாக ஆக்கியிருக்கின்றன.

சோஷலிசத்தின் கீழ் விஞ்ஞானம் சமூகத்திற்குப் பயன் படுமாறு செய்யப்படுகிறது. அதுதான் நம்முடைய சமூக அமைப்பு முறையின் மிகப்பெரும் சிறப்பாகும். அதே வேளையில் சோஷலிசமே, விஞ்ஞானத்தின் வளர்ச்சிக்கு எல்லையில்லாத ஒரு வீச்சைத் தந்துதவுகிறது. விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சி கம்யூனிஸ்ட் சமூக அமைப்பு முறையிலேயேதான் முழு வளர்ச்சியடைய முடியும் என்று கூறுவது முழுவதும் ஏற்புடையதாக உள்ளது.

சோவியத் ஒன்றியமும், சோஷலிச சமூகத்தைச் சேர்ந்த அனைத்து நாடுகளும், மாபெரும் ஆக்கப்பணிகளில் ஈடுபட்டுள்ளன. அவற்றில் விஞ்ஞானம் முக்கிய பங்கு வகிக்கிறது. "தோழர்களே, நமக்கு முன்னிருக்கும் பணி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. **விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் சாதனைகளை சோஷலிசப் பொருளாதார நலன்களுடன் ஒன்றிணைப்பது** நம், சொந்த உள்ளார்ந்த சோஷலிச உருவங்களை, விஞ்ஞானத்தை உற்பத்தியுடன் இணைப்பதை மிகவும் அதிகமான அளவில் வெளிப்படச் செய்வது தான்"[3] என்று லியோனித் பிரெஷ்னேவ், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 24-வது காங்கிரசின் போது அவரது சொற்பொழிவில் கூறினார்.

அந்தக் கடமையை நிறைவேற்றும்போது, சோஷலிச நாடுகளில் உள்ள சகோதர கம்யூனிஸ்ட் மற்றும்

உழைப்பாளர் கட்சிகளும், சோவியத் ஒன்றியத்தின் கம்யூனிஸ்ட் கட்சியும், விஞ்ஞானத்தின் மேற்கொண்ட வளர்ச்சிக்கும், விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றத்தை விரைவுபடுத்தவும், விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றம் தந்துதவியிருக்கிற அனைத்துச் சிறப்புகளையும வேகமாக நடைமுறையில் பயன்படுத்துவதை மிகவும் அதுக அளவு ஊக்குவக்கவும், திட்டமிடப்பட்ட, அமைப்பிற் சிறந்த, நிர்வாகப் பொருளாதார இயந்திரத்தைக் கட்டுவதற்கும் மிகுந்த முக்கியததுவம் அளித்து வருகின்றன.

நாமறிந்த வரையில் அது அவ்வளவு எளிதான செயல் அல்ல. எனினும் நாம் அதைச் சமாளித்து வருகிறோம். நாம் அவ்வாறு செய்வது மிகவும் இன்றியமையாதது. ஏனெனில் சோஷலிச நாடுகளின் பொருளாதாரங்களும் அதனால் அவைகளுடைய வளர்ச்சியின் இலட்சியங்களில் வெற்றியடைவதும், மிகப்பெருமளவில் அதன் மீதுதான் சார்ந்திருக்கிறது. அதாவது அவைகளுடைய மக்களின் வாழ்க்கைத்தரத்திலும், கலாச்சார மட்டத்திலும் ஒரே சீரான உயர்வும், விஞ்ஞானம், பொறியியல், ஆகியவை முன்னேறுவதும், அவைகளுடைய முன்னேற்றதைத் திறமை யாகப் பயன்படுத்துவதும், உலக சோஷலிசத்திற்கும், உலக முதலாளித்துவத்திற்குமிடையே மிகவும் முக்கியமான போட்டி நடைபெறும் வட்டமாக உள்ளன. ஏனெனில் முடிவாக சமாதானமும், சர்வதேசப் பாதுகாப்பும், உலகின் புரட்சிப் போக்கின் வருங்கால முற்போக்கான வளர்ச்சியும், இந்தத் துறையில் நாமடையும் வெற்றியைப் பொருத்த தாகவே இருக்கும்.

தோழர்களே, நம் மாநாட்டில் அனைத்துத்துறைகளிலும் கருத்துக்களை மனப்பூர்வமாகப் பரிமாறிக் கொள்வது, அதனுடைய அடிப்படையான நோக்கங்களான, மிகவும் முக்கியமான பிரச்சினைகளின், கோட்பாட்டடிப் படையிலான வளர்ச்சியை முன்னேறச் செய்யும் என மிகவும் அதிகமான நம்பிக்கையுடன் கூற என்னை அனுமதியுங்கள்.

## அடிக்குறிப்பு

1. வி. இ. லெனின் : "ஏகாதிபத்தியம், முதலாளித் துவத்தின் உச்சகட்டம்." தொகுப்பு நூல்கள். தொகுதி—22. முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ. 1964, பக். 203-05; 208-10; 224: 245-247; 276.
2. சோவியத் ஒன்றியத்தின் கம்யூனிஸ்ட் கட்சியின் 25-வது காங்கிரசின் ஆவணங்களும் தீர்மானங் களும். பக். 34.
3. சோவியத் ஒன்றியத்தின் கம்யூனிஸ்ட் கட்சியின் 24-வது காங்கிரஸ்—பக். 69.

**பேராசிரியர் ஆட்டோ ரீன் ஹோல்ட்**

*தலைவர், ஜெர்மன் சோஷலிஸ்ட் ஒற்றுமைக் கட்சியின் மத்தியக் குழுத் தனிப் பிரிவு; முதல்வர், சமூக-விஞ்ஞான கலைக் கழகம்*

## விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியும் முதலாளித்துவத்தின் பொருளாதார, சமூக முரண்பாடுகள் தீவிரமடைதலும்

1970-களின் நடுவில், உலக முதலாளித்துவ அமைப்பைத் தாக்கிய நெருக்கடி அதன் முன்னேற்றத்திற்கு ஒரு பெருந் தடையைத் தோற்றுவித்தது. விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றத்தையும், விஞ்ஞான தொழில் நுடபப் புரட்சியின் பொருளாதார-சமூக விளைவுகளையும் உள்ளிட்ட ஏகாதிபத்தியத்தைப் பாதித்த பல மாற்றங்களை அந்த நெருக்கடி முன் கூட்டியே நிர்ணயித்தது. ஒரு குறிப்பிட்ட அளவு விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றத்தை விரைவாக்குவதற்கு உதவியது. அதன் மூலம் உண்மையில் அது விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் ஒரு புதிய படிநிலையைத் தோற்றுவித்தது. இவ்வாறாக நவீன விஞ்ஞானமும், தொழில் நுட்பமும் முதலாளித்துவ அமைப்பில் காணப்படும் தீவிரமான சமூக முரண்பாடுகளை, அதனுடைய தொடர்ந்த பொருளாதார வளர்ச்சியின் விளைவாக, நீக்க முடியாவிட்டாலும், குறைக்கவாவது செய்ய முடியும் என்று எண்ணியிருந்த ஏகாதிபத்திய சிந்தனையாளர்களின் எண்ணத்திற்கு ஒரு

பெரும் அடி கொடுத்தது. 1970கள் விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றங்கள், ஒரு நிலையான, ஒரே சீரான, பொருளாதார முன்னேற்றத்தைச் சாதிக்கவும், சமூக முரண்பாடுகளை வெல்லவும், முதலாளித்துவத்திற்கு உதவ முடியவில்லை. அதற்கு மாறாக விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சி ஒரு பெரும் அளவிற்கு முதலாளித்துவ முறையில் ஆழமான சமூக பொருளாதார முரண்பாடுகளின் தோற்றுவாயாக விளங்குகிறது.

முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியுடனும், அதன் சுழல் தன்மையான நெருக்கடியுடனும் இணைந்திருந்ததே 1970 களில் ஏற்பட்ட உலகப் பொருளாதார நெருக்கடியின் சிறப்பான இயல்பாகும். அக்டோபர் புரட்சிக்குப் பிந்திய ஏறத்தாழ இந்த 60 ஆண்டுகளில் இவ்வகையான சுழல் தன்மை நிறைந்த கொந்தளிப்புகள் ஏதாவது ஒரு வழியிலோ அல்லது பிறிதொரு வழியிலோ முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியுடன் தொடர்புள்ளதாக இருந்திருக்கின்றன. பல சமயங்களில் கட்டமைப்பு தொய்வானது என்று அழைக்கப் படுகிற நீண்ட கால காரணிகள் அண்மைக் காலத்தில் மிக அதிகமான முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளன. மேலும், சுழலின் நெருக்கடிக் கட்டத்தின் போக்கில் மிகுந்த செல்வாக்கைப் பயன்படுத்துகின்றன என்ற உண்மையை இந்தப் புதிய கூறு உள்ளடக்கியதாய் இருக்கிறது என்பது தெளிவு. இம்மாதிரியான காரணிகள் அரசு ஏகபோக முதலாளித்துவத்தின் இன்றைய கட்டமைப்பு உருவாக்கப் படுவதையும், புதிய காலனி ஆட்சி முறையின் வளர்ந்து வரும் நெருக்கடிகளையும், ஆயுதங்கள் மிகுதியாக உற்பத்தி செய்யப்படுவதையும், சர்வதேச ஏகபோகங்களின் புதிய பாத்திரத்தையும் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் விளைவாகத் தோன்றுகிற உலகப் பிரச்சினைகள் என்றழைக்கப்படுகிறவற்றின் மொத்தத் தொகுதிகளையும் உள்ளடக்கியதாக உள்ளன.

இம்மாதிரியாக கட்டமைப்பு மற்றும் சுழல்காரணிகள் சிறப்பாக ஒன்றுடன் ஒன்று இணைந்திருப்பதனால்

குறிப்பாக 1974-1975 நெருக்கடியானது, அதனுடைய பணிகளில் ஒருசிலவற்றை மட்டுமே செய்ய முடிந்தது. 1970-களின் முடிவில் கூட அதனுடைய பல வெளிப்பாடுகளும், விளைவுகளும் நீங்காமல் நிலைத்திருந்தன; நீண்டகாலச் சுழற்சி எழுச்சி இயலாததாகி விட்டது. உலக முதலாளித்துவப் பொருளாதார வளர்ச்சி தெளிவாகவே ஒரு சீரற்றதன்மை நிறைந்ததாகவும், முரண்பட்டதாகவும் தான் இருக்கும். ஒருபுறம் முதலாளித்துவ நெருக்கடி, நெருக்கடி அம்சத்தையும் பொதுவாகப் பொருளாதாரச் சுழலையும் மிகவும் அதிகமாகப் பாதிக்கிறது. அவ்வாறு பாதிக்கும்போது அதன் பண்டைய உருவத்தை ஏற்றவாறு மாற்றிக்கொள்கிறது. மறுபுறம் சுழற்சித் தன்மையான, நெருக்கடியும், அதன் விளைவுகளும், இன்றைய படிநிலையில் முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியைத் தீவிரமாக்கும் ஓர் இன்றியமையாத கூறாக மாறியுள்ளன. இந்த உண்மையில்தான் இந்த நிகழ்ச்சிப்போக்கின் இயக்கவியல் அடங்கியுள்ளது.

இன்று சந்தேகமின்றி விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியுடைய விளைவுகள் இந்த முதலாளித்துவ மறுஉற்பத்தி முறையுடன் பிரிக்க இயலாதவாறு பிணைக்கப் பட்டுள்ளன. இந்தக் காரணத்தால் என்னுடைய கருத்தில் விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றத்தின் வேகமானது சமூக முரண்பாடுகளைத் தீவிரப்படுத்துவதற்கு வழி செய்கிறது. அதாவது 1974—1975களில் நிகழ்ந்த நெருக்கடி அதனுடைய பணிகளில் ஒரு பகுதியையே நிறைவேற்ற முடிந்தது. ஒரு பொதுவான- மேல்நோக்கிய வளர்ச்சிக்கு எந்தச் சூழ்நிலையையும் அது உருவாக்கவில்லை.

முதலாளித்துவ சமுதாயத்தின் வளர்ச்சியின் மீதும், உலக முதலாளித்துவ பொருளாதாரத்தின் மீதும் விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் செல்வாக்கு மிக அதிகமான அளவு வேறுபட்டதாக இருக்கிறது. அது ஏகபோகங்களின் வளர்ச்சியை நிர்ணயிக்கும் முக்கியமான காரணியாக விளங்குகிறது. நேட்டோ நாடுகள் மேற்கொண்டுவரும்

ஆயுதப் பெருக்கப் போட்டியை விரைவுபடுத்துவதுடன் மிக நெருங்கிய தொடர்புடையதாக விளங்குகிறது; உலகப் பிரச்சினைகளை மிக அதிகமான அளவு தீவிரமடையச் செய்துள்ளது. முதலாளித்துவ நாடுகளில் ஒரு குறிப்பிட்ட அளவிற்குப் பொருளாதார அரசியல் துறைகளில் ஒரு சீரற்ற வளர்ச்சியைத் தோற்றுவிக்கிறது. மேலும் அது சர்வதேச முதலாளித்துவமுறை வேலைப் பகுப்பில் இப்போது ஏற்பட்டுள்ள மாறுதல்களைத் தோற்றுவிக்கிறது. ஆனால் என்னுடைய கருத்தில் விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் இன்றியமையாத முக்கியத்துவம் மூலதன மறு உற்பத்தி தீவிரப்படுத்தப்படுவதில் உள்ள அதன் செல்வாக்கே ஆகும்.

என்னுடைய இந்தக் கட்டுரையில் நான் இரண்டு பிரச்சினைகளைக் குறிப்பிட விரும்புகிறேன்: உலக சக்திகளை ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்துவதன் மீதும், மூலதன மறுஉற்பத்தி நிகழ்ச்சிப் போக்கில் நிகழும் மாற்றங்களின் மீதும் விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் செல்வாக்கு பற்றிக் கூற விரும்புகிறேன். இந்த சமயத்திலும், நாமறிந்து கொள்ளக் கூடிய வருங்காலத்திலும் வளர்ந்த முதலாளித்துவ நாடுகளில் இந்த நிகழ்ச்சிப்போக்கின் தீவிரமான வளர்ச்சியின் இணைப்பும், வளரும் நாடுகளில் மூலதன மறுஉற்பத்தியின் பெருமளவு விரிவாக்கமும், தவிர்க்க முடியாதது எனத் தெளிவாகத் தெரிகிறது.

விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியும், தீவிர மறுஉற்பத்திக்கு மாறுவதும், குறிப்பாக 1970 களில், முதலாளித்துவ உலகத்தின் நாடுகளுக்கிடையிலே உள்ள சக்திகளையும், உறவுகளையும் ஒழுங்குபடுத்துவதில் மிகுந்த செல்வாக்குடையதாக இருந்தன. இவ்வாறாக, 1950இல் 48.7 சதவீதமாக இருந்த யு. எஸ். தொழிற் பொருள் உற்பத்தியின்பங்கு, 1970இல் 37.8சதவிகிதமாகக் குறைந்தது ஐரோப்பியப் பொருளாதார சமுதாய நாடுகளின் பங்கு 26.2 சதவிகிதத்திலிருந்து 28.6 சதவிகிதமாகவும், ஜப்பானின் பங்கு 1.6 சதவிகிதத்திலிருந்து 9.5 சதவிகிதமாகவும் அதே

காலத்தில் உயர்ந்தது. 1970 களில் இந்த நிலையில் குறிப்பிடத்தகுந்த மாற்றங்கள் ஏதும் இல்லை. 1977இல் யு. எஸ்.சின் பங்கு 37 சதவிகிதமாகவும் ஐரோப்பியப் பொருளாதார சமுதாய நாடுகளின் பங்கு 26 சதவிகிதமாகவும், ஜப்பானின் பங்கு 9.3 சதவிகிதமாகவும் இருந்தது.

இதனுடன் கூடவே 1970-களில், முக்கியமாக விஞ்ஞானத்திலும், தொழில் நுட்பத்திலும், நிகழ்ந்த பண்பியல் மாற்றங்களின் விளைவாகவும், பொருளாதாரத் திறமை வளர்ச்சியின் விளைவாகவும், முதலாளித்துவ உலகில் உள்ள சக்திகளின் ஒழுங்கமைப்பில் முக்கியமான மாற்றங்கள் நிகழ்ந்தன. இந்த ஆண்டுகளில் தொழிலாளர்களின் உற்பத்தித்திறன் குறிப்பிட்ட அளவு ஒரு சீரற்ற தன்மையுடன் வளர்ச்சியடைந்தது. யு. எஸ்.சுக்கும், தொழில் துறையில் மிகுதியாக வளர்ச்சியுற்றுள்ள முதலாளித்துவ நாடுகளுக்குமிடையே இருந்த, 1960-களில் அதிகப்படியான வாதத்திற்கு இடமளித்த, "தொழில் நுட்ப இடைவெளி" மிகப் பெருமளவு குறைக்கப்பட்டது. பல முக்கியமான தொழில்களில் அந்த இடைவெளி முற்றிலுமாக ஒழிக்கப்பட்டது.

முன்னைப்போலவே, இராணுவ ஆராய்ச்சி, தாழ்வெப்ப நிலையில் மின் கடத்தியாகச் செயல்படாத பொருட்களின் உற்பத்தி, கம்ப்யூட்டர் தொழில் நுட்பம், நவீன தகவல் அமைப்பு முறைகள் ஆகியவற்றின் உற்பத்தியில் யு. எஸ். ஒரு முக்கியமான நாடாகக் கருதப்பட முடியும். ஆனால் அதே வேளையில் மேற்கு ஐரோப்பாவில் உள்ள முதலாளித்துவ நாடுகளும், ஜப்பானும், யு. எஸ்.சுக்குச் சமமான நிலையை அடைந்து வருகின்றன. வேறு உற்பத்தித் துறைகளில் மேற்கு ஐரோப்பாவும், முதலாளித்துவ அரசுகளும், ஜப்பானும், யு. எஸ்.ஐக் காட்டிலும் அல்லது ஏறத்தாழ அதைப்போல அதிகமான பொருட்களை உற்பத்தி செய்கின்றன. உதாரணமாக, இரும்பு - எஃகு, கருவிகள் செய்யும் தொழில், மோட்டார் கார் தொழிற்சாலை,

ஒன்றிணைந்த செயற்கை நூலிழைத் தொழிற்சாலை, பிளாஸ்டிக்குகள், நுகர்வோர் மின்னணுப் பொருட்கள், விஞ்ஞானக் கருவிகள், ஆராய்ச்சிக் கருவிகள். இவ்வாறாக யு.எஸ். அதனுடைய மிகப்பெரும் பாதகமான, பன்னாட்டுச் செலுத்தல் நிலையையும், பன்னாட்டு வாணிப நிலையையும் சரிக்கட்டுவது என்ற கடினமான பணியைச் செய்வதற்காக அதனுடைய ஏற்றுமதியை அதிகரிக்க முயற்சி செய்கிறது. 1970-லிருந்து 19:5 வரை தயாரிப்புத் தொழில்களில் யு எஸ். சில் உழைப்பின் உற்பத்தித் திறன் (மணிக்கு உற்பத்தித் திறன்) 118 சதவிகிதமும், ஜப்பானில் 113 சதவிகிதமும், ஜெர்மன் கூட்டுக்குடியரசில் 126 சதவிகிதமும், இத்தாலியில் 121 சதவிகிதமும், பிரான்சில் 120 சதவிகிதமும், கிரேட் பிரிட்டனில் 118 சதவிகிதமுமாக உயர்ந்தது.

இன்று முதலாளித்துவ அரசுகளின் சக்திகளிடையே உள்ள இணைப்பு விஞ்ஞான-தொழில் நுட்ப மட்டத்தையும், உற்பத்தியின் தொழில் நுட்பத்தையும் பொருத்ததாக இருப்பதைக் காட்டிலும், பொருளாதாரத் திறமைகளின் அளவுகளின் அடிப்படையிலான இணைப்புடன், குறைவான அளவே சார்ந்துள்ளது. இது முதலாளித்துவ உலகச் சந்தையிலுள்ள போட்டி தீவிரமடைவதற்கு முக்கிய காரணமாகும். அது 1950களிலும், 1960களிலும் வளர்ந்தது போல, இன்றைய சூழல் மற்றும் கட்டமைப்பு நெருக்கடிகளுடைய இணைப்பின் தனித்தன்மைகளின் காரணமாக வேகமாக வளர முடியவில்லை. உதாரணமாக, 1963இலிருந்து 1970 வரை உலக முதலாளித்துவ சந்தையில் பொருட்களின் ஏற்றுமதியின் பரிமாணம் 85 சதவிகிதமாக உயர்ந்தது. ஆனால் 1970 லிருந்து 1977 வரை அது 52 சதவிகிதமாக மட்டுமே உயர்ந்தது. இவ்வாறாக விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் ஒரே சீரற்ற வளர்ச்சி, பன்னாட்டு வாணிபத்திலும், நிதித்துறையிலும் உள்ள சக்திகளது இணைப்பின் ஒழுங்கற்ற வளர்ச்சியின் மீது அதிக செல்வாக்கைச் செலுத்துகிறது.

முதலாளித்துவ சந்தைகளின் நிலைமையும் மிக அதிகமான அளவு மாறியுள்ளது. குறிப்பாக, மூலப் பொருட்கள், ஆற்றல் ஆகியவற்றின் விலை வேகமாக உயர்ந்திருப்பதன் விளைவாக மிக அதிகமான அளவு மாறியுள்ளது. ஜப்பானையும், ஜெர்மன் கூட்டுக் குடியரசையும் தவிர, பிற தொழில் துறையில் வளர்ச்சியடைந்துள்ள நாடுகள், தங்களுடைய வாணிப பேரங்கள் மிகவும் மோசமாகி வருவதைக் கண்டன. (அவற்றின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி விலைகளுக்கிடையேயுள்ள உறவுகள்). இவ்வாறாக 1970 களில் பெரும்பாலான முதலாளித்துவ நாடுகளின் ஒரு சீரற்ற பொருளாதார வளர்ச்சி அவைகளுடைய வாணிப நிலையைப் பெரிதும் பாதித்துள்ளது:

**அட்டவணை-1**

**உலக முதலாளித்துவ சந்தையின் மொத்த ஏற்றுமதியில் நாடுகளின் பங்கு (சதவிகிதத்தில்)**

| | 1970 | 1977 |
|---|---|---|
| அமெரிக்க ஐக்கிய நாடுகள்.... | 15.4 | 11.5 |
| ஐரோப்பியப் பொருளாதாரப் பொதுச் சந்தை நாடுகள் | 40.8 | 37.5 |
| பிரிட்டன் | 7.0 | 5.7 |
| இத்தாலி | 4.8 | 4.2 |
| பிரான்ஸ் | 6.5 | 6.3 |
| மேற்கு ஜெர்மனி | 12.6 | 11.8 |
| ஜப்பான் | 7.0 | 8.0 |
| வளரும் நாடுகள் | 19.4 | 28.0 |

## அட்டவணை-2

## முதலாளித்துவ நாடுகளின் பன்னாட்டு வாணிப நிலையில் மாற்றங்கள் (பில்லியன் டாலர்களில்)

| | 1960—1969 | 1970 - 1978 |
|---|---|---|
| அமெரிக்க ஐக்கிய நாடுகள் | +53 2 | —117.0 |
| ஜப்பான் | —4.9 | +30 3 |
| மேற்கு ஜெர்மனி | +22.9 | +107.6 |
| பிரான்ஸ் | —6.7 | —29.0 |
| இத்தாலி | —16.0 | —37.7 |
| பிரிட்டன் | —29.1 | —37.9 |

இம்மாதிரியான ஒரு சீரற்ற வளர்ச்சி ஏகாதிபத்திய நாடுகளிடையே நிலவும் பல பொருளாதார, அரசியல் முரண்பாடுகள் மேலும் தீவிரமடைவதற்கு வழி செய்திருக்கிறது. மேலும் அது சோஷலிச எதிர்ப்பு "உலகம் முழுமைக்கான யுத்தி" ஒன்றை ஏற்படுத்த அவைகள் மேற்கொள்ளும் முயற்சிக்குப் பெரும் தடையாக அமைந்துள்ளது. எனினும் ஜெர்மன் கூட்டுக்குடியரசில் உள்ள மிகவும் செல்வாக்கு நிறைந்த சக்திகள் இந்த முயற்சிகளைத் தங்களுடைய நலன்களுக்குப் பயன்படுத்திக் கொள்ள விரும்புகின்றன. அதன் மூலம், "ஒன்றுபட்ட ஐரோப்பா" என்ற போர்வையின் கீழ் அல்லது வேறு ஏதாவது ஒரு முறையில் முதலாளித்துவ அரசுகளுக்கிடையில், மேற்கு ஜெர்மன் ஏகபோகம் தன் தலைமைப் பதவியை வலியுறுத்த விரும்புகிறது. அதே வேளையில் அவைகள் "மூவகைப்

பொறுப்புகள்'' என்று அழைக்கிற முழக்கத்தின் கீழ் உலக ஏகாதிபத்தியத்தின் மூன்று மையங்களின் செயல்முறைகளை இணைப்பதற்கு யு. எஸ்.சில் உள்ள ஆக்கிரமிப்பு சக்திகள் அனைத்து வகையான முயற்சிகளையும் மேற்கொள்கின்றன.

இந்த ஒரு சீரற்ற வளர்ச்சி, விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியினால் மிக அதிகமான அளவு பாதிக்கப் பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சிப் போக்கில் வளரும் நாடு களுக்கும், வளர்ச்சியடைந்த நாடுகளுக்குமிடையே மிகுந்து வரும் ஏறுமாறுகள் முக்கயமான பங்கு வகிக்கின்றன. விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியானது பொருளாதார சமூக விளைவுகளில் அதிகமான நீண்ட காலத்தில் பெரும் பயனை விளைவிக்கக் கூடிய புதிய காலனி முறையின் நவீன உருவங்களையும் முறைகளையும் தோற்றுவித்துள்ளது.

முதலில், சர்வதேச தொழிலாளர்களின் சந்தையில் இந்தப் புதிய காலனி ஆட்சியாளர்கள் அவர்களுடைய விரிவாக்கக் கொள்கையை மேலோங்கி வளரச் செய்ய முயற்சித்து வருகின்றனர். வளரும் நாடுகள் பலவற்றில் முதலாளித்துவ உறவுகள் வளர்ந்துள்ளதும், அதன் விளைவாக நிலப்பிரபுத்துவ சமூகக் கட்டமைப்புகளும், அதற்கு முந்திய சமூகக் கட்டமைப்புகளும் சீர்குலைந்ததும், லட்சக்கணக்கான தொழிலாளர்கள் எளிதில் கிடைக்குமாறு செய்துள்ளது. ஏகபோக மூலதனம் தன் சுரண்டலை மிகுதிப் படுத்துவதற்கு வேண்டிய அனைத்தையும் செய்துள்ளது. வளரும் நாடுகளில் உள்ள தொழிலாளிகளின் ஊதியம், முதலாளித்துவ நாடுகளில் உள்ள தொழிலாளிகளின் ஊதியத்தைக் காட்டிலும் 80-90 சதவிகிதம் மலிவாக உள்ளது. அங்கேயுள்ள உழைக்கும் நாள், உழைக்கும் வாரம், உழைக்கும் ஆண்டு வழக்கமாக நீண்டதாகவேயுள்ளது. இவ்வாறாக ஜெர்மன் கூட்டுக் குடியரசில் அது 1900 மணிகளாகவும் தென் கொரியாவில் அது 2800 மணிகளாகவும் உள்ளன.

இரண்டாவதாக, விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி ஒப்பீட்டில் மிகக் குறுகிய காலத்தில் ஒரு குறிப்பிட்ட

செயலை செய்வதற்கான திறமையை, ஒரு திறமை குறைந்த தொழிலாளி பெற்று விடக்கூடிய அளவிற்கு, உற்பத்தியை சிறுசிறு பகுதிகளாகப் பிரித்துள்ளது. அதன் விளைவாக வளரும் நாடுகளுக்கு மாற்றப்பட்டுள்ள, தொழிலாளர் மிகுதியாகத் தேவைப்படும் தொழிற் தொகுதிகள் வளர்ந்துள்ள முதலாளித்துவ நாடுகளில் உள்ள தொழிலாளர்களின் உற்பத்தித்திறன் போன்ற திறனை வெளியிட முடியும்.

மூன்றாவதாக, போக்குவரத்து மற்றும் செய்தித் தொடர்புகளில் விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றம், புவியியல் அடிப்படையில் நீண்ட தூரங்களால் பிரிக்கப்பட்டுள்ள உற்பத்தி நிகழ்ச்சிப் போக்குகளை இணைப்பதையும், கட்டுப்படுத்துவதையும் கைகூடும் காரியம் ஆக்கியுள்ளது. இதன் விளைவாக பெரும் சர்வதேச நிறுவனங்கள் மிகப் பெரிய தொழில் நுட்பச் சங்கிலியின் ஒரு பகுதியாக விளங்கும், சிறு நிறுவனங்களை வளரும் நாடுகளில் தொடங்கியுள்ளன. இவ்வாறாக கம்ப்யூட்டர்களுக்குத் தேவையான செயற்கைப் பண்புகள் நிறைந்த அளவு அலகுகள், தொழில் துறையில் முன்னேறிய நாடுகளாலும், அதற்கு வேண்டிய பல்வேறு தனித்தனிப் பகுதிகளும், அவைகளை இணைப்பதும் வளரும் நாடுகளாலும் மேற்கொள்ளப்படுகின்றன. 1975 இல் இம்மாதிரியான தொழிற்சாலைகள் 725,000 தொழிலாளர்களை வேலைக்கமர்த்திக் கொண்டிருந்தது. அதில் 420,000 பேர் ஆசியாவிலும் (105,000 சிங்கப்பூரிலும், 112,300 தென் கொரியாவிலும், 60,000 ஹாங்காங்கிலும்) 265,000 தென் அமெரிக்காவிலும் (96,700 போர்ட்டோ ரிக்கோவில் 84,300 மெக்சிகோவில்) 40,000 ஆப்பிரிக்கா (அவர்களில் 24,000 டுனிசியாவில்) விலும் இருந்தனர்.

இந்த இயல்பு உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தில் வளரும் நாடுகளுக்கும், வளர்ந்த நாடுகளுக்குமிடையில் நிலவுகிற புதிய காலனி ஆட்சி முறையின், வேலைப்பகுப்பைப் பரவலாக்குவதை நோக்கமாகக்

கொண்டுள்ளது. ஐரோப்பிய பொதுச்சந்தை நாடுகளில் உள்ள வித்தகர்களின் கருத்தில் அது கீழே கொடுக்கப் பட்டுள்ளதைப்போல இருக்கக்கூடும். "இப்பொழுது வளர்ந்த நாடுகள் புதிய பொருட்களை வடிவமைப்பதிலும், புதிய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துவதிலும், புதிய உற்பத்தி முறைகளைப் பயன்படுத்துவதிலும், முன்னைக் காட்டிலும், தனிச்சிறப்புப் பெற்று வருகின்றன. வளரும் நாடுகள் மரபு வழியாக மூலப்பொருட்களையும், விவசாயப் பொருட்களையும் ஏற்றுமதி செய்பவைகளாகவே உள்ளன. எனினும் சென்ற 20ஆண்டுகளில் தொடர்ந்து அவைகள் ஏற்றுமதி செய்து வந்த மூலப்பொருட்களின் அளவும், விவசாயப் பொருட்களின் அளவும் குறைந்து, தொழிற் பொருட்களின் அளவு மிகுந்து வந்து கொண்டிருக்கிறது."

ஒரு நூற்றாண்டுக்கு முன்னால் இங்கிலாந்தை "உலகின் தொழிற்சாலை" ஆக ஆக்கியிருந்த முதலாளித்துவப் பொருளாதார வளர்ச்சி, இன்று பெரும் மாற்றங்களுக் குள்ளாகி இருக்கிறது. வளரும் நாடுகளில் சர்வதேச ஏகபோகங்களின் விரிவாக்கம் செய்யும் செயல்களைப் பயன் படுத்திக் கொண்டு இப்பொழுது ஏகாதிபத்திய தொழில் வளர்ச்சி பெற்றிருக்கிற சக்திகள் தங்களுடைய பழைய காலனி நாடுகளைத் தங்களுக்குப் பெரும் லாபம் தரக்கூடிய "தொழிற் கூடங்களாக" மாற்ற முயன்று வருகின்றன. இந்த விரிவாக்கக் கொள்கையின் பொருளாதார, சமூக, அரசியல் விளைவுகள் பல, ஏகாதிபத்திய அரசுகளில் சமூக முரணபாடுகளைத் தீவிரப்படுத்தியுள்ளது — குறிப்பாக அங்குள்ள வேலை வாய்ப்புகளைக் குறைப்பதன் மூலம் சமூக முரண்பாடுகளை மிகுதிப்படுத்தியுள்ளது. இவ்வாறாக வளரும் நாடுகளிலிருந்து, மேற்கு ஜெர்மனியின் பின்னல் பொருட்களின் இறக்குமதி 1962-ல் 16.2 சதவிகிதத்திலிருந்து அது 1976-ல் 44.5 சதவிகிதமாக உயர்ந்தது. 1960-ல் ஜெர்மன் கூட்டுக் குடியரசில் பின்னல் தொழிலில் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தவர்களின் எண்ணிக்கை 1975இல் 35 சதவிகிதமாக (351, 000 தொழிலாளிகள்)க் குறைந்தது.

முதலாளித்துவ வளர்ச்சிப்பாதையைத் தேர்ந்தெடுத்துள்ள பல வளர்ந்து வரும் நாடுகளில் பொருளாதார, சமூக, அரசியல் முரண்பாடுகள் அதிக அளவில் தீவிரமடைந்துள்ளன ஒருபுறம் ஏகாதிபத்திய அரசுகளுக்கும் சர்வதேச ஏகபோகங்களுக்கும், மறுபுறம் வளரும் நாடுகளுக்குமிடையே நிலவுகிற முரண்பாடுகள் தீவிரமடைந்து வருகின்றன. முடிவாக சென்ற காலத்திய காலனி நாடுகளின் ஒரு சீரற்ற வளர்ச்சி அதிகமாகிக் கொண்டே வருகிறது. பொருளாதார வளர்ச்சியிலுள்ள இந்த முறைகேடுகள், மூன்று வகையான நாடுகளில் குறிப்பாகத் தெளிவாகத் தெரிகின்றன. அவைகள் ஒப்பீட்டில் வேகமாக வளர்ந்து வரும் நாடுகள், (பிரேசில், மெக்சிகோ, இந்தியா, ஈரான் முதலியன); மிக அதிகமான எண்ணெய் அல்லது கனிவளங்களைப் பெற்றுள்ள நாடுகள், எந்தவித கனிப்பொருள் படிவங்களும் இல்லாத பொருளாதாரத்துறையில் பின்தங்கியுள்ள நாடுகள் இந்தப் பிரிவு நாடுகளுக்குள் புதிய முரண்பாடுகளும் தோன்றி வளர்ந்திருக்கின்றன.

இதனுடன் கூடவே உலக முதலாளித்துவ பொருளாதாரத்தில் ஏகபோக மூலதனத்தினால் வேகமாக வளரச் செய்யப்பட்டுள்ள விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சிக்கும், ஏகாதிபத்தியங்களுக்கிடையே வளர்ந்து வருகிற முரண்பாடுகளுக்குமிடையே மிக நெருக்கமான உட்தொடர்புகள் உள்ளன. விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் கீழ் இந்த இயல்புக்கு முதலாளித்துவ மறுஉற்பத்தி நிகழ்ச்சிப் போக்கில் குறிப்பிட்ட அளவு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. ''மறுஉற்பத்தி செய்யப் படக் கூடிய செலவைக் குறைப்பதன் மூலம் தொடர்ந்து நிலவுகிற மூலதனத்தின் ஒரு பகுதி மதிப்புக் குறைக்கப் படுகிறது'' என்று அது பற்றி கார்ல்மார்க்ஸ் கூறினார்.

குறிப்பாக முதலீட்டின் கட்டமைப்பில் இதன் விளைவாக வலிமை மிகுந்த மாற்றங்களைக் காணமுடிகிறது. நவீன மின்னணுக் கருவிகளை மிகுதியாகப் பயன்படுத்துதல்,

நிலையான மூலதனத்தின் ஒரு சில கூறுகளை மலிவாக்குவதன் சிறப்பான உருவத்தைத் தோற்றுவித்தது. இதிலிருந்து தோன்றியுள்ள முதலீட்டுக் குறைவு இருந்த போதிலும், உற்பத்தித்திறன் மிகுதியாக வளர்ந்துள்ளது. இது தொடர்பாக ஜெர்மன் கூட்டுக் குடியரசின் புள்ளி விவரங்கள் நமக்குச் சுவையூட்டுவனவாக உள்ளன.

அட்டவணை-3

## மேற்கு ஜெர்மன் தொழில்களில் முதலீடுகளின் அமைப்பு

| | உற்பத்தித் திறனின் பெருக்கம் (சதவிகிதமாக) | பழைய சொத்துக்களுக்குப் பதிலாக, புதிய நிலையான சொத்துக்களைப்பெறுவதும், புது இயந்திரங்களைப் புகுத்தலும் (சதவிகிதமாக) |
|---|---|---|
| 1966 | 37 | 63 |
| 1970 | 55 | 45 |
| 1972 | 39 | 61 |
| 1974 | 34 | 66 |
| 1976 | 24 | 76 |
| 1977 | 26 | 74 |
| 1978 | 25 | 75 |

இவ்வாறாக அண்மை ஆண்டுகளில் பணமுதலீடுகளின் பரிமாணத்தின் மொத்தத்தில் முக்கால் பகுதி, இயந்திர மயமாக்குவதை அதிகரிப்பதற்காக அல்லது நிலையான மூலதனங்களைப் பெறுவதற்காகச் செலவிடப்பட்டது. ஆனால் உற்பத்தித்திறனை வளர்ப்பதற்காக ஒரு கால் பகுதி

மட்டுமே செலவிடப்பட்டுள்ளது. இந்த உண்மை நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் இரண்டு விளைவுகளை உண்டாக்குகிறது. முதலில் முதலீட்டில் மிகக் குறைந்த அளவே அதிகரித்துள்ளது. ஆனால் தொழில் உற்பத்தித் திறனில் மிகுதியான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இரண்டாவது தொழிலாளிகளுக்குரிய தேவை—அதாவது வேலைக்கமர்த்தப் படும் தொழிலாளர்களின் எண்ணிக்கை—குறைந்துள்ளது. உற்பத்தி தொடர்ந்து உயர்ந்து கொண்டே போனாலும், வேலைக்கு அமர்த்தப்படுபவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து குறைந்து கொண்டே வருகிறது.

ஜெர்மன் தொழிற் சங்கங்களைப் பற்றிய சமூக ஆராய்ச்சி நிறுவனத்தின் கருத்துப்படி 197 க்கும் 1976க்கும் இடையில் மேற்கு ஜெர்மன் தொழிற்சாலைகளில் வேலைக்கமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை 13.7 சதவிகிதமாகக் குறைந்தது. மொத்த மூலதன முதலீடுகள் 23.9 சதவிகிதமாகக் குறைந்தன. அதே வேளையில் உற்பத்தித்திறன் 11.6 சதவிகிதமாக அதிகரித்தது. இயந்திர மயமாக்குதல், குறிப்பாக நுண்மின்னணு சாதனங்களின் உதவியினால் இயந்திரமயமாக்கல் நடைபெற்று வருகிறது. அதனால் பெருகிவரும் மூலதன மறுஉற்பத்தி நிகழ்ச்சிப்போக்கில், ஒப்பீட்டில், மொத்த முதலீட்டின் பங்கைக் குறைத்துள்ளது. அதேவேளையில் பண்பியல் அடிப்படையிலான புதிய முதலாளித்துவ இயந்திரமய மாக்கல் படிநிலையில், உழைப்பை மிகுதியாகச் சுரண்டுவதன் மூலம் அல்லாமல், உழைப்பைத் தீவிரப்படுத்துவதன் மூலமே உபரி மதிப்பு தோன்றுகிறது. இவ்வாறாக உற்பத்திப் பெருக்கத்திற்கான பணமுதலீட்டிற்கும், நிலையான மூலதனத்திற்குப் பதிலீடு செய்வதற்கான முதலீட்டிற்கும் நிலையான மூலதனத்தைப் பெருக்குவதற்குமிடையே (நிலையான மூலதனத்திற்கு ஈடுசெய்வதற்கான பண முதலீடுகள் எப்பொழுதுமே, இயந்திரமயமாக்குவதுடன் நெருங்கிய தொடர்புடையதாகவுள்ளது) இணைப்பை உண்டாக்கும்போது அவைகளின் சார்பாக ஒரு விரைவான

மாற்றம் ஏற்படுகிறது. ஜெர்மன் கூட்டுக் குடியரசில் 1978ல் இந்த விகிதம் 17 : 83 ஆக ஆயிற்று. 1960களில் அது 50 : 50 ஆக இருந்தது. எனவே விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றங்களை முதலாளித்துவம் பயன்படுத்துவதை முதலாளித்துவ உற்பத்தி முறையின் பெருக்கத்திற்காக உருவமைக்கப்பட்ட முதலீட்டின் வளர்ச்சியைப் பின்தள்ளச் செய்யும் தற்காலிக சுழற்சித் தன்மையான காரணங்களுடன் தொடர்புபடுத்த முடியாது. இவையனைத்தும், இப்பொழுது ஏராளமாகவும், பலவகையானதாகவும் உள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தை அபாயகரமான அளவிற்குத் தீவிரமடையச் செய்துள்ளன.

முதலாளித்துவ சூழ்நிலையில் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி தொழிலாளர்களில் பெரும் பகுதியினரை விடுவித்துள்ளது. அவ்வாறு செய்யப்படுவது சுழல் தன்மை கொண்டதாக இல்லாமல் நிரந்தரமானதாகவுள்ளது. மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த வரும்பொருளுரைக்கும் விஞ்ஞானியான கார்ல் ஸ்டீன்பர்க் அவர்களுடைய கூற்றுப் படி, இந்த நிகழ்ச்சிப் போக்கு வளர்ச்சியின் தொடக்க நிலையிலேயே உள்ளது ஏனெனில் அடுத்த 10 ஆண்டுகளில் நுண்ணியல் செய்முறை இயந்திரங்கள் மூலமும், நுண்ணியல் செய்முறை இயந்திர அமைப்பு முறை மூலமும் சாதிக்கக் கூடிய விஷயங்கள் நம் கற்பனையையும் மீறி நிற்கிறது. சமூக அடிப்படையில் அதனுடைய விரும்பத்தகாத விளைவுகளை இப்பொழுதேகூட நாம் நன்றாக உணர முடிகிறது. ஜெர்மன் கூட்டுக் குடியரசில் மேற்கொள்ளப் பட்ட ஆராய்ச்சிகள், உழைக்கும் மக்களுக்குப் பதிலாக, நுண்ணியல் செயல்முறை இயந்திரங்களையும், கம்ப்யூட்டர் களையும் பயன்படுத்த முடியும் எனத் தெளிவாக்கியுள்ளன. அதன் விளைவாக வருகிற பத்தாண்டுகளில் 1.2 மில்லியன் மேசையடித் தொழிலாளர்களும், குறைந்த அளவு 500,000 தொழிற் கூடங்களில் வேலை பார்க்கும் தொழிலாளர்களும் வேலையிழப்பர்.

கீழ்க்கண்ட கணக்குப்படி ஜெர்மன் தொழிலதிபர்களுடைய கொள்கைகளின் அடிப்படையை நாம் நன்றாக அறிந்து கொள்ள முடியும்: ஸடட்கார்ட்டில் உள்ள உற்பத்தித் தொழில் நுட்பம் மற்றும் தானியக்கம் பற்றிய நிறுவனத்தின் கூற்றுப்படி, இரண்டு ஷிப்டுகளில் வேலை பார்க்கும் 3 மனிதர்களால் செய்யப்படும் சராசரி வேலையின் ஆண்டுச் செலவு ப. M. 211,000 ஆகிறது அதே வேளையில் தொழில் துறையில் அமர்த்தப்படும், இயந்திர மனிதனுக்கு ஆகும் செலவு D. M 107,000 ஆகவே இருக்கிறது. இவ்வாறாக இயந்திர மனிதனின் உற்பத்தித்திறன் உயர்ந்ததாக உள்ளது. அதன் செலவோ மனிதனுக்காகச் செய்யப்படும் செலவைக் காட்டிலும் 2.2 மடங்கு குறைவானதாகவுள்ளது. ஐ. ஜி. மெட்டால் குழுவிலிருந்து, குன்தர் பிரெடெரிக்ஸ் என்பவரால் அளிக்கப்பட்ட புள்ளி விவரங்களிலிருந்து உயிருள்ள 4.3 மனிதர்களுக்குப் பதிலாக ஒரு இயந்திர மனிதனை மட்டுமே உழைப்பில் ஈடுபடுத்தினால் போதுமானது எனத் தெரிகிறது.

இந்த வகையான முதலாளித்துவ வளர்ச்சியின் பிற "நன்மைகளை"ப் பற்றி மேற்கு ஜெர்மன் செய்தித்தாள் ஒன்று எழுதும் போது, "இயந்திர மனிதன் ஒலிகளாலோ, வெப்பத்தாலோ, தூசியாலோ, நீராவியாலோ அல்லது சலிப்பாலோ பாதிக்கப்படுவதில்லை. அவன் பொருட்களைக் குவிக்கும் போதோ அல்லது முதுகில் சுமந்து செல்லும் போதோ முதுகை ஒடித்துக் கொள்வதில்லை. மிகவும் மோசமான காலநிலைகளில்கூட அவனுக்கு ஓய்வு தேவையில்லை" என்று கிண்டலாக எழுதியது. மேற்கு ஜெர்மனியில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி ஒன்றில் மின்னணு தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்துவது நாட்டின் உழைப்பு சக்தியில் பாதியைப் பாதிக்கும் என்று உறுதி செய்யப்பட்டது. 1983-1984 க்குள் விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியினால் ஏற்படுத்தப்பட்ட புரட்சிகரமான மாற்றங்களால் 2.4 மில்லியன் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள்.

ஜெர்மன் சோஷியல் டெமாக்கிரேட்டிக் கட்சியின் செய்தித்தாளான **வோர்வார்ட்ஸ்** "தானியங்கி உற்பத்தியில் உழைப்புச் சக்திகளின், ஆலோசிக்கப்படுகிற "விடுதலை" "சமூக மற்றும் பொதுநல ஒழுங்குபற்றிய பிரச்சினைகளை எழுப்பலாம்," என்று கூறியபொழுது அது வெளியிட்ட பயத்தை எவ்வித சந்தேகமுமின்றி அறிந்து கொள்ளலாம்.

முடிவாக, 1970களில் நிகழ்ந்த உலகப் பொருளாதார நெருக்கடி முதலாளித்துவ முறையால் உருவான புதிய வகையான முரண்பாடுகளின் தொடக்கப் படிநிலைகளைப் பிரதிபலித்தது. அது 1980களில் மேலும் உயர்ந்து பெருகும். எப்படி இருந்தாலும், முதலாளித்துவ மறுஉற்பத்தி நிகழ்ச்சிப் போக்கின் முழுமையின் மீதும், அதன் பொருளாதார-சமூகப் பகைமைகளைத் தீவிரப்படுத்துவதன் மீதும், இந்த முரண்பாடுகள் ஒரு பெரும் செல்வாக்கைச் செலுத்தும். அதன் விளைவாக, வர்க்கப் போராட்டத்தின் புதிய பேரலை ஒன்று எழும்பி வீசும்.

**பேராசிரியர். தாவோ வான் தப்**

இயக்குநர், பொருளாதார நிறுவனம், துணைத் தலைவர், சமூக விஞ்ஞானங்களின் குழு-வியத்நாம் சோஷலிசக் குடியரசு

## விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியும், ஏகாதிபத்தியத்தின் பிற்போக்குக் கொள்கைகளும், சீன எல்லை விரிவுப் பிற்போக்குக் கொள்கைகளும்

விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் மிகச் சிறந்த ஒப்பற்ற சாதனைகள் மனித இனம் முழுமைக்கும், இயற்கை வளங்களைப் பயன்படுத்துவதற்கு ஏராளமான வாய்ப்பைத் தொடர்ந்து கொடுத்து வருவதுடன், மிகுந்த பொருளாயதச் செல்வத்தையும் தொடர்ந்து படைத்து வருகிறது.

சோவியத் ஒன்றியத்திலும், பிற சோஷலிச நாடுகளிலும் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி மனிதனுடைய சேவையில் ஈடுபடுத்தப்படுகிறது. சோஷலிசக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள விஞ்ஞானமும் தொழில் நுட்பமும், அமைதியைப் பேணிக்காக்கவும், சர்வதேசப் பாதுகாப்பை உத்திரவாதம் செய்யவும், அண்மைக் காலத்தில் காலனி ஆட்சியிலிருந்து தங்களை விடுவித்துக் கொண்டு, சுதந்திரப் பாதையில் இப்போது நுழைந்துள்ள வேறு பிற நாடுகளுக்கு உதவிகள் செய்வதற்கும் பயன்படும் ஒரு முக்கியமான கருவியாகப் பயன்படுகிறது.

எனினும், முதலாளித்துவ நாடுகளில் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் விளைவுகள் வேறுவிதமாக வுள்ளன. பூர்ஷ்வா சமுதாயத்தின் பொருளாதாரத்தில் விஞ்ஞான தொழில் நுட்பத்தைப் புகுத்துவதை ஒழுங்கு படுத்துவதற்கு முக்கியமான நெம்புகோலாக விளங்குவது அவர்களின் இலாபங்களே. இலாபங்களைக் கறக்கும் நலன் களுக்கு உட்படுத்தப்பட்ட விஞ்ஞான - தொழில் நுட்ப முன்னேற்றம், ஏகாதிபத்தியங்களுக்குப் பெரும் ஆதாயம் தருகிறது. அதே வேளையில் விஞ்ஞான - தொழில் நுட்ப முன்னேற்றங்கள் முதலாளித்துவ சமுதாயத்தில் நிலவுகிற முரண்பாடுகளை ஆழப்படுத்துவதோடு மட்டுமன்றி, புதிய முரண்பாடுகளைத் தோற்றுவிக்கவும் செய்கிறது. அவை களில் ஒன்று விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் உள்ளுறையும் மிகப்பெரும் ஆற்றல் வளத்திற்கும், முதலாளித்துவம் அதை மனித இனத்தின் நன்மைக்காகப் பயன்படுத்தும் வழியில் ஏற்படுத்தும் தடைக்கும் உள்ள முரண்பாடு ஆகும். இந்த முரண்பாடு பிற எதிர்மறையான விஷயங்களுடன் சேர்ந்து முதலாளித்துவ உற்பத்தி முறையின் வரலாற்று வரம்புகளையும், அதை கம்யூனிஸ்ட் உற்பத்தியைக் கொண்டு மாற்றியமைப்பதன் இன்றியமையா மையையும் வலியுறுத்துகிறது.

விஞ்ஞான - தொழில் நுட்ப வளர்ச்சி முதலாளித்துவ சமுதாயத்தின் இயல்பை மாற்றிவிடுகிறது என நிரூபிக்க எத்தனையோ கருத்துக்களை பூர்ஷ்வா சிந்தனையாளர்கள் வெளியிட்டுள்ளனர். இவைகளின் மூலம் அவர்கள் மக்களுக்கு சமூகப் புரட்சி இனிமேல் தேவையே இல்லை; ஏனெனில் சமூகம் விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியினால் மாற்றியமைக்கப்படும் எனக்கூற விரும்புகிறார்கள். உண்மையின் முன்னால் இந்த மழுப்பல் போக்குள்ள கருத்துகள் பயனற்றவை என நிரூபிக்கப்பட்டு விட்டன.

1970-களின் தொடக்கத்தில் விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சி முதலாளித்துவப் பொருளாதாரத்திற்குச் சிறந்து ஓர் தூண்டுகோலாக விளங்கவில்லை. அப்போது

அந்தப் பொருளாதாரத்தின் முரண்பாடுகள் — முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி ஆழமானதாக ஆனபோது, மிகவும் தீவிரம் அடைந்தன. மேலும் பொருளாதார நெருக்கடி, பணவீக்கம், ஆற்றல் நெருக்கடிகள், பணவியல் நெருக்கடிகளுடன் பின்னிப் பிணைந்து நிலைமையை மிகவும் மோசமாக்கியது. அரசு ஏகபோக முதலாளித்துவத்தின் ஒழுங்கு படுத்தும் நுட்ப முறைகள் வளர்ந்துவரும் உறுதியற்ற நிலையை எதிர்த்துப் போராட ஒன்றிணைக்கப்பட்டது, ஒன்றிணைந்த நெருக்கடி எதிர்ப்பு, பணவீக்க எதிர்ப்பு நடவடிக்கைகள் பற்றிய ஒரு திட்டச் செயல் முறைகளைப்பற்றி சிந்திப்பதற்காகப் பல உச்சநிலை மகாநாடுகள் நடைபெற்றன. அவைகளில் எதுவும் விரும்பிய பலனை ஏற்படுத்தவில்லை.

பொருளாதார நெருக்கடிக் கொள்கைகளும், நெருக்கடி எதிர்ப்புக் கொள்கைகளும், தொழிலாளி வர்க்கத்திற்கும், அனைத்து உழைக்கும் மக்களுக்கும், அவர்களுடைய வேலை நிலைமையிலும், வாழ்க்கை நிலைமையிலும் ஒரு பெரும் வீழ்ச்சியைத் தந்தன. வேலையில்லாதோரின் படையின் எண்ணிக்கை இதுவரை கண்டும், கேட்டுமிராத அளவு பெருகியது. வாழ்க்கைச் செலவுப் புள்ளிகளோ மிக அதிகமான உயரத்திற்குச் சென்று விட்டிருந்தன. தொழிலாளி வர்க்கமும், அனைத்து உழைக்கும் மக்களும் அவர்களுடைய இன்றியமையா உரிமைகளுக்காகவும், நலன்களுக்காகவும், ஏகபோகங்களுக்கெதிராகவும், பூர்ஷ்வா அரசுகளின் தொழிலாளி வர்க்க விரோதக் கொள்கைகளுக்கெதிராகவும், பெரும் சீற்றம் நிறைந்த போராட்டங்களை நடத்தியுள்ளனர். உலக முதலாளித்துவ மையங்கள் அனைத்திலும், உழைக்கும் மக்கள் முற்போக்கான சமுதாய மாற்றங்களை வேண்டுவதனால் முரண்பாடுகள் முனைப்பானதாகி, வர்க்கப் போராட்டங்கள் பரந்த அளவில் மேற்கொள்ளப்படுகின்றன. விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சி, சமூகப் புரட்சிக்கு மாற்றாக இருக்க முடியாது. அதற்கு மாறாக, முந்தியதன்

எதிர்மறைப் பலன்கள், சமூகப் புரட்சி ஒன்றைத் தோற்றுவிப்பதை, முன்னெப்பொழுதைக் காட்டிலும், தவிர்க்க முடியாததாக ஆக்குகிறது.

ஏகபோகங்கள் ஆதிக்கம் செலுத்தும் நிலைகளில் விஞ்ஞான - தொழில் நுட்ப முன்னேற்றம், ஒருபுறம், முதலாளித்துவ நாடுகளில் உள்ள உழைக்கும் மக்களைச் சுரண்டுவதற்கும், மறுபுறம் ஆக்கிரமிப்பு, ஆட்சி எல்லை விரிவுக் கொள்கையை உள்ளடக்கிய வெளிநாட்டுக் கொள்கையின் நோக்கங்களுக்கு உதவியாகவும் பயன்படுத்தப்படுகின்றன. முதலாளித்துவ நாடுகளின் விஞ்ஞான-தொழில் நுட்ப ஆற்றல் வளத்திற்கும், குறிப்பாக அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஆற்றல் வளத்திற்கும், புதிய காலனி ஆட்சிமுறைச் சூழ்ச்சிகளையும் நிறைவேற்றுவதற்கான வாய்ப்புகளுக்கும் மிக நெருங்கிய தொடர்பு உள்ளது.

ஏகாதிபத்தியம், அதன் நண்பர்கள், உலகப் பிற்போக்கு சக்திகள், ஆகியவற்றின் ஆக்கிரமிப்பு, ஆட்சி எல்லை விரிவுக் கொள்கையின் முக்கியமான தேட்டப் பொருளாக வியத்நாம் விளங்குகிறது. இரண்டு பெரும் வல்லரசுகளான பிரான்சும் அமெரிக்க ஐக்கிய நாடுகளும் எங்கள் நாட்டின் மீது, 1945 இல்ருந்து படையெடுத்து வந்திருக்கின்றன. வியத்நாம் மக்களின் தேசிய விடுதலை இயக்கத்தை நசுக்குவதற்காக அணு ஆயுதங்கள் தவிர பிற அனைத்து நவீன போர் ஆயுதங்களையும் பயன்படுத்தி நசுக்கவும், அந்நாட்டு மக்களை பழைய கற்காலத்திற்குத் தள்ளி விடவும் முயன்றன.

ஆனால், அதனுடைய வெடிகுண்டுகள், இரசாயனக் கருவிகள், வேறு வகையான ஆயுதங்கள் ஆகியவற்றில் அதன் பெரும் இராணுவ வலிமையும், வாய்ப்பும், வளங்களும் மிகுதியாகப் பெற்றிருந்த போதிலும், யு. எஸ். ஏகாதிபத்தியம் அந்தப் போரில் வெற்றியடையவில்லை. அதற்கு மாறாக வியத்நாமிய மக்கள்தான் அந்தப் போரில்

வென்றனர். ஏகாதிபத்தியத்தினால் பயன்படுத்தப்பட்ட நவீன தொழில் நுட்பம், அதற்கு ஒரு தற்காலிக வெற்றியைத்தான் கொடுக்க முடிந்தது. ஆனால் அது தவிர்க்க முடியாத தோல்வியிலிருந்து ஏகாதிபத்தியத்தைக் காக்க முடியவில்லை.

பீகிங்கில் உள்ள பிற்போக்குக் கும்பல் பின்பற்றுகிற வெளிநாட்டுக் கொள்கை, ஆக்கிரமிப்புக் கொள்கையைப் பின்பற்றும் இராணுவ வட்டாரங்களின் கொள்கையிலிருந்து எவ்வகையிலும் வேறுபட்டதல்ல. கம்பூச்சியாவில் உள்ள தன்னுடைய மக்களையே கொன்று குவிக்கும் கொள்கையைப் பின்பற்றி வரும் போல்-பாட் பற்றி உலகில் உள்ள அனைவரும் அறிவர். சீனத்தின் பிற்போக்குக் கொள்கையின் புதிய படிநிலை-வியத்நாமுக்கெதிரான ஆயுத ஆக்கிரமிப்புடன் இணைந்து எங்கள் நாட்டின் எல்லைப் பகுதிகளில் செய்யப்படும் அநியாயமான செயல்கள்-உலகில் உள்ள மக்கள் அனைவராலும் கண்டிக்கப் பட்டுள்ளது.

ஆனால் அவர்களின் துணிச்சல் வாணிபம், சீன ஆக்கிரமிப்பாளர்களுக்குத் தீவினைகளையே தோற்றுவித் துள்ளது. அவர்களுடைய படையெடுப்பு தோல்விதான் அடையும் என்பது முன்கூட்டியே அறிந்த ஒன்றுதான். வியத்நாமுக்கு எதிரான போராட்டத்தில் தோல்வியடைந்தது, சீனாவிற்குள்ளும், வெளியிலும் இடர்ப் பாடுகளையும் முரண்பாடுகளையும் தீவிரமாக்கியது. ஆனால் பீகிங்கில் உள்ள பிற்போக்குவாதிகள் அவர்களது ஆட்சி எல்லை விரிவுக் கொள்கையையும், சட்டாம்பிள்ளைத் தனத்தையும் கைவிடவில்லை. அவர்கள் இன்னும் இந்தோ-சீன தீபகற்பத்தில் உள்ள வியத்நாமையும், பிறநாடுகளையும் பயமுறுத்தி வருகிறார்கள் சீனத்தலைமையின் ஆக்கிரமிப்புக் கொள்கை ஒருபுறம் அவர்களுடைய இயல்பான குணங்களாலும், மறுபுறம் ஏகாதிபத்தியத்தின் தூண்டுதலாலுமே தோன்றுகிறது. முதலாளித்துவ நாடுகள்

பீகிங்கிற்கு ஆதரவளிக்கும் முக்கியமான வழிகளில் சில, சீனாவுக்கு அதன் ''நான்கு நவீனப்படுத்துதல்'' திட்டச் செயல்களை நிறைவேற்ற நிதி வசதிகளையும் தொழில் நிபுணர்களையும், தொழில் நுட்ப உதவிகளையும் பிற ஏற்றுமதிகளையும் கொடுத்துதவுவது ஆகும்.

சீனத் தலைவர்கள் காண்பதுபோல, இந்தத் திட்டச் செயலின் இலட்சியம் விஞ்ஞானத்தையும், நவீன தொழில் நுட்பத்தையும் பயன்படுத்தி, தொழில் நுட்பச் செயல் திறனையும், பொருளாதார செயல்திறனையும், மிகப் பெரும் இராணுவ இயந்திரங்களையும் படைப்பதேயாகும். ஏகாதிபத்திய வட்டாரங்களைப் பொருத்தவரை, அவர்கள் பீகிங்கிற்கு உதவி செய்வது, சோவியத் எதிர்ப்பு நோக்கங்களையும் சோஷலிசஎதிர்ப்பு நோக்கங்களையும் கொண்டது. சோவயத் ஒன்றியம், வியத்நாம, சோஷலிச சமுதாயம், மற்றுமுள்ள உலகப் புரட்சிகர சக்திகள் ஆகியவற்றிற் கெதிரான அரசியல், இராணுவ, பொருளாதாரத் திட்டங் களை ஊக்குவிக்கிறது சீனாவின் பெருநிலப் பகுதியில் முதலாளித்துவம் மீண்டும் தலைதூக்குவதை விரைவு படுத்துவது மற்றொரு இலட்சியமாகும். இந்தக் காரணங் களினால்தான் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடைபெறும் இன்றைய போராட்டம் பீகிங் ஆட்சியின் பிற்போக்காளர் களை எதிர்த்து நடத்தப்படும் போராட்டத்துடன் நெருக்கமாக ஒன்றிணைக்கப்பட வேண்டியதிருக்கிறது. இதில் ஏகாதிபத்தியத்தின் கொலைத் திட்டங்களுக்கும், பிற பிற்போக்கு சக்திகளின் கொலைத்திட்டங்களுக்கும் எதிராக உலக சோஷலிசம் ஒருமுக்கியமான பங்கினை மேற்கொள்ள வேண்டியதிருக்கிறது. சோவியத் ஒன்றியம், ஒரு முக்கியமான சக்தியாக விளங்குகிற சோஷலிச சமுதாயத்தின் வலிமையை மிகுதிப்படுத்துவது, ஏகாதிபத்தியத்தின் எரிச்சல் ஊட்டுகிற, ஆக்கிரமிப்புச் செயல்களுக்கும், பீகிங் பிற்போக்குக் கும்பலுக்கும் எதிரான போராட்டத்தில் ஒரு முக்கியமான பகுதியாக விளங்குகிறது. சோஷலிச சமுதாயத்தின் உறுப்பினராக இருக்கும் ஒவ்வொரு நாட்டையும்

வளர்ச்சியுறச் செய்வதும், வலிமைப்படுத்துவதும், சோஷலிச சமுதாயம் முழுமையையும் பலப்படுத்துவதோடு மட்டு மல்லாது தேசியக் கடமையையும், சர்வதேசியக் கடமையை யும் வெற்றிகரமாக நிறைவேற்ற உதவுகிறது.

வியத்நாமிய கம்யூனிஸ்ட் கட்சி, அதன் தேசிய, சர்வ தேசிய கடமையை மிக நன்றாக அறிந்திருப்பதால், வியத்நாமிய மக்கள், பல பத்தாண்டுகளாக, எந்த வகையான தியாகத்தைச் செய்யவும், எவ்வளவு இன்னல்கள் வந்தாலும் அவற்றைத் தாங்கிக்கொள்ளவும் தயாராக இருக்கிறார்கள். அவர்கள் படையெடுப்பாளர்களை எதிர்த்து அவர்களுடைய தேசிய சுதந்திரத்திற்காகவும், அவர்களுடைய நாட்டை மீண்டும் ஒன்றிணைக்கவும், போராடியிருக்கிறார்கள். அவர்கள் உலக சோஷலிச அமைப்பைப் பேணிக்காக்கவும், உலகில் சமாதானத்தை நிலவச் செய்யவும், தேசிய விடுதலை இயக்கத்தைத் தொடர்ந்து வலிமையுறச் செய்யவும் சிறந்த பணியாற்றியிருக்கிறார்கள். ஆக்கிரமிப்பு அமெரிக்க எகாதிபத்தியத்தை எதிர்த்து நடைபெற்ற போராட்டத்தில் வியத்நாம் மக்கள் முன்னணியில் நின்றிருக்கிறார்கள். உலக ஏகாதிபத்தியத்தால் தூண்டிவிடப்பட்டு, ஆதரிக்கப்பட்டு வருகிற ஆட்சி எல்லை விரிவுக் கொள்கையைப் பின்பற்றி வரும் பீகிங் சக்திகளுக்கு எதிரான போராட்டத்தில் இன்று மீண்டும் முன்னணியில் நிற்கிறார்கள்.

இந்தப் புதிய ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து நடை பெறும் போராட்டத்தில் சோவியத் ஒன்றியத்திடமிருந்தும், பிற சோஷலிச நாடுகளிடமிருந்தும், கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளிடமிருந்தும், உலக முழுதுமிருக்கும் முற்போக்கு சக்திகளிடமிருந்தும் வியத்நாமிய மக்கள் தொடர்ந்து விரிவான ஆதரவைப் பெற்று வருகிறார்கள்.

சோவியத் ஒன்றியத்திற்கும், பிற சோஷலிச நாடு களுக்கும் எங்கள் நன்றியை நாங்கள் கூறுகிறோம். ஏனெனில் போரின் இன்னல்களையெல்லாம் வென்றபின்

எங்கள் நாடு பல்வேறு துறைகளில் அதனுடைய நிலையை வலிமையுறச் செய்ய முடிந்துள்ளது. எனினும் வியத்நாம் வளர்ச்சிகுன்றிய நாடாகவே உள்ளது. அமெரிக்க ஆக்கிரமிப்பின் விளைவுகளில் பல இன்னும் அகன்றுவிட வில்லை. சீனர்களால் புதிய இடர்கள் தோற்றுவிக்கப்பட்டு வருகின்றன. இம்மாதிரியான சூழ்நிலை கட்சிக்கும் மக்களுக்கும் குறுகிய காலத்திற்குள்ளே தீர்க்கப்படவேண்டிய சிக்கலான பல கடமைகளை முன் வைத்துள்ளன. சண்டையின் தீயவிளைவுகளைப் போக்குவது, எங்களின் சமுதாய உற்பத்திப் பொருட்களைப் பெருக்குவது, வளர்ச்சியுற்ற தொழிலுடனும், விவசாயத்துடனும் கூடிய ஒரு சோஷலிச பொருளாதாரத்தை மெதுவாகக் கட்டுவதன் அடிப்படையில் தேசிய வருமானத்தைப் பெருக்குவது ஆகியவற்றை உள்ளடக்கியதாய் இருக்கின்றன இந்தக் கடமைகள்.

இதைச் செய்வதற்கு, சோஷலிச நாடுகளில் உள்ள சகோதர கட்சிகளாலும் வேறு நேச நாடுகளாலும், எங்களுக்கு வழங்கப்படுகிற உதவிகளுக்கு மிக அதிகமான முக்கியத்துவம் கொடுப்பதுடன் நாங்கள் எங்களுடைய வகை துறைகளையே பெரிதும் நம்பியிருக்க வேண்டியதிருக்கிறது. வியத்நாமின் உழைக்கும் மக்கள், கட்சியின் தலைமையில், அவர்களுடைய நாட்டின் கூட்டான உரிமையாளர்களாக இருக்கும் உரிமையை நிறைவேற்றுகிறார்கள். மேலும் விஞ்ஞான தொழில் நுட்ப, சித்தாந்த, கலாச்சாரப் புரட்சிகளை மேலோங்கச் செய்யும், நாட்டின் உற்பத்தி உறவுகளில் புரட்சியை நிறைவேற்றி வருகிறார்கள். இப்போது வியத்நாமில் நடந்துவரும் மூன்று புரட்சிகளில் விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சிக்குத்தான் முக்கியமான இடமளிக்கப்பட்டுள்ளது.

விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. ஏனெனில் சமுதாயத்தின் உற்பத்தி சக்திகளை அதுதான் முழுதும் முற்போக்கானதாக ஆக்க

முடியும். நாட்டில் மிக அதிகமாகவுள்ள குறைந்த உற்பத்தித் திறனேயுள்ள சிறுதொழில் உற்பத்தியை, பேரளவு இயந்திர உற்பத்தி முறையாக மாற்ற முடியும்.

வியத்நாமில் இன்றுள்ள ஸ்தூலமான நிலைமைகள் அதன் அரசையும், கட்சியையும் விஞ்ஞான—தொழில் நுட்பப் புரட்சியில் கீழ்க்கண்டவற்றிற்கு முன்னுரிமை தருமாறு செய்துள்ளது: உற்பத்தியைப் பெருக்குதல்; வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்; தேசியப்பாதுகாப்பை வலிமையுறச் செய்தல்; நாட்டினுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யத் தேவையான விஞ்ஞான-தொழில் நுட்பச் செயல் திறனைப் படைப்பது (ஆட்களையும், ஆராய்ச்சிப் பணியையும் பொருத்தவரையும்.)

ஒரு வளர்ச்சி குன்றிய நாட்டில் விஞ்ஞான - தொழில் நுட்ப முன்னேற்றத்தை மேம்பாடடையச் செய்வது ஒரு சிக்கலான கடமையாகும். நாங்கள் ஒரே சமயத்தில் இரண்டு இலட்சியங்களை உடையவர்களாக இருக்கிறோம். சோஷலிசத்தைக் கட்டுவதும், சீனப் பிற்போக்காளர்களை எதிர்ப்பதற்கு எப்போதும் தயாராயிருப்பதற்கு வேண்டுவது அனைத்தையும் செய்தலும். ஆனால் அதே சமயத்தில் நாங்கள் சில சாதக நிலைகளையும் உடையவர்களாக இருக்கிறோம். எங்கள் நாட்டில் நாங்கள் ஒரு புதிய சமுதாய அமைப்பு முறையை உடையவர்களாயிருக்கிறோம். நாங்கள் சோவியத் ஒன்றியத்திடமிருந்தும், பிற சகோதர சோஷலிச நாடுகளிடமிருந்தும், உதவிகள் பெற்றுவருகிறோம். விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் வாய்ப்புகளையும் வளங்களையும் பயன்படுத்திக் கொள்ளக் கூடியவர்களாகவும் இருக்கிறோம்.

ஒரு சோஷலிச அமைப்பினால் வழங்கப்படும் வாய்ப்புகளையும், விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் சாதனைகளையும் சரியாய் இணைத்தலுக்காகவும், சோஷலிச நாடுகளின் சர்வதேசக் கூட்டுறவிலிருந்து பெற்ற பொருளாதார, தொழில் நுட்பத் தன்மையான உதவிக்

காகவும் எங்கள் நன்றியைக் கூறுகிறோம். எங்கள் கட்சியும், எங்கள் மக்களும் இணைந்து எங்களுடைய பின்தங்கிய நிலையை ஒழித்துக்கட்டிவிடுவோம் என்றும், சோஷலிசத் திற்கான அடிப்படையை வெற்றிகரமாகக் கட்டுவோம் என்றும், எங்களுடைய நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தைப் புரட்சிகரமாக மேம்பாடடையச் செய்வோம் என்றும், எங்கள் நாட்டின் பாதுகாப்புத் திறமையை உயர்த்துவோம் என்றும், எங்கள் சர்வதேசக் கடமையை நிறைவேற்றுவோம் என்றும் உறுதியாக நாங்கள் நம்புகிறோம்.

**பேராசிரியர் ஜாக்குவெஸ் நாஜெல்ஸ்**

*ஃப்ரீ பல்கலைக்கழகம், பிரசல்ஸ்*
*பெல்ஜியம் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக்*
*கமிட்டி உறுப்பினர்*

## மேற்கு ஐரோப்பாவின் தொழிலிலும், விவசாயத்திலும், விஞ்ஞான–தொழில் நுட்பப் புரட்சியின் விளைவுகள்

உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியை விரைவுபடுத்தும் போது, விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி உற்பத்தி உறவுகளைப் பாதித்துள்ளது. அதன் விளைவாக ஐரோப்பிய பொருளாதாரப் பொதுச் சந்தையைச் சேர்ந்த 9 நாடுகளில் மூலதனம் ஓரிடத்தில் குவிவது, மிக அதிகமான அளவு அடிப்படையான கட்டமைப்புடைய தொழில் தொகுதிகளில் மட்டுமல்லாது பிற தொழில் தொகுதிகளிலும் கூட மிகுந்து வருகிறது. அதே வேளையில் பெரும் கம்பெனிகள் முக்கிய பங்காற்றுகிற கேந்திரத் தொழில்கள் ஏகபோகங்களாக மாறுவது வளர்ந்து கொண்டு வருகிறது. மூலதனம் பன்னாட்டுத் தொடர்பு கொண்டதாக ஆக்கப்படும் செயல் நடைபெறுகிறது. அது பல்வேறு உருவங்களை மேற் கொள்கிறது. ‘‘ஒன்றிணைந்த பன்னாட்டுச் செயல் திட்டம்’’ என்பதன் வளர்ச்சிகளானவை ஐரோப்பிய பொருளாதார கமிஷன், ஐரோப்பிய விவசாய வழிகாட்டுதல், உத்திரவாத நிதி, ஆகியவற்றின் வளர்ச்சியுடனும், வேறுபிற அமைப்புக்களின்

வளர்ச்சியுடனும் தொடர்பு கொண்டதாகவுள்ளன. மேற்கு ஐரோப்பிய தொழில் வளமிக்க நாடுகளில் மிகுந்த செல்வாக்கைச் செலுத்துகிற, ஒரு புதுமாதிரியான சர்வதேச வேலைப்பகுப்பு தோன்றியுள்ளது. மாறிவரும் பொருளாதாரக் கட்டமைப்பில் அரசு தலையீடு பண்பியல் அடிப்படையில் ஒரு புதிய தன்மையைக் கொண்டுள்ளதாக இருக்கிறது. அதே வேளையில் பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்குவதிலும், அதை நிறைவேற்றுவதிலும் இருந்து தங்களை விலக்கி வைப்பதைத் தவிர்ப்பதற்குப் பொதுமக்களிடையே ஒருபெரும் விருப்பம்தோன்றியுள்ளது. இவைகளும் இன்னும் சில காரணிகளும் ஒன்றை ஒன்று இயக்கவியல் அடிப்படையில் பாதிக்கின்றன. இந்த ஆராய்ச்சிக் கட்டுரையில் மேற்கு ஐரோப்பாவின் தொழிலிலும், விவசாயத்திலும் இந்த உட்செயல்களின் விளைவுகளைப் பற்றிக்கூற நான் விரும்புகிறேன்.

ரோம் உடன்படிக்கை நடைமுறைக்கு வந்த நேரத்திலிருந்து,[1] உற்பத்தித்துறை முழுமையிலும், பொதுச் சந்தையைச் சேர்ந்த ஆறு பெரிய நாடுகளின் உற்பத்தி அடிப்படையின் பங்கில், ஒப்பீட்டில் ஒரு குறைவு மிகுதியாக வெளிப்பட்டது. 1960 களில் இந்தப் பங்கு 50—60 சதவிகிதத்திலிருந்து 1970 களில் 44—54 சதவிகிதமாக[2] மேலும் குறைந்தது. இதுதான் சிறப்பாக பிரான்ஸ்நாட்டில் நடந்தது. அங்கு அதே காலத்தில் அந்தச் சுருக்கம் 58 லிருந்து 47 சதவிகிதமாக இருந்தது. இந்தப் போக்கு விவசாய உற்பத்தித்துறை, தொழிற்பொருட்கள் உற்பத்தித் துறை ஆகியவற்றின் பங்கின் சுருக்கத்தினாலேதான் ஏற்பட்டது.

உற்பத்தி சாதனத்தின் உற்பத்தியைப் பொருத்தவரை (பொருளாதாரம் முழுமைக்கும் அதன் முக்கியத்துவம் பற்றிச் சொல்லத் தேவையில்லை) கீழ்க்கண்ட காரணிகள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்:-

—ஒன்று. பொருளாதார வளர்ச்சி, மிக அதிகமாக செல்வம் குவிக்கப்படுவதை இன்றியமையாததாக ஆக்குகிறது—அதாவது நிலையான மூலதனக் கூறுகளைப் பெறுவதில் முதலீடு செய்தல்; தொழில் சாதனங்கள்; (லேத்துக்கள் முதலியன) அவற்றிற்கான வசதிகள், அவற்றை நிறுவுதல் முதலியனவாகும். நுகர்வோர் பொருட்களின் உற்பத்தியின் வளர்ச்சியில் மிகுந்த இயைபூக்கம் நிறைந்த சக்தியாக விளங்குவது உற்பத்தி சாதனங்களின் உற்பத்தியே ஆகும்.

—இரண்டு. இன்று உற்பத்தி சாதனங்கள் என்பது ஆராய்ச்சியையும் மேம்பாட்டையும் உள்ளடக்கியதாகவுள்ளது. அது, ஏன் என்பதைப் பின்வரும் புள்ளி விவரம் தெளிவாக்குகிறது. தொழிற் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளின் ஆராய்ச்சி, மேம்பாடு மட்டத்தை 100 எனக் கொண்டால், மின் பொறியியல் உற்பத்தியளவு 385 ஆகவும், இரசாயனத் தொழிலில் 375 ஆகவும், எண்ணெய், நிலக்கரித்தொழில் 243 ஆகவும், இரும்பு உருக்கு 138 ஆகவும், ரப்பர் 108 ஆகவும், போக்கு வரவுப் பொறியியல் 108 ஆகவும் இருக்கும்.

—மூன்று. தொழிலாளர்களின் உற்பத்தித் திறனில் வளர்ச்சியுடன் இணைந்த தீவிர தொழில் மயமாக்கலுக்கு, மிக அதிகமான மேம்பாடடைந்த வகைச் சாதனங்கள் தேவைப்படுகின்றன.

—நான்கு. மேற்கு ஐரோப்பா, அரசியல் சுதந்திரம், இராணுவத் தன்னாட்சியுடன் இணைந்ததாகக் கருதுகிறது. எனவே ஆயுதங்களை உற்பத்தி செய்வது உற்பத்தி சாதனங்களை உற்பத்தி செய்வதுடன் தொடர்புடையதாகவுள்ளது.

பெரும் பொதுச்சந்தைநாடுகளின் உற்பத்திசாதனங்கள் உற்பத்தி செய்யப்படுவதன் பொதுவான நிலை என்ன?

பெரும்பாலும் மிகுந்த நெருக்கடி நிலை நிலவிய காலத்திற்கு முந்திய காலத்தைப் பற்றிய ஒப்பீட்டுப்

பகுத்தாய்வின் விளைவுகளிலிருந்து (ஆகவே அதனுடைய விளைவுகள் என்ன என்று அறியாத காலத்தில்) கீழ்க்கண்ட தற்காலிக முடிவுகளைப் பெறமுடியும்:

—அரைகுறையாகப் பதனப்படுத்தப்பட்ட உற்பத்திப் பொருட்களின் தயாரிப்பிலும், சாதனங்களின் தயாரிப்பிலும், மேற்கு ஜெர்மனி, அதனுடைய பங்காளிகளைக் காட்டிலும் ஒரு சிறிது உயர்வுடையதாயிருந்தது. அரைகுறையாகப் பதனப்படுத்தப்பட்ட பொருள்களை உற்பத்தி செய்வதன் முதன்மையை இன்னும் அது பெற்றுள்ளது. ஆனால் ஜெர்மன் கூட்டுக் குடியரசுக்கும், பிரான்ஸ், இத்தாலி ஆகிய நாடுகளுக்குமிடையே சாதனங்களை உற்பத்தி செய்வதிலிருந்த இடைவெளி குறைந்துவிடும்.

— பிரான்ஸ் இத்தாலி ஆகிய நாடுகளில் உற்பத்தி சாதனங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளில் பொருளாதார வளர்ச்சி விகிதம், மிகுதியாகவே உள்ளது. அந்த நாடுகள் ஜெர்மன் கூட்டுக் குடியரசின் நிலையை வேகமாகவே பிடித்துவிட முயல்கின்றன. குறிப்பாக முதலீடுகளின் பரிமாணத்தைப் பொருத்தவரை.

— இந்தத் துறையைப் பொருத்தவரை பிரிட்டனின் நிலை மிகவும் சிக்கலானது. அது அண்மை வருங்காலத்தில் மேம்பாடடையும் என்பது நிகழ முடியாததாகவுள்ளது.

தொழிலில் கட்டமைப்பு மாற்றங்களுக்குச் சிறப்பான முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். இந்தப் பிரச்சினையின் மூன்று கூறுகள் நம்மை எதிர்நோக்கி நிற்கின்றன: ஐரோப்பியப் பொருளாதாரப் பொதுச் சந்தை நாடுகளில் தொழில் கட்டமைப்புகளின் ஒன்றிலொன்று ஊடுருவும் நிலையும், அவற்றின் தன்னாட்சியும். தொழில் கட்டமைப்புகளின் பொருளாதாரத் தனிச்சிறப்புத் துறையமைப்பும், அவை ஒன்றுடன் ஒன்று நெருங்க வருதலும் ஆகும.

பொதுச் சந்தைக் கட்டமைப்புக்குள், உற்பத்தி சாதனங்களின் உற்பத்தி ஒன்றுக்குள் ஒன்று ஊடுருவுதல், ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குத் தொழில் நுட்பம் மாற்றப்படுவதை முன்னேற்றமடையச் செய்கிறது; உற்பத்தி தொடர்பான தொழில் நுட்பத்திற்கு ஒரு சர்வதேசப் பண்பைத் தருகிறது; உழைப்பின் பலபடிகளைப் பொது அளவைக் கொண்டதாக ஆக்குகிறது. ஆனால் அது தனித்தேசிய பொருளாதாரங்களின் புதியசார்பு நிலைகளைத் தோற்றுவிக்கவும், அவற்றின் தன்னாட்சியைப் பாதிக்கவும் கூடும். இதனால்தான் ஐரோப்பிய பொருளாதாரப் பொது சந்தை நாடுகளில் உற்பத்தி சாதனங்களின் பரிமாற்றம் பற்றிய பிரச்சினை மிக இன்றியமையாததாகவுள்ளது.

இங்கே, நம்முடைய புள்ளிவிவரங்களின்படி (உற்பத்தி நுகர்வு, தொழிற்சாலைத் தளவாடங்கள் ஆகியவற்றைப் பொருத்தவரை) ஜெர்மன் கூட்டுக் குடியரசுதான், அதிகமான, உறுதியான தன்மையுடையதாக இருக்கிறது. அதனுடைய குறை நேர்த்திப் பொருட்களின் 86 சதவிகிதத் தேவையை, பொதுச்சந்தை நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் பொருட்களின் அளவைக் காட்டிலும் இரண்டு மடங்குக்கும் அதிகமாகப் பொதுச்சந்தை நாடுகளுக்கு வெளியிலிருந்து இறக்குமதி செய்வதன் மூலம் சரிசெய்து கொள்கிறது. அதற்கும் வேறு சில நாடுகளுக்கும் இடையேயுள்ள இடைவெளி அதிகரிக்காவிட்டாலும்கூட, ஜெர்மன் கூட்டுக் குடியரசு, நிலையான மூலதனம் புதுப்பிக்கப்படுதலிலும் முதலிடத்தை வகிக்கிறது. பிரான்சுடைய மூலப்பொருட்களை வைத்து அதன் உற்பத்தித் தேவைகளைச் சரிசெய்து கொள்ளும் திறமை ஓரளவு குறைந்திருந்த போதிலும், அண்மை ஆண்டுகளில் அதன் நிலைமை ஒரே மாதிரியானதாக இருந்து வந்திருக்கிறது. பிற நாடுகள் (இத்தாலி, ஹாலந்து, பெல்ஜியம்) இந்தத்துறையில் மற்ற இரண்டு நாடுகளைக் காட்டிலும் மிகவும் பின்தங்கியுள்ளன. குறிப்பாக

பெல்ஜியம் மிகப் பின்தங்கியிருக்கிறது. இந்த நாடு இரும்பல்லாத மற்ற பொருட்களின் உற்பத்தியில் புதிய தொழில் நுட்பத்தை அறிந்துள்ளது உண்மைதான். எனினும் அது தன்னுடைய செய்பு இறக்குமதிகளைப் பல்வகைப்படுத்தாவிட்டால் போட்டிகளில் மிகவும் சிறந்து விளங்கும் அதனுடைய தொழில் வீழ்ச்சியடையும் அபாயம் ஏற்படும்.

ஐரோப்பியப் பொருளாதாரப் பொதுச்சந்தை உறுப்பினர் நாடுகளின் தனித்தேசிய பொருளாதாரங்களின் தனிச் சிறப்பியல்புகளையும், அவைகள் தொழில் கட்டமைப்புக்கு அருகிலிருக்கும் நிலையினையும் பற்றிய ஒரு பகுத்தாய்வானது பல சிக்கல் மிகுந்த பிரச்சினைகளை வெளிப்படுத்துகிறது. அவைகளுடைய தொழிற் தொகுதிகளின் அடிப்படைகளைத்தான் அவைகளின் விவசாய உற்பத்தி சார்ந்திருக்கிறது.

தொழிற்சாலை பற்றியும், விவசாயம் பற்றியும் பொதுவான ஐரோப்பிய ஜனநாயகக் கொள்கை உருவாக்கப் படுவதற்கு அடிப்படையாக என்ன முக்கியமான கோட்பாடுகள் இருக்கவேண்டும்? அவைகள் மொத்தமாக மூன்று. அவைகள் உற்பத்தி அடித்தளத்துடனும், தொழில் மற்றும் விவசாயத்தின் கட்டமைப்புடனும், தொழில், விவசாயம் ஆகியவற்றின் கட்டமைப்புகளது வளர்ச்சிகளுக்கிடையில் நிலவும் உறவுகளுடனும் தொடர்புடையவை.

முதன் முதலாகப் பதனிடும் தொழில்களை வளர்ப்பது மிகவும் இன்றியமையாதது. சேவைகளிலும், பழுதுபார்க்கும் தொழில்களிலும் வேலையற்றோரை இழுத்துக் கொள்வது கட்டமைப்பு வேலையில்லாத் திண்டாட்டத்தை எவ்வகையிலும் தீர்க்காது. பதனிடும் தொழில்களில் முதலீடுகள் மிகவும் குறைவாக இருப்பது அதனுடைய முதன்மையான காரணமாகும். வட்டி விகிதம் அதிகமாக இருக்கிறது என்பதால் நேரடியான உற்பத்திக்கு நிதியுதவி செய்வதற்கு வாய்ப்பு வளங்களுடன் சுதந்திரமாக உள்ள

மூலதனத்தின் வகை தொகைகளை உடையதாக மேற்கு ஐரோப்பா உள்ளது. இந்த மூலதனம் மீண்டும் சரியான திசையில் திருப்பிவிடப்பட வேண்டும். வேறு மாதிரி சொன்னால் உற்பத்தி சாதனங்களை உற்பத்தி செய்கிற தொழில்களில் முதலீடு செய்ய வேண்டுவது இன்றியமையாதது. அதுதான் வருங்காலத்தின் விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றத்திற்கு அடிப்படையாக விளங்கும்.

அடுத்ததாக விவசாயத்தில் தன்னிறைவும், அனைத்துத் துறை விவசாய வளர்ச்சியும் ஐரோப்பிய தனி நாடுகள் ஒவ்வொன்றின் இலட்சியமாக இருக்கவேண்டும். ஏனெனில் மேற்கு ஐரோப்பா தனது மக்கள் தொகைக்கு வேண்டிய உணவுப் பொருட்களைத் தந்துதவுவது இந்தத் திறமையைப் பொருத்ததாகத்தான் இருக்கிறது. உலகின் பல பகுதி களுடன் (வெளி நாட்டு) வாணிபத்தைக் குறைத்துக் கொள்வது, என்பது இதற்குப் பொருள் அல்ல. தன்னிறைவு என்பது மேற்கு ஐரோப்பிய நாடுகளின் பன்னாட்டு வாணிபநிலை—விவசாய உற்பத்திப் பொருட்களின் முக்கிய இனங்களில் சாதகமாக இருப்பதை உள்ளடக்கியதாக இருக்கிறது.

ஒவ்வொரு தனி நாட்டிலும், விவசாயத்தின் அனைத்துத் துறைகளும் வளர்ச்சியடைந்திருக்க வேண்டும் என்பது குறைந்த முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல. அது சிறப்பான முறையில் கட்டமைப்பை மறுசீரமைப்பதை உள்ளடக்கிய தாகவுள்ளது. உயிரியல் தட்பவெப்ப நிலைக் கண்ணோட்டத்திலிருந்து, எந்தப் பகுதிகளில் மழையும், வளமான மண்ணும் குறைந்த வெப்பமும் உள்ளதோ, அந்தப் பகுதிகள், பஞ்சம் ஏற்படக்கூடிய வாய்ப்புகளை யுடைய மிகுதியான வெப்பமுள்ள இடங்களுக்கும், குறைந்த வளமுள்ள இடங்களுக்கும், புறவயமாக ஈடுசெய்கின்றன. ஆனால் சந்தையை ஆளும் சக்திகளால் விவசாய மறுசீரமைத்தல் நிர்ணயிக்கப்படுவதைத் தடுப்பதற்குத்

தேவையான கொள்கைக்கான முன் முயற்சி முற்போக்கான சக்திகளால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஒரு ஜனநாயகப் பொருளாதாரக் கொள்கை, ஒரு நிலையான தொழில் தொகுதி கட்டமைப்பை உள்ளடக்கியதாக இருக்கிறது. இதற்குப் பொருள் என்ன? ஒவ்வொரு உற்பத்தி முறையும், ஒன்றிணைக்கப்பட்ட துணை அமைப்பு முறைகளின் மொத்தமேயாகும். அதாவது ஒவ்வொரு உற்பத்தி அமைப்பு முறையும், அதனுடைய பல கூறுகளாலும், அந்த அமைப்பு முறை உண்டாக்கும் பலவழிகளாலும் நேரடியாக ஒன்றிணைக்கப்பட்ட பன்முக முழுமையாகும். உற்பத்தியின் வளர்ச்சிப் போக்கில் இந்த இணைப்புகளில் ஒரு குறிப்பிட்ட கால இடைவெளிகளில் குறுக்கீடுகள் நிகழ்கின்றன. தொழில் துறையில் ஜனநாயகப் பொருளாதாரக் கொள்கையின் கடமை, உற்பத்தி அமைப்பு முறையின் உள் ஒற்றுமையைத் திரும்ப வழங்கலேயாகும். பன்னாட்டு இணையங்களின் செயல்களின் மீதும், பன்னாட்டு இணையங்களின் மட்டத்தை அடையாத தேசிய கம்பெனிகளின் செயல்களின் மீதும் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தும் இந்தப் பிரச்சினை குறிப்பாக முக்கியத்துவம் வாய்ந்ததாகவுள்ளது. அவற்றின் செயல்கள் தொடர்ச்சியாக பிணைப்புகளின் முறைகளையும், உற்பத்தி அமைப்பு முறையின் செயல்முறைகளின் விகிதங்களையும் தடைசெய்கின்றன.

இந்த இலட்சியத்தை அடைவதற்கு-மேற்கு ஐரோப்பிய உற்பத்தி அமைப்பு முறையின் தடைகளையும், செப்பமின்மையையும் நீக்குவது—சந்தேகமின்றி சில திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவது இன்றியமையாதது. இருப்பினும், வெளியுலகத்துடன் பரிவர்த்தனைகளை விலக்கிக் கொள்வது என்று அதற்குப் பொருள் அல்ல—குறிப்பாக வளரும் நாடுகளுடனும், சோஷலிச நாடுகளுடனும், சமத்துவ அடிப்படையிலும், பரஸ்பர நலன்களின் அடிப்படையிலும்

வாணிபத்தின் அளவை உயர்த்துவது இன்றியமையாத தாகும்.

மற்றொரு பிரச்சினை பற்றி ஒரு சிலவற்றைக்கூற என்னை அனுமதியுங்கள். விவசாய வளர்ச்சிக்கும், தொழில் வளர்ச்சிக்குமிடையேயுள்ள தொடர்பின் வழிகளை மேம்பாடடையச் செய்வது, இங்கு ரோம் ஒப்பந்தத்தின்- ஏற்றுக் கொள்ளப்பட்ட உட்பிரிவுகளை, குறிப்பாக விவசாய உற்பத்திப் பொருளால் அந்தக் காப்பு வாசகத்தை உத்திரவாதம் செய்கிற 39 e உட்பிரிவை நாம் முழுவதுமாகப் பயன்படுத்த வேண்டும். உணவு தானியங்கள் ஏற்றுமதியிலும் சோயா ஏற்றுமதியிலும் ஆதிக்க நிலை வகிக்கும் சர்வதேச அமெரிக்க ஏகபோகங்களுக்கும் விவசாயத்துடன் தொடர்புடைய ஐரோப்பிய பன்னாட்டு இணையங்களுக்கும் இடையில் உறவுகளின் சிறப்புரிமை களைத் திருத்துவதை இது உள்ளடக்கியது.

எவ்வளவு தான் யு. எஸ். சுதந்திரமான போட்டியின் சிறப்பு நலன்களைப் பற்றிப் புகழ்ந்து கூறினாலும், அது ஒருதிசையில் மட்டுமே வழங்குவதாக இருக்கிறது—அதாவது உற்பத்திப் பொருட்கள் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலிருந்து ஐரோப்பாவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் பொழுதும், யு. எஸ். சந்தைகள் முழுதும் பாதுகாக்கப்பட்டிருக்கும் போது மட்டுமே, இந்த சுதந்திரம் வழங்கப்படுகிறது. யு. எஸ். க்கும், ஐரோப்பிய இணையங்களுக்கும் இடையே நிலவுகிற உறவுகளின் இயல்புகளில் நிகழும் மாற்றங்கள், பொதுவான விவசாயக் கொள்கையில் ஒரு பெரும் மாற்றத்திற்கு வழி செய்யும். வடக்கு ஐரோப்பிய விவசாயமும், மத்திய தரைக்கடல் பகுதியின் விவசாயமும் ஒன்றுக்கொன்று உதவுகிற புறவயமான இயல்பின் மீது முக்கியமாக சார்ந்திருக்க வேண்டும். மேலும் பொதுச் சந்தைக்கும், வளரும் நாடுகளுக்குமிடையேயுள்ள ஒப்பந்தங்கள் பரஸ்பரம் நலன் விளைவிப்பதாகவும், மேற்கு

ஐரோப்பா, அமெரிக்க உணவுப் பொருட்களின் அளிப்பைச் சார்ந்தில்லாமலும் ஆகமுடியும்.

விவசாய இயந்திரங்களை உற்பத்தி செய்கிற தொழிற் சாலைகளை மேம்பாடடையச் செய்வது மிகவும் இன்றியமையாதது ஆகும். இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்துவதும், விவசாயத்தின் அனைத்துப் பகுதி களையும் இயந்திரமயமாக்குவதும், ஆற்றலை நுகர்வதின் வளர்ச்சியைப் பொருத்ததாக இருப்பதால், ஆற்றலுக்குப் இதே விஷயங்கள் பொருந்தும் ''மென்மை''யான ஆற்றல் என அழைக்கப்படுகிற புதிய உற்பத்தி முறை நிச்சயமாகத் தொழில் நுட்ப முன்னேற்றத்தினால் தோன்றுகிற, வளர்ந்து வரும் தினசரி நுகர்வைச் சரி செய்யமுடியாது. இம்மாதிரியான ஒரு கொள்கையை நிறைவேற்றுவதற்கு நாம் முதலில் எண்ணெய் மற்றும் ஆற்றல் ஏகபோகங்களின் எதிர்ப்பை அடக்க வேண்டும்.

## அடிக்குறிப்பு

1. ஐரோப்பியப் பொருளாதாரப் பொதுச் சந்தை நாடுகள் தோற்றுவிக்கப்படுவதற்கு ஆதாரமாயிருந்த உடன்பாடு 1957 இல் ரோம் நகரில் கையெழுத்திடப்பட்டது.

2. ''உற்பத்தி அடித்தளம்''-என்பதற்கு, விவசாயம், சுரங்கத் தொழில், பதனீட்டுத் தொழில், ஆற்றல் கட்டுமானம் ஆகியவை என்று நாம் பொருள் கொள்கிறோம். மேலே கூறப்பட்டவற்றைத் தவிர, போக்குவரவு, செய்தித்தொடர்பு, ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சியையும் தன்னுள் அடக்குகிற ''உற்பத்தி வட்டத்''தைக் காட்டிலும், உற்பத்தி அடித்தளம் வீச்சில் குறுகியதுதான்.

கலைக்கழக உறுப்பினர், ரடோவன் ரிச்டா
இயக்குநர், தத்துவம் மற்றும் சமூகவியல் நிறுவனம்,
விஞ்ஞான கலைக்கழகம் - செக்கோஸ்லாவாகியா

## அரசு – ஏகபோக முதலாளித்துவத்தின் கீழ் விஞ்ஞானத்தின் எதிர்காலம்

விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியால், விஞ்ஞானம், தொழில் நுட்பம், உற்பத்தி, ஆகியவற்றில் ஏற்படுத்தப் பட்ட மாற்றங்களின் பரந்த வீச்சும், உயர்ந்த விகிதமும், இந்த மாபெரும் மாற்றங்களால் ஏற்படுத்தப்பட்ட சமூக மாற்றங்களும், தொடர்ச்சியாகப் பல புதிய பிரச்சினைகளை எழுப்பி வருகின்றன. அரசு ஏகபோக முதலாளித்துவத்தின் கீழ் விஞ்ஞானத்தின் எதிர்காலம் பற்றி நம் கவனம் ஈர்க்கப் பட்டுள்ளது.

விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் மீது நம் பார்வையை ஒருகணம் செலுத்தினால் நம்மைக் கவர்வது, பல்வேறுபட்ட, சிக்கலான நிகழ்ச்சிப் போக்குகள் முழுமையிலும் ஒரு தனிச்சிறப்பு வாய்ந்த ஒரு உட்பகுதியாக விஞ்ஞான - தொழில் நுட்பப் பேரலை இருக்கின்ற காட்சியாகும். அது விதிப்போக்கான "தன்னிறைவு" நிகழ்ச்சிப் போக்கு போன்று, தனி மனிதனின் கட்டுப் பாட்டிலிருந்தும், சமுதாயத்தின் கட்டுப்பாட்டிலிருந்தும் விடுபட்டு ஓடிக் கொண்டிருப்பது போன்று தோன்றுகிறது. விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியைப் பற்றியும்

"பெருந்தொழில்கள் சார்ந்த சமுதாயத்திற்குப் பிந்திய சமுதாயம்" பற்றியும், பூர்ஷ்வாக்களின் விளக்கங்களும் திருத்தல்வாதிகளின் விளக்கங்களும், இம்மாதிரியான புறவயத் தோற்றங்களை அடிப்படையாகக் கொண்டவையே. பூர்ஷ்வா சித்தாந்தத்தில் தொழில் வித்தகராட்சி "கலாச்சார நெருக்கடி" ஆகிய போக்குகள் இந்தப் பிரச்சினையின் மீதுதான் மோதிக்கொள்கின்றன.

இம்மாதிரியான விளக்கங்கள் உண்மையாகவே முதலாளித்துவ சூழ்நிலைகளிலிருந்துதான் தோன்றுகின்றன என நாம் அறிந்து கொள்ள முடியும். உற்பத்தியிலும், மனித வாழ்வின் மறுஉற்பத்தியிலும், விஞ்ஞானம் உடனடியான உற்பத்தி சக்தியாக மிகவும் புரட்சிகரமான பங்கொன்று வகிக்கிறது. ஏனெனில் அது முக்கியமாக உற்பத்தி சக்திகளின் தொழில் நுட்பப் பகுதிகளாகப் பயன்படுத்தப் படுகிறது; விஞ்ஞான அடிப்படையில் நிலையான மூலதனம் போலச் செயல்படுகிறது. இந்த நிகழ்ச்சிப் போக்கின் பிற உட்பகுதிகள் மிகக்குறைந்த அளவே பயன்படுத்தப் படுகின்றன அல்லது அப்படி இல்லையென்றால் இலாபங்களை மிகைப்படுத்துவதற்காக உற்பத்தியின் தொழில் நுணுக்க மறுசீரமைப்பின் கீழ் உள்ள உருவங்களாகப் பயன் படுத்தப்படுகின்றன.

உற்பத்தியில் தொழிலாளியின் சிறப்பியல்புகளை வெளிப்படுத்துவதுடனும், செயல் முறைகளை வெளிப் படுத்துவதுடனும், தனிநபர் திறமைகளை வெளிப்படுத்து வதன் பரிணாம வளர்ச்சியுடனும் தொடர்புடைய ஒரு உற்பத்தி சக்தியாக விஞ்ஞானம் பயன்படுத்தப்படுவதன் உருவங்கள் சிறப்பான வளர்ச்சியுறச் செய்யப்படவில்லை.

முதலாளித்துவத்தின் கீழ் விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் ஏற்றத்தாழ்வு நிறைந்த வளர்ச்சி 1970 களில் பல, தொழில் மயமாக்கப்பட்ட நாடுகளில் தெளிவாக வெளிப்பட்ட விஞ்ஞான தொழில்-நுட்ப நெருக்கடியைத்

தூண்டிவிட்டிருந்தது. ஆகவேதான் விஞ்ஞான - தொழில் நுட்பத்தின் மீது ஒரு பெரும் ஏமாற்றமும், விஞ்ஞான சிந்தனைகளுடன் "கணக்குத்தீர்த்துக் கொள்ள" வேண்டுமென்ற விடாப்பிடியான முயற்சியும், இயற்கையைப் பகுத்தறிவுக்கேற்றவாறு மாற்றவேண்டுமென்ற கருத்தும் தோன்றின. இந்த நெருக்கடி மிக அதிகமான அளவில் நிலவுகிற நாடுகளில், குறிப்பிடத்தக்க வகையில் விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் சாதனைகள் மிகப் பரந்த அளவு பயன்படுத்தப்பட்டு வருகிறதனால் அவைகளுடைய உள்முரண்பாடுகள் பெருகி தீவிரமடைகின்றன.

உற்பத்தியின் மற்றெல்லா உட்பகுதிகளின் மீதும் ஆதிக்கம் செலுத்துகிற தொழில் நுணுக்க வேலைக்கும், முதலாளித்துவத்தின் கீழ் சமூக உற்பத்தி சக்திகள், மனித உற்பத்தி சக்திகளின் உட்பகுதிகளது பரிணாமத்தில் விளையும் பின்னடைவுக்கும் இடையில் ஏறுமாறு நிலைகள் ஏற்படுகின்றன. லட்சக்கணக்கான மக்களின் "உற்பத்தித் திறன்களும் உணர்வுகளும் நிறைந்த உலகம்"[1] அடக்கி வைக்கப்படுகிறது என்ற உண்மை அந்த ஏறுமாறு நிலைகளை நிர்ணயப்படுத்துகிறது. அந்த ஏறுமாறு நிலைகள் தொடர்ந்து வளர்கின்றன. அவைகள் சாசுவதமானவையும் அல்ல. மனித வாழ்வின் இயல்பான நிலைகளும் அல்ல. விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் இன்றியமையாப் பின்விளைவுகளும் அல்ல. அவைகள் மூலதன உறவுகளின் இயற்கை விளைவாகும். அதன் சமூக சாராம்சம் என்னவென்றால் விஞ்ஞானம் உட்படவும் சமூக உழைப்பு வளர்ச்சிப்போக்கின் பாதையில் சேர்க்கப்பட்ட உற்பத்தி நிகழ்ச்சிப்போக்கின் புறவயநிலைகள் உழைப்பு நிகழ்ச்சிப் போக்கின் அகவய உள்ளடக்கக் கூறுகளிலிருந்து, அதாவது, மனித உள்ளடக்கக் கூறுகளிலிருந்து பிரிதலாகும்.[2] உற்பத்தியில் வேகமான எழுச்சிக்கும், தனி மனிதனின் மந்தமான வளர்ச்சிக்கும் இடையில் இங்கேதான் அடிப்படை முரண்பாடு தோன்றுகிறது. தனிமனிதன் இங்கே, அதாவது,

முதலாளித்துவத்தின் கீழே இந்தத் தொழில் நுட்பச் செயல் முறைக்கு வெறும் வேலைக்காரனாக மட்டுமே விளங்கு கிறான். முரண்பாடு அது மட்டுமல்ல. தொழில் நுட்ப முன்னேற்றத்திற்கும், முதலாளித்துவ அமைப்பின் திவால் நிலைக்கும் இடையிலும அதே மாதிரியான அடிப்படை முரண்பாடு தோன்றுகிறது.

விஞ்ஞானத்தை, ஒரு உடனடியான உற்பத்திசக்தியாகப் பயன்படுத்துவது கொள்கை அடிப்படையில், மனித இனம் முழுமையின் நன்மைக்காக இயற்கை வளங்களைப் பயன் படுத்துவதற்கும், "அறிவுத்திறன் நிறைந்த-தொழில் நுட்பத்தின்", புதிய சக்தி வாய்ந்த கருவிகளைப் படைப்பதற்கும் அதனுடைய வாய்ப்புகளை விரிவு படுத்துகிறது. அது அதன் தாக்கத்தில் முதலாளித்துவ சமுதாயததில் உள்ள விஞ்ஞானத்தின் சமூக அடிப்படை களைக் காட்டிலும், கோட்பாடு, ஆய்வியல் முறை ஆகியவற்றின் அடிப்படைகளைக் காட்டிலும் சிறந்து விளங்குகிறது. உற்பத்தி சக்தியாக விஞ்ஞானம் பயன் படுத்தப்படுவது சமுதாயத்திற்கு முன்னால் உயிர்நிலையான முக்கிய, புறவய பிரச்சினையைத் தோற்றுவிக்கிறது. விஞ்ஞானத்தின் வேறு சமூகப் பணிகளை மேம்பாடடையச் செய்யவும், அதனைப் பயன்படுத்தவும்; உதாரணமாக, சமூக நிகழ்ச்சிகளை ஆட்சி செலுத்துகிற கோட்பாடடிப் படையாகவும்; சமுதாயமும், தனி மனிதர்களும் தங்களைத் தாங்களே அறிந்து கொள்ளக்கூடிய கருவியாகவும், ஒரு உலக விஞ்ஞானக் கண்ணோட்டத்தின் அடிப்படையாகவும் பயன் படுத்துவது. முதலாளித்துவம் விஞ்ஞான வளர்ச்சியின் மீது விதிக்கும் தடைகளை சோஷலிசம்தான் நீக்கமுடியும்.

விஞ்ஞானங்களின் அனைத்து உட்தொடர்புள்ள பணி களின் ஒரே சீரான வளர்ச்சி, ஒரு முதிர்ந்த சோஷலிச சமுதாயத்தைக் கட்டுவதற்கு இன்றியமையாத ஒரு கோட்பாடாகும். அதே வேளையில் விஞ்ஞானத்தைப் பற்றிய கொள்கையின் ஆரம்பமாகவும் உள்ளது—

சோஷலிசத்தின் கீழ் அதனுடைய நீண்டகால வளர்ச்சிக்காகக் கையாளப்படும் ஒரு யுத்தியாயும் இருக்கிறது. இந்தத் தேவைகள் இன்றைய விஞ்ஞானத்தின் இயல்பில் ஏற்படும் பெரும்மாற்றங்களின் ஒரு வெளிப்பாடே ஆகும்: விஞ்ஞானத்தின் வளர்ச்சி பற்றிய ஆராய்ச்சி வழி முறைகளையும், அது வளர்வதற்கான யுத்திகளையும் பற்றிய முக்கியமான வழிகளை நிர்ணயிப்பதே விஞ்ஞான ஆராய்ச்சிச் செயல்முறைகளின் ஒன்றிணைந்த பகுதியாக விளங்குகிறது. விஞ்ஞானம் சோஷலிசத்தின் கீழ் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முக்கியமான கருவியாக இருப்பதோடு மட்டுமல்லாமல், சமுதாயத்தின் அடிப்படையான உற்பத்தி சக்திகளின்—தனி மனிதர்களின் திறமைகளை வளர்த்து சமுதாயத்திற்கு அவருடைய பயனுள்ள பணிகளைப் பெருக்குகிறது; வளர்ச்சியை மேம்பாடடையச் செய்கிறது. விஞ்ஞானம் இயற்கையின் ஒரு சில குறிப்பிட்ட துறைகளில் மட்டும் கோட்பாடடிப்படையிலும், நடைமுறை அடிப்படையிலும் ஆட்சி செய்வதற்காக மட்டும் வளராமல் அதனுடைய முழு நிகழ்ச்சிப் போக்கையும் ஆட்சி செய்கிற ஒன்றாக அது ஆக வேண்டும். அதுதான் விஞ்ஞானத்தின் முக்கியமான வரலாற்று இலட்சிய நோக்கமாகும்.

முதலாளித்துவத்தின் வரலாற்று வரம்பிற்குட்பட்ட தன்மை விஞ்ஞானத்தை அது அனைத்துத்துறைகளிலும், பணிகளிலும், பயன்படுத்த முடியாமல் இருப்பதேயாகும். ரோம் சங்கத்திற்காக விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகியவற்றின் வாய்ப்புகளைப்பற்றித் தயாரிக்கப்பட்ட அறிக்கையின் ஆசிரியர்கள், தனிச்சிறப்பாகக் கீழ்க்கண்ட முடிவுகளுக்கு வந்தனர்: விஞ்ஞான ஆராய்ச்சி எவ்வித சந்தேகமுமின்றி "பொருளாயத வளர்ச்சியின் வரம்பிலிருந்து விலகிச் செல்கிறது." ஆனால் "நியாயமான வரம்புகள் நிர்வாகத் துறைக்குள் வருகிற அரசியல்—சமூக வரம்புகள் தான் எனக் கூறலாமே தவிர விஞ்ஞான - தொழில் நுட்ப வரம்புகள் எனக் கூற இயலாது" என்பதாகும். உழைக்கும்

மக்களின் நலனுக்காக, விஞ்ஞானத்தையும், தொழில் நுட்பத்தையும் ஒருதேசம் முழுமைக்குமான, ஒழுங்கமைக்கப் பட்ட, திட்டமிடப்பட்ட முறையில் முதலாளித்துவ சமுதாயம் பயன்படுத்த முடியாது என்பதை இந்தச் சொற்கள் உறுதிப்படுத்துகின்றன. 1976 அக்டோபரில் நடந்த 16 வது சர்வதேச விஞ்ஞான ஒன்றியக்குழு[9]வின் பொதுச்சபைக் கூட்டத்தில் ஆற்றிய தொடக்கவுரையில், யு. எஸ். தேசிய விஞ்ஞான கழகத்தின் தலைவர், பிலிப் ஹாண்ட்லர் இதை ஒப்புக் கொண்டுள்ளார். தொழிற் புரட்சி காலத்திலிருந்து, முதலாளித்துவ சமுதாயத்தின் உடன் பிறந்த முரண்பாடுகளை விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி தெளிவுபடுத்துகிறது.

முதலாளித்துவத்தின் ஏகபோக நிலையில் உற்பத்தியில் சோஷலிசத் தன்மை தோன்றுகிறது. அதன் விளைவாக விஞ்ஞானத்திலும், தொழில் நுட்பத்திலும் அரசு தலையீடு பெரும் அளவு அதிகரிக்கிறது. உற்பத்தி சாதனங்கள் தனியார் உடைமையாக இருக்கும் சமுதாய அமைப்பு முறையாக இருப்பதால் சமுதாய முழுமையின் மட்டத்திற்கு அல்லது உழைக்கும் மக்களின் நலனுக்காக, விஞ்ஞானத்தையும், தொழில் நுட்பத்தையும் வழிநடத்திச் செல்ல முடியாது. இதனால்தான் தொழில் முன்னேற்றம் அடைந்துள்ள முதலாளித்துவ நாடுகளில் விஞ்ஞான தொழில் நுட்ப நெருக்கடி தோன்றியுள்ளது.

விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகியவற்றின் மீது சர்வவல்லமை நிறைந்த கட்டுப்பாடுகளைச் செலுத்துவதன் மூலம், தங்களது நிலைகளை பலப்படுத்திக் கொள்வதற்கு ஏகபோகங்கள் முயல்கின்றன. எனினும் பொருளாயத நலன்களின் உடைமையும், இயற்கை வளங்களின் உடைமையும் போலல்லாமல், ஆன்மீக மதிப்புகளின் வெளிப்பாட்டில் ஏகபோக உடைமையானது போதுமான அளவு நிலையாகவும், பாதுகாப்பானதாகவும் இல்லை. இன்று விஞ்ஞானத்திலும், தொழில் நுட்பத்திலும்

ஏகபோகம் இயலாததாகப் போய்விட்டது. (முக்கியமாக சோவியத் ஒன்றியமும், பிற சோஷலிச நாடுகளும் அவைகளில் சிறந்து விளங்குவதால்). ஆகவே, விரைவான விஞ்ஞான - தொழில் நுட்ப வளர்ச்சியாலும், விஞ்ஞானத்திலும், தொழில் நுட்பத்திலும் தங்களுடைய மேன்மையைப் பேணிக்காப்பதற்கு முயற்சி செய்வதன் மூலமும், அவைகள் தங்களுடைய நிலையைத் தக்கவைத்துக் கொள்ள முயல்கின்றன.

விஞ்ஞான-தொழில் நுட்ப வளர்ச்சியின் மீது, முதலாளித்துவ ஏகபோகங்களின் கட்டுப்பாடுகளின் விளைவு, அதன் வளர்ச்சியைத் தாமதப் படுத்துவதோடு மட்டும் நின்று விடுவதில்லை-விஞ்ஞான முன்னேற்றத்திலும் தொழில் நுட்ப முன்னேற்றத்திலும் பொருந்தாமையையும், உருத்திரிபையும் முதலாளித்துவம் தோற்றுவிக்கிறது. உற்பத்தி சக்திகளின், தொழில் நுட்ப உட்பகுதிகளில் புதுத்தப்படக்கூடிய விஞ்ஞான சாதனைகளைத் தூண்டுவதற்குத் தேவையான அனைத்துச் செயல்களும் செய்யக்கூடிய அதே வேளையில், சமூக நிகழ்ச்சிப் போக்குகளை நடத்திச் செல்லக்கூடிய விஞ்ஞானத்தின் பிறபணிகள் மேலும், மேலும் முன்னேற விடாமல் தடுக்கப் படுகின்றன. அதன் விளைவாகக் கட்டமைப்பில் பகுத்தறிவுக்குகந்த மாற்றங்கள் விஞ்ஞானத்தில் ஏற்படும் வேகமான முன்னேற்றங்களைத் தொடர்ந்து வருவதில்லை. சமூக முரண்பாடுகள் மிகவும் கூர்மையாக வளர்கின்றன. விஞ்ஞானம் ஆற்றல் வளம்மிக்க அழிவு சக்தியாக ஆகிறது. உற்பத்தி சாதனங்களின் தனியுடைமையாலும், அது முதலாளித்துவத்தின் கீழ் பயன்படுத்தப்படும் முறையாலும், விஞ்ஞான வளர்ச்சியின் மீது விதிக்கப்படுகிற கட்டுப் பாடுகளை உடைப்பதற்கான முயற்சிகள், பொருளாதாரச் செறல்முறைகளைக் கட்டுப்படுத்துவது அரசாங்கத்தின் அடிப்படையான பணிகளில் ஒன்றாக இருப்பது, எதிர் பாராமல் தோன்றிய நிகழ்ச்சியல்ல என்று நமக்குத்

தெளிவாகிறது. விஞ்ஞானம், ஆராய்ச்சி ஆகியவற்றில் அரசு முனைப்பாகத் தலையிடுகிறது. இருப்பினும், இன்றைய விஞ்ஞான வளர்ச்சிக்கு ஏற்ற சூழ்நிலைகளைப் படைப்பதற்கு இயலாததாகவுள்ளது. ஏனெனில் அதனுடைய செயல்முறைகள் அத்தனையும் முதலாளித்துவத்தைப் பாதுகாப்பதையே மையமாகக் கொண்டுள்ளது.

1970களில் முதலாளித்துவ உலகம் முழுவதன் விஞ்ஞான தொழில் நுட்ப மாற்றங்களைப் பற்றிய பகுப்பாய்வு விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியில் அரசு தலையீடு உருச்சிதைவுகள் பலவற்றைத் தோற்றுவித்துள்ளது என்பதைக் காட்டுகிறது. உதாரணமாக யு. எஸ்.சில் விஞ்ஞானத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியில் பாதிப் பணத்தைப் போர்த் திட்டங்கள் விழுங்கி விடுகின்றன.[4] அரசின் தலையீடு, விஞ்ஞானம் ஒரு பக்கமாகவே அதிகமாக வளர்ந்து செல்வதைத் தடுத்துவிடவில்லை. சமூக விஞ்ஞானங்களைப் பொருத்தவரை, அதற்கு மாறாக அரசு, ஆதிக்கம் செலுத்துவதற்காகப் பொது மக்களுடைய உணர்வு களை பூர்ஷ்வாக்களின் வர்க்க நலன்களுக்குப் பயன் படுத்துவதற்காக, மேம்பாடடையச் செய்திருக்கிறது.

1970 களில் முதன் முறையாக விஞ்ஞானத் தொகுதிகள் முழுமையிலும் வெளிப்பட்ட நெருக்கடியின் அடையாளங்கள், முதலாளித்துவப் பொது நெருக்கடியில் புதுப் படிநிலை ஒன்று தீவிரமடைந்துள்ளதற்குச் சான்றாகத் தோன்றியுள்ளது என்பதைக் காட்டுகின்றன. அரசு ஏகபோக முதலாளித்துவக் கட்டுப்பாட்டின் மீது வைக்கப் பட்டிருந்த நம்பிக்கை குலைக்கப்பட்டு விட்டது; விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் கீழ் சமூக வளர்ச்சியைப் பகுத்தறிவுக்கு ஏற்றவாறு வழி நடத்துவதற்கு முதலாளித்துவம் தவறியதும்கூட ஒரு பெரும் உண்மையாகத் திகழ்கிறது. பல்வேறு "நடைமுறையில் பயன்படக்கூடிய தொழில் நுட்ப நடவடிக்கைகளை"ப் பயன்படுத்தி, "வன்முறை சமூகப் புரட்சியை, ஏற்றுக் கொள்ளக்கூடிய

சமூகப் பரிணாம வளர்ச்சியாக மாற்றி, ஒரு கால் வழி செல்லுமாறு செய்ய'', ''விஞ்ஞான நிர்வாகம்'', ''சமூகப் பொறியியல்'' ஆகிய கோட்பாடுகளை நீண்ட காலமாகப் பயன்படுத்தி வருவது மேற்கத்திய நாடுகளின் வாழ்க்கை முறையிலும், இன்றைய வரலாற்றில் இது வரை கண்டிராத சமூக இலட்சியங்களிலும் ஒரு நெருக்கடியைத் தோற்றுவித்திருக்கிறது.

விஞ்ஞான -தொழில் நுட்பப் புரட்சி பற்றிய பூர்ஷ்வாக்களின் விளக்கங்களில், குறிப்பிடத்தக்க மாற்றங்களை அந்த நெருக்கடி தோற்றுவித்துள்ளது. சில வண்ணங்களைச் சேர்ந்த பூர்ஷ்வா சித்தாந்தவாதிகளை, ஒரு வகையான ''ஒழுக்கத்தையும் அரசியலையும்'' அல்லது ''சமூக காரணிகளையும், அரசியல் காரணிகளை''யும் வலியுறுத்தி ஒரு வகையான சித்தாந்தத்தை ''மீண்டும் உருவாக்க''வும், தூண்டியது. மேலும் அது மதத்தை பூர்ஷ்வாக்களின் அறநெறிகளுக்கு ''மிகுந்த நம்பிக்கைக்குரிய, உத்திரவாதம் அளிக்கக்கூடிய'' ஒரு இறுதியான சிறந்த ஆயுதமாகக் கருத வேண்டியதிருந்தது. உதாரணமாக, சிக்நியூ பிரெசெஸ் சின்ஸ்கி,[5] விஞ்ஞானத்தையும் தொழில் நுட்பத்தையும் பெருமளவில் பயன்படுத்துகிற, அவருடைய ''மனித உரிமைகள்'' பற்றிய உணர்ச்சிகளைத் தூண்டும் பேருரையில் குறிப்பிட்டுள்ளது போன்ற வலுச்சண்டைக்கிழுக்கும் பூர்ஷ்வாக் கருத்துக்களின் மாறுதல்கள் செய்யப்பட்ட பல உருவங்கள் தோன்றியுள்ளன.

விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சி பற்றிய விளக்கங்களில் மாற்றங்கள் விஞ்ஞான - தொழில் நுட்பத்தின் மீது ''சமூகக் கட்டுப்பாடு'' என்ற கொடியின் கீழ் நிறைவேற்றப் பட்டுள்ள பல நடவடிக்கைகளில் புலப்படுத்தப்பட்டுள்ளன. (உதாரணமாக யு.எஸ்.சில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ''தொழில் நுட்ப மதிப்பீடு'', அமைப்பு முறை) அவைகள் விஞ்ஞானத்தையும், தொழில் நுட்பத்தையும் வழிநடத்துவதற்கு சமூக விஞ்ஞானத்தை வேண்டும் கோரிக்கைகளில

வெளிப்படுகின்றன. தேசிய விஞ்ஞான நிறுவனத்தின் இயக்குநர் பதவிக்கு, சமூக விஞ்ஞான விற்பன்னரான, ரிச்சர்ட். சி. அட்கின்சன் என்ற உளவியல் வல்லுநரை முதன் முறையாக யு. எஸ். ஜனாதிபதி நியமித்தார். அப்போது, விஞ்ஞான அறிவுக்கும், அதன் அரசியல் நடைமுறைக்கும் இடையேயுள்ள தொடர்பை வலுப்படுத்துவதுதான் தன் இலட்சியம் என அவர் கூறினார். எனினும் இம்மாதிரியான நடவடிக்கைகள் ஏகபோக முதலாளித்துவ நாடுகளில் விஞ்ஞானத்தின் ஏறுமாறான பயனையும், வளர்ச்சியையும் பற்றிய பிரச்சினையைத் தீர்க்கவோ அல்லது தடுக்கவோ முடியாது.

இன்று "தொழில் நுட்ப மதிப்பீடு" செய்யும் முறை, நாகரிகமாக்கப்பட்ட சுரண்டலின் உருவமே தவிர வேறல்ல என்பது மிகத்தெளிவாகத் தெரிந்துள்ளது. இந்த விஷயத்தைப் பொருத்தவரை, சமூக விஞ்ஞானங்களுக்கு ஒரு காவல்பணிதான் கொடுக்கப்பட்டுள்ளன என்று, மிகவும் ஏற்றமுறையில், பிரான்சு நாட்டைச் சேர்ந்த கொள்கை விளக்க நிபுணரான பேராசிரியர். ஜீன் ஜாக்குவெஸ் சாலமான் கூறியுள்ளார். விஞ்ஞான - தொழில் நுட்ப வளர்ச்சிக்கான விஞ்ஞான யுக்திகளின் "அடிப்படைப் புனராய்"வும், ஆராய்ச்சியின் "திசை வழியை மறுபடியும் மாற்றுவதும்" "ஒரு புதிய தொழிலும்" இன்றியமையாதது என அவர் கூறுகிறார். மேலும் விஞ்ஞான - தொழில் நுட்ப வளர்ச்சியின் கவனம் வலுக்கட்டாயமாக சமூக இலட்சியங்களை நோக்கித் திரும்ப வேண்டும் எனவும் கூறுகிறார். இம்மாதிரியான பேச்சுக்கள் அடிக்கடி கேட்கப்படுகின்றன. விஞ்ஞானத்தையும் தொழில் நுட்பத்தையும் புதிய வழியில் வளர்ச்சியுறச் செய்வதற்கான புது நெறிமுறையை வகுப்பதைப்பற்றிய விருப்பம், தீர்வுகாண முடியாத ஒரு கேள்வியுடன் மோதிக்கொள்கிறது: முதலாளித்துவ உலகத்தின் விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சியை யார் அந்த "புதிய திசை வழி", செல்லும்படிச் செய்வது?

டேனியல் பெல் என்பவரின் கருத்துப்படி நம் சகாப்தத்தின் "மாபெரும் யுக்தி மூலவளமான" அடிப்படை ஆராய்ச்சியை ஏகபோகங்கள் குறைத்து மதிப்பிடுகின்றன என்பது நாம் அனைவரும் அறிந்ததே. 1979 மார்ச் இறுதியில், "விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம் பற்றிய" செய்தியில் யு. எஸ். ஜனாதிபதி, "மனித இனத்தின் அடிப்படை அறிவைப் பெருக்குவதற்கும்," விஞ்ஞானத்திலும், தொழில் நுட்பத்திலும், மேன்மை அடைவதற்கும் வேண்டிய செயல்முறைகள் அனைத்தும் செய்யப்படுகின்றன என்று காங்கிரசுக்கு அறிவித்தார்.[6] ஒரு நீண்ட கால விஞ்ஞான வளர்ச்சி பற்றிய யுக்தியை விரித்துக் கூறாததற்காக முந்திய நிர்வாகத்தைக் குறை கூறினார். எனினும் உண்மையில் அவரே விஞ்ஞானத்திலும், தொழில் நுட்பத்திலும் உருச்சிதைவுகளைத் தோற்றுவிக்கக்கூடிய ஒரு திசை வழியை வெளியிட்டார்: உதாரணமாக, தொழில் நுட்ப வித்தகராட்சியைப் போற்றிப் புகழும் ஹெர்மான் கான் போன்றோர்கூட விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் இந்த வகையான வருங்கால வாய்ப்புகளைக் கண்டு அச்சமடைகிறார்கள்.[7]

விஞ்ஞான வளர்ச்சியின் யுத்திகள் தொடர்பான பிரச்சினை பற்றி முக்கியமான முதலாளித்துவ நாடுகளில் முரண்பாடுகளின் புதிய அலையொன்று வீசி வருகிறதென்பது உண்மைதான். பாரம்பரிய அணுவமைப்பை மாற்றியமைக்கக்கூடிய வகையில் உயிரியலில் ஏற்பட்ட வேகமான மாற்றமானது 1930 களின் பிறகு அணு-இயற்பியல் விஞ்ஞானத்தில் ஏற்பட்ட பெரும் வாய்ப்புகளைப் போன்ற வாய்ப்புகளை அந்த விஞ்ஞானப் பிரிவில் ஏற்படுத்தியுள்ளது. வேறு விஞ்ஞானங்களிலும் இம்மாதிரியான நிலை வளர்ந்திருக்கிறது. விஞ்ஞானம் முன்னோக்கிய பெரும் பாய்ச்சல் ஒன்றை மேற் கொண்டுள்ளது. அதன் விளைவாக அது தொடர்ந்து புதிய கண்டுபிடிப்புகளைச் செய்து வருகிறது. அது உற்பத்தி

முறை முழுவதையும் மக்களிடையே நிகழும் அனைத்துத் தகவல் போக்குவரத்தையும் மறுசீரமைப்பு செய்வதற்கான அடிப்படையை ஏற்படுத்தி வருகிறது. மக்களின் உடல் தொடர்பான, ஆன்மீக தொடர்பான உடற்கூற்று அடிப்படைகளையும், சமூக நிகழ்ச்சிப் போக்குகளை வழி நடத்திச் செல்கிற கோட்பாடு அடிப்படைகளையும் ஊடுருவி வருகிறது. எனினும், அதே வேளையில் சுற்றுப்புறச் சூழ்நிலையின் சமநிலையைச் சீர்குலைக்கும் அபாயத்தைத் தோற்றுவித்துள்ளது. உலகில் உள்ள உயிரினங்களின் வாழ்க்கையை ஆபத்திற்குள்ளாக்கக்கூடிய சக்தி வாய்ந்த வலிமையைச் செயல்படச் செய்கிறது.

விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் விளைவாக விஞ்ஞான - தொழில் நுட்ப வளர்ச்சியின் உள்ளடங்கிய யுத்திகள் பற்றிய பிரச்சினை தொடர்பாக இரண்டு எதிரெதிரான சமுதாய அமைப்புகளிடையே கடும் சீற்றமுள்ள ஒரு போராட்டம் நடந்து வருகிறது. அந்தப் போராட்டம் ஒரு முக்கியமான சமூகத் துறையைச் சார்ந்தாகவுள்ளது. தொழிலாளி வர்க்கமும், உழைக்கும் மக்களிற் பெரும் பகுதியினரும், விஞ்ஞானத்திலும், தொழில் நுட்பத் துறையிலும் ஈடுபட்டுள்ள அறிஞர்களும் இந்தப் பிரச்சினைகளில் உண்மையான ஆர்வம் காட்டுகின்றனர்.

முதலாளித்துவ நாடுகளில் அறிவின் சமூக மதிப்பு பற்றிய ஆராய்ச்சி, இப்பொழுது, "அறநெறிகளிலிருந்து விடுதலையடைந்த" விஞ்ஞானத்தின் பழைய இலட்சியங்களுக்குப் பதிலாக வைக்கப்பட்டிருக்கிறது. விஞ்ஞானத்தை சமூகத்திற்குப் பயன்படுமாறு அறிவிக்கும் புதிய போக்கும்-அதனை மனிதத் தன்மை மிகுந்ததாக ஆக்குவதும், இராணுவத் தொழிற் தொகுதிகளுக்குச் சேவை செய்வதற்குப் பயன்படுத்துவதற்கு மறுப்பதும், இப்பொழுது வலிமையடைந்து வருகின்றன.

சோஷலிச சமுதாயத்தில் விவரித்துக் கூறப்பட்டுள்ள விஞ்ஞானமும், விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியை

வளர்ப்பதற்கான யுக்திகளும் உலகம் முழுதும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இம்மாதிரியான யுக்திகளைப் பயன்படுத்தாமல் உலகமட்டத்தில் சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பது இயலாத செயலாகும். இந்த யுக்திகள் உண்மையான சமூக அடிப்படையையும், வளர்ச்சியை மேம்பாடடையச் செய்வதையும், விஞ்ஞானத்தை ஒரு உற்பத்தி சக்தியாகப் பயன்படுத்துவதையும், தங்கள் சிறப்பியல்பாகக் கொண்டு விளங்குகின்றன. இது விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் இரண்டு பெரிய உட்பகுதி களை முழுமையாகச் சேர்த்து இணைக்கிறது.

சமூக நிகழ்ச்சிப் போக்குகளைக் கட்டுப்படுத்தும் காரணிகளின் தொகுதிக்குள், விஞ்ஞான - தொழில் நுட்ப முன்னேற்றத்தைச் சேர்ப்பதற்கும், விஞ்ஞானத்தின் சமூகக் கடமைகளை ஒரே சீராக வளர்ப்பதற்கும், இந்த உட்பகுதி க்ளைப் பரஸ்பரம் ஊக்குவிப்பது உதவி செய்கிறது. தனி மனிதனின் ஒன்றிணைந்த வளர்ச்சியும், அனைத்து உழைக்கும் மக்களின் சுறுசுறுப்பு, வலிமை, திறமை ஆகிய வற்றின் வளர்ச்சியும்தான், சமுதாயத்தின் உற்பத்தி சக்தி களின் திறனை உயர்த்துவதற்கான மிகவும் வலிமையான தோற்றுவாயாகவும், கருவியாகவும் விளங்குகிறது என்ற உண்மையிலிருந்துதான், சோஷலிச சமுதாயத்தின் விஞ்ஞான வளர்ச்சிக்கான நீண்டகால யுக்தி தோன்றுகிறது. விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் சாதனைகளையும், சோஷலிசத்தின் நலன்களையும் முழுமையாக ஒன்றிணைக்கும்போதே, விஞ்ஞானம் வளர்வதற்கான யுக்திக்கும், சமுதாயத்தின் பரிணாம வளர்ச்சிக்கும் இடையில் நிலவுகிற நெருக்கமான உறவுகளால் இது மேம்பாடடையச் செய்யப்படுகிறதேயல்லாமல் மேற்கொண்ட "மதிப்பீடு" அல்லது "மறுபடி திசைவழியை மாற்றுதலால்" அல்ல. ஆனால் முறையாக சமூக நோக்கங்களை விஞ்ஞான அடிப் படையில் முன்வைப்பதன் மூலம்தான் மேம்பாடடையச் செய்யப்படுகிறது.

தொழிலாளி வர்க்கத்திற்கும், விஞ்ஞானத்திற்குமிடையே ஒற்றுமை உண்டாக்கும் லெனினுடைய திட்டமுறையை அடிப்படையாகக் கொண்டு விவரிக்கப்பட்ட நன்னெறி அடிப்படையிலான சூழ்ச்சித் திறம் விஞ்ஞான தொழில் நுட்ப சாதனைகளை முழுவதுமாகப் பயன் படுத்தும் பரந்த வாய்ப்பைத் தோற்றுவிக்கிறது. தொழில் நுட்பத்தின் அனைத்துக் கூறுகளையும் தன்னோடு சேர்த்துக் கொள்வதும், பொருளாதாரம், சமூகம், கலாச்சார விஷயங்கள் ஆகியவற்றையும் அத்துடன் சேர்த்துக் கொள்வதும், சமுதாயம் முழுவதையும் கட்டுப் படுத்துவதுமான ஒரு அமைப்புக்குள் விஞ்ஞானம் வைக்கப் படுகின்ற வேளையில் அதுவே சமூக சக்தியாக ஆகிறது. நம்முடைய காலத்துத் தேவையை நிறைவு செய்கிற வரலாற்று அடிப்படையிலான புதிய வகை விஞ்ஞானத்தைத் தோற்றுவிப்பதற்கு அடிப்படையாக விளங்குகிறது— அதாவது இயற்கையும் சமுதாயமும் மாறுகிற இன்றைய இன்றியமையாப் படிநிலையைத் தோற்றுவிப்பதற்கு இது பயன்படுகிறது.

இந்த நிகழ்ச்சிப் போக்கின் சமுதாயப் பொருளை இலட்சியத் திசை வழி கொண்டதாகவும், முறையான தாகவும் உருவாக்குவது—தொழிலாளி வர்க்கத்தையும், உழைக்கும் மக்கள் அனைவரையும், தனி மனிதர்களையும் அவ்வாறு உருவாக்குவது விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் நலன்களைப் பயன்படுத்துவதற்கு முக்கியமான நிபந்தனையாகும். இந்தப் பொருள் உலகத்தின் உருமாற்ற நிகழ்ச்சியும், சமுதாயத்தின் வளர்ச்சி நிகழ்ச்சியும் பரிணாமப் போக்கின் ஒவ்வொருபடியிலும் வைக்கிற கடமைகளைச் சமாளிப்பதற்கும் திறனுடையதாயிருக்க வேண்டும். கம்யூனிஸ்ட் கட்சியே வழி நடத்தும் மையமாகும். மேலும் அது இந்த இயற்கையான இயக்கவியல் நிகழ்ச்சிப் போக்கைத் தோற்றுவிக்கும் கருவியுமாகும்.

முதலாளித்துவ முறையில் நடைபெற முடியாத சூழல்

ஏஸ்ணி போன்ற இயக்கம், விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் தேவைகளுக்கு எப்போதுமே ஒத்திசைவாக இருப்பதற்கு சோஷலிச சமுதாயத்திற்கு ஒரு வாய்ப்பைத் தந்துதவுகிறது. சோவியத் ஒன்றியத்தால் வழிநடத்தப் படுகிற சோஷலிச சமுதாயத்தில் விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் நலன்களைப் பயன்படுத்திக் கொள்வதற்கும், விஞ்ஞானத்தை வளர்ப்பதற்குமான சூழ்ச்சித்திறம், உலகத்தின் தலைவிதியை நிர்ணயிப்பதற்கும், உலகம் முழுமையுமான விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சிக்கும் மிகவும் இன்றியமையாதது ஆகும்.

## அடிக்குறிப்பு

1. கார்ல் மார்க்ஸ்: மூலதனம். தொகுதி-1. முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ. 1972. பக். 340.

2. மார்க்ஸ் கூறியதைப் போல, "சமூக உற்பத்தி செயல்திறன் அனைத்தும் உண்மையில் மூலதனத்தின் உற்பத்தி சக்திகளே. மேலும் மூலதனமே அவற்றின் உட்பொருளின் பங்கை மேற்கொள்கிறது." கார்ல் மார்க்ஸ். Grundrisse-des Kritik der Politischen Okonomie (Rohentwarf) 1857-1858 மாஸ்கோ 1939. P. 479.

3. சர்வதேச விஞ்ஞான ஒன்றியக் குழு ICSU).

4. பொருளாதாரக் கூட்டுறவு மற்றும் வளர்ச்சி நிறுவன (OECD) த்தின் புள்ளி விவரம் இராணுவ இலட்சியங்களுக்காகவும், "மதிப்புமிக்க" ஆராய்ச்சிகளுக்காகவும் மிக அதிகமான அளவு விஞ்ஞான - தொழில் நுட்ப வகைதொகைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதே வேளையில் வாழ்க்கையின் பண்பியல் பற்றி ஆராய்வது ஒதுக்கப் பட்டுள்ளது எனக் காட்டுகிறது. (சி.ஃப்ரீமான். **விஞ்ஞானம், தொழில் நுட்பம், சமுதாயம்; பன்முக**

**விஞ்ஞான வாய்ப்புகள்.** இலண்டன், 1977, பக். 260).

5. சிறப்பாக, டேனியல் பெல் அத்தகைய சித்தாந்த ஆயுதங்களைப் பயன்படுத்துகிறார். அவர் "சித்தாந்த—நீக்கம்" என்ற தத்துவத்தின் காரண கர்த்தாக்களில் ஒருவர் ஆவார். (டேனியல் பெல், **முதலாளித்துவத்தின் கலாச்சார முரண்பாடுகள்,** அடிப்படை நூல்கள் பதிப்பகத்தார், நியூயார்க், 1976, பக். 41.

6. **காங்கிரஸ் ரிக்கார்டுகள்,** தொகுதி- 125, 27 மார்ச் 1979. 96-வது காங்கிரஸ் முதல் கூட்டத்தின் முடிவுகளும், வாதங்களும், ஒயிட் ஹவுஸ், 27, மார்ச், 1979. பக்கம். S3463, S3466.

7. ஹெச்-கான், "எல்லாம் மிக நன்றாக நடக்கின்றன", **பியூச்சரிஸ்ட்;** டிசம்பர், 1975, பக்கம். 292.

டி.டி.டிமோஃபியேவ்

இணை உறுப்பினர், சோவியத் ஒன்றிய விஞ்ஞானக் கலைக்கழகம். இயக்குநர், சோவியத் ஒன்றிய விஞ்ஞானக் கலைக்கழகத்தின் தொழிலாளி வர்க்க இயக்க நிறுவனம்.

## விஞ்ஞான—தொழில் நுட்பப் புரட்சியின் சமூக இயல்புகளும், தொழிலாளி வர்க்கமும்

நாம் இங்கு விவாதிக்கும் பிரச்சினைகளின் கோட்பாட்டு அம்சங்களையும், செய்முறை நூல் அம்சங்களையும் நன்றாகப் புரிந்து கொள்வதற்கு இன்றைய விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் சாரத்தைப் பற்றிய ஒரு வரையறை மிகவும் இன்றியமையாதது ஆகும். விஞ்ஞானிகளால்-குறிப்பாக, மார்க்சீய சிந்தனையாளர்களால் பல்வேறு வகையான கண்ணோட்டங்கள் வெளியிடப்பட்டுள்ளன. ஒரு சில விஞ்ஞானிகள் வேகமாக வளர்ந்து வரும் உற்பத்தி சக்திகளின் பொருளாயதக் கூறுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். வேறு சில விஞ்ஞானிகள் சமூக நிகழ்ச்சிப் போக்குகளின் மீது அதிக கவனம் செலுத்துகிறார்கள். சமூகத்தின் உற்பத்தி சக்திகளில் பண்பியல் சார்ந்த மாற்றங்களை விளைவிக்கும் முக்கியமான காரணிகளைப்பற்றி விளக்கிக் கூறும்போது சில ஆராய்ச்சியாளர்கள், புதிய ஆற்றல் தோற்றுவாய்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறார்கள். மற்றும் சிலர் உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கில் தனி நபரின் புதிய பாத்திரத்

திற்கும், வேறு சிலர் புதிய உழைப்புக் கருவிகளுக்கும், வேறு சிலவற்றிற்கும் முக்கியத்துவம் அளிக்கிறார்கள்.

காலம் சென்று கொண்டே இருக்கிறது. இப்போது சோவியத் விஞ்ஞானிகள், விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் சாரத்தை வரையறை செய்யும்போது பண்பியல் அடிப்படையில் தனி மனிதனின் பொருளாயத, ஆன்மீகச் செயலின் புதுவகைகளின் மொத்தத்தைக் கருத்தில் கொள்ள வேண்டுவது இன்றியமையாதது, என்றும், விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சி உற்பத்தித் துறையிலும், வேறு பல துறைகளிலும் நிகழ்கின்ற பல நிகழ்ச்சிப் போக்குகளையும் தன்னுள் கொண்ட ஒரு சமூக நடவடிக்கையாகும் என்றும் வலியுறுத்தி வருகிறார்கள். மேலும் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் கருத்துக்கள் பூர்ஷ்வா கருத்துக்கான தொழில் நுட்ப நியதிவாதம் மற்றும் மார்க் கூசியன் கருத்தான தொழில் நுட்பம் பற்றிய அச்சம் போன்ற கருத்துக்களிலிருந்து வேறு பட்டதாக உள்ளன. விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றம், தனி மனிதர்கள் மீது செலுத்தும் தாக்கம் என்ற கருத்துடன் ஒத்துப்போவதனால் அவைகள் அவ்வாறு பூர்ஷ்வாக் கருத்துகளிலிருந்து வேறுபட்டிருக்கின்றன.

சமுதாயத்தின் சமூக விஷயங்களிலும், அரசியல் விஷயங் களிலும், மேலும் மேலும் அதிகரித்து வரும் தனி மனிதருடைய முனைப்பான பங்கும் பெருகிவரும் தேவை களும், வளர்ந்து வரும் உணர்வுகளும், விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் கருவாக விளங்குகின்றன என்று மார்க்சீய—லெனினிய சிந்தனையாளர்கள் கருதுகிறார்கள். தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகரமான மனிதநேயம், அனைத்துத் தொழிலாளி வர்க்கத்தின் இன்றியமையாத நலன்களுக்கு ஒத்திசைவாகவுள்ள, தனி மனிதன், சமுதாயம், இயற்கை ஆகியவற்றிடையேயான உள் உறவுகளைப் பற்றிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கெனப் போராடும் அமைப்புக்களின் போராட்டத்திலிருந்து பிரிக்க முடியாத தாக விளங்குகிறது.

விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சி தனி மனிதனிடம் பஞ்சபூதங்களைப் பற்றிய கண்ணோட்டத்தில் மட்டுமின்றி உலகம் பற்றிய கண்ணோட்டத்திலும் ஏற்பட்டுள்ள பண்பியல் மாற்றங்களைப் பிரதிபலிக்கிறது. அரசு ஏகபோக மூலதனத்தின் ஆதரவாளர்களான பூர்ஷ்வா சிந்தனையாளர் களும், சமூக சீர்திருத்தவாதிகளும், சித்தாந்தத் துறையிலும், அரசியலிலும் நம் சகாப்தத்தில் நிகழ்ந்துவரும் விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சிக்கும், சமூகப் புரட்சிக்கும் ஒரு இயக்கவியல் தொடர்புள்ளது என்பதை மறுக்கிறார்கள் என்பதில் வியப்பொன்றும் இல்லை. அவர்கள் தங்களுடைய பழைய ''சமநிலை'' கருத்துக்களைப் புத்துயிர் பெறச் செய்தும் சமூக வர்க்க முரண்பாடுகள் ''மறைந்து விடுதல்'' பற்றிய சீர்திருத்தவாதக் கருத்துக்களைப் பரப்பியும், மார்க்ஸ்-லெனின் ஆகியோரால் ஆக்கப்பட்ட புரட்சிகரமான தத்துவம் விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சி நடந்து வரும் இந்த சகாப்தத்திற்கு பொருந்துவதாக இல்லை எனக் கூறுவதற்கும் பல்வேறு வழிகளைக் கையாண்டும் வருகிறார்கள்.

சித்தாந்தம், தத்துவம் ஆகியவைபற்றி நடைபெறும் போராட்டங்களின் முக்கியப் பகுதிகளைப் பற்றியும், விஞ்ஞானத்திலும், தொழில் நுட்பத்திலும் எழும் புரட்சியின் பங்கு, விளைவுகள் ஆகியனவற்றைப் புதிய மதிப்பீடு செய்வதைப் பற்றியும் நாம் ஆராய்வோம். இது சீர்திருத்தவாதிகள் கூறுவதுபோல முதலாளித்துவத்தின் பொருளாதாரம், சமூகம், அரசியல் ஆகியவற்றின் உறுதி யற்ற தன்மையையும், அதன் ஆன்மீக நெருக்கடியையும் வெல்வதில் முடிகிறதா? அல்லது மார்க்சீயசிந்தனையாளர்கள் கூறுவது போல சுரண்டலை அடிப்படையாகக் கொண்ட இறுதி சமுதாய அமைப்பு முறையின் அடிப்படை முரண்பாடுகளை கூர்மைப்படுத்துவதிலும், ஏகாதிபத்தியத்தின் வெளி முரண்பாடுகளையும், உள்முரண் பாடுகளையும் தீவிரப்படுத்துவதிலும் முடிகிறதா என்பதே எழுந்துள்ள வினாவாகும்.

அண்மைக் காலத்தில் பூர்ஷ்வா சிந்தனையாளர்கள் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் கீழ் முதலாளித்துவ நாடுகளின் பொருளாதார, சமூக-அரசியல் நிலையற்ற தன்மையும், நெருக்கடி நிலையும் பெருகுகிறது என்று மேலும், மேலும் பல சமயங்களில் ஒத்துக்கொள்ளும் நிலைக்கு வந்துள்ளனர். இவ்வாறாக முக்கூட்டுக் கமிஷன் உறுப்பினர்கள், "வெளியிலிருந்தும், உள்ளேயும் ஒரு நெருக்கடி நிலை"க்கு உள்ளாகி இருக்கும் பல மேற்கு ஐரோப்பிய நாட்டு சமூகங்களின் எளிதில் சேதமுறத்தக்க நிலையை ஏற்றுக் கொள்கின்றனர்.[1] இந்த அறிக்கையின் ஆசிரியர்களான பிரெஞ்சு சமூக வியலாளரான மைக்கேல் க்ரோசியர், அமெரிக்க அரசியல் விஞ்ஞானி சாமுவேல். பி. ஹன்டிங்டன், ஜப்பானிய பேராசிரியரான ஜோஜிவாடா நுக்கி ஆகியோர் பொதுவான "பொருளாதார, சமூக உறுதியற்ற தன்மை"யும், வெறுமனே சுழல்தன்மையான வேலையில்லாத் திண்டாட்டத்தைக் காட்டிலும் "தொழில் நுட்ப ரீதியானதும்", கட்டமைப்பு ரீதியானதுமான வேலையில்லாத் திண்டாட்டமும், இன்னும் சில காரணிகளும், "உள்ளிருந்து நெருக்கடியை" மிகுதிப்படுத்துகின்றன என்று கூறுகின்றனர்.

மார்க்சீய ஆராய்ச்சியாளர்கள், விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி சூழ்நிலையில் தீவிரமடைகிற பூர்ஷ்வா சமுதாய முரண்பாடுகளையும் தமக்குள் ஒன்றாக உள்ளடக்கிய இந்த நிகழ்ச்சிப் போக்குகளை ஆராயும் வேளையில் வர்க்கப் பகுத்தாய்வின் விஞ்ஞானக் கோட்பாடுகளினால் வழிகாட்டப்படுகிறார்கள். இது முதலாளித்துவத்தின் ஆழ்ந்துவரும் பொது நெருக்கடியின் பின்புலத்தில் இரண்டு சமூக அமைப்பு முறைகளிடையே நிலவுகிற போட்டியின் இன்றைய படிநிலையில் ஏற்படும் பொதுவான போக்குகளையும், நிலைமாற்றங்களையும் பற்றிய பகுப்பாய்வுடன் ஒன்றிணைந்த முழுமையான தொடர்புகளில் அவைகளை ஆராய்ந்தறிவதை இன்றியமையாததாக்குகிறது. நெருக்கடி என்ற நிகழ்ச்சிப்

போக்கின் பன்முக வளர்ச்சியை நிர்ணயிக்கிற தொலை வரம்பு கொண்ட நிகழ்ச்சிப் போக்குகளின் பகுப்பாய்வுடன் முதலாளித்துவத்தின் கீழ் தொழில் நுட்ப முன்னேற்றத்தில் எழும் முரண்பட்ட இயல்புகளைப் பற்றிய ஆய்வை இணைப்பது இன்றியமையாதது என வலியுறுத்தப்பட வேண்டும்.

பிரச்சினையின் இந்த அம்சத்தை வி. இ. லெனின் பல முறை வலியுறுத்திக் கூறியுள்ளார். தொழில் நுட்பத் துறையின் பெரும் புரட்சிகளின் சமூக - பொருளாதார விஷயங்களைப் பகுத்தாராயும்போது, தேசிய பொருளாதார அமைப்புகளின் மீது அவைகளின் தாக்கம், முதலாளித்துவ நிலைகளை வலுப்படுத்தி, "நெருக்கடி இல்லாத" ஒரு வளர்ச்சியை ஏற்படுத்தும் என்று கூறுவதைக் குறை கூறினார். "மிக வேகமான தொழில் நுட்ப முன்னேற்றத்தின் விகிதம் தேசியப் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளிடையே ஏற்றத்தாழ்வுக் கூறுகளின் வளர்ச்சிக்கும், குழப்பத்திற்கும், நெருக்கடிக்கும் வழிகோலுகிறது[2]" என்று அவர் முன்னறிந்து கூறினார்.

விஞ்ஞான - தொழில் நுட்ப முன்னேற்றம், சமூக முன்னேற்றம் ஆகியவை பற்றிய பொதுவான வரலாற்று விதிகளைப் பிரதிபலிக்கிற நீண்டகால காரணிகள் பற்றி அனைத்தும் உள்ளடக்கிய ஒரு ஆராய்ச்சியை முன் கூட்டியே ஒப்புக் கொள்கிற இயக்க இயல் பொருள் முதல்வாத வரலாற்று வாய்மைக் கோட்பாட்டை ஒட்டியிருப்பதும், ஒரு குறிப்பிட்ட வரலாற்றுப் படிநிலையில் விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் வளர்ச்சியில் சிறப்பு அம்சமாக விளங்குகிற புதுமையான நிலைகளையும், உருவங்களையும், பலன்களையும் முற்றுமாக ஆராய்ந்து பார்ப்பதும் மிகவும் இன்றியமையாததாகவுள்ளன

விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியைப் பற்றியும், முதலாளித்துவத்தின் மீது அதன் தாக்கம் பற்றியும் மார்க்சீய அடிப்படையில் ஆராய்வது 1970 களில் இந்த நிகழ்ச்சிப்

போக்குகளின் பெரும் சர்வதேச உறவுகளையும், உள்நாட்டு முன் தேவைகளையும் ஆராய்ந்தறிவதை முன் கூட்டியே ஏற்றுக் கொள்கிறது. இம்மாதிரியான பகுப்பாய்வு விஞ்ஞான தொழில் புரட்சியின் தேசிய, சர்வதேசியக் காரணிகளின் விகிதத்தைக் கணக்கில் எடுத்துக்கொள்வதற்கு மிகவும் உதவியாகவுள்ளது. உதாரணமாக உலக முதலாளித்துவ அமைப்பு முறையின் பல்வேறு பகுதிகளில் பொருளாதார நெருக்கடிகளும், வேறு வகையான நெருக்கடிகளும் ஒரே காலத்து நிகழ்ச்சிகள் ஆவதைப் பல காரணிகளின் உதவியால் விளக்க முடியும். விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றத்தின் இன்றைய படிநிலையின் சமூக விஷயங்கள் மிகுதியான அளவு சர்வதேசத் தன்மையடைவது அவைகளிடையே ஒன்றாக விளங்குகிறது.

சமூக, அரசியல் நிகழ்ச்சிப் போக்குகளின் மீது, விஞ்ஞான தொழில் நுட்பத்தில் ஏற்படும் புரட்சி பல்வேறுபட்ட செல்வாக்கைச் செலுத்துகிறது. இந்த நிகழ்ச்சிப் போக்குகளின் வளர்ச்சி கீழே கொடுக்கப்பட்டுள்ளவை போன்ற நீண்டகாலக் காரணிகளால் நிர்ணயிக்கப்படுகிறது. கூலிக்கமர்த்தப்பட்ட தொழிலாளிகளின் துறையின் குறிப்பிட்ட அளவு விரிவாக்கத்தினால் தோற்றுவிக்கப்படுகிற, சமுதாயத்தின் சமூகக் கட்டமைப்பின் நிலை மாற்றங்கள், வேலைக்கமர்த்தப்படும் கூலித் தொழிலாளிகளின் புதிய சேனைகளுடன் தொடர்ச்சியாக சேர்ந்து கொள்கிற தொழிலாளிவர்க்கத்தின் விகிதத்தில் உயர்வு, கூலித் தொழிலாளர்களின் கட்டமைப்பு, தொழில், பிரதேசம் ஆகியவற்றின் இயல்புகளில் மாற்றங்கள் ஏற்படுவது; குறிப்பாக தொழிலாளி வர்க்கத்தின் கல்வி மட்டம், கலாச்சாரம், அவர்களின் அமைப்புக்கள், ஆகியவற்றின் மீது செல்வாக்கைச் செலுத்துகிற உழைப்பின் இயல்புக்கு ஒத்திசைவாக உயர்ந்துள்ள தேவைகள்; நகர்மயமாக்குதல், ஆகியவையும் இன்னும் பிறவும். இந்தக் காரணிகள் பல பத்தாண்டுகளாகச் சேர்க்கப்பட்ட மாற்றங்

களை நிர்ணயிக்கின்றன. சமூக—அரசியல் உறவுகளின் மீது இவற்றின் தாக்கம் வழக்கமாக மறைமுகமாகச் செயல் படுகிறது.

சமூக முன்னேற்றத்தின் கண்ணோட்டத்திலிருந்து உடன்பாடாக உள்ள இம்மாதிரியான தாக்கத்தின் பல வரிசையான அம்சங்களை நாம் குறிப்பிட்டுக் காட்டலாம். உதாரணமாக, சமூகத்தின் சமுதாயக் கட்டமைப்பில் நிகழும் மாற்றங்கள் தனிமனிதர் சொத்துரிமையுடன் நேரடியான தொடர்புடைய மக்கள் கூட்டத்தில் ஒரே சீரான சரிவை உண்டாக்குகின்றன. மேலும் மக்கள் தொகையில் பொருளாதார அடிப்படையில் செயலூக்கம் நிறைந்த தொழிலாளி வர்க்கத்தினுடைய விகிதத்தில் ஏற்படும் உயர்வு அதனுடைய சமூக வரலாற்றுப் பணிமுழுவதையும் நிறைவேற்றுவதற்கு வழி செய்வதோடு, பாட்டாளி வர்க்கக் கட்சிகளின் பயனுள்ள செயல் முறைகளுக்குப் புதிய புறவய வாய்ப்புகளையும் தோற்றுவிக்கிறது.

கூலிக்கு அமர்த்தப்படும் தொழிலாளிகளின் பண்பியல் அடிப்படையிலான சிறப்பியல்புகளின் மேம்பாடானது முதன்முதலில் உழைக்கும் மக்களின் பொதுவான கல்வி, கலாச்சார மட்டங்களை உயர்த்தி, தொழிலாளி வர்க்கத்திடையில் அரசியல் உணர்வின் வளர்ச்சியை மேலோங்கச் செய்கிறது. மேலும் அவர்களுடைய அரசியல் செயல்திறனை வளர்க்கிறது. அவர்கள் சமுதாயத்தில் வகிக்கும் தலைமை நிலையையும் திடமாக்குகிறது.

தொழிலாளி ஒருவரின் ஒன்றுபட்ட ஒரே சீரான வளர்ச்சிக்கான தேவைக்கும், குறுகிய சிறப்புத்திறன் பெறுதலுக்கும் இடையே வளரும் முரண்பாடுகளும், ஆர்வமோ அல்லது முன்முயற்சியோ இல்லாத உழைப்பு நிகழ்ச்சிப் போக்கின் வளர்ந்து வரும் சலிப்பும், முதலாளித்துவத்தின் கீழ் சமூக உறவுகளின் மீது விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் தாக்கத்தின் எதிர்மறை அம்சங்களாக உள்ளன. இவைகள் தொழிலாளிகளிடையே

அவர்களுடைய பணிகளைப் பற்றிய கண்ணோட்டத்தில் மனநிறைவின்மையையும், வெறுப்புணர்வையும் தோற்றுவிக்கின்றன. குறிப்பாக இளைஞர்களிடையே; உழைப்பாளர்களிடையே உழைப்பின் ஒழுங்கிலும், உழைப்பின் ஏற்றத் தாழ்விலும் ஒரு பெருங்குறையைத் தோற்றுவிக்கின்றன; இன்றைய தானியக்க உற்பத்தியில், தொழிலாளிகளின் நிலையை உள்ளடக்கிய புதிய, கூர்மையான, சமூக உளவியல் அடிப்படையிலான பிரச்சினைகள் தோன்றுகின்றன; தனி இயந்திர அமைப்பு முறையில் மாறிய உறவுகளால், உழைப்பு சிறு பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது. மனிதக் குடியிருப்புகள், போக்குவரவு, முதலிய பிரச்சினைகள் பிரதேச அடிப்படையில் சிதறியுள்ளதனால் வளர்ந்துவரும் மனிதத் தொடர்புகளின் சிக்கல் தோற்றுவிக்கப்படுகின்றது.

விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சி, பொதுமக்கள் தொடர்பு சாதனங்களின் மீது செலுத்தும் செல்வாக்கின் மீது நாம் குறிப்பான கவனம் செலுத்துவது இன்றியமையாதது ஆகும். சமூக உணர்வுகளின் மீது செல்வாக்கு செலுத்துவதற்கு மேலாதிக்கம் செலுத்துகிற வர்க்கத்தின் வாய்ப்புகளை வேண்டுமென்றே அது விரிவாக்கியுள்ளது. பொதுமக்கள் தொடர்பு சாதனங்களை, தகவல் தொடர்பான ஒரு பெரும் தொழிலாக மாற்றுவது (படைப்பாற்றல் மிக்க வாழ்க்கைத் தொழில்களின் மக்கள் தன்மை அதிகரிப்பும், முன்னாளில் பொதுமக்கள் தொடர்பு சாதனங்களில் பணியாற்றியவர்கள் அனுபவித்து வந்த உயர்ந்த சமூக அந்தஸ்தில் குறைவும், அவர்களிடையே தோன்றி வளர்ந்துவரும் படிநிலையமைப்பும்) சமூக உணர்வுகளின் மீது முழு ஆட்சி செலுத்தும், ஆதிக்க வர்க்கம் செய்யும் முயற்சிகளைச் சிறப்பாக எதிர்ப்பதற்குரிய புதிய வாய்ப்புகளைப் படைக்கிறது.

முதலாளித்துவத்தின் கீழ் சமூக உறவுகளின் மீது விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் தாக்கத்தின், நீண்டகால காரணிகளுடன் கூடவே, வேறு முக்கியமான

உடனடியான காரணிகளும், மேலும் மேலும் தெளிவாகத் தெரியத் தொடங்கியுள்ளன. உதாரணமாக, பொருளாதாரத்தை மறுசீரமைப்புச் செய்வதையும், சமூக உறவுகளில் ஏற்படும் திருகல் முறுகல்களையும், உள்ளடக்கிய உற்பத்தியில், விஞ்ஞானத்திலும் தொழில் நுட்பத்திலும் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை நடைமுறைப்படுத்துவதனால் ஏற்படும் விளைவுகளில் அது மிகவும் தெளிவாகத் தெரிகிறது. இதனுடன் தொடர்பாக உற்பத்தியில் நுண்மின் அணு இயல் முறையைப் பெரும்அளவில் அறிமுகப் படுத்துவதும், புதுவகை மூலப்பொருட்களை அறிமுகப் படுத்துவதும் — முன்னைக்காட்டிலும் பொருளாயதப் பொருள் உற்பத்தி, உயிருள்ள உழைப்பு, தகவல், நிர்வாகத் துறை ஆகியவற்றில் மிகுந்த சேமிப்பிற்கு வழிவகுத்துள்ளன

இவையனைத்தும், வேலைப் பிரச்சினையையும், கட்டமைப்பு வேலையில்லாத் திண்டாட்டத்தையும் வர்க்கப் போராட்டத்தின் ஒரு முக்கியமான பிரச்சினையாக ஆக்கியுள்ளன. விஞ்ஞானத்திலும், தொழில் நுட்பத்திலும், நிகழும் புரட்சியுடன் தொடர்புள்ள வேலைப் பிரச்சினை தீவிரமடைவது, முதலாளித்துவ சமுதாயத்தின் அடிப்படையிலேயே எதிரெதிரான, இரண்டு வேறுபட்ட வர்க்கங்களிடையே சமூகப் போராட்டங்கள் தீவிர மடைவதற்குப் பின்னிருக்கும் ஒரு முக்கியமான காரணமாக உள்ளது. தொழிலாளிவர்க்கத்தின் தேவைகளின் ஒரு முக்கியமான இடத்தை எப்பொழுதுமே நிரப்பிக் கொண்டிருக்கிற நிலையான வேலைப் பிரச்சினை இப்பொழுது முன்னணிக்கு வந்துள்ளது.

இது, வேலை கொடுத்துதவும் உறுதி, தொழிலாளி வர்க்கத்தினுடைய பொருளாதார சமூகப் போராட்டத்தில்-தொழிலாளி வர்க்கத்தின்-குறைந்த வேலை நேரமுடைய வாரம், சம்பளம் உள்ள நீண்ட நாள் விடுமுறை, குறிப்பிட்ட அளவு ஓய்வூதியம் பெறுவதற்கான உழைப்பின் அளவைக் குறைப்பது, இளைய தலைமுறையினருக்குத் தேவையான

பொதுக் கல்வியையும், தொழிற் கல்வியைய்ம் நீடிப்பது_ ஆகியவற்றிற்கான போராட்டத்தில் - பெரும் செல்வாக்குடையதாக விளங்குகிறது.

இன்றைய சூழ்நிலையில் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் சமூக விளைவுகள் மிகுந்த செயலூக்கத்துடன் வெளியிடப்படுகின்றன. பல சமயங்களில் வலிமையான சமூக எதிர்ப்புப் போராட்டங்கள் திடீரெனத் தோன்றுதலினால் வெளிப்படுத்தப்படுகின்றன. அனைத்து உழைக்கும் மக்களின் செயல்முறைகளிலும், சமூக அரசியல் விவகாரங்களில் ஜனநாயக இயல்புகள் சிறப்படைவதிலும் வெளிப்படுத்தப்படுகின்றன. இதுதான் இந்தப் போக்கின் இயல்பான விளைவுகள் ஆகும். விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி மிகுந்த இயக்க விசையும், வேகமும், அளவும் நிறைந்ததாக ஆகும்போது, முதலாளித்துவ சுரண்டலுக்கு, மக்கள் தொகையில் பெரும்பாலோர் உட்படுதல் (மேற்கு நாடுகளில் "சமுதாய மயமாக்குதல்" என்றும் "பொது மக்கள் சமுதாய"த்தின் தோற்றம் என்றும், இன்னும் இது போன்ற சொற்களால் விவரிக்கப்படுகிறது) என்பது மார்க்சீய அடிப்படையில் அமைந்தது ஆகும்.

முழுமையாகப் பார்த்தால், விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் பின்புலத்தில், முதலாளித்துவ சமுதாயத்தில், வர்க்கங்கள் படிநிலைகளில் அமைக்கப்படுவதும், தீவிரமடைவதும், முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி தீவிரமடைவதும் கீழ்க்கண்ட நிகழ்ச்சிப் போக்குகளைத் தூண்டிவிட்டிருக்கிறது.

—கூலிக்கமர்த்தப்பட்ட வெள்ளைச்சட்டை அல்லாத தொழிலாளர்களின் எண்ணிக்கையில் உயர்வு, முதலாளித்துவ சுரண்டலுக்கு உட்படுகிறவர்களின் எண்ணிக்கையை மிகுதிப்படுத்தியுள்ளது.

—தொழிலாளிவர்க்கத்தின் எண்ணிக்கையும், விகிதமும், வளர்ந்திருப்பது சமுதாயத்தில் அவர்களுடைய பங்கை அதிகமான வலிமையுடையதாக ஆக்கியிருக்கிறது.

—உழைக்கும் மக்களின் வர்க்க உணர்வும், அவர்களுடைய வலிமையும், அவர்களுடைய நலன்களைப் பயனுள்ள முறையில் மேம்பாடடையச் செய்ய அந்த வலிமையைப் பயன்படுத்த முடியும் என்ற எண்ணமும் வளர்ந்துள்ளன. இந்தக் காரணிகள் தொழிலாளி வர்க்கத்தின் சங்க அமைப்பு மட்டத்தில் உடன்பாடான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. அவைகள் ஒன்றிணைக்கப்பட்ட தொழிலாளி வர்க்கத்திற்குள் உருவெடுத்த உடன்பாடான நிகழ்ச்சிப் போக்குகளில் முக்கியமான பங்கு வகித்திருக்கின்றன.

சொத்துடைமையாளர்களின் எண்ணிக்கையின் விகிதத்தில் குறைவு என்பது சமூக உடைமை முறையில் தன்னுடைய இயல்பினாலும், தன்னுடைய இடத்தினாலும், மிகநெருக்கமாக முதலாளித்துவ உறவுகளுடன் ஈடுபட்டுள்ள சமூக இனம் குறுகுவது என்றே பொருள்பட்டது. சுதந்திரமான சொத்துடைமையாளர்களின் பொருளாதார இருப்பு நிலையினால் தோற்றுவிக்கப்படும் சமூக—உளவியல் மாதிரிக் கூறுகள் தங்கள் ஆதிக்க நிலையை இழந்து விட்டன. ஏனெனில் உழைப்பு சக்தியை வாங்கி விற்கும் உறவுகளை அடிப்படையாகக் கொண்ட சமூகத் திசை வழியினால் அவைகள் வெளியேற்றப்பட்டு விட்டன.

முதலாளித்துவ சமுதாயத்தின், சமூகக் கட்டமைப்பில், தொழிலாளி வர்க்கத்தின் நிலையை ஒன்றிணைப்பதைப் பாதிக்கும் நிகழ்ச்சிப் போக்குகளும், பாட்டாளி வர்க்கத்தின் உள்ளமைப்பும், அதனுடைய பொது அமைப்புகளின் செயல் முறைகளின்மீதும், அதன் போராட்டத்தின் நிலைகளின் மீதும் குறிப்பிடத்தகுந்த செல்வாக்கைச் செலுத்துகின்றன. இந்தச் செல்வாக்கு கீழ்க்கண்ட வழிகளில் வெளிப்படுகின்றன.

— தொழிலாளி வர்க்கத்தின் முக்கியமான குழுக்களின் ஒன்றிணைப்பு அமைப்புகளின் மட்டம் தொடர்ந்து வளர்ந்து கொண்டே இருக்கிறது.

— ஒன்றிணைப்பு அமைப்புகளின் மட்டம் அண்மைக்காலம் வரை மிகக்குறைவாக இருந்த அதனுடைய புதிய போர்ப் படைகள், தொழில் அடிப்படையிலும், வர்க்க அடிப்படையிலும் ஒன்று சேர்வதற்கு மேலும், மேலும் தொடர்ந்து முயன்று வருகின்றன.

— உழைக்கும் மக்களின் முன்னணிப்படை அமைப்புகளின் சமூக செல்வாக்கு, குறிப்பாக வர்க்க தொழிற் சங்கங்கள், தொழிலதிபர்களையும், ஏகபோகங்களையும், அரசு ஏகபோக அமைப்புமுறை முழுமையையும் பணியும்படிச் செய்யக்கூடிய வாய்ப்புகளை உள்ளிட்ட செல்வாக்கு மிக அதிகமாக வளர்ந்துள்ளது.

— தொழிற் சங்கங்களின் கீழ் மட்டத்தில் உள்ள தொண்டர்களும், செயல் வீரர்களும் (உதாரணமாக யு.எஸ், மேற்கு ஜெர்மனி, ஸ்காண்டிநேவியா) பெருமளவுக்கு அவர்களது செயல்முறைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர். சீர்திருத்த வாதத் தொழிற்சங்க மையங்களில் நெருக்கடி நிகழ்ச்சிப் போக்கு தீவிரமடைந்து வருகிறது. முற்போக்கு சக்திகள், வலிமை பெற்று வருகின்றன. கம்யூனிஸ்ட் எதிர்ப்பு சிந்தனைகள் குறைகூறப்படுகின்றன. ஒன்றுபடும் இயல்புகள் வளர்ச்சியடைந்து வருகின்றன.

இந்த நிகழ்ச்சிப் போக்குகள் அனைத்தும் தொழிலாளி வர்க்கத்தின் சமூக-பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்வதற்கான கோரிக்கைகளின் எண்ணிக்கை வளர்ச்சியையும், தீவிர முற்போக்கு மாற்றத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றன.

## அடிக்குறிப்பு

1. **ஜனநாயகத்தின் நெருக்கடி: முக்கூட்டுக் கமிஷனிடம் ஜனநாயகங்களின் ஆட்சி செய்யப்படக்கூடிய தன்மைபற்றி சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை.** மைக்கேல் க்ரோசியர்; சாமுவேல். பி. ஹட்டிங்டன்,

ஜோஜிவா டா நுக்கி ஆகியோரால் சமர்ப்பிக்கப் பட்டது. நியூயார்க், யுனிவர்சிட்டி அச்சகம், 1975. பக். 17.

உ. வி. இ. லெனின்: 'ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சகட்டம்': தொகுப்பு நூல்கள், தொகுதி-22, பக். 209.

கிரிகோரியாஸ் ஃபராக்கோஸ்

*பொலிட் பீரோ உறுப்பினர், கிரீஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டிச் செயலாளர்*

## விஞ்ஞான – தொழில் நுட்பப் புரட்சியின் மீது கிரேக்கப் பொருளாதாரத்தின் வளர்ந்துவரும் சார்பு நிலை

சமூக விவகாரங்களின் அனைத்துப் பகுதிகளின் மீதும் தன்னுடைய வியத்தகு தாக்கத்தை விளைவித்திருக்கிற விஞ்ஞான - தொழில் நுட்பப் பெரும் புரட்சிதான் நம் சகாப்தமாகும். இந்தப் புரட்சி பல்வேறுபட்ட வழிகளில் சமூக முன்னேற்றத்துடன் மிக நெருங்கிய தொடர்புடையது. விஞ்ஞானத்திலும், தொழில் நுட்பத்திலும் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள், வரலாற்று அடிப்படையிலான முக்கியமான பல பிரச்சினைகளின் ஒருபெரும் தொகுதியைத் தோற்றுவித்துள்ளது. உதாரணமாக விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியினால் தோற்றுவிக்கப்பட்ட புறவய சூழ்நிலைகளுக்கு முதலாளித்துவம் பொருத்தமானதா அல்லது சோஷலிசம் பொருத்தமானதா — அதனை அடிப்படையாக வைத்து வளரும் வாய்ப்புகளுக்கும், மனித சமுதாயத்தின் வளர்ச்சிக்காக அது தரும் வாய்ப்புகளுக்கும் முதலாளித்துவம் பொருத்தமானதா அல்லது சோஷலிசமா என்பதைப் போன்ற பிரச்சினைகளை எழுப்பியுள்ளது. மேலும் சமுதாயத்தின் பரிணாம வளர்ச்சியை, விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சி எந்த, எந்த வழிகளில் பாதிக்கிறது? பொதுநெருக்கடியைச் சமாளிப்பதற்கு அது முதலாளித்துவத்

திற்கு உதவ முடியுமா? சோஷலிசத்தின் அடிப்படையில் முதலாளித்துவ உற்பத்தி உறவுகளை நீக்குவதற்கும், சமுதாயத்தைப் புரட்சிகரமாக மாற்றுவதற்கும், அகவய மற்றும் புறவய முன்தேவைகளை அது மேம்பாடடையச் செய்கிறதா? விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் பிரச்சினைகளில் பொதுவான ஆர்வத்தையும், உலகம் முழுவதிலும் உள்ள மார்க்சீய விஞ்ஞானிகள் அதற்கு அளிக்கும் முக்கியத்துவத்தையும் விளக்குகிற இந்தப் பிரச்சினைகளின் வரலாற்று முக்கியத்துவம்தான் அது.

விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் விளைவாக இன்றைய உலகில் புறவயமாகத் தோன்றியுள்ள, வரலாற்று வாய்ப்புகளின் சில இயல்புகளைச் சுருக்கமாகக்கூறி, எங்கள் நாட்டில் அதன் சிறப்பான வெளிப்பாடுகளை பகுத்தாராய்ந்து கூற விரும்புகிறேன்.

1. விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியின் விளைவாகத் தோன்றுகிறது. பின்னர் அதன் மேற்கொண்ட வளர்ச்சியை அதுவே தூண்டுகிறது. முதலாளித்துவத்தின் கீழ் உடனடியான உற்பத்தி சக்தியாக ஆகியிருந்ததாக மார்க்ஸ் குறிப்பிட்ட விஞ்ஞானத்தில் தோன்றிய வலிமை வாய்ந்த பேரெழுச்சியை அடிப்படையாகக் கொண்ட விஞ்ஞானம், தொழில் நுட்பம், உற்பத்தி ஆகியவற்றில் இந்தப் புரட்சி வேலைப் பகுப்பின் புதுவகை உருவங்களைத் தோற்றுவிக்கிறது.

விஞ்ஞானம், தொழில் நுட்பம், உற்பத்தி ஆகியவற்றிடையே நிலவுகிற உறவுகளின் இயல்புகளைப் பற்றி விரிவாகச் சொல்லாமல், விஞ்ஞானம் ஒரு வலிமை வாய்ந்த சமூக சக்தியாக மிகவும் தெளிவாக இன்று வெளியிடப்பட்டுள்ளது என்ற மார்க்சின் மதிப்பீட்டைப் பற்றி மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

தொழில் நுட்பத்திலும், உற்பத்தியிலும், மாபெரும் மாற்றங்களைத் தோற்றுவித்துக்கொண்டு, விஞ்ஞானம்

புயல் வேகத்தில் சென்று கொண்டிருக்கிறது. எனினும் முதலாளித்துவத்தின் கீழ் பூர்ஷ்வா சமுதாயத்துடன் பிறந்த உள்முரண்பாடுகளின் காரணமாக, அது சில தடைகளைச் சந்திக்கிறது. கிரீஸ் நாடு பெருமளவு வெளிநாட்டு மூலதனத்தையே நம்பியிருக்கிறது என்பதால் இந்தத் தடைகள் சிறப்பான வலிமையுடன் வெளிப்படுகின்றன.

வாழ்க்கையின் மீது விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் தாக்கம் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியின் இயல்பான வெளிப்பாடாகவும் வேலைப்பகுப்பின் உயர்ந்த மட்டமாக மட்டுமோ இல்லை. அது மேலும் சிறப்பாக வெளிப்பட்டு விளங்குவதற்கு, உற்பத்தி சக்திகளின் மேற்கொண்ட வளர்ச்சியும், வேலைப்பகுப்பின் புதுமுறை வளர்ச்சியும் இன்றியமையாததாகவுள்ளன. அதனுடைய முழு வளர்ச்சிக்கு விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் மீது உற்பத்தியின் முதலாளித்துவ உறவுகள் திணிக்கும் கட்டுப்பாடுகள் நீங்குவதும், புறநிலையாக சோஷலிச சமுதாயத்தை நோக்கி மாறுவதும் இன்றியமையாததாய் உள்ளன.

பூர்ஷ்வாக்களின் இரும்புப் பிடிகளிலிருந்தும், மூலதனத்தால் அடிமைப்படுத்தப்படுவதிலிருந்தும், அழிந்து கொண்டிருக்கும் முதலாளித்துவத்தின் கீழ் அடங்கிப் பணியாற்றுவதிலிருந்தும், சோஷலிசம்தான் விஞ்ஞானத்தை விடுவிக்கும் என்ற லெனினது கூற்றை வரலாறு இப்பொழுதேகூட உறுதிசெய்து விட்டிருக்கிறது. விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் சாரமே உற்பத்தியில் விஞ்ஞானத்தின் முன்னேற்றங்கள் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை இன்றியமையாததாக ஆக்கியுள்ளது. எனினும் முதலாளித்துவத்தின் கீழ் இது பல இடையூறுகளையும், தடைகளையும் எதிர்நோக்க வேண்டியதிருக்கிறது.

பூர்ஷ்வா சித்தாந்தவாதிகள், முதலாளித்துவ சூழ்நிலையில் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் சமூக,

விளைவுகளுக்கு விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றத்தைப் பொறுப்பாக ஆக்கி உண்மையைத் திரித்துக் கூற விரும்புகிறார்கள்.

அண்மைக் காலத்தில் கிரீசில், ''புதிய மார்க்சீய வாதிகளா''லும், இடதுசாரிப் போக்குகளாலும், இதே மாதிரியான கூற்றுக்கள் வெளியிடப்பட்டுள்ளன. சில திரிபு வாதிகளின் கூட்டங்கள் முதலாளித்துவ உறவுகளிலிருந்து சமுதாயத்தை விடுதலை செய்வது என்பதற்குப் பதிலாக ''சமுதாயத்திலிருந்து விடுதலை பெறும் வாய்ப்புகள்'' என்ற வாசகங்களைப் பயன்படுத்துகிறார்கள். அவர்கள் கிரேக்க சமுதாயத்தின் புரட்சிகரமான மாற்றத்தை, தனி மனிதனை சமுதாயத்திற்கு வெளியில் இருக்கும்படி செய்தும் அவனுடைய சமூக உறவுகளை அழித்தும் விடக்கூடிய — முறையில், அவனுடைய வாழ்க்கையில் ஏற்படும் ஒரு மாற்றமாக, அதைக் கருதுகிறார்கள்.

பூர்ஷ்வா செய்தித்தாள்கள் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சிதான் முதலாளித்துவத்தின் நெருக்கடிக்குக் காரணம் என்ற கருத்தைப் பரவலாகப் பிரச்சாரம் செய்கின்றன. இராஜதந்திரிகள்கூட நாடு நெருக்கடிக்குட்பட்டிருப்பது அதனால்தான் என்று கூறி நெருக்கடியை நியாயப்படுத்து கிறார்கள். உதாரணமாக ஒருங்கிணைப்புத் துறை அமைச்சர் கான்ஸ்டன்டைன் மிட்சோ-டாகிஸ், தொலைக் காட்சிப் பேட்டி ஒன்றில் விஞ்ஞான–தொழில் நுட்பப் புரட்சியால் ஏற்பட்டுள்ள ஆற்றலை மிகுதியாக நுகர்வது தான் கிரீசில் ஆற்றல் நெருக்கடிக்குக் காரணமாயுள்ளது என்று கூறியுள்ளார். வேறு அரசியல்வாதிகள் இன்றைய ஏகாதிபத்தியத்தின் தனிச் சிறப்பாக விளங்கும் சர்வாதிகார வளர்ச்சிக்கும், ஜனநாயக சுதந்திரங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டிருப்பதற்கும் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியைப் பொறுப்பாக்குகிறார்கள்.

இம்மாதிரியான மதிப்பீடுகள் அடிப்படையான சமூக மாற்றங்களின் தேவையை மறுக்கின்றன. அதே வேளையில்,

கலாச்சார விவகாரங்களில் மாற்றங்களைப் புகுத்த வேண்டுமென்ற கோரிக்கைகள் அதைப் பின்தொடர்ந்து வருகின்றன. முக்கியமாக பூர்ஷ்வா சிந்தனையாளர்கள், "தொடர்பு நீக்குதல்" பற்றிய பிரச்சினைதான், பூர்ஷ்வா சமுதாயத்தின் இன்றியமையாத அடிப்படையான பிரச்சினை என்று சுட்டிக்காட்டி, முதலாளித்துவ உற்பத்தி முறை உறவுகளைக் களைந்தெறியும் பிரச்சினையிலிருந்து கவனத்தைத் திருப்ப முயல்கிறார்கள். உதாரணமாக கிரேக்க திரிபுவாதிகளில் ஒரு சிலர் "தொடர்பு நீக்குதலை ஊடுருவிச் செல்வது" தான் முதலாளித்துவத்தின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வாக இருக்கும் என்று கருதுகிறார்கள். மார்க்சீயவாதிகள் அல்லாத பூர்ஷ்வா சித்தாந்த வாதிகள் விஞ்ஞான-தொழில் நுட்பப் —புரட்சியுடன் தொடர்புடைய விஷயங்களை ஆராய்வதை, அதனுடைய, புறவெளிப்பாடுகளை ஆராய்வது மட்டும்தான் எனக் கருதுகிறார்கள். ஏனெனில் இந்தப் பிரச்சினைகளை (அணு ஆற்றல், உற்பத்தியில் தானியக்கம் முதலியவை) அறிவு செறிந்த பிரச்சினைகளாகக் கருதுகிறார்கள். உற்பத்தி சக்திகளுக்கும், உற்பத்தி உறவுகளுக்குமிடையே யுள்ள இயக்கவியல் உள்உறவுகளின் வாதப்பொருத்தத்தை ஆராய்வதிலிருந்து அவர்கள் வேண்டுமென்றே விலகி நிற்கிறார்கள்.

இம்மாதிரியான நிலையை மேற்கொள்வதற்குப் பின்னால் உள்ள காரணத்தை அறிவது கடினமானதல்ல. விஷயம் என்னவென்றால் இந்த உள் உறவுகள் தொடர்பாக விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் தாக்கத்தை ஆராய்வது மெய்யாகவே சோஷலிசத்தின் சிறப்பை ஏற்றுக் கொள்வதற்குத்தான் வழிசெய்கிறது. மார்க்சீய—லெனினிய சிந்தனையாளர்களாகிய நாம், விஞ்ஞான - தொழில் நுட்பத்தில் ஏற்பட்டுள்ள புரட்சியின் விளைவாகத் தோற்று விக்கப்பட்டுள்ள வரலாற்று வாய்ப்புகளைப்பற்றி வலியுறுத்திக் கூறும்போது நாம் உண்மையையே

கூறுகிறோம். ஆனால் என்னுடைய கருத்தில் முதலாளித்துவம் அழிக்கப்படுகிற நிகழ்ச்சிப் போக்கு தானாகவே நிகழ்ந்துவிடாது என்பதை நாம் இன்று வலியுறுத்திக் கூறத்தான் வேண்டும். ஒரு புரட்சிகரமான சமுதாய மாற்றத்தை ஏற்படுத்துவதற்குக் கம்யூனிஸ்ட் கட்சியினால் வழி நடத்தப்படுகிற தொழிலாளி வர்க்கத்தின் ஒன்றிணைந்த போராட்டமே அதாவது அனைத்து உழைக்கும் மக்களின் போராட்டங்களினாலும் ஆதரிக்கப் படும் போராட்டமே இன்றியமையாதது ஆகும்.

மக்களுடைய நலனுக்காக விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின், அனைத்தையும் உள்ளடக்கிய, முழுவளர்ச்சியின் பரந்த அணிவரிசையைத் திறந்துவிடுவது சோஷலிசம்தான்.

விஞ்ஞானம், தொழில் நுட்பம், பாட்டாளி வர்க்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளிடையேயுள்ள ஒற்றுமையை எந்த இருண்ட தீயசக்திகளும் எதிர்த்து நிறுத்திவிட முடியாது என லெனின் வலியுறுத்திக் கூறினார். சோஷலிச நாடுகள் பெற்ற அனுபவம் இந்தச் சொற்களின் உண்மையை உறுதிப் படுத்துகிறது. அதே வேளையில் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியில் அளிக்கப்பட்ட வாய்ப்புகளையும் அதன் அசுர சாதனைகளையும் தானாகவே பயன்படுத்துவதற்கான வாய்ப்பை சோஷலிசம் அளிப்பதாகச் சொல்லவில்லை. சோஷலிசத் திட்டமிடுதலையும், கல்வி முறையையும், பொருளாதார நிர்வாகம் பற்றிய ஆராய்ச்சியையும், சமூக விவகாரங்களின் அனைத்து விஷயங்கள் பற்றிய ஆராய்ச்சியையும் மேம்பாடடையச் செய்வதற்குக் கம்யூனிஸ்டுகளும், சோஷலிச நாடுகளிலுள்ள அனைத்துக் குடிமக்களும் மிகப் பெரும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 25 வது காங்கிரசுக்குக் கொடுத்த சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் அறிக்கையில், ''விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றத்தை விரைவுபடுத்துவதே

நம்முடைய முதல் கடமையாக இன்னும் உள்ளது...... கம்யூனிஸ்டுகளாகிய நாம, சோஷலிசத்தின் கீழ்தான் மனிதனின் நலன்களுடனும், சமுதாயத்தின் நலன்களுடனும் ஒத்திசைவான திசைவழியுடையதாக விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி ஆகிறது என்ற நம்பிக்கையிலிருந்து தொடங்குகிறோம்''[1] என்று லியோனித் பிரெஷ்னேவ் கூறினார்.

விஞ்ஞானத்திலும், தொழில் நுட்பத்துறையிலும் வளர்ந்துள்ள முதலாளித்துவ நாடுகளைக் காட்டிலும், கிரீஸ் மிகவும் பின்தங்கியிருக்கிறது. அதனுடைய ஆதிக்கத்தில் நவீன விஞ்ஞான ஆராய்ச்சி மையங்கள் ஏதும் இல்லை.

எனினும் கிரீசில் விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது. வேறு சில காரணிகளுடன் இணைந்து இங்கேயுள்ள பொருளாதார வளர்ச்சியின் மீது ஒருபெரும் செல்வாக்குடையதாகவுள்ளது. கிரீஸ் நாட்டுக் கம்யூனிஸ்ட் கட்சியின் 10 வது காங்கிரசின் போது செய்யப்பட்ட மதிப்பீட்டின்படி, உற்பத்தி சக்திகள் நடுத்தர அளவே வளர்ச்சியடைந்துள்ள முதலாளித்துவ நாடாக எங்கள் நாடு விளங்குகிறது. ஒரு சில பத்தாண்டுகளுக்கு முன்னால் விவசாய நாடாக இருந்த கிரீஸ், இப்பொழுது தொழில் வளமுடைய ஒரு விவசாய நாடாக விளங்குகிறது. அந்த நாட்டின் பொருளாதாரம் நிச்சயமாக மிகஅதிகமான அளவு சார்புநிலை இயல்புடையதாகவுள்ளது. அதனுடைய கட்டமைப்புப் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. வளர்ந்த முதலாளித்துவ நாடுகளின் மீது கிரீசுடைய சார்பு நிலை குறிப்பாக 1970 களிலிருந்து அதிகரித்துள்ளது. அது இன்று மிகவும் சிக்கலானதாகவும், பல்வேறு வகையானதாகவும் ஆகியிருக்கிறது.

பிற முதலாளித்துவ நாடுகளைப்போல, கிரீசிலும்கூட விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் சாதனைகளும், அதனைத் தொடர்ந்து வரும் விளைவுகளும், முக்கியமாக ஏகபோகங்களினாலேயே பயன்படுத்தப்படுகின்றன. அந்தப்

புரட்சியின் சாதனைகளை அறிமுகப்படுத்துவதிலும், அதைப் பயன்படுத்துவதிலும், தலைமை நிலைகளை அந்நிய மூலதனமே தன் கைகளில் வைத்துள்ளது அதன் விளைவாக விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சி அதன் கையில் புதிய நலன்களைத் தருகிறது. மேலும் அது கிரேக்கப் பொருளாதாரத்தின் மீது கொண்டுள்ள ஆதிக்கத்தை அதிகரிக்கிறது.

இந்த நாட்டில் வஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியை நடைமுறையில் நிறைவேற்றுவது, நாம் முன்னர் கூறியதைப் போல, ஒரு சார்பு நிலையுள்ள, உருச் சிதைக்கப்பட்ட அடிப்படையில் நடைபெறுகிறது. இந்த விஷயம் நாட்டின் பொருளாதாரததில் புரட்சியின் சாதனைகளைப் பயன்படுத்துவதன் சார்பு நிலையையும், பகுத்தறிவுக் கொவ்வாத இயல்பையும் புறவயமாக நிர்ணயிக்கிறது. புரட்சியின் விளைவுகள், இங்கே குறிப்பிட்ட உருவங்களில் வெளிப்படுகின்றன. அவைகள் வளர்ந்த முதலாளித்துவ நாடுகளில் தோன்றும் உருவங்களில் வெளியிடப்படவில்லை.

ஒரு சில உற்பத்தித்துறைகளில் புதிய பொருட்களின் உற்பத்தி பெருகியுள்ளது. இருந்தாலும் இந்த நிகழ்ச்சிப் போக்குகூட எதிர்மறையான துணை விளைவுகளையே உண்டாக்குகிறது அடிமைகளைப் போன்ற உழைப்பாளிகளின் நிலை—சந்தையில் ஏகபோகங்களின் மேலாதிக்கம், சூழ்நிலையில் மாற்றமுடியாத அலைவுகள், உற்பத்திக்கும், கிரேக்கப் பொளாதாரத் தேவைகளுக்கும் ஒத்திசைவின்மை ஆகியவை மிகவும் அதிகரித்துக் கொண்டே வருகின்றன.

முழுப் பொருளாதாரத்தையும் ஊக்கப்படுத்தி நவீனப் படுத்துகின்றவைகளாகக் கருதப்படும் கிளைகளில் உற்பத்தியானது மேலும், மேலும் வேகம் குறைந்து கொண்டிருக்கிறதே தவிர வேகங்கூடுவதாக இல்லை. நாட்டின் பொருளாதாரச் சார்பு நிலையும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

கிரேக்கப் பொருளாதார விவகாரங்களிலும், சமூக விவகாரங்களின் சில கிளைகளிலும் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் வேறு முக்கியமான அம்சங்கள் அதனுடைய விளைவுகள் பற்றிய பிரச்சினைகள் ஆராய்ந்தறியப்படும்போது வெளிப்படுகின்றன. இந்த விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி நடைபெறும் இந்த சகாப்தத்தில் கிரீஸ் நாட்டுக் கம்யூனிஸ்ட் கட்சியின் 10-வது காங்கிரஸ் சுட்டிக் காட்டியதைப் போல கிரேக்கப் பொருளாதாரத்தின் பிற்பட்ட தன்மை விஞ்ஞான-தொழில் நுட்பத்திலும் பிற்பட்ட தன்மையினை மேற்கொள்கிறது. அதே வேளையில் பொருளாதாரச் சார்புநிலை மேலும் மேலும் அதிகமாகத் தொழில் நுட்பச் சார்புநிலையாக மாறி விடுகிறது. ஆகவே கிரீசில் விஞ்ஞான—தொழில் நுட்பப் புரட்சியின் முக்கிய விளைவு வளர்ந்துவரும் ஏகாதிபத்தியத்தின் மீது சார்ந்திருப்பதே—அதாவது வளர்ந்த முதலாளித்துவ நாடுகளின் மீது சார்ந்திருப்பதே ஆகும்.

அந்நிய நாட்டு ஏகபோகங்கள்தான் எங்கள் நாட்டில் இன்றைய தொழில் நுட்பத்தைக் கட்டுப்படுத்திவருகின்றன. எனவே அது எதிர்மறை விளைவுகளையே ஏற்படுத்துகிறது. கிரேக்கப் பொருளாதாரத்திற்குப் பயனுள்ள விஞ்ஞான தொழில் நுட்ப சாதனைகள் ஒரு குறிப்பிட்ட வரம்பிற்குள் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி கிரேக்கத் தொழிலில் எந்த வளர்ச்சியையும் ஏற்படுத்தவில்லை. மேலும் அது நாட்டின் பொருளாதார, அரசியல், இராணுவ சார்புநிலையை மிகுதிப்படுத்துவதற்காக, ஏகாதிபத்தியத்தினால் பயன்படுத்தப்படுகிறது.

மேற்கூறிய நிகழ்ச்சிகளைப் போன்றே, எங்கள் நாட்டிலிருந்து நாணயங்கள் பலவேறு வழிகளில் வெளியேறுகின்றன. கிரேக்கத் தொழிலாளிகளால் உற்பத்தி செய்யப்படும் உபரிமதிப்பின் பெரும்பகுதி வெளிநாட்டு மூலதனத்திற்குச் செல்கிறது. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட

ஆராய்ச்சிகள், கிரேக்க நாட்டுத் தொழிலாளிகள் சுரண்டப் படுவதன் மட்டம் முக்கியமான முதலாளித்துவ நாடுகளில் உள்ளதைப்போல் இரண்டு மடங்காக உள்ளது எனத் தெளிவாகக் காட்டுகின்றன.

பிற்பட்ட நாடுகள் அனைத்தும், உண்மையில் தொழில் நுட்பத்தைப் பொருத்தவரை, வளர்ந்துள்ள முதலாளித்துவ நாடுகளைச் சார்ந்தே இருக்க வேண்டியதிருக்கிறது. முற்போக்கு எண்ணம் கொண்ட விஞ்ஞானிகள்கூட இந்தப் பிரச்சினையின் காரணங்களைத் தொடர்ந்து வெளிப் படுத்தாமலிருப்பது மிகவும் வருந்தத்தக்கதாகவுள்ளது.

கிரீஸ் நாட்டின் ஆட்சியாளர்கள் நாட்டினுடைய சார்பு நிலை அதன் ஊழ்தான் என்றும் அது தவிர்க்க முடியாதது என்றும் விளம்பி வருகின்றனர். இயல்பாகவே கிரீசில் வெளிநாட்டுத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துவது ஒரு குறிப்பிட்ட அளவு தவிர்க்க முடியாததே. ஆனால் ஏகாதிபத்தியம் விதிக்கும் அனைத்து நிபந்தனைகளையும் ஏற்றுக் கொள்வது என்பது தவிர்க்க முடியாதது அல்ல. கிரேக்க ஆட்சியாளர்களால் ஆதரிக்கப்பட்டு மேம்பாடடையச் செய்யப்பட்டுள்ள, பொதுச்சந்தைக்குள் கிரேக்க நாட்டின் இணைப்பு கிரேக்க நாட்டின் சார்பு நிலை பற்றிய பிரச்சினையை மிகுந்த தீவிரமடையச் செய்யும்.

புதிய தொழில் நுட்பம் அறிமுகப்படுத்தப்படுவதுடன் தொடர்புள்ள கிரேக்க நாட்டின் சார்புநிலை பொதுச்சந்தை ஏகபோகங்களிடையே உள்ள வேலைப் பகுப்பின் கட்டமைப்புக்குள் மேலும் அதிகமாகவேயிருக்கும். மேலும் செயலூக்கம் உள்ள தொழில் வளர்ச்சியும் விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் சாதனைகளைப் பயன் படுத்துவதும் தடுத்து நிறுத்தப்படும்.

இவ்வாறாக எங்கள் நாட்டில் மக்கள் நலனுக்காகவும், தேசியப் பொருளாதாரத்தின் நலனுக்காகவும், விஞ்ஞான-தொழில் நுட்பத்தை வளர்ச்சியுறச் செய்வது, தொழிலாளி

வர்க்கத்தின் தலைமையில், ஏகாதிபத்திய எதிர்ப்பு, ஏகபோகங்களின் எதிர்ப்பு ஆகியவை ஜனநாயக சக்திகள் ஒன்று திரண்டு நிற்பதன் விளைவாக அதனுடைய பொருளாதார - அரசியல் சமூகக் கட்டமைப்பை முற்போக்கான முறையில் மாற்றியமைப்பதுடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளது.

கிரீஸ் நாட்டு கம்யூனிஸ்ட் கட்சியின் திட்டச் செயல் முறை நாட்டை ஏகாதிபத்தியத்தின் மீது சார்ந்திருப்பதி லிருந்தும், உள்நாட்டு ஏகபோகங்களும், வெளிநாட்டு ஏகபோகங்களும், இந்த நாட்டை ஆட்சி செய்வதிலிருந்தும், காப்பாற்றும் ஒரு புரட்சிகரமான மாற்றத்தைப் பற்றிக் கூறுகிறது. கிரேக்க சமுதாயத்தை, சோஷலிசத் திசையை நோக்கி வளரச் செய்யும் புரட்சிகர நிகழ்ச்சிப் போக்கின் முதல் படிநிலை என்றும், ஏகாதிபத்திய எதிர்ப்பு, ஏகபோக எதிர்ப்பு என்றும் ஜனநாயகத்தையும், மக்கள் ஜனநாயகத்தையும் நிறுவுவது என்றும்தான் அதற்குப் பொருள்.

## அடிக்குறிப்பு

1. **ஆவணங்களும், தீர்மானங்களும், சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 25-வது காங்கிரஸ், பக்கம். 56—57.**

**பேராசிரியர். ஜோசப் நைமிலாஸ்**
*சர்வதேச பொருளாதாரத் துறைத்தலைவர்.*
*கார்ல் மார்க்ஸ் பொருளாதார பல்கலைக் கழகம்,*
*ஹங்கேரிய மக்கள் குடியரசு.*

## முதலாளித்துவத்தின் கீழ் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சிச் சாதனைகளின் பயன்

1970 களில், குறிப்பாக 1974-1975இல் ஏற்பட்ட உலகப் பொருளாதார நெருக்கடி, முதலாளித்துவம் நிலவுவதே விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சிக்கு மேலும், மேலும் முரண்பட்டதாக உள்ளது என்று மார்க்சீய வாதிகளின் கோட்பாட்டின் ஏற்புடைமையை உறுதிப்படுத்தியிருக்கிறது. முதலாளித்துவ மறுஉற்பத்தி, உற்பத்தி சக்திகளைத் தொடர்ச்சியாக வீணடிப்பதைத் தன் அடிப்படையான சிறப்பியல்பாகக் கொண்டது. விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றத்தின் பெரும் சாதனைகள், முதலாளித்துவ நாடுகளில் மிகக் குறைந்த அளவே மக்களுடைய சொத்தாக ஆகி, மக்கள் தொகையின் நலனை மேம்பாடடையச் செய்கின்றன. முதலாளித்துவ உற்பத்தி உறவுகளும், அவைகளை அடிப்படையாகக் கொண்ட நிர்வாக அமைப்பு முறையும், உற்பத்தி நிர்வாகத்தில் நிகழும் மாற்றங்களிலும், சமுதாய அமைப்பு முறையில் ஏற்படும் மாற்றங்களிலும் தலையிடுகின்றன. விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியினால் அவசரமாகத் தேவைப்படும் மாற்றங்களே மேலே குறிக்கப்பட்டன.

விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் கீழ், சமூக உற்பத்தியின் வளர்ச்சி, உண்மை உற்பத்தியை, கல்வி, விஞ்ஞானம் ஆகிய துறைகளில் ஆராய்ச்சி போன்ற செயல் முறைகளின் துறைகளுடன் தொடர்புபடுத்துவதை உண்மையில் முன் கூட்டியே ஏற்றுக் கொள்கிறது. இந்தத் துறைகளில் பணமுதலீடு உடனடியான இலாபங்களைத் தருவதில்லை. மேலும் அது தெளிவாகவும் இருப்பதில்லை. எனவே சமூக உற்பத்தியின் வளர்ச்சிக்கான தேவைகளுடன் அது ஒத்துப் போகும் நிலையை ஒரு மையப்படுத்தப்பட்ட முறையின் மூலம் தான் - அதாவது அரசின் தலையீட்டின் மூலம்தான் சாதிக்க முடியும். உற்பத்தியை சர்வதேசத் தன்மையடையச் செய்வது தனிநாடுகளில் உலகப் பொருளாதாரத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளின் தாக்கத்தை அதிகரிக்கிறது. அதன் முறையில் பொருளாதாரத்தையும், விஞ்ஞானத்தையும் கல்வியையும் பற்றி நீண்டகாலத் திட்டமிடுதலை இன்றியமையாததாக ஆக்குகிறது. தேசிய பொருளாதார மட்டத்தில் அடிப்படைப் பொருளாதார இலட்சியங்களை ஏற்படுத்துவதும், சாதிப்பதும் மூலதனக் குவியலின் விளைவாகத் தோன்றும் தன்னியல்பான காரணங்களால் நிர்ணயிக்கப்படும் நிகழ்ச்சி எதன் கீழ் நடைபெறுகிறதோ அந்த சமூக — பொருளாதார அமைப்பானது மேலும், மேலும் குறையுடையதாய் இருக்கிறது. உற்பத்தியின் சில அலகுகளின் வாய்ப்புகள் குறிப்பிடத்தக்க அளவில் குறைக்கப்பட்டுள்ளன. உற்பத்தி சக்திகளையும், பணம் குவித்தலையும் கட்டுப்படுத்துகிற பெரிய ஏகபோக மூலதனங்களின் மேலாதிக்கக் குழுக்கள், உற்பத்தியின் சமூக இயல்பு வேகமாக வளர்ச்சியடையும்போது, அதனுடன், மேலும், மேலும் பிணக்குகளுக்கு உள்ளாகின்றன. விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகியவற்றின் பெரும் முன்னேற்றங்களைப் பரந்த அளவில் பயன்படுத்துவதற்கு இன்றியமையாத முன் தேவைகள் சர்வதேச வேலைப் பகுப்பினால் அளிக்கப்படும் வாய்ப்புகளையும் உலகப் பொருளாதார உறவுகளின் கொடுக்கப்பட்ட துறைகளில்

கூட்டுறவையும் கருத்தில் கொண்டு தேசியப் பொருளாதாரத்தின் மட்டத்திலேயே படைக்கப்பட முடியும்.

இன்றைய முதலாளித்துவம், அரசின் பொருளாதாரப் பணிகளின் வளர்ச்சியாலும், பொருளாதாரத் துறையில் வருவதுரைத்தலின் விரிவாக்கத்தினாலும் உள் நாட்டுப் பொருளாதாரம், வெளிநாட்டுப் பொருளாதாரம் ஆகியவற்றைத் திட்டமிடுவதற்கும், ஒழுங்குபடுத்துவதற்கும் மேற்கொள்ளப்படும் அரசின் முயற்சிகளாலும் சிறப்பு பெறுவது ஏதோ தற்செயல் நிகழ்ச்சியல்ல. முதலாளித்துவ அரசுகளின் இந்தச் செயல் முறைகளில் அடங்கியுள்ள வாய்ப்புகளும், தடைகளும், ஆழ்ந்து வேரூன்றிய கட்டமைப்பு நெருக்கடிகளும், சமூக அரசியல் நெருக்கடிகளும் முதலாளித்துவ நாடுகளில் 1974-1975ல் தொடர்ந்து நிகழ்ந்த நெருக்கடியினால் தெளிவாக விளக்கிக் காட்டப்பெற்றன. விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் சாதனைகள் முதலாளித்துவ நாடுகளில் நடைமுறைப் படுத்தப்படுவதன் இயல்பு இன்றைய சமுதாயத்திற்குத் தேவையான மூலப் பொருட்கள் ஆற்றல் ஆகியவற்றின் உற்பத்தியின் வளர்ச்சிக்கு ஒரு இடையூறாகவுள்ளது. மேலை நாடுகள் தங்களுடைய நிலப்பரப்புகளில் இந்த உற்பத்தியின் வளர்ச்சியை நீண்ட காலமாகப் புறக்கணித்து வந்திருக்கின்றன. ஆனால் அதே வேளையில், ஏகபோக மூலதனத்தின் நலன்களுக்கு ஒத்திசைவாக வளரும் நாடுகளின் இயற்கைச் செல்வங்களைச் சுரண்டுவதை விரிவடையச் செய்து வருகின்றன. மேலை நாடுகள் அனுபவித்து வருகிற மூலப்பொருள், ஆற்றல் ஆகியவற்றின் அளிப்பில் உள்ள இடர்கள், இறக்குமதிகளுக்கான செலுத்தலுக்குத் தேவையான நிதித் தேவைகளின் பற்றாக் குறையுடன் பெரும்பாலும் தொடர்புடையதாகவுள்ளன. இறுதியாக இது உற்பத்தி செய்யும் நாடுகளுக்குத் தேவையான சந்தைகளைக் குறைக்கலாம், உலக முதலாளித்துவ சந்தையில் நடைபெறும் போட்டியை

மிகுதிப்படுத்துவதாக இருக்கலாம், வளர்ந்த முதலாளித்துவ நாடுகளுக்கும், வளரும் நாடுகளுக்குமிடையில் உள்ள முரண்பாடுகளின் வளர்ச்சியைக் கொண்டு வரலாம்.

உணவுப் பொருட்கள் அளிப்பிலும் ஒரு சாதகமற்ற சூழ்நிலை உருவாகியுள்ளது. விவசாயத்தில் காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கிற முக்கியமான முதலாளித்துவ நாடுகள், உணவை உற்பத்தி செய்யும் முக்கியமான நாடுகளாக உள்ளன. உதாரணமாக அமெரிக்காவானது உள்நாட்டுச் சந்தையில் உயர்ந்த விலைகளை வைத்திருக்க முயலும் அதே சமயத்தில் அதன் விவசாய உற்பத்தியைக் கட்டுப்படுத்தி வந்திருக்கிறது. வளர்ந்த முதலாளித்துவ நாடுகளில் விவசாயப் பாதுகாப்புக் கொள்கையை நிறைவேற்றுவது, விவசாய முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்துகிறது. அதே வேளையில் வல்லுநர்களின் கருத்துப்படி 1980 களின் மையபாகத்தில் வளரும் நாடுகள் 100 லிருந்து 150 மில்லியன் டன்கள் உணவுப் பொருள் பற்றாக்குறையை எதிர்நோக்க வேண்டியதிருக்கும். இந்த நாடுகளில் உள்ள 80 சதவிகித மக்கள் மிகப் பழமையான முறைகளை அடிப்படையாகக் கொண்ட விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர் என்பது இந்த நாடுகளின் சிறப்பியல்பாகும். விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சி, சூழ்நிலைப் பாதுகாப்பு, மூலப்பொருட்களைப் பகுத்தறிவுக்குகந்த முறையில் பயன்படுத்துதல் சரிநிகராகச் செல்லும் நெருக்கடிகள், பணவீக்கம் ஆகியவற்றை நீக்குவது அல்லது சிறிதுகாலம் தள்ளிவைப்பது ஆகியவை முக்கியமான பிரச்சினைகளாகவுள்ளன.

கீனஸ் உடைய பொருளாதாரக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட அரசு ஏகபோக முதலாளித்துவ ஒழுங்கமைப்புக்கள் குறுகியகால பொருளாதாரக் கடமைகளையும், நீண்டகால பொருளாதாரக் கடமைகளையும் நிறைவேற்றுவதை நோக்கமாகக் கொண்டிருப்பினும், பெரிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பொருளாதாரப்

பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கு முடியாதவைகளாக இருக்கின்றன.

1974—1975 நெருக்கடியிலிருந்து உலக முதலாளித்துவம் முழுமையின் நிலையற்ற தன்மை உயர்ந்துள்ளது. ஏகாதிபத்தியங்களுக்கு இடையேயான முரண்பாடுகள் மேலும் முனைப்பானதாக ஆகியுள்ளன. இந்த நெருக்கடிகளிலிருந்து முதலாளித்துவ நாடுகள் வெளிப்படுதல் நீண்டகாலம் தேவைப்படுகிற ஒரு துன்பம் நிறைந்த நிகழ்ச்சிப் போக்காக உள்ளது.

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தவும், வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்கவும் பூர்ஷ்வா அரசுகள் கீனஸ் உடைய ஒழுங்குமுறைச் சூட்சுமத்தைப் பயன்படுத்தி மேம்பாடடையச் செய்ய முயன்றுள்ளன. அவைகள் பொருளாதாரத்தைத் தூண்டிவிடவும், வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்கவும், எதிர்த்திசையில் செயல்படும் விஷயங்களைக் கட்டுப்படுத்தவும், பணவீக்கத்தைத் தடுக்கவும் மாறிமாறி நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் இந்த இலட்சியங்களை அடைவதற்குப் பயன்படுத்தின. உயர்ந்த சுதியமைப்பு என்று அழைக்கப்படுகிற இந்த முறைமூலம் அடையக்கூடிய பலன்களைப் பற்றி நாம் அறிந்தோம். 1976 லிருந்து உற்பத்தியின் வளர்ச்சி விகிதம் குறைக்கப்பட்டிருக்கிறது. யு. எஸ். மற்றும் சில சிறிய நாடுகளைத் தவிர பிற நாடுகள் அனைத்திலும், மொத்த வேலையில்லாதோர் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. பணவீக்கம் சிறப்புற்று விளங்குகிறது. உயர்ந்த சுதியமைப்புக் கொள்கையின் தோல்வியானது பணவீக்கத்தை அதிகப்படுத்தாமல் பூர்ஷ்வா அரசுகள் வளர்ச்சிக்கு வழி செய்ய முடியாது என்பதை நிரூபித்துள்ளது.

அரசு ஏகபோகத்தின் ஒழுங்குபடுத்தும் முறைகள் உலகப் பொருளாதாரத்தைப் பகுத்தறிவுக்குகந்த முறையில் கட்டுப்படுத்துவதற்கு எந்த ஒரு வழியையும் உடையதாக

இல்லை. காப்புக் கொள்கையைச் செயலூக்கம் மிக்கதாக ஆக்க அண்மைக் காலத்தில் முயற்சிகள் நடைபெற்றுள்ளன. "பொருளாதாரப் போர்கள்" முதலாளித்துவ உலகில் பொதுவான ஒரு விஷயமாக உள்ளது. பொருளாதாரப் பிரச்சினைகளையும் முரண்பாடுகளையும் தீர்ப்பதற்காக அடிக்கடி நடத்தப்படுகிற உச்சகட்டமாநாடுகள் சர்வதேச மட்டத்தில் பொதுவான முதலாளித்துவ நலன்களைப் பாதுகாக்க முரண்பாடுகளைத் தீர்ப்பதற்காகச் செய்யப் படுகிற முயற்சிகளுக்குச் சான்றாக விளங்குகின்றன. எனினும் இந்த இலட்சியங்களை அடைவது, தேசிய கட்டமைப்புக்குள் பொதுவான முதலாளித்துவ நலன்களைப் பெறுவதற்கானவற்றைச் செய்வதைக் காட்டிலும் மிகவும் கடினமானது ஆகும்.

இரண்டு சமூக அமைப்புகளிடையேயுள்ள போட்டியின் விளைவாகத் தூண்டப் பெற்று, தொழிற் சிறப்பு மிக்க முதலாளித்துவ நாடுகளின் ஆட்சியாளர்கள், அரசியல் அடிப்படையில், பொதுவாக விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் முன்னேற்றத்தை விரைவு படுத்துவதில் ஆர்வமுள்ளவர்களாக இருக்கிறார்கள். எனினும் ஆராய்ச்சிக்காகவும், மேம்பாட்டிற்காகவும் ஒதுக்கப்பட்ட நிதிகள் இந்த நாடுகளில் இராணுவ காரியங்களுக்காகச் செலவிடப்படுகின்றன. 1978 மே மாதத்தில் யு. எஸ். சின் முன் முயற்சியால் மேற்கொள்ளப்பெற்ற 10-15 ஆண்டு ஆயுதப் பெருக்கத் திட்டச் செயல்முறைகள் (மொத்தமாக 10 மில்லியன் டாலர்களுக்கு) மேலை நாடுகளில் இப்பொழுது உள்ள இராணுவத் தொழில் தொகுதியமைப்புகளின் பெரும் செயல் திறனுக்கு மேலும் அதிகமான செயல் திறனைச் சேர்க்கிறது. 1970 களின் நடுவில் 4 மில்லியன் மக்கள், அல்லது தயாரிப்புத் தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளிகளில் 5-ல் ஒருவர் யு. எஸ். ஆயுத உற்பத்தித் தொழிற்சாலையில் உழைத்தார்கள். உழைக்கும் மக்களில் பாதிக்கு மேலாக, எங்கு மிக அதிகமான முன்னேற்றம்

அடைந்துள்ள தொழில் நுணுக்கம் மிகுதியாகப் பயன் படுகிறதோ அந்த ஆயுத உற்பத்தித் தொழிற்சாலைகளில் பணியாற்றுகிறார்கள். உதாரணமாக, மின் தொழில் நுணுக்கம், மின்னணுக் கருவிகள், தளவாடங்கள் ஆகியவை உற்பத்தியில் அவர்களின் பங்கு 62—64 சதவிகிதமாக உள்ளது.

ஏகாதிபத்தியவாதிகளின் கொள்கையான ஆயுதப் பெருக்கப் போட்டி, மனித இனம் அனைத்தின் நலன் களுக்கும் கேடுவிளைவிக்கிறது. வளரும் நாடுகளிலிருக்கும் மக்கள் தொகை, அதாவது பெரும்பாலான மக்கள் தொகை பரிதாபகரமான நிலையில் உள்ளது; பொருளாதாரங்கள் பின்தங்கியவையாயுள்ளன. உற்பத்தி சக்திகள் வளர்ச்சி யடையச் செய்யப்படவே இல்லை. இன்றைய தொழில் நுட்பத்தை உடனடியாகப் புகுத்துவது இந்த நாடுகளில் தொழில் முன்னேற்றம் ஏற்படச் செய்ய மிகவும் இன்றியமை யாதது. அது உலக மட்டத்தில் "கிடைப்போக்கில்" பரவு வதற்கும் உதவுகிறது. இருப்பினும் தொழில் முதலாளித்துவ அரசு ஒரு "செங்குத்தான" தொழில் நுட்ப வளர்ச்சியைத் தான் விரைவுபடுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொள் கின்றன. அதன் விளைவாக வளரும் நாடுகளிலும், வளர்ந்த நாடுகளிலும், உள்ள வளர்ச்சி மட்டங்களுக்கிடையில் உள்ள இடைவெளி தொடர்ந்து வளர்ந்து கொண்டே வருகிறது.

நாம் முன்னர் கண்டதைப்போல முதலாளித்துவம், விஞ்ஞான தொழில் நுட்பத்தைப் பின்தள்ளுகிறது. அதன் சாதனைகளை சமாதான காரியங்களுக்குப் பயன்படுத்து வதற்கு முக்கியமான தடையாக விளங்குகிறது. மக்களுடைய வாழ்க்கைத் தரத்தையும், வாழ்க்கையின் இயல்பையும், உயர்த்தத் தடையாக விளங்குகிறது. ஏகாதிபத்திய அரசுகள் உலகின் மீது விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றத்தின் பகுத்தறிவுக்கொவ்வாத விகிதங்களையும், உருவங்களையும் திணிக்கின்றன. அவைகள் மனித இனம் முழுவதற்கும் மாபெரும் நஷ்டங்களை உண்டாக்குகின்றன.

**பெர்ட் ராமெல்சன்**

*நிர்வாகக் குழு உறுப்பினர் கம்யூனிஸ்ட் கட்சி,
கிரேட் பிரிட்டன்*

# விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் பொருளாதார, சமூக விளைவுகள்

நடைமுறையிலிருந்து வரும் விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியும், அதனுடைய அணுசக்தி, மின் அணு இயல் ஆகியவற்றைச் சுற்றியுள்ள பெரும் வளர்ச்சிப் பகுதிகளும், இயந்திரங்களைப் புகுத்தியபோதோ அல்லது அதன் பின்னர் மின் இயந்திர சக்தியைப் புகுத்தியபோதோ ஏற்படாத மிக வேகமான மாற்றங்களைக் கொண்டுவரும். இந்தப் புரட்சியின் சிறப்புத் தன்மைகளைக் கீழே கொடுக்கப் பட்டுள்ளவாறு சுருக்கிக் கூறலாம்: அது பொருட்களை மிகவும் திறமையாக உற்பத்தி செய்யும் முறையைப் பற்றிய விஷயமோ அல்லது புதிய பண்டங்களை உற்பத்தி செய்யும் வாய்ப்புகளையோ பற்றிய விஷயமோ அல்ல. அது உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கிலுள்ள மாற்றங்களைப் பற்றியது ஆகும். உற்பத்தித் திறன் மிக அதிகமாக வளர்ந்துள்ளது. எனவே அது வெறும் அளவை அடிப்படையாகக் கொண்ட மாற்றம் என்று கருதப்படக் கூடாது. ஆனால் அது ஒரு பண்பியல் அடிப்படையிலான மாற்றம் எனவும் கருதப்பட வேண்டும். முந்திய தொழில் நுட்ப முன்னேற்றங்களின் போது-ஒரு

வேளை நடுத்தர கால இடைவெளியில், நிச்சயமாக நீண்ட கால இடைவெளியில் வேலையை விட்டு நீக்கியவர்களைக் காட்டிலும் அது வேலையில் சேர்த்துக் கொண்டவர்களின் எண்ணிக்கை மிகுதியாகவே இருந்தது. ஆனால் இந்தப் புரட்சி படைக்கும் வேலைகளைக் காட்டிலும் நீக்கும் வேலைகளே அதிகமாய் உள்ளன.

ஒருபுறம், இது தொழிலாளிகளின் பட்டாளத்தில் ஒரு பெரும் பகுதியைத் திறமைக் குறைவானவர்களாக்குகிறது. மறுபுறம் விஞ்ஞான-தொழில் நுட்ப வேலைக்கு ஆதாயம் உள்ள வகையில் உடலுழைப்பு வேலைக்கும், அதற்கும் இடையிலுள்ள விகிதத்தை வேகமாக அதிகரித்துக் கொண்டிருக்கிறது. விஞ்ஞானத்தை நிர்வகிப்பதற்கு அமைப்புகளைப் பேணும் திறமை மட்டுமல்லாமல், கோட்பாடு மற்றும் நடைமுறை அடிப்படையிலான உயர்மட்ட விஞ்ஞான-தொழில் நுட்ப அறிவுத்திறனும் இன்றியமையாதது ஆகும்.

மாற்றுத் திட்டங்களின் பலவகைகளையும் உள்ளிட்ட உற்பத்தித் தகவலானது ஒரு குறிப்பிட்ட தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளி என்ற வகையிலும், ஒரு குடிமகன் என்ற வகையிலும் ஒரு மனிதனுக்கு அவன் புரிந்துகொள்ளும் உருவில் கிடைக்கக் கூடியதாய் உள்ளது. தேசிய பொருளாதாரத் திட்டங்களின் பயன்களைப் பற்றிய பொது மக்களின் அறிவு, தொழிற்சாலையில், ஜனநாயக நிகழ்ச்சிப் போக்குகளைத் தோற்றுவிக்கும் வாய்ப்புகளை அதிகரிக்கிறது.

நாம் விவாதிக்கும் விஷயத்திற்கு, முதலாளித்துவ பொருளாதாரத்தின் நிலைமையும், அதன் உறுதியின் அளவும், தேசிய எல்லைகளுக்குள் ஆட்சி செய்யும் வர்க்கத்திற்கும், தொழிலாளிகளுக்கும் இடையிலுள்ள வலிமையில் வேறுபாடுகளும் சர்வதேச மூலதனத்திற்கும், சர்வதேச தொழிலாளி வர்க்கத்திற்குமிடையிலுள்ள வலிமையின்

வேறுபாடுகளும்; முடிவாக சோஷலிச சமூகத்தைச் சேர்ந்த நாடுகள் தோன்றியதனாலும், காலனி ஆட்சி நிலைகுலைந்ததாலும் ஏற்பட்ட உலக படைபலச் சமநிலையும் மிகவும் இன்றியமையாதவை ஆகும்.

முதல் தொழிற்புரட்சி, முதலாளித்துவம் இளமையாகவும், வலிமை மிகுந்ததாகவும், வளர்ச்சிப் பாதையில் வேகமாக விரிவடைந்து கொண்டிருந்தபோது வந்தது. முதலாளித்துவம் எந்தக் காலத்திலும் சுழல் நெருக்கடியிலிருந்து விடுபட்டதாக இருக்கவில்லை. என்றாலும் போட்டியிடும் முதலாளித்துவம் என்ற நிலையில் மட்டுமல்லாது, ஏகபோக முதலாளித்துவப் படிநிலையிலும் கூட - தொடர்ந்து அது அப்போது வளர்ந்து கொண்டு தானிருந்தது.

இப்பொழுது நிலைமை அதுவல்ல. விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி முதலாளித்துவ உலகம் முழுமையையும் பாதிக்கிற முதலாளித்துவத்தின் பொதுநெருக்கடிக்கு நடுவில் நடைபெறுகிறது. அது போருக்குப் பிந்தியதாகவும் தோன்றிமறைகிறதாகவும் இருப்பினும் தொடர்ந்திருக்கக் கூடிய "நீண்டகால ஏற்றக்" காலத்தில் வளர்ந்து வருகிறது. இந்த "நீண்டகால ஏற்றக்" காலத்தில் பெற்ற சாதனைகளுக்கு மீண்டும் திரும்பிச் செல்ல எதிர்பார்ப்பதற்கு எந்த விதமான காரணங்களும் இல்லை. உலக முதலாளித்துவத்தின் சர்வதேசப் பணஅமைப்பு முறையை நிலையானதாக ஆக்குவதில் தோல்வியும், அதன் வீழ்ச்சியும், வாணிபச் சுழல்கள் இருந்த போதிலும்கூட ஏறத்தாழ முப்பதாண்டு காலமாகத் தொடர்ந்து வருகின்ற பணவீக்கமும், சென்ற பத்தாண்டுகளாக முதலாளித்துவ உலகம் முழுவதும், பொது மக்களிடையே பரவியுள்ள வேலையில்லாத் திண்டாட்டமும், உலக வாணிபத்தைக் கட்டுப்படுத்தும் பாதுகாப்புக் கொள்கைகளுக்குத் திரும்புவதும் இந்த நெருக்கடியின் முக்கியமான வெளிப்பாடுகளில் சிலவாகும்.

ஏகாதிபத்திய அரசுகள் தங்களுடைய மூலப்பொருட்களின் அளிப்பில் இன்னல்களை அனுபவித்து வருகின்றன. எண்ணெய், யுரேனியம், புதிய தொழில் நுட்பத்திற்கு இன்றியமையாததாக விளங்குகிற அபூர்வமான கனிப்பொருட்கள் ஆகியவை-இது ஏகாதிபத்திய ஏகபோகங்களின் எண்ணங்களுக்குக் கடுமையான இடையூறாக உள்ளது.

நடுத்தரமான அரசுகளின் வகைதுறைகளைக் காட்டிலும், மிகுந்த வகைதுறைகளைக் கொண்ட பன்னாட்டு இணையங்களும், பல கண்ட இணையங்களும் இப்பொழுது வெளிப்பட்டுள்ளன. இந்த இணையங்கள் தங்களுடைய வகை துறைகளை அரசு உதவித் தொகைகளிலிருந்து பெற்றுப் பெருக்கிக் கொள்கின்றன. மேலும் ஆராய்ச்சிக்கும், வளர்ச்சிக்கும் அரசு செலவிடும் நிதியின் பலனை அனுபவிப்பவைகளாகவும் இவைகள் இருக்கின்றன. இந்த ஏகபோகங்களின் செயல்முறைகளும், இவற்றின் உற்பத்தித்திறமைகள் உலகம் முழுமையும் பரவி இருப்பதும் ஒரு பண்பியல் கூடிப்படையிலான ஒரு புதிய வேலைப் பகுப்பைப் புகுத்தியுள்ளது. மேலும் இவைகள் அரசுக் கட்டுப்பாட்டுக்கு அடங்காதவைகளாகவும் ஆகிவருகின்றன. முதலாளித்துவ உலகில் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் மேற்கொண்ட வளர்ச்சியின் மீதும், முதலாளித்துவ அமைப்பு முறையின் உறுதிப்பாட்டின் மீதும் இது ஒரு மிகவும் முக்கியமான விளைவை ஏற்படுத்தாமல் இருக்க முடியாது.

ஆனால் வளர்ந்த முதலாளித்துவ நாடுகளின் தேசிய எல்லைகளுக்குள்ளேயும், சர்வதேச எல்லைகளுக்குள்ளேயும் வர்க்க சக்திகளைப் பொருத்தவரையில் ஏற்படுகிற பெரும் மாற்றங்கள் மிகவும் முக்கியமான காரணியாக விளங்குகின்றன ஏகபோக வாதிகள் தொழிலாளி வர்க்கத்தின் மீது தங்களுடைய புதிய முதலீடுகளின் விளைவுகளைக் கருத்தில் கொள்ளாது விட்டு விடக் கூடிய காலம் — மற்றும்

தொழிலாளி வர்க்கத்தின் மீது உற்பத்தி அமைப்பு முறைகளின் தாக்கத்தைப் பற்றிக் கவலைப்படாமல் இருக்கக் கூடிய காலம் போய் விட்டது. எப்பொழுதும் இனிவராது என நம்புகிறோம். இன்று முன்னேறிய முதலாளித்துவ நாடுகள் அனைத்திலும், தொழிலாளி வர்க்கத்தினர், வர்க்கப் போராட்டத்திற்கான சக்திவாய்ந்த அமைப்புக்களை தொழிற்சங்க அமைப்புகளைத் தோற்றுவித்து வளர்த்துள்ளனர். அவர்கள் எண்ணிக்கையில் மட்டும் வலிமை மிக்கவர்களாக இல்லை. அவர்கள் சிறந்த பக்குவமடைந்தவர்களாகவும் இருக்கிறார்கள். இந்த நிகழ்ச்சிப் போக்கிற்கு முக்கியமான அரசியல் காரணங்கள் உண்டு. ஆனால் இங்கே உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கு, உழைப்பு சக்தியின் சமூக அமைப்பு ஆகியவற்றில் ஏற்பட்ட மாறுதல்களின் நேரடி விளைவான இரண்டை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். இவை இரண்டுமே தொழில் நுட்பப் புரட்சியின் விளைவுகளே ஆகும்.

முதன் முதலில், நூற்றுக்கணக்கான மைல்கள் தொலைவில் உள்ள தேசிய எல்லைகளால் பிரிக்கப்படக் கூடிய, பல தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படுகிற ஏதாவது ஒரு பொருளின் உற்பத்தி பரவலாகி இருப்பதனால் தோன்றியுள்ள புதிய வேலைப்பகுப்பு முறை. இந்தச் சூழ்நிலையில், ஒப்பீட்டில் ஒரு சிறிய தொழிலாளர்களின் குழு ஒரு முடிவெடுக்கலாம். அந்த முடிவு பல தொழிற்சாலைகளின் உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கை ஏதாவது ஒரு வழியிலோ மற்றொரு வழியிலோ பாதித்து, வேலைக்கமர்த்திக் கொள்வோருக்குப் பெரும் இழப்பை ஏற்படுத்தலாம். இது தொழிலாளர்களின் பேரம் பேசும் திறனைப் பெரிதும் உயர்த்தியுள்ளது. முதலாளித்துவ உலகில் உள்ள தொழிலாளர்களிடையே மிக நெருக்கமான உறவும், ஒற்றுமையும் இன்றியமையாதவை என மிக அதிகமான அளவு அறிந்து கொள்ளும்படி செய்துள்ளது.

தொழில் நுட்பப் புரட்சி, மேசையடித் தொழிலாளர் களின் எண்ணிக்கையைப் பெருக்கி உழைப்பிற்கான செலவில், அவர்களுடைய பங்கை உயர்த்தியுள்ளது. முன்னாளில் போல அவர்களைத் தனித்தனியே பேரங்களுக்கு உட்படுத்த முடியாது. ஒரு காலத்தில் அவர்கள் பல தொழிலாளர்களைவிட அதிகம் சம்பாதித்தனர். ஆனால் அவர்கள் அமைப்புகளுக்குள், ஒன்றிணைக்கப்படா திருப்பதால், அமைப்புகளுக்குள் உள்ள தொழிலாளர்களால் விட்டுவிடப்படுகிறார்கள். பின்னவர்கள் போராடி அவர் களுக்கிடையேயிருந்த வருமான வேறுபாடுகளைக் குறையும் படிச் செய்துள்ளனர். பெரும்பாலான சமயங்களில் தொழில் நுட்ப வல்லுநர், கண்காணிப்பவர்களின் ஊதியத்தைக் காட்டிலும் மிகுதியாக ஆகும்படிச் செய்துள்ளனர். முன்னர் தங்களைத் தொழிலாளி வர்க்கம் எனக்கருதிக் கொள்ளாமல் இருந்த, மக்கள் தொகையின், வளர்ந்து வரும் சமுதாய அடுக்கின் இடையில் வர்க்க உணர்வு வளரச் செய்துள்ளதே இதன் விளைவாகும். சென்ற பத்தாண்டுகளில் பிரிட்டனில் தொழிற் சங்க உறுப்பினர்களின் எண்ணிக்கை 25 சதவிகிதம் உயர்ந்துள்ளது. புதிதாகச் சங்கங்களில் உறுப்பினர்களாக ஆகியுள்ளவர்களில் பெரும்பாலோர் இம்மாதிரியான, உடல் உழைப்பு செய்யாதவர்களே. இவர்களே இப்போது மிகுந்த போராட்ட மனப்பான்மையுள்ளோராயுள்ளனர்.

மின்னணு முறையைப் புகுத்தியிருப்பது, ஒப்பீட்டில், சிறு தொகுதியான பண்டங்களை உற்பத்தி செய்யும் நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. இது சிறிய முதலாளி களையும், மத்தியதர முதலாளிகளையும் மிகவும் வேகமாக நீக்குவதற்கு உறுதியாக வழிசெய்யும். இவ்வாறாக இது பெரிய ஏகபோகங்களுக்கான உள்உறுப்புகளை உற்பத்தி செய்கிற தொழிற்சாலைகளின் எண்ணிக்கையைக் குறைக்கும். உள்நாட்டுப் போரல்லாத சோஷலிசப் புரட்சிக்கான சூழ்ச்சிமுறையில், ஒரு பெரும் பங்காற்றுகிற

ஏகபோகங்களை எதிர்த்த கூட்டின் வலிமைக்கு மேலும் வலிமையூட்ட வாய்ப்பையளிக்கும்.

முதலாளித்துவ உலகில் ஒன்றுக்கொன்று ஒவ்வாத முரண்பாடான இயல்புகளை, குறிப்பாகத் தொழில் உற்பத்தியில் சிறந்து விளங்கும் நாடுகளில், விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சி தோற்றுவித்துள்ளது.

முதலாளித்துவத்தின் கட்டமைப்பில், விளைந்த மாற்றங்கள் குறிப்பாகப் பன்னாட்டு ஏகபோகங்களின் வளர்ச்சி ஒன்று குவிந்துள்ள மூலப் பொருட்களைக் கொண்டு விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியை வேகப்படுத்தக் கூடியவைகளும், மிகுந்த பகுத்தறிவுக்குரிய முறையில் அதைப் பயன்படுத்தக் கூடியவைகளுமான புதிய அமைப்புருவங் களைத் தோற்றுவித்திருக்கின்றன. பண்டங்களும், அவற்றின் உள்ளுறுப்புகளும் எங்கே மிகவும் சிக்கனமானதாகவும், திறமையாகவும், உற்பத்தி செய்யப்பட முடியுமோ அங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன.

எனினும் இது நிலைமையின் ஒரு பகுதியேயாகும். இன்றைய முதலாளித்துவத்தின் நிலையில் புரட்சியின் ஆற்றல் வளத்தைப் பகுத்தறிவுக்குகந்த முறையில் பயன் படுத்துவதைத் தடைசெய்கின்ற, எதிரான இயல்புகள் இருக்கின்றன. தொழிற் புரட்சி மிக அதிகமான அளவு சமுதாய உற்பத்தியின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்தப்பட வேண்டுமெனில் சமுதாயம் முழுமையும் கூட்டாகச் செயலாற்ற வேண்டுவது இன்றியமையாதது ஆகும். ஆனால் அந்த உற்பத்தியின் சாதனங்கள் மேலும், மேலும் அதிகமாக ஒரு சில ஏகபோக முதலாளிகளின் கையில் குவிந்திருக் கின்றன. இவ்வாறாக உற்பத்தியின் சமுதாயத் தன்மைக்கும், அதன் பலன்களைத் தனி மனிதர் சுரண்டுவதற்குமிடையே யுள்ள முரண்பாடு கூர்மையாகி வருகிறது; உற்பத்தியின் செயல்திறன் வளர்ச்சிக்கும், முதலாளித்துவ உற்பத்தியின் உந்து சக்தியான அதனுடைய இலாபத்தின் வாய்ப்பு வளம்

சுருங்குவதற்கும் ஒரு பெரும் இடைவெளி தோன்றுகிறது. இந்த முரண்பாடு இப்பொழுது மேசையடித் தொழிலாளர் களையும் உள்ளடக்கியதாக உள்ள தொழிலாளி வர்க்கத்தின் எதிர்க்கும் திறனைப் பொருத்து பல்வேறு உருவங்களில் தோன்றுகிறது.

இன்றைய தொழிலாளி வர்க்கம், விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சி, சென்ற காலத்தில் நிகழ்ந்த தொழில் நுட்ப மாற்றங்களைப்போல முடிவில் பல வேலை வாய்ப்புகளை உண்டாக்கும் என்ற பிரச்சாரத்தை நம்புவதற்குத் தயாராய் இல்லை. அவர்கள் சென்றகால இயல்பையும், இன்றைய இயல்பையும் வேறுபடுத்திக் காணக்கூடியவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் பெரும் வேலையில்லாத் திண்டாட்டத்தை அனுபவித்து வருகிறார்கள். மேலும் அவர்கள் நெருக்கடிக்கு முடிவுகாண முடியாதவர்களாகவும் இருக்கிறார்கள். சென்ற காலத்தில் தொழிற்சாலைகளிலும், சுரங்கத் தொழில்களிலும் அமர்த்தப்பட்டிருந்த தொழிலாளிகளின் எண்ணிக்கையில் குறைவு ஏற்பட்டது பெரும் சீரழிவை ஏற்படுத்திவிடவில்லை. ஏனெனில் அடிப்படைத் தொழில்களில் மிகுதியாக இருந்த தொழிலாளர்களில் ஒரு பெரும் பகுதியினரைச் சேவைத் தொழில்கள் தன்வயமாக்கிக் கொண்டன. ஆனால் இன்றைய புரட்சியின் விளைவாக, சேவைத் தொழில்கள் கூட மிக அதிகமான அளவு குறைக்கப்பட்டுள்ளன.

புதிய உத்திமுறைகளைப் புகுத்துவதற்குத் தொழிலாளிகள் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்ததற்குப் பல உதாரணங்கள் உள்ளன. துறைமுகங்களில் சரக்குக் கொள்கல ஆதிக்கத்தை எதிர்த்து நடந்த போராட்டமும், புதியதான எஃகுத் தொழில் முறைகளுக்கு எதிராக நடந்த போராட்டமும் — பிரிட்டன் வரலாற்றில், நம் மனதில் தோன்றுகிற இரண்டு உதாரணங்களாகும். இதை இயந்திர அழிப்புக் கிளர்ச்சிக் குழுவின் கொள்கைகள் என்பதைப் போன்ற பெயரிட்டு அழைப்பது தவறாகும். இதில் தொழில்

நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கு எந்தவித எதிர்ப்பும் இல்லை. தொழிலாளியின் பாதுகாப்பிற்கானவற்றையும், புரட்சியின் நலன்களைப் பகிர்ந்து கொள்வதையும் ஏற்றுக் கொள்ளத் தயங்குவதற்கு எதிராகத்தான் இந்த எதிர்ப்புகள்.

ஒரு குறிப்பிட்ட சமுதாய அடுக்கைச் சேர்ந்தவர் களிடையே முக்கியமாக, குட்டி பூர்ஷ்வாக்களிடையே, விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியினுடைய பயன்களைக் கண்டு மிகுந்த பயம் ஏற்பட்டுள்ளது. இந்தப் புரட்சிக்கு ஓர் முற்றுப்புள்ளி வைப்பதற்காகவும், சமூகச் செல்வத்தை அதிகப்படுத்தும் நோக்கங்களைக் கைவிடுவதற்காகவும், சூழ் நிலைப்பாதுகாப்பு பற்றிய வாதங்கள் பல முன் வைக்கப் படுகின்றன. நிச்சயமாக இது, ஏழ்மை இன்னும் ஒரு பெரும் பிரச்சினையாக விளங்கும் மக்கள் தொகையில் பெரும் பாலானவர்களுடைய நலன்களுக்கு விரோதமானதாக உள்ளது. இராணுவத்துறையில், அணு சக்தித் தொழில் நுட்பத்துறை வளர்ச்சியில் இந்தப் புரட்சியின் விளைவிற்காகப் பயப்படுகிறவர்கள்கூட இந்த முழக்கங் களை ஏற்றுக் கொள்கிறார்கள்.

முதலாளித்துவ உலகில் கொள்கைகளிலும், சமூகக் கட்டமைப்பிலும் அடிப்படையான மாற்றங்கள் இருந்தாலன்றி, விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் விளைவுகள் வெளிப்பட்டே தோன்றும். அது நெருக்கடியை ஆழமாக்கும்; வேலையில்லாத் திண்டாட்டத்தை விரைவு படுத்தும்; இந்தப் புரட்சியின் முழுச் செயல் திறனையும் பயன்படுத்த சமுதாயம் தவறிவிடும்.

மக்களுடைய பொருளாயத, கலாச்சாரத் தேவைகளை நிறைவு செய்வதையும், விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றத்தைப் பகுத்தறிவுக்குகந்தவாறு பயன் படுத்துவதையும் கைகூடும் செயலாக்குவதற்கு சமுதாயம் முழுமையையும் மாற்றியமைப்பதே முடிவான தீர்வாகும்—

அதாவது புரட்சிகரமான சோஷலிச மாற்றமே அந்தத் தீர்வு.

அதே வேளையில் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியினால் தோற்றுவிக்கப்பட்டுள்ள நிலைமை உழைக்கும் மக்களின் தினசரி செயல்முறைகளைக் கட்டாயத் தேவையாக்குகிறது. தொழிற்சாலைகளிலும், வட்டாரங் களிலும் தேசிய மட்டத்திலும் உற்பத்தி முறைகளில் மாற்றங்களைத் தோற்றுவிக்கிற முடிவுகளை மேற்கொள்ளும் போது, தொழிலாளிகளும் அதில் ஒரு கட்சியாக இருக்க வேண்டும். முக்கியமான வழிகாட்டும் முழக்கமாக வேலைப் பாதுகாப்பு என்பதே இருக்க வேண்டும். அது ஒரு குறிப்பிட்ட தொழிற்சாலையின் வேலையாகவும் இருக்கலாம். ஒப்பீட்டில் தகுந்த ஊதியங்கள், தகுந்த வேலைச் சூழல்களுடன் கூடிய மாறுதலான வேலையாகவும் கூட அது இருக்கலாம். புதிய திறமைகளைப் பெறுவதற்குப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். இது முழக்கங்களின் ஒரு பகுதியேதான். மற்றொரு பகுதி — வேலை நாள், வாரம், ஆண்டு ஆகியவற்றைக் குறைப்பதனால் மிக அதிகமான அளவு பெருகியுள்ள உற்பத்தித் திறனால் தொழிலாளிகள் பெரும்பயனடைய வேண்டுவது அவசியம்.

புதிய தொழில் நுட்பம், குறிப்பிட்ட சமூகப் பிரச்சினை களை சூழ்நிலைப் பாதுகாப்பு, விடுமுறை, பொழுது போக்கு வசதிகள் ஆகியவற்றைத் தீர்ப்பதற்குப் பயன் படுத்தப்பட வேண்டும். வறுமையை நீக்கவும், புதிய நல்ல மருத்துவமனைகள், பள்ளிகள், பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றை உருவாக்கவும் அது பயன்படுத்தப்பட வேண்டும். சில பன்னாட்டு நிறுவனங்கள் பொது மக்கள் உடைமையாக்கப்பட வேண்டும். உழைக்கும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், பெரும் ஏகபோகங்கள் சிறிய, நடுத்தர தொழில் முயல்வோர்களைச் சுரண்டுவதி லிருந்து காப்பாற்றவும் மிகுந்துள்ள தனியார் துறையுடன் கட்டளையுரிமை உடன்பாடுகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

சிறிய தொழில்களிலும் தொழிலாளர்களது நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

பன்னாட்டு இணையங்களின் சாராம்சமும், வேலைப் பகுப்பு முறையும் முன்னெப்போதைக் காட்டிலும், இப்போது சர்வதேச தொழிலாளி வர்க்கத்தின் ஒற்றுமை இன்றியமையாதது எனத் தொடர்ந்து வலியுறுத்துகின்றன. ஆகவே உலகம் முழுமைக்குமான ஒரு தொழிற்சங்க இயக்கம் தேவைப்படுகிறது. இந்த இலட்சியங்களை அடைவதற்கு எல்லாமட்டங்களிலும் ஜனநாயகத்தை விரிவாக்கம் செய்யப் போராடுவது இன்றியமையாததாகிறது. தன்னுடைய பொருளாதார இலட்சியங்களையும், ஆராய்ச்சி, வளர்ச்சி ஆகியவற்றிற்கான மூலவளங்களின் ஒதுக்கீடு பற்றியும், அந்த வளங்களைப் பயன்படுத்துகின்ற திசையைப் பற்றியும் முழுத்தகவலும் கொண்டுள்ள ஓர் அரசும் அவசியமாகிறது.

முன்னேறிய பல முதலாளித்துவ நாடுகளில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளின் சூழ்ச்சித் திறத்தில் முன்னரே இம்மாதிரியான கோரிக்கைகள் அடங்கியுள்ளன. உலக சக்திகளின் புதிய சமநிலையின் காரணமாக வர்க்கப் போராட்டம் தீவிரமடைவது இன்றியமையாததாகவுள்ளது. அது ஓர் உள்நாட்டுப் போர் இன்றி ஒரு சோஷலிசப் புரட்சி தோன்றுவதற்கு வழிசெய்யும். இந்த சூழ்ச்சித்திறத்தை நிறைவேற்றுவதன் முக்கியமான கூறாக விளங்குவது ஒரு பரந்த ஏகபோக எதிர்ப்பு ஜனநாயக அணியைத் தோற்றுவிப்பதேயாகும். விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சி ஒவ்வொருநாளும் இவ்வாறான ஒரு கூட்டிற்கு வேண்டிய ஒரு அடித்தளத்தை ஏற்படுத்தி வருகிறது. ஆகவே அதை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்குரிய சாதகமான சூழ்நிலைகளைப் படைத்து வருகிறது.

**பேராசிரியர். ஓ. என். பைக்கோவ், டி. எஸ்.சி (வரலாறு)**

துணை இயக்குநர், உலகப் பொருளாதாரம் மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய நிறுவனம், விஞ்ஞான கலைக் கழகம். சோவியத் ஒன்றியம்.

## விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியும், போர், சமாதானம் ஆகியவை பற்றிய பிரச்சினையும்

போரும் சமாதானமும் பற்றிய பிரச்சினை சர்வதேச உறவுகளுக்கு மிகவும் இன்றியமையாததாக இருந்து வந்திருக்கிறது. பெரும்பாலான சமயங்களில் அவைகளின் உள்ளடக்கத்தைப் பெருமளவிற்கு நிர்ணயித்திருக்கிறது. இருப்பினும், இந்தப் பிரச்சினைக்கு இன்றுள்ள முக்கியத்துவம் இதற்கு முந்திய சகாப்தங்களில் எப்போதும் இருந்ததில்லை. இது உண்மையிலேயே உலக வீச்சைப் பெற்றுள்ளது. பல கோடிக்கணக்கான மக்களின் தலைவிதியும், பல நாடுகள், நாட்டினங்கள் ஆகியவற்றின் தலைவிதியும், உலக முன்னேற்றமும் இதைப் பொருத்தகாகவே உள்ளன. ஓர் உலகப் போர் தவிர்க்கப்படா விட்டால் அது மனித இனம் முழுமையையும் அழித்துவிடும் பேரபாயத்தை உண்டாக்கிவிடும்.

நவீன விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றங்களை இராணுவத் துறைக்குப் பயன்படுத்துவது, ஏகாதிபத்தியத்தின் சூழ்ச்சித்திறத்தின் ஒரு பகுதியாக விளங்குகிறது. மேலும் அது இப்பொழுது சீனத்தலைமையால் பின்பற்றப்படுகிற சட்டாம்பிள்ளைத்தனத்தின் ஒரு

முக்கியமான சூழ்ச்சித் திறனாகவும் விளங்குகிறது. தங்களின் சுயநல நோக்கங்களையும், பிற்போக்கு இலட்சியங்களையும் பின்பற்றும்போது இந்த சக்திகள் மனித இனத்தின் வாழ்விற்கு ஒரு பேராபத்தைப் படைக்கின்றன.

இன்றைய சூழலில், ஓர் உலகப் போரைத் தவிர்ப்பது என்ற பிரச்சினை புது வகையாக நம்முன் வைக்கப்படுகிறது. சோஷலிச நாடுகளும், சர்வதேசத் தொழிலாளி வர்க்கமும், தேசிய விடுதலை இயக்கமும், சமாதானத்தை விரும்பும் முற்போக்கான சக்திகள் அனைத்தும், ஏகாதிபத்தியமும், பீகிங் தலைவர்களும் பின்பற்றுகிற இராணுவ ஆக்கிரமிப்புக் கொள்கைக்கும், இராணுவ தந்திரங்களுக்கும், ஒரு வெல்ல முடியாத பெருந்தடையாக விளங்குகின்றன.

போர், சமாதானம் ஆகியவை பற்றிய பிரச்சினை இப்போது வரலாற்று வளர்ச்சியின் ஒரு முக்கியமான பிரச்சினையாகவும், உலக அரசியலில் ஒரு மையப் பிரச்சினையாகவும் விளங்குகின்றது. அது விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியுடன் மட்டும் உறுதியாகப் பிணைக்கப்பட்டிருக்கவில்லை; அது முக்கியமான சமூக பொருளாதார நிகழ்ச்சிகளுடனும், முதன் முதலாக, உலக புரட்சிகர நிகழ்ச்சிப் போக்குகளின் வளர்ச்சியுடனும் உறுதியாக இணைக்கப்பட்டுள்ளது.

போரும், சமாதானமும் ஒரு பொது மனித உள்ளடக்கமும், வர்க்க உள்ளடக்கமும், அரசியல் உள்ளடக்கமும் உடையதாக இருக்கின்றன. அது ஒரு பூதக் கண்ணாடி காட்டுவது போல உலக அரங்கில் பின்பற்றப் படுகிற மிகவும் தெளிவாக அடிப்படையிலேயே வேறுபட்ட இரண்டு கொள்கை முறைகளைக் காட்டுகிறது—சோஷலிசக் கொள்கை; முதலாளித்துவக் கொள்கை என்ற இரண்டு கொள்கை முறைகளை.

சமூக முன்னேற்றத்தை இராணுவ முறைகள் மூலம் பின்தள்ள முயற்சி செய்யும் முதலாளித்துவம், பண்பியல் அடிப்படையிலான புது வகையான ஆயுதங்களில் தன் பணத்தைப் பணயமாக வைக்கிறது—அதாவது மக்களைப் பெரும் அளவில் ஒரே நேரத்தில் கொன்று குவிக்கக்கூடிய ஆயுதங்களில். அணு ஆயுதங்கள் தோன்றியதிலிருந்து யு. எஸ். இராணுவ அரசியல் தலைமையின் பிரதிநிதிகளிற் பலர், உலக அரங்கில் ஆதிக்க நிலைகளைப் பெறப் பேரழிவை உண்டாக்கும் ஆயுதங்களை, ஆயுதக்கிடங்குகளில் குவித்து, அவர்கள் கொண்டுள்ள ஏகபோக நிலையை மிக அதிகமாகப் பயன்படுத்துவதற்குச் சாதகமாகவும், சோவியத் ஒன்றியத்தின் மீதும், புரட்சி சக்திகள் அனைத்தின் மீதும் நிர்ப்பந்தத்தை உண்டாக்க வேண்டும் என்பதற்கு ஆதரவாகவும் பேசி வருகிறார்கள்.

இந்த "தொழில் நுட்ப ஊடுருவல்", ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புக் கொள்கைக்கும், அனைத்துத் துறைகளிலும் சோஷலிசத்திற்கு எதிரான வற்றைச் செய்வதற்கும், ஒரு கிரியா ஊக்கியாக விளங்குகிறது. இந்த எதிரெதிரான நிலையில் அணு ஆயுத அச்சுறுத்தலையும், பிற இராணுவ வலிமை அம்சங்களையும் வலியுறுத்தும்போது, யு. எஸ் சின் ஆட்சியாளர்களும், பிற பூர்ஷ்வா அரசினரும், ஒரு பரந்த அரசியல் எதிர்ப்பையும், சித்தாந்த எதிர்ப்பையும் தொடங்கியுள்ளனர். இம்மாதிரியான சூழ்நிலையில் சமாதான சக்திகள் பெருகி வளர்ந்திருந்த போதிலும் மற்றொரு உலகப் போர் தோன்றும் பேரபாயம் மக்களைப் பயமுறுத்தி வருகிறது.

சோஷலிசத்தின் சார்பாகத் திரண்டுவரும் சக்திகளின் அணியில் தோன்றியுள்ள வேகமான மாற்றங்கள், புதிய உலகப் போர் அபாயத்தைக் குறைப்பதற்கும், முடிவாக அந்த அபாயத்தைத் தவிர்ப்பதற்கும், ஒரு பெரும் புறவய முன் தேவையைத் தோற்றுவித்துள்ளன. பொருளாதார,

அரசியல், சித்தாந்த நலன்களையும், பிற சோஷலிசத்தின் நலன்களையும், பொருளாதார அடித்தளத்தையும், சர்வதேச நிலைகளையும் ஒன்றிணைத்து, வலுப்படுத்துவது இந்த நிகழ்ச்சிப் போக்கிற்கு இன்றியமையாததாயுள்ளது. அதே வேளையில் சோவியத் நாட்டின் பாதுகாப்புத் திறனையும், பிற சோஷலிச அரசுகளுடைய பாதுகாப்புத் திறனையும் வலிமையுறச் செய்வதன் முக்கியத்துவத்தை மிக அதிகமாகப் பெருக்கியுள்ளது.

வளர்ந்த பொருளாதார அடித்தளமும், விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் புதிய முன்னேற்றங்களும், தொழிலாளிகள், விஞ்ஞானிகள் ஆகியோருடைய தன்னலமற்ற தியாகமும்தான் சோவியத் ஒன்றியத்தை அதனுடைய அணு-ஏவுகணை ஆயுதங்களைப் படைப்பதற்கு மிகவும் உதவியுள்ளன. யு. எஸ். உடைய அணு ஆயுத ஏகபோகத்தைத் தவிர்த்ததும், அதன் சூழ்ச்சித் திறனை எளிதில் வெல்லக்கூடிய நிலையும், ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு விருப்பங்களைக் கட்டுப்படுத்த உதவும், சக்தி வாய்ந்த காரணிகளாக விளங்குவதோடு, பெருமளவுக்குப் போர் அபாயத்தைக் குறைக்கவும் செய்துள்ளன.

இதுதான் உண்மையான சோஷலிசம் மனித இனத்திற்குச் செய்துள்ள பெரும் வரலாற்றுச் சேவையாகும். முற்போக்கான சமூக அமைப்பு முறையின் நலன்களைப் பயன்படுத்திக் கொண்டு, விஞ்ஞான-தொழில் நுட்பத் துறையில் ஏகாதிபத்தியவாதிகளின் சவாலை சரி நிகராக்குவதற்கு சோவியத் ஒன்றியம் ஒரு மாபெரும் முயற்சி செய்துள்ளது. இவ்வாறாக அது உலகம் ஒரு பெரும் போரின் இருண்ட வாயிலில் நுழைந்து விடாதவாறு தடுத்துள்ளது. உலக மட்டத்தில் இராணுவ பலத்தின் சம நிலையை நிறுவியது—குறிப்பாக சோவியத் ஒன்றியம், அமெரிக்க் ஐக்கிய நாடுகள் ஆகியவற்றின் சூழ்ச்சித்திறச் சம நிலையை நிறுவியது—ஆயுதப் போட்டியைத் தவிர்ப்பதற்கும்,

பதற்றத்தணிவை நோக்கி முன்னேறுவதற்குமான அடித் தளத்தை நிறுவியுள்ளது.

சமநிலைக் கோட்பாடும், சம அளவுப் பாதுகாப்புக் கோட்பாடும், சோஷலிசத்தையும், பிற முற்போக்கு சக்தி களையும் ஒன்றிணைப்பதற்கான சூழ்நிலைகளில் ஆயுத உற்பத்தியை ஒரு வரம்பிற்குட்படுத்துவதற்கும், அதைக் குறைப்பதை ஏற்றுக் கொள்வதற்கும், ஒப்பந்தங்கள் செய்து கொள்வதற்கு உதவுகிற உண்மையான அடித்தளமாக அமைந்துள்ளன.

1970 களில் உலகில் தோன்றிய உடன்பாடான நல்ல மாற்றங்கள் சர்வ தேச விவகாரங்களில் முக்கியமான புதிய காரணிகளாக ஆகியுள்ளன. சர்வ்தேச நெருக்கடிகளைக் குறைப்பதை நோக்கிய மாற்றங்கள், ஆயுதக் குறைப்பிற்கான சிறந்த அரசியல் வாய்ப்புகளைத் தோற்று வித்துள்ளன. ஆயுதங்களைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட தொடக்க நிலை அளவான நடவடிக்கைகள் உலக அரசியல் தட்பவெப்ப நிலையைச் சீராக்கி மேம்பாடடையச் செய்வதற்குத் தேவையான மேற் கொண்ட தூண்டுதலைத் தந்துள்ளன. ஆயுதப் பெருக்கப் போட்டியின் முக்கியமான தோற்றுவாய்களில் ஒன்றான— எதிரெதிரான சமூக அமைப்பு முறையைக் கொண்ட அரசு களிடையே உறவில் நிலவிய நெருக்கடி களைந் தெறியப்பட்டது.

அதே வேளையில் ஆயுதப் பெருக்கப் போட்டியின் வேகம் குறைந்திருப்பதோடு மட்டுமல்லாமல் விரைவடையவும் செய்திருக்கிறது. மக்களைக் கொன்று குவிக்கும் ஆயுதங்கள், நவீன விஞ்ஞான-தொழில் நுட்ப சாதனைகளின் காரணமாகத் தொடர்ந்து இயல்புகளில் மேம்பாடடைந்து வருகின்றன. அணு ஆயுதக் கையிருப்புகள் வளர்ந்து பெருகி வருகின்றன. இராணுவச் செலவின் பளு அதிகரித்துக் கொண்டே வருகிறது. இந்த உற்பத்தித்

திறனற்ற இராணுவச் செலவுகள் தொடர்ந்து வளர்ந்துவரும் செல்வத்தில், மக்களுக்குச் சேர வேண்டிய குறிப்பிடத்தக்க அளவுப் பங்கை, அவர்களுக்குக் கிடைக்காமல் செய்கிறது. மேலும் அது அவசரமான உலகப் பிரச்சினைகள் தீர்க்கப் படுவதைக் காலம் தாழ்த்துகிறது. அனைத்திற்கு மேலாக, முக்கியமாக, ஆயுதப் பெருக்கப் போட்டி அணு ஆயுதப் பேரழிவுத் தீப்பற்றி எரியும் அபாயத்தை அதிகரிக்கிறது.

இராணுவ வட்டாரங்கள் ஆயுதப் பெருக்கம் கட்டுப் படுத்தப்பட முடியாது என்ற கருத்தை உடனடியாக ஆதரிக்கத் தயாராயிருக்கிறார்கள். அதை நிரூபிப்பதற்குப் பல பொய்யான கோட்பாடுகளும், விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் விதிகளும் பயன்படுத்தப்படுகின்றன.

ஆனால் உலக நிகழ்ச்சிகள் ஆயுதப் பெருக்கப் போட்டியைத் தூண்டி விடுபவர்களின் வாதங்களைப் பொய்யென நிரூபிக்கின்றன. ஆயுதங்களை உற்பத்தி செய்யும் இயந்திரங்களால் பெறப்பட்ட கிளர்ச்சியின் வலிமை வாய்ந்த சக்தி நிச்சயமாகக் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். இந்த இயந்திரத்தை உடனடியாக நிறுத்துவது இயலாது. பெரிய, நீண்ட கால நவீன ஆயுதங்களை உற்பத்தி செய்யும் திட்ட நிகழ்ச்சிகள் எளிதில் குறைக்கப்பட முடியாது— அவைகளின் பிற்கால படிநிலைகளைப் பற்றி அதிகம் கூறாமல் விட்டாலும், தொடக்க நிலைகளில் கூட அதன் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்த முடியாது. ஆயுதப் படைகளின் மரபு வழியான கட்டமைப்பில் உள்ள வேறுபாடுகள், எதிராளிகளின் புதிய ஆயுத அமைப்பு முறைகளின் ஒரே சீரான வளர்ச்சியின்மை ஆகியவை நடைமுறையில் பயன்படக் கூடிய ஆயுதப் பெருக்கக் கட்டுப் பாட்டிற்கும், ஆயுதக் குறைப்பிற்குமான ஆலோசனைகளை விரிவுபடுத்தும்போது கருத்தில் கொள்ள வேண்டும். போருக்கான தயாரிப்பு என்னும் திரிகையை நிறுத்துவதைத் தடுப்பது இந்த இடர்ப்பாடுகள் அல்ல.

இராணுவ பதற்றத்தணிவிற்கு முக்கியமான தடையாக விளங்குவது ஆயுதங்களை உற்பத்திசெய்யும் தொழில்- நுட்ப வளர்ச்சியின் விதிகள் அல்ல. ஆனால் ஆயுதப் போட்டியைத் தொடர்வதன் மீதும், அதைப் பெருக்குவதன் மீதும் நம்பிக்கை வைத்துள்ள முதலாளித்துவ நாடுகளில் உள்ள செல்வாக்குமிக்க சக்திகளால் பின்பற்றப்படுகிற அகவய நோக்கங்களும், சுயநல விருப்பங்களுமேதான். இந்தத் தடைகள் முக்கியமாக, ஆயுத உற்பத்தியின் மூலம் ஏராளமான இலாபம் பெறுகின்ற இராணுவத் தொழில் அமைப்புகளாலும், கெடுபிடிப் போர் உணர்வுடன் செயல் படுகிற மிக அதிகமான பிற்போக்கு சக்திகளாலும் தோற்றுவிக்கப்படுகின்றன. இரண்டு வேறுபட்ட உலக சமூக அமைப்புகளிடையேயான வரலாற்றுப் போட்டியில் தங்கள் பக்கம் வெற்றி பெற வேண்டுமென்பதற்காக அவர்கள் பைத்தியக்காரத்தனமான கருத்துக்களைத் தோற்றுவிக்கிறார்கள். அல்லது சோஷலிச நாடுகள் மிக முக்கியமான அவசர சமூக, பொருளாதாரத் தேவைகளை நிறைவேற்றுவதைத் தடுத்து, ஆயுதப் பெருக்கப் போட்டியில் எவ்வளவு அதிகமாக செலவு செய்ய அவர்களைத் தூண்ட முடியுமோ அவ்வளவு அதிகமாகச் செலவு செய்யத் தூண்டுவதே அவர்களது குறைந்த அளவுத் திட்டமாகும். எதிரிகளைக் காட்டிலும் சிறப்பான திறமை பெறவில்லையென்றாலும், அவர்களைக் காட்டிலும் ஒரு சிறிதாவது சிறப்புப் பெற்று விளங்கவேண்டுமென்று கூறுகிற மேல்நாட்டு யுத்த தந்திரிகளும்கூட இந்த ஆயுதப் பெருக்கப் போட்டியைத் தூண்டுவதில் பெரும் பங்கு வகிக்கிறார்கள்.

ரேடியக் கதிர்களின் சாம்பலின் மீது மனித இனத்தின் வருங்காலத்தைக் கட்டுவதனால் விளையும் நன்மைகளைப் பற்றி உயர்த்திக் கூறுகிற, மனித இனத்திற்கு விரோதமாகவுள்ள பிரச்சாரத்தை மேற்கொள்கிற, தங்களுடைய அதிகார இலட்சியத்தை அடைவதற்காக மற்றொரு உலகப் பெரும் போரைத் தூண்டி விடுவதற்குத்

தயாராக உள்ள சீனத் தலைவர்கள், ஆயுதக் குறைப்புக்கு எதிரானவர்களை ஆதரிக்கிறார்கள். சீனாவின் பல்வேறு வகையான "நவீன மயமாக்குதல்" திட்ட நிகழ்ச்சிகளில் சீன மக்களின் நலன்களுக்குப் பாதகம் ஏற்படுமாறு, இராணுவ செயல்திறம் வளர்ச்சியடைவதை விரைவுபடுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இதனால்தான் சீனா, ஏகாதிபத்திய அரசுகளிடமிருந்து விஞ்ஞான-தொழில் நுட்ப உதவிகளைப் பெறவிரும்புகிறது. பீகிங்கில் உள்ள போர்ப் பிரச்சாரகர்கள் கையில் நவீன ஆயுதங்கள் பொதுப் பாதுகாப்பிற்குப் பேராபத்தை விளைவிப்பதாக இருக்கும்.

இராணுவ வட்டாரத்தினர், நிலவுகிற இன்றைய சக்திச் சமநிலையைத் தங்கள் சார்பாக மாற்றச் செய்யும் முயற்சி பதற்றத் தணிவிற்கு மிகவும் தீங்கு விளைவிப்பதாகவுள்ளது. இன்றைய விஞ்ஞான - தொழில் நுணுக்க வாய்ப்புகளின் அடிப்படையில் இம்மாதிரியான முயற்சிகள் இராணுவ உயர்வைப் பெற்றுத்தர இயலாது. ஏனெனில் பெரும் செலவில் சமநிலை பழைய நிலைக்குக் கொண்டுவரப்படும். அது பரஸ்பரப் பாதுகாப்பிற்குப் பெரும் அபாயத்தை விளைவிக்கும்.

அதே வேளையில், ஏதாவது ஒரு பக்கத்தில் இராணுவ தொழில் நுட்பத்தில் "தடைகள் தகர்க்கப்பட்டு வழி உண்டாக்கப்பட்டால்," அது ஆயுதங்கள் கட்டுப்படுத்தப் படுவது தொடர்பாக, பரஸ்பரம் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வுஒன்றைத் தேடுவதில் மேற்கொண்ட இடர்ப்பாடுகளைத் தோற்றுவிக்கிறது. இரண்டு கட்சிகளின் பாதுகாப்பிற்குக் கேடு விளைவிப்பதைக் காட்டிலும், வலுப்படுத்துகிற இராணுவ எதிர்ப்பைப் படிப்படியாகக் குறைப்பது, பங்கு கொள்பவர்களிடையே நிலவுகிற நலன்களின் சமநிலையில் உள்ள வேறுபாடுகள் முழுவதுமாக மதிப்பீடு செய்யப் படுவதை அவசியமாக ஆக்குகிறது. இதை அடைவது மிகவும் கடினமானதுதான். ஏனெனில் ஆயுதங்களைக் கட்டுப்படுத்தவும், குறைக்கவும் வேண்டிய நடவடிக்கை

என்பது, அதாவது— நிலவும் போர்த்திறப் படைபலச் சமநிலை என்பது அப்போது கேள்விக்கிடமாகி விடுகிறது.

படைக்கலங்களைக் குறைப்பது என்பதை இரண்டு கட்சிகளும், ஒத்துக் கொள்ளுமானால் இராணுவத் தொழில் நுட்பத்தில் மிகவும் சிக்கலான நவீன கண்டுபிடிப்புகளைக் கூட கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரஇயலும் என்பது நாமறிந்து கொள்ளுமாறு நிரூபிக்கப்பட்டுள்ளது. உறுதியாகவே, இது மிகவும் எளிதானதல்ல. ஆனால் இன்று நிலவுகிற போர்ப்படைத் திறனில் நிலவுகிற சமநிலையில், — இந்தச் சமநிலையை அடிப்படையாகக் கொண்டு பொருள் சார்ந்த தன்மையில் கட்டுப்படுத்த முடியாததாகவோ, குறைக்க முடியாததாகவோ எந்த ஆயுதமும் இல்லை. இப்பொழுது நிறைவேற்றப்பட்டுள்ள உடன்பாடுகளின் அனுபவம், ஆயுதங்கள் நவீனப்படுத்தப்படுவதைக் கட்டுப் படுத்தும் நிகழ்ச்சிப் போக்கு கைகூடும் காரியமே எனத் தெளிவாகக் காட்டுகிறது. மேலும் நவீனமான சில துறை களில் அண்மைக் காலத்து விஞ்ஞான-தொழில் நுட்ப சாதனைகள் பயனுள்ள முறையில் ஆயுதக் கட்டுப்பாடுகளை மேம்பாடடையச் செய்ய உதவ முடியும்.

முடிவாக இராணுவத்துறையில் விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றம், அரசியல் முடிவுகளைச் சார்ந்ததாக உள்ளது. இயல்பாகவே இன்றைய உலக உண்மைகளைக் குறிப்பிட்ட அரசுகளின் கொள்கை வழிகள் சரியானபடி பிரதிபலிக்கிறதா என்றும் அவைகள் இராணுவப் போட்டி யிலிருந்து ஒரு திடீர் திருப்பத்திற்கான இன்றியமையாத் தேவைக்கு ஒத்திசைவானதாக உள்ளதா என்பதையும் ஆயுதப் பெருக்கப் போட்டியைக் கைவிடுவதற்கும், ஆயுதக் குறைப்பிற்கும் ஒத்திசைவானதாக உள்ளதா என்பதையும் பொருத்ததாகவுள்ளது.

ஆயுதப் போட்டியைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்ட சோவியத் ஒன்றியத்தின் கொள்கை, அதனுடைய பரந்த வீச்சுக்கும், புறவாய்மைக்கும் சிறப்பு வாய்ந்ததாக

விளங்குகிறது. இது சக்திகளின் அணிவகுப்பு, உலகத்தில் இன்றுள்ள அரசியல், போர்த்திற சூழல்கள், அவற்றின் வளர்ச்சிக்கான போக்குகள், வாய்ப்புகள், ராணுவ சாதனங்களைப் படைப்பதற்கான பொருளாயதக் காரணிகள், தொழில் நுட்பக் காரணிகள் ஆகியவை எனப்படும் எல்லாவற்றையும பற்றிய ஒரு முழுமையான பகுப்பாய்வின் விளைவாகும். பொதுவாக இது சமாதான வலிமைப்பாட்டின் தேவையை அடிப்படையாய்க் கொண்டது. ஆயுதப் பெருக்கப் போட்டியை முடிவுறச் செய்வதற்கான போராட்டத்திற்கு சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 24-வது, 25 வது காங்கிரசுகளில், வகுக்கப்பட்ட தொடர்ச்சியான, முறையான, வெளிநாட்டுக் கொள்கையை நடைமுறைப் படுத்துவதன் மூலமும், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டியின் பொதுச் செயலாளரும், சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத்தின் பிரசீடியத்தின் தலைவருமான லியோனித் பிரெஷ்னேவ் அவர்களால் சமாதானத்தையும், பதற்றத்தணிவையும் கொண்டு வருவதற்கு மேற்கொள்ளப்பட்ட அயராத உழைப்பினாலும் ஒரு பெரும் சேவை செய்யப்பட்டுள்ளது.

போர் முக்கியம் வாய்ந்த தாக்கும் ஆயுதங்களைக் கட்டுப்படுத்துவதற்கான சோவியத்- யு. எஸ். உடன்பாடு ஆயுதப்போட்டி பற்றிய பிரச்சினைக்கு சோவியத் அணுகுமுறையின் பயனுள்ள தன்மைக்கு மற்றொரு தெளிவான சான்றாகத் திகழ்கிறது. சால்ட்-2 உடன்பாடு கையெழுத்திடப்பட்டது, உலக மக்கள் அனைவராலும் மிக மகிழ்ச்சியுடன் வரவேற்கப்பட்டது. அதை நிறைவேற்றுவதும், நடைமுறைப் படுத்துவதும், மிக அதிகமான அழிவு ஆயுதங்களை வளர்ச்சியடையச் செய்து மேலும் கையிருப்பாகக் குவித்தலுக்குத் தொடர்ந்து இடையூறுகளைத் தோற்றுவிக்கும். இந்த உடன்பாடு இரண்டு கட்சிகளுக்கும் நலம் தரும். சோவியத் ஒன்றியத்தால் முன்முயற்சி செய்யப்பட்டு, தொடர்ந்து

நிகழ்ந்துவரும் ஆயுதக் கட்டுப்பாட்டு நிகழ்ச்சிப் போக்கைத் தொடரச் செய்வதையும், அதைக் குறைப்பதையும் உறுதிப் படுத்தும், உலக அரசியல் நிலையை மேம்பாடடையச் செய்யும்.

அணு ஆயுதப் போரை நிறுத்துவதற்கான வழியில் மேலும் முன்னேறுவது பலஇடையூறுகளை உள்ளடக்கியதாக வுள்ளது. ஆக்கிரமிப்பு இராணுவ வட்டாரங்களின் எதிர்ப்பைக் குறைத்து மதிப்பிடுவதற்கு எந்தவிதக் காரணமுமில்லை. இன்றைய நவீன உலகில் சர்வதேச சூழ்நிலையை மேம்பாடடையச் செய்வதற்காக உறுதியான போராட்டம் நடத்தி வருகிற வலிமை வாய்ந்த சக்திகள் உள்ளன. போருக்குரிய பொருளாயத சாதனங்களை ஒழிப்பதற்காகவும், அனைத்து விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் சாதனைகளை மனித இனத்தின் அமைதியான, படைப்பாற்றல் மிக்க நோக்கங்களுக்கும், முன்னேற்றத்திற்கும் சேவை செய்யும்படி செய்வதற்காகவும் உறுதியான போராட்டம் நடத்தும் வலிமை வாய்ந்த சக்திகள் உள்ளன.

**பேராசிரியர் ட்யூடோரெல் போஸ்டோலாசி,**

*துணைத்தலைவர், ருமேனிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டியின் ஸ்டீபன் ஜியார்ஜ்யு கலைக்கழகம், கழகத்தின் இணை உறுப்பினர்.*

## முதலாளித்துவ முறை நெருக்கடியின் இன்றைய படிநிலையும் புதிய சர்வதேச பொருளாதார ஒழுங்கமைப்பை நிறுவுவதன் பிரச்சினைகளும்

இந்த அறிவியல் மாநாட்டில் விவாதிக்கப்படுகிற விஷயங்கள் உலகில் உள்ள கட்சியினர், அரசினர், ஆராய்ச்சியாளர்கள், பொருளாதார-வியாபார வட்டாரத்தினர் ஆகிய அனைவருடைய செயல்களுக்கும் மையமாகத் திகழ்கின்றன. இது இயற்கைதான். ஏனெனில் இன்றைய சகாப்தம், பெரும் விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியால் சிறப்படைந்துள்ள சகாப்தம். அது மேலான புரட்சிகரமான சமூக, தேசிய மாற்றங்களால் சிறந்து விளங்குகிறது.

விஞ்ஞான சோஷலிசத்தின் கோட்பாடுகளைச் செழுமையுறச் செய்வதுடன் சர்வதேச விவகாரங்களின் இயக்க ஆற்றலுக்கு அடிப்படையாயுள்ள காரணிகளையும், விதிகளையும், சிறப்பான முறையில் அயரா உழைப்புடனும், படைப்பாற்றலுடனும் படித்தறிவது ஒவ்வொரு கட்சிக்கும் கடமையாய் இருக்கிறது. அவற்றை விளக்குவதும் கடமையாய் இருக்கிறது. இதனால் அவற்றைப் பற்றிய ஆழ்ந்த அறிவு கிடைக்கும். எங்கள் கட்சி அதன்

செயலாளரான நிக்கோலாய் சீசெஸ்க்யூ அவர்களுடன் இணைந்து இந்தப் பணிக்கு ஆவன அனைத்தையும் செயலூக்கத்துடன் செய்து வருகிறது. ஒரு வளர்ச்சியுற்ற சோஷலிச சமுதாயத்தை நோக்கி எங்கள் நாட்டின் பரிணாமவளர்ச்சி பற்றிய ஒரு நிலையான கருத்துருவை அது விளக்கி வந்திருக்கிறது. அதே வேளையில் உலகப் புரட்சிகர நிகழ்ச்சிப் போக்கின் சிறப்பு இயல்புகளைப்பற்றிய கருத்துருவையும் ஒரு புதிய சர்வதேசப் பொருளாதார அமைப்பை உருவாக்குவதற்கான அவசியம், அதற்கான வழிகள் ஆகியவைபற்றிய கருத்துருவையும் அது விளக்கி வந்திருக்கிறது.

நான் இரண்டு முக்கியமான பிரச்சினைகளைப் பற்றிக் கூற விருப்புகிறேன். முதலில் நம்முடைய காலத்து முதலாளித்துவ அமைப்பு முறையின் நெருக்கடி பற்றிய ஆய்வியல் ஒழுங்குமுறை பற்றிச் சில கருத்துக்களையும் இரண்டாவதாக ஒரு புதிய சர்வதேசப் பொருளாதார அமைப்பைத் தோற்றுவிப்பதற்கான தேவையையும், வழிகளையும் பற்றிக்கூற விரும்புகிறேன்.

முந்திய சமூக அமைப்பு முறைகளில் ஒன்றாக, தோன்றி வளர்ந்த காலத்தைக் கடந்து வந்துள்ள முதலாளித்துவமானது, பிறகு, அழிவுக்கும், புதிய உருவமைப்பை நோக்கிச் செல்லும் மாறுதலுக்கும் இடைப்பட்ட ஒரு கால கட்டத்திற்குள்ளே இப்போது நுழைந்து சென்று கொண்டிருக்கிறது. முதலாளித்துவ அமைப்பு முறையின் நெருக்கடி, இன்றைய சகாப்தத்தின் சிறப்பான நிகழ்ச்சிப் போக்குகளில் ஒன்றாக—அதாவது முதலாளித்துவத்தின் வரலாற்று அழிவாக—சோஷலிசத்தினால் அதன் இடம் நிரப்பப்படுவது என்ற நிகழ்ச்சிப் போக்காக விளங்குகிறது. இந்த நிகழ்ச்சிப்போக்கு ஒரு நீண்ட கால இடைவெளியை உள்ளடக்கியதாய் இருக்கிறது. தனக்கு ஒத்திருக்கிற வரலாற்று நிலைகளை அடிப்படையாகக் கொண்ட பல பகுதிகளின் வழியாகச்

செல்கிறது. இந்த நெருக்கடி மூன்று மட்டங்களில் வெளிப் படுகிறது: முதலாவதாக, முதலாளித்துவ முறையின் நெருக்கடிக்கும், வேறு சமகாலத்து நிகழ்ச்சிப் போக்கு களுக்கும் இடையில் உள்ள பொதுவான சர்வதேச விஷயங்கள். இரண்டு, முதலாளித்துவத்தின் உள்ளே இயல்பாகவே உள்ளவை. மூன்றாவது, தேசிய தொடர்பானவை, தனி முதலாளித்துவ நாடுகள் ஒவ்வொன்றிலும் நிலவுகிற சிறப்பியல்புகள்.

நிச்சயமாக முதலாளித்துவ முறை நெருக்கடியின் மொத்தத்தின் உள்ளடக்கத்திற்கு ஒரு ஒற்றுமையைத் தருகிற சில கூறுகள் உள்ளன. அவைகளைக் கருத்தில் கொள்ளும் அதே வேளையில், புதிதாகத் தோன்றி வெளிப்படுகிற வரலாற்றுச் சூழ்நிலைகள் ஒவ்வொன்றின் சிறப்புத் தன்மை களையும் முன்னர் கூறிய மூன்று மட்டங்களுடன் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

ருமேனியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திட்ட நிகழ்ச்சிகள் **முதலாளித்துவ முறையின் நெருக்கடி**-எல்லா சமூகப் பகுதி களையும், எல்லாக் கண்டங்களையும் பாதிப்பதாகச் சொல்கிறது. அது ஒரு புதிய படியின் தொடக்க நிலையை அடைந்துள்ளது எனச் சுட்டிக் காட்டுகிறது.

மேலே கூறப்பட்ட மூன்று மட்டங்களையும் மனதில் கொண்டு பார்த்தால் அந்தப் புதிய நிலைகளின் சிறப்பான **தன்மைகள் எவை?**

முதலில் சர்வதேச விவகாரங்கள் மிகுதியான சிக்கல் நிறைந்தனவாகவும், முரண்பாடுகள் நிறைந்தனவாகவும் உள்ளன. இன்றைய வளர்ச்சிகளைப் பகுத்தாராயும் போது முற்றிலும் எதிரெதிரான போக்குகளை நாம் காண முடியும்: ஒருபுறம், சுதந்திரமாக வளர்ச்சி அடைய ஆவல் கொண்டுள்ள வெவ்வேறு மக்களின் விருப்பமும், உறுதியும் பெருகி வருவது, அவர்களுடைய தலைவிதிக்கும், அவர் களுடைய தேசிய செல்வங்களுக்கும் தாங்களே

தலைவர்களாக இருப்பது, அவர்கள் எந்த வழி சிறந்ததெனக் கருதுகிறார்களோ அந்த வழியில், வெளியார் தலையீடின்றி, அவர்களது வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்வது; சமாதானமும், பாதுகாப்பும் நிறைந்த சூழ்நிலையில் பிறமக்களுடன் சமத்துவ அடிப்படையில் ஒத்துழைப்பது ஆகியவை மறுபுறம், எதேச்சாதிகாரத்தையும், செல்வாக்கு வட்டங்களையும் மீண்டும் உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட ஏகாதிபத்திய காலனி ஆட்சியின் வலிமைக் கொள்கையும், பல்வேறு மக்களின் சுதந்திரத்திற்கும், விடுதலைக்கும், பதற்றத்தணிவிற்கும், சமாதானத்திற்கும், சர்வதேசப் பாதுகாப்பிற்கும் மிக அதிகமான பயமுறுத்தலாக ஆகிக் கொண்டு வருகிறது.

புரட்சிகரமான சர்வதேச போர்க்குணம் கொண்ட சக்திகளின் அணியைப்பற்றிய ஒரு விஞ்ஞான மதிப்பீடும், இன்றைய உலகில் நிகழ்ந்துவரும் பெரும்மாற்றங்களும் ஏகாதிபத்தியவாதிகளின் ஆதிக்கம், எதேச்சாதிகாரம், செல்வாக்கு வட்டத்தை மறுசீரமைப்பது ஆகியவை இருந்த போதிலும், தவிர்க்க முடியாத ஒரு இராணுவ மோதலை நோக்கியோ அல்லது ஒரு உலகப் பெரும்போரை நோக்கியோ, உலக நிலைமை முதிர்ந்து விடவில்லை என்று நிரூபிக்கின்றன. ஆனால் நடைபெற்று வரும் ஆழ்ந்த புரட்சிகரமான, சமூக, தேசிய மாற்றங்கள், ஒரு ஐக்கிய முன்னணி அடிப்படையில் செயலாற்றுவதன் மூலம், சோஷலிசமும், முன்னேற்றத்திற்கான சக்திகளும், உலகத்திலுள்ள மக்கள் அனைவரும், ஒரு புதிய போரைத் தடுத்து நிறுத்தி, நிரந்தர சமாதானம் பெறமுடியும் என்று நிரூபிக்கின்றன.

இரண்டாவது முதலாளித்துவ நாடுகளிலேயே மிகவும் முக்கியமான மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. அரசுகள் அவைகளுடைய பொருளாதார நலன்களுக்கும், அரசியல் நலன்களுக்கும் ஏற்ப மறுபடி சீரமைக்கப்படுகின்றன. அதே வேளையில் அவைகளிற் சில தேசியமட்டத்திலும், சர்வ

தேசிய மட்டத்திலும் சுதந்திரமான கொள்கைகளைப் பின்பற்ற விரும்புகின்றன. ஏகாதிபத்தியத்தின் புதிய பொருளாதார மையங்கள் தோன்றி, சர்வதேச விவகாரங்களில் அவைகள் மிகுந்த செல்வாக்கைச் செலுத்துகின்றன. நான் குறிப்பிடுவது என்னவென்றால் பொதுச்சந்தையையும், அதன் கட்டமைப்புக்குள் மேற்கு ஜெர்மனி, ஜப்பான் ஆகிய நாடுகளின் வளர்ந்துவரும் செல்வாக்கையும்தான். இவைகளின் செல்வாக்கு யு. எஸ்.சுக்கும் ஐரோப்பியப் பொருளாதாரப் பொதுச்சந்தை நாடுகளுக்கும் பலத்த போட்டியாக வளர்ந்து கொண்டு வருகிறது. வளர்ந்த முதலாளித்துவ நாடுகளின்—அரசு மட்டத்திலும், வியாபார மட்டத்திலும், அவைகளுடைய கொள்கைகளை இணைக்கவும், அவைகளை மிகுதியான அளவு பிரிக்கும் வேறுபாடுகளைச் சீராக்கவும், பல்வேறு முயற்சிகள் அடிக்கடி செய்யப்பட்ட போதிலும், இவையனைத்தும் முதலாளித்துவ முறையினுள் உள்ள அரசியல் முரண்பாடுகளையும், பொருளாதார முரண்பாடுகளையும் தீவிரப்படுத்துகின்றன.

மூன்றாவது. **முதலாளித்துவ நாடுகள் அனைத்திலும்,** பூர்ஷ்வா சமுதாயத்தின் நெருக்கடி தேசிய நெருக்கடி என்ற வடிவத்தைப் பெறுகிறது. அது சர்வதேச நிலைமையோடு நெருக்கமான தொடர்புள்ளதாக இருப்பினும் அதற்கு எனத் தனிச்சிறப்பான பிரச்சினைகளையும், சமூக அரசியல் சக்திகளையும் உடையதாயிருக்கிறது.

எனவே வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளில் உள்ள கம்யூனிஸ்டுகள் படைப்பாற்றல் மிக்க அணுகுமுறை தேவைப்படுகிற, பல கோட்பாட்டடிப்படையிலான பிரச்சினைகளையும், நடைமுறைப் பிரச்சினைகளையும் எதிர்நோக்குகிறார்கள் என்பது புரிந்து கொள்ளக் கூடியதே.

புறவய விதிகள், சமூக இயக்கவியலின் தேவைகள், சமூக முன்னேற்றங்களின் தேவைகள் ஆகியவை, தங்களைக் கட்டுப்படுத்துகின்ற விலங்குகளை உடைத்தெறிவதை

இன்றியமையாததாக்குகின்றன. மனித இனம் இவ்வுலகில் நிலவுவதையே பயமுறுத்திக்கொண்டிருக்கும் அனைத்தையும் அழித்தொழிப்பதைக் கட்டாயமாக்குகின்றன. ஒவ்வோர் அரசின் கட்டமைப்புக்குள்ளும், உலக மட்டத்திலும், உலக சமுதாய, தேசிய நீதியை நிறுவுவதை அவைகள் இன்றியமையாக் கடமையாக்குகின்றன. இது உற்பத்தி சக்திகளிலும், விஞ்ஞானத்திலும், கலாச்சாரத்திலும், பொது முன்னேற்றத்திலும், புதிய ஒரு பெரும் மாற்றமிகு எழுச்சியைத் தோற்றுவிக்கும்.

ஃ ஃ ஃ

முதலாளித்துவ முறையின் நெருக்கடியின் இன்றைய படிநிலை **பொருளாதாரத் துறையில்** புதிய பல நிகழ்ச்சிப் போக்குகளால் சிறப்புற்று விளங்குகின்றது. அவைகளில் முக்கியமானது—குறிப்பிட்ட பொருளாதார நெருக்கடிகளே—அவற்றின் தனித்தன்மை, **சுழல் தன்மை நிறைந்த** அல்லது சுழல் தன்மையில்லாத விஷயங்களில்—குறிப்பாக பணவீக்கத்தில் வேரூன்றியுள்ளது. பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்துவதான அரசு ஏகபோக இயந்திரத்திலும் ஒரு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சிப் போக்குகள் அனைத்தும் தொடர்ந்து நிலவிவரும் உலக நெருக்கடிகளின் மீதங்களினால் தீவிரப்படுத்தப்படுகின்றன.

1974-1975 ஆண்டுகளில் ஏற்பட்ட நெருக்கடி முதலாளித்துவ உற்பத்தி வளர்ச்சியில் உள்ள சுழல் தன்மையின் மிகைப்படுத்தப்பட்ட வெளிப்பாட்டின் மூலம் தனிச்சிறப்புடையதாய் விளங்குகிறது. இதைப் பொருத்தவரை, 16 முதலாளித்துவ நாடுகளில் யு. எஸ். பிரிட்டன், ஜெர்மன் கூட்டுக் குடியரசு, இரண்டாவது உலகப் பெரும் போருக்கு முந்திய ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி, பெல்ஜியம், சுவிட்சர்லாந்து, டென்மார்க், ஆஸ்திரியா, நார்வே, பின்லாந்து, சுவீடன், ஹாலந்து, ஆஸ்திரேலியா, கனடா ஆகியவை) மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஆண்டு சராசரி வளர்ச்சி விகிதத்தினால் உறுதிப்படுத்தப்

பட்டபொதுவான போக்கிற்கு இன்றைய நிலை இசைவாக உள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1871—1895 | — | 2.4 | சதவிகிதம் |
| 1895—1913 | — | 3.0 | ,, |
| 1913—1950 | — | 1.9 | ,, |
| 1950—1970 | — | 4.9 | ,, |
| 1970—1976 | — | 3.0 | ,, |

நடப்பில் உள்ள பத்தாண்டுகளில் தொடங்கிய அரசு ஏகபோக முதலாளித்துவ நெருக்கடியின் புதிய பகுதி "பத்தாண்டுச் சுழலை" உயிர்ப்பிக்கும் இயக்கத்தினாலும், அதன் இறங்கும்படிகளின் விகிதாச்சார வளர்ச்சியினாலும் குறிப்பிடக் கூடியதாய் இருந்தது. 1973 லிருந்து 1978 வரையில் வளர்ந்த முதலாளித்துவ நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஆண்டு வளர்ச்சி விகிதம் 3.1 ஆக இருந்தது. ஆனால் அது 1962 லிருந்து 1972 வரை 4.7 சதவிகிதமாகி விட்டது.

1974-1975 சுழல் நெருக்கடியின் மற்றொரு இயல்பு சென்ற நாற்பதாண்டுகளுக்கும் மேலான காலத்தில் முதன் முறையாக வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகள் அனைத்திலும் அது பரவி இருந்தது ஆகும். இந்த நிகழ்ச்சிப் போக்கு பண்பியல் அடிப்படையில் ஒரு புதிய நிகழ்ச்சியை உள்ளடக்கியதாகும். போருக்குப் பின்னால் உள்ள காலம் முழுதும், உலகச் சுழல் தன்மையான நிலைகளின் காலநிலை முரண்பாட்டினால் சிறப்பிக்கப்பட்டதாய் இருந்தது. முதலாளித்துவ மறு உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கின் முக்கியமான இயல்பாக அது மாறிவிட்டிருந்தது. அதே வேளையில் முதலாளித்துவ உலகத்தின் முக்கிய மண்டலங்களில் நெருக்கடிகளின் ஒரே சமய விளைவாகவே உலக நெருக்கடி அமைய முடியும். 1974 — 1975 நெருக்கடி உலக முதலாளித்துவச் சுழலை மறுபடியும் ஒரே கால நிகழ்ச்சிகளாக்கும் போக்கைத் தோற்று வித்தது. உலக நெருக்கடி

என்ற நிகழ்ச்சி, தேசிய நெருக்கடிகளின் மொத்தம் மட்டுமல்ல. அது முதலாளித்துவ பொருளாதாரத்தின் மிகவும் மோசமான சீர்குலைவும் ஆகும்.

முதலாளித்துவப் பொருளாதாரச் சுழலை ஒரே கால நிகழ்ச்சியாக்குவது என்ற நிகழ்ச்சி மிகவும் அதிகமான அளவு தீவிரமாகச் செயல்படக் கூடிய எதிரான ஒரு தொகுதிக் காரணிகளால் எதிர்க்கப்படுகிறது. ஆகவே "நீண்டகாலச் சுழலின்" இறங்கும் காலத்தில், சுழல்களின் ஒரே கால நிகழ்ச்சிகளின் கூறுகளும், ஒரே கால நிகழ்ச்சி களாக இல்லாத கூறுகளும், ஒரு குறிப்பிட்ட அளவு ஒன்றுடன் ஒன்று பின்னியிருப்பதை எதிர்பார்க்கலாம். **சுழல்தன்மை யுள்ள நிகழ்ச்சிப் போக்குகள்** அபூர்வமான சிக்கல்களை யுடைய பல **சுழல் தன்மையில்லாத நெருக்கடிகளுடன் பின்னப் பட்டிருக்கின்றன.** உதாரணமாக, அதனுடைய புதிய அளவு இயல் மற்றும் பண்பியல் அடிப்படையிலான இயல்புகளுடன் கூடிய **பணவீக்கம்** என்பதைக் குறிப்பிடலாம். சூழ்நிலைப் பாதுகாப்புத்துறை, ஆற்றல், மூலப்பொருட்கள் முதலிய துறைகளில் **உலக** நெருக்கடிகள் வளர்ச்சியுற்றுள்ளன. முன்னர் கூட பொருளாதார நெருக்கடிகள் உலகளாவியதாக ஆகியிருந்தன. ஆனால், முதலில் அவைகள் காலனி சாம்ராஜ்யங்கள் நிலவியதால் மறைக்கப்பட்டிருந்தன. இரண்டாவதாக, நாடுகளின் குறைந்த இடைச்சார்பு நிலையின் காரணமாக மறைக்கப்பட்டிருந்தன. புதிய சூழ்நிலைகளின் கீழ் பொருளாதார ஒரு சீரற்ற தன்மை அல்லது நெருக்கடி நிகழ்ச்சி போன்றவை இந்த நாட்டிலோ அல்லது வேறு ஒரு நாட்டிலோ அவைகள் வளர்ச்சி யுற்றாலும் கூட, அவை எல்லா நாடுகளையும் சிறிது காலத்துக்குப் பின்னர் பாதிக்கின்றன.

பொருளாதார அடிப்படையில், முதலாளித்துவத்தின் மிகக் குறைந்த வரம்புகளையும், வாய்ப்புகளையும் வரம்பற்ற தாக்கும் போக்கு பொருளாதார நெருக்கடிகளின் காலத்தில்

வளர்ந்துவரும் மார்க்சீய சிந்தனையில் வெளிப்படையாக ஆகியிருக்கிறது. ஆகவே இந்தப் படிநிலையில் வளர்ந்த முதலாளித்துவ நாடுகள் இனி எப்போதும் பொருளாதார வளர்ச்சியடைய முடியாது என உறுதியாகக் கூறுவது பெரும் தவறாகும். இம்மாதிரியான தோற்றத்தில் தீவிரமான கண்ணோட்டம் விஞ்ஞான சோஷலிசத்தின் அடிப்படையான கோட்பாடுகளைக் கவனியாமல் விட்டு விடுகிறது. அதாவது நிலையானதாக இல்லாத, தொடர்ந்து வளர்ச்சியடைந்து சமுதாயமயமாக்கப்படுகின்ற உற்பத்தி சக்திகளுக்கும், முதலாளித்துவ உற்பத்தி உறவுகளின் குறுகிய எல்லைக்கும் இடையில் எழும் போராட்டத்தின் விளைவால் முதலாளித்துவ சமுதாயத்தின் முரண்பாடுகள் தீவிர மடைகின்றன என்பதைப் போன்ற கோட்பாடுகள், வருகிற ஆண்டுகளில் எதிர்கால நிகழ்ச்சிகளைப் புரிந்து கொள்வதற்கு முக்கியமான அடிப்படையானப் பிரமாணம் இதுவேயாகும். உலக அளவில் வெளிப்படுகிற விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியினால் தோற்றுவிக்கப்படுகிற புதிய உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியின் பின்னணியில் நெருக்கடிகள் தோன்றும். முதலாளித்துவ நாடுகள் சந்தித்த இன்னல்களும், இப்பொழுது சந்தித்துவரும் இன்னல்களும் மிகுந்ததாயிருந்த போதிலும், அவைகள் இன்னும் வலிமை வாய்ந்தனவாகவே உள்ளன. அவைகள் உலகப் பொருளாதாரத்தில் ஒரு முக்கியமான பங்கைத் தொடர்ந்து வகித்துவரும் என்பது இதிலிருந்து நாம் நன்றாக அறிந்து கொள்ள முடிகிறது. வேறு, வேறு சமுதாய அமைப்புகளை யுடைய நாடுகள், நீண்ட காலம்வரை, சகவாழ்வு வாழ வேண்டியிருப்பதால், சர்வதேசப் பிணக்குகளை அமைதியாகத் தீர்த்துக் கொள்வதற்குச் செயல்திறனுடன் ஒத்துழைக்க வேண்டியதிருப்பதால், எல்லா அரசுகளிடையே யுள்ள பொருளாதார உறவுகள் விரிவாக்கம் செய்யப்படுவது இன்றியமையாததாகவுள்ளது. ஒன்றுக்கொன்று வெகுதூரம் விலகி இருக்கிற, சுதந்திரமாக வளர்ச்சியடைகிற ஏகாதிபத்தியத்தால் தொடங்கப்பட்ட பொருளாதார

முற்றுகைக் கொள்கையின் விளைவாகத் தோன்றியதாகக் கருதப்படும். ஒரே நேரத்தில் சிறப்புற்று விளங்குகிற இரண்டு உலக சந்தைகள் பற்றிய கோட்பாடு தானாகவே தன்னை அழித்துக் கொண்டு விட்டது. வேறுபட்ட சமூக அமைப்புகளிடையே வர்த்தகம், உலக வாணிபத்தில் அதன் பங்கு மிகப் பெரியதாக இல்லாதிருந்தாலும் உலக சந்தையில் மிகுந்த செயலூக்கம் நிறைந்ததாக விளங்குகிறது. பொருளாதார நெருக்கடிகளிலும் அவ்விதமாகவே விளங்குகிறது. அதற்கு மாறாக முதலாளித்துவ நாடுகளின் பொருளாதாரத் தடுமாற்றங்கள் அவற்றின் எல்லைக்குள் மட்டும் நின்று விடுவதில்லை என நிகழ்ச்சிகள் நிரூபித்துள்ளன: சோஷலிச அமைப்பு முறையும், உலக வேலைப்பகுப்பில் உள்ளடங்கியிருக்கிறது. விஞ்ஞான தொழில் நுட்பச் செல்வாக்கின் விளைவாக தேசியப் பொருளாதாரங்கள் ஒன்றை ஒன்று சார்ந்திருப்பது மேலும் அதிகரிக்கும்போது முதலாளித்துவ உலகில் வளரும் நெருக்கடி நிகழ்ச்சிப் போக்கு அனைத்து நாடுகளிலும் ஒரு உருவத்திலோ அல்லது பிறிதொரு உருவத்திலோ பிரதிபலிக்காமலிருக்க முடியாது. சோஷலிசத்தின் சிறப்பு, அதனுடைய பொருளாதார, சமூக, அரசியல் கட்டமைப்புகள் இந்த நிகழ்ச்சிகளின் எதிர்மறையான தாக்கத்தைத் தவிர்க்கவோ, அல்லது குறைக்கவோ திறனுடையதாக இருப்பதில்தான் உள்ளது. முடிவாகப் பன்னாட்டு வாணிபத்தில் தங்களுடைய பங்கு அதிகரிக்கும் போது சோஷலிச நாடுகள் தங்களின் முறையில் உலகச் சந்தையில் தங்களுடைய பெருகிவரும் செல்வாக்கைப் பயன் படுத்தும் என்பதை நாம் கூறத்தான் வேண்டும். இது பொருளாதாரப் பரிமாற்றத்தையும், கூட்டுறவையும் நிலைப் படுத்துகிற விளைவை உண்டாக்கும்.

மேலே கூறப்பட்ட முதலாளித்துவ நாடுகளின் நெருக்கடிகள் அனைத்தும் 1970 களின் மையபாகத்தில் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் பொதுவான

கட்டமைப்பு நெருக்கடியாக இணைந்தன. இது முதலாளித்துவத்தின் சென்ற ஒரு நூற்றாண்டுக் கால வரலாற்றில் மூன்றாவது பெரும் நெருக்கடியாகும். (முதலாவது 19 வது நூற்றாண்டின் இறுதியிலும், இரண்டாவது இரண்டு உலகப் போர்களுக்கு இடையிலும் நிகழ்ந்தன) ஏகாதிபத்தியம் இந்த நெருக்கடியை எதிர்த்துப் போராடுவதற்குப் பழைய அதே தந்திரங்களையே பயன் படுத்த முயல்கிறது. எனினும் நிலைமை பெரும் அளவு மாறியுள்ளது. முதலாளித்துவத்தின் முக்கியமான மையங்களால் அதன் பரந்த "கரையோர" மண்டலங்களின் மீது திணிக்கப்பட்ட அடிமைத்தனம், அடிப்படையிலேயே அநியாயமான சர்வதேசப் பொருளாதாரப் பரிவர்த்தனை, மலிவான ஆற்றல், மூலப்பொருட்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட வளர்ச்சி, குவியல் ஆகியவற்றின் மாதிரியான நெருக்கடியொன்றை நாம் எதிர்நோக்கு கிறோம். வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் உள்ளாக நிகழ்கின்ற சமூக-அரசியல் சக்திகளின் இன்றைய அணி சேர்தலின் விளைவாக நெருக்கடியின் பெரும் சுமையை உழைக்கும் மக்களின் தோள்மீது சுமத்தும் அனைத்து முயற்சிகளும் உறுதியான எதிர்ப்பைச் சந்திக்கின்றன.

இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு வழிகாண்பது மேலும், மேலும் அவசியமாகிறது. மக்கள் தொகையைச் சுரண்டுவதை அதிகப்படுத்துவதனாலும், வேறு மக்களை அடிமைப்படுத்துவதனாலும் அதிலிருந்து மீள்வது இயலாது. ஆனால் பகுத்தறிவுக்குகந்த பொருளாதாரக் கொள்கையைக் கையாள்வதாலும், ஏகபோகங்களின் இலாபங்களைக் குறைப்பதனாலும்தான் அது கைகூடும். இது சமத்துவமான பரஸ்பர நலன்களின் அடிப்படையில், சர்வதேச வாணிபத்தின் வளர்ச்சியை மேம்பாடடையச் செய்யும். மேலும் இது உலகத்தைச் செல்வாக்கு வட்டங்களாகவோ, ஆதிக்க மண்டலங்களாகவோ மறுபிரிவு செய்வதற்கான

போராட்டத்திற்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்கும். இப்பொழுது தேசியப் பொருளாதாரங்களிடையேயுள்ள உட்தொடர்பு மிகுதியாக வளர்ந்துள்ளதனால், இன்றைய பெரும் பிரச்சினைகள் சர்வதேச சமுதாயத்தின் முழுமுயற்சியினால்தான் தீர்க்கப்பட முடியுமேயொழிய, ஒரு சில நாடுகளால் மட்டும் தீர்க்கப்பட முடியாது.

"சமூக பொருளாதார விவகாரங்கள் அனைத்தையும் உள்ளடக்கியதாய் இருக்கும் இன்றைய உலக நெருக்கடியானது முதலாளித்துவ முறையால், நிறுவப்பட்ட நாடுகளின் இடையிலான உறவுகளும், சர்வதேச உறவுகளும் இன்றைய உற்பத்தி சக்திகளுக்கும், விஞ்ஞான — தொழில் நுட்பப் புரட்சியின் வேகமான வளர்ச்சிக்கும் பொருந்துவதாக இல்லை; இந்த உறவுகள் பரந்த மக்கள் தொகையின் நலன்களை நிறைவு செய்வதற்கோ, முன்னேற்றத்துக்கோ, இன்றைய உலகை எதிர்நோக்கும் பல சிக்கலான பிரச்சினைகளுக்கோ, தீர்வைக் கொடுத்துதவ முடியாது என்பதையே காட்டுகிறது. முதலாளித்துவ முறையாலும், ஏகாதிபத்தியம், காலனி ஆட்சி முறைக் கொள்கை, புதிய காலனி ஆட்சிமுறைக் கொள்கை ஆகியவற்றினாலும் தோற்றுவிக்கப்பட்டுள்ள முரண்பாடுகளை மேலும், மேலும் சமாளிக்க வேண்டியதிருக்கிறது. இந்த முரண்பாடுகள், வளர்ந்த நாடுகளுக்கும், வளரும் நாடுகளுக்குமிடையே வளர்ந்துவரும் ஒரு சீரற்ற தன்மையாலும், அநியாயமான காலனி ஆட்சிமுறை புதிய காலனி ஆட்சிமுறையின் அடக்குமுறை ஆகியவற்றினால் உலகம் பணக்கார நாடுகள், ஏழை நாடுகள் என்று பிரிக்கப்படுவதனாலும் தீவிரமடைகின்றன,"[1] என நிக்கோலாய் சீசெஸ்க்யூ அவர்கள் கூறினார்கள்.

முதலாளித்துவ உலகில் காணப்படுகிற நெருக்கடி தீவிரமடைவதற்குப் பின்னால் உள்ள முக்கியமான காரணம் துல்லியமாக, வளர்ந்த முதலாளித்துவ நாடுகளுக்கும்,

வளரும் நாடுகளுக்குமிடையில் உள்ள ஏற்றத்தாழ்வு அண்மையாண்டுகளில் அதிகரித்து வருகிறது என்பதுதான்.

முதலாளித்துவ அமைப்பு முறை உலகில் உள்ள பெரும்பாலான நாடுகளில் பொருளாதாரப் பிற்பட்ட தன்மையைத் தோற்றுவித்திருக்கிறது. பொருளாதார பிற்பட்ட தன்மையை வெல்வதற்குத் தேவையான வளர்ச்சிப் படிநிலைகளைக் குறைப்பதற்கு இன்றியமையாத வழியாக சேவை செய்யக் கூடிய தன்மையையே தன்னுடைய அடிப்படையாய்க் கொண்ட விஞ்ஞான—தொழில் நுட்பப் புரட்சியை அது வளர்ந்த நாடுகளுக்கும், வளரும் நாடுகளுக்கு மிடையில் நிலவுகிற, ஆழ்ந்துவரும் தொழில் நுட்பப் பொருளாதார இடைவெளியைப் பாதுகாப்பதற்கான ஒரு கருவியாக மாற்றியுள்ளது. கீழே கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் உலகப் பொருளாதாரத்தில் வளர்ந்துவரும் நாடுகளின் பங்கைக் காட்டுகிறது. (சதவிகிதத்தில்)

| | |
|---|---|
| மக்கள் தொகை | 73 |
| பொத்த தேசிய உற்பத்தி | 17.9 |
| * தொழில் உற்பத்தி | 10.5 |
| * விவசாயப் பொருளுற்பத்தி | 35 6 |
| **உலக ஏற்றுமதிகள் | 12.1 |
| உலக இறக்குமதிகள் | 14.0 |
| **சர்வதேசக் கொடுப்பல் கையிருப்பு | 16 8 |
| சிறப்பு எடுப்பு உரிமை | 12.4 |
| தங்கம் | 5.3 |
| வெளிநாட்டுச் செலாவணி | 20.4 |

*உலகத் தொழில் உற்பத்தியிலும், விவசாயப் பொருளுற்பத்தியிலும் வளரும் சோஷலிசம் அல்லாத நாடுகளின் பங்கு.

**எண்ணெய் ஏற்றுமதி செய்யாத வளரும் நாடுகள் பற்றிய புள்ளி விவரம்.

இந்தப் புள்ளி விவரங்கள், சென்ற கால் நூற்றாண்டில், வளர்ந்துள்ள முதலாளித்துவ நாடுகளுக்கும், வளரும் நாடுகளுக்குமிடையிலான தேசிய தலா வருமானத்தில் ஏற்றத் தாழ்வு அதிகரித்துள்ளதைக் காட்டுகிறது. (அட்டவணை—1 பார்க்கவும்,

விஞ்ஞானமும்-தொழில் நுட்பமும் தான் வளர்ந்த நாடுகளுக்கும், வளரும் நாடுகளுக்குமிடையில் உள்ள இடைவெளி மிகவும் ஆழமாக இருக்கும் பகுதியாகும். விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் பயனை, தொழில் வளம் மிகுந்த நாடுகளே ஏறத்தாழத் தனிச் சிறப்பாக அனுபவித்து வருகின்றன என்ற உண்மையால் இது நிருபிக்கப் பட்டுள்ளது.

மனித இனத்தின் விஞ்ஞான தொழில் நுட்ப விசைத் திறன் பெருமளவு ஆயுதப் பெருக்கப் போட்டிக்குப் பயன் படுகிறது என்பதுதான் இன்று நிலவுகிற சர்வதேசப் பொருளாதார ஒழுங்கின் மிகமோசமான தீயொழுக்கமாகும். இன்று விஞ்ஞானத் தொழிலாளர்கள், பொறியியலாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், வளர்ச்சி தொடர்பான தொழில் நுட்பப் பணியாட்கள் ஆகியோரில் 25 சதவிகிதத்தினர் இராணுவத் தொடர்புடைய தொழில்களில் பணியாற்று கின்றனர். மேலும் விஞ்ஞான-தொழில் நுட்பப்புரட்சி நடை பெற்றுக் கொண்டிருப்பதால் போர் பிற்காலம் முழுமையிலும் தொழில் நுட்ப முன்னேற்றத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியில் 40 சதவிகிதம் ஆயுதப் பெருக்கப் போட்டியினால் விழுங்கப்பட்டுவிட்டது. இது இப்பொழுது முழுவதுமாக இழந்து விடப்பட்ட பொருளாதார சமூக முன்னேற்றத்தை விரைவுபடுத்துவதற்கான பெரும் வாய்ப்பு களைப் பற்றிய சில அடையாளங்கள்[2] ஆகும்.

## அட்டவணை-1

| ஒப்பீட்டில் வருமான இடைவெளிகள் : வளரும் நாடுகளின் தலாவருமானம், வளர்ந்த நாடுகளின் வருமானத்தின் சதவிகிதமாக | 1950 | 1960 | 1975 |
|---|---|---|---|
| வளரும் நாடுகள் அனைத்தும் | 11.9 | 9.7 | 9.2 |
| மிக ஏழ்மையான நாடுகள் | 6.1 | 4.0 | 2.6 |
| மத்தியவருமானம்கொண்ட நாடுகள் | 20.8 | 18.3 | 17.0 |
| எண்ணெய் ஏற்றுமதி செய்கிற நாடுகள் | — | 16.1 | 22.6 |

பல்வேறு நாடுகளிடையேயுள்ள தொழில் நுட்பத் தகவல் பரிமாற்றம் பல்வேறு நாடுகள் ஒன்றை ஒன்று மேலும் அதிகமாக சார்ந்திருக்குமாறு செய்துள்ளது, விஞ்ஞான—தொழில் நுட்பப் புரட்சியின் மிகவும் சிறப்பான வெளிப்பாடாகும். வளரும் நாடுகளில் தொழில் நுட்பத்திற்கான தேவை, சர்வதேச தொழில் நுட்பச் சந்தையின் வளர்ச்சியை மேம்பாடடையச் செய்வதற்கான முக்கியமான காரணியாகிக்கொண்டு வருகிறது. முதலாளித்துவ ஏகபோகங்கள் தங்களின் இலாபத்தைப் பெருக்குவதற்கும், ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தின் அமெரிக்கா ஆகியவற்றில் தங்களின் ஆதிக்கத்தை நிலை நிறுத்துவதற்கும் உதவுகிற சாதனமாகவும், மேலே கூறப்பட்ட ஏற்றத்தாழ்வை மிகவும் அதிகமாகப் பயன்படுத்துகின்றன: இதை அடைவதற்கு வளரும் நாடுகளின் பலமில்லா நிலைகளை அடிப்படையாகக் கொண்டு, பேச்சுவார்த்தைகளின்போது ஊகவாணிகம் செய்யப்படுகிறது. இந்தப் பலம் குறைந்த நிலைமை வளரும் நாடுகளின் தகவல் குறைவுகளாலும், அவற்றின் முடிவுகள்

செய்யும் முறைகளில் உள்ள குறைகளாலும்தான் தோன்று கிறது. ஏகபோகங்கள் முறையாக ஐ. நா. சபையில் கட்டுப் பாடுகள் நிறைந்த வியாபார நடை-முறை என்று அழைக்கப் படுகிற முறையைப் பின்பற்றுகின்றன.

மறுபக்கம் திறமைகளை வற்றடிப்பது என அழைக்கப் படுகிற தொழில் நுட்பத்தின் தலைகீழான மாற்றம் அதிகரித்துள்ளது. ஆட்கள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு எவ்விதக் கட்டுப்பாடுமின்றிச் செல்லுதல், தொழில் நுட்பச் செயல்திறனின் முக்கியக்கூறு வளரும் நாடுகளிலிருந்து வளர்ந்த நாடுகளுக்குச் செல்லுதல்.

"1961—1972 ஆண்டுகளுக்குள், வளரும் நாடுகள் 3 வளர்ந்த நாடுகளுக்கு ஏறத்தாழ 230,000 கைதேர்ந்த தொழில் நிபுணர்களைக் கொடுத்துதவியிருக்கின்றன. அமெரிக்க ஐக்கிய நாடுகள், கனடா, பிரிட்டன்........வளர்ந்த நாடுகளுக்குச் சென்ற விற்பன்னர்களில் 25 சதவிகிதத்தினர் பொறியியலாளர்கள், 20 சதவிகிதத்தினர் மருத்துவர்கள், 10 சதவிகிதத்தினர் இயற்கை விஞ்ஞானிகள், ........வளரும் நாடுகளிலிருந்து இந்த மூன்று நாடுகளுக்கும் செல்லும் திறமையின் மூலதன மதிப்பு மட்டும் யு. எஸ். பணத்தில் 50 பில்லியன் டாலர் ஆகும். இந்தத் தொகை வளர்ந்த இந்த மூன்று நாடுகளும், வளரும் நாடுகளுக்கு மேற்கூறப்பட்ட காலத்தில் ஆட்சிநிர்வாக வளர்ச்சியின் உதவிக்காக வழங்கிய யு. எஸ். பணத்தில் 46 பில்லியன் டாலர் உதவியைக் காட்டிலும் அதிகமாகும்" என்று வாணிபம் மற்றும் மேம்பாடு தொடர்பான ஐ. நா. மாநாடு (UNCTAD) மேற் கொண்ட ஆராய்ச்சி "குறிப்பிட்டுக் காட்டியது"[3]

இந்த நிகழ்ச்சிப் போக்கின் விளைவுகள் வளர்ந்த நாடு களுக்கும், வளரும் நாடுகளுக்கும் இடையில் சரிசமம் இல்லாத பரிவர்த்தனை வளர்ந்த நாடுகளின் மீது வளரும் நாடுகளின் பல்வேறு வகையான சார்புநிலை ஆகியவற்றைத் தொடர்ந்துவரும் விளைவுகளுடன் சேர்க்கப்படுகின்றன. அவைகள் தீவிரமான பணிஆட்கள் குறைவினாலும், இழந்த

பொருளாதார வளர்ச்சிக்கான வாய்ப்புகளினாலும், மக்கள் தொகையின் முயற்சியினால் சாதிக்கப்படக்கூடிய சாதனைகளைச் செயற்கையாகத் தடுப்பதனாலும் வெளிப்படுத்தப் படுகின்றன.

அவைகளின் இயல்பால் விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் அனைத்து மக்களுக்கும் பொதுவான செல்வமாகும். ஒருபுறம் அவைகளின் வளர்ச்சி தொடர்ச்சியான மனித பரம்பரையினரால் செய்யப்பட்ட படைப்பாற்றல் மிக்க முயற்சிகளின் பயன்களை அடிப்படையாகக் கொண்டது; மறுபுறம் விஞ்ஞானத்திலும், தொழில் நுட்பத்திலும் நிகழ்ந்துள்ள சாதனைகளை எவ்விதத் தடங்கலுமின்றிப் பயன்படுத்துவது. அனைத்து மக்களின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கும், நாகரிகத்தைக் காப்பாற்றுவதற்கும் மிகவும் இன்றியமையாததாக விளங்குகிறது. விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் முற்போக்கான முறையில் மக்களின் செல்வயாக மாற்றப்படுவது உற்பத்தி சாதனங்களின் தனி உடைமைக்கும், ஆயுதப் பெருக்கப் போட்டிக்கும், ஏகாதிபத்தியத்திற்கும், காலனி ஆட்சி முறைக்கும், புதிய காலனி ஆட்சிமுறைக்கும் எதிரானது ஆகும்.

வளர்ந்த முதலாளித்துவ நாடுகளுக்கும், வளரும் நாடுகளுக்குமிடையே பெரும் அளவில் சமூக-பொருளாதார ஏற்றத்தாழ்வைப் பேணிக்காப்பது, சர்வதேச உறவுகளில் பதட்ட நிலையை அதிகரிக்கவும், உலகப் பொருளாதாரத்தின் நிலையற்ற தன்மையை அதிகரிக்கவும், உலக பொருளாதாரத்தில் உறுதியின்மையை ஏற்படுத்தவும், பொருளாதாரம், ஆற்றல், பணம் சார்ந்த துறைகளில் உட்பட்ட அரசுகளிலும், சர்வதேச உறவுகளின் அமைப்பிலும் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தும் நெருக்கடிகளை உண்டாக்கவும் கூடிய நிலையானதொரு காரணியாகும்.

எங்கள் கட்சியினது கருத்துக்களுக்கேற்ப, பின்தங்கிய நிலையை வெற்றி கொள்வது சர்வதேச நியாயத்திற்கும், உலகில் பொதுவான முன்னேற்றத்திற்கும், நாகரிகத்திற்கும், முக்கியமான தேவையாகவிளங்குகிறது. இந்தஇலட்சியத்தை அடைவதற்கு, வளரும் நாடுகளால் மேற்கொள்ளப்படுகிற முயற்சிகள் அவைகளுடைய சமூக-பொருளாதார வளர்ச்சியை விரைவுப்படுத்துவதற்கும், அவைகளிடையே கூட்டுறவை விரிவுபடுத்துவதற்கும், ஒரு புதிய பொருளாயத தொழில் நுட்ப அடிப்படையை அமைப்பதற்கும், அவைகளுடைய பொருளாதார அரசியல் சுதந்திரத்தை வலுப்படுத்தவும், மக்கள் தொகையின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். சமமான, நியாயமான உறவுகளை ஏற்படுத்தக்கூடிய, ஒவ்வொரு நாட்டின் செல்வத்தை அந்த நாட்டு மக்களே அவர்கள் விருப்பியபடி செலவு செய்வதற்கான உரிமையும், அதனுடைய சொந்த நலனுக்கு அதைப் பயன்படுத்துவதற்கான உரிமையும் தரக்கூடியப் புதிய சர்வதேசப் பொருளாதார ஒழுங்கமைப்பை நிறுவுவதும் இன்றியமையாதது ஆகும். மேலும் அது பொருளாதாரத் துறையில் வளர்ச்சி பெற்றுள்ள நாடுகளிடமிருந்து வளர்ச்சியில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள நாடுகளுக்கு உதவிகளை அதிகரிக்கும் அதே வேளையில் ஏகாதிபத்திய காலனி ஆட்சிக் கொள்கைகளை அழித்தொழிக்கும்.

வாணிபம் மற்றும் மேம்பாடு தொடர்பான ஐ. நா. சபையின் ஐந்தாவது மாநாடு, (UNCTAD-V) கூட்டத் தொடரில் சர்வதேசப் பொருளாதார விவகாரங்களின் அவசரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், பின் தங்கிய நாடுகளின் சமூக - பொருளாதாரத்தின் ஒரு தொகுதியின் வளர்ச்சியை விரைவுபடுத்தவும், நடைமுறையில் பயன்படக்கூடிய நடவடிக்கைகளை முன்வைக்க வேண்டும் என்பதை எங்கள் நாடு முக்கியமானதாகக் கருதுகிறது. ருமேனிய

சோஷலிசக் குடியரசின் தலைவரால் அனுப்பப்பட்ட செய்தி ஒருபரந்ததிட்டச் செயல்முறைகளைக் கொண்டதாகவுள்ளது.

— வளர்ந்து வரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சியைத் தீவிரப்படுத்துவதற்கான நடவடிக்கைகளைக் கருத்தில் கொண்டு நீண்ட காலத் திட்ட நடவடிக்கைகளை விளக்கிக் கூறுவது.

—இந்த அரசுகளில் அனைத்துத்துறை முன்னேற்றத்திற்குத் தேவையானவற்றுடன் ஒத்திசைவான செயல் முறைகளின் அனைத்துத் துறைக்குமான, தேசிய தொழிலாளர்களைப் பயிற்றுவிப்பதற்கான கல்வித்திட்ட நிகழ்ச்சி முறைகளை நிறைவேற்றுவது.

—இந்த நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தனிச் சிறப்பான சமூக பொருளாதாரக் கடமைகளையும், இலக்கு களையும் பகுத்தாராய்வதற்குப் பல்வேறு புவியியல் மண்டலங்களில் ஆராய்ச்சி நிறுவனங்களைத் தோற்று விப்பது.

—தொழிற் சிறப்புப் பெற்ற நாடுகள் பங்குபெறுகின்ற இராணுவச் செலவில் குறைவு ஏற்பட்டதனால் சேமிக்கப்பட்ட பணத்தை நிதியாகக் கொண்டுள்ள பொது வளர்ச்சிக்கான ஒரு அமைப்பை நிறுவுவது. எல்லா அரசு களும், இவ்வாறான செலவுகளை 10 முதல் 15 சதவிகிதம் குறைத்து அதில் பாதிப்பணம் வளர்ச்சியுறாத நாடுகளின் வளர்ச்சிக்காகச் செலவு செய்யப்பட வேண்டுமென்று ருமேனியா ஆலோசனை கூறுகிறது. இந்த நிறுவனத்திலிருந்து — வளரும் நாடுகளுக்கு, குறிப்பாக ஆண்டு தேசிய தலா வருமானம் 600 டாலர்களுக்கும் குறைவாக இருக்கும் நாடுகளுக்கு, உதவிகள் அளிக்கப்பட வேண்டும். தொழில், விவசாயம், போக்குவரத்து ஆகியவற்றின் வளர்ச்சிக்கும் பொருளாதாரத்தின் வேறு கிளைகளின் வளர்ச்சிக்கும் ஆன திட்ட நிகழ்ச்சிகளை நிறைவேற்றப் பயன்படுத்த வேண்டும். இம்மாதிரியான

உதவி, அவைகளுடைய தேசிய வருமானத்தின் குறைந்த பட்சம் 20 சதவிகிதத்தை வளர்ச்சிக்காகவும், 4 அல்லது 5 சதவிகிதத்தை மட்டுமே ஆயுதங்களுக்காகவும், செலவிடும் நாடுகளுக்கு வழங்கப்பட வேண்டும்.இது நிச்சயமாக சர்வ தேச உறவுகளில் எந்தவிதமான பயமுறுத்தல்களையோ அல்லது வன்முறையையோ பயன்படுத்துவதைக் கைவிடுவதை உள்ளடக்கியதாக இருக்கும். தங்களுடைய முயற்சிகளை சமூக பொருளாதார வளர்ச்சிக்கெனச் செலவிடுகிற, இராணுவச் செலவை அதிகப்படுத்தாத நாடுகளை ஆக்கிரமிப்புக்கு உட்படுத்துதல் கூடாது. அல்லது அந்நிய நாட்டவர் அவற்றின் விவகாரங்களில் எந்த வடிவிலும் தலையிடுதல் கூடாது. அவைகளுடைய சுதந்திரம் கண்டிப்பாகக் காக்கப்பட வேண்டும் என்பதற்காக ஐக்கிய நாடுகள் சபையும் உள்ளிட்டு அனைவரும் சில கடமைகளையும், பொறுப்புக்களையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஒரு ஒன்றிணைக்கப்பட்ட மூலப் பொருட்கள் பற்றிய திட்டச் செயல் முறைகள் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும் என்பதும், அதற்கு நிதி உதவி செய்தவற்காகப் பொது நிதி நிறுவனம் ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும். என்பதும் மிகவும் இன்றியமையாதது ஆகும்.

—முடிவில் வளர்ந்த நாடுகளையும் வளரும் நாடுகளையும் உட்படுத்துகிறவாறு, உலகில் தோன்றும் பொருளாதார இன்னல்களை நீக்குவதற்காக, மூலப்பொருட்களின் விலை, தொழிற் பொருட்களின் உற்பத்தி ஆகியவற்றிடையேயும், எரிபொருளின் விலைக்கும், ஆற்றலின் விலைக்கும் வேறு பொருட்களின் விலைக்கும் இடையேயும் ஒரே சீரான விகிதம் நிலவுமாறு தீர்மானமாக உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்வது. இலாபமான விலையிலும், சுங்கக் கட்டுப்பாடுகள் இல்லாமலும் வளரும் நாடுகளிலிருந்து உலகச் சந்தைக்குத் தொழில் உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதியை அதிகரிப்பதற்கான குறிப்பிட்ட நடவடிக்கைகளைப் பற்றிய உடன்பாட்டிற்கு வருவது இன்றியமையாதது.

—விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சி வேகமாக வெளிப்பட்டு வளர்வது, வளர்ந்த நாடுகளுக்கும், வளரும் நாடுகளுக்குமிடையேயான மிக அதிகமான பொருளாதார ஏற்றத்தாழ்வைப் போக்குவதையும் நவீன தொழில் நுட்பத்தை வளரும் அரசுகளுக்குக் கிடைக்கும்படி செய்வதையும் தேவைப்படுமாறு செய்கிறது. வளர்ந்த நாடுகளிலிருந்து, வளரும் நாடுகளுக்குக் கொடுக்கப்படும் தொழில் நுட்ப உதவியை உயர்த்துவதற்கும் அவைகளுக்குப் புதிய விஞ்ஞான தொழில் நுட்ப அறிவை சாதகமான முறையில் வழங்குவதை உயர்த்துவதற்குமான நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். இது பின் தங்கிய நாடுகளைப் பொருளாதார முன்னேற்றத்திற்கான வழியிலும் சமூக முன்னேற்றத்திற்கான வழியிலும் வேகமாக வளர்ச்சியடைவதற்கு உதவும்.

—வளரும் நாடுகளில் வெளிநாட்டு வர்த்தக நிறுவனங்களின் செயல்முறைகளை ஒழுங்குபடுத்துவது. வளரும் நாடுகள் தங்களுடைய மூலப்பொருட்கள் சுரண்டப்படுவதன் மீது தேசிய கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும். இலாபப் பங்கீட்டையும் அறிமுகப்படுத்த வேண்டும். அவைகள் வெளிநாட்டு வர்த்தக நிறுவனங்களின் சொத்துக்களில் 50 சதவிகிதத்திற்கும் குறையாமல் மிகவும் பயனுள்ள முறையில் தங்கள் கையில் வைத்திருக்க வேண்டும்.

—வளரும் நாடுகளின் ஒற்றுமையும், உறுதியும் பலப்படுத்தப்பட வேண்டும். சமூக- பொருளாதார வளர்ச்சியின் முக்கியமான பிரச்சினைகளைச் சமாளிப்பதில் பரஸ்பர ஒத்துழைப்புர், உதவியும் பலப்படுத்தப்பட வேண்டும். பொருளாதார வளர்ச்சியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு வளரும் நாடுகளின் செயல்முறையில் ஒற்றுமையை வலிமைப்படுத்துவற்கான தேவையிலிருந்து தொடங்கி, அவைகளுடைய உறவுகளில் உள்ளடங்கிய பிரச்சினைகளைச் சமாளிக்க, ஒரு தனியான மேடையில், சமத்துவ அடிப்படையில், வளர்ந்த நாடுகளுடன் பேச்சுவார்த்தை

களில் மிக அதிகமான முக்கியத்துவம் உடையதாக உள்ள ஒரு நிரந்தரமான நிறுவனத்தை அந்த அரசுகள் ஏற்படுத்த வேண்டுமென ருமேனியா விரும்புகிறது.

— புதிய சர்வதேசப் பொருளாதார ஒழுங்கமைப்பை நிறுவுவதை இலட்சியமாகக் கொண்ட செயல்முறைகளில் ஒரு முக்கியமான செயல்திறம் கொண்ட பங்கை மேற் கொள்ள வேண்டுமென ஐக்கிய நாடுகள் சபை கேட்டுக் கொள்ளப்படுகிறது. பிற்பட்ட தன்மையை ஒழிக்கவும், புதிய சர்வதேசப் பொருளாதார அமைப்பை நிறுவவும் ஸ்தூலமான வேலைத் திட்டத்தை அமைப்பதில் வளரும் சோஷலிச நாடுகளையும், வளர்ந்த முதலாளித்துவ நாடு களையும் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக ஐ. நா. சபையின் கட்டுக் கோப்புக்குள்ளேயே ஒரு விசேஷ அமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும். இந்த அமைப்பானது 1980-ல் பொதுச் சபையின் விசேஷக் கூட்டத்தில் விவாதத்திற்கான தனது கருத்துகளை வழங்க வேண்டும். அதே வேளையில் எல்லா அரசுகளுக்கிடையிலும் சமமான ஒத்துழைப்புக்கு அடிப்படையாகின்ற புதிய சர்வதேசப் பொருளாதார உறவுகளின் கோட்பாடுகளுக்காக ஒரு சாசனம் தொகுக்க முயல வேண்டும். இந்த சாசனமும் ஐ. நா. சபையினுடைய விவாதத்திற்கு வைக்கப்பட வேண்டும்.

மிகவும் முக்கியமான இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும், தனித் திட்டச் செயல்முறையை விளக்கிக் கூறுவதற்கும் வாணிபம் மற்றும் மேம்பாடு தொடர்பான ஐ. நா. மாநாடு UNCTAD, பயனுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

சமத்துவமின்மையையும், அடக்குமுறையையும் நீக்கவும் ஒரு புதிய பொருளாதார அரசியல் அமைப்பு முறையை நிறுவவும் போராடுவது, உலகில் உள்ள அடக்கி ஒடுக்குபவர் களுக்கும், அடக்கி ஒடுக்கப் படுபவர்களுக்குமிடையே, ஏழை களுக்கும், பணக்காரர்களுக்குமிடையே உலகமட்டத்தில் நடைபெறும் வர்க்கப் போராட்டத்தின் வெளிப்பாட்டை முக்கியமாகப் பிரதிபலிக்கிறது. அது ஏகாதிபத்தியத்தையும்,

காலனி ஆட்சி முறையையும் எதிர்த்து நடைபெற்ற போராட்டத்தின்நேரடியான தொடர்ச்சியேயாகும். எனவே சர்வ தேசியம், ஒற்றுமை ஆகிய கோட்பாடுகளின் மீது நம்பிக்கை வைத்து, நாங்கள் ஒரு புதிய சர்வ தேசியப் பொருளாதார அரசியல் அமைப்பை நிறுவுவதற்கும், பிற்பட்ட தன்மையை நீக்குவதற்குமான போராட்டத்துடன், புரட்சிகர இயக்கமானது ஒன்றிணைக்கப்பட வேண்டுமெனக் கூறுகிறோம். ஆகவேதான் எங்களுடைய கருத்தில் சோஷலிச நாடுகளும், தொழிலாளி வர்க்கமும், கம்யூனிஸ்ட் கட்சிகளும், புரட்சிகர இயக்கங்களும், அனைத்து முற்போக்கு ஜனநாயக சக்திகளும் இந்தப் போராட்டத்திற்கும் புதிய உலகத்தின் முக்கியமான இலட்சியங்களை அடைவதற்கான முயற்சிகளுக்கும், மும்முரமான உதவிகள் செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

ருமேனியா ஒரு சோஷலிச நாடாகவும், ஒரு வளரும் நாடாகவும் இருப்பதால், ஏகாதிபத்தியத்திற்கும், காலனி ஆட்சிமுறைக்கும், எதிராகவும் அனைத்து மக்களின் சுதந்திரத்திற்காகவும் அரசாண்மைக்காகவும் அவர்களுடைய நியாயமான மகிழ்ச்சியான வாழ்க்கைக்காகவும், சமூக முன்னேற்றத்திற்காகவும், சமாதானத்திற்காகவும் நடைபெறும் போராட்டத்தில் முக்கியமான பங்குவகிக்கிறது.

## அடிக்குறிப்பு

1. நிக்கோ சீசெக்ஸ்யூ : **ஒன்றிணைந்த ஒரு வளர்ச்சியுற்ற சோஷலிச சமுதாயத்தைக் கட்டியமைக்கும் பாதையில் ருமேனியா,** தொகுதி. 2, மெரிடியன் பதிப்பகத்தார், புக்காரெஸ்ட், 1977, பக்கம்- 17.

2. விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றத்திற்கு, போரும், ஆயுதப் பெருக்கப் போட்டியும், பயனுள்ள சாதகமான செல்வாக்கைச் செலுத்துவதாக சில ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். இராணுவ இயல்புடைய பிரச்சினைகளைத்

தீர்ப்பதன் விளைவாகப் பெரும் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்று கூறுகிறார்கள். எனினும் இது ஏற்புடையதில்லை. முதலில், தொடக்கத்திலிருந்தே, நிதி, ஆட்கள், அமைப்பு ஆகியவற்றின் செயல்கள் சமூக-பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகப் பயன் பட்டிருந்தால், இந்த விளைவுகளை விரைவிலும், குறைந்த செலவிலும் பெற்றிருக்கலாம். இரண்டாவதாக இராணுவ தொழில் நுட்பம் வளரும்போது, இராணுவ ஆராய்ச்சியும் மேம்பாடும் சமாதான காரியங்களுக்குப் பயன் படுவது குறைக்கப்படுகிறது. ஏனெனில் இராணுவ துறையையும், அது அல்லாத பிற துறைகளையும் இணையாக வளர்ச்சியுறச் செய்யக்கூடிய வழி களுக்கும், முறைகளுக்கும் இடையேயுள்ள இடைவெளி அகன்றுகொண்டே வருகிறது. மூன்றாவதாக சென்ற நூற்றாண்டில் நடந்த நிகழ்ச்சிகள், இராணுவம் அல்லாத துறைகளில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளை இராணுவத் துறை மிகுதியாகப் பயன்படுத்தியுள்ளதே தவிர மாறாக அல்ல என நிரூபித்துள்ளன.

8 UNCTAD: மறுதலையான தொழில் நுட்ப மாற்றத்தைப் பற்றி அரசாங்க வல்லுநர் குழுவின் அறிக்கை, ஐக்கிய நாடுகள் சபை. 1978. பக். 9, 10.

**ஜெய்மி:ஃபுச்**

*அர்ஜண்டைனா, கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டி உறுப்பினர், ''பொருளாதாரப் பிரச்சினைகள்''— ஆசிரியர் குழுத் தலைவர்.*

## லத்தீன் அமெரிக்காவின் பிரச்சினைகள்

முதலாளித்துவத்தின் பொருளாதார அரசியல் வளர்ச்சியின் ஒரு சீரற்ற தன்மை பற்றிய லெனினுடைய விதி எங்கள் கண்டத்தில் தனிச் சிறப்பான வலிமையுடன் வெளிப் பட்டிருக்கிறது. லத்தீன் அமெரிக்க நாடுகளில் பல அவற்றின் அரசியல் சுதந்திரத்தை 150 ஆண்டுகளுக்கு முன்னரே பெற்றுவிட்டன. அவைகளை முதலாளித்துவ சக்திகளே ஆட்சி செய்து வருகின்றன. அவைகளிடையே சமூக-பொருளாதார விஞ்ஞான கலாச்சார வளர்ச்சி மட்டத்தில் குறிப்பிடத்தக்க ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன. இதை பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்களும், சமூகவியலாளர் களும் ஒத்துக்கொள்ள வேண்டியதிருக்கிறது. 1950 லிருந்து 1975 வரை இந்தக் கண்டத்தின் தேசிய வருமானம் 4மடங்காக உயர்ந்துள்ளது. தொழில் உற்பத்தி 5மடங்காகப் பெருகியுள்ளது. (எஃகு உற்பத்தி 15 மடங்கும், தளவாடங்கள், கருவிகள் உற்பத்தி 9 மடங்கும் பெருகி யுள்ளது) ஆற்றல் உற்பத்தி 8 மடங்கு பெருகியுள்ளது.

இந்த வெற்றிகளால் பயனடைந்தவர்கள் யார்? இந்தக் கண்டத்தின் பொருளாதார வளர்ச்சியின் பெரும் ஏற்றத்

தாழ்வுகள் குறைக்கப்பட்டுள்ளனவா என்ற கேள்விகள் எழுகின்றன.

தொழில் நுட்ப முன்னேற்றத்தினால் தோற்றுவிக்கப் பட்டு, முதலாளித்துவ வளர்ச்சியினால் தீவிரப்படுத்தப் பட்டுள்ள பொருளாதார வளர்ச்சி லத்தீன் அமெரிக்க நாடுகளில் கட்டமைப்பு நெருக்கடியை மேலும் அதிகமான தாக ஆக்கியுள்ளது. லட்டிஃபண்டியாவை அடிப்படையாகக் கொண்டதும், பன்னாட்டு இணையங்களின் தனி ஆட்சி யுரிமைப் பகுதிகளையும் அடிப்படையாகக் கொண்டதுமான காலத்துக்கொவ்வாத நில உரிமை முறைகளும், இன்னும் தொடர்ந்து நிலவுகின்றன. வெளிநாட்டு மூலதனங்கள் குறிப்பாக வட அமெரிக்க மூலதனம் விரிவடைவது தொடர்ந்து வருகிறது. குறிப்பாகத் தொழிலிலும், நிதித்துறையிலும், ஊடுருவுதலும் மூலப்பொருட்கள் மிகுந்துள்ள பெரும் மண்டலங்களைக் கைப்பற்றிக் கொள்வதன் மூலம் உள்நாட்டுச் சந்தைகளின் மீது மேற்கொள்ளும் கடும்தாக்குதல்களும் தொடர்ந்து நடை பெறுகின்றன. வெளிநாட்டு மூலதனங்கள் ஆட்சி செய்வதால் அது நிலச் சீர்திருத்தங்களை நடைமுறைப் படுத்துவதில் தலையிடுகிறது.

லத்தீன் அமெரிக்க நாடுகளில் முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி தீவிரமடைவது மிகுதியாக உணரப் படுகிறது. அதே வேளையில் லத்தீன் அமெரிக்கா இப்பொழுதெல்லாம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நம்பிக்கைக்குரிய பின்னணிக் காவலாளியாக இல்லை. சோவியத் ஒன்றியமும் பிற சோஷலிச நாடுகளும் நிலவுவது ஏகாதிபத்தியங்கள் தங்கள் கொள்கைகளில் மிகவும் கவனமாக இருக்கும்படிச் செய்கிறது. சோஷலிசக் கியூபா மிகப்பெரும் சமூகப் பொருளாதார மாற்றங்களை நிகழ்த்தி யுள்ளது. இப்பொழுது 22 நாடுகளுக்குத் தொழில் நுட்பப் பொருளாதார உதவிகள் செய்து வருகிறது. பிற்போக்கு பாசிச ஆட்சிகள் வரலாற்றுப் போக்கை மாற்றுவதற்கு வீண்

முயற்சிகளைச் செய்து வருகின்றன. லத்தீன் அமெரிக்க நாடுகளின் முன்னேற்றத்தையும் கம்யூனிஸ்ட் கட்சிகளால் வழி நடத்தப்பட்டுவரும் அவற்றின் தொழிலாளி வர்க்கத்தின் போராட்டத்தையும் யாராலும் அடக்க முடியாது.

லத்தீன் அமெரிக்க அரசுகளுக்கும், ஏகாதிபத்திய அரசுகளுக்குமிடையே-குறிப்பாக யு.எஸ். அரசுக்குமிடையே வளர்ந்துவரும் முரண்பாடுகள் அண்மைக் காலத்தின் சிறப்பியல்புகளாக உள்ளன. அதே வேளையில் லத்தீன் அமெரிக்காவில் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடைபெறும் போராட்டத்தின் சமுதாய அடித்தளமும் பெருகியுள்ளது. அதற்கு அந்த நாடுகளில் உடந்தையாக இருப்பவர்களும் மிக அதிகமாகப் பெருகியுள்ளனர்.

பல்வேறு தொழில்களின் வளர்ச்சி மட்டத்தில் அர்ஜண்டைனா ஒரு குறிப்பிட்ட அளவு வெற்றிகளைப் பெற்றுள்ளது. எனினும் அண்மைக்காலத்தில் பெரும்பாலும் அந்நிய நாட்டு மூலதன விரிவாக்கத்துடன் தொடர்புடைய ஒரு ஆழ்ந்த கட்டமைப்பு நெருக்கடியை இந்த நாடு அனுபவித்துவரும் விலை மந்தநிலை பிரதிபலிக்கிறது. எங்கள் நாட்டின் 22 சதவிகிதத் தொழிலாளிகள், பொறியியலாளர்கள், தொழில் வித்தகர்கள், வெளி நாட்டு ஏகபோகங்களைச் சேர்ந்த தொழிலிடங்களில் பணியாற்று கின்றனர். அந்த ஏகபோகங்கள் அர்ஜண்டைனா விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சியடைவதைப் பின்தள்ளுகின்றன. இந்த ஏகபோகங்கள் தங்களுக்கு எந்த ஆராய்ச்சிகள் பயன் படுமோ அந்த ஆராய்ச்சிகளையே மேற்கொள்ளும்படிச் செய்கின்றன.

தேசிய தொழில் நிறுவனங்கள் மூடப்படுமாறு செய்யப் படுகின்றன அல்லது தங்கள் உற்பத்தியைக் குறைத்துக் கொள்ளுமாறு செய்யப்படுகின்றன. ஏறத்தாழ 3000த்துக்கு மேற்பட்ட பல்வேறு திட்டங்கள் தற்காலிகமாக மூடப்பட்டு விட்டன. வேலையில்லாதோரின் எண்ணிக்கை மிகுதியாகப் பெருகியுள்ளது. உழைக்கும் மக்களின் உண்மை ஊதியம்

குறைந்துள்ளது. ஏராளமான எழுத்தறிவில்லாதவர்கள் இருக்கின்றனர். பள்ளிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் பஞ்சமாக உள்ளது. அரசால்பின்பற்றப்படுகிற சமூகப் பொருளாதாரக் கொள்கை பொதுவான மனக்கசப்பையே சந்திக்கிறது. உழைக்கும் மக்களின் பிரதிநிதிகள் மட்டுமல்லாமல், வேறு பகுதி மக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளும் வேலை நிறுத்தங்கள் நாடு முழுவதும் பரவலாக நடைபெறுகின்றன.

இந்தநாட்டின் அரசியல் நிலைமை வலது சாரிகளுக்கும், மிதவாத சக்திகளுக்குமிடையே நடைபெறும் போராட்டத் தினாற் சிறப்புற்றதாக விளங்குகிறது. யு. எஸ். ஏகாதிபத்தியம், பல்வேறு கனிப்பொருட் சிறப்புப் பெற்ற தாகவும், புவியியல் அடிப்படையில் சாதகமாகவும் அமைந் துள்ளதாகவும் உள்ள அர்ஜண்டைனாவில் தன்னுடைய வலிமையை அதிகப்படுத்திக் கொள்ள பெருமுயற்சி செய்கிறது. எங்கள் நாட்டில் யு. எஸ். ஏகாதிபத்தியம், தலையிடுவதைத் தொழிலாளிவர்க்கமும், அறிஞர் பெரு மக்களில் பலரும் எதிர்த்து வருகிறார்கள்.

உழைக்கும் மக்கள் ஜனநாயகத் திட்டச்செயல்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென்றுகோருகிறார்கள். அவர்கள் ஜனநாயக சுதந்திரங்களையும் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவதையும், வேறு பல அரசியல் பொருளாதார விவகாரங்களில் மாற்றங்களையும் விரும்புகிறார்கள். யு எஸ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடும் பெரும் சக்தி களில் ஒன்றாகக் கம்யூனிஸ்ட் கட்சி விளங்குகிறது. அது அனைத்து முற்போக்கு சக்திகளின் பரந்த முன்னணி நிறுவப்படுவதையும், ஜனநாயக மாற்றங்களை நிறைவேற்றக் கூடிய ஒரு அரசு அமைக்கப்படுவதையும் ஆதரிக்கிறது.

**சில்வானோ ஆண்டிரியானி**

*இத்தாலிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி உறுப்பினர், இத்தாலிய கம்யூனிஸ்ட் கட்சியின், பொருளாதார ஆய்வுமையத்தின் தலைவர்.*

## விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியும், முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளி வர்க்கத்தின் நிலையும்.

வளர்ந்த முதலாளித்துவ நாடுகளில் விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சி வேகமடைவதை நாம் எதிர்பார்க்கலாம் என்று கூறுகிற ஆராய்ச்சிக் கட்டுரையிலும், தோழர் இனோசெம்ஸ்ட் சேவ் அவர்களுடைய அறிக்கையிலும் கூறப் பட்ட முடிவுகளை நான் ஏற்றுக் கொள்கிறேன். இப்பொழுது மேற்கு நாடுகளில் இடதுசாரிகளிடையே வெளியிடப் படுகிற, உற்பத்தி சக்திகளின் மேற்கொண்ட வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கு முதலாளித்துவத்தின் இயலாமைதான் இப்போதைய நெருக்கடிக்குக் காரணம் என்ற எண்ணத்தில் நான் நம்பிக்கை கொண்டிருக்கிறேன் என்பது விவரித்துக் கூறப்படவேண்டிய ஒன்றாகும். இன்றைய நெருக்கடியைத் தீர்ப்பதற்கு முதலாளித்துவ முறைத் தீர்வும் உள்ளது. பொருளாதாரத்தை மறுசீரமைப்பதற்கு விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியை முதலாளித்துவம் பயன்படுத்து வதன் நிறைகுறையைச் சீர்தூக்கிப் பார்ப்பதே சிறந்த அணுகுமுறையாகும். அனைத்திற்கும் மேலாக, முந்திய

நெருக்கடிகள் அனைத்தையும் காட்டிலும், இன்றைய நெருக்கடியை, முழுவதும் வேறுபட்டதாக ஆக்குகிற, தொடர்ந்து வருகின்ற, தனிச்சிறப்பான முரண்பாடுகளை வெளிக்கொண்டு வருவதாகவும், அந்த அணுகுமுறை இருக்க வேண்டும்.

இன்றைய நெருக்கடியின் சிக்கல் இதுதான். அதாவது, முதலாளித்துவ வளர்ச்சியின் போருக்குப் பிந்திய மாதிரியின் முக்கியமான கூறுகள், அதன் நெருக்கடியை நிர்ணயித்த காரணிகள், நெருக்கடியை வெல்ல மேற்கொள்ளப்பட்ட முதலாளித்துவத்தின் முயற்சிகள் ஆகிய அனைத்தும் ஒரே முடிச்சாக, பல்வேறு வழிகளிலிருந்து இணைக்கப்பட்ட ஒரே முடிச்சாக, படைபலச் சமநிலையைப் பொருத்து இணைந்து நிலவுகின்றன என்பதே ஆகும்.

இன்று நிலவுகிற அடிப்படையான இயல்பு — நான் காண்பதுபோல சர்வதேச அடிப்படையில் பொருட்களைப் பரிமாறிக் கொள்வதிலிருந்து; உற்பத்தியை சர்வதேச மயமாக்குவதற்கும், உலகப் பொருளாதார அமைப்பு ஒன்றை உருவாக்குவதற்குமான ஒரு மாறுதலே ஆகும். அது சர்வதேச வாணிபத்தை விரிவாக்கும் செய்வது மட்டுமல்ல; ஆனால், அனைத்திற்கும் மேலாக, உபரிமதிப்பின் உற்பத்தியளவை விரிவாக்குவதற்கும், மூலப்பொருட்களின் மீது கட்டுப்பாட்டை வைத்திருப்பதற்கும் மிகஉயர்வடைந்துள்ள நாடுகள் கொள்ளும் ஆசையிலிருந்து எழும் சர்வதேச மூலதனத்தின் புதிய பரவலும் ஆகும். இது இலாபத்தின் விகிதம் குறைவதற்கு ஈடாக எழுகிறது. இந்தப் புதிய மூலதனத்தின் சர்வதேசப்பரவல் வங்கிகள், நிதி நிறுவனங்களுடன் கூடவே, உற்பத்தி வசதிகளைப் பன்னாட்டுத் தன்மையடையச் செய்வதன் மூலமும் நடைபெறுகிறது. கிளைகளின் அல்லது பன்னாட்டு இணையங்களின் உதவித் தொழில் உற்பத்தியின் மதிப்பு—இப்பொழுதே கூட, ஐ நா. சபைக் கணக்குப்படி, அடிப்படையாகக் கருதப்படுகிற நாட்டிற்கு வெளியில் உலக ஏற்றுமதியின் மொத்த

மதிப்பைக் காட்டிலும் அதிகமாக உள்ளது. மேலும் இந்த ஏற்றுமதிகளில் மூன்றில் ஒரு பங்கு பன்னாட்டு இணையங்களின கிளைகளுக்கிடையிலே நடைபெறும் பொருட்களின் நடமாட்டமாக உள்ளது. வெளிநாடுகளில் உள்ள யு. எஸ். நிறுவனங்களின் உற்பத்தி யு. எஸ். உடைய ஏற்றுமதியைக் காட்டிலும் நான்கு மடங்கு அதிகமானதாகும்.

நிதித் திரட்சியையும், மூலதனக் குவியலையும் கிடைநிலையாகக் குவிதல் நிகழ்ச்சிப் போக்கைப் பரப்புவதற்கு உள்ள திறமையையும், பல்வேறு நாடுகளின் உற்பத்தியின் சிறப்புத் திறமையை நிர்ணயிப்பதில் உள்ள திறமையையும் மேலும், மேலும் அடிப்படையாகக் கொண்டதாக, ஏகாதிபத்தியத்தின் தலைமையிருப்பதால், அதன் உள்ளடங்கிய இயல்புகளைத் திருத்தியமைப்பதைப் பற்றிப் பேசினால், அது சரியானதாகவே இருக்கும் என்று நான் கருதுகிறேன். அதே வேளையில் முன்னாளில் நிலவிய சர்வதேச வேலைப்பகுப்பு சில மாற்றங்களுக்கு உள்ளாகி வருகிறது. ஆனால் அது நாடுகள் முன்னாளில் செய்தது போல ஒன்றுக்கொன்று உதவுவதாக இருப்பதற்கும், அதே சமயத்தில் ஒரு புதிய உருவத்தில் உற்பத்தி செயல்திறனின் பொதுவான மட்டத்தில் உள்ள சமமற்ற தன்மையை மறுஉற்பத்தி செய்யவும் அதன் விளைவாக சென்ற காலத்தைப் போல மிகவும் பின் தங்கிய நாடுகளிலிருந்து மிகவும் அதிகமான வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு மதிப்புகளும், செல்வங்களும் செல்வது என்னும் மாற்றங்களையும் உண்டாக்குகிறது.

வளர்ந்த முதலாளித்துவ நாடுகளுக்கும், வளரும் நாடுகளுக்கும் இடையிலுள்ள முரண்பாடுகளைப் பற்றி மிக அதிகமாக நான் பேச விரும்பவில்லை. அவைகள் பல வழிகளில் வெளிப்படுகின்றன—நிதியியல் நெருக்கடியினாலும், ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு, செல்வத்தையும், புணவீக்கத்தையும் செயற்கையாக மாற்றுவதனாலும், பன்னாட்டுச் செலுத்தல் நிலையின் கட்டமைப்பு ஏற்றத்

தாழ்வினாலும், அது போன்றவற்றாலும் அவைகள் வெளிப் படுகின்றன. வளரும் நாடுகளுக்குத் தொழிற் பொருளுற்பத்தியை மாற்றுகிற நிகழ்ச்சிப் போக்குகள் அவைகளில் ஒரு சிலவற்றுடன் தொடர்புடையதாகவுள்ளது. ஏனெனில் இப்பொழுதும்கூட நடுத்தர மட்ட வளர்ச்சி யுடைய நாடுகளுக்கும், குறைந்த வளர்ச்சியுடைய நாடு களுக்குமிடையே அதிகமான வேறுபாடுகள் உள்ளன.

உற்பத்திச் சுழலின் பகுதிகள் மாற்றப்படுவதற்கு நாடு களைத் தேர்ந்தெடுப்பதில் உள்ள நோக்கங்கள் ஒருவேளை மாறுபட்டவையாக இருக்கலாம். இன்றுள்ள பல தத்துவங்கள் இத்தகைய மையப்பாட்டு நீக்க முறையை விளக்க முயல்கின்றன. உதாரணமாகச் சிலர் அதை முழுதும் தேசிய உச்சநிலை நுகர்வின் பங்கில் அமைப்புமுறை காரணமாக நிகழ்வதாகச் சொல்லுகின்றனர். அதே வேளையில் வேறு சிலர் உற்பத்திச் சுழலில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு தொழிலின் கட்டுப்பாடற்ற கிடைநிலைப் பரவுதலினால்தான் இது நடைபெறுகிறது என்று கூறுகிறார்கள். எவ்வாறாயினும் பெரிய தொழிற்சாலைகள் சர்வதேசிய மயமாக்கப்படல் தனித் தொழிற்சாலைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு மட்டுமல்லாமல், வளர்ந்த முதலாளித்துவ நாடுகளின் பொதுவான தேவை களையும் நிறைவு செய்கிறது. முதலீடுகள் ஒரு சில இடங்களில் குவிந்திருத்தல் பல்வேறு காரணிகளைப் பொருத்ததாகவுள்ளது: மூலப்பொருட்கள் கிடைப்பது, செயலூக்கமுள்ள தேவைகள், உழைப்பு சக்தியின் அளிப்பு, பொதுவான சூழ்நிலைகள், அனைத்திற்கும் மேலாக அரசியல் சூழ்நிலைகள் முதலிய காரணிகளாகும். ஏனெனில் பன்னாட்டு இணையங்கள் தல பூர்ஷ்வாக்களின் ஒரு பகுதியுடன் கூட்டாகச் சேர்ந்து தொழில்களைப் பரவலாக்கி தொழில் மயமாக்குதலை நிறைவேற்றுகின்றன. வேறு வகையில் பார்த்தால் நாடுகளுக்கிடையில் வேற்றுமையைக் காணுதலே அமெரிக்கச் சூழ்ச்சித்திறமாக உள்ளது. இந்த நாடுகளுக்குள் முதிர்ந்து வெளிப்படுகிற முரண்பாடுகள்,

அவைகளின் மிகக் குறைந்த வளர்ச்சியினால் மட்டுமல்லாது பன்னாட்டு மூலதன நலன்களாலும், குறிப்பிட்ட தல பூர்ஷ்வா வர்க்கத்தின் நலன்களாலும் நிர்ணயிக்கப்படும் இந்த வளர்ச்சியின் இயல்பினாலும், விகிதங்களாலும் கூட வெளிப்படுகின்றன.

கோட்பாட்டின் இரண்டாவது பகுதியில் மிகவும் விளக்கமாக விவாதிக்கப்பட்டுள்ளன. இரண்டு பொருட்களைப் பற்றி நான் சில விஷயங்களைக் கூற விரும்புகிறேன்.

இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொருளாதாரக் கட்டமைப்பின் மறுசீரமைப்பு, மாற்றியமைத்தல் ஆகிய நிகழ்ச்சிப் போக்குகள் குறிப்பிட்ட வளரும் நாடுகளுக்கு, உற்பத்திச் சூழல்களை மாற்றுவதை மட்டுமே பொருத்ததாக இல்லை. வழக்கமாக, வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளுக்குள்ளும், அவைகளுக்கிடையேயும், நிலவுகிற சிறப்புத் திறமைகளை மறுபகிர்வு செய்வதை, இந்த மறு ஒழுங்கமைப்பு செய்வது உள்ளடக்கியதாகவுள்ளது. அதே வேளையில் வளர்ந்த நாடுகளில் ஒருங்கிணைத்தல் வளரும் நாடுகளில் பன்முகப் படுத்துதல் என்ற இரண்டு கூறாக மட்டுமே இந்த நிகழ்ச்சிப் போக்கைப் பிரித்துவிடக் கூடாது. கட்டமைப்பு பெரிதாவதைக் குறைப்பதும், மையப் படுத்துவதை நீக்குவதும், தொழிலைப் பிரதேச அடிப்படையில் அமையச் செய்வதும், வளர்ந்த நாடுகளில் பெருமளவில் நடைபெறுகின்றன. இந்த நேரத்தில் இந்த நிகழ்ச்சிப் போக்குகளிலிருந்து நீக்கப்பட்ட வட்டாரங்களில் உள்ள பொருளாதார நிலைகள் படுமோசமாகிறது. வேலை வாய்ப்பு பொதுவாகக் குறைகிறது. உதாரணமாக இத்தாலியின் ஒரே மாவட்டங்களில் உள்ள தொழிற்சாலைகள், பழைய தொழிற் செறிவுற்ற இடங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் ஐரோப்பாவின் மிகவும் அதிகமாக வளர்ச்சியுற்ற மண்டலங்கள் மறுசீரமைக்கப்பட்டதன் விளைவாகவும், தொழிலாளர்களின் சந்தையில் அதிகப்படியான செயல்

சுதந்திரத்தைப் பெறுவதற்கு முதலாளித்துவம் தேடுகிற இடங்களில் மரபு வழியான பல தொழிற்சாலைகளிலிருந்து அவைகள் நீக்கப்பட்டதன் விளைவாகவும் ஏற்பட்டவை எனக் கருதலாம். சிறிய தொழிற் சாலைகளும், நடுத்தரமான தொழிற் சாலைகளும் சட்டத்தினால் அனுமதிக்கப்படாத உழைப்பு சக்தியை, சட்டவிரோதமாக—குறிப்பாகப் பெண்களின் உழைப்பு சக்தியையும், குழந்தைகளின் உழைப்பு சக்தியைப் பயன்படுத்துவதோடு இணைந்து வளர்வது தற்செயலானது அல்ல. இம்மாதிரியான விஷயங்களை மிகச்சிறிதளவே தெளிவானதாக இருப்பினும், வேறு உருவங்களில் வேறு நாடுகளிலும் கூடக் காணமுடியும்.

ஆராய்ச்சிக் கட்டுரை எண் 16 கூறுகிற உழைப்பு சக்தியின் வளர்ந்துவரும் சிக்கலான தன்மையைப்பற்றி ஒரு தனித்தொழிற்சாலையின் எல்லைக்குள்நின்று ஆராய்வதோடு மட்டுமல்லாமல், சமூக உழைப்புப் பகுப்பில் ஏற்படும் மாற்றங்களின் விளைவாகவும் ஆராயப்பட வேண்டும். தொழிலாளி வர்க்கத்தின் சிறப்பான இயல்புகள் மாறிக் கொண்டே இருக்கின்றன. ஆனால் புதிய திறமைகளைப் பெற்று அதைப் புதிய தொழில்களுக்குப் பயன்படுத்தும் போக்கில் உள்ள, தொழிலாளி வர்க்கத்தினர்க்கும், பொருளாதாரத்தின், ''கரையோரங்களில்,'' ஈடுபட்டுள்ள தொழிற்சங்கங்களால் பாதுகாக்கப்படாத பிரிவினர்க்கு மிடையே வேறுபாடுகள் வளர்ந்து கொண்டே வருகின்றன. புதிய சேவைகள் வளர்ந்திருப்பதால் — உருவரையிடுதல், விற்பனை செய்தல், வாடிக்கையாளர்களுக்குத் தொழில் நுட்ப உதவி செய்தல், நிதி தொடர்பான ஆராய்ச்சிகள், இன்னும் இதுபோன்ற பிறசேவைகள் வளர்ந்திருப்பதால், மூன்றாவது துறை என்று அழைக்கப்படுகிற துறையில் புதிய சமூகத்தலைவர்கள் தோன்றுகின்றனர். பொதுத்துறையில் வேலைவாய்ப்பு மட்டம், அரசின் விரிவடைந்து வரும் பணிகளின் காரணமாக உயர்கிறது. இதனுடன் கூடவே உற்பத்தி நிகழ்ச்சிப்போக்கிலிருந்து நீக்கப்படுபவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கிறது. மேலும் மிகுதியாக வளர்ச்சி

யடைந்த மாவட்டங்களுக்கும், "கரையோர" பொருளாதாரத்தைப் படைக்கிற நிகழ்ச்சிப் போக்கிலிருந்து கூட விலக்கப்படுகிற, மிகக்குறைவான வளர்ச்சியடைந்துள்ள மாவட்டங்களுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகள் உயர்ந்துகொண்டே வருகின்றன.

பொருளாதாரத்தின் கட்டமைப்பை மறுசீரமைக்கும் போக்கில், உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கில் ஈடுபட்டுள்ள உழைக்கும் மக்களின், வேலைவாய்ப்பு மட்டத்தை முழுமையாக ஒரு நிலையில் வைத்திருக்க ஐரோப்பியத தொழிலாளி வர்க்கம் முயன்றிருக்கிறது என்ற விஷயம் தொழிலாளர்களின் படையாகப் பணியாற்றும் உரிமை தரப்பட்டுள்ள இளைஞர், இளம்பெண்கள் ஆகியோரின் பங்கை வலியுறுத்திக் கூறுகிறது. விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியைப் பயன்படுத்தும் இன்றைய முதலாளித்துவ முறை உழைக்கும் மக்களிடையே காணப் படும் உள்முரண்பாடுகளைத் தீவிரப்படுத்துவதற்கு இட்டுச் செல்லலாம். வளர்ந்துவரும் அரசியல் உணர்வுகள், சமூகத்திலிருந்து விலக்கி வைக்கப்பட்டவர்களாயிருப்பதற்கு மறுப்பது, புதிய சமூக சக்திகள் தோன்றுவதற்கு வழி செய்கிறது. தொழிலாளி வர்க்கத்துடன் தானாகவே இணைந்துவிடமுடியாத பெண்களின் இயக்கங்களும், இளைஞர்களின் இயக்கங்களும் அந்த சமூக சக்திகளில் சிலவாகும். விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் விளைவாகத் தோன்றுகிற புதிதாகப் பக்குவமடைகிற தேவைகளுடன் தொழிலாளிவர்க்கம், ஒப்பீட்டில் ஆண்டுக் காண்டு அதனுடைய எண்ணிக்கை குறைந்து கொண்டே வந்தபோதிலும், இன்னும் ஏராளமானதாகவும், ஒன்று பட்டதாகவும் உள்ள சக்தியாக விளங்குகிறது. எனினும் அதனுடைய புதிய தேவைகளின் நிறைவுக்காக மட்டுமல்லாமல், பிற சமூக சக்திகளின் இயல்பான தேவைகளின் நிறைவுக்காகவும் போராடுமானால் — சமூக வேலைப்பகுப்பை மாற்றக் கூடிய

வளர்ச்சிக்கான மாற்றுவழியை — குறிப்பாக ஆண்களுக்கும், பெண்களுக்குமிடையேயுள்ள கடமைகளில் நிலவும் இன்றைய வேறுபாட்டை நீக்கவும், மொத்த நேரத்தை வேலை செய்வதற்குரிய நேரம் என்றும், அறிவைப் பெருக்கிக் கொள்வதற்குரிய நேரம் என்றும், சமூக வாழ்க்கைக்கும், சொந்த வாழ்க்கைக்கும் தேவையான நேரம் என்றும் பிரிப்பதற்கும் போராடுமானால் அது அதன் தலைமைப்பங்கை மேற்கொண்டு தக்கவைத்துக் கொள்ள முடியும். குறைந்த உழைக்கும் நேர வாரம் ஒரு சிறந்த இலட்சியமாக இருந்தபோதிலும், அது வேலை வாய்ப்பை உயர்த்துவதற்குப் போதுமானதாக இல்லை என்பதுதான் இத்தாலியின் அனுபவம். மேலும் சமூக அமைப்பில் புதிய வாழ்க்கையின் இயல்புகளுக்கு ஏற்ற தேவைகளுக்கு ஒத்திசைவானதாக இருக்குமாறு செய்யக்கூடிய பொதுவான மாற்றங்கள் நிறைவேற்றப்படாவிட்டால், முன்னரே வேலை செய்து கொண்டிருக்கும் தொழிலாளிகள், நீண்ட வேலை நேரத்திற்கு இரண்டாவதாக இன்னொரு வேலையிலும் ஈடுபட வேண்டியதிருக்கும்.

விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் தாக்கத்தின் கீழ் தொழிலாளி வர்க்கத்தின் ஒற்றுமை பற்றிய பிரச்சினைகளும் அவற்றின் சங்கங்களும், மேலும், மேலும் அதிகமான சிக்கல் நிறைந்ததாகவும், முக்கியமானதாகவும் ஆகி வருகின்றன என்பதைக் காட்டுகின்றன.

"அரசின் நெருக்கடி" என்ற பொதுத் தலைப்பின் கீழ் இணைக்கப்பட்ட விஷயங்கள் இப்போதுள்ள நெருக்கடியின் மற்றொரு இயல்பாக உள்ளன. 1930 களில் ஏற்பட்ட நெருக்கடிக்கான முதலாளித்துவத்தின் எதிர்ச் செயலானது அதன் இரண்டு வகைகளில்—பாசிச உருவங்களிலும், ஜனநாயக உருவங்களிலும்—பொருளாதாரத்தில் அரசு மேற்கொள்ளும் பங்கின் முக்கியத்துவத்தின் குறிப்பிடத் தகுந்த வளர்ச்சிக்கு வழி செய்தது. போரின் பிந்திய காலத்தில் பொருளாதாரச் சூழலைக் கட்டுப்படுத்துவதை

நடைமுறைப்படுத்தும் கொள்கையினால் மட்டுமல்லாது, ஒரு "பொது நல அரசைப்" படைப்பதற்கான வாக்குறுதி களினாலும் இந்த இயல்பு செல்வாக்குப் பெற்றது. முக்கியமான சக்தியாகக் கருதப்பட வேண்டுமென்பதற்காகப் பல்வேறு சமூக நலன்களும், சக்திகளும் ஒன்றிணைக்கப்பட்டு வரும் சகாப்தத்தில் வயது வந்தோர் அனைவருக்கும் ஓட்டுரிமை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், அரசை ஒரு கருவியாக நினைக்கும் கருதுகோள்—அதாவது முதலாளி வர்க்கத்தின் ஏகபோகங்களைச் சேர்ந்த பகுதியால் அரசு ஒரு தனி ஆதிக்க உரிமையுடையதாகக் கொள்ளப்படும், கருது கோள் ஏற்றுக் கொள்ளத்தக்கது என்று கருதுவதில் எனக்கு சந்தேகமாய் இருக்கிறது. மூலதனம், பூர்ஷ்வா சமுதாயம் ஆகியவற்றின் மறு உற்பத்தியை விரிவாக்கம் செய்யும் நிகழ்ச்சிப் போக்கு முழுமையையும் உத்திரவாதம் செய்வதே முதலாளித்துவ அரசின் முக்கியமான பணியாகும். அரசு முதலாளித்துவ அரசாக இருந்த போதிலும், முதலாளி வர்க்கத்தின் தனிப் பிரிவுகளைப் பொருத்தவரை, அது தன்னாட்சியுடையதாக விளங்குகிறது. முதலாளி வர்க்கத்தின் வேறுபட்ட பிரவினரையும், மத்தியதர வர்க்கங்களின் வேறுபட்ட பிரிவினரையும் உள்ளடக்கியதாகவுள்ள பெரும் பான்மையைக் கொண்டிருக்கிற சக்திகளிடையே ஏற்படும் இடையீட்டின் விளைவாக அதன் கொள்கைகள் தோன்று கின்றன. பல சமயங்களில் அரசின் கொள்கை முதலாளி களிடையேயும், தொழிலாளிகளிடையேயும் ஏற்படும் உடன்பாடுகளின் விளைவாகவும் கூட உள்ளது.

வளர்ந்து கொண்டேவரும் அரசின் பணிகள் மூலதனக் குவியல் நிகழ்ச்சிப் போக்கை வளரச் செய்வதை நோக்கிய பணிகளையும், அரசுக்கு சட்ட பூர்வமான ஒரு தன்மையைத் தருவதற்கும், திட்டமிடப்பட்ட பணிகளையும், அதாவது கருத்து ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்துவதையும் உள்ளடக்கியதாக இருக்கின்றன. பல்வேறு வழிகளில் மூலதனக் குவியலுக்கான உயர்ந்த மட்டத்தை உறுதிப்

படுத்துவதற்காகப் பொருளாதாரத்தின் முன்னேறிய ஏகபோகங்களின் செயல்முறைகளில் அரசு தலையிடுகிறது. அல்லது அப்படி இல்லையென்றால் மூலதனக் குவியலின் மட்டத்தை ஒரே சீராக வைத்திருக்கவும், பின் தங்கியிருக்கிற துறைகளின் செயல்முறைகளில் அரசு தலையிடுகிறது; பொதுவான தேவைகளை நிறைவு செய்வதற்கான உத்திர வாதமளிப்பதற்காக, தேசிய வருவாயின் பகிர்வில் அது தலையிடுகிறது. இறுதியாக ஆனால் முக்கியம் குறைந்தது அல்லாத, "சமூகக் கடமைகள் உள்ள அரசு", உதவி செய்கிற அரசாக மாறும்போது வாழ்க்கைத் தரத்தில் பின் தங்கியுள்ள மக்கள் தொகையைச் சேர்ந்த பகுதியினருக்கு உதவி செய்வதில் அதிகமாக ஈடுபடுகிறது. அல்லது பொருளாதாரத்தின் கட்டமைப்பு மறுசீரமைப்பு நிகழ்ச்சிப் போக்கிலிருந்து விலக்கப்படுகிறது.

இவையனைத்தின் காரணமாக, பல சமயங்களில் அரசு ஏறத்தாழ தேசிய மொத்த உற்பத்தியில் 50 சதவிகிதத்தைக் கட்டுப்படுத்த முடிகிறது. முன்னைப் போலவே தனி உடைமை நலன்களைப் பேணிக் காப்போரால் மூலதனம் குவிக்கப்படுகிற நிகழ்ச்சிப்போக்கு நிர்ணயிக்கப்படுகிறது என்றாலும் அது அதிகமான அளவு அரசியல் தன்மை பெறுகிறது. இவையெல்லாம் தவிர, சமூகக் கட்டமைப்பும், சமூகப் படிநிலைகளும், அரசின் வளர்ந்துவரும் பணிகளினால் பாதிக்கப்படுகின்றன. சென்ற பத்தாண்டுகளில் அரசு இயந்திரத்தின் இடைநிலைப்பணி பெரும்பாலான சமயங்களில் வழி தவறிச் சென்று விடுகிறது. எனவே பொருள் சேர்க்கும் விருப்பமுள்ளோரின் நலன்களுக்கும் சட்டபூர்வமான தன்மையை உண்டாக்கவும் பொதுக் கருத்தைத் தோற்றுவிக்கவும் செய்யப்படும் முயற்சிகளுக்கு மிடையே பிணக்குகள் தோன்றுகின்றன. இது தொடர்ச்சி யான ஒரு உறுதியற்ற தன்மையை உண்டாக்குகிறது. அது இன்றைய நெருக்கடியின் இயல்பாக விளங்குகிறது.

மேலே கூறப்பட்ட முரண்பாடுகள் பல்வேறு வகைகளில் வெளிப்படுகின்றன. அதில் ஒன்றுக்கு "அரசின் நிதி நெருக்கடி" எனப் பெயர். அதாவது அரசுக்கு வளர்கின்ற கடன் சுமையைத் தோற்றுவிக்கிற அரசின் செலவுக்கும், அதன் வருமானத்திற்கும் இடையிலுள்ள வெளி. அரசு தன் சட்டபூர்வமான தன்மையை இழந்துவிட்டதன் வெளிப்பாடே நிதி நெருக்கடியாகும். ஒன்றிணைக்கப்பட்ட குடிமக்களில் பல கூட்டத்தவர்கள், அவர்கள் வரிகளாகச் செலுத்தும் தொகையைக் காட்டிலும் அதிகமான தொகையை அரசு செலவிட வேண்டுமெனக் கோருகிறார்கள் பொதுவாகச் சொன்னால் இப்பொழுதெல்லாம் மனித சமுதாயத்தை ஒழுங்குபடுத்துவதற்குச் சந்தை விதிகளே திறமையுள்ளவைகளாக உள்ளன என்று கூறுவனத நம்பு வதற்கு மிகச் சிலரே உள்ளனர். தேசிய வருமானத்தின் உருவாக்கமும், பகிர்ந்தளித்தலும் அரசியல் முடிவுகள் செய்வதை மேலும், மேலும் சார்ந்திருக்கிறது என்பது மிகவும் தெளிவாகிக் கொண்டிருக்கிறது. அதன் விளைவாக மக்கள் தொகையில் பல ஒன்றிணைக்கப்பட்ட கூட்டத்தினர் அரசின் மீது மிக அதிகமான நிர்ப்பந்தம் கொடுக்கிறார்கள். எடுக்கப்படும் முடிவுகள் பெரும்பாலும் ஒரு வலிமைச் சமநிலையின் விளைவாகத்தான் இருக்கிறது. தேசிய வருமானத்தைப் பகிர்ந்தளிப்பதன் மேல் கொடுக்கப்படும் இந்த நிர்ப்பந்தமே பணவீக்கத்தின் ஒரு காரணமாகத் திகழ்கிறது.

அதற்கு மாறாக, வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளவர் களில் அரசு ஊழியர்களின் எண்ணிக்கையின் விகிதம் அரசின் பணிகள் விரிவடைவதால் உயர்கிறது. விஞ்ஞான-தொழில் நுட்பச் சூழ்நிலைகளில் முதலாளித்துவ முறை பணம் சேர்க்கும் வழிகளினால் இது இன்றியமை யாதது ஆக்கப்பட்டாலும்கூட, இது தொழிலாளர்களின் சந்தை விரிவாக்கம் செய்வதில் முடிகிறது. இதன் செயல் பாடானது முதலாளித்துவ முறைக் குவியல், முதலாளித்துவ

முறைத் தொழிலாளர் சந்தை ஆகியவற்றின் விதிகளுடன் மோதிக் கொள்கிறது.

பகுப்பாய்வின் முடிவில் அரசின் பணிகள் பெருகியிருந்த போதிலும் உற்பத்தியின் சுழல் தன்மையை அது வெல்ல முடியவில்லை. சாதிக்கப்பட்டவற்றினால் நடைமுறையில் பயன்பெறுவது,—குறிப்பாக வேலை வாய்ப்புத் துறையில் சமத்துவமின்மை மீண்டும் தோன்றாமல் செய்வது, ஆகியவற்றைச் செய்ய முடியவில்லை. குறிப்பிட்ட பகுதியினர் வளர்வதை இறுதி நிலைப்படுத்துவது, முடிவாக தொழிலாளி வர்க்கம் மற்றும் பிற சமூகப் படிநிலையில் உள்ளவர்களின் புதிய தேவைகளை நிறைவு செய்ய முடியாமை— ஆகியவை நிரூபிக்கப்பட்டுவிட்டன.

இம்மாதிரியான சூழ்நிலையில் புதிய தாராளக் கொள்கைகளின் குறிப்பிடத் தகுந்த அளவு மலர்ச்சி, முதலாளித்துவ நாடுகளில் தெளிவாகத் தெரிகிறது. இது சித்தாந்தம் தொடர்பான ஒரு விஷயமாகும்; இது பொருளாதார அமைப்புக்களை மறு சீரமைக்கும் நிகழ்ச்சிப் போக்கை நியாயப்படுத்துவதற்கும், 18 வது நூற்றாண்டின் உணர்வுகளின் அடிப்படையில் அரசு தலையீட்டுக்கு எதிரான விவாதத்தின் மீது கவனத்தைச் செலுத்துவதற்கும் முயல்கிறது. இந்தக் கொள்கைகள் பரவலாக, ஆதரவு பெறக் கூடும். ஏனெனில் அரசின் நெருக்கடியினால் தோற்றுவிக்கப்பட்ட அதிருப்தியை இவைகள் பயன்படுத்துகின்றன. இவைகள் படைத்துறைசாரா மக்கள் சமுதாயத்தின்— தனித்து நின்று செயலாற்றும் திறமையைப் புகழ்ந்து பேசுகின்றன. பொருளாதார வளர்ச்சியின் மீது ஜனநாயகக் கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கையைத் தடுக்க முயல்கின்றன.

விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் சாதனைகளைத் தொழிலாளி வர்க்கம் வேறு மாதிரியான வழியில் பயன்படுத்த எண்ணினால், அரசில் பல சிறந்த நற்பயன்

களை விளைவிக்கக்கூடிய சீர்திருத்தங்கள் வேண்டுமெனவும், புதிய கொள்கைகளுடன் சட்டபூர்வமான ஜனநாயக அரசு தோற்றுவிக்கப்பட வேண்டும் எனவும் உடனடியாகக் கோரவேண்டும். இது ஒரு மிகவும் சிக்கலான பிரச்சினை. கொள்கை அடிப்படையில் ஒரு நாட்டின் அரசாண்மையை வெளிப்படுத்துகிற அங்கங்களின் அதிகாரத்தைச்செயல்திறம் உள்ளதாக எவ்வாறு ஆக்குவது; பொருளாதார வளர்ச்சியைத் திட்டமிடுவதற்கான ஓர் உண்மையான வாய்ப்பை எவ்வாறு கொடுப்பது, எவ்வாறு தொழிற்சாலைகளைக் கட்டுப் படுத்துவது—குறிப்பாக பெரும் தொழிற்சாலைகளை—அதே நேரத்தில் மக்கள் தொகை, அரசின் செயல்களைக் கட்டுப் படுத்துவதை மிகப்பெரும் அளவில் எந்த வழிகளில் பயனுள்ளதாக ஆக்குவது என்பவைதான் பிரச்சினைகள்.

ஆராய்ச்சிக் கட்டுரையும், சில பேச்சாளர்களும், தொழிலாளி வர்க்கத்திடையே பரவிவரும் அதிருப்தியைப் பற்றிக் குறிப்பிடும்போது அது பற்றி மிகவும் ஏற்புடைய முறையில் விளக்கினார்கள். ஏனெனில் அதனுடைய புதிய தேவைகள் நிறைவு செய்யப்படவில்லை. எனினும் இந்த அதிருப்தியின் காரணமாக தொழிற்சங்கங்கள் தானே வளர்ச்சியடைவதோ தொழிலாளி வர்க்கம் அரசியல் பலம் பெறுவதோ இல்லை. உதாரணமாக அமெரிக்க ஐக்கிய நாடுகளில் தொழிற்சங்கங்கள் தங்களுடைய சக்தியை இழந்து வருவது போலத் தோன்றுகிறது. அதற்கு மாறாக, வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகள் மூன்று மையங் களில் ஒன்று சேர்கின்றன என்று இந்த மாநாட்டில் குறிப்பிடப்பட்டது. இவைகள் ஒவ்வொன்றிலும் வரலாற்றுச் சூழ்நிலைகளின் விளைவாக சக்திச் சமநிலையை அடிப்படையாகக் கொண்டு நிலைகள் உருவாக்கப்படும். முதலாளித்துவம், பல மையங்களை அடிப்படையாகக் கொண்டு தன்னை ஒன்றிணைத்துக் கொண்டுள்ள வேளையில், நிலவுகிற இந்த உண்மையிலிருந்து தொழிலாளி வர்க்கத்தின் இயக்கத்தின் ஒருமுனைப்படுத்தும் போக்கும்

தோன்ற வேண்டும். ஆகவே ஐரோப்பிய மட்டத்தில் தொழிலாளி வர்க்க ஒற்றுமையைப் பேசும்போது, பல்வேறு நாடுகளில் உள்ள தொழிலாளிவர்க்கத்தை அரசியல் மற்றும் தொழிற்சங்கமட்டத்தில் பிரதிநிதித்துவப்படுத்துகிற அமைப்புகளால் அது சாதிக்கப்பட வேண்டும். சோஷலிச மற்றும் சமூக ஜனநாயக மரபுகளைக் கொண்டுள்ள, இப்போதுள்ள கட்சிகளையும் தொழிற்சங்கங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும். அதேவேளையில் நிச்சயமாகச் சென்ற 30ஆண்டுகளாக ஐரோப்பாவில் உருவானது போன்ற சமூக ஜனநாயகவாதிகளின் சோதனைகள் தோன்றியபோது நிகழ்ந்த நெருக்கடிகளையும் கருத்தில் கொள்ள வேண்டும். வேறுபட்ட சோஷலிச மற்றும் சமூக ஜனநாயக நடவடிக்கைகளிடையேயுள்ள குறிப்பிடத்தகுந்த வேறுபாடுகளையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஒற்றுமையை நோக்கிய இயல்புகள் ஒரு குறிப்பிட்ட அளவு வளர்ந்து நடைமுறையில் பயனளித்து வருகிறது. ஐரோப்பிய தொழிற் சங்க இணையத்தின் மாநாடு பல பொது இலட்சியங்களை உருவாக்கியிருக்கின்றது. அவைகள் குறிப்பாகத் தொழிற் சங்கங்களுக்காக—குறைந்த உழைப்பு நேரம் கொண்ட வாரம், தொழிற்சாலைகளைத் தொழிலாளர்களே கட்டுப்படுத்துவது, பொதுவாக நாட்டின் பொருளாதாரம் முழுமையையும் கட்டுப்படுத்துவது ஆகிய பொது இலட்சியங்களை உருவாக்கியுள்ளன. பல்வேறு நாடுகளில் உள்ள தொழிற் சங்கங்களுக்கிடையே, வேறுபாடுகள் பல இருந்த போதிலும், பல பத்தாண்டுகளில் ஐரோப்பாவில் முதன் முறையாக, முதலாளித்துவ நாடுகளில் உள்ள தொழிலாளர்களிடையே ஒரு கூட்டான போராட்டத்திற்கான அடிப்படைகள் ஏற்படுத்தப்பட்டன என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன. ஐரோப்பியப் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் முன்னணியில் வீர நடை போட்டுச் செல்கிற, ஒற்றுமைக்கான இந்தப் பரந்த நிகழ்ச்சிப் போக்கில் கம்யூனிஸ்டுகள் வகிக்கக் கூடிய பங்கை மேற்கு ஐரோப்பிய

கம்யூனிஸ்டுகள் உணர்வதும், அந்த நிகழ்ச்சிப் போக்கிற்கு அவர்களுடைய போராட்டத்தின் அனுபவத்தையும், அவர்களுடைய போதனையையும் கொடுத்துதவுவதும் முக்கியமாகும். அதன் மூலம் உலகம் முழுதும் உள்ள உழைக்கும் மக்களிடையே நிகழ்ந்து வரும் இந்த ஒன்றுபடுத்தும் நிகழ்ச்சிப் போக்கின் ஒரு பகுதியான ஐரோப்பாவின் ஒற்றுமையை வளர்க்க வேண்டும்.

**பேராசிரியர். யுடாக்கா ஃபுகுடா**

ஹோசாய் பல்கலைக்கழகம்

"சாகாய் ஷுகி" யின் ஆசிரியர் குழுத் தலைவர், ஜப்பான்.

## விஞ்ஞான – தொழில் நுட்பப் புரட்சியும், தொழிலாளி வர்க்கமும்

நான் இங்கு கேட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளும், அறிக்கைகளும் மிகுந்த ஆர்வமூட்டுபவையாக உள்ளன. அவை விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் பிரச்சினைகள் பற்றி மேலும் ஆராய்ச்சி செய்ய நம்மைத் தூண்டக்கூடியவைகளாக உள்ளன.

ஜப்பானிய மார்க்சீய சிந்தனையாளர்களால் இந்தத் துறையில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் தற்போது விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் வரையறை பற்றிய ஒரு கருத்துரு மீதும், அதற்கும் சமூகப் புரட்சிக்கும் உள்ள தொடர்பு மீதும், விஞ்ஞானம், உற்பத்தி, தொழில் நுணுக்கம் ஆகியவற்றின் உறவுகள் மீதும் — அதாவது வரலாற்றுப் பொருள் முதல் வாதத்தின் சாரத்துடன் தொடர்புகொண்ட கோட்பாட்டடிப்படையிலான பிரச்சினைகள் மீதும் அதிகமான கவனம் செலுத்துகின்றன. மேலும் அவைகள் தொழிலாளிவர்க்க இயக்கத்திற்கு, மிகவும் முக்கியமான ஒரு பொருளை உள்ளடக்கியதாக இருக்கின்றன. அதாவது விஞ்ஞான - தொழில் நுட்ப வளர்ச்சியையும்,

முதலாளித்துவத்தின் நவீனமயமாக்குதல் முறையையும் உள்ளடக்கியதாகவுள்ளன.

போர் பிற்காலம் விஞ்ஞான—தொழில் நுட்ப வளர்ச்சியினால் சிறப்புற்று விளங்குகிறது. அது மின்னணுவியல், பெட்ரோலியம் தொடர்பான இரசாயனம், அணுசக்தி உற்பத்தியைப் பொதுவாக இயந்திரமயமாக்குதல், சைபர் நித்தியத்தை நிர்வாகத்துறைக்குப் பயன்படுத்துதல், கம்ப்யூட்டர்களைப் பயன்படுத்துதல் ஆகியவற்றிற்கு முன்னுரிமை வழங்கி, வளர்ச்சியடையச் செய்யப்பட்டிருப்பதனால் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. உழைப்பிற்கு உதவும் இயந்திர சாதனைகளை விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் அடிப்படையில் தானியங்கிகளாக மாற்றுவதனால், மனிதர்களுக்கும், இயந்திரங்களுக்கும் இடையில் நிலவுகிற உறவுகள் அடிப்படையிலேயே மாற்றப்பட்டிருக்கின்றன. தானியக்க முறை முன்னேறியபொழுது இயந்திரங்களை இயக்குவதற்கு இயந்திரங்களையே பயன்படுத்தும் வாய்ப்புகள் தோன்றின. தானியக்க அமைப்பு முறைகள் உற்பத்தித் துறையில் தொழிலாளியின் உற்பத்தித் திறனுக்கு மாற்றாக மட்டும் பயன்படாமல், சில அறிவுத்திற வேலைகளுக்கு மாற்றாகவும்கூடப் பயன்படுத்தப்படுகிறது. முன்னர் மக்களால் மட்டுமே செய்யப்பட்டு வந்த கட்டுப்பாட்டுப் பணிகள், உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கை ஒழுங்குபடுத்துதல் ஆகிய வேலைகள் இப்பொழுது இயந்திரங்களால் செய்யப்படுகின்றன. எனவே தொழிலாளி உற்பத்தியின் அடிப்படையான ஒரு காரணியாக விளங்குவது என்பது இல்லாமல் போய்விடுகிறது. இந்த விஷயத்தைப் பொருத்தவரையும்கூட நிச்சயமாக, விஞ்ஞான ஆராய்ச்சியிலும் தொழில் நுட்பத்தைத் தொழிற்சாலை உற்பத்திக்குப் பயன்படுத்துவதிலும் மனிதர்களே தொடர்ந்து முக்கியமான பங்கு வகிக்கிறார்கள். இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஏற்பட்ட இந்தப் பண்பியல் சார்ந்த மாற்றங்கள்தான் விஞ்ஞான- தொழில் நுட்ப வளர்ச்சியானது விஞ்ஞான

தொழில் நுட்பப் புரட்சி என்று அழைக்கப்படுவதற்கான காரணங்களை விளக்குகின்றன.

1950 களின் இரண்டாவது பாதியிலிருந்து ஜப்பானிய முதலாளித்துவம் ஒரு வேகமான வளர்ச்சிக் காலத்தில் நுழைந்தது; அதற்கான அடிப்படை அந்த சமயத்தில் தொடங்கிய நாட்டின் பொருளாதாரத்தின் பெருமளவு, தொழில் நுணுக்க மறுசீரமைத்தலினால் ஏற்பட்டது. உற்பத்தியைத் தானியக்கத் தன்மைகொண்டதாக ஆக்குவது மூன்றுதிசையில் சென்றது. 1. உற்பத்தி நிகழ்ச்சிப்போக்கை இயந்திரமயமாக்கும் துறையில். (கார் தொழிற்சாலைகள், மின்பொறியியல் முதலிய கோத்திணைப்புத் தொழிலில் சரக்கு கொண்டு செல்லும் துறை சார்ந்த அமைப்புமுறைக் கட்டுப்பாடுகள்) 2. இரசாயன உற்பத்தித் தொழிலில். (எண்ணெய் சுத்திகரிப்பு, செயற்கை நூலிழைகளைத் தயாரித்தல், உலோக வேலையில் இரசாயன நிகழ்ச்சிப் போக்குகள்) 3. தகவல் தொழில் துறையிலும், செய்திப் போக்குவரத்து முறையிலும். (அலுவலக வேலைகளைக் கட்டுப்படுத்துவது, தகவல் புள்ளி விவரங்களைத் தொகுப்பதற்கான தகவல் புள்ளிவிவரங்களைச் சேகரித்தலும், அது மாற்றப்படும் முறையும்.)

விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சி, புதிய வகையான உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கும், புதிய தொழில் நுட்பத்தையும், புதிய தொழிற் கருவிகளை பயன்படுத்துவதற்கும், உற்பத்தியைத் தானியக்கமாக்குவதற்கும் மட்டும் பயன்படவில்லை. அது தொழிற்சாலை, போக்குவரவு, தகவல், ஆற்றல் ஆகிய துறைகளுக்கும் பரவுகிறது. அது வாணிபம், கடன் வசதிகள், நிதியியல்முறை, கல்வி, நிர்வாகம் ஆகிய துறைகளுக்கும் பரவுகிறது. மிக அதிகமாக வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளுக்கிடையிலான போட்டியை, விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியானது பெரிதும் பாதிக்கிறது. இது இவ்வாறிருக்க தொழில் நுட்ப அறிவை ஏற்றுமதி செய்வது பெரும்

முக்கியத்துவம் உடையதாகிறது. யாவரும் அறிந்திருப்பது போல, அறிவாளிகளும், வல்லுநர்களும், அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு ஓடிப் போய் விடுவது இந்த நிகழ்ச்சிப் போக்கிற்குப் பெரும் உதவியாகவுள்ள ஒரு காரணி யாகும். முதலாளித்துவத்தின் கீழ் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சிக்கு, வேகமாக வளர்ந்து வரும், இராணுவத் தொழிலின் மிக வேகமான வளர்ச்சி ஒரு முக்கியமான தூண்டுகோலாக விளங்குகிறது. அதன் முறையில் முதலாளித்துவ நாடுகளிலிருந்து ஆயுதங்கள் அனுப்பப் படுவது, புது வகை ஏகாதிபத்திய ஆதிக்க உருவங்களையும், அடிமைத்தனத்தின் உருவங்களையும் தோற்றுவிக்கிறது.

விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி புதிய கூரான பொருளாதார-சமூகப் பிரச்சினைகள் தோன்றுவதற்கு இடமளிக்கிறது. வேலைக்கமர்த்தப்பட்ட தொழிலாளர் படையில், தொழில் வித்தகர்களின் விகிதமும், நிர்வாகத் துறைப் பணியாளர்களின் விகிதமும், அலுவலகப் பணி யாட்களின் விகிதமும், வேகமாக அதிகமாகிக் கொண்டே வருகின்றன. வேகமான பொருளாதார வளர்ச்சியை ஜப்பான் கண்ட கடந்த பதினைந்தாண்டுகளாக (1955 லிருந்து 1970 வரை) சேவைக்கும், பேணுதலுக்கும் தேவை அதிகரித்ததனால் ஜப்பான் பொறியியலாளர், தொழில் நிபுணர்கள் ஆகியோரின் எண்ணிக்கை செய்தொழில் துறையில் 2.4 மடங்கு பெருகியுள்ளது. (167,000 லிருந்து, 398,000 ஆக). அதே காலத்தில் தயாரிப்புத் தொழில் துறையில் நிர்வாகப் பணியாளர்களின் எண்ணிக்கையானது 2.5 மடங்குகள் அதிகரித்தது. (278,000 முதல் 677,000 என்ற அளவு வரையில்). அது விரிவாக்கம செய்யப்பட்ட நிறுவனங்களுக்குள்ளாக வளர்ச்சியடையும் வேலைப் பகுப்புடன் தொடர்புடைய நிர்வாக, கட்டுப்பாட்டு வேலை களின் வளர்ந்து கொண்டிருக்கும் அளவினாலும், நேரடி யாய்த் தொழிற்சாலை நிறுவனங்களில் நிர்வாகப்பணிகள் தனிமைப்படுத்தப்படுவதனாலும் தோற்றுவிக்கப்பட்டது. அலுவலகப் பணியாளர்களின் எண்ணிக்கை வளர்ந்து

கொண்டிருந்தது. எனினும் 1960 களின் இரண்டாவது பாதியிலிருந்து கம்ப்யூட்டர்கள் பயன்படுத்தப்படுவதனால், மேலே கூறப்பட்ட வேலையாட்களின் வளர்ச்சி விகிதம் குறிப்பிடத்தகுந்த அளவு குறைந்து விட்டது.

ஒரு தொழிற்சாலைக்குள் பணியாற்றும் தொழிலாளர் களின் வேலையின் கட்டமைப்பில் மாற்றம் ஏற்பட்டதன் விளைவாக தனித் தனித் தொழில்களுக்கிடையே புதிய உறவுகள் வெளிப்பட்டுள்ளன. இது அனைத்திற்கும் மேலாக, இன்றைய தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளி களுக்கும், அலுவலகங்களில் பணியாற்றும தொழிலாளி களுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகள், ஏறத்தாழ முழுதும் மறைந்துவிட்டதனால் வெளிப்படுகிறது. அதே வேளையில் ஒருபுறம் தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்கள், மறுபுறம் நிர்வாகப் பணியாளர்கள், அலுவலகப் பணியாளர்கள், தொழில் நிபுணர்கள் ஆகியோரின் உழைப்புச் சூழ்நிலைகள் ஒரே மட்டயாகக் கட்டுப்பட்டுள்ளன. கம்ப்யூட்டர்களையும் உள்ளிட்ட புதிய அலுவலகத் தொழில் நுட்பங்கள் பயன்படுத்தப் பட்டிருப்பதால் தானியங்கிகள் பயன்படுத்தப்படும் தொழில் நிறுவனங்களில் உள்ள தொழிலாளர்களின் நிலை போன்றதாக அலுவலகப் பணியாளர்களின் நிலையும் உள்ளது. அதேபோன்று தொழில் நுட்ப வல்லுநர்களும், நிர்வாகப் பணியாளர்களும், ஒரு பகுதி மட்டுமே நிர்வாக இயல்புடைய பல்வேறு தொழில் நுணுக்கப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். மூலதனத்தின் நலன்களைப் பாதுகாக்கும் தொழிலாளிவர்க்கத்தின் உயர்மட்டத்தில் உள்ள ஒரு சிலரைத் தவிர பொறியியலாளர்கள் தொழில் நுணுக்கப் பணியாளர்கள், அலுவலகப் பணியாளர்கள், நிர்வாகப் பணியாளர்கள், மேசையடித் தொழிலாளர்கள் ஆகியோரின் நிலையும் தொழிற் சாலையில் பணியாற்றும் தொழிலாளர்களின் நிலைபோன்றதாகவே உள்ளது என்று கூறலாம்.

**அட்டவணை—1**

**தயாரிப்புத் தொழிலில் உள்ள தொழிற்சாலைப் பணியாளர்கள், நிர்வாகப் பணியாளர்களிடையே [நிர்வாகப் பணியாளர்கள் அலுவலகப் பணியாளர்கள், தொழில் நிபுணர்களிடையே] உள்ள ஊதிய வேறுபாடுகள்.**

| வயது (ஆண்டுகள்) | தொழிற்சாலையில் பணியாற்றும் தொழிலாளர்கள்-100 | | |
|---|---|---|---|
| | 1960 | 1965 | 1973 |
| 18—19 | 96 | 96 | 99 |
| 20—24 | 103 | 98 | 98 |
| 25—29 | 113 | 108 | 102 |
| 30—34 | 124 | 121 | 110 |
| 35—39 | 132 | 132 | 120 |
| 40—49 | 146 | 147 | 125 |
| 50—59 | 154 | 157 | 157 |

*தானியங்கிகளையும், பொருட்களைத் தூக்கிச் செல்லும் அமைப்புகளையும் பயன்படுத்துவதானது உழைப்பு நிகழ்ச்சிப் போக்குகளை ஒரே சீரானவைகளாகவும், மிகவும் எளிமையானவைகளாகவும் ஆக்கியுள்ளது. இதனால் உற்பத்தித் துறையிலிருந்து மிகுதியான ஊதியம் பெறுவோர் வெளியேற்றப்பட்டு, அவர்களுடைய பணிகள் திறமையற்ற,*

குறைந்த கூலிக்கமர்த்தப் படும் தொழிலாளர்களுக்குக் குறிப்பாகப் பெண்களுக்கும், இளைஞர்களுக்கும் கொடுக்கப் படுகின்றன. வளர்ச்சியின் மிக உயர்ந்த அளவில் ஜப்பானியப் பொருளாதாரம் முன்னேறிக் கொண்டிருந்த பொழுது, கிராமப் புறங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை மிக அதிகமானதாக இருந்தது. மிக மிக எளிதாக்கப்பட்ட சலிப்பைத்தரும் வேலைகளில் அவர்கள் பயன்படுத்தப்பட்டனர். இந்தத் தொழிலாளர்கள் தொழில் தொடர்பான நோய்களுக்கும், அதிர்ச்சிகளுக்கும் இரையாகிறார்கள். குறிப்பாகப் பெண் களின் நிலைமை மிகவும் பரிதாபகரமானதாயுள்ளது. குடும்பச் செலவின் பாரத்தைக் குறைப்பதற்காக ஏதாவதொரு பணியில் ஈடுபட வேண்டுமென்று வேலையில் சேர்பவர்கள் மிகவும் இன்னல் நிறைந்த நிலையிலிருக் கிறார்கள். அவர்களுக்கு எந்தவித உரிமையும் கிடையாது. அவர்கள் மிகக்குறைந்த ஊதியத்திற்குத் தற்காலிகமான பணிகளுக்கு மனுச் செய்து கொள்ளுமாறு நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள். இயந்திரமயமாக்குதல் காரணமாகப் பெரிய தொழில் நிறுவனங்களிலிருந்து வெளியேற்றப்பட்ட நடுத்தர வயதுத் தொழிலாளர்களில் பெரும் பாலோரும், வயோதிகர் களில் பெரும் பாலோரும், நடுத்தர, சிறிய, மிகச்சிறிய நிறுவனங்களில் வேலைக்கு மனுச் செய்து கொள்கிறார்கள். அவர்களிற் சிலர்பெரிய தொழில் நிறுவனங்களில் தற்காலிகப் பணிபுரிய ஒத்துக் கொள்கிறார்கள். அதன் விளைவாக அவர் களுடைய மிகவும் சாதாரணமான உரிமைகளும் பிடுங்கப் பட்டு விடுகின்றன. அல்லது எந்த வித உரிமையும் இல்லாத பகுதி நேர ஊழியர்களாக ஆகிறார்கள். இந்தத் தொழிலாளர்கள் மிகக் குறைந்த ஊதியம் பெறுகிறார்கள். அவர்கள் ஓய்வு பெறும் வயதை அடையும் போது, அவர் களுடைய பணியை விட்டு நீங்கிய பின்னர், சாதாரணமான உயிர் வாழ்வதற்குத் தேவையான ஊதிய மட்டத்திற்கும் குறைவான ஓய்வூதியம் பெறுகின்றனர்.

எனவே முதலாளித்துவத்தின் கீழ் நடைபெற்றுக் கொண்டிருக்கும், விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சி தொழிலாளிவர்க்கத்தின் நிலை மிக மோசமாவதற்கு வழி செய்கிறது. தொழிலாளிகளின் உரிமைகளை அவர்களிட மிருந்து பறித்துக் கொள்கிறது. உழைப்பு நிகழ்ச்சிப் போக்கைத் தீவிரமடையச் செய்கிறது. தொழிலாளர் களுக்குத் தொழில் தொடர்பான நோய்களும் அதிர்ச்சிகளும் ஏற்படுகின்றன. தொடர்ந்து வேலையில்லாத் திண்டாட்டம் பற்றிய பயம் நீடிப்பதனால், அவர்களிடையே பாதுகாப் பின்மை மிகுதியாகிறது.

ஜப்பானில் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் எதிர்மறையான பிரச்சினைகளில் ஒன்று, **கோகய்** என நாங்கள் அழைக்கிற சூழ்நிலைக்கேடு உண்டாக்குவதே யாகும்; இந்தப் பிரச்சினை முதன் முதலாக 1955ம் ஆண்டில் அதாவது உயர்ந்த பொருளாதார வளர்ச்சியின் தொடக்கத்தில் வெளிப்பட்டது. ஆற்றல் தோற்றுவாயாக நிலக்கரிக்குப் பதிலாக எண்ணெய் பயன்படுத்தத் தொடங்கிய போதும் அதன் நுகர்வு அதிகரித்தபோதும் இந்தப் பிரச்சினை மிகவும் கூர்மையானதாயிற்று. எண்ணெய் மூலம் இயங்கும் பெரும் தொழிற்சாலைகள் நிறைந்த **யோகைச்சி** என்ற நகரம் மிக அதிகமான சூழ்நிலைக்கேட்டிற்கு உள்ளாயிற்று. அதுவே சூழ்நிலை கேடுறுவதற்கு மிகச் சிறந்த உதாரணமாகத் திகழ்கிறது.

1967 ல் ஜப்பானில் நிறைவேற்றப்பட்ட சூழ்நிலைப் பாதுகாப்பைப் பற்றிய சட்டம் **கோகய்** என்பதைக் கீழ்க்கண்ட மாதிரியில் வரையறை செய்கிறது. உற்பத்தியினாலும், வேறுவகையான மனித செயல் களினாலும், வளிமண்டலம், நீர்த்தொகுதி ஆகியவற்றைக் கேடுறச் செய்வது, அதிர்வுறச் செய்வது, தரையைப் பள்ளமாக்குவது, அதன் விளைவாகத் தோன்றுகிற நச்சுத் தன்மை நிறைந்த நாற்றம், மக்கள் உடல்நலத்திற்கும், அவர் களின் இயற்கைச் சூழலுக்கும் ஊறுவிளைவிக்கிற வேறு

வகையான மனித செயல்கள் ஆகிய இவையாவும் சூழ்நிலைக்கேடு என அழைக்கப்படுகின்றன, என்று எடுத்துரைக்கிறது. இந்த வரையரையிலிருந்து கோகய் தோன்றுவதற்கு ஏகபோக மூலதனமே பொறுப்பு என்பது பெறப்படுகிறது. ஏகபோக மூலதனம் அதனுடைய இலாபத்திற்கான வேட்கையில், எளிதாகச் சூழ்நிலையைக் கேடுறச் செய்யும் பொருட்களைக் கொண்டே, மலிவான மூலப்பொருட்களையும், எரிபொருட்களையும் உயிர்களைப் பலிவாங்கும் முறையில் பயன்படுத்துவதால் தான் கோகய் தோன்றுகிறது. மேலும் அது கழிவுப் பொருட்களை அழிப்பதற்கும் ஒலிகளையும், அதிர்வுகளையும் தடுப்பதற்கும், வளிமண்டலம்கேடுறுவதைத் தடுப்பதற்கும், எந்தவிதமான நடவடிக்கையையும் மேற்கொள்வதில்லை. பூர்ஷ்வா அரசு சூழ்நிலைப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில்லை என்பதனால் எங்கள் நாட்டை "ஜப்பான் தீவுக் கூட்டங்கள்" என்று நாங்கள் அழைப்பதுபோய் இப்போது "கோகய் தீவுக் கூட்டங்கள்" என்று அழைக்கிறோம்.

சூழ்நிலைக் கேட்டிற்கு முக்கியமான குற்றவாளிகளான ஏகபோக இணையங்கள், தங்களுடைய கட்டுப்பாட்டின் கீழ் அனைத்துத் தொழிற்சாலைகளையும் வைத்துக் கொள்கின்றன. —மின்சக்தி, உலோகத் தொழில், பாண்டங்கள் செய்யும் தொழில், சிமெண்ட், காகிதம், மரக்கூழ் ஆகிய தொழில்களை அவைகள் தங்கள் பிடியில் வைத்திருக்கின்றன. வளிமண்டலத்தின் தூய்மை கெடுவதனால் தோன்றும் பல நோய்கள்—அனைத்திற்கும் மேலாக, குழந்தைகள் சளிக்காய்ச்சலினாலும், மார்புச் சளி நோயாலும் மரிப்பது, மக்களது உடல் நலத்துக்குப் பெரும் பயமுறுத்தலைத் தோற்றுவிக்கும் ஒன்றாகும்; ஆறுகள் நச்சுத்தன்மை கொண்டதாக ஆவதும், மீன்கள் நச்சுத்தன்மை கொண்டதாக ஆவதும், தொழிற்சாலைகளின் கழிவில் வெளிப்படும் பாதரசத்துடன் இணைந்து ஏற்படும் உயிரியல் கூட்டுப் பொருட்களின் நச்சுத்தன்மையும் இங்கே கவனிக்கப்பட வேண்டிய விஷயங்களாக இருக்கின்றன. புதிய பண்டங்

களை உற்பத்தி செய்வதில் ஏற்படுகிற பெரும் போட்டியின் விளைவாக, வேறு தொழிற் கிளைகளால் தூய்மைக் கேடு ஏற்படுவதைக் காட்டிலும், இரசாயனத் தொழிற் சாலைகளால் ஏற்படும் தூய்மைக்கேடு மிகுதியாக உள்ளது. ஒவ்வொரு தொழிற்சாலையும், பிற தொழிற்சாலைகளால் உற்பத்தி செய்யப்பட்டுள்ள மருந்துகளைக் காட்டிலும் பண்பில் சிறிதளவே வேறுபட்ட புதிய புதிய மருந்துகளை விற்று, ஏராளமான இலாபம் பெற விரும்புகிறது. புதிய மருந்துகளை உற்பத்தி செய்வதில் உள்ள பெரும் போட்டிகளின் விளைவாக ஒவ்வொரு மருந்தின் ''ஆயுட்கால''மும் மிகக் குறைவாகப் போய் விடுகிறது. அதே வேளையில் அதனுடைய பாதுகாப்பை உறுதிப் படுததுகிற சோதனைகளும், அதைப் பயன்படுத்துவதனால் ஏற்படும் பின் விளைவுகளைக் காட்டுகிற சோதனைகளும் மேற்கொள்ளப்படுவதில்லை. மருந்துப் பொருட்கள் செய்யும் ஏகபோகங்களினால் உற்பத்தி செய்யப் படுகிற மருந்துகளும், அதனுடன் தொடர்பு கொண்ட தொழிற் சாலைகளால் உற்பத்தி செய்யப்படுகிற மருந்துகளும், மனித இனத்தின் உயிருக்கும் உடல் நலத்திற்கும் ஊறு விளைவிப்பவையாக உள்ளன.

இராணுவ காரியங்களுக்காக விஞ்ஞான-தொழில் நுட்பச் சாதனைகளைப் பயன்படுத்துவது தொழிலாளி வர்க்கத்தினரின் வாழ்க்கையில் ஓர் அடிப்படையான விளைவைத் தோற்றுவிக்கிறது. இன்றைய அணு ஆயுதங் களும், வேறுவகை ஆயுதங்களும் இரசாயனத்தையும், உயிரியலையும் அடிப்படையாகக் கொண்ட ஆயுதங்களும் மனித இனத்தின் அமைதியான வளர்ச்சிக்கு ஒரு பெரும் பயமுறுததலைத் தோற்றுவிக்கின்றன.

அமெரிக்க ஐக்கிய நாடுகள், மேற்கு ஜெர்மனி, பிரான்சு, ஸ்வீடன் ஆகிய நாடுகளும், வேறு பிற நாடுகளும், ஜப்பானும்கூட எதிர்நோக்குகிற வேறொரு முக்கியமான பிரச்சினையை இங்கே குறிப்பிடுவது ஏற்புடையதாக

இருக்கும். அரசு நிர்வாகத் துறைகளில் கம்ப்யூட்டர்களைப் பயன்படுத்துவதுதான் அது. 1978ன் இறுதியில், ஜப்பானின் மத்திய அரசு இலாக்காக்களிலும், அலுவலகங்களிலும் 299 கம்ப்யூட்டர்கள் இருந்தன. இவற்றில் 57 தபால், தந்தித் தொடர்புத்துறை அமைச்சரவையிலும், 49 தேசியப் பாதுகாப்பு இலாக்காவிலும், 46 போக்குவரவு அமைச்சரவையிலும், 35 பன்னாட்டு வாணிப மற்றும் தொழில்துறை அமைச்சரவையிலும், இன்னும் பிறஇடங்களிலும் இருந்தன. 1971 ல் பெரிய நகரங்களில் உள்ள அனைத்து ஆட்சி அரங்கத்தலைமை அலுவலகங்களிலும் நகராட்சி அலுவலகங்களிலும், கம்ப்யூட்டர் பயன்படுத்தப்பட்டது. அதே வேளையில் கம்ப்யூட்டர்களைப் பயன்படுத்திய சிறிய நகரங்களில் பயன்பட்ட கம்ப்யூட்டர்கள் விகிதம் 83.1 ஆக இருந்தது. மத்திய அரசு அலுவலகங்களில் புள்ளிவிவரங்களை ஒழுங்குபடுத்தும் பணிகளுக்கும், தகவல்களை முறைப்படுத்திப் பகுப்பாய்வு செய்வதற்கும், தொழில் நுட்பக் கணக்கிடு செய்வதற்கும், வங்கித் தொழிலிலும் ஆயுள் காப்பீட்டுத் தொழிலிலும், அளிப்பு, ஊதியப் பட்டுவாடா செய்தல், பிற சலுகை ஊதியங்களை அளித்தல் முதலியவற்றிற்கும், உள்ளாட்சி அரசு அலுவலகங்களில் புள்ளி விவர வேலைகளுக்காகவும், ஊதியப் பட்டுவாடாவிற்கும், மரம் வெட்டுதலுக்கான திட்டமிடுதலுக்கும், தனி நபர் பிரச்சினைகளை ஒழுங்கு படுத்துவதற்கும், வரி தொடர்பான பிரச்சினைகளை ஒழுங்கு படுத்துவதற்கும் இன்னும் சிலவற்றிற்கும் பயன்படுத்தப்படுகின்றன.

1970 ல் நிர்வாக தகவல் தொடர்பு அமைப்பு முறை ஒன்றைத் தோற்றுவிப்பதற்காக 16 அமைச்சரவைகளிலிருந்தும், துறைகளிலிருந்தும் பிரதிநிதிகளைக் கொண்ட ஆய்வுக் கழகம் ஒன்று ஜப்பானில் உருவாக்கப்பட்டது. பின்னர் கட்டுப்பாட்டுத்துறை, காவல்துறை, தேசியப் பாதுகாப்புத்துறை, தபால் மற்றும் தந்தி தொடர்பு அமைச்சரவை, போக்குவரத்து அமைச்சரவை, இன்னும் பிறவற்றின் பிரதிநிதிகளுடன், தகவலறிவிப்பு துணைக்குழு

ஒன்றும் நிறுவப்பட்டது. தகவல் தொடர்பு புள்ளி விவரங்களை மையப்படுத்துவதற்கான, அடிப்படைத் திட்டம் என அழைக்கப்படுகிற திட்டம் 1975 ல் நிறைவுற்றது. (மக்கள் தொகை பற்றிய தகவல் தொகுப்பு செய்யும் அமைப்பு முறை). ஒரு தொகுப்பின் கட்டமைப்பிற்குள் ஒவ்வொரு மனிதனைப் பற்றியும் தகவல்களை ஒன்று சேர்க்கிற இந்த முறை மனித உரிமைகளைப் பாதிப்பதோடு மட்டுமல்லாமல், முற்போக்கு இயக்கங்களில் தீவிரமாக ஈடுபட்டுள்ள மக்களைக் கட்டுப்படுத்துவதற்கான சாதனமாக இந்தத் தகவல்கள் பயன்படுத்தப்பட முடியும் என்பதனால் அபாயத்தைத் தோற்றுவிக்கிறது. உதாரணமாக, போலீஸ் இலாக்காவில் வைக்கப்பட்டிருக்கிற "ஒருவரது பட்டப் பெயர்களும், மறுபெயர்களும் நிறைந்த சென்ற கால வரலாற்றுத் தொகுதி", எந்த வகையிலும் குற்றங்கள் செய்யக்கூடியவர்களாகக் கருதப்பட முடியாத, அரசியல் செயல் முறைகளில் ஈடுபட்டுள்ள மக்களைப் பற்றியும், அமைப்புகளைப் பற்றியும் தகவல்களைக் கொண்டதாகவுள்ளது. இந்தச் சென்றகால வரலாற்றுத் தொகுப்பில், ஒருவருடைய பட்டப்பெயர்கள், மறுபெயர்கள், அவர்கள் பிறந்த ஆண்டு, மாதம், நாள், ஆற்றும்பணி, பணியாற்றுமிடம், தோற்றம், இயல்பு, நண்பர்கள், அவர்களின் கையெழுத்து, முதலான 40 விஷயங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

"கறுப்பர்களின் கலகங்கள்" என்று அழைக்கப்பட்ட கலகங்கள் நடைபெற்ற காலத்தில், "கலகக்காரர்களை" மட்டுமல்லாமல், சமூகச் செயல்முறைகளிலும், சமாதான இயக்கங்களிலும் ஈடுபட்டிருந்த ஏழு மில்லியன் மக்களைப் பற்றியும் யு. எஸ். பாதுகாப்புத்துறை தொகுத்து வைத்த வரலாற்று விவரத்தைப் போலவே இது விளங்குகிறது.

எனவே அரசு ஏகபோக முதலாளித்துவத்தின் கீழ் விஞ்ஞான -தொழில் நுட்பப் புரட்சி உழைக்கும் மக்களின் மீது மிகுந்த செல்வாக்குள்ளதாக விளங்குகிறது. அது (அ)

தொழிலாளிவர்க்கத்தின் உழைக்கும் சூழ்நிலைகளை மேலும் அதிகமான அளவு உறுதியற்ற தன்மையுள்ளதாய் ஆக்கும் முதலாளித்துவ இயந்திரமயமாக்கும் முறை; (ஆ) மக்களுடைய உடல் நலத்திற்குக் கேடுதரும் வகையில் ஏற்படும் சூழ்நிலைக்கேடு; (இ) சமாதானத்தைக் கேடுறச் செய்து போருக்கான தயாரிப்புகள் செய்வது, போரை வளர்ப்பது; (ஈ) ஏகபோக மூலதனத்திற்கும் அதன் அரசுக்கும் நாட்டின் மீது அரசியல் ஆதிக்கம் செலுத்துவதற்கான தொழில் நுட்ப சாதனத்தைத் தருவது ஆகிய வடிவங்களில் வெளிப்படுகிறது.

அதனால்தான் ஏகபோக மூலதனமும், பூர்ஷ்வா அரசும் விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் சாதனைகளை சமூக அடிப்படையில் அபாயகரமான முறையில் பயன்படுத்துவதை எதிர்த்து ஒரு வலிமையான போராட்டத்தைத் தொழிலாளி வர்க்கமும், உழைக்கும் மக்கள் அனைவரும் மேற்கொள்கின்றனர். முதலாளித்துவ நவீனமயமாக்குதலை எதிர்த்தும் சூழ்நிலையை மாசுபடுத்துவதற்கு எதிராகவும், மக்கள் தொகை பற்றிய தகவல் தொகுப்பைத் தயாரிப்பதற்கெதிராகவும் சமாதானத்திற்காகவும் போராடுவதுதான்— இந்தப் போராட்டத்தின் முக்கியமான வழிகளாகும்.

மக்களின் கூட்டணியால் ஆன ஏகபோக அரசு எதிர்ப்பு அணி ஒன்றை அமைப்பதும், சமுதாயத்தின் வளர்ச்சிக்காக ஒரு சோஷலிச வழியைப் பின்பற்றுவதும், உண்மையான சமூக முன்னேற்றத்தைப் பெறுவதற்கு விஞ்ஞானத்தையும், விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியையும் முனைப்பாகப் பயன்படுத்துவதும் ஆகிய இவைகளே முற்போக்கு சக்திகளை எதிர்நோக்கும் அடிப்படையான கடமைகளாகும்.

**பேராசிரியர். மில்கோ டாஸ்கலோவ்.**

வேட்பாளர் விஞ். (பொருளா) [Cand. Sc (Econ)]

மூத்த ஆராய்ச்சியாளர், பொருளாதார நிறுவனம்,

பல்கேரிய விஞ்ஞான கலைக்கழகம்.

## விஞ்ஞான –தொழில் நுட்பப் புரட்சியும், அரசு ஏகபோக ஒழுங்கு முறையின் நெருக்கடியும்

மனித சமுதாயத்தின் வளர்ச்சியின் மீதும், போர் பிற்காலத்தில் முதலாளித்துவ நாடுகளில் உழைக்கும் மக்களின் போராட்டத்தின் மீதும், உலக சோஷலிச அமைப்பு முறையின் புரட்சிகரமான விளைவுகள் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் தாக்கத்துடன் மிக நெருங்கிய தொடர்புடையதாக விளங்குகின்றன.

இந்தப் புரட்சி, அனைத்தையும் உள்ளடக்கிய நிகழ்ச்சிப் போக்கு ஆகும். அது முதலாளித்துவ பொருளாதார செயல் முறையையும், அதன் சமூகக் கட்டமைப்பையும், அமைப்புக் களின் கட்டமைப்பையும் மிகச் சிறப்பாக மாற்றுகிறது. முழுதும் புதுவகையான மூலப்பொருட்களும், ஆற்றல் தோற்றுவாய்களும், இயந்திரங்களும், சாதனங்களும், உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கில் நுழைந்துவிட்டிருக்கின்றன. புதிய தொழிற்சாலைகளும், உற்பத்தி வகைகளும், துறை களின் சமநிலைகளும், விகிதங்களும் தோன்றியுள்ளன. சுரங்கத் தொழில் - குறிப்பாக நிலக்கரிச் சுரங்கத் தொழில் சரிந்துள்ளது. மிக அதிகமான பயனுள்ள ஆற்றல் தோற்று

வாய்கள் முக்கியத்துவம் பெற்றுள்ளன. பொறியியல் தொழிலின் பங்கும் இரசாயனத் தொழிலின் பங்கும் உயர்ந்துள்ளன. அணுசக்தி, மின் அணு இயல், விண்கலங்களில் பறத்தல், விண்வெளி, சிறுகருவிகள் செய்தல், பெட்ரோலிய இராசயனம், தானியங்கிக் கருவிகள், சூழ்நிலைப் பாதுகாப்புக் கருவிகள், சிறப்பான எஃகு வகைகளை உற்பத்தி செய்வது, தூய உலோகங்கள், பொருட்கள், வேறு பொருட்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்வது ஆகியவை வேகமாக வளர்ச்சியடைந்துள்ளன. உற்பத்தித் திறனற்ற துறையின் வளர்ச்சி குறிப்பாக, விஞ்ஞானம், தொழில் நுட்பம், கல்வி, போக்குவரவு, சேவைகள், உடல் நலம்பேணல் ஆகியவற்றிற்கு அளிக்கப்படுகிற முக்கியத்துவத்தினால் மிகவும் தெளிவாகத் தெரிகிறது.

விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி முதலாளித்துவ உற்பத்தியின் தீவிரமான வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியுள்ளது. அது தொழிலாளர்களின் உற்பத்தித்திறனை உயர்த்துவதற்கும், முழு நிறைவாக்கப்பட்ட இயந்திரங்களையும், கருவிகளையும் தோற்விப்பதற்கும் அதிக அளவில் முன்னேற்றம் செய்யப்பட்ட உற்பத்தி முறைகளைப் பயன்படுத்துவதற்கும், மரபு வழியான மூலப்பொருட்களுக்கும், பிறபொருட்களுக்கும் பதிலாக அதிகப் பயனுடைய மூலப் பொருட்களைப் பயன்படுத்துவதற்கும், பெரும் அளவில், முதலாளித்துவப் பொருளாதாரத்தை புதுப்பிக்கவும், மீண்டும் பேணிக்காக்கவும் முக்கியமான காரணியாக விளங்குகிறது.

விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றத்தின் விளைவாக முதலாளித்துவ உற்பததி முறை தீவிரமடைவதும், அதன் மிகுந்த திறமையும், போர் பிற்காலத்தில் இரண்டு வகையான சமூக உற்பத்திப் பிரிவுகளின் வளர்ச்சி விகிதங்களை ஓரளவு ஒரே மட்டமாக்குவதற்கு வழிகோலின. இது இரண்டாவது பிரிவின் முக்கியத்துவத்தை உயர்த்தியது. அதாவது நுகர்வோர் பொருள் உற்பத்தியை, நுகர்வை மிக

முக்கியமானதாக ஆக்கியுள்ளது. மேலும் பொருளாதார நிலையில் அரசு ஏகபோக செல்வாக்கிற்கு அடிப்படையான கருவியாக நுகர்வோர் தேவையை ஒழுங்குபடுத்துவதை முக்கியமானதாக ஆக்கியிருக்கிறது.

எனினும் விஞ்ஞான — தொழில் நுட்பப் புரட்சியும், முதலாளித்துவப் பொருளாதாரக் கட்டமைப்பில் முன்னேற்றங்களும், பொருளாதாரத்தை அதிக அளவில் இராணுவமயமாக்குதலாலும், அதன் மிகுதியான நிலையற்ற தன்மையாலும், முதலாளித்துவ முறையின் சமூகப் பொருளாதார அமைப்பு முறைகளில் உள்ள எதிரெதிர் தன்மைகளாலும், முரண்பட்ட உருவங்களில் நடைபெறுகின்றன.

மறுஉற்பத்தி நிகழ்ச்சிப் போக்கின் ஒப்பீட்டடிப் படையிலான திறமையின் வளர்ச்சியும், அதனைத் தீவிரப் படுத்தியதும், முதலாளித்துவ அமைப்பு முறையை வலிமைப் படுத்த இயலவில்லை. சமூக உற்பத்தியின் கட்டமைப்பு, அமைப்பு, தொழில் நுட்ப - பொருளாதார, தொழில் நுட்ப அளவுருக்களில் ஏற்பட்ட முற்போக்கான மாற்றங்களுடன் கூடவே, முதலாளித்துவப் பொருளாதாரத்தில் முரண் பாடுகள் குவிந்துள்ளன; ஏறுமாறான தன்மைகள் வளர்ந்துள்ளன.

சந்தையில் நிகழும் மாற்றங்களுக்கேற்ப விரைவில் மாறுகின்ற தன்மையுடையதாக நிரூபித்த பிற தொழில் களையும், நிலக்கரி வெட்டியெடுத்தல், இரும்பு அல்லாத வேறு உலோகங்களை வெட்டியெடுத்தல், அபூர்வமான உலோகங்களை வெட்டியெடுத்தல் முதலிய இன்னும் பிற தொழில்களையும் தொழில்நுட்ப வகையில் மறுசீரமைக் கவும், நவீனப்படுத்தவும் முயற்சிகள் பல மேற்கொள்ள ப்பட்டபோதிலும், ஒருபுறம் புதிய முன்னேற்றம் வாய்ந்த விஞ்ஞானம் மிகுதியாகப் பயன்படுத்தப்படும் தொழிற் சாலைகளுக்கும், மறுபுறம், மரபுவழியான பழைய தேக்க

நிலை மிகுந்த தொழிற்சாலைகளுக்கும் இடையே நிலவும முரண்பாடுகள் மிகுதியாக வெளிப்பட்டன.

முதலில் வளர்ந்த முதலாளித்துவ நாடுகளின் பொருளாதாரத்தில் குறைந்துவரும் சுரங்கத் தொழிலின் பங்கு-குறிப்பாக வளரும் நாடுகளிலிருந்து பல்வேறு வகையான மூலப்பொருட்கள் மிகுதியாக இறக்குமதி செய்வதற்கு வழிகோலியது. இது தொழில் உற்பத்தியின் உயர்ந்துவரும் மட்டத்துடன், தேசியப் பொருளாதாரத்தின் தன்னிறைவுக்கான எரிபொருட்கள், மூலப்பொருட்கள் மற்றும்வேறு பொருட்களின் குறைவான அளிப்பிற்கும், அதன் நுகர்விற்கும் இடையே ஒரு மிகுதியான ஒத்திசைவின் மையைத் தோற்றுவித்துள்ளது. இவையனைத்தும் 1970 களின் முதல் பாதியில் முதலாளித்துவ உலகின் குறுக்கே பெருஞ் சீற்றத்துடன் வெகுண்டெழுந்து வந்த ஆற்றல், உணவு, மூலப்பொருட்கள் ஆகியவை தொடர்பான நெருக்கடிகளில் மிகவும் தெளிவாக வெளிப்பட்டன.

விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் சாதனைகளையும், இயற்கையின் மூலப்பொருட்களையும் உயிர் வேட்டையாடுகிற முதலாளித்துவம் பயன்படுத்துவது உயிரின வாழ்க்கைச் சூழலின் சம நிலையைத் தகர்த்தெறிகிறது. மேலும் அது தாவர வாழிடங்களையும், விலங்கின வாழிடங்களையும் மிக விரைவாகத் தூய்மைக் கேடுறச் செய்கிறது.

புதிய நவீன உழைப்பைச் சேமிக்கும், தொழில் நுட்பங்களையும் புதுவகையான உற்பத்தி முறைகளையும் பயன்படுத்துவதானது கூலிக்கமர்த்தப்படும் தொழிலாளிகளை மிகுதியாகச் சுரண்டும் இயல்பையும் உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கிலிருந்து தொழிலாளர் படையை வெளியேற்றுவதை நோக்கிய இயல்பையும் வலிமைப்படுத்தியுள்ளது. ஒரு கட்டமைப்பு இயல்பை மேலும், மேலும் பெற்று நீண்ட நெடுங்காலமாக நிலவிவரும் வேலையில்லாத்

திண்டாட்டத்தை மிகுதிப்படுத்தியுள்ளது. அது விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் பயனைப் பகிர்ந்து கொள்வதில் பங்குபெறுவதற்கான வாய்ப்பை உழைக்கும் மக்களிடமிருந்து பிடுங்கிக் கொள்கிறது. மேலும் வர்க்கங்கள் தனித்தனியாக, தெளிவாகப் பிரிக்கப்படுவதையும், சமூக சமத்துவமின்மையையும் ஆழப்படுத்துகிறது.

விஞ்ஞான - தொழில் நுட்ப முன்னேற்றத்தினாலும், மறுஉற்பத்தி நிகழ்ச்சிப் போக்கு தீவரப்படுத்தப்படுவ தாலும் தோன்றுகிற முரண்பாடுகள், மூலதனம் மிகுதியாகக் குவிக்கப்படுவதற்கும், தொடர்ந்த உற்பத்தித்திறன் குறைவுக்கும் இட்டுச் செல்கின்றன. அது முதலாளித்துவ நெருக்கடியின் கீழ், முதலாளித்துவப் பொருளாதாரத்தின் சிறப்பியல்பும் ஆகும். உழைக்கும் மக்களின் நுகர்வில் ஒப்பீட்டில் காணப்படும் ஒரு சுருக்கத்தை நோக்கிய இயல்புடன் ஒத்ததாக வளர்ந்து இந்த முரண்பாடுகள்—குறிப்பாக தேவை, அளிப்பு ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்கான அரசு ஏகபோக நடவடிக்கைகளின் பலமிழந்த திறமையாலும், சந்தையிலேற்படும், பெருமளவு ஏற்றத் தாழ்வுகளாலும் வெளிப்படுத்தப்படுகின்றன.

விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் வேகமான முன்னேற்றத்தின் விளைவாக நிலையான மூலதனம் வழக்காறற்றுப்போதலும், அதற்குப்பதிலீடு செய்வதும் மேலே சொன்ன இயல்பை ஒரு குறிப்பிட்ட அளவு மட்டுப் படுத்தி இருக்கிறது. எனினும் அது உற்பத்தித் தேவைகளுக்கு ஏற்ற சாதனங்கள் சிலவற்றை விட்டு வைத்திருக்கிறது. இவ்வாறு உற்பத்திச் செயல் திறனுக்கும், உண்மையான முதலாளித்துவ உற்பத்தியின் பரிமாணத்திற்குமிடையே ஒரு முரண்பாட்டை அது வெளிப்படுத்துகிறது.

முதலாளித்துவப் பொருளாதாரம், மிகப் பெருமளவு இராணுவமயமாக்கப்படுவதும், பொதுவாக அரசு ஏகபோகம் விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றத்தைத் தூண்டிவிடுவதும், முதலீடும், கடன் வசதிகளும்

விரிவடைதலும், பொருளாதாரத்தில் பணவீக்கத்தை மிக விரைவானதாக ஆக்கியுள்ளன. தங்களுடைய நிலைகளை வலிமையுறச் செய்வதற்காக விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் சாதனைகளைப் பயன்படுத்தும் முயற்சியில் பெரிய ஏகபோகங்கள் பின்பற்றிவரும் விலைக் கொள்கை அதேதிசையில் பணியாற்றியுள்ளது. இது மறுஉற்பத்தி நிகழ்ச்சிப் போக்கை மிகவும் சிக்கலானதாக ஆக்கியுள்ளது. மேலும் அது ஒருபுறம் பொருளாதார வளர்ச்சியில் அரசு ஏகபோகத் தூண்டுதலுக்கும், வளர்ந்து வரும் பணவீக்கத்திற்குமிடையே பண்பியல் அடிப்படையிலான ஒரு புதிய முரண்பாட்டைத் தோற்றுவித்துள்ளது. மறுபுறம் அரசு ஏகபோக பொருளாதார சூட்சுமத்திலும், ஏகாதிபத்தியப் பொருளாதார உறவுகளிலும் தொடர்புடைய திரும்ப முடியாத மாற்றங்களையும், குழப்பங்களையும் தோற்றுவித்துள்ளது.

விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி முதலாளித்துவ மறுஉற்பத்தியானது சமூகமயமாதலைத் தீவிரப்படுத்தியிருக்கிறது. இன்று விஞ்ஞான-தொழில் நுட்ப வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாத விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றத்தைத் தூண்டுவதில் பரந்த அளவில் அரசு ஈடுபட்டுக் கொண்டிருப்பது நவீன முதலாளித்துவ உற்பத்தியின் சமூக இயல்புக்கும், அதை ஒழுங்கு படுத்துவதில் அரசின் ஏகபோகத் தன்மைக்குமிடையில் உள்ள முரண்பாட்டை மிகைப்படுத்தியுள்ளது.

விஞ்ஞான - தொழில் நுட்ப சாதனைகளின் அடிப்படையில் சமூக உற்பத்தியின் மிகுந்துவரும் திறமையையும், அது தீவிரமடைவதையும் தொடர்ந்து பல பொருளாதார, சமூக முரண்பாடுகள் தோன்றியுள்ளன. முதலாளித்துவ மறுஉற்பத்தியின் இயக்கவியல் தன்மையும், முரண்பாடு நிறைந்த தன்மையும், விஞ்ஞான - தொழில் நுட்ப முன்னேற்றத்துடன், முதலாளித்துவப் பொருளாதாரத்தின் விரைவான வளர்ச்சிக்கு

உதவியாகவுள்ள அடிப்படைக் காரணிகளும் இணைந்து பொருளாதார, சமூக, கட்டமைப்பு தொடர்பான முனைப்பான முரணபாடுகளைத் தோற்றுவித்துள்ளன என்ற உண்மையிலேயே முக்கியமாக வெளிப்பட்டன. ஆகவே 1970 களின் துவக்கக்கட்டத்தில் கட்டமைப்புக் காரணிகளின் எதிர்மறை விளைவுகள் சுழல் முரண்பாடு களின் வேலையுடன் பின்னிப்பிணைந்தமைந்தன. அத்துடன் அவைகள் பொருளாதாரத்தின் நிலையற்றதன்மையைப் பெருமளவில் உயர்வடையச் செய்ததுடன், 1974—1975 இல் நிகழ்ந்த சுழல் நெருக்கடியின் வெடித்து வெளிப்படும் இயல்பையும் உயர்வடையச் செய்தன.

அரசு ஏகபோகக் கட்டுப்பாடுகளின் மூலம் சந்தை நிலவரங்களைப் பாதிக்கக் கூடிய செயல்திறன் ஒரு வரம்பிற்குட்பட்டதுதான் என நிரூபிக்கப்பட்டு விட்டது. எரிபொருள்கள், மூலப்பொருட்கள் ஆகியவற்றின் விலை உயர்வினால் தோற்றுவிக்கப்பட்ட இன்னல்களைக் குறைப் பதற்காக மேற்கொள்ளப்பட்ட நாணயச் செலாவணிக் குறைப்பு நடவடிக்கைகள், நிதியமைப்புமுறை, கடன் கொடுத்தல்முறை ஆகியவற்றில் ஏற்பட்ட பணவீக்கம், தடுமாற்றங்கள், வாணிபத்திலும், பன்னாட்டுச் செலுத்தல் நிலையிலும் ஏற்பட்ட சீரழிவு ஆகியவை நெருக்கடி நிகழ்ச்சிப் போக்கிற்கு ஒரு தூண்டுகோலாக விளங்கின. அவைகள் சுழல் தன்மை வாய்ந்த சமநிலைக்கேட்டைச் சரி செய்வதற்கு மாறாக அதை மேலும் அதிகரிக்கச் செய்தன.

1970 களில் ஏற்பட்ட முதலாளித்துவ வளர்ச்சி, குறிப்பாக 1974—1975 ன் சுழல் நெருக்கடி, ஏகபோக பூர்ஷ்வாக்கள் நெருக்கடி இல்லாத, நிலையான முதலாளித்துவப் பொருளாதாரத்தை உத்திரவாதம் செய்ய முடியாது என்பதை உறுதியாக நிரூபித்து விட்டது. திறமை குறைகிறது என்பதையும், அரசு ஏகபோகக் கட்டுப்பாட்டு முறையும் முதலாளித்துவப் பொருளாதாரச் செயல் முறைத்

திட்டமும் ஒரு நெருக்கடி நிலையில் உள்ளன என்பதையும் உறுதியாக நிரூபித்து விட்டது.

போர் பிற்காலத்தில் விஞ்ஞான - தொழில் நுட்ப முன்னேற்றமும், பொருளாதார வளர்ச்சியும் பற்றிய பிரச்சினைகள் முதலாளித்துவ நாடுகளில் முன்னணிக்குக் கொண்டுவரப்பட்டன. அவைகள் உலக நிலையில் ஏற்பட்ட மாற்றங்களினாலும், முதலாளித்துவப் பொது நெருக்கடி தீவிரம் அடைந்ததனாலும் இரண்டு சமூக அமைப்பு முறைகளிடையேயான போட்டியின் விளைவாகவும் இன்றியமையாதவையாக விளங்கின. எனினும் இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முயற்சியில் ஏகபோக பூர்ஷ்வாக்கள் பயன்படுத்திய உருவங்களும், முறைகளும் சந்தை இயக்கமுறை சூட்சுமங்களின் செயல்முறைகளின் சிறப்புத்தேவைகளுடனும், விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் தேவைகளுக்கு இசைந்து போவதற்கான அதன் வாய்ப்புகளுடன், மோதிக்கொள்கின்றன. முதலாளித்துவப் பொருளாதாரத்தில் சந்தை இயக்க முறைகளின் வேலையைக் கட்டுப்படுத்துவதற்காக ஒழுங்கு முறைவிதிகள் உருவாக்கப்படவில்லை. தங்களைத் தாங்களே ஒழுங்கு படுத்திக் கொள்ளும் திறமையை இழந்து தன்னியல்பாக எழும் போட்டியிலும், சந்தையிலும் குற்றங்குறைகளை நீக்கும் நோக்கத்துடன் மட்டுமே அவைகள் உருவாக்கப் பட்டன. முதலீட்டு முடிவுகள் போட்டி விதிகளினாலும், ஏகபோக இலாபங்களாலும் வழி நடத்தப்படுகிற தனி நிறுவனங்களினால் மட்டுமே செய்யப்படுகின்றன.

முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி நிலையின் இரண்டாவது, மூன்றாவது படிநிலைகளின் தனிச்சிறப்பான சூழ்நிலைகளில் அரசு-ஏகபோகக் கட்டுப்பாடுகள் விஞ்ஞான-தொழில் நுட்ப வளர்ச்சிக்கான சாதகமான சூழ்நிலைகளை உருவாக்குவதற்கு முனைப்பான பங்கை மேற்கொள்ளுமாறு செய்யப்பட்டன.

இதைத் தவிர பொருளாதாரத்தை இராணுவமய மாக்கியதாலும், கடன், முதலீடு பரவுதலுக்குத் தரப்பட்ட தூண்டுதல்களாலும் முதலாளித்துவ நாடுகளில் ஏற்பட்ட மாபெரும் அரசாங்கச் செலவுகள் மோசமாகி வரும் குழப்பங் களுக்கும், வரவு செலவில் விழும் துண்டுகளுக்கும் வழி செய்திருக்கின்றன. மேலும் பணவீக்க நிகழ்ச்சிப் போக்கு களைத் தீவிரப்படுத்தியும் இருக்கின்றன. பணவீக்கத்தைத் தணிக்கவும், சந்தைநிலவரத்தை மட்டுப்படுத்தவும் எடுக்கப் பட்ட செலாவணித் தளர்வு நடவடிக்கைகள் வளர்ச்சி விகிதங்களைக் குறைக்கவே உதவின.

இந்த நிகழ்ச்சிப் போக்குகள் தீவிரமடைந்ததுடன் 1950 களிலும் 1960களிலும், விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றத்தையும், சந்தை நிலவரத்தையும் ஒரு பெருமளவு தூண்டிவிட்ட அரசு-ஏகபோகக் கட்டுப்பாடு, 1970 களில் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் செயல் முறை சூட்சுமத்தில் நிகழ்ந்த குழப்பங்களை மேலும் அதிகரிக்கச் செய்தது. முதலாளித்துவப் பொருளாதார முறையின் நோயை நீக்குவதை விட்டு விட்டு, அது பணவீக்கத்தின் வளர்ச்சியையும் கட்டமைப்பின் தாறுமாறான வளர்ச்சியையும், மிகுந்த முரண்பாடுகளையும் மேம்பாடடையச் செய்தது. தீவிரமடைந்த பணவீக்கம் அதன் முறையில் பொருளாதாரத்திலிருந்த செலுத்தல் சமநிலையையும், பன்னாட்டுச் செலுத்தல் நிலையையும் மாற்றியது. மேலும் அது மதிப்பு விதியின் செயல் முறையைத் திருத்தியமைத்தது. இதுபொருளாதாரத்தையும் பயன்படுத்தப்பட்ட அரசு ஏகபோக நடவடிக்கைகளையும் படுமோசமாகப் பாதித்தது. இவ்வாறு இது அவைகளின் விளைவைக் குறைத்தது அல்லது பயனற்றுப் போகும்படிச் செய்தது. ஹூபர்ட்ப் ரோச்சியர், "கட்டுப்பாடு மிக அதிகமான அளவு சரிநுட்பமில்லாததாகவும், மிகுந்த இடர்ப்பாடுடையதாகவும் ஆகியுள்ளது", என்று கூறினார்.

முதலாளித்துவ முறைக்குள் நிலவுகிற முரண்பாடுகள் தீவிரமடைவதும், தனி முதலாளித்துவ உருவங்களும், 1970 களில் நிலவிய உற்பத்தியின் சமூகத்தன்மைக்கு ஒத்திசைவானதாக இல்லாத அரசு ஏகபோகக் கட்டுப்பாடுகளும், பொருளாதாரத்திலிருந்த நேரடியான மற்றும் மறைமுகமான தொடர்புகளின் அமைப்பு முறைகளில் ஒரு குழப்பத்தைத் தோற்றுவித்தன. இது வளர்ச்சி, பணவீக்கம் ஆகியவற்றின் இயக்கங்களின் தொடர்பிலும், பணவீக்கம், வேலைவாய்ப்பு ஆகியவற்றின் இயக்கங்களின் தொடர்பிலும் ஏற்பட்ட சீர்குலைவில் பிரதிபலிக்கப்பட்டது. 1970 களில் பொருளாதார நிலையில் ஒரு விளைவாற்றலுள்ள செல்வாக்கைச் செலுத்தாதபடியும், 1950களிலும், 1960 களிலும் அந்த அமைப்பின் கட்டுக்கோப்புக்குள்ளாகப் பணியாற்றிய அந்த அமைப்பை ஒப்பீட்டடிப்படையிலான சமநிலையின் திடீர் சீர்குலைவுகளிலிருந்து காப்பாற்றாதபடியும் அரசு ஏகபோக ஒழுங்குமுறை அமைப்பு கையாலாகாமல் ஆகிவிட்ட நிலையை இது ஏற்படுத்தி விட்டது. அரசாங்க ஒழுங்குமுறைச் சாதனம் ஒழுங்கற்ற நிலையிலும், நெருக்கடியிலும் இருந்ததை இந்தப் போக்குகள் புலப்படுத்திக் காட்டின. பல தேசிய பொருளாதாரங்களில் பல்வேறான உருவங்களில் இது வெளிப்பட்டது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மத்திய அரசின் செலவின் மிகுதியான விரிவாக்கமும், மிகுந்த பண அளிப்பும் பண வீக்கத்தின் இயல்பைத் தீவிரப்படுத்தியிருக்கின்றனவே தவிர வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்கவோ வளர்ச்சியைச் சீராக்கவோ செய்யவில்லை. இங்கிலாந்தில் செலுத்தல் சமநிலையில் வளர்ந்து வந்த இடர்ப்பாடுகள், பொருளாதாரத்தைத் தொடர்ச்சியான சுமையைத் தாங்கும் நிலையில் வைத்திருக்கவும், தொடர்ச்சியாக வளர்ந்து வரும் அரசு ஏகபோக செயல் முறைகளுக்கு இட்டுச் செல்லவும், மேற்கொண்டிருந்த பணப் புழக்கத் தளர்வு நடவடிக்கைகளும், விரிவாக்கத்தைத் தூண்டுகிற நடவடிக்கைகளும் அரசாங்கத்தின் கட்டாயம்

என ஆக்கின. பொருளாதாரம் ஒரு விலை வீழ்ச்சியின் ஓரக் கரைக்குச் சென்றது. விலைகளையும், வருமானத்தையும், உழைப்பின் உற்பத்தித்திறன் வளர்ச்சி விகிதத்திற்கு இணையாக இருக்கும்படி செய்வதற்காகவே மேற்கொள்ளப் பட்ட நடவடிக்கைகள் மிகமிகக் குறைவான பயனுடையதா யிருந்தன.

சாதாரண, படிப்படியான விரிவாக்கத்தைத் தூண்டுவதற்குப் பொருளாதாரத்தில் நெகிழ்ச்சியுடன் கூடிய கட்டுப்படுத்தும் முறைகளைப் பயன்படுத்துவதற்கான முயற்சி பயனற்றதாகப் போயிற்று. மேலும் அது பணவீக்கத்தை மிக அதிக அளவு தீவிரமடையச் செய்தது. அதை எதிர்த்துப் போராடுவதற்காக மேற் கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகரிக்கவும், நெருக்கடியைத் தீவிரமாக்கவும் வழிசெய்தன. அமெரிக்கப் பொருளாதார நிபுணரான ஃபிரான்கோ மாடிக்ளியானி அந்தக் காலத்தின் அமெரிக்காவின் கொள்கையைப் பகுத்தாராய்ந்தார். அவரது ஆராய்ச்சியின் முடிவில், 1929 ல் ஏற்பட்ட பெரும் வியாபார மந்தத்தை மீண்டும் நிகழாமலிருக்கும்படிப் பணவீக்கத்தை வேகமாக நிறுத்தி வைக்கச் செய்தலுக்கான அரசு ஏகபோகங்களின் சாதனங்கள் உண்மையில் பயனற்றவையாய்ப் போயின[1] எனக் கூறினார்.

அதன் விளைவாக வளர்ந்த முதலாளித்துவ நாடுகள் முதலாளித்துவம் இதுவரை கண்டறியாதபடி ஆழமான சுழல் நெருக்கடியும், அதன் உள்ளியல்பான வேலையில்லாத் திண்டாட்டமும், அதனுடன் தொடர்ந்து, உயர்ந்து செல்லும் விலையேற்றமும், பாய்ந்து செல்லும் பணவீக்கமும் கொண்ட ஒரு கட்டத்தை அடைந் திருக்கின்றன. முதலாளித்துவப் பொருளாதாரத்தின் இன்றைய அரசு—ஏகபோகக் கட்டமைப்பின் கீழாக, போட்டிச் செயல் முறையும், விலையமைப்புச் செயல் முறையும் பெருமளவான மாற்றங்களைக் கண்டிருப்பதை

இது புலப்படுத்துகிறது. விலையின் இயக்கங்கள் சுழலின் படிகளுடனும், நெருக்கடியின் பகுதிகளுடனும் தொடர்பான தங்களது இயக்கத்தில் குறிப்பிட்ட அளவு சுதந்திரத்தை அனுமதிக்கிற ஒரு பக்க நெகிழ்ச்சியினால் வர்ணிக்கப் படுகின்றன. மேல் நோக்கிய சுழல் எழுச்சியுடன் விலைகள் உயர்ந்தன. ஆனால் நெருக்கடியின் போதும், மந்த காலத்திலும் ஒப்பீட்டில் உயர்வாக இருந்தன. அல்லது மிகவும் குறைவாக வீழ்ந்தன. ஒரு சுழலின் போது விலை ஏற்றத்தின் பன்முக இயல்புகளுக்கு இது வழி வகுத்தது. ஆக அந்த ஏற்றத்தை மேலும் நீடித்ததாகவும், நிலையான தாகவும் ஆக்குகிறது. 1950 களிலும் (1957—1958 நெருக்கடி), 1960 களிலும் (அமெரிக்காவின் 1969—1970 நெருக்கடி) இந்தப் போக்கு ஓரளவே தெரிந்தது. ஆனால் 1970 களில் ஒரு தனி வகையாக மாறியது. பொருளாதாரக் கூட்டுறவு மற்றும் வளர்ச்சிக்கான நிறுவன நாடுகளில் நுகர்வோர் விலைகளில், சராசரி உயர்வு 26 சதவிகிதமாக இருந்தது. கிரேட் பிரிட்டனில் 44 சதவிகிதமாகவும், ஜப்பானில் 39 சதவிகிதமாகவும் இருந்தது. மேற்கு ஜெர்மனியில் 13 சதவிகிதமாகவும், சுவிட்சர்லாந்தில் 17 சதவிகிதமாகவும் இருந்தது. பொருளாதார அடிப்படையில், செயலூக்கம் மிகுந்த மக்களில் வேலையில்லாதோர் யு. எஸ். சில் 8.5 சதவிகிதமாகவும், பிரிட்டனில் 4.2 சதவிகிதமாகவும். மேற்கு ஜெர்மனியில் 4.7 சதவிகிதமாகவும், பெல்ஜியத்தில் 6.7 சதவிகிதமாகவும், டென்மார்க்கில் 11.1 சதவிகித மாகவும், கனடாவில் 6.9 சதவிகிதமாகவும் இன்னும் இது போன்றுமிருந்தது.[2] "இந்தப் பணவீக்கமும், பொருளாதார மந்தமும், ஒரு புதுவகையான நிகழ்ச்சியாகும். இதன் விளக்கம் பொருளாதார அறிஞர்களுக்கு ஓர் அறிவாற்றலுள்ள அறைகூவலாகும்" என்று பிரிட்டிஷ் பொருளாதார நிபுணர் நிக்கோலஸ் கால்டர் எழுதினார்.[3] முதலாளித்துவப் பொருளாதாரம் "தேக்க நிலைப் பண வீக்கம்" என்று பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்களால் தனிச்சிறப்பாகப் பெயரிட்டு அழைக்கப்படுகிற, தீர்க்க

முடியாத முரண்பாடுகள் நிறைந்த நச்சுச்சுழலில் அகப்பட்டுத்திணறிக் கொண்டிருந்தது. "தேக்க நிலைப் பணவீக்கம் நம்முடைய பொருளாதார அமைப்புடனேயே பிறந்துவளரும் ஒரு நோயாகும்." என பால் சாமுயேல்சன் எழுதினார். இது சுழலின் உருத்திரிபைப் பிரதிபலித்தது. இது பெருமளவு "ஒரு பொருளாதார வளர்ச்சிக் கொள்கை மூலமாக, பொருளாதாரத்தை அரசு ஏகபோகம் கட்டுப் படுத்துவதன் விளைவாகவே நிகழ்கிறது. வேகம் குறைந்து, மிகுந்த துன்பம் தருகிற விலைமந்தத்தை மீண்டும் உயிர்ப்பிக்கும் ஒரு வளர்ச்சிப்படியாகப் பரிணாம வளர்ச்சி யடைவதை ஓரளவு விளக்கும் வகையில் 1974-1975 நெருக்கடியிலிருந்து முதலாளித்துவம் மீள்வது மிகுந்த இன்னல் நிறைந்ததாயிருந்தது.

அரசு ஏகபோகக் கட்டுப்பாட்டிற்கு உட்படாத 1970 பணவீக்கம் வளர்ச்சியைத் தூண்டும் ஒரு சாதனமாக இருப்பதற்குப் பதிலாகப் பொருளாதார உறுதியற்ற தன்மைக்கு ஒரு முக்கியமான காரணியாக மாறியது. "முதலாளித்துவத்தின் உறுதியற்ற தன்மை மேலும், மேலும் தெளிவாகத் தெரிகிறது. அதனுடைய கட்டமைப்பிற்குள் முதலாளித்துவத்தை மேலும் குறைவற்றதாக ஆக்கவும், ஒரு பொதுநல சமுதாயத்தைப் படைக்கவும் போகிறோம் என அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் சந்தேகமின்றி தோல்வி யடைந்துவிட்டன",[4] என்று லியோனித் பிரெஷ்னேவ் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 25 வது காங்கிரசின்போது கூறினார்.

குறைந்த திறமையும், அரசு ஏகபோகக் கட்டுப்பாட்டில் நெருக்கடியும், தேசியத்திற்கு மேலான கட்டுப்பாடுகளை நிறுவுவதற்கான தேவைக்கும், முன்னரே நிலைநாட்டப் பட்ட ஏகபோகக் கட்டுப்பாடு முறைகளுக்குமிடையேயான முரண்பாடுகள் தீவிரமடைவதிலும் கூட வெளிப்பட்டன. விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சிச் சூழ்நிலையில் உற்பத்தி சர்வதேசியமயமாக்கப்படுவதன் வளர்ச்சியும்,

தேசிய பொருளாதாரங்கள், உலக முதலாளித்துவப் பொருளாதாரம் ஆகிய இவற்றின் பரஸ்பர உறவும், சர்வதேசப் பணவியல் அமைப்பு முறை சீர்கேடுறுவதும், பன்னாட்டு ஏகபோகங்களின் மேலும், மேலும் பெருகிக் கொண்டே வரும் மனம் போனபடியான ஆட்சியும், அவர்களுடைய வலிமையும், செல்வாக்கும் ஆகிய இவையெல்லாம் தேசிய பொருளாதாரத்தின் எல்லைகளைக் கடந்து செல்கிற சமூக உற்பத்தியை நிர்வகித்து, ஒழுங்குபடுத்தும் புதிய முறைகளுக்கும், உருவங்களுக்குமான தேவையை எழுப்புகின்றன.

உற்பத்தி சக்திகள் சர்வதேசியமயமாக்கப்படுவது முதலாளித்துவப் பொருளாதாரத்தின் தன்னிச்சையான இயல்பைத் தீவிரமடையச் செய்யும் தன்மையுடையதாக ஆக்குகிறது. பன்னாட்டு ஏகபோகங்கள் வலிமையுறும் போது ஒரு தேசியத்திற்கு அப்பாற்பட்ட அடிப்படையில் பெருமளவு பயன்படுத்தப்படுகிற தனியார் ஏகபோகக் கட்டுப்பாடுகளுக்கும், தேசியப் பொருளாதார எல்லைகளுக்குள் இன்னும் செயல்பட்டுக் கொண்டிருக்கும், அரசு ஏகபோகக் கட்டுப்பாடுகளுக்குமிடையே முரண்பாடுகளை அது தோற்றுவிக்கிறது.

ஆற்றல், மூலப்பொருட்கள், உணவு, பணம், நிதி ஆகியவை தொடர்பான நெருக்கடிகளும், உயிரின வாழ்க்கைச் சூழல் தொடர்பான நெருக்கடிகளும் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் வளர்ந்துவரும் நிலையற்ற தன்மைக்கும், 1974—1975 ல் நிகழ்ந்த ஆழ்ந்த நெருக்கடிக்கும், ஏற்ற முக்கியமான காரணிகளாக உள்ளன. அவை சர்வதேசத் தன்மை கொண்டவையாயுமிருக்கின்றன. தேசியக் கட்டுப்பாடு இயந்திர நுட்பம் சீர்குலைவது அதனுடைய பங்கிற்கு சர்வதேசப் பொருளாதார பணவியல் உறவுகளை மேலும் அதிகமாகச் சீர்குலைக்கிறது. தேசியப் பொருளாதாரங்களும் பொருளாதார வாழ்க்கை சர்வதேசமயமாவதும், பொருளாதாரத் துன்பங்களை ஏற்றுமதி

செய்வது என்று அழைக்கப்படு (பணவீக்கம், வேலை யில்லாத் திண்டாட்டம் முதலியவற்றை ஏற்றுமதி செய்வது) வதை ஊக்குவிக்கும் ஒரு காரணியாக மாறியிருக்கின்றன. முதலாளித்துவப் பொருளாதாரத்தின் கட்டமைப்புக்குள் ஒழுங்குபடுத்துவதற்கு மிகவும் இடர்ப்பாடுகள் நிறைந்த சர்வதேசப் பொருளாதார உறவுகளை நிலையானதாக ஆக்குவதற்காக, அரசு ஏகபோகக் கட்டுப்பாட்டின் வழி களையும், உருவங்களையும் சர்வதேசமயமாக்குவதிலும், தனித்தனி முதலாளித்துவ நாடுகளின் பொருளாதாரக் கொள்கைகளை ஒன்றிணைப்பதிலும் இது புதிய போக்கு களை ஏற்படுத்தியது.

1970 களில் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் முரண்பாடுகள் மிகுதியாக வளர்ந்த நிலை அரசு ஏகபோக முதலாளித்துவம், நெருக்கடி, வேலையில்லாத் திண்டாட்டம், பணவீக்கம், சமூகப் பிணக்குகள், வர்ச்கப் போராட்டங்கள் முதலியவற்றை நீக்குவதற்குரிய திறமையில்லாதது என்பதைக் காட்டுகிறது. அது பொருளாயத, தொழில் நுட்ப, விஞ்ஞான - தொழில் நுட்ப முன்னேற்றம் ஆகியவற்றை, சமூக பொருளாதார முன்னேற்றத்துடன் இணைக்கும் திறன் வாய்ந்ததாகவும் இல்லை. விஞ்ஞான- தொழில் நுட்ப வளர்ச்சியில் 1950 களில் ஒரு குறிப்பிட்ட வெற்றி பெற்று, ஒப்பீட்டில் ஓர் உயர்ந்த பொருளாதார வளர்ச்சியை அடைந்திருந்த முதலாளித்துவம், இந்த நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் முரண்பாடுகளால் சின்னாபின்னமாக்கப்பட்டு, ஒரு பலமிழந்த பொருளா தாரத்துடன், இருண்ட வாய்ப்புக்களுடன், நுழைந்திருக் கிறது. ''இந்த நூற்றாண்டின் கடைசிக் கால் பகுதி, சென்ற காலத்துப் பொருளாதாரத்தின் தொடர்ச்சியாக இராது. அது வேறுபட்டிருக்கும், குறிப்பாக அதனுடைய சந்தத்திலும், அதன் வளர்ச்சி வகையிலும் மிகுந்த மாற்றங் களைக் கொண்டதாக இருக்கும்'' என்று பிரெஞ்சுப் பொருளாதார நிபுணரான லயனல் ஸ்டோலேரு கூறுகிறார்.

முதலாளித்துவப் பொருளாதாரத்தின் இன்றைய உணர்வு மந்தமானதாகவும், உறுதியற்றதாகவும் தான் இருக்கும் என முன்னறிவிப்புகள் காட்டுகின்றன. பெருமளவு வேலையில்லாத் திண்டாட்டம், மாறாமல் அப்படியே யிருக்கும். பொருளாதார மீட்சியும், மேல் நோக்கிய வளர்ச்சியும், பணவீக்கத்திற்கு ஒரு புதிய தூண்டுதலைத் தரும். அது மறுபடியும் விலை உயர்வுக்கும், வாழ்க்கைச் செலவு உயர்வுக்கும், வரி ஏற்றத்திற்கும், அதன் விளைவாக உழைக்கும் மக்களின் வாழ்க்கைத்தரம் மிகவும் மோசமான நிலையை அடைவதற்கும் வழி செய்யும்.

எனினும் முதலாளித்துவத்தின் எழுச்சிகளும், அதன் செயல் எந்திரத்தில் நிகழும் குழப்பங்களும் அரசு ஏகபோகங்களானவை, தங்களுடைய செயல்திறன் அனைத்தையும், சேமப்படை அத்தனையையும் செலவழித்து விட்டன என்று குறிக்கவில்லை. சமுதாய உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதற்கு ஏகபோக பூர்ஷ்வாக்கள், அரசு ஏகபோக முதலாளித்துவம் இப்பொழுது கையில் கொண்டிருக்கும் இயந்திர நுட்பத்தைத் தவிர வேறொன்றும் இல்லாதவர்களாக உள்ளனர். வளர்நத முதலாளித்துவ நாடுகளின் அரசாங்கங்கள் அரசு—ஏகபோகக் கட்டுப்பாடுகளின் பழைய உருவங்களையும், சாதனங்களையும் மேம்பாடடையச் செய்து இன்றைய சூழ்நிலைக்கு ஏற்றதாகச் செய்யவும், புதிய, மேலும் நெகிழுந்தன்மை கொண்ட சாதனங்களைத் தோற்றுவித்துப் பயன்படுத்தவும் முயற்சி செய்கின்றன. ஏகாதிபத்தியத்தின் சகாப்தத்தில், முதலாளித்துவத்தின் பொதுநெருக்கடியின் சகாப்தத்தில், இன்றைய விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் சந்திப்பில், இரண்டு சமூக அமைப்புகளிடையில் பகையும், போட்டியும் நிலவும் தருணத்தில், பூர்ஷ்வா அரசின் பொருளாதாரப் பணிகளைப் பலனுள்ள முறையில் உபயோகிக்காமல் ஏகபோகங்களால் சமூக உற்பத்தியின் மீது கட்டுப்பாடு வைத்துக் கொள்ள முடியாது. இன்று முதலாளித்துவ சமூக அமைப்பு முறையை உலுக்கித்

கொண்டிருக்கிற ஆழமான முரண்பாடுகள் முதலாளித்துவம் வழக்கமான மறுஉற்பத்தி நிகழ்ச்சிப்போக்கை உறுதிப் படுத்துவதற்கு இயலாததாக உள்ளது என்பதற்கும், சோஷலிசம் நவீன உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கு ஓர் இன்றியமையாத புறவயத் தேவையாகவும் ஆகிவிட்டிருக் கிறது என்பதற்கும் சான்றாகத் திகழ்கின்றன.

## அடிக்குறிப்புகள்

1. **அமெரிக்க பொருளாதார ஆய்வுக் கட்டுரை:** செப். 1974. பக். 563.
2. **தொழிலாளர் தொடர்பான புள்ளி விவரங்களின் ஆண்டுத் தகவல் வெளியீடு.** 1976. சர்வதேசத் தொழிலாளர் சங்க அலுவலகம், ஜெனிவா - 1976. பக். 445-48.
3. நிக்காலஸ் கால்டர்: "உலகப் பொருளாதாரத்தில் பணவீக்கமும் பொருளாதார மந்தமும்." **பொருளாதாரக் குறிப்பு.** ராயல் பொருளாதாரக் குழுவின் காலாண்டுக் குறிப்புகள். லண்டன், தொகுதி - 86. டிசம்பர். 1976. பக். 704.
4. **சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 25 வது காங்கிரசின் ஆவணங்களும், தீர்மானங்களும்.** பக். 34.

**யுஜிலியோ ட்ரையானா**

*ஸ்பெயின் கம்யூனிஸ்ட் கட்சியின்*
*நிர்வாகக்குழு உறுப்பினர்.*[1]

## விஞ்ஞான - தொழில் நுட்ப சாதனைகளும், இன்றைய ஸ்பெயின் நாட்டு முதலாளித்துவமும்

சோஷலிசத்திற்கான வழிகளைத் தேடுவதுடன் தொடர்புடைய பொதுவான பிரச்சினைகளை விவாதிக்கும் மிக முக்கியமான இந்த மகா நாட்டில் ஸ்பெயின் நாட்டு முதலாளித்துவத்தின் இன்றைய நெருக்கடி நிலைபற்றிக் கூற நான் விரும்புகிறேன்.

விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சி மேலும், மேலும் புதிய மூலப் பொருட்களை நமக்குக் கிடைக்கச் செய்யும் வேளையில், விஞ்ஞானத்தின் சாதனைகள் பெரும் அளவில் பயன்படுத்தப்படும் காலத்தில் நாம் வாழ்கிறோம். வேறு மாதிரி சொன்னால் விஞ்ஞானம் நேரடியான ஒரு உற்பத்தி சக்தியாக மாற்றப்பட்டுள்ள வேளையில் நாம் வாழ்கிறோம். இது தொடர்பாக ஒரு நூறாண்டுகளுக்கு முன்னர் பிரெடரிக் எங்கெல்ஸ் தமது **அரசியல் பொருளாதார விமர்சன உருவரைகள்** என்ற நூலில் "புதியன காண்பதின், சிந்தனையின் ஒரு மனவகைக் கூறு"[2] என விஞ்ஞானத்தைப் பற்றிக் கூறி, அது உற்பத்தியின் ஒரு முக்கியக்கூறு என்றதை நினைவூட்டுகிறேன். "பொருளாதார இனங்களைப் பற்றிய மிகச் சிறந்த ஆய்வுக் கட்டுரை"[3] என்று கார்ல் மார்க்ஸ் இந்த

நூலின் முக்கியத்துவம் பற்றிக் கூறிய சொற்கள் இன்றைய காலத்து விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் கீழ் பொருத்தமாக இருக்கின்றன.

விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் கீழ் விஞ்ஞானம் சூழ்ச்சித்திறம் வாய்ந்த ஓர் உற்பத்தி சக்தியாக ஆகியிருக்கிறது. நம் காலத்தில் தொழில் நுட்பத்தையும், விஞ்ஞான அறிவையும் பயன்படுத்தும் திறமை படைத்தவர்களாயிருப்பதுதான், சுகாதார சேவைகள், வீட்டு வசதி, உணவு ஆகியவற்றிலும், பிற சமூகத் தேவைகளிலும் மிகப் பெருமளவிற்கு நிறைவு செய்வதற்கு ஒரே வழியாகவுள்ளது.

பூர்ஷ்வாக்கள் விஞ்ஞான அறிவைச் சேகரிப்பதற்கும், ஒன்று குவிப்பதற்கும் அனைத்து வாய்ப்புகளையும் பயன் படுத்துகிறார்கள். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 20, 000 மில்லியன் டாலருக்கு மேற்பட்ட நிதியை உள்ளடக்கிய 85 சதவிகித ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான திட்டங்களைத் தனியார் துறையில் 20 நிறுவனங்கள் மட்டுமே நிறைவேற்றுகின்றன.

தன்னுடைய நலனுக்காக விஞ்ஞான -தொழில் நுட்பப் புரட்சியின் சாதனைகளை, ஏகபோக மூலதனம் பயன் படுத்துவது, வாணிபத்திலும், தொழில் நுட்பத்தை மாற்றுவதிலும் தெளிவாகக் காணப்படுகிறது. உலக வெளிப் பொருள் வாணிபம் ஒரு சில வளர்ந்த முதலாளித்துவ நாடுகளின் கையில் உள்ளது. ஆனால் ஒப்பீட்டில் வளரும் நாடுகள் மிகக் குறைவான தொழில் நுட்ப அறிவைத்தான் விற்பனை செய்கின்றன. நாம் முதலாளித்துவத் தொழில் நுட்பச் சந்தையைப்பற்றி ஏதும் அறிந்து கொள்வது கூடாது என்பதுதான் முதலாளித்துவத்தின் உண்மையான எண்ணம் என அறிந்து கொள்ள முடிகிறது. ஒருவர் பிற பொருட்களை வாங்குவதும் விற்பதும்போல விஞ்ஞான அறிவை வாங்குவதும் விற்பதும் இயலாது. அந்தப் பண்டத்தை ஒருவர் உடைமையாக வைத்திருக்கிறார். இது அவருக்கு

ஒரு சில குறிப்பிட்ட பொருளாதார, சமூக, அரசியல் நலன்களை வழங்குகிறது. ஒரு வளரும் நாடு, விஞ்ஞானத்தில் பின்தங்கியிருப்பதன் காரணமாக, அந்த நேரத்தில் கிடைக்கக்கூடிய விஞ்ஞான அறிவைப் பெறவிரும்பினால், அந்த நாடு அதைத் தங்கள் கையில் வைத்திருக்கும் ஏகபோகங்களிடம் குறுகிய, சிக்கலான, கால் வழிகளில் செல்ல வேண்டியது இன்றியமையாததாக உள்ளது.

அதே வேளையில் விஞ்ஞான-தொழில் நுட்ப சாதனைகளையும், புதுவகையான உற்பத்தி வழிகளையும், உற்பத்தி யுக்திகளையும், முறைகளையும், பயன்படுத்துவதற்காக தனியார் நிறுவனங்களின் கையில் ஒப்படைக்கக் கூடாத மிகவும், சிக்கலான தொழில் நுட்பப் பொருளாதார சூட்சுமங்கள் தேவைப்படுகின்றன. அதைத் தனியார் பயன்படுத்துவது குறிப்பாகப் பன்னாட்டு இணையங்கள் பயன்படுத்துவது பெரும் அளவு செலவையும், அபாயங்களையும் சமுதாயத்தின் தோளில் சுமத்துவதை உள்ளடக்கியதாகவுள்ளது.

பெரிய முதலாளித்துவ சக்திகள் வெளிப் பொருள் வாணிபத்தில் தங்களின் உரிமையை சுங்க மற்றும் வாணிப வரிகள் பற்றிய பொது உடன்பாடு, பொருளாதாரக் கூட்டுறவு மற்றும் மேம்பாட்டுக்கான நிறுவனம் ஆகியவற்றின் மூலம் பேணிக்காத்து வருகின்றன. வளரும் நாடுகள் உண்மையில் வளர்ந்த முதலாளித்துவ நாடுகளின் போட்டியின் முன்னால் எந்தவிதப் பாதுகாப்புமில்லாதவைகளாக உள்ளன. விஞ்ஞான - தொழில் நுட்ப அறிவைப் பயன்படுத்துவது, ஒரு நாட்டின் உற்பத்தி வளர்ச்சி மட்டத்திற்கு ஒத்திசைவானதாக இருக்கும் போதுதான் கைகூடும் செயலாக உள்ளது. ஒரு சமுதாயத்திலிருந்து மற்றொரு சமுதாயத்திற்குக் கண்மூடித்தனமாகத் தொழில் நுட்பத்தை மாற்ற முடியாது. ஒரு நாட்டில் பயன்படக் கூடிய திறமையான, பயனுள்ள ஒருமுறை மற்றொரு நாட்டில் பயனற்றதாகப் போய்விடலாம்; எனினும் அமெரிக்க ஐக்கிய

நாடுகளும் வேறுமிக அதிகமாக வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளும், கண்மூடித்தனமாகக் குறைந்த வளர்ச்சிமட்டமே யுடைய நாடுகளுக்குத் தொழில் நுட்பத்தை மாற்றுகின்றன. இது மிகவும் அபாயகரமான விளைவுகளைத் தோற்றுவிக்கக் கூடியது விஞ்ஞான - தொழில் நுட்பத் தன்னாட்சியை அறிவிக்கும் பிரச்சினை எழவேயில்லை. ஏனெனில் அது இயலாதது ஆகும். அதற்கு மாறாக, தொழில் - நுட்ப விஞ்ஞானக் கூட்டுறவு வளர்ந்து வரும் நாட்களில் நாம் வாழ்ந்து வருகிறோம். எனினும் ஒவ்வொரு நாட்டிலும் விஞ்ஞான-தொழில் நுட்ப வளர்ச்சி மட்டமும் உற்பத்திக்கு அதைப் பயன்படுத்துகிற மட்டமும், ஒருஜனநாயகக் கட்டுப் பாட்டிற்குள் இருக்க வேண்டுமென்பது இன்றியமையாதது ஆகும். இது மட்டுமே இந்த விஷயங்களை சமுதாயத்தின் நலனுக்காகப் பயன்படுத்த உதவமுடியும்.

இன்றைய நடைமுறை விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் கீழ் முதலாளித்துவம் ஒரு தேக்கநிலையை அடைந்திருந்த போதிலும் சமுதாயத்தின் நலன்களுக்காக விஞ்ஞான-தொழில் நுட்ப சாதனைகளைப் பயன்படுத்தும் வழிகளில் இடையூறுகளை அது தோற்றுவித்த போதிலும், சமுதாயத் தேவைகள் பெருகிக் கொண்டே வருகின்றன. இன்று கல்வி, கலாச்சாரம் அறிவு ஆகியவை சமூகத் தேவை களாக ஆகிவருகின்றன. மக்கள் உயர்ந்த ஊதியத்திற்காகப் போராட முன் வருவதைப் போல, அவைகளுக்காகவும் போராட முன் வருகிறார்கள்.

ஸ்பெயின் ஒரு தனிச் சிறப்பான சூழ்நிலையில் உள்ளது. 1973 க்கு முன்னர் எங்களின் பொருளாதார வளர்ச்சி முதலாளித்துவ உலகத்திற்குள்ளேயே மிகவும் உயர்ந்ததாக இருந்தது. அண்மை ஆண்டுகள் பொருளாதார வளர்ச்சியில் குறிப்பிடத்தகுந்த வீழ்ச்சி ஒன்றை அடைந்தன. இன்றைய நிலை மிகவும் இருள் சூழ்ந்ததாகவுள்ளது. 1978 ல் முந்திய ஆண்டிற்கு மாறாக, மொத்த உள்நாட்டு உற்பத்தி 3 சதவிகிதம் உயர்ந்தது. அதே வேளையில் 300,000 வேலை

இல்லாதோர் நாட்டில் இருந்தனர். அல்லது உற்பத்திப் பணியில் ஈடுபடக்கூடிய திறன் வாய்ந்த மக்கள் தொகையில் 3 சதவிகிதத்தினர் வேலையில்லாதிருந்தனர். அதே வேளையில், ஓராண்டுக்கு முன்னர் அரசு வித்தகர்களும், நிதி வட்டாரங்களின் பிரதிநிதிகளும் இம்மாதிரியான விகித்ததில் ஸ்பெயின் நாட்டுப் பொருளாதாரம் வளர்வதாக இருந்தால் பெருமளவு வேலையில்லாத் திண்டாட்டம் இராது என்று கூறினார்.

இன்று ஸ்பெயினில் நாங்கள் ஒரு பொருளாதார தேக்க நிலை இருப்பதைக் காண்கிறோம். 1978 இல் முதலீட்டின் பரிமாணம், 1977 உடன் ஒப்பீட்டில் 4சதவிகிதம் குறைந்தது. 1959 லிருந்து பொருளாதார வளர்ச்சி விஞ்ஞான-தொழில் நுட்ப கலாச்சார தேக்கநிலையுடன் இணைந்ததாகவே இருந்திருக்கிறது. ஸ்பெயினில் நிலவுகிற பொருளாதார வளர்ச்சிக்கும் கல்வி, விஞ்ஞானம் கலாச்சாரம் ஆகியவற்றின் வளர்ச்சி மட்டத்திற்கும் இடையிலான வெளி, இந்த நெருக்கடிகளுக்குக் காரணமாக உள்ளது. இது ஒரு சிறிதளவு பிற மேற்குஐரோப்பிய நாடுகளின் பொருளாதார நெருக்கடி களைப் போன்றதாக உள்ளது. இதை மூலப்பொருட்களின் விலை உயர்வால் விளக்கிக் கூறமுடியாது. அனைத்திற்கும் மேலாக எரிபொருள் விலையேற்றத்தின் காரணத்தினால் தான் என்று கூறிவிட முடியாது. இது தனக்கெனவேயுள்ள தனிச்சிறப்பியல்புகளை உடையது.

1959 லிருந்து ஸ்பெயின் நாட்டு முதலாளித்துவம், நிதி மூலதனம் முக்கியமான பங்கு வகிப்பதுடன், ஒரு குறிப்பிட்ட வழியில் வளர்ந்து வருகிறது. எதேச்சாதிகார அரசினால் பாதுகாக்கப்பட்டு, தேசிய விஞ்ஞான தொழில் நுட்பங்கள் வளர்வதைத் தடுத்து நிறுத்துகிறது. அது மட்டுமல்லாது, விஞ்ஞான-தொழில் நுட்ப ஆராய்ச்சியிலும்,வளர்ச்சியிலும், அந்நிய நாட்டுத் தலையீட்டிற்கு எவ்விதத் தடையுமின்றித் தன் கதவுகளைத் திறந்து விட்டது. இன்று பொருளாதாரம் இரண்டு "தொகுதிகளை" உடையதாக அல்லது இரண்டு

துறைகளை உடையதாய் இருக்கிறது. முதல் தொகுதியின் கட்டமைப்புக்குள் தேசிய முதலாளித்துவம் வளர்கிறது. இரண்டாவது தொகுதியில் நாட்டின் மொத்த முதலீட்டில் 20 சதவிகிதம் கொண்ட பெரிய அயல் நாட்டுக் கம்பெனிகளின் செயல்களம் அடங்கியுள்ளது. மரபுவழி தொழிலில் கிளைகள் தேசியப் பொருளாதாரத் துறையின் அடித்தளமாக அமைகின்றன. ஆனால் அவைகள் மிகவும் புதுமையான தொழில் நுட்பங்களைக் கொண்டுள்ள தொழில்களுடன் போட்டியிட முடியாது. புதுமையான தொழில் நுட்பங்கள் தேவைப்படுகிற தொழில்கள் (மருந்து உற்பத்தி, உணவுப் பொருளுற்பத்தி, மின்னணு சாதனங்களின் உற்பத்தி, பேருந்துத் தொழில் ஆகியவை) தொடர்பான களங்களில் வெளிநாட்டு மூலதனங்கள் கட்டுப்படுத்தப்படுகிற துறைகள் சிறப்புத் திறமை கொண்டவையாய் விளங்குகின்றன. இங்கு விஞ்ஞான-தொழில் நுட்ப அறிவு மிகுதியாகப் பயன்படுத்தப்படுகிறது. அந்த விஞ்ஞான-தொழில் நுட்ப அறிவை யு. எஸ்.சும், மேற்கு ஐரோப்பிய நாடுகளும் கொடுத்துதவுகின்றன. நான் அது தொடர்பான புள்ளி விவரங்களைக் கொடுக்க விரும்புகிறேன். ஸ்பெயின், ஏறத்தாழ 500 மில்லியன் டாலர், வெளிப் பொருள் வாணிபத்திற்குப் பயன்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் செலவழிக்கிறது. எனினும் அந்தச் செலவுகளில் 80 சதவிகிதத்தை யு. எஸ்., மேற்கு ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றின் கிளைகள்தான் பெறுகின்றன. ஆக அந்தச் செலவுகள், அரசின் கட்டுப்பாட்டிற்கு அப்பால் இருப்பதாகக் கொள்ளலாம். சென்ற 20 ஆண்டுகளாக, பெரும் அளவில், ஸ்பெயின் பெற்று வருகிற தொழில் நுட்பம் ஏற்றமுறையில் பயன்படுத்தப்படவில்லை. லத்தீன் அமெரிக்க நாடுகள் இந்த விஞ்ஞான-தொழில் நுட்ப சாதனங்கள் உள்ளே வருவதைத் தனிச் சிறப்பான உடன்பாடுகள் மூலம் கட்டுப்படுத்தியுள்ளன. ஸ்பெயின் நாடு இம்மாதிரியான நடவடிக்கைகளைப் பல ஆண்டுகளுக்குப் பின்னரே மேற்கொண்டுள்ளது. அவையும் மிகக்குறைந்த அளவிலான

கட்டுப்பாடுகளே. எங்களுக்குத் தேவையான தொழில் நுட்பத்தைத் தேர்ந்தெடுக்கவும அதன் இறக்குமதியைக் கட்டுப்படுத்தவும் முடியாதவர்களாக நாங்கள் இருக்கிறோம்.

ஆகவே ஸ்பெயின் நாட்டு முதலாளித்துவம் ஒரு வளர்ச்சி குறைந்த முதலாளித்துவம். அது நாட்டின் விஞ்ஞான கலாச்சாரமட்டத்தின் வளர்ச்சியைப் பாதிக்கக் கூடிய விஞ்ஞான - தொழில் நுட்ப வளர்ச்சியைப் பாதிக்கிறது. மக்கள் தொகையில் 1000 பேருக்கு படிப்பவர்களின் எண்ணிக்கையும், மாணவர்களின் எண்ணிக்கையும் மிகக் குறைந்த அளவாகவே உள்ளன. உயர்கல்வி பெற்றவர் களின் எண்ணிக்கையும் மிகக்குறைவாகும். எங்கள் நாட்டில் இதற்கான தொழில் நுட்ப விஞ்ஞானங்கள் இல்லை. இவை யனைத்தும் எங்கள் நாட்டின் தனிச்சிறப்பான சூழ்நிலையைத் தோற்றுவித்துள்ளன. விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் வளர்ச்சியைத் தடுக்கிற மூலதனத்தின் ஆதிக்கத்தின் விளைவே இது.

## அடிக்குறிப்புகள்

1. 1981 மே மாதத்தில் யூஜினியோ ட்ரையானா, ஸ்பெயின் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து விலகிச் சென்றார்.

2. பிரெடரிக் எங்கெல்ஸ், "அரசியல் - பொருளாதார விமர்சன உருவரைகள்" கார்ல் மார்க்ஸ் மற்றும் பிரெடரிக் எங்கெல்சுடைய **தொகுப்பு நூல்கள்,** தொகுதி-3, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1975. பக். 427.

3. கார்ல் மார்க்ஸ் : **அரசியல்- பொருளாதார விமர்சனத் துக்கு வழங்கப்பட்ட கட்டுரை,** முன்னேற்றப் பதிப்பகம். மாஸ்கோ. 1978. பக். 22.

**ஹென்ரிக் சோலஜ்,**

*கலைக் கழக உறுப்பினர், துணைச் செயலாளர்*

போலந்து விஞ்ஞான கலைக்கழகத்தின்
பொருளாதாரத்துறை

## ஒரு நேரடியான உற்பத்தி சக்தியாக விஞ்ஞானம் வளர்வதன் இயக்கவியல்

இன்றைய விஞ்ஞான—தொழில் நுட்பப் புரட்சிக்கு, முக்கியமாக, விஞ்ஞானமும், தொழில் நுட்பமும் உற்பத்தி யுடன் இணைவதை அடிப்படையாகக் கொண்ட சமுதாயத்தின் உற்பத்தி சக்திகளில் ஏற்படும் தீர்மானமான மாற்றம் என்றே பொருளாகும். விஞ்ஞானத்தில் ஏற்படும் புரட்சியையும், அதன்பின்னர் தொழில் நுட்பத்தில் ஏற்படும் புரட்சியையும் பின்தொடர்ந்து உற்பத்தியிலும் ஓர் புரட்சி நிகழ்கிறது. அது உழைப்பின் உற்பத்தித் திறனில் வேகமான வளர்ச்சிக்கான ஒரு தோற்றுவாயாக விளங்குகிறது. அதன் விளைவாக உற்பத்தி சக்திகளில் அடிப்படையான மாற்றங்கள் தோன்றுகின்றன.

சில ஆராய்ச்சியாளர்கள், இந்தப் புரட்சியின் சாரத்தை, அதனுள் அடங்கிய பல்வேறு இயல்புகளின் மொத்தம்தான் என்று வரையறை செய்கிறார்கள். வேறுசிலர் அதனுடைய உள்ளடக்கத்தை முழுமையாக விளக்குகிற ஒரு முக்கியமான இயல்பின் மீது மட்டுமே தங்கள் கவனத்தைச் செலுத்து கிறார்கள். அவர்களுடைய வாதத்தின் முடிவு எதுவாயினும்

சமுதாயத்தின் நேரடியான உற்பத்தி சக்தியாக விஞ்ஞானம் வளர்ந்திருப்பதுதான் இந்தப் புரட்சியின் முக்கியமான இயல்பு ஆகும் என்ற கருத்தை வெளியிடுவதில் அவர்கள் அனைவரும் ஒன்றுபட்டிருக்கிறார்கள். இந்த நிகழ்ச்சிப் போக்கு இன்றைய விஞ்ஞான வளர்ச்சியைப் பாதிக்கிற அடிப்படைப் பாங்காகும். நேரடியான உற்பத்தி சக்தியாக விஞ்ஞானம் வளர்வது வரலாற்று அடிப்படையில் தவிர்க்க முடியாததாகவுள்ளது, என்ற கருத்து மார்க்சுடைய காலத்தில் தொடங்கிய உண்மையான நிகழ்ச்சிப் போக்கைப் பற்றிய ஒரு விஞ்ஞானப் பொதுமையாகும். அந்த நிகழ்ச்சிப் போக்கு அவருடைய நாட்களில் தொடங்கிய தொழிற் புரட்சி காலத்தில், இயந்திர மயமாக்கப்பட்ட உற்பத்தியின் தோற்ற காலத்தில் தொடங்கியது. அது நம்முடைய காலத்தில் ஒரு விரைவான முன்னேற்றத்தைப் பெற்றுள்ளது.

சில ஆண்டுகள் வரை, பல ஆசிரியர்கள் விஞ்ஞானத்தைத் தனிச்சிறப்பு வாய்ந்த ஒரு சமூக உணர்வாகவும், மேல் கட்டுமானத்தின் ஒரு பகுதியாகவுமே கண்டனர். உண்மையில் அது மார்க்சின் கருத்துருவை மறுப்பதாகும். இன்றுகூட சில பொருளாதார நிபுணர்கள் இந்தக் கருத்தைக் கொண்டவர்களாக உள்ளனர். உற்பத்திச் சக்திகள் பொருளாயதத் தன்மையுடையவை. விஞ்ஞான அறிவு ஆன்மீகத் தன்மை கொண்டது என்பதனால் உற்பத்தி அமைப்பு முறையிலிருந்து விஞ்ஞானத்தைப் பிரிப்பது, நமது கருத்தில் நியாயமற்றதாகத் தோன்றுகிறது. விஞ்ஞானம் பொருளாயதத் தன்மை கொண்டதா அல்லது ஆன்மீகத் தன்மை கொண்டதா என்று நிர்ணயிக்க வேண்டிய இக்கட்டான நிலை மார்க்சுக்கு எழவில்லை. அல்லது விஞ்ஞானத்தின் ஆன்மீக உள்ளடக்கத்தையும், அது நேரடியான உற்பத்தி சக்தியாக வளர்வதையும் எவ்வாறு பொருந்தச் செய்வது என்ற பிரச்சினையும் அவருக்கு எழவில்லை.

விஞ்ஞானத்தை நேரடியான உற்பத்தி சக்தியாக ஏற்றுக் கொள்ளும்போதே அதை அவர் சமூகவளர்ச்சியின் ஆன்மீகப் படைப்புக்களின் மொத்தம் என அழைத்தார்.

விஞ்ஞானத்தின் ஆட்சிப் பரப்பில், விஞ்ஞான அடிப்படையில் அரூபக் கருத்தாக்குதல் என்பது சர்வ வியாபகமான ஓர் உருவமாகும். அதாவது, நிகழ்ச்சிப் போக்குகளின் பொருளையும், விஷயங்களின் பொருளையும் விளக்குவதற்கான சிறந்த முறைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிற இனங்களும், விதிகளும் ஆகும். சரியாகச் சொன்னால் விஞ்ஞானத்தின் இந்தத் தனித்தன்மைதான் முதலில் உற்பத்தி சக்தியின் ஆன்மீக சக்தியாகவும், பின்னர் நேரடியான உற்பத்தி சக்தியாகவும் அதை மாற்றுகிறது. இன்று விஞ்ஞானமானது அறிதல் என்ற சந்திப்பாகப் பணியாற்றி அதன் பங்கை நிறைவேற்றுவதோடு, அது படைக்கிற அறிவை உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கில் பயன் படுத்துவதிலும் பங்குகொள்கிறது. வேறு வார்த்தைகளில் கூறினால் அதனுடைய ஆன்மீக சக்திக்கும் அப்பாற்பட்ட பணிகளை அது நிறைவேற்றுகிறது.

உற்பத்தி சக்திகளைப் பற்றியும், சமூக உற்பத்தியைப் பற்றியுமான மார்க்சீய சிந்தனைக் கருத்துருவானது சமூக வாழ்வின் உருவங்களையும், சமூகச் செயல்முறைகளின் உருவங்களையும் உள்ளடக்கியதாக இருக்கிறது. விஞ்ஞானம் நேரடியான உற்பத்தி சக்தியின் பணியைச் செய்கிறது. அதே வேளையில் ஒரு ஆன்மீக விஷயமாகவும் விளங்குகிறது. உற்பத்தி சக்திகளில் எப்பொழுதுமே ஓர் ஆன்மீக செயலூக்கம் நிலவுகிறது. நவீனவிஞ்ஞானம் எண்ணங்களின் கோர்வையாகவும், கோட்பாடுகளின் கோர்வையாகவும் மட்டுமில்லை. ஒரே நேரத்தில் அது ஒரு ஆன்மீக விஷயமாகவும், பொருளாயத விஷயமாகவும் திகழ்கிறது. விஞ்ஞானம் - ‘‘இது அல்லது அது’’ என்ற வகையான ஒரு சார்புக் கண்ணோட்டத்தைத் தவிர்ப்பதும், சிக்கலானதும்,

இயக்கவியல் ரீதியில் முரண்பாட்டுச் சிக்கலானதுமான ஒரு தொகுதியே ஆகும்.

எனவே ஆய்வியல் ஒழுங்குமுறைக் கண்ணோட்டத்திலிருந்து விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியைப்பற்றி அறிந்து கொள்வதற்கு, பொருளாயத உள்ஊடுருவல் பற்றிய பிரச்சினையும், இலட்சியக் காரணிகளும் பெரும் முக்கியத்துவம் வாய்ந்தனவாக விளங்குகின்றன.

ஒரு நேரடியான உற்பத்தி சக்தியாக விஞ்ஞானம் வளர்கிறபோது-பல பத்தாண்டுகளுக்கு முன்னர் தொடங்கிய ஒருநிகழ்ச்சிப் போக்கில் விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சி எவ்வகைப் பெருமாற்றங்களைப் புகுத்தியிருக்கிறது என்ற கேள்வி எழுகிறது. தொழிற் புரட்சியோடு ஒப்பிடும்போது அது என்ன புதிய இயல்புகளைப் புகுத்தியிருக்கிறது? விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் கீழ் விஞ்ஞானத்திற்கும் உற்பத்திக்கும் உள்ள உறவு-விஞ்ஞானம் ஒருபுறம் தொழில் நுட்பத்தை வெகு தொலைவில் நிறுத்திவிட்டு, உற்பத்தியிடமிருந்து விலகி, ஒப்பீட்டில், மேலும், மேலும் சுதந்திரமாக வளர்கிறது. தொழில் நுட்பம் உற்பத்தியைப் பின்னால் விட்டு விட்டு சுதந்திரமாக வளர்கிறது. மறுபுறம் வளர்ந்துவரும் விஞ்ஞானத்தின் சுதந்திரத்தினால் அதனுடைய நடைமுறை முக்கியத்துவமும், அது உற்பத்தியுடன் ஒன்றாக இணைவதும்கூட முக்கியத்துவம் பெறுகிறது.

விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி, விஞ்ஞானம் நேரடியான உற்பத்தி சக்தியாக வளர்வதன் முக்கியமான படிநிலையாகும். 'இந்த நிகழ்ச்சிப் போக்கு ஒப்பிட முடியாத மேல் மட்டத்தில் நிகழ்வதோடு மட்டுமல்லாமல் விஞ்ஞானத்திற்கும், பொருளாயத உற்பத்திக்குமிடையில் உள்ள உள்தொடர்புத்துறையில் வெளிப்படுகிற பல புதிய இயல்புகளை வெளிக் காட்டுகிறது. விஞ்ஞானத்தின் சாதனைகளை நடைமுறையில் பயன்படுத்துவது இயந்திர மயமாக்கப்பட்ட

உற்பத்திக்கு மாற்றப்பட்டவுடன் தொடங்கியது. இந்த நிகழ்ச்சிப்போக்கு விஞ்ஞான - தொழில் நுட்பததில் ஏற்பட்டுள்ள இன்றைய புரட்சிக்கு முந்திய காலத்தில் விஞ்ஞானம், உற்பத்தியிலிருந்து பிரிக்கப்பட்டு நடை பெற்றது. அனைத்திற்கும் மேலாக இது நடைமுறைத் தொடர்பானது. ஏனெனில் அதனுடைய உழைப்பின் பலன அடைவதில் விஞ்ஞானம் பங்கு பெறவில்லை. இன்றைய படிநிலையில் ஆராய்ச்சி-உருவரைபடம், மேம்பாடு ஆகியவற்றில் விஞ்ஞான சாதனைகளை உற்பத்தியுடன் ஒரு செயல் தொடர்பான முழுமையானதாக ஆக்கி ஆவ்வாறாகப் பயன்படுவதில் விஞ்ஞானம் நேரடியாக ஈடுபட்டுள்ளது.

விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி ஒரு புதிய பாங்கினைத் தோற்றுவித்துள்ளது—தொழில் நுட்பத்தைக் காட்டிலும், விஞ்ஞானததிற்கும், உற்பத்தியைக் காட்டிலும், தொழில் நுட்பத்திற்கும் முக்கியத்துவம் கொடுப்பது. இந்த மூன்று கூறுகளுக்கும் இடையில் உள்ள உறவுகள்-விஞ்ஞானம்-தொழில் நுட்பம்-உற்பத்தி ஆகியவறறிற்கு இடையில் உள்ள உறவுகள்-ஒரு அடிப்படையான மாற்றத்திற்கு உள்ளாகி வருகின்றன.

விஞ்ஞானம், தொழில் நுட்பம், உற்பத்தி ஆகியவற்றின் ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்ட உறவுகள் மூலம் ஒரு குறிப்பிட்ட அமைப்புமுறை உருவாகிக் கொண்டிருக்கிறது. எனினும் முதலாளித்துவ சமுதாயத்தில், இந்த அமைப்பு முறை ஒன்றிணைந்ததாக இருக்க முடியாது. அது போட்டிகளின் போராட்டத்தினால் துண்டிக்கப்படுகிறது அதாவது தனியுடமையாளர்களிடையே உள்ள எதிரெதிரான போட்டி உருவங்களின் விளைவாகத் துண்டிக்கப்படுகிறது. அரசு ஏகபோக முதலாளித்துவத்தின் கீழ் சமுதாயத்தின் பொருளாதார சூட்சுமம், குறிப்பாக, முரண்பட்ட இயல்புடையதாக ஆகிறது. தனியுடைமையிலிருந்து எழுகின்ற எல்லா முரண்பாடுகளையும், எல்லாப்

பகைமைகளையும், விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் பாதையில் ஏற்படும் எல்லாத் தடைகளையும் சோஷலிசம் ஒன்றே ஒழித்துக்கட்ட முடியும். அது மட்டுமே விஞ்ஞானத் திற்கும், உற்பத்திக்கும் இடையில் புதிய, சிறப்பான, புதிய உள்ளுறவுகளை உருவாக்கிட முடியும்.

முடிவில், இன்றைய பூர்ஷ்வா அமைப்பு முறையின் கீழ் துணைபுரியும் அரசு என்று அழைக்கப்படுகிற ஒன்றைப் பற்றிக் கூறிய தோழர், ஆண்டிரியானி அவர்களுடைய அறிக்கைபற்றிச் சிலவற்றைக் கூற விரும்புகிறேன். இன்றைய பூர்ஷ்வா அரசு ஒப்பீட்டில் தன்னாட்சி மிகுதியுடையதாக இருக்கிறது என்பதையும், அதனுடைய சமூகக் கடமைகள் விரிவடைந்து வருகிறது என்பதையும் நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் அதே சமயத்தில் ஏகபோக அதிகாரம், அரசு அதிகாரத்துடன் பின்னப்படுவதை நோக்கி மேலும், மேலும் அதிகமாக வளர்ந்துவரும் நிகழ்ச்சிப் போக்கை வலியுறுத்திக் கூறுவது இன்றியமையாதது எனவும், மிகவும் வலிமை வாய்ந்த ஏகபோகமே அரசுக் கொள்கைகள் மீது உண்மையான, மிக அதிகமான செல்வாக்கைச் செலுத்த முடிகிறது எனவும் நான் கருதுகிறேன்.

**ஜீன் சார்லஸ் ரூபர்ட்**

*பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி உறுப்பினர்.*

**பெர்னார்ட் மார்க்ஸ்**

*துணைத் தலைமை ஆசிரியர் —*
*"பொருளாதாரமும் அரசியலும்"*

## பிரான்சில் விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியும், அரசு ஏகபோக முதலாளித்துவத்தின் நெருக்கடியும், நெருக்கடியிலிருந்து மீளும் வழிகளும்

தேசியமட்டத்திலும், சர்வதேசிய மட்டத்திலும் நடைபெறுகிற அரசியல் போராட்டங்களின் இன்றைய பின்புலத்தில், பன்னாட்டு இணையங்கள், தங்களின் செல்வாக்கு வட்டங்களை மறுபிரிவு செய்வதைத் திணிக்கவும், உலக சந்தையின் பிடிப்பைத் தங்கள் கையில் வைத்திருக்கவும், தங்களுடைய பண்டங்களை விற்கக் கூடிய புதுக் களங்களைக் காணவும், விஞ்ஞான-தொழில் நுட்ப சாதனைகளைப் பயன்படுத்த வேண்டுமென்ற நோக்கம் கொண்டவைகளாக உள்ளன. அவைகளின் சார்பாகப் பேசுவோரும், அரசியல்வாதிகளும், சித்தாந்த வல்லுநர்களும், விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் சிறந்த நல்வாய்ப்புக்களைப் பற்றிய ஒருவகை சோர்வு வாதத்தை மக்களிடையே புகுத்த முயற்சிக்கிறார்கள்.

பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுகள் பொதுமக்களை ஒன்றிணைக்கவும், ஒற்றுமைப்படுத்தவும் முயன்று வருகிறார்கள். ஏகபோக எதிர்ப்புக் கருத்துக்களையும், ஜனநாயகக் கருத்துக்களையும் பிரச்சாரம் செய்து வருகிறார்கள். அந்தக் கருத்துக்கள் நடைமுறையில் நிறைவேற்றப்பட்டால், மக்களுக்கும், விஞ்ஞானத்திற்கும், தொழில் நுட்பத்திற்கும், நாட்டிற்கும், அதனுடைய பொருளாதாரத்திற்கும் நன்மைபயக்கும். ஒரு புது வகையான சமூக வளர்ச்சிக்கு வழிகோலும்.

## 1. விஞ்ஞான தொழில்-நுட்பப் புரட்சியும் அதன் உள்ளடக்கமும்.

### அ. தொழிற் புரட்சியிலிருந்து—விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சிக்கு

இப்பொழுதெல்லாம், விஞ்ஞான- தொழில் நுட்பச் சாதனைகளை மிகவும ஏற்றவாறு பயன்படுத்துவதுதான் சிறந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகவுள்ளது. 18வது நூற்றாண்டில் தொடங்கிய தொழிற் புரட்சியினால் மனித உடல் திறத்திற்குப் பதிலாக இயந்திர சக்தியைப் பதிலீடு செய்த, அக தகன இயந்திரங்களையும், அதுபோன்ற வேறு இயந்திரங்களையும் அனைத்துத்துறைகளிலும் பயன் படுத்தினர் இவ்வாறு உற்பத்தி எந்திரமயமாக்கப் பட்டதானது, குறிப்பாகப் பொருட்களைக் கொண்டு செல்லும் பட்டைகளைப் போன்ற டேய்லரின் நிர்வாக யுக்திகளுடன் உற்பத்தி எந்திரமயமாக்கப்பட்டதானது ஏகபோக முதலாளித்துவத்தின் வளர்ச்சியைத் தூண்டி விட்டது.

உற்பத்தி இயந்திரமயமாக்கப்பட்டதும், பேரளவு, உற்பத்தி யுக்திகளும் உற்பத்தியைப் பெருமளவு உயர்த்தின; உழைப்புச் செறிவை ஏற்படுத்தின. தொழிலாளர் அந்நியப் படுத்தப்படுவதையும், அவர்கள் அணிதிரண்டு ஒன்று சேரும்

நிலையையும் அதிகரித்தன. புதிய சந்தைகளுடன் பொருட்களின் தோற்றுவாய்களைப் பிடித்துக் கொள்வதற்கான வாய்ப்புகளுக்காக முதலாளித்துவ அரசுகளிடையே பூசல்களைத் தூண்டிவிட்டன.

பெரும்பாலான தொழில்களில் இருபது நல்லது முப்பது ஆண்டுகளுக்கு முன்னரே இயந்திரமயமாக்கல் முற்றுப் பெற்று விட்டது.

இன்று தோன்றி வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் இயல்பு உடல் திறம் தேவைப்படும் செயல்களுக்குப் பதில் தானியங்கிகளைப் பயன்படுத்துவதையும், சரி நுட்பமான இயந்திரங்களைப் பயன்படுத்துவதையும், கருவிகளைப் பயன்படுத்துவதையும், விரைவான இயக்கத்தைப் பயன் படுத்துவதையும், உள்ளடக்கியதாய் இருக்கிறது. ஆனால் தானியங்கிகளைப் பயன்படுத்துதல் என்ற நிகழ்ச்சிப் போக்கு முழுவதுமாக முற்றுப்பெற்று விடவில்லை. உண்மையில் பெரும்பாலான துறைகளில் அது இப்பொழுது தான் தொடங்கியுள்ளது. அது பொறியியல் துறையிலும், ஆற்றல் துறையிலும், இரசாயனத் தொழில்களிலும் பெருமளவு புகுத்தப்பட்டுள்ள போதிலும், இயந்திரமய மாக்கப்பட்ட உழைப்பில் உலகம் முழுவதும் அது பயன் படுத்தப்படுகிறது என்று இப்பொழுது சொல்லி விட முடியாது. தானியங்கி உற்பத்தி முறையுடன் கூடவே மனிதனின் கைகளால் செய்யும் சிறுசிறு செயல்களும் பயன் படுத்தப்படுகின்றன. பொறியியலாளர்களின் எண்ணிக்கையும், தொழில் வித்தகர்களின் எண்ணிக்கையும், அரைகுறைத்திறமை கொண்ட தொழிலாளர்கள் திறமை யற்ற தொழிலாளர்கள் ஆகியோரின் எண்ணிக்கையும் ஒரே அளவாகத்தான் உள்ளன என்று உண்மைப்புள்ளி விவரங்கள் தெளிவாக்குகின்றன.

இருப்பினும் மின்சக்தி உற்பத்தித்துறைகளிலும் மோட்டார் தொழில் போன்ற மிகுந்த உற்பத்தித்திறன் படைத்த முன்னேற்றமடைந்த துறைகளிலும் தானியக்கம்

உற்பத்தியின் அனைத்துப் பகுதிகளிலும் பயன்படுத்தப் படுகிறது.

ஏற்ற சொல் காணப்படாததால் - நம்முடைய சொற் களஞ்சியம் ஒரு குறிப்பிட்ட வரம்பிற்குட்பட்டதாக இருப்பதால்,—உற்பத்தி சக்திகளின் புதிய தொழில் நுட்பப் படிநிலை—உற்பத்தியைத் தானியக்கம் ஆக்கும் படிநிலை, அல்லது அறிவாற்றல் நிறைந்ததாக ஆக்கும் படிநிலை என வர்ணிக்கப்படுகிறது. அது உழைப்பு நிகழ்ச்சிப் போக்கில் ஆழ்ந்த பெரும் மாற்றங்களைக் கொண்டு வருகிறது. தனிச் செயல்களோ, அல்லது செயல்களின் தொகுதிகளோ, தானியக்கம் கொண்டதாக ஆக்கப்படவில்லை. மாறாக உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கு முழுமையும் தானியச்கம் கொண்டதாக ஆக்கப்படுகிறது. இது மனிதனின் கைகள் உடனடியாக ஈடுபடாமல் தன்னைத்தானே ஒழுங்குபடுத்திக் கொள்கிற பெருஞ்சிக்கல் நிறைந்த அமைப்பு முறைகள் வளர்வதை இன்றியமையாத ஒன்றாக ஆக்குகிறது.

விஞ்ஞான சாதனைகள் பெருமளவில் பயன்படுத்தப் படுகிற ஒருதுறை, தொழில் தொகுதிகள் மட்டுமல்ல. சேவை என்று அழைக்கப்படுவதில் அடங்கிய நிர்வாகம், செயலாட்சி ஆகியவற்றிலும், முதலீட்டுப் பகுதிகளைத் தேர்ந்தெடுப்பதிலும், முடிவெடுப்பதிலும் (உதாரணமாக, திட்டமிடுதல், திட்டச் செயல் முறைகளை அமைத்தல், வரவு செலவு பற்றித் திட்டமிடல்) கூட முன்னேற்றத் தொழில் நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இது சித்தாந்தப் போராட்டத்தின் போக்கில் நமக்குச் சில பிரச்சினைகளைத் தோற்றுவிக்கிறது. ஏனெனில் விஞ்ஞானத் தன்மை கொண்டதென உரிமை கொண்டாடுகின்ற "தொழில் வித்தகராட்சிக் கோட்பாடு" இதனால் வளர்கிறது. விஞ்ஞான ரீதியான, மெய்யான சமூக வளர்ச்சிக் கருத்து களை எதிர்த்து பூர்ஷ்வாக்கள் பெரிய தாக்குதலை மேற் கொண்டிருக்கிறார்கள்.

பெரும் முதலாளித்துவ நாடுகளில் விஞ்ஞான ஆராய்ச்சி பல வழிகளைப் பின்பற்றி வளர்ந்து வருகிறது. பெரும் பாலான இந்த நாடுகளில் ஆராய்ச்சிகளின் நிலைமையும், திசை வழியும் பிரச்சினைக்குள்ளானவையாகயுள்ளன. இரண்டு இயல்புகள் மேலெழுந்துள்ளன. அரசு ஏகபோக முதலாளித்துவத்தின் நெருக்கடியின் அடையாளங்கள் தோன்றிய 1960 களின் பிற்பகுதியிலிருந்த மொத்த தேசிய உற்பத்தியில் ஆராய்ச்சிக்கென வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பெற்ற பங்கு, மிகக் குறைவானதாகவே இருந்தது. இது 1945-1965 க்குப் பிறகு பெரும்பாலான பெரிய ஏகாதிபத்திய நாடுகள் அனைத்திலும் நிகழ்ந்தது அப்போது ஆராய்ச்சிக்கென ஒதுக்கப் பெற்ற பணத்தின் அளவு தேசிய மொத்த உற்பத்தியில், அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 3 சதவிகிதமாகவும், பிரிட்டனில் 2.3 சதவிகிதமாகவும், மேற்கு ஐரோப்பாவில் 1.5 சதவிகிதத்திற்கு அதிகமாகவும் இருந்தன.

இரண்டாவது இயல்பு என்னவென்றால் அவ்விதமான ஆராய்ச்சியின் விஞ்ஞான ரீதியான நோக்கங்களை ராணுவம், பொதுவாழ்க்கை ஆகிய இரண்டுதுறைகளிலுமே மிக வலிமையான ஏகபோகக் குழுக்களின் நீண்டகால, மத்தியகால நோக்கங்களுடன் இணைப்பதாகும்.

சென்ற 30 ஆண்டுகளின் விஞ்ஞானம், தொழில் நுட்பம் பொருளாதாரம் ஆகியவற்றின் வளர்ச்சி வரலாறானது விஞ்ஞானம், சமூகம், பொருளாதாரம் ஆகியவற்றின் வளர்ச்சிகளிடையே இன்றியமையாத புதிய பிணைப்புகள் தோன்றி வளர்கின்றன என்ற முடிவுக்கு நம்மை இட்டுச் செல்கிறது. விஞ்ஞானத்தின் வளர்ச்சியின் மீதும், தொழில் நுட்ப வளர்ச்சியின் மீதும் நம்பிக்கை கொண்டிருப்பது பிரான்சில் உள்ள ஏகாதிபத்திய சக்திகளின் தரத்தில் ஒரு முக்கியப் பகுதியாய் இருப்பதைப்போலவே, ஜனநாயக சக்திகள், தொழிலாளி வர்க்கம் ஆகியவற்றின் தந்திரத்திலும் ஒரு முக்கியப் பகுதியாய் இருக்கிறது.

## ஆ. விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியும், அதன் வாய்ப்பு வளங்களும், உண்மைகளும்.

பொதுவாக விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியானது உற்பத்தி சக்திகளுக்கும், விஞ்ஞானத்துக்கும் இடையிலான பரஸ்பரச் செயலில் வெளிப்படுகின்ற புதிய செயலியக்கத்தை நிர்ணயிக்கிறது.

ஆகவே நாம் காண்பதுபோல, விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் ஆய்வியல் நெறிமுறை முக்கியத்துவத்திலும், அது எந்த அளவு சமுதாயத்தைப் பாதிக்கிறது என்ற விஷயத்திலும் நிலவுகிற குழப்பத்தைத் தீர்ப்பது மிகவும் இன்றியமையாதது ஆகும்.

நெருக்கடியைக் கூர்மையானது ஆக்குகிற காரணிகளில் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி முக்கியமானது அல்ல. மூலதனம் அளவுக்கும் மிகுதியாகக் குவிக்கப்பட்டிருப்பது தான் காரணம் என்று கண்டு கொள்ளக்கூடும். எனினும் அதே வேளையில் அரசு ஏகபோக முதலாளித்துவத்தின் நெருக்கடி—ஒவ்வொரு ஏகாதிபத்திய நாட்டிலும், சர்வதேச உறவுகளிலும் அது வெளிப்படும் அளவிற்கு—விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சி சகாப்தத்தின் தொடக்க காலத்திய முதலாளித்துவத்தின் நெருக்கடியாகவேதான் உள்ளது. முதலாளித்துவ சமுதாயத்தின் நெருக்கடியானது குறிப்பிட்ட நாடுகளிலுள்ள தனிச் சிறப்பான வரலாற்று நிலைமைகளிலிருந்து தோன்றுகிறது. அந்தக் குறிப்பிட்ட வரலாற்று நிலைகளில் அரசியல், சமூக, பொருளாதார சக்திகள் செயல் புரிவதற்கிடமாகும் தனிப்பட்ட வடிவங்களால் அது பாதிக்கப்படுகிறது. பெரிய தொழில், நிதி ஏகபோகங்கள், பன்னாட்டு நிறுவனங்கள் ஆகியவை கையாளுகின்ற சூழ்ச்சித்திறனில் அது உருவாகிறது.

விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி ஒரு வளர்ச்சியடைந்த முதலாளித்துவ சமுதாயத்தை ஒரு சோஷலிச சமுதாயமாக மாற்றியமைப்பதைத் தவிர்க்க முடியாத

தாக்குகின்ற ஓர் இன்றியமையாத சக்தி அல்ல. ஒரு சில சித்தாந்த வாதிகள் நம்மை நம்பும்படிச் செய்ய விரும்புகிற எண்ணங்களுக்கு மாறாக அது முதலாளித்துவ சமுதாயமும், சோஷலிச சமுதாயமும், மனித இனத்தின் தனிச் சிறப்பான குண இயல்புகளைப் பற்றிக் கவலைப்படாமல் ஆண்மையற்ற ஓர் "இலட்சிய உலகில்" "ஒன்றுகூட" வழி வகுக்கும் அந்த இலட்சிய உலகத்தை நோக்கி இட்டுச் செல்ல மாட்டாது.

சில முதலாளித்துவ அரசுகளில் நிலவுகிற இன்றைய விஞ்ஞானத்தின் மட்டத்தை நாம் அறிந்தால் உற்பத்தி சக்திகளை மாற்றக் கூடிய மாபெரும் வாய்ப்புகள் முளையிலேயே கிள்ளியெறியப்பட்டு விட்டன என்றும், சமூக அமைப்பு முறை அடிப்படையிலேயே புதிய ஒரு திசை வழியை மேற்கொள்ளும்வரை, சமூக அமைப்பு முறையும், சமூக உறவுகளும் புரட்சிகரமாக மாற்றப்படும்வரை, அவைகள் பலன் தரமாட்டா என்றும் நமக்குத் தெளிவாகும். இந்த நாடுகளில் ஒரு புரட்சிகரமான தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் ஒன்று திரண்டுள்ள மக்களின் உணர்வு பூர்வமான செயல்முறைகளால் மட்டுமே அது நடைபெற முடியும். இதனால் புரட்சி என்பது முன்னதாகவே வகுத்தமைக்கப்பட்ட வரலாற்றுப் பரிணாம வளர்ச்சியின் விளைவாகவோ அல்லது ஏதாவதொரு விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் தன்னியல்பான விளைவாகவோ இருக்க முடியாது என அறிந்து கொள்ள முடியும்.

விஞ்ஞானத்தின் வளர்ச்சிக்கும், சமுதாய மாற்றத்திற்கும்—குறிப்பாக பிரான்சில் உள்ளது போன்ற வளர்ச்சியடைந்த ஒரு முதலாளித்துவ சமுதாயத்தின் மாற்றத்திற்கும் இடையில் நிலவுகிற உறவு பற்றிய கேள்வியே மிகவும் கடினமான கேள்விகளில் ஒன்றாகும்.

இந்தப் பிரச்சினைக்கு ஆழ்ந்த பகுப்பாய்வு இன்றியமையாதது. அது இல்லையென்றால் இரண்டு

பேரபாயங்கள் தோன்றலாம். முதலாவது பேரபாயம் விஞ்ஞான வளர்ச்சி சமூக வளர்ச்சி வகையுடன் ஒரு நடுநிலை உறவுடையது என நாம் முன்கூட்டியே (விஞ்ஞான முன்னேற்றம் ஒரு தன்னாட்சியுடையது என்ற முழுதும் உண்மையான கருத்தின் அடிப்படையில், ஏற்றுக் கொண்டால் தோன்றுகிறது. அடுத்த அபாயம், விஞ்ஞான வளர்ச்சியானது, பெரிய ஏகபோகங்களின் அரசியல் நலன் களுக்கு அல்லது நிதி இலட்சியங்களுக்குக் கீழானதாக்கப் பட்டால், தோன்றுகிறது.

### இ. விஞ்ஞானமும்-சமூக உறவுகளும்: சுதந்திரமும்-சார்பு நிலையும்.

விஞ்ஞானம் ஒப்பீட்டில் சுதந்திரமான வளர்ச்சியுடைய தாயிருப்பது குறிப்பிட்ட விஞ்ஞானத்துறையானது எந்த அளவுக்கு அருவக் கருத்தாக உள்ளது என்பதையே பொருத்தது. விஞ்ஞானமானது அறிவின் கையிருப்பின் மீதும், கோட்பாட்டடிப் படையிலான அனுபவத்தின் மீதும், நடைமுறை அனுபவத்தின் மீதும் சார்ந்துள்ளது. இந்த அனுபவமும், அறிவும் தொடர்ச்சியான மறு ஆய்வுகளுக்கு உட்படுகின்றன. விஞ்ஞானமானது மனிதனும், சமுதாயமும் இயற்கையுடன் கொண்ட உறவை ஆழப்படுத்தவும், விரிவடையவும் செய்கிறது. அவ்வாறு செய்யும் பொழுது புதிய சுதந்திரங்களுக்கு வழி செய்கிறது. சுதந்திரம் என்பது மக்கள் நாள் தோறும் சந்திக்கிற உயிரியல், சமூகம், பொருளாதாரம் ஆகியவை தொடர்பான விஷயங்களை ஆட்சி செய்யும் திறன்தான்.

மிக அதிகமான தியாகங்களை இன்றியமையாததாக்கியே இயக்க மறுப்பியல் கருத்துகளும், அனுபவவாதக் கருத்து களும் விஞ்ஞானச் செயல்பாடு என்ற ஆட்சி எல்லையி லிருந்து ஒதுக்கப்பட்டன. பல சமயங்களில் பெரும் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் மோதிக் கொண்டன. அவை களின் காலத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்துக்களுடன்

அவைகள் போட்டியிட வேண்டியிருந்தது. உண்மையில் பார்க்கப்போனால் அந்தக்காலத்திலிருந்த கருத்துக்கள் ஆட்சியாளர்களின்— அதாவது நிலப்பிரபுக்களின் கருத்துக்களாக அல்லது பூர்ஷ்வாக்களின் கருத்துக்களாக இருந்தன. அதே வேளையில் மக்களின் படைப்பாற்றல் மிக்க செயல் தான், விஞ்ஞானம். மக்கள், — அவர்கள் சில அம்சங்களில் புரட்சிவாதிகளாக இருந்தாலும் கூட — எப்பொழுதுமே தாங்கள் வாழும் காலம், அந்தக் காலத்தின் கலாச்சாரம், அதன் சமூக ஒழுங்கமைப்புகள் ஆகியவற்றினால் அவர்கள உருவாக்கப்படுகிறார்கள். அவர்களுடைய முறைகளும், அணுகுமுறைகளும, ஆய்வியல் கருவிகளும், அவர்கள் வாழ்கின்ற காலத்தைச் சார்ந்தவைதான். அவைகள் அந்தக் காலத்தின் தொழில் நுட்ப வளத்தைச் சார்ந்ததாகவேதான் இருக்கும். உருப்பெருக்கியும், கலிலியோவின் தொலை நோக்கியும் கண்டு பிடிக்கப்பட்டவுடன் விஞ்ஞான வளர்ச்சி தூண்டப் பட்டது என்பதையும், விஞ்ஞானம் அளக்கும் கருவிகளின் மிகவும் நுட்பமான துல்லியத்தினால் பயனடைந்திருக்கிறது என்பதையும், வெகு அண்மைக்காலத்தில் விண்வெளி விஞ்ஞானத்தின் வளர்ச்சியினாலும், மின்னணுக் கம்ப்யூட்டர்களின் வளர்ச்சியினாலும் விஞ்ஞானம் பயன் பெற்றுள்ளது என்பதையும் நினைவூட்டிக் கொண்டால் அது தெளிவாகும்.

ஆராய்ச்சியின் பெருத்த செலவும், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளில் சில, மிகுந்த சமூக, இராணுவ அல்லது பொருளாதார தாக்கம் உடையதாக இருந்தன என்பதும் (இரண்டு எதிரெதிரான உதாரணங்கள், அணுவெப்ப ஆயுதங்களின் வளர்ச்சியும், நுண்மின்னணுவியல் இயந்திரங்களின் முன்னெப்போதுமில்லாத வளர்ச்சியும்) விஞ்ஞான செயல் முறைகளின் நோக்கங்களையும், திசைகளையும், ஆளும்வர்க்கத்தின் நலன்களையே மேலும், மேலும் உறுதியாகச் சார்ந்திருக்குமாறு செய்துள்ளன. சென்றகாலத்தில் கூட விஞ்ஞானத்தின் வளர்ச்சி சமுதாயத்தின் முக்கியமான அரசியல் இலட்சியங்களுடன் நெருக்கமாகப் பிணைக்கப்

பட்டிருந்தது. எனினும் விஞ்ஞானம் இன்று அரசியலில் பயணம் வைக்கும் ஒரு பொருளாக ஆகியுள்ளது.

இன்றைய சகாப்தம் விஞ்ஞான அறிவில் இதுவரை கண்டிராத வளர்ச்சி நிறைந்த காலமாக விளங்குகிறது. எனவே இது மனித இனத்திற்குத் துன்பம் விளைவிக்கிற பெரும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான புதிய வாய்ப்புகளைத் தோற்றுவித்துள்ளது. விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியானது உற்பத்தி சக்திகளின் பொருளாயத தொடர்பான, மனிதர்கள் தொடர்பான அனைத்துக் கூறுகளையும் மேற்கொண்டு வளர்ச்சியடையுமாறு செய்கிறது.

இருப்பினும், வளர்ந்த முதலாளித்துவ நாடுகள் மக்களுடைய உறவுகளில் ஒரு புரட்சியைத் தடுக்க முடியாது; வாழ்க்கையின் அனைத்துத் துறைகளிலும் பெரும் மூலதனத்தின் ஆட்சியை அழிக்காமல் விட முடியாது. விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் காலத்தில் உள்ள உற்பத்தி சக்திகளின் உள்ளடக்கமும், திசை வழியும் வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடுகளில் சமரசப்படுத்த முடியாத வர்க்கப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சமூக அரசியல் சக்திகளால் தீர்மானிக்கப் படுகின்றன.

## 2. அரசு ஏகபோக முதலாளித்துவத்தின் நெருக்கடி

பத்தாண்டுகளுக்கு முன் (1969 இல்) பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சியானது நாட்டின் நிலைமையை அடிப்படையாகக் கொண்டும், 1968 மே, ஜூன் மாதங்களின் மாபெரும் பாடங்களின் அடிப்படையிலிருந்தும் பிறநாடுகளைப் போல, அதாவது, முழு முதலாளித்துவ உலகத்தையும் போல, கடினமான நீண்ட ஒரு நெருக்கடியை நோக்கி பிரான்சும் சென்று கொண்டிருக்கிறது என்ற முடிவுக்கு வந்தது.

இந்த முடிவை அதன் பின்னர் நடந்த நிகழ்ச்சிகள் உறுதிப்படுத்தியுள்ளன.

நாம் எல்லோரும் அறிந்த பொதுவான உண்மைகள்-(வர்ணனை செய்ய இது ஏற்ற இடம் அல்ல, 1967-1968 களிலிருந்து முதலாளித்துவ உலகில் வளர்ந்துவரும் பணவீக்கம, பணவியல் நெருக்கடி, விலை அமைப்பு முறைகளின் குழப்பங்கள்-குறிப்பாக எரிபொருள். ஆற்றல் ஆகியவற்றின் தேவைக்கும் அளிப்புக்கும் இடையில் உள்ள இடைவெளி அகன்று வருவதும், இயற்கை வளங்களைக் கொள்ளையடிப்பதும், தவறாகப் பயன்படுத்துவதும், அடிப்படையான தேவைப் பொருட்களின் விலைகளில் ஏற்படுத்தும் குழப்பங்கள், தொழிலாளி மக்களின் ஊதிய வளர்ச்சி மீது கட்டுப்பாடு விதித்தல், சமூகத்தேவைகளுக்குச் செலவழிக்கப்படும நிதியளவு குறைவதனாலும், அதற்கு மாறாக ஆயுதங்களுக்காகச் செலவழிக்கப்படும் பணத்தின் அளவு மிகுதியாவதனாலும் 1960 களின் பின்பகுதியில் தொடங்கி 1975 லிருந்து பெருகிக் கொண்டிருந்த பொருளாதார வளர்ச்சி விகிதத்தில் குறைவு, பெரும் வேலையில்லாத் திண்டாட்டம் ஆகிய இவைகள் ஆகும்.

இந்தக்காரணிகளைப் பகுத்தாராய்ந்ததன் விளைவாக நாங்கள் பெற்ற முடிவுகளைத் திரும்பவும் ஒருமுறை பரிசீலிக்க விரும்புகிறோம்

அ) எங்களைப் பொருத்தவரை, இன்றைய நெருக்கடி உற்பத்தியில் ஒரு சுழல் தன்மை நிறைந்த வீழ்ச்சியினாலும், அதைத்தொடர்ந்துவரும் நீண்ட வியாபார மந்தத்தினாலும் குறிக்கப்படும் ஒரு சாதாரண நெருக்கடியல்ல. அது ஓர் ஆழமான நீண்ட நெருக்கடி. இரண்டாம் உலகப் போரிலிருந்து 1967—1970 வரை நாம் கண்ட, ஏறத்தாழ பத்தாண்டுக்கால இடைவெளியில் நடைபெறுகிற சுழல்களின் உருவங்களை மாற்றுகிற முதலாளித்துவப் பொருளாதாரத்தின் கட்டமைப்பு நெருக்கடியாகும் அது.

அதிகாரத்தில் உள்ள அரசு பெரும் முதலாளிகளின் நலனைப் பாதுகாக்கச் செய்கிற அனைத்து முயற்சிகளும்

மேற்கொள்ளப்பட்ட போதிலும் பொருளாதார சமூக இன்னல்களுடைய முரண்பாடுகளும், உறுதியற்ற தன்மையும், குழப்பமும், சினங்கொண்டு மேலெழுந்துள்ளதே தவிர குறையவில்லை, என்பதனால் இன்றைய நெருக்கடியின் கட்டமைப்புத்தன்மை தெளிவாக விளங்குகிறது.

வேறுமாதிரி சொன்னால், சமூக வளர்ச்சிக்குத் தடையாக இருப்பது, பொருளாதாரக் கட்டமைப்பும், உழைக்கும் மக்களைச் சுரண்டுவதும், மூலதனம் குவிக்கப் படுவதும்தான்.

சுருங்கச் சொன்னால் முதலாளித்துவ முறைப் பணம் சேர்க்கும் முறைகளும், சுரண்டல் முறைகளும், முடிவான இலட்சியத்துடன், அதாவது, சேர்க்கப்பட்ட பணத்தை மிக் அதிகமான அளவு இலாபம் தரக்கூடிய முதலீடு செய்வது என்ற முடிவான லட்சியத்துடன் மோதிக் கொள்கின்றன. ஒருபுறம் உச்சவரம்பு உபரி மதிப்பைப் பெறுவதற்கு முதலாளிகளால் பயன்படுத்தப்படுகிற சமூக உற்பத்தித் திறனை உயர்த்துவதற்கான வழிகளுக்கும், மறுபுறம் உண்மையிலேயே உற்பத்தித்திறனை உயர்த்துவதற்கு மிடையே நிலவுகிற முரண்பாடுகள் மிக அதிகமானவை.

ஆ) பொருளாதாரத்தைத் தவிர வேறு பகுதிகளையும், இந்த நெருக்கடி பாதிக்கிறது. இது உலகம் முழுதும் பரந்ததாகவுள்ளது. இது வாழ்க்கையின் அனைத்துப் பகுதிகளிலும் பரவி நிற்கிறது. அதாவது சித்தாந்தம், தொழில் நுட்பத்துறை, அறநெறி அரசியல் ஆகிய துறைகளில் பரவி நிற்கிறது. அரசு ஏகபோக முதலாளித்துவ சூழ்நிலையில் பெரும் பூர்ஷ்வாக்களின் ஆட்சி, சமுதாய முழுமையின் தேவைகளுடன் மேலும், மேலும் அதிகமாக மோதிக் கொள்கிறது. போருக்குப் பிந்திய காலத்தின் சுரண்டலினாலும், பணம் மிகுதியாகக் குவிக்கப் படுவதனாலும், தோற்றுவிக்கப்பட்ட முக்கியமான பிரச்சினைகளை சமாளிக்க ஏகபோக மூலதனம் மிகவும் தயங்குகிறது. உற்பத்திச் சக்திகள் உற்பத்தியைப் புரட்சி

கரமாகவும், முற்றிலுமாகவும் தானியக்கப் படுத்து கின்றதனாலும், இன்றைய போராட்டத்தில் மக்கள் தெளிவாக்கும் தங்களது புதிய விருப்பங்களினாலும் தோற்றுவிக்கப்பட்ட முக்கியமான பிரச்சினைகளை சமாளிக்க ஏகபோக மூலதனம் தயங்குகிறது.

பிறவற்றிற்கிடையே உற்பத்தித்திறனற்ற துறைகளின் வளர்ச்சியும், பெண்கள் வேலைக்கமர்த்தப்படுவதும், கூலி, ஊதியம் ஆகியவற்றைச் சம்பாதிப்பவர்கள் மிகுதியாய் வளர்ந்துள்ளதும், உழைப்புச் சூழ்நிலைகள் தேவையான கல்வியின் அளவு ஆகியவற்றில் குறைவு ஏற்பட்டிருப்பதும், உற்பத்திச் செயல்கள் பகுதி, பகுதியாகப் பிரிக்கப் பட்டிருப்பதும் மிக அதிகமாக உழைப்பு தீவிரப்படுத்தப் படுவதும், பெரு நகரங்களில் மனித உணர்ச்சிகள் குறைந்த சூழ்நிலையில் காணப்படுகிற நேசமின்மையும், பணியாற்று மிடத்திற்குச் செல்வதற்கும், அங்கிருந்து மீள்வதற்கும் மிகுதியான தூரம் பயணம் செய்ய வேண்டியிருப்பதும், மூலதனக்காரர்கள், அதிகாரவர்க்கம், நாட்கடத்தும் மரபு முறை ஆகியவற்றிற்கு ஏற்ப சமுதாயத்தின் வாழ்வில் அரசு தலையிடுவதும்,— இவையனைத்தும் ஜனநாயகப்படுத்து வதையும், தனி மனிதனின் உடல் வளர்ச்சியையும், உள்ள வளர்ச்சியையும், உழைக்கும் உணர்வைப் போற்றுதலையும், தடுப்பவைகளாகத் திகழ்கின்றன. அவைகள் மனிதனை, தன் தலைவிதியைத் தானே நிர்ணயிக்க முடியாதவன் ஆக்குகின்றன. இதனால் உழைக்கும் பிற சமூகக் கூட்டத் தினருடன்—குறிப்பாக அறிவு ஜீவிகளுடன் இணைந்து ஒரு போராட்ட மனப்பான்மை கொண்ட ஒன்றுபட்ட அணி தோன்றுவதற்குத் தடையாக உள்ளது.

இ) பொருளாதாரம், சமூகம், அரசியல் ஆகிய துறைகள் அனைத்திலும் தன் ஆதிக்கத்தைக் கொண் டிருக்கிற பெரும் பிரெஞ்சு பூர்ஷ்வாக்களின் ஆட்சியில் நிகழ்ந்துவரும் பிரான்சின் நெருக்கடியின் தோற்றுவாய் களும், முக்கியமான விசைகளும் எங்கள் நாட்டிலேயே

வேறுன்றியவை என்பதனால் அது தேசிய நெருக்கடி எனச் சொல்லத்தக்கதாகும்.

ஆனால் அதேவேளையில் இன்றைய முதலாளித்துவத்தின் நெருக்கடியானது உண்மையான பொருளில் சர்வதேசத் தன்மை கொண்டதாகும். இலாபத்தையும், பணத்தையும் பெருமளவில் குவிக்கவேண்டும் என்ற பேராசையானது ஒவ்வொரு தேசத்திலும் தனித்தன்மை கொண்டதாய் இருப்பினும் அது ஏகாதிபத்திய சக்திகள் அனைத்தையும் ஒரே நெருக்கடியில் தள்ளிவிட்டிருக்கிறது.

இன்றைய நெருக்கடியின் உள்ளடக்கத்தை நிர்ணயிக்கிற காரணிகளில், தனித்தனி நாடுகளில் ஏற்படும் நெருக்கடி களின் மீது செல்வாக்கைச் செலுத்துகிற சர்வதேசக் காரணி களும் உள்ளன. ஏனெனில் ஒவ்வொரு ஏகாதிபத்திய சக்தியும் சர்வதேச உறவுகளின் வட்டத்தைத் தனக்குரிய இடர்ப்பாடுகளைச் சமாளிக்கப் பயன்படுத்த முயல்கிறது.

உதாரணமாக அமெரிக்கா அதனுடைய டாலரின் தனிச் சிறப்பான நிலையையும், வலிமை மிக்கதாயிருக்கும் நிலையையும் பயன்படுத்தி வருகிறது. இது உலகளவில் பரவியுள்ள பணவீக்கத்தை மிகவும் சுறுசுறுப்பாகவும், பெரிய அளவிலும் பெருக்க உதவியது. எனவே அது முடிவாக முதலாளித்துவ சர்வதேசப் பணவியல் அமைப்பு முறையில் ஒரு நெருக்கடியைக் கடும் வேகமானதாக்கியது; போட்டியைக் கூர்மையானதாக்கியது; சர்வதேச உறவு களின் நிலையைச் சீர்குலைத்தது.

இன்றைய நெருக்கடி பல கோடி மக்கள் உண்பதற்கு உணவில்லாமல் தவிக்கிற வளரும் நாடுகளின் மூலப்பொருட் களை ஏகாதிபத்தியங்கள் கொள்ளையடிப்பதன் விளைவும் கூடத்தான்.

இறுதியாக இன்றைய நெருக்கடி முதலாளித்துவ அமைப்புமுறை எவ்வளவு தூரம்தான் செல்ல முடியும் என்பதை, முதலாளித்துவ உலக மட்டத்திலேயே

தெளிவாக்கியுள்ளது-இந்த முறை மக்களைச் சுரண்டுவதை வளர்க்கிறதோடு மட்டுமல்லாமல், இனவெறியையும், ஆயுதப் பெருக்கப் போட்டியையும் தூண்டி விடுகிறது. மேலும் இது கொள்ளையடிப்பதையும், மனித வளத்தையும், மூலப் பொருள் வளத்தையும் பெருமளவில் வீணாக்குவதையும், சூழ்நிலை கேடுறுவதையும் இன்றியமையாதது ஆக்குகிறது.

ஈ) இன்றைய நெருக்கடி போன்ற இன்னல் நிறைந்த காலங்கள் முதலாளித்துவ அமைப்பு முறையில் இதற்கு முன்னர் இருக்கத்தான் செய்தன. அது இம்மாதிரியான இன்னல் நிறைந்த காலத்துடன் கூடவே நீண்ட, பணம் குவிக்கக் கூடிய காலங்களையும் கண்டிருக்கிறது. உதாரணமாக 1873—1896 க்கும் இடைப்பட்ட இன்னல் நிறைந்த காலம் 1852-1873 க்கும் இடையில் இருந்த எழுச்சிக் காலத்தைப் பின்தொடர்ந்து வந்தது. அதேவேளையில் 1896—1914 க்கும் இடைப்பட்ட பொற்காலப் பெருக்கத்தைத் தொடர்ந்து 1929 ன் நெருக்கடியாலும், இரண்டு உலகப் போர்களாலும் சிறப்பாக ஏற்பட்ட 1914—1945 ன் வேலையில்லாத் திண்டாட்டம் வந்தது.

இவைகள் முதலாளித்துவ நெருக்கடிகள் நிறைந்த காலமாகவும், கட்டமைப்பை மீண்டும் சரிசெய்யும் காலமாகவும் இருந்தன 19-வது நூற்றாண்டின் இறுதியில் பழைய முதலாளித்துவத்திலிருந்து ஏகாதிபத்தியத்திற்கு, மாறுகின்ற போக்கும், அத்துடனே 1914-ம் ஆண்டுக் காலத்தில் தொடங்கி இரண்டாவது உலகப் பெரும் போர் முடிந்தவுடன் நிறைவுற்ற ஏகபோக முதலாளித்துவத்தி லிருந்து அரசு-ஏகபோக முதலாளித்துவத்திற்கு மாறும் போக்கும்.

நீண்ட காலமாகக் குவிக்கப்பட்ட மூலதனமே இந்தக் கால இடைவெளியின் திறவுகோல் ஆகும்.

உரிய காலங்களில் தோன்றுகிற, மிகுதியான உற்பத்தி தொடர்பான நெருக்கடிகளுக்கு மூலதனம் மிகுதியாகக்

குவிக்கப்பட்டிருப்பதுதான் காரணம் என்றார் மார்க்ஸ் என்று நாம் அனைவரும் அறிவோம். அதாவது, மொத்த சமூக மூலதனம் பெற்றுப் பயன்படுத்தக்கூடிய இலாபத்தைக் காட்டிலும் அதிகமான மூலதனக் குவிப்பின் பரிமாணம் முதலாளித்துவத்தின் இயல்பால் கட்டுப்படுத்தப்படுகிறது. முதலாளித்துவத்தின் கீழ் குறைந்த அளவு நேரத்தில் மிகுந்த அளவு இலாபம் பெறுவதுதான் பொருளாதார செயல் முறைகள் தூண்டப்படுவதற்கு இன்றியமையாததாக வுள்ளது. மூலதனம் குவிக்கப்படுவது தொழிலாளர்களின் உழைக்கும் சக்தி தொடர்ச்சியாகவும், தீவிரமாகவும் சுரண்டப்படுவதை அடிப்படையாகக் கொண்டுள்ளது. முதலாளித்துவ வழியில் மூலதனக்குவியல் உருவாகும்போது தொழிலாளிகளின் திறமைகளை வளர்க்கத் தேவையான முதலீடுகளுக்குக் கடைசி இடமே தரப்படுகிறது. ஆனால் பொருளாயத உற்பத்திசாதனங்களை உர்பத்தி செய்ய முதலிடம் தரப்படுகிறது. அதன் விளைவாக மூலதனத்தின் ஒன்றிணைந்த கட்டமைப்பு வளர்கிறது. உபரி மதிப்பை உற்பத்தி செய்யக்கூடிய உயிருள்ள மனித உழைப்பு ஒப்பீட்டில் சுருங்குகிறது. அந்த நேரத்தில் இலாபம் தரும் மூலதனம் தன்னியல்பில் மிகுதியாகப் பெருகுகிறது.

சமுதாயம் முழுமையிலும் மூலதனம் மிகுதியாகக் குவிக்கப்பட்டிருக்கிறது என்பதை, ஒரு நெருக்கடி காட்டுகிறது. அந்த வேளையில் அது, சுரண்டுவதைத் தீவிரமாக்குவதன் மூலமும், சமூக மூலதனத்தின் ஒரு பகுதி மதிப்பைக் குறைப்பதன் மூலமும், பொருளாதார முறிவு மூலமும், மூலதன மையப்பாட்டின் மூலமும், நிலவுகிற இலாபத்தின் விகிதத்தைப் பெறுவதற்கான சூழ்நிலைகளை "மீண்டும் தோற்றுவிக்கிறது". ஆனால் சில சமயங்களில் 1950 களின் துவக்கக்கட்டம் முதல் 1960 களின் முடிவுவரை இருந்த நிலைபோல ஒரு சுழலிலிருந்து அடுத்ததற்கான முதலாளித்துவத்தின் மறுஉற்பத்தியின் இயல்பானது மாறிக் கொண்டேயிருக்கும். மூலதனக் குவியல் என்பது மிகவும் அதிகரிக்கிறது. மூலதனத்தின் ஒன்றிணைந்த இயல்பு

பருத்து வீங்கும் தன்மை கொண்டதாகிறது. மூலதனத்திற்கும், உற்பத்திப் பொருளுக்கும் உள்ளவிகிதம், அதாவது, மிகுதியாகச் சேர்க்கப்பட்ட மதிப்பிற்கும், நடைமுறையில் பயன்படுகிற நிலையான மூலதனத்திற்கும் இடையேயுள்ள விகிதம் போர்க் காலத்திலிருந்து சிறிது சிறிதாக உயரும் தன்மை கொண்டிருந்தது என்பது ஏறத்தாழ எல்லா முதலாளித்துவ நாடுகளின் புள்ளி விவரங்களாலும் தெளிவாகக் காட்டப்படும் உண்மையாகும். இந்த விகிதததில் காணப்படும் மாற்றம் பெரும்பாலும் ஒன்றிணைந்த மூலதனத்தின் கட்டமைப்பின் மாற்றங்களைப் பிரதிபலிக்கிறது என்று நாம் உறுதியாகக் கூறலாம். ஏனென்னில் நிலையான மூலதனம், மாறாத மூலதனத்தின் பெரும் பகுதியைப் பிரதிபலிக்கிறது. சேர்க்கப்பட்ட மதிப்போ, உயிருள்ள தொழிலாளி செலவழித்த உழைப்பின் மொத்தத்தினாலும், உற்பத்தி சாதனங்களின் விலையைக் கடன் நிதி மூலமாகத் தீர்ப்பதனாலும் உண்டாகிறது.

பிரான்ஸ் நாட்டைப் பொருத்தவரை, தேசிய புள்ளி விவரம், பொருளாதார ஆராயச்சி நிறுவனத்தின் புள்ளி விவரங்களின்படி 1960 களிலிருந்து மூலதனத்திற்கும், உற்பத்திப் பொருட்களுக்கும் இடையேயுள்ள விகிதமானது மோசமாகிக் கொண்டே வந்திருக்கிறது. நிலையான மூலதனமானது உற்பத்திப் பொருளைவிட வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது.

ஒன்றிணைந்த மூலதனத்தின் கட்டமைப்பு விரிவடையும் போது மூலதனம் மிகுதியாகக் குவிக்கப்படுவது நீடித்ததாகிறது.

உபரிமதிப்பை உயர்த்துவது, அனைத்து சமூகத்தின் அளவிலும் இலாபத்தின் விகிதத்தை உயர்த்தப் போதாது. இந்தக் கூற்று இரண்டு மடங்கு உண்மையாக உள்ளது. ஏனெனில் மூலதனத்தின் உயர்ந்து வருகிற ஒன்றிணைந்த கட்டமைப்பு, உபரிமதிப்பு வளர்வதற்கு ஒருபெரும்

தடையாகவுள்ளது. மூலதனம் மிகுதியாகக் குவிக்கப்படுவதும், உழைக்கும் மக்கள் சுரண்டப்படுவது தீவிரப்படுத்தப் படுவதும் சமுதாயத்தின் பொருளாயத வகைதொகை களையும், மனித சக்திகளையும் இரண்டு மடங்கு வீணாக்கு கின்றன. இவ்வாறு அது சமூக உழைப்பின் உற்பத்தித்திறன் வளர்வதற்குத் தடையாகவுள்ளது. இந்தச் சூழ்நிலைகள் ஒன்றுசேரும்போதும் பொருளாதார நெருக்கடி முதலாளித்துவத்தின் தூண்களைப் பாதிப்பதாகக் கூறப்படுகிறது.

உ) இந்தப் பகுப்பாய்வு, இன்றைய நெருக்கடியின் வளர்ச்சியில் சில சிறப்பான இயல்புகள் உள்ளன என்ற முடிவுக்கு நாம் வருமாறு செய்கிறது.

தொடக்கமாக, இன்றைய நெருக்கடி முழுதும் மாறுபட்ட அரசியல் மற்றும், சித்தாந்த சக்திகளின் அணி களுடைய பின்னணியில் வளர்ந்து வருகிறது. உலக சோஷலிச சமுதாய அமைப்புமுறை நிலவுகிற உலகில், புதிய சர்வதேசப் பொருளாதார அமைப்பு முறைக்காக வளரும் நாடுகளில் உள்ள மக்கள் விடுதலைப் போராட்டத்தில் ஏகபோகங்களை எதிர்த்துப் போராடுவது உயர்ந்து வருகிற உலகில் அது வெளிப்பட்டு வருகிறது. மேலும் பல முதலாளித்துவ நாடுகளில் உள்ள பாட்டாளி வர்க்கங்கள் மிகவும் சிறப்பாக ஒன்றிணைக்கப்பட்டனவாகவும், போர்க் குணம் படைத்தனவாகவும் உள்ளன. இந்த வலிமை நிலை களின் பெருக்கம், சென்ற காலத்தில் பெரும் மூலதனம் பயன்படுத்திய முறைகளை, குறிப்பாக உலகப்பெரும் போர், பாசிசம், காலனி ஆட்சி முறை ஆகியவை போன்ற முறைகளைப் பின்பற்ற முடியாதவாறு செய்துள்ளது.

இந்த வகையில், முதலாளித்துவ ஆதிக்கம் சுருங்கி, அது எளிதில் வீழ்த்தப்படக்கூடிய நிலையில் இருக்கும் வேளையில், சக்திகள் புதுவகையில் அணி சேரும் சூழ்நிலைகளில், இன்றைய நெருக்கடியானது செயலாற்றுகிறது.

மேலும் ஒரு முக்கியமான சிறப்பியல்பு, அரசு-ஏகபோக முதலாளித்துவம் முன்னரே ஒரு முழுமையான உருவத்தைப் பெற்றபோதேதான் இன்றைய, நீடித்திருக்கின்ற மூலதனக் குவியல் ஏற்பட்டுள்ளது. 1974-1975 நெருக்கடிகளும், மிகுதியாக வளர்ந்துவரும், பொருளாதார முறிவுகளும், உற்பத்தியின் பல்வேறு துறைகளில் தொழிற்சாலைகள் மூடப்படுவதும், நிகழ்ந்த போதிலும், தனியார் ஏகபோகத்தின் மூலதனக்குவியலுக்கு உயிரூட்டி வளர்க்கும் நோக்கத்தில் மூலதனத்தின் மதிப்பை ஒருபகுதி குறைப்பது, உற்பத்தியில் நீடித்த வளர்ச்சியைப் பெறச் செய்ய இயலாது அல்லது இன்று நிலவுகிற மட்டத்தில் முதலீடுகளைப் பேணிக் காக்க முடியாது, என்பதே இங்கு புலப்படுகிறது.

இன்றைய கட்டமைப்பு நெருக்கடி மூலதனத்தின் சார்பாக மறைமுகமாகவோ அல்லது நேரடியாகவோ மிகவும் தந்திரமான முறைகளில் அரசு தலையிடுவதை சீர்குலைக்கிறது என்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும். இது மூலதனத்தின் ஒன்றிணைந்த அமைப்பு மிகப்பெருமளவு உயர்வதனால் மட்டுமல்ல என்பது உண்மைதான்: பெரும் ஆற்றல் மீறிய செலவுகளினால் இலாபத்தின் விகிதத்தில் குறைவு ஏற்படுவதனால் அரசின் ஒழுங்குக் கட்டுப்பாட்டுச் செயலும் சீர்குலைக்கப்படுகிறது. இந்த ஆற்றல் மீறிய செலவுகள் உபரிமதிப்பிலிருந்து கழிக்கப்படுகின்றன. முதல் வீணாக்கப்படுவதற்கும், ஆயுதப் போட்டிக்கும் இணையாக வளர்கிற உற்பத்தித் திறனற்ற உழைப்பிற்கு ஊதியமாகக் கொடுப்பதற்காகவும், உற்பத்திச் சக்திகளை வளர்க்க வேண்டிய தேவைக்கு உட்பட்ட ஆராய்ச்சி, கல்வி, சமூகக் காப்பீடு ஆகியவற்றிற்காகவும் செலவு செய்யப்படுகின்றன. இதற்கான முதலீடுகளைக் குறைப்பதற்காக முதலாளிகள் செய்கிற முயற்சிகள் ஒருபுறம் அவர்களுடைய பண்டங்களுக்குச் சந்தைகளைக் குறைக்கின்றன. மறுபுறம் சமுதாயத்தில் உள்ள தொழிலாளர்களின் உற்பத்தித் திறனைக் குறைக்கவும், உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியைத் தடுக்கவும் செய்கின்றன.

இன்றைய நெருக்கடிகளின் மூன்றாவது சிறப்பான இயல்பு, உழைப்பு முற்றிலும் தானியக்கமாக்கப்படுவதனால் மேலும் தூண்டப்படும் விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் தொடக்கத்துடன் ஒத்திசைவானதாக உள்ளது.

தானியக்கம், கூலி உழைப்பவர்களை உறுதியாக வெளியேற்றி விடும் என்பதல்ல. ஆனால் கூலி உழைப்பாளர் களின் பங்கையும் உள்அடக்கத்தையும் குறிப்பிடத் தகுந்த முறையில் மாற்றி விடுகிறது. உடல் உழைப்பு, மனஉழைப்பு ஆகியவற்றின் செயல்களை இயந்திரங்களுக்கு முழுதும மிகுதியான அளவில் மாற்றுவது, உபரி மதிப்பைத் தோற்றுவிக்கும் முதலாளித்துவ முறைக்கு இயல்பாகவே ஒத்திசைவாக இல்லாத கூட்டுறவின் உருவங்களிலும், உள்ளடக்கத்திலும் முடிவான மாற்றத்தைத் தோற்றுவித்துக் கொண்டிருக்கிறது.

ஏதோ ஒரு பொருளை மட்டும் உற்பத்தி செய்கிற இயந்திரத்துடன் ஒப்பிட்டால் மனிதன் வெளியிலிருக்கும் ஒருசக்தியே. ஆனால் அனைத்துத்துறைகளிலும் தானியக்கம் புகுத்தப்பட்ட பிறகு, விடப்பட்ட பொருளை உற்பத்தி செய்வதற்கு மனிதன் அதற்குரிய இயந்திரங்களைச் சரி செய்கிறான். அதன் மூலம் உழைக்கும் மக்களிடையேயான ஒத்துழைப்பின் உள்ளடக்கம் மாறும் இயல்புடையதாக வுள்ளது. தானியக்கம் உழைப்பின் நிகழ்ச்சிப் போக்குகளை பகுதி பகுதிகளாகப் பிரிப்பதையோ அல்லது அதைத் தீவிரப்படுத்துவதையோ அகற்றுகிறது. வேலைக்கு அமர்த்திக் கொள்பவரின் எதேச்சாதிகாரத்திற்கு எப்போதும் தொழிலாளி உட்படத் தேவையில்லை. அது உழைக்கும் மக்களிடையேயான பேச்சு வார்த்தைகளை அடிப்படையாகக் கொண்டிருக்கலாம். அல்லது தொழிலாளர்கள் முழுவதுமாக சேர்ந்து உழைப்பு நிகழ்ச்சிப் போக்கைக் கட்டுப்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டிருக்கலாம் அல்லது அதன் தனி உறுப்பினர்களுடைய கட்டுப்பாட்டில் இருப்பதை அடிப்படையாகக் கொண்டிருக்கலாம்.

தானியக்கம் தொழிலாளர்களின் திறமையையும், தொழிலாளர்களின் இயல்பையும் பற்றிய பிரச்சினையைப் புதிய ஒரு சூழ்நிலையில் எழுப்புகிறது.

விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி முதலாளித்துவ மூலதனக் குவியல் என்பதற்கு ஒவ்வாததாகவும், எதிரானதாகவும் உள்ளது. அது உழைக்கும் மக்களுடைய திறமைகளின் பெருமளவிலான வளர்ச்சிக்குஇட்டுச் செல்லக் கூடிய உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியை விரும்புகிறது. புறவயமாக்கப்பட்ட உழைப்பின் முதலீடுகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டுமென்கிறது. மேலும அது உழைக்கும் மக்கள் தங்களைத் தாங்களே உயர்த்திக் கொள்வதற்குப் போதுமான ஓய்வு நேரம் உடையவர்களாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறது.

முடிவாக விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சி முதலாளித்துவப் போட்டியைத் தொடர்ந்து வருகிற, சிதறிய நிலைகளுடனும், ஒழுங்கின்மையுடனும் ஒத்திசைவானதாக இல்லை. அது உற்பத்தி வட்டாரங்களுக்கிடையேயும், நுகர்வு வட்டாரங்களுக்கிடையேயும் புதிய உருவங்களில் ஒத்துழைப்பு வேண்டுமென - குறிப்பாகச் சொல்ல வேண்டு மானால் தானியக்கக் கருவிகளை உற்பத்தி செய்கிற தொழில் களுக்கும் உற்பத்திக்குத் தானியங்கிகளைப் பயன்படுத்தும் தொழில்களுக்குமிடையில் புதிய உருவங்களில் ஒத்துழைப்பு வேண்டுமென விரும்புகிறது. அது உற்பத்தி சாதனங்களின் தனி உடைமையுடன் ஒத்திசைவாக இருக்க முடியாது.

## 3. நெருக்கடியும், பன்னாட்டு இணையங்களின் தந்திரமும், விஞ்ஞான- தொழில் நுட்பப் புரட்சியும்

நெருக்கடியின்போது, ஏகபோக மூலதனம், இன்றைய உலகில் நிலவுகிற சூழ்நிலைகளுக்குத் தன்னைத் தகவமைத்துக் கொண்டு தன்னுடைய தலைமை நிலைமையைக் காப்பாற்றிக் கொள்ள முயற்சிக்கிறது.

பிரெஞ்சுக் கம்யூனிஸ்ட் கட்சியின் 23 வது காங்கிரசின் ஆவணங்கள் பன்னாட்டு இணையங்கள் மேற்கொண்ட எதிர்த்தாக்குதல் பற்றிய ஆழ்ந்த ஒரு பகுப்பாய்வைக் கொண்டதாகவுள்ளது. மற்றவற்றிற்கிடையே இந்த எதிர்த் தாக்குதல் ஆயுதப் போட்டியை விரைவுபடுத்துவது; பதற்றத் தணிவை நிறுத்தி வைப்பது; உழைக்கும் மக்களின் நலன் களைக் கைவிட்டு அதற்கு ஈடாக எடுக்கப்படும் சிக்கன நடவடிக்கைகள்; பன்னாட்டு இணையங்களின் புவியியல் கட்டமைப்பையும், உற்பத்திக் கட்டமைப்பையும் மறுசீரமைத்தல், முன்னேற்றத்திற்கு எதிரான எந்தக் கருத்துக்களுக்கும் எதிராக முதலாளித்துவ அரசுகளின் தலைவர்கள் முழு அளவு சித்தாந்தப் போரை மேற் கொள்வது; தேசியப் பொருளாதாரங்களை ஒன்றுடன் ஒன்று நெருக்கமாகப் பிணைப்பதற்கு முயற்சி செய்வது, தேசியத் திற்கு அப்பாற்பட்ட ஒழுங்குமுறைகளை நிறுவுவது; ஏகாதிபத்திய சக்திகளிடையில் ஒத்துழைப்புக்கு ஊறு செய்யாத வகையில் ஏகாதிபத்தியங்களுக்கிடையில் நிலவும் முரண்பாடுகளை ஒரு கட்டுக்குள் அடக்கி வைத்திருக்க முயற்சி செய்வது; பிறவற்றிற்கிடையே ஐரோப்பாவில் மேற்கு ஜெர்மனியின் மேலாதிக்கத்தை — இதுவே ஐரோப்பாவை ஒன்றிணைப்பதன் விளைவாக இருக்கும்— ஆதரிக்கிற பணிகளைப் பகிர்ந்து கொள்வதற்கு அனுமதிப் பதுடன், உலகத்தை யு. எஸ். ஏகாதிபத்தியத்தின் ஏகபோகத் தலைமையின்கீழ் வைப்பதற்கு முயற்சி செய்வது; சமூக ஜனநாயகவாதிகளின் பங்கையும் சோஷலிச அகிலத்தின் பங்கையும் உயர்த்துவதன் மூலம் முதலாளித்துவமுறை உறவு களுடன் பொருளாதார விடுதலைக்காகப் போராடும் தொழிலாளி வர்க்கத்தையும, மக்களையும் இணக்கமாக்கு வதற்கும் எடுக்கப்படும் முயற்சிகள் ஆகிய இவ்வயனைத்தை யும் உள்ளடக்கியதாக இருந்தது.

இந்த நெருக்கடியின்போது நிலவிய சமூக பொருளாதார அரசியல் முரண்பாடுகளின் சில இயல்புகளையும், உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியின் சில கூறுகளையும் பற்றி விவரிக்க

விரும்புகிறோம். இந்தக் கூறுகள் இலாபங்களை ஒரு சிலர் கையில் குவிப்பதற்காகப் புதிய தொழில் நுட்பத்தைப் பயன் படுத்தும் தந்திரத்தைப்பற்றிக் கூறுவதேயாகும்.

இலாபங்களை மையப்படுத்துவதற்கு இரண்டுமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன. இரண்டுமே நிதி மூலதனம் மற்றும் ஏகபோகங்களின் கூட்டுச் சதிகளை அடிப்படையாகவும், சமூக மூலதனத்தின் மதிப்புக் குறைவதை அடிப்படையாகவும் கொண்டதாகும்.

அ) சராசரி இலாப விகிதத்தைக் காட்டிலும் அதிகமான இலாபம் பெற மேற்கொண்ட உபரி மதிப்பை உற்பத்தி செய்வது (பெரும்மாற்றங்கள் நிறைந்த கொள்கை என அழைக்கப்படுகிற கொள்கையால் நிறைவேறும் காரியம் இதுதான்)

ஆ) நிலையான சொத்தை மறுஉற்பத்தி செய்யப் புது வழிகளை அறிமுகப்படுத்தியும், உற்பத்திப் பொருட்களின் நீடிப்பைக் குறைத்தும் பரிமாற்றக் கை முதலின் விகிதத்தை உயர்த்துவது.

புதுமைகளைப் புகுத்துகிற கொள்கைகள், புதிய வகையான உற்பத்திப் பொருட்களை அறிமுகப்படுத்துவதை மட்டும் தன்னுள் கொண்டதாக இல்லை. அது விளம்பரத் திற்கும், விற்பனைக்கும், பொருட்களைச் சிட்பங்களாகக் கட்டுவதற்கும், விலைக்கும் இன்னும் இது போன்ற பலவற்றிற்கும் முக்கியத்துவம் கொடுக்கிறது.

பயனுள்ள தேவையைத் தூண்டுவதற்கும், அதைப் பேணிக்காப்பதற்கும் மக்களுடைய பணத்தைக் குறைந்த நாட்களே உழைக்கக் கூடிய பொருட்களை அல்லது அதிகப் படியான மதிப்பு சேர்க்கப்பட்ட மிகுந்த விலையுள்ள உணவுப் பொருட்களை (குளிர்பதனம் செய்யப்பட்ட, நயமாக்கப்பட்ட) வாங்குமாறு செய்யக் கம்பெனிகள் முயன்று வருகின்றன. மேலும் இது தனிச் சிறப்பான

உள்நாட்டுக் கருவிகளை வாங்குவதைக் கட்டாயமாக்கவும் செய்யலாம். இத்தகைய நுகர்வானது ஒரு குறிப்பிட்ட காலம்வரை மூலதனம் குவிக்கப்படுவதைத் தூண்டுகிறது. ஆனால் இது நீண்ட காலத்தைப் பற்றிக் கவனிக்காமல் விட்டாலும்கூட, இடைப்பட்ட கால அளவுகளில்கூட இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது.

மேற்கொண்ட உபரி மதிப்பைப் பெறுவதற்குரிய ஒரு வழி, உயிருள்ள தொழிலாளியின் எண்ணிக்கையைக் குறைத்து, வேறு வகையான உற்பத்தி சாதனங்களைப் புகுத்துவதேயாகும். ஒன்றிணைந்த மூலதனத்தின் கட்டமைப்பிற்கு விரும்பத்தகாத விளைவுகளை அது ஏற்படுத்தக்கூடும். அதன் விளைவாக இலாப விகிதத்தில் கீழ் நோக்கிய இயல்பை அது ஏற்படுத்தும். இவ்வாறு முடிவாக நெருக்கடியை மிகுதியாகவும் ஆக்கிவிடும்.

இந்த முறைகளையெல்லாம் பயன்படுத்தும் செயலானது தொழிற்சாலையிலும், சமூகத்திலும் நாம் சந்திக்கின்ற குழப்பம், வீண்விரயம் ஆகியவற்றிற்கெல்லாம் காரணமாகிறது. அவைகள் ஒருமுகப்பாட்டையும், வணிக நிலையங்களின் கூட்டணியமைப்பையும், மத்திய, சிறிய தொழில் நிறுவனங்களின் மறைவையும் தூண்டுகின்றன.

இலாபத்தைத் தரக்கூடிய தனிமனிதர்களின் நுகர்வு தூண்டப்படுகிறது என்றும், பொது மக்களுக்கான வசதிகளும், சேவைகளும் கவனிப்பாரற்று விடப்படுகின்றன என்றும் உறுதியான புள்ளி விவரங்கள் காட்டுகின்றன.

மிகுதியாக மூலதனம் குவிக்கப்படுவதைத் தடுப்பதற்குப் பெருமூலதனம் நாடும் மற்றொருமுறை என்னவென்றால், அதாவது, விஞ்ஞான, தொழில் நுட்பப் புரட்சியின் இருப்பாற்றல்களைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரு முறை என்னவென்றால் முக்கிய விஞ்ஞான, உற்பத்தி இணைப்புகளைக் கட்டுப்படுத்துவதாகும்.

விஞ்ஞான உற்பத்தித் தொழில் அமைப்புகள், ஒரு உற்பத்திப் பொருளை அல்லது பண்டத்தை உற்பத்தி செய்வதற்காக உருவாக்கப்பட்ட, நெகிழ்வுத் தன்மையுள்ள, தொழில் நுட்பம், அறிவு, பட்டறிவு, உற்பத்தி ஆகியவற்றின் தொழில் நுட்ப வகைப்பட்ட ஒரு முழு சாதன அமைப்பா கின்றன என்று வரையறை செய்யலாம். உதாரணத்துக்குப் பார்த்தோமென்றால், அணுசக்தி உற்பத்தித் தொழில் தொகுதி ஒரு அணு அடுக்கோடு அது செயல்படுவதற்குத் தேவையான அனைத்தையும் உடையதாகவுள்ளது. சனிப் பொருட்களை வெட்டியெடுப்பதும், அதனைத் துப்புரவாக்குவதும் அடுக்குகளில் பயன்படுத்துவதற்காகப் பதனப்படுத்துவதும், பயன்படுத்திய பிறகு மீண்டும் பதனப் படுத்துவதும், அவற்றுடன்கூட அனைத்து மட்டங்களிலும் பாதுகாப்பை உத்திரவாதமளிக்கிற சாதனங்களும், அளக்கும் கருவிகளும், இந்த நிகழ்ச்சிகளில் ஈடுபட்டுள்ள ஆயிரக்கணக்கான உழைக்கும் மக்களின் அறிவும் திறமையும்.

இவ்வாறாக விஞ்ஞான உற்பத்தித் தொழிற் தொகுதி களின் செயல்முறைகள், உற்பத்தி சக்திகள் எவ்வாறு இன்றைய முதலாளித்துவ உற்பத்தி உறவுகளின் கட்டமைப்பில் செயலாற்றுகின்றன என்பதற்கு ஒரு சிறந்த உதாரணமாகத் திகழ்கின்றன.

அரசியல் அமைப்பு முறைகளால் விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றத்தின் மீது திணிக்கப்படுகிற முன்னுரிமை களின் வலிமை மிகுந்த விளைவுகள் இருந்தபோதிலும் உற்பத்திசக்திகள் ஒப்பீட்டு வகையில் சார்பற்றிருக்கின்றன, என்ற போதிலும், தொழில் நுட்பத் தொழில் தொகுதிகள் உள்நோக்கத்துடன் கட்டுப்படுத்துகிறவர்களின் கடுமையான விருப்பத்தேர்வுக்கு உரியப் பொருளாகவுள்ளன. அதாவது பன்னாட்டு இணையங்களும், ஏகாதிபத்திய அரசுகளும் இரண்டுமே சந்தைகளைப் பெறுவதற்காக முயற்சி செய்து கொண்டிருக்கின்றன.

இந்தக் காலத்தில் பெரிய பன்னாட்டு இணையங்கள் பொருத்தமான சந்தைகளின் மீது ஆட்சி அதிகாரம் தரக் கூடிய "மூடிய", "கட்டுப்படுத்தப்பட்ட" விஞ்ஞான உற்பத்தித்தொழில் அமைப்புகளின் மீது ஆட்சி அதிகாரம் பெற முயல்கின்றன.

மூடிய தொழில் நுட்பத் தொழில் அமைப்புகள் நிலவுகிற உற்பத்தி உத்திகளை மேம்பாடடையச் செய்ய உதவுவது இல்லை. அதற்கு மாறாக, அவைகளை மாற்ற முயல் கின்றன. அவ்வாறு செய்து சந்தையின் மீது மொத்தமான ஆட்சி அதிகாரத்தை நிலைநிறுத்த விரும்புகின்றன. தொழிற் கூடங்களும், சமுதாயமும் மூலப்பொருட்களைப் பகுத்தறிவுக்கொவ்வாத முறையில் பயன்படுதுவதற்கு வழிசெய்கின்றன. மேலும் உற்பத்தி இயந்திரம் சராசரி தேய்மானத்திற்குப் பதிலாக விரைவில் தேய்மானம் அடையுமாறு செய்கின்றன. இவ்வாறு நிலையான மூலதனம் மிகுதியாகக் குவிவதை மேலும் அதிகமாக்குகின்றன. பெரும் அளவில் உற்பத்தி சாதனங்கள் மதிப்பு குறைக்கப் படுவதற்கும், மாவட்டங்களில் உள்ள உழைக்கும் மக்கள் அனைவரும் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கும், கிடைக்கும் உழைக்கும் சக்தி பகுதி நேரம் மட்டுமே வேலைக்கு அமர்த்தப்படுவதற்கும் இட்டுச் செல்கின்றன.

உற்பத்தி சக்திகளின் ஒரு சில பகுதிகளை மட்டுமே வளர்ச்சியடையச் செய்வதன் மூலம், மூலதனத்தின் ஒன்றிணைந்த கட்டமைப்பைக் குறைக்கச் செய்யப்படும் முயற்சிகள் முதலாளித்துவ அமைப்புடன் மோதிக் கொள் கின்றன. மேலும் சந்தை விவகாரத்தில் பொதுவான ஓர் இழுப்பு நிலையை அதிகரிக்கின்றன, ஏனெனில் மூலதனத்தை உற்பத்தித்திறனுடன் ஈடுபடுத்துவதில் ஒரு வீழ்ச்சியை, தனி மனித நுகர்விலும், பொதுநுகர்விலும் ஒரு குறைவை, ஆராய்ச்சி, கல்வி, தொழில்பயிற்சி ஆகிய துறை களுக்குப் பணம் ஒதுக்குவதில் வெட்டு விழுதலை அவைகள் கட்டாயமாக்கி விடுகின்றன.

கூலிக்கு உழைப்பவர்கள் மிகுதியான அளவில் சுரண்டப் படும் துறைகளில் பல முழுமையாக மூடப்படுவதும், தொழில் கூடங்கள் மூடப்படுவதும் ஒரு சில முன்னுரிமைகள் உள்ள துறைகளில் மட்டும் மூலதனத்திரட்சி ஒருமுகப் படுத்தப்பட்டிருப்பதும் பெரும் முதலாளித்துவ வீணாக்குதலுக்கும், மூலதனத்தின் பொருளாதாரத் திறமையில் ஒரு வீழ்ச்சி ஏற்படுவதற்கும் வழிகோலுகின்றன.

ஆகவேதான் பெரும் மூலதனத்தினால் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள நெருக்கடிக்கெதிரான தந்திரங்கள், முதலாளித்துவ நாடுகளில் வரும் பத்தாண்டுகளில் பொருளாதாரத் தேக்கத் திற்கும், உற்பத்தித்திறனின் வளர்ச்சி விகிதத்தில் ஒரு வீழ்ச்சிக்கும், மேலும் அதிகமான நீண்ட கால வேலை யின்மைக்கும் தவிர்க்க முடியாதவாறு இட்டுச் செல்லும்.

## 4. விஞ்ஞான–தொழில் நுட்பப் புரட்சியும், புதிய வகையான வளர்ச்சியும்

### அ) புதிய வகை வளர்ச்சியின் புரட்சிகரமான உள்ளடக்கம்

பிரான்ஸ் போன்ற ஒரு நாட்டில் நெருக்கடியின் விளைவு களின் மட்டமும், ஆழமும்,தொழிற் தொகுதிகளின் பின்னல் களும், பொருளாதாரத் துறையில் முன்னேறியுள்ள மாவட்டங்களின் பின்னல்களும், நெருக்கடியினால் உண்டாக்கப்பட்ட பொருளாதார ஒழுங்கின்மையும், தொழில் நுட்ப ஒழுங்கின்மையும்—இவையனைத்தும், பெரும் மூலதனத்தினால் திணிக்கப்பட்ட கொள்கையை நீக்கிவிட்டுத் தீவிரமான ஒரு கட்டமைப்பு மாற்றத்தையும், சமுதாய மாற்றத்தையும் ஏற்படுத்துவதை இன்றியமையாத தாக ஆக்குகின்றன.

விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் செயல் திறன்கள் கம்யூனிஸ்டுகளின் அரசியல் இலட்சியங்களுக்கு முக்கியமான பொருளாயத அடிப்படையாக விளங்குகின்றன. தொழிலாளிவர்க்கம், வேறுபிற உழைக்கும் வர்க்கம்

ஆகியோரின் நாட்டமும், அறிவும் ஒரு புதுவகையான பொருளாதார வளர்ச்சியைத் தொடங்கி வைப்பதைக் கை கூடும் செயலாக ஆக்குகின்றன.

பொருளாதார வளர்ச்சி பற்றிய பிரச்சினையைத் தொழில் நுட்பத்தின் வளர்ச்சி எவ்வாறு கூராக்குகிறது என்பதைக் காட்டுவதற்கு முன்னரே முயன்றிருக்கிறோம். மக்களுடைய வேலை நிலையையும், வாழ்க்கை நிலையையும் மாற்றக்கூடிய கருவியாக விளங்குகிற உற்பத்தி சக்திகளின் எந்த ஒரு புரட்சிகரமான எழுச்சியும் முதலாளித்துவ சமூக உறவுகளில் ஒரு மாறுதலைக் கட்டாயமாக்குவதற்கும், சமுதாயத்தின் வாழ்க்கையையும், தேசத்தின் வாழ்க்கையையும் ஏகபோகங்களின் நலன்களுக்குக் கீழ்ப்படுத்துதலை அரசியல் ரீதியில் ஒழிப்பதற்குமான மாறுதலை வேண்டுகிறது என்பதற்குக் கம்யூனிஸ்டுகள் இதைச் சான்றாகக் காண்கிறார்கள்.

அரசு -ஏகபோக முதலாளித்துவத்தின் நெருக்கடிக்கான ஒரு ஜனநாயகத் தீர்வு ஒரு புதுவகையான வளர்ச்சியைத் தொடக்கிவைக்கும். அந்த வளர்ச்சி வகையானது கீழ்க்காணுமாறு மூன்று சிறப்பான கூறுகளை உள்ளடக்கி யிருக்கும்.

—தனிமனிதர் தேவைகள், பொதுமக்கள் தேவைகளின் நிறைவேற்றம். வேலைவாய்ப்புகளையும், புதிய உழைக்கும் சூழ்நிலைகளையும் உருவாக்குதல்;

—ஜனநாயக வடிவங்களில் பொருளாதார, சமூக வளர்ச்சி; அரசு, தொழில் நிறுவனம், உள்நாட்டு அரசாங்கம் ஆகிய மட்டங்களில் ஜனநாயக ரீதியான தன்னாட்சிக் கட்டமைப்புகள்;

—புதிய விஞ்ஞான, தொழில் நுட்பப் பொருளாதாரக் கூட்டுறவின் புதிய உருவங்களை உயர்வாக்கக் கூடிய உலகளாவிய, புதிய, ஏகாதிபத்திய எதிர்ப்புப் பொருளாதார

முறையை மேம்பாடடையச் செய்யும் ஒரு கொள்கையின் கீழ் எழுகின்ற தேசிய அரசாண்மை;

சமுதாயத்தின் உலகம் முழுமைக்குமான உற்பத்தித் திறன், மற்றும் அதன் உற்பத்தி அமைப்புமுறை ஆகியவை நேரடியான வழியில் இந்த முக்கியத்துவம் வாய்ந்த போர்த் தந்திர நோக்கங்களையே சார்ந்ததாய் இருக்கின்றன.

## ஆ) புதிய தொழில் நுட்பத்தின் முக்கியத்துவம்

பிரெஞ்சு மக்களுடைய ஆவலாதிகளுக்கு ஒத்திசைவானதும், நடைமுறையில் நிறைவேற்றக் கூடியதுமான புதிய தொழில் நுட்பத்தை அறிமுகப் படுத்துவது. விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் விளைவேயாகும். எனவே அதற்கு நாம் தலை வணங்குவோமாக! அதுவே புதிய வகை வளர்ச்சியின் மூலம் முக்கியமான பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கான "பொருளாயத" சூழ்நிலையாகும். புதிய தொழில் நுட்பம், உலகம் முழுமைக்குமான உற்பத்தி தொடர்பான சில பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், அயலாக்கப்படுவதைத் தோற்றுவிக்காத புதிய உழைப்புச் சூழ்நிலைகளை உருவாக்கவும், உழைக்கும் மக்களின் திறமைகளை வெளிப் படுத்தவும், அவர்களுடைய பொறுப்புணர்ச்சியை வெளிப் படுத்தவும், புதிய உழைப்பு சாதனங்களை ஜனநாயகத்திற்கு சேவை செய்யுமாறு செய்யக்கூடிய ஒரு புதிய உழைப்புச் சூழ்நிலைகளை உருவாக்கவும் நமக்குப் பேருதவி செய்யும்.

இது குறுகிய சிறப்புத்திறன் பெறுவது என்ற தந்திரத்திற்குத் திரும்புவதைத் தடைசெய்கிறது. மேலும் பன்னாட்டு இணையங்களால் கட்டுப்படுத்தப்படுகிற மூடிய விஞ்ஞான உற்பத்தித் தொழில் தொகுதிகளுக்குத் திரும்புவதையும் தடை செய்கிறது. பிரான்ஸ் போன்ற ஒரு நாட்டில் கம்யூனிஸ்டுகள் உற்பத்தி சக்திகள், தொழில் நுட்பத் தொகுதிகளின் மிகைப்படுத்தப்பட்ட பங்கு, விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் உள்ளடக்கம்

ஆகியனவற்றைப் போன்ற துறைகளில் ஏகாதிபத்திய, சமூக-ஜனநாயக சித்தாந்தங்களுக்கும், கொள்கைகளுக்கும் எதிராகவே உள்ளனர். விஞ்ஞான- தொழில் நுட்பப் புரட்சி என்பது பொதுமக்களுடைய நலனுக்கு ஏற்றதாக உள்ள தன்னாட்சி நிறைந்த சோஷலிச சமூகத்தைக் கட்டுவதற்கான வழிகளில் திருப்பிவிடப்பட வேண்டும்.

மனித சக்திகளுக்குப் பயிற்சியளிப்பது, நுகர்வின் இயல்பும், அளவும், உற்பத்தியில் ஜனநாயகக் கோட்பாடு களைப் புகுத்துவது, தகவல்களுக்கும், அறிவு வளர்ச்சிக்கும் வசதிகள், பொருளாதார - சமூக நிகழ்ச்சிப் போக்குகளில் மக்களுடைய தலையீட்டைப் பரவலாக்குவது, தேசிய சுதந்திரத்தின் முக்கிய தூண்களை மீண்டும் பெறுதல் போன்ற வர்க்கப்போராட்டத்தின் பல முக்கியமான பகுதிகள் அனைத்தும் பெருமளவிற்குத் தொழில் நுட்பத் துறையில் மேற்கொள்ளப்படுகிற தீர்வுகளையே பொருத்ததாக வுள்ளன.

இயற்கை வளங்களைப் பொருத்தவரை, பொருளாதார செயலாட்சி, சுனிகளை வெட்டியெடுப்பது, தூய்மைப் படுத்துவது, பதனப்படுத்துவது, மறுபடியும் அவைகளைச் சரி செய்வது அல்லது பயனுக்குப்பின் சீர்செய்வது ஆகிய வற்றை உள்ளடக்கிய சுழலின் முழுமைக்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். ஆற்றல் துறையில், தேவையின் பெரும் பகுதி, நிலக்கரி, நீர் மின்சக்தி, சூரியவெப்பசக்தி, நிலவெப்பம், அணுசக்தி ஆகியவற்றைப் பயன்படுத்தி மிகவும் வளர்ச்சியடைந்த யுக்திகளால் நிறைவேற்றப்பட முடியும்.

நுண் மின் அணு இயல் தகவல் மற்றும் செய்தித் தொடர்பு சாதனங்கள் ஆகியவற்றின் விரைவான வளர்ச்சி செய்திகளின் பரவலுக்கும், அறிவின் பெருக்கத்திற்கும், உரிய புதிய வாய்ப்புகளைத் தோற்றுவித்துள்ளன. இவ்வாறு முடிவுகளை மேற்கொள்வதில் மக்கள் பெருமளவு பங்கு கொள்வதை உறுதிப் படுத்துகின்றன.

விரைவில் தொழில் நுட்பம் - தொழிற் கூட்டங்களின் வாழ்க்கையிலும், சமுதாயத்தின் வாழ்க்கையிலும், தாங்களே நிர்வாகம் செய்கிற கோட்பாட்டின் அடிப்படையில் உழைக்கும் மக்களும் அந்தந்தப் பகுதிகளில் உள்ள சமூகத்தின் வாழ்க்கையின் அனைத்துக் குடிமக்களும் கலந்து கொள்வதற்கு ஒரு கருவியாக விளங்கும். உற்பத்தியின் நோக்கங்களுக்கு ஒரு புதிய உள்ளடக்கத்தைத் தரக் கூடிய தானியக்கமாக்கப்பட்ட அமைப்புகள் மூலமும், இயந்திர மனிதர்கள் மூலமும், உற்பத்தியின் அடித்தளத்தை மறு உருவப்படுத்துவதற்கு ஒரு கருவியாக அமையும்.

இப்பொழுதேகூட பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சி பல துறைகளின் செயல் முறைகளில் தலையிடுகிறது. ஏராளமான மக்களை வேலையிலிருந்து நீக்குவதற்காக, தேவைக்கு மேற்பட்டிருக்கிறார்கள் என்று காட்டும் சூழ்நிலையை உருவாக்குவதற்கும், உழைக்கும் மக்களில் புதிய பகுதியினரை மிகுதியாகச் சுரண்டுவதை வெற்றிகரமாக மேற்கொள்ளவும், மக்கள் மீது மறைமுகமான சமுதாயக் கட்டுப்பாடுகளின் உருவங்களையும், அரசியல் கட்டுப்பாடுகளின் உருவங்களையும் பல்வேறு உருவங்களையும் புகுத்தவும் பெரும் மூலதனக்காரர்கள் பல்வேறு தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துவதை அம்பலப்படுத்தி வருகிறது.

உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியும், விஞ்ஞான, தொழில் நுட்பப் புரட்சியின் உள்ளடக்கமும் நடுநிலையானவைகள் அல்ல. மாறாக அவைகள் பொது மக்களின் ஜனநாயக சக்திகளின் போராட்டத்தில் நிர்ணயமான பங்கு வகிக்கும் லட்சியங்களாகும்.

பிரெஞ்சு மக்கள் அவர்களுடைய தேவைகளுக்கும், விருப்பங்களுக்கும் ஒத்திசைவான கொள்கைகளையும், ஒரு புதுவகையான வளர்ச்சியை நிறுவுவதை நோக்கிய கொள்கைகளையும் தேர்ந்தெடுப்பார்கள் என்பதைக் கம்யூனிஸ்டுகள் முழுதும் நம்புகிறார்கள்.

# விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியும், தொழில் சார்ந்த மறுஉற்பத்தி தொடர்பான பிரச்சினைகளும்

**பேராசிரியர். லுட்ஸ் மையர்,**

*துணை இயக்குநர், சர்வதேச அரசியல் மற்றும் பொருளாதார நிறுவனம். "இன்றைய முதலாளித்துவம் பற்றிய ஆராய்ச்சி"க்கான குழுவின் தலைவர், ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு.*

## நெருக்கடியின் இயல்பும், அரசு-ஏகபோகக் கட்டுப்பாட்டு வளர்ச்சியில் சில புதிய போக்குகளும்

1970 களில் உலக முதலாளித்துவத்தைத் தாக்கிய நெருக்கடி பற்றிய ஆராய்ச்சியிலும், வாத எதிர்வாதங் களிலும், அரசு ஏகபோக கட்டுப்பாடு தொடர்பான விஷயங்களுக்கு ஒரு முக்கியமான இடம் வழங்கப் பட்டுள்ளது. வளர்ந்த முதலாளித்துவ நாடுகள் அனைத்திலும், ஏகபோகங்களுக்கும், அரசுக்குமிடையில் நடைபெறும் உட்செயலானது, தொழில் சார்ந்த மறு உற்பத்தி சூட்சுமத்திலும், பொருளாதார, சமூக உறவு களின் மொத்தத்திலும். முக்கியமான, அடிப்படையான கட்டமைப்பின் கூறுகளில் ஒன்றாகத் திகழ்கிறது. 1930 களின் துவக்கக்கட்டத்திலிருந்து, குறிப்பாக இரண்டாவது

உலகப் போருக்குப் பின்னர், பூர்ஷ்வா பொருளாதார வல்லுநர்கள், முதலாளித்துவத்தின் வலிமைமிக்க பொருளாதார ஏற்றத் தாழ்வுகளையும், பெரும் பொருளாதாரக் கொந்தளிப்புகளையும் களைந்தெறிவதற்கு, வளர்ந்து வரும் அரசின் பொருளாதாரப் பங்கின்மீது பெரும் நம்பிக்கை கொண்டவர்களாயிருந்து வந்துள்ளனர்.

1970 களின் மையபாகத்தில், குறிப்பாக 1974-1975 இல் தோன்றிய பொருளாதார நெருக்கடியின் போது, இந்த முரண்பாடுகள், அரசு ஏகபோகங்களின் பலமற்ற தன்மையையும், பயனற்ற தன்மையையும் தெளிவாக்கின. இது பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்களிடையே ஒரு பெரும் பயத்தைத் தோற்றுவித்தது. கீனஸ்உடைய கோட்பாடு களிலிருந்து விலகி, சந்தைக் கோட்பாட்டின் மீது சுய கட்டுப்பாட்டிற்கும் புதிய மரபு வழிக் கோட்பாட்டின் மறுமலர்ச்சிக்கும் திரும்ப வேண்டுமென்று வலியுறுத்தி வந்தனர்.

அரசு ஏகபோகக் கட்டுப்பாட்டின் ஒரு நெருக்கடி பற்றி நாம் பேச இயலுமா? இந்த முரண்பாடுகளின் இயல்பென்ன? அவைகள் வருங்காலத்தில் எவ்வகையான வளர்ச்சியுடையதா யிருக்கும்? ஆகிய கேள்விகளும, இன்னும் இதுபோன்ற வேறு சில கேள்விகளும், ஆழ்ந்த, துல்லியமான ஆராய்ச்சியை மேற்கொள்ள விரும்பும் மார்க்சிய அறிஞர் களை எதிர்நோக்குகின்றன.

அரசு-ஏகபோக முதலாளித்துவமானது, குறிப்பாக, அரசு ஏகபோகப் பொருளாதாரக் கட்டுப்பாடானது உள்முரண்பாடுகளின் தோற்றுவாய்களையும், நெருக்கடி களின் தோற்றுவாய்களையும் மறைக்கிறது. ஏகபோகங் களையும், அரசுகளையும் பின்னிப் பிணைத்து வைப்பது, ஒரு புறம் வளர்ந்து வரும் சமூகக் கட்டுப்பாடுகளின் தேவை களுக்கும், பொருளாதாரத் திட்டமிடுதலுக்குமிடையேயுள்ள, முதலாளித்துவ அடிப்படையில் நிகழக்கூடிய ஒரு சமரசமாகவும், மறுபுறம் முதலாளித்துவத்தைப் பாது

காப்பதற்கும் சந்தையின் சக்திகளைச் சுதந்திரமாகச் செயல்படவிடுவதற்குமிடையே முதலாளித்துவ அடிப்படையில் நிகழக்கூடிய ஒரு சமரசமாகவும் விளங்குகிறது. இது அரசு ஏகபோக நடவடிக்கையிலும், பூர்ஷ்வாக் கோட்பாட்டிலும், இரண்டு எதிரெதிரான சக்திகளுக்கும், கோட்பாடுகளுக்குமிடையே நிரந்தரமான மோதலுக்கும், தோற்றுவாயாகத் திகழ்கிறது. திட்டமிடலும், குழப்பமும்; அல்லது பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்கள் அழைப்பது போல, "அரசுத் தலையீடும், சந்தைப் பொருளாதாரமும்," **"எதேச்சாதிகாரமும்,** தனி நபர் முயற்சியும்"

லெனின், ஏகபோக மூலதனத்தை நிலைமாறும் முதலாளித்துவம் என அழைத்தார். அதில் தனி முதலாளித்துவ முறையின் வழக்காறற்ற தன்மையுடன் சோஷலிச அமைப்பு முறை, வரலாற்றில் மிக நெருக்கமானதாக விளங்கும். எனவே இன்றைய பூர்ஷ்வா பொருளாதார இலக்கியங்களில் அரசுப் பொருளாதார தலையீட்டின் உச்சநிலை வரம்பு பற்றி ஒரு நிரந்தரமான வாதம் இருந்து வருகிறதென்பதில் எந்தவித வியப்புமில்லை.

அரசுக்கும், தனியார் ஏகபோகங்களுக்கு மிடையேயுள்ள உட்தொடர்புகள் முழுமையானதாகவோ அல்லது முரண்பாடுகள் ஏதும் இல்லாதவையாகவோ இருக்க முடியாது. இதில் முடிவான வலிமை மிக்கதாயிருப்பவை தனியார் ஏகபோகங்களே. இவைகள் தங்களுடைய உற்பத்தி சக்திகளைச் சுரண்டுவதற்கான வாய்ப்புகளை மிகுதியாகப் பெறுவதற்காக, அரசுடன் மிக நெருக்கமான தொடர்பு கொண்டிருக்கின்றன. அதே சமயத்தில் தனியார் ஏகபோகங்களின் நலன்கள் இந்தத் தொடர்புகளைக் கட்டுப்படுத்தவும் செய்கின்றன. ஏனெனில், அரசும் அதனுடைய பொருளாதார நடவடிக்கைகளும், பிணக்குகள் நிறைந்தவையாயுள்ளன. ஒருபுறம் அவைகள் தனியார் ஏகபோகங்களின் நிலைகளையும், அவற்றின் அடிப்படையில் எழும் உற்பத்தி உறவுகளையும் பாதுகாக்க வேண்டியிருக்கிறது. மறுபுறம் அவைகள் ஏகபோக அமைப்பு முறையினால்

தோற்றுவிக்கப்படுகிற முரண்பாடுகளை ஏற்புடையதாக ஆக்கவோ அல்லது அவைகளை நீக்கவோ வேண்டியதிருக்கிறது. ஆகவே அரசு நடவடிக்கைகள் தனியார் சொத்து, மூலதனத்தின் சுய-விரிவாக்கம், போட்டி ஆகிய துறைகளில் பல ஏகபோகக் குழுக்களின் நேரடியான நலன்களுடன் ஏறத்தாழ நிரந்தரமாகவே மோதிக் கொள்கின்றன. ஏகபோக பூர்ஷ்வாக்கள் இங்கு ஒரு குறிப்பிட்ட அளவு நெகிழ்வுத்தன்மை காட்ட வேண்டியவர்களாகவும், வரும் பொருள் அறிவுடையோராவும் இருக்க வேண்டியது இன்றியமையாததாகவுள்ளது. எனினும் அரசு கட்டுப்பாட்டிற்கு அவர்கள் ஒரு வரம்பு விதிக்கிறார்கள். அதனுடைய நெருக்கடிகளை மிகுதியாக ஆக்குகிறார்கள். முடிவாக இங்குதான் அரசு ஏகபோகக் கட்டுப்பாட்டைப் பாதிக்கிற, தவிர்க்க முடியாத தீவிரமான நெருக்கடிகளின் காரணங்களைக் காண முயலவேண்டும்.

ஆழ்ந்த இந்தப் பிணக்குகளின் விளைவுகளைப் பொருளாதார, சமூக வளர்ச்சியின் சங்கிலியின் இடையில் உள்ள கண்ணிகளின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. இவ்வாறாக முரண்பாடுகள் தீவிரமடைகிற காலவெளிகளும் முரண்பாடுகள் குறைந்த கால இடைவெளிகளும் உள்ளன. இந்த முரண்பாடுகளின் காரணங்கள், அரசு ஏகபோகக் கட்டுப்பாட்டின் வர்க்கத் தன்மையால் எழுகின்றன. எனவே வர்க்கப் போராட்டத்தின் போக்கும், வர்க்கசக்திகள் ஒன்றுக்கொன்று இணக்கத்துடன் பணியாற்றுவதும் மிக முக்கியமான காரணிகளாகும். முன்னெப்போதைக் காட்டிலும் இன்று மிக முக்கியமாக அவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

பொருளாதாரக் கட்டுப்பாட்டில் குறுக்கீடுகளும், நெருக்கடிகளும் தானாகவே தோன்றுவதில்லை. அவைகள் உலக முதலாளித்துவப் பொருளாதாரத்திற்குள்ளாக தொழில் சார்ந்த மறுஉற்பத்தியுடனும், மொத்தப் பொருளாதார உறவுகளுடனும் மிக நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளன.

உதாரணமாக, 19 வது நூற்றாண்டின் இறுதிக் கால் பகுதியில் நிகழ்ந்த பொருளாதார நெருக்கடிகள், பொருளாதாரக் கட்டுப்பாட்டு முறையில் ஒரு பெருமளவு மாற்றத்துடன், சுதந்திரப்போட்டி முதலாளித்துவமானது ஏகபோக முதலாளித்துவமாகப் படிப்படியாக மாறிய மாற்றத்தின் விளைவாகத் தோன்றிய பிணக்குகளைப் பிரதிப்பலிக்கின்றன. இவையனைத்தும் சிறு தொழில் களுக்கும், புதிதாக வளர்ந்து வரும் பெருந்தொழில்களுக்கு மிடையே நிலவிய ஒரு சீரற்ற தன்மைக்கு வழி வகுத்தன. நொடித்துப்போன நிறுவனங்களின் எண்ணிக்கையை உயர்த்தின. மூலதனம் ஓரிடத்தில் செறிவுறுவதைப் பெருக்கின. கார்ட்டல்களையும், வேறு வகையான ஏகபோக நிறுவனங்களையும் தோற்றுவித்தன. பங்கு மாற்றுக் களங்களில் நெருக்கடிகளைத் தோற்றுவித்தன. ஒரு சுழலின் படிநிலைகளாக நீண்ட விலைமந்தக் காலங்களை ஏற்படுத்தின. பொதுவான ஒரு பொருளாதார வளர்ச்சியின் தேக்கத்தை ஏற்படுத்தின.

1929-1933 நெருக்கடி குறிப்பிட்ட தனிச் சிறப்பான இயல்புகளைக் கொண்டதாயிருந்தது. மிகை உற்பத்தியும், விலைகளில் முனைப்பான வீழ்ச்சியும் ஏற்பட்டன; பல தனியார் வங்கிகள் நொடித்துப் போனதால் நிதியியல் உறவுகள் சீர்குலைந்தன. பொன் நாணயத் திட்டம் கைவிடப்பட்டது; வாணிபத்தில் உள்ள சர்வதேசத் தொடர்புகளிலும், மூலதனம் ஏற்றுமதி செய்யப்படுவதிலும் குறிப்பிட்டதொரு வீழ்ச்சி ஏற்பட்டது; தொழில்துறை, விவசாயத்துறை சார்ந்த இணைந்த நெருக்கடி தோன்றியது; பெருமளவு வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவற்றுடன் இணைந்ததாக விளங்குகிற சமூக மனநிறைவின்மையும், நீண்டகால விலைமந்தமும் ஏற்பட்டன. இந்த நெருக்கடி ஏகபோக முதலாளித்துவத்தின் கீழ் தோன்றிய முரண்பாடு களின் விளைவுதான். அது தனியார் ஏகபோக கட்டுப் பாட்டின் சூட்சுமத்தின் நெருக்கடிதான். கார்ட்டல்கள், சிண்டிகேட்டுகள், நிறுவனங்கள் ஆகியவற்றின்

உருவாக்கமானது, ஏகபோகங்களுடனான போட்டியின் இணைப்பானது மூதலாளித்துவப் பொருளாதாரத்தின் நெருக்கடியையும், குழப்பமான தன்மையையும் ஒழிக்க முடியாது என்று அது மிகவும் தெளிவாகக் காட்டி விட்டது. 1929-1933 நெருக்கடி ஏகபோகங்களுக்கும், அரசுக்கு மிடையில் நிலவிய பொருளாதார உட்செயலுக்கு மேலும் வலிமையளித்தது. அது இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் ஒரு வழியிலோ, பிறிதொரு வழியிலோ, வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில், வளர்ந்த அரசு ஏகபோகக் கட்டுப்பாட்டின் உருவங்களும், முறைகளும் தோன்றுவதற்கு வழி செய்தது. அந்த வழிகளும், உருவங்களும், பேரியல் பொருளாதாரத்தின் உதவியுடனும், அரசியல் திசைவழி கொண்ட நடவடிக்கைகளுடனும் முதலாளித்துவத்திற்குத் தேவையான பொருளாதார சமநிலையையும், சமூக சமநிலையையும் உறுதிப்படுத்துவதற்குத் தேவையானவையாயிருந்தன.

1930 களுக்குப் பின்னர் நிகழ்ந்த நெருக்கடிகளிலெல்லாம் மிகவும் கடுமையான அண்மைக் காலத்து நெருக்கடியான 1974-1975 ல் நிகழ்ந்த நெருக்கடி, ஒப்பீட்டில் மிகுந்த வளர்ச்சியடைந்த அரசு ஏகபோகங்களின் பின்புலத்திலும், அரசு ஏகபோகக் கட்டுப்பாடுகளின் பல்வேறு உருவங்களின் பின்புலத்திலும் நிகழ்ந்தது. இந்த நெருக்கடி உற்பத்திப் பெருக்கம் (குறிப்பாக பெரும் அளவு நிலைத்த மூலதனக் குவிதல் உருவத்தில்) பெருமளவு வேலையில்லாத் திண்டாட்டம், பணவீக்கம் ஆகியவற்றின் சேர்க்கையினாலும் சிறப்புப் பெற்று விளங்குகிறது. அரசு நிதி நிலையில் மிகவும் தீவிரமான பற்றாக்குறையும், முதாளித்துவ நாடுகளின் செலுத்தல் நிலையில் ஒரு சரிசமமற்றநிலையும், இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் அமைக்கப்பட்ட சர்வதேச முதலாளித்துவ பணவியல் அமைப்பு முறையில் ஏற்பட்ட கொந்தளிப்பும், அதைப் பின் தொடர்ந்து வந்தன. பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும்

(OPEC) நாடுகளின் அமைப்பின் புதிய நடவடிக்கைகளும் இருந்தன. அந்த நடவடிக்கைகள் வளரும் நாடுகளை, ஏகபோகங்களும், காலனி ஆட்சியாளர்களும் சுரண்டுவதை எதிர்ப்பனவாக விளங்கின. மேலும் அந்த நடவடிக்கைகள் சர்வதேச முதலாளித்துவ விலையமைப்பின் மீது மிகவும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தின. இவற்றைத் தவிர வேறு பல காரணிகளும்கூட இருந்தன. இங்குகூடப் படுமோசமான, நீண்ட ஒரு புதிய சுழல் பக்குவமடைந்து வரும் நிலையும், பொருளாதார வளர்ச்சியின் சராசரி விகிதத்தில் ஒரு தேக்கத்தை நோக்கிய ஓரியல்பும் இருந்தன.

இவ்வாறாக முதலாளித்துவத்தின் வரலாற்றில் நிகழ்ந்த பல பொருளாதார நெருக்கடிகளில், சில தீவிரமானவை யாகவும், நீண்ட காலத்தவையாகவும் விளங்கின. சில நெருக்கடிகளின் புதுமையான இந்த இயல்புகள் தற்காலிகமாகத் தீர்க்கப்படுகிற,முரண்பாடுகள் வழக்கமான சுழல் தன்மையில் தீவிரமடைதலை அவைகள் குறிக்காது என்ற உண்மையினாலும், அவைகள் சுழலின் சந்தத்துக்கு வெளியில் உள்ள பல்வேறு காரணிகளின் விளைவேதான் என்ற உண்மையினாலும் விளக்கப்படக் கூடியவையாய் இருக்கின்றன. பல்வேறு ஏற்றத்தாழ்வுகள் பின்னிப்பிணைந் திருப்பது பொருளாதாரக் கட்டுப்பாடு (குறிப்பாக அதன் ஸ்தூலமான வடிவங்களிலும், முறைகளிலும்) ஒரு குழப்பத்தில் இருக்கிறது என்பதற்கும், இதன் விளைவு நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்தும் என்பதற்கும் ஓர் அடையாளமாகும். இவ்வகையான நெருக்கடிகள் ஒரு வரலாற்றுக் கண்ணோட்டத்திலிருந்துதான் ஒப்பிடப்பட முடியும் என்றாலும் கூட அவைகள் உற்பத்தி சக்தி களிடையேயும், உற்பத்தி உறவுகளிடையேயும் நிலவுகிற உட்தொடர்புகளின் மட்டத்தையும், முதலாளித்துவத்தின் அடிப்படையான முரண்பாட்டின் வளர்ச்சியின் மட்டத்தையும் எடுத்துக்காட்டுகின்றன.

இன்று இந்தப் பிரச்சினை, மேலும் முக்கியமானதாக ஆகியிருக்கிறது. நமக்கு முன்னால் இப்போது இருப்பது

ஒப்பீட்டில் வளர்ச்சியடைந்த அரசு ஏகபோக முதலாளித்துவமே. ஆனால் அரசு கட்டுப்பாடு பற்றிய பிரச்சினை நடைமுறை வர்க்கப் போராட்டத்தின் ஒரு பகுதியாக ஆகியுள்ளது. அரசு ஏகபோகக் கட்டுப்பாடு என்பது முதலாளித்துவமானது தனது பொதுவான நெருக்கடியின் போக்கைக் கட்டுப்படுத்துவதற்குச் செய்யும் முயற்சியில் பயன்படுத்தும் முக்கியமான ஆதரவும், முக்கியமான சேமப்படையும் ஆகும். இன்றைய விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி திட்டமிட்ட பொருளாதார முறையை அடிப்படையாகக் கொண்ட சோஷலிசத்துடன் நடைபெறும் பொருளாதாரப் போட்டிச் சூழ்நிலையில் நிகழ்கிறது. இது அரசு ஏகபோக முதலாளித்துவத்தினுள் செயல்படுகின்ற முரண்பாடுகளின் மீதும், முரண்பட்ட இயல்புகளின் மீதும் மேலும், மேலும் அதிகமான மோசமான விளைவுகளை உண்டாக்குகிறது.

1974-1975 ல் பொருளாதார நெருக்கடி தாக்கியபோது, அரசு ஏகபோகக் கட்டுப்பாட்டின் பலமற்ற தன்மையும், பல இடங்களில் அதன் பயனற்ற தன்மையும் தெளிவாக வெளிப்பட்டன. முதலாளித்துவ மறுஉற்பத்தியில் தானே தோன்றும் முரண்பாடுகளையும், வெடித்து வெளிப்படும் முரண்பாடுகளையும் தவிர்க்க முடியாது என நிரூக்கப்பட்டு விட்டது. அவைகளைக் காப்பாற்றுவதற்கான அனைத்து முயற்சிகளுக்கும் மாறாக மிகவும் போற்றப்படுகிற அரசு ஏகபோகப் பொருளாதாரக் கொள்கையின் நோக்கமான ‘‘மாயநாற்கோணம்'' என்பது (முழு வேலை வாய்ப்பு, நிலையான விலைகள், நிரந்தரமான பொருளாதார வளர்ச்சி, அந்நிய நாட்டு வாணிபத்தில் நிலைகுலையாத செலுத்தல் நிலை, படுமோசமான முறையில் தோல்வியுற்றது. இந்த உண்மைகள் அனைத்தும் அரசு ஏகபோகக் கட்டுப்பாட்டில் ஒரு தீவிரமான நெருக்கடி ஏற்பட இருப்பதற்கு அடையாளமாகத் திகழ்ந்தன. இன்னும் துல்லியமாகச் சொன்னால், பேரியல் பொருளாதாரக் கட்டுப்பாட்டின் உருவங்களிலும், முறைகளிலும் குழப்பங்கள் நிகழ்ந்தன.

முக்கியமாக கடன், நிதி, பட்ஜெட் கொள்கைகளின் மூலம் மறுஉற்பத்தி நிகழ்ச்சிப் போக்கின் மீது ஒரு சுழல்-எதிர்ப்புச் செல்வாக்கைச் செலுத்தும் நோக்கத்துடனும், ''மாயா நாற்கோணம்'' என்பதில் கூர்மையான மோதலைத் தவிர்க்கும் நோக்கத்துடனும் அரசினால் அவைகள் பயன் படுத்தப்பட்டன.

நெருக்கடிக்கு முன்னர் "தேக்கநிலைப் பணவீக்கம்" என்று அழைக்கப்பட்ட ஒன்று தோன்றியது. (வளர்ச்சியில் ஒரு குறைவு அல்லது சுழல் ஏணி முறையில் வளரும் பணவீக்கம் தொடர்ந்து வரும் இயல்பு கொண்ட ஒரு தேக்க நிலை). அது ஒருசிக்கலான இரண்டும்கெட்டான் நிலையைத் தோற்றுவித்தது. பொருளாதார மந்தத்தை நோக்கிய இயல்பு பொருளாதாரத்தைத் தூண்டும் நடவடிக்கைகளை இன்றியமையாததாக்கியது. ஏனெனில் பணவீக்கததின் மட்டத்தை உயர்த்துவது, சந்தையைக் கட்டுப்படுத்தும் கொள்கையை ஊக்குவித்தது. இவ்வாறாக முதலாளித்துவ அரசுகளிடையேயும், அரசுகளுக்குள்ளேயும், அரசு-ஏகபோக பொருளாதாரக் கொள்கையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்ளத் தொடங்கின. அவைகளில் மிகவும் முக்கியமானது தனியார் ஏகபோகங்களும், ஏகபோகங்களின் கூட்டங்களும், பெரும் பாலும் அரசின் பொருளாதாரக் கொள்கைகளின் நோக்கங் களுக்கு எதிராக இருந்த தங்களின் தனிச் சிறப்பான சுயநலங்களாலேயே வழி நடத்தப்பட்டன, என்பதுதான்.

1974-1975 நெருக்கடியின் சில குறிப்பிட்ட இயல்புகளும் அதைத் தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சிகளும், முதலாளித்துவ நாடுகளிலும், உலக முதலாளித்துவப் பொருளாதாரத்திலும் பெரும் அளவு தீவிரமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன எனத் தெளிவாகக் காட்டியிருக் கின்றன.

நமக்கு இவைகளைப் பற்றி விளக்கும் அடையாளமாக விளங்குவது இலாபத்தின் வளர்ச்சியைப் பாதிக்கும் நிலைகள்

தான் அவைகளைப் புள்ளி விவரங்களைக் கொண்டு மட்டும் மதிப்பீடு செய்வது மிகவும் கடினமானதுதான். மேலும் அவைகளைப் பற்றி வேறு வேறு அறிஞர்கள் வேறுவேறான முறைகளில் ஆராய்ச்சிகளை மேற் கொண்டிருக்கிறார்கள். 1960 களிலும் 1970 களிலும் எங்கள் நிறுவனம், மேற்கு ஜெர்மன் தொழிற்சாலைகளின் இலாபத்தின் விகிதம் பற்றி மேற்கொண்ட பகுப்பாய்வு, இந்த அராங்கத்தின் ஒப்பீட்டு வகையில் நிலையான தன்மையைக் காட்டியது. (ஏறத்தாழ 1960 களில் இருந்த சாரசரி இலாப விகிதங்களைப் போலவே 1970 களுக்கும் இருந்தன). இது சந்தேகமின்றி அரசு ஏகபோகக் கட்டுப்பாட்டின் செல்வாக்கைப் பிரதிபலிப்பிறது. எனினும் இந்த நெருக்கடி ஆண்டுகளில் இலாக் விகிதம் குறைகிற இயல்பு மிகுதியாகவே காணப்பட்டது. 1960 களுக்கான சராசரி லாப விகிதத்துடன் ஒப்பிடும் நிலையில் 1967-1968 நெருக்கடியின் போது 12 சதவிகிதமும், 1974-1975 நெருக்கடியின் போது 25 சதவிகிதமும் இலாப விகிதங்கள் வீழ்ந்தன. ஆனால், 1970 களின் போது இலாபத்தின் பயன்பாட்டில் திட்டமான உறுதிநிலையின்மையும், நம்ப முடியாமையும் இருந்தன.

1970 இல் மேற்கு ஜெர்மனியின் தயாரிப்புத் தொழில்களில் உண்மையான பணமுதலீடுகள் வீழ்ச்சியுற்றன. 1975 ல் கடந்த 20 ஆண்டுகளில் மிகவும் குறைந்த மட்டத்தை அடைந்தன. நெருக்கடிக்குப் பின்னர் அவைகள் உயரத் தொடங்கின. ஆனால் மிகவும் மெதுவாகவே உயர்ந்தன. திறனை ஏற்றுதல் 1978 இல், இயல்பான மட்டம் என்று கருதப்பட்ட மட்டத்திற்குக் கீழேயேதானிருந்தது.1978 இல் மேற்கு ஜெர்மன் தொழில்களில் திறனை ஏற்றுதல் 81 சதவிகிதமாகவே இருந்தது. இது ஜெர்மன் கூட்டுக் குடியரசில் மூலதனத் திரட்சி மிகவும் அதிகமாகியுள்ளது என்பதைப் பிரதிபலிக்கிறது (இந்த நிகழ்ச்சி வேறுபிற வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளையும் பாதித்த ஒரு நிகழ்ச்சியாகும்).

நெருக்கடியின் போது மேற்கொள்ளப்பட்ட மூலதனத்தின் மதிப்பைக் குறைத்தலோ அல்லது இன்றைய அரசு ஏகபோகக் கட்டுப்பாடு சூட்சுமமோ, இலாப விகிதத்தின் இயக்கத்திற்கும், மூலதனக் குவியலுக்குமிடையில் ஒரு சமநிலையை நிறுவி, பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு ஒரு செயலூக்கம் கொடுக்க இயலவில்லை என்பதும் தெளிவாயிற்று. எனவேதான் முந்திய காலவெளிகளோடு, ஒப்பிட்டால், இப்போது பொருளாதார வளர்ச்சி விகிதத்தில் ஒரு குறிப்பிடத்தக்க அளவு வீழ்ச்சி ஏற்பட்டது.

மூலதனம் தானே விரிவடைவதைப் பாதிக்கிற நிலைகள் மோசமாகி வருவது, முதலாளித்துவப் பொருளாதார வளர்ச்சியின் நீண்ட கால நிலைகளில் நிகழ்ந்துள்ள மாற்றங்களின் வெளிப்பாடேயாகும். இந்த மாற்றங்கள் குறிப்பாக உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியினால் வெளிப்பட்டிருக்கிற ஏராளமான நிகழ்ச்சிப் போக்குகளையும், காரணிகளையும் உள்ளடக்கியுள்ளன.

உதாரணமாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ள காரணிகள் குறிப்பிடத்தக்க வகையில் மிக அதிகமான விளைவுகளை உண்டாக்குபவை:

— மரபு வழியான தொழில்களை (உதாரணமாக பொறியியல்) நுண் மின்னணு இயல் அடிப்படையில் புதிய போட்டிகளின் தேவைகளுக்கேற்பத் தகவமைத்தல்.

— விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றத்தின் காரணமாகவும், சர்வதேச வேலைப் பகுப்பின் காரணமாகவும், தோன்றியுள்ளதாகக் கருதப்படக்கூடிய சில குறிப்பிட்ட தொழிற்சாலைகளை உள்ளடக்கிய (இரும்பு-எஃகு, கப்பல் கட்டுதல்; செயற்கை நூலிழை தயாரித்தல்) உலகக் கட்டமைப்பு நெருக்கடி.

— 1950 களிலும் 1960 களிலும் மிகுந்த தேவை நிறைந்ததாக விளங்கிய நுகர்வோர் பொருட்களை மிகுதியான அளவில் சந்தையில் குவித்தல்.

—புதுவகையான உற்பத்திப் பொருளுக்கும், சேவை களுக்கும் மிகுதியான தேவை (உதாரணமாக, ஆற்றல் தொழிலிலும், கட்டிடம் கட்டுவதிலும், பொருட்களைச் சேமிக்கும் தொழில் நுட்பத்திலும்; அதுவே போக்குவரத்து, செய்தி ஆகியவற்றிற்கும் பொருந்தும்).

— பொருளாதார செயல் முறைகளால் தோற்றுவிக்கப் படுகிற சூழ்நிலைப் பாதுகாப்பு பற்றிய பிரச்சினைகள் வளர்ச்சியுற்றிருப்பதும், தேசிய மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சி தொடர்பான பண்பியல் அடிப்படையான புதிய பிரச்சினை களில் ஒரு சூழ்நிலைப் பாதுகாப்புச் சமநிலையைப் பேணிக்காப்பதன் தேவையும்.

—காலனி முறை சிதைந்து அழிந்து போனதன் விளைவாகத் தொழில் வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடு களிடையில் ஒருபுதுவகையான வேலைப்பகுப்பு தோன்றி யிருப்பதும், விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியைப் பயன்படுத்துவதன் அவசியமும்.

—முடிவாக ஏறத்தாழ அனைத்து முதலாளித்துவ நாடுகளிடையே நிலவும் தேசிய பொருளாதாரங்களின் இடையிலுள்ள பொருளாதாரச் சார்புநிலையின் அதிகரிப்பு. இந்தப் பொருளாதார இணைப்புகளின் செயல் முறைகள் மறுஉற்பத்தி நிகழ்ச்சிப்போக்கின் பிரிக்க முடியாத ஒரு கூறாக ஆகும் அளவிற்கு உயர்ந்த நிலையை அடைந்துள்ளன இவ்வாறாக 1978 ல் மேற்கு ஜெர்மனியின் ஏற்றுமதி மொத்த தேசிய உற்பத்தியில் 28.9 சதவிகிதமாகவும், ஹாலந்தின் ஏற்றுமதி 53.1 சதவிகிதமாகவும், பெல்ஜியத்தின் ஏற்றுமதி 58.6 சதவிகிதமாகவும் இருந்தன. ஜப்பானில் அது 18.4 சதவிகிதமாக இருந்தது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அது 7.7 சதவிகிதமாக இருந்தது. ஆனால் இங்கே அவைகள் இன்னும் மெதுவாகவேதான் உயர்ந்து வருகின்றன. எனினும் வெளிநாட்டு வாணிபத்தின் வளர்ச்சியும்,

விரிவாக்கமும் மட்டுமே, நாம் வாதிக்கும் விஷயமல்ல. உற்பத்தியை சர்வதேசத்தன்மை கொண்டதாக ஆக்குவது என்பது, இப்பொழுது புதிய பண்பியலடிப்படையிலான ஏதோ ஒன்றாகும் தொழில்களுக்கிடையில் உள்ள சர்வதேச வேலைப்பகுப்பாயிருப்பதிலிருந்து தொழிற்சாலைகளுக்குள்ளும், உற்பத்திக் கூட்டுகளுக்குள்ளும் நிலவும் வேலைப் பகுப்பாக மாறுகிற காலம் ஆகும். தொழில் வளம் மிகுந்த முதலாளித்துவ நாடுகளிற் சிறந்தவற்றின் மிக முக்கியமான ஆக்கத்தொழில்களில் உள்நாட்டு நுகர்விற்காக இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் பங்கு மிக அதிகமாக வளர்ந்திருப்பதே இதன் மறுக்க முடியாத ஓர் அடையாளமாகும்.

முதலாளித்துவ நாடுகளிடையே நடைபெறும் சர்வதேச வாணிப வளர்ச்சியின் இந்தப் புதிய மட்டம், முக்கியமாக, சர்வதேச ஏகபோகங்கள் வேகமாக விரிவடைவதன் விளைவேயாகும். இவ்வாறாக 1967லிருந்து 1976 வரை உலக முதலாளித்துவ அமைப்பு முறைக்குள் நேரடியான பண முதலீடு, ஏறத்தாழ மூன்று மடங்கு உயர்ந்தது. அவைகளில் ஏறத்தாழ 70 சதவிகிதம் மூலதனம் பரஸ்பரம் ஒன்றுடன் ஒன்று பின்னப்பட்டிருப்பது மிகவும் தீவ்ரமடைந்துள்ள, வளர்ச்சியடைந்துள்ள முதலாளித்துவ அரசுகளால் மேற் கொள்ளப்பட்டிருந்தது. இவ்வாறாக 1975 ல் மேற்கு ஐரோப்பிய நாடுகள் வெளி நாடுகளில் செய்த உற்பத்தி, அவற்றின் உள்நாட்டு உற்பத்தியில் சராசரி 25 சதவிகிதமாக இருந்தது. (கிரேட் பிரிட்டனில் 56 சதவிகிதமாகவும், பெல்ஜியத்தில் 30 சதவிகிதமாகவும், ஜெர்மன் கூட்டுக் குடியரசில் 15 சதவிகிதமாகவும் அது இருந்தது).

இந்த நிகழ்ச்சிப் போக்குகளைப் பற்றிய ஒரு பகுப்பாய்வின் அடிப்படையில் நாம் கீழ்க்கண்ட முடிவுகளைப் பெறலாம்:

முதலில் சுழல் நெருக்கடியுடன் இணைந்து காணப்பட்ட முரண்பாட்டின் இரண்டு பகுதிகள் தெளிவாகத் தெரிகின்றன. ஆனால் உண்மையில் உற்பத்தி சக்திகளின் உறவுகளுக்கும், உற்பத்தி உறவுகளுக்குமிடையில் உள்ள உறவைப் பாதித்திருந்த மிகப் பெரும் மாற்றங்களின் வெளிப்பாடே அவைகள். முதன் முதலில் அவைகள் முதலாளித்துவ நாடுகளின் பொருளாதாரக் கட்டமைப்பில் மாற்றங்களும் ஏற்றத்தாழ்வுகளுமாக இருந்தன. இரண்டாவதாகப் பொருளாதார வாழ்க்கையைச் சர்வதேசத் தன்மை கொண்டதாக ஆக்குவதை விரைவுபடுத்துவதுமாக இருந்தன. பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றங்களின் போக்கில், தனியார் மூலதனத்தின் வட்டத்திற்குள் இருந்ததாக மரபு வழியாகக் கருதப்பட்ட எல்லைகளுக்கு அப்பாலிருந்த செயல்களின் பகுதிகளுடனும், வட்டங் களுடனும் இணைக்கப்பட்டிருந்தவற்றிற்கு ஒரு வளர்ந்து வரும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. தயாரிப்புத் திட்ட நிகழ்ச்சிகள் (ஆராய்ச்சியும்; மேம்பாடும்,) உற்பத்தியின் பொதுவான நிலைகள் (கீழ்க்கட்டமைப்பு; தகவல் அமைப்பு முறை முதலியன), மற்றும் துணை விளைவுகள் (சூழ்நிலை முதலியன). இந்தத் துறை களில்தான் மூலதனம் தானாகவே விரிவடைவதற்கான, மிகவும் சிக்கலான நிலைகள் மிகுதியான செல்வாக்குடைய தாக இருக்க முயல்கின்றன. இங்குதான் சந்தையின் செயலியக்கமும், தனியார் மூலதனம் தன்னை ஒழுங்கு படுத்திக் கொள்ளும் செயலியக்கமும் இதுவரையில் செயல் படத் தவறியிருக்கின்றன. அல்லது மிகக்குறைந்த அளவில் செயல்பட்டிருக்கின்றன. இப்பொழுது விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றத்தின் முக்கிய ஊடகங்களாகவும், பொருளாதாரத்தில் புதுமைக்கான தோற்றுவாய்களாகவும் இருக்கும் தொழில்களின் (அணுசக்தி, மின்னணுவியல், விண்வெளி ஆராய்ச்சி, விமானத்தொழிற்சாலை) தெளிவாக வளர்கின்ற பங்கின் தொடர்பாக அதே மாதிரியான பிரச்சினைகள் எழுகின்றன.

பொருளாதார வாழ்வை சர்வதேசமயமாக்குவதுதான் உற்பத்தி சக்திகளின் சமூக இயல்பின் மேற்கொண்ட வளர்ச்சிக்கான மற்றொரு உருவம் ஆகும். தொழிற்சாலைகளுக்குள்ளாக சர்வதேச வேலைப் பகுப்பின் படிப்படியான விரிவிலும், தொழில் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளுக்கும், வளரும் நாடுகளுக்குமிடையில் உள்ள வேலைப் பகுப்பின் மாற்றங்களைச் சுருக்கமாக வெளியிடுவதிலும், வளரும் நாடுகளுக்குப் புதிய வகைச் சார்புநிலைக்கு வழி வகுத்துள்ள அவற்றின் பொருளாதாரங்கள் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைவதன் புதிய உருவங்களிலும் ஒருபுறம் முதலாளித்துவ நாடுகளிடையில் நிலவும் பரஸ்பரச் சார்பின் மட்டத்தில் அது பிரதிபலிக்கப்படுகிறது. மறுபுறம் அவற்றினிடையில் நிலவுகின்ற ஒரு சீரற்ற வளர்ச்சி அதை வெளிப்படுத்துகிறது.

இவை அனைத்திலுமிருந்து அரசு ஏகபோக மூலதனக் கட்டுப்பாட்டில் இன்றைய நெருக்கடியின் இயல்பைப் பற்றி ஒரு முடிவைப் பெறலாம்.

— நெருக்கடியின் முதற்கூறு ஒரு நீண்ட காலக் கண்ணோட்டத்துடன் தோற்றுவிக்கப்பட்ட கட்டமைப்புக் கொள்கையின் தேவைகளுக்குத் தன்னைத் தானே தகவமைத்துக் கொள்வதற்கு அரசு ஏகபோகக் கட்டுப் பாட்டு முறை இதுவரை தயாராக இல்லை என்ற உண்மையில்தான் அடங்கியுள்ளது. ஒரு குறிப்பிட்ட நாட்டில் நிலவுகிற ஸ்தூலமான நிலைகளுக்கு ஏற்ப கட்டமைப்பு இயல்புடைய நடவடிக்கைகளும், அரசியல் இயல்புடைய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. (உதாரணமாக விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றத்தின் கண்ணோட்டத்திலிருந்து, முக்கியமானதாகக் கருதப்பட்ட பகுதிகளை மேம்பாடடையச் செய்வதற்கும், அல்லது கட்டமைப்பில் பலமற்ற தொழில் தொகுதிகளைக் காப்பதற்கும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை உள்ளடக்கிய வேலைத்திட்டங்கள்.

ஆனால் எந்த வட்டங்களில் தேசிய பொருளாதாரத்தின் கட்டமைப்பு மாற்றங்கள் மற்றும் பொதுவான வளர்ச்சி பற்றி முடிவுகள் மேற்கொள்ளப்படுகின்றனவோ, அந்தப் பணமுதலீட்டு வட்டத்தில் பெருகிவரும் அரசின் பங்கிற்கும், செல்வாக்கிற்கும் ஏகபோக மூலதனத்தின் எதிர்ப்புதான் இதற்கு முக்கியமான தடையாக விளங்குகிறது.

வாணிபம் சர்வதேசத்தன்மையடைவது, சர்வதேச நிறுவனங்களின் வளர்ந்துவரும் செல்வாக்கு ஆகியவை நிறைந்த பின்புலத்தில் அரசு ஏகபோகக் கட்டுப்பாடு நெருக்கடியின் இரண்டாவது கூறாவது, அது தேசிய பொருளாதாரத்தினால் கட்டுப்படுத்தப்படுவதாகும்.

இது தொடர்பாக வாத எதிர்வாதங்கள் தோன்றியுள்ளன. குறிப்பாக அரசுக்கும், தனியார் ஏகபோகங்களுக்குமிடையிலுள்ள உறவு பற்றி பூர்ஷ்வா அறிஞர்களிடையே இந்த வாத எதிர்வாதங்கள் தோன்றியுள்ளன.

—முடிவாக, அரசு ஏகபோகக் கட்டுப்பாட்டில் நெருக்கடியின் மூன்றாவது கூறு "பேரியல் பொருளாதாரக் கட்டுப்பாடும் அதன் உறுதிப்பாட்டுச் சூட்சுமமும்" என்று அழைக்கப்படுவதன் பலமற்ற தன்மையாகும். அது பணவீக்கமும், பெருமள்வு வேலையில்லாத் திண்டாட்டமும், விலைமந்தமும் ஒன்றாக ஏற்பட்ட 1970 களில் தோன்றியதாகும்.

இவ்வாறாக அரசு ஏகபோகக் கட்டுப்பாட்டின் இன்றைய நெருக்கடியானது ஏகபோகங்களுக்கும், அரசுக்குமிடையில் தோன்றும் முரண்பாடுகள் தீவிரமடைவதில் தான் அடங்கியிருக்கிறது. மேலும் மறுஉற்பத்தியின் புதிய தேவைகளுக்கும், அதைக் கட்டுப்படுத்துவதற்குப் பயன்படுத்துகிற வடிவங்களுக்கும், வழிகளுக்கும் இடையில் ஒரு பெரும் இடைவெளி தோன்றுவதிலும் அடங்கியுள்ளது. அது முதலாளித்துவ நாடுகளிலும், உலக முதலாளித்துவப் பொருளாதாரம் முழுமையிலும் குறுகிய காலச் சமநிலைக்

குழப்பத்திலும், நீண்டகாலப் பொருளாதாரச் சமநிலைக் குழப்பத்திலும் காணப்படுகிறது.

ஆனால் மார்க்சீயப் பகுப்பாய்வானது முதலாளித்துவத்தின் முரண்பாடுகளை இன்றைய நெருக்கடி எவ்வாறு தீவிரமாக்குகிறது என்பதைக் காட்டுவதுடன், முதலாளித்துவத்தின் கட்டுப்பாட்டுச் செயல்முறை இந்த முரண்பாடுகளின் தற்காலிகத் தீர்வினுக்காக எவ்வாறு தன்னைத்தானே தகவமைத்துச் செம்மைப்படுத்திக் கொள்கிறது என்பதையும் காட்ட வேண்டும்.

இன்று, இது மிகவும் முக்கியமானதாகும். ஏனெனில், முன்னைய நிலையைக் காட்டிலும் இந்த வகையான தகவமைப்பு மிகவும் சிக்கலான நிலைமைகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சமயங்களில் பல்வேறானதும், முரண்பட்டதுமான போக்குகளுக்கு இது காரணமாகிறது. இதை அரசு-ஏகபோகக் கட்டுப்பாட்டில் சில புதிய போக்குகளில் தெளிவாகக் காணலாம்.

புறவயத் தேவைகளின் வற்புறுத்தலாலும், அல்லது 1974-1975 நெருக்கடியின் படிப்பினைகளாலும், சர்வதேச அரசு-ஏகபோகக் கட்டுப்பாட்டின் புதிய உருவங்களும், முறைகளும் தோன்றியுள்ளன. அவை கீழ்க்கண்டவற்றை உள்ளடக்கியதாக உள்ளன:

பெரிய தொழில் முதலாளித்துவ அரசுகளிடையே பொருளாதாரக் கொள்கை பற்றிக் கலந்தாலோசித்தாலும், ஒப்பந்தம் செய்து கொள்ளுதலும் ஏழு நாடுகளின் பொருளாதார உச்சநிலைக் கூட்டங்களும், பத்துநாடுகளின் நிதியியல், பணவியல் கொள்கை பற்றிய கூட்டமும், தந்திரங்களை ஒருங்கிணைக்கும் ஒருகுழுவாகச் செயலாற்றிய முக்கூட்டுக் கமிஷனும், இதற்கு முன்மாதிரிகளாக விளங்குகின்றன.

—தொழிற் துறையில் மிகவும் வளர்ச்சியுற்ற முதலாளித்துவ அரசுகளுக்கும் வளரும் நாடுகளுக்கு

மிடையில் தொடர்ந்து நடை பெறும் பலசுற்றுப் பேச்சு வார்த்தைகள் என்று அழைக்கப்படுபவை. வடக்கு- தெற்கு பேச்சுவார்த்தை; ஐரோப்பிய பேச்சுவார்த்தை முதலியன);.

—நிலவுகிற சர்வதேசப் பொருளாதார நிறுவனங்களின் பணிகளை விரிவாக்கம் செய்வதும், புதிய நிறுவனங்களைப் படைப்பதும், அதனுடன் கூடவே, அதே நேரத்தில் சர்வதேச நிதியின் பங்கை அதிகப்படுத்துவதும். இதில் முக்கிய வளர்ச்சியானது நிதி, அரசியல் கட்டுப்பாட்டுக் கருவி என்ற வகையிலும், ஒன்றிணைப்புக் கருவி என்ற வகையிலும், முதலாளித்துவ அரசுகளின் உள்ளார்ந்த பொருளாதார, அரசியல் வளர்ச்சியின் மீது மொத்தமான செல்வாக்கின் கருவி என்ற வகையிலுமான சர்வதேசப் பணநிதி அமைப்பு ஏற்படுத்தப்பட்டதும், சர்வதேச ஆற்றல் ஏஜென்சி ஏற்படுத்தப்பட்டதும் ஆகும். ஒன்றிணைந்த மூலப் பொருட்கள் நிதிஅமைப்பு ஒன்றினையும் அமைப்பது தொடர்பாகப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மண்டலங்களின் மட்டத்தில் ஐரோப்பியப் பொருளாதார சமுதாய நாடுகளில் (மேலே சொன்ன நிறுவனங்களுக்குச் சிறிதளவு போட்டியாக) புதிதாக மேற்கு ஐரோப்பியப் பணவியல் அமைப்பு முறை தொடர்பான நிறுவனம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது

— அரசுகளுக்கிடையில் நிறைவேற்றப்படும் ஒப்பந்தங்களை அடிப்படையாகக் கொண்டு ஒரு சில குறிப்பிட்ட சர்வதேச சந்தைகளின் மீது கட்டுப்பாடு செலுத்துவதை நோக்கிய (குறிப்பாக பண்டங்கள் மற்றும் மூலதனம்) போக்குகளை வலிமைப்படுத்துவது.

— உண்மையில் தனியார் ஏகபோகக் கார்டல்களுக்கு உதவி செய்பவையாக அல்லது அவைகளுக்கு மாற்றாக, சர்வதேச அரசு ஏகபோக சந்தைத் தீர்மானங்கள், பல சமயங்களில் சுங்கக் கட்டுப்பாடுகளை நீக்குவதாலும், அல்லது பாதுகாப்புக் கொள்கையாலும் முதலாளித்துவப் பொருளாதார உறவுகளில் ஏற்படும் வாணிபப் பிணக்கு,

களை வகைப்படுத்தவும், வழக்குகளைத் தீர்க்கவும் மேற்கொள்ளப்படுகின்றன.

புதிய போக்குகளின் சிறப்பான இயல்புகளில் கீழ்க்கண்டவற்றை நாம் வேறுபடுத்திக் காணமுடியும்.

— முதலில், சர்வதேசப் பொருளாதார வாழ்க்கை தொடர்பான விஷயங்களான அரசுகளின் செயல்முறைகளில் ஒரு பெருக்கம்.

— இரண்டாவது, சர்வதேச உறவுகள் முழுமையின் பொருளாதார இயல்பு உயர்ந்திருப்பது.

— மூன்றாவது, வாணிபம், பணவியல் மற்றும் கடன் தொடர்பான உறவுகளின் மரபு வழியான கட்டமைப்பிலிருந்து மெதுவாக வெளியேறி, படிப்படியாய்ப் பொருளாயத உற்பத்திப் பகுதியை உள்ளடக்கும் செயல்பாடுகளைக் கொண்ட சர்வதேச அரசு-ஏகபோக அமைப்புகளின் மேற் கொண்டு தொடர்ந்த வளர்ச்சி.

உதாரணமாகத் தொழில் நுட்பத்தைக் கைமாற்றுவது, கப்பல் போக்குவரவு, பன்னாட்டு இணையங்களின் செயல்கள் போன்றவற்றில் நிலவுகின்ற பல சர்வதேச பொருளாதார உறவு வட்டங்களின் நடைமுறை விதிகளில் புதிய போக்குகள் பிரதிபலிக்கப்படுகின்றன. இந்த நடைமுறை விதிகளின் உள்ளடக்கமும், சிறப்பான முக்கியத்துவமும், படிநிலையும் பெரும் தொழில் வளர்ச்சியடைந்துள்ள முதலாளித்துவ நாடுகளுக்கும், வளரும் நாடுகளுக்கும், போட்டி முதலாளித்துவ நாடுகளின் அரசுகளுக்கும், அவற்றின் குழுக்களுக்கும் இடையில் அடிக்கடிக் கடுமையான வாதத்துக்குரியவைகளாக உள்ளன.

தெளிவாகவே, தேசிய கட்டுப்பாடு போன்றில்லாமல், அரசு ஏகபோகக் கட்டுப்பாடு சர்வதேச மட்டத்தில் பல தனிச் சிறப்பான இயல்புகளைக் கொண்டதாகவுள்ளது. சர்வதேச அரசு ஏகபோகக் கட்டுப்பாட்டு அமைப்பு முறை ஒன்றை அமைப்பதற்கான முயற்சி ஏகாதிபத்தியங்களுக்

கிடையே கடுமையான முரண்பாடுகளைச் சந்திக்க வேண்டிய திருக்கிறது. சர்வதேசமட்டத்தில் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் பொருளாதாரக் கட்டுப்பாடு இன்னும் கூட மதிப்பு விதியை அடிப்படையாகக் கொண் டிருப்பதனால் வலிமை வாய்ந்த அரசுகளுக்கே சாதகமா யுள்ள போட்டி நிறைந்த போராட்டத்தில் ஈடுபட வேண்டி யிருக்கிறது. தேசிய நிகழ்ச்சிப் போக்குகள், மண்டல நிகழ்ச்சிப் போக்குகள், உலகளாவிய நிகழ்ச்சிப்போக்குகள் ஆகியவை ஒரு சீரற்ற வளர்ச்சி விதியை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சியடைகின்றன. அதன் விளைவாக ஏகாதிபத்தியப் போட்டி, பொதுவான வர்க்க நலன்கள் ஆகியவற்றின் தனித் தெளிவான சேர்க்கையை அவைகள் அமைக்கின்றன.

சர்வதேச அரசு-ஏகபோகக் கட்டுப்பாட்டின் வருங்கால வளர்ச்சியில் முக்கியமான காரணியாக எனக்குத் தோன்றுவது, முதலாளித்துவமானது தனது பொது நெருக்கடியின் மூன்றாவது படிநிலையில் இருக்கும் போது எந்தப் புதிய நிலைகளில் இருக்கிறதோ அந்தப் புதிய நிலை களின் நேரடியான பெரும் செல்வாக்கே ஆகும். சர்வதேச அரசு-ஏகபோகக் கட்டுப்பாடானது சோஷலிச நாடுகளையும் (குறிப்பாக, அவற்றின் பொருளாதார ஒன்றிணைப்பின் எடுத்துக்காட்டினாலும், வளரும் நாடுகளுடன் அவை கொண்டுள்ள பொருளாதார உறவுகளின் தன்மையினாலும், மேற்கு, கிழக்கு நாடுகளுக்கிடையிலான பொருளாதார உறவுகளின் புதிய உருவங்களினாலும்), வளரும் நாடு களையும் (குறிப்பாக ஒரு புதிய சர்வதேச பொருளாதார அமைப்பிற்கான போராட்டத்தின் மூலம்) உள்ளடக்கிய ஏகபோக எதிர்ப்புச் சக்திகளினால் இன்று பாதிக்கப் படுகிறது.

இந்த உலகளாவிய பொருளாதார உறவுகள் ஒன்றுக்கொன்று தொடர்பு கொள்ளும்போது இந்த முரண்பாட்டுப் போக்குகளின் மோதல்களை மிகஅதிகமாக

அறிந்து கொள்ள முடிகிறது. உலகப் பொருளாதாரத்தில் அரசு நிறுவனங்கள் அதிகமாக ஊடுருவி வருகின்ற முறைகளைப் பற்றி பூர்ஷ்வா பொருளாதார நூல்கள் மிகுந்த அக்கறை காட்டி வருகின்றன என்பது நம்முடைய கவனத்திற்குரிய ஒரு விஷயமாக உள்ளது. அவைகள் சர்வதேசப் போட்டியில் ஒரு முக்கியக் காரணியாக ஆகி வருகின்றன என்பதைக் காண முடிகிறது. அவைகள் தனியார் தொழில் துறைக்கு ஒரு பெரும் சவாலாக விளங்குகின்றன என்பதையும் நாம் காணமுடிகிறது.

இங்கே நாம் ஒரு முரண்பட்ட சூழ்நிலையைக் காண்கிறோம். தெளிவாக இன்றைய அரசு, ஏகபோகக் கட்டுப்பாட்டு நெருக்கடி, ஒரு சர்வதேச மட்டத்தில், இந்தக் கட்டுப்பாட்டின் மேற் கொண்ட வளர்ச்சிக்கான ஒரு பெரும் தூண்டுகோலாக விளங்குகிறது. ஆனால் அது, சமூக - பொருளாதாரக் கட்டமைப்பு மாறிக் கொண்டிருக்கிற சூழ்நிலையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தச் சூழ்நிலையில் ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகள் சர்வதேசப் பொருளாதார உறவுகளில் படிப்படியாகத் தங்களின் செல்வாக்கைப் பெருக்கிக் கொண்டு வருகின்றன. இந்த இரண்டு போக்குகளின் இணைப்பு சர்வதேச மட்டத்தில் அரசின் பொருளாதாரப் பங்கையும், அரசுகளுக்கிடையிலான பொருளாதார உடன்பாடுகளின் உள்ளடக்கத்தையும், ஒப்பந்தங்களின் உள்ளடக்கத்தையும் சர்வதேச வர்க்க மோதலுக்குரிய குறிப்பிட்ட வட்டமாக ஆக்குகிறது.

இவ்வாறாக புதிய படிநிலை ஒன்றின் வளர்ச்சியின் தொடக்கங்களை நாம் கண்டிருக்கிறோம் என்பதில் ஐயமில்லை. வேறுபட்ட சமூக அமைப்புகளையுடைய அரசுகளிடையே சரிநிகரான கூட்டுறவு பற்றிய ஸ்தூலமான பரிந்துரையுடன், ஐரோப்பாவில் பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பு பற்றிய மகாநாட்டின் முடிவான செயல் பற்றிய ஆவணங்கள் அல்லது, சிறப்பான ஐ. நா.

மகாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட அரசுகளின் பொருளாதார உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றிய சாசனம் போன்ற சர்வதேச ஆவணங்களால் தனிச் சிறப்புப் பெற்றதாக இந்தப் படி நிலை விளங்குகிறது. சர்வதேச சட்டத்தின் கீழ் அரசின் பங்கை, சர்வதேச பொருளாதார வாழ்வின் ஒரு பகுதியாக இந்த ஆவணங்கள் உண்மையில் அங்கீகரித்தன. அதனுடைய செயலின் உள்ளடக்கத்தையும் இலட்சியங்களையும் உருவாக்கின. முதலாளித்துவம் தன்னுடைய மேலாதிக்கத்தை இழந்திருக்கும் இக்காலத்தில் இரண்டு வேறுபட்ட பொருளாதார அமைப்பு முறைகள் பக்கத்தில் பக்கத்தில் நிலவும் இக்காலத்தில், உலகமட்டத்தில் சோஷலிசத்திற்கும், முதலாளித்துவத்திற்குமிடையே நடை பெறும் போராட்டத்தின் செல்வாக்கினுள்ளும், அதன் கீழும் முன்னாள் காலனி நாடுகள் பொருளாதார விடுதலை பெற்றுக்கொண்டிருக்கும் இக்காலத்தில் உலகப் பொருளாதாரத்தில் பண்பியல் சார்ந்த புதிய முரண்பாடான நிகழ்ச்சிகள், போக்குகள் ஆகியவற்றின் ஒரு வெளிப்பாடே இவைகள் ஆகும்.

**டாக்டர். மிரோஸ்லாவ் ரம்ளர்**

*துறைத்தலைவர், பொருளாதார நிறுவனம்;*
*விஞ்ஞான-கலைக்கழகம், செக்கோஸ்லோவாகியா*

## அரசு-ஏகபோக ஒழுங்கு முறையின் இன்றைய நெருக்கடியில் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியும், அதன் சாரமும், பங்கும்

18வது நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 19 வது நூற்றாண்டின் முற்பகுதியிலும் நடைபெற்ற தொழிற் புரட்சியும், 19 வது நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 20 வது நூற்றாண்டின் தொடக்கத்திலும் நிகழ்ந்த விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியும் போன்று உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியில் ஒரு பண்பியல் திருப்பு முனையாக விளங்கும் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி, சமுதாயத்தின் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியிலும், சமூக உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கின் வளர்ச்சியிலும், விஞ்ஞான அறிவு அடிப்படையிலேயே புதிய பங்கை மேற்கொள்வதற்கு வழி செய்கிறது. விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி, சமூக உற்பத்தியின் தன்மையை மேலான நிலைக்கு உயர்த்தி யுள்ளது. அதன் விளைவாக, இந்த சகாப்தத்தின் தொடக்கத்தை, முதலாளித்துவ உற்பத்தி உறவுகள், அழிந்து மறைவதை மிகுந்த தீவிரமானதாக்கி, மேற் கொண்டு வளர்ச்சியடையச் செய்துள்ளது.

விஞ்ஞான- தொழில் நுட்பப் புரட்சியின் செல்வாக்கின் கீழ் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியில் விஞ்ஞானம் ஆற்றும் பங்கு எவ்வாறு மாறியுள்ளது என்பதை அறிய விஞ்ஞானம் எந்த வழியைப் பின் பற்றி வளர்ந்திருக்கிறது என்பதையும், முதலாளித்துவத்தின் வளர்ச்சியில் அதனுடைய முக்கியமான பங்கையும் நாம் ஆராய்ந்து பார்ப்போம்.

உண்மையில் பட்டறைத் தொழில் படிநிலையில் விஞ்ஞானத்தால் நேரடியாகப் பாதிக்கப்படாமல் முதலாளித்துவ உற்பத்தி வளர்ந்தது. வேலைப்பகுப்பின் காரணமாகப் பட்டறைத் தொழிற் கருவிகள் உற்பத்தியாளரின் பட்டறிவு, உடனடி அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் மேம்படுத்தப்பட்டன. அந்தக் கால கட்டத்தில் உற்பத்தி அனுபவத்தின் அறிவைப் பொதுமைப் படுத்துவதும், முறைப்படுத்துவதும் பல்வேறு துறைகளான விஞ்ஞானங்களை உருவாக்குவதும் தான் விஞ்ஞானத்திற்கு அளிக்கப்பட்டிருந்த அடிப்படைப் பணியாகும்.

குறுகியதாகவும், ஆழமானதாகவும் ஆகிவந்த உற்பத்தியில் சிறப்புத்திறன் பெறுவது, கைவினைக் கலஞன ஆச்சுத் தொழில் தொடர்பான பகுதி நேரத் தொழிலாளியாக ஆக்கி வந்தது. இவ்வாறாக இது உழைப்புக் கருவிகள் வேகமாக மேம்பாடடையச் செய்வதைக் கைகூடும செயலாக்கியது அதே வேளையில் தொழிலாளி பெருமளவு மூலதனத்தின் மீது சார்ந்தவன் ஆனான். முடிவாக அது அவனுடைய அல்லது அவளுடைய படைப்பாற்றல் முழுவதும் அடக்கி யொடுக்கப்படுவதற்கான வற்றைச் செய்தது. முதலாளித்துவ உற்பத்தி உறவுகளும், அதைச் சார்ந்துள்ள முதலாளித்துவ உற்பத்தி முறையும், பகுதி நேர தொழிலாளிகளால் அதாவது உடனடியான உற்பத்தியாளரால் புதுப்பிக்கப்பட்ட போதிலும் செய்பொருள் தொழில் நுட்ப அடிப்படையின் கட்டமைப் பிற்குள் அது மேலும் வளர்ச்சியடைய முடியவில்லை.

இயந்திரங்கள் அல்லது இயந்திரங்களின் தொகுதிகளை அதன் தொழில் நுட்ப அடிப்படையாகக் கொண்டு பேரளவு இயந்திர உற்பத்திக்கு மாறுவதுதான் அந்தப் பழைய முறையிலிருந்து மீள்வதற்கு ஒரே வழியாய் இருந்தது. முதலாளித்துவப் பட்டறைத் தொழில், பேரளவு தொழிற் சாலை உற்பத்தியாக வளர்ந்தது, முதலாளித்துவ உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியில் முதற் பண்பியல் அடிப்படையிலான மாற்றமாக விளங்கிய தொழிற் புரட்சியுடன் இணைக்கப் பட்டது. விஞ்ஞான அறிவும், அது உற்பத்திக்குப் பயன் படுத்தப்படுவதும் புதிய உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியில் மேலும், மேலும் முக்கியமான காரணியாக ஆகிக் கொண்டிருந்தன.

ஒரு வகையில் பேரளவு இயந்திர உற்பத்தி, முதலாளித்துவத்தின் தொழில் நுட்ப அடிப்படையாக மாறுவதற்குத் தொழில் நுட்பத்தைப் புதுமையாக்கும் நிகழ்ச்சிப் போக்கு உடனடி உற்பத்தியாளரிடமிருந்து, அதாவது பகுதித் தொழிலாளியிடமிருந்து, அவனுடைய அறிவுத் திறனிலிருந்து பிரிக்கப்படுவது இன்றியமையாத தாக இருந்தது. இன்னொரு வகையில் பெருமளவு விஞ்ஞான அறிவு தோற்றுவிக்கப்பட்ட எந்திரங்களைப் பகுதித் தொழிலாளர் பயன்படுத்தச் செய்யும் மட்டத்தை அவர் களுடைய அறிவுத்திறன் எட்ட வேண்டியிருந்தது. உற்பத்தியில் புதுமைகளைப் படைத்தவர்களை, உற்பத்தி சாதனங்களின் புதுத்துறைகளில் பணியாற்றும் தொழிலாளர் தொகுதியிலிருந்து முழுவதும் பிரிப்பதனாலேயே தொழிற் புரட்சி நிகழ்ச்சிப் போக்கானது நிர்ணயிக்கப்படுகிறது.

விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் வளர்ந்து வரும் முக்கியத்துவம், 19 வது நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 20 வது நூற்றாண்டின் தொடக்கத்திலும், உற்பத்தி சக்தி களின் வளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றங்களுக்குக் காரணமாயிருந்தது. நன்றாக முழுதும் அறிந்தே பயன் படுத்தப்பட்ட விஞ்ஞான அறிவு, உற்பத்தி மற்றும் தொழில்

நுட்பப் புது மாற்றங்களுக்குப் பெருமளவு காரணமாயிருந்தது.

தொழில் நுட்ப விஞ்ஞானங்கள், நடைமுறைப் பயன்பாட்டுப் பொருளாதார விஞ்ஞானங்கள், தொழிலாளர் சமூகவியல், உளவியல் ஆகியவற்றின் பயன்பாட்டுடன் இணைந்து உற்பத்திச் செயலாட்சி பற்றிய கோட்பாடும், அமைப்புபற்றிய கோட்பாடும் வளர்ந்தன.

உற்பத்தியில் புதுமை காணுதல் செயல்முறைகளின் கட்டமைப்பு, பொருளாதாரம் ஏகபோகத் தன்மையடைந்ததுடன் இணைந்தே மாற்றம் அடைந்தது. ஆங்காங்கே புதியன கண்டுபிடித்தவர்கள் சிதறிக்கிடந்தனர். இப்போது பெரிய ஏகபோக இணையங்களின் கீழ் வேகமாக வளர்ச்சியடைந்து வந்த ஆய்வியல் அமைப்புகள் அவர்களுக்கு பதில் ஏற்பட்டன. உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியில் விஞ்ஞான அறிவின் வளர்ந்து வந்த பங்கு 19-வது நூற்றாண்டின் பிற்பகுதியையும், 20வது நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியையும், சமுதாய உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியில் ஒரு பண்பியல் அடிப்படையிலான ஒரு திருப்புமுனையாகக் கருதும்படி செய்கிறது.

1950 களின் தொடக்கத்திலிருந்து உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியில் பண்பியல் அடிப்படையிலான ஒரு புதிய படிநிலை தொடங்கியுள்ளது. அதாவது விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி என்ற நிலை. உற்பத்தி சக்திகளின் உயர்ந்த வகையின் பெரும்பகுதி, சேர்க்கப்பட்ட பொதுவான கோட்பாட்டடிப்படையிலானவை முழுவதையும் நன்கு அறிந்தே பயன்படுத்தியதன் விளைவாகத் தோன்றியதுதான். இவ்வாறாக விஞ்ஞானம் ஒரு நேரடியான உற்பத்தி சக்தியாக ஆகியிருக்கிறது.

விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி நடைமுறைப் பயனுடையதாக ஆவதற்கு, உடனடியாகப் பயன்படுத்துவதற்குரிய விஞ்ஞான அறிவின் வாய்ப்பைக்

காட்டிலும், பொதுவான கோட்பாட்டடிப்படையிலான விஞ்ஞான அறிவின் மொத்தம் அதிகமானதாய் இருக்க வேண்டும். முறையான அனைத்தையும் உள்ளடக்கிய ஆராய்ச்சி, செயல்முறை ஆராய்ச்சியுடனும், மேம்பாட்டுடனும் இணைந்தே செல்ல வேண்டும்; அதே வேளையில் தேவையான உழைப்பு, விஞ்ஞான அறிவைப் பயன்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும்.

அனைத்து உற்பத்தி உழைப்பின் உருவங்களும், விஞ்ஞான அறிவை நடைமுறையில் பயன்படுத்துவதற்கு முழுதும் ஒத்ததாக இருக்கும் என இதற்குப் பொருள் அல்ல. பெரும்பாலும் உற்பத்தி உழைப்பு, இரண்டு கோடிகளுக்கு இடையில் பரவியுள்ளது என நாம் கருதுவது ஏற்புடையதாகும், ஒரு முனையில் புதிய விஞ்ஞான அறிவைத் தொடக்கமுதலே நடைமுறையில் பயன்படுத்துவதும், மறுமுனையில் நிலவுகிற விஞ்ஞான அறிவின் மொத்தத்தை வரம்பிற்குட்பட்டு வழக்கமான நடைமுறைகளில் பயன்படுத்துதலும். எனவே விஞ்ஞானம் உற்பத்திக்கு எவ்வாறு பயன்படுத்தப்படுகிறதோ அந்த உருவில்தான் ஒரு நேரடியான உற்பத்திசக்தியாக அது ஆகியிருக்கிறது. பொதுவான கோட்பாட்டடிப்படையிலான உருவில் விஞ்ஞானம் அனைத்திற்கும் பொருந்துவதாகிறது—அதாவது இயல்பூக்கமுடைய உற்பத்தி சக்தி. இவ்வாறாக விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி என்பது விஞ்ஞானத்தில் ஒரு புரட்சியையும் (விஞ்ஞானம் உற்பத்தியில், திறமையுடன் மிகவும் சிறப்பாகப் பயன்படுத்தக் கூடிய, கோட்பாட்டடிப்படையிலான அறிவின் தேக்கமாக ஆகியிருக்கிறது), தொழில் நுட்பத்தில் ஒரு புரட்சியும் (புதிய உற்பத்தித் தொழில் நுட்பம் உளப்பூர்வமாக, தெளிந்த திட்ட நோக்குடைய கோட்பாட்டடிப்படையிலான அறிவை உற்பத்தியில் பயன்படுத்துவது) இணைந்தது ஆகும்.

உற்பத்தி சக்திகளையும், நிகழ்ச்சிப் போக்குகளையும் சமூகத்தன்மையடையச் செய்வதில் விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சி ஒரு புதிய, உயர்ந்த படிநிலையாகும். தொழிற்புரட்சியினால் புகுத்தப்பட்ட உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியில் ஏற்பட்ட முதல் பண்பியல் அடிப்படையிலான மாற்றம், ஒரு தேசியமட்டத்தில் மதிப்பு விதியால் தான்தோன்றித்தனமாக ஆட்சிசெய்யப்படுகிற பொருளா தாரத்தால் மாற்றப்பட்டு, ஒரு வரம்பிற்குட்பட்ட மண்டல சந்தைக்காகப் பணியாற்றிய பண்ட உற்பத்தியில் அல்லது இயற்கைப் பொருளாதாரத்தில் முடிந்தது. உற்பத்தி சக்தி களின் வளர்ச்சியில் அடுத்த பண்பியல் அடிப்படையிலான மாற்றம் (19 வது நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 20 வது நூற்றாண்டின் தொடக்கத்திலும்) பேரியல் பொருளாதார முறைக் கட்டுப்பாடுகளைப் பயன்படுத்துவதன் மூலம், பொருளாதார ஏகபோகத்தினால் பலமற்றதாக ஆக்கப் பெற்ற மதிப்பு விதியின் விளைவிற்கு உதவியாக இருக்கச் செய்ய பூர்ஷ்வா அரசு பொருளாதாரத்தில் தலையிடுவதற்கு வகை செய்ததே ஆகும்.

முதலாளித்துவத்தினுள் இயல்பாகவே அடங்கியுள்ள முரண்பாடுகளை, கட்டுப்படுத்தும் சூட்சுமங்கள் நீக்க இயலவில்லை என்றாலும், அந்த முரண்பாடுகள், முதலாளித்துவப் பொருளாதாரத்தின் சுழல் முறை வளர்ச்சியில் வெளிப்பட்ட போதிலும், ஒழுங்குபடுத்துகிற இரண்டு சூட்சுமங்களும் முதலாளித்துவப் பொருளாதார வளர்ச்சியின் ஒவ்வொரு நிலையிலும் மறு உற்பத்தியைப் பேணிக்காப்பதைக் கைகூடும் செயலாக ஆக்கியுள்ளன.

அனைத்திற்கும் மேலாக, விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சிக்கு முன்னால் உருவாக்கப்பட்டு, நிலவுகிற அரசு ஏகபோகக் கட்டுப்பாடு சூட்சுமம் புதிய சூழ்நிலைக்குப் போதுமானதாக இல்லாததால் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியினால் நிர்ணயிக்கப்படும் உற்பத்தி சக்திகளையும்,

உற்பத்தி நிகழ்ச்சிப் போக்குகளையும் சமூகத் தன்மையடையச் செய்வதில் அடுத்த படிநிலைக்கு மாறுவது புலனாகிறது.

போதுமானதாக இல்லாத அதன் தன்மை கீழே கொடுக்கப்பட்டுள்ள அடிப்படையான பகுதிகளில் வெளிப் பட்டது:

1. முந்திய படிநிலைகளில், உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி தனியார் மூலதனத்தைச் சார்ந்திருந்தபோது (சுதந்திரமான முதலாளித்துவ தொழில் முயற்சிகள் அமைப்பின் கீழ் முக்கியமாகத் தனியார் மூலதனத்தின்மீதும்; ஏகபோக முதலாளித்துவத்தின் கீழ், ஏகபோக மூலதனத்தின் தனிச் குழுக்களின் மீதும் சார்ந்திருந்தது), விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் போது இந்த வளர்ச்சி, அடிப்படையான செயல்முறை ஆராய்ச்சியின் வளர்ச்சியைத் தூண்டுவதில் உள்ள பூர்ஷ்வா அரசின் செயல்கள் மீது மேலும், மேலும் மிகுதியாகச் சார்ந்திருக்க வேண்டியதிருக் கிறது. அவ்வாறில்லையெனில் முதலாளித்துவப் பொருளாதாரம் அதன் செயலியக்கத்தை இழந்துவிடும்.

2. பயனுள்ள மொத்தத் தேவையைப் பேணிக்காக்க, தேசிய வருவாயின் குறுகியகால மறுபகிர்வுக்குள்ளே அரசுத் தலையீடானது தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாது; தேவையின் பரிமாணம், அமைப்பு ஆகியவற்றில் செல்வாக்கு செலுத்துவதன் மூலமும், அளிப்பின் பரிமாணம், அமைப்பு ஆகியவற்றைத் தூண்டுவதன் மூலமும், செயல் திறமிக்க பொருளாதார வளர்ச்சி சார்ந்துள்ள எல்லாக் காரணிகளையும் அது உள்ளடக்கி நிகழக் கூடியதாய் இருக்க வேண்டும்.

பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்படும் பல்வேறு முட்டுக் கட்டைகளைத் தடுக்கும் நோக்கம் கொண்ட கட்டுப்பாடு முக்கியமாகும். எடுத்துக்காட்டாக, குறைவான மூலப் பொருள், உணவு, சக்தி, சுற்றுச் சூழல் காரணிகள் முதலியவை மேலும் மக்களின் மனவகை, உடல்நிலை ஆகிய

வற்றின் உறுதியின்மையைக் குறைப்பதும் அவசியமாகும்! தொழில் நுட்ப முன்னேற்றத்தின் தொடர்ந்த வேகங்களும், தானியங்கி மயமாக்கும் போக்கும் ஏற்படுத்தும் தொழிலாளி மக்களின் உறுதியற்ற சமூக, பொருளாதார நிலைகளும், தொடர்ந்து மாறுபடுகின்ற நிலைமைகளுக்குக் கீழே வாழ வேண்டிய கட்டாயமும்தான் மேலே கூறிய உறுதியற்ற நிலைக்குக் காரணங்களாக இருக்கின்றன.

3. உற்பத்தி சக்திகள் மற்றும் உற்பத்தி உறவுகளின் சமூக இயல்பு வளர்ந்து வருவது அனைத்துப் பொருளாதார நிகழ்ச்சிப் போக்குகளையும், சர்வதேசியமயமாக்குவதற்கு வழி செய்கிறது என்ற காரணத்தால் அரசுகளுக்கிடையே பேரியல் பொருளாதார ஒழுங்கமைப்பு முறைகளை ஒருங்கிணைப்பு செய்வதும் இன்றியமையாததாகிறது.

எனவே அரசு ஏகபோக ஒழுங்கமைப்பின் சென்ற கால உருவங்களின் இன்றைய வரம்பிற்குட்பட்ட இயல்போ அல்லது குறைந்த திறமையுடைய இயல்போ, தனி அரசுகளுடைய எல்லைக்குள் இந்த ஒழுங்கமைப்புகள் நிறைவேற்றப்படுவதனால் மட்டுமே விளக்கப்பட முடியுமென்றோ, உலக முதலாளித்துவப் பொருளாதாரம் முழுவதிலும் நிலவுகிற ஒழுங்கமைப்பின் வளர்ச்சியின் மூலமாக இந்தத் திறமையின்மையை வென்றுவிடலா மென்றோ நாம் ஏற்றுக் கொள்ள இயலாது. நீண்டகால இலட்சியங்களை மனதில் கொண்டு, அரசுக்கும் மேலான மட்டத்தில் பொருளாதார ஒழுங்கமைப்பை வளரச் செய்வது, தேசியப் பொருளாதாரங்களின் எல்லைகளுக்குள் நிலவுகிற ஒழுங்கமைப்பின் இயல்புகளிலும், முறைகளிலும் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்ட பின்னரே செய்யப்பட வேண்டும் என நான் நம்புகிறேன்.

அதற்கு மாறாக, அனைத்திற்கும் மேலாக இன்றைய அரசு ஏகபோகக் கட்டுப்பாட்டின் குறைந்த திறமை, முதலாளித்துவப் பொருளாதாரத்தின் சுழல் இயக்கத்தை

நீக்குவதற்கோ அல்லது குறைந்த அளவு அதை வெல்வதற்கோ அதன் திறமையற்ற தன்மையால் வெளிப் படுத்தப்படுகிறது எனக் கருதுவது தவறாகும். முதலாளித்துவப் பொருளாதாரத்தின் பேரியல் பொருளாதார ஒழுங்கமைப்பின் உருவம் எதுவாயினும், சுழல் இயக்கத்தை நீக்கவோ அல்லது வெல்லவோ ஒரு போதும் அதனால் இயலாததாகவே இருந்துள்ளது. சுதந்திரமான போட்டியின்கீழ் முதலாளித்துவத்தின் மதிப்பு விதியோ அல்லது ஏகபோக மூலதனத்தின் கீழ் அரசு ஏகபோகக் கட்டுப்பாட்டுடன் இணைந்த; மதிப்பு விதியோ, விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் விரைவான வளர்ச்சிக்கு முன்னால் இதைச் செய்ய முடியாததாகவுள்ளன. விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சி சூழ்நிலையில் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் அரசுக்கு அப்பாற் பட்ட கட்டுப்பாடு, அரசு சார்ந்த கட்டுப்பாடுகளை விரிவாக்கம் செய்வதன் மூலமும் இதைச் சாதித்துவிட முடியாது.

இன்றைய அரசு ஏகபோகக் கட்டுப்பாட்டின் நெருக்கடி யானது அதன் மொத்த உருவத்தில் குறிப்பாக 1970 களின் முதல் பாதிக் காலத்தில் மிகவுயர்ந்த விகித வளர்ச்சியை அடைந்த விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் போக்கில், முதலாளித்துவப் பொருளாதாரத்தின் வளர்ச்சியைத் தொடர்ந்து வருகிற நீண்டகாலப் பணவீக்கத் தினால் வெளிப்படுகிறது.

விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியினால் நிர்ணயிக்கப்படுகிற பெருகிவரும் ஏகபோகக் கட்டமைப்பும், உயர்ந்த செயலூக்கமும் சிறப்பிக்கும் பொருளாதாரம் பல சமயங்களில் சில மூலப்பொருட்கள், ஆற்றல் உணவுப் பொருட்கள் ஆகியவற்றின் குறைவாலும், தொழிலாளர் களின் சில திறமைகளின் குறைவாலும், வெளிப்படுத்தப் படுகிற கட்டமைப்பில் திடீரெனத் தோன்றுகிற ஒரு சமமற்ற தன்மையைச் சந்திக்கிறது. இந்தச் சூழ்நிலையில்,

பொருளாதார வளர்ச்சியை நோக்கமாகக் கொண்ட அரசு ஏகபோகக் கட்டுப்பாடு தவிர்க்க முடியாதவாறு பணவீக்கத்திற்கு இட்டுச் செல்கிறது. பொருளாதாரத்தைத் தூண்டுவதைக் காட்டிலும், பொருளாதார வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்பட்டாலும், கட்டுப்பாடு பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாது. ஏகபோகக் கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்ட முதலாளித்துவப் பொருளாதாரத்தில் சில கூறுகளின் குறைவு வெளிப்படுகிற போதெல்லாம், பணவீக்கத்தை நோக்கிய வெல்வதற்கரிய இயல்புகள், உற்பத்தியின் சில கூறுகளின் குறைவினால் வெளிப்படுகிற கட்டமைப்பின் ஒரு சீரற்ற தன்மையுடன் இரண்டறக் கலந்தனவாக இருக்கின்றன என்பதால்தான், கட்டுப்பாட்டு முறைகள் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

பெயரளவிலான கூலி உயர்வு-(உழைப்பின் உற்பத்தித் திறனைக் காட்டிலும் மெதுவாக அது உயர்ந்த போதிலும்). இந்த உயர்வை நுகர்வோர் மீது சுமத்துவதற்கு ஏதாவது வழிகள் இருக்குமானால், பல சமயங்களில் பணவீக்கம் வளர்வதற்கு உதவுவதாக இருக்கும் (சொல்லப் போனால், அது கூலியை மட்டும் குறிக்காமல், செலவு செய்யப்படும் அனைத்து இனங்களையும் குறிக்கும்). அத்தகைய வாய்ப்பானது குறைவான அளிப்பையுடைய எல்லா உற்பத்திப் பொருட்களுக்கும், அல்லது ஏகபோக அந்தஸ்துடைய நிறுவனங்களினால் உற்பத்தி செய்யப்பட்டுக் கிடைக்கக்கூடிய பொருட்களுக்கும், கோட்பாட்டளவில் சார்புடையதாய் இருக்கிறது. எனவே விலைகளை உயரச் செய்வதற்குப் புறவய வாய்ப்புகள் ஏதும் இல்லையென்றால் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியால் நிர்ணயிக்கப்படுகிற வரம்புகளுக்குள் செயல்படுகிற பெயரளவிலான கூலி உயர்வை நோக்கிய இயல்பு பணவீக்கத்தின் செல்வாக்கைத் தோற்றுவிக்க முடியாது. இந்த இயல்பின் மெய்ம்மை பொருளாதாரத்தின் ஏகபோகக் கட்டமைப்புடன் உறவு கொண்டது ஆகும். கூலி உயர்வு

விலையேற்றத்தில் பிரதிபலிக்கிறது என்பதனால், குறிப்பாக ஏகபோகங்களினால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் விலைகளின் ஏற்றத்தில் பிரதிபலிக்கிறது என்பதனால், விலைகள், கூலிகள் ஆகியவற்றின் சுழல் ஏணி இயக்கம் உருவாக்கப்படுகிறது. பொருளின் விலை பெயரளவிலான கூலியின் உயர்வுக்கு ஏற்ப, உயர்வதை அனுமதிக்கிற பொருளாதாரத்தின் ஏகபோகக் கட்டமைப்பு மட்டுமில்லாதிருந்தால், ஒரு முழு வேலை வாய்ப்புக் கொள்கை மட்டுமே பணவீக்கத்தின் வளர்ச்சியைத் தோற்றுவித்திருக்காது.

பூர்ஷ்வா அரசின் எல்லை விரிவாக்கக் கொள்கை மட்டுமே பணவீக்கத்தின் முடிவான காரணமல்ல. ஆனால் பூர்ஷ்வா அரசுதான் வாங்குகிற பொருட்கள் மற்றும் சேவைகளின் உயர்த்தப்பட்ட விலைகளுக்கேற்பத் தன்னுடைய செலவுகளைச் சரிசெய்யும்போது, பணவீக்க நிகழ்ச்சிப் போக்கின் மேற்கொண்ட வளர்ச்சிக் காரணியாக விளங்குகிறது.

இது தொடர்பாக பூர்ஷ்வா அரசு ஏகபோக மூலதனத்தின் பொதுவான நலன்களைப் பாதுகாத்துக் கொண்டே பணவீக்கத்திற்கெதிரானவை என்று அழைக்கப்படுகிற கொள்கைகளைப் பயன்படுத்தும்போது கூடப் பணவீக்கத்தின் இயல்புகளை மேற்கொண்டு வளரச் செய்வதற்குத் துணையாகவே உள்ளது. அதே சமயத்தில் பூர்ஷ்வா அரசு ஏகபோக மூலதனத்திற்குத் தீங்கு விளைவிக்காதிருப்பதற்காகத் தன் செலவுகளைக் குறைக்கிறது. பூர்ஷ்வா அரசின் கொள்கை பணவீக்க நிகழ்ச்சிப் போக்கைப் பேணிக்காக்கவும், விரிவுபடுத்தவும் பரந்த வாய்ப்புகளைத் தோற்றுவிக்கிறது. பொருளாதாரத்தின் ஏகபோகக் கட்டமைப்புடன் இணைந்து வாழும் திறமையினாலும் இந்தக் கட்டமைப்பைக் காப்பாற்றுவதற்காகவும் வளர்ச்சியுறச் செய்வதற்காகவும் ஒரு கருவியாய் இருக்கும் இயல்பினாலும்தான் அது இந்த லட்சியத்தை அடையக் கூடியதாய் இருக்கிறது.

1970களில் பணவீக்கத்தின் வளர்ச்சியில் மிக முக்கியமான பங்கு வகித்த அளிப்பு மற்றும் தேவையின் ஏறுமாறான தன்மையைப் பற்றிய பிரச்சினையை விவரமாக எடுத்துரைக்க விரும்புகிறேன். முதன் முதலாக அது ஆற்றல் வகை துறைகள் மூலப் பொருட்கள் ஆகியவற்றின் அளிப்பின் குறைவாகும். அது அதற்கு ஒத்திசைவாக நெருக்கடி படீரென வெடிப்பதற்கு வழி செய்கிறது. இது எல்லாம் உண்மையின் ஒரு பகுதிதான் என்று நான் கருதுகிறேன். 1970 களின் தொடக்கத்தில், எண்ணெய் மூலப்பொருட்கள், உணவுப் பொருட்கள் ஆகியவற்றின் விலைகளில் மிக அதிகமான உயர்வு, வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடு களில் எழுகிற உலகப் பொருளாதாரத்தின் பணவீக்கப் போக்குகளுக்கு எதிராக ஒரு சில வளரும் நாடுகள் மேற் கொண்ட நடவடிக்கைகளினால் தான் என்று கூறுகிற ஆராய்ச்சியின் முடிவை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. உண்மையில் இம்மாதிரியான நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கான புறவய வாய்ப்பு வளர்ந்த முதலாளித்துவ நாடுகளின் பொருளாதார வளர்ச்சியின் மெய்யான போக்கினால் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. அளிப்பைக் காட்டிலும் தேவை படிப்படியாக உயர்வதற்கு வழி செய்த விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் வேகமான வளர்ச்சியின் விளைவாகத் தோன்றிய ஆற்றல் மற்றும் மூலப்பொருட்களின் நுகர்வு விகிதத்தில் ஏற்பட்ட மிகுதியான உயர்வு இல்லாதிருந்தால், எண்ணெய் உற்பத்தி செய்யும் வளரும் நாடுகளின் பதில் நடவடிக்கைகள்— அதாவது வளர்ந்த முதலாளித்துவ நாடுகளில் பணவீக்கத் திற்கு மிகுதியான தூண்டுதலைத் தந்த நடவடிக்கைகள் எடுப்பதற்கு வாய்ப்புகளே இல்லாமல் போயிருக்கும்.

விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் வளர்ச்சி யினால் தோற்றுவிக்கப்பட்ட உற்பத்தி சக்திகள், உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கு ஆகியவை மிகுதியான சமுதாயத் தன்மை பெற்றது, முதலாளித்துவப் பொருளாதாரத்தை மேற்கொண்ட செயலூக்கம் மிகுந்ததாக ஆக்கியுள்ளது.

இந்தச் சூழ்நிலைகளில் இன்றைய அரசு ஏகபோகக் கட்டுப்பாட்டின் குறுகிய ஒரு சார்பான இயல்பு மேலும், மேலும் தெளிவாகிறது.

சமூக மறு உற்பத்தியினுடைய எல்லா உள்ளடக்கக் கூறுகளிலுமாக, அதன் போக்கு பற்றிய முன்னறிவும், அதன் மீது செலுத்த வேண்டிய கட்டுப்பாடும் மேலும், மேலும் தேவையாகின்றன. இந்த அணுகுமுறைதான் அளிப்பிலும், தேவையிலும் உள்ள ஏறுமாறான நிலையை அறிந்து அவைகளைச் சரியான நேரத்தில் தடுக்க உதவும்.

இது தொடர்பாக நான் விளக்கிக் கூற விரும்பும் மூன்றாவது பிரிவுப் பிரச்சினைகள் முதலாளித்துவ உற்பத்தி உறவுகளின் வளர்ச்சியின் மீது, உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியினுள் மேற்கொண்ட பண்பியல் அடிப்படையிலான மாற்றமாக விளங்கும் விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் தாக்கம் பற்றியதாகும்.

தொழிற்புரட்சி அவைகளுக்கு இசைவானதாக இருந்த ஒரு தொழில் நுட்ப அடிப்படையின் மீது உற்பத்தி உறவுகளை வைத்து மூலதனத்தைப் "படைத்தது." விஞ்ஞான அறிவின் திறமை மூலதனத்தின் இயல்பான தன்மைகள் அல்லது இயல்புகளின் உருவத்தைப் பெற்றது. (மிகவும் துல்லியமாகச் சொன்னால் நிலையான மூலதனம்) ஆனால் உயிருள்ள கூலிக்கமர்த்தப்பட்ட தொழிலாளியோ மூலதனத்தின் துணை உறுப்பாக மாறினான். விஞ்ஞானத்தின் கண்கூடான உருவமாக விளங்கிய இந்த மூலதனமும், அதன் மறுதலையும்தான், விஞ்ஞான அறிவைப் பெறவேண்டிய அவசியத்திலிருந்து ஒப்பந்தக் கூலியாளனை விடுவிப்பதுதான் மூலதன வளர்ச்சிக்கும், அது சார்ந்த பொருளாதார அமைப்பின் வளர்ச்சிக்கும் சக்திவாய்ந்த ஒரு தூண்டுகோலாக விளங்கின.

உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியில் அடுத்த மாற்றம் (19 வது நூற்றாண்டின் இறுதியிலும், 20 வது நூற்றாண்டின்

தொடக்கத்திலும்) சுதந்திரமான தொழில் மூலதனத்தை ஏகபோக மூலதனமாக மாற்றி, முதலாளித்துவ உற்பத்தி உறவுகள் படிப்படியாக அழிந்தொழிவதற்கான நிகழ்ச்சிப் போக்கிற்கு அடிப்படை அமைத்தது. உற்பத்தியை சமூகத் தன்மை அடையச் செய்யும் புதிய படிநிலை இந்த நிகழ்ச்சிப் போக்கின் அடிப்படையாக விளங்குகிறது. பண்ட உற்பத்திக்குக் கேடுவிளைவிக்கிறது. அதேவேளையில் பண்ட உற்பத்தியின் மேல்கட்டமைப்பாக மூலதனம் விளங்குவதும் படிப்படியாக அழிந்தொழிகிறது. உற்பத்தி சக்திகள் வளர்வதற்கு வளர்ந்து வரும் விஞ்ஞான அறிவின் முக்கியத்துவம் இந்த மிகஉயர்ந்தமட்ட சிறப்புத் திறமையின் வளர்ச்சியில் உள்ளடங்கியதாக உள்ளது. ஏகபோக முதலாளித்துவத்தின் கீழ், உற்பத்தி சக்திகள் வளர்வதற்கு உற்பத்தியில் அனுபவத்தையும், விஞ்ஞான அறிவையும் பயன்படுத்துகிறவர்களும், சுரண்டப்பட்டவர்களும், எண்ணிக்கையில் குறைந்தவர்களும், சிறுகூட்டத்தவர்களும், முதல் கூட்டத்தவர்களுமான கூலித்தொழிலாளர்களினால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களைப் பயன்படுத்துகிற கூலித்தொழிலாளர்களின் எண்ணிக்கையில் பெரிய கூட்டத்தினரைச் சுரண்டுவதற்கு வேண்டியதான முன் தேவைகளைத் தோற்றுவிக்க வேண்டும்.

விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் வளர்ச்சி முதலாளித்துவ உற்பத்தி உறவுகள் சிதைந்து அழிவதில் மற்றும் ஒரு படியாக விளங்குகிறது. உற்பத்தி சக்திகளும், உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கும், மேலும், மேலும் தெளிவான சமூகத்தன்மையை அடைகின்றன. விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் வளர்ச்சியின் பின்வரும் படிநிலைகள் பண்ட உற்பத்தி, முதலாளித்துவ உற்பத்தி உறவுகள் ஆகிய இரண்டும் ஒரே அடியாக ஒழிக்கப்படுவதையே சந்திக்குமே தவிர வெறுமனே அவைகள் சீர்குலைவதைச் சந்திக்காது. சமூகச் செல்வத்தின் வளர்ச்சியானது விஞ்ஞான அறிவை உற்பத்தித்திறன் சார்ந்து பயன்படுத்துவதை ஒட்டியே தொடர்ந்திருக்கும் என்ற உண்மையினாலும், உற்பத்தி

செய்யப்பட்ட சமூகச் செல்வத்தின் பரிமாணம் செலவழிக்கப் பட்ட மனித உழைப்பின் அளவுடன் மேலும், மேலும் பொருத்தமற்றதாகி விடும் என்ற உண்மையினாலும் மதிப்பு என்பது பயன்-மதிப்பை அளக்கும் தன்னுடைய தகுதியினை இழந்து விடுகிறது. மதிப்பு உறவுகள் தீர்ந்து போய் விடுவதனால் உற்பத்தியின் முதலாளித்துவ உறவுகள் முடிவில் மறைந்தே போய் விடும். எனினும் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் வளர்ச்சி முதலாளித்துவம் தானே மறைந்து விடுவதற்கு வழி செய்யாது. முதலாளித்துவத்தை ஒழிப்பதற்கான புறவயமான சூழ்நிலையை மட்டுமே அது உண்டாக்குகிறது. முதலாளித்துவத்தை ஒழிப்பதற்குத் தொழிலாளி வர்க்கம் இந்தப் புறவயமான சூழ்நிலையைப் பயன்படுத்த அது உதவுகிறது.

அதனுடைய தொடக்க நிலையிலேயே உள்ள இன்றைய விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் படிநிலையை, அதன் மேற் கொண்ட வளர்ச்சியின் படிநிலையிலிருந்து வேறுபடுத்திக் காண்பது, இன்றியமையாதது ஆகும். முதலாளித்துவப் பொருளாதாரம், இன்றைய நிலைக்கு ஒருவேளை தன்னைத்தானே தகவமைத்துக் கொள்ளக் கூடியதாக இருப்பினும், விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் மேற்கொண்ட வளர்ச்சி, முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி தீவிரமடைவதுடன் இன்றியமையாத முறையில் தொடர்புடையதாகவுள்ளது.

கட்டமைப்பு நெருக்கடிகளுடனும் (ஆற்றல், மூலப்பொருள் முதலியவை), சர்வதேசப் பொருளாதார உறவுகளின் நெருக்கடியுடனும், வேகமான நீடித்த பணவீக்கத்துடனும், வேலையில்லாத் திண்டாட்டத்துடனும் பின்னிக்கொண்டு முன்னென்றுமறியாத அளவு ஏற்பட்ட சுழல் தன்மையான பொருளாதார நெருக்கடியில் வெளிப் பட்டுத் தோன்றிய முதலாளித்துவத்தின் பொதுவான உறுதியற்ற தன்மையினை விஞ்ஞான-தொழில் நுட்பப்

புரட்சி நிர்ணயிக்கிறது. முதலில் கூறிய நெருக்கடிகள் யாவும் முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் இன்றைய படிநிலையின் ஒரு புது நிலையின் ஆரம்பத்தைப் பிரதிபலிக்கின்றன.

விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சி வளர்ந்த முதலாளித்துவ நாடுகளில் 1950களில் தொடங்கியது. சொல்லப் போனால் வளர்ந்த முதலாளித்துவப் பொருளாதாரம் இரண்டு பெரும் கால இடைவெளிகளைக் கண்டிருக்கிறது. முதலாவது காலக்கூறில்-1950 களிலிருந்து 1960 கள் முடிய உள்ள காலத்தில் முதலாளித்துவ உற்பத்தி உறவுகளின் கட்டமைப்பிற்குள் அரசு ஏகபோக முதலாளித்துவத்தின் நிறுவன வாதிகளின் வரம்புகள் ஒப்பீட்டில் வேகமான தொடர்ச்சியான விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கு இன்னும் நெகிழ்ச்சியுடையதாகவேயிருந்தன. அந்த வேளையில் 1960களின் பின்பகுதியிலிருந்து வரும் காலமானது விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் கீழே மேற் கொண்ட முதலாளித்துவப் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்காக அரசு-ஏகபோகக் கட்டுப்பாடு சூட்சுமத்தில் குறிப்பிட்ட அளவு மாற்றங்கள் இருக்க வேண்டுமென்ற உண்மையை விளக்குவதில் சிறப்புற்று விளங்குகிறது.

**சாம். ஆரோ நோவிச்**

*பிரிட்டிஷ் பொருளாதார நிபுணர்.*

## முதலாளித்துவத்தின் கீழ் விஞ்ஞான – தொழில் நுட்பப் புரட்சி பற்றிய ஆராய்ச்சியின் சில செய்முறைநூல் கூறுகள்

விவாதத்தின் போக்கில் எழுப்பப்பட்ட சில பிரச்சினைகள் பற்றியும், என்னுடைய ஆராய்ச்சியுடன் தொடர்புடைய விஷயங்கள் பற்றியும் நான் இங்கு சிலவற்றைக் கூறவிரும்புகிறேன். நான் பேராசிரியர் நிகிட்டின் அவர்களுடைய சொற்பொழிவை மிகவும் ரசித்தேன். ஏனெனில், அவர் எழுப்பிய பிரச்சினைகளில் சில இங்கே நான் பேசவிரும்புகிற விஷயங்களுடன் ஒத்திசைவானதாகவுள்ளன. அனைத்திற்கும் மேலாக என்னை மிகுந்த கவலைக்குள்ளாக்குகிற பொதுவான செய்முறை நூல் விஷயம் பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். நாம் முந்திய முறை கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டபோது, மாறா மரபு ஏற்புக் கோட்பாடு என்று நான் அழைக்க விரும்புகிற, வேறு வார்த்தைகளில் கூறினால், உற்பத்தி சக்திகளை சமுதாயத்தின் செயலூக்கம் நிறைந்த சக்தியாகக் கருதுகிற ஒரு இயல்பு இருந்தது. இந்தக் கூற்று பெரும்பாலான சமயங்களில் இயந்திரவியலாக - உப்புச்சப்பின்றி விளக்கிக் கூறப்படுகிறது. அதை நிரூபிக்கப் பல பேச்சாளர்கள் முன் வைக்கிற உண்மையான விஷயங்கள் வேறுவகையான

முறையில் விளக்கிக் கூறப்படவேண்டும். குறிப்பிட்ட நிகழ்ச்சிபற்றி நாம் ஆராயத் தொடங்கியவுடன், வெளியிலிருந்து உற்பத்தி அமைப்பு முறைக்குள் நுழைந்து விட்டதும் குறிப்பிட்ட பல்வேறு நாடுகளினுடைய சமூக—அரசியல் கலாச்சார மட்டங்களைச் சாராததாகவும் உள்ள ஒரு சக்தியாக விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியைக் கருதுவது முடியாததாகி விடுகிறது. சம்பந்தப்பட்ட பல்வேறு நாடுகளின் சமூக, அரசியல், கலாச்சார மட்டங்களும் கூட விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் முன்னேற்றத்தைத் தூண்டுகின்ற காரணிகளாகவோ அல்லது பின்தள்ளும் காரணிகளாகவோ விளங்குகின்றன. ஆகவே நாம் முதலாளித்துவத்தின் கீழாக விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியினை உற்பத்தி விலையைக் குறைப்பதற்கும், சந்தைகளைப் பிடிப்பதற்கும் முதலாளித்துவம் கொண்டுள்ள விருப்பத்தின் விளைவே எனக் கருதவேண்டும்.

விஞ்ஞான-தொழில் நுட்பத்தின் முன்னேற்றம் (முதலாளித்துவ அமைப்பின் கட்டுக் கோப்புக்குள்) முதலாளித்துவ உற்பத்தி உறவுகளால் தோற்றுவிக்கப்பட்டது எனக் கருதவேண்டும். தொழில் நுட்ப முன்னேற்றங்களையும, கண்டுபிடிப்புகளையும், புதியனவற்றையும் தோற்றுவித்துப் பயன்படுத்தும் ஒரு தன்னாட்சி நிகழ்ச்சிப் போக்காகக் கருதக்கூடாது. இத்தகைய அணுகுமுறை மிக அதிகமாக ஒரு சார்புள்ள அணுகுமுறையாகவே இருக்கும். இன்று அமெரிக்கர்கள் ஏன் விஞ்ஞானத்திலும், தொழில் நுட்பத்திலும் முன்னணியில் நிற்கிறார்கள் என அறிந்து கொள்ள வேண்டுமானால் அண்மைக் காலத்திய இரண்டு உலகப் போர்களையும் கருத்தில் கொள்ள வேண்டும். அவை உண்மையில் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் விளைவாகத் தோற்றுவிக்கப்படவில்லை என்பதையும், முதலாளித்துவத்தின் ஆழ்ந்த பகுதிகளில் வளர்கின்ற முரண்பாடுகளால்தான் அவைகள் தோற்றுவிக்கப்பட்டன என்பதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். போருக்குப்

பிந்திய காலத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகள்தான் இந்தத் துறையில் தலைமை நிலை வகிக்கிறது என்றாலும் முதலாளித்துவ நாடுகளில் சாதிக்கப்பட்ட உற்பத்தியின் வேகத்தையும், மட்டத்தையும் சமனப்படுத்தும் நிகழ்ச்சிப் போக்கு ஒன்று இருந்து வந்திருக்கிறது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். மேலும், மேலும் அதிகமான முதலாளித்துவ நாடுகள், அமெரிக்க ஐக்கிய நாடுகள் அடைந்துள்ள மட்டத்தைக் கிட்டத்தட்ட அடைந்துவிட்டன. இது விஞ்ஞான-தொழில் நுட்ப வளர்ச்சியின் வருங்கால முன்னேற்றத்தின் வேகத்துடன் தொடர்புடைய பல கேள்வி களை எழுப்புகிறது.

அல்லது வெறொரு செய்முறை நூல் பிரச்சினையை எடுத்துக் கொள்வோம். தொழில் நுட்ப நியதிவாதம் என்னுடைய கருத்தில் தொழிற்சாலைகளில் நிகழ்கின்ற கட்டமைப்பு மாற்றங்களைப் பற்றிப் படித்தறிய விரும்பும் போது அபாயகரமான ஒரு விஷயமாகும். மூலதனம் ஓரிடத்தில் குவிவதன் வளர்ச்சி விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியினால் மட்டுமேதான் நிகழ்கிறது எனக் கூறிவிட முடியாது. இவ்வாறு ஓரிடத்தில் குவிவதை முதலாளித்துவத்தின் முரண்பாடுகளின் தொகுதியின் முழுமையையும் கருத்தில் கொண்டு பார்த்தால் மட்டுமே புரிந்து கொள்ள முடியும். தொழில் நுட்ப மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டு மட்டுமே பார்த்தால் அதற்கு நாம் சரியான விளக்கம் ஒன்றைப் பெறமுடியாது. உதாரணமாக கிரேட்பிரிட்டனில் உள்ள தொழிற்சாலை களின் அளவை மட்டும் கருத்தில் கொண்டு பார்த்தால் சென்ற 60 ஆண்டுகளாக 100 மிகப் பெரும் தொழிற்சாலை களின் பங்கு சிறிதுகூட மாறவில்லை என்பதைக் காண முடியும். (அதே வேளையில் பெரிய நிறுவனங்களின் பங்கு மிக அதிகமாக மாறியிருக்கிறது என்பதையும் காணமுடியும்.) நாம் வேறு சில மாற்றங்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும்—உதாரணமாக அமைப்புமுறை மாற்றங் களும் தகவல் மற்றும் செய்தித்தொடர்பு, போக்குவரத்து

ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்களும் (பன்னாட்டு இணையங்களைத் தோற்றுவிப்பதையும் இன்னும் இது போன்றவற்றையும் கைகூடும் செயலாக ஆக்கக் கூடியவை) பற்றி கவனம் வைத்திருக்க வேண்டும். தொழில் நுட்பத் துறையும் தொழில் யுக்திகளும், தொழில் நுட்ப மாற்றங்களின் மீது உற்பத்தி உறவுகளின் விளைவுகளுக்கு மற்றொரு உதாரணத்தைத் தந்துதவுகின்றன. 1950களிலும், 1960 களிலும் மேற்கு ஜெர்மனி, ஜப்பான் ஆகிய நாடுகளைக் காட்டிலும் பிரிட்டன் ஆராய்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் அதிகமான பணம் செலவு செய்தது. ஆனால் இந்த நிதியில் பெரும்பகுதி விமானத் தொழிலில் குவிக்கப் பட்டிருந்தது என்பதையும், அவைகளில் பெரும் பகுதி இராணுவச் செலவிற்கென ஒதுக்கப்பட்டிருந்தது என்பதையும், நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஆகவே அரசின் நிதி உவியால் மேற் கொள்ளப் பட்ட ஆராய்ச்சி ஏறத்தாழ அமெரிக்க ஐக்கிய நாடுகளில் நடை பெற்றதைப் போலவேதான் இருந்தது. அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும், கிரேட் பிரிட்டனிலும், உற்பத்தித் திறனின் வளர்ச்சி மிகவும் குறைவான விகிதத்திலேயே வளர்வதற்கு அந்த நாடுகளில் ஆராய்ச்சியும், மேம்பாடும் செல்கின்ற திசை வழிதான் காரணம் என்பது தற்செயலான நிகழ்ச்சியல்ல என அறிந்து கொள்ள முடியும்.

விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி தொடர்பான விவாதங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக உள்ள "உலகளாவிய" கண்ணோட்டம் ஒரு குறிப்பிட்ட அளவு அபாயத்தை உள்ளடக்கியுள்ளது. நாம் தொழில் நுட்ப மாற்றங்களையும், ஆராய்ச்சி மற்றும மேம்பாட்டின் இயல்புகளையும் ஆராயும்போது குறிப்பிட்ட தனிச் சிறப்பான தொழிற்சாலைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும். உதாரணமாக இரசாயனத் தொழிலிலும், கனரகப் பொறியியல் தொழிலிலும், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிதிகளின் பெரும் பகுதியானது உற்பத்தியின் குறைவான

செலவுகளுக்கு ஒதுக்கப்படுகிறது. நுகர்வோர் பொருள் துறையில் திட்டவடிவமைப்பு, வடிவமைப்பு ஆகியவற்றை விடப் புதியன புகுத்துதல் என்பது குறைந்த முக்கியத்துவமே உடையதாக விளங்குகிறது. பொருளாதாரத்தின் பல்வேறு கிளைகளில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு என்ன நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்று பேராசிரியர் நிகிட்டின் அவர்கள் எழுப்பிய பிரச்சினைகளுக்கு உரிய தீர்வை இந்தக் காரணிகளுக்கு நாம் செலுத்தும் கவனம் நமக்குத் தந்துதவுப.

1970 களில் வளர்ச்சியுற்ற சூழ்நிலை பற்றி நான் ஒருசில வார்த்தைகள் கூறவிரும்புகிறேன். 1950களிலும் 1960 களிலும் இருந்த முக்கியமான காரணிகளில் ஒன்று சிக்கனத்திற்கான இயக்கமாகும். ஆனால் பல காரணங் களினால் உற்பத்திச் செலவைக் குறைப்பதன் நடைமுறை விளைவுகள் 1970 களில்தான் வெளிப்பட்டன. உதாரணமாக உழைப்பின் விலை மிகுதியாகக் குறைக்கப்பட்டது. 1970 களின் மற்றொரு முக்கியமான இயல்பு பல தொழிற்சாலை களின் அளவிற்கதிகமான திறன் நிறைந்திருந்ததேயாகும். முதலாளித்துவ உலகில் உள்ள பல்வேறு தொழிற்சாலை களின் கிளைகளின் இலாபமட்டம் தொடர்பான பிரச்சினை பற்றி நாம் இன்னும் வாதிக்கவில்லை. எவ்வாறாயினும் எல்லா இடங்களிலும் இலாபத்தின் மட்டம் உயர்ந்து தான் வருகிறது. அதைப்பற்றி அதிகம் பேசாமலேயே ஒத்துக் கொண்டுள்ளோம். இலாபத்தின் மட்டத்தைப்பற்றி அவர்கள் இதுவரை காட்டிவருகிற ஆர்வத்தைக் காட்டிலும் மிகுதியான ஆர்வத்தை சில மார்க்சீய பொருளாதார நிபுணர்கள் காட்டி, அந்தக் கருத்துருவை மிகவும் துல்லியமாக வரையறை செய்து அளப்பதற்கு ஒருயுக்தியைப் பற்றி அறிய முயன்றால் அதுமிகவும் ஏற்றதாக இருக்குமென நான் நினைக்கிறேன். இது பிரிட்டனில் நடைபெறும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கும், வேறு பல நாடுகளின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கும் மிக இன்றியமையாதது ஆகும்.

1970 களில் மிகுதியான திறமையில் குறிப்பிடத்தகுந்த அளவு உயர்ந்து இருந்தது. சில நிறுவனங்கள் தங்களுடைய களத்தில் போட்டி ஊடுருவாதவாறு தடைகளாக இருக்கக் கூடிய இந்த விஷயங்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டு விலைகளை நிர்ணயிப்பதன் மூலம் இதைத் தனிச் சிறப்பாகத் திட்டமிட்டிருக்கக் கூடும். ஆனால் இது பொருளாதார வளர்ச்சியைக் குறைக்கும். அதன் மூலம் விலைகளின் மீதும், இலாபங்களின் மட்டத்தின் மீதும் ஒரு நெருக்கடியைத் தோற்றுவிக்கும். இவைகள் முதலீடுகளைக் குறைப்பதுடன் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கான நிதி ஒதுக்கீட்டின் குறைவுக்கும் வழி செய்து விடும். எவ்வாறாயினும், இதுதான் பிரிட்டனில் நடந்து கொண் டிருப்பதாகும். ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு வளர்ச்சியின் வேகம் குறைதலும், கட்டுமானத்தில் முதலீடு குறைதலும் பொருளாதாரக் கூட்டுறவு மற்றும் வளர்ச்சிக்கான அமைப்பு நாடுகள் எல்லாவற்றுக்கும் பொதுவானவையாக உள்ளன. முதலாளித்துவ நாடுகளில் தோன்றியுள்ள நடப்பு விஷயங்களின் முக்கியமான பகுதியாக விளங்குவது வேலையில்லாத் திண்டாட்டமே ஆகும். இந்த நிலையை எதிர்நோக்குகிற ஏகபோகங்கள் பணவீக்கங்கள் மூலம் உயர்ந்தமட்ட இலாபங்களைப் பெற முயல்கின்றன. ஆனால் அவைகள் அவ்வாறு செய்யும் பொழுது வர்க்கப்போராட்டம் தீவிரமடைவதையும், சர்வதேசப் போட்டி தீவிரமடைவதை யும் எதிர்நோக்க வேண்டியதிருக்கிறது.

இந்தச் சமயத்தில் நுண்ணியல் முறை உருவாக்கங்களின் உற்பத்தியில் ஒரு பெரும் உயர்வு ஏற்பட்டிருப்பதைக் கருத்தில் கொண்டாக வேண்டும். ஏகபோகங்கள், முதலாளித்துவ முறை உற்பத்தியை மிகுதியாக்குவதற்கும், உற்பத்திச் செலவைக் குறைப்பதற்கும், அவைகளைப் பயன் படுத்துகின்றன. நிலையான மூலதனத்திலும், உழைக்கும் நேரத்திலும்தான் சிக்கனம் வேண்டும் என்பது அவை களுக்குத் தெரியும். எனவே வேலையில்லாத் திண்டாட்டமும் தொழில்நுட்பச் சிக்கனமும் ஒன்றுடன் ஒன்று நெருக்கமாகப்

பிணைக்கப்பட்டவை. அதன் விளைவாகப் பல முதலாளித்துவ நாடுகளில் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி பெருமளவு வர்க்க முரண்பாடுகளையும் அதன் அடிப்படையில் வர்க்கப் போராட்டம் எவ்வளவு தீவிரமாக உள்ளது என்பதையும் தான் சார்ந்திருக்கும். இந்தக் காரணிகள் அனைத்தும் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் பிரச்சினைகள் மீது மிகுந்த செல்வாக்குடையன வாகவுள்ளன. விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றங்கள் எவ்வளவு விரைவாகப் பரவுகிறது என்பதே மற்றொரு காரணியாகும்.

முடிவாக, மீண்டும் ஒருமுறை செய்முறைநூல் பிரச்சினைகள் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். தொழில் நுட்பத்தை வெளியிலிருந்து உற்பத்தி உறவுகளின் அமைப்புக்குள் நுழைந்துவிட்ட ஒரு சக்தியாகக் கருதக் கூடாது. தானாகவே மக்களது அரசியல் உணர்வில் பிரதிபலிக்காத விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி வளர்ச்சியின் ஓர் ஊழ்வலிக் கண்ணோட்டம் கொண்டிருக்கக் கூடாது. இங்கே முதலாளித்துவ சமுதாயத்தின் வளர்ச்சியில் பல முரண்பட்ட விஷயங்களை நாம் எதிர் நோக்குகிறோம்.

**பேராசிரியர். ஜாக்குவெஸ் நாஜெல்ஸ்**

*கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக்கமிட்டி உறுப்பினர், பெல்ஜியம் மற்றும் மார்க்சீய பொருளாதாரக் குழுவின் தலைவர்.*

**க்ளாடின் சைப்ரஸ்**

*உறுப்பினர், மார்க்சீய பொருளாதாரக்குழு. உதவி ஆராய்ச்சியாளர், சமூகவியல் நிறுவனத்தின் திட்டமிடல் மற்றும் மேம்பாடு பற்றிய ஆராய்ச்சி மையம், பெல்ஜியம்.*

## நெருக்கடி நிலைகளில் ஐரோப்பிய பூர்ஷ்வாக் களின் பொருளாதார சமூகக் கொள்கைகளும், அரசியல் மறுசீரமைப்பு செய்தலும்,ஏகபோக ‘‘சிக்கனமும்’’ வீணாக்குதலும் — ஒன்றிணைந்த பன்னாட்டுச் செயல்முறையின் வளர்ந்துவரும் முக்கியத்துவமும்.

எங்களுடைய இந்த ஆராய்ச்சிக் கட்டுரையின் முதல் பகுதியில் சிலரது ஏகபோகச் சந்தையினால் கொண்டு வரப்பட்ட மாற்றங்களின் செல்வாக்கை — குறிப்பாக ஐரோப்பியத் தொழிற்சாலைமீது, புதிய சர்வதேச வேலைப் பகுப்பினால் ஏற்பட்ட செல்வாக்கைப்பற்றி ஆராய் கிறோம்.

(அ) இரண்டாவது பகுதியில் கூலிக்கமர்த்தப்பட்ட உழைப்பின் நெருக்கடியின் விளைவுகளையும், இலாபங்

களின் மீது அது செலுத்தும் செல்வாக்கின் விளைவுகளையும் நாம் விளக்கிக் காட்டுகிறோம். (ஆ) அதே வேளையில், முரண்பாடாக, கூலியைக் குறைத்த போதிலும், பூர்ஷ்வாக்கள் மிக அதிகமான அளவு வகைதொகைகளை வீணாக்குகிறார்கள் என்பதும் இரண்டாவது பகுதியில் விளக்கப்படுகிறது.

மூன்றாவது பகுதியில், ஒன்றிணைந்த பன்னாட்டுச் செயல் முறைகளின் வளர்ந்துவரும் பங்கு பற்றிக் கூறப்படுகிறது. (இ) பொதுவாக இதில் எம். எம். மாக்சிமோவா அவர்கள் **'முதலாளித்துவப் பொருளாதாரத்தின் அடிப்படைப் பிரச்சினைகள்'** (மாஸ்கோ 1974) என்ற அவருடைய நூலில் பின் பற்றிய பகுப்பாய்வு முறையை மிக அண்மைக் காலத்தையும் உள்ளடக்கும் வகையில் அதை முன்னுக்குக் கொண்டு வந்து பின் பற்றியிருக்கிறோம்.

ரோம் உடன்பாட்டின்[1] அடிப்படையில் அமைக்கப்பட்ட பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும், தேசத்திற்கும் மேலான நிறுவனங்களிடையே சங்கிலிப் பிணைப்பாகப் பயன்படுகிற ஒன்றிணைந்த பன்னாட்டுச் செயல்முறையின் அடித்தளத்தில் தனியார் ஏகபோக சர்வதேசத் தன்மையடைவதுநிலவுகிறது. நாங்கள் இங்கே மிகப் பெருமளவு இரும்பு மற்றும் எஃகு உற்பத்திப் பகுதிக்கு எங்கள் கவனத்தைச் செலுத்தியிருக்கிறோம் (இ[1]), ஆனாலும் நாங்கள் பிற தொழில்களின் மீதும் எங்கள் கவனத்தைச் செலுத்தியிருக்கிறோம்.

## அ. பொருளாதாரத்தை மறுசீரமைத்தலும், புதிய சர்வதேசப் பொருளாதார ஒழுங்கமைப்பும்.

முதலாளித்துவ அமைப்பு முறையைப் பாதிக்கும் நெருக்கடி ஒரு கட்டமைப்பு நெருக்கடி என்பதைப் பெருந் தொழில் முதலாளிகள் அறிந்து கொள்வதற்குக் காலதாமதம் ஆயிற்று என்றாலும், அவர்கள் மேற்கொண்ட தேவையான நடவடிக்கைகளைத் தேவையான விரைவுடனேயே

நிறைவேற்றினர். எனினும் அவைகளின் செல்வாக்கைப் பற்றிய ஒரு துல்லியமான மதிப்பீடு-மிக அண்மைக் காலத்துப் புள்ளி விவரங்கள், குறிப்பாக தேசிய வரவு செலவுக் கணக்குகளைப் பற்றிய புள்ளி விவரங்கள் மிகக் குறைவாக இருப்பதால் — எப்பொழுதுமே இயலாததாகவுள்ளது.[3] எனவே பல சமயங்களில் நாம் முழுமை பெறாத புள்ளி விவரங்களைக் கொண்டு மனநிறைவு பெறவேண்டியதிருக்கிறது.

பொருளாதாரத்தை மறுசீரமைப்பது என்பது புதிய சர்வதேச வேலைப்பகுப்பின் விளைவு என்பதனாலும், அதிலிருந்து வருகிற பொருளாதார ஒழுங்கமைப்பின் விளைவு என்பதனாலும் இந்தக்கருத்தைப் பரிசீலித்துப் பார்ப்பதுடன் நாம் தொடங்குகிறோம். அதன் பிறகு ஐரோப்பாவில் பொருளாதார - சமூக மறுகட்டமைப்பு செய்வதன் விளைவுகளை நிர்ணயிக்க முயல்வோம். நிகழ்ந்துள்ள மாற்றங்கள் ஐரோப்பாவில் உள்ள ஒரு சிறுபான்மையினரின் நலனுக்காகத்தான் என்றும் அது மக்கள் தொகையின் பெரும்பாலானவர்களின் நலன்களுக்கு விரோதமானது என்றும் நாம் எடுத்துக் காட்டுவோம்.

நாம் சர்வதேச வேலைப்பகுப்பின் பரிணாம வளர்ச்சியில் மூன்று படிநிலைகளைக் குறிப்பிடுகிறோம்.

முதல் படிநிலையில் முக்கியமாக ஆளும் நாடுகளுக்குக் காலனி நாடுகளிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டவைகள் விவசாயப் பொருட்களும், கனிப்பொருட்களும் ஆகும். இது கைவினைப் பொருள், வேறு தலத் தொழில்களிலும் சுருக்கத்தை உண்டாக்கியது. இதன் காரணம் தயார்நிலைப் பொருட்களில் ஏற்பட்ட வெளிநாட்டுப் போட்டியாகும்.

இரண்டாவது படிநிலையில் வளரும் நாடுகள் பல தங்களுடைய சொந்தமான தலத்தொழில்களைப் படைக்கவும், சுங்கத்தடைகளை விதித்து அவைகளைக் காத்துக் கொள்ளவும் முயன்றன. இந்த இரண்டாவது படிநிலை

யானது பல வளரும் நாடுகளின் அரசியல் சுதந்தரத்தைத் தொடர்ந்தது. முன்னர் இறக்குமதி செய்யப்பட்ட பொருட் களை இந்தத் தொழில்கள் படைக்கவேண்டுமெனக் கருதப் பட்டது. பெரும்பாலான சமயங்களில் இந்தத் தந்திரம் பயனற்றதாகப் போனது. சிறிய சந்தைகளுடனும், அந்தப் பகுதிகளுக்கு ஏற்காத தொழில் நுட்பங்களின் பயன் பாட்டுடனும் இந்தத் தொழிற்சாலைகள் போட்டிக்குரியவை களாகவே இல்லை. எனினும் சில நாடுகள் மூலப்பொருட் களின் குறைவின் விளைவாகவும், அரசியல் காரணிகளின் விளைவாகவும், தங்களுடைய தயார் நிலைப் பொருட்களை வெளி நாடுகளில் விற்பனை செய்வதில் வெற்றி பெற்றன. இந்த நாடுகளில் இஸ்ரேல், ஹாங்காங், தைவான், தென் கொரியா, யூகோஸ்லாவியா, பிரேசில் ஆகியவை அடங்கும்.

1955 இல் புதிய பொருளாதார ஒழுங்கமைப்பு என்ற பெயர் கொண்ட மூன்றாவது படிநிலை தொடங்கியது. வளரும் நாடுகள் ஒன்று சேர்ந்து அணி சேராக் கொள்கை பற்றி விவரிக்கவும், பல்வேறு சர்வதேச அமைப்புகளின் கட்டுக் கோப்புக்குள்ளாக சர்வதேசப் பொருளாதார ஒழுங்கமைப்பை மறுசீரமைப்பதற்கான அடித்தளமிடவும் தொடங்கின. பெட்ரோலியம் ஏற்றுமதி செய்கின்ற நாடு களினுடைய அமைப்புத்தான் சமமற்ற வளர்ச்சியை எதிர்ப்பதற்கு வளரும் நாடுகளை அனுமதித்த புதிய ஒழுங்கமைப்பை நிறுவி, 1973-1974இல் சர்வதேச எண்ணெய் வியாபாரத்தில் உருவாகியிருந்த நிலையை முதன் முதலாக மீறியவையாகும். ஆற்றல், மூலப்பொருள் ஆகியவற்றிற்கான அதிகத் தேவைகளும், விலை ஏற்றங்களின் விளைவுத்திறனை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தும் நிலையும் நிலவுகின்ற சூழலில் வளர்ந்த முதலாளித்துவ நாடுகளானவை புதிய பொருளாதார ஒழுங்கை நிறுவுவதற்கான அவற்றின் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள வேண்டியது தவிர்க்க முடியாதது ஆயிற்று. அதே வேளையில் முதலாளித்துவ நாடுகளில் கட்டமைப்பு நெருக்கடி பெருகியது. மூலதனத் திரட்சியின் கட்டமைப்பை மாற்ற வேண்டியது

இன்றியமையாததாயிருந்தது. இவ்வாறாக தொழிலாளிகள் மிகுதியாகத் தேவைப்படுகிற, குறைந்த அளவு தொழில் நுட்பம் மட்டுமே தேவைப்படுகிற உற்பத்தி நிகழ்ச்சிப் போக்குகளைக் கொண்ட பல தொழிற்சாலைகளைக் குறிப்பிட்ட வளரும் நாடுகளுக்கு மாற்றுகிற எண்ணம் தோன்றிற்று.

(ஆனால் நெருக்கடி வளரும் நாடுகளையும் கூட பாதித்தது.)

1965 க்கும் 1973 க்குமிடையில் தொழிற் பொருட்களை உற்பத்தி செய்த வளரும் நாடுகளின் ஏற்றுமதிகள் ஓராண்டிற்குச் சராசரியாக 12.7 சதவிகிதம் உயர்ந்தன. அதே வேளையில் 1974 இல் அதன் வளர்ச்சி 10 சதவிகிதமாக மட்டுமே இருந்தது. 1975 இல் அது மேலும் 0.09 சதவிகிதம் என்று குறைந்தது. 1976 இல் அது மீண்டும் உயர்ந்த போதிலும் வளர்ந்த முதலாளித்துவ நாடுகளுக்கு அது பயமுறுத்தலாகவே இருந்தது. அந்த நாடுகளிலிருந்த பன்னாட்டு நிறுவனங்களே அந்த வேதனையை உணராமலிருந்தன. உண்மையில் வளர்ந்த முதலாளித்துவ நாடுகளுக்கும், வளரும் நாடுகளுக்குமிடையில் உறவுகளின் மீது செல்வாக்கு கொண்ட நிகழக் கூடிய நான்குபோக்குகள் உள்ளன.

முதல் கருதுகோளின் அடிப்படையில் வளரும் நாடுகள் அடிப்படைப் பொருட்களின் வாணிபத்தை விரிவாக்கம் செய்யும். முக்கியமாக இயந்திரங்கள், பிற சாதனங்கள், வழக்கமாகப் பயன்படுத்தப்படும் இரசாயன உற்பத்திப் பொருட்கள். எனினும் தொழிற் சிறப்புப்பெற்ற நாடுகளில் நிலவுகிற மிகுதியான உற்பத்திச் செலவும், அவைகளால் கையாளப்படும் தொழில் நுட்பத்தரமும், இந்த அரசுகளுக்கான ஏற்றுமதிக்குப் பெரும்தடையாய் இருக்கும். அதற்கு மாறாக, உண்மையில், அருகில் உள்ள வளரும் நாடுகளில் உள்ள சந்தைகள் எளிதில் இந்தப் பொருட்களை நுகர முடியும்.

1970 லிருந்து வளரும் நாடுகளுக்கிடையில் வாணிபம் மிகுதியாக வளர்ந்து வருகிறது என்ற உண்மைக்குப் புள்ளி விவரங்கள் சான்றாகத் திகழ்கின்றன. இந்தப் போக்கு—குறிப்பாகச் செய்பொருட்கள், மற்றும் இருப்பு அல்லாத பிற உலோகப் பொருட்களினால் சிறப்பு பெறுவதாய் இருக்கிறது. இரசாயனப் பொருட்களையும், இரும்பு தொடர்பான உலோகங்களையும் பொருத்தவரை வளரும் நாடுகளுக்கிடையில் நடைபெறும் வாணிபத்தில் அவற்றின் பங்கு ஓர் உயர்ந்த மட்டத்திலேயே வைக்கப்படுகிறது.

இரண்டாவது போக்கு மூலப்பொருட்களை உற்பத்தி செய்யும் நாடுகள் அந்தப் பொருட்களைப் பதனிடு செய்வதை, ஒன்றிணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அவ்வாறு ஒன்றிணைக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிற தொழில்கள் எண்ணெய் சுத்திகரித்தல், இரும்பு அல்லாத பிற உலோகங்கள், இரும்பு, எஃகு தொழில், மரத்தொழில், உணவுப் பொருள் தொடர்பான தொழில் ஆகியவை.

மூன்றாவது உலக நாடுகளைப் பொருத்த வரையிலான மூன்றாவது போக்கு, மிக அதிகமான உழைப்பு, முதலீடாகத் தேவைப்படும் நுகர்வுப் பொருளுற்பத்தி-அதாவது பஞ்சாலைத் தொழில், தயார் நிலையில் உள்ள ஆடைகள் காலணிகள், பொம்மைகள், தட்டுமுட்டுச் சாமான்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதில் அடங்கும்.

1960 லிருந்து 1977க்குள் வளரும் நாடுகளில் உள்ள செய்பொருள் தொழிலின் மிக அதிகமான செயலூக்கம் மிக்க துறைகளின் உற்பத்தி ஆண்டிற்கு 6.3 சதவிகிதம் உயர்ந்தது. ஆனால் அதே துறைகளில் வளர்ந்த நாடுகளின் உற்பத்தி 4.5 சதவிகிதமாக மட்டுமே இருந்தது.

மிகுதியாகப் பெருகிக் கொண்டே வரும் பதனஞ் செய்யும் தொழில்களின் விளைவானது பன்னாட்டு இணையங்களின் மூலமே செல்கிறது. இது வளரும் நாடுகளிலிருந்து ஏற்றுமதிகளை மிகுதிப்படுத்துவதற்குக்

கையாளப்படக் கூடிய நான்காவது போக்காகக் கருதப் படலாம். பன்னாட்டு இணையங்களானவை தொழிற் சாலைத் தயாரிப்புப் பொருட்களின் உற்பத்தியில் கானாவிலிருந்து 50 சதவிகிதத்தையும், பிரேசிலிலிருந்து 49 சதவிகிதத்தையும், அர்ஜண்டைனாவிலிருந்து 31 சதவிகிதத்தையும், மெக்சிகோவிலிருந்து 27 சதவிகிதத்தை யும், தென்கொரியாவிலிருந்து 11 சதவிகிதத்தையும் விற்பனைக் களப்படுத்துகின்றன. அவைகள் ஹாங்காங்கி லிருந்து 11 சதவிகிதம் தொழிலாளர்களையும் தாய்லாந்தி லிருந்து 9 சதவிகிதம் தொழிலாளர்களையும் கூலிக்கமர்த்திக் கொள்கின்றன. அதேவேளையில் அவைகள் நைஜீரியாவில் 70 சதவிகிதத்தையும், மலேசியாவில் 50 சதவிகிதத்தையும் முதலீடு செய்திருக்கின்றன.

முதல் மூன்று போக்குகளுக்கு மாறாக, ஏற்றுமதிகளை அதிகரிக்கும் முறை தெளிவாகவே ஒரு அபாயத்தை உள்ளடக்கியதாக உள்ளது. பன்னாட்டு இணையங்கள் உழைப்பு மிகுதியாகத் தேவைப்படும் தொழில்களை வளரும் நாடுகளுக்கு மாற்றுவதோடு மன நிறைவடைந்து விடுகின்றன என்பதுதான் விஷயமாகும் உதாரணமாக, கையடக்கமான கணக்கிடுகருவிகளை எடுத்துக்கொள்வோம். அவை அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அனுமதியுடன் உற்பத்தி செய்யப்பட முடியும். அவற்றின் பகுதிகள் மேற்கு ஜெர்மனியில் உற்பத்தி செய்யப்பட்டு சிங்கப்பூரில் ஒன்று சேர்க்கப்படுகின்றன. வானொலி, புகைப்படக்கருவி, கைக் கடிகாரங்கள் இன்னும் பல்வேறு பொருட்களைப் பற்றிய நிலையும் இதுவேதான். இவ்வாறாக, பன்னாட்டு இணையங்கள் தேசியப் பொருளாதாரத்துடன் இணைவதில்லை. அவைகள் நாட்டுமக்கள் தொகையின் உண்மையான தேவைகளைப்பற்றிச் சிறிதும் கவலைப்படுவ தில்லை. அவைகள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்கள் எதையும் நிறுவுவதில்லை. அதன் விளைவாக அவைகள் அமைந்துள்ள நாடுகளின் வேகமான பொருளாதார வளர்ச்சியை மேம்பாடடையச்செய்வதற்கான

எந்தயும் செய்வதில்லை. அந்நிய நாட்டு ஏகபோகங்களின் மீது முழுதும் சார்ந்த நிலையில் அவைகள் வளரும் நாடுகளின் பொருளாதாரத்தில் வேற்று நாட்டினர் எல்லைக்குட்பட்ட பகுதிகளை உருவாக்குகின்றன. அவற்றின் ஆயுளானது ஏகபோக லாபங்களின் விதி என்பதனால் நிர்ணயிக்கப்படுகிறது.

ஆகவே ஐரோப்பிய பொருளாதார சமூகம் இம்மாதிரியான சர்வதேசப் பொருளாதார ஒழுங்கயைப் பிற்கு எவ்வாறு ஒத்திசைவானதாகவுள்ளது? 1974இல் ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் முக்கியமான கடமை மூன்றாவது உலக நாடுகளுடன் புது உறவுகளை நிறுவுவது தான். ஆப்பிரிக்கா, கரீபியன் நாடுகள், பசிபிக் பேராழி நாடுகள் ஆகியவற்றுடன் நடைபெறும் வாணிபத்தின் உறுதியான நிலைகளை உத்திரவாதம் செய்யும் நோக்கம் கொண்ட லோம் பேரவைக் கூட்டமும், ஸ்டாபெக்ஸ் அமைப்பு முறையும் இதன் விளைவாகவேதான் தோன்றின.

ஐரோப்பிய பொருளாதார சமூகம், தனக்கு வேண்டிய மூலப்பொருட்களையும், ஆற்றலயும், இறக்குமதி செய்ய வேண்டியதிருப்பதால் ஏற்றுமதி செய்வதும் இன்றியாமையாததாயிருக்கிறது. "ஐரோப்பிய பொருளாதார சமூகமும், உலகின் பிற பகுதிகளும்" என்ற தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட வாணிபக் கட்டமைப்பைப் பற்றிய பகுப்பாய்வானது அரிதாகக் கிடைக்கும் பொருட்களுக்கும் (உணவுப் பொருட்கள், மூலப் பொருட்கள்) எப்போதுமே அளிப்பில் அதுகமாக உள்ள பொருட்களுக்கும் (இரசாயனப் பொருட்கள், தயார் நிலையில் உள்ள பொருட்கள் முதலியன) இடையில் உள்ள உறவுகள் 1973 லிருந்து மாறவே இல்லை, என்று காட்டுகிறது.

பொதுச் சந்தை நாடுகளுக்கும், உலகின் பிற் பகுதிகளுக்கும் இடையில் நடைபெறும் வாணிபத்தின் கட்டமைப்பு, ஆற்றலின் விலையுயர்வினால் மிகுதியாகப் பாதிக்கப்பட்டது. ஆனால் கார்கள், சாதனங்கள்

ஆகியவற்றின் ஏற்றுமதிகளில் நிலவிய சமநிலை பெருகியது. அதனால், எண்ணெய் விலையின் உயர்வால் ஏற்பட்ட குறையை அது ஈடு செய்தது.

இவ்வாறாக பலரால் வற்புறுத்திக் கூறப்படுகிற பரவலான முடிவுக்கு மாறாக, ஐரோப்பியத் தொழிலில் காணப்படும் இடர்ப்பாடுகள் ஆற்றலின் விலை உயர்வினால் தான் என்றோ அல்லது மூன்றாவது உலக நாடுகளின் போட்டியினால் தான் என்றோ கூறிவிட முடியாது. வளரும் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சில குறிப்பிட்ட பொருட்கள் (இரசாயனப் பொருட்கள், குறையாக முடிக்கப் பட்ட பொருட்கள், பதனிடும் தொழிலிலிருந்து பெறப்படும் பண்டங்கள்) வளரும் நாடுகளுக்கான ஐரோப்பியப் பொருளாதாரச் சமூக நாடுகளின் ஏற்றுமதி விலைகளைவிட மிக உயர்ந்த இறக்குமதி விலைகளைக் கொண்டிருக்கின்றன.

மொத்த வாணிகத் தொகையில் இந்தப் பண்டங்களின் பங்கு மிக அதிகம். ஐரோப்பியப் பொருளாதார சமூக நாடுகள் மூன்றாவது உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிற பொருட்களில் 40 சதவிகிதமாகவுள்ள சாதனங்கள், மற்றும் முழுத் தொழிற் சாலைகளையும் சற்று இப்போதைக்கு மறந்து விட்டுப் பார்த்தாலும், இந்தப் பொருட்களே பொதுச் சந்தை நாடுகளின் இறக்குமதிகளில் 29 சதவிகிதத் திற்கும், ஏற்றுமதியில் 37 சதவிகிதத்திற்கும் பொறுப்பாக வுள்ளன. அதே வேளையில் வளரும் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களை மட்டும் கருத்தில் கொண்டால், அப்போது இந்தப் பொருட்களின் முக்கியத்துவம் குறைவாகவே இருக்கும். அதாவது 1976 இல் 7.3 சதவிகிதமாகவேதான் இருந்தது. மேலும் ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இந்தப் பொருட்களின் பங்கு மிகக் குறைவானதுதான் என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். 19/6 இல் பொதுச் சந்தை நாடுகள் வாங்கிய எட்டு இனங்களைச் சேர்ந்த பொருட்கள் ஏறத்தாழ 5000 மில்லியன் ஐரோப்பிய

செட்டில்மென்டு அலகுகளாக இருந்தன. அது ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.42 சதவிகிதமாகவே இருந்தது.

இவ்வாறாக வளரும் நாடுகளிலிருந்து தொழிற் பொருட்களை இறக்குமதி செய்வது, மேற்கத்திய முதலாளித்துவ நாடுகளின் குறைக்கப்பட்ட உற்பத்தியில் மிகுதியான விளைவை ஏற்படுத்தவில்லை. மெக்சிகோ, தென் கொரியா, பிரேசில், சிங்கப்பூர், ஹாங்காங் ஆகிய மிகுந்த செயலூக்கம் கொண்ட வளரும் நாடுகளின் ஏற்றுமதிகளைப் பற்றிய பகுப்பாய்விலிருந்து பொருளாதாரக் கூட்டுறவுக்கும், வளர்ச்சிக்குமான அமைப்மைச் (OECD) சேர்ந்த வல்லுநரான ஸ்டீபன்மோரிஸ் என்பவர் "முன்னெல்லாம் கருதப்பட்டதற்கு மாறாக இந்தக் குழு நாடுகளுடன் மேற்கொள்ளப்படும் வாணிபம், பொருளாதாரக் கூட்டுறவிற்கும், வளர்ச்சிக்குமான அமைப்பு நாடுகளின் வேலை வாய்ப்புகளின் மீது ஒரு எதிர்மறையான விளைவைக் காட்டிலும், ஒரு உடன்பாடான விளைவே உடையதாயிருந்தது" என்ற முடிவிற்கு வருகிறார்.

மேலும் ஐரோப்பிய பொருளாதார சமூகம், வளரும் நாடுகளுடன் செய்து வரும் வாணிபத்தின் செலுத்தல் நிலையைச் சமனப்படுத்த முயல்கிறது. ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் பங்கைப் பெருக்குவதற்காகப் பயன்படக் கூடிய ஒரு கருவியாகப் பொருளாதார வளர்ச்சிக்கு அரசின் உதவியைப் பெருக்குவதும், இந்த நாடுகளில் நுகர்வை விரிவாக்கம் செய்வதும்தான் என அடிக்கடிக் கூறப்படுகிறது. பொருளாதாரக் கூட்டுறவிற்கும் வளர்ச்சிக்குமான அமைப்பு நாடுகளின் 17 அரசுகளும், வளர்ச்சிக்கான உதவிக் குழுவைச் சேர்ந்த நாடுகளும் மூன்றாவது உலக நாடுகளில் செய்துள்ள உண்மையான முதலீடுகள் சரிவதை நிறுத்தவில்லை என்பதை நாம் உறுதியாகக் கூறலாம். ஒன்பது நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1976-ம் ஆண்டில் உற்பத்தி 0.43

சதவிகிதமாக இருந்த பொழுது, 1977-ல் 0.41 ஆக இருந்தது. அதிகார பூர்வமான புள்ளி விவரமான 0.70 சதவிகிதம் என்பது இந்த நாடுகளுக்கு ஒரு நப் பிக்கையே தவிரவேறல்ல. இந்த நாடுகளின் உதவிகள் பெரும்பாலும் இப்பொழுது ஒரு நெருக்கடி நிலையிலிருந்து வரும் ஏகபோகத் தொழில் களைக் காப்பாற்றுவதைத் தன்னுடைய நோக்கமாகக் கொண்டுள்ளன.

மூன்றாவது உலக நாடுகளுக்குப் பண்டங்களின் பரிவர்த்தனைச் சூழ்நிலைகளும் சாதகமாக இல்லை என்பதையும் உறுதியாகக் கூற முடியும்[3] 1970 ல் 100 ஐக் குறியீடாகக் கொண்டால் 1978 ல் அது 98 ஆக இருந்தது. அதே வேளையில் 1970 ல் 73, 000 மில்லியன் டாலராக இருந்த வளரும் நாடுகளின் கடன் 1976 ல் 250,000 மில்லியன் டாலராக ஆயிற்று. எண்ணெய் உற்பத்தி செய்யாத வளரும் நாடுகளின் அயல்நாட்டுக் கடன் 1975 ல் 55,000 மில்லியன் டாலரை அடைந்தது. ஆகவே புதிய பொருளாதார ஒழுங்கமைப்பு மூன்றாவது உலக நாட்டு மக்களுக்கு மெய்யான ஒன்றாக ஆகிவிடவில்லை என்று நாம் எளிதில் முடிவு செய்யலாம்.

மேலும் ஒரு புதிய பொருளாதார ஒழுங்கமைப்பைத் தோற்றுவிக்க வேண்டுமென்ற ஐரோப்பிய பூர்ஷ்வாக் களுடைய கருத்துக்கள் சமத்துவம், ஜனநாயகம் அல்லது உண்மையான வளர்ச்சியை மேம்பாடடையச் செய்ய வேண்டுமென்ற எண்ணத்திலிருந்து தோன்றவில்லை. ஆனால் சர்வதேச வேலைப் பகுப்பில் நிகழ்ந்துள்ள மாற்றங் களின் விளைவாக இன்றியமையாதது ஆகியுள்ள ஐரோப்பிய பொருளாதாரத்தை மறுசீரமைப்புச் செய்வதை எளிதாக்கு வதற்கான ஒரு வாதமாகப் பயன்படுத்துவதற்காகவேதான் தோன்றியுள்ளது. ஆனால் நாம் முன்னர் விளக்கியதைப் போல இது ஒருபுறம் கூலிகளின் மேல் ஏற்படும் அழுத்தத்தையும், மறுபுறம், இலாபமில்லாத தொழில்களை ஒழித்துக் கட்டுவதையும்தான் குறிக்கும்.

## ஆ. ஏகபோக ''சிக்கனமும்'', வீணாக்குதலும்

ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் குழு, இன்றைய நெருக்கடியிலிருந்து மீள்வதற்குரிய சிறந்த வழியாக நேரடியான மற்றும் மறைமுகமான வருமானங்களைக் குறைப்பதன் இன்றியமையாமையை வலியுறுத்தி வருகிறது. அதாவது மொத்தமாக தொழிற்சாலைகளை ஒழித்துக் கட்டுவதன் மூலமும் 'இலாபத்தின் விகிதத்தை உயர்த்த, உபரி மதிப்பை உயர்த்துவதன் மூலமும். அது நடைமுறையில் எவ்வளவு அளவு நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதைக் காண்போம்.

### ஆ. 1. கூலிகளும், இலாபமும்.

நுகர்வோர் பொருள் விலைக்குறியீட்டை அடிப்படையாகக் கொண்டு சரி செய்யப்பட்ட வேலையில் அமர்த்தப்பட்டுள்ள ஒருவரின் மொத்த ஊதியம் வரிகள் கழிக்கப்படுவதற்குமுன் உண்மை ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு நமக்கு உதவுகிறது. ஆனால் அரசுக்கும், குடும்பத்துக்குமிடையில் மாற்றங்கள்(ஒன்றிற்குச் செலுத்தப்படும் வரிகள், சமூகக் காப்பீடு முதலியனவும், மற்றதுக்குச் செலுத்தப்படுகிற பல்வேறு நலன்களும்) கணக்கில் எடுத்துக் கொள்ளப்படாததால் நாம் வாங்கும் சக்தியின் குறியீடுகள் பற்றிக் குறிப்பிடவில்லை என்பதை உடனடியாகத் தெளிவாக்கியாக வேண்டும். 1976 லிருந்து ஐரோப்பியப் பொருளாதார சமூகத்தில் உண்மை ஊதியத்தின் வளர்ச்சி பெருமளவு குறைக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக 19‹0 லிருந்து 1970 வரை ஆண்டுச் சராசரி வளர்ச்சி 4.9 சதவிகிதமாக இருந்தது. ஆனால் 1976 ல இது 2·8 சதவிகிதமாகவும், 1977 ல் 1.7 சதவிகிதமாகவும் இருந்தது. 1978 ல் அது 3 சதவிகிதமாக இருக்குமென எதிர் பார்க்கப்படுகிறது. கடந்த இரண்டாண்டுகளில் கிரேட்பிரிட்டனில் உண்மை ஊதியம் வீழ்ந்தது. டென்மார்க்கில் 1977 ல் மிகக்குறைந்தது. இவ்வாறாக ஊதியங்களைக் குறைப்பது அதன் விளைவுகளைத் தோற்றுவித்திருந்தது.

உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் ஒவ்வொரு யூனிட்டுக்குயான கூலிகளின் மீதான மெய்யான செலவின் பரிணாமத்தைப் பரிசோதித்தால் இந்த முடிவு ஒரே மாதிரியாகவே இருக்கிறது (வரிகள் வாங்கப்படுவதற்கு முன் உற்பத்தி செய்யப்படுகிற பொருளின் அலகு ஒவ்வொன்றுக்கும் கொடுக்கப்படுகிற மொத்தக் கூலி உள்நாட்டு மொத்த உற்பத்தியின் விலைக்குறியீட்டின்படி சரி செய்யப்பட்டது.) அதுதான் தொழில் அதிபர்களால் ஏற்றுக் கொள்ளப்படுகிற முக்கியமான குறியீடு ஆகும். ஏனெனில் ஐரோப்பியப் பொருளாதார சமூக நாடுகளில் செலவு தொடர்ச்சியாகக் குறைக்கப்பட்டு வருகிறது. 1976இல் அது 1.8 சதவிகிதமாகக் குறைந்தது; 1977 இல் 0.2 சதவிகிதமாயிற்று. 1978 ல் ஒரு வேளை அது 0.6 சதவிகித மாக இருக்கலாம். 1975 லிருந்து இந்தக் குறைவு ஜெர்மன் கூட்டுக் குடியரசில் காணப்படுகிறது. 1978 ல் உற்பத்திப் பொருளின் ஒவ்வொரு அலகிற்கும் உரிய ஊதியங்கள் பெல்ஜியத்தைத் தவிர ஐரோப்பியப் பொருளாதார நாடுகள் எல்லாவற்றிலும் குறைக்கப்பட்டன. ஆனால் அதன் வளர்ச்சி என்பதும் அங்கே இல்லை.

ஊதியங்களில் செய்யப்படும் பெருமளவான குறைப்பு, உழைப்பின் உற்பத்தித் திறனில் ஏற்படும் பெருக்கங்கள் (இது பொதுச் சந்தை நாடுகளில் 1977 ல் 2 சதவீதம் என்றும் 11978 ல் 2.4 சதவீதம் என்றும் உயர்ந்தது) என்னும் இவற்றின் ஒட்டு மொத்தமான விளைவானது உற்பத்தி யூனிட் படியான ஊதியங்களைச் சார்புநிலையில் குறைந்ததாக இருந்தது. அது உபரி மதிப்பின் விகிதத்தில் ஒரு பெருக்கத்தை ஏற்படுத்தியது என்றும் சொல்லலாம்.

ஊதியங்களில் ஏற்பட்ட இந்தப் பரிணாம வளர்ச்சியானது இலாபங்கள் உயர்ந்திருப்பதையும் காட்டுகிறது. 1977, 1978 ஆகிய ஆண்டுகளில் உற்பத்தியின் யூனிட் படியான தனது மொத்த லாபங்களைத் தொழில் துறையானது சற்று மிகுதியாக்கியிருக்கிறது என்று

நினைக்கும் தேசிய பாங்க்கும் இதே எண்ணம் கொண்டிருக்கிறது. ஐரோப்பா முழுவதனுடையதுமான தொழிற்சாலை லாபங்கள் பற்றிக் கிடைக்கக் கூடிய ஒரே புள்ளி விவரமானது 1976-ம் ஆண்டுடன் தொடர்புடையதாய் இருக்கிறது. ஆனால், இவைகள் மிகவும் முக்கியமானவைகள். ஏனெனில் இந்த ஆண்டிலிருந்து கூலிகள் ஓயாமல் கீழே போய்க் கொண்டேயிருக்கின்றன. நெருக்கடியானது மிகவும் ஆழமாக இருந்த வேளையில்தான் சில ஏகபோகங்கள் இதுவரை கேட்டறியா லாபங்களைத் திரட்டின என்பதற்கு சான்றுகள் பல இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, செயின்ட் கோபெயின்– பான்ட்-ஏ மவுசான் என்ற ஏகபோக நிறுவனத்தைக் கூறலாம். அமெரிக்காவுக்கு உரியதல்லாத பெரிய ஏகபோகங்கள் 500-ல் இது 28-வது இடத்திலிருப்பதாகும். இது 1975-1976 ல் தனது நிகரலாபத்தை (வரிகளுக்குப் பிறகு) 65 சதவீதத்திற்குப் பெருக்கியது. 1974 ல் இருந்ததைவிட இது 30 சதவீதம் அதிகமாகும். அப்போது பல கம்பெனிகள் வரலாறு காணாத உயர்ந்த லாபங்களைத் திரட்டின. தாம்சன் கம்பெனி தனது லாபங்களை 20 சதவீதத்திற்குப் பெருக்கியது. மொத்தமாகப் பார்த்தால் ஐரோப்பாவின் 500 பெருந்தொழிற் சாலை நிறுவனங்களின் நிகரலாபமானது 1976-ல் 13 சதவீதம் என்ற அளவில் உயர்ந்தது. 1977-ல் ஐரோப்பாவின் 26 பெரிய வணிக வங்கிகள் நிகரலாபமாக 87,000 மில்லியன் பெல்ஜிய பிராங்குகளுக்கும் அதிகமாகத் திரட்டின. ●

அமெரிக்கப் பன்னாட்டு இணையங்களைப் பொருத்தவரை 1978 ன் முதல் கால் பகுதியிலும் 1979 ன் முதல் கால பகுதியிலும் ஜெனரல் எலெக்டிரிக் கம்பெனியுடைய தெளிவான இலாபம் 22.4 சதவிகிதமாகவும், காட்டர்பில்லர் டிராக்டர் கம்பெனியின் இலாபம் 10.8 சதவிகிதமாகவும் ஐ.பீ.எம். (IBM) மின்லாபம் 47.2 சதவீதமாகவும், பரோசின் லாபம் 26 சதவீதமாகவும் வளர்ந்தது.

இந்தப் புள்ளி விவரங்கள் ஏகபோகங்களை நெருக்கடிகள் பல்வேறு வழிகளில் பாதித்திருக்கின்றன

என்பதையும், அவைகள் ஏதோ ஒரு வகையான சிக்கனத்தை கையாள்வதைப் பற்றிப் பேசவும் முடியாது என்பதையும் தான் காட்டுகின்றன. ஆம், அதுவும் கூலிகள் மிகவும் கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ள இப்போது இந்தநிலை.

### ஆ. 2. வீண் செலவு

ஏகபோகங்களின் அதிகப்படியான இலாபம் அசுர வீண் செலவுகள் செய்தே பெறப்படுகின்றன: முதலில் மனித வளத்தில்; இரண்டாவதாக மூலதனத்தில். இம்மாதிரி வீணடித்தல் மூலதனத் திரட்சியை மறுசீரமைப்புச் செய்வதற்காக மூலதனத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதியை மதிப்புக் குறைத்தலின் அவசியத்தைக் கொண்டு விளக்கப் படுகிறது.

ஐரோப்பியப் பொருளாதார சமூக நாடுகளில் தொடர்ந்து வளர்ந்து வரும் வேலையில்லாத் திண்டாட்டம் மனித வளத்தை வீணடிப்பது ஒரு கற்பனைத் தோற்றமல்ல என்பதைத் தெளிவாக விளக்குகிறது. அது ஐரோப்பாவின் ஆறரை மில்லியன் தொழிலாளர்கள் 1978 ல் சந்தித்த ஒரு உண்மையாகும். இந்த ஆறரை மில்லியன் தொழிலாளிகள் முழுதும் வேலையில்லாதவர்கள் என அதிகார பூர்வமாகப் பதிவு செய்யப்பட்டவர்கள்தான். இவ்வாறாக இந்தப் புள்ளி விவரங்களில் பகுதி நேரம் மட்டுமே வேலைக்கமர்த்தப் பட்டவர்களின் எண்ணிக்கை குறிப்பிடப்படவில்லை. அல்லது அரசு நிர்வாகத்தினால் வேலையளிக்கப்படாதவர் களின் எண்ணிக்கையையோ, வேலையெதுவும் பெற முடியாமல் தவித்த இளைஞர்களின் எண்ணிக்கையையோ, ஒய்வூதியம் பெறும் கால வயதுக்கு முந்திய வயதுடையவர் களின் எண்ணிக்கையையோ, அல்லது வேலையில்லா திருப்பதற்காகக் கொடுக்கப்படும் உதவித் தொகை மறுக்கப் பட்டவர்களின் எண்ணிக்கையையோ அல்லது தங்களுடைய வேலை அனுமதி புதுப்பிக்கப்படாத வெளி நாட்டவரின் எண்ணிக்கையையோ, அல்லது வேலை மட்டும் கிடைத்தால்

பார்க்கத் தயாராயிருக்கும் பெண்களின் எண்ணிக்கையையோ இதில் அடக்கவில்லை.

1978 இல் மேற்கு ஜெர்மனியையும், அயர்லாந்தையும் தவிர ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் அனைத்து நாடுகளிலும், வேலையில்லாத் திண்டாட்டம் உயர்ந்து கொண்டேயிருந்தது. இவ்வாறாக 1970 களின் தொடக்கத்தில் நிலவிய போக்கு தொடர்ந்து நிலவியது. பெல்ஜியத்திலும், அயர்லாந்திலும், வேலையில்லாத் திண்டாட்டத்தின் மட்டங்கள் மிக உயர்ந்ததாக இருந்தன. அங்கே வேலையில்லாதோர் 8 சதவிகிதம் அதிகமாக இருந்தனர்.

1973 லிருந்து 1976 வரை தொழிற் சாலையில் வேலை வாய்ப்பு 4.6 சதவிகிதம் குறைந்தது. சேவைத் தொழிலில் அதே காலத்தில் வேலை வாய்ப்பு 2.3 சதவிகிதம் அதிகமாயிற்று. இவ்வாறாக, தொழிற்சாலை வேலைகளில் ஈடுபட்டுள்ளோரை வேலையில்லாத் திண்டாட்டம் பெரிதும் பாதிக்கிறது.

1973 லிருந்து 1976 வரை ஐரோப்பிய தொழிலில் ஏறத்தாழ இரண்டரை மில்லியன் வேலைகள் ஒழிக்கப் பட்டன. ஆற்றல் தொழிலையும்,போக்குவரவுப் பொறியியல் தொழிலையும் தவிர (கார் தொழிலைத் தவிர) பிற அனைத்துத் தொழில்களும் ஒரே அளவாகவே பாதிக்கப் பட்டிருந்தன. பல்வேறு தொழிற்சாலைகளில் வேலை வாய்ப்பைக் குறைப்பது இந்தத் தொழில்களில் நிலவுகிற நிலைமையைப் பிரதிபலிக்கிறது. 1977 க்கும் 1978 க்கும் இதுவரை இன்னும் கிடைக்காத புள்ளி விவரங்கள் இந்தப் போக்கைச் சந்தேகமில்லாமல் உறுதி செய்யும். இன்றியமையா நுகர்வோர் பொருளுற்பத்தித் தொழிலில், பாதி அளவு வேலைகளுக்கு மேல்,அதாவது ஒரு மில்லியனுக்கு மேலான பணியிடங்கள் குறைக்கப்பட்டன. பஞ்சாலைத் தொழில், தட்டுமுட்டு சாமான் தொழில், காகிதத் தொழில் ஆகியவை, பிறதொழில்களைக் காட்டிலும் அதிக அளவு

வேலைக் குறைப்புப் பயமுறுத்தலை எதிர் நோக்குகின்றன. அவைகள் அனைத்தும் தொழிலாளர்கள் மிகுதியாகத் தேவைப்படும் தொழில்கள் என்பதனால் வெளி நாடுகளுக்கு மூலதனம் ஏற்றுமதி செய்யப்படுவதன் விளைவுகளாலும், எந்த நாடுகளில் தொழிலாளிகள் மிகக் குறைந்த கூலியில் கிடைக்கிறார்களோ அங்கு உதவித் தொழில்களை நடத்தும் கம்பெனிகளின் வளர்ச்சியின் விளைவுகளாலும் மிகுதியாகப் பாதிக்கப்படுகின்றன.

பொதுவாக இந்தத் தொழில்கள் பெரும்பாலும் பெண்களை வேலைக்கமர்த்திக் கொள்கின்றன என்பது குறிப்பிடத் தக்கது ஆகும். அது குறிப்பாகப் பெண்களின் வேலையில்லாத் திண்டாட்ட உயர்வுக்கு விளக்கமளிக்கிறது (பெண்களின் வேலையில்லாத் திண்டாட்டம் 1973 இல் 33 சதவீதம் என்பதாயிருந்து 1977 இல் 41 சதவீதமாக உயர்ந்தது).

இரும்பு உருக்குத் தொழிற்சாலைகளில் 1973 லிருந்து 1976 வரை 200,000 தொழிலாளர்கள் வெளியேற்றப் பட்டனர். அதே காலத்தில் பொறியியல் தொழில்களிலும், மின்னணுத் தொழில்களிலும் இதைக் காட்டிலும் அதிகமான வேலைகள் இழக்கப்பட்டன.

இம்மாதிரியான உழைப்பின் வகை தொகைகளையும், அதே வேளையில் பல நூற்றாண்டுகள் தொடர்ந்து முயன்று பெற்ற அறிவையும், திறமைகளையும் வீணாக்குவது மூலதனத்தின் இலாபத்தை உயர்த்துவதன் தேவையின் விளைவேயாகும். மிகக் குறைந்த லாபம் பெறும் மூலதனம் களத்திலிருந்து நீக்கப்படும் என்பதே இதன் பொருளாகும். உற்பத்தித் திறனின் மீது குறைந்த சுமை ஏற்றுவதும், தொழிற் கூடங்களை மூடி விடுவதும் இந்தத் தேவையின் விளைவேயாகும்.

ஐரோப்பியப் பொருளாதார சமூகத்தின் கமிஷன் உற்பத்தித் திறன்கள் பற்றிய மதிப்பீட்டிற்காக, அனைத்துத்

தொழில்களிலும் வாக்கெடுப்பு நடத்தியுள்ளது. அவைகளின் முடிவுகளை அடியிற் கண்டது போல சுருக்கிக் கூறலாம்.

1975 ம் ஆண்டு தான் உற்பத்தித் திறன்களின் மீது மிகக் குறைந்த பளு ஏற்றப்பட்ட ஆண்டாகும். 1976 லிருந்து உற்பத்தித் திறன் மீது மிக அதிகமான பளு ஏற்றும் போக்கு அதிகரித்தது என புள்ளி விவரம் காட்டுகிறது. 1978 ல் பல ஐரோப்பியப் பொருளாதார சமூக நாடுகளின் நிலை வேறுபட்டதாக இருந்தது. அயர்லாந்தில் உற்பத்தித் திறன்கள் மிக உயர்ந்த நிலையில் இருந்தன. பெல்ஜியத்திலும், லக்சம்பர்க்கிலும் அவைகளின் மீது குறைந்த பளுவே ஏற்றப்பட்டிருந்தது. ஜெர்மன் கூட்டுக் குடியரசில் ஒரு குறிப்பிட்ட அளவு நிலையான தன்மை இருந்த போதிலும், நெதர்லாந்தில் குறைந்திருந்த போதிலும், வேறு ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகளில் உற்பத்தித் திறன்களில் குறைவேற்படுத்தும் செயல் அதிகமாகவே இருந்தது.

பொருளாதாரத்தை மறுசீரமைப்பதைத் தன் சிறப்பியல்பாகக் கொண்டுள்ள மூலதனத்தை வீணாக்குவது மேலும், மேலும் அதிகமான அளவு தொழிற் கூடங்கள் மூடப்படுவதனால் தெளிவாகிறது. இவ்வாறாக பிரான்சில் 1978 ல் ஒரு வாரத்திற்கு 300 நிறுவனங்கள் நொடித்துப் போயின. பெல்ஜியத்தில் ஏறத்தாழ 55 நிறுவனங்கள் நொடித்துப் போயின. இந்த அளவு 1977 யைக் காட்டிலும் 12 சதவிகிதம் அதிகமானதாகும். இது பெரும்பாலும் சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்கள் மிகுதியாக உள்ள பஞ்சாலைத் தொழிலையும், தையல் தொழிலையும் தோல் தொழிலையும், கட்டுமானத் தொழில் போன்ற தொழில்களையும் பாதித்தது. இவ்வாறாக மறுசீரமைப்பது, மூலதனம் குவிக்கப்படுவது தீவிரமடைவதுடனும், சந்தைகள் ஏகபோகங்களின் பிடியில் மேலும், மேலும் வருவதுடனும் ஒத்திசைவானதாகவுள்ளது.

## இ. ஒன்றிணைந்த தேசியங்கடந்த செயலமைப்பு

மூலதனத் திரட்சி வேகமாக ஆவதும், சர்வதேச மயமாவதும்தான் நெருக்கடி காலத்தில் மூலதனக் குவிப்பில் நிலவும் சிறப்பியல்பு. 1973 லிருந்து 1977 வரை ஐரோப்பிய பொருளாதார சமூகத்திற்குள் தேசிய, சர்வதேசியங்கள் கலப்பது, மேற் கொள்வது, ஓரளவான பங்கேற்பு, கூட்டுக் கிளைகளின் ஏற்பாடு ஆகியவற்றை நோக்கிய ஒரு தெளிவான போக்கு காணப்பட்டது.

நாம் ஆராய்ந்து வரும் கால வெளியில் இம்மாதிரியான பேரங்கள் ஏறத்தாழ 50 சதம் உயர்ந்தன. வளர்ச்சியின் அடிப்படையில், பகுதிக் கூட்டுகளின் எண்ணிக்கையில் உயர்வும், உருவாக்கப்பட்ட கூட்டான கிளைகளின் எண்ணிக்கையில் குறைவும் உள்ளன. இந்தப் பகுதிக் கூட்டுறவு நிறுவனங்களின் உயர்வுகள் மூலதனத்தின் வளர்ந்து வரும் ஊடுருவலுக்கும், அது மிகுதியாக ஓரிடத்தில் செறிவுற்றிருப்பதற்கும் சான்றுபகர்கின்றன. இம்மாதிரியான கூட்டுகள் பெரும்பான்மையை ஏற்படுத்துகிறதோ இல்லையோ சட்டக் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால், கலப்பது, மேற்கொள்வது ஆகியவற்றிலிருந்து வேறுபட்ட, நிறுவனங்களின் மீதான எளிய கட்டுப்பாட்டு சாதனங்களாகும் அவைகள். கிடைக்கக் கூடிய புள்ளி விவரத் தகவலானது ஐரோப்பியப் பொருளாதார சமூகத்திற்குள்ளாக அமைக்கப்பட்ட கிளைகளுடன் மட்டும் சார்ந்துள்ளது என்ற உண்மைதான் கூட்டான கிளைகளின் எண்ணிக்கையில் குறைவுக்குக் காரணம் என்று கூற வேண்டும். நாம், வளரும் நாடுகளில் அமைக்கப்பட்ட கிளைகளைக் கணக்கிட்டால், குறிப்பாக, எந்த நாடுகளில் உழைப்பு சக்தி மிகவும் குறைந்த விலையுள்ளதாக இருக்கிறதோ அந்த நாடுகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டால், இந்தப் போக்கு நேரெதிரிடையானதாக ஒரு வேளை இருக்கலாம்.

மூலதனத்தின் உள் ஊடுருவல் விரைவுபடுத்தப்படுவதை ஒவ்வொரு தனிச்செயலிலும் பங்கு பெறும் அமைப்புகளின் எண்ணிக்கை சராசரியாக உயர்வதிலிருந்து கூட அறிந்து கொள்ள முடியும். கூட்டான கிளைகள் தொடங்கப்பட்ட பொழுது, 1973ல் அது 2. 69 சதவிகிதமாக இருந்தது. 1977 ல் அது 3.34 சதவிகிதமாக உயர்ந்தது. மேலும், மேலும் அதிகமான கம்பெனிகள் ஏதாவது ஒரு வகையான செயல்களில் பங்கு பெறுகின்றன என்பதும், அதன் விளைவாக மிகவும் வலிமை வாய்ந்த பிற கம்பெனிகளில் செல்வாக்கு வட்டத்திற்குள் அவைகள் வந்து விடுகின்றன என்பதும் தான் அதன் பொருளாகும்.

மேலும் 1977 ல் கூட்டான கிளைகளை அமைப்பதில் 60 சதவிகிதம், சர்வதேசத் தன்மை கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது ஆகும். மூலதனத்தை சர்வதேசத் தன்மையுடையதாக ஆக்குவது ஜெர்மன் கூட்டுக் குடியரசு 27 சதவிகிதச் சர்வதேசச் செயல்களிலும், பெல்ஜியம் 19 சதவிகிதச் சர்வதேசச் செயல்களிலும் ஈடுபடுவதிலிருந்து தெரிய வருகிறது. இவ்வாறாக, மேற்கு ஜெர்மனி வெளிநாடுகளில் செய்துள்ள மூலதனத்தின் சராசரி 1973 லிருந்து 1977 க்குள் 12 சதவிகிதமாக உயர்ந்தது. 1975 லிருந்து இந்த எண்ணிக்கை ஜெர்மன் கூட்டுக் குடியரசில் நேரடியாகச் செய்யப்பட்ட வெளிநாட்டு முதலீடுகளைக் காட்டிலும் மிகுதியாக இருந்தது. நெருக்கடி ஆண்டுகளில் மேற்கு ஜெர்மனியால் மிகுதியாகக் குவிக்கப்பட்ட பொருளாதார வலிமைக்கு இந்தப் பரிணாம வளர்ச்சி சான்று பகர்கிறது. எனினும் பெல்ஜியத்தில் இதற்கு எதிரானதே நிகழ்ந்துள்ளது. சர்வதேசிய மயமாக்கப்படுவது, பெருமளவு அந்நிய முதலீடு செய்வதைத் தன் சிறப்பியல்பாகக் கொண்டது. அது 1975-1976 களில் ஒரு சிறிதளவு தேக்க நிலைக்குப் பின்னர் 1977 லிருந்து மீண்டும் உயர்ந்து வருகிறது.

ஓரிடத்தில் மூலதனம் குவிவதும், சர்வதேசத் தன்மையடைவதும் தேசிய அரசுகளாலும், தொழில்களாலும்

ஆதரிக்கப்படுகிற ஐரோப்பியப் பொருளாதார சமூகத்தின் கமிஷனைப் போன்ற அமைப்புகளுடைய தொழிற் கொள்கைகளினால் பாதிக்கப்படுகிற தொழில் தொகுதி அமைப்புகளை மறுசீரமைப்பதைத் தன் தனிச் சிறப்பியல்பாகக் கொண்டுள்ளது.

ஐரோப்பியப் பொருளாதார சமூக நாடுகளின் தலையீடு இலாபம் தராத மூலதனத்தைத் திருப்ப எடுத்துக் கொள்வதற்கான ஏகபோகங்களின் விருப்பங்கள் மிகுதியாக இருக்கிற மிக அதிகமான அளவு ஏகபோகத் தன்மை கொண்ட அடிப்படைத் தொழில்களில்—குறிப்பாக இரும்பு எஃகு உற்பத்தியில்—மிகவும் சிறப்பாக உள்ளது. எனினும் எட்டியன் டேவிக்னான் "நாங்கள் எஃகு உற்பத்தி செய்கிறோம். எனினும் செயற்கை இழைச் சந்தைக்கு ஒரு உரு கொடுப்பதற்கு உதவியிருக்கிறோம். விரைவில் நாங்கள் கப்பல் கட்டுவதையும் மேற்கொள்ள முடியும்" எனக் கூறுகிறார். பொதுவாகக் கொள்கை அடிப்படையில் ஒன்றாகவேதான் இருந்து வருகிறது. மிக லாபமானதைத் தவிர்த்து உற்பத்தித் திறன்களைக் குறைப்பதற்கும், வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களுக்குப் புதிய வேலைகளை உறுதி செய்வதற்குமாக உரிமையாளர்களின் செயல்களையும், அரசு செயல்களையும், கமிஷனின் செயல்களையும் ஒருங்கிணைத்து அமைப்பது.

### இ. 1. இரும்பு—எஃகு தொழிற்சாலைகள்

இரும்பு - எஃகு தொழில்களில் ஏற்பட்டுள்ள காரணங்களை நாம் ஆராயப் போவதில்லை. அது ஒரு கட்டமைப்பு இயல்புடைய நெருக்கடி என்று கூறுவது மட்டும் இங்கு போதுமானது.

இந்தக் கட்டமைப்பு நெருக்கடி, அமெரிக்கா அல்லது ஜப்பானிய இரும்பு-எஃகுத் தொழில்களைவிட மூலப்பொருள், சந்தை, உற்பத்தியளவு, தொழில் நுட்பம் ஆகிய நோக்கில் மேற்கு ஐரோப்பிய இரும்பு-எஃகுத்

தொழிலைப் பெருமளவு பாதித்தது. மேலும் உற்பத்தியாளர்களிடையே முரண்பாடுகளைக் கடுமையாக்கிய மறுசீரமைப்புச் செயலினால் ஐரோப்பிய இரும்பு-எஃகுத் தொழில் பாதிக்கப்பட்டிருக்கிறது. இவைகளில் மிகவும் சக்தி வாய்ந்ததாக விளங்கும் ஏகபோகங்கள், முக்கியமாக மேற்கு ஜெர்மன் ஏகபோகங்கள் தங்கள் ஆசைகளைத் தங்களைவிடக் குறைந்த திறனுடைய ஏகபோகங்களின் மீது திணிக்க முயற்சித்துக் கொண்டிருந்தன.

ஐரோப்பியப் பொருளாதார சமூகத்தின் யுக்தி உருவாக்கப்படுவதற்கு முக்கியமான பங்கு அளிக்கப்பட்டது. பெருமளவு திறமையுடன் செயலாற்றி வந்த தொழில் தொகுதிகளின் காப்பாளன் என்று உரிமை கொண்டாடிய ஐரோப்பியப் பொருளாதார சமூகம், நெருக்கடி தோன்றியது தன்னுடைய தவறுகளால் அல்ல எனவும், யாருமே அதிசயங்களை ஒரே நாளில் தோற்றுவித்துவிட முடியாது எனவும் கூறித் தொழில்கள் மூடப்பட்டதையும், தொழிலாளர்கள் வேலையை விட்டு நீக்கப்பட்டதையும் நியாயம் என வாதாடியது. இது தொடர்பாக ஐரோப்பிய நிலக்கரி மற்றும் எஃகு சமூகம் எப்பொழுதும் எந்தவித உண்மையான தொழிற் கொள்கையையும் வைத்திருந்ததில்லை என்பதை மனதில் கொள்வதும் நல்லது மேலும் சந்தை சூட்சுமத்திற்கு முழு சுதந்திரம் கொடுத்ததில் (இந்த சமூகம் தோற்றுவிக்கப்பட்ட உடன்பாட்டின் நோக்கம் இதுவல்ல—ஏனெனில் பிந்தியது ஐரோப்பியப் பொருளாதார சமூகத்தின் நிறுவனங்கள் அவசியமாகத் தங்களுடைய விற்பனை விலைகளைப் பற்றித் தெரிவிக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தியது) இந்த சமூகமானது, விலைகளை உறுதியற்றதாக்கவும், போட்டி வகையில் பலமற்ற சந்தைகளைக் குலைக்கவும் உதவியிருக்கிறது. எனவே இந்த நெருக்கடியில் ஐரோப்பியப் பொருளாதார சமூகத்தின் பங்கை நாம் கருத்தில் கொள்ளாமலிருக்க முடியாது.

1976 லிருந்து, ஐரோப்பியப் பொருளாதார சமூகம் நெருக்கடியைத் தீர்ப்பதில்தான் பயன்படுத்தத்

தீர்மானித்துள்ள முறைகளைத் தொடர்ச்சியாக நிர்ணயித்து வந்திருக்கிறது.

முக்கியமாக, இது ஒரு சில குறிப்பிட்ட பொருட்களின் வழிகாட்டப்பட்ட விலைகளுக்கும், வேறு சில பொருட்களின் (இரும்புக் கழிகள், தண்டவாளங்கள் முதலியவை) குறைந்த அளவு இன்றியமையா விலைகள் பற்றிய 1977 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து, அரசியல் கட்டுப்பாடற்ற (Voluntary establishments, நிறுவனங்களின் இலாப அளவை மீண்டும் சரி செய்வதை நோக்கமாகக் கொண்ட, நீண்டகாலம் தள்ளிப் போடப்பட்ட, தொடர்ச்சியான குறுகியகால நடவடிக்கைகளாக வெளிப்பட்டன. இந்தப் பிந்தியவைகள் (குறைந்த அளவு இன்றியமையாத விலைகள்) குறைந்த அளவே தொழில் நுட்பத் துறையில் முன்னேறியிருந்த நிறுவனங்களின் மீது சாதகமற்ற விளைவுகளை இயல்பாகவே தோற்றுவித்த தொழில் நுட்பத்தில் மிக அதிக திறமை பெற்றிருந்த தொழில் நிறுவனங்களின் உற்பத்திப் பொருட்களின் விலையால் நிர்ணயிக்கப்பட்டிருந்தன. உற்பத்திப் பொருட்களின் பரிமாணத்தை உறுதிப் படுத்தவும், மூன்றாவது உலக நாடுகளுடனான வாணிபத்தை ஒழுங்கு படுத்தவும், தேவையான நடவடிக்கைகள் மேற் கொள்ளப் பட்டன.

இரண்டாவது வரிசை நடவடிக்கைகள் மறுசீரமைப்புச் செய்வதோடு தொடர்புடையன.

நாம் பார்த்துக் கொண்டிருப்பது மறுசீரமைப்பதன் நோக்கங்களை உருவாக்குவது பற்றியும், அவற்றை நடை முறைப்படுத்துவதன் வழி முறைகளைப் பற்றியதும் ஆகும். 1978 ஜூனில் 1980—1985—1990 க்கான எஃகு உற்பத்திக்கான, புதிய, பொதுவான இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டன.

கமிஷனின் கருத்துப்படி 1985 ல் தான் எஃகிற்கான உள்நாட்டுத் தேவைகள் 1974 ம் ஆண்டின் மட்டத்தை

மீண்டும் அடையும். ஆகவே 1985ம் ஆண்டு வாக்கில் 1974ம் ஆண்டின் உற்பத்தி மட்டங்களை மிஞ்சும் எல்லாத் திறன் களையும் ஒழிக்க வேண்டும் என்பதே முக்கிய லட்சியமாகும். 1980 ல் உற்பத்தித்திறன் 25 மில்லியன் டன்கள் குறைவாக இருக்கும் என்பதே இதன் பொருளானது. எனவே ஒரு தொழிற்சாலையை மூடுவதா, வேண்டாமா என்பதை எதைக் கொண்டு முடிவு செய்ய முடியும்? இது மிகவும் எளிதானதுதான். "தகுதியுள்ளவனே உயிர் வாழ்வான்", "உள்ளது சிறத்தல்" "தடி எடுத்தவன் தண்டல்காரன்", என்பவைகளைக் கொண்டுதான் முடிவு செய்ய வேண்டும். எட்டியன் டேவிக்னான் 1978 வசந்த காலத்தில் வலியுறுத்தியதைப் போல, "மிகவும் வளர்ச்சியடைந்த தொழில்களுக்குச் சிறப்பான உரிமைகள் வழங்கப்பட வேண்டும்." அவர் எஃகுத் தொழிலுக்கு ஓர் உண்மையான கட்டமைப்புக் கொள்கையை மனதில் கொண்டுதான் பேசுகிறார் என்பது இதன் பொருளா? உறுதியாக இதுவல்ல அதன் பொருள்!

ஏனெனில், ஒருபுறம் எஃகு நுகர்வைப் பற்றிய மதிப்பீடுகள் சில பண்டங்களை மட்டும் உற்பத்தி செய்வதற்கான எஃகுத் தேவைகளின் தெவிட்டல் நிலையைச் சிறப்பியல்பாகக் கொண்ட குறியீடுகளை அடிப்படையாய்க் கொண்டதாய் இருக்கின்றன. மேலும் இந்த மதிப்பீடுகள் நிறைவு செய்யப்படாத தேவைகளுக்குட் பட்ட எஃகிலிருந்து செய்யப்படும் பண்டங்களின் உற்பத்தி பற்றிய நோக்கமுள்ள கொள்கையை நிறைவேற்றும் வாய்ப்பைக் கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை.

மைய வெப்பம் உண்டாக்கும் சாதனங்கள், பொது நலப் போக்குவரவு ஆகியவற்றை உற்பத்தி செய்தல்; குறைந்த அளவே விலையுள்ள பல அடுக்கு மாடிக் குடியிருப்புகள் கட்டுதல், சாக்கடைகளைத் தூய்மைப்படுத்தும் கருவிகள் அமைத்தல், கழிவுப் பொருளை மறுசுழற்சி முறையில் பயன் படுத்தும் சாதனம் அமைத்தல் ஆகியவற்றைத்தான் நாம் இங்கே காண்கிறோம்.

ஏனெனில் மறுபுறம், மிகுந்த உற்பத்தியின் மீது, பணமுதலீட்டின் திசைவழி இருந்தபோதிலும், உழைப்பைச் சிக்கனப்படுத்தும் உற்பத்தி முறை தொழிலாளிகளின் நலன்களுக்கோ, நுகர்வோர் நலன்களுக்கோ ஏற்றதாக இல்லை. ஆனால் அவை, அந்தந்தக் கம்பெனிகளின் பெரும் பங்குதாரர்களுக்கும், அந்தக் கம்பெனியின் சொந்தக்காரர்களுக்கும்தான் பெரும் இலாபத்தைத் தருவனவாக உள்ளன.

இந்த வகையான கொள்கை பெரும் சர்வதேசிய எஃகுக் கம்பெனிகளால் பின்பற்றப்படும் தந்திரங்களை மேலும் வலிமைமிக்கதாக ஆக்குகிறது. இந்தத் தந்திரங்கள் நான்கு முக்கியக் காரணிகளால் நிர்ணயிக்கப்பட முடியும்.

— புதிய இரும்புக் கனிகளையும், நிலக்கரிப் படிவங்களையும் பயன்படுத்துவதில் பங்கு பெறுதலும், ஐரோப்பாவிற்கு அந்தப் பொருட்களை இறக்குமதி செய்வதில் பங்கு பெறுதலும்.

— இரும்புக்கனி வளத்திலும், ஆற்றலைப் பெருவாரியாக உற்பத்தி செய்யும் மூலப் பொருட்களிலும் வளமை பெற்ற வளரும் நாடுகளிலுள்ள இரும்பு எஃகுத் தொழிற்சாலைகளில் செய்யப்பட்ட குறை நேர்த்திப் பொருட்களை இறக்குமதி செய்தல்.

— கடலையொட்டி இட அமைவு பெறும் நிறுவனங்களில் குறை நேர்த்திப் பொருட்களின் உற்பத்தியானது தொடர்ந்து குவிவது.

— கனிகளிலிருந்து உலோகத்தை இயற்கை வாயுக்களின் உதவியால் அமைக்கும், வரம்பிற்குட்பட்ட திறன்படைத்த "மிகச்சிறு எஃகுத் தொழிற் கூடங்களை"க் கட்டுவது.

சுருங்கக் கூறினால் இலாப விகிதங்களை உயர்த்துவதற்கு, இரும்பு எஃகு ஏகபோகங்கள், வளர்ந்து வரும் நாடுகளுக்குத் தங்களுடைய உற்பத்தியின் ஒரு

பகுதியை மாற்றுகின்றன. மேலும் அவைகள் தங்கள் நாட்டில் ஒரு குறிப்பிட்ட வகைப் பண்டங்களை மட்டுமே உற்பத்தி செய்வதில் மிகுந்த கவனத்தைச் செலுத்திக் கொண்டு குறைந்த இலாபம் தரும் தொழிற்சாலைகளை மூடி விடுகின்றன. ஐரோப்பாவில் இந்தத் தந்திரம் எந்த அளவில் நிறைவேற்றப்பட முடியும் என்பதை ஆராய்வதற்கு முன்னர் பொதுவாக மறுசீரமைப்பு யுக்தி பற்றிய சிலவற்றைக்கூற வேண்டுவது இன்றியமையாததாகும்.

மூலப்பொருட்களுக்கும், ஆற்றல் தோற்றுவாய்களுக்கும் அருகிலிருப்பது, முழுதாகச் சுரண்டப்படக்கூடிய நயமான குறைந்த கூலியில் கிடைக்கக்கூடிய உழைப்புக்கு அருகில் இருப்பது, உற்பத்தி அமைந்திருக்கும் நாடுகளின் அரசுகளின் உதவித் தொகைகள், வரிச்சலுகைகள் போன்ற புறவயக்காரணிகள் இலாப விகிதங்களை அதிகப் படுத்துவதையே லட்சியமாகக் கொண்ட கொள்கைகளை நியாயப்படுத்துவதற்குப் பயன்படுகின்றன. எல்லோருக்கும் நன்மை பயக்கக்கூடிய வழியில் வளரும் நாடுகளின் செல்வங்களை ஜனநாயக முறையில் பேணிக்காப்பதற்கு இன்றியமையா முன் தேவையாக விளங்குகிற ஒருபுதிய உலக பொருளாதார அமைப்பு முறையை நிறுவுவதற்கான முயற்சி பற்றி நாம் இங்குகூறவில்லை.

உதாரணமாக எஃகு ஏகபோகங்களுக்கு மிகவும் இன்றியமையாத நாடுகளாக பிரேசில், தென் ஆப்பிரிக்கா, சௌதி அரேபியா, சென்ற காலத்திய ஈரான் ஆகியவை விளங்குகின்றன. அதாவது அடக்கு முறையைப் பெருமளவில் கையாள்கிற நாடுகளாக விளங்குகின்றன.

இவ்வாறாக மனித நேயத்துடன் எந்தவிதமான தொடர்புமில்லாத இலட்சியங்களுக்காக ஐரோப்பாவின் இரும்பு, எஃகுத் தொழிலின் ஒருபகுதி வேறுசில நாடுகளுக்கு மாற்றப்படுகிறது. அதே வேளையில் உள்நாட்டின் தொழிற்சாலைகள் "மிகக் குறைந்த நஷ்டங்களுடன்" மூடப் படுகின்றன.

இந்த நிகழ்ச்சிப்போக்கு தேசிய அரசுகள் இரும்பு எஃகுத் தொழிற்சாலை மூலதனத்தின் ஒருபகுதியை வாங்குவதில் தொடங்குகிறது.

— இத்தாலியில் இஸ்டிட்டுட்டோ டெல் ரிக்கோஸ்ட் ருசியோனி இண்டஸ்ட்ரியலி என்ற நிறுவனத்தின் மூலம் அரசு இட்டால்சிடர் கம்பெனியின் மூலதனத்தைப் பெருமளவு பெருக்கியுள்ளது.

— ஜெர்மன் கூட்டுக் குடியரசில் குருப் அர்பெட் என்ற நிறுவனத்திற்கு ஏறத்தாழ 20,000 மில்லியன் பிராங்குகள் உதவித் தொகையாக அரசு வழங்கியுள்ளது.

— கிரேட் பிரிட்டனில் பிரிட்டிஷ் எஃகுக் கார்ப்பரேஷன் 2000 மில்லியன் பவுண் ஸ்டெர்லிங்குகளை உதவித் தொகை உருவிலும், கடன் வட்டிக் கழிவாகவும் பெற்றிருக்கிறது.

— பிரான்சில் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சி நிதி பல ஆயிர மில்லியன் அளவு முதலீட்டில் தன்னுடைய பங்கை உயர்த்திக் கொண்டுள்ளது.

— பெல்ஜியத்தில் அரசு தனது இரும்பு மற்றும் எஃகுத் தொழிலின் கடன்களில் ஒருபகுதியைப் பங்குகளாக மாற்றிக் கொண்டிருக்கிறது. இடைக்கால எல்லை மாற்றவியலாக் கடன்களுக்கான செலுத்தலை ஏற்றுக் கொண்டுள்ளது.

இவ்வாறாக ஐரோப்பாவில் எஃகுத் தொழில் முழுதும் இலாபம் தருவதாக இல்லாததால், ஒரே மாதிரியான பாதையில் செல்கிறது. இப்போது அரசினால் ஆதரவளிக்கப் படுகிறது. இதன் விளைவாக, ஏகபோகங்களின் நிதி நிலைமை பாதுகாக்கப்பட்டுள்ளது. ஆனால் அதே வேளையில் அந்த ஏகபோகங்கள் முடிவு செய்வதில் இன்னும் பெரும் பங்குடையவையாகவே உள்ளன. இதுதான் மூலதனத்தின் மதிப்பைக் குறைப்பதற்குச் சிறந்த உதாரணமாகத் திகழ்கிறது. இதுதான் எஃகு ஏகபோகங் களுக்குத் தங்களுடைய இலாபங்களின் விகிதத்தை உயர்த்துவதைக் கைகூடும் செயலாக ஆக்குகிறது.

ஐரோப்பிய இரும்பு எஃகு ஏகபோகங்களின் உள்விவகாரங்களில் ஏற்பட்டுள்ள தேசிய அரசாங்கங்களின் ஒரேவேளைத் தலையீடானது எதிர்பாராத நிகழ்வல்ல. நெருக்கடியின்போது சர்வதேச ஏகபோகங்களின் யுக்தி வலிமையடைந்துள்ளதென்று அது காட்டுகிறது. ஏனென்றால் தேசிய மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் அவற்றினுடைய நலன்களைக் காப்பதற்காக வேண்டிய முடிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

உண்மையில் அடுத்த படிநிலையில் கமிஷனால் முன் வைக்கப்பட்ட இந்த நோக்கங்கள் நிறைவேற்றப் பட்டவுடன் ஏகபோகங்கள் மீண்டும் ஒருமுறை ஐரோப்பாவில் தங்களுடைய செயல்களை மேம்பாடடையச் செய்ய முடியும். ஏனெனில் மொத்த இலட்சியங்களின் கட்டமைப்புக்குள் புதிய முதலீடுகள் அனைத்தும் அடங்கியதாக இருக்க வேண்டுமென ஐரோப்பியப் பொருளாதார சமூகத்தின் திட்டம் எதிர்பார்க்கிறது. இந்தத் திட்டச் செயல்களுக்கு ஒத்திசைவானதாக இல்லாத முதலீடு களுக்கு தேசிய அரசுகளிடமிருந்து எந்த வகையான உதவித் தொகைக்கும் கமிஷன் அனுமதியளிக்காது அல்லது பொது மக்களிடமிருந்து எவ்வகை ஆதரவும் கிடைக்காது.

ஏகபோகங்களுக்கு இது ஏன் மிகுந்த நன்மை பயப்பதாக உள்ளது? ஏனெனில் அடிப்படையில் இந்த மறுசீரமைப்பு இரும்பு எஃகுத் தொழிலில் முதலீடு செய்யப் பட்ட பணத்தின் ஓரிடச் செறிவையும் சர்வதேசத் தன்மையையும் மேம்பாடடையச் செய்கிறது. மேலும் பெரிய அளவு இணைப்பமைப்புகளையும், முக்கியமாக, சர்வதேச இணைப்பமைப்புகளையும் ஏற்படுத்துவதற்காகத் திட்டமிடப்படுகிறது. அதே வேளையில் இந்தக் கொள்கையும், ஒன்றிணைப்பைப் பற்றிய உடன்பாடும் பல- மற்ற கம்பெனிகளை மூடுவதற்கு வழி செய்கின்றன.

ஓர் உதாரணத்தை எடுத்துக் கொண்டால், ஒருபுறம் குருப் அர்பெட் என்ற நிறுவனமும், டிரியாங்கிள், டி-

சார்லெராய் என்ற நிறுவனமும் (ஹால்நாட்-சாம்பிரே, தை-மார்சினெல்-மான்சியூ, கர்லாம்) ரோல்டு ஸ்டீல் தயாரிப்புக்காகப் பத்துத் தொழிற்சாலை இணைப்பு ஒன்றை ஏற்படுத்த ஓர் உடன்பாடு செய்து கொண்டுள்ளன. மறுபுறம் அதுஸ், டெனயின் நிறுவனங்கள் மூடப்பட்டிருக்கின்றன. லாங்வியில் ஏராளமான வேலைபறிப்பு நிகழ்ந்து ஒரு மாவட்டமே பலியாகியிருக்கிறது.

ஐரோப்பிய பொருளாதார சமூகம் இம்மாதிரியான மறுசீரமைப்புச் செய்வதற்கு அறநெறி ஆதரவும், பொருள் ஆதரவும் தந்துதவுகிறது. 200,000 மில்லியன் பெல்ஜிய பிராங்குகளில் கால்பகுதி குறைந்த வட்டி விகிதத்தில் கடனாகக் கொடுக்கப்பட்டது; 10,000 மில்லியன் அங்குள்ள தொழிலாளிகளுக்கு மறுபயிற்சிதரவும், 3,000 மில்லியன்கள் இரும்பு-எஃகு பற்றிய ஆராய்ச்சிக்காகவும் கொடுக்கப்பட்டன.

மூன்று காரணங்களுக்காக இரும்பு எஃகுத் தொழிலின் மறுசீரமைப்பைப்பற்றி ஆராய்ந்தறிந்தோம். முதலில் இந்தத் தொழில் ஐரோப்பிய பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்குகிறது. இந்தத் தொழில் தான் உற்பத்தி சாதனங்களை உற்பத்தி செய்வதைக் கைகூடும் செயலாக்குகிறது. ஆகவே இந்தத் தொழிலை ஜனநாயகக் கட்டுப்பாட்டிற்குட்படுத்துவது மிகவும் இன்றியமையாதது. ஏனெனில் குறிப்பாக போருக்கான கருவிகளையும் சாதனங்களையும் உற்பத்தி செய்வது இந்தத் தொழிலையே சார்ந்துள்ளது.

இரண்டாவதாக, இப்போது இரும்பு-எஃகுத் தொழிலில் நடந்துவரும் மறுசீரமைப்பு ஒன்றிணைந்த ஒரு பன்னாட்டு சூட்சுமத்தின் இருப்பை உறுதிப்படுத்துகிறது. தேசிய அரசுகள் தங்கள் ஏகபோகங்களுக்கு ஆதரவாக மேற்கொள்ளும் கொள்கை சமுதாயம் முழுமையும் பின்பற்றுகிற அதே மாதிரியான கொள்கையால் மேலும் வலுவடைகிறது. இது முழுதும் புதுமையான ஒரு விஷயமாகும். ஐரோப்பிய

நிலக்கரி மற்றும் எஃகு சமுதாயம் முழுவதற்குமான உருவாக்கம் பறிய உடன்பாடானது இரும்பு, எஃகுத் தொடர்பில் உதவி வழங்குதல், சில கொள்கைகளை நிறைவேற்றுதல் முதலியவற்றை எதிர்நோக்கிய போதிலும், ஒரு தேசிய மட்டத்திலான சந்தை சூட்சுமமும், தேசிய அரசுகளினிடமிருந்து வரும் ஆதரவும் பலனின்றிப் போன பிறகே இந்தத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென ஏகபோகங்கள் வலியுறுத்தின.

மூன்றாவதாக, தொழிலாளிகளின் நலன்களுக்கெதிராக இந்த மறுசீரமைப்பு நிறைவேற்றப்பட்டதால், 1975 இல் ஐரோப்பாவில் இரும்பு-எஃகுத் தொழிலில் 781,564 தொழிலாளிகள் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர். 1978 ஜூன் மாதத்தில் 717,000 தொழிலாளர்களே வேலையில் இருந்தனர். 64,000 வேலைகள் பறிபோயின.மறுசீரமைப்புத் திட்டத்தின்படி 1980 க்குள்ளாக ஏறத்தாழ, 580ஆயிரத்துக்கும் 624 ஆயிரத்துக்கும் அது மேலும் குறைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. 1975 ம் ஆண்டின் புள்ளி விபரங்களுடன் ஒப்பிடும் பொழுது இது ஏறத்தாழ 150,000 வேலைகள் நீக்கப்படுவதற்கு நிகராகும். டேவிக்னானின் கணிப்பின்படி நிறுவனங்கள் மீண்டும் மாற்றியமைக்கப்படுவதும், புதிய நிறுவனங்கள் தோற்றுவிக்கப்படுவதும் அதைப் பின் தொடரும் என்றாலும் வேலையிலிருந்து நீக்கப்பட்ட இரும்பு-எஃகுத் தொழிலாளர்கள் இன்னும் வேலையில்லாதோராகவே உள்ளனர். டேவிக்னானின் திட்டம் வேலைக்கு உத்திரவாதம் தருவதற்கு ஏதும் செய்யவில்லை. தொழிலை மறுபடியும் மாற்றியமைப்பது முழுவதுமாக தனியார் துறைக்கு மாற்றப்பட்டு விட்டது அது சந்தைச் சூட்சுமத்தின் செயல் முறைகள் முழுவதையும் சார்ந்துள்ளது. ஆனால் உற்பத்தித் திறன்களைக் குறைப்பதை வேலையிலிருந்து தொழிலாளி களை நீக்குவதைத் தவிரப் பிற முறைகளை மேற்கொண்டு நிறைவேற்றியிருக்கலாம். உதாரணமாக உழைக்கும் நாட் களின் எண்ணிக்கையைக் குறைப்பது, உழைப்புத்

தீவிரத்தைக் குறைப்பது, மேலும் அதிகமான வேலை நேர முறைகளை ஏற்படுத்துவது முதலிய முறைகளை இங்கே கூறலாம். ஆனால் அவைகள் ஏகபோகங்களின் நலன்களுக்கு எதிரானவைகளாகும்.

### இ. 2. பிற தொழில்கள்

குறைவான ஏகபோக மயப்பட்ட மற்ற தொழில்களில்—தொந்தரவுக்குட்பட்ட மற்ற தொழில்களில்-ஐரோப்பியப் பொருளாதார சமுதாயக் கொள்கையானது மேலும் மோசமாக வரையறுக்கப்பட்டது,

உதாரணமாக பஞ்சாலைத் தொழிலில் 1970 களின் தொடக்கத்திலிருந்து வளர்ச்சி விகிதம் குறைந்து வந்துள்ளது. பஞ்சாலைத் தொழில், தையற் தொழில் ஆகியவற்றை பற்றிய பொதுக் கொள்கை கமிஷனால் 1976 ஜூனில்தான் உருவாக்கப்பெற்றது-இது ஒருபுறம் புதிய நிலைமைகளுடன் இணைந்தமைதலுடன் சேர்ந்தெழும் தொடர்ந்த முன்னேற்றத்தைப் பரிந்துரைக்கிறது. மறுபுறம் போட்டி வளரும் தன்மை வேலைகளில் குறைப்பை ஏற்படுத்தும் நிலையில் அதிலிருந்து விளையும் சமூகப் பிரச்னைகளை ஆராய்வது அவசியம் என்று தெரிவிக்கிறது. வேறுவகையில் கூறினால் அது சந்தை சக்திகளின் சுதந்திரமான செயல்கள் என்று பொருள் தருகிறது. சிறிய மற்றும் நடுத்தர மட்ட கம்பெனிகள் அடங்கிய ஒரு தொழிலில், பெரிய தொழில் களின் சார்பான செறிவின் வலிமைபாட்டிற்கு வழிசெய்யக் கூடும் அதே வேளையில் மூன்றாவது உலக நாடுகளிலிருந்து வரும், இறக்குமதியைப் பாதிக்கிற பஞ்சாலைத் தொழிலுக்கானமூலப்பொருட்கள் பற்றிய உடன்பாடுகளைக் கமிஷன் மீள்பார்வை செய்தது. இது வளரும் நாடுகளில் உற்பத்தி செய்யப்படும் அடிப்படைத் தொழிற் பொருட் களின் போட்டியைக் கட்டுப்படுத்துகிறது. பெருமளவில் ஓரிடத்தில் குவிந்திருக்கிற செயற்கை நூலிழை உற்பத்தி செய்வது போன்ற துணைத் தொழில்களைப் பொருத்தவரை வேறொரு திட்டமுறை கையாளப்பட்டது. இந்தத் திட்ட

முறை இரும்பு-எஃகுத் தொழிலுக்கான திட்ட முறை போன்றே இருந்தது. இவ்வாறாக,பலவேறு ஏகபோகங்களுக் கிடையில் தனித்துறை ஆற்றலைப் பெருக்கவும், வளரும் நாடுகளுக்குச் சில வகைப் பொருட்களின் உற்பத்தியை மாற்றவும் வழி செய்யும்படி உற்பத்தித்திறன்களைக் கட்டுப் படுத்துவதற்காகப் பண்ட உற்பத்தியாளர்களிடையில் ஓர் உடன்பாடு கையெழுத்தானது. அந்த உடன்பாடு ரோம் உடன்பாட்டிற்கு ஒத்திசைவானதாக இல்லை எனக் கமிஷன் கருதியது. எனவே கமிஷனுடன் இணைந்து தொழிலதிபர்களும் உடன்பாட்டை மீறாமல் தங்களுடைய இலட்சியங்களை நிறைவேற்றிக் கொள்ள முயல்கின்றனர்.

தேசியம் கடந்த தலையீடுகள் கப்பல்கட்டும் தொழிலிலும் குறைவாகவே உள்ளன. 1977 நவம்பரில் கமிஷன் மேற்கொண்ட ஒரு திட்டத்தில் மூன்று வருடங் களுக்கும் மேலான ஒரு காலகட்டத்திற்கு உற்பத்தித்திறன் களின் குறைப்பு எதிர்நோக்கப் பட்டது. ஆனால், பொருளாதாரக் கூட்டுறவிற்கும், வளர்ச்சிக்குமான அமைப்புக்குள்ளோ, ஐரோப்பியப் பொருளாதார சமூகத்திற்குள்ளோ ஆர்வமுள்ள அரசுகள் இத்தகைய கட்டுப்பாடுகளுக்கான ஒரு கொள்கை பற்றிய ஓர் உடன்பாட்டுக்கு வரமுடியவில்லை. ஒரு தேசியங் கடந்த நிறுவனத்தின் உதவியை நாடுவதற்கு மறுப்பது தேசிய மட்டத்தில் இந்தத் தொழில் மிக அதிகமாக ஓரிடத்தில் குவிந்திருப்பதனால் என விளக்கப்படலாம். பிரிட்டிஷ், டச்சு, பிரிட்டன் ஆகிய நாடுகள் இந்தத் தொழிலுக்குச் செய்த தீவிரமான உதவிகளைக் கட்டுப்படுத்தியது என்ற அளவில்தான் கமிஷனின் பங்கு அமைந்திருந்தது.

## அடிக்குறிப்புகள்

1. ஐரோப்பியப் பொருளாதார சமுதாயம் எதனால் உருவாக்கப்பட்டதோ அந்த உடன்பாடு. இது ரோமில் 1957-ல் கையெழுத்திடப்பட்டது.

௨. தேசிய வரவு செலவுக் கணக்குகள் என்பவை உற்பத்தியுடன் தொடர்புற்ற புள்ளி விவரங்களின், முதலாளித்துவ நாடுகளின், சமூக உற்பத்தி, தேசிய வருவாய்களுடன் தொடர்புற்ற புள்ளி விவரங்களின் முறை சார்ந்த குறிப்பாகும்.

௩. "பண்டப் பரிவர்த்தனைச் சூழ்நிலைகள்" என்று மூலப்பொருட்களுக்கான விலைக் குறியீட்டுக்கும், வளர்ச்சி பெற்ற நாடுகளிலிருந்து ஏற்றுமதியாகும் தொழிற்சாலைப் பொருட்களுக்கான ஐ. நா. குறியீட்டுக்கும் இடையிலுள்ள உறவுதான் இங்கே குறிப்பிடப்படுகிறது.

**ரால் கொன்சாலஸ் சொரியானோ**
*மெக்சிகோ கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் பொருளாதார ஆராய்ச்சிக் கமிஷன் தலைவர்.*

## மட்டான வளர்ச்சி பெற்றுள்ள முதலாளித்துவ நாடுகளில் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் பொதுவான சிறப்பியல்புகள்

1970 களில் முதலாளித்துவ அமைப்பு முறையைக் குலுக்கிய நெருக்கடி சென்ற சில பத்தாண்டுகளாக மூலதனத்திரட்சி மிக அதிகமான அளவு தீவிரமடைந்தும், உற்பத்தி வளர்ச்சியடைந்துமுள்ள மட்டான வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடுகளில் பெரும் அரசியல் மாற்றத்தையும், கொந்தளிப்புகளையும் ஏற்படுத்தியது.

இந்த நெருக்கடி இந்த நாடுகளில் முதலாளித்துவ உறவுகளின் வளர்ச்சியானது தொடர்ந்த பொருளாதார வளர்ச்சிக்குக் கண்டிப்பான வரம்புகளை விதிப்பதுடன் புதிய முரண்பாடுகளையும் தோற்றுவிக்கிறது என்பதைக் காட்டுகிறது. குறிப்பாக இந்த நாடுகளில் நிலவுகிற தொழில் நுட்பம் குறிப்பிடத்தக்க அளவு பின்தங்கியிருப்பதனாலும், ஒருபுறம் விஞ்ஞான வளர்ச்சிக்கும், மறுபுறம் பொருளாயத உற்பத்திக்கும் இடையே தொடர்பு இல்லாமையினாலும் இந்தப் புதிய முரண்பாடுகள் தோன்றுகின்றன. அதே வேளையில் இந்த நாடுகளில் ஏற்பட்டுள்ள சமூக வளர்ச்சியும், பொருளாதார வளர்ச்சியும் ஒரு புதிய திருப்பு

முனையை அடைந்து கொண்டிருக்கின்றன. அதாவது, சார்புநிலையில் உள்ள அரசு-ஏகபோக முதலாளித்துவ அமைப்பின் உருவாக்கம் என்ற திருப்புமுனையை அடைந்து கொண்டிருக்கின்றன. இதன் முக்கியக் காரணம், சக்தி வாய்ந்த ஏகபோகங்களின் துறை ஒன்று இந்த நாடுகளில் தன்னை நிலைநிறுத்திக் கொண்டு தனது பிடிகளை உலக முதலாளித்துவ சந்தையை நோக்கி நீட்டிக் கொண்டிருக்கிறது என்பதே ஆகும்.

இந்த அடிப்படையில் மெக்சிகோ போன்ற நாடுகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் இயல்பு, வேகம், திசை ஆகியவற்றின் தன்மைகளைப் பகுத்தாராய்வது குறிப்பிடத்தக்க அளவு இன்றியமையாதது ஆகும். இந்த வளர்ச்சியைப் பற்றிப் படித்தறிவது, முதலாளித்துவ முறை வளர்ச்சி பிற்பட்ட தன்மையை நீக்குவதற்கும், உற்பத்தி சக்திகளின் அனைத்துத் துறைகளின் வளர்ச்சிக்கும் வழி செய்கிறது எனக் கூறும் போலிவாதத்தை நாம் தெளிவாக அறிந்து கொள்ளுமாறு செய்கிறது.

மட்டான அளவே முன்னேறியுள்ள முதலாளித்துவ நாடுகளின் தொழில் நுட்ப முன்னேற்றத்தின் பாதையை அறிந்து அதன் சமூக விளைவுகளை ஆராய்ந்து பார்த்தால், போர் முடிந்த காலத்திலிருந்து முதலாளித்துவ முறையின் தீவிர வளர்ச்சிக்கும், தேசிய விஞ்ஞானத்திற்கும் அடிப்படைத் தேசியத் தொழில்களுக்கும் ஒரு நெருக்கமில்லாமல் இருந்திருக்கிறது என்பது தெளிவாகிறது.

விஞ்ஞானம்-தொழில் நுட்பம் ஆகியவற்றின் பல்வேறு கிளைகளிலும் நிலவும் பிற்பட்ட தன்மையானது தங்களுடைய வழக்கொழிந்த தொழில் நுட்பத்தைக் கொடுத்து, உள்நாட்டுச் சந்தைகளைப் பிடித்துக் கொண்டுள்ள வெளி நாட்டு ஏகபோகங்களும், தேசிய ஏகபோகங்களும் ஏராளமான லாபம் பெறுவதற்குப் பயன்

படுத்தப்படுகிறது. அதே வேளையில் அந்த நாட்டு மக்களின் குறைந்த கல்வித்தரமும், பணமுதலீட்டிற்குத் தேவையான உள்நாட்டு வகை தொகைகளின் வரம்புகளும் பல தொழில்களில் குறைவான உற்பத்தித்திறனைத் தோற்றுவித்துள்ளன. நடைமுறையில் பயன்படுத்தப்படுகிற ஒரு சில முன்னேற்றமடைந்துள்ள தொழில் நுட்ப வளர்ச்சிகளானவை உயர்வான வருமானம் உள்ள குழுக்களுக்காகவே உற்பத்தி செய்கின்றவைகளும், பெருமளவு ஏகபோகத் தன்மையாக்கப்பட்டவைகளுமான ஒரு சில தொழில்களினால் மேற்கொள்ளப்படுகின்றன.

வேறு வார்த்தைகளில் சொன்னால் தொழில் நுட்ப முன்னேற்றம் மூலதனம் மிக அதிகமான அளவு ஈடுபடுத்தப்பட்டிருக்கிற தொழில்களில் மட்டுமே காணப்படுகிறது. உற்பத்தி அடித்தளத்தில் எந்தவிரிவாக்கத்துடனும், அல்லது பொருளாதார வடிவமைப்பில் எந்த முக்கியமான மாறுதல்களுடனும் புதிய தொழில் நுட்பத்தைப் புகுத்துவது தொடர்பு கொள்ளாத தொழில்களில் மட்டுமே காணப்படுகிறது.

1970 களில் நிகழ்ந்த முதலாளித்துவ நெருக்கடி, முதலாளித்துவ நாடுகளின் பொருளாதாரங்களின் பொதுவான இயல்புகளை எல்லோரும் அறியுமாறு வெளிப்படுத்தியது. அந்தச் சொல்லின் உண்மையான பொருளில் அது சர்வதேசத் தன்மை கொண்டதாயிருந்தது. இந்த மிகப் பெரும் பொருளாதார மாற்றங்கள் ஏகாதிபத்திய சக்திகளையும் முதலாளித்துவ அமைப்பு முறையின் ஓரக்கரைகளையும் பாதித்தது. இந்த ஏகாதிபத்தியங்களின் பெரும் இலாபங்கள், பெரும்பாலான சமயங்களில் ஒரு புதிய மட்டத்திற்கு சமுதாயத்தின் உற்பத்தி சக்திகளை உயர்த்திவிட்டிருக்கக் கூடிய எந்த விதமான மேம்பாடடைந்த விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றங்களும் பயன்படுத்தப்படாமல், அந்த நெருக்கடியை வெல்வதற்குப் பயன்படுத்தப்பட்டன. ஆனால் ஏகபோகங்கள் தங்களுக்கு நலன்

களைத் தருமென உறுதியாகத் தெரியும் போதும், அதன் பயன்கள் அனைத்தையும் தாங்களே தொடர்ந்து அனுபவிக்க முடியும் என்று உறுதியாய்த் தெரியும் போதும், தங்களுடைய ஆதிக்கத்தைத் தொடர்ந்து நீடிக்க உதவும் மற்றொரு கருவியாக விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றத்தைப் பயன்படுத்தி வருகின்றன.

1970 களின் நெருக்கடியின் விளைவாக தங்களுடைய பொருளாதாரங்களில் ஏற்பட்ட நஷ்டங்களைப் படிப்படியாக, நீண்ட காலக்கெடுவில் ஈடு செய்வதற்கு முக்கியமான முதலாளித்துவ நாடுகளின் குழுவொன்று ஒரு கொள்கையை மேற்கொண்டது. இந்தக் குறை நிறைவூட்டும் செயலின் பளு முழுவதும் தொழிலாளிகளின் தோளில் ஏற்றப்பட்டிருக்கிறது. குறுகலாகவும், குறைவாகவும் வளர்ச்சி பெற்ற உற்பத்தி அடித்தளத்தையுடைய நாடுகளின் குறிப்பாக லத்தீன் அமெரிக்க நாடுகளின் சமூக, பொருளாதார நிலைகளை உலக முதலாளித்துவச் சுழற்சியினுடைய இன்றைய படிநிலையின் இந்தச் சிறப்பியல்பானது பாதித்திருக்கிறது.

முதலாளித்துவப் பாதையில் வளர்ச்சியடைந்து வரும் ஒரு நாடு உள்நாட்டு மூலதனத்திரட்சிக்கான ஏறத்தாழ வளர்ச்சி யடைந்த ஒரு அடித்தளத்தை யுடையதாய் இருந்தாலும்கூட முக்கியமான ஏகாதிபத்திய சக்திகளின் பெரும் விஞ்ஞான, தொழில் நுட்ப ஏகபோகத்தைத் தவிர்க்க முடியாது என்பது தெளிவாகி வருகிறது.

அதற்கு மாறாக, விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சி களில் உலக முதலாளித்துவ சந்தையானது புதுவகையான தொரு சார்பு நிலையை (அந்நிய நாட்டுத் தனியுரிமைப் பட்டயங்களைச் சார்ந்திருப்பது) உருவாக்குவதில் குறிப்பிட்ட அளவு முக்கியத்துவம் உடையதாக ஆகி வருகிறது. அந்நிய நாட்டுத் தொழில் நுட்பத்தைப் பயன் படுத்துவதற்காகக் கொடுக்கப்படும் பணம் வேகமாக

வளர்ந்து வருகிறது. அது ஏகாதிபத்திய சக்திகளுக்கு இலாபத்தை மாற்றித் தருவதற்கு ஒரு முக்கியமான கருவியாக ஆகிக் கொண்டு வருகிறது.

விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் போக்கில் மூலதனத்திரட்சிக்கும், விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றத்துக்கும் ஒரு நெருங்கிய உட்தொடர்பு இருக்கிறது என்பதைத் தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது. சர்வதேச சந்தையில் லத்தீன் அமெரிக்காவில் பொருளாதார ரீதியில் மிக அதிகமான வளர்ச்சியடைந்துள்ள நாடுகளின் நிலைகள்கூட சாதகமான நிலையில் இல்லை. அதே வேளையில் முதலாளித்துவ நாடுகளில் விஞ்ஞான ஆராய்ச்சிக்காகவும், புதிய தொழில் நுட்பத்தை அறிமுகப் படுத்துவதற்காகவும் ஒதுக்கப்படுகிற நிதியின் அளவு மேலும் மேலும் அதிகரித்து வந்த போதிலும் ஆராய்ச்சிக்காகச் செலவிடப்படும் நிதியின் பெரும் பகுதி போர் தொடர்பான தொழில்களுக்கான ஆராய்ச்சிக்கும், அது தொடர்பான சேவைகளுக்கான ஆரர்ய்ச்சிக்கும் செய்யப்படுகிற உற்பத்தித் திறனற்ற செலவுகளாகவே உள்ளன.

இன்று ஆராய்ச்சியிலும், மேம்பாட்டிலும் ஏற்பட்டுள்ள வளர்ந்து வரும் செலவின் விளைவாக ஒவ்வொரு ஆண்டிற்கும் விஞ்ஞான - தொழில் நுட்பம் தொடர்பான வேலையாட்களை வேலைக்கமர்த்திக் கொள்வது சராசரி 4.1 சதவிகிதம் அதிகமாக உயர்ந்து வருகிறது. அது தொழிலாளர்களின் எண்ணிக்கைக்குரிய பொதுவான வளர்ச்சி விகிதத்திற்கு 1.6 மடங்கு அதிகமானதாகும். சென்ற நெருக்கடியின் போது விஞ்ஞான-தொழில் நுட்ப பணியாட்களின் வளர்ச்சி விகிதம் ஓரளவு குறைவானதாக இருந்தது. இன்று அது மீண்டும் உயர்ந்து கொண்டு வருகிறது. விஞ்ஞான-தொழில் நுட்பத் தொழிலாளிகளிடையே மிகுந்த உயர்வான விகிதங்கள் சோஷலிச நாடுகளில் ஏற்பட்டிருக்கின்றன. அவைகள் 1974-ம் ஆண்டு மக்கள் தொகையில் 10,000 பேருக்கு விஞ்ஞானப் பணியாளர்களின் எண்ணிக்கை

பற்றிய பின்வரும் புள்ளி விவரங்களில் காணப்படுவதைப் போல் குறிக்கப்பட முடியும்:

மெக்சிகோ ........................... 1.6
ஆர்ஜண்டைனா ................. 2.8
அமெரிக்க ஐக்கிய நாடுகள் .... 25.9
சோவியத் ஒன்றியம் ............... 52.7

விஞ்ஞானப் பணியாட்களின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள பெருக்கத்தை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான செலவுகளில் ஏற்பட்டுள்ள பெருக்கத்துடன் ஒப்பிடும் பொழுது ஏகபோக முதலாளித்துவத்தின் கீழ் இந்தத் துறையில் ஆழ்ந்த முரண்பாடுகள் உள்ளன என்பது நமக்குத் தெளிவாகிறது.

தொழில் நுட்ப முன்னேற்றத்தின் ஏகபோகம் உற்பத்தி சக்திகளின் முன்னேற்றத்திற்குத் தடையாக விளங்குகிறது. அதைக் காட்டிலும் முக்கியமான விஷயம் என்னவென்றால் இந்த முன்னேற்றங்களை இராணுவ உற்பத்தி போன்ற சமுதாயத்திற்குப் பேரிடர் விளைவிக்கும் எல்லைகளை நோக்கித் திருப்பி விடுவதுதான்

1978இல் ஆராய்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் முதலீடு செய்யப்பட்ட வகை தொகைகளைப் பற்றி நாம் ஆராய்வோம்.

மெக்சிகோ ........................... 0.2
அமெரிக்க ஐக்கிய நாடுகள்... 2 6
கிரேட் பிரிட்டன் .................. 1.3
ஜப்பான்.................................1.9
ஆர்ஜெண்டைனா.....................0.3

மிகவும் வளர்ச்சியடைந்துள்ள லத்தீன் அமெரிக்க நாடுகளின் கூட்டத்தில் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் பொதுவான சிறப்பியல்புகள் கீழே கூறப்படுவது போல சுருக்கிக் கூறப்படலாம்:

— விஞ்ஞான தொழில் நுட்பத்திற்கான செலவுகள் வளர்ந்து கொண்டே வந்த போதிலும், ஏகாதிபத்திய நாடு களுடன் ஒப்பிடும் பொழுது விஞ்ஞான-தொழில் நுட்பத்தில் நிரந்தரமான பிற்பட்ட தன்மை.

— வளரும் செலவுகளையும், வரிச்சுமைகள் குறிப்பிடத் தகுந்த அளவு பெருகுவதையும் உள்ளடக்கிய தொழில் நுட்பத்தை ஏகபோகமாக்குவது.

— தேசிய விஞ்ஞானத்திற்கும், தொழில் நுட்பத்திற்கும் தேசிய தொழில்களுக்குமிடையில் ஒரு ஒன்றிணைந்த சங்கிலிப் பிணைப்பு இல்லாமலிருப்பது.

மெக்சிகோ போன்ற முதலாளித்துவ வளர்ச்சியின் எதிர் மறையான இயல்புகள் மிகுந்துள்ள நாடுகளில் விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றத் துறையில் இதுதான் நிலைமையாகவுள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது. விஞ்ஞான ஆராய்ச்சியின் மட்டம் (மேலேயுள்ள புள்ளி விபரங்கள்) நாட்டின் உற்பத்தி மட்டத்திற்கு ஒத்திசைவானதாக இல்லை. இந்தத் துறையில் லத்தீன் அமெரிக்காவில் உள்ள பெரும் பூர்ஷ்வாக்கள் சர்வதேச ஏகபோகங்களிடமிருந்து சுதந்திரமானவர்களாக இயலாது.

ஆனால் விஞ்ஞான வளர்ச்சியில் பின்தங்கியிருப்பதும் அதை நடைமுறையில் தொழிற்சாலைகளில் பயன் படுத்துவதும், மூலதனத்திரட்சியின் சிறப்பியல்புகளுடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டிருக்கின்றன.

1950 லிருந்து 1970 வரையிலான கால இடைவெளியில் மூலதனத்திரட்சியின் இயல்புகளை, குறிப்பாக 1970 லிருந்து 1976 வரையுள்ள நெருக்கடிக் கால இடைவெளியில் மூலதனத்தின் திரட்சியின் இயல்புகளைப் பற்றி ஆராய்வோம். மூலதனத்திரட்சிக்கான ஒரு அடிப்படையை உருவாக்க மெக்சிகோவுக்கு இருபது ஆண்டுகள் பிடித்தது. அது இப்பொழுது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 28 சதவிகிதத்தை அடைந்துள்ளது. இந்தப் புள்ளி விபரம்,

இந்தக் கால இடைவெளியின் தொடக்கத்தில் இருந்த மட்டமான 17 சதவிகிதத்துடன் ஒப்பிடும் பொழுது மிகவும் சிறப்பான முக்கியத்துவம் உடையதாக ஆகிறது.

ஆனால் கேந்திரமான தொழில்களான மின்னணுத் தொழில்-பெட்ரோலிய இரசாயனத் தொழில் முதலியவற்றைப் பற்றிக் கவலைப்படாமல் விட்டு விட்டாலும்கூட, உலோகங்களைப் பதன் செய்யும் தொழில், விவசாயம் ஆகிய பெருந் தொழில்களை நவீனமயமாக்கு வதற்குத் தேவையானவற்றைச் செய்ய இது போதுமானதல்ல. குறிப்பாக, ஒன்றாம் டிப்பார்ட்மென்ட்டி னுடைய நிலையான மூலதனத்தின் வளரும் முக்கியத்துவத்தைப் பற்றி ஆராயும் பொழுது (உற்பத்தி சாதனம்) மெக்சிகோவில் மூலதனத்திரட்சி நிகழ்ச்சிப் போக்கை வசதிக்காக இருபகுதிகளாகப் பிரித்துக் கொள்ளலாம். இந்த உற்பத்தி சாதனம் பெரும்பாலும் மூலகப்பொருட்களுடன் ஓரளவு மின்சாரம், போக்குவரவு களின் சாதனங்களையும் உள்ளடக்கியுள்ளது. (பின்வரும் அட்டவணையைப் பார்க்கவும்) மெக்சிகோவின் தொழில் விரிவாக்கத்தின் முதல் படிநிலை 1950 முதல் 1970 வரை நீடிக்கிறது. அப்போதுதான் மூலதனத்திரட்சியின் துணைக் காரணம் (ஒன்றாம் டிப்பார்ட்மென்ட்டின் நிலைத்த மூலதனம் இரண்டாம் டிப்பார்ட்மென்ட்டின் நிலைத்த மூலதனத்துடன் கொண்டுள்ள உறவு) 0.67 லிருந்து 1.43 ஆக உயர்ந்தது. அது ஒன்றாம் டிப்பார்ட்மென்ட்டில் வளர்ச்சி விகிதங்களைக் குறைப்பதை உள்ளடக்கியதாய் இருந்தது.

மூலதனம் வேகமாகக் குவிக்கப்படுவது, சமத்துவ மின்மைக்கும், சமூகப் பிணக்குகள் தீவிரமடைவதற்கும் தவிர்க்க முடியாதவாறு வழி செய்கிறது. "சம நிலை"யின் குணகம் உண்மையான மொத்த மூலதனத்திரட்சிக்கும் (கொடுக்கப்பட்ட ஓராண்டின் மொத்த மூலதனத்திரட்சி) உற்பத்தி மூலதனத்திரட்சிக்கும் இடையே நிலவுகிற உறவின் மூலம் மறைமுகமாக இந்த முரண்பாடுகளின் அடிப்படையை

வெளியிடுகிறது. அதே வேளையில் இந்தக் குணகம் மூலதனத்தைப் பற்றிக் கிடைக்கக்கூடிய மதிப்பீடு ஒன்றைக் காட்டுகிறது. ஏனெனில் குணகம் எவ்வளவுக்கெவ்வளவு 100 சதவிகிதத்திற்கு அருகில் உள்ளதோ மூலதனத்திரட்சி நிகழ்ச்சிப்போக்கு அவ்வளவுக்கவ்வளவு சமநிலை கொண்டுள்ளது. அவ்வளவுக்கவ்வளவு இலாபத்தின் சராசரி விகிதத்துடன் வருங்கால லாபங்கள் ஒத்திசைவாய் இருக்க வாய்ப்பு உள்ளது.

ஆனால் குறைந்த வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளின் நிலைமை தெளிவான முதலீட்டின் குறைவேயாகும் (சமநிலை ஒன்றைக் காட்டிலும் குறைவாக உள்ள குணகத்துடன்). இவ்வாறாக மெக்சிகோவின் சிறப்பியல்பு இந்தக் கால இடைவெளியின் தொடக்கத்தில் ஒரு சமநிலையின்மை இருந்ததுதான். ஏனெனில் அந்த நேரத்தில் பணமுதலீடு மூலதனத்திரட்சியின் 75 சதவிகிதமே இருந்தது. 1970 களின் தொடக்கத்தில் ஒரு சமநிலையின்மை இருந்த போதிலும் அதன் பின்னர் உற்பத்தி விரிவாக்கம் செய்யப்பட்டபோது பொருளாதாரம் ஒரே சீரானதாயிற்று. 1976 வரை நிலைமை மிகவும் இக்கட்டுகள் நிறைந்ததாகவே இருந்தது. அப்போது இன்னும் முதலீடு மிகவும் குறைவாகவே இருந்த போதிலும் மூலதனத்திரட்சி 75 சதவிகிதத்தை அடைந்தது. மேலும் இரண்டுமுறை 1950லும் 1976 லும் தேசிய பணத்தின் மதிப்புக் குறைக்கப்பட்டது. இது மக்களிடையேயிருந்த மனநிறைவின்மையை மிகுதிப் படுத்தியது. உலக முதலாளித்துவத்தின் மீது சார்ந்திருப்பதை மேலும் மிகுதிப்படுத்தியது—குறிப்பாக வட அமெரிக்கச் சந்தையுடன் விரைவான ஒன்றிணைப்பு ஏற்படுத்தப் பட்டவுடன் மிகுதியாயிற்று.

## அட்டவணை-1

1950 க்கும் 1976 க்கும் இடையில் மூலதனத்திரட்சியின் செயல்திறன் (1960 விகிதத்தில்-மில்லியன் பிசோக்களில் கணக்கிடப்பட்டது)

| | 1950 | 1960 | 1970 | 1976 |
|---|---|---|---|---|
| உள்நாட்டு மூலதனத் திரட்சியின் அடித்தளம் | 51,540 | 31,456 | 74,506 | 114,024 |
| (டிப்பார்ட்மென்ட் I (C1) உடைய, நிலையான மூல தனம் | 13,704 | 35,807 | 72,653 | 111,668 |
| (டிப்பார்ட்மென்ட் ii (C2) உடைய) நிலையான மூலதனம் | 20,308 | 25,095 | 50,473 | 87,075 |
| உற்பத்தியின் திரட்சி K* | 11,511 | 29,469 | 66,393 | 85,583 |
| | | சதவிகிதம் | | |
| மூலதனத்திரட்சியின் குணகம் (C1 C2) | 0.67 | 1.02 | 1.43 | 1.2 |
| சமநிலையின் குணகம் K/M | 74.0 | 93.6 | 89.1 | 75 0 |

* இன்றைய விலையில்

1970 களில் ஏற்பட்ட இந்த நெருக்கடிதான் மூலதனத் திரட்சிக்கான உள்நாட்டு அடித்தளம், தேசிய பொருளாதாரத்தின் வளர்ந்து வரும் தேவைகளை நிறைவு செய்ய இயலவில்லை என்ற உண்மையை வெளிப்படுத்தியது.

இப்போது அரசுக்குச் சொந்தமான தொழிற்சாலைகளின் வழக்கமான உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கு வெளிநாடுகளிலிருந்து மிகுதியாக இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்களையும், சாதனங்களையும் சார்ந்ததாக இருந்தது.

விவசாயத்தின் உற்பத்தித்திறன் மிகவேகமாக வீழ்ந்தது. வெளிநாட்டு ஏகபோகங்களோ, பயனற்ற, வழக்காறற்றுப் போன தொழில் நுட்பத்தைக் குறைந்த நலன் தரும் நிபந்தனைகளின் பேரில் தந்துதவ முன் வந்தன. அதே வேளையில் விஞ்ஞானம்-தொழில் நுட்பம் ஆகியவற்றைப் பற்றி மேற்கொள்ளப்பட்ட முதல் ஆய்வுகள் இந்தத் துறையில் வகை தொகைகளின் பற்றாக்குறையை எடுத்துக் காட்டின. இந்த நிலைமை மிகக் குறைந்த வளர்ச்சி மட்டமே யுள்ள வேறு சில முதலாளித்துவ நாடுகளில் இருப்பதைக் காட்டிலும் மோசமாகத்தான் இருந்தது.

மற்றொரு பலமிழந்த நிலையும் வெளிப்பட்டது— கல்வியின் அமைப்பு முறை—அனைத்து மட்டங்களிலும் கல்விக்காகச் செலவிடப்பட்ட தொகை நாட்டின் மொத்த உற்பத்தியில் 2 சதவிகிதமாகவேதான் இருந்தது. கல்வியின் அமைப்பு முறை தேவையின் 50 சதவிகிதத்தைத்தான் கொடுத்துதவ முடிந்தது. குறிப்பாக மேல் படிப்புகள் மிகவும் பலம் குறைந்தனவாக இருந்தன. விஞ்ஞான ஆராய்ச்சியை ஒன்றிணைப்பதற்கான மையங்கள் ஏதும் இல்லை. அதே வேளையில் ஆராய்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் செலவழிக்கப் பட்ட மொத்தத் தொகை உள்நாட்டு உற்பத்தியின் மொத்தத்தில் 0.15 சதவிகிதமாக மட்டுமே இருந்தது.

அதற்கு மாறாக, தொழில் நுட்ப உதவிக்கு ஈடாக செலுத்தப்பட்ட பணத்தின் அளவு அதிகமாகிக் கொண்டே வந்தது. (ஓராண்டிற்கு 15 சதவிகிதமாக) அதே வேளையில் வழக்கொழிந்த, பயனற்றுப் போன தொழில் நுட்பம் விற்பனையாளர்களுக்குப் பெரும் இலாபத்தைத் தந்து கைமாறியது.

1970 களில் தொழில் நுட்பத்தைப் பற்றிய அதிகப் படியான சுதந்திரமான கொள்கை ஒன்றைப் பின் பற்றுவதற்காக மேற் கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் எண்ணெய் மற்றும் பெட்ரோலிய இரசாயன தொழில் களிலும், விவசாயத்திலும் ஆராய்ச்சியை மேம்பாடடையச்

செய்வதற்காக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு முக்கியமான கவனம் செலுத்தப்பட வேண்டும். அந்த நடவடிக்கைகள் இதுவரை எந்தவித சிறப்பான பயன்களையும் அளிக்கவில்லை

இன்று விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சியைத் தூண்டுவதற்கான செயல்களை மெக்சிகோவில் அரசு மட்டுமே செய்கிறது. பெரிய நிறுவனங்களில் பெரும்பாலானவை பன்னாட்டு ஏகபோகங்களின் கிளைகளாகவே இயங்குகின்றன. அல்லது தொழில் நுட்ப உதவியின் அடிப்படையில் அவைகளுடன் பிணைக்கப்பட்டுள்ளன என்பதுதான் அதற்குக் காரணம் ஆகும். நடுத்தர மற்றும் சிறிய அளவு தேசிய நிறுவனங்கள் இன்றைய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துவதேயில்லை. பெரிய கம்பெனிகள் ஆராய்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் மிகக் குறைந்த நிதியே ஒதுக்குகின்றன. இவ்வாறாக ஆராய்ச்சியிலும், மேம்பாட்டிலும் அரசு அனைத்து முதலீட்டில் 80 சதவிகிதத்தை முதலீடு செய்கிறது. இந்த நிதியின் 60 சதவிகிதத்தை அரசே நேரடியாகப் பயன்படுத்துகிறது.

இவ்வாறாக 1970 களில் ஏறத்தாழ 519 மில்லியன் பெசோக்கள் விஞ்ஞான தொழில் நுட்ப ஆராய்ச்சிக்காக ஒதுக்கப்பட்டன. அதில் 4.1 சதவிகிதம் தான் தனியார் துறையிலிருந்தது. 1978 க்குள் தனியார் துறை முதலீடு செய்யப்பட்ட 8 960 மில்லியன் பெசோக்களில் 8.1 சதவிகிதத்தை அடைவதற்கு அதன் பங்கை ஏறத்தாழ இரண்டு மடங்காகப் பெருக்கியிருந்தது. 1970 ல் உள்நாட்டு மொத்த உற்பத்தியில் 0.1 சதவிகிதமாக இருந்த விஞ்ஞான தொழில் நுட்பச் செலவு 1978 ல் 0.4 சதவிகிதமாக உயர்ந்திருந்தது. பெரிய கம்பெனிகளின் இலாப விகிதத்தை உயர்த்துவதும் அதன் மூலம் வளர்ந்துவரும் பன்னாட்டு இணையங்களின் நிர்ப்பந்தங்களுக்கு அவைகள் இணங்காதிருக்கும்படி அவற்றின் வலிமையைப் பெருக்குவதும், விஞ்ஞான தொழில் நுட்ப ஆராய்ச்சிகளுக்கு உதவித்

தொகை வழங்குவதில் உள்ளடங்கியிருந்தன. (ஆனால் எப்படியாயினும் இது, இதுவரை குறிப்பிடத்தகுந்த சிறப்பு மிக்க பலன்களைத் தரவில்லை) முழுமையாகப் பார்த்தால் விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பத்திற்காகவும், அரசு மேற் கொள்ளும் செலவு அண்மைக் காலத்தில் ஆண்டொன்றிற்கு 20 சதவிகிதம் உயர்ந்து வந்திருக்கிறது.

எனினும் இதுதொடர்பாக மெக்சிகோவிற்கும், வளர்ந்த முதலாளித்துவ நாடுகளுக்குமிடையேயுள்ள இடைவெளி அது முன்னர் எப்படி இருந்ததோ அப்படியேதான் இருந்து வருகிறது.

அரசின் கொள்கை விஞ்ஞான-தொழில் நுட்ப ஆராய்ச்சிக்கான தேசிய அமைப்புமுறை ஒன்றை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டிருந்தது. 1971-ல் இந்த இலட்சியத்துடன் விஞ்ஞான-தொழில் நுட்ப தேசிய கவுன்சில் ஒன்று நிறுவப்பட்டு அரசிடம் ஒரு குறிப்பிடத்தக்க நிதி உதவி அளிக்கப்பட்டது. இந்த நிறுவனம் நாட்டில் நடைபெறும் விஞ்ஞான-தொழில் நுட்ப ஆராய்ச்சிகளின் பல்வேறு கூறுகளை ஒன்றிணைக்க முயன்று வருகிறது. தேசியக் கவுன்சிலின் வகை தொகைகளின் பெரும் பகுதி பட்ட மேற்படிப்பிற்காகச் செலவிடப்பட்டது. 1971இல் 550 ஆகஇருந்த பட்ட மேற்படிப்பு மாணவர்களின் எண்ணிக்கை 1976 ல் 2,581 ஆக உயர்ந்துள்ளது.

தனியுரிமைப் பட்டயங்களுக்காகவும், உரிமம் வழங்குதலுக்காகவும் ஏராளமான பணம் செலவழிக்கப் படுவதனால் அரசு தொழில் நுட்பத்தை மாற்றுவதைத் தடுப்பதற்குச் சட்டங்களைச் செய்ய முயன்றுள்ளது. ஆனால் இந்த இலட்சியங்களுக்காகச் செலவு செய்யும் தொகை அதிகமாக வளர்ந்து கொண்டே வருவதால் இந்தச் சட்டம் எந்தவிதமான சிறப்பான பயனையும் தந்துவிட வில்லை

எனவே மெக்சிகோவில் நிலவுவதைப் போன்ற மட்டான அளவே வளர்ச்சியடைந்துள்ள நாடுகளில் தொழில் நுட்ப

முன்னேற்றத்தின் சிறப்பியல்புகளைச் சுட்டிக் காட்டிக் கூறப்பட்டுள்ளவற்றைச் சுருக்கமாக அடியில் கண்டவாறு கூறுவோம்:

1. விஞ்ஞான-தொழில் நுட்ப வளர்ச்சி நேரடியாக அந்த நாட்டில் நிலவுகிற தொழில் அடித்தளத்தைச் சார்ந்ததாக உள்ளது. அதிகமாக விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றத்தின் அளவைக் காட்டுகிற தொழில்களாகவும், மூலதனக்குவியலுக்கு அடிப்படையாக விளங்கும் தொழில்களாகவும் உள்ளவை பெட்ரோலிய இரசாயனத் தொழில்கள், விவசாயம் ஆகிய தொழில்களும், வேறுசில தொழில்களும் தான். எனினும் இந்தத் தொழில்களில் சர்வதேச ஏகபோகங்களுடன் ஒப்பீட்டில் மூலதனக் குவியலின் மட்டம் எவ்வித ஐயமுமின்றி மிகவும் குறைவாகவும், முதலாளித்துவ அமைப்பு முறையின் மூலதனக் குவிப்பின் முரண்பாடுகளுக்கு உட்பட்டதாகவும் உள்ளன. மட்டான அளவே வளர்ச்சியடைந்துள்ள நாடுகளில் விஞ்ஞான - தொழில் நுட்ப ஆராய்ச்சியின் வளர்ச்சியில் உள்ள பலமற்ற சங்கிலிப் பிணைப்புகள்-குறிப்பாக நெருக்கடிக் காலங்களில் தெளிவாக ஆகின்றன.

2. தொழில் நுட்ப முன்னேற்றம் ஏகபோகங்களின் வழியாகவும், மூலதனச் செறிவு மிகுதியாக உடைய நிறுவனங்களின் பங்கேற்புடனும் வளர்ச்சியுறுகிறது. அது கீழ்க்கண்டவாறு நடைபெறுகிறது.

அ. தொழில் நுட்ப சேவைகளுக்கான ஒப்பந்தங்கள் மூலம் வளர்ந்த முதலாளித்துவ நாடுகளில் உள்ள கம்பெனி, மெக்சிகோவில் உள்ள அதனுடைய துணைத்தொழில் அல்லது சுதந்திரமான தொழிலுக்குத் தொழில் நுட்பத்தையும் கைதேர்ந்த ஆட்களையும் கொடுத்து உதவுகிறது.

ஆ. தனியுரிமைப்பட்டய உடன்பாடுகள் மூலம், அதன் படி, அவற்றைக் கொடுத்துதவுகிற நிறுவனமானது தனியுரிமைப்பட்டயங்களை, வாணிப உரிமைச் சின்னங்

களை, மற்றும் கண்டுபிடிப்புக்களை, தனியுரிமைப் பட்டயம் அளிக்கப்படாத தயாரிப்புக்கும், விலைப்படுத்துவதற்குமான தொழிற்சாலைச் செயல் முறைகளை உபயோகப்படுத்துவதற்கு வழக்கமாக, உள்நாட்டுச் சந்தையில் மட்டும் (அழுத்தம் ஆ-ர்) உரிமையுடையதாக விளங்குகிறது.

இ. உருவமைப்பு மற்றும் கட்டிடங்கள் கட்டுவது பற்றிய உடன்பாடுகளை நிறைவேற்றுவதன் மூலம். அதன் படி வெளி நாட்டுக் கம்பெனி மெக்சிகோ கம்பெனிக்குத் தொழில் நுட்பத் தகவல்களையும், தொழில் நுட்பத்தில் கைதேர்ந்த தொழிலாளர்களையும் கொடுத்துதவுகிறது.

இரண்டாவது முறைதான் மிகவும் முக்கியமானது. ஏனெனில் ஏறத்தாழ செலவில் 4 சதவிகிதம் தொழில் நுட்பத் தனியுரிமைப் பட்டயங்களுக்கும், உரிமங்களுக்கும் செலுத்தப்படுகிற தொகையுடன் சேர்த்துக் கொள்ளப் படுகிறது. அது இலாபத்தில் 20 சதவிகிதம் வரை தந்துதவுகிறது. எனவே இந்த வகையான செலவு மிகவேகமாக உயர்கிறது- 1970 களின் போது அது 150 மில்லியன் டாலராக இருந்தது. தொழில் நுட்பம் மாற்றப் படுவதன் விதிகளானவை அது மூன்றாவது நாடுகளுக்கு, குறிப்பாக அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதைத் தடை செய்கின்றன, என்ற உண்மையும் மிக முக்கியமாகும்.

மறுபுறம் பெருமளவு செலவு மிக அதிகமான அளவு ஏகபோகத் தன்மை கொண்டதாக விளங்கும் தொழில்களால் தாங்கிக் கொள்ளப்படுகிறது என்ற செய்தி நம் கவனத்தைக் கவருகிறது. உதாரணமாக இரசாயன மருந்துப் பொருட்கள் செய்யும் தொழில், கார் தொழில். இவ்வாறு இந்தத் தொழில்கள் பெரிய பன்னாட்டு ஏகபோகங்களின் அதிகாரத்திற்குட்பட்டவையாய் உள்ளன. வேறுமாதிரி கூறினால் நேரடியான வெளிநாட்டுப் பணமுதலீடுகளுடன் சேர்த்தே தொழில் நுட்பமும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்தத் தொழிற்சாலைகள் ஒருவேளை தேசிய உடமையாக்கப்பட்டால் பெருமளவு பணம் இலாபங்களாக

வெளிநாடுகளுக்கு மாற்றப்படுகிறது. இவ்வாறு அரசுக்குப் பணவியல் நஷ்டங்களை மிகுதியாகத் தோற்றுவிக்கிறது.

பெரும் சந்தைகளுக்கென உருவமைக்கப்பட்ட தொழில் நுட்பத்தை வாங்குவது, அந்தத் தொழில் நுட்பம் வழக்காறற்றுப் போனதாயிருந்தாலும், பொருளாதாரம் ஏகபோகமயமாக்கப் படுவதைத் தோற்றுவிக்கிறது, இவ்வாறாக கேந்திரமான தொழில்களின் வாணிபத்திலும் புதிய தொழில் நுட்பம் குவிக்கப்படுவது மூலதனம் ஓரிடத்தில் குவிக்கப்படுவதை விரைவுபடுத்துகிறது.

**பேராசிரியர். எஸ். எம். நிகிடின், முனைவர். விஞ். (பொருளாதாரம்) பிரிவுத் தலைவர்.**
*சோவியத் ஒன்றியத்தின் விஞ்ஞான கலைக்கழகத்தின் உலகப் பொருளாதாரம் மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய நிறுவனம்.*

## விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியும் முக்கியமான முதலாளித்துவ நாடுகளில் ஆராய்ச்சியும், மேம்பாடும்

தொழிலின் செயல் திறனுடன் கூடவே, விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் பொருளாயத அடிப்படையாக விளங்குவது விஞ்ஞானமே. அல்லது இப்போது அழைக்கப் படுவதுபோல ஆராய்ச்சியும், மேம்பாடுமே. இந்த வட்டத்தில் சென்ற சில பத்தாண்டுகளாக நிகழ்ந்துள்ள பண்பியல் மாற்றங்களும், அளவியல் மாற்றங்களும் தனி முதலாளித்துவ நாடுகள், முதலாளித்துவ உலக முழுமை ஆகியவற்றின், விஞ்ஞானம், தொழில் நுட்பம், பொருளா தாரம், இராணுவம் ஆகியவற்றின் திறனின் உருவாக்கத்தின் மீதும், வளர்ச்சியின் மீதும் மிகுந்த சக்திவாய்ந்த செல்வாக் குடையதாக விளங்குகின்றன. அவைகளே விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் இன்றைய நிலைமையையும், வருங்கால வாய்ப்பையும் நிர்ணயிக்கும் காரணிகளாக விளங்குகின்றன.

சென்ற இரண்டு பத்தாண்டுகளாக நிறைவேற்றப்பட்ட ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டின் முதல் சிறப்பியல்பு முக்கியமான முதலாளித்துவ நாடுகளில் அவை தோற்று வித்துள்ள செலவுகளின் விரைவான பெருக்கமேயாகும்.

**அட்டவணை 1**

**இன்றைய குறியீடுகளின் அடிப்படையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான செலவு [பில்லியன் டாலர்களில்]**

| | 1960 | 1965 | 1970 | 1975 | 1977 | 1978 |
|---|---|---|---|---|---|---|
| அமெரிக்க ஐக்கிய நாடுகள் | 13.5 | 20.0 | 25.9 | 34.6 | 42.7 | 47.0 |
| ஜப்பான், ஜெர்மன் கூட்டுக் குடியரசு, பிரான்ஸ், இத்தாலி | 3.8 | 7.8 | 12.6 | 24.1 | 28.0 | 32.5 |
| பிறவளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகள் | 1.9 | 4.0 | 6.2 | 8.3 | 9.0 | 10.7 |
| மொத்தம் | 19.2 | 31.8 | 44.7 | 67.0 | 79.7 | 90.2 |

இந்த நாடுகளின் விஞ்ஞான - தொழில்நுட்பத் திறன் மிகவும் விரைவாக வளர்ந்திருக்கிறது. மேலும் நாட்டின் பொருளாதாரத்தின் முக்கியமான பிரிவாகவும் ஆகியுள்ளது. அண்மை ஆண்டுகளில் ஆராய்ச்சிக்கும், மேம்பாட்டிற்குமான செலவு பணமுதலீடுகளுடன் போட்டியிடும் மட்டத்திற்கு உயர்ந்துள்ளது. ஒரு சில பெரும் முதலாளித்துவ நாடுகளில் அதையும் மீறிவிட்டிருக்கிறது. இவ்வாறாக அதேகாலத்தில் ஆராய்ச்சிக்கும் மேம்பாட்டிற்குமான செலவு யு. எஸ் செய்பொருள் தொழிற்சாலைகளில் புதிதாக ஈடுபடுத்தப்பட்ட பண மூலதனத்திற்குச் சரிநிகராக உள்ளது. அதே வேளையில் மின்னணுவியல் துறையில் இரண்டரை மடங்கு அதிகமாகவும், விண்வெளியிடத் துறையில் பத்துமடங்கு அதிகமாகவும் பெருகியிருக்கிறது. 1978-ல் முக்கியமான முதலாளித்துவ நாடுகளில் ஆராய்ச்சிக்கும் மேம்பாட்டிற்குமான செலவுகள் மொத்த தேசிய உற்பத்தியின் பின்வரும் சதவீதங்களில் அமைந்தன: அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 2.3 சதவிகிதமும், ஜப்பானில் 2.0 சதவிகிதமும், ஜெர்மன் கூட்டுக்குடியரசில் 2 3 சதவிகிதமும், பிரான்சில் 1.5 சதவிகிதமும், இத்தாலியில் 1 2 சதவிகிதமுமாக இருந்தன.

கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் காணப்படும் புள்ளி விவரங்களை அடிப்படையாகக் கொண்டு பார்த்தால் முக்கியமான முதலாளித்துவ நாடுகளில் ஆராய்ச்சிக்கும் மேம்பாட்டிற்குமான செலவுகள் பல்வேறு மட்டங்களில் பல்வேறு வகையான தீவிரத்துடனும் உயர்ந்திருக்கின்றன எனத் தெரிந்து கொள்ள முடிகிறது பிற முதலாளித்துவ நாடுகள் பத்தாண்டுகளுக்குப் பின்னரே தன் நிலையை அடைய முடியும் என்று எண்ணி அமெரிக்க ஐக்கிய நாடுகள் 1950 களின் தொடக்கத்திலேயே விஞ்ஞான அடித்தளத்தின் வேகமான மேம்பாட்டைத் தொடங்கிற்று. பிற முதலாளித்துவ நாடுகள் 1960 களிலேயே தங்களுடைய விஞ்ஞான அடித்தளத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கத்

தொடங்கின. அதன் விளைவாக நாம் ஆராய்ந்துவரும் இந்தக்கால இடைவெளியில் முதலாளித்துவ உலகின் விஞ்ஞான தொழில் நுட்பச் செயல்திறனின் கட்டமைப்பு மிக அதிகமான அளவு மாறியுள்ளது. 1960 ல் கிரேட் பிரிட்டன், பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகளின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான செலவு முதலாளித்துவ உலகத்தின் மொத்தச் செலவில் கால் பகுதிக்கும் குறைவாகவேதான் இருந்தது. ஆனால் யு.எஸ். சின் செலவோ ஏறத்தாழ 70 சதவிகிதமாக இருந்தது. இன்று அனைத்து முதலாளித்துவ நாடுகளும் ஆராய்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் செய்கிற செலவு அமெரிக்க ஐக்கிய நாடுகள் செய்கிற செலவில் 90 சதவிகித மாகவுள்ளது. அதேநேரத்தில் முக்கியமான ஐந்து முதலாளித்துவ நாடுகளும் செய்கிற செலவு ஏறத்தாழ 70 சதவிகிதமாக உள்ளது. முதலாளித்துவ உலகின் விஞ்ஞான தொழில் நுட்பத்தில் அமெரிக்காவின் தலைமை இன்றுகூட விவாதத்திற்குரியதாக இல்லை என்பது உண்மைதான். எனினும் ஒரு சில துறைகளில் வேறு சில முதலாளித்துவ நாடுகளுக்கு அதனுடைய நிலையை அது விட்டுக் கொடுத்துள்ளது.

விஞ்ஞான - தொழில் நுட்ப வளர்ச்சியின் அனைத்து முக்கிய பகுதிகளிலும் ஆராய்ச்சியை மேற்கொண்டு வரும் முதலாளித்துவ நாடு அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஒன்றுதான். அடிப்படை ஆராய்ச்சியிலும், செயல்முறை சார்ந்த ஆராய்ச்சியிலும், அவற்றின் வளர்ச்சியிலும் முதலாளித்துவ உலகில் அது முக்கியமான நிலைவகிக்கிறது. மேலும் அதுவே தனியுரிமைப்பட்டயங்கள் அனுமதிகள் ஆகியவற்றின் சர்வதேச வாணிபத்தில் தலைமை வகிக்கிறது. முதலாளித்துவ உலகில் மிக அதிகமான அளவு விஞ்ஞான சாதனங்களை உற்பத்தி செய்கிற நாடு அமெரிக்க ஐக்கிய நாடுகள் தான். விஞ்ஞானம் மிகுதியாகப் பயன்படுத்தப்படும் உற்பத்திப் பொருட்கள் ஏற்றுமதி செய்வதனால் அது ஏற்றுமதியில் பெருமளவு சாதகமான செலுத்தல் நிலையை

உடையதாக இருக்கிறது. யு. எஸ். நிறுவனங்களின் வெளி நாட்டில் உள்ள கிளைகளில் மேற்கொள்ளப்படுகிற ஆராய்ச்சிகள் மூலமும், "அறிவுத்திறன்களை வற்றடிப்பது" என அழைக்கப்படுகிற செயல் மூலமும் மிக அதிகமான அளவில் வெளிநாட்டு விஞ்ஞான வளர்ச்சிகளையும், விஞ்ஞான அறிவையும், விஞ்ஞானம் தொடர்பான பணியாட்களையும், சர்வதேச அடிப்படையில் யு. எஸ். பயன்படுத்துகிறது.

அண்மை ஆண்டுகளில் பிற முதலாளித்துவ நாடுகளின் விஞ்ஞான - தொழில் நுட்பச் செயல் திறனும்கூட மிக வேகமாக உயர்ந்துள்ளது. முதலாளித்துவ நாடுகளில் உள்ள முதலாளித்துவ நிறுவனங்களிடையேயும், முதலாளித்துவ நாடுகளிடையேயும் பயங்கரமான போட்டி மேலும், மேலும் பெருகிவந்த போதிலும், விஞ்ஞான - தொழில் நுட்ப முன்னேற்றத்தின் பல்வேறு பகுதிகளில் சிறப்புத்திறன் வளரத் தொடங்கியுள்ளது. விஞ்ஞான வளர்ச்சியின் கூட்டுறவும், சர்வதேச விஞ்ஞான வளர்ச்சியின் பரிமாற்றமும் குறிப்பிடத்தக்க அளவு பெருகி வருகின்றன.

சில குறிப்பிட்ட முதலாளித்துவ நாடுகளில் போர்க் காலத்திலிருந்து ஆராய்ச்சியும், மேம்பாடும் ஒரு சீரற்ற தன்மையுடனேயே வளர்ந்து வருகின்றன. இதை அட்டவணை 2-ல் குறிப்பிட்டிருப்பதுபோல அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுச் செலவின் இயக்கத்தை ஆராய்வதன் மூலம் நாம் கண்டு கொள்ளலாம்.

1960 களின் பிற்பகுதியிலும், 1970 களின் தொடக்கத்திலும் ஆராய்ச்சிக்கும் மேம்பாட்டிற்குமான செலவின் நிலையான தன்மையை நோக்கிய — பல சமயங்களில் குறைவை நோக்கிய (மாறா விலைகளில்) போக்கு இருந்தது. நாட்டின் மொத்த உற்பத்தியில் இந்தச் செலவின் பங்கு மிகக் குறைவாக ஆயிற்று. இதே மாதிரியான நிகழ்ச்சிகள் இதே நேரத்தில் கிரேட் பிரிட்டனிலும், பிரான்சிலும் நிகழ்ந்தன.

## அட்டவணை-2

**1960-க்கும் 1978-க்கும் இடையில் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஆராய்ச்சி, மேம்பாட்டுச் செலவு [மில்லியன் டாலர்களில்]**

| ஆண்டு | நடப்பு விலையில் | 1970 ல் நிலவிய நிலையான விலையில் |
|---|---|---|
| 1960 | 13, 523 | 17, 992 |
| 1965 | 20, 044 | 24, 642 |
| 1970 | 25, 905 | 25, 905 |
| 1975 | 34, 558 | 24, 989 |
| 1976 | 37, 363 | 25, 524 |
| 1977 | 42, 700 | 27, 385 |
| 1978 | 47, 000 | 28, 790 |

1960 களின் பிற்பகுதியில், மூன்று முக்கியமான முதலாளித்துவ நாடுகளில், ஆராய்ச்சிக்கும் மேம்பாட்டிற்கு மான செலவுகளில் நிகழ்ந்த தேக்கத்திற்கு முக்கியமான காரணம் — குறிப்பாக 1974 - 1975களில் ஏற்பட்ட முதலாளித்துவப் பொருளாதாரம் மோசமாகிக் கொண்டிருந்த கடுமையான சூழ்நிலையின் விளைவான அரசின் வரவு—செலவு தொடர்பான பொருளாதாரக் கொள்கையின் விளைவேயாகும்—குறிப்பாக பெருகிவரும் பணவீக்கம், கூர்மையான பொருளாதார நெருக்கடி ஆகியவற்றின் விளைவேயாகும். ஆராய்ச்சி, மற்றும், மேம்பாட்டுச் செலவில் சார்பானதும், சில வேளைகளில் சார்பற்றதுமான

குறைப்பில் முக்கியப்பங்கு அரசிடமிருந்தே வந்தது என்ற உண்மையிலிருந்து பின்னது உறுதிப்படுத்தப்படுகிறது. இவ்வாறாக அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் கிரேட் பிரிட்டனிலும், பிரான்சிலும் நாம் கருத்தில் கொண்டுள்ள கால இடைவெளியில் ஆராய்ச்சியிலும், மேம்பாட்டிலும், தனியார் செலவு ஏறத்தாழ நிலையானதாயிருந்தது அல்லது அரசின் உதவியில் ஒரு சிறு வீழ்ச்சியினால் ஒருசிறிதளவு மட்டுமே குறைந்தது.

முக்கியமான முதலாளித்துவ நாடுகளில் இரண்டு நாடுகளான ஜெர்மன் கூட்டுக் குடியரசும், ஜப்பானும் ஆயுதங்களுக்காகச் செய்யும் ஒப்பீட்டில் குறைந்த செலவின் காரணமாக அரசின் வகைதொகைகளில் மிகுதியான குறைவை அனுபவிக்கவில்லை. இதனால் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக அவைகள் செய்யும் செலவுகளை 1970 களில் கூட தொடர்ந்து பெருக்கி வந்தன என்பது தற்செயலானது அல்ல.

1968 க்கும் 1975 க்கும் இடையில் ஆராய்ச்சிக்கும் மேம்பாட்டிற்குமான செலவில் மிகுதியான குறைவு ஏற்பட்டது. இந்தக் குறைவு ஏற்பட்ட நாடுகளின் பொருளாதாரங்களில் வேதனைதரும் விளைவுகளை அது தோற்றுவித்தது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பல்கலைக் கழகங்களில் நடைபெற்ற அடிப்படையான ஆராய்ச்சி மிகுதியாகப் பாதிக்கப்பட்டது. இளம் விஞ்ஞானிகளின் எண்ணிக்கை கண்டறிந்து கொள்ளக் கூடிய அளவு குறைந்து விட்டது. புதுப்பிக்க முடியாத ஆய்வுக்கூட சாதனங்கள் பயனற்றுப் போயின. பெருமளவு ஆய்வுகளை மேற்கொள்ள முடியவில்லை.

ஆராய்ச்சிக்கும் மேம்பாட்டிற்குமான செலவுகள் குறைக்கப்பட்டதனால் பொருளாதார வளர்ச்சி முழுமையின் மீது ஏற்பட்ட எதிர்மறை விளைவுகளில் தொழிலாளர்களின் உற்பத்தித்திறன் வளர்ச்சி விகிதத்தில் ஏற்பட்ட ஒரு வீழ்ச்சியைத்தான் முதன்மையானதாகக் கூற

வேண்டும். இது குறிப்பாக அமெரிக்க ஐக்கிய நாடுகளில் நிலவியது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மொத்த தேசிய உற்பத்தியில் ஆராய்ச்சிக்கும் மேம்பாட்டிற்குமான செலவின் பங்கு பெருமளவு குறைக்கப்பட்டதை வீழ்ச்சிக்கு இன்றியமையாத காரணங்களில் ஒன்றாக அமெரிக்கப் பொருளாதார நிபுணர்கள் கருதியதற்குக் காரணமில்லாமல் இல்லை. வேறு காரணங்களுடன் அவர்கள் வளர்ச்சி விகிதத்தில் குறைவு, தொழிலாளிகளுக்கும், சொத்துக் களுக்கும் உள்ள விகிதத்திலும் கூட குறைவு, உயர்ந்து கொண்டேயிருந்த ஆற்றலின் விலை, பொருளாதாரத்திலும், தொழிலாளர்களிடையேயும் ஏற்பட்ட கட்டமைப்பு மாற்றங்கள் ஆகியவற்றையும் சேர்த்துக் கூறுகிறார்கள். அதன்முறையில் பிற வளர்ந்த முதலாளித்துவ நாடுகளுடன் ஒப்பிடும்போது, தொழிலாளர்களின் உற்பத்தித் திறனின் தேக்கம் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் போட்டியிடும் திறனைக் குறைக்கிறது. பணவீக்கத்தை உயர்த்துகிறது. மற்றொரு நெருக்கடிக்கான ஒரு அடித்தளத்தைத் தோற்று வித்து இந்த வலிமை வாய்ந்த முதலாளித்துவ நாட்டின் பொருளாதாரம் முழுமையின் மீதும் ஒரு பாதகமான விளைவை ஏற்படுத்தியிருக்கிறது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உள்ள பல விஞ்ஞானி களும், அரசியல் வாதிகளும், ஆராய்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் செய்யப்படும் செலவுகளைக் குறைப்பதன் விளைவாகத் தோற்றுவிக்கக்கூடிய எதிர்மறையான விளைவு களின் அபாயத்தைச் சுட்டிக் காட்டி பெரும் கூக்குரல் எழுப்பினர்.

ஆராய்ச்சிக்கும் மேம்பாட்டிற்குமான செலவு மொத்த தேசிய உற்பத்தியின் வளர்ச்சி விகிதத்திற்கும் கீழே சரிந்து விழும்போது என்ன நிகழ்கிறது என்பதை அறிந்தது, அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஆட்சி வட்டாரங்களையும், பிற முதலாளித்துவ நாடுகளின் ஆட்சி வட்டாரங்களையும் அந்தத் துறையில் செலவழிக்கப்படும் நிதியின் அளவை

உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படிச் செய்துள்ளது. இவ்வாறாக 1975 முதல் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஆராய்ச்சிக்காகவும், மேம்பாட்டிற்காகவும் செலவழிக்கப்படும் தொகையில் ஒரு குறிப்பிட்ட அளவு பெருக்கம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக அடிப்படை ஆராய்ச்சிக்கான செலவு—இன்று நிலவுகிற விலையில் மட்டுமல்ல, நிலையான விலையிலும்கூட ஜப்பானில் ஆராய்ச்சிக்கும் மேம்பாட்டிற்குமான செலவு மொத்த தேசிய உற்பத்தியில் 3 சதவிகிதத்தைக் காட்டிலும் குறைவாக இல்லாதிருக்கும் வரை உயர்த்தப்படுவதே விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சியின் முக்கியமான குறிக்கோள் என்று அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

உலக பொருளாதார மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய நிறுவனத்தின் முன்னறிவிப்பின்படி, ஆராய்ச்சிக்கும், மேம்பாட்டிற்குமான செலவானது விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் மேற்கொண்ட வளர்ச்சியின் முக்கியப் பொருளாயத அடிப்படையாய் விளங்கும் காரணத்தால் எல்லா முதலாளித்துவ நாடுகளிலும் அது உயர்த்தப்படும். அதனால், முக்கியமான முதலாளித்துவ நாடுகளின் மொத்த தேசிய உற்பத்தியின் ஒரு பகுதியாக விஞ்ஞானத்திற்காகச் செலவழிக்கப்படும் செலவின்பங்கு இந்த நூற்றாண்டு முடிவில் மிக உயர்மட்டத்தை அடையும்.

முக்கியமான முதலாளித்துவ நாடுகளில் ஆராய்ச்சியையும் மேம்பாட்டையும் விரிவடையச் செய்வதை உயர்த்துவதற்கான முயற்சிகள் இந்தப் பகுதியில் ஏற்பட்டுள்ள வகை தொகைகளின் விரைவான உயர்வினால் கட்டுப்படுத்தப்படவில்லை என்பதை வலியுறுத்துவது மிகவும் இன்றியமையாதது ஆகும். சென்ற பத்தாண்டுகளில் விஞ்ஞான ஆராய்ச்சியையும், மேம்பாட்டையும் தீவிரமடையச் செய்வதற்கு அதிகப்படியான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. அது இந்தத் துறையில் பயனாற்றலை உச்சநிலையடையச் செய்வதற்கென உருவமைக்கப்பட்ட அமைப்புக்கள் மூலமாகவும், நடைமுறைசார்ந்த மாற்றங்கள்

மூலமாகவும் நிறைவேற்றப்பட்டது ஆகும். அந்த நிகழ்ச்சிப் போக்கே ஆராய்ச்சிக்கும் மேம்பாட்டிற்குமான நிதியின் குறைவினாலும், அதனால் கட்டுப்படுத்தப்படுகிற நெருக்கடி நிகழ்ச்சிப் போக்கினாலும் தூண்டப்பட்டுள்ளது.

விஞ்ஞான ஆராய்ச்சியையும், மேம்பாட்டையும் தீவிரமடையச் செய்வது மூன்று முக்கியப் பகுதிகளில் இத்தகைய செயலின் அரசுக் கட்டுப்பாட்டை மறுவடிவம் செய்வதிலும், உயர்த்துவதிலும், முதன் முதலில் தோன்றியது.

1. பெரும்பாலான வளர்ந்த முதலாளித்துவ நாடுகளில் ஆராய்ச்சிக்கும், மேம்பாட்டிற்குமான மொத்தச் செலவில் 50 சதவிகிதமாக அல்லது அதற்கு மேலாக இருந்த ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான அரசின் நன்கொடைகளை வழங்கும் அமைப்புகளை வளர்ப்பது. (செலவில் ஒரு பெரும் பகுதி—உதாரணமாக அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஏறத்தாழ பாதி இராணுவ நோக்கங்களுக்காகச் செலவிடப் பட்டது, என்பது உண்மைதான்)

2. தனியார் துறையில் ஆராய்ச்சிக்கும், மேம்பாட்டிற்கு மான வேறுபட்ட பொருளாதாரத் தூண்டுகோல்களைக் கொண்ட ஒரு அமைப்பை உருவாக்குவது.

3. ஆராய்ச்சியின் மீதும், மேம்பாட்டின் மீதும் கட்டுப்பாட்டைச் செலுத்தவும், அவைகளை ஒன்றிணைக்கவும், விஞ்ஞான, தொழில் நுட்ப உள்ளமைப்பின் உருவாக்கத்தில் பங்கு பெறவும் தனிச் சிறப்பான குழுக்களின் வலைப் பின்னல்களையும் நிறுவனங்களின் வலைப்பின்னல்களையும் தோற்றுவிப்பது.

ஆராய்ச்சியையும், மேம்பாட்டையும் தீவிரப்படுத்துவது என்ற துறையில் அமெரிக்காதான் முன்னால் நிற்கிறது. ஒரு புறத்தில் அரசுத் துறைக்கும், மறுபுறத்தில் தனியார் துறைக்கும், வணிகம் சாராத அமைப்புகளுக்கும், குறிப்பாக உயர்கல்வி நிறுவனங்களுக்கும் இடையில் (அடிப்படை

விஞ்ஞானம் — உதவித் தொகை உறவுகள் என்ற பகுதியில்) ஒப்பந்த உறவுகளைப் பரப்பி மேன்மைப்படுத்தலுக்கு அந்த நாட்டில் அரசு ஆராய்ச்சியும், மேம்பாடும் முக்கியத்துவம் தருகின்றன. இவைகள் திட்ட நிகழ்ச்சிகளை அடிப்படையாய்க் கொண்ட அணுகுமுறை வளர்ச்சியின் அடிப்படையில், அரசுத் துறையின் கட்டுக்கோப்புக் குள்ளாகவே ஓரளவு நிறைவேற்றப்படுகின்றன. இந்த அணுகுமுறையின் சிறப்பு என்னவென்றால், ஆராய்ச்சிக்கும், மேம்பாட்டிற்குமான செலவில் முக்கியப் பங்கு ஆராய்ச்சிப் பணிகளை நிறைவேற்றும் கடமையில் ஈடுபட்டிருக்கின்ற நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படவில்லை, ஆனால் குறிப்பிட்ட ஆய்வுத்திட்டங்கள் அல்லது வேலைத் திட்டங் களுக்கு, நிறுவனங்களும், விஞ்ஞானிகளும், பல்கலைக்கழகங் களும், தொழில் கம்பெனிகளும், பொறியியலறிஞர்களும், இவ்வாறு ஒப்பந்த அடிப்படையில் இயங்கும் மனிதர்களும், அமைப்புகளும் இணைந்து நிறைவேற்றும் குறிப்பிட்ட ஆய்வுத் திட்டங்கள் அல்லது வேலைத் திட்டங்களுக்கே ஒதுக்கப்படுகிறது என்பதே ஆகும். விவரமான முதனிலைப் படிவம் அல்லது திட்ட நிகழ்ச்சிகள் அளிக்கப்படும் பொழுது அமைச்சரகங்கள் அல்லது ஆராய்ச்சி நிறுவனங்கள் நிதியுதவி செய்தலை மேற்கொள்கின்றன. இம்மாதிரியான பெரிய திட்டங்களுக்குத் தனிச்சிறப்பான குழுக்கள் கட்டாயமாகும். (முக்கிய நிதித்தோற்றுவாயை வழங்கும் ஒரு குழுவால் அவைகள் அமைக்கப்படுகின்றன.

வழக்கமாக நிதி மற்றும் நிர்வாகக் குழுவிற்கு வெளியில் பணியாற்றுகிற திட்டங்களில் ஈடுபட்டுள்ளவர்களின் பணிகள் அனைத்தையும் இந்தக்குழு ஒன்றிணைக்கிறது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மட்டும் அல்லாமல் வேறு முதலாளித்துவ நாடுகளிலும், பல அமைச்சரவைகளாலும், நிறுவனங்களாலும் கூட்டாகத் திட்டமிடப்பட்டு, கூட்டாக நிதி உதவி செய்யப்படுகிற திட்ட நிகழ்ச்சிகள் பல இன்று உள்ளன.

இந்த வகையான திட்டங்களுக்கு நிதி உதவி செய்வதன் ஒன்றிணைந்த கூறாக விளங்குவது ஒரு புதிய வகை வித்தகம் ஆகும். அது அமைச்சரவைக்குப் புறம்பாக, சுதந்திரமான அடிப்படையில் அமைக்கப்படுகிறது. திட்ட நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட விஞ்ஞான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டின் நிர்வாகத்தில், திட்டத்தின் இலட்சியங்களின் முக்கியத்துவத்தை மதிப்பீடு செய்யவும், வாய்ப்புகளைப் பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும், திட்டங்களுக்கான தொழிலாளிகள், நிதி மற்றும் பொருட்களைப் போன்ற வகைதொகைகளைக் கொடுத்துதவவும் வித்தகர்கள் உள்ளனர். திட்டத்தின் அனைத்துப் படிநிலைகளிலும் இந்த வகையான வித்தகம் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டின் பயனுள்ள தன்மையைக் குறிப்பிடத்தக்க அளவு பெருக்குகிறது.

திட்ட நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட கட்டுப்பாட்டில் பொருட்களைத் தந்துதவச் சிறப்பு மையங்கள் நிறுவப்படுகின்றன. மேலும் விஞ்ஞான நிறுவனங்கள் மட்டுமல்லாமல் தனியார் நிறுவனங்களும் திட்டங்களில் ஈடுபடுகின்றன. இது விஞ்ஞானத்தையும், உற்பத்தியையும் இணைப்பதற்கு மேலும் உதவியாக விளங்குகின்றன. இந்த அடிப்படையில் குறிப்பிட்ட தனிச் சிறப்பான பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய, நெகிழுந் தன்மையுடைய விஞ்ஞான-தொழில் தொகுதியமைப்புகளை இது தோற்றுவிக்கிறது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டின் பயனுள்ள தன்மையை உயர்த்துவதில் கண்ட இந்த அணுகுமுறையின் வெற்றி, பிற வளர்ந்த முதலாளித்துவ நாடுகளும் இம்முறையைப் பின்பற்றுவதை ஊக்குவித்துள்ளது.

ஆராய்ச்சியையும் மேம்பாட்டையும் தீவிரப்படுத்துவது, தனியார் துறையிலும் பரவியுள்ளது. இவ்வாறாக ஆராய்ச்சியையும், மேம்பாட்டையும் வளர்ப்பதில் பல தொழில் நிறுவனங்கள் திட்ட நிகழ்ச்சிகளை அடிப்படை

யாகக் கொண்ட அணுகுமுறையை விரிவாக்கம் செய்துள்ளன. ஆராய்ச்சியை உள்நாட்டில் ஒழுங்குபடுத்துவதற்காக, நெகிழ்ந்தன்மையுள்ள திறமையான உருவங்களைத் தோற்றுவித்திருக்கின்றன. வாணிப அடிப்படையில் ஊக்குவிக்கப்பட்ட பல ஆராய்ச்சித் திட்டங்களை மிக அதிகமாக்கியிருக்கின்றன.

விஞ்ஞான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டின் பயனுள்ள தன்மையை உயர்த்துவதற்காக மேலே கூறப்பட்ட முறைகளைப் பின்பற்றுவது முக்கியமான முதலாளித்துவ நாடுகளில் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் பொருளாயத அடித்தளத்தை வருங்காலத்தில் விரிவாக்கம் செய்ய உதவும் என எதிர் பார்க்கலாம்.

பேராசிரியர். கிறிஸ்டோஸ் ஃபாண்டுலிஸ்
பொருளாதார நிறுவனம்
பல்கேரிய விஞ்ஞானக் கலைக் கழகம்

## விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றமும், முதலீட்டுக் கொள்கையும்

ஒரு சாதகமான சூழ்நிலையில் விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றத்திற்குத் தேவையானவைகளே, முதலீடு களின் பரிமாணம், கட்டமைப்பு ஆகியவற்றை நிர்ணயிப் பதற்கும், முதலாளித்துவ மறுஉற்பத்தியின் முக்கியமான பேரியல் பொருளாதாரக் குறியீடுகளை உருவாக்குவதற்கும், தீர்மானமான காரணிகளாகும். இது தொடர்பாக, போர்க் காலத்திலிருந்தே வளர்ந்த முதலாளித்துவ நாடுகளில் மிகவும் முக்கியமான, செயற்திறன்மிக்க தொழிலான ஆக்கத் தொழிலின் முதலீடுகளின் கட்டமைப்புதான் மிகுந்த முக்கியத்துவத்திற்குரியதாகும்.

ஆனால் 1970 களில் முதலின் மறுஉற்பத்திக்கான சூழ்நிலை குறிப்பிடத்தகுந்த அளவில் இடர் மிகுந்ததாக இருந்தது. முன்னைக் காட்டிலும் விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றமும் முதலீடும் மேலும் அதிகமான அளவு நேரடியானதாயிற்று. அதன் விளைவாக இன்றைய பத்தாண்டை மிகவும் சிறப்புமிக்க தன்மை கொண்டதாக ஆக்கியுள்ள மிகவும் சிக்கலான முரண்பட்ட தன்மை கொண்ட முதலாளித்துவ மறுஉற்பத்தியின் பின்னணியில்

தான் வருங்கால விஞ்ஞான - தொழில் நுட்ப முன்னேற்றத்தின் போக்குகளைச் சரியான முறையில் புரிந்து கொள்ளவும், மதிப்பீடு செய்யவும் முடியும்.

### 1. நெருக்கடிக்குப் பிந்திய காலத்தில் முதலீட்டின் சிறப்பியல்புகள்.

போர்க் காலத்திலிருந்து விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றங்களின் மூலமாக முதலாளித்துவ அமைப்பு முறையின் செயல்முறையை மிகவும் அதிகமாகப் பாதிக்கிற பல்வேறு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஏகபோக முதலாளித்துவம் முயற்சி செய்துள்ளது. இவைகள் தொழிலாளர்களின் உற்பத்தித்திறனின் வளர்ச்சி விகிதங்களை உயர்த்துவதையும், மையப்படுத்துவதை அதிகரிப்பதையும், உற்பத்தியையும் மூலதனத்தையும் ஓரிடத்தில் குவிப்பதையும், தேசிய பொருளாதாரத்தின் கட்டமைப்பைச் சீர்திருத்துவதையும், அதன் இயல்பில் உற்பத்தி நிகழ்ச்சிப் போக்குக்கு விரைவூட்டுவதையும், பொருளாதாரத் திறனைப் பெருக்குவதையும் உள்ளடக்கியதாக இருந்தன. விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றத்தின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் தனியார் ஏகபோகத்திற்கும், அரசு ஏகபோகக் கட்டுப்பாட்டிற்கும்தான் இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் முக்கியமான பங்கு வழங்கப் பட்டிருந்தது.

எனினும் முதலாளித்துவத்துடன் வளர்ந்துள்ள முரண்பாடுகள் திறமையான பொருளாதாரக் கட்டுப்பாடுகளைப் பயன்படுத்துவதற்கும், விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றத்தை நடைமுறையில் பயன்படுத்துவதற்கும் வரம்புகளை விதிக்கின்றன. அண்மை ஆண்டுகளில் முதலாளித்துவப் பொருளாதாரம் விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றத்தின் தேவைக்குக் குறைந்த, ஒரு பக்கமான வளர்ச்சியின் எதிர்மறைப்பயன்களைக் குறிப்பிட்ட அளவு கடுமையுடன் அனுபவித்து வருகிறது. 1970 களில் முதலாளித்துவப் பொருளாதாரத்திற்குள் முதலீட்டிலும்,

வேறு நிகழ்ச்சிப் போக்குகளிலும் இது பிரதிபலிக்கிறது. இவை சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்ட காரணிகளால் மட்டுமே விளக்கப்பட முடியாத முக்கியமான சிறப்பியல்புகளால் வேறுபடுத்திக் காணப்படுகின்றன. புதிய வளர்ச்சியின் விளைவுகளில் மிகவும் முக்கியமான ஒன்று பணமுதலீட்டில் தேக்கம் ஏற்பட்டிருப்பதேயாகும்.

1970 களின் தொடக்கத்தில் முதலாளித்துவப் பொருளதாரம் உற்பத்திப் பெருக்கத்தினால் விளைந்த இரண்டு நெருக்கடிகளுக்குள்ளாயிற்று—1969 - 1971 லும், 1974-1975 லும். 1969-1971 நெருக்கடி முதலாளித்துவ அமைப்பு முறையில் நிகழ்ந்த, போருக்குப்பிந்திய பிறநெருக்கடிகளின் சில குறிப்பிட்ட சிறப்பியல்புகளைக் கொண்டதாக இருந்தது. காலத்தால் அது நீண்டதாக இருக்கவில்லை. உற்பத்தியிலும், முதலீட்டிலும் ஏற்பட்ட வீழ்ச்சி நீண்ட காலம் தொடர்ந்து நீடிக்கவில்லை. 1972 இல் முக்கியமான முதலாளித்துவ நாடுகளின் பொருளாதாரங்கள் மீட்சி பெறத் தொடங்கின. முதலீடு வேகமாக உயர்ந்து வளர்ந்தது. அதன் விளைவாகப் பொருளாதார வளர்ச்சி வேகமாக முன்னேறியது. உதாரணமாக ஜெர்மன் கூட்டுக் குடியரசு போன்ற முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில், தொடர்ந்த கால இடைவெளியில் முதலீட்டின் மீது பாதகமான விளைவைத் தோற்றுவித்த நெருக்கடிக் காலத்திலும்கூட முதலீடு உயர்ந்திருந்தது. 1972-ல் வளர்ந்த முதலாளித்துவ நாடுகளின் மொத்த முதலீடு 7.1 சதவிகிதமாக உயர்ந்தது ஆனால் 1973-ல் அந்த உயர்வு 6.8 சதவிகிதமாகவே இருந்தது. அதே காலத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு தொழில் உற்பத்தி, முறையே 6.2 சதவிகிதமாகவும், 8.9 சதவிகிமாகவும் இருந்தது.

1974-1975 களில் நிகழ்ந்த உற்பத்திப் பெருக்கத்தால் தோன்றிய நெருக்கடி காலத்தில் முழுதும் வேறுபட்ட சூழ்நிலை தோன்றியது. இந்த நெருக்கடி முதலீட்டில் குறிப்பிடத்தக்க அளவு வீழ்ச்சியை ஏற்படுத்தியது. உதாரணமாக 1973 புள்ளி விவரங்களுடன் ஒப்பிடும்போது,

ஐரோப்பியப் பொருளாதார சமூக நாடுகள், அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஜப்பான் ஆகியவற்றின் முதலீடு 1974-ல் 6.8 சதவிகிதம் குறைந்தது. அது 1975 இல் 1974-ன் புள்ளி விவரங்களுடன் ஒப்பிடும்போது 7.7 சதவிகிதம் குறைந்தது. 1974இல் அமெரிக்காவில் முதலீடு 9 சதவிகிதமும், 1975 இல் 13.7 சதவிகிதமும் குறைந்தது. அதே காலத்திற்குரிய ஜப்பானின் புள்ளி விபரங்கள் முறையே 10.1 சதவிகிதமும், 2.8 சதவிகிதமும் ஆகும். அதே வேளையில் ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் முதலீடுகள் 3.3 சதவிகிதமாகக் குறைந்தது.

நெருக்கடிக்குப் பிந்திய காலத்தில் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் முதலீட்டின் செயலூக்கமும், போக்குகளும் மூலதன மறுஉற்பத்தியின் பொதுவான நிலைகளை அடிப்படையாகக் கொண்டு விளக்கப்பட முடியும். 1975-ன் இரண்டாவது அரைப்பகுதியில் பெரும் பாலான நாடுகளின் பொருளாதாரத்தில் நெருக்கடியி லிருந்து மீள்வதற்கான முதல் அடையாளங்களும், பொருளாதார மீட்சிக்கான மாறுகாலத்தின் அடையாளங் களும் தோன்றத் தொடங்கின. அந்த உயர்வின் மிக மெதுவான வளர்ச்சி முதலீட்டில் பிரதிபலித்தது. பெரும் பாலான சமயங்களில் பொருளாதாரத்தின் தேவைகளை நிறைவு செய்ய முடியாதவாறு, முதலீடுகள் மெதுவான, உறுதியற்ற விகிதத்திலேயே வளர்ந்து வந்தன.

1976-1977 களின் நெருக்கடிக்குப் பிந்தியகால வளர்ச்சியின்போது முதலீட்டின் பெருக்கம் சென்ற இரண்டு ஆண்டுகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு ஈடு செய்வதாக இல்லாத வகையில் மிகவும் குறைவாகவே இருந்தது. 1976 மட்டத்தி லிருந்து 7 சதவிகிதம் அதிகமாக உயர்ந்தாலும்கூட 1977இல் உயர்ந்த முதலாளித்துவ நாடுகள் அனைத்திலும் செய்யப் பட்ட முதலீட்டின் பரிமாணத்தின் நோக்கில் 1973 மட்டத்தி லிருந்து குறிப்பிடத்தகுந்த அளவு குறைவாகவே இருந்தது. மாறா மூலதனத்தில் தனியார் ஏகபோகத்துறை முதலீட்டின்

மட்டம் நெருக்கடிக்கு முந்திய ஆண்டுகளைக் காட்டிலும் 1977 இல் மிகவும் குறைவாகவே இருந்தது உதாரணமாக ஜப்பானில் அது 15 சதவிகிதம் வீழ்ந்திருந்தது. ஜெர்மன் கூட்டுக்குடியரசில் அது 5 சதவிகிதமும், யு. எஸ். சில் 4 சதவிகிதமும் வீழ்ந்திருந்தது. மேலை நாட்டுப் பொருளாதார வல்லுநர்களின் மதிப்பீட்டின்படி 1976 - க்கும் 1977 - க்கும் இடையில் முக்கியமான முதலாளித்துவ நிறுவனங்கள் நிலையான மூலதனத்தில் குறைவாக முதலீடு செய்தன. 1970-1974 க்குட்பட்ட கால இடைவெளியில் செய்யப்பட்ட ஆண்டுச் சராசரி முதலீட்டு மட்டமான 200,000 மில்லியனுடன் ஒப்பிடும் வேளையில் உருவாவது இந்தநிலை. 1970களின் இரண்டாவது பாதியில் முதலாளித்துவப் பொருளாதாரமானது ஒரு சூழல் தன்மை கொண்ட பொருளாதாரப் பொற்காலத்திற்குள் நுழைந்தது. எனினும் அது பொருளாதார முழுமையிலும், நிலைத்த மூலதன முதலீட்டிலும் ஏற்பட்ட தேக்கமான வளர்ச்சி விகிதங்களுடன் கூடிய மறுஉற்பத்தி நிகழ்ச்சிப் போக்குகளின் உறுதியற்ற தன்மையாலும், ஒழுங்கற்ற தன்மையினாலும் சிறப்புடையதாய் விளங்கியது. வளர்ந்த முதலாளித்துவ நாடுகளில் மொத்த மூலதன முதலீடு 5.5 சதவீதம் உயர்ந்தது. (உற்பத்தி முதலீட்டில் நிகழ்ந்த 7.5 சதவிகித உயர்வையும் சேர்த்து) மொத்த தேசிய உற்பத்தி 3.8 சதவிகிதமும், தொழில் உற்பத்தி 4 சதவிகிதமும் உயர்ந்தன. அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும், ஜப்பானிலும் வளர்ந்த முதலாளித்துவ நாடுகளுக்குரிய சராசரியைக் காட்டிலும் சிறிதளவு அதிகமாகவே இருந்தது. இவ்வாறாக மொத்த தேசிய உற்பத்தி- அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும், ஜப்பானிலும் முறையே 4 சதவிகிதமும், 5.6 சதவிகிதமும் உயர்ந்தது- அமெரிக்க ஐக்கிய நாடுகளில் தொழில் உற்பத்தி 5.7 சதவிகிதமாக உயர்ந்தது. ஆனால் இரண்டு நாடுகளிலும் மொதத மூலதன முதலீடு சராசரி-மட்டத்தைக் காட்டிலும் குறைவாகவே-அதாவது அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 4 சதவிகிதமும், ஜப்பானில் 5.6 சதவிகிதமாகவுமேதான் இருந்தது.

தொடர்ந்த தேக்க நிலையும், முதலீடுகளின் நிலையற்ற வளர்ச்சியும் முதலாளித்துவ நாடுகளின் தொழில் மறு உற்பத்தியில் ஒரு தடையை விதித்தன. சுழலின் அடுத்த நிலைக்கு மாறுவதில் ஒரு சிக்கலைத் தோற்றுவித்தன. வேறு மாதிரி கூறினால் பொருளாதார வளர்ச்சிக் காலத்திற்குச் செல்வதை மிகவும் இடர்ப்பாடு நிறைந்ததாக ஆக்கின. மேலும் 1979 இல் முதலாளித்துவப் பொருளாதார வளர்ச்சியின் உறுதியற்ற தன்மை மேலும் உயர்ந்து, அதுவே அக்காலத்தின் சிறப்பியல்பாகத் திகழ்ந்தது.

இப்போதுள்ள வளர்ந்த முதலாளித்துவப் பொருளாதாரத்தில், நாடுகளில் காணப்படும் மெதுவான மேல்நோக்கிய வளர்ச்சி பல்வேறு காரணங்களின் விளைவு ஆகும். ஜெர்மன் கூட்டுக் குடியரசு, ஜப்பான், இத்தாலி, கிரேட்பிரிட்டன் ஆகிய நாடுகளில் இந்த நிகழ்ச்சிப் போக்கு முதலீட்டினால் மிகுதியாகத் தூண்டப்படவில்லை. ஆனால் அது தொழிற் கூடங்களின் தொழில் சேமிப்புகளாலும், தனியார் நுகர்வின் வளர்ச்சியினாலும் (பெரும்பாலும் சேமிப்பிலிருந்தும், நுகர்வோர் கடன் உதவிகளாலும் நிதியுதவி செய்யப்பட்டு) அந்நிய நாட்டு வியாபாரம் விரிவடைவதாலுமே மிகுதியாகத் தூண்டப்பெற்றது இந்த நாடுகளின் உற்பத்தித்துறைகளில் செய்யப்படுகிற மூலதன முதலீடுகள் பொருளாதாரத்தின் மேல்நோக்கிய வளர்ச்சியில் மிகவும் முக்கியத்துவம் குறைந்த ஒரு பங்கினையேயுடையதாயிருந்தன. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மட்டுமே இது அனைத்துக் காரணிகளின் உட்செயல்களின் விளைவாக இருந்தது. ஆகவே அமெரிக்கப் பொருளாதாரமே பொருளாதாரத்தின் மேல் நோக்கிய வளர்ச்சி என்ற மேடையில் முதன் முதல் ஏறியது.

முதலீடுகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் விளைவுகள் முதலாளித்துவப் பொருளாதாரம் முழுவதிலும் ஒரே மாதிரியானதாக இல்லை. அவைகள் தெளிவாக வெளிப்பட்ட சமூக அம்சத்தையும் கொண்டிருந்தன. பொருளாதார

வளர்ச்சியின் மீது எதிர்மறையான செல்வாக்கைச் செலுத்தியும், சமூக மறுஉற்பத்தியின் வழக்கமான போக்கின் மீது எதிர் மறையான செல்வாக்கைச் செலுத்தியும் முதலாளித்துவப் பொருளாதார அமைப்பின் முக்கியமான பகுதிகள் அனைத்தையும் அது பாதித்துள்ளது. மிக அதிகமான வேலையில்லாத் திண்டாட்டம் நிலவிய காலத்தில் தொடங்கிய முதலீட்டின் தேக்கம் முதலாளித்துவத்தின் கீழ் வேலைபற்றிய பிரச்சினையை மேலும் தீவிரமடையச் செய்தது. அதன் விளைவாக அது பலனுள்ள தேவையைப் பெரிதும் பாதித்தது.

ஏகபோக மூலதனத்திற்கு ஆதரவான சிந்தனை மேதைகள் தனியார் துறையின் இலாப விகிதத்திற்கும், முதலீடுகளின் விகிதத்திற்குமிடையே ஒரு உறவைக் காண முயன்று வருகிறார்கள். இவ்வாறாக இன்றுள்ள முதலீடு களின் தாழ்ந்த மட்டங்களே இலாபங்களின் தாழ்ந்த மட்டத்திற்குக் காரணம் என அவர்கள் விளக்க முயல்கிறார்கள். இந்த உறவை மறுக்க முடியாதுதான். ஆனாலும் இதையே முதலீட்டின் மந்தத்திற்கு முக்கிய காரணமாக்க முடியாதென்பதைத் தெளிவாக்க வேண்டும். மேற்கத்திய பொருளாதார நிபுணரான ஜெர் ஹார்ட் மென்ஷ் குறிப்பிட்டதுபோல மிகுதியான இலாபம் மிகுதியான முதலீட்டிற்கு வழி செய்யவில்லை 19/0 இல் இலாபங்களில் கால்பங்கைக் காட்டிலும் அதிகமாக மீண்டும் அதே நிறுவனங்களில் முதலீடு செய்யப்பட்டது. 1974 இல் இது பத்தில் ஒரு பங்காகக் குறைந்து விட்டது.

1974-1975 நெருக்கடியைப் பின்தொடர்ந்த காலத்தில் முதலீட்டின் நிலைமையானது பூர்ஷ்வா அரசின் தலையீடில்லாமல் ஏற்ற முறையில் செயல்பட இயலாத தாயிருந்த முதலாளித்துவ சந்தைச் சூட்சுமத்தின் மீது தனி ஏகபோகத்தின் நம்பிக்கையின்மையால் பொதுவாகச் சிறப் புடையதாக விளங்கியது. இவ்வாறாக மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த பேராசிரியர் பி. ஸ்ட்ரும்பெல் குறைந்த வேலை

வாய்ப்பு, பணவீக்கம், முதலீட்டின் குறைந்த விகிதம், பொருளாதார வளர்ச்சியின் குறைந்த விகிதம் ஆகியவை போன்ற இன்றைய பொருளாதாரப் பிரச்சினைகள், சூழ்நிலை தொடர்பான பிரச்சினைகளாக இருப்பதைக் காட்டிலும், கட்டமைப்புப் பிரச்சினைகளாகவே உள்ளன என வலியுறுத்தினார். இன்று சந்தை நிறைவேற்ற முடியாத முக்கியமான பணிகள் உள்ளன. உதாரணமாக சாதகமான பொருளாதார சூழ்நிலையில் கூட அதனால் வேலை வேண்டுபவர்களுக்கு வேலைக்கு உத்திரவாதம் அளிக்க முடியாது.

நடைமுறையில் ஏகபோகங்கள் நிதானப்படுத்துகிற கொள்கையைப் பின்பற்றுகின்றன அதிகப்படியான தீவிரமான முதலீடுகளுக்கான சாதகமான சூழ்நிலைகளைப் படைப்பதற்காக அரசு ஏகபோகக் கட்டுப்பாடுகள் மூலம், முதலாளித்துவ அரசுகளின் மீது நிர்ப்பந்தத்தைக் கொண்டு வரும் கொள்கையொன்றையும் அவைகள் பின்பற்றுகின்றன. ஏகபோகங்களின் இலாபங்களைப் பெருக்குவதற்கு ஏற்றாற் போல பொருளாதார நடவடிக்கைகளையும், அமைப்பு முறை பற்றிய நடவடிக்கைகளையும் மேற் கொள்ளும்படி பூர்ஷ்வா அரசுகளை நிர்ப்பந்தப்படுத்தவும் முயல்கின்றன. எப்போதும் போல ஏகபோக மூலதனம் முதலாளித்துவ அமைப்பு முறையின் தேசிய, சமூக, பொருளாதார பிரச்சினைகளுக்குத் தேவையான தீர்வுகளுக்கு அவசரமான முக்கியத்துவம் கொடுப்பதன் மூலம் அதனுடைய வர்க்க நலன்களை மறைக்க முயல்கிறது.

இது தொடர்பாக பூர்ஷ்வா அரசின் தேவையைக் கட்டுப்படுத்தும் கொள்கையின் பயனுள்ள தன்மையைப் பற்றி சர்வதேச நிதி நிறுவனம் கொண்ட கண்ணோட்டம் நம் கவனத்திற்குரியதாகும். 1977 இல் சர்வதேச நிதி நிறுவனத்தின் வழக்கமான கூட்டத்தில் இந்தக் கொள்கை முதலாளித்துவப் பொருளாதாரத்தை மீண்டும் திறன் மிக்கதாக ஆக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு இயலாதது என வர்ணிக்கப்பட்டது.

அது பணவீக்கத்தை மட்டுமே அதிகரிக்கிறது என்றும், அது வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைப்பதற்கு ஏதும் செய்யவில்லை என்றும் சுட்டிக் காட்டப்பட்டது• தேவையின் மீது அரசு மேற் கொள்ளும் கட்டுப்பாட்டின் மரபு சார்ந்த கொள்கைகளை முதலீடுகளின் மீது கட்டுப்பாடு விதிப்பது என்ற கொள்கையினால் ஆக்கப் படுத்துவதற்கு அந்த சர்வதேச நிதி நிறுவனத்தின் கூட்டத்தில் கருத்து தெரிவிக்கப்பட்டது. முதலீடுகளின் பரிமாணம் மட்டுமே கட்டுப்படுத்தப்படவில்லை. ஆனால் அவற்றின் கட்டமைப்பும் இப்போது கட்டுப்படுத்தப் படுகிறது என்பதே இதன் பொருளாகும்.

## 2. முதலீட்டின் மீது கட்டமைப்புக் காரணிகளின் செல்வாக்கு

நெருக்கடிக்குப் பிந்திய காலத்தில் முதலீட்டின் இயக்கத்திலும், முதலீட்டின் போக்குகளிலும் காணப்பட்ட முக்கியமான இயல்புகள் தனியார் ஏகபோகத்தின் திறமையின் சிறப்பின்மையாலும், முதலீடுகளை அரசு கட்டுப்படுத்துவதாலும், வருங்கால பொருளாதார வளர்ச்சியைப் பற்றிய பெரிய ஏகபோகங்கள் மற்றும் பூர்ஷ்வா அரசுகள் ஆகியவற்றிடையே ஒரு தெளிவான ஏற்ற தொரு நோக்கு இல்லாமையினாலும் நிர்ணயிக்கப் படுகின்றன. இது விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி பற்றிய ஒரு சார்பான கொள்கையின் விளைவேதான். இது நீண்ட காலத்தில் புதிய செயல் திறன்களைப் பயன்படுத்துவது பற்றிய போதுமான அளவு பகுத்தறிவுக்குகந்ததாய் இல்லாத கண்ணோட்டம்தான் என்று நமக்குத் தெளிவாகத் தெரிகிறது. பெரும்பாலும் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் விளைவாக உருவாக்கப்பட்ட முதலாளித்துவ அமைப்பு முறையின் உள்முரண்பாடுகளின் விளைவுகளும் தான் அது. **'தி எக்கனாமிஸ்ட்'** என்ற பிரிட்டிஷ் வார ஏட்டின் கருத்துப்படி பொருளாதாரம் நெருக்கடியிலிருந்து

மீண்டாலும்கூட சில பெரும் கம்பெனிகள் நெருக்கடிக்கு எதிரான முதலீட்டுக் கொள்கையைப் பின்பற்றுகின்றன. பிந்தியது சுழலை விடாது பின்பற்றுகிறது என்பதில் தான் முதலீட்டின் முரண்நிலையுள்ளது என்று கூறுகிறது.

முதலாளித்துவ மறுஉற்பத்தியின் நெருக்கடிக்குப்பிந்திய காலத்தின் முதலீட்டின் செயலியக்கம், முதலாளித்துவ மறுஉற்பத்தியின் பொதுவான போக்குகள் ஆகியவற்றைப் பற்றிய ஒரு பகுத்தாய்வு சிறப்புக்குரியதொரு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும். முதலாளித்துவப் பொருளாதாரத்தின் மேற் கொண்ட வளர்ச்சியானது, பெருமளவிற்கு சூழ்நிலைக் காரணிகளைக் காட்டிலும், கட்டமைப்புக் காரணிகளையே பிரதிபலிக்கும் முதலீட்டின் தேக்கமானது அவற்றை எந்த அளவு பிரதிபலிக்கிறது என்பதையும், அவைகளைத் தொழில் நுட்ப முன்னேற்றம் எவ்வளவு வெல்ல முடியும் என்பதையும் பொருத்ததாய் இருக்கும்.

பெரும்பாலான பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்களின் கருத்துப்படி இன்றைய முதலீட்டில் உள்ள தேக்கம் ஒரு கட்டமைப்பு நெருக்கடியை விளக்கிக் காட்டியுள்ளது, என்பதை நாம் குறிப்பிட வேண்டும். அவர்களிற் சிலர் நெருக்கடிக்குப் பிந்திய காலத்தின் நிலைமையை "மூலதன முதலீடுகளின் நெருக்கடி" என்று சித்திரிக்கிறார்கள். இவ்வாறாக மைக்கேல் டூரின் என்பவருடைய கருத்துப் படியும், டேவிட் பீச் என்பவருடைய கருத்துப்படியும் முதலீடு நெருக்கடியான ஒரு சூழ்நிலையில் இருக்கிறது என்பதாகும். ஐரோப்பாவில் எங்கும் ஒரு தனியான தொழில் தொகுதியில்கூட முதலீடு மிகவும் செழிப்புற்று விளங்குகிறது எனக்கூற முடியாது என்பது ஒரு வாக்கெடுப்பு மூலம் (500 தொழில் தொகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட வாக்கெடுப்பு. ஆ-ர்) தெளிவாயிற்று. வேறு பிற பொருளாதார வல்லுநர்கள் இந்த முதலீட்டு நெருக்கடியை கட்டமைப்பு நெருக்கடியாகக் காண்கிறார்கள். தனியார் முதலீட்டின் தேக்கம்,

கட்டமைப்புத்தன்மை கொண்டதே தவிர சூழ்நிலைத் தன்மை கொண்டதல்ல என்று பிஸ்ட்ரும்பெல் எழுதுகிறார். இது உலகளாவிய பிரச்சினையே தவிர ஒரு தேசிய பிரச்சினையல்ல.

பிரெஞ்சு பத்திரிகை ஒன்றின் ஆராய்ச்சியில் குறிப்பிடப் பட்டுள்ளதைப் போல ஆற்றல் நெருக்கடியின் நேரடியான விளைவாகத் தோன்றியுள்ள தொழிற் சிறப்புள்ள நாடுகளில் காணப்படும் முதலீட்டு நெருக்கடியானது மேற்கத்திய பொருளாதாரங்களின் மெதுவான வளர்ச்சியின் விளைவாகத் தீவிரமடையச் செய்யப்பட்டுள்ளது. ஆனால் முதலீட்டு நெருக்கடியே தேங்கிய பொருளாதார வளர்ச்சியின் ஒரு காரணியாக விளங்கியது. அது எதிர்மறை விஷயங்கள் ஒன்றாகக் குவிவதை விரைவு படுத்தியுள்ளது. இந்த பிரெஞ்சு பொருளாதார நிபுணர்கள் இன்று முதலாளித்துவ முறை மறு உற்பத்தியை அடக்கியுள்ள ஒரு நச்சுச் சுழல் பற்றி நன்றாக அறிந்துள்ளனர் என்பதுதான் எங்கள் கருத்து.

இவ்வாறாக முதலீட்டில் நிலவுகிற மந்தம் ஒரு கட்டமைப்பு நெருக்கடியின் சில சிறப்பியல்புகளைக் கொண்டதாக உள்ளது. முதலாளித்துவப் பொருளாதாரம் பொதுவாக சீர்கேடடைந்து வருவதன் விளைவாக முதலாளித்துவ மறு உற்பத்தி சூட்சுமத்தில் ஏற்பட்டுள்ள கடுமையான இடையூறுகளும், முதலீட்டில் நிகழ்ந்துள்ள முக்கியமான நிகழ்ச்சிகளும் இவற்றிற்குச் சான்று பகர் கின்றன.

மிகக்குறைந்த விகித மீட்சியே இருந்த போதிலும், நெருக்கடி காலத்திலும், அதற்குப் பின்னும் பொறியியல் கருவிகள் செய்யும் தொழில் இரசாயனப் பொருட்கள் தொழில், மின்னணுத் தொழில் போன்ற உலக சந்தைக்கும், ஏகாதிபத்தியங்களுக்கிடைப்பட்ட போட்டிகளுக்கும் உரிய தொழில்களில் முதலீடுகள் திருப்பி விடப் பட்டன என்பதை வலியுறுத்த வேண்டும். ஆனால் இந்த

முதலீடுகளின் முக்கிய சிறப்பியல்பு இதுதான். அதாவது, அவை, முக்கியத் தொழில் நிறுவனங்களின் நிலைத்த மூலதனத்தைப் புதுப்பித்து, செம்மைப்படுத்து வதற்கே பெரிதும் பயன்படுத்தப்பட்டன. புதிய நிறுவனங் களின் உருவாக்கத்திற்குச் சிறிதளவே பயன்பட்டன. இவ்வாறு ஜெர்மன் கூட்டுக் குடியரசில் சந்தையின் நிலைமை யானது புதிய தொழில் நிறுவனங்களை உருவாக்கும் அளவுக்கு முதலீடுகளைத் தூண்டும்படிப் பெரிதாக இல்லை எனக் கருதப்பட்டது. அதே நிலை வேறுசில முதலாளித்துவ நாடுகளிலும் இருந்தது. 1975-1977-ன் இடையில் அமெரிக்காவில் சாதனங்களின் தொழிலில் செய்யப்பட்ட முதலீட்டின் அளவு சராசரி ஓராண்டிற்கு 8.2 சதவிகித மாகவும், ஆனால் புதிய கட்டுமானப் பணிகளில் ஆண்டிற்குச் சராசரி 2.7 சதவிகிதம் மட்டுமே உயர்ந்தது.

பின்வரும் அட்டவணையிலிருந்து தெளிவாவது போல, மறுஉற்பத்தித் துறையில் சொத்துக்களின் வகையில் பெருகிய பங்கு நோக்கிய போக்கு ஏறத்தாழ வளர்ந்த முதலாளித்துவ நாடுகளின் ஆக்கத் தொழில்களில் தெளிவாக வெளிப்பட்டுள்ளது. ஜப்பான் மட்டுமே அதற்கு விதி விலக்காயுள்ளது. இந்த நாட்டைப் பொருத்தவரை அதனுடைய வளர்ச்சியின் தனித்தன்மையை அடிப்படையாகக் கொண்டு பார்த்தால் இந்த நிலையை ஒரு தற்காலிகநிலை என்றுதான் கூற வேண்டும். ஏகபோகங்கள் உயர்ந்த உழைப்பின் உற்பத்தித்திறனுக்கும், குறைந்த தொழிலாளர் சக்திகளுக்கும் உத்தரவாதம் அளிப்பதனால் உற்பத்தித் துறையில் நிறுவப்பட்ட சொத்துக்களின் கட்டமைப்பும், அதன் போக்கும் அவற்றுக்குப் பொருத்தமாக இருக்கின்றன.

ஆனால் இந்த மாதிரியான போக்குகள் முதலாளித்துவ அமைப்பு முறையை எதிர் நோக்கியுள்ள வேலையில்லாத் திண்டாட்டம் என்ற பிரச்சினையை மிகவும் கடுமையானதாக ஆக்கவே பயன்படுகிறது. எனினும் உற்பத்தியை பெருக்கக்கூடிய புதிய ஏற்பாடுகள் செயல்கள்

அட்டவணை-1

## ஆக்கத் தொழிலில் மாறா மூலதனத்தில் மூலதன முதலீடுகளின் கட்டமைப்பு (சதவிகிதம்)

| | 1963 | | 1969 | | 1973 | | 1974 | | 1975 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சொத்துக்கள் | கடன்கள் | சொத்துக்கள் | கடன்கள் | சொத்துக்கள் | கடன்கள் | சொத்துக்கள் | கடன்கள் | சொத்துக்கள் | கடன்கள் |
| அமெரிக்க ஐக்கிய நாடுகள் | 73.9 | 26.1 | 73.8 | 26.2 | 77.5 | 22.5 | 76.8 | 22.5 | 79.8 | 20.2 |
| ஜெர்மன் கூட்டுக் குடியரசு | 73.6 | 26·4 | 75.2 | 24.8 | 76 1 | 23.9 | 78.4 | 21.6 | 81 0 | 19.0 |
| கிரேட் பிரிட்டன் | 75.0 | 25.0 | 79.9† | 20.1† | 83 4 | 16.6 | 78.8 | 21.2 | 81.2 | 18 8 |
| இத்தாலி | 75.3* | 24.7* | 76.6 | 23.4 | 76.5 | 23.5 | 77.5 | 22.5 | 78 8 | 21 2 |
| ஜப்பான் | 71.9 | 28.1 | 69.0 | 31.0 | 66.1 | 33.9 | — | — | 65.8 | 34.2 |

* 1968 க்கான புள்ளி விவரங்கள்

† 1965 க்கான புள்ளி விவரங்கள்

நடைமுறையில் புகுத்தப்படும் பொழுது முதலீடு தொடர்பான நிலை வேறு விதமானதாக ஆகிறது.

எனினும் இன்றைய மிக அதிகமான தீவிரத்தன்மை கொண்ட முதலீட்டின் கட்டமைப்பு நிலவுகிற போது மிகச் சிறந்த பயனுள்ள தன்மையை நாம் உத்திரவாதம் செய்வது இயலாது. பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்கள் தொழிலாளர்களின் உற்பத்தித்திறன் வளர்ந்து வருவது போல மூலதனத்திலிருந்து கிடைக்கும் வருமானம் குறைந்து கொண்டே வருகிறது என்ற விஷயத்தைச் சுட்டிக் காட்டுகிறார்கள். உதாரணமாக 1954 க்கும் 1972 க்கும் இடையில் மேற்கு ஜெர்மனியில் மூலதனத்திற்குக் கிடைத்த வருமானம் ஆண்டிற்கு 0.8 சதவிகிதம் குறைந்தது. பிரிட்டனில் அது 1.1 சதவிகிதம் குறைந்தது. இம்மாதிரியான நிலையே பிற வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளிலும் நிலவுகிறது என நாம் நம்பலாம்.

ஏகாதிபத்தியங்கள் முக்கியமாக உற்பத்தித் திறன்களை மிகுதியாகப் பயன்படுத்துவதற்கும் மேலும் அதிக அளவில் நவீனமயமாக்கப்பட்ட புதிய இயந்திரங்களையும், கருவிகளையும் உற்பத்தியில் புகுத்துவதற்கும் தங்களுடைய கவனத்தை அதிகமாகச் செலுத்துகின்றன. எனினும் இம்மாதிரியான முதலீட்டின் போக்குகள் உற்பத்தியின் ஓர் அலகுக்குரிய சொத்துக்களின் பரிமாணத்தை உயர்த்துவதற்கு வழி செய்கின்றன. முதலீட்டின் பொதுவான வளர்ச்சியின் மேற்கொண்ட இடர்ப் பாடுகளைத் தோற்றுவித்துக் கொண்டு அது வருங்காலத்தில் வளரக்கூடும் என எதிர் பார்க்கலாம்.

வருங்காலத்தில் சொத்துக்களைப் புதுப்பிக்கவும், திறமைமிக்கதாக ஆக்கவும் கூடியவை எனத்தோன்றக் கூடிய பல காரணிகளும் இருக்கக் கூடும். முதன் முதலாக, முதலாளித்துவப் பொருளாதாரத்தில், ஆற்றல் மூலப் பொருட்கள், சூழ்நிலைப்பாதுகாப்பு ஆகியவற்றில் தோன்றியுள்ள சூழலின் முக்கியமான விளைவுகள் உள்ளன. இது

உற்பத்திச் செலவின் அமைப்பை மிகவும் கேடுறச் செய்து முதலாளித்துவப் பொருளாதாரத்தின் விலைகளை மிக அதிகமாக மாற்றியுள்ளது.

விஞ்ஞான - தொழில் நுட்ப வளர்ச்சியைப் பயன் படுத்துவதை அடிப்படையாகக் கொண்ட முதலீட்டுக் கொள்கை முதலாளித்துவப் பொருளாதாரத்தை மிகுதியான வளர்ச்சிக்கான பாதையில் இட்டுச் செல்கிறது. இது தொடர்பாக முதலீட்டைப் பொருத்தவரை இன்றைய நிலைக்கான முக்கிய காரணங்கள் முதலாளித்துவப் பொருளாதாரத்தில் சென்ற இருபதாண்டுகளில் படைக்கப் பட்டுள்ள புறவயக்காரணிகளிலிருந்து-குறிப்பாக விஞ்ஞான —தொழில் நுட்ப முன்னேற்றங்களினால் படைக்கப்பட்ட புறவயக்காரணிகளிலிருந்து எழுவதாகக் கூறவேண்டும். 1960 களுக்கும் 1970 களுக்கும் இடைப்பட்ட காலத்தில் விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றம், பொருளாதாரத் துறையில் பண்பியல் அடிப்படையில் பெரும் மாற்றங்களையும், முதலாளித்துவப் பொருளாதாரத்தின் துறைகளுக் கிடையேயான தொடர்புகளில் பெரும் மாற்றங்களையும் தோற்றுவித்துள்ளது. அதே வேளையில் முதலின் பெரும் திரட்சி, நிலையான மூலதனத்தைப் புதுப்பித்தல், உற்பத்தியை விரைவாக்கிப் பெருக்குவது, நுகர்வின் அமைப்பு ஆகியவற்றின் விரைவான வளர்ச்சியைத் தோற்று வித்துள்ளது. இன்று இந்த நிகழ்ச்சிகள் முதலாளித்துவ மறுஉற்பத்தியின் பொருளாதார சூட்சுமத்தின் மீதும், முதலீட்டின் திறன் மற்றும் போக்கு ஆகியவற்றின் மீதும் முரண்பாடான விளைவுகளைத் தோற்றுவித்துள்ளன.

முதலாளித்துவப் பொருளாதாரத்தின் முக்கியமான துறைகள் பரந்த பயன்படுத்தப்படாத உற்பத்தித் திறமைகள் உடையனவாகத் திகழ்கின்றன என்பது யாவரும் அறிந்ததே. இந்தத் திறமைகளை மிகவும் குறைவாகவே பயன்படுத்துவது என்ற பிரச்சினையும், போருக்குப் பிந்திய முதலீட்டின் செயல் திறனைப் பற்றிய பிரச்சினையும், இரண்டு காரணி

களை அடிப்படையாகக் கொண்டு பரிசீலிக்கப்பட வேண்டும். போர்க் காலத்திலிருந்து வளர்ந்த முதலாளித்துவ நாடுகளில் மிக அதிகமான அளவு மூலதனத்திரட்சியும், வேகமாக மதிப்புக் குறைக்கும் தனிச்சிறப்புக் கொள்கையும். மார்க்ஸ் நான் முதன் முதலில் மூலதனம் குவிக்கப்படுவது ஒரு முரண்பாடுகள் நிறைந்த நிகழ்ச்சிப் போக்கு எனக் கூறினார். உற்பத்தியாளருக்கும், நுகர்வோர்க்கும் இடையில் நிலவுகிற உட்புறச் சமநிலை, நிலைகுலையச் செய்யப் பட்டால் முதலீட்டில் ஒரு பெருக்கம் ஏற்பட்டாலும்கூட அது உற்பத்தியைப் பெருக்காது. மாறாக உற்பத்தித் திறன் களைக் குறைவாகப் பயன்படுத்துவதிலும், அதன் விளைவாக வேலையில்லாத் திண்டாட்டம் உயர்வதிலும் தான் முடியும். அதற்கு மாறாக விலையிறக்கத்திற்கான உதவித்தொகை ஆண்டு தோறும் செய்யப்படும் முதலீட்டில் பெரும்பாலான வற்றிற்குக் காரணமாக விளங்குகிறது. 1975 இல் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மாறா மூலதனத்தின் முதலீடுகள் 78.1 சதவிகிதம் மதிப்புக் குறைக்கப்பட்டதால் ஏற்பட்டவையே. கிரேட் பிரிட்டனில் 53.3 சதவிகிதமும், பிரான்சில் 49.2 சதவிகிதமும், ஜெர்மன் கூட்டுக் குடியரசில் 57.1 சதவிகிதமும், ஜப்பானில் 40.7 சதவிகிதமும், ஸ்வீடனில் 58.4 சதவிகிதமும், டென்மார்க்கில் 49.9 சதவிகிதமும் மதிப்புக் குறைக்கப்பட்டதால் நிகழ்ந்தவையே. வருங்காலத்தில் முதலாளித்துவ நாடுகளில் முதலீட்டில் மேலும் வளர்ந்து கொண்டேவரும் பங்கு மதிப்புக் குறைக்கப்பட்டதால் ஏற்பட்டதாகவே இருக்கும். விரைவாக ஆக்கப்பட்ட மதிப்புக் குறைப்பும் மாறா மூலதனத்தைப் புதுப்பிக்கவும், திறமை படைத்தாக ஆக்கவும் பயன்படுகிற முதலீட்டின் பொதுவான போக்கும், பெரும் ஏகபோகங் களின் கையில் ஏராளமான உபரிப் பண்டங்கள் உருவாவதைத் தூண்டியுள்ளது. இது சமூக மறுஉற்பத்தி நிகழ்ச்சிப் போக்கை மிக அதிகமான அளவு சிக்கல் நிறைந்ததாக ஆக்கியுள்ளது.

1960 களில் ஏற்பட்ட "முதலீட்டின் பெருக்கம்" பெருமளவு விஞ்ஞான, தொழில் நுட்ப முன்னேற்றத்துடன் மிகநெருங்கிய பிணைப்புடையதாக இருந்தது. பூர்ஷ்வா அரசுகளும், ஏகபோகங்களும், விஞ்ஞான ஆராய்ச்சியிலும் புதிய தொழில்களைப் படைப்பதிலும் ஏராளமான பணத்தை முதலீடு செய்தன. இது அடிப்படையான தொழில்களில் தொழில் நுட்பத்தை விட்டு நிலைக்கு வழி கோலியது. இந்தப் புதிய தொழில் நுட்பம், புதிய பண முதலீடுகள் ஏதுமின்றி ஒப்பீட்டில் நீண்ட காலம் பயனுள்ளதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படக் கூடியதாகும்.

1970 களின் நடுவில் ஏற்பட்ட கட்டமைப்பு நெருக்கடி புதிய சூழ்நிலைக்குப் போதுமான அளவு தயாராக இல்லாத முதலாளித்துவப் பொருளாதாரத்திடமிருந்து பெருமளவு எதிர்பார்த்தது. இது இன்று முதலீட்டில் ஏற்பட்டுள்ள கட்டமைப்பு நெருக்கடிக்கு மிகவும் முக்கியமான காரணங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. ஜெர்ஹார்ட் மென்ஷ் என்ற மேற்கு ஜெர்மனி பொருளாதார நிபுணர் 1952 லிருந்து 1973 வரை, 1,242 புதிய கண்டுபிடிப்புகள் உருவமைக்கப்பட்டன; அவைகளில் 322 தான் தனிச் சிறப்பான நடைமுறைப்பயனுடையவையாக விளங்கின, என்றும், இந்த எண்ணிக்கை முதலாளித்துவத்தின் கீழ், தேவையான முதலீட்டுப் பெருக்கத்தை உண்டாக்கப் போதுமானதாக இல்லை என்றும் கருதுகிறார்.

முதலீட்டில் ஏற்ற வளர்ச்சியில்லாமல், முதலாளித்துவ பொருளாதாரம் நீண்டகாலம் செயல்பட முடியாது என்பது உறுதியானதுதான். நெருக்கடியின் விளைவாகத் தோற்றுவிக்கப்பட்ட தொழில்களை நவீன மயமாக்குவதற்கும், பயனற்றுப்போன சாதனங்களையும், தேய்ந்து போன சாதனங்களையும் புதுப்பிக்கவும், புதிய தொழில் நுட்பத்தை உண்டாக்கவும், புதிய தொழில் திட்டச் செயல்களையும், புதிய ஆற்றல் மூலப்பொருட்கள் ஆகியவற்றைத்

தோற்றுவிக்கவும் முதலீடுகள் இன்றியமையாதவைகளாக உள்ளன. அரசு நிறுவனங்களாலும், ஏகபோகங்களாலும், சூரிய ஒளி, காற்று, நிலத்தடிவாயு, பயோகெமிக்கல் இரசாயனம், அலைகளிலிருந்து பெறும் ஆற்றல், நிலவெப்ப ஆற்றல் முதலியவற்றைப் பயன்படுத்துவதற்கான வேலைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

உதாரணமாக அமெரிக்க ஏகபோகங்கள், ஆராய்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் புதிய ஆற்றல் வகைதொகைகளுக்குமான செலவுகளைச் சென்ற சில ஆண்டுகளாகப் பெருக்கியுள்ளன. லாக்ஹீட் கம்பெனி 100 மெகாவாட் மின்சக்தி உற்பத்தி செய்யக் கூடிய காற்றால் இயங்கும் ஒரு பெரிய மின் நிலையத்தை 1,000 மில்லியன் டாலர் செலவில் அமைத்துள்ளது. இம்மாதிரியான மின் ஆற்றல் நிலையங்கள் ஜெனரல் எலெக்டிரிக் கம்பெனியாலும் உருவமைக்கப்பட்டுள்ளன. பேருந்து உற்பத்தி நிறுவனங்கள் குறைந்த எரிபொருளைப் பயன்படுத்தக் கூடிய பேருந்துகளைக் கண்டு பிடிப்பதற்கானவற்றை ஆராய்ந்து வருகிறார்கள். ALCOA அலுமினிய உற்பத்தியில் பயன்படுத்துகிற ஆற்றலைக் குறைப்பதற்கான தொழில் நுட்பத்தை வளர்ச்சியடையச் செய்துள்ளது. எஃகு, உணவு, பஞ்சாலை ஆகிய தொழில்களில் ஆற்றலைப் பயன்படுத்துவதுபற்றி ஆராய்ந்தறியவும், கருவி தயாரிப்புத் தொழில், இரசாயன மற்றும் கனிப்பொருட்களை வெட்டியெடுக்கும் தொழில்களில் ஆற்றலைப் பயன் படுத்துவது பற்றி ஆராய்ந்தறிவதற்குமான செலவுகள் அதிகமாகியுள்ளன. வளர்ந்த முதலாளித்துவ நாடுகளில் அணுசக்தி ஆலைகளைக் கட்டுவதற்கான பெரும் திட்டச் செயல்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

இவையனைத்தும் விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றத்திற்குப் பெருமளவான பண முதலீடு இன்றியமையாதது என்பதைக் காட்டுகின்றன. ஆனால் முதலீட்டில் தேக்கம் பொருளாதாரத்தின் கட்டமைப்பிலுள்ள ஏறுமாறான தன்மையை மிகுதிப்படுத்துகிறது.

மூலதன மறுஉற்பத்தியை சிக்கல் நிறைந்ததாக ஆக்குகிறது. விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் வளர்ச்சிகளை முழுதுமாகப் பயன்படுத்துவதை ஒரு வரம்பிற்குட்பட்டதாக ஆக்குகிறது. போர்க் காலத்திலிருந்து தோன்றிய நெருக்கடிகளிலெல்லாம் கடுமையானதாயிருந்த 1974-1975-இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியும், அதைப் பின்தொடர்ந்த முதலீட்டில் மந்தமும், முதலாளித்துவப் பொருளாதாரத்தின் மீது ஒரு எதிர்மறையான செல்வாக்கைத் தொடர்ந்து செலுத்தும் என நாம் எதிர்பார்க்கலாம்.

விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றம் உற்பத்தியை சமூகமயப்படுத்துதலை விரைவானதாக்குகிறது. ஆனால் அதே வேளையில் அது முதலாளித்துவ முறையின் முக்கியமான முரண்பாடுகளைத் தீவிரமடையச் செய்கிறது. முதலாளித்துவ முறையின் பொது நெருக்கடியையும் மிகவும் ஆழமானதாக ஆக்குகிறது. இன்று விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றம் உலகத்தில் நிலவுகிற இரண்டு வேறுபட்ட சமூக-பொருளாதார அமைப்பு முறைகளிடையே-சோஷலிசம்—முதலாளித்துவம் போட்டிக்கான முக்கியமான துறையாக விளங்குகிறது. ஆனால் சோஷலிசத்தின் கீழ்தான் விஞ்ஞான வளர்ச்சியை மனித இனத்தின் நலனுக்காகவும் சமாதானத்திற்காகவும் பயன்படுத்தப்பட முடியும்.

**பேராசிரியர். வி. ஏ. மார்ட்டினோவ், முனைவர். விஞ். (பொருளாதாரம்) உதவி இயக்குநர்**
*உலகப் பொருளாதாரம் மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய நிறுவனம்*
*விஞ்ஞானக் கலைக் கழகம், சோவியத் ஒன்றியம்*

## இன்றைய வளர்ச்சிப் படிநிலையில் முதலாளித்துவ முறையில் காணப்படும் முரண்பாடுகள் தீவிரமடைதல்

இன்றைய சகாப்தத்தின் வளர்ச்சியை ஆட்சி செய்கிற தோரணை அதாவது உலக அளவில் முதலாளித்துவ அமைப்பு முறையிலிருந்து கம்யூனிச சமூக அமைப்பு முறைக்கு மாறுகிற காலத்தின் தோரணை கீழ்க்கண்டவாறு வெளிப்படுகிறது.

— முதலில் சோஷலிசத்தின் வளர்ந்து வரும் பொருளாதாரச் செயல்திறன், சர்வதேச அரங்கில் அதற்குச் சாதகமாகப் பெரும் அளவில் மாறிவரும் வர்க்கம், அரசியல் சக்திகள் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள மிகுதியான மாற்றங்கள்.

— ஒப்பீட்டில் ஏகாதிபத்தியத்தின் நிலைகளின் வலிமையின்மை. முதலாளித்துவ சமூக அமைப்பு முறையின் பொருளாதார சமூக-அரசியல் முரண்பாடுகள் தீவிரமடைதல்; சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கம் வலிமையடைதல்;

ஏகாதிபத்திய நாடுகளுக்கும், வளரும் நாடுகளுக்கும் இடையில் ஆழ்ந்த முரண்பாடுகள் எழுதல்; புதிய அரசு

களின் ஏகாதிபத்தியத்துக்கெதிரான தேசிய விடுதலை இயக்கங்கள் தீவிரமடைந்து வருதல்; சமூக, பொருளாதார வேற்றுமை நிகழ்ச்சிப் போக்குகள் தீவிரமாதல்.

முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி ஒரு வரலாற்றுப் பாங்காகத் தோன்றி, தீவிரமடைவது, முதலாளித்துவத்தினுள்ளேயே இயல்பாகவுள்ள முரண்பாடுகள் தீவிரமடைவதன் தவிர்க்க முடியாத விளைவேயாகும். மேலும் நம்முடைய காலத்தில், உலக முதலாளித்துவத்தின் முரண்பாடுகள் தீவிரமடைதல், அனைத்திற்கும் மேலாக இன்றைய விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியினால் முதலாளித்துவப் பொருளாதார முறையில் புகுத்தப்பட்டுள்ள அடிப்படையான மாற்றங்களிலிருந்து தோன்றுகின்றன.

அதில் நேரடியான உற்பத்தி சக்தியாக விளங்கக்கூடிய விஞ்ஞானத்தில் புரட்சி, விஞ்ஞான தொழில் நுட்பத் தொகுதி ஒன்றை உருவாக்குதல் ஆகியவை ஏறத்தாழ சென்ற முப்பது ஆண்டுகளில் உற்பத்தியின் பொருளாயதத் துறைகளில் அடிப்படையான மாற்றங்களைப் புகுத்தின. இது பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் இந்த நிகழ்ச்சிப் போக்கு பற்றிய சிறந்த ஒரு பகுப்பாய்வைத் தருகின்றன.

போருக்குப்பிந்திய காலத்தில் வளர்ந்த முதலாளித்துவ நாடுகளில் விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றம் கீழ் கண்டவற்றிற்கு வழி செய்தது.

— தொழிலாளிகளின் உழைப்புத் திறனின் வளர்ச்சி விகிதத்தில் ஒரு குறிப்பிடத்தகுந்த உயர்வு.

— பொருளாதாரம் முழுமையிலும் முதலின் குறைந்த தீவிரம். குறிப்பாக தொழிற்சாலைகளில் (உற்பத்தி சாதனங்களன் சிறந்த தன்மையினாலும், உழைப்புக் கருவிகளின் சிறந்த தன்மையினாலும்).

— உற்பத்திப் பொருட்களின் பொருளாயதத் தன்மையின் தீவிரத்தின் குறைவு (சமூக உற்பத்திப் பொருளின் மொத்தத்தில்-பொருளாயதச் செலவின்பங்கு).

முக்கியமான முதலாளித்துவ நாடுகளில் செய்யப்பட்ட மதிப்பீடுகளின் அடிப்படையில் மொத்த உழைப்பின் உற்பத்தித்திறனில் விளைந்துள்ள முன்னேற்றத்தில் 50 சதவிகிதத்திலிருந்து 70 சதவிகிதம் வரை புதிய தொழில் நுட்பம் மற்றும் உற்பத்தி யுக்திகளில் வெளிப்பட்டுள்ள விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றத்தினால் தான் என்றும் 50 சதவிகிதத்திலிருந்து 30 சதம் வரை உழைப்போரின் திறமையின் உயர்வினாலும், மேலாட்சியின் திறமையின் உயர்வினாலும், உற்பத்தியைத் திறம்பட அமைப்பதாலும் ஏற்பட்டுள்ளவையாகும், என்றும் தெரிய வருகிறது.

சில நாடுகளில்—அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும், ஜெர்மன் கூட்டுக் குடியரசிலும்—உற்பத்தி குவிவதன் விகிதம் குறைந்தது. பொருளாதார உற்பத்தியின் I, II இலாக்காக் களில் ஏற்பட்ட வளர்ச்சிகள் சமமானவையாய் இருந்தன. (தனித்தனிக் கால இடைவெளிகளுக்குள், குறிப்பிட்ட அளவு ஏற்றத் தாழ்வுகளுடன்) அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உற்பத்தியின் தீவிர வகைகள் பெரும்பாலான சமயங்களில் உருவாக்கப்பட்டுள்ளன. வளர்ந்த பிற முதலாளித்துவ நாடு களில் இதன் பல கூறுகள் தெளிவாகவே உள்ளன.

முதலாளித்துவத்தின் கீழ் விஞ்ஞான-தொழில் நுட்பத்தின் சாதனைகள் ஏகபோகங்களால் அவற்றின் இலாபத்தைப் பெருக்கிக் கொள்வதற்காகப் பயன்படுத்தப் படுகின்றன.

எனினும் 1950 க்கும் 1973 க்கும் இடையில் ஒப்பீட்டில் உயர்ந்து வளர்ந்த நாட்டின் மொத்த உற்பத்தியின் விகிதமும், தொழில் உற்பத்தி விகிதமும், தொழிலாளர் களின் உற்பத்தித்திறன் உயர்வும், ஏகாதிபத்தியங்களை எதிர்த்து அவர்கள் நடத்தி வந்த கடுமையான போராட்டங்

களும், முக்கியமான முதலாளித்துவ நாடுகளில் உள்ள தொழிலாளிவர்க்கம் தன்னுடைய ஊதியத்தையும், நுகர்வையும் பெரும் அளவு மிகவும் உயர்வாகவே வைத்துக் கொள்ள உதவியுள்ளன. அதன் விளைவாக சமூக உற்பத்தியிலும் அதன் அமைப்பிலும் ஒரு எதிர் மறையான விளைவே ஏற்பட்டது.

சமூக உற்பத்தியை சர்வதேசமயமாக்குவது விரைவு படுத்தப்பட்டது. போருக்குப் பிந்தியகால பொருளாதார வளர்ச்சியின் ஒரு வடிவமாக வளர்ந்தது. ஆழ்ந்த சர்வதேச வேலைப்பகுப்பிற்குப் பேருதவி செய்த விஞ்ஞான தொழில் நுட்பப்புரட்சியினால் மேற்கொண்டு உந்தப்பட்டது. இது அரசுகளிடையே விஞ்ஞான-தொழில்நுட்ப பொருளாதாரப் பரிமாற்றங்களுக்கு உதவி செய்தது. 1950-லிருந்து 1978 வரை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் உற்பத்தியும், நுகர்வும் வளர்ந்த முதலாளித்துவ நாடுகளில் மூன்று மடங்கு பெருகின. வெளிநாட்டு வாணிபமும், மூலதனத்தின் ஏற்றுமதிகளும் ஆறுமடங்கிற்கு அதிகமாகப் பெருகின. எனினும் முதலாளித்துவத்தின் பொருளாதார மற்றும் சமூக முரண்பாடுகள் குறைக்கப்படவில்லை. மாறாக விரிவான தாக்கப்பட்ட உள்நாட்டுச் சந்தைகளும், வெளிநாட்டுச் சந்தைகளுமிருந்த போதிலும், அரசு ஏகபோகக் கட்டுப் பாட்டு அமைப்பு முறையின் கிளைகள் நிறைந்த வலைப் பின்னல் இருந்த போதிலும் - அவை மேலும் முனைப்பாக வளர்ந்துதான் உள்ளன.

கார்ல்மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோர் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக் குறைவின்போது இருப் பதைக் காட்டிலும், உற்பத்தி சக்திகளுக்கும், உற்பத்தி உறவு களுக்கும் இடையில் நிலவும் பிணக்கு அதிகரிப்பதுதான் முதலாளித்துவ அமைப்பு முறையில் உள்ளமுரண்பாடுகளைத் தீவிரமாக்குகிற, முடிவில் அழிவைக் கொண்டு வருகிற அடிப்படையான காரணம் எனத் தெளிவாக்கியிருந்தனர். இந்த நிகழ்ச்சிப்போக்கின் போதுதான் முதலாளித்துவத்தின்

அடிப்படை முரண்பாடுகள் உற்பத்தியின் சமூகத் தன்மைக்கும், உழைப்பின் பயனைத் தனியார் ஏகபோகங்கள் கவர்ந்து கொள்ளும் உருவத்திற்குமிடையேயுள்ள முரண் பாடுகள் வளர்ந்து மேலும், மேலும் வெளிப்படுகின்றன.

லெனின் ஏகாதிபத்தியத்தின் பொருளாதார இயல்பு களைச் சிறப்பாக வர்ணித்துள்ளார். இந்தப் படிநிலையில் முதலாளித்துவத்தின் அடிப்படையான சில இயல்புகள் அவற்றிற்கு நேர்மாறானவையாக மாறிவிடுகின்றன என்றும், இன்றைய சகாப்தத்தின் சில இயல்புகள் ஒருசிறந்த அமைப்பு முறைக்கு மாறும் காலமாக விளங்கும் எனத் தெளிவாக்கு கிறது எனவும் கூறினார். "முதலாளித்துவம் அதனுடைய ஏகாதிபத்தியப் படிநிலையில், உற்பத்தி அனைத்தையும் உள்ளடக்கிய சமூகத் தன்மை கொண்டதாக ஆக்குவதற்கு நேரடியாக வழிகோலுகிறது. சொல்லப் போனால் அது முதலாளிகளை அவர்களுடைய விருப்பத்திற்கும், மனசாட்சிக்கும் மாறாக, ஒருவகையான புதிய சமூக ஒழுங்கமைப்பிற்குள் இழுத்துச் செல்கிறது. முழுதும் போட்டி நிறைந்த அமைப்பிலிருந்து முழுதும் சமூகத்தன்மை கொண்ட அமைப்பிற்கு மாறுகிற சமுதாய அமைப்பிற்கு இழுத்துச் செல்கிறது"[1] என லெனின் 60 ஆண்டுகளுக்கு முன்னரே எழுதினார்.

போருக்குப் பிந்திய காலத்தில் வளர்ந்த பெரும் முதலாளித்துவ நாடுகளில் விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியால் விரைவு படுத்தப்பட்ட உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி, முதலாளித்துவ உற்பத்தி முறையின் உற்பத்தியை சமூகமயமாக்குவதை பண்பியல் அடிப்படையில் ஒரு உயர்ந்த மட்டத்திற்கு மாறுவதைத் தோற்றுவித்தது. முதலில் இது விஞ்ஞானம் நேரடியான ஒரு உற்பத்தி சக்தியாக வளர்வதில், விஞ்ஞானம், தொழில் நுட்பம், உற்பத்தி ஆகிய மூன்றும் ஒன்றிணைந்த முழுமையாக ஆவதில் வெளிப்பட்டது; இரண்டாவதாக உற்பத்தியில் மேலும் சிறப்புத்திறன் பெறுதலிலும், உற்பத்தியில் மேலும் அதிகமான அளவு கூட்டுறவிலும், செங்குத்தான இணைப்பின் வளர்ச்சியிலும்,

செயல்திறன் அடிப்படையிலான பொருளாதாரத் தொழிலமைப்புகளை உருவாக்குவதிலும் (விவசாயத் தொழில், எரிபொருள், ஆற்றல், இன்னும் இதுபோன்றவை) பொருளாயத உற்பத்தி மற்றும், பொருளாதாரத்தின் உற்பத்தித் திறனற்ற துறைகளின் நெருங்கிய உறவிலும், இன்றைய பொருளாதாரத்தில் கல்வி, சுகாதாரம், இன்பச் சுற்றுலா, பொழுதுபோக்கு ஆகிய துறைகள் வகிக்கும் பங்கிலும் வெளிப்பட்டன. மூன்றாவதாக உலகம் முழுவதிலும் முதலாளித்துவ உற்பத்தி சர்வதேசத் தன்மையடைவதை மிக அதிகமான அளவு விரைவாக்குவதில், சர்வதேச ஏகபோகங்களை மிகுதியான வலிமையுடையதாக ஆக்குவதில் ஐரோப்பிய பொருளாதார சமூகத்தைத் தோற்றுவித்ததில் தெளிவாக வெளிப்படுகிற தேசியப் பொருளாதாரங்களை ஒன்றிணைப்பதன் வளர்ச்சியில் இது வெளிப்பட்டது. உற்பத்தியின் வளர்ந்துவரும் சமுதாயத் தன்மை, திட்டமிட்ட ஒரு சீரான பொருளாதார மேலாட்சியின் புறவயத் தேவையை இன்றியமையாததாக ஆக்குகிறது. முடிவில் உற்பத்தி சாதனங்களை பொது மக்களின் உடைமையாக்குவதை இன்றியமையாததாக ஆக்குகிறது.

எனினும் முதலாளித்துவத்தின் கீழ்-அனைத்திற்கும் மேலாக பொருளாதாரம் நிதி மூலதனத்திற்குட் பட்டிருப்பதால்-பொருளாதாரம் மேலும் ஏகபோக மயமாக்கப்படுவதன் மூலம், உற்பத்தி சமூகத் தன்மையடைவது நடைபெறுகிறது. இந்த சிக்கலான நிகழ்ச்சிப் போக்கின் பெரும்பாலான பகுதிகளை விட்டு விட்டு கீழே காணப்படும் உண்மைகளின்பால் மட்டும் உங்கள் கவனத்தைத் திருப்ப விரும்புகிறேன்: முதலில் வளர்ந்த முதலாளித்துவ நாடுகளின் பொருளாதாரத்தில் பல தொழிற்சாலைகளை உள்ளடக்கிய ஏகபோகங்களின் சங்கங்கள் மிகுந்த செல்வாக்குப் பெற்று ஆதிக்கம் செலுத்து கின்றன. இரண்டாவதாக சர்வதேச ஏகபோகங்கள் (பன்னாட்டு இணையங்கள் என்று அழைக்கப்படுபவை)

உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தில் மிகுந்த ஆதிக்கம் செலுத்துகின்றன. சென்ற சில பத்தாண்டுகளாக அவைகளின் வேகமான வளர்ச்சி இன்றைய ஏகபோக முதலாளித்துவத்தின் வளர்ச்சியில் ஒரு புது போக்காக விளங்குகிறது.

முதலாளித்துவம், பூர்ஷ்வா அரசின் பொருளாதாரச் செயல் முறைகள் அனைத்தையும் உள்ளடக்கியதாக விரிவாக்கம் செய்வதன் மூலம் உற்பத்தி சமுதாயத் தன்மையடைவதன் புதிய மட்டத்திற்குத் தன்னைத் தகவமைத்துக் கொள்கிறது. ஏகபோகங்கள் மற்றும் நிதி மூலதனம் ஆகியவற்றின் வலிமையை பூர்ஷ்வா அரசின் வலிமையுடனும், அதை ஒரே சூட்சுமமாக இணைப்பதுடனும் பிணைப்பதன் மூலம் பூர்ஷ்வா அரசு முதலாளித்துவப் பொருளாதாரத்தின் மீது தன்னுடைய செல்வாக்கைச் செலுத்துகிறது. இன்று வளர்ந்த முதலாளித்துவ நாடுகளில் தேசிய வருமானத்தின் மூன்றில் ஒரு பங்கிலிருந்து இரண்டில் ஒரு பங்கு வரை அரசின் வரவு செலவுகள் மூலம் மறு பகிர்வு செய்யப்படுகிறது பூர்ஷ்வா அரசுகள்-குறிப்பாக மேற்கு ஐரோப்பிய நாடுகள், உற்பத்தி சாதனங்களின் பெரும் பகுதிக்கு உடைமையாளர்களாக உள்ளனர். அரசின் கட்டுப் பாடுகள் பொருளாதார வளர்ச்சியின் போக்கு முழுமையையும் பாதிக்கிறது. பூர்ஷ்வா அரசு விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றத்தை மேற்கொண்டு முன்னேறச் செய்யத் தேவையான கடமைகளை-குறிப்பாக தனியார் நிறுவனங்கள் நிறைவேற்ற இயலாத பெரும் கண்டு பிடிப்பு களை வளர்ப்பதற்கும், அவைகளை நடைமுறையில் பயன் படுத்துவதற்கும் தேவையான கடமைகளைச் செய்வதை மேற்கொண்டுள்ளது. அதே வேளையில் ஏகபோக மூலதனத்திற்கு உச்சநிலை இலாபத்தைத் தருகிற பொருளாதாரச் சூழ்நிலைகளை உண்டாக்குவதே பூர்ஷ்வா அரசின் முக்கியமான கடமையாக விளங்குவதால், பொருளாதாரத்தில் அதனுடைய பொருளாதாரத் தலையீடு அதனுடைய அடிப்படையான முரண்பாடுகளைக்

குறைப்பதற்குப் பதிலாக, அதை மிகுதிப்படுத்தவே செய்கிறது. அதே வேளையில் பேராசிரியர் லுட்ஸ்மேயர் எடுத்துக்கூறிய பொருளாதாரத்தில் அரசு ஏகபோகக் கட்டுப்பாட்டின் நெருக்கடி இந்த முரண்பாட்டின் வெளிப்பாட்டினுடைய ஒரு புதிய உருவமாகத் தோன்றுகிறது.

இவ்வாறாக முதலாளித்துவத்தின் அடிப்படையான முரண்பாடுகள் தெளிவாகக் கீழ்க்கண்டவற்றுள் வெளிப்படுத்தப்படுகின்றன.

— பொருளாதாரத்தின் வளர்ந்துவரும் ஏகபோகத் தன்மைக்கும் உழைக்கும் வர்க்கத்தின் இன்றியமையாத நலன்களுக்குமிடையில் உள்ள முரண்பாடு;

—அரசு ஏகபோகக் கட்டுப்பாட்டின் வரம்பிற்குட்பட்ட வாய்ப்புகளுக்கும் இன்றைய உற்பத்தியின் திட்டமிட்ட ஒரே சீரான வளர்ச்சியின் புறவயத் தேவைகளுக்கும் இடையிலுள்ள முரண்பாடுகள்.

— தனி நாடுகளில் உள்ள ஏகபோக மூலதனங்களின் எதிரெதிரான நலன்களுக்கும், பன்னாட்டு ஏகபோகங்களின் சுயநலன்களுக்கும் உலகப் பொருளாதாரம் ஒரு ஒன்றிணைக்கப்பட்ட முழுமையாக வளர்வதற்குத் தேவையானவற்றிற்குமிடையேயுள்ள எதிரெதிரான நலன்கள். இந்த முரண்பாடுகள் 1974-1975 இல் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் கோட்டையையே குலுக்கிய பொருளாதார நெருக்கடியின்போது மிகவும் தெளிவாக வெளிப்பட்டன.

இந்த நெருக்கடி முதலாளித்துவப் பொருளாதாரத்தைப் பல ஆண்டுகள் பின்னுக்குத் தள்ளியது. நெருக்கடிக்கு முந்திய உச்சநிலை உற்பத்தியுடன் ஒப்பிட்டால் உற்பத்தியின் அளவு ஜப்பானில் 21 சதவிகிதமும், பிரான்சில் 16 சதவிகிதமும் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 15 சதவிகிதமும், மேற்கு ஜெர்மனியில் 11 சதவிகிதமும் பிரிட்டனில் 10 சதவிகிதமும், குறைந்தன. உற்பத்தித்

திறனை மிகக் குறைந்த அளவு பயன்படுத்துவது என்னும் வழக்கம் மிகத்தாழ்ந்த நிலையையடைந்தது. பொது மக்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் மிக அதிகமாகப் பெருகியது. அது உழைக்கும் மக்களின் அனைத்துப் பகுதியினரையும் உள்ளடக்கியதாக இருந்தது.

நெருக்கடியைப் பணவீக்கம் அதிக அளவு கடுமையானதாக ஆக்கியது. அது ஆற்றல், மூலப்பொருள் உற்பத்தி, உணவுப்பண்டங்கள், பணவியல், நிதி உறவுகள் போன்ற உலக முதலாளித்துவத்தின் மிகவும் முக்கியமான துறைகளைத்தாக்கிய ஆழ்ந்த கட்டமைப்பு நெருக்கடியால் குறிப்படத் தகுந்ததாக விளங்கியது.

நெருக்கடி அனைத்து முக்கியமான முதலாளித்துவ மையங்களையும், முக்கியமான முதலாளித்துவ நாடுகளையும் தன்னுடைய வட்டத்திற்குள் இழுத்தது. போருக்குப்பிந்திய நாட்களில் உருவான மிகுதியாக வளர்ச்சியடைந்த அரசு ஏகபோக பொருளாதாரத்திற்குத் தாங்க முடியாத பேரிடி ஒன்றைத்தந்தது.

"சீர்திருத்த வாதிகளாலும், பூர்ஷ்வா சிந்தாந்த மேதைகளாலும் படைக்கப்பட்ட முக்கியமான கட்டுக்கதையான— இன்றைய முதலாளித்துவம் நெருக்கடியைத் தவிர்க்க முடியும் என்ற கட்டுக்கதை—தகர்ந்து விட்டது என்பதை எல்லோரும் அறிந்து கொள்ள முடியும். முதலாளித்துவத்தின் உறுதியற்ற தன்மை மேலும், மேலும் தெளிவாகிக் கொண்டு வருகிறது. அதனுடைய கட்டமைப்பிற்குள் முதலாளித்துவத்தை "நிறைவானதாக" ஆக்குவதற்கும் ஒரு "பொதுநல சமுதாயத்தை"ப் படைப்பதற்குமான வாக்குறுதிகள் சந்தேகமில்லாமல் தோற்றுப் போய் விட்டன"[2], என லியோனிட் பிரெஷ்னேவ் கூறினார்.

1974-1975 நெருக்கடி காலத்திலிருந்து முதலாளித்துவப் பொருளாதாரம் தொடர்ந்த வீழ்ச்சியிலும், மெதுவான மீட்சி நிலையிலும் இருந்தது. தனிநாடுகள் மறுஉற்பத்தியின் புதிய சூழ்நிலைகளுக்குத் தங்களைத் தகவமைத்துக் கொண்டு

வந்தன. ஆனால் அவ்வாறு தகவமைத்துக் கொள்ளுதல் மிகுந்த துன்பம் நிறைந்ததாகவும் இருந்தது. அமெரிக்க ஐக்கிய நாடுகள் தன்னுடைய நெருக்கடிக்கு முந்திய உச்ச நிலை தொழில் உற்பத்தியை 1976 இல் தான் அடைய முடிந்தது. ஜப்பான் 1978 மார்ச்சில் அந்த நிலையை அடைந்தது. பெரும்பாலான முதலாளித்துவ நாடுகளுக்கு மெதுவானமீட்சிநிலைக்கு மாறுவது உறுதியற்ற தன்மையால் குறிப்பிடத்தக்கதாக விளங்கியது. தொடர்ந்த ஏற்ற இறக்கங்களாலும், நீண்ட வீழ்ச்சிகளாலும், பணவீக்க நிகழ்ச்சிப் போக்கின் புதியதீவிரத தன்மையடைவது பின் தொடர்வதும் மிகுந்த ஆற்றல் பிரச்சினைகளும், ஏராளமான தொழிற்சாலைகளைப் பாதித்த பகுதி நெருக்கடிகளும், பணவியல் பெருமாற்றங்களும் இடையிடையே நிகழ்ந்தன. 1979 லிருந்து அமெரிக்க ஐக்கிய நாடுகள் சில அமெரிக்கப் பொருளாதார நிபுணர்களின் கருத்துப்படி அடுத்த பொருளாதார நெருக்கடிக்கு இட்டுச் செல்லக்கூடிய தொழிற் பொருளுற்பத்தியில் ஓர் வீழ்ச்சியைக் கண்டு வருகிறது.

ஆகவே 1970 களில், 1950 களையும், 1960 களையும் ஒப்பிடும் போது மூலதன மறுஉற்பத்திக்கான சூழ்நிலைகள் மோசமாகிக் கொண்டிருப்பதால் சிறப்படைந்திருந்த முதலாளித்துவப் பொருளாதாரத்தின் சுழல் வளர்ச்சியின் புதிய படிநிலை தொடங்கியது. இவையெல்லாம் கீழ்க்கண்ட புலப்பாடுகளில் வெளிப்படுகின்றன.

முதலில் பொருளாதார வளர்ச்சியின் ஒரு தீவிரமான குறைவு. வளர்ந்த முதலாளித்துவ நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி விகிதங்கள் 1950-லிருந்து 1973 வரை 4.5 சதவிகிதமாக இருந்த வளர்ச்சியுடன் ஒப்பிடும் போது 1974-லிருந்து 1979 வரையிருந்த வளர்ச்சி விகிதம் 2 4 சதவிகிதமாகவே இருந்தது. தொழிற் பொருள் உற்பத்தி விகிதம் முறையே 2 1 சதவிகிதமும், 5.4 சதவிகிதமுமாக இருந்தது.

இரண்டாவதாக, பணவீக்கம் தீவிரமடைவது. மக்களின் உண்மை வருமானத்தைக் குறைக்கிற பணவீக்கம் முதலாளித்துவத்தின் தீர்க்க முடியாத நோயாக ஆகி வருகிறது. தொழில் வளர்ச்சியின் போதும், மந்தப், நெருக்கடிக் குறைவு மிகுந்த வேலையில்லாத் திண்டாட்டத்தின் போதும் முதலாளித்துவத்தின் பொருளாதார வளர்ச்சியை அது பின் தொடர்ந்தே வருகிறது. 1961-லிருந்து 1970 வரைக்கும் வளர்ந்த முதலாளித்துவ நாடுகளில் ஆண்டுதோறும் நுகர்வோர் விலைப்புள்ளி 3.4 சதவிகிதமாக உயர்ந்தது. 1970 களில் (1971-1979) அது 8 6 சதவிகிதமாக உயர்ந்திருந்தது.

பணவீக்கம் பொருளாதாரத்தைப் பல வழிகளில் பாதிக்கிறது. அது நெருக்கடியையும், சுழலின் வீழ்ச்சி நிலைகளையும் நீண்டதாக ஆக்குகிறது; மக்கள் தொகையின் பயனுள்ள தேவைகள் உயர்வைக் குறிப்பிடத் தகுந்த அளவு உள்ளடக்கியதாகவுள்ளது. சர்வதேச பொருளாதாரப் பரிவர்த்தனையைச் சீர்குலைக்கும் இயல்புடையதாகவுள்ளது.

மூன்றாவது, ஒரே நேரத்தில் உற்பத்தி வசதிகளைப் பெருமளவில் தேவைக்கும் குறைவாகப் பயன்படுத்துகிற போது மக்களிடையே வளர்ந்து வரும் வேலையில்லாத் திண்டாட்டம் முதலாளித்துவ அமைப்பு முறையில் நிலவுகிற ஒழுக்கக் கேடுகளையும், ஜனநாயகம் மிகக்குறைவாகவே உள்ளது என்பதையும் மிகவும் தெளிவாக விளக்குவதாகவுள்ளது. வளர்ந்த முதலாளித்துவ நாடுகளில் வேலையில்லாதோரின் எண்ணிக்கை 1973இல் 8.5 மில்லியனாக இருந்தது. 1975-ல் நெருக்கடியின் உச்சகட்டத்தில் 15.3 மில்லியனாகவும் 1979 ல் 16.4 மில்லியனாகவும் உயர்ந்தது. அதே வேளையில் ஜப்பானில் நெருக்கடிக்கு முன்னர் 1973-ல் தொழில் திறன் அளவு 98 சதவிகிதம் பயன்படுத்தப்பட்ட போது 1978-ல் மிக அதிகமான அளவாக அது 82.5 சதவிகிதத்தையே பயன்படுத்தியது. ஜெர்மன் கூட்டுக் குடியரசில் அது முறையே 79 சதவிகிதமும் 87

சதவிகிதமுமாகவும், பிரான்சுக்கு முறையே 96 சதவிகிதமாகவும், 86 சதவிகிதமாகவும், அமெரிக்கஐக்கிய நாடுகளுக்கு முறையே 88 சதவிகிதமாகவும், 84 சதவிகிதமாகவும் இருந்தது.

நான்காவதாக, உண்மையான மூலதனக் குவியல் நிகழ்ச்சிப் போக்கில் ஒரு குறிப்பிடத்தக்க அளவு பலஹீனம் மற்றும் தொழிலாளர்களின் உற்பத்தித்திறனின் வளர்ச்சி விகிதத்தில் மிகுந்து வரும் அளவில் குறைவு. கடந்த ஏழு ஆண்டுகளில்கூட (1973-1979) முக்கியமான ஏழு முதலாளித்துவ நாடுகளில் (அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஜப்பான், மேற்கு ஜெர்மனி, பிரான்ஸ், பிரிட்டன், கனடா, இத்தாலி) மொத்த தேசிய உற்பத்தியின் வளர்ச்சியில் முதலீடு 0.7 சதவிகிதமாகவே இருந்தது. மேற்கத்திய பொருளாதார நிபுணர்கள் தொழிலாளர்களின் உற்பத்தித் திறனில் ஏற்பட்டுள்ள குறைவிற்கு மிகுந்த தனிச்சிறப்பான அக்கறை காட்டுகிறார்கள்: 1963-லிருந்து 1973 வரையுள்ள கால இடைவெளியுடன் ஒப்பிடும் பொழுது, 1973 லிருந்து 1979 வரையுள்ள கால இடைவெளியில் யு. எஸ். தொழிலில் அவை 2.1 சதவிகிதத்திலிருந்து 1 சதவிகிதமாகக் குறைந்தது. ஜப்பானில் 8.9 சதவிகிதத்திலிருந்து 3.7 சதவிகிதமாகவும், மேற்கு ஜெர்மனியில் 5.3-லிருந்து 3.6 சதவிகிதமாகவும் பிரான்சில் 5.2-லிருந்து 4 சதவிகிதமாகவும்; பிரிட்டனில் 3.9 லிருந்து 1.3 சதவிகிதமாகவும்; கனடாவில் 3.6-லிருந்து 0.8 சதவிகிதமாகவும்; இத்தாலியில் 5.6-லிருந்து 0.8 சதவிகிதமாகவும் குறைந்தது.

உற்பத்தியின் சூழ்நிலைகளுக்கும், உபரிமதிப்பை (அதனுடைய மாற்றப்பட்ட அனைத்து உருவங்களும்-குறிப்பாக இலாபம்) ப் பெறுவதற்கும் ஒத்ததான மாறா மூலதனத்தின் மிக அதிகமான அளவு குவிதலும், முடிவாக, உழைக்கும் மக்களின் நுகர்வின் மட்டமும், இந்த ஆழ்ந்த முரண்பாடுகளுக்கும், மிக அதிகமான அளவில் நிலவும் உறுதியற்ற தன்மைக்கும் காரணங்களாக உள்ளன. இவை

தான் 1974-1975 நெருக்கடிக் காலத்திலிருந்து முதலாளித்துவப் பொருளாதார வளர்ச்சியின் முக்கியமான சிறப்பியல்பாக விளங்கி வந்திருக்கின்றன. முதலாளித்துவ முறையில் நிலவுகிற உண்மை தெளிவாகக் காட்டுவது போல, பணவீக்கம் ஒப்பீட்டில் மிகுதியான மூலதனக் குவியலையும், அதன் மதிப்பைக் குறைப்பதையும் (இலாபத்தின் விகிதத்தில் வீழ்ச்சி, குறிப்பாக இன்றைய முதலாளித்துவத்தின் ஒரு நீண்ட, துன்பம் நிறைந்த நோயாக மாற்ற விழைகிறது.

முதலாளித்துவப் பொருளாதாரம் தன் வளர்ச்சிக்கு எரிபொருட்களின் குறைந்த விலைகளின் மீதும், பிற மூலப் பொருள்களின் குறைந்த விலைகளின் மீதும் மிகுதியாகச் சார்ந்திருந்த 1960 களின் பொருளாதாரச் சூழலிலிருந்து முற்றிலும் வேறுபட்ட 1974-1975 இல் தோன்றிய நெருக்கடியுடன் தொடங்கிய புதிய சூழல் இந்தப் பொருட்களின் ஒப்பீட்டில் உயர்ந்த விலையை-குறிப்பாக எண்ணெய் விலையை எதிர்த்துச் சமாளிக்க வேண்டியதிருந்தது. இது பெருமளவிற்கு முதலாளித்துவ உலகில் நிகழும் மூலதனக் குவியலை நிர்ணயிக்கிறது. மேலும் ஒரு நாட்டிற்கும், மற்றொரு நாட்டிற்கும், ஒரு துறைக்கும், மற்றொரு துறைக்கும் இடையேயுள்ள தனித் தன்மைகளையும் நிர்ணயிக்கிறது.

இதனுடன் முதலாளித்து நாடுகளில் பொருளாதார வளர்ச்சி-மூலதனம் உண்மையாகக் குவிக்கப்படும் நிகழ்ச்சிப் போக்கு வலிமையிழப்பது,கப்பல் கட்டுதல், இரும்பு உருக்கு, பஞ்சாலைத் தொழில் ஆகியவற்றையும் உள்ளடக்கிய தொடர்ச்சியான துறை நெருக்கடி 1979 இல் 30 சதவிகிதத்திற்கு மேலாக உலக எண்ணெய் விலை உயர்ந்ததனாலும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வளர்ந்து வரும் எண்ணெய் இறக்குமதியினாலும் ஆற்றல் தொடர்பான பிரச்சினைகள் மேலும் தீவிரமடைவது. (1973 இல் 287 மில்லியன் டன்களாக இருந்த எண்ணெய் இறக்குமதி 1977 இல் 445 மில்லியன் டன்களாக இருந்தது என மதிப்பிடப்பட்டுள்ளது). பல முதலாளித்துவ நாடுகளில் குறிப்பாக அமெரிக்க ஐக்கிய

நாடுகளில் சர்வதேசப் பொருளாதார உறவுகள் ஒரு சிக்கல் நிறைந்த முரண்பட்ட சூழ்நிலைகளில் வளர்ச்சியடைகின்றன. வாணிப நிலையும், செலுத்தல் நிலையும் மிக அதிகமாக பாதகமாக வளர்ச்சியடைந்து வருகின்றன. அது டாலரின் மதிப்பைக் குறைப்பதற்கு வழி செய்துள்ளது. இது தவிர காப்புக் கொள்கைகளை நோக்கிய இயல்புகளும் தீவிரமடைந்துள்ளன.

சர்வதேசிய மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் பொருளாதாரத்தை அரசு ஏகபோகம் கட்டுப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள நெருக்கடி 1974-1975 இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் வழக்கத்திற்கு விரோதமான இயல்பை நிர்ணயித்ததோடு அதைப் பின் தொடர்ந்து வந்த பொருளாதார வளர்ச்சியின் போக்கையும் நிர்ணயித்தது. இன்று (அ) வழக்கமான நெருக்கடி எதிர்ப்பு மற்றும் பணவீக்க எதிர்ப்புக் கொள்கைகள் பயனற்றுப் போய் விட்டன. முழு வேலை வாய்ப்புப் பொருளாதார வளர்ச்சி என்று அழைக்கப்படுகிற யுக்தியும் தோல்வியுற்று விட்டது. (ஆ) ஆற்றல், மூலப்பொருட்கள் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான வேறு கட்டமைப்புப் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கான அரசு ஏகபோகத்தின் நடவடிக்கைகள் முழுதும் தோல்வியடைந்தன. அல்லது மிக முக்கியமாகக் கருதப்பட முடியாத பொருளாதார விளைவுகளை மட்டுமே உடையதாக இருக்கின்றன. (இ) முதலாளித்துவ உலகப் பொருளாதாரத்தை முழுமையாக ஒழுங்குபடுத்தும் அரசு ஏகபோக உருவங்கள் அனைத்தும், பயனற்றதாகவும், போதுமான வளர்ச்சியற்றதாகவும் உள்ளன என்பதை நிரூபித்துவிட்டன. இன்றைய படிநிலையில் முதலாளித்துவ பொருளாதாரத்தின் உறுதியற்ற தன்மைக்கு ஒருபுறம் மிக அதிகமான அளவு மாறா மூலதனம் குவிக்கப்படுவதும், மறுபுறம் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் கீழ் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியால் முடிவில் தோற்றுவிக்கப் படுகிற உலக முதலாளித்துவ உற்பத்தியின் கட்டமைப்பின் நெருக்கடியும் பொறுப்பான காரணிகளாகும்.

முதலாளித்துவ வேலைப் பகுப்பில் நெருக்கடி வேறு மாதிரியான உருவங்களில் வெளிப்படுகிறது. அவைகளில் மிகவும் முக்கியமானவற்றைக் குறிப்பதானால் விஞ்ஞானம் மிகுதியாகப் பயன்படுத்தப்படுகிற தொழிற்சாலைகளின் வேகமான வளர்ச்சியும், விஞ்ஞான-உற்பத்திக் கீழ்க் கட்டமைப்புகளும், வளர்ந்து வரும் நாடுகளில் பிற்பட்ட தன்மையை வெல்வதும், இதற்கு முன்னரே உருவாகியுள்ள வேலைப்பகுப்பு முறையில் அவைகளுடைய கீழான நிலையைப் போக்குவது; உலகளவிலான பல பிரச்சினை களைத் தீர்ப்பது-முதலில் ஆற்றல் தொடர்பான பிரச்சினை களைத் தீாப்பது.

உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிதான் தேசிய மட்டத்திலும், சர்வதேசிய மட்டத்திலும் புதிய ஒரு கட்டமைப்புக்கு மாறுவதை நிர்ணயிக்கிறது. அதே வேளையில் ஏகபோகங்களின் ஆதிக்கம் முன்னரே தொடங்கி விட்ட உழைக்கும் மக்களுக்கு மிகவும் அதிகமான துன்பம் தருகிற சர்வதேச வேலைப் பகுப்பை மறுசீரமைப்பதன் மெதுவான, முரண்பட்ட இயல்பையும், முதலாளித்துவ நாடுகளில் பொருளாதார மற்றும் அரசியல் வளர்ச்சியின் ஒரு சீரற்ற தன்மையைத் தீவிரப் படுத்துவதையும் ஏகாதிபத்தியங்களிடையே காணப்படும் முரண்பாடுகள் தீவிரமடைவதையும் மூன்று ஏகாதிபத்திய மையங்களான அமெரிக்க ஐக்கிய நாடுகள், மேற்கு ஐரோப்பா, ஜப்பான் ஆகிய நாடுகளிடையே முரண்பாடுகள் தீவிரமடைவதையும் முன்னரே நிர்ணயிக்கிறது.

இன்றைய முதலாளித்துவ மறுஉற்பத்தி சூட்சுமத்தை இந்த நிகழ்ச்சிப் போக்குகளும், செயல்களும் கேடுறச் செய்வது மட்டுமன்றி முதலாளித்துவ பொருளாதாரத்தின் நிலையற்ற தன்மையையும் தீவிரப்படுத்துகின்றன. பூர்ஷ்வா சமுதாயத்தின் சமூக-அரசியல் பிணக்குகளை மிகுதிப் படுததுகின்றன. அதன் மூலம் பொது நெருக்கடியை மோசமடையச் செய்வதற்கு வழி வகுக்கின்றன.

உழைக்கும் வர்க்கத்தையும், மக்கள் தொகையில் உழைக்கும் பகுதியினரையும் சீர்கெடச் செய்வது இன்றைய சிக்கலான நிலையிலிருந்து ஏகபோக முதலாளித்துவம் ஒரு வழி காண முயல்கிறது. முதலாளித்துவ நாடுகளில் மிகப் பெரும் அளவில் கையாளப்படுகிற வேலைப்பழுவை அதிகரித்தல் இந்த இலட்சியத்தை அவர்கள் அடைய உதவி செய்கிறது. அந்த வேளையில் இரண்டு வேறுபட்ட சமூக அமைப்புகளிடையே நடைபெறும் போட்டி நிறைந்த பின்புலத்தில், வளர்ந்த முதலாளித்துவ நாடுகளில் வர்க்கப் போராட்டத்திற்கான வாய்ப்புகள் நிறைந்திருக்கும் பின்புலத்தில் ஏகபோகங்கள் பகுதி சீர்திருத்தங்களையாவது மேற் கொள்ளுமாறு நிர்ப்பந்திக்கப்படுகின்றன. மேலும் அவை உழைக்கும் மக்களுக்கு சமூக, சலுகைகளை அளிக்குமாறும் நிர்ப்பந்திக்கப்படுகின்றன. பெரும் முதலாளித்துவ நாடுகளில் உள்ள ஆட்சி வட்டாரங்கள் முக்கியமான முதலாளித்துவ நாடுகளின் மேற்கொண்ட பொருளாதார ஒன்றிணைப்பையும், பொருளாதாரக் கொள்கைகளை இணக்கமுடையவை ஆக்குவதையும் உள்ளிட்ட பொருளாதாரத்தின் அரசு ஏகபோகக் கட்டுப் பாட்டிற்கான புதிய வழிகளையும், முறைகளையும் தேடுவதைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றன. எனினும் அரசு ஏகபோக முதலாளித்துவப், விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றத்தின் சாதனைகளைப் பயன் படுத்துவதற்குத் தொடர்ந்து முயற்சி செய்யும். முதலில் சென்ற காலத்தில் அது செய்தது போல மிகவும் இன்றியமையாத சமூக-பொருளாதாரப் பிரச்சினைகளின் துன்பத்தைக் குறைப்பதற்கு அல்லது அவற்றைத் தீர்ப்பதற்கு அதைப் பயன்படுத்த முயலும்.

உண்மையில், இது சோஷலிசத்திற்கும், முதலாளித்துவத்திற்குமிடையே நடைபெறும் போட்டியின் ஈர்ப்புமையம் மேலும் மேலும், ஏன் விஞ்ஞான-தொழில் நுட்பத்துறைக்கு மாறிக் கொண்டிருக்கிறது என்பதையும். தேசிய பொருளாதாரத்தில் விஞ்ஞான-தொழில் நுட்ப

சாதனைகளை மிகவும் திறமையாகப் பயன்படுத்துவதை நோக்கியிருப்பது ஏன் என்பதையும் விளக்குகிறது.

## அடிக்குறிப்புகள்

1. வி. இ. லெனின். "ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சகட்டம்" தொகுப்பு நூல்கள். தொகுதி 22. பக்.205.
2. ஆவணங்களும், தீர்மானங்களும், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 25-வது காங்கிரஸ், பக்கம். 34.

**டாக்டர். ஹெல்மட் பேர்ன்ட்**

*சர்வதேச அரசியல் மற்றும் பொருளாதார நிறுவனம்,*
*ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு.*

## 1970 களில் தொழிற் பொருட்கள் மிகுதியாகக் குவிந்த பிரச்சினையின் சில கூறுகள்

1970 கள் ஆற்றல் நெருக்கடியையும், சர்வதேச வேலைப் பகுப்பில் நெருக்கடியையும் பல்வேறு தேசியப் பொருளாதார அரசியல் நெருக்கடிகள் தீவிரமடைவதையும் உள்ளடக்கிய பல பெரும் எழுச்சிகளைக் கண்டிருக்கிறது. தொழிற் பொருட்களின் மிகையான குவியலும் அப்போது ஏற்பட்டது. இந்த நெருக்கடி இம்மாதிரியான முந்திய நெருக்கடிகளிலிருந்து வேறுபட்டதாயிருப்பதைத் தெளிவு படுத்துகிறது

தொழிற்பொருட்கள் மிகுதியாகக் குவிந்திருப்பது பற்றி வாதிப்பதற்கு முன்னர் நான் "தொழிற் பொருட்கள் மிகுதியாகக் குவிந்திருப்பது" என்ற பதத்தை எவ்வாறு புரிந்து கொள்கிறேன் என்பதைப் பற்றிச் சில கூற விரும்பு கிறேன். இப்போது அது மூன்று காரணிகளால் வரையறை செய்யப்படுகிறது.

— உள்நாட்டு வெளிநாட்டுச் சந்தைகளின் விரிவாக்கத் தின் எல்லைகளுக்கும் அப்பால் மூலதனம் குவிதலின் வளர்ச்சி.

— ஏகபோகங்களின் இலாபங்களுடன் ஒப்பிடும்போது மூலதனம் மிக அதிகமாகக் குவிதல்.

—உற்பத்தி முதலீடுகளின் கூறுகளுக்கிடையில் நிலவுகிற விலைக்கும், மதிப்பிற்கும் இடையில் நிலவுகிற உறவுகளில் மாற்றம்.

வழக்கமாக சுழல் நெருக்கடி, பொருட்கள் மிகுதியாகக் குவிவதனால் நிகழும் ஒன்றுதான். ஆனால் 1970 களில் ஏற்பட்ட மிகைக் குவிதல் 1950 களிலும், 1960 களிலும் நிகழ்ந்த நெருக்கடிகளின் போது மிகுந்த குவிதலால் ஏற்பட்ட நெருக்கடிகளிலிருந்து வேறுபட்டதாக இருந்தது.

அந்த வேறுபாடுகளைக் கீழே கொடுக்கப்பட்டதைப் போல விவரித்துக் கூறலாம்.

— 1950 களிலும் 1960 களிலும் தனியான, தேக்கம் நிறைந்த தொழில்களில் மட்டுமே, ஏற்பட்ட பகுதி நெருக்கடிகளைப் போலல்லாமல் 1970 களில் ஏற்பட்ட மிகுதியான தொழிற் பொருட்கள் குவிதல் சிறப்பாக அதிகமான அளவு சமுதாயத் தன்மையடைந்த தொழில் களிலும், ஏகபோகங்களாக்கப்பட்ட தொழில்களிலுமே ஏற்பட்டது.

— 1960 களின் பிற்பகுதியில் தொடங்கிய தொழிற் பொருட்கள் மிகுதியாகக் குவிதலின் தோற்றம், தீவிரமடைதல், மேற்கொண்டு வளர்த்தல் ஆகிய சூட்சுமத்தையே இங்கு குறிப்பிடலாம்.

— தொழிற் பொருட்கள் மிகுதியாகக் குவிதலால் நிகழும் நெருக்கடி தீவிரமடையும் போதும், அதன் பிறகும் நிலவுகிற மூலதன மறுஉர்பத்தியுடன் தொடர்புடைய தேசிய காரணிகளுக்கும் சர்வதேசிய காரணிகளுக்கு மிடையிலுள்ள நெருக்கமான உட்தொடர்பு;

உண்மையில் இன்றைய தொழிற் பொருட்கள் மிகுதியாகக் குவிதல் பெரும் அளவு உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்களின் விளைவே யாகும் (நாணயப் பரிமாற்ற விகிதங்களுக்கிடையில் உள்ள உறவுகளின் மாற்றங்கள்; வளரும் நாடுகள் தொழில்

மயமாக்கப்படுதல்; ஆற்றலின் வலையிலும் மூலப்பொருட்களின் விலையிலும் மிகுந்த உயர்வு)

— 1970 களில் ஏற்பட்ட தொழிற் பொருட்கள் மிகுதியாகக் குவிதலின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான வழிகளில் தனிச் சிறப்பான இ ர்களும், கட்டுப்பாடுகளும்.

மொத்தத்தில் மேலே கூறப்பட்டவை, மேற்கு ஐரோப்பிய தொழில்களுடன் தொடர்புடையவை. கீழே கொடுக்கப்பட்டுள்ள பகுப்பாய்வு மேற்கு ஜெர்மன் தொழிலின் மாதிரிகளுக்கு மட்டுமே உரியது. அவை தனிச் சிறப்பான தன்மைகள் பல உடையவையாயிருப்பினும் மேற்கு ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் நிகழ்ந்த தொழிற் பொருட்கள் மிகுதியாகக் குவிவதற்கான பொதுவான காரணங்களைத் தெளிவாகவே காட்டுகின்றன.

தொழிற் பொருட்கள் மிகுதியாகக் குவிதலின் தீவிரமும், வளர்ச்சியும் சில அடிப்படையான அடையாளங்களால் சிறப்புற்று விளங்குகின்றன. முதலீட்டின் பரிமாணம், உற்பத்தித் திறன்மீது குறைந்த பளுவேற்றுவது மாறாத மூலதனத்தின் அளவு ஆகியவை.

முந்திய நெருக்கடிகளைப் போலல்லாமல் 1974-1975இல் ஏற்பட்ட நெருக்கடிக்குப் பின் முதலீடு மீண்டும் புத்துயிர் பெறவில்லை. 1970 களின் தொடக்கத்தில் முதலீட்டில் ஆண்டிற்கு சராசரி 5.6 சதவிகிதம் குறைவு ஏற்பட்டது. அதன் காரணம் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் அதிகமான திறமையும், விரைவும் என்று ஓரளவே கூற முடியும். இந்தக் குறைவை தொழிலாளர்களின் உற்பத்தித் திறனின் காலந்தாழ்ந்த வளர்ச்சியும், பொருளாதார வளர்ச்சியில் தேக்கமும், வேலையில்லாத் திண்டாட்டத்தின் மிகுந்த வளர்ச்சியும் பின் தொடர்ந்தன. இந்தக் குவியலின் விகிதத்தில் ஏற்பட்ட தேக்கத்திற்கு முக்கியமான காரணம், அளவிலாது மிகுதியான பொருட்கள் குவிந்திருந்ததேயாகும். இது மாறா மூலதனத்தின் இயக்கத்தினாலும் உற்பத்தித்

திறன் மீது ஏற்பட்ட சுமையாலும் தெளிவாகத் தெரிகிறது. மேற்கு ஜெர்மன் தொழிலில் உற்பத்தித் திறன்மீது ஏற்றப் படுகிற சுமையின் மட்டத்தை மூலதனம் மிக அதிகமாகக் குவிவதற்கு அடையாளமாக எடுத்துக் கொண்டால், 1966-1967 நெருக்கடியைத் தொடர்ந்து இந்த நிகழ்ச்சிப் போக்கில் சில தனிச் சிறப்பான இயல்புகளை வெளிப்படுத்த முடியும். நெருக்கடியைப் பின் பற்றி வந்த சுழல் வளர்ச்சிக்குப் பிறகு மூலதனம் மிகுதியாகக் குவிக்கப்படுவதால் தொடரப்பட்ட உற்பத்தித் திறன்மீது ஏற்றப்படும் சுமையில் குறிப்பிடத்தக்க குறைவு ஏற்பட்டது. 1974-1975 நெருக்கடியின் போது மூலதனம் மிகுதியாகக் குவிக்கப்படுவது மீண்டும் ஓர் முறை மிக அதிகமாக வீழ்ச்சியுற்றது. ஆனால் எந்தவிதப் பயனுள்ள மாற்றங்களும் இதைப் பின் தொடரவில்லை.

தொழில் மூலதனத்தின் விரிவாக்கம் பற்றிய பிரச்சினை 1960 களின் பின் பகுதியிலேயேதான் தோன்றி வளர்ந்தது என்பதற்கு இவையனைத்தும் சான்று பகர்கின்றன. 1967-க்குப் பிந்திய ஆண்டுகளில் இந்த ஏற்றுமதியின் விரிவாக்கம், தீவிரமான, மிகுதியான குவிதலைக் காலந்தாழ்த்தி, குவியலுக்கு ஓர் புதிய உணர்வைக் கொடுத்தாலும்கூட மூலதன மறுஉற்பத்தி சீர்கேடடைவதற்குரிய போக்கை மறைப்பதற்கு உதவியது. 1970 களில் உலகப் பொருளாதாரத்தில் நிகழ்ந்த மாற்றங்கள் இந்தப் பிரச்சினையைத் தீவிரமடையச் செய்ததுடன் அதற்கு ஒரு கட்டமைப்புத் தன்மையைக் கொடுத்தன.

மிகைக்குவியல் நிகழ்ச்சிப் போக்கில் ஏற்பட்ட துறை வேறுபாட்டின் வளர்ச்சியிலிருந்து இதற்கான சான்றுகள் கிடைக்கின்றன. மேற்கு ஜெர்மன் தொழிற்சாலைகளின் கட்டமைப்பில் மறுசீரமைப்புச் செய்வதுடன் இந்தத் துறைகளில் மிகைக்குவியல் பிரச்சினை தீவிரமடைந்தது. அது 1963 லிருந்து 1973 வரை ஒப்பீட்டில் மிகுந்த வளர்ச்சியையும், உற்பத்தித்திறன் மீது மிகுதியான சுமை ஏற்றுவதையும் காட்டியது. இவைதான் தொழிலில் முக்கியமான நிலைகள் வகித்தன. இவைதான் அவற்றின் வளர்ச்சியையும்

பாதித்தன. 1970 களின் தொடக்கத்தில் மிகைக் குவியல் பிரச்சினை தீவிரமடைந்து நிலவிய துறைகள் நுகர்வோர் பொருளுற்பத்தியையும், உலோகவேலைத் தொழில்களையும் உள்ளடக்கியதாக ஆகியிருந்த போது 1950 களிலும் 1960 களிலும் நிறைந்த வாய்ப்புகள் உள்ளவையாகக் கருதப்பட்ட தொழில்களும் கூட 1970 களில் அவற்றுடன் சேர்ந்து கொண்டன. முன்னரே குறைக்கப்பட்டிருந்த உற்பத்தித் திறன் ஏற்றுவதன் அடிப்படையில் உற்பத்தி மூலதனத்தின் மிகுதியான திரட்சி-குறிப்பாக எண்ணெய், எண்ணெய் சுத்திகரிப்புப் பொறியியல், துல்லிய அளவுக் கருவிகள், கண் தொடர்பான சாதனங்கள், கருவிகள் செய்யும் தொழில், செயற்கைப் பொருட்களை மறுபதனீடு செய்தல் ஆகிய தொழில்களில் மிகுதியான திரட்சி தொடங்கியது. உழைக்கும் மக்களில் ஏறத்தாழ கால்பங்கினர் இந்தத் தொழில்களில் வேலை பார்த்தனர் என்பதை நினைவில் கொண்டால், தேக்கம் நிறைந்த தொழில்களில் முன்னைப் போலவே இப்பொழுதும் கூட கட்டுமான நெருக்கடியின் முக்கியத்துவம் குறிப்பிட்ட அளவு குறைந்திருந்தது என நாம் கூறலாம். 1974-1975 நெருக்கடியின் போதும் அதற்குப் பின் வந்த காலத்திலும் தோற்றுவிக்கப்பட்ட பிரச்சினை எவ்வாறு மிக அதிகமான பொருட்கள் குவிவதைத் தடுப்பது என்பதேதான்.

1966-1967 நெருக்கடிக்குப் பிறகு கீழ்க்கண்ட காரணங்களால் இது தற்காலிகமாக ஒருபகுதி மட்டுமே சாதிக்கப்பட்டது. அ) முதலீட்டின் விரிவாக்கம், மூலதனம் கணக்கிடப்பட்டுக் கலைக்கப்பட்டபின் ஏற்பட்டது. மேலும் இந்த இரண்டு நிகழ்ச்சிப் போக்குகளும் உற்பத்தியை மறு சீரமைப்புச் செய்வதற்கும் வழிகோலின. விஞ்ஞான, தொழில் நுட்ப முன்னேற்றத்தை விரைவுபடுத்துவதற்கும் இவை உதவின. ஆ) ஏற்றுமதியின் விரிவாக்கம் சந்தைகளைப் பெருக்கி, முதலீடு செய்யப்பட்ட மூலதனத்தைப் பயன்படுத்தக் கூடிய சூழ்நிலைகளைப் படைத்தது.

ஆனால் இன்று உலகப்பொருளாதாரத்தில் ஏற்படும் மாற்றங்களோ, மூலதனத்தைப் பயன்படுத்தும் புதிய முறைகளோ அல்லது கட்டமைப்பு மாற்றங்களோ, மிகுதியான தொழிற்பொருள் குவிதல் தொடர்பான பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அளவில், சந்தைகளை விரிவடையச் செய்ய முடியாது. இதை மூலதனத்தின் நிலையும், வேலை நிலையும் காட்டுவதுபோல பணவியல் மூலதனத்தை ஏற்றுமதி செய்வதன் மூலமும், மாறும் மூலதனத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதன் மூலமும் தான் சாதிக்க முடியும்.

வருங்காலத்தில் மூலதன மறு உற்பத்திக்கான சூழ்நிலைகளைப் பாதிக்கக் கூடிய நிகழ்ச்சிப் போக்கானது அதனுடைய முறையில் சமூகப் பிரச்சினைகளைக் கடுமையாக்குகிறது.

உற்பத்தி மூலதனம் மிகுதியாகக் குவிதலும், ஏகபோகங்கள் மூலம் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய இயல்பும் நம்மைச் சில முடிவுகளுக்கு வருமாறு செய்கின்றன.

—முக்கியமான தொழில்களில் மிகுதியாகப் பொருட்கள் குவிதலின் மட்டம் பெருக்கக்கூடிய உற்பத்தியளவை அடைய விடாது தடுக்கிறது.

— இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குக் கையாளப் படும் முறை (மாறும் மூலதனத்தைக் குறைத்தல், வேலையில்லாத் திண்டாட்டத்தைத்தான் அதிகரிக்கிறது.

— முதலீட்டைக் குறிப்பிடத்தக்க அளவு குறைப்பது, நவீன மயமாக்குவதற்குத் தடையாக விளங்குகிறது. உற்பத்தி சூட்சுமத்தின் போட்டியிடும் திறனைக் குறைக்கிறது.

பொருட்கள் மிகுதியாகக் குவிவதைப் பகுத்தாராய்ந்தது தொழிலாளி வர்க்கத்தின் போராட்டத்திற்கான சில பரிந்துரைகளைக் கூறுவதற்கு உதவி செய்கிறது.

சமூகப் பிரச்சினைகளில் முதலாளிகள் தலையிட்டு சூழ்ச்சித்திறனுடன் செயலாற்றுவது பொருளாதார

வளர்ச்சியின் குறைந்த விகிதத்தினால் ஒரு வரப்பிற்குட் படுத்தப்படுகிறது. மிகுதியாகப் பொருட்கள் குவிந்திருக்கும் சூழ்நிலையில் மூலதனத்தைப் பயன்படுத்துவதன் அவசியமும், முக்கியத்துவமில்லாத மறுசீரமைப்பும் ஏகபோகங்கள் தங்களுடைய செலவுகளைக் குறைப்பதற்காகக் கூலியைக் குறைக்க வேண்டுமென்ற விருப்பத்தைத் தோற்றுவிக்கின்றன. கூலிக்குறைப்புப் பிரச்சினையுடன் வேலைப்பளுவை மிகுதிப்படுத்தும் பிரச்சினையும், வேலைப் பிரச்சினையைத் தீர்க்கும் பிரச்சினையும் சேர்ந்தே நிலவுகின்றன.

நாம் அறிந்ததுபோல மிகுதியாகப் பொருட்கள் குவிதல் கட்டுமான நெருக்கடியினால் கட்டுப்படுத்தப்பட்டது. அதன் விளைவு உலகப் பொருளாதாரத்தில் ஏற்படும் மாற்றங்களின் விளைவாக மிகைப்படுத்தப்படுகிறது. மேலும் மிக அதிகமான அளவு பொருட்கள் குவிதல் மறுசீரமைப்புக்கு ஒரு பெரும் தடையை விதிக்கிறது. இந்தக் காரணிகள் அனைத்தும் தொழிலாளிவர்க்கம், அதனுடைய கட்டமைப்பு — அரசியல் இலட்சியங்களை உருவாக்கும் போது மனதில் கொள்ள வேண்டுவது இன்றியமையாதவை ஆகும். இவ்வாறாக முதல் முடிவு இரண்டாம் முடிவுக்கு இட்டுச் செல்கிறது. மிகுதியான அளவு பொருட்கள் குவிக்கப்படுதலின் முக்கியமான காரணம் முதலீடு செய்யப் பட்ட பணத்தின் கட்டமைப்பிற்கும், பொருளாதாரத்தின் மொத்தத் தேவையின் அளவிற்குமிடையே நிலவுகிற வேறுபாடுதான். பொருட்கள் மிகுதியான அளவு குவிக்கப் படும் பிரச்சினை தீர்க்கப்படுவதற்கு, கேந்திரமான தொழில் களில் ஏகபோக எதிர்ப்புப் போர்த் தந்திரம் ஒன்றை உருவாக்குவது இன்றியமையாதது ஆகும்.

அடுத்த முடிவு—வேலையிழப்புடன் மட்டுமே தொடர்பு கொண்டதாக இல்லாத தொழிலாளி வர்க்கத்தின் சர்வதேச போர்த்தந்திரம் ஒன்றை உருவாக்குவதையும் உள்ளடக்கியதாக இருக்கிறது. மிகுதியாகப் பொருட்கள் குவிக்கப்படுதல் வளர்ச்சியடைவதில் சர்வதேசக் காரணி

களின் மிகுந்த முக்கியத்துவம் உழைக்கும் மக்களின் நிலையை உயர்த்துவதற்கான போராட்டத்தில் தொழிலாளி வர்க்கத்தின் போர்த்தந்திரம், கூலியை உயர்த்துவதற்கான தொழிலாளிவர்க்கத்தின் தேசிய போராட்டத்தின் மீது மட்டுமல்லாது பொருளாதாரத்தை மறுசீரமைப்பதற்கான கோரிக்கைகளின் மீதும் சார்ந்ததாக இருத்தல் வேண்டும் என்பதை உறுதிப்படுத்துகிறது.

முதலாளித்துவத்தில் பொருட்கள் மிகுதியாகக் குவித்தலால் தோற்றுவிக்கப்படும் பிரச்சினைகளின் இடர்கள் ஏராளம். அது கூலியை உயர்த்துவதற்கான போராட்டத்தில் தொழிலாளி வர்க்கத்தினரால் பின்பற்றப் பட வேண்டிய எதிர்ப் போர்த் தந்திரம் ஒன்று உருவாக்கப் படவேண்டுவதை இன்றியமையாததாக ஆக்குகிறது.

பேராசிரியர். ஐ ஏ சோகோலோவ், முனைவர் விஞ்ஞானம் (பொருளாதாரம்)

## முதலாளித்துவத்தின் இன்றைய முரண்பாடுகள்

தோழர்களே, நான் வாதிக்க விரும்புகிற விஷயங்கள் பல உள்ளன. முதலில் இந்த மாநாட்டின் முக்கியத்துவம். என்னுடைய கருத்தில் இன்றைய ஏகாதிபத்தியத்தைப் பற்றிய மார்க்சீய வாதிகளின் ஆராய்ச்சிக்கு-அதாவது 1980-களின் தொடக்கத்தில் உள்ள அரசு ஏகபோக முதலாளித்துவம் பற்றிய ஆராய்ச்சிக்கு-இந்த மாநாடு மிகவும் இன்றியமையாதது. மார்க்ஸ் எழுதியது போல "பூர்ஷ்வா சமுதாயம் என்றுமே மாறாத பளிங்குக்கல் அல்ல. அது தொடர்ச்சியாக மாறிக் கொண்டேயிருக்கிறது".[1] இன்று சமுதாயத்தில் ஏற்படும் மாற்றங்கள், அரசியல் பொருளாதாரம் பற்றிய மிகச் சிறந்த ஆராய்ச்சியின் பின் எழுதப்பட்ட நூல்கூட ஒரு சில நாட்களுக்குள்ளாகவே மரபொழிந்து விடக்கூடிய அளவு மிக வேகமானவையாகத் திகழ்கின்றன.

உதாரணமாக மிகவும் அண்மைக் காலத்தில் ஏற்றுமதி, பெரும்பாலும் தொழில் துறையில் மிகவும் வளர்ச்சியடைந்த நாடுகளை நோக்கியதாகத்தான் இருக்கிறது என்றும் வளரும் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிற பொருளின் அளவு மிகவும் குறைந்து விட்டது என்றும் பொருளாதார நூல்களில் எழுதப்பட்டிருந்தது. ஆனால் இந்தக் கருத்து வெளியிடப்பட்ட ஒரு சில நாட்களுக்குப் பின்னர் அது பயனற்றதாகப் போய் விட்டது. ஏனெனில் வளரும் நாடு

களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட மூலதனத்தின் அளவு மீண்டும் ஒருமுறை வளரத் தொடங்கியது.

இம்மாதிரியான மிகவிரைவான மாற்றங்கள் பலவற்றை உதாரணமாகக் காட்ட முடியும். ஆனால் அது தனிப்பட்ட மாறுதல்களாக அல்லது குறிப்பிட்ட பகுதிகளுடன் மட்டுமே தொடர்புள்ள மாறுதல்களாக ஆகக்கூடிய விஷயமாக இருக்கவில்லை. அதற்கு மாறாக, 1970 களின் முதல்பாதியில் தோன்றிய நெருக்கடி போருக்குப் பிந்திய முதலாளித்துவத்தின் வளர்ச்சியிலேயே ஒரு புது வளர்ச்சிப்படியைப் புகுத்தியுள்ளது என்பதுதான் முக்கியமான விஷயமாகும்.

முந்திய கால இடைவெளிகளான 1950 களையும், 1960 களையும் பல்வேறு நாடுகளில் உள்ள மார்க்சீய சிந்தனையாளர்கள் முழுமையாக ஆராய்ந்து விட்டனர். இந்த முயற்சிகள் இயல்பாகவே ஒன்றுடன் ஒன்று தொடர்புள்ள இனங்களை ஒரு அமைப்பு முறையாக உருவாக்குவதற்கு உதவியுள்ளன எனக்கூறமுடியும். அவைகள் இந்தக்கால இடைவெளியின் சிறப்பியல்புகளைப் போதுமான அளவு வர்ணிக்கின்றன. 1970 களில் நிலவுகின்ற முதலாளித்துவத்தைப் பற்றி அவ்வாறு நாம் கூறுவது அவசர முடிவாகவேதான் இருக்கும் என நான் கருதுகிறேன். விவரமான வர்ணனை செய்யக்கூடிய இனங்களைக் கொண்டவர்களாக இப்போது நாம் இல்லை. இந்த அமைப்பு முறை மார்க்சீய-லெனினிய சிந்தனையின் அடிப்படையிலும், சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆவணங்களின் அடிப்படையிலும், பிற கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஆவணங்களின் அடிப்படையிலும் வளர்க்கப்பட வேண்டும். அது படைப்பாற்றல் மிக்க மார்க்சீய சிந்தனையாளர்களின் வாதங்களின் அடிப்படையிலேயே தான் தோன்றமுடியும். 1970 களில் தொடங்கிய போருக்குப் பிந்திய காலமுதலாளித்துவத்தின் இன்றைய படிநிலையின் சிறப்பியல்புகளைப் பகுத்தாராய்வதில் முக்கியமானதாக விளங்குகிறது என நான் கருதுகிற இந்தப் படைப் பாற்றல்மிக்க கருத்துப்

பரிமாற்றங்களைத் தொடங்கி அமைத்துள்ள உலகப் பொருளாதாரம் மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய நிறுவனத்தவர் இந்த இலட்சியத்தை நோக்கிய முதல் நடவடிக்கை ஒன்றை முன்னரே மேற்கொண்டுள்ளனர்.

1974—1975இல் ஏற்பட்ட நெருக்கடி ஒரு புதிய படிநிலையைப் புகுத்தியிருக்கிறது என இங்கு முன்னரே பல சமயங்களில் கூறப்பட்டது. ஆனால் இவ்வாறு கூறுவது விஷயத்தை ஏதோ மேலோட்டமாகப் பார்த்துக் கூறுவதே ஆகும். 1974-1975இல் ஏற்பட்ட நெருக்கடிக்கு முன்னர் 1969-1971 களில் யு. எஸ். சில் நிகழ்ந்த நெருக்கடிகளும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தனிச்சிறப்பான நடவடிக்கைகளும், டாலரை ஏற்றுக் கொண்டு பொன் நாணயத் திட்டம் கைவிடப்பட்டதும் இருந்தன. 1970 க்கும் 1971 க்கும் இடையில் பல மேற்கு ஐரோப்பிய நாடுகளில் வளர்ச்சியின் போக்கில் வீழ்ச்சிகளும், வெறும் இடைவெளிகளும் நிறைந்திருந்தன. ஆகவே நாம் 1969-1975 க்குமிடையிலான காலத்தை இரு தனித் தனியான சுழல்களைக் கொண்டது என சித்தரித்து விடக் கூடாது. உண்மையில் சொல்லப் போனால் ஒரே சுழலுக்குள் மோதிய இரண்டு பேரலைகளாகவே அவை இருந்தன. 1969-1971இல் யு. எஸ். சிலும் வேறு நாடுகளிலும் நிகழ்ந்த நெருக்கடியும், 1974-1975 களில் உலகம் முழுவதிலும் முதலாளித்துவப் பொருளாதாரத்தைப் பாதித்த நெருக்கடியும் உண்மையில் முதலாளித்துவத்தின் வளர்ச்சியில் ஒரு புதுப் படிநிலையைப் புகுத்தியது. அது முந்திய படிநிலைகளிலிருந்து மிகப்பெருமளவு மாறுபட்டதாகத் திகழ்ந்தது.

இந்தப்படிநிலையின் சிறப்பான பண்புகளைப் பற்றிப் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. சில வேளைகளில் நீண்ட நூற்பதாண்டுக்கால சுழலின் தாழ்ந்த ஒரு நிலையைத் தான் நாம் காண்கிறோம் என்றும் 1930 களில் ஏற்பட்ட பொருளாதார மந்தநிலை இதைப் போன்ற முந்திய நீண்ட காலச் சுழலின் தாழ்ந்த ஒரு படிநிலைதான் என்று கூறுகிற கருத்தையும் நாம் காண முடிகிறது. இம்மாதிரியான நீண்ட

காலப் படிநிலை ஒன்று உண்மையில் நிலவுகிறதா என்று ஆராய்ந்தறிய வேண்டியது இன்றியமையாதது. அவ்வாறு நாம் ஆராய்ந்தால், நமக்கு மிகுந்த சுவையான முடிவுகள் கிடைக்கலாம். மிகவும் தனிச்சிறப்பான நிலையைப் பற்றிய ஒரு உண்மையான பகுப்பாய்வே மிகவும் இன்றியமையாததாகத் தோன்றுகிறது. 60 ஆண்டுகளுக்கு முன்னர்—ஏன், 40 ஆண்டுகளுக்கு முன்னர் காணப்படாத காரணிகளை—அதாவது சென்ற சில பத்தாண்டுகளில் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் வளர்ச்சியை நிர்ணயித்த காரணிகளைப் பகுப்பாய்வது மிகவும் இன்றியமையாதது. இவை முதலாளித்துவ வளர்ச்சியின் உள்விதிகளையும் இரண்டு சமூகப் பொருளாதார அமைப்புகளிடையே நடைபெறும் போராட்டங்கள் முதலாளித்துவத்தின் மீது செலுத்தும் செல்வாக்கையும் உள்ளடக்கியதாக இருக்கும். இந்தக் காரணிகளின் தொகுதி முழுமையும் பற்றி இங்கு இந்த மாநாட்டில் வாதிக்கப் படுகின்றன என்பது மனநிறைவு தருவதாக உள்ளது.

இந்தப் புதிய படிநிலைக்கு மாறும் காலத்தில் ஏற்பட்ட மாற்றத்தைப் பகுப்பாய்வு செய்வதிலிருந்து கீழ்க்கண்ட முக்கியமான முடிவைத்தான் பெற முடிகிறது. அதாவது முதலாளித்துவ உற்பத்தி உறவுகளின் வரலாற்றுக் கட்டமைப்பு விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் அளவுடன் ஒப்பிடும் போது மிகக்குறுகியதாகி விட்டது என்பது தான் என்று நான் கருதுகிறேன். விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி சுதந்திரமான ஒரு வெளிப் புறக் காரணியாக இருப்பதனால், முதலாளித்துவத்தைத் தேக்கம் என்ற ஆழ்ந்த சேற்றிலிருந்து வெளியிலிழுத்துப் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழி செய்யும் என்ற பூர்ஷ்வா சித்தாந்த வாதிகளிடையே நிலவுகிற எண்ணம் முழுதும் தவறென நிரூபிக்கப்பட்டுவிட்டது. இது உண்மையில் நடைபெறவே இல்லை. உண்மையில் 1950-களிலும் 1960 களிலும் மார்க்சீய சிந்தனையாளர்களால் ஆராயப்பட்ட காரணிகளின் இணைப்பின் விளைவாகத்

தோன்றிய விரைவுபடுத்தப்பட்ட விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்ற காலத்தின் தவிர்க்க முடியாத மதிப்பீடுதான் மார்க்சீயவாதிகள் முன்னறிந்து கூறியதைப் போலவும், நாம் குறிப்பிட்டதைப் போலவும் நெருக்கடிகளின் தொகுதிகளாக நிகழ்ந்துள்ளது. சுருங்கக் கூறினால் இதுதான் தொழில் மறுஉற்பத்தியின் மோசமாகிக் கொண்டிருக்கிற சூழ்நிலைகளில் இந்தப் படிநிலையின் அடிப்படையில் உள்ளது.

அடுத்தாற்போல் இப்பொழுது **இரண்டாவது பிரச்சினையான ஏகபோகத் திட்டமிடல் பற்றியும், சந்தை சக்திகளின் சுதந்திரமான இயக்கம்** பற்றியும் கூற விரும்புகிறேன். போருக்குப் பிந்திய முதலாளித்துவ வளர்ச்சியின் புதிய படிநிலைக்கு மாறுவதைப் பற்றி நாம் வாதிக்கும்போது, லெனினுடைய ஆராய்ச்சியின் முடிவான, ஏகாதிபத்தியம் - ஏகபோகமும், போட்டியும்[2] என்ற இரண்டு முரண்பட்ட கோட்பாடுகளால் சிறப்புத்தன்மையுடையதாக விளங்குகிறது என்ற கருத்திற்கு மீண்டும், மீண்டும் நம் கவனத்தைச் செலுத்துவது இன்றியமையாததாகவுள்ளது. லெனின் அவர்களுடைய வாதத்தின்படி நாமும் ஒழுங்கமைப்பும், குழப்பமும் திட்டமிடுதலும், தானே தோன்றுவதும் போன்ற முரண்பட்ட இயல்புகளைப் பற்றிப் பேசலாம்.

அரசு - ஏகபோக அமைப்பின் வளர்ச்சியில், கட்டுப்படுத்துதலும், திட்டமிடுதலும் கூட சந்தை சக்திகளின் சுதந்திரமான இயக்கத்தை ஒரு வரம்பிற்குட்படுத்துவது போன்று விளங்குகிறது. நிகழ்ச்சிகள் இப்மாதிரியான கருத்துக்கள் சிறுபிள்ளைத்தனமான இயல்பு கொண்டவை என்ற உண்மையைக்காட்டியுள்ளன என்பது, இன்றையகால இடைவெளியின் சிறப்பான இயல்பாக உள்ளது என்பது என் கருத்தாகும்.

என்னுடைய கண்ணோட்டத்தில், ஏகபோகத் திட்டமிடல் என்பது பல்வேறு உருவங்களில் வளர்ச்சியடைந்துள்ளது. அவைகளில் இரண்டு உருவங்கள் தெளிவாகத் தெரிகின்றன: ஒன்று, தேசிய அரசுக் கட்டுப்பாடு. மற்றொன்று பன்னாட்டு வாணிப நிறுவனங்களால் பயன்படுத்தப்படுகிற சர்வதேச ஏகபோகக் கட்டுப்பாடு. இந்த

இரண்டு வகையான ஏகபோகத் திட்டமிடலும் ஒன்றுடன் ஒன்று வரலாற்று அடிப்படையில் இணைக்கப்பட்டுள்ளன. பன்னாட்டு இணையங்கள் அரசு ஏகபோகக் கட்டுப்பாட்டின் தேசிய அமைப்பு முறையிலிருந்து விலகிச் சென்று விடவில்லை. அதற்கு மாறாக அவைகள் தனியார் தொழில் மையப்படுத்தப் படுவதையும், செறிவையும் மேலோங்கச் செய்யும் இந்த அமைப்பு முறையினால் தோற்றுவிக்கப் பட்டவையே. ஒரு குறிப்பிட்ட படிநிலையில் ஏகபோகத் திட்டமிடலின் இந்த இரண்டு உருவங்களின் இணைப்பு புதிய, முன்னைக் காட்டிலும் அழிவுசக்தி நிறைந்த முரண்பட்ட கொள்கைகளின் உருவங்கள் தோன்றி வளர்வதற்கு வழி செய்கிறது. அதாவது உற்பத்தியில் ஒரு குழப்பத்திற்கும், சந்தை சக்திகளின் சுதந்திரமான இயக்கத் திற்கும் வழி செய்கிறது.

உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட பணவியல் நெருக்கடியும், வேறுபல விஷயங்களும் இந்த இரண்டு வகையான ஏகபோகத்திட்டமிடலின் இணைப்புக் களுடன் உறவுடையவைதான். உதாரணமாகப் பன்னாட்டு இணையங்கள், குறிப்பாக அமெரிக்க சர்வதேச வாணிக நிறுவனங்கள், பணச்சந்தையில் தாங்கள் நடத்தும் ஊக வாணிபத்தின் காரணத்தால் டாலரை ஆதரிப்பதற்கு அமெரிக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளைச் சீர்குலைத்தன. பல பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்களின் கருத்துப்படி சர்வதேசப் பணவியல் சந்தையில் பல, மிகுந்த இடர்ப்பாடுகள் நிறைந்த குழப்பங்களைத் தோற்றுவித்தன. இது ஒரு சிறிய உதாரணம்தான்.

எனினும், முதலாளித்துவ உலகம் முழுமையிலும்தானே செயல்படும் தன்மை உயர்ந்தால் தனித்தனி நாடுகளில் உள்ள நிலை வேறுமாதிரியானதாக இருக்கும் என்று மற்றொரு கருத்துக் கூறுகிறது. என்னுடைய கருத்தில் தனி நாடுகளிலும், முதலாளித்துவப் பொருளாதாரம் முழுமை யிலும் நடைபெறுகிற நிகழ்ச்சிப் போக்குகளை எதிர்ப் பதற்கு ஒரு குறிப்பிட்ட வரம்பு உள்ளது.

பன்னாட்டு வாணிக நிறுவனங்கள் என நாம் கூறும் பொழுது நாம் கொள்ளும் பொருள் என்ன? அதுசர்வதேசப் பொருளாதார உறவுகளில் நிலவுகிற ஒன்றா? இல்லை. முக்கியமாக உற்பத்தியும், மூலதனமும் ஒரு குறிப்பிட்ட தேசிய எல்லைக்குள் மிக அதிகமான அளவு ஆதிக்கம் செலுத்தக் கூடிய நிலையில் உள்ள ஒருபகுதியில் உருவாக்கப் பட்ட ஒரு தேசிய நிறுவனம்தான் அது. ஒரு சில காலத்திற்குப் பின்னர் அது சர்வதேச மட்டத்தில் செயல் படத் தொடங்குகிறது.

இன்றுள்ள ஏகபோக சங்கங்களின் பல்வேறு உருவங் களைக் குறிப்பிடும்போது பன்னாட்டு இணையங்கள் அதில் எவ்வகைப் பங்குவகிக்கின்றன எனக் குறிப்பிட வேண்டும். தேசிய மட்டத்திலும், சர்வதேசிய மட்டத்திலும் செயல் படுகிற சமூகத்தன்மையும் செறிவும் நிறைந்த ஏகபோகத்தின் உருவத்துடன் ஒப்பிட்டுப்பார்த்தால், பன்னாட்டு இணையங்கள், பரந்த அளவிலான, புதிய உயர்வான ஏகபோகமா என்ற, ஏற்ற கேள்வி சோதிப்பதற்காக மேற்கொள்ளப்பட வேண்டும்.

அரசு ஏகபோக அமைப்பு முழுமையின் மீதும் ஒரு இன்னல் மிகுந்த விளைவை ஏற்படுத்தியுள்ள தேக்கநிலைப் பணவீக்கம் அல்லது மந்தநிலைப் பண வீக்கம் என்ற பெயரிட்டு அழைக்கப்படுகின்ற பண வீக்கங்களும், வேலையில்லாத் திண்டாட்டமும் இணைந்த நிலைகளைப் பற்றி நாம் கூற முடியுமானால் இந்தப் பிரச்சினையின் தோற்றமும், அதன் வளர்ச்சியும் கூட சந்தேகமில்லாது பன்னாட்டு நிறுவனங்கள் உருவாக்கப்பட்டதன் விளைவாகவும் அதனுடன் இணைக்கப்பட்ட நிகழ்ச்சிப் போக்குகளின் விளைவாகவும்தான் ஏற்பட்டன எனலாம்.

தோழர். லுட்ஸ் மெய்யர் அவருடையமிகவும் சுவையான ஆராய்ச்சிக் கட்டுரையில் பொருளாதாரக் கொள்கைகளின் புதிய உருவங்களின் வளர்ச்சிக்குத் தூண்டுகோலாக விளங்கும் நெருக்கடியின் பங்கு பற்றிய பிரச்சினையை நம்முன் வைத்ததும், சர்வதேச அரங்கில் அரசு ஏகபோகங்

களின் வளர்ந்து வரும் பங்கின் வருங்கால வாய்ப்புகளைப் பற்றிய அவரது மதிப்பீடும் முழுதும் ஏற்புடையவையாக உள்ளன என அவர் கூறியது என்னுடைய கருத்துக்கும் ஏற்புடையதாக விளங்குகிறது இங்கே நாம் புதிய அரசு ஏக போகநிறுவனங்களைப் பற்றித்தான் பேசுகிறோம்-அதாவது பொருளாதாரக் கொள்கைகளின் புதிய போக்குகளை இணைப்பதற்குச் செய்யப்பட்ட முயற்சிகளைச் செய்கிற மிகவும் முக்கியமான ஏகாதிபத்தியங்களின் தலைவர் களிடையே குறிப்பிட்ட கால இடைவெளிகளில் இப்போது நடைபெறும் கூட்டங்களைப் பற்றிப் பேசுகிறோம்.

எனினும், ஏகபோகதிட்டமிடலின் இயக்கவியலும், சந்தை சக்திகளும், அரசு ஏகபோகக் கட்டுப்பாடு நிறுவுவதை எந்த வழியிலும் ஒரு நேரடியான, முன்னேற்றமான இயக்கமாக ஆக்கவில்லை. இந்த நிகழ்ச்சிப் போக்கு மிகவும் மோசமான முரண்பாடுகள் நிறைந்த முறையில், குறைந்தும் பெருகியும் வளர்கிறது. உதாரணமாக சர்வதேசப் பொருளாதார உறவுகள் தொடர்பான துறையில் அரசின்பங்கை எடுத்துக் கொள்ளுங்கள். முடிவாகப் பார்த்தால் அது வளர்ந்து கொண்டேதான் இருக்கிறது. போருக்கு முந்திய கால வளர்ச்சியுடன் ஒப்பிடும்பொழுது ஒப்பீட்டில் மூலதன ஏற்றுமதி செய்யப்படுவதில் அரசின்பங்கு மிகஅதிகமாக குறைந்து விட்டதை நாம்மறுக்கமுடியுமா? சர்வதேசப் பொருளாதார உறவுகளில் அரசு ஏகபோகக் கூறுகளின் வளர்ச்சி பற்றிய கண்ணோட்டத்தின் அடிப்படையில் பிரெட்டன் வுட்ஸ் அமைப்பு, முறையுடன் ஒப்பிட்டால் ஏற்றத்தாழ்வுடைய நாணய அமைப்பு முறை ஒருஉயர்ந்த உருவமாகக் கருதப்பட முடியாது என்பதுதான் என் கருத்தாகும்.

வேறு வார்த்தைகளில் கூறினால் அரசு ஏகபோக முதலாளித்துவத்தின் வளர்ச்சி ஒரு சிக்கல் நிறைந்த நிகழ்ச்சிப்போக்கு என்பதை நிகழ்ச்சிகள் காட்டுகின்றன. பல் வண்ணக் காட்சிக்கருவி முழுமையிலும் அரசு

ஏகபோகத்தின் உருவங்கள், தனி ஏகபோகங்களின் உருவங்கள் ஆகியவற்றின் உட்தொடர்பிலும், சுழல் மற்றும் கட்டுமான நெருக்கடிகளின் இணைப்புகளிலும், அரசு ஏகபோக முதலாளித்துவ வளர்ச்சியின் ஆழ்ந்த முரண்பாடுகள், மீண்டும் ஓர்முறை வெளியிடப்பட்டுள்ளன. குறிப்பாக இது ஏகபோக மூலதனம், அரசு ஏகபோக மூலதனமாக மாறுவது ஒருவகையான முடிவான நிலையை அடைந்துவிட்டது என்றே காட்டுகிறது. அதற்கு மாறாக என்னுடைய கருத்தில் வருங்காலத்தில் மிக அதிக அளவு சிக்கலான முரண்பட்ட வளர்ச்சியையும், மிகுந்த துன்பம் தரும் இயல்புடைய பிணக்குகளையும் அரசியல் மற்றும் பொருளாதாரத் துறைகளின் முக்கியமான வளர்ச்சியாக எதிர்பார்க்கலாம்.

நாம் சிறிதளவு முக்கியத்துவமளிக்க விரும்பும் மூன்றாவதும், இறுதியுமான பிரச்சினை இன்றைய முதலாளித்துவ வளர்ச்சியில் இரண்டு சமூக அமைப்புகளிடையே நிலவும் போட்டியின் தாக்கத்துடன் தொடர்பு கொண்டது. 1950 களிலும் 1960 களிலும் முதலாளித்துவ வளர்ச்சி முழுதும் நின்று விட்டது என்று கூற முடியாது என்றும், இரண்டு சமூக அமைப்பு முறைகளிடையே ஏற்படும் போட்டியின் விளைவாக முதலாளித்துவத்திற்குள் நடைபெறும் போட்டி பாதிக்கப்படும் என்றும் கூறப்பட்டு வந்தது. 1970 களில் மறுஉற்பத்தியில் தேக்கத்தின் ஒரு புதிய படிநிலை நிலவும் போது நாம் எவ்வாறு பிரச்சினையைப் பற்றி ஆராய்வது?

பூர்ஷ்வா சிந்தனையும், பூர்ஷ்வா பிரச்சாரமும், 1970 களில் ஏற்பட்ட நெருக்கடி உலகம் முழுதும் நிலவிய நெருக்கடியென்றும், முதலாளித்துவ நாடுகளும், சோஷலிச நாடுகளும் அதன் விளைவாகத் துன்பத்தில் ஆழ்ந்துள்ளன என்றும் வளர்ந்த நாடுகளும், வளரும் நாடுகளும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் உலகம் முழுதும் உள்ள மக்களை நம்புமாறு செய்ய முயன்றனர். சோஷலிசம்

நெருக்கடியால் பாதிக்கப்படாமல் இருக்க முடியாது என்ற ஆராய்ச்சிக் கோட்பாடுகளை மக்கள் ஏற்றுக் கொள்ளச் செய்வதற்கான தெளிவான முயற்சிதான் இது. முதலாளித்துவ நாடுகளும், சோஷலிச நாடுகளும் இந்தப் பொருளாதார நெருக்கடியில் பங்குள்ளவைகள் தான் என்ற கருத்துக்களை மக்கள் மனதில் பதியவைக்க முயன்றனர். இது உண்மையில் பயனற்றதாகி விட்டது. நெருக்கடிக்கான பொறுப்பையும், வேலையில்லாத் திண்டாட்டத்திற்கான பொறுப்பையும் உழைக்கும் மக்கள் இழந்து, பட்ட துன்பங் களையும் முதலாளித்துவத்தினால் தோன்றியவை தான் என்ற உண்மையை மறைத்துவிட முடியாது. அதுதான் இதற்குப் பொறுப்பாளியாகும்.

ஆனால் இங்கே ஒரு குறிப்பிட்ட பிரச்சினையைச் சந்திக்கிறோம். சோஷலிச நாடுகளுக்கும், முதலாளித்துவ நாடுகளுக்குமிடையில் கூட்டுறவு அதிகரிக்க, அதிகரிக்க அவைகளுடைய பொருளாதாரங்களிடையே கூட்டுறவு அதிகரிக்க, அதிகரிக்க சோஷலிசத்தின் தொடக்க காலத்திலிருந்து அவைகளிடையே எப்பொழுதுமே நிலவி வருகிற உட்தொடர்பு மிகுதியாகிக்கொண்டே வருகிறது.

இந்த உட்தொடர்புகளைப் பற்றிச் சுருக்கமாகப் பேசினால் அதன் முக்கியமான எல்லைக் கோடுகள் எவை? முதலில் சோஷலிச நாடுகளின் மீது முதலாளித்துவ நாடு களின் செல்வாக்கை எடுத்துக் கொள்வோம். அதனுடைய எல்லைக் கோடுகள் எவை? முதலில் ஆயுதப் பெருக்கப் போட்டி இருக்கிறது. அதில் முதலாளித்துவம் நம்மைப் போட்டியிடும்படி நிர்ப்பந்திக்கிறது. இந்தப் போட்டி பொருளாதார வளர்ச்சியையும், சமூக வளர்ச்சியையும், நமக்குநாமே வகுத்துக் கொண்டுள்ள இலட்சியங்களை அடைவதையும் தடுக்கும் இன்றியமையாத காரணிகளில் ஒன்றாக விளங்குகிறது.

இரண்டாவதாக, பல்வேறுபட்ட பொருளாதார முற்றுகைகளின் உருவங்களும் ஒருசார்பான பொருளாதார

நடவடிக்கைகளின் உருவங்களும் உள்ளன. அவை பொருளாதார வளர்ச்சியைத் தடுத்து நிறுத்துவதாக உள்ளன. குறிப்பாக, வேறு நாடுகளிலிருந்து பெறுவது பொருளாதார அடிப்படையில் நன்மை தரக்கூடியதாக இருக்கும் பொருட்களை நாமே உற்பத்தி செய்யுமாறு அந்த ஒரு சார்பான நடவடிக்கைகள் கட்டாயப்படுத்தியுள்ளன.

முடிவாக சுழல் தன்மையுள்ள ஏற்றத்தாழ்வுகள், பணவீக்கம், விலை ஏற்றம் முதலியனவும் உள்ளன. இங்கு தான் உலகில் உள்ள சோஷலிச நாடுகளுக்கும், சோஷலிஸ்ட் அல்லாத நாடுகளுக்குமிடையில் நிலவுகிற பொருளாதார உறவின் வளர்ச்சி தொடர்பான புதிய பிரச்சினைகள் காணப்படுகின்றன. இதன் விளைவாக சோஷலிசத்தின் காப்பு நிதிகளை, இயற்கையில் ஏற்படும் துன்பங்களை நீக்க உதவுவதற்கும், அது போன்றவைகளுக்கும் உதவுவதற்கும் தயாராக இருக்குமாறு விரிவடையச் செய்வது இன்றியமையாதது என நான் நம்புகிறேன்.

இப்பொழுது முதலாளித்துவ நாடுகள் மீது சோஷலிச நாடுகள் செலுத்தும் செல்வாக்கைப் பார்ப்போம். என். என். இனோசெம்ட்ஸேவ் அவர்களும் வேறுபல சொற்பொழிவாளர்களும், முதலாளித்துவ நாடுகளில், விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றத்தின் மேம்பாட்டின் விளைவின் மீது சோஷலிசத்தின் தாக்கத்தைப் பற்றி முன்னரே கூறியிருக்கிறார்கள். இது குறிப்பாக 1950 களின் பின்பகுதியிலும், 1960 களின் பின்பகுதியிலும் தனிச்சிறப்பு வாய்ந்ததாக இருந்தது. 1970 களில் நெருக்கடியின் விளைவினால் செல்வாக்கில் மிஞ்சி இருந்தது. ஆனால் அது செயல்திறனுடையதாகவே இருந்திருக்கிறது. வேறுசில போக்குகள் மிகுந்த மதிப்புடையதாக ஆகியிருந்த போதிலும் அதைக் குறைத்து மதிப்பிடுவது தவறாகவே இருக்கும். சோஷலிச நாடுகளுடன் பொருளாதாரக் கூட்டுறவு நேரடியான தொடர்புடையதாக விளங்குவதால் குறிப்பிட்ட அளவு உறுதித்தன்மையுடையதாக விளங்கும் முதலாளித்

துவத்தின் குறிப்பிட்ட பகுதியின் விரிவாக்கமும் கூட மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.

ஆனால் முக்கியமாக மறைமுகமான செல்வாக்கிற்கான சாதனமாக விளங்குவதாக எனக்குத் தோன்றுவது உலக சக்திகளின் புதிய அணிகள் தோன்றி வளர்ந்து வரும் சூழ்நிலையில் முதலாளித்துவ உலகில் உள்ள ஆளும் வர்க்கத்தினரிடம் காணப்படும் தொழிலாளி வர்க்கத்துடன் ஏற்படக்கூடிய நேரடி மோதலைப் பற்றிய கலக்கமும், சோஷலிச அமைப்பு முறையின் பொருளாதார பலமும், அரசியல் வலிமையும் பற்றிய நடுக்கமும் அதனுடைய சித்தாந்தச் செல்வாக்கு பற்றிய அச்சமுமேயாகும்.

மிகப்பெரும் அளவிற்கு, 1930 களில் ஏற்பட்ட நெருக்கடியின் போது இருந்த நிலைக்கு மாறாக 1970 களில் ஏற்பட்ட நெருக்கடியின் போது முதலாளித்துவம் வேலை நிறுத்த இயக்கத்தைத் தடுத்து நிறுத்த இயலவில்லை என்ற உண்மையிலிருந்தும், நாடுகளில் பூர்ஷ்வாக்கள் கூலியில் சிறப்பான அல்லது நீண்டகாலக் குறைவுகளைத் தோற்றுவிக்க முடியவில்லை என்ற உண்மையிலிருந்துமே இந்த நிலை தோன்றுகிறது.

இப்பொழுது முதலாளித்துவம் தனக்குச் சாதகமில்லாத பொருளாதார சமூக சூழ்நிலைகளைச் சித்தாந்த அடிப்படையில் வெல்வதற்குத் தன் கையிலுள்ள அனைத்து சக்திகளையும் பயன்படுத்துகிறது என்பதைக் குறிப்பிடத் தான் வேண்டும். எனவே சோஷலிசத்தைக் குறைத்து மதிப்பிடச் செய்யும் இயக்கமும் உலக நாடுகளில் உள்ள முற்போக்கான சக்திகளாக விளங்கும் உழைக்கும் மக்களுக் கிடையே ஒரு பெரும் பிளவைத் தோற்றுவிப்பதற்கான முயற்சியும் தீவிரமானதாக விளங்குகின்றன. சோவியத் ஒன்றியத்துக்கும், பிற சோஷலிச நாடுகளுக்கும் எதிரான இயக்கங்களானவை வேறு பலவற்றைக் காட்டிலும், முதலாளித்துவ நாடுகளில் உள்ள உழைக்கும் மக்களுடைய வாழ்க்கைத் தரத்தையும், ஜனநாயக உரிமைகளையும்

உயர்த்துவதற்கு எதிரான ஏகபோகங்களின் போராட்டத்திற்கு மேம்பாடு தருவதையே தங்கள் நோக்கமாகக் கொண்டிருக்கின்றன. இவ்வாறாக, இத்தகைய இயக்கங்களுக்கு எதிரான போராட்டங்கள், மார்க்ஸ் கருத்தின்படி "தனிநபர் நலன்களின் பழி வாங்கும் எண்ணங்களினால்" தூண்டிவிடப்பட்ட இத்தகைய இயக்கங்களுக்கு எதிரான போராட்டங்கள், தொழிலாளி மக்களுக்கு அரசியல், சித்தாந்த வகைகளில் மட்டும் முக்கியமானவையல்ல. நேரடியான பொருளாதார முக்கியத்துவமும் கொண்டவையாகும்.

## அடிக்குறிப்புகள்

[1]. கார்ல் மார்க்ஸ், மூலதனம்: தொகுதி 1. முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1972. பக். 21.

[2]. வி. இ. லெனின், தொகுப்பு நூல்கள் தொகுதி 24, பக்கம். 465.

டாக்டர் காடலின் சாபோ

*கார்ல் மார்க்ஸ் பொருளாதார பல்கலைக்கழகம்*
*ஹங்கேரி.*

## முதலாளித்துவ வாணிப நிலையங்களிடையே பல்வகைப்படுத்துதல்

வாணிப நிலையங்களைப் பல்வகைபடுத்துதல் என்ற விஷயம் பற்றி நான் விவரித்துக் கூறப்போவதில்லை. ஏனெனில், அதைப்பற்றி ஏராளமான ஆராய்ச்சியாளர்கள் முன்னரே விவரித்துக் கூறியுள்ளனர். நான் முதலில் இந்த பல்வகைப்படுத்தும் முறை என்ற நிகழ்ச்சிப் போக்கின் போது ஒன்றுக்கொன்று சார்ந்துள்ள அரசியல் மற்றும் பொருளாதார நிலைகளையும் பற்றி கவனம் செலுத்த விரும்புகிறேன். பின்னர் அதன் சில முக்கியமான கூறுகளைப்பற்றி விரிவாகக் கூறவிரும்புகிறேன்.

கேட்பாரற்ற சுதந்திரமான போட்டி நிலவியகாலத்தில், ஏதாவது ஒருவகையான பொருளை உற்பத்திசெய்வதற்காக ஒரு நிறுவனத்தை அமைப்பது ஏற்புடையதாக இருந்தது. படிப்படியாக உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் வகைகள் அதிகரித்தன. எனவே 1960 களில் பலவகையான உற்பத்திப் பொருட்களைப் படைத்த நிறுவனங்களைப் பற்றி ஆராய்ந்து அறிவது மிகவும் இன்றியமையாததாயிற்று. இன்றைய பல பெரிய முதலாளித்துவ நிறுவனங்களின் ஒருமித்த கவனம் இன்றுவரை நிலவுகிற செங்குத்தான—

படுத்தையான போக்குகளிலிருந்தும் முழுதும் வேறு பட்டதாக இருக்கிறது. இப்பொழுது எல்லாம், முழுவதும் வேறுபட்ட பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்கிற வாணிபநிலையங்களை வாங்குவதும், வேறுபட்ட தொழில்களைச் செய்துவரும் தொழில்தொகுதிகள் இணைக்கப் படுவதும் வழக்கமாகிவிட்டது. இந்த நிகழ்ச்சிப் போக்கு குறிப்பாக அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மிகுதியாகக் காணப் படுகிறது. 1950 களிலிருந்து 1970 களுக்குள்ளாக அமெரிக்காவில் உள்ள 500 பெரிய நிறுவனங்களில் ஒருவகையான பொருளை உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் எண்ணிக்கை 30 சதவிகிதத்திலிருந்து 8 சதவிகிதமாகக் குறைந்தது.

பூர்ஷ்வா, இலக்கியங்களிலும் மார்க்சிய இலக்கியங் களிலும் நாம் பல்வகைப்படுத்துதல் பற்றிய பல்வேறு வகையான கருத்துக்களைக் காண முடிகிறது. பல்வகைப் படுத்துதல் ஒரு புதிய விஷயமாகக் கருதப்படவேண்டுமா என்பதில் கூட கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. "ஒருசிலர் அதுதான் அனைத்து நோய்களுக்கும் மருந்து எனக் கருதுகிறார்கள், வேறுசிலர் அது எந்த வழியிலும் புதிதல்ல எனக் கருதுகிறார்கள்" என்று காட்டெல்மான் கூறுகிறார்.

பல்வகைப்படுத்துதல் என்பது ஏராளமான விஷயங் களை அடக்கிய ஒருபன்முக நிகழ்ச்சிப்போக்கு என்பதுதான் என்னுடைய கருத்து. எனது இந்தக் கட்டுரையில் நான் அதனைப்பற்றி மிகவும் குறைவாகவே தெரிந்துள்ள பகுதிகள் அல்லது இதுவரை வழக்கமாக விதிவிலக்கு எனக் கருதப்பட்டவைகளின் மீது என் கவனத்தைச் செலுத்த விரும்புகிறேன். முக்கியமாக ஒன்றுக்கொன்று அதிகமான அளவு விலகியுள்ள தொழிற்தொகுதிகளைப் பல்வகைப் படுத்துதல் என்பதுதான் அதன் பொருளாகும்.

பல்வகைப்படுத்துதல் நிகழ்ச்சிப் போக்கு முக்கியமாக மூன்று திசைகளில் நடைபெறலாம்.

1. நிலவுகிற உற்பத்தியுடன் இணைக்கப்பட்ட பல்வகைப்படுத்தல் இந்தச் சமயத்தில் பெறப்பட்ட உற்பத்தித் திறமைகள், மறுஉற்பத்தி நிகழ்ச்சிப் போக்கிற்கு ஒத்ததாக தொடக்கநிலை மூல உற்பத்திப் பாங்கிற்கு ஏற்பத் தகவமைத்துக் கொள்ளப்படுகின்றது. அவைகள் ஆரம்பத்தி லிருந்து நிலவுகிற அமைப்பு முறையின் தொடக்கநிலைக் கண்ணிகளாக அல்லது முடிவு நிலைக்கண்ணிகளாக மாற்றப் படுகின்றன. இதற்கு மிகச்சிறந்த உதாரணமாக விளங்குவது பெட்ரோல்-இரசாயனத் தொழில்தான்.

2. அதே அளவு தேவையை பூர்த்தி செய்ய, ஆனால் வேறுபட்ட தொழிற் தொகுதிகள் தொடர்பான பொருட்களின் வகைகளை உற்பத்தி செய்வதை விரிவுபடுத்துவது.

3. இந்த வகையான பல்வகைப்படுத்துதல் கதம்பமாக்குதல் என அழைக்கப்படுகின்றது. தொடக்கநிலை வகையிலிருந்து முழுதும் மாறுபட்ட பல்வேறு வகையான உற்பத்திப் பொருட்களைப் படைக்கும் நிறுவனங்களை ஒரு நிறுவனத்தில் இணைப்பதை உள்ளடக்கியதாக உள்ளது. அதே வேளையில் முன்னர் பயன்படுத்தப்பட்ட தொழில் நுட்பம் இப்பொழுது பயன்படுத்தப்படுகிற தொழில் நுட்பத்துடன் பொதுவான தன்மைகள் ஏதும் இல்லாததாக உள்ளது. EXON நிறுவனத்தில் எண்ணெய் நிறுவனங்களும், பெரும் உணவுவிடுதித் தொழிலும் இணைந்ததை ஒரு முக்கியமான உதாரணமாகக் கூறலாம். இம்மாதிரியான பல்வகைப்படுத்தல் முழுதும் புதிய ஓர் விஷயமாகும். எனவே இது முதலாளித்துவ அமைப்பு முறைபற்றி ஆராய்ச்சியை மேற்கொள்வோருடைய கவனத்தைப் பெரிதும் கவர்ந் திருப்பதில் வியப்பொன்றுமில்லை.

பல்வேறு வகையான பல்வகைப்படுத்துதல்களுக் கிடையேயுள்ள எல்லைகள் தொடர்புடையவை என்பது மிகவும் தெளிவாகத் தெரிகிறது. கம்பெனிகளுக்கிடையில் நடைபெறும் பல்வகைப்படுத்துதல், பொதுவாக

தொடர்ச்சியாக அல்லது விட்டுவிட்டு நடைபெறலாம். பெரிய முதலாளித்துவ கம்பெனிகளில் பல்வகைப்படுத்துதல் ஒரு நீண்ட நிகழ்ச்சிப் போக்கின் விளைவாகவே இருக்கும். இவ்வாறாக சிமென்ஸ், பிலிப்ஸ், பியட், க்ரப் ஜெனரல் எலெக்ட்ரிக், ஆகியவை போன்ற கம்பெனிகள் அவைகளின் கட்டமைப்பைத் தங்களுடைய போட்டியாளர்களுக்கெதிராக படிப்படியாக மாற்றியமைத்திருக்கின்றன. இந்த நிகழ்ச்சிப் போக்கு 1950 களிலேயே தொடங்கி விட்டது. இம்மாதிரியான பல்வகைப்படுத்துதல் உட்புறமான பல்வகைப்படுத்துதல் என அழைக்கப்படுகிறது.

நிலையங்களின் இணைப்புகள் மூலமும் நிலையங்களை முழுமையாக எடுத்துக் கொள்வதின் மூலமும் வேகமான பல்வகைபடுத்துதல் சாதிக்கப்படுகிறது. இந்தக் காரணத்தினால் இது பெரும்பாலான சமயங்களில் வெளிப் புறப் பல்வகைப்படுத்துதல் என அழைக்கப்படுகிறது. 1958 லிருந்து 1968 க்குள்ளாக, 50 க்கும் மேலான நிலையங்களை, முழுமையாக எடுத்துக்கொண்ட சர்வதேச தொலைபேசி மற்றும் தந்தி நிறுவனத்தின் வளர்ச்சியே இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

இந்த நிறுவனங்களில் பல சர்வதேச தொலைபேசி மற்றும் தந்தி நிறுவனத்தின் தொடக்கநிலை உற்பத்திப் பொருளுடன் எந்தவிதத்தொடர்பும் இல்லாத பொருட் களையே உற்பத்தி செய்தன. இந்த சர்வதேச தொலைபேசி மற்றும் தந்தி நிறுவனம் இப்பொழுது இரும்பு எஃகுத் தொழில், இரசாயனத்தொழில் ஆகியவற்றில் தொடர் புடையதாக இருப்பதோடு மட்டுமல்லாமல், கட்டுமானத் தொழிலிலும் ஆயுள் காப்பீட்டுத்தொழிலிலும் ஈடுபட்டுள்ளது. பல சர்வதேச ஏகபோகங்கள் வேகமான உட்புற பல்வகைப்படுத்தலையும் படிப்படியான வெளிப்புற பல்வகைப்படுத்தலையும்,-அதாவது இணைத்தலோ அல்லது முழுதும் மேற்கொள்வதோடு இல்லாமல்-மிகப்பெருமளவில் பயன்படுத்துகின்றன.

நம்முடைய கருத்தில் வெவ்வேறு மாதிரியானபல்வகைப் படுத்தலை—தெளிவாக்கி விளக்குவதும் இன்றியமையாதது ஆகும். ஆனால் பெரிய நிறுவனங்களின் மெதுவான உட்புறப்பல்வகைப்படுத்தல், இணைப்புகளாலும், நிறுவனங்களை மேற்கொள்வதாலும் நடைமுறையில் நிறைவேற்றப்படுகிற வேகமான வெளிப்புறப் பல்வகைப் படுத்தலிலிருந்து விலக்கப்படக் கூடாது.

பல்வகைப்படுத்தல், ஏகபோக மூலதனத்தின் மையப் படுத்தலுக்கும், குவித்தலுக்கும் மூலதனத்தின் வளர்ச்சிக்கும் ஒரு சிறந்த வழியாக விளங்குகிறது. இது சிறிய நிறுவனங் களிடையேயும் கூடக்காணப்படுகிறது. ஆனால் இது குறிப்பாகப் பெரியநிறுவனங்களின் தனிச்சிறப்பியல்பாகும். பின்னால் கூறப்பட்ட பெரிய நிறுவனங்கள்தான் சிறிய, இலாபம் இல்லாத பொருட்களின் ஒரு தொகுதியைப் படைப்பதில் உற்பத்தியின் செயல்களை வேறுபடுத்தமுடியும். எனினும் பெரிய நிறுவனங்கள்கூட மிகுதியான அளவு பல்வகைப்படுத்தல் என்ற பேரடாயத்தை எதிர்நோக்க வேண்டியிருக்கும், குறிப்பாக—வேறுமாதிரியான உருவங் களையுடைய உற்பத்திக்கு மாறுவது மிக விரைவாக நடை பெற்றாலும், அவைகளின் எண்ணிக்கை ஒப்பீட்டில் குறுகியகாலத்தில் குறிப்பிடத்தக்க அளவு மிகுந்தாலும், இந்தப் பேரபாயத்தை எதிர்நோக்க வேண்டியதிருக்கும்.

பொருட்களின் தொகுதிகளின் அடிப்படையில் பல்வகைப்படுத்தல் நிகழ்ச்சிப்போக்கின் வேறுபட்ட உருவங் களையும் அதன் தீவிரத்தையும் பற்றிப் பேசலாம். மூலதனக்குவியல் மற்றும் ஒருமுனைப்படுத்துதலின் தனிச் சிறப்பான உருவங்கள் (உட்புற பல்வகைப்படுத்தலிலும், வெளிப்புறப் பல்வகைப்படுத்தலிலும்) தனிவகையான மூலதனத்தின் கட்டமைப்பை மாற்றுகின்றன. புதிய செயல் முறை வட்டங்களைக் கொண்டு வருவதன் மூலம் மட்டுமல்லாமல் பழைய முறைகளை மாற்றுவதனாலும் தொடர்ந்து தங்களுடைய கட்டமைப்பை மாற்றியமைத்துக்

கொண்டிருக்கிற பல்வகைப்பட்ட, வேறுபாடுகள் நிறைந்த சர்வதேச நிறுவனங்கள் உருவாக்கப்படுகின்றன. அவைகள் தொடர்ச்சியாக நிறுவனங்களின் பகுதிகளை நீக்கிவிட்டு, மிக அதிக அளவு இலாபம் தரக்கூடியவைகளாக விளங்கக் கூடிய புதிய உற்பத்தித் திறமைகளை வளர்த்து வருகின்றன.

ஏன் இந்தப் பெரிய கார்ப்பரேஷன்கள் தங்களுடைய வலிமையைத் தொடர்ச்சியாகச் சிதறடித்துக் கொண்டிருக்கின்றன என்ற கேள்விக்குரிய விடைக்காகத் தேடினால் நாம் பல விளக்கங்களைப் பெறமுடியும். உதாரணமாக அமெரிக்கப் பொருளாதார நிபுணர் ஒருவர், ஏன் ஒரு நிறுவனம் பரவலாகத் தீர்மானிக்கிறது என்பதற்கு 43 காரணங்களைத் தந்துள்ளார். இந்த விஷயத்திற்கு விளக்கம் காண்பது மட்டுமே பிரச்சினையல்ல. ஆனால் பல்வகைப் படுத்தலுக்குப் பின்னால் உள்ள செயலூக்கம் நிறைந்த சக்திகளிடையே பொதுவான அடிப்படையானவற்றைத் தேர்ந்தெடுத்துக் காண்பதே பிரச்சினையாகும். இதைச் செய்ய அரசியல் பொருளாதாரத்தின் முக்கிய உறவுகளுடனும், முக்கியமான இனங்களுடனும் பல்வகைப் படுத்தலை நோக்கிய போக்குகளைத் தொடர்புபடுத்த வேண்டும். இந்தப் போக்குகளைச் சீர் தூக்கிப் பார்த்தல் அது ஒப்பீட்டில் ஒன்றையொன்று, சார்ந்ததாக இருந்த போதிலும் இரண்டு தனிமைப்படுத்தப்பட்ட தொகுதிக் காரணிகளை வெளிப்படுத்துகிறது. இவைகளில் முதலாவது உற்பத்தியுடனும், ஏகபோக முதலாளித்துவத்தின் வளர்ச்சியுடனும் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியுடனும் தொடர்புடையது. இரண்டாவது பெருமளவு புதிய உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியினால் நிர்ணயிக்கப்படுகிற தேவை-அளிப்பினால் நிர்ணயிக்கப்படுகிறது.

முதற்கண்ணோட்டத்தில், பல்வகைப்படுத்தல் நிகழ்ச்சிப் போக்கு, உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி பற்றிய விதிக்கு முரணானதாக உள்ளது. எந்த தொழில் நுட்பத் தேவைகள், தனிச் சிறப்புத்திறன் பெறுவது பற்றிய விதியை

மதிக்காமல் விட்டுவிட்டு ஒன்றுடன் ஒன்று எந்த விதமான பொது அடிப்படையும் கொண்டிராத பல்வேறு தொழில் நுட்பங்களை ஒரு நிறுவனத்தின் கட்டமைப்புக்குள் கொண்டு வரமுடியும்? பல்வகைப்படுத்தலின் சாரம் ஒரு நிறுவனம் எந்த ஒரு வகையான உற்பத்தியிலிருந்தும் தன்னைச் சுதந்திரமானதாக ஆக்கிக் கொள்வதில்தான் இருக்கிறது எனத் தோன்றுகிறது. இவ்வாறாக இந்த விஷயத்தின் காரணங்களும், அதனுடைய அடிப்படைகளும் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியில் தேடிக்கண்டு பிடிக்கப்பட முடியாது. ஆனால் ஏகபோக மூலதனத்திற்குள்ளேயே, மேலாதிக்கம் செலுத்த வேண்டுமென்ற அதன் விருப்பத்திலும், உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கான உச்ச நிலை நிபந்தனைகளைக் கவனிக்காமல் விட்டுவிடுகிற பகுத்தறிவுக் கொவ்வாத ஏகபோகமாக்குவதிலும், காணப்பட முடியும்.

உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியுடன் இணைக்கப்பட்ட காரணங்களையும் பல்வகைப்படுத்துதல் நிகழ்ச்சிப் போக்கை மிகுதிப்படுத்துவதனுடன் இணைக்கப்பட்டுள்ள காரணங்களையும் நாம் இப்பொழுது விவரமாக ஆராய்ந்தறிவோம்.

1. முக்கியமாக பெரிய ஏகபோக வாணிப கழகங்கள் விரைவு படுத்தப்பட்ட உற்பத்திக்குப் பதிலீடு செய்வது, இது நிச்சயமாக ஒரு தனி ஆராய்ச்சிக்குரிய விஷயமாகும். ஆனால் ஒரு புதிய உற்பத்திப் பொருளை உருவமைப்பது உண்மையில் தொழில் நுட்ப அடிப்படையில் ஒருபடி முன்னேறுவது என்று பொருள்தானா. அல்லது பெரிய சர்வதேச நிறுவனங்களின் ஆராய்ச்சி இலாகாக்களி லிருந்தும் ஆய்வுக்கூடங்களிலிருந்து முடிவில்லா வெள்ளம் போல தொடர்ந்து கொட்டிக் கொண்டே இருக்கும் நவீன மாதிரி உருவங்களை விற்பனை செய்வதற்குக் கையாளப் படும் ஒரு தந்திரம் தானா என்று கேட்பது பயனுள்ளதாக இருக்கும். பெரும் வாணிபக் கழகங்களால் ஒதுக்கப்பட்ட

அதிகப்படியான நிதி இந்தப் புதிய பொருளை உற்பத்தி செய்வதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. இந்த நிகழ்ச்சிப் போக்கே கூட உற்பத்தி விரிவாக்கத் திட்டச் செயல் முறைக்குள் இயங்குகிற ஒரு வகையான பல்வகைப் படுத்தலேயாகும்.

2. தொழிலில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டின் வளர்ந்துவரும் முக்கியத்துவம் மற்றொரு காரணத்திற்காகப் பல்வகைப்படுத்தலுக்கு முக்கியமான தூண்டும் சக்தியாகக் கருதப்பட வேண்டும். ஒரு குறிப்பிட்ட திசையில் ஆராய்ச்சியை மேற்கொள்வது, பெரும் பாலான சமயங் களில் மற்றொரு துறையில் பயன்படுத்தக்கூடிய எதிர் பாராத விளைவுகளைத் தருகிறது. இதற்கு ஒரு சிறந்த உதாரணமாக விளங்குவது, பொறியியலிலிருந்து மருத்துவம் வரை எல்லையில்லாத நடைமுறை பயன்தரக்கூடிய லாசர்கள் ஆகும்.

பல்வகைப்படுத்தலுக்கும் புதியன காண்பதற்கும் உள்ளே நிலவுகிற உட்தொடர்பு. இந்த விஷயத்தை மற்றொரு கோணத்திலிருந்து அணுகினால் காணமுடியும்.

புதியன காண்பது பல்வகைப்படுத்தலை மிகுதிப்படுத்து கிறது என்று கூறுவதுதான் நியாயமானது என்னும் பல்வேறு திசைகளில் கிளைவிட்டுச் செல்லும் ஒரு வாணிப நிலையம் புதியன காண்பதற்கும் அவற்றைப் பயன் படுத்துவதற்கும் மிகுந்த வாய்ப்புகளை உடையதாக உள்ளது என்பதையும் கூறத்தான் வேண்டும். மேலும் அதற்கு ஏற்படும் எதிர்பாரா இடங்கள் மிகக்குறைவு என்பதனால், புதிய மேம்பாட்டுக் கருவிகளையும், சாதனங்களையும் சோதித்துப் பார்ப்பதற்கான வாய்ப்புகளும் மிகுதியாக உள்ளன. பல்வகைப் படுத்தப்பட்ட வாணிபக் கழகங்கள், ஒரு புதிய மேம்பாட்டில் ஏற்படுகிற தோல்வியை மற்றொரு மேம்பாட்டினால் ஏற்படுகின்ற வெற்றியினால் ஈடுகட்டிக் கொள்ள முடியும்.

3. உற்பத்திப் பொருள்களின் சராசரி ஆயுட்காலம் குறைக்கப்படுகிறது. இயல்பாகவே, ஒரு சில உற்பத்திப் பொருள்கள் வழக்காறற்றுப் போவதற்குக் கடந்து செல்லும் படிநிலைகள் ஒவ்வொரு பொருளுக்கும் மாறுபடுகின்றன. உதாரணமாக ஒரு சிலவகை உலோசங்கள் பல நூறு ஆண்டுகளாகச் சந்தையில் உலவி வருகின்றன. ஆனால் ஒரு சில பொருட்கள் சில மாதங்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டுப் பின்னர் மறைந்தொழிந்து விடுகின்றன. இவ்வாறாக நீண்டகாலம் பயன்படக்கூடிய பண்டங்களின் வாழ்க்கை, அவைகளுடைய தனிச் சிறப்பான தன்மைகள் இருந்த போதிலும், விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியால் நிர்ணயிக்கப்படுகின்றன, நிறைவு படுத்தப் படுகின்றன.

பெரிய சர்வதேச நிறுவனங்கள் பொருட்கள் விரைவில் வழக்காறற்றுப் போவதைத் தடுப்பதற்குப் பல நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. இவைகளில் பல்வகைப் படுத்தலுக்கு முக்கியமான பங்களிக்கப்பட்டுள்ளது. ஒரு பண்டத்தின் தொடக்கநிலை வாழ்வில் - ஆராய்ச்சி நிலையிலும்-உருவமைத்தல் நிலையிலும்-அது மிகவும் விலை மிகுந்ததாக இருக்கிறது. எனினும் பெரிய கம்பெனிகள் புதிய பொருளுற்பத்தியின் தொடக்கத்தில் அதை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ளனர் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். போட்டிக்கு உத்திரவாதமாக விளங்கும் தொழில் நுட்ப முன்னேற்றம் தொடர்பான பகுதிகளின் மீது கட்டுப்பாட்டை அவைகளால் இழந்து விட முடியாது. பெரிய நிறுவனங்கள் இந்த நிகழ்ச்சிப் போக்குகளைக் கட்டுப்படுத்துகின்றன. ஆனால் அவைகளுக்கு ஒரு பகுதி மட்டுமே, நிதி உதவியளிக்கிறது. நிதியின் சுமை பெருமளவிற்கு அரசின்மீதே சுமத்தப்படுகிறது. பல்வேறு வகையான பொருட்களைப் பற்றிய தொழில் நுட்ப ஆராய்ச்சி செய்வதற்கும், மேம்பாட்டிற்கும் பெரும் கம்பெனிகளுடன் அரசு ஒப்பந்தங்கள் செய்து கொள்கிறது. அது ஆராய்ச்சிக்குத் தேவையான பணத்திற்கு

உத்தரவாதமளிக்கிறது. அதனால் உண்மையான ஆராய்ச்சி ஏகபோகங்களால் அவைகளுடைய கட்டுப்பாட்டின் கீழ் நிறைவேற்றப்படுகின்றன. இவைகள் ஆராய்ச்சிகளை மிகவும் கவனமாகக் கண்காணிக்கின்றன. தங்களுடைய வகைதொகைகளையும், ஆற்றலையும், எந்தப் பொருளுற்பத்தி மிகவும் இலாபகரமானதாக்குகிறதோ அதில் அவைகள் செலுத்துகின்றன.

இந்தத் ''துணிகர முயற்சியில் ஈடுபட'', பெரும் நிறுவனங்கள் முதலீடு செய்வதற்குப் புதிய பகுதிகளை நாடுகின்றன. அதே நேரத்தில், இப்போது இலாபம் தராத மரபொழிந்துபோன பொருட்களை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுகிற கருவிகளை ஒழித்துக் கட்டிவிடுகின்றனர். இதுதான் பல்வகைப்படுத்தலில் உள்ள முக்கியமான செயலூக்கம் நிறைந்த சக்தியாகும். இம்மாதிரியான நிலையில் ''புதியன காண்பது என்பது'' தனிச்சிறப்பு வாய்ந்த ஒன்றாக இருப்பதைக் காட்டிலும் அனைத்துப் பொருளிலும் மாதிரி எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

4. விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் விளைவாக ஆயிரக்கணக்கான புதிய பொருட்கள் வளர்ச்சியுறச் செய்யப்பட்டிருக்கின்றன. எனினும், புதிய உற்பத்தி முறைகள் திட்டமிடப்பட்டுள்ளன. மேலும் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி புதிய தொழில்களைத் தோற்றுவித்துள்ளது. பெரிய தொழில் தொகுதிகளிடையே மாற்றங்களை விரைவு படுத்தியுள்ளது.

தேக்க நிலையுள்ள தொழில்களிலிருந்து மூலதனத்தின் போக்குகளை நாம் ஆராய்ந்தால், மூலதனம், புத்தம் புதிய தொழில் தொகுதிகளுக்கும், வேகமான தொழில் நுட்ப முன்னேற்றத்திலும், மேம்பாடடைந்த பொருட்களின் உற்பத்தியிலும் சிறந்து விளங்குகிற மரபு வழியான தொழில் தொகுதிகளுக்கும் தான் மாற்றப்படுகிறது-அதாவது அவைகளுடைய சிறப்பான கால இடைவெளியில் சென்று கொண்டிருக்கும் தொழில் தொகுதிகளில்தான்-என்ற கூற்று உறுதிப்படுத்தப்படுகிறது என்பதைக் காணமுடியும்.

தொழில் நுட்ப அடித்தளத்தில் மாற்றங்களும் புதிய உற்பத்தி சக்திகளின் தோற்றமும், மூலதனத்தின் அமைப்பு உருவங்களின் மீது குறிப்பிட்ட அடையாளங்களைத் தோற்றுவிக்கின்றன. மேலும்அது ஏற்ற வரலாற்றடிப்படையில் புதிய முதலாளித்துவ செல்வத்தின் உருவங்களைப் படைக்கிறது. இதுதான் பஞ்சாலைத் தொழில், பேருந்துத் தொழில், ஆகியவற்றின் நிலைமையும் வளர்ந்த இரயில்வேக்களின் நிலைமையுமாகும். இவைகளின் வளர்ச்சிக்காக கூட்டுப்பங்கு நிறுவனங்கள் தோற்றுவிக்கப்பட்டன. விரைவுபடுத்தப்பட்ட துறை தொடர்பான மாற்றங்கள் அமைப்பு முறை உருவங்களில் ஏற்ற மாற்றங்களைத் தோற்றுவிப்பதற்கு வழிசெய்கின்றன. இவ்வாறாக, பல்துறை சர்வதேச வாணிபகழகங்கள், இராட்சத நிறுவனங்களின் மூலம்இந்தக் கட்டமைப்பு மறுசீரமைப்பை நிறைவேற்ற முடியும். அது ஒரே நேரத்தில் தொழிலின் பல துறைகளில் பயன்படுகிறது. அத்தோடு வேறுபட்ட அமைப்புகளையும் உடையதாக இருக்கிறது. அவற்றின் காலத்தில் கூட்டுப்பங்கு கம்பெனிகளுடைய பருமன் (அளவு) உற்பத்தி சக்திகளின் மட்டத்திற்கு ஏற்பத் தகவமைத்துச் கொள்ளப்பட்டிருந்தது பல்துறை சர்வதேச ஏகபோகங்கள், பொருளாதாரத்தின் கட்டமைப்பு முழுமையும் மாற்றிக் கொண்டிருக்கிற உற்பத்தி சக்திகளின் வேகமான வளர்ச்சிக்கு ஏற்ப வேறுபடுத்தப்பட்ட கட்டமைப்புகள் மூலம் தங்களைத் தகவமைத்துக் கொண்டுள்ளன. முன்னர் நிலவிய உருவங்களை (கூட்டுப் பங்குக் கம்பெனிகள், நிறுவனங்கள்) எடுத்துக் கொண்டு பயன்படுத்துகின்றன. ஆனால் அவை இப்போது மிக அதிகமான சக்திவாய்ந்தவைகளாக விளங்குகின்றன.

உண்மையில் மரபு வழியான நிறுவனங்கள் தனித்தொழில்களில் விரிவடைந்திருக்கின்றன. ஆனால் அவை பல தொழில்களை தங்களுக்குள் அடக்கிக் கொண்டிருந்ததால் தங்களைப் பிடிப்பாற்றல் பங்கு நிறுவனங்கள் என்று அழைத்துக் கொள்கின்றன.

5. பல்வேறு தொழில்களில் செயலாற்றுகிற துணை நிறுவனங்கள் ஒரு தனி யுக்தியையும் மையப்படுத்தப்பட்ட சேவையையும் அடிப்படையாகக் கொண்டு பணியாற்றுகின்றன. (போக்குவரவு புள்ளிவிவரங்களை முறைப்படுத்துதல், விற்பனை செய்தல் முதலியன) அவை வாணிபக் கழகங்களின் வாழ்வில் மேலும் அதிகமான பங்குடையனவாக விளங்குகின்றன. அவைகளை ஒரு தனி உற்பத்தி நிகழ்ச்சிப் போக்காக இணைக்கின்றன.

6. பல்வகைப்படுத்தலின் ஒரு காரணம் குறிப்பிடப்பட வேண்டும். அது விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் தேவைகளால் விளக்கிக் கூறப்படமுடியும். ஒரு தொழிலில் உள்ள அமைப்பு முறை அதனுடைய திறமையின் மீது அதிகமான விளைவை ஏற்படுத்துகிறது என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மையாகும். அந்த அமைப்பு முறையே உற்பத்தி சக்திகளின் ஒரு கூறாக ஆகியிருக்கிறது. இன்றுள்ள அமைப்புகளுக்கான அடிப்படைத் தத்துவங்களில் ஒன்று தகவமைத்துக் கொள்தலும், மாற்றங்களுக்குள்ளாகத் தயாராக இருப்பதும்தான். மரபு வழியான தொழில்கள், ஒரே பொருளை மட்டுமே உற்பத்தி செய்வதற்குத் தங்களைத் தகவமைத்துக் கொள்கின்றன. அல்லது ஒரு தொகுதி பொருட்களை உற்பத்தி செய்வதற்கு மட்டும் தங்களைத் தகவமைத்துக் கொள்கின்றன அதன் விளைவாக தங்களின் மீது மாற்றங்கள் திணிக்கப்பட்டால் ஒரு துன்பம் நிறைந்த சூழ்நிலையில் இருப்பதைக் காண்கின்றன. எனவே பெரும்பாலான சமயங்களில் பெரும் நஷ்டங்கள் ஏற்பட்டாலும் மாற்றங்களை எதிர்க்கின்றன. வேகமான தொழில் நுட்ப மாற்றங்கள் நிறைந்த சகாப்தத்தில் எந்தப் பொருளையும் உற்பத்தி செய்வதற்கோ அல்லது விற்பனை செய்வதற்கோ தயாராக இருக்கிற புதிய அமைப்புகளின் உட்பிரிவுகள் அமைக்கப்படுகின்றன. அவ்வாறு செய்யும் போது மாறுவதற்கான இயல்பை அவைகளும் மேற்கொண்டு வளரும்படிச் செய்யப்படுகிறது.

சர்வதேசப் பல்வகைப்படுத்தப்பட்ட நிறுவனங்கள், அவைகளின் கிளை கொண்ட உற்பத்தியின் விளைவாகப் பன்முகம் கொண்டதாக ஆகின்றன. அந்த உற்பத்தியானது விற்பனை அமைப்புகளுடனும், நீதி தொடர்பான செயல் முறைகளுடனும், அவைகளுடைய அரசியல் செயல்முறை களுடனும் இணைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கம்பெனிகள் (தங்களுக்குத் தாங்களே நிதி உதவி செய்து கொள்ளக்கூடிய திறமை பெற்றிருப்பதால்) பெரும்பாலான சமயங்களில் வங்கிகள் ஆகிவிடுகின்றன. பல்வகைப்படுத்தல் வங்கி முறைக்கும், நிதிமூலதனத்திற்குமிடையில் உள்ள (இணைப்பு களை மாற்றுகிறது வங்கி முறைக்கும், தொழில் மூலதனத் திற்குமிடையில் உள்ள) எல்லைகள் மறைக்கப்படுவதும், நிதி மூலதனத்தின் வளர்ச்சியும், இந்த அமைப்பு முறையின் இடம் பெயர்தலையும் நெருக்கடிக்கு எளிதில் உட்படும் தன்மையையும் வலிமையுடையதாக ஆக்கியுள்ளன. இலாபத்தை உறுதிப்படுத்துவதற்குத் தங்களுடைய நிதியைப் பயன்படுத்துவதற்கு, இந்த சர்வதேச பல்வகைப் படுத்தப்பட்ட கம்பெனிகள் தங்களுடைய நாட்டிற்குள் நிலவும் வளர்ச்சியையும் சமநிலையை மட்டுமல்லாமல், உலகப் பொருளாதார முழுமையிலும் நிலவும் வளர்ச்சியை யும், சமநிலையையும் அபாயத்திற்குள்ளாக்க முடியும். தொழில்களுக்கிடையிலான போட்டியின் இயல்புமாறி யுள்ளது. அதற்கும் மேலாக, ஒரு குறிப்பிட்ட பொருளில், ஒரு தனித்தொழில் என்ற இனம் என்பதே இல்லாமல் போய்விட்டது. சர்வதேச பல்வகைப் படுத்தப்பட்ட கம்பெனிகள் நம் கண் முன்னாலேயே வளர்ந்துள்ள ஒரு அமைப்பு முறையை நமக்களித்திருக் கின்றன. சர்வதேச முதலாளித்துவ பொருளாதாரத்தின் மீதும் சோஷலிச நாடு களின் பொருளாதார வளர்ச்சியின்மீதும் அவைகளுடைய செல்வாக்கைக் குறைத்து மதிப்பிடக் கூடாது.

பல்வகைப்படுத்தலின் இயக்கு விசைகள் தேவையின் இயல்பிலும், சந்தையின் இயல்பிலும், மாற்றங்களுடனான தொடர்பில் செயல்படுகின்றன. அவை விருப்பத்தையும் நுகர்வையும் தேவையுடனும் சந்தையுடனும் உட்தொடர்பு

கொள்ளச் செய்கின்றன. இந்தத் திசையிலிருந்து பல்வகைப்படுத்துதலைத் தூண்டும் உணர்வுகள் ஒரு வகையில் தொழில் நுட்ப மாற்றங்களைச் சாரும். புதிய விருப்பங்களின் விளைவாகப் புதிய பொருட்கள் வெளி வருகின்றன. ஆனால் தொழில் நுட்பமாற்றங்கள், மாறிய நுகர்வின் தோரணைகளின் அடையாளங்களாகவோ, மாறிய சந்தைத் தோரணைகளின் வெறும் அடையாளங்களாகவோ இல்லை. மறு உற்பத்திப் பகுதிகளிடையே ஒரு இயக்கவியல் தொடர்பு நிலவுகிறது. சென்ற பத்தாண்டுகளில், வளர்ந்த முதலாளித்துவ நாடுகளில், நுகர்வுப் பாங்குகள் கீழ்க்கண்ட மாற்றங்களைக் காட்டியுள்ளன.

1. வாங்கும் சக்தியில் உயர்ந்துள்ளது என்பதற்கு அடிப்படையான தேவைகளின் நிறைவிற்குப் பிறகு மிக அதிகப்படியான பணம் பல்வேறு விருப்பங்களை நிறைவு செய்வதற்காகச் செலவிடப்படுகிறது என்பது பொருளாகும். இவை அடிப்படைத் தேவைகளிலிருந்து மிகவும் வேறுபட்டவையாகும். எனவே எளிதில் மாற்றங்களுக்குள்ளாகக் கூடியவை.

2. இந்த இரண்டாம்தரத் தேவைகள் தான் மிகவும் மாறுபடும் இயல்புடையவை. மேலும் அவை விளம்பரத்தால் பாதிக்கப்படக்கூடியவை. வாணிபக்கழகங்கள் அவற்றை ஊக்குவிக்கவும் அவற்றைக் கட்டுப்படுத்தவும் முயல்கின்றன.

3. நீண்ட நாட்கள் பயன்படக்கூடிய ஒரு வரிசைப் பொருட்கள் தினமும் நாம் பயன்படுத்தும் பொருட்களாக ஆகியிருக்கின்றன. அவைகளை ஒருவர் நுகர்வதை நிறுத்த முடியாது. உதாரணமாக வெட்டுக் கருவிகளின் தொகுதி ஒரு பொருளில் பார்த்தால் ஒவ்வொரு பொருளும் மற்றொரு பொருளுடன் போட்டியிடுகிறது.

ஒரு பொருளுக்குச் சந்தையில் காணப்படக்கூடிய எதிர்பாரா இடர்ப்பாடுகள், ஒரு நிறுவனத்தை அதனுடைய பல பொருட்களை உற்பத்தி செய்வதற்கு ஊக்குவிக்கிறது.

அது அதன் முறையில் சந்தையில் நிலவுகிற; போட்டியின் நிலைமைகளை மாற்றுகிறது. அதன் புதிய உருவம் கட்டமைப்புப் போட்டி—தோன்றுவதற்கு வழி செய்கிறது. வாணிபக்கழகங்கள், ஒரு தனியான பொருளின் வெளித் தொடர்பில்லாதவாறு ஒதுக்கிவைக்கப்பட்ட சந்தையில் போட்டியிடவில்லை. மாறாக உற்பத்திக் கட்டமைப்பு முழுமையுடனும் போட்டியிடுகின்றன. அவைகளின் போட்டியிடக்கூடிய திறமையின் மட்டம் அவைகள் தங்களுடைய கழகத்தை மறு கட்டமைப்பு செய்யக்கூடிய வேகத்தையும், பெரும்பாலும் பல்வேறு நாடுகளில் அமைந்திருக்கிற சந்தையின் குறிப்பிட்ட பகுதிகளில் நிலவுகிற நிலைமைகளைப் படித்தாராயும் வேகத்தையும் அவைகளுடைய நிலவியல், துறை, உற்பத்திக் கட்டமைப்பு களில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்பத் தங்களைத் தகவமைத்துக் கொள்ளக்கூடிய வேகத்தையும் பொருத்து நிர்ணயிக்கப்படுகிறது.

பல்வகைப்படுத்தப்பட்ட வாணிப நிலையங்களிடையே நிலவும் போட்டி, ஒரு கட்டமைப்புப் போட்டியாக இருப்ப தால், பல்வகைப்படுத்தும் நிகழ்ச்சிப்போக்கே, சந்தை விதி களையும், விலை உருவாக்கத்தையும், முதலாளித்துவப் பண்ட உறவுகளில் வெளிப்படும் இன்றைய உருவங்களையும் பாதிக்கிறது.

சில பூர்ஷ்வாப் பொருளாதார நிபுணர்கள், பல்வகைப் படுத்தப்பட்ட வாணிபக் கழகங்களின் வளர்ச்சியை, போட்டியை வலிமைப்படுத்தக்கூடிய ஒரு காரணியாகக் கருதுகிறார்கள். அவர்களுடைய கருத்துப்படி, பல்வகைப் படுத்தப்பட்ட வாணிப கழகங்களின் உற்பத்தியின் பல்துறை இயல்பு அவற்றின் சக்திகளைச் சிதறடிக்கிறது. எனவே தனிப்பொருள் சந்தையில் அதன் போட்டியிடும் வலிமையைக் குறைக்கிறது. இதில் ஓரளவு உண்மை இருப்பினும் நாம் இதை ஏற்றுக் கொள்ள முடியாது. பல்வகைப்படுத்தல், ஒரு முகப்படுத்துவதன் மட்டத்தைச் சீராக்க உதவவில்லை அல்லது தனிப்பொருட் சந்தையில் போட்டியை ஆதரிக்க

வேண்டுவன செய்யவில்லை. அது பொருளாதார வலிமையை மேலும் வளர்ப்பதற்கும் ஏகபோகங்களை பலமுள்ளதாக்கு வதற்கும் பயன்படக்கூடிய ஒரு புதிய வழிதான்.

இப்பொழுதுகூட நிறுவனத்தின் அளவைப் பெரிதாக்குவது அதனுடைய நம்பிக்கைக்குரிய தன்மையை உயர்த்துகிறது. அதற்குச் சாதகமான அடிப்படையில் மூலப் பொருட்களை கொள்முதல் செய்வதையும் தகவல் தொகுப்பு களை முறைப்படுத்துவதையும் எளிதாக்குகிறது. அதன் விளைவாக, ஆராய்ச்சிக்குப் பெரும் வாய்ப்புகள் அளிக்கப் படுகின்றன. செங்குத்தான இணைப்பாலோ, படுக்கையான இணைப்பாலோ, இடப்பெயர்வைத் தந்துதவ முடியவில்லை. ஆனால் செயல்முறைகளின் பலதுறைகளை இணைப்பது வியத்தகு இடப்பெயர்வை தருகிறது.

பல்வகைப்படுத்துதல் உற்பத்தி சக்திகளை (இம்மாதிரியான ஊகம், உண்மைக்குகந்ததாக இல்லை எனினும்) சிதறடிக்கிறது என யூகித்தாலும்கூட அது ஒரு பயனுள்ள இன்றைய நிலைக்கு ஏற்ற ஒருமுகப்படுத்தும் உருவமாக விளங்குகிறது. பல பொருட்களின் உற்பத்தியை ஒரு தொழிலில் ஒருமுகப்படுத்துவதன் மூலம் போட்டியை ஒருவரம்பிற்குட்பட்டதாக ஆக்கவோ அல்லது மாற்றவோ முடியும். பல்வேறு தொழில்களால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களிடையே போட்டியும், ஒரு தொழிலின் உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்திப் பொருட்களிடையே போட்டியும் வேறு வேறானவை. ஒரு சந்தையில் பெற்ற இலாபம், மற்றொரு சந்தையில் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடுசெய்ய உதவலாம். இவ்வாறாக ஒரு திறனுள்ள வாணிப நிலையம் வெளியேற்றப் படவேண்டுமானால் வெளியேற்றப்பட்ட வாணிப நிலையம் விற்கக்கூடிய மிகக்குறைந்த விலையைக் காட்டிலும் தன் விலையைக் குறைத்து விற்பதற்கு வேறு ஒரு சந்தையில் பெற்ற இலாபத்தை இங்கு பயன்படுத்தக் கூடிய ஒரு அமைப்புடன் போட்டியில் ஈடுபட்டிருந்ததன் விளைவு, அதுதான். மேலும், பல்வகைப்படுத்தப்பட்ட வாணிபக் கழகங்களின் உற்பத்தி சக்திகள் ஒரே நிறுவனத்தின்

சேவையில் ஒன்றிணைக்கப்படுவதால் சிதறடிக்கப் பட்டுள்ளன எனக்கருதப்பட முடியாது.

இதுவரை நாம், வேறுபடுத்தல் ஏகபோகங்களால் பயன் படுத்தப்படுகிற ஒருசாதனம் என்று காட்ட முயன்றிருக் கிறோம். அது ஏகபோகங்களாக்குவதன் உருவமாகவும், இயல்பூக்க மிக்க ஒரு சக்தியாகவும் விளங்குகிறது. பல்வகைப் படுத்துதல் போட்டியின் இயக்க இயலையும், ஏகபோகத்தின் இயக்க இயலையும் வெளிப்படுத்துகிறது. அது ஏகபோக மாக்குவதன் முழுமையான பயனுள்ள உருவமாக விளங்கு கிறது.

எந்தவித சந்தேகமுமின்றி, பல்வகைப்படுத்துதல் என்ற நிகழ்ச்சிப் போக்கு (குறிப்பாக கதம்பத்திரன் என்ற உருவத்தில்) ஏகபோகத்தின் கட்டமைப்பை உலுக்கியிருக் கிறது. அதை ஒழிப்பதற்காக அல்ல. ஆனால் அதை மீண்டும் கட்டுவதற்காகவேதான். பல்வகைப்படுத்துதல் அல்லது இன்னும் தனிச்சிறப்பாகக் குறிப்பிட்டுக் கூறினால், வேகமாகப் பல்வகைப்படுத்துதல் (கதம்பத்திரன்களின் தோற்றம்) தான், அதனுடைய போட்டியாளர்களால் விட்டுச் செல்லப்பட்ட விரிசல்களின் வழியாக மூலதனம் ஊடுருவக் கூடிய ஒரு வழி.

பெரிய நிறுவனங்களில் பல்வகைப்படுத்தல் நிகழ் வதற்குத் தூண்டுகோலாக விளங்குவனவற்றையும், சர்வதேச நிறுவனங்களில் பல்வகைப்படுத்தலில் முக்கியத்துவத்தையும், அதன் இடத்தையும்— குறிப்பாக முதலாளித்துவப் பொருளா தாரத்தின் செல்வாக்கிற்கு முக்கியமான கவனம் செலுத்திக் காட்ட முயன்றிருக்கிறோம்.

ஏகபோக மூலதனத்தைப் பொருத்தவரை இந்தக் காரணிகள் அனைத்திற்குப் பின்னாலும், அதே வேளை யிலும், ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்பட்ட நோக்கங்கள், தெளிவாகத் தெரிகின்றன. அவைகள் வளர்ச்சிக்கான விருப்பமும் — உறுதியான தன்மைக்கான விருப்பமுமே யாகும்.

வாணிபக் கழகங்களின் வளர்ச்சி விகிதத்திற்கும் அவை களின் பல்வகைப்படுத்தலுக்குமிடையே ஒரு உட்தொடர்பு நிலவுகிறது. பல்வகைப்படுத்துதல் பன்னாட்டு அசுரக்கழகங் களாக வாணிபக் கழகங்கள் விரிவடைவதற்கு இதுவரை விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளிலிருந்து விடுவிக்கிறது. "எந்த ஒரு கொடுக்கப்பட்ட பொருளுக்கும், ஒரு உச்சநிலை உற்பத்தி அளவு இருக்கலாம்"[1] அதற்குமேல் மிக அதிகமான உற்பத்திச் செலவின் காரணமாக, உற்பத்தி நியாயமற்றதாகப் போய் விடுகிறது. ஆனால் இந்த "உச்சநிலை" மட்டம் அந்த வாணிப நிலையம் முழுமைக்குமாக இருப்பதில்லை. துறை அடிப்படையில் பல்வகைப்படுத்தலும், நிலவியல் அடிப்படையில் பல்வகைப் படுத்தலும், நிறுவனத்தின் வளர்ச்சியின் வரம்புகளை மிக அதிகமாகப் பெருக்கி அதை அதிக அளவு நெகிழுந்தன்மை யுடையதாக ஆக்குகின்றன.

ஒரு நிறுவனம் பல்வகைப்படுத்தல் தொடங்கிவிட்டால், அது சந்தைக்குள் ஊடுருவுவதற்கு எடுத்துக் கொள்ளும் நேரத்தைக் குறைக்க முயல்கிறது. புதிய தொழிலை மேற் கொள்வதற்கான தேவையான அறிவைப் பெறமுயல்கிறது. ஒரு புதிய உற்பத்திப் பொருளை உருவாக்க முயல்கிறது. இம்மாதிரியான சூழ்நிலையில், இந்த வட்டத்தில் அல்லது இந்த உற்பத்தித் துறையில் மிகுந்த அனுபவம் உள்ள, சந்தையை மிகவும் நன்றாயறிந்திருக்கிற ஒரு நிறுவனத்தை வாங்குவதே மிகவும் சிறந்த வழியாக இருக்கும். இந்த வகையான வெளிப்புறப் பல்வகைப்படுத்துதல் ஏறத்தாழ அனைத்து சர்வதேச வாணிபக் கழகங்களாலும் மிகையாகப் பயன்படுத்தப் படுகிறது.

இம்மாதிரியான பல்வகைப்படுத்துதல் மிகவும் பயன் தருவதாகவும் இருக்கும். ஏனெனில் பொதுவாக மையப் படுத்துவதைப் போன்று அது வாழ்க்கைத்தர உயர்வின் மீது மட்டுமே முழுதும் சார்ந்திருக்கவில்லை. அது மூலதனம் மறுபகிர்வு செய்யப்படுவதை மட்டுமே காட்டுகிறது.

மொத்த மூலதனத்தின் முழுமையான வளர்ச்சியைக் காட்டவில்லை.

உட்புறப் பல்வகைப்படுத்தல், வெளிப்புறப் பல்வகைப்படுத்தலைக் காட்டிலும் குறைந்த வேகமுடையது. அதனுடைய கட்டமைப்பைப் படிப்படியாகப் பல்வகைப் படுத்தும் ஒரு நிறுவனத்தை நிர்வகிப்பது, அவசர அவசரமாக உருவாக்கப்பட்ட ஒரு கதம்பத்திரனை நிர்வகிப்பதைக் காட்டிலும் எளிதாக இருக்கும். வேகமாகப் பல்வகைப்படுத்தப்பட்ட நிறுவனங்களின் இந்த நிலைதான் அவைகளை எளிதில் ஆபத்திற்குள்ளாகும் நிலைக்கு ஆளாக்குகிறது. 1960 களில் நிகழ்ந்து, 1970 களில் ஏறத்தாழ மெதுவாக ஆகிப் பின்னர் நின்றுவிட்ட கதம்பத்திரன்கள் உருவாவதைத் தடுக்க முடியாத பேரலை, நின்று விட்டதற்கான காரணிகளில் இது ஒன்று எனலாம். கதம்பத்திரன்கள் என்னும் காற்றடைத்த பைகள் உடைந்து சிதறின. ஊக வாணிபத்தின் அடிப்படையில் தோற்றுவிக்கப் பட்ட வாணிப கழகங்களின் அதிசயிக்கத்தக்க வளர்ச்சியைச் சூழ்ந்திருந்த மேகமும் மறைந்தது. எனினும், பல்வகைப் படுத்தலை, அது தோற்றுவித்த பல கதம்பத்திரன்களுடன் சேர்த்துப் புதைத்துவிட வேண்டுமென்று நினைப்பது மாபெரும் தவறாகும்.

ஆகவே முடிவில் வாணிபக் கழகங்களின் வாழ்விலும், பணியிலும், குறிப்பாக பன்னாட்டு இணையங்களின் வாழ்விலும், பணியிலும், பல்வகைப்படுத்தலின் பங்கு என்ன என்ற கேள்விக்கு நாம்எவ்வாறு பதில் கூறலாம்? பல்வகைப் படுத்துதல் விரிவாக்கத்திற்கான வளர்ச்சிக்குத் தடையாக விளங்குவனவற்றை நீக்குவதற்காகவும், தனித் தொழில்களின் மற்றும் தேசிய பொருளாதாரங்களின்மொத்தத்தின்வளர்ச்சி தனிலிருந்து சுதந்திரமாக உள்ளதாக சர்வதேச மூலதனக் குவியலை ஆக்கவும், முடிவாக வடிவமைக்கப் பட்டவை யாகும்.

தேக்கம் நிறைந்த வளர்ச்சிக் காலத்தில், பொருளாதார இடர்களின் கட்டமைப்பு மாற்றங்களும் நிறைந்த காலத்தில் தேசிய பொருளாதாரத்திலும், உலகப்பொருளாதாரத்திலும் வளர்ச்சிக்கான வாய்ப்புகளும்,சமநிலைக்கான வாய்ப்புகளும் இலாபத்திற்கான வாய்ப்புகளும்,சாதகமாக இல்லாதபோது, ஏக போகங்கள் தங்களுடைய தனி வளர்ச்சியையும், இலாபத்தையும் உறுதியான தன்மையையும் பல்வகைப் படுத்தல்தான் உத்திரவாதம் செய்ய முடியும்.

## அடிக்குறிப்பு

1. ஈ. டீ. பென்ரோஸ், **பேசில்பேக் நிறுவன வளர்ச்சியின் தத்துவம்**, ஆக்ஸ்போர்டு, 1959, பக்கம் 98-99.

## ஜான் பிட்மான்

*யு. எஸ். ஏ. கம்யூனிஸ்ட் கட்சி பொலிட்பீரோ உறுப்பினர், உலக மார்க்சிஸ்ட் ரெவ்யூவின் ஆசிரியர் குழு உறுப்பினர்.*

# அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மீது விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் தாக்கம்

அமெரிக்கப் பொருளாதாரத்தின் நிலைபற்றி நமக்குக் கிடைக்கக்கூடிய புள்ளி விவரங்கள், 1980 களின் தொடக்கத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஒரு பெரும் நெருக்கடியில் பாதிக்கப்படும் எனத் தெளிவாகக் காட்டுகின்றன. முதன்மையான பல பொருளாதார நிபுணர்கள், அந்த நெருக்கடி உண்மையில் 1980 இல் அந்த நாட்டைத் தாக்குமென உறுதியாகக் கூறுகிறார்கள். சிலர் இன்னும் முன்னதாகவே அது தாக்கும் எனக் கூறுகிறார்கள். **பார்ச்சூன்** என்ற வியாபாரம் தொடர்பான செய்தித்தாள், பேட்டி கண்ட பொருளாதார நிபுணர்களில் முக்கால்வாசிப் பேர் ஒரு வீழ்ச்சியை எதிர்நோக்குகிறார்கள். 1979இல் அந்தச் செய்தித் தாளில் தன் கருத்துக்களை எழுதுபவர், "அடுத்த ஆண்டின் நடு அரைப்பகுதியில் உண்மையில் நின்று விடக்கூடிய உண்மையான வளர்ச்சியில் ஒரு படிப்படியான குறைவும்.... .... ............ 1980-ன் இரண்டாவது அரைப்பகுதியில் ஒரு சரிவும் ஏற்படாது என்று சொல்லமுடியாதவாறு, ஒரு நிலை நிச்சயமாக ஏற்படும்"[1] எனக் கூறுகிறார்.

நிர்வாகத்துறையில் பணியாற்றும் முக்கியமான உறுப்பினர்கள் அந்தக் கருத்தை ஏற்றுக் கொள்கின்றனர், மே. 8 ஆம் தேதியன்று, நிதியமைச்சசச் செயலாளரான மைக்கேல் ப்ளூமென்த்தால் பொருளாதாரச் செயல் முறைகளில் ஒரு வீழ்ச்சியின் தெளிவான அடையாளங்கள் காணப்படுகின்றன எனக் கூறினார். ஆனால் அவர் கார்ட்டர் நிர்வாகம் பின்னோக்கிய சரிவை மிகவும் விரைவுபடுத்தியுள்ளது என்று கூறுவதை மறுத்துள்ளார். அதே நாளில் ஜனாதிபதியின் கவுன்சில் இயக்குநரான பாரி பாஸ்வொர்த் (அந்தக் கவுன்சில் வேடிக்கையாக, கூலி, மற்றும் விலைகளை நிலையானவைகளாக்கும் கவுன்சில் என அழைக்கப்படுகிறது) பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு உருவாக்கப்பட்ட விலை மற்றும் கூலிகளின் உயர்வுகள் மீது தானாகவே கட்டுப்பாடுகள் விதித்துக் கொள்ளும் ஆறுமாத திட்ட நிகழ்ச்சிகளின் தோல்வியை ஒத்துக் கொண்டுள்ளார். தொழிலாளர் தாங்கள் ஏற்றுக்கொண்டவற்றை நேர்மையாக நிறைவேற்றியுள்ள அதே வேளையில், பல வாணிப கழகங்கள் அவைகளுடைய இலாபங்களை, மிக அதிகமான விலையேற்றத்தின் மூலம், உயர்த்திக் கொண்டுள்ளன என்று கூறினார்.

ஒவ்வொரு பொருளாதாரச் சுழலும் தன்னுடைய சிறப்பான இயல்புகளைக் கொண்டதாக உள்ளது என்றாலும், இன்றைய நிலைக்கும், முந்திய சூழல்களுக்கு முன்னர் நிலவிய இயல்புகளுக்குமிடையில் உள்ள குறிப்பிடத்தக்க அளவிலான ஒரே மாதிரியான தன்மை, சந்தேகமற்ற இன்றைய முன்னறிவிப்புக்கள் மீது மிகுந்த செல்வாக்குடையதாக இருக்கிறது. உதாரணமாக உணவுப் பொருட்களின் மீதும், சேவைகள், நுகர்வோர் பொருட்கள், ஆற்றல் மூலப்பொருட்களின் மீதும் இப்போதைய விலையேற்றமும், அதிகாரப் பூர்வமாக 6 மில்லியன் மார்க் அளவை எட்டியுள்ள-சில மதிப்பீடுகளின் அடிப்படையில் 10 மில்லியன் அளவை எட்டியுள்ள வேலையற்றோரின் எண்ணிக்கையும் 1972-1973 இல் நிலவிய சூழ்நிலையைஒத்ததாக இருக்கின்றது

1974-1975 நெருக்கடியை ஏற்படுத்திய காரணிகள்-1929-1933 ல் நிகழ்ந்த பெரிய பொருளாதார மந்த காலத்திலிருந்து அதற்குப் பின்னர் தோன்றிய பொருளாதார மந்தங்களில் மிகவும் ஆழமான மிகுந்த துன்பங்களை விளைவித்த நெருக்கடி-மிக அதிகமான வேலையில்லாத் திண்டாட்டமும், பெரும் பணவீக்கமும்தான். இன்றைய பணவீக்கத்தின் விகிதம் அதிகாரப் பூர்வமாக வெளியிடப்பட்ட, குறைத்துக் கூறப்பட்ட மதிப்பீட்டின்படி 8 லிருந்து 8.5 சதவிதமாகும். அதிகாரப் பூர்வமில்லாத, குறிப்பாக தொழிற்சங்கம் போன்ற நிறுவனங்களின் கணக்குப்படி 13 லிருந்து 15 சதவிகிதமாக இருக்கும் எனக்கூறும் புள்ளிவிவரங்கள் உள்ளன. இந்தப் பணவீக்க நிகழ்ச்சிப்போக்கின் கடுமையை நீக்க அரசு ஏகபோக மூலதனம் மேற்கொண்ட நடவடிக்கைகள் விரும்பிய பலனைத்தரவில்லை.

நிர்வாகத்தினால் பின்பற்றப்பட்ட நடவடிக்கைகளான பணத்தையும், கடன் வசதிகளையும் "மிகுதியான விலை"யுள்ளதாக வைத்திருக்கவும், விலை, கூலி ஆகிய இரண்டின் கொள்கைகளுக்கும் அடிப்படையாக விளங்கிய வருமானங்கள் பற்றிய கொள்கையும், இராணுவத் துறையல்லாத அரசுத்துறை செலவுகளின் மீது கட்டுப்பாடுகளும்,- பணவீக்கத்தைத் தடுப்பதற்குப் பயனற்றவை என நிரூபித்துவிட்டன என்று யு. எஸ். வாணிப செயலாளரான ஜுவானிடா கிரெம்ஸ் ஒத்துக் கொள்கிறார். பணவீக்கத்தின் மட்டம், நாம் எதிர்பார்த்ததைக் காட்டிலும் அதிகமானதாகவே இருந்தது என க்ரெப்ஸ் கூறினார். நிர்வாகம் முன்னர் 7.5 சதவிகித வளர்ச்சியை அறிவித்தது ஆனால் அதன் முன்னறிவிப்புகள் மறுபார்வை செய்யப்பட்டு உயர்வானதாக அறிவிக்கப்பட வேண்டும் என்று அந்த அம்மையார் கூறினார்கள்.

ஆகவே பொருளாதாரத்தின் மீது அரசு தன் செல்வாக்கைச் செலுத்தக்கூடிய பொருளாதாரக் கொள்கைகளின் தொலைநோக்கு, முறைகள் பற்றி யு. எஸ். ஆட்சி வட்டாரங்களில் ஒரு பொதுக்கருத்து நிலவவில்லை.

என்பதையும் நாம் காணமுடியும். உதாரணமாக 1979 மே 11 இல் கார்ட்டருடைய பொருளாதாரக் கவுன்சிலின் ஆலோசகர்களாக விளங்கிய மிகப்பெரிய வாணிபக் கழகங் களின் நிபுணர்கள், அதே ஆண்டில் தொடங்கி 6 மாதங் களுக்கும் 9 மாதங்களுக்கும் இடையில் ஒரு மிதமான விலை மந்தம் ஏற்படும் என முன்னறிந்து கூறியிருந்தனர். மொத்த தேசிய உற்பத்தி ஒரு சதவீதம் குறையும் என எதிர் பார்த்தனர். நிர்வாகத்தினால் முன்னறிவக்கப்பட்ட 2 சதவிகித வளர்ச்சிக்குப் பதிலாகப் பொதுவான பொருளாதார வளர்ச்சி வீகிதம் 0.6 சதவிகிதமாகவே இருக்குமெனக் கூறினர். சில்லறை விற்பனை விலையில் பொதுவான ஏற்றம் 9.5 சதவிகிதமாக இருக்குமென மதிப்பிடப்பட்டது. இது ஒரு வேளை 1980இன் தொடக்கத்தில் ஆரம்பிக்கக்கூடிய ஒரு மிதமான ஆனால் தொடர்ந்த செயல்முறையால் பின்பற்றப் படும் எனப் பொருளாதார நிபுணர்கள் முன்னறிந்து கூறினர்.

இந்த முன்னறிவிப்புகள், தெளிவாகவே, ஒரு சார்பான, மிகுதியான அளவு தன்னம்பிக்கையுள்ள மதிப்பீடுகளாக இருந்தன. 1980 ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் ஆண்டு என்பதையும் அப்போது நிர்வாகத்தின் அனைத்து இலாக்காக்களும் மீண்டும் தேர்ந்தெடுக்கப் படுவார்கள் என்பதையும் நாம் நினைவில் வைத்துக் கொள்வது இன்றியமையாதது. அண்மை மாதங்களில் வாக்காளர்கள், உயர்ந்துகொண்டேபோகும், பணவீக்கத்தையும் பெருகி வரும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் பற்றிக் கவலை தெரிவித்து வருகின்றனர். ஏன் அரசு ஏகபோக கட்டுப்பாடு இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் தோல்வி கண்டது என்பதை அந்தத் தேர்தல் பிரச்சாரத்தின்போது அவர்கள் அறிய விரும்புவார்கள் என்பது உறுதிதான்.

எம்முடைய கருத்தில் அமெரிக்கப் பொருளாதாரத்தின் வளர்ச்சி பற்றிய பகுப்பாய்வு இரண்டு முடிவுக்கு வேண்டிய விவரங்களைத் தருகிறது. முதலில் யு. எஸ். சில் உள்ள அரசு

ஏகபோக ஆட்சி வட்டாரங்கள் பிரதிநிதிகள் முதலாளித்துவ முறையிலேயே நம்பிக்கையில்லாதவர்களாக இருக்கிறார்கள் அல்லது குறிப்பிட்ட காலங்களில் அதில் தோன்றுகிற நெருக்கடிகளைத் தடுக்கும் திறனற்றவர்களாக இருக்கிறார்கள். இரண்டாவது, விஞ்ஞான - தொழில் நுட்பப்புரட்சி நிகழ்ந்து கொண்டிருக்கும் காலத்தோடு இணைந்ததாகவுள்ள காலத்தில் பொருளாதாரம் மேலும் உறுதிபற்றதாக ஆகிவிட்டிருந்தது.

பிந்திய முடிவு, முதலாளித்துவ மறு உற்பத்தியின் மாறிய இயல்பினால் தெளிவாகிறது. இரண்டாம் உலகப் பெரும்போர் முடிந்து 35 ஆண்டுகளில் யு. எஸ். ஆறு பொருளாதார நெருக்கடிகளைக் கண்டிருக்கிறது. ஒருவர் அவைகளை எப்படி அழைத்தாலும் சரி—"குறைந்த வேகம் உடைணகாலம்" என்றோ "மந்தம்" ஆன காலம் என்றோ, கீழ்நோக்கிய சரிவு வீழ்ச்சி என்றோ அழைத்தாலும் சரி—மார்க்ஸ் கூறிய நான்கு பெரும்படி நிலைகளை — அதாவது நெருக்கடி மந்தம் வீழ்ச்சி - மீட்சி. உயர்வு என்ற நான்கு பெரும் படிநிலைகளைக் கடந்துதான் சென்றுள்ளன. இந்த நிலைகளுக்கு இடையிலுள்ள வேறுபாடுகள் மங்கிப்போய் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது ஆகும். மந்தகால இடைவெளியும் மீட்சிக்கால இடைவெளியும் சுருங்கி விட்டுள்ளன. அதே வேளையில் நெருக்கடியின் திடீரெனத் தோன்றும் இயல்பு, இப்போது விதிவிலக்காகவே கருதப்பட வேண்டும். விலைஉயர்வுக் காலகூறு, மீட்சிக் காலக் கூறை மிஞ்சுவது அரிதாகும். இன்று ஏழாவது நெருக்கடி தோன்றுவதற்கான அனைத்து அடையாளங்களும் தெளிவாகத் தெரிகின்றன.

போருக்குப்பிந்திய காலத்தில் ஒவ்வொரு சூழலும் நிலவிய காலம் ஐந்தாண்டுகளாக இருந்தது. இந்தக்கால இடைவெளி விஞ்ஞானம் ஒரு பண்பியல் அடிப்படையிலான தூண்டுதலை மேற்கொள்வதற்கு தேவையான காலத்துடன் இசைவானதாகவுள்ளது. இந்த முன்னேற்றம் தொழிற்

சாலைகளால் மேற்கொள்ளப்படுவதற்கு அதைக் காட்டிலும் குறைந்த காலமே தேவைப்படுகிறது. 1940 களிலிருந்தும் 1950 களின் தொடக்க காலத்திலிருந்தும், அவைகள் பொருளாயத உற்பத்தியில் அடிப்படையான பெரும் செல்வாக்குடையவையாக இருப்பதால் அவை விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சி என அழைக்கப்படுகின்றன.

ஐந்தாண்டுகளுக்கொருமுறை ஏற்படும் பொருளாதாரச் சுழல் புதிதான ஒன்றாகப் பொதுவாகக் கருதப்படுகிறது. சென்ற நூற்றாண்டின் முதல் அரைப்பகுதியில், ஒரு சுழலின் காலம் 11 ஆண்டுகளாக இருந்தது. ஆனால் இரண்டாவது அரைப்பகுதியில், 8.5 ஆண்டுகளாகக் குறைந்திருந்தது. இரண்டாவது உலகப் பெரும்போருக்கு முந்திய 20 வது நூற்றாண்டில், அது 7 ஆண்டுகளாக மேலும் சுருங்கியது. ஆனால் இப்பொழுதோ ஐந்து ஆண்டுச் சுழல்களைத்தான் நாம் காண்கிறோம்; அல்லது யு. எஸ். கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளரான கஸ் ஹால் வரையறை செய்திருப்பதைப்போல ஒன்றுக்குப்பின் ஒன்றாக வரும் தொடர்ச்சியான சுழலைத்தான் நாம் காண்கிறோம். ஒவ்வொரு நெருக்கடியும், கோடிக்கணக்கான மக்களுக்கு, மிகுதியான பேரிடர்களையும், துன்பங்களையும் அவலநிலையையும் தோற்றுவிக்கிறது. சிறிய வியாபாரிகளையும் நடுத்தர வியாபாரிகளையும் அழித்தொழிக்கிறது. மேலும் அது உற்பத்தியையும், மூலதனத்தையும் ஓரிடத்தில் மிகுதியாகக் குவிவதையும், அதை மையப்படுத்துவதையும் மிகுதியாக்குகிறது.

முதலாளித்துவ மறுஉற்பத்தி நிகழ்ச்சிப்போக்கில் ஏற்படும் இந்த மாற்றங்களுக்கெல்லாம் விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியே காரணம் எனக்கூறுவது நிச்சயமாகத் தவறாகும். இது உற்பத்தியின் மீது விஞ்ஞான-தொழில் நுட்பப்புரட்சியின் விளைவை வரம்பற்றதாக்குவது ஆகும். அமெரிக்கப் பொருளாதாரத்தின் மீது, முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியில் மூன்றாவது படிநிலையின்போது காணப்பட்ட, காலனி ஆட்சியின் அழிவு, சென்ற காலத்தில் காலனி ஆட்சிக்கு உட்பட்டிருந்த சில நாடுகளின்

முதலாளித்துவமற்ற பாதை வளர்ச்சி, முதலாளித்துவ உலகத்தில் சட்டாம்பிள்ளை நிலையை அமெரிக்கா இழந்திருப்பது, அமெரிக்க விரிவாக்கக் கொள்கைக்கு எதிராக மிகவும் வெற்றிகரமாக எதிர்த்து நிற்கும் முன்னாளில் தோல்வியுற்ற நாடுகளின் புத்துயிர்ப்பு ஆகியவற்றின் தாக்கத்தையும் ஒருவர் கருத்தில் கொள்வது மிகவும் இன்றியமையாதது ஆகும். முடிவாக—எல்லாவற்றிற்கும் மேலான நிகழ்ச்சிப் போக்கைப் பற்றியும் அதாவது உலக புரட்சிகர நிகழ்ச்சிப்போக்கின் மிக முக்கியமான பகுதியாக விளங்கும் சோஷலிச சமுதாயத்தின் தோற்றத்தையும், ஒன்றிணைப்பையும் உலக வளர்ச்சியின் போக்கை நிர்ணயிப்பதில், இரண்டு அமைப்புமுறைகளுக்கிடையில் தீவிரமடைந்துவரும் போராட்டத்தில் சோஷலிச நாடுகளின் பங்கு வளர்ந்து வருவதையும்-நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். முதலாளித்துவ மறுஉற்பத்திச் சுழலை இவை அனைத்தும், விரைவடையச் செய்யவும், ஆழமாக்கவும் முனைப்புற்றன.

போருக்குப்பிந்திய காலத்தில் நிகழ்ந்த ஆறுசுழல்களில், முதலாளித்துவ மறுஉற்பத்திக்கும் மூலதனத் திரட்சிக்கும் இடையேயுள்ள உட்தொடர்பைக் காணமுடிகிறது. மூலதனம் மிகுதியாக உற்பத்தி செய்யப்படுவதும், பண்டங்கள் மிகுதியாக உற்பத்தி செய்யப்படுவதும், வரப்போகும் சுழலில் நெருக்கடிக்கான முன் நிபந்தனையாகவும், பின்வரும் வீழ்ச்சிக்கான முன் நிபந்தனையாகவும் திகழக்கூடும். ஆனால் மூலதனம் மிகுதியாகுவது (வரப்போகும் அமெரிக்க கம்யூனிஸ்ட் கட்சியின் 22 வது தேசிய காங்கிரசின் தீர்மானத்தின் முன்வரைவில் இந்த மூலதனக்குவியல் 5,000,000 மில்லியன் டாலராகக் கணக்கிடப்பட்டிருக்கிறது) உழைக்கும் மக்கள் நுகர்வோர் பொருட்களை வாங்குவதை ஒரே சமயத்தில் பாதிக்கிறது. பணவீக்கத்தின் வளர்ச்சி, தொழில் தொகுதி சேமப்படை, இப்போது வேலையில்லாமல் இருப்பதுடன் இனி எந்தக் காலத்திலும் வேலைபெறும் வாய்ப்பே இல்லாத பட்டாளம் ஆகியவற்றை ஒட்டி

இந்த நிகழ்ச்சிப்போக்கு நிகழும். இந்த நிகழ்ச்சிப் போக்கானது தன்னுடைய லாபத்தைப் பெருக்குவதற்கும், நிதி ஆதிக்கக்குழுவின் தலைமையை வலுப்படுத்திக் கொள்வதற்கும், அரசு ஏகபோக மூலதனம் மேற்கொள்கிற முயற்சிகளைப் பிரதிபலிக்கிற உழைப்பைத் தீவிரப்படுத்துவதையும், பிற்போக்கான வரி அமைப்பு முறையை நடைமுறைப்படுத்துவதையும், கடன் சுமையை மிகுதியாகப் பெருக்குவதையும் அதிக அளவில் உயர்த்துகிறது.

இந்தக் கூற்றுகளை மெய்ப்பிக்க புள்ளி விவரங்கள் உள்ளன. உதாரணமாக உண்மையான கடன் வளர்ச்சியைப் பற்றிய புள்ளி விவரங்கள் உள்ளன. அரசின் மொத்தக் கடன்களும், வாணிபக் கழகங்களின் மொத்தக்கடன்களும், மக்கள் தொகையின் மொத்தக் கடன்களையும் தான் அவை குறிக்கின்றன. 1960 இல் மொத்தக்கடன்கள் ஒரு டிரில்லியன் டாலராக இருந்தது. இப்போது அது ஐந்து டிரில்லியன்களை நெருங்கிக் கொண்டிருக்கிறது. இந்தப் பெருக்கம் மட்டுமே கூட, அரசு ஏகபோக முதலாளித்துவம் அது உற்பத்தி செய்யும்பொருட்களை விற்பனை செய்ய இயலாதிருப்பதையும் மக்கள் தொகையின் இன்றைய பயனுள்ள தேவைகளை அடிப்படையாகக் கொண்டு பெறப்பட்ட பணத்தின் பெரும் பகுதியை மூலதனமாக மாற்றுவதற்கு இயலாதிருப்பதையும் பிரதிபலிக்கிறது. ஆகவே இது உழைக்கும் மக்களின் வருங்கால ஊதியங்களை இழக்கும்படி செய்துதான்—அதைக் கைகூடச் செய்யமுடியும். ஏகபோகங்களும், அரசும், பொருளாதாரத்தை மீட்சிப் படிநிலையை நோக்கிச் செலுத்தவும், ஒரு உயர்வைக் கொண்டுவரவும் பயன்படுத்துகிற கடன் வழங்குமுறை இப்போது சந்தையின் திறனை மிகுதியாகக் குறைக்கிறது.

அரசின் பிற்போக்கான வரிக்கொள்கையைப் பொருத்து வரையும், உழைக்கும் மக்களின் பயனுள்ள தேவைகளின் மீது அது கொண்டுள்ள செல்வாக்கும், யுஎஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் பொருளாதாரக் கமிஷன் வெளியிட்டுள்ள மதிப்பீட்டின்படி, தொழிலாளர்களால் செலுத்தப்படும்

நேர்முகவரிகளும் மறைமுகவரிகளும், அண்மைப் பத்தாண்டு களில் பல மடங்கு உயர்ந்துள்ளன. அது ஓராண்டிற்கு 400, 000 மில்லியன் டாலராக உள்ளது. அதாவது கூலி மற்றும் ஊதியங்களின் மொத்தத்தின் 37 சதவிகிதமாக உள்ளது. 'எக்கனாமிக் நோட்ஸ்' என்ற செய்தித்தாளில் கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்களின்படி 1945 இல் பெடரல் வரவுசெலவுத் திட்டத்தின் 40 சதவிகிதம் தொழிலாளிகளின் பைகளிலிருந்து பிடுங்கப்பட்டது. இன்று அது ஏறத்தாழ 61 சதவிகிதமாக உள்ளது. அதற்கு மாறாக வாணிபக் கழகங்களும், பெரும் பணக்காரர்களும் கொடுக்கும் மொத்த வரிகளின் அளவு 1945 இல் 60 சதவிகிதமாக இருந்தது. இன்று அது 39 சதவீதமாகக் குறைந்துள்ளது. இந்த இடைவெளி வருமான வரித்துறையில் மிகுதியானதாக உள்ளது. 1945இல் 41 சதவிகிதம் வரியாகக் கொடுத்த பணக்காரர்கள் இப்பொழுது 22 சதவிகிதமே கொடுக்கிறார்கள். ஆனால் அப்போது 59 சதவிகிதமே வரிகளாகச் செலுத்திய தொழிலாளர்கள் இப்பொழுது 78 சதவிகிதம் செலுத்துகிறார்கள்.[2]

வரிகளாகச் செலுத்தப்படுகிற 37 சதவிகிதத்துடன் கூலியில் 21 சதவிகிதமாக உள்ள கடன்களுக்குச் செலுத்தப் படும் பணத்தையும், தவணைக் கடன்களுக்குச் செலுத்தப் படும் பணத்தையும், தவணைக் கடன்களுக்குச் செலுத்தப் படும் வட்டியையும், ஒத்திக்கடன்களுக்காகச் செலுத்தப்படும் வட்டியையும், தேய்மானத்திற்காகச் செலுத்தப்படும் பணத்தையும்-சேர்த்தால் உழைக்கும் மக்களின் ஊதியத்தின் ஏறத்தாழ ஐந்தில் மூன்றுபங்கு தவிர்க்க முடியாத செலவு களான வரிகள், தவணைக்கடன், அவற்றிற்கான வட்டி ஆகியவற்றால் விழுங்கப்பட்டு விடுகின்றது.

இதனுடன் அரசு ஏகபோக மூலதனம் பணத்தை அச்சிட்டு வெளியேற்றும் கருவியாகப் பயன்படுத்தும் பணவீக்கத்தின் தாக்கமும் இத்துடன் சேர்க்கப்படவேண்டும். பணவீக்கம் தான் இன்று மக்களின் முதல் எதிரியாக

ஆகிவருகிறது. உழைக்கும் மக்களின் உண்மை வருமானத்திற்கும் பெயரளவு வருமானத்திற்கும் உள்ள வேறுபாட்டில் நாம் அதன் விளைவுகளைக்காண முடிகிறது. பதினைந்து ஆண்டுகளில் 1947 லிருந்து 1962வரை) சராசரி ஓராண்டிற்கு உழைக்கும் ஒரு மணி நேரத்திற்குரிய உண்மையான ஊதியம் 2.5 சதவிகிதம் உயர்ந்துள்ளது. இந்தக்கால இடைவெளியான பதினைந்து ஆண்டுகளில் 9 ஆண்டுகளில், நுகர்வோர் பொருட்களின் சராசரி விலை மட்டம் 1.5 சதவிகிதமும் அதற்குச் சற்று குறைவாகவுமே உயர்ந்தது. 1947 லிருந்து 1962 வரையுள்ள காலத்தில் ஆண்டுச் சராசரி விலைகளின் உயர்வு 2 சதவிகிதமாகவே இருந்தது.

1962 க்கும் 1976 க்கும் இடைப்பட்ட காலத்தில் குறிப்பிடத்தக்க ஏற்றத்தாழ்வுகள் தோன்றின. 1966 இல் கூட நுகர்வோர் பொருட்களின் விலை மட்டம், 1962 இல் நிலவிய விலைமட்டத்தைக் காட்டிலும் மிகுதியாகவே இருந்தது. முக்கியமாக அமெரிக்க ஐக்கிய நாடுகள் வியத்நாம் மீது தொடுத்திருந்த ஏகாதிபத்தியப் போரின் விளைவாக, ஒரு பணவீக்கத் தாண்டுதல் ஏற்பட்டிருந்தது. 1962-1976 இல் நுகர்வோர் விலைகளில் சராசரி ஆண்டு உயர்வு 4.6 சதவிகிதமாக இருந்தது. "அரசியல் விவகாரங்கள்" என்ற கொள்கை விளக்க ஏட்டில் நுகர்வோர் விலைகளின் குறியீடு 1967 இல் 3 சதவிகிதமாகவும், 1968 இல் 4 சதவிகிதமாகவும், 1969 இல் 5 சதவிகிதமாகவும், 1970 இல் 6 சதவிகிதமாகவும், 1971 இல் 4 சதவிகிதமாகவும், 1973 இல் 9 சதவிகிதமாகவும், 1974 இல் 11 சதவிகிதமாகவும், 1975 இல் 9 சதவிகிதமாகவும், 1976இல்5.8 சதவிகிதமாகவும், 1977 இல் 8 5 சதவிகிதமாகவும், 1978இல் 9 சதவிகிதமாகவும் உயர்ந்துள்ளன என்று குறிப்பிட்டுள்ளது. ஆகவே சென்ற பத்தாண்டுகளில் பணவீக்கத்தின் வேகமான வளர்ச்சி, எவ்வித சந்தேகமுமில்லாமல், உண்மை வருவாய்களைக் குறைக்கும் போக்குடையதாகவே இருந்து வந்துள்ளது.[8]

முன்னரே நான் வலியுறுத்திக் கூறியதைப்போல் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தொழிலாளிகளின் வாழ்க்கைத் தரம் குறைந்ததற்கான பொறுப்பு, விஞ்ஞான - தொழில் நுட்பத்தின் மீது சுமத்தப்படக்கூடாது உற்பத்தியிலும், நிர்வாகத்திலும் விஞ்ஞான-தொழில் நுட்பத்தின் பங்கினால் ஏற்பட்ட விளைவு இல்லை. விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சி தன் பணியை சோஷலிசத்தின் கீழ்த்தான் நிறைவேற்றமுடியும். ஆகவே சமூக அமைப்பு முறையில்தான் துன்பங்களுக்கான காரணங்கள் உள்ளன. அரசு ஏகபோக மூலதனத்தின் முரண்பாடுகள் அனைத்தையும், விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சி மிக அதிகமான அளவு தீவிரமடையச் செய்கிறது. மூலதனக் குவியலுக்கும், நுகர்வுக்கும் இடையேயுள்ள முரண்பாட்டைக் கூர்மையானதாக ஆக்குவதன் மூலம் மறு உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கின் மீதும், மூலதனக் குவியலின் மீதும், அது ஒரு விளைவை உண்டாக்குகிறது.

விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சி அமெரிக்காவில் சமூக உறவுகளின் மீது செலுத்தும் செல்வாக்கையும், அரசு ஏகபோக மூலதனத்தின் வளர்ச்சியின் மீது செலுத்தும் செல்வாக்கையும் பொருத்தவரை, என்னுடைய கருத்தில் மிகவும் குறைவான கவனமே செலுத்தப்படுகிறது. அதனால் ஏற்படும் விளைவுகளில் ஒன்றுக்கு உங்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சி தொழிலாளி வர்க்கத்தின் கட்டமைப்பின் மீது செலுத்தும் செல்வாக்கைப் பற்றி ஏராளமாகச் சொல்லப்பட்டுள்ளது. தானியக்கமாக்குவதன் விளைவைப்பற்றியும் கம்ப்யூட்டர்களை அனைத்துத் துறைகளிலும் புகுத்துவதன் விளைவைப் பற்றியும், கல்வி முறையின் மீது அது செலுத்தும் செல்வாக்கைப் பற்றியும், தொழிலாளர்வர்க்கத்திற்கு அறிவு மிகுந்த தொழில்கள் என்றழைக்கப்படும் மிகுந்த திறமை வாய்ந்த தொழில்களுக்குரிய பயிற்சி அளிப்பது பற்றியும், ஏராளமாகக் கூறப்பட்டுள்ளன. நாங்கள் விஞ்ஞான—

தொழில் நுட்பப் புரட்சி, இளம் தலைமுறையினர் மீது செலுத்தும் செல்வாக்கைப் பற்றியும் கூறியுள்ளோம். ஆனால் உழைக்கும் பெண்கள் பற்றிப் போதுமான அளவு பேசப்படவில்லை, தேசிய மற்றும் இன வேறுபாடுகளுக்கு உட்படுத்தப்படுகிற தேசிய சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த உழைக்கும் மக்களைப்பற்றியும் போதுமான அளவு நாம் ஆராய்ந்து கூறவில்லை.

பன்னாட்டுத் தொழிலாளி வர்க்கத்தைச் சேர்ந்த மேலே கூறப்பட்ட பகுதியினர் விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் விளைவாக மிகப் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளனர். உற்பத்தி உறவுகளை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தி நிகழ்ச்சிப்போக்கில் சமமில்லாத உற்பத்தி உறவுகளால் தோற்றுவிக்கப்படுகிற, நிலவுகிற சமூக சமத்துவமற்ற தன்மைகள் நிரந்தரமானதாக்கப்படுகின்றன. மிக அதிகமான அளவு பெண்களிடையேயும், தேசிய சிறுபான்மையினரிடையேயும், தொழிற்சாலைக்குரிய சேமப்படை—அதாவது வேலையில்லாதோரிடையேயும் ஒருவேலையைப் பெறும் முயற்சியில் ஈடுபட்டு அனைத்து நம்பிக்கையையும் இழந்தவர்களிடையேயும் மட்டுமல்லாமல் சமமான நிலைகளுக்கான இயக்கத்தையும், அனைத்துத் தொழிலாளர்களுக்கு வாய்ப்பையும், நீதிமன்றத் தீர்ப்புகளின் மூலம் மாற்றச் செய்யப்படும் முயற்சிகளிலும் இது தெளிவாகக் காட்டப்படுகிறது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் மற்றொரு விளைவாக நான் வலியுறுத்திக்குறிப்பிட விரும்புவது, தொழிலாளி வர்க்கம் முற்போக்கானதாக்கப்படுவதும் புரட்சிகரமானதாக ஆக்கப்படுவதும்தான்-இதுமெதுவான, ஆனால் நிச்சயமான ஒரு நிகழ்ச்சிப் போக்காகும். இதற்கான சான்றுகள், இன்றைய தொழிற்சங்கங்களின் வளர்ச்சியிலும், ஜனநாயக சக்திகளின் வளர்ச்சியிலும் காணமுடியும். ஆகவே அமெரிக்க ஐக்கிய நாடுகளில் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின்

விளைவை, சோஷலிசத்துக்கான புறவய, தொழில் நுட்ப முன் தேவைகளை அரசு-ஏகபோக மூலதனம் தயார் செய்வதை விரைவுபடுத்துவது என்றும், ஒரு சோஷலிசப் புரட்சியை நிறைவேற்றுவதற்கான அகவய சூழ்நிலைகளைத் தூண்டுவது என்றும் வரையறை செய்யலாம்.

## அடிக்குறிப்புகள்

1. பார்ச்சூன், 29, ஜனவரி, 1979.
2. எக்கனாமிக் நோட்ஸ், செப்டம்பர், 1978, பக். 3.
3. அரசியல் விவகாரங்கள் ஜூலை 1978, பக். 7.

பேராசியர் வி. எம். யுசோஸ்கின்

முக்கிய ஆராய்ச்சியாளர்-பொருளாதாரம் மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய நிறுவனம், சோவியத் ஒன்றியத்தின் விஞ்ஞான கலைக்கழகம்

## விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியும், இன்றைய முதலாளித்துவத்தில் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பணவீக்கமும், முரண்பாடுகளும்

ஒருபுறம், தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கும், தொழிலின் மறுவளர்ச்சிக்கும் இடையில் நிலவுகிற சிக்கலான உட்தொடர்பின் ஒரு சில அம்சங்களையும், முதலாளித்துவத்தின் கொடிய முரண்பாடுகளில் ஒன்றான பணவீக்கத்தைப் பற்றியும், விளக்க விரும்புகிறேன். அண்மை ஆண்டுகளில் பணவீக்கம், உண்மையில் அனைத்து வளர்ந்த முதலாளித்துவ நாடுகளிலும், நிகழ்ந்து வருகிற நிற்காத, திரும்பச் செல்ல முடியாத, பண்டங்களின் விலைகளின் தனித்தன்மை வாய்ந்த கட்டுக்கடங்காத நிலையை அடைந்துள்ளது. ஆகவே அது, தொழில் மறு உற்பத்தியின் மீது செலுத்தும் பொல்லாத செல்வாக்கும், வர்க்கப் போராட்டத்தின் வளர்ச்சியின் மீது, பணவீக்கத்தின் செல்வாக்கும் பற்றிய பிரச்சினைக்கு இந்த ஆய்வுகளில் மிகுந்த கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

அண்மை ஆண்டுகளில் உலகப் பொருளாதாரம் மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய நிறுவனத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளில் பணவீக்கம் என்பது தற்காலிகமான பிரச்சினையோ அல்லது தனியான ஒரு பிரச்சினையோ அல்ல எனத் தெளிவாக்கியுள்ளது. அது ஒருபுறமும், பூர்ஷ்வாக்களினாலும், ஏகபோகங்களினாலும், சமுதாயத்தின் மீது திணிக்கப்பட்ட சமூக பொருளாதார இலட்சியங்களுக்கும், மறுபுறம் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் கீழ் ஏற்பட்ட முன்னேற்றங்களினால் நிறைவேற்றப்படக்கூடிய பெரும்பான்மையான உழைக்கும் மக்களின் கோரிக்கைகளுக்குமிடையில் நிலவுகிற இசைவின்மையில் நிலவுகிற ஆழ்ந்த ஒரு சீரற்ற தன்மைக்குச் சான்று பகர்கிறது. பணவீக்கம் அதன் ஒருங்கிணைந்த உருவில் நிலவுகிற உடைமை உறவுகளையும், பகிர்வு உறவு களையும் மாற்றாமல் அதற்குக் கிடைக்கக்கூடிய வழிகளைக் கொண்டு மிகவும் அவசரமான சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, முதலாளித்துவத்தால் இயலாது என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. இரண்டாவது உலகப் பெரும்போருக்குப் பல ஆண்டுகளுக் குப்பின்னர் கூட பணவீக்கத்திற்கெதிராக முதலாளித்துவ அரசுகள் எந்தப் பயனுள்ள நடவடிக்கைகளையும் மேற் கொள்ளவில்லை. அதற்குமாறாக, கீனஸ்வகை அரசியல் பொருளாதாரச்சிந்தனையாளர்கள் "கட்டுப்படுத்தப்பட்ட" ஒரு சிறிதளவு விலையுயர்வைப் பயனுள்ளதாகக் கருதினர். ஏனெனில் அவர்களுடைய கருத்தில் அது, உற்பத்தியைத் தூண்டும் ஒரு கருவியாகவும், பொருளாதார வளர்ச்சி விகிதங்களை உயர்வாக வைத்திருக்கப் பயன்படுகிற ஒரு சாதனமாகவும் விளங்கியது. சென்ற காலத்தில் அடிக்கடிக் கண்டுபிடிக்கப்பட்டதைப் போல, பணவீக்கத்தின் நயவஞ்சமான ஒருமுனைப்பான பொருளாதார முன்னேற்றம் என்ற கற்பனையான உருவத்தைத் தோற்று விக்கும் அதே வேளையில் விரைவிலோ அல்லது காலந்தாழ்த் தியோ, விலைகளின் உயர்வு, கட்டுப்பாட்டிற்குள் அடங்

காது போய்விடுகிறது. அதன் விளைவாக பொருளாதார பரிவர்த்தனையில் பங்கு கொள்வோரின் நடவடிக்கைகளில் பெரும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. உற்பத்தியின் கட்டமைப்பிலும், அதற்கு நிதியுதவி செய்வதிலும் பெரும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. முடிவாகப் பார்க்கும்போது பொருளாதார வளர்ச்சி விகிதம் சரிகிறது. இது விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றத்தின் சாதனைகளை நடைமுறையில் பயன்படுத்துவதில் குறிப்பான ஒரு எதிர்மறைச் செல்வாக்கையே தோற்றுவிக்கிறது.

கொள்கையடிப்படையில் பார்த்தால், தொழில் நுட்ப முன்னேற்றங்களும், தொழில்களை மாற்றுவதும், பணவீக்கத்தைக் குறைக்க வேண்டும். ஏனெனில், பண்டங்களின் பற்றாக்குறையும், தேவைகளை நிறைவு செய்ய இயலாமையும், விலை உயர்வுக்கான சாதகமான சூழ்நிலையைத் தந்துதவுகின்றன. ஆனால் பொருளாதாரத்தை அரசு ஏகபோகம் கட்டுப்படுத்துவதனால், தொழிற்சாலைகளின் தொழில் நுட்பத்திலும், பொருளாதாரத்திலும் ஏற்படும் மேம்பாட்டினால் தானாகவே சமூகநலனிலும் அதே மாதிரியான மேம்பாடு ஏற்படும் என்று கூறமுடியாது. மேம்பாடடையச் செய்யப்பட்ட தொழில் நுட்பத்தின் அடிப்படையில் புறவயமான இயந்திர மயமாக்கும் முற்போக்கான இயல்புகளும், தொழில்களை மாற்றிப் புதுப்பிப்பதும், முதலாளித்துவத்தின் கீழ் பொருளாதார முன்னேற்றத்தின் மீது மிக அதிகமான முரண்பாடான செல்வாக்கையும் ஈரெட்டாக உள்ள செல்வாக்கையும் செலுத்துகின்றன.

முதற்கண்ணோட்டத்தில் பொருளாதார வளர்ச்சி விகிதங்களை விரைவுபடுத்தும் அரசின் நடவடிக்கைகளின் விளைவாகத் தோன்றுகிற, பொருளாதாரத்தில் இரண்டாந்தர மீறல்கள் நிகழ்கின்றன. அவைகளின் முறையில் ஊர்ந்து செல்கிற, எனினும் தொடர்ந்து உயர்ந்து

செல்கிற பணவீக்கத்திற்கு வழிகோலுகின்றன. இதுவும் அதன் முறையில் மீண்டும் பயன்படுத்தும் பல்வேறு சூட்சுமங்களின் விளைவாக, விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றத்தைத் தடை செய்யும் ஒரு எதிர்மறைக் காரணியாகவும் தொழிலாளிகளின் உற்பத்தித் திறனைக் குறைக்கும் ஒரு காரணியாகவும், வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகப்படுத்தும் ஒரு காரணியாகவும், தொழில் மறுஉற்பத்தியின் முக்கியமான அளவுருக்களின் ஏற்ற இறக்கங்களுக்கு வழி செய்வதாகவும் ஆகிறது.

பேராசிரியர் ரம்னர் அவர் வாசித்தளித்த, கட்டுரையில் பணவீக்கத்தின் வளர்ச்சியில் ஏகபோகக் கட்டமைப்பின் பாத்திரத்தை வலியுறுத்திக் கூறினார். அந்தப் பிரச்சினையின் வேறொரு பக்கத்திற்கு நான் அதிக கவனம் செலுத்தலாம் என்று நினைக்கிறேன். இந்த நிகழ்ச்சிப் போக்கில் அரசின் முனைப்பான பங்கையும் அதனுடைய கொள்கைகளின் முனைப்பான பங்கையும் மிக அதிகமான அளவு கவனம் செலுத்தி ஆராய விரும்புகிறேன். 1960-1970 களுக்கும் இடைப்பட்ட காலத்தில் நிகழ்ந்த பொருளாதார வளர்ச்சியின் முக்கியமான இயல்புகளில் ஒன்று விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் வளர்ச்சிக்கு, பூர்ஷ்வா அரசின் பொருளாதாரச் செயல் முறைகளில் குறிப்பிடத்தகுந்த விரிவாக்கமே ஆகும். தனி ஏகபோகங்கள் பொருளாதாரத்தின் கூறுகள் அனைத்தின் ஒரே சீரான வளர்ச்சியை உத்திரவாதம் செய்ய முடியவில்லை என்பது தெளிவாயிற்று-இது குறிப்பாக முதலீடுகளின் போதுமான அளவு, முக்கியமான தொழில்களில் தொழில் நுட்ப அடிப்படையில் மாற்றங்கள் செய்வதில் உயர்ந்த விகிதங்கள், தேவையான திறமைகளில் பயிற்சியளித்தல்-சந்தைப் பொருளாதாரத்திற்குப் பொருந்தாததாகவுள்ள பணிகள் அதிக அளவில் மேற்கொள்ளுமாறு அரசு வற்புறுத்தப் படுவது ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருந்தது. இம்மாதிரியான பணிகள், அமைப்பையும், விஞ்ஞான-

தொழில் நுட்ப முன்னேற்றத்திற்கு ஊக்கமளித்தலையும், நிதியுதவியளித்தலையும் உள்ளடக்கியதாக இருந்தன.

உதாரணமாக, அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அடிப்படையான விஞ்ஞான ஆராய்ச்சிக்கான செலவில் மூன்றில் இரண்டு பங்கு கூட்டாட்சி அரசு மத்திய அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. மீதமுள்ள தொகையைப் பல்கலைக்கழகங்களும், தர்மசிந்தனையுள்ள அமைப்புகளும், ஒரு மிகச்சிறிய தொகையைத் தனியார் தொழில் நிறுவனங்களும் ஏற்றுக் கொண்டன. கீழ்க்கட்டமைப்பைக் கட்டுவதில் அரசின் பங்கு-அதாவது-ஆற்றல் வளத்தைப் பெருக்குவது, கல்வி முறையை விரிவாக்கம் செய்வது, சூழ்நிலையைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது, பொருளாதாரச் செயல்முறைகளின் முக்கியமான துறைகளைக் காப்பது மிக அதிகமான அளவு உயர்ந்ததாக இருந்தது.

பொருளாதாரத்தை வளரச் செய்வதற்கான மத்திய வரவு செலவுத்திட்டத்தில் விஞ்ஞான ஆராய்ச்சிக்கு நிதியுதவியளித்தல், இயற்கை வளம், ஆற்றல், போக்குவரவு வசதி ஆகியவற்றைப் பெருக்குதல் 1960 இல் 9700 மில்லியன் டாலராக இருந்தது. 1978 இல் அது 85400 டாலராக உயர்ந்தது. அதே வேளையில், வரவு செலவுத் திட்டத்தின் மொத்தத் தொகையில் 10.5 சதவிகிதமாக இருந்தது, 19 சதவீதமாக உயர்ந்தது.

இம்மாதிரியான அரசின் செலவுகள், வழக்கமாக, வரவு செலவுத்திட்டத் தொடர்பான நிதி, கடன் தொடர்பான அமைப்பு முறையை நிலைகுலையச் செய்கிறது. மேலும் சென்ற 15 அல்லது 20 ஆண்டுகளாக, வரவு செலவுத் திட்டத்தில் உயர்வு, மரபு வழியான வரவு செலவுத் திட்டத்தின் செலவுகளில் இராணுவச் செலவுகள் எதுவும் குறைக்கப்படவில்லை. அதற்கு மாறாக அண்மை ஆண்டுகளில் நேட்டோ நாடுகள் தங்களுடைய இராணுவச் செலவை உயர்த்துவதற்கு மிகத் தீவிர முயற்சிகள்

செய்துள்ளன. இது அரசுத் துறையில் உருச்சிதைக்கப்பட்ட வளர்ச்சியைத் தோற்றுவித்துள்ளது. அதன் மூலம் மிக அதிகமான தேசிய வருமானம் மறுபகிர்வு செய்யப்படுகிறது.

உலகில் உள்ள முக்கியமான முதலாளித்துவ நாடுகள் அனைத்தையும் தன்னுள் கொண்ட பொருளாதார கூட்டுறவு மற்றும் மேம்பாட்டிற்கான நிறுவனம் கொடுத்துள்ள புள்ளி விவரங்களின் அடிப்படையில் 1970 களில் உறுப்பினர் நாடுகளின் மொத்த தேசிய உற்பத்தியில் சராசரி 35 சதவிகிதம் அரசின் செலவாக இருந்தது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அது 33.2 சதவிகிதமாக இருந்தது. பிரான்சுக்கு 38.8 சதவிகிதமாக இருந்தது. கனடாவுக்கு 39.4 சதவிகிதமாகவும், மேற்கு ஜெர்மனிக்கு 40.5 ஆகவும், கிரேட் பிரிட்டனுக்கு 43.3 சதவிகிதமாகவும், ஸ்வீடனுக்கு 47.4 சதவிகிதமாகவும், ஹாலந்துக்கு 49.8 சதவிகிதமாகவும் இருந்தது. 1960 களில் இந்த நாடுகளில் பெரும்பாலானவற்றில் செலவு தேசிய மொத்த உற்பத்தியில் 5 லிருந்து 12 சதவிகிதமாக இருந்ததுடன் இது வேறுபடுகிறது.

இதன் விளைவுகள் அனைத்தும் வரவுசெலவுத்திட்ட முறை மீது மிக அதிகமான பளுவை ஏற்படுத்தின. இதன் விளைவாக வரவு செலவுத்திட்டத்தில் ஏற்பட்ட பற்றாக் குறைகள் வானுயர வளர்ந்தன. எங்களுடைய கணக்கீட்டின் படி முக்கியமான முதலாளித்துவ நாடுகளில் 1967 க்கும் 1970 க்கும் இடைப்பட்ட காலத்தோடு ஒப்பிட்டால் 1975 க் கும் 1978 க்கும் இடைப்பட்ட காலத்தில் வரவுசெலவுத் திட்டத்தில் பற்றாக்குறை மொத்த தேசிய உற்பத்தியில் சராசரி 3 லிருந்து 5 மடங்கு உயர்ந்திருக்கிறது. சில குறிப் பிட்ட நாடுகளில் இந்தக் குறியீடு உதாரணமாக பிரிட்டனில் மிக அதிகமானதாக இருந்தது.

வரவு செலவுத்திட்டத்தில் ஏற்பட்ட சீரற்ற தன்மை எப்பொழுதுமே பணவீக்கத்திற்கு ஒரு முக்கியமான காரண மாகத் திகழ்ந்தது. ஆனால் முன்னால் எல்லாம் இந்த சீரற்ற தன்மைகள் போர்களின் விளைவாகவே இருந்தன.

அட்டவணை-1

| | யு. எஸ். | பிரிட்டன் | பிரான்ஸ் | எப்.ஆர்.ஜி. | இத்தாலி | ஜப்பான் |
|---|---|---|---|---|---|---|
| 1967—1970 | 0 8 | 0.2 | 0.6 | 0.5 | 4.1 | 1.0 |
| 1971—1974 | 1.2 | 2.9 | * | 0.6 | 8.7 | 1.0 |
| 1975—1978 | 3.8 | 5.0 | 1.8 | 2.3 | 13.8 | 4.8 |

*உபரி பட்ஜெட்

இப்பொழுதெல்லாம் அவை ஒப்பீட்டில் மறு உற்பத்தியில் நிலவுகிற இயல்பான வழக்கமான சூழ்நிலைகளைக் கூடப் பின்தொடர்ந்து வருகின்றன. பொருளாதாரத்தின் அரசு ஏகபோகக் கட்டுப்பாடு இருப்பது பணவீக்கத்தைப் பெருக்குகிற பல காரணிகளைத் தோற்றுவிக்கிறது. அதன் விளைவாக வரவு செலவுத் திட்டத்தின் பற்றாக்குறைகள், இதுவரை அமைதியான காலங்களில் கண்டிராத அளவை அடைந்திருந்தது. சில நாடுகளில் ஆண்டுதோறும் இது 15 லிருந்து 20 சதவிகிதமாகவும், வேறு சில நாடுகளில் 30 சதவிகிதமாகவும் இருந்தது. தேசிய கடன்கள் மிக அதிகமான அளவு உயர்ந்திருந்தன. குறிப்பாக கடன் அமைப்பு முறைக்குள்ளேயே வாங்கப்பட்ட கடன்களின் அளவு மிக அதிகமாக இருந்தது. இது கடன் முறைகள் மிகுதியாக வளர்வதற்கு வழிவகுத்துள்ளது. அதே வேளையில் எவ்வளவுதான் முரண்பட்டதாக இருந்தாலும் முதலாளித்துவ பணவியல் சுழற்சியை மிகுதியாக ஆக்குவதும், கடன்கள் மற்றும் செலுத்தல்முறை சூட்சுமங் களும் நிலயியல் கணக்குகளும், (விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றங்களின் மூலம்) பணவியல் அமைப்பு முறையில் சமமற்ற தன்மைக்கும் உறுதியற்ற நிலைக்கும் அதிகமான வலிமை கொடுத்து ஒரு குறிப்பிட்ட பொருளில் பார்த்தால் எதிர்மறையான பங்காற்றியுள்ளன.

முதலாளித்துவ உலகத்திலும், அமெக்க ஐக்கிய நாடு களிலும், மிகவும் பெரிய பாங்கியாகத் திகழும் பாங்க் ஆப் அமெரிக்கா, வைப்பு—காசோலை செயல்முறையைத் தானியக்க மயமாக்கும் நோக்கத்துடன் அதனுடைய முதல் கம்ப்யூட்டர் முறையைப் புகுத்தியது. அதிலிருந்து பாங்கு களும் நிதிநிறுவனங்களும் மின்னணுத் தொழில் நுட்பத்தை மிகுதியாகப் பயன்படுத்தத் தொடங்கின. கணக்கிடும் முறையையும் கணக்குத் தீர்ப்பதையும் கணக்குகள் பற்றிய விவரம் தயாரித்தலையும் இது புரட்சிகரமானதாக ஆக்கியுள்ளது. வாணிக நடவடிக்கை முற்றுப்பெறுவதற்கு

எடுத்துக் கொள்ளும் நேரம் குறிப்பிடத்தக்க அளவு குறைக்கப்பட்டுள்ளது. இம்மாதிரியான மேம்பாடுகள் பணவியல் சுழற்சியின் விகிதத்தில் ஒரு ஏற்றத்தை உண்டாக்கியிருக்கின்றன. இவ்வாறாக 1950 லிருந்து 1975 வரை 10 முக்கியமான முதலாளித்துவ நாடுகளில், ஈத சராசரியாக, 50 சதவிகிதமாக உயர்ந்தது. (சில நாடுகளில் அவைகள் 80 லிருந்து 100 சதவிகிதம் உயர்ந்தது) அதே வேளையில் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அந்த உயர்வு நான்கு மடங்கிலிருந்து ஐந்துமடங்காக இருந்தது.

அதன் விளைவாக ஒரு அலகு உற்பத்திப் பொருளுக்குச் செய்யவேண்டிய அதிகப்படியான ஒப்பீட்டடிப்படையிலான முதலீட்டின் தேவை மிக அதிகமான அளவு குறைந்திருக்கிறது. ஆனால் நாம் முன்னர் கூறியதைப்போல முதலாளித்துவ நாடுகளிலிருந்த அரசாங்க நிறுவனங்களும் பாங்கிகளின் அமைப்பு முறையும் அரசுத்துறைக்கு நிதிஉதவி செய்வதற்காக பண உருவிலும், பணமல்லாத உருவத்திலும் (வைப்புகள்) மிக வேகமான விகிதத்தில் தொடர்ந்து பணத்தை அச்சிட்டன — இம்மாதிரியான நடவடிக்கைகளே பணவீக்கத்திற்குக் குறிப்பாக அதன் கட்டுக்கடங்காத இயல்பையும் நீண்ட காலத்திற்கு நிலவும் இயல்பையும் கொடுத்துள்ளன — மேலும் இந்த நடவடிக்கைகளே, விலைகளின் ஏற்றத்தைத் தடுத்து நிறுத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் தோற்கடித்து விட்டிருக்கின்றன.

பணவீக்கம் அழிவுத்தன்மை நிறைந்த, கட்டுப்படுத்த முடியாத ஒரு படிநிலையை அடைந்துவிடும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதால், தொழிலில் மிகுதியாக வளர்ச்சியடைந்த நாடுகள் பலவற்றில் உள்ள அரசுகள், அண்மை ஆண்டுகளில் பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு தடையை விதிக்கவும், நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதைத் தடுக்கவும் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன. இவை பொது நலச் செலவுகளைக் கட்டுப்படுத்துவது, வேறு முக்கியமான

பொருளாதாரத் திட்டச்செயல்முறைகளைக் குறைத்து விடுவது ஆகியவற்றை உள்ளடக்கியதாகவுள்ளது. இது அதன் முறையில், தொழில் நிதி அமைப்பு முறையை மிகவும் துன்பம் நிறைந்ததாக ஆக்கியுள்ளது. மேலும் இது உபரித் திறன்களின் வளர்ச்சியை ஊக்குவித்துள்ளது. 1974—1975 களில் பல நாடுகளில் உள்ள (யு. எஸ், ஜெர்மன் கூட்டுக் குடியரசு, இத்தாலி, கிரேட் பிரிட்டன், பிரான்ஸ், ஹாலந்து வேறு பல நாடுகளிலும்) மத்திய வங்கிகள், பணம் அச்சடிப்பதற்கு வரம்புகள் விதிக்கின்றன. வேறு சில அரசுகள் (உதாரணமாக பிரிட்டன்) ஆண்டு வரவு செலவுப் பற்றாக்குறையின் அளவிற்கு ஒரு வரம்பு விதிக்கும் "வழிகாட்டும் குறிப்புகளை" மேற் கொண்டுள்ளன.

பணவீக்கம் மிக வேகமாக வளர்ந்து வருவதற்கு சமுதாயத்தின் அனைத்துப் பகுதியிடமிருந்தும், பெரும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. அமெரிக்க ஐக்கிய நாட்டுக் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதியாக இங்கு வந்துள்ள தோழர் ஜான் பிட்மான் அவர்களின் ஆராய்ச்சிக் கட்டுரையில் அது தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. இந்த எதிர்ப்புக்களைச் சமாளிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நாடுகளின் ஆட்சியாளர் தவிர்க்கமுடியாதவாறு மேற் கொள்ள வேண்டியதிருக்கிறது. உதாரணமாக, அமெரிக்க ஐக்கிய நாட்டின் நிர்வாகத்தை எடுத்துக் கொள்வோம். 1979-ன் தொடக்க நாட்களில் வெளியிடப்பட்டு 1980 நிதியாண்டில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டம் "மிக்க எளிமையான வரவு செலவுத்திட்டம்" என அழைக்கப் பட்டது. தொழில் தொடர்பான பயிற்சிகளும், மறுபடிப்பு பயிற்சித் திட்ட நிகழ்ச்சிகளும், ஆற்றல் வளர்ச்சியும், விவசாயத்திற்கு உதவியும், 30 சதவிகிதம் குறைக்கப் பட்டன. போக்குவரத்து வளர்ச்சிக்காகவும், மூலப் பொருட்கள் வெட்டியெடுக்கப்படுவதற்காகவும், சூழ்நிலைப் பாதுகாப்பிற்காகவும் செய்யப்பட்ட செலவுகள் மிக அதிகமான அளவு குறைக்கப்பட்டன. (தற்போதைய விலைகளின் உயர்வைக் கருத்தில் கொண்டு பார்த்தால்,

விஞ்ஞான ஆராய்ச்சிக்காகச் செய்யப்பட்ட மொத்தச் செலவு முறைப்படி குறைக்கப்பட்டது. ஆனால் பாதுகாப்பு இலாக்காவுக்காகவும், நாசாவுக்காகவும், உருவமைக்கப் பட்ட ஆராய்ச்சியின் மீது செய்யப்பட்ட செலவுகள் 17 சதவிகிதத்திலிருந்து 19 சதவிகிதம் உயர்ந்தன. கல்வி மற்றும் சுகாதார அமைச்சரவைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியளவு குறிப்பிடத்தக்க அளவு குறைக்கப்பட்டது.

1980 நிதியாண்டிற்கு அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பொருளாதார வளர்ச்சிக்கான மொத்தச் செலவு-முந்திய நிதியாண்டின் செலவைக் காட்டிலும் (1978 நிதியாண்டில் அது 26.3 சதவிகிதமாக உயர்ந்திருந்தது) 4.3 சதவிகிதம் குறைவாக இருந்தது. மத்திய அரசின் மொத்த வரவு செலவுக்கணக்கில் அதனுடைய பங்கு 19 சதவிகிதத்திலிருந்து 16.5 சதவிகிதமாகக் குறைக்கப்பட இருக்கிறது.

முதலாளித்துவ நாடுகளின் பொருளாதார வளர்ச்சி விகிதத்தின் மீதும், விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றத்திலும் மிக மோசமான விளைவைப் பணவீக்கம் உண்டாக்கியிருக்கிறது. இந்த நாடுகள் அனைத்திலும் அண்மை ஆண்டுகளில் முக்கியமான பொருளாதாரக் குறியீடான தொழிலாளர்களின் உற்பத்தித்திறனின் வளர்ச்சி விகிதத்தில் ஒரு குறைவு காணப்படுகிறது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் 1947-1967 க்கான சராசரி ஆண்டுக் குறியீடு 3.5 சதவிகிதமாக இருந்தது. 1967 லிருந்து 1972 வரை அது 2 சதவிகிதத்திற்குக் குறைந்தது. 1972 லிருந்து 1978 க்கு அது மேலும் 1.3 சதவிகிதமாகக் குறைந்தது. அதாவது ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கு குறைந்திருந்தது. பொருளாதாரக் கூட்டுறவு மற்றும் மேம்பாட்டிற்கான நிறுவனத்தின் புள்ளி விவரங்களின்படி, தொழிலாளர்களின் உற்பத்தித்திறன் வளர்ச்சியைப் பற்றிய இதே மாதிரியான வேகச்சரிவு வளர்ந்த முதலாளித்துவ நாடுகள் அனைத்திலும் காணப் படுகிறது. குறிப்பாக ஜப்பான், பிரான்ஸ், இத்தாலி, மேற்கு ஜெர்மனி, ஸ்வீடன் இன்னும் சில நாடுகளில் இப்மாதிரியான

இயல்பு மிகுதியாகக் காணப்படுகிறது. இது குறிப்பாக 1974-1975 களில் நிகழ்ந்த நெருக்கடியைத் தொடர்ந்து-தொழிலாளர்களின் உற்பத்திக் குறியீடு வேகமாக வளர்ந்திருக்கவேண்டிய ஆனால் உண்மையில் மிகவும் குறைவாக இருந்த காலத்தில் காணப்பட்டது.

பணவீக்கத்தின் விளைவுகளைக் குறைப்பதற்காக விஞ்ஞான வளர்ச்சிக்காகவும், பொருளாதார வளர்ச்சிக்காகவும் அரசு செலவு செய்த நிதியின் அளவு குறைக்கப்பட்டதோடு விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றத்தின் குறைந்த விகிதமும், உற்பத்தியின் மொத்த பயனுள்ள தன்மையும் குறைந்த விகிதமும் கீழே கொடுக்கப்பட்டவற்றால் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

1. மொத்த முதலீட்டின் அளவைப் பெருக்கியும், பல தொழில்களின் இலாபத்திறனை மிகவும் குறைந்திருக்கிற, மூலப்பொருட்களின் விலைகளிலும், ஆற்றல் தோற்றுவாய்களின் விலையிலும் மிகுதியான உயர்வு, பழைய சாதனங்களையும், கருவிகளையும் புதிய தொழில் நுட்பத்தைக் கொண்டு மாற்றுவதற்கு முடியாததாக ஆக்கியிருந்தது.

2. முதலீட்டில் மிகுந்த வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ள, பணமுதலீட்டில் உள்ளடங்கியுள்ள பொருளாதார வாய்ப்புகளையும் இடர்களையும் மதிப்பீடு செய்வதில் உள்ள மிகுதியான துன்பங்கள் .குறிப்பாக புதிய திறன்களை வளரச் செய்வதற்குக்கூடத் தானே நிதி உதவி செய்வதைக் கட்டுப்படுத்துவதும், கடன் வசதிகளை மிகுதியாகப் பயன் படுத்துவதும்)

3. தனியார் துறையில் ஆராய்ச்சிக்கும் மேம்பாட்டிற்குமான செலவில் குறைவு.

இந்த நிகழ்ச்சிப் போக்குகள் ஒவ்வொன்றிற்கும் மிகவும் முக்கியமான காரணமாக விளங்குவது பணவீக்கம் தான். மூலதனம் மிகுதியாகத் தேவைப்படும் (தொழில்களும், ஆற்றல் மிகுதியாகத் தேவைப்படும்) உற்பத்தி உருவங்களும் தான் குறிப்பாகப் பெரும் அளவில் பாதிக்கப்பட்டவை

யாகும். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இலாபவிகிதத்திலும், வளர்ச்சி விகிதத்திலும், தொழிலாளர்களின் உற்பத்தித்திறன் விகிதத்திலும் ஒரு பெரும் வீழ்ச்சி அண்மை ஆண்டுகளில், பொது மக்கள் சேவைகளில் காணப்படுகிறது. இத்தகைய சேவைத் துறைகளில் ஆற்றல், சூழல் பாதுகாப்பு ஆகியவற்றிற்கான செலவு அதிகமானதாகும்.

முடிவாக, வலுக்கட்டாயமாக வளர்ச்சியை உறுதிப் படுத்தவும், தொழிற்சாலைகளைத் தொழில் நுட்ப அடிப்படையில் புதுப்பிக்கவும் பூர்ஷ்வா அரசுகள் மேற் கொள்ளும் முயற்சிகள் முதலாளித்துவ நிறுவன குறுகிய கட்டமைப்புடன் மோதிக் கொள்பவையாக விளங்குகின்றன. நாணயச் சுழற்சியில் ஒரு ஏற்றத்தாழ்வைத் தோற்றுவிக்கின்றன. உயர்ந்த விகிதங்களுக்குக் கடுமையான தடைகளை தோற்றுவிக்கின்றன. நடைமுறையில் விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சியைப் பயன்படுத்துவதற்குப் பெரும் தடைகளைத் தோற்றுவிக்கின்றன. உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியில் ஒரு தொய்வு நிலை தோன்றியுள்ளது என்று இதற்குப் பொருளல்ல. முதலாளித்துவம், இன்னும் போதுமான அளவு பொருளாதார வளர்ச்சிக்கான சேமப் படைகளை உடையதாகவே இருக்கிறது-குறிப்பாக உற்பத்தியைத் தீவிரப்படுத்துவதன் மூலமாகவும், சுரண்டலைத் தீவிரப்படுத்துவதன் மூலமும். மேலும், வாழ்க்கைப் புள்ளிகளின் உயர்வும், உற்பத்தியின் முக்கியமான கூறுகளின் விலைகளின் உயர்வும் முதலாளித்துவ நிறுவனங் களை, மூலப்பொருட்களில் சிக்கனம் செய்யும் புது வழி களைக் காணவும், ஆற்றல் வகை துறைகளில் தொழிலாளர் ஆற்றலிலும் சிக்கனம் செய்யப் புதுவழிகளைக் காணவும் கட்டாயப் படுத்தியுள்ளது. ஆனால் இந்த விஞ்ஞானத் தொழில் நுட்ப முன்னேற்றத்தின் நோக்கில் இந்த "உடன் பாடான" பயன்கள் அதன் எதிர்மறைப் பயனை எந்தவகையி லும் வெல்ல முடியவில்லை. சமூக நெருக்கடிகளை அதிகரிப் பதன் மூலம், உழைப்புக்கும் (தொழிலாளிக்கும்) முதலாளிக் கும் உள்ள உறவுகளைப் பணவீக்கம் பாதிக்கிறது. புதிய வர்க்கப்போராட்டம்வளர்ச்சியுற வகைசெய்கிறது. பூர்ஷ்வா அமைப்பு முறையின் அடித்தளத்தை அதிரும்படி செய்கிறது.

பேராசிரியர் க்வெட்டோஸ்லாவ் ரௌபால்
பொருளாதார நிறுவனம், இயக்குநர்.
செக்கோஸ்லோவாகியா விஞ்ஞான கலைக்கழகம்.

## விஞ்ஞான—தொழில் நுட்பப் புரட்சியும் முதலாளித்துவத்தின் முரண்பாடுகள் தீவிரமடைவதும்

விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சி ஒரு நிகழ்ச்சிப் போக்காகும். சமூக உற்பத்தி சக்திகளின் திறமையை வளர்ப்பதற்கு வழிவகுத்துக் கொள்ளக்கூடிய, பண்பியல் அடிப்படையான மாற்றங்களை இந்த நிகழ்ச்சிப் போக்கினுடைய முக்கியமான இயல்புகள் உள்ளடக்கியதாக உள்ளன. அது உற்பத்தி சக்திகளை பண்பில் முழுமையும் சமூகத்தன்மை கொண்டதாக ஆக்குகிறது. ஆராய்ந்து பார்த்தால் முடிவில் இது உற்பத்தி சாதனங்களின் தனி முதலாளிகள் உடைமையாகக் கொண்டிருக்கும் கட்டமைப்பிற்கு அப்பால் செல்லும் ஒன்றாக விளங்குகிறது. ஏனெனில், முதலாளித்துவ உறவுகளில் உள்ளடங்கிய முரண்பாடுகள் பொருளாதார முரண்பாடுகளையும் சமூகப் பிணக்குகளையும் மீண்டும் தோற்றுவிக்கின்றன.

விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் முக்கியமான கூறு விஞ்ஞானம் நேரடியான உற்பத்தி சக்தி ஆகியிருக்கிறது என்ற உண்மைதான். இது தொழிலின் பொருளாயத மற்றும் அமைப்பு முறையின் அடித்தளத்தை மாற்றுவதற்கும்

விஞ்ஞானம் மிகப்பெரும், முக்கியமான பங்கு வகிக்கிற— "விஞ்ஞான — உற்பத்தி" அமைப்பு முறையைப் படைப்பதற்கும் வழிவகுத்து, தொழிலின் இயல்பு முழுவதையுமே மாற்றிவிடுகிறது. இந்தச் சூழ்நிலையில், பொருளாதாரத்தின் வளர்ச்சி, மரபு வழியான வகை துறைகளின் செலவுகளின் பரிமாணத்தினால் நிர்ணயிக்கப்படுவதோடு மட்டுமல்லாமல் (அதாவது சொத்துக்களுக்கும், தொழிலாளர்களுக்குமிடையேயும் பொருள்களுக்கும் — தொழிலாளர்களுக்குமிடையேயுமுள்ளவிகிதங்கள்) விஞ்ஞான அறிவையும், படைப்பாற்றல் திறனையும் சேகரித்து அதை உற்பத்திக்கு பெருமளவில் பயன்படுத்துவதையும் அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது. வேறு மாதிரி கூறினால், விஞ்ஞானத்துடன் கூடவே, கல்வியும், இன்றைய உற்பத்தியில் மிகுந்த செல்வாக்குடையதாக ஆகிக்கொண்டு வருகிறது.

ஏகபோக முதலாளித்துவச் சூழ்நிலையில், — இராணுவ உற்பத்தித் துறையில்தான் இந்த நிகழ்ச்சிப்போக்குகள் அனைத்தும் வளர்ச்சியடைகின்றன என்பதைத்தவிரவும்— சமூக உற்பத்தியில் மிகப்பெரும் மாற்றங்களைச் செய்வதற்கு விஞ்ஞானம் ஏகபோகங்களின் கையில் அடைபட்டுக் கிடப்பது, முக்கியமான தடையாக விளங்குகிறது. ஏகபோக முதலாளித்துவம், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளையும் விஞ்ஞான அறிவையும், ஆராய்ச்சியின் விளைவுகளையும், ஒரு தொழிற்சாலையின் பகுதி மீதோ, அல்லது ஒரு தொழிற்சாலை முழுமையின் மீதோ அல்லது பல தொழிற்சாலைகளின் மீதோ தன் பிடிப்பை உறுதியானதாக ஆக்குவதற்குப் பயன்படுத்துகிறது ஏகபோக இலாபத்திற்கான விருப்பம், தொழிற்சாலைக்குள் எந்த ஏற்றத்தாழ்வுகளைத் தோற்றுவிக்கிறதோ அந்தவிதமான ஏற்றத்தாழ்வுகளை விஞ்ஞானத்திற்குள்ளே தோற்றுவிக்கிறது. ஏகபோகங்களின் நலன்களால் நிர்ணயிக்கப்படுகிற விஞ்ஞான ஆராய்ச்சிகளின் பெரும்பகுதி, நிலவுகிற நுகர்வோர் பொருட்களை மேம்பாடடையச் செய்து மாற்றுவதற்குப் பயன்படும் நடை

முறை ஆராய்ச்சி போன்ற குறுகிய காலப் பயன்தரக்கூடிய ஆராய்ச்சிகளையே தன்னுடைய ஆராய்ச்சியின் நோக்கமாகக் கொண்டிருக்கிறது.

எனினும் விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சி சார்ந்து நிற்கிற கோட்பாடு அடிப்படையிலான ஆராய்ச்சி நேரடியாக இலாபத்துடன் தொடர்புபடுத்தப்பட முடியாதது. எப்போதுமே விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் நடைமுறையில் பயன்படுத்தப்படுவதன் விளைவுகளை முன்கூட்டியே அறிந்து கொள்ளமுடியாது. உண்மையில் அது நீண்ட இடைவெளிக்குப்பின்னர்தான் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட முடியும். இந்தக் காரணத்திற்காக, தனியார் நிறுவனங்களில் பெரும்பாலானவை இம்மாதிரியான ஆராய்ச்சியில் ஆர்வம் காட்டவில்லை.

இவ்வாறாக, விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் முக்கியமான நிகழ்ச்சிப் போக்கின் குறுக்கே இந்த ஏகபோகங்கள் நிற்கின்றன. விஞ்ஞான தொழில் நுட்ப அடிப்படையின் கட்டமைப்பின் உருவைச் சிதைக்கின்றன. விஞ்ஞானத்தையும், தொழிலையும் ஒன்றிணைப்பதன் அடிப்படையில், சமூக உற்பத்தியின் அடித்தளத்தை மாற்றுவது என்ற புறவய நிகழ்ச்சிப் போக்கிற்கு ஒரு தடை விதிக்கின்றன. ஏகபோக முதலாளித்துவப் படிநிலையின் தொடக்கத்திலிருந்தே, விஞ்ஞானத்தையும், விஞ்ஞான ஆராய்ச்சியையும் ஏகபோகங்கள் தங்கள் கைக்குள் வைத்துக் கொள்வது, ஏகபோகங்கள் வளர்ந்து வலிமையைப் பெறுவதற்கும், அதே வேளையில், உற்பத்தியை முதலாளித்துவ அமைப்பில் சமுதாயத்தன்மை அடையச் செய்வதன் ஒரு படிநிலையை அடைவதற்கும் முக்கியமான காரணங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் வளர்ச்சி தனியார் ஏகபோக பொருளாதாரத்தின் எல்லைகளை மிகுந்த தெளிவுடன் நிர்ணயிக்கின்றதோடு, பொருளாதாரத்தை அரசு ஏகபோகம் கட்டுப்படுத்துவதற்கான தேவையை

வலிமையுறச் செய்கிறது. குறிப்பாக விஞ்ஞானத் தொழில் நுட்ப முன்னேற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தேவையை வலிமையுறச் செய்துள்ளது. ஒரு புதிய, பொருளாயத விஞ்ஞான தொழில் நுட்ப அடித்தளத்தைப் படைப்பதில், விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சி விஞ்ஞானத்தையும், தொழிலையும் ஒன்றிணைப்பதற்கான சிறந்த நடவடிக்கைகளை நிறைவேற்றுவதை இன்றியமையாததாக ஆக்குகிறது. இந்தக் கோரிக்கை மிகவும் தெளிவாக வெளிப்படுகிற ஒரு குறிப்பிட்ட உருவம், அரசு மற்றும் தனியார் நிறுவனங்களைப் பெரும்பாலான சமயங்களில் ஒன்று சேர்க்கிற விஞ்ஞான-தொழில் தொகுதி அமைப்புகளேயாகும்.

இந்தத் தொழில் தொகுதியமைப்புகள் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் உற்பத்தியில் ஈடுபடுத்தப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தும் ஒருவகை அமைப்புகளின் கட்டமைப்பைத் "தானே வெளிப்படுமாறு" செய்கின்றன. இம்மாதிரியான கட்டமைப்பு, அரசு நிதி உதவும் நிறுவனங்கள், ஆராய்ச்சி மையம், சோதனைப்பிரிவு, தொழிற்சாலை, அளிப்பு மையம் இதுதவிர விற்பனை வல்லவர்களைத் தந்துதவுவது, தரக்கட்டுப்பாடு கையாளும் நுகர்வோர் சேவைகள் போன்றவற்றைக் கையாளும் நிறுவனங்களையும் உள்ளடக்கியதாக இருக்கிறது. இந்த சூட்சுமம் முழுமையும், ஒரு மெய்யான திட்டச்செயலின் கட்டமைப்புக்குள் அரசையும், தனியார் நிறுவனங்களையும், ஒன்றிணைப்பதற்காக உருவமைக்கப்பட்டது ஆகும்.

விஞ்ஞான, தொழில் நுட்பத்திட்டச் செயல் முறைகளைப் பெருமளவில் நடைமுறையில் நிறைவேற்றுவதில் பூர்ஷ்வா அரசு இன்று ஈடுபட்டுள்ளது. இம்மாதிரியாக விஞ்ஞானம் ஒரு உற்பத்தி சக்தியாக மாற்றப்படுவதற்குப் புதியவகை உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியைத் தூண்டுவதை நோக்கமாகக் கொண்டிருப்பதையும், விஞ்ஞான நிறுவனங்களைப்படைப்பதையும் பெரும் தொழில் நுணுக்க மாறுபாடு

களைப் புகுத்துவதையும், புதிய கல்வி முறையை வளர்ச்சியுறச் செய்வதையும் நோக்கமாகக் கொண்ட ஒரு அரசின் பேரியல் பொருளாதார நடவடிக்கைகளைப் புகுத்துவது போன்ற நெடுநோக்கு கொண்டிருப்பதையும் தன் சிறப்பியல்பாகக் கொண்டுள்ளது. விஞ்ஞான தொழில் நுட்பப்புரட்சியில் உள்ளடங்கிய இந்த நிகழ்ச்சிப் போக்கு களின் இயல்பும், வேகமாக வளர்ந்துவரும் தொழில், மற்றும் தொழில் நுட்பச் செயல் திறனில் உள்ளடங்கிய மிகப் பெருமளவு நிதி முதலீடுகளும், அடிப்படையான தனியார் உற்பத்தி உறவுகளுடனும் அதனைப் பின் தொடர்ந்து வருகிற பொருளாதாரத்தின் நிலையற்ற தன்மையுடனும் தொழில்களின் தான்தோன்றித்தனத்துடனும் ஒரு ஒழுங்கற்ற வளர்ச்சியுடனும் மோதலுக்குள்ளாகிற காரணங் களாகும்.

விஞ்ஞான தொழில் நுட்பப்புரட்சியுடன் இயல்பாகவே தொடர்புள்ள உற்பத்தி மட்டங்களின் வளர்ச்சி, பொருளாதார அமைப்பு முறைகளின் சிக்கலானதன்மை, மையப்படுத்தப்பட்ட மேலாட்சியின் இன்றியமையாமை போன்ற சமூக உற்பத்தியின் வளர்ச்சிக்கான காரணங்கள், அரசின் பங்கை உயர்த்துவதற்கான புறவய தேவையைத் தோற்றுவிக்கின்றன. தொழில், மற்றும் விஞ்ஞான தொழில் நுட்ப இயக்க ஆற்றலை வீணடிப்பதைத்தவிர்ப்பதற்கு, சமூக உற்பத்தியின் செயலாக்கம் நிறைந்த சமநிலையை நீண்டகாலத்திற்கு உத்திரவாதம் அளிப்பது இன்றியமை யாதது ஆகும். அது ஆற்றல் மற்றும் மூலப்பொருட்களின் சமநிலையுடன் சேர்ந்து ஒரு உயிர்வாழ் சூழ்நிலை சமநிலையைப் பேணிக்காப்பது என்ற பிரச்சினைக்குத் தீர்வு காண்பதையும், உழைக்கும் மக்களுக்கு சமுதாயப் பாதுகாப்பையும் உத்திரவாதம் செய்யவும் மேலும், மேலும் அதிகமாக அழுத்தமாக வலியுறுத்திக் கோரிவருகிறது.

இன்று பொது நெருக்கடிப் பண்பியல் அடிப்படையில் மிக ஆழமானதாக ஆகிவருவதன் இயக்கவியல் காரணமாக

அரசின் தலையீடு இன்றி விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளை நடைமுறையில் முழுதும் பயன்படுத்துவது என்பதைச் சாதிப்பது முடியாததாக இருக்கும். ஏகபோக இலாபங்கள் பெருகுவதற்கான பொதுவான நிலைகளைப்பேணிக்காக்கும் நோக்குடன், பூர்ஷ்வா அரசு நீண்டகாலப் பேரியல் பொருளாதாரக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் படியாக வற்புறுத்தப்படுகிறது. அதாவது நேரடியாக இலாபம் பெறும் நோக்கங்களிலிருந்து விலகியுள்ள செயல் முறைகளில் ஈடுபடுவது. இப்பொழுதெல்லாம் மதிப்பு சூட்சுமத்திலிருந்து பெறப்படுகிற செய்திகள் இம்மாதிரியான செயல்களுக்கான திருப்புமுனையாக விளங்கவில்லை. அதன் நடவடிக்கைகள் முழுதும் முதலாளித்துவ முடிவுகளின் கட்டமைப்புகளுக்கு அப்பால் செல்வதாக உள்ளன. பிற அனைத்தையும் தவிர பொதுநெருக்கடியின் மூன்றாவது படிநிலையில் கொடுக்கப்பட்ட பகுதி, விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் மேற்கொண்ட முன்னேற்றத்திற்கு, தேவையான முன்நிபந்தனையாக, அரசு ஏகபோக கட்டுப் பாட்டின் உயர்ந்த படிநிலைக்கு மாறுவதை உள்ளடக்கியதாகும்.

வரலாற்றின் நோக்கிலிருந்து, இந்த அமைப்பு முறையின் வளர்ச்சியான ஏகபோக மூலதனத்தின் தகவமைத்தலின் ஒரு மோசமான உருவம் விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் வளர்ச்சியைக் காட்டிலும் பின்தங்கி இருந்தது என்ற உண்மை 1970 களில் இன்றுள்ள அரசுக் கட்டுப்பாட்டு முறையில் ஒரு நெருக்கடிக்கு வழி கோலியது.

வளர்ந்த முதலாளித்துவ நாடுகள் பொருளாதாரத்தில் புதியவகையான அரசு தலையீட்டு முறையை வளர்ச்சியுறச் செய்வதில் வெற்றிபெறவில்லை என்பதனால் முக்கியமாக இந்த நெருக்கடி தோன்றியது அல்லது, புதிய கட்டுப்பாட்டு உருவங்களையும், முன்னர் பயன்படுத்தப்பட்ட கட்டுப் பாட்டு உருவங்களையும், முழுமையான ஒன்றாக இணைக்கக்

கூடிய ஒரு புதிய அமைப்பு முறையை வளர்ச்சியுறச் செய்ய இயலாததால் இந்த நெருக்கடி தோன்றியிருக்க வேண்டும். இம்மாதிரியான அமைப்பு முறைக்கு முக்கியமான இடையூறாக இருப்பது, அவர்களுடைய இன்றைய நிலைமைகளைப் பாதிக்கும் என்று பயப்படுவதனால், தேவையான சீர்திருத்தங்களைத் தடுத்து நிறுத்தி வருகிற ஏகபோக பூர்ஷ்வாக்களின் நலன்களேதான். இந்தச் சூழ்நிலையில் அரசு இயந்திரத்தைத் தொடர்ந்து ஜனநாயகப் படுத்துவதற்கான பொது மக்களின் போராட்டத்திற்குரிய சாதகமான சூழ்நிலைகள் தோன்றியுள்ளன. மேலும் பொருளாதாரத்தை அரசு கட்டுப்படுத்துவதில் ஏகபோகங்களுக்கு எதிர்ப்பு சக்திகள் மற்றும் ஜனநாயக சக்திகளின் செல்வாக்கைப் பெருக்குவதற்காகவுமான போராட்டத்திற்குரிய சாதகமான சூழ்நிலைகள் தோன்றியுள்ளன.

முன்னெப்போதும் இல்லாமல் இன்று ஜனநாயக அடிப்படையில் நாட்டுடைமையாக்குவதற்காகவும் அரசு இயந்திரத்தை உண்மையான முறையில் ஜனநாயகப் படுத்துவதற்காகவும், இராணுவச் செலவுகளை மிகுதியான அளவு குறைப்பதற்காகவும், சமூக மற்றும் கலாசாரப்பணிகளை விரிவடையச் செய்வதற்காகவும் தேவையான புதிய போராட்ட முறைகளைப் பின்பற்றுவது மேலும் மேலும் அதிகமான அளவு இன்றியமையாததாக ஆகிவிடுகிறது. மேலும் பொருளாதார அடிப்படையில் மட்டுமல்லாமல், தனிச்சிறப்பாக அரசியல் அடிப்படையில் இராணுவ வெறியை எதிர்த்துப் போராடுவது குறிப்பான முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.

விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சி, அதனுடைய பயனுள்ள தன்மையை உயர்த்துவதற்காக மிகப்பெரும் அளவு சமூக உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதைச் சாதிப்பதைக் கைகூடும் செயலாக ஆக்கக்கூடிய, ஏகபோக பூர்ஷ்வாக்களின் நலன்கள் வரம்புக்குட்படுகையில் மேற்கூறியதைச் சாதிப்பதைக் கைகூடும் செயலாக ஆக்கக்கூடிய

ஒருவகையான தொழில் நுட்ப அடிப்படையைக் குறிக்கிறது. உள்முரண்பாடுகளின் ஓர் அமைப்பு முறையையே தோற்றுவிக்கிற முதலாளித்துவப் பொருளாதாரத்தின் இன்றைய கட்டமைப்பு இந்தச் செயல்திறன் முழுமையை வெளிக்கொண்டு வந்து பயன்படுத்துவதைத் தடுக்கிறது. முதலாளித்துவப் பொருளாதாரம் இன்று அடைந்திருக்கும் சமுதாயத் தன்மையின் மட்டம், முதலாவதாக, நிர்வாகம் வாழ்க்கைத் தொழிலாக இருக்க வேண்டியது அவசியமாகிறது. இரண்டாவதாக பெரும் பலநோக்குத் தொழில் திட்டங்களை நிறைவேற்றுவதைத் தன்னுட் கொண்டதாக உள்ள அனைத்தையும் உள்ளடக்கியதாக இருக்கவேண்டும். மூன்றாவதாக, திட்டச்செயலில் பங்கேற்பவர்களிடையே ஒன்றிணைந்த செயல்முறைக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும். விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சி இந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்கான இன்றியமையா நிபந்தனைகளைத் தந்துதவுகிறது.

முதலாளித்துவப் பொருளாதாரத்தின் வரம்பிற்குட்பட்ட தன்மை, திறன் பெற்ற ஊழியர்களும் கம்ப்யூட்டர் தொழில் நுட்பமும் இருந்தபோதிலும் கூட பேரியல் பொருளாதார மட்டத்தை அடைவதைப்பற்றிக் கருத்தில் கொள்ளாதிருந்தாலும் கூட கிளைத்தொழில்களின் மட்டத்திற்குள் கூட பொருளாதாரக் கட்டுப்பாட்டை உயர்த்திக் கொள்ள முடியவில்லை. பொருளாதார முன்னேற்றத்திற்கான உண்மையான விஞ்ஞான திட்டச் செயல்கள் ஏதும் இல்லாதிருப்பதே, விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் செயல்திறன் முழுதும் பயன்படுத்தப் படாமல் இருப்பதற்கு முக்கியமான காரணம் ஆகும். அதே வேளையில், முதலாளித்துவப் பொருளாதாரம், விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் வளர்ச்சிக்கு ஏற்றவிதத்தில் உயர்கிறது. சுழல்நெருக்கடி என்ற இரும்புப் பிடிக்குள் சிக்கித் தவிக்கிறது.

விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி உற்பத்தி சமூகத் தன்மை அடையும் நிகழ்ச்சிப்போக்கை விரைவுபடுத்துகிறது. தவிர்க்கமுடியாதவாறு, தனி உடைமையின் உருவங்களில் குறிப்பிடத்தகுந்த மாற்றங்களுக்கு வழி செய்கிறது. இவ்வாறு சமுதாயம் புரட்சிகரமாக மாறுவதை இன்றியமையாததாக ஆக்குகிறது. இவ்வாறாக சோஷலிசத்துக்கான பொருளாயதத் தொழில் நுட்ப முன்தேவைகளைத் தந்துதவுகிறது. இது, சமூக வேலைப்பகுப்பிலும், தனிச் சிறப்பான உற்பத்தியின் வளர்ச்சியிலும், அதனுடைய கட்டமைப்பின் சிக்கலிலும், பல புதிய தொழில்கள் வளர்ச்சியடைவதிலும், காட்டப்படுகிறது. உற்பத்தியின் சமூகத்தன்மையின் வளர்ச்சியை இந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் சித்தரிப்பதனால் இவை விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் பயன்களைப் பெறுகின்ற தனி முதலாளித்துவ உருவங்களுடன் ஆழ்ந்து முரண்படுகின்றன. இது பொருளாதார முரண்பாடுகளைத் தீவிரமடையச் செய்கிறது. மேலும் இது முதலாளித்துவ அமைப்பு முறை முழுமையிலும் உறுதித் தன்மையில் அதற்கேற்ப ஒரு வீழ்ச்சியை ஏற்படுத்துகிறது.

விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியினால் கொண்டு வரப்படுகிற உற்பத்தி சமுதாயத் தன்மையடைவதன் வளர்ச்சி பூர்ஷ்வா சமுதாயத்தில் உள்ள பொருளாதார முரண்பாடுகளை மட்டுமல்லாது சமூக முரண்பாடுகளையும் தீவிரமடையச் செய்ய வழிகோலுகிறது. விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சி உழைக்கும் மக்களின் நிலையை இரண்டு வழிகளில் பாதிக்கிறது. ஒருபுறம், உழைக்கும் மக்களின் மதிப்பை உயர்த்துகிறது. தேவைகளை அதிகரிக்கிறது. தொடர்ச்சியான வர்க்கப் போராட்டத்தின் மூலம் தொழிலாளிகள் பெறுகிற உண்மை வருமானம் வளர்வதற்கான பொருளாயத சூழ்நிலைகளைப் படைக்கிறது. அதற்கு மாறாக விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் சாதனைகளை பயன்படுத்துவதற்கான முதலாளித்துவ முறைகள் தொழிலாளர்களின் உழைப்பை ஈடுபடுத்துவதில் அக்கறை காட்டுவதையும், தொழிலாளி வர்க்கத்தின் உடல்

திறமையின் விளைவை உயர்த்துவதற்கும், மனத்திறமையின் விளைவை உயர்த்துவதற்கும், சுரண்டலைப் பெருக்குவதற்கும், வேலையில்லாதோர் பட்டாளத்தை மிகுதியாக்குவதற்கும், வேலையில்லாத் திண்டாட்டத்தின் புதிய உருவங்களை வளரச் செய்வதற்கும், வழிசெய்கின்றன. விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியால் படைக்கப்பட்ட உற்பத்தி சாதனங்கள் ஒரு கம்யூனிஸ்ட் சமூக அமைப்பு முறைக்கு மாறுகிற காலத்தில் மனித இனத்தின் தொழில் நுட்ப விடுதலைக்கு வேண்டிய பொருளாயத சூழ்நிலைகளைப் புறவயமாகத் தந்துதவுகின்றன. உற்பத்தியில் நேரடியான நிகழ்ச்சிப் போக்குகளிலிருந்து. உயிருள்ள தொழிலாளியின் விடுதலைக்கு வேண்டியவற்றைத் தந்துதவுகின்றன. உழைப்பைப் படைப்புத் திறன்மிக்க ஒரு நிகழ்ச்சியாக ஆக்குவதற்கும், தனிமனிதர்களின் சுதந்திரமான அனைத்துத் துறை வளர்ச்சிக்கும் தேவையான, மிகுதியான ஓய்வுநேரம் கிடைக்குமாறு செய்கின்றன. ஆனால் முதலாளித்துவ சமுதாயச் சூழ்நிலையில், இந்தப் புதிய உற்பத்தி சாதனங்கள் ஏகபோகங்களின் இலாபங்களைப் பெருக்கவே மிகுதியாகப் பயன்படுகின்றன. அவை உழைக்கும் மக்களை மிகுதியாகச் சுரண்டுவதற்குரிய சாதனங்களாகப் பயன்படுகின்றன. மேலும் அவை பெருமளவு வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தோற்றுவிப்பதற்குப் பயன்படுகின்றன.

முந்திய நெருக்கடிகளின் படிநிலைகளோடு ஒப்பிட்டால் இந்த மூன்றாவது படிநிலையின் இந்தப் புதிய பகுதியின் சாரம், முதலாளித்துவத்தின் வெளி மற்றும் உள் முரண்பாடுகளின் தனிச்சிறப்பான இயக்கஇயலே ஆகும். உலக சோஷலிசம் உலக முன்னேற்றத்தில் ஒரு தீர்மானமான காரணியாக விளங்கும் சூழ்நிலையிலும், விஞ்ஞான, தொழில் நுட்பப் புரட்சியின் வேகம் இருவேறுபட்ட சமூக பொருளாதார அமைப்பு முறைகளில் வேகம் கூடிய சூழ்நிலையிலும் உலக சோஷலிசத்துக்கும், முதலாளித்துவத்துக்கும் இடையிலுள்ள முரண்பாடு புதிய அர்த்தம் பெற்றிருக்கிறது என்ற உண்மையில் இது விளங்கு

கிறது. தன் பங்கில் சோஷலிசம் ஏகாதிபத்தியத்தின் எதிர்ப்பை அடக்கும் திறன் வாய்ந்ததாகி உள்ளது. மேலும் முதலாளித்துவப் பொருளாதாரம் விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் தவிர்க்க முடியாத புறவயத்தொடர்ச்சியின் அடிப்படையில் அதனுடைய உள்முரண்பாடுகளின் பெருக்கத்தில் ஒருபெரும் செல்வாக்கைப் பயன்படுத்துகிறது. கார்ல் மார்க்ஸ் முன் கூட்டியே கண்டறிந்தது போல, ஒருபுறம், மிகப்பெரும் அளவிற்கு முதலாளித்துவத்தின் அடிப்படையான முரண்பாடுகளைத் தீவிரப்படுத்தி அதன் விளைவாகப் புரட்சிகரமான மாறுதலுக்கான சூழ்நிலைக்கு வழிவகுக்கிறது. மறுபுறம் முதலாளித்துவத்தின் நுகத்தடியிலிருந்து விடுவிக்கப்பட்ட தனிமனிதனின் அனைத்துப்பகுதி வளர்ச்சிக்கான செயல்திறனைத் தந்துதவுகிற வரலாற்று நிகழ்ச்சிப் போக்கை உள்ளடக்கியதாக இருக்கிறது.

**போ தியோ**

*நெதர்லாந்து கம்யூனிஸ்ட் கட்சி பொலிட் பீரோ உறுப்பினர்*

## கட்டமைப்பு நெருக்கடியின் காரணங்களும், நெதர்லாந்து நாட்டின் பொருளாதாரக் கொள்கை தொடர்பான பிரச்சினைகளும்

மூலதனத்தின் மறுஉற்பத்திக்கான நிலைமைகள் மோசமடைந்ததுதான் 1970 களில் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் முக்கிய இயல்பு. இந்த அமைப்பு முறையின் தீமைகள் எல்லாம் வெளிக்கொண்டு வரப்பட்டதன் விளைவாகப் பொதுமக்களுடைய நலன்களுக்கும் ஆட்சியாளர்களின் நலன்களுக்குமிடையே இருந்த முரண்பாடுகள் தனித்தனி நாடுகளிலும், உலகமட்டத்திலும் தீவிரமடைந்தன. பொது மக்களிடையே வளர்ந்து வரும் கலாசார, பொருளாயத கோரிக்கைகளை நிறைவு செய்யக் கூடிய வகையில் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியின் மீது செல்வாக்குச் செலுத்த, ஆளும் வர்க்கத்தினர் குறிப்பாக பெரும் பணக்காரர்கள் இயலாதவர்களாயிருந்தனர் என்பது மிகவும் தெளிவாயிற்று. வேலையில்லாத் திண்டாட்டம் நீண்ட காலத்தன்மை கொண்டதாகவும், எங்கும் பரவியதாகவும் இருந்தது. பெரும்பாலான மக்களுடைய வாழ்க்கைத்தரம் மிக அதிகமான அளவு வீழ்ச்சியுற்றது.

இந்தச் சூழ்நிலையின் நெருக்கடி நெதர்லாந்தை எவ்வளவு பாதித்தது என்பதைப்பற்றி ஆராய்ந்து கூற விரும்புகிறேன். ஏனெனில் அது ஒருசில குறிப்பிட்ட சர்வதேசப் போக்குகளைப் பிரதிபலிக்கிறது.

எங்களுடைய நாட்டிலுள்ள தொழிலாளிவர்க்கத்திற்கு இந்தச் சூழ்நிலை மாபெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. எனவே அது மிகவும் விவரமாகப் படித்தறியப்பட வேண்டிய ஒன்றாகும். என்ன நிகழ்ந்தது என்பது பற்றிய ஒரு மார்க்சீய-லெனினியப் பகுப்பாய்வு, ஏகபோகங்களின் வலிமையை அழித்தொழிப்பதையும், சோஷலிசப் பாதையை நோக்கி எங்கள் நாட்டின் முன்னேற்றத்திற்கான வழியைத் திருப்பி விடுவதையும், தன்னுடைய முக்கியமான கடமையாகக் கொண்டுள்ள தொழிலாளி வர்க்க இயக்கத்தின் வருங்காலத்தின்மீது ஒரு மாபெரும செல்வாக்குடையதாக இருக்கும்.

இந்த நோக்கத்தை அடைவதற்காக மேற்கொண்டு பல செயல்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஆனால் ஆழ்ந்து கவனமாகப் படித்து அறியப்படவேண்டிய பல பிரச்சினைகள் இன்னும் உள்ளன. மார்க்சீய சிந்தனையாளர்கள் உறுதியான பதில்களை இதுவரை தரமுடியாத சில கேள்விகள் இருக்கத்தான் செய்கின்றன. இம்மாதிரியான பிரச்சினைகளில் மார்க்சீய சிந்தனை முறையைப் பின் பற்றாத பொருளாதார வல்லுநர்களுடன் மனம் திறந்து வாதிப்பது நம்முடைய ஆராய்ச்சிகளுக்குப் பெரிதும் பயனுள்ளதாக இருக்கும். அது நம்முடைய கோட்பாட்டடிப்படையான அறிவை வளப்படுத்தி, நடைமுறையில் புரிந்து கொள்ளுமாறு செய்யவும், தொழிலாளி வர்க்க இயக்கத்தின் யுக்திகளையும், தந்திரங்களையும் வளர்ப்பதற்கும், ஒரு ஏகபோக ஆதிக்கத்திற்குப் பதிலாகப் பயன்படுத்தக்கூடிய ஜனநாயக மாற்று ஒன்றை நிர்ணயிக்கவும் உதவும்.

இரண்டாவது உலகப் பெரும் போருக்குப் பிறகு டச்சுப் பொருளாதாரம் ஏகபோகங்களின் வலிமையிலும், செல்வாக்கிலும் ஒரு குறிப்பிடத்தகுந்த வளர்ச்சியால் தனிச்சிறப்பு வாய்ந்ததாய் விளங்கியது. மறுசீரமைத்தல் காலத்தை விரைவான பொருளாதார வளர்ச்சி பின் தொடர்ந்தது, அப்போது, ஏகபோகங்களின் மிகுதியான இலாபங்கள் மூலதனக்குவிப்புக்கள் தொழிற்சாலைகளைப் புதுப்பிப்பதற்கும் அடிப்படையாகத் திகழ்ந்தன. ஏகபோகங்கள், கீழ்க்கட்டுமானத்தை உருவாக்குவதிலும், உற்பத்தி முறைகளைத் தோற்றுவிப்பதிலும், விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றங்களை நடைமுறையில் பயன்படுத்துவதிலும், தொழில் நுட்ப முன்னேற்றத்திலும், பொருளாதார முழுமையின் கட்டமைப்பிலும் தீர்மானமான செல்வாக்கு வகித்தன. அதன் விளைவாக ஒருபுறம் பல்வேறு தொழிற்சாலைகளுக்கும் ஏற்றுமதியின் புவியியல் மற்றும் துறையியல் அடிப்படையிலான கட்டமைப்பிற்கும், மூலதனத்தின் ஒன்றிணைந்த கட்டமைப்பிற்கும் உற்பத்தி முறைகளுக்கும், மறுபுறம் உழைக்கும் மக்களின் அளவு மற்றும் பண்புகளுக்குமிடையே நிலவுகிற முரண்பாடுகள் தீவிரமாக்கப்பட்டன. இன்று பெருமளவில் சர்வதேச மட்டத்தில் இயங்கி வருகிற, பெரிய ஏகபோகங்கள் முதலாளித்துவ அமைப்புமுறையின் படைப்புகள் ஆகும். மிக அதிகமான இலாபமே அவற்றின் உந்துவிசையாகத் திகழ்கிறது. இன்றைய ஏற்றத்தாழ்விற்கு முக்கியமான காரணங்கள், வேலைவாய்ப்பில் நெருக்கடி, வருமான பகிர்வில் நெருக்கடி, உற்பத்தியில், தேவைகளை நிறைவு செய்வதில் (பணவீக்கமும், வேலையில்லாத் திண்டாட்டமும் இந்த ஏற்றத்தாழ்வின் முக்கியமான வெளிப்பாடுகளாக விளங்குகின்றன) நெருக்கடி ஆகியவை ஏகபோக முதலாளித்துவத்தின் நெருக்கடியின் முக்கியமான முரண்பாடுகளில் மறைந்துள்ளன.

இந்த முரண்பாடுகள், 1974க்கு முன்னால் டச்சுப் பொருளாதாரத்தில் நிகழ்ந்த சில நிகழ்ச்சிகளால்

தோற்றுவிக்கப்பட்டன. 1950களும், 1960களும் புதிய விஞ்ஞான-தொழில் நுட்ப வளர்ச்சிகளை நடைமுறையில் பயன்படுத்தப்பட்டபோது மிகுந்துவந்த மூலதனக் குவியலைக் கண்டன. 1966-1970 களில் மொத்த தேசிய உற்பத்தியின் ஆண்டுச் சராசரி வளர்ச்சி விகிதம் 6 சதவிகிதம் ஆயிற்று. தொழிலில் அது இன்னும் அதிகமாயிற்று. இயந்திரங்களிலும் சிறு கருவிகளிலும், முதலீடு செய்யப்பட்ட பணத்தின் அளவு இந்தக் கால இடைவெளியில் ஆண்டுக்குச் சராசரி 10 சதவிகிதமாக உயர்ந்தது. மொத்த தேசிய உற்பத்திப் பொருளின் மொத்த மதிப்பில் ஒரு பங்காக, முதலீடுகளும் தொடர்ச்சியாக உயர்ந்தன.

இந்த நிகழ்ச்சிகள் அனைத்தும், உற்பத்தி சக்திகளின் வேகமான வளர்ச்சியுடன் இணைக்கப்பட்டன. இரும்பு தொடர்பான உலோகங்களிலும், இராசயனப் பொருட்கள், எண்ணெய், மின் தொழில் நுணுக்கம் ஆகியவற்றிலும், உணவுத் தொழிலிலும், போக்குவரத்துத் தொழிலிலும் இந்த வளர்ச்சி விகிதம் மிக அதிகமாக இருந்தது. பின்னர் இவற்றுடன் பெரும் சர்வதேச ஏகபோகங்கள்தான் ஆதிக்கநிலை வகித்தன. இந்தத் துறைகளில்தான் நவீன விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றங்கள் பயன்படுத்தப் பட்டன. ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான செலவின் பெரும்பகுதி, மிகுதியான நிதிவசதி படைத்த ஏகபோகங்களுக்குச் சென்றது.

தொழில் உற்பத்தியின் பெருக்கம் தொழிலாளிகளின் பெருகி வந்த உற்பத்தித் திறனால் கைகூடும் செயலாக ஆக்கப்பட்டது. 1963லிருந்து 1973 வரை தொழிற்சாலைகளில் தொழிலாளிகளின் உற்பத்தித் திறனின் ஆண்டுச் சராசரி 6 சதவிகிதத்தை அடைந்தது. ஆனால் தொழிலில் அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை 0.5 சதவிகிதம் குறைந்தது. இதன் காரணங்கள், பொருளாதார வளர்ச்சியில் மூலதனம் மிக அதிகமாகப் பயன்படுத்தும் போக்கிலும், தொழிலாளிகளை மிகுதியாகச் சுரண்டுவதிலும் மறைக்கப்

பட்டிருந்தன. மேலும் தொழிலாளர்களின் உற்பத்தித்திறன் உயர்வு வேகமாக வளர்ந்து வரும் தொழிலில் மட்டுமல்லாமல், வளர்ச்சி குறைந்த மற்றும் வளர்ச்சியில் தேக்கம் நிறைந்த தொழில்களிலும் காணப்பட்டன. தொழிலாளிகளைத் தீவிரமாகச் சுரண்டுவதன் அடிப்படையில் ஹாலந்தில், ஒரு முன்னேறிய தொழிற் தொகுதியமைப்பும், வளர்ந்துள்ள கீழ்க்கட்டமைப்பும் படைக்கப்பட்டிருந்தன.

1960 களின் முதல் பாதியின் போது, மூலதனம் மையப் படுத்தப்படுவது மிகவேகமாக உயர்ந்தது. பல பெரிய வங்கிகளை இணைப்பதன் மூலம் தொடர்ச்சியான இணைப்புகளின் அலை ஒன்று தோன்றியது. அவை தொடர்ச்சியான சர்வதேசக் கம்பெனிகளை நிறுவின. உற்பத்தி மையப்படுத்தப்பட்டது. பெரிய கம்பெனிகளின் பொருளாதார வலிமையைப் பல சிறிய கம்பெனிகள் எதிர்த்து நிற்க முடியாமலாகி விட்டது. இது பல நிறுவனங்கள் வாணிகத்தையே விட்டு ஓடும்படிச் செய்தது.

வட்டார நோக்கிலிருந்து பார்த்தால், மூலதனம் மையப்படுத்தப்படுவது, நெதர்லாந்தின் மேற்கு பாகத்தில் தீவிரமாயிருந்தது. வாழ்க்கைத்தரத்திலும், வேலையில்லாத் திண்டாட்டத்திலும், கீழ்க்கட்டுமானத்திலும், வட்டார வேறுபாடுகளை அதிகமாக அறிய முடிந்தது. எந்தச் சில வட்டாரங்கள் விவசாயத்தில், வேலையில்லாத் திண்டாட்டத்தில், அல்லது சுரங்கத் தொழிலில் மிகுதியாக உயர்ந்திருந்தனவோ அவைகளை நீண்ட தேக்க காலங்கள் பயமுறுத்தின.

மூலதன மையப்படுத்துவதும், உற்பத்திப்பெருக்கமும், சர்வதேசமயமாக்குவதுடன் இணைக்கப்பட்டதாயிருந்தது. அது பொதுச்சந்தை உருவாக்கப்பட்டபின் மிக அதிகமான வலிமையுடையதாயிற்று. மொத்த தேசிய உற்பத்தியில் (நிலையான விலைகளில்) ஏற்றுமதியின் பங்கும் இறக்குமதியின் பங்கும் 1960 இல் 35 சதவிகிதமாக இருந்தன.

1979இல் 50 சதவிகிதமாகவும் 1978 இல் 60 சதவிகிதமாகவும் உயர்ந்தன. உற்பத்தி சர்வதேசமயமாக்கப்படுவது மூலதனம் மையப்படுத்தப்படுவ்தன் ஒரு கூறாக விளங்குகிறது. உதாரணமாகத் தொழில் நிறுவனங்களில் 2 சதவிகிதம், நாட்டின் தொழில் பொருள்கள் ஏற்றுமதியின் மூன்றில் இரண்டு பகுதிக்குப் பொறுப்பாக உள்ளது என்பதிலிருந்து இதைக் கண்டுகொள்ள முடியும்.

மூலதனம் சர்வதேச மயமாக்கப்படுவது, டச்சு ஏகபோகங்களும், வெளிநாட்டு ஏகபோகங்களும்,— குறிப்பாக மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த ஏகபோகங்களும் ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்படுவதற்கு வழிசெய்தது. சர்வதேச ஏகபோகங்கள் நேரடியான முதலீடுகள் மூலமாகவும், தங்களின் நிறுவனங்களை வெளிநாடுகளில் நிறுவுவதன் மூலமாகவும் மூலதனத்தை ஏற்றுமதி செய்யத் தொடங்கின. இம்மாதிரியான மூலதன ஏற்றுமதிகள் குறிப்பாக 1970 களில் தீவிரமடைந்தது. நெதர்லாந்தில் தலைமையகங்களைக் கொண்டுள்ள பன்னாட்டு ஏகபோகங்கள், மேற்கு ஜெர்மனியிலும் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் பெரும் அளவு முதலீடு செய்துள்ளவை யாகும்.

பொருளாதார வளர்ச்சியின் மிக உயர்ந்த விகிதமும் அதன் பின்விளைவாக சர்வதேச ஏகபோகங்கள் தோன்றியதும், அவற்றின் ஆதிக்கம் வலுப்பெற்றதும் நெதர்லாந்து நாட்டு மக்களுக்கு மோசமான விளைவுகளைத் தந்தன. அதன் விளைவாக வர்க்கமுரண்பாடுகள் தீவிர மடைந்தன. 1960 களின் போது வாழ்க்கைத்தரம் ஒரு குறிப்பிட்ட அளவு உயர்ந்தது. குறிப்பாகத் தொழிலாளி வர்க்கம் !சட்டங்களால் கட்டுப்பாடாகச் சுமத்தப்பட்டு வந்த ஊதியக் கொள்கையை ஒழித்துக்கட்டிய பிறகு உழைக்கும் மக்களின் கல்வியின் மட்டமும், தகுதிகளின் மட்டமும் உயர்ந்தன. சமூகப் பாதுகாப்பும், சுகாதார சேவைகளும் விரிவாக்கம் செய்யப்பட்டன. உழைக்கும் நாளின் நேரம் குறைக்கப்பட்டது.

தொழிலாளர்களின் உற்பத்தித்திறன் வளர்ச்சி விகிதத்திற்கு ஏற்பவும் தொழில் நுட்ப சாதனைகள் புகுத்தப்பட்டதன் விளைவாக ஏற்பட்ட உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கு ஏற்பவும் உண்மையான வாழ்க்கைத்தரம் போதுமான அளவு உயரவில்லை. இதை உறுதியாக நிரூபிக்கக் கூடியதாக விளங்கிய குறியீடு தேசிய வருவாயில் ஒழுங்குபடுத்தக் கூடிய ஊதியத்தின் பங்குதான். அதனுடைய வளர்ச்சி விகிதம் தொடர்ச்சியாக, தொழிலாளர்களின் உற்பத்தித்திறன் வளர்ச்சி விகிதத்தைக் காட்டிலும் பின் தங்கியே தான் இருந்துவந்தது. தேசிய வருவாயில் ஒழுங்குபடுத்தக்கூடிய ஊதியத்தின் பங்கு 1963 ல் 41.4 ல் இருந்து 1970இல் 38.8 சதவிகிதமாகவும்1977ல் 32.6 சதவிகிதமாகவும் குறைந்தது. இவ்வாறு பின்தங்கியிருத்தல் தொழில் துறையில் மிக அதிகமான அளவு இருந்தது.

அதே வேளையில் தேசிய வருமானத்தில் தொழிலாளிகளின் வருமானம் (ஊதியங்களையும், சமூகப் பாதுகாப்பு நிதியிலிருந்து செலுத்தப்பட்ட தொகைகளையும் உள்ளடக்கிய) உயர்ந்தது. இது தொடர்ச்சியாக வளர்ந்து வரும் சமூகப்பாதுகாப்பு நிதியிலிருந்து செலுத்தப்பட்ட பணத்தினால்தான் என விளக்கப்படமுடியும். குறிப்பாக நோயுற்ற காலத்திலும், விபத்துக்களுக்கான காப்பீடுத் தொகையாகவும், வேலையில்லாதோருக்கு அளிக்கப்படும் உதவித் தொகையாகவும் அளிக்கப்பட்ட பணத்தினால்தான் என விளக்கப்படமுடியும். வேலை நேரத்தில் ஏற்படுகிற உடல் மற்றும் மன வேதனைகள் மிகுதியாவதால் ஏறத்தாழ ஒரு மில்லியன் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு நிதியிலிருந்து பணமும், ஓய்வூதியமும், வேலையில்லாதோருக்கான உதவியும் பெற்று வந்தனர். ஆனால் இவ்வாறு சமூகப் பாதுகாப்பிற்காகச் செலவிடப்பட்ட பணம், ஏகபோக விலை ஏற்றத்தினால் ஈடுசெய்யப்பட்டது. இவ்வாறான விலை ஏற்றம் சந்தையில் ஏகபோக நிலைகளினால் மிகவும் எளிதாயிற்று. இவ்வாறாக ஏகபோகங்கள் உழைக்கும்

மக்களுடைய வருமானத்தின் மீது, பெரும்பாலான சுமையை ஏற்றின.

முதலாளித்துவத்தின் கீழ் விஞ்ஞான—தொழில் நுட்ப முன்னேற்றத்தின் போது உழைக்கும் மக்கள் செய்ய வேண்டியதிருந்த தியாகங்களின் அளவு இப்போது நமக்குத் தெளிவாகிறது. 1974-75 நெருக்கடிக்கு முன்னரே கூட அரை மில்லியன் மக்கள் தங்களின் உழைக்கும் திறனை இழக்கச் செய்த வேலைச் சூழ்நிலையில் வளர்ந்து வந்த இக்கட்டான நிலை மிகவும் தெளிவாகத் தெரிந்தது.

இவ்வாறாக மிக அதிகமான இலாபத்தைப் பெறும் முயற்சியின் ஒரு பகுதியாக அறிமுகப்படுத்தப்பட்ட உழைப்பைச் சேமிக்கும் உற்பத்தி முறைகள், வளர்ந்துவரும் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கும் பணவீக்கத்திற்கும் வழி செய்தன. இது நெதர்லாந்தில் மட்டுமல்லாமல் முதலாளித்துவ உலகம் முழுமையிலும் நடைபெற்றது. தொழிலாளி வர்க்கத்தின் மீது இதன் விளைவு, மிகுதியான சுரண்டலிலும், உழைப்பு தீவிரமாக்கப்பட்டதிலும் வெளிப் பட்டது.

1970 களின் நடுவில் நிகழ்ந்த நெருக்கடியின் காரணங் களைப் பற்றியும், முதலாளித்துவப் பொருளாதாரத்தின் மீது அது கொண்டிருந்த செல்வாக்கைப்பற்றியும், இந்த மாநாட்டில் ஏராளமாக முன்னரே சொல்லப்பட்டிருக்கிறது. நெதர்லாந்தில் இந்த நெருக்கடியின் வளர்ச்சி பற்றியும், அதிலிருந்து மீள்வதற்காகச் செய்யப்பட்ட முயற்சிகள் பற்றியும் மட்டும் கூறுவதுடன் நிறுத்திக் கொள்ள விரும்பு கிறேன்.

1960 களில் வேகமாக வளர்ந்த உற்பத்தி 1968 க்கும் 1970 க்குமிடையில் ஓராண்டுக்கு 7 சதவிகிதமாக 1970களின் தொடக்கத்தில் ஒரு குறிப்பிடத்தகுந்த வேகக்குறைவினால் பின் தொடரப்பட்டது. 1971 க்கும் 1974 க்கும் இடையில் 4.9 சதவிகிதமாக இருந்தது. முடிவாக ஒரு வீழ்ச்சி 1975 இல்

ஏற்பட்டது (2 சதவிகிதம் குறைவு). 1975 லிருந்து 1978 வரை 2 சதவிகிதமாக உற்பத்தி சிறிதளவு உயர்ந்தது. இது நெருக்கடிக்கான தீர்வின் உறுதியற்ற தன்மையையும், நெதர்லாந்தில் புதிய பொருளாதாரப் பிரச்சினைகள் தோன்றியதையும் காட்டியது.

முதன்முதலாக தலையாய தொழில்களான இருப்பு தொடர்பான உலோகத் தொழிலிலும் கப்பல் கட்டுதலிலும், பொறியியல் தொழிலிலும், நெருக்கடி, அதன் உச்ச நிலையை அடைந்து விடவில்லை. எஃகுத் தொழிலில் அது குறைந்து கொண்டுவந்தது. பணமுதலீடு இன்னும் மிக மெதுவானதாகவே இருந்தது. நிகழ்கால மற்றும் சுழல் தன்மை வாய்ந்த காரணிகளைத் தவிர வேறு காரணிகளும் இருந்தன. நாட்டிற்குள் பண முதலீட்டில் ஒரு தேக்கநிலை இருந்துகொண்டே இருக்கிறது. தேசிய பொருளாதாரத்தின் நலன்களை உயர்த்த எதையும் செய்யாத நிலையில் வெளி நாடுகளில் முதலீடு செய்யப்படுகிற ஏறத்தாழ ஆண்டு தோறும் நான்கு பில்லியன் கில்டர்கள் ஏற்றுமதி செய்யப்படு கின்றன. இவ்வாறு சில இன்றியமையாத தொழில்கள் தங்களுக்குக் கிடைக்கக்கூடிய மூலதனத்தை இழந்து விடுகின்றன.

1975 க்குள் வேலையில்லாத் திண்டாட்டம் மிகஅதிகமாகி அது வேலையற்றோரின் எண்ணிக்கையை 200,000 (உழைக்கும் மக்களில் ஏறத்தாழ 5 சதவிகிதம்) ஆக்கிற்று. 1976—1978 இல் பொருளாதாரம் ஒரு சிறிதுபுத்துயிர்பெறத் தொடங்கியபோது அந்த எண்ணிக்கை குறைக்கப்படவும் இல்லை. மேலும், வேலையில்லாதோரின் உண்மையான எண்ணிக்கை அதிகாரவர்க்கத்தின் புள்ளி விவரங்களைக் காட்டிலும் மிகுதியாகவேதான் இருந்தது.

ஏகபோகங்களின் கொள்கைகளினால் பொது மக்களிடையே மிகுதியாக நிலவிவந்த வேலையில்லாத் திண்டாட்டத்திற்கான தீர்வு தடைப்பட்டது. குறிப்பாகப் பெண் தொழிலாளர்களும், இளைஞர்களுமே மிகுதியாகப்

பாதிக்கப்பட்டனர். பெண்களை மிகுதியாக வேலைக் கமர்த்திக் கொள்ளும் தொழில்களில்தான் வேலையில்லாத் திண்டாட்டம் மிக அதிகமாக இருந்தது.

சேவைத் தொழில்களில் அதிகரித்துவரும் செயல் முறைகள் மட்டும் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவிட முடியாது. மேலும், புதிய தொழில் நுட்ப வளர்ச்சிகளைப் பயன்படுத்துவது தொழில்களில் மேற்கொண்ட வேலை யில்லாத் திண்டாட்டத்தை ஏற்படுத்தும்.

சென்ற சில ஆண்டுகளாகப் பொருளாதார நிலையில் ஒரு மேம்பாடு இருப்பதனால் இலாபமட்டங்கள் ஏறத்தாழ மீட்கப்பட்டுவிட்டன என்றே கூறலாம். ஆனால், ஒரு சில பெரிய தொழில்களில் அவை குறிப்பிடத்தகுந்த அளவு உயர்ந்துள்ளன. வளர்ந்துவரும் இலாபம் வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினையை உறுதியாகத் தீர்த்துவிடும் என்று வாய் கிழியக் கூறப்பட்டவை பொய்த்துப் போய் விட்டன. இம்மாதிரியான எளிமையான திட்டங்கள் அவைகளின் விஞ்ஞான அடிப்படையற்றதன்மையை வெளிப் படுத்தியுள்ளன.

பொருளாதார வளர்ச்சியின் போக்குகளை மதிப்பீடு செய்வதில் இராணுவச் செலவுக்கு மிகுதியான முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. ஒரு பொருளாதார நெருக்கடியின் போது இராணுவ உற்பத்தியை விரிவடையச் செய்வதற் காகத் தங்களுடைய குறைந்த அளவே சுமை ஏற்றப்பட்ட உற்பத்தித் திறனளவைப் பயன்படுத்துவது ஏகபோகங் களுக்கு மிகுதியான இலாபம் தருவதாக இருக்கும், பொது மக்கள் தொடர்பான தொழில்களின் மீது ஒரு தெளிவான எதிர்மறையான விளைவை உண்டாக்குகிற தொழிலைப் பெருமளவில் இராணுவ மயமாக்குவது பணவீக்கத்திற்கு வழி செய்கிறது. உற்பத்தித் திறனற்ற செலவுகளின் சுமையை உழைக்கும் மக்கள் மீது ஏற்றுகிறது. இவ்வாறாக 1974-1975 நெருக்கடி வாழ்க்கைத்தரத்தின் மீது மிகவும் மோசமான விளைவுகளையே ஏற்படுத்தியது.

தொழில் திறனில் மிகுந்த வளர்ச்சியடைந்துள்ள முதலாளித்துவ நாடுகளின் அளவிடற்கரிய செயல்திறனுக்கும் அங்கு இன்று நிலவுகிற மிகமோசமான நிலைக்கும் இடையில் உள்ள பெரும் இடைவெளி அனைவரும் கண்டறிந்து கொள்ளுமாறு தெளிவாக உள்ளது. இந்தச் சூழ்நிலையை மிக நன்றாய் அறிந்து கொள்வதற்கு ஒரு விஞ்ஞான சோஷலிச அணுகுமுறையைக் கைக்கொள்வதும் பூர்ஷ்வா கண்ணோட்டங்களின் நிறைகுறைகளை ஆராய்வதும் இன்றியமையாதவையாக உள்ளன. இது தொடர்பாக எங்கள் நாட்டில் பெருமளவு பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. அதன் விளைவாக, ஏகபோகங்களின் மேலாதிக்கத்திற்கெதிராகவும், சமூக — பொருளாதாரப் பிரச்சினைகளை ஜனநாயக அடிப்படையில் தீர்ப்பதற் காகவும் வேண்டிய பல முக்கியமான பணிகள் நிறைவேற்றப் பட்டுள்ளன.

இன்றைய நெருக்கடியின் காரணங்களைப் பற்றிய விவாதத்தில் அரசு மையத்திட்டக் குழுவைச் சேர்ந்த ஹெச். டென் ஹார்டாக் என்பவரும் எச். சி. ஜான் என்பவரும் செய்துள்ள ஆராய்ச்சிகளே முக்கியமான இடம் வகிக்கின்றன. உற்பத்தித்திறன் முழுமையும் பயன்படுத்தப் படும் பொழுது, அதிகப்படியான கூலிகளுக்கும், குறைவான தேவைக்குமிடையே ஒரு நேரடியான தொடர்புள்ளது என்பதைக்காட்ட அவர்கள் முயன்றுள்ளனர். இந்தக் கருத்துரு தொழிலாளர்களின் உழைப்புச் சந்தையைப் பற்றிய புதிய மரபுவழிக் கோட்பாட்டின் முக்கிய ஆய்வுரை தான் என்பது எல்லோரும் அறிந்ததே. உண்மையான ஊதியத்தின் மிக உயர்ந்த மட்டம் என்ற பொருளில் அது வேலையில்லாத் திண்டாட்டத்தில் கட்டமைப்பின் இயல்பை சோதித்துப் பார்க்காமலேயே உண்மையென ஒத்துக் கொள்கிறது. இவ்வாறாக, ஊதிய உயர்வில் நிதானமான போக்கு முழு வேலை வாய்ப்பை மீண்டும் தோற்றுவிப்பதற் குப் போதுமான முன் நிபந்தனையாகக் கருதப்படுகிறது.

இந்த ஆராய்ச்சி வேலையில்லாத் திண்டாட்டத்தை விளக்குவதற்கான கோட்பாட்டடிப்படையிலான அடித்தளத்தைக் கொடுப்பதோடு, இந்தக் கோட்பாட்டை அனுபவத்தால் அறிந்து கொள்ளக்கூடிய சோதனையாகவும் விளங்கியது. இந்த நோக்கத்திற்காக ஆர். சோலோ அவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட மாதிரி (நிலையான தொழில் நுட்ப குணங்களைக் கொண்ட ஒரு கொடிமுந்திரிப்பருவ மாதிரி) பயன்படுத்தப்பட்டது.

அனுபவத்தின் அடிப்படையில் இந்தக் கோட்பாடுகளை உறுதிசெய்துகொள்ள ஆசிரியர்கள் 1959 க்கும் 1973 க்கும் இடைப்பட்ட காலத்தை எடுத்துக் கொண்டனர். ஊதியம் மிக வேகமாக உயர்ந்ததன் காரணத்தால் பொருளாதாரச் செயல்முறைகள் சரிந்தன. வேலையின் எண்ணிக்கை வீழ்ந்தது. இம்மாதிரியான முடிவுகள் இயல்பாகவே பெரும்பாலோரின் கவனத்தைக் கவர்ந்தன. இந்த மாதிரிகளே முன்னறிவுப்புகளைத் தயாரிக்கவும், அரசால் மேற்கொள்ளப்பட்ட கொள்கை நடவடிக்கைகளின் விளைவுகளைப்பற்றி ஆராயவும் பயன்படுத்தப்பட்டன.

பல்வேறு நிலைகளிலிருந்து இந்த அணுகுமுறை குறை கூறப்பட்டுள்ளது. உதாரணமாக வான் ஆர். ஏ. டிகினர்க், வான் எச். பி டெர் லான் மற்றும் கே. பி. டி. தியோ ஆகியோர் கூட்டாக எழுதிய கட்டுரையில், 1959 க்கு முன்னுள்ள காலத்தில் உற்பத்தியின் வளர்ச்சிக்கும், தொழிலாளர்களின் தேவைக்குமிடையேயான உட்செயல்களைப்பற்றிய ஏற்றுக் கொள்ளக்கூடிய வர்ணனை ஒன்றை இந்த மாதிரி கொடுக்க வில்லை என்று காட்டினார். மேலும் 1973 லிருந்து வந்த கால இடைவெளிக்கும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத மாதிரியாக இருந்தது. அது அதனுடைய முன்கணிப்பு மதிப்பிலிருந்து மிகுதியாக அதை இழிவுபடுத்தியது.

இம்மாதிரியான சோதனைகள், பொருளாதார நிகழ்ச்சிகளுக்கிடையேயுள்ள உண்மையான உட்தொடர்பைப்

பிரதிபலிப்பதைக் காட்டிலும், சோதனை செய்பவர்களின் குறிப்பிட்ட கொள்கை அடிப்படையிலான கண்ணோட்டத்தையே வெளிப்படுத்துகின்றன என விஞ்ஞானிகளின் வட்டாரங்களில் கருதப்படுகிறது. இவ்வாறாக இன்றைய பொருளாதார நெருக்கடிக்குக் காரணமான பொருளாதார வளர்ச்சியின் விதிகளைப் பற்றிய மார்க்சீயப் பகுப்பாய்வும், இன்றைய பூர்ஷ்வாக் கருத்துருவங்களைப் பற்றிய விமர்சனமும் மிகுதியாய்த் தேவைப்படுகின்றன. புதிய முன் மாதிரியான கருத்துருக் களைப் பற்றி ஆய்வுகளை மேற்கொள்வது தொழிலாளி வர்க்க இயக்கத்தின் சித்தாந்தப் போராட்டத்தில் ஒரு முக்கியமான படியாகும். இது பொதுமக்களின் தினசரிப் போராட்டத்தின் இயல்பிலும், மட்டத்திலும் ஒரு முக்கிய மான விளைவை ஏற்படுத்தக் கூடும்.

பொருளாதாரத்தின் ஏகபோகத்தன்மை உற்பத்தி சக்தி களின் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்துகிறது. மேலும் வங்கிகள் பொருளாதாரத்தின் மீது தங்களின் பிடிப்பைவலுப் படுத்தியுள்ளன. ஏகபோகங்களுக்கு உதவித்தொகைகள் மூலமும், கடன்கள் மூலமும், பல்வேறு முதலீடுகள் மூலமும் அரசு பெருமளவில் உதவியளிக்கிறது. இது சுற்றிச் சுற்றிவரும் வேலையில்லாத் திண்டாட்டம் என்ற நோயை உண்டாக்கியிருப்பதோடு புதிய சமூகப் பிரச்சினைகளையும் தோற்றுவித்துள்ளது. பணவீக்கம் பொருளாதாரச் சுமையின் பளு முழுவதையும் உழைக்கும் மக்கள் தாங்குமாறு செய்கிறது. பெரிய வாணிக நிறுவனங்கள் தங்களின் லாபத்தைப் பெருக்கிக் கொள்வதற்காகத் தங்களுடைய மூலதனத்தை ஏற்றுமதி செய்கின்றன.

நெதர்லாந்தின் சமூக பொருளாதார முரண்பாடுகள் தீவிரமடைந்துவருவது, கட்டமைப்பு இயல்புடைய மரபு வழியான அரசின் பொருளாதார கட்டுப்பாடுகள் மூலம் சீர் செய்ய முடியாத ஒரு பொருளாதார நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளது.

இந்தச் சூழ்நிலையை விளக்க முயல்கிற எங்கள் நாட்டு பூர்ஷ்வா கோட்பாடுகள், அல்லது இதைப்போக்க வழிகாண முயலும் கோட்பாடுகள், இன்றைய வளர்ச்சியின் அடிப்படையில் பயனற்றவையாகி விட்டன. உயர்ந்த கூலி தான் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தோற்றுவிக்கிறது என்றும், அதைப் போக்கப் பெரும் நிறுவனங்களின் இலாபமே வழி என்றும் கூறுகிற கோட்பாடும் இவ்வாறு பொய்யாகவே போய்விட்டது

இந்தக் கோட்பாடு பற்றிய விஞ்ஞான அடிப்படையிலான ஆய்வு ஒரு புதிய பொருளாதாரக் கொள்கையை வளர்ச்சியுறச் செய்வதன் மூலமே நெருக்கடியைப் போக்க முடியும் எனபொதுவாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப் படுகிறது. நெதர்லாந்து நாட்டுக் கம்யூனிஸ்ட்கட்சியின் அரசியல் மற்றும் சமூக ஆராய்ச்சி நிறுவனம், பொருளாதார நெருக்கடி தொடர்பான தன்னுடைய அணுகுமுறை பற்றிய திட்டத்தைச் சமர்ப்பித்துள்ளது.

முதலில் வேலை வாய்ப்புகளை அதிகரிக்கும் நடவடிக்கைகள் மூலம், வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிக்கப்பட வேண்டும். வேலையில்லாத் திண்டாட்டமும், நெருக்கடிகளும் இல்லாத முதலாளித்துவம் இருக்க முடியும் என்ற மாயத்தோற்றத்தை ஏற்படுத்தாமல், வங்கிகளுக்கும், பெரிய வணிக நிறுவனங்களுக்கும் கிடைக்கும் பெருமளவு வருமானத்தை மறுபகிர்வு செய்வதற்கான தீவிர முயற்சிகள் மேற் கொள்ளப்படவேண்டும். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு முக்கியமான பயனுள்ள வழியாக விளங்குவது இராணுவச் செலவைக் குறைப்பதே யாகும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ளவைதான் முக்கியமான நடவடிக்கைகளாகும். இவை மேற்கொள்ளப்பட்டால் வேலைவாய்ப்புகள் மிகுதியாகும்.

—மக்கள் தொகையின் வாங்கும் சக்தியைப் பெருக்குதல்.

— வேலை நாளைக் குறைப்பது.

— பொதுச் சேவைகளில் புதிய வேலை இடங்களைத் தோற்றுவிப்பது.

— பெரிய அளவில் வீட்டு வசதி செய்து கொடுப்பதைத் தொடங்குவது.

— சிறிய மற்றும் நடுத்தர உற்பத்தியாளர்க்கு உதவுதல்.

— வளரும் நாடுகளுடனும், சோஷலிச நாடுகளுடனும் வாணிகத்தைப் பெருக்குதல்.

மேற் கொண்ட நடவடிக்கைகளினால் ஏற்படக்கூடிய விளைவுகளைப்பற்றிய உண்மையான அளவு இயல் அடிப் படையிலான விளக்கமும் நிறுவனத்தின் திட்டத்தில் காணப் படுகிறது. வேலையில்லாத் திண்டாட்டத்தை எதிர்த்து நடைபெறும் போராட்டத்திற்கான நிதிவசதி செய்வது பற்றி, திட்டச் செயல்முறை ஒன்று தயாரித்தளிக்கப் பட்டுள்ளது. அதன் மூலம் வேலையில்லாதோரின் எண்ணிக்கை 200,000 ஆகக் குறைக்கப்படமுடியும். இதற்குப் பெரிய வணிக நிறுவனங்கள் மற்றும் வங்கிகளின் இலாபத்தைக் குறைப்பதும் இராணுவத் தொழிலை விட்டு நாட்டின் வருமானத்தைப் பெருக்குவதும், ஏகபோகங்களின் செயல்முறைகளின் மீது கட்டுப்பாடுகளைப் புகுத்துவதும், மூலதன ஏற்றுமதியைத் தடுப்பதற்கென வங்கிகளைக் கட்டுப் படுத்துவதும் இன்றியமையாதன ஆகும்.

உழைக்கும் மக்களிடையேயும், முற்போக்கு அரசியல் கட்சிகளிடையேயும் இந்த எண்ணங்கள் வேரூன்றி வருகின்றன. பொருளாதார நெருக்கடியின் விளைவாகவும், தொழிலாளர் சந்தையின் நிலை, அரசின் நிதியுதவி ஆகியவற்றின் விளைவாகவும் தோன்றுகிற பிரச்சினை களைப் பற்றிய வாதத்தின் அடிப்படையில், நாட்டின் சமூக-பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதையும் அதை சோஷலிசத்தின் வழி செல்ல வைக்கவும் நோக்கம் கொண்ட தொழிலாளி வர்க்கம் மற்றும் ஏகபோக எதிர்ப்பு இயக்கத்தில் ஒரு குறிப்பிடத்தக்க பெருக்கத்தைக் கொண்டு வர முடியும்.

பேராசிரியர் யு. வி. ஷிஷ்கோவ்
முனைவர் விஞ். (பொருளாதாரம்)
தலைமை ஆராய்ச்சியாளர்
உலகப் பொருளாதாரம் மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய நிறுவனம், சோவியத் ஒன்றியத்தின் விஞ்ஞானக் கலைக் கழகம்.

## விஞ்ஞானத் தொழில் நுட்பப் புரட்சியும், முதலாளித்துவப் பொருளாதார சூட்சுமத்தில் இன்றைய நெருக்கடியும்

விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியினால், உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தில் தோற்றுவிக்கப்பட்ட பல நெருக்கடி தொடர்பான விஷயங்கள் ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் நிகழ்வதாகவும் நீண்டகாலத்திற்குத் தொடர்ந்து நிலவுவதாகவும் நாட்பட்டதாகவும், கட்டமைப்பு இயல்புடையதாகவும் இருப்பதனால் அது வெறும் சூழல் தன்மை மட்டும் கொண்டதல்ல என போரிஸ் பொனமரேவ் அவர்கள் தன்னுடைய தொடக்க வுரையில் கூறினார்கள். அவை தெளிவாக இரண்டு பெரிய பிரிவுகளாக உள்ளன. அதில் முதலாவது, செயல் களின் இயல்புகளில் ஏற்படும் குழப்பம் என அழைக்கப் படலாம். நிதி நெருக்கடியும் பன்னாட்டு செலுத்தல் நிலையில் ஏற்படும் நெருக்கடியும், உலகக் கடன் வசதி

முறையின் உறுதியற்ற தன்மையும், எங்கும் நிலவுகிற பணவீக்கத்தின் சுழல் ஏணி இயக்கமும் இதனுள் அடங்கும். முதலாளித்துவப் பொருளாதாரத்தின் சூழ்ந்த ஒரு சீரற்ற தன்மையால் பாதிக்கப்படுகிற கட்டமைப்பு நெருக்கடி என்று அமைக்கப்படுகிற நெருக்கடி இரண்டாம் பிரிவில் அடங்கும். அது ஆற்றலிலும், மூலப்பொருட்களிலும் உற்பத்தியிலும் ஏற்படும் நெருக்கடிகளை உள்ளடக்கிய தாகும். உயிர்வாழ் சூழ்நிலைப் பாதுகாப்பு நெருக்கடிக்கு— அதாவது ஒரு புறம் சமுதாயத்திற்கும் மறுபுறம் சூழ்நிலைக்கும் இடையே நிலவும் சமநிலையைக் குலைக்கிற நெருக்கடிக்கு — ஒரு தனிச் சிறப்பான இடம் ஒதுக்கப்பட வேண்டும். இது முதலாளித்துவ சூழ்நிலையில் மிக அதிகமான அளவு சிதைக்கப்பட்ட உருவைப் பெற்றுள்ள தாகவும் மிக அதிக அபாயம் நிறைந்த மட்டத்திலும் உள்ளது.

1960 களின் பிற்பகுதியிலும் 1970 ன் தொடக்கத்திலும் ஏறத்தாழ அதே நேரத்தில் அதன் சக்தி அனைத்துடனும் இந்த நெருக்கடி தொடர்பானவை அனைத்தும், தெளிவான தாயிற்று என்பது ஒரு தனிச்சிறப்பான உண்மையாகும். இந்தக் காலத்தில்தான் சர்வதேசப் பணவியல் உறவுகளில் ஏற்பட்ட குழப்பங்கள் ஒரு நெருக்கடியாக வளர்ந்தன. முதலாளித்துவ நாடுகளில் பணவீக்கத்தினால் விலைகளில் ஏற்பட்ட உயர்வு மிகவும் அபாய எல்லையை எட்டியது. உலகக் கடன் வசதி அமைப்பு முறைகளில் ஒரு சமமற்ற தன்மை நிலவியது. முக்கியமான முதலாளித்துவ சக்திகளுக் கிடையே பன்னாட்டுச் செலுத்தல் நிலையில் உறுதியற்ற தன்மை நிலவியது. அப்பொழுதுதான் ஆற்றல் நெருக்கடியின் முதல் அடையாளங்கள் தோன்றின. உணவு பற்றிய பிரச்சினை மிகவும் அதிகமாகத் தீவிரமடைந்தது.

பல கேள்விகள் எழுகின்றன. முதலாளித்துவப் பொருளாதாரத்தில், செயல்முறையில் சீர்குலைவின் ஒரு தொகுதியையும் கட்டமைப்பில் சீர்குலைவின் ஒரு

தொகுதியையும் ஒரே நேரத்தில் வெடித்து வெளிப்படும்படிச் செய்தது எது? ஏன் இந்த நெருக்கடிகள் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் தோன்றின? வேறு நேரங்களில் ஏன் தோன்றவில்லை? எவ்வளவு காலத்திற்கு இவையனைத்தும், தொடர்ந்து நடைபெறும்?

இந்தக் கேள்விகள் அனைத்துக்கும் ஏற்ற பதில்களை நெருக்கடி நிகழ்ச்சிகளைப் பற்றிய அடிப்படையான காரணங்களைச் சரியாகப் புரிந்து கொள்வதன் மூலமே பெறமுடியும். முதலாளித்துவப் பொருளாதாரத்தின் ஆழ்ந்த சீர்கேட்டின்—குறிப்பாக அதனுடைய பொருளாதார சூட்சுமத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடியின்—வெளிப்பாட்டையே குறிக்கிறது என நாங்கள் கருதுகிறோம். ஒவ்வொரு பொருளாதார சூட்சுமமும், ஒரு குறிப்பிட்ட அமைப்பின் பொருளாதார விதிகளுக்கு ஒத்திசைவானதாகவுள்ள சமூக மறு உற்பத்தியின் உருவங்கள், முறைகள், கருவிகள் ஆகியவற்றின் அமைப்பு முறைதான் என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும்.

பொருளாதார சூட்சுமம், உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியுடனும், உற்பத்தி சமூகத்தன்மையடைவதுடனும் சமூக அமைப்புகளுடனும், நேரடியான, மிக அதிகமான அளவில் நெருக்கமான தொடர்புடையவையாக விளங்குகின்றன. உற்பத்தி சக்திகளில் ஏற்படும் மாற்றங்களையும் உற்பத்தி ஓரிடத்தில் குவிவதன் மட்டத்தையும், தொழில் துறையில் தனிச்சிறப்புப் பெறுவதையும் கூட்டுறவையும், உற்பத்தியின் சமூக அமைப்பில் மேம்பாட்டைக் கோருகிற துறைகளுக்குள்ளான தொடர்பு, ஒரு துறைக்குள் உள்ள தொடர்பு ஆகியவற்றின் வளர்ச்சியில் ஏற்படும் மாற்றங்களையும் முதலில் அறிந்து கொள்வதுதான் மிக இன்றியமையாதது ஆகும். பொருளாதாரம் முழுமையும் ஆகவே, சமூக அமைப்பு முறை முழுவதும் முறையாக செயல்படுவதை உறுதிப்படுத்துவதற்காக உற்பத்தியில் எழுகின்ற புதிய சூழ்நிலைகளுக்கு ஏற்ப அது தன்னைத் தானே தகவமைத்துக் கொள்ளவேண்டும்.

இந்தக் காரணங்களினால் பொருளாதார சூட்சுமம் தரன் எந்த ஒரு பொருளாதார அமைப்பு முறையிலும் ஒரு சமூக பொருளாதாரக் கட்டமைப்பிலும் அதிகமான நெகிழ்வுத்தன்மையும் செயல்திறனுமுள்ள பகுதியாகும். ஆதிக்கம் செலுத்துகிற உற்பத்தி உறவுகளால் நிர்ணயிக்கப் படுகிற, அதனுடைய சமூக இயல்பை மாற்றாமல் கொடுக்கப் பட்டுள்ள உற்பத்தி முறைக்குள் ஏற்படும் பெருமளவு மாற்றங்களைத் தாங்கக்கூடியதாகவுள்ளது. உதாரணமாக நிலப்பிரபுத்துவப் பொருளாதாரத்தில் பொருளாதார சூட்சுமத்தின் மூன்று அடிப்படையான மாதிரிகள் உழைப்பு பொருட்கள் மற்றும் பணம் ஆகிய மூன்று அடிப்படையான மாதிரிகள் தொடர்ச்சியாக ஒன்றுக்குப் பதிலாக ஒன்று மாற்றிக் கொள்ளப்பட்டன. பொருளாதார சூட்சுமத்தின் மாறுதல்கள், உற்பத்தியில்ருந்து அதிக தூரம் விலகியிருக்கும் அடிட்படை மற்றும் மேற்கட்டுமானத்தின் அந்தப் பகுதிகளுக்குப் பின்னர் எடுத்துச் செல்லப் படுகின்றன.

இவ்வாறாக, சொல்லப்போனால் பொருளாதார சூட்சுமம், ஒவ்வொரு உற்பத்தி முறையிலும் அதனுடைய உற்பத்தி சக்திகளுக்கும், அதனுடைய உற்பத்தி உறவுகளுக்கு மிடையில் உள்ள முரண்பாடு அடிப்படையான முரண்பாடு களின் முன்னணியில் இருக்கிறது. பிணக்குகள் நிறைந்த சமூக அமைப்புகளில் உற்பத்தி சக்திகளிடத்திலிருந்து இந்தச் சூட்சுமத்தின் மீது சுமத்தப்படும் நிர்ப்பந்தம் மாறுதலை விரும்பாத உற்பத்தி உறவுகளின் கிளர்ச்சியின்மையால் தடுத்து நிறுத்தப்படுகிறது. ஆகவே பொருளாதார சூட்சும மாறுதல்கள்தொடர்ச்சியாக ஏற்படுத்தப்படுவதற்கு மாறாக விட்டு விட்டு நிகழ்கின்றன. சமூக உற்பத்தியின் அமைப்புக் களின் புதிய உருவங்களில் உற்பத்தி சக்திகளின் தேவைகளி லிருந்து தோன்றுகிற முரண்பாடுகள் போதுமான செயல் திறனை அடையும்போது அவை நெருக்கடிகளாக உருப் பெறுகின்றன. ஒரு நெருக்கடிக் காலத்தில் பொருளாதார சூட்சுமம் முறைதிரிந்து போகிறது. இது இயல்பாகவே

பொருளாதார முழுமையின் வளர்ச்சி விகிதம் குறைவதுடனும், சமூக நெருக்கடிகளும், மோதல்களும் மிகுதியாவதுடனும் அல்லாமல் பொருளாதாரம் செயல்படும் முறையையும் பாதிக்கிறது.

பொருளாதார சூட்சுமத்தில் ஏற்படும் ஒரு நெருக்கடியை சமூக அமைப்புமுறை முழுமையிலும் ஏற்படும் ஒரு நெருக்கடியுடன் குழப்பிக் கொள்ளக் கூடாது. அது மார்க்ஸ் கூறியதுபோல "உற்பத்தி சக்திகள் அனைத்திற்கும் போதுமானதாக இருக்கக்கூடிய அளவு வளர்ச்சியடைவதற்கு முன்னர் சமூக அமைப்பு எப்போதும் அழிக்கப்படுவதில்லை"[1] பொருளாதார சூட்சுமத்தில் ஏற்படும் நெருக்கடி ஒரு குறிப்பிட்ட அமைப்பில் ஒரு நெருக்கடி தோன்றுவதற்கு முன்னரும், தோன்றும் போதும் ஏற்படலாம். பிந்திய சமயத்தில் அவை பொது நெருக்கடியை வலிமையுறச் செய்யவும், அதன் முடிவை விரைவுபடுத்தவும் பயன்படுகின்றன. பொருளாதார சூட்சுமத்தில் ஏற்படும் நெருக்கடிகள் பொது நெருக்கடியின் ஒரு படிநிலையிலிருந்து மற்றொரு படிநிலைக்கு மாறும் காலத்தில்தான் எப்போதும் நிகழ வேண்டும் என்பது கட்டாயமில்லை.

இன்றைய முதலாளித்துவப் பொருளாதார சூட்சுமத்தில் நடைபெற்றுவரும் நெருக்கடியின் சரியான இடத்தையும், அதன் இயல்பையும், அது நிலவக் கூடிய காலத்தையும் புரிந்துகொள்ள இந்த சூட்சுமத்தில் நடைபெறும் தொடர்ச்சியான நெருக்கடிகளுக்குள்ளே இருந்து அதை ஆராய்வது இன்றியமையாதது ஆகும். "ஒரு சமூக விஞ்ஞானத்தில் மிகவும் நம்பிக்கைக்குரிய ஒரு விஷயம தொடர்பாகக் கிடைக்கின்ற ஏராளமான புள்ளிவிவரங்களுக்குள்ளோ, அல்லது மோதுகின்ற ஏராளமான கருத்துகளுக்குள்ளோ அகப்பட்டுத் தத்தளிக்க அனுமதிக்காமல் இருக்கும் ஒரு பழக்கத்தைப் பெறுவதற்கு மிகவும் இன்றியமையாததாக விளங்குகிற ஒருவிஷயம், அதன் உள்ளே

நிலவும் வரலாற்றுத் தொடர்பை மறக்காமல் இருப்பதும், இந்த நிகழ்ச்சிகள் வரலாற்றில் எப்படித் தோன்றின என்பதை ஆராய்வதும், அதனுடைய வளர்ச்சியில் முக்கியமான படிநிலைகள் எவை என்பதை அறிவதும், அதனுடைய வளர்ச்சியின் அடிப்படையில் அது இன்று என்னவாக ஆகியுள்ளது என்பதை ஆராய்வதும் ஆகும்''[2] என்று லெனின் எழுதினார்.

ஏகபோக முதலாளித்துவத்துக்கு முந்திய காலத்தில் பொருளாதாரத்தை ஒழுங்குபடுத்திய முக்கியமான ஒன்று, தானே இயங்கிய அல்லது லெனின் கூறியதைப்போல் பொருள் உற்பத்தியாளர்களின் முதுகுக்குப் பின்னால் இயங்கிய சுதந்திரமான போட்டியின் சந்தை சூட்சுமம் என்பதுதான் ஆகும். ஒரு குறிப்பிட்ட காலம்வரையில் சமூக உற்பத்தியை ஒழுங்குபடுத்தும் கருவியாக அதனுடைய பணிகளைச் சிறப்பாகவே இந்த சூட்சுமம் செய்து வந்தது. பொருளாதாரச் சிறப்புமிக்க காலத்திலும்கூட மோதல்கள் இல்லாமலோ, உறுதியற்ற தன்மை இல்லாமலோ சமூக உற்பத்தி வளர்ந்ததில்லை என்பது உண்மைதான். ஆனால் 1825 க்குப் பின்னால் தொழில் சிறப்புப் பெற்ற நாடுகளில் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் அளவுக்கு மிஞ்சிய உற்பத்தி நெருக்கடி குறுக்கிடத் தொடங்கியது.

என்றும் சுதந்திரமான போட்டி சிறப்புற்று விளங்கிய போது இந்த ஏற்பாடானது மிகவும் உயர்ந்த வளர்ச்சி விகிதத்தை உறுதி செய்தது. 1850-ம் ஆண்டிலிருந்து 1872-ம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் உலகத்தின் தயார் நிலைப்பொருட்கள் ஒவ்வோர் ஆண்டுக்கு சராசரி 4.3 சதவிகிதம் என்ற அளவாக உயர்ந்தன. சுரங்கத் தொழிலில் அது ஆண்டுக்கு சராசரி 6.2 சதவிகிதமாக இருந்தது. இந்தப் பொருளாதாரச் சிறப்பு பொருளாதார சூட்சுமத்தின் திறமையால் மட்டும் கட்டுப்படுத்தப்படாமல் தொழிற் புரட்சியின் தொழில் நுட்ப வளர்ச்சியாலும் வேகமாக வளர்ந்து வந்த சர்வதேச வாணிகத்தினால் ஏற்றுமதிக்காக

பொருளுற்பத்தி ஊக்குவிக்கப்பட்டதாலும், வேறு பல காரணிகளாலும் கட்டுப்படுத்தப்பட்டது என்பது தெளிவு.

ஆனால் 1860 களிலும் 1870 களிலும் இந்தப் பொருளாதார வளர்ச்சி குறிப்பாக சுதந்திரமான போட்டியின் விளைவாக, உற்பத்தி வேகமாக ஓரிடத்தில் குவிக்கப்படுவதையும் தொழில் மற்றும் வங்கித் தொழில் துறையில் ஏகபோகங்கள் தோன்றுவதையும், உற்பத்தி சமூக மயமாவது ஒரு புதிய படிநிலைக்கு உயர்வதையும் கண்டது. ஏகபோகங்களின் வளர்ச்சி பொருளாதாரத்தின் ஒரு சில குறிப்பிட்ட முக்கியமான பகுதிகளை, சந்தைக் கட்டுப்பாட்டின் வட்டத்திலிருந்து பின்வாங்கச் செய்தது. இவை பல டிரஸ்டு மற்றும் வேறு வணிக நிறுவனங்களின் கீழ்வந்தன. அவைகளில் போட்டி என்பது நடைமுறையில் மறைந்தே போயிருந்தது அல்லது அந்த டிரஸ்ட்டுகள் அல்லது அவைகளின் இணைப்புக்களின் கீழ் போட்டி குறிப்பிடத்தகுந்த அளவு அடக்கி வைக்கப்பட்டிருந்தது. வேறுமாதிரி கூறினால் ஏகபோகங்கள் மிகத் தெளிவாகவே சந்தை சூட்சுமத்தின் செயல் முறைகளை மீறின. மேலும் அது மிகவும் குறைந்த திறனுடன் பணியாற்றின. சுழல் நெருக்கடிகள் மேலும், மேலும் நீண்டவை ஆயின. முடிவாக 1873 இல் முக்கியமான முதலாளித்துவ நாடுகள் அனைத்திலும் பெரும் பொருளாதார விபத்து ஒன்று நிகழ்ந்தது. இந்த விபத்தின் விளைவுகளிலிருந்து மீள்வதற்கு அந்த நாடுகளுக்கு 20 ஆண்டுகளுக்கு மேலாயிற்று. இந்தக்கால இடைவெளியில் (1873 லிருந்து 1894 வரை) பதனீட்டுத் தொழிலில் சராசரி ஆண்டு உற்பத்தி 2.8 சதவிகிதத்திற்குக் குறைந்தது. சுரங்கத் தொழிலில் அது 3.8 சதவிகிதமாகக் குறைந்தது. ஏகபோக முதலாளித்துவத்திற்கு முந்திய முதலாளித்துவம், ஏகபோக முதலாளித்துவம் வளர்ச்சியடைந்த போதும் அதற்கு ஒத்திசைவான பொருளாதாரத்தின் சந்தைக் கட்டுப்பாட்டைக் கலப்பு சந்தை ஏகபோகக் கட்டுப்பாடாக மாற்றும் போதும் முதலாளித்துவ பொருளாதார

சூட்சுமத்தால் கொண்டுவரப்பட்ட முதல் நெருக்கடி இதுதான்.

இந்த நவீனப்படுத்தப்பட்ட பொருளாதார சூட்சுமம், பொருளாதார வளர்ச்சியை ஒரு சீராக்கவும், வளர்ச்சி விகிதத்தை உயரச்செய்யவும் அனுமதித்தது. 1894 லிருந்து 1913 வரை முதலாளித்துவ நாடுகளிலிருந்த பதனீட்டுத் தொழில்களின் உற்பத்தியளவு ஆண்டிற்குச் சராசரி 4.7 சதவிகிதம் உயர்ந்தது. அதே வேளையில் சுரங்கத் தொழிலில் ஆண்டுச்சராசரி 5.8 சதவிகிதமாக உயர்ந்தது. இந்தப் புதிய சூட்சுமம், அகதகன இயந்திரம் போன்ற புதிய கண்டு பிடிப்புகளைத் தனியார் தொழிலில் மிகப் பெரும் அளவில் பயன்படுத்த அனுமதித்தது. அதன் அடிப்படையில் புதிய பல பெரும் வாய்ப்புகளைப் பெற்றிருந்த பேருந்துத்தொழில், போக்குவரத்துத் தொழில் போன்றவற்றைப் படைக்கவும், அவற்றின் அடிப்படையில் வான் பயணத் தொழிலுக்கான அடித்தளத்தைப் படைக்கவும் அனுமதித்தது. மின்சக்தி உற்பத்தி இரயில்வேத் தொழிலையும் கப்பல்தொழிலையும் போல வேகமாக வளர்ச்சியடைந்தது. இம்மாதிரியான சாதகமான சூழ்நிலையில், மூலதனம் செறிவுறுதலும், ஒருமுகப்படுத்தப்பட்டதும், இதுவரை கேள்வியுற்றிராத எல்லையை அடைந்தன. தேசியப் பொருளாதாரத்தின் அனைத்துக் கிளைகளிலும் தன்னுடைய பிடிப்புகளை மெதுவாகப் பரப்பி வந்த நிதி மூலதனமாக வங்கிகளும், தொழிற்சாலைகளும் வைத்திருந்த மூலதனம் இணைந்தது. அது முதலாளித்துவ நாடுகளின் பொருளாதார வாழ்வு முழுவதிலும், அவைகளின் வெளிநாட்டுக் கொள்கை முழுவதிலும் தன்னுடைய தீர்மானமான செல்வாக்கைப் பயன்படுத்தியது.

இவையனைத்தும் உற்பத்தி சமுதாயத் தன்மையடைவதற்கு வழி செய்தன. உற்பத்தி சக்திகளின் விகிதாச்சார அடிப்படையிலான பகிர்வுத் துறைகளுக்குள்ளே நிலவுகிற பொருத்தங்களைப் பேணிக்காப்பது, தகுதிபெற்ற

தொழிலாளர்களுக்குப் பயிற்சியளிப்பது, தேசிய விஞ்ஞான செயல்திறனைப் பெருக்குவது போன்ற பிரச்சினைகளுக்கும் பேரியல் பொருளாதார மட்டத்தில் பகுத்தறிவுக்குகந்த ஒரு தீர்வு தேவைப்படுகிறது. ஆனால் இந்த ஏகபோக சூட்சுமம் தேசிய மட்டத்தில் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இயலாததாக இருந்தது. ஏகபோகங்களால் உருச்சிதைக்கப்பட்டு பலமிழக்கச் செய்யப்பட்டிருந்த சந்தை சூட்சுமமும் இதைப் போன்றே பொருத்தமானதாக இல்லை. முதலாளித்துவப் பொருளாதார சூட்சுமத்தில் ஒரு புதிய நெருக்கடி தோன்றியது. அது முதலாம் உலகப்பெரும் போரின் போது தொடங்கியது, போர்களுக்கு இடையிலான காலத்தில் நீடித்தது. முடிவாக இரண்டாம் உலகப்பெரும் போர்க்காலத்தில் முடிவுற்றது. அதனுடைய உச்சநிலைதான் முதலாளித்துவ உலகத்தைத் தாக்கிய, மிக அதிகமான அளவு ஆழ்ந்த, அழிவுத்திறன் நிறைந்த சுழல் நெருக்கடியாகும். அது 1929 க்கும் 1933 க்கும் இடையில் ஏற்பட்டது. அது பொருளாதார சூட்சுமத்தை மாற்றியமைக்கத் தூண்டு கோலாக விளங்கியதோடு அரசு ஏகபோக இயல்புகளை விரைவுப்படுத்தியது. இந்த இயல்புகள் இரண்டாவது உலகப்பெரும்போரினால் மேலும் வலிமையுறச் செய்யப் பட்டு, ஒன்றிணைக்கப்பட்டன.

பொருளாதார சூட்சுமத்தின் இரண்டாவது நெருக்கடியின்போது உலக முதலாளித்துவப் பொருளாதாரம் ஏறத்தாழ தொடர்ச்சியான பொருளாதார வீழ்ச்சியை அனுபவித்தது. இரண்டு போர்களுக்கும் இடைப்பட்ட காலத்தில் பேருந்துத் தொழிலும் விமானத் தொழிலும் வேகமாக வளர்ச்சியடைந்திருந்தபோதிலும், செயற்கை நூலிழைகளை உற்பத்தி செய்வதைச் சுற்றிலும் ஏராளமான புதிய இரசாயனத் தொழில்கள் வளர்ந்திருந்த போதிலும், பெரிய டர்பைன் இயந்திரங்களை அறிமுகப் படுத்தத் தொடங்கியிருந்தபோதிலும் 1918-க்கும் 1938-க்கும் இடையில் முதலாளித்துவ ஆண்டுச்சராசரி உற்பத்தி மிகுதி

யாகச் சரிந்திருந்தது. பதனீட்டுத் தொழிலில் அவை 2.2 சதவிகிதமும் சுரங்கத்தொழிலில் 1.8 சதவிகிதமும் வீழ்ச்சியடைந்திருந்தன. இந்த நெருக்கடி 1940 களின் பிற்பகுதியில் தொழில் மறுஉற்பத்தியின் மீது அரசு ஏகபோகக் கட்டுப்பாடு ஏற்பட்டபோது மிக உயர்ந்த நிலையை அடைந்தது. முதலாளித்துவப் பொருளாதார சூட்சுமம் இப்பொழுது மூன்று அடுக்குக் கட்டமைப்புடையதாக இருந்தது. அதன் உச்சியில் பேரியல் பொருளாதாா அரசுக் கட்டுப்பாட்டுடன் பொருளாதாரச் செல்வாக்கின் ஏகபோக நெம்புகோல்களால் உச்சிக்கு உயர்த்தப்பட்ட சந்தை சக்திகளின் தான்தோன்றித்தனத்தின் செல்வாக்கின் வீச்சு அடித்தளத்தில் உள்ளது.

ஆனால் இம்மாதிரியானமேம்பாடடையச்செய்யப்பட்ட சூட்சுமம், தனித் தேசிய பொருளாதாரங்களுக்குள் உண்மையான சக்திவாய்ந்ததாக இருந்தது. அதாவது ஒவ்வொரு நாட்டின் ஆட்சி எல்லைக்குள்ளும், சக்திவாய்ந்ததாக இருந்தது. அதே வேளையில் சர்வதேசப் பொருளாதார உறவுகளானவை சந்தையின் சக்திகளின் கையிலும் சர்வதேச ஏகபோகங்களின் கையிலும் விடப்பட்டன. 1950 களின் தொடக்கத்தில் ஆரம்பித்த விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சி சர்வதேச வாணிகத்திலும், கடன்வசதிகளிலும், உற்பத்தியிலும், விஞ்ஞானம், தொழில் நுட்பம் மற்றும் பிற பொருளாதாரத் தொடர்புகளிலும், சர்வதேச வேலைப்பகுப்பிலும் ஒரு குறிப்பிடத்தக்க உயர்வை ஏற்படுத்தியது. முதலாளித்துவ நாடுகள் ஒன்றை ஒன்று சார்ந்திருப்பதன் மட்டத்தை உயர்த்தியது. பொருளாதார வாழ்வை சர்வதேசத் தன்மையடையச் செய்தது. முதலாளித்துவ உலகத்தில் குறிக்கோளுடைய, வளர்ச்சி விகிதத்தின் திட்டமிட்ட கட்டுப்பாடு, மிகவும் இன்றியமையாததாக ஆகியிருந்த ஒரு நிலை ஏற்பட்டது ஆனால் முதலாளித்துவ பொருளாதார சூட்சுமம், குறிப்பாக சர்வதேசப் பொருளாதார உறவுகளைக் கட்டுப்படுத்திய அந்த சூட்சுமங்கள் அதன் முன்னிருந்த பிரச்சினைகளைச்

சமாளிக்க முடியவில்லை. இவ்வாறாக, முதலாளித்துவ உலகம் இன்றைய நெருக்கடி காலத்தை வந்தடைந்தது.

1960 களின் பின்பகுதியிலும் 1970 களின் தொடக்கத்திலும் நெருக்கடி தொடங்கியது. இந்தக் காலத்தில்தான் உற்பத்தி சர்வதேச சமுதாயத்தன்மையடையும் மட்டத்திற்கும், உற்பத்தியின் மீது ஒரு குறிக்கோளுடன் கூடிய கட்டுப்பாட்டை நிறைவேற்றுவதற்கு தேசிய அரசுகளுக்கிருந்த வரம்பிற்குட்பட்ட திறமைகளுக்குமிடையே நிலவிய முரண்பாடுகள் தீவிரமடைந்தன. சர்வதேச நிதி நிறுவனமும் பொதுவான சங்கம் மற்றும் வாணிபம் பற்றிய உடன்பாட்டிற்கான குழு(GATT) வும் பின்னர் பொருளாதாரக் கூட்டுறவு மற்றும் மேம்பாட்டிற்கான அமைப்பும் அவைகளைப் போன்ற முதலாளித்துவ விளையாட்டு விதைகளைப் பின்பற்றுவதற்காக 1940 களில் அமைக்கப்பட்ட பிற அமைப்புகளுடன் சேர்ந்து இந்த முரண்பாடுகளின் ஒரு பகுதியை மறைத்தன. ஆனால், அவைகளின் பணி, முக்கியமாக, உலகப் பொருளாதாரத்தைக் கூட்டாகக் கட்டுப்படுத்துவதற்கான உடன்பாடான திட்ட நிகழ்ச்சிகளை வரைவதில் மட்டுமல்லாமல், காப்புக் கொள்கையைத் தடுப்பதன் மூலமும், இந்தப் பொருளாதாரத்தில் உள்ள தனி நாடுகளுடைய சரிசமமான தலையீடில்லாமல் உறுதிப்படுத்துவதிலேதான் அடங்கியுள்ளது. வேறுமாதிரி சொன்னால், அரசு ஏகபோகக் கட்டுப்பாட்டின் சர்வதேச சாதனங்களாக இருப்பதால் இந்த அமைப்புகள் முதலாளித்துவப் பொருளாதார சூட்சுமத்தின் சந்தை மற்றும் தனியார் ஏகபோகத்தின் பகுதிகளும் தடையேதுமின்றிச் செயல்படுவதை வளர்க்கவே பயன்பட்டன. இது 1950 களில், குறிப்பாக 1960 களில் பன்னாட்டு வாணிப கழகங்களின் எண்ணிக்கையும் செல்வாக்கும் கட்டுப்பாடற்று வளர்வதற்குச் சிறிது உதவியது. அவைகளிடையேயும், தேசிய அரசுகளிடையேயும் இருந்த பிணக்குகள் 1970 களின் தொடக்கத்தில் இதுவரை கண்டிராத அளவு கூர்மையாகியிருந்தன.

முந்தைய நெருக்கடிகளிலிருந்து முழுதும் வேறு பட்ட தாக இருந்த இந்த நெருக்கடி முதலில் சர்வதேச உறவு களைப் பாதித்தது. அதாவது தனி அரசுகளின் நேரடியான கட்டுப்பாட்டுக்கு மிகக்குறைந்த அளவிலேயே உட்பட்டிருந்த துறை, பணவியல் முறைகளில் அத்துமீறல்கள், உலகப் பணவீக்கம், ஆற்றல் நெருக்கடி, சர்வதேச பொருளாதார சூட்சுமத்தில் நிலவுகிற முரண்பாடுகளைத் தீவிரப்படுத்துகிற பிற உருவங்கள் ஆகியவை, தனி நாடுகளின் பொருளாதாரத்தின் மீது எதிர்மறையான செல்வாக்கைக் கொண்டதாக இருந்தது. பொருளாதார சூட்சுமம் முழுவதிலும் இது நெருக்கடியை ஏற்படுத்தியது. சோஷலிச அல்லது உலக நாடுகளில் தொழில் உற்பத்தியில் (1948 க்கும் 1969 க்கும் இடையில்) 5.7 சதவிகிதத்திலிருந்து (1969 க்கும் 1978 க்கும் இடையில்) 3.7 சதவிகிதமாகவும், வளர்ந்த முதலாளித்துவ நாடுகளில் 5.5 சதவிகிதத்திலிருந்து 3.2 சதவிகிதமாகக் குறைந்தது.

இந்த நெருக்கடியும் அதைத் தொடர்ந்து வரும் குறைந்த வளர்ச்சி விகிதங்களும் எவ்வளவுகாலம் தொடர்ந்து நிலவும்? முந்தைய நெருக்கடிகளின் அனுபவங்களிலிருந்து முடிவு செய்தால், முதலாளித்துவப் பொருளாதார சூட்சுமத்தின் ஒரு மாதிரியை அழித்து விட்டு, உற்பத்தி சக்தி களின் தேவைகளுக்கு ஏற்றாற்போல் இருக்கும் ஒன்றை அதனிடத்தில் வைப்பதற்கு ஏறத்தாழ 20 ஆண்டுகள் ஆகின்றன. நாம் இன்றைய நெருக்கடிக்கு இந்த வரலாற்று அனுபவத்தையும் மேற்கொண்டு சேர்த்துக் கொண்டால், இந்த நெருக்கடிக்கு 1980 களின் இறுதிப் பகுதிகளில் ஏதாவது ஓரிடத்தில் முடிவடையும் என எதிர்பார்க்கலாம். அதைத்தவிர இந்த நெருக்கடி குறிப்பாக சிக்கல் நிறைந்ததாக ஆக்கக்கூடிய சூழ்நிலைகளைக் கொண்டதாக உள்ளது. முன்னால், இந்த சூட்சுமத்தை மறுசீரமைப்பது தேசிய பொருளாதாரத்தை ஒழுங்குபடுத்தும், அதன் இணைப்புகளை குறிப்பாகப் பாதித்தது. அதாவது தேசிய

அரசுகளின் ஆட்சி எல்லையுடன் நிறைவேற்றப்பட்டவை. ஆனால் இன்றைய நெருக்கடி, சர்வதேச பொருளாதார உறவுகளை ஒழுங்குபடுத்துகிற அந்தப்பகுதியில் முக்கியமாக மாறுதல் இன்றியமையாததாக உள்ளது. இந்த ''ஐந்து ர்ரான் புஞ்சை''யில் இம்மாதிரியான ஒழுங்குபடுததும் முறையை ஏற்படுத்துவது, மிக அதிமான அளவு சிக்கலானது. இந்தக் காரணத்தினால் இன்றைய நெருக்கடி 1990 கள் வரை நீடிக்கலாம்.

இரண்டு உலக சமூக அமைப்புகளிடையே நடந்துவரும் பொருளாதாரப் போட்டியின் வாய்ப்புகள் பற்றிய மதிப்பீடு செய்வதற்கும், வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் உள்ள தொழிலாளி வர்க்க இயக்கத்திற்கும், ஏகாதிபத்தியத் திற்கும், வளரும் நாடுகளுக்கும் ஏற்பட்டுள்ள மோதலில் வருங்காலத்தில் கையாள வேண்டிய கொள்கைக்கும், முடிவாக, விடுதலையடைந்த நாடுகள் மேற்கொள்ள வேண்டிய வழிகளுக்கும், இன்றைய சூழ்நிலை இன்றியமையாததாகத் திகழ்கிறது. முதலாளித்துவப் பொருளாதார சூட்சுமத்தில் நிலவுகிற இன்றைய நெருக்கடி, அதனுடைய இன்னல்களை முதலாளித்துவம் சமாளிக்க முடியாது என நமக்குக் கூறவில்லை. அதனுடைய உள் முரண்பாடுகளால் அந்த அமைப்பு முறை அழிந்துவிடும் என்றும் நமக்குக் கூறவில்லை. ஆனால் அது முதலாளித்துவம், வருங்காலம் ஏதும் இல்லாத சமுதாயம் என நமக்குத் தெளிவாகக் காட்டுகிறது.

## அடிக்குறிப்புகள்

1. கார்ல்மார்க்ஸ்: அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு வழங்கப்பட்ட கட்டுரை, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ-1979-பக்கம்12.

2. வி. இ. லெனின். தொகுப்பு நூல்கள். தொகுதி 29. முன்னேற்றப் பதிப்பகம்,மாஸ்கோ 1965, பக். 473.

**பேராசிரியர். எம். எம். மாக்சிமோவா**
*முனைவர்-விஞ்ஞானம் (பொருள்) துறைத்தலைவர்.*

*உலகப் பொருளாதாரம் மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய நிறுவனம், சோவியத் ஒன்றியத்தின் விஞ்ஞான கலைக்கழகம்*

## விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியும், இன்றைய முதலாளித்துவத்தின் வெளிநாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளும்

விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சிக்கும், ஏகாதிபத்தியத்தின் வர்க்க நடவடிக்கைகளுக்குமிடையேயுள்ள தொடர்பு, கோட்பாடு அடிப்படையில் தேவையானவையாகவும் நடைமுறைக்கு ஆர்வமூட்டுகிறவையாகவும் உள்ளன.

இந்த நடவடிக்கைகளின் முக்கியமான இலக்குகள், நிச்சயமாக எந்தவித மாற்றமும் இல்லாதவையாக உள்ளன. அது எப்பொழுதுமே இருப்பதைப்போல வளர்ந்து வரும் சோஷலிச சக்திகளுக்கும் தேசிய விடுதலை இயக்கத்திற்கும், சர்வதேச கம்யூனிச மற்றும் தொழிலாளர் இயக்கத்திற்கும் முன்னால் தன்னுடைய நிலைகளைப் பேணிக்காப்பாற்றுவதையே இன்னும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஆனால் ஏகாதிபத்தியம் உலகத்தில் ஏற்பட்டுள்ள ஆழ்ந்த சமூக மாற்றங்களின் செல்வாக்கினாலும் அவைகளுடன் மிக நெருக்கமாகப்

பிணைக்கப்பட்டுள்ள விஞ்ஞான-தொழில் நுட்பத்தின் புரட்சிக்கரமான வளர்ச்சியினாலும் அவர்களுடைய இலக்கு களை அடைவதற்கான வழிகளையும், முறைகளையும் மாற்றிக் கொள்ளுமாறு கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

முதலாளித்துவ வளர்ச்சியின் இன்றைய படிநிலையின் சிறப்பான தன்மையாக விளங்குவது முன்னைக்காட்டிலும் மிக அதிகமான அளவு, அதனுடைய நடவடிக்கைகளின் கட்டமைப்பை விரிவடையச் செய்யவும், அந்த நடவடிக்கை களை நடைமுறையில் நிறைவேற்றக் கிடைக்கும் வாய்ப்பு களைப் பெருக்கவும் முதலாளித்துவவாதிகள் முயன்று வருகிறார்கள் என்ற உண்மையில் அடங்கியுள்ளது.

குறிப்பாக, சர்வதேச பொருளாதாரத்தின் துறைகளில் (அதாவது விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் கீழ் மிகுதியாக விரிவடைந்துள்ள சர்வதேசமயமாக்கப்பட்ட உற்பத்தியும் மூலதனமும், வளர்ந்துவரும் பொருளாதார உறவுகளும், சர்வதேச முதலாளித்துவக் கூட்டுறவும், வேலைப்பகுப்பும்) பரந்த அளவில் சேர்க்கப்படக்கூடிய அனைத்தையும் முதலாளித்துவம் இன்று தன்னுடைய நலன் களுக்கு உட்படுமாறு செய்ய விருப்பமுடையதாக இருப்பதற்கான சான்றுகள் கிடைக்கின்றன. இன்று பூர்ஷ்வாக்கள் அவர்களுடைய பிரதிநிதிகள் மூலமும், சர்வதேச நிறுவனங்கள் மூலமும் ஒரு ஒத்துக்கொள்ளப்பட்ட நீண்டகாலக் கொள்கையை உருவாக்கவும் ஒரு பொதுக் கருத்தை உருவாக்கவும் முயற்சி செய்யாதிருக்கும் சர்வதேச பொருளாதார உறவுத்துறைகளைக் காண்பது அரிது. ஒரு நாடு மற்றொரு நாட்டுடன் வைத்திருக்கும் பொருளாதார உறவுகள் அல்லது வளரும் நாடுகளுடன் கொண்டுள்ள உறவுகள் அல்லது சோஷலிச நாடுகளுடன் கொண்டுள்ள உறவுகள் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை மனதில் கொண்டிருந்தாலும் இதுவேதான் உண்மையாக விளங்குகிறது.

இவ்வாறாக முக்கியமான முதலாளித்துவ நாடுகளிடையே, தங்களுக்கென வெளிநாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளை உருவாக்கிக் கொள்ளவேண்டுமென்ற தெளிவான போக்கு ஒன்றை நாம் காணமுடியும். இதுவே ஏகாதிபத்தியம் முழுமையின் வர்க்க தந்திரத்தின் ஒரு பகுதியாக உள்ளது என்பதும் தெளிவாகிறது. இந்தப் போக்கு திட்டவட்டமாக எவ்வாறு வெளிப்படுகிறது. அதன் சிறப்பியல்புகள் எவை?

முதலில், குறிப்பாக இரண்டு சமூக அமைப்பு முறைகளிடையே நடைபெறும் போராட்டத்தின் மீதும், போட்டியின் மீதும் உள்ள கவனம், மேலும் மேலும் அதிகமாக, பொருளாதாரம், விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகியவற்றின் மீது செலுத்தப்படும் பொழுது சொந்த நாட்டின் வளங்களைச் சுரண்டுவதோடு மட்டுமல்லாமல், முக்கியமான முதலாளித்துவ நாடுகளின் விஞ்ஞான தொழில் நுட்ப,தொழில் வளங்கள் அனைத்தையும் சுரண்டுவதற்கான விருப்பம் ஒவ்வொரு நாட்டிலும் உள்ள ஏகபோக முதலாளித்துவத்தினால் வெளியிடப்படுகிறது.

நாம் ஒரு சில உண்மைகளை ஆராய்வோம். 1970 களின் நடுப்பகுதியில் புதிய தொழில் நுட்பம் பற்றியும் அதன் வழிவகை அறிவும் பற்றிய சர்வதேச வணிக உடன்பாடுகளின் மொத்த மதிப்பு ஏறத்தாழ 5,000 மில்லியன் டாலர் இருக்குமென மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. விஞ்ஞான தொழில் நுட்ப வாணிபத்தின் வளர்ச்சி விகிதம் (கொடுக்கப்பட்ட பணத்தை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட்டது.) 1950 க்கும் 1975 க்கும் இடையில் ஓராண்டிற்கு 13 சதவிகிதமாக இருந்தது. அது முதலாளித்துவ உற்பத்தியின் மொத்த வளர்ச்சி விகிதத்தைக் காட்டிலும், மூன்று மடங்கு அதிகமாயிருந்தது. மேலும், முன்னறிவிப்புகள், சர்வதேச விஞ்ஞான - தொழில் நுட்ப வாணிகத்தின் மொத்தப் பரிமாணம், 1990- வரை ஆண்டு தோறும் 9-10 சதவிகிதம் தொடர்ந்து உயர்ந்து வரும் என்று கூறுகிறது.

விஞ்ஞானம், உற்பத்தி ஆகியவற்றின் குறிப்பிட்ட சில கிளைகள், குறிப்பாக போர்த் தொழிலில் பல அரசுகளில் பெரிய வாணிக நிறுவனங்களின் இணைப்புகள் மூலமாக, மேலும் மேலும் அதிகமாக வளர்க்கப்படுகின்றன. இதை விளக்க, அமெரிக்க போயிங் விமானத்தை வளர்ச்சியடையச் செய்து உற்பத்தி செய்வதற்கு ஆறு நாடுகளில் உள்ள 15,000 கம்பெனிகளின் பெருமுயற்சி தேவைப்பட்டது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சிறு தொலைவு செல்லும் விண் வெளிக்கலம் செய்யும் திட்டம் ஏராளமான மேற்கு ஐரோப்பிய நாடுகளின் ஆராய்ச்சி நிறுவனங்களுடைய கவனத்தைக் கவர்ந்துள்ளது. இது தவிர முக்கியமான நேடோ நாடுகளிடையே புதியவகை ஆயுதங்களைச் செய்வதற்கு முக்கியமான போர்த்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழில்களிடையே நெருங்கிய விஞ்ஞான தொழில் நுட்பக் கூட்டுறவு பற்றிய உதாரணங்கள் உள்ளன.

மூலப்பொருட்கள், ஆற்றல், உயிர்வாழ்சூழ்நிலை மற்றும் வேறு பிரச்சினைகளின் வளர்ந்து வரும் முக்கியத்துவமும், அவைகளோடு தொடர்புடைய ஆழ்ந்த கட்டமைப்பு நெருக்கடியும், முதலாளித்துவ நாடுகளிடையே அவற்றின் செயல் முறைகளை ஒன்றிணைப்பதற்கான போக்குகளுக்கு ஒரு பெரும் அளவு தூண்டுதலைக் கொடுத்துள்ளன. தன் கட்டமைப்பு நெருக்கடிகளைக் குறைப்பதற்கான முயற்சியில், பல நாடுகளில் உள்ள பெரிய பன்னாட்டு இணையங்களின் செயல் முறைகளையும், அரசுகளின் செயல்முறைகளையும் முதலாளித்துவம் ஒன்றிணைக்க முயல்கிறது. உதாரணமாக சர்வதேச ஆற்றல் ஏஜென்சி, உலகம் முழுவதிலும் உள்ள பெரும் முதலாளித்துவ நாடுகள் அனைத்திற்கும் எண்ணெய் கொடுத்துதவக்கூடிய ஒரு திட்டத்தை உருவமைக்க முயன்றுவருகிறது. மற்றொரு நீண்ட காலத்திட்டம் 1990 வரை அதபாஸ்கா என்ற இடத்தில் உள்ள புகைமிகு நிலக்கரிப் படிவங்களை வெட்டி எடுப்பதற்கான 50, 000 மில்லியன் டாலர் செலவிலான திட்டம் ஒன்று அமெரிக்க ஜப்பானிய, மேற்கு ஜெர்மானிய

மூலதனத்துடனும், பல நாடுகளின் அரசுகளுடைய உதவியுடனும், பல நாட்டின் நிறுவனங்களின் உதவியுடனும் சர்வதேச கன்சார்ட்டியத்தால் நிறைவேற்றப்பட்டுவருகிறது. இம்மாதிரியான வேறு உதாரணங்களைக் காண்பது கடினமல்ல.

முக்கியமான முதலாளித்துவ நாடுகளின் செயல்திறன் மொத்தத்தில் மதிப்பீடு செய்வதற்கு தனித்தனியாக ஒவ்வொரு நாட்டின் மொத்த செயல்திறனைக் கணக்கில் எடுத்துக் கொள்வதோடு மட்டுமல்லாமல், விஞ்ஞான தொழில் நுட்ப உற்பத்தி, நிதி தொடர்பான, வணிகத் தொடர்பான மற்றும் பிற தொடர்புகளையும், குறிப்பாக முதலாளித்துவ உலகம் அதனுடைய ஆட்டம் கண்டுள்ள நிலையை சீர்செய்வதற்கு முயன்றுகொண்டிருக்கும் அடித்தளத்தைத் தந்துதவுகிற அமைப்பு முறையான சர்வதேசத் தனியார் கார்ப்பரேஷன்களின் கட்டமைப்பையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டுமென வலியுறுத்தப்பட வேண்டும்.

இன்றைய முதலாளித்துவத்தின் வெளிநாட்டு பொருளாதார நடவடிக்கைகளின் இரண்டாவது முக்கியமான சிறப்பியல்பு, வளர்ந்த முதலாளித்துவ நாடுகளின் வளர்ந்துவரும் தொழில் நுட்பத்துறையிலும் மற்றும் பொருளாதாரத் துறையிலும் ஒன்றை ஒன்று சார்ந்திருத்தலுக்குமிடையில் தோன்றியுள்ள இடைவெளியை நிரப்ப செய்யப்படும் முயற்சியேயாகும். இது சர்வதேச மட்டத்தில் பொருளாதார உறவுகளைப் புறவயமாகத் திட்டமிடுதலையும், இன்றுவரை பாதுகாக்கப்பட்டுள்ள அரசு ஏகபோகக் கட்டுப்பாட்டின் தேசியக் கட்டமைப்பைத் திட்டமிடுதலையும் இன்றியமையாதது ஆக்குகிறது. 1970 களின் நடுப்பகுதியில் ஏற்பட்ட சூழல்நெருக்கடியின்போது இந்த முரண்பாடுகள் குறிப்பாக உணரப்பட்டன. கடுமையான சமூக பொருளாதார இடர்களுக்குள்ளாகியேதான் இதை வெல்ல முடிந்தது. ஏனெனில் 1970 களில் விஞ்ஞானம்

தொழில் நுட்பம், சந்தை, நிதிதொடர்பான கொள்கைகள் ஆகியவற்றைப் பற்றிய உடன்பாடுகளை முதலாளித்துவ அரசுகளே செய்து கொண்டு முதலாளித்துவம் எதிர்நோக்கிய தீவிரமான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தப்போக்கு புதிதல்ல. இது மேற்கு ஐரோப்பாவில் ஒன்றிணைக்கப்பட்ட குழுக்கள் உருவாக்கப்பட்டபோது தோன்றியது. அவற்றின் செயல்முறைகளில் இது பிரதி பலித்தது. ஆனால் இந்தக் கட்டமைப்புகள் மிகவும் நெகிழ்ச்சியின்மை நிறைந்ததாகத் தோன்றின. அமெரிக்க ஐக்கியநாடுகள், கனடா, ஜப்பான், மேற்கு ஐரோப்பா ஆகியவற்றின் பொருளாதாரங்களின் உட்தொடர்பின் அளவு வளர்ந்து கொண்டேயிருந்ததும், முதலாளித்துவ உலகத்தின் முரண்பாடுகள் ஆழமாகிவந்ததும் 1970 களில் அதனுடைய தனிச்சிறப்பான கூறுகளின் வெளிப்பாடுகளும்– இவையனைத்தும் பூர்ஷ்வா அரசுடைய வெளிநாட்டுப் பொருளாதாரப் பணிகளில் ஒருபெருக்கத்தை ஏற்படுத்தின. முக்கியமான முதலாளித்துவ அரசுகளை அவற்றின் உள்நாட்டு வளர்ச்சியிலும் அவற்றின் வெளிநாட்டுப் பொருளாதார உறவுகளிலும், தீவிரமான பொருளாதார மற்றும் சமூகப்பிரச்சினைகள் தொடர்பாக ஒத்துக் கொள்ளப்பட்ட ஒரு கொள்கையை ஏற்றுக் கொள்ளுமாறு ஊக்குவித்தன.

வளர்ந்துவரும் உலகில் ஏகாதிபத்தியத்தின் நிலைகளின் நலன்களைப் காப்பதற்காகச் சேவை செய்யாமல் நின்று விட்ட புதியகாலனிக் கொள்கைகளின் பகுதிகளை மீண்டும் சீர் தூக்கிப் பார்ப்பதும், வளரும் நாடுகளை முதலாளித்துவச் செல்வாக்கின் வட்டத்திற்குள் வைத்திருப்பதற்கான வழி முறைகளைத் தேடுவதும்தான் 1970 களின் போது முதலாளித்துவ நாடுகளின் பொருளாதார நடவடிக்கை களின் மூன்றாவது சிறப்பியல்பு ஆகும்.

முதலாளித்துவம் இன்று கட்டமைப்பு நெருக்கடி பற்றி அக்கறை காட்டாமல் இருக்க முடியாது. இவை, வளரும் நாடுகள், ஏகாதிபத்தியத்தின் மீது, பொருளாதார அடிப்படையில் சார்ந்திருக்கும் நிலையில் இருக்கின்றன என்பதைக் காட்டியதோடு, ஏகாதிபத்திய நாடுகளின் பொருளாதாரங்கள்கூட வளரும் நாடுகளில் நிலவுகிற நிலைமைகளைச் சார்ந்ததாக இருக்கத் தொடங்கியுள்ளன என்பதையும் காட்டியுள்ளன.

ஆகவே ஏகாதிபத்தியம், வளரும் நாடுகளில் தொழில்மயமாக்குதல் முதலாளித்துவ முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை உறுதிப்படுத்துவதற்காக, தொழில் நுட்ப உதவி, உணவுப்பொருட்களை அளித்தல், நிதியுதவி அளித்தல் ஆகிய நெம்புகோல்களைப் பயன்படுததுகிற இலட்சியத்தைக் கொண்டதாக உள்ளது. ஏகாதிபத்திய நாடுகளில் மிக அதிகமான அளவு தேவைப்படுகிற ஆற்றல், மூலப்பொருட்கள் ஆகியவற்றை அவை (வளரும் நாடுகள்) தொடர்ந்து கொடுத்து வருகின்றன. வளரும் நாடுகள் சர்வதேசப் பொருளாதார உறவுகளை மறுசீரமைப்பதற்காக மேற்கொள்ளும் திட்ட நடவடிக்கைகளை முழுதும் புறக்கணிப்பதை விட்டுவிட்டு, ஏகாதிபத்திய சக்திகள் ஒரு பொதுநோக்கை உருவாக்குவதற்கு இந்த திட்ட நடவடிக்கையில் கண்டுள்ள மிகவும் முக்கியமான கூற்றுகளுக்கு எதிரான நடவடிக்கைகளை உருவாக்கத் தொடங்கியுள்ளன.

ஏகாதிபத்தியத்தின் புதிய காலனிக் கொள்கையில் இன்றைய முக்கியமான போக்குகளில் ஒன்று வளரும் நாடுகளுடன் புதிய ஒருவகையான வேலைப்பகுப்பைத் தோற்றுவிப்பதற்காக, விஞ்ஞான-தொழில் நுட்ப வளர்ச்சித் துறையில் அது கொண்டுள்ள சாதகமான சூழ்நிலையைப் பயன்படுத்துவதற்கான விருப்பமேயாகும். இது பின்னர் மூலப்பொருள்களின் உற்பத்தியில் தனிச் சிறப்புத்திறமை பெறுவதை மட்டுமல்லாமல், மரபு வழியான தொழில்

களிலும்-குறிப்பாக ஆற்றல் அல்லது பொருட்கள் அதிகமாகத் தேவைப்படும் தொழில்களில் சிறப்படைவதையும், முதலாளித்துவ நாடுகள் முக்கியமாக விஞ்ஞானம் அதிகமாகத் தேவைப்படும் தொழில்களில் தனிச்சிறப்பு பெறுவதையும் உள்ளடக்கியது ஆகும்.

முடிவாக, மேலும் ஒரு முக்கியமான இயல்பு-சோஷலிச நாடுகளுடனான உறவில் தங்களின் வெளிநாட்டுப் பொருளாதாரக் கொள்கையின் பல்வேறு போக்குகளை ஒன்றிணைப்பதற்கு முதலாளித்துவ நாடுகள் செய்யும் தீவிரமான முயற்சி-முதலாளித்துவம், மாறிக்கொண்டிருக்கும் சர்வதேச நிலைமைகளுக்குத் தன்னைத் தகவமைத்துக் கொள்ளுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள நிலை ஆகும். முதலாளித்துவ நாடுகளில் உள்ள பொருளாதார வளர்ச்சி விகிதத்தைப் பேணிக்காப்பதற்காகவும், மேற்கத்திய நாடுகளில் நிலவுகிற வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்கவும், பதற்றத்தணிவுடனும், இயற்கை வளங்களின் வளர்ந்துவரும் முக்கியத்துவத்துடனும் சோஷலிச நாடுகளில் உள்ள சந்தைகளுடனும், தன்னைத் தகவமைத்துக் கொள்ளுமாறு அது நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. ஆனால் அதே வேளையில், ஏகாதிபத்தியத்தின் பிற்போக்குக் கொள்கைகளைப் பின்பற்றுபவர்கள், சோஷலிச நாடுகளுடன் நிலவுகிற பொருளாதாரத் தொடர்புகளைத் துண்டிப்பதையும், வாணிகத்தில் ஒருசார்பான கொள்கைகளை அறிமுகப்படுத்துவதையும் இந்த நாடுகளுக்கு விஞ்ஞானம் தீவிரமாகப் பயன்படுத்தப்படும் பொருட்களை விற்பதைத் தடை செய்வதையும் நோக்கமாகக் கொண்ட கொள்கைகளைப் பின்பற்ற முயன்று வருகிறார்கள். "சீனக் கரணி" என்று அழைக்கப்படுகிற ஒன்றையும், அது போன்றவற்றையும் வைத்துக் கொண்டு சோஷலிச நாடுகளைப் பொருத்தவரை, சில மேலைநாடுகளின் ஆட்சி வட்டாரங்கள் வேறுபடுத்தும் கொள்கைகளை ஓரவஞ்சமான கொள்கைகளைப் பின்பற்றுவதற்குரிய பெருவிருப்பத்தைக் காட்டியுள்ளன.

இவைதான் இன்று பின்பற்றப்படுகிற முதலாளித்துவ வெளிநாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளின் பொது இயல்புகள் ஆகும். இம்மாதிரியான தந்திரங்களையும், யுக்திகளையும் நடைமுறைப் படுத்துவதற்கு—வெளி நாட்டுப் பொருளாதாரக் கொள்கையில் இரு பக்கங்களிலும் காணப் படும் வேறுபட்ட பல போக்குகளை ஒன்றிணைப்பதையும் ஐரோப்பிய சமூகம் பொருளாதார கூட்டுறவுக்கும் மேம்பாட்டிற்கான அமைப்பு ஆகியவற்றின் வளர்ந்துவரும் செயல்முறைகளில் ஈடுபடுவதையும் சர்வதேச நிதிநிறுவனம் போன்ற நிறுவனங்களை மறுசீரமைப்பு செய்வதையும், ஐரோப்பாவில் உள்ள முக்கியமான பிரச்சினைகளில் மிகுதியாக வளர்ச்சியடைந்துள்ள ஏழு நாடுகளின் தலைவர் களிடையே உடன்பாடு ஏற்படுவதையும் வளரும் நாடு களுடனும், சோஷலிச நாடுகளுடனும் அவர்களுடைய பரஸ்பர உறவுகளையும் உள்ளிட்ட பல வழிகளையும், முறைகளையும் பின்பற்றுவது மிகவும் இன்றியமையாத தாகிறது.

அதே வேளையில் முழுதும் எதிரெதிரான இயல்புகளை யுடைய மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. அவை எப்போதுமே ஏகபோகத்தின் தனிச்சிறப்பான கொள்கையாக விளங்கிவரும் பிரிக்கும் சக்திகளைக் கொண்டு முதலாளித்துவ நாடுகளை வெவ்வேறு திசைகளில் பிரிக்கும் நோக்கத்தைக் கொண்டவையாய் இருக்கின்றன. இந் நிகழ்ச்சிப்போக்கின் புதிய கூறு அரசுகளிடையேயான பொருளாதாரம் விஞ்ஞான-தொழில் நுட்பத் தொடர்புகள் போன்ற விஞ்ஞான — தொழில் நுட்ப முன்னேற்றங்களின் வேகமும், மட்டமும், ஏகாதிபத்திய சக்திகளிடையே, போட்டிக்கும் போராட்டத்திற்குமான முக்கியமான பகுதி களில் ஒன்றாக ஆகியுள்ளது என்பதை உள்ளடக்கி யிருக்கிறது.

உலக ஏகாதிபத்தியங்களின் மூன்று மையங்களைப்பற்றி சோவியத் ஒன்றியத்தின் விஞ்ஞான கலைக் கழகத்தைச்

சேர்ந்த உலகப்பொருளாதார மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய நிறுவனம் மேற்கொண்ட ஒப்பீட்டுப் பகுப்பாய்வு, முதலாளித்துவ உலகத்தில், அமெரிக்க ஐக்கிய நாடுகள், தன்னுடைய ஆதிக்க நிலையைத் தக்கவைத்துக் கொண்டுள்ளது என்பதையும், 1970 களில் மொத்த தேசிய உற்பத்திக்காரணிகளை ஒப்பீட்டில் மோசமடையச் செய்ததுடன், மூலதன ஏற்றுமதியையும் சர்வதேச வாணிகத்தையும் மட்டுமல்லாது, விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சிக்கான செலவுகளின் மட்டத்தையும் ஒப்பீட்டில் மோசமடையச் செய்திருந்தது என்பதையும் காட்டியது. 1960 களின் மத்தியில் ஜப்பான், ஜெர்மன் கூட்டுச்குடியரசு, கிரேட் பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளின் விஞ்ஞான ஆராய்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் செய்யப்பட்ட செலவு அமெரிக்க ஐக்கிய நாடுகள் செய்த செலவில் 38 சதவிகிதமாக இருந்தது. அந்த நாடுகளில் இருந்த பயிற்சிபெற்ற தொழில் வல்லவர்களின் சதவிகிதம், அமெரிக்காவில் இருந்தவர்களின் 55 சதவிகிதமாக இருந்தது. ஆனால் 1976 க்குள் இவை முறையே 80 சதவிகிதமாகவும் 95 சதவிகிதமாகவும் உயர்ந்தன. இன்று ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சிக்கான செலவுகள், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் செலவுகளில் 70 சதவிகிதமாகவும, ஜப்பானின் செலவு 26 சதவிகிதமாகவும் இருக்கிறது. இந்த இரண்டு முதலாளித்துவ நாடுகளின் மையங்களையும் சேர்த்து எடுத்துக் கொண்டால், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மட்டத்தில் 96 சதவிகிதமாக இருந்தது. இவ்வாறாக விஞ்ஞான—தொழில் நுட்பத்திலிருந்த பெரும் இடைவெளி வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. இன்று முதலாளித்துவ உலகில் ஜப்பான் இரண்டாவது நிலை வகிக்கிறது.

எனவே வருங்காலம் என்ன வைத்திருக்கிறது? பல பொருளாதாரக் குறியீடுகளில் அமெரிக்க ஐக்கியநாடுகளின் தனிச்சிறப்பான செல்வாக்கில் நிலவும் ஒப்பீட்டில் குறைவு தொடர்ந்து நிலவும் என எதிர்பார்க்கலாம். ஆனா

அமெரிக்க ஐக்கிய நாடுகள் மொத்த தேசிய உற்பத்தி பன்னாட்டு வாணிக நிறுவனங்களில் நேரடியான வெளி நாட்டு முதலீடுகள், பெரும் புதிய தொழில் நுட்ப வளர்ச்சிகள், விஞ்ஞானம் தீவிரமாக ஈடுபடுத்தப்பட்டுள்ள பொருட்களின் ஏற்றுமதி, புதியதொழில் நுட்ப விற்பனையிலிருந்து வரும் வருமானம், பணவியல் சந்தை, இது போன்ற இன்னும் பலவற்றில் இன்னும் தன்னுடைய ஆதிக்க நிலையைத் தொடர்ந்து வகித்துவரும். முதலாளித்துவ உலகிலே இரண்டாவது பெரும் சக்தியாக ஜப்பான் வளர்ந்து வருவது தொடரும் பசிபிக் பெருங்கடல் பகுதியில் "தன்னுடைய செல்வாக்கைப் பெருக்கிக் கொள்வது" பற்றியும், மேற்கு ஐரோப்பாவில் ஏற்படக்கூடிய தேக்கத்தைப் பற்றியும் ஜப்பானிய முன்னறிவிப்புகள் உள்ளன. ஆனாலும் மேற்கு ஐரோப்பிய நாடுகள் இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் பல பகுதிகளில் வலிமை பெறும் என்பதற்கும் ஆதாரங்கள் உள்ளன.

இந்தப் புதிய கூறு விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் விளைவாக முக்கியமான முதலாளித்துவ நாடுகளில ஏற்பட்டுள்ள ஒருசிறந்த வளர்ச்சியும், வளரும் நாடுகளின் நிலையில் ஏற்பட்டுள்ள விரைவான மாற்றங்களும், அவைகளின் வளர்ந்துவரும் சமூக பொருளாதார அரசியல் வேறுபாடுகளும் பழைய முரண்பாடுகள் ஆழ்ந்ததாக ஆவதற்கும், புதிய முரண்பாடுகள் தோன்றி வளர்வதற்கும் வழிவகுத்துள்ளன என்பதில்தான் அடங்கியுள்ளது. நாம் பாதுகாப்புக் கொள்கை புதுப்பிக்கப்படுவதைப் பார்த்திருக்கிறோம். "வணிகப்போர்களையும்" தங்களுடைய செல்வாக்கு வட்டங்களைப் பேணிக்காக்க வளர்ந்துவரும்நாடுகளுக்கு மூலதனம் ஏற்றுமதி செய்யப்படுவதையும் கண்டிருக்கிறோம் உற்பத்தியைத் தானாகவே "ஒரு வரம்பிற்குட்படுத்துதல்", ஏற்றுமதியைக் கட்டுப்படுத்துதல், வெளிநாடுகளில் அதிகமாக உற்பத்தி செய்தல், வளர்ந்த முதலாளித்துவ நாடுகளில் அந்தந்தப் பகுதிகளில் எளிதில் கிடைக்கும் விஞ்ஞான - தொழில் நுட்ப அறிவைப் பன்னாட்டு

இணையங்கள் பயன்படுத்துதல், வளர்ந்துவரும் நாடுகளில் ஏகபோகங்களுக்கிடையில் நடைபெறும் போட்டியின் மையத்தை மூலப்பொருள் உற்பத்தித்தொழில்களிலிருந்து பதனீட்டுத் தொழில்களுக்கு மாற்றி''ருப்பது ஆகியவை போன்ற புதிய யுக்திகள் கையாளப்படுகின்றன.

ஏற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளை உருவாக்குவதற்கான ஏகாதிபத்தியத்தின் முயற்சிகளைப் பகுத்தாராய்வதும், இன்றைய படி நிலையில் முதலாளித்துவ அமைப்பு முறைக்குள் செயல்படத்தொடங்கி யுள்ள மையத்திலிருந்து விலகிச்செல்ல விரும்பும் சக்திகளுக்கு இயல்பான புதிய நிகழ்ச்சிப்போக்குகளைப் பகுத்தாராய் வதும், கோட்பாடு அடிப்படையிலும், நடைமுறைப் பயன் அடிப்படையிலும் மிகவும் இன்றியமையாதது என நாம் கருதுகிறோம்.

இரண்டு சமூக அமைப்புகளிடையேயான போராட்டங் களுக்கான வாய்ப்புகள் பற்றிய மதிப்பீடு செய்யும் போதும், சோஷலிச ஒன்றிணைப்பின் வளர்ச்சிக்காகவும், சோஷலிச அமைப்பைச் சேர்ந்த நாடுகளுக்கும், முதலாளித்துவ நாடு களுக்கும், வளரும் நாடுகளுக்குமிடையிலான உறவுகளைப் பற்றி மதிப்பீடு செய்யும் போதும், பரஸ்பர பொருளாதார உதவி செய்யும் நாடுகளின் குழுவில் அடங்கிய CMEA) நாடுகள், இவையனைத்தையும் கருத்தில் கொள்ளவேண்டும். இயல்பாகவே, ஏகாதிபத்திய எதிர்ப்புசக்திகளும், ஜனநாயக சக்திகளும், கம்யூனிஸ்ட் மற்றும் உழைப்பாளர்கட்சிகளும், சமாதானத்திற்கும், சமுதாய முன்னேற்றத்திற்குமான போராட்டத்தில் இவையனைத்தையும் கருத்தில் கொள் கின்றன.

**பேராசிரியர் ரோமன் மோல்டாவன்**
**இணை உறுப்பினர், துணைச்செயலாளர்.**
*சமூக அரசியல் விஞ்ஞானங்களின் விஞ்ஞானக் கலைக்கழகம், ருமேனியா.*

## விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியும், சர்வதேச பொருளாதாரக் கூட்டுறவைத் தீவிரப்படுத்துவதன் அவசியமும்.

ஒருபுறம், சர்வதேச பொருளாதார உறவுகள், தம்முள்ளேயே இலட்சியங்களைக் கொண்ட, அந்த இலட்சியங்களை அடைவதற்குரிய சாதனங்களைக் கொண்ட பொருளாதார, விஞ்ஞான தொழில் நுட்பப் பரிவர்த்தனையின் ஒரு சூட்சுமமாகவும் விளங்குகின்றன— அதாவது அவை ஒப்பீட்டில் சுதந்திரமான பொருளாதார நடவடிக்கைகள் ஆகும் மறுபுறம் இந்த சூட்சுமம், அரசுகளிடையேயான பரஸ்பர பொருளாதார சமூக, அரசியல் உறவுகளின் அகன்ற ஓர் அமைப்பு முறையின் உட்பகுதியே தவிர வேறல்ல.

இந்தக் கூற்றிலிருந்து வெளிப்படுகிற, பொதுவாக இயற்கை வளங்களையும், குறிப்பாக ஆற்றல் தோற்றுவாய்களையும், சிறந்த பகுத்தறிவுக்குகந்த முறையில் பயன்படுத்துவது, தொழில், விவசாயம், போக்குவரத்து, செய்தி மற்றும் தகவல் தொடர்புகள், உணவுப் பிரச்சினை, தொழிலாளர் வளங்களைப் பயன்படுத்துவது, வீட்டுவசதி,

சுகாதார சேவைகள், சூழ்நிலைப்பாதுகாப்பு, இன்னும் இது போன்ற பிரச்சினைகள், UNESCO வின் ஆவணங்களில் உலகம் முழுமைக்குமானவை என வரையறை செய்யப் பட்டுள்ளன. முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி தீவிரமடைந்ததை ஒட்டி, மேலே கூறப்பட்ட சமூக பொருளாதார பிரச்சினைகள் — அரசுகளிடையே மட்டு மல்லாமல், அரசுகளுக்கிடையேயான மட்டங்களிலும் தோன்றுகின்றன.

சர்வதேச வேலைப்பகுப்பின் மாறுகிற பாங்கிற்கு ஒத்திசைவானதாக இருப்பதற்கு சர்வதேச பொருளாதார உறவுகளை மறுசீரமைப்பதை நோக்கிய இயல்புகள் சர்வதேச வாழ்வின் அடிப்படையின் புதிய ஓர் இயல்பாகும்.

அதே வேளையில் சர்வதேச முரண்பாடுகள் ஓயாது தீவிரமடைவதாலும், செல்வாக்கு வட்டங்களை அதிகப் படுத்துவதற்கான போராட்டங்களாலும், உலகத்தில் ஒரு சில பகுதிகளில் பிற்போக்கு சக்திகள் பெற்றுள்ள பிடிப்பு களாலும் சர்வதேச பதட்டச் சூழ்நிலைகளின் புதிய மையங்கள் தோன்றுவதை உலகம் கண்டு வருகிறது. சமாதானத்தையும், சர்வதேசப் பாதுகாப்பையும் பயமுறுத்துவதாக விளங்கும், அணு ஆயுதங்களையும் உள்ளிட்ட ஆயுதப்பெருக்கப் போட்டி நிற்கவில்லை.

எனினும் இந்த எதிர்மறை விஷயங்களுடன் அரசுகளிடையே சரிசமமான அடிப்படையில் சுதந்திரத்தை மதிப்பது, தேசிய அரசாண்மையை மதிப்பது, உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாமல் இருப்பது, பரஸ்பர நலன் களைப் பாதுகாப்பது என்பவைகளின் அடிப்படையில் கூட்டுறவு மேலும் மேலும் பரவலாகி வருகிறது. சர்வதேச அரசியல் உறவுகள் மேலும் அதிகமான அளவு ஜனநாயகத் தன்மையடைந்து வருகின்றன. உலகில் உள்ள அரசு களிடையேயும் மக்களிடையேயும் கூட்டுறவு விரிவாகி வருகிறது. சோஷலிச சமுதாயமும், சர்வதேச கம்யூனிச

இயக்கமும், தொழிலாளி வர்க்க இயக்கமும், இந்த நிகழ்ச்சிப் போக்குகளுக்குத் தூண்டுகோல்களாக விளங்குகின்றன. இதில் அணிசேரா இயக்கமும் வளரும் நாடுகளில் உள்ள ஜனநாயக சக்திகளின் செயல்முறைகளும் ஒரு முக்கியமான பங்கு வகிக்கின்றன.

சர்வதேச வாணிகத் தொடர்பு, சர்வதேசப் பொருளாதார உறவுகளில் முக்கியமான பகுதியாக விளங்குகிறது. இந்த உறவுகளை வெளியிடும் தனிச்சிறப்பான உருவம் அதுதான். 1950 க்கும் 1975 க்கும் இடையில் தொழில் மற்றும் விவசாய உற்பத்தியினுடைய செயல் திறனுடன் ஒப்பிட்டால் சர்வதேச வேலைப்பகுப்புக்குச் சான்றாக விளங்கும் வெளிநாட்டு வாணிகம் பிற துறைகளைக் காட்டிலும் வேகமாக வளர்ச்சியடைந்தது.

வளர்ந்த முதலாளித்துவ நாடுகளுக்கும், வளரும் நாடுகளுக்குமிடையேயான பொருளாதார உறவுகளைப் பரிசீலனை செய்தால் இந்த உறவுகளின் சிறப்பியல்பாக விளங்கும் ஆழ்ந்த முரண்பாடுகளை வெளிக்கொண்டு வந்துள்ளதைக் காணமுடியும். வளர்ந்த முதலாளித்துவ நாடுகள், வளரும் நாடுகளுடனான வாணிக உறவுகளில் ஆதிக்கநிலையையே வகிக்க விரும்புகின்றன. சுதந்திரமான பொருளாதார வளர்ச்சி, சமூக முன்னேற்றம் ஆகிய பிரச்சனைகளுடன் மிகுந்த தொடர்புடையவையாக விளங்குகிற அவை, வாணிகப் பரிமாற்றத்தில் மிகுந்த சாதகமான விலைகளைப் பெறுவதில் வெற்றிபெறமுயல்கிற சர்வதேச வேலைப்பகுப்பில் தாங்கள் பங்குபெறுவதைத் தீவிரமாக்குவதற்கான முயற்சிகளுடன் தொடர்பு கொண்டவைகளாக விளங்குகின்றன.

இன்றைய வளர்ந்துவரும் பாதுகாப்புக்கொள்கை, சர்வதேச வாணிகம் வளர்வதற்குப் பெருந்தடையாக விளங்குகிறது. இந்தப் பாதுகாப்புக் கொள்கையை நோக்கிய இயல்பு உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தில் நிகழ்கிற நெருக்கடிகளின் பயனாகவும் வளர்ந்த

முதலாளித்துவ நாடுகளிடையேயுள்ள முரண்பாடுகள் தீவிரமடைவதன் பயனாகவும் வலிமையடைந்துவருகின்றன. இந்த முரண்பாடுகள் அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகள், ஜப்பான் ஆகியவற்றின் அந்நிய நாட்டு வாணிக உறவுகளில் மிகவும் தெளிவாக வெளிப்படுகின்றன.

இன்றைய சர்வதேச பொருளாதார உறவுகள் பற்றிய பகுப்பாய்விலிருந்து தோன்றும் ஒரு முக்கியமான முடிவு, வளர்ந்த முதலாளித்துவ நாடுகள், சோஷலிச நாடுகள் மற்றும் வளரும் நாடுகளுடன் செய்துவரும் வாணிகத்தில் விதிக்கிற கட்டுப்பாடுகளையும், பின்பற்றுகிற ஓர வஞ்சகமான கொள்கைகளையும் கைவிட்டுவிட வேண்டுவதன் இன்றியமையாமையை வலியுறுத்துவதேயாகும். இந்தக் கொள்கைகள், விஞ்ஞான தொழில்நுட்பத் தகவல் பரிமாற்றத்துக்கும் வாணிகப்பெருக்கத்திற்கும் தடையாக விளங்குகின்றன. விஞ்ஞான அறிவு தொடர்பான தகவல்கள் மற்றவர்களுக்குப் பரவுவது தொடர்பான விஷயங்களை மிகுதியான அளவு இரகசியமாக வைத்திருப்பதற்கு எதிரான முயற்சிகள் செய்வது இன்றியமையாதது ஆகும். ஏனெனில் இது பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கும் உலகத்தை விஞ்ஞான அடிப்படையில் மாற்றுவதற்கும் இன்றியமையாத நவீன தொழில் நுட்பம் பற்றிய தகவல்கள் கிடைப்பதற்குத் தடையாக விளங்குகிறது.

ருமேனிய சோஷலிசக் குடியரசின் தலைவர் தோழர் சீசெஸ்க்யூ அவர்கள் மேற்கண்ட பிரச்சினைகள் தொடர்பாகக் கூறிய விஷயங்களைப் பற்றிக் கூற விரும்புகிறேன். ''உற்பத்தி சக்திகளை சர்வதேசமயமாக்கும் நிகழ்ச்சிப்போக்கு முடிவாக இன்றைய விஞ்ஞான தொழில் நுட்பத்தின் வளர்ச்சியுடன் பிணைக்கப்பட்டுள்ள ஒரு புறவய நிகழ்ச்சிப் போக்காகும். எந்த

நாட்டின் சுதந்திரத்தையும், அரசாண்மையையும் பாதிக்காமலும், ஒவ்வொரு நாட்டின் நலன்களை மனதில் கொண்டும், இந்தப் புறவய நிகழ்ச்சிப் போக்குகளை இணைக்கிற ஏற்புடைய ஒப்பந்தங்களைச் செய்து கொள்வதே பிரச்சினையாகும். உற்பத்தி சக்திகளை சர்வதேச மயமாக்குவது என்ற நிகழ்ச்சிப் போக்கானது தேசிய நலன்களுக்கு ஒத்திசைவாக இருப்பது சமூக முன்னேற்றத்திற்கான கொள்கையை நிறைவேற்றுவதில் அடிப்படையான காரணியாக விளங்குகின்றது"[1] என்று அவர் கூறினார்.

சர்வதேச வேலைப்பகுப்பில், ருமேனியா முனைப்பான பங்கேற்று வருகிறது. ருமேனிய கம்யூனிஸ்ட் கட்சியின் திட்ட நிகழ்ச்சி உற்பத்தித்துறையில் பிற நாடுகளுடன் பொருளாதார தொடர்புகளையும் கூட்டுறவையும் விரிவு படுத்துவதும், சர்வதேச வேலைப்பகுப்பில் முனைப்பாக பங்கு பெறுவதும், எந்த ஒரு நாடும் வளர்ச்சியடைவதற்கு இன்றியமையாத நிபந்தனையாகும். இது ருமேனியாவின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாத புறவயத் தேவையாகும். இந்தக் கருத்துக்கு உண்மையாக இருக்கும் போதும், அதனுடைய பொருளாதார, சமூக வளர்ச்சிக்கான முயற்சியில் தீர்மானமான உள்நாட்டுக்காரணிகளின் பங்கின் மீது மிகுதியான கவனம் செலுத்தும்போதும், ருமேனியா பிற நாடுகளுடனும், பரஸ்பர பொருளாதார உதவிக்கான உறுப்பு நாடுகளுடனும் சோஷலிச உறுப்பு நாடுகளுடனும், வளரும் நாடுகளுடனும், வளர்ச்சியடைந்துள்ள முதலாளித்துவ நாடுகளுடனும் கொண்டுள்ள உறவுகளை தொடர்ச்சியாக, விரிவடையவும், பல்வகைமயமானதாகவும் ஆக்கி வருகிறது. விவசாய-தொழில் பொருள் உற்பத்தியின் வளர்ச்சி விகிதங்கள் சர்வதேச வேலைப்பகுப்பில், ருமேனியா தீவிரமாகப் பங்குபெற்று வருவதைத் தெளிவாகு விளக்குவதாக உள்ளன. அதனுடைய மொத்த தேசிய உற்பத்தியில் வெளிநாட்டு வாணிகத்தின் வளர்ந்து வரும் பங்கும் இதற்குச் சான்றாக விளங்குகிறது.

சோஷலிச ருமேனியா அனைத்து நாடுகளுடனும், பரஸ்பர நலன்களை விளைவிக்கும் பொருளாதார உறவுகளை வளர்ப்பதற்கு அனைத்து முயற்சிகளையும் செய்கிறது. மேலும் அது அனைத்து நாடுகளுடனும் சர்வதேச பொருளாதாரக் கூட்டுறவை விரிவடையச் செய்யவும் தீவிரப் படுத்தவும் எல்லா முயற்சிகளையும் செய்து வருகிறது.

## அடிக்குறிப்பு

1. **ஒரே சீராக வளர்ந்த சோஷலிச சமுதாயத்தைக் கட்டும் பாதையில் ருமேனியா** - என். சீசெஸ்க்யூ. பாலிட்டிக்ஸ் பதிப்பகத்தார், தொகுதி 4. 1974.

**பேராசிரியர் டிபர் பாலன்காய்**

*உலகப் பொருளாதார நிறுவனம்.*
*ஹங்கேரிய விஞ்ஞானக் கலைக்கழகம்*

## விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சி: இன்றைய படிநிலையில் முதலாளித்துவத்தின் பொருளாதார சமூக முரண்பாடுகள்

இரண்டாவது உலகப் பெரும் போருக்குப் பிறகு முதலாளித்துவ உலகில் உற்பத்திச் சக்திகளிலும், உற்பத்தி உறவுகளிலும் முக்கியமான மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் விளைவாக மூலதனத்தின் மறு சீரமைப்புடன் உற்பத்தித்துறையிலும், நுகர்வுத் துறையிலும் குறிப்பிடத் தகுந்த வேகமான மாற்றங்கள் பின்தொடர்ந்தன. வேலைபபகுப்பு மிகப் பரவலாக ஆனதால் சமூக அமைப்புகளின் மட்டமும், உற்பத்தியின் மேலாண்மை மட்டமும் உயர்ந்தன. வளர்ந்த முதலாளித்துவ நாடுகளில் தேசிய வருமானத்தின் 20 லிருந்து 25 சதவிகிதம அரசுத்துறை கொடுக்குமளவுக்கு அரசு ஏகபோக முதலாளித்துவ அமைப்பு முறை உருவாக்கப் பட்டது. பலவகையான வரவு செலவுத் திட்டம், நிதிமுறைகள், அரசியல் வகைதொகைகள் ஆகியவற்றின் மூலம், பொருளாதார வளர்ச்சி விகிதம், வேலைவாய்ப்பு, விலைவாசிகள், பன்னாட்டுச் செலுத்தல்நிலை, சமூகப் பாதுகாப்பு ஆகியவை போன்ற பொருளாதார வாழ்வின்

அனைத்துப் பகுதிகளின் மீதும் அரசு தன் செல்வாக்கைச் செலுத்தத் தொடங்கியது.

ஆனால் அரசு ஏகபோக முதலாளித்துவம், முதலாளித்துவப் பொருளாதாரத்தின் அடிப்படை விதிகளை மாற்ற முடியவில்லை.

மேம்பாடு செய்யப்பட்ட அமைப்புகளும், தீவிரமாக்கப் பட்ட கட்டுப்பாடுகளும் உற்பத்தி சக்திகள் வீணாகும்படி செய்தன; முரண்பாடுகளைத் தீவிரமடையச் செய்தன. 1970 களின் தொடக்கத்திலிருந்து, உலக முதலாளித்துவ பொருளாதாரம் நீண்ட, மிகுதியான தீய விளைவுகளைத் தோற்றுவித்த கட்டமைப்பு நெருக்கடிக்குள் அகப்பட்டது. இந்த நெருக்கடி, முதலாளித்துவ சூழ்நிலைகளில் விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சியுடன் நேரடியான தொடர்புடைய பல புதிய விஷயங்களின் தோற்றத்தினால் சிறப்புற்றதாக விளக்கியுள்ளது.

அண்மைப் பத்தாண்டுகளில் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியையும், அவை மிகுதியான சமுதாயத் தன்மையடைந்துள்ளதையும், உற்பத்தி பொருளாதார வாழ்க்கை ஆகியவை முழுவதுமாக இதுவரை கண்டிராத அளவுசர்வதேசத் தன்மையடைந்துள்ளதை அடிப்படையாகக் கொண்டு தீர்மானித்துக் கொள்ளலாம். தேசிய வருவாயின் உயர்வுடன் ஒப்பிட்டால் உலக வாணிகத்தில் ஆண்டிற்கு 9 முதல் 10 சதவிகிதம் வரை உயர்ந்து வந்தது. கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிக்கப் பட்டுள்ளதைப் போல இறக்குமதிகளும், ஏற்றுமதிகளும் குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்திருந்தன என்பதைக் காண முடியும்.

மூலப்பொருள், ஆற்றல் துறைகளில் மட்டும் அல்லாமல் சில பதனீடு செய்யும் தொழில்களிலும் வெளிநாட்டுச் சந்தை களையும், அளிப்புகளையும் சார்ந்திருப்பதைக் காண முடியும். மேற்கு ஐரோப்பாவில் இரசாயனத் தொழில்,

அட்டவணை : 1

## வெளிநாட்டு வாணிபம் மொத்த தேசிய உற்பத்தியின் சதவிகிதமாக

| நாடுகள் அல்லது நாடுகளின் குழுக்கள் | ஏற்றுமதிகள் | | | | இறக்குமதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1950 | 1960 | 1970 | 1977 | 1950 | 1960 | 1970 | 1977 |
| வளர்ந்த முதலாளித்துவ நாடுகள் அனைத்தும் | 8.2 | 10.2 | 13.9 | 13.0 | 7.2 | 9.5 | 13.4 | 15.6 |
| அமெரிக்க ஐக்கிய நாடுகள் | 4.1 | 4.7 | 5.7 | 6.9 | 3.0 | 3.8 | 5.5 | 6.0 |
| மேற்கு ஐரோப்பா | 14.0 | 16.9 | 23.2 | 31.0 | 13.3 | 16.5 | 22.9 | 28.4 |
| ஐரோப்பிய பொருளாதார சமூகம் | 13.9 | 16.7 | 22.8 | 30.2 | 12.7 | 15.9 | 22.1 | 27.6 |
| ஜெர்மன் கூட்டுக் குடியரசு | 6.8 | 15.3 | 22.0 | 29.9 | 5.4 | 12.4 | 20.2 | 27.3 |
| பிரான்ஸ் | 11.5 | 11.7 | 16.4 | 22.4 | 8.1 | 9.0 | 15.7 | 22.1 |
| கிரேட்பிரிட்டன் | 19.1 | 19.1 | 17.2 | 29.3 | 17.1 | 20.0 | 22.0 | 26.6 |
| இத்தாலி | 4.2 | 9.4 | 17.2 | 23.5 | 6.5 | 10.5 | 18.0 | 20.3 |
| ஜப்பான் | 4.9 | 7.6 | 11.2 | 17.4 | 3.5 | 6.9 | 9.9 | 11.0 |

கருவிகள் உற்பத்தி செய்தல், மின்-தொழில் நுட்பப் பொறியியல், கப்பல் கட்டுதல், போக்குவரத்து ஆகியவை போன்ற தொழில்களில் ஏற்றுமதியும், இறக்குமதியும் 33 சதவிகிதத்திற்கும் 55 சதவிகிதத்திற்குமிடையிலிருந்தது. உலகப் போர் முடிந்த நாளிலிருந்து உதிரிப்பொருட்கள் உற்பத்தியும் தொழிற்சாலை முழுமைக்கான இயந்திரங்கள் செய்வதும் குறிப்பிடத்தகுந்த அளவு வேகமாக உயர்ந்திருக்கின்றன. மேலும் இது ஒருவரையொருவர் சார்ந்திருப்பதையும் புறவயமாகத் தோற்றுவிக்கிறது. மேலும் உற்பத்தி செய்யட் பட்ட பொருட்களுக்கான உதிரிப் பாகங்கள் செய்வதற்கான வசதிகள் செய்யப்படுவது, வெளி நாடுகளில் குறிப்பிடத்தகுந்த அளவு மேற்கொள்ளப் படுகிறது. அது உற்பத்தியில் கூட்டுறவை விரிவு படுத்துவதையும், பொருளாதாரத்துறையில் ஒருவரையொருவர் சார்ந்திருப்பதையும் புறவயமாகத் தோற்றுவிக்கிறது.

குறிப்பாக 1960 களில் பன்னாட்டு இணையங்கள் வேகமாக வளர்ச்சியடைந்தது, இந்த சர்வதேசத் தன்மையைப் பிரதிபலித்தது. 1977 க்குள் இந்த நிறுவனங்களின் முதலீடுகளின் மட்டம் 200,000 மில்லியன் டாலராகவும், இன்றைய விலையில் அதன் சுழல் முதல் 700,000 மில்லியன் டாலராகவும், ஆயிற்று. இது 1977 களில் முதலாளித்துவ நாடுகளின் மொத்த ஏற்றுமதியான 720,000 மில்லியன் டாலரைக் காட்டிலும் சிறிதளவே குறைவாகும். புள்ளி விவரங்களின்படி உலக முதலாளித்துவத்தின் வணிகத்தின் கால் பகுதி, பன்னாட்டு இணையங்களுக்கிடையில் கொடுக்கப்படும் பொருட்களை உள்ளடக்கியதாகவுள்ளது. அதில் பாதி ஒருவழியிலோ மற்றொரு வழியிலோ பன்னாட்டு இணையங்களுடன் தொடர்புடையதாக உள்ளது. வளர்ந்த முதலாளித்துவ நாடுகளின் உற்பத்தியில் ஒரு கால் பங்கிற்குமேல் பன்னாட்டு இணையங்களால் கட்டுப்படுத்தப்படுகின்றது. இந்தப் பன்னாட்டு இணையங்கள் சர்வதேச உற்பத்தியின் முக்கியமான சாதனமாக விளங்குவதால் சர்வதேச பொருளாதாரத்

தொடர்புகள் மீதும், பொருட்களைக் கொடுக்கும் நிபந்தனைகள் பற்றிக் கூறுவதன் மீதும், பொருட்களின் தரம், தொழில் நுட்பத்தரம் ஆகியவற்றை நிர்ணயிப்பதன் மீதும், உற்பத்தியை மாற்றுவது, அமைப்பு முறைகளை மாற்றுவது, தொழில் நுட்ப முன்னேற்றங்களை நிர்ணயிப்பது ஆகியவற்றின் மீதும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. பன்னாட்டு இணையங்கள் நிதியைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் கொண்டிருக்கின்றன. எனவே அவை வரிகளையும், சுங்க வரிகளையும், நாணயங்களையும், சூழ்நிலைப் பாதுகாப்புக் கட்டுப்பாடுகளையும் தங்களுக்குச் சாதகமாக ஆக்கிக் கொள்கின்றன. மிகவும் அதிகமான அளவு சர்வதேசியத் தன்மையடைந்துள்ள உலக முதலாளித்துவப் பொருளாதாரம், முரண்பாடுகளின் ஒரு முடிச்சாக ஆகியுள்ளது.

சர்வதேசத் தன்மையடைவதன் விளைவாக, பரஸ்பரம் ஒருவரை ஒருவர் சார்ந்திருப்பது 1970 களின் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் சிறப்பாகி வந்தது. ''சார்ந்திருப்பது'' என்ற பதம், பழைய பொருளான நேரடியாக ஆதிக்கத்திற்கு உட்பட்டிருத்தல் என்பதோடு, வலிமை வாய்ந்த வாணிகப் பங்காளிகளுக்கு அவர்களின் சுதந்திரத்தின் மீது கட்டுப்பாடு என்பதையும், வெளிக் காரணிகளின் மீது அதிகப்படியாக சார்ந்திருப்பதையும் உள்ளடக்கியதாகும். இது பன்னாட்டு இணையங்களையும் அமெரிக்க ஐக்கிய நாடுகளையும் பொருத்தமட்டில் உண்மையாக இருக்கிறது. இப்பொழுது அவைகளின் பொருளாதாரம் பெருமளவு வெளிச் சந்தைகளைச் சார்ந்ததாக உள்ளது. எனவே அதன் முந்திய தலைமை நிலையை இழந்துள்ளது.

1970 களில் உலகப் பொருளாதாரப் பிரச்சினைகள் தீவிரமடைந்தன. அதன் விளைவாக, இந்த முதலாளித்துவ மறு உற்பத்தியின் கட்டமைப்பு சிதைவு நிகழ்ந்ததை அடிப்படையாகக் கொண்டு ஒரு குறிப்பிட்ட அளவு இதைக்

கூறலாம். முதலாளித்துவத் தொழில்களின் வேகமான முன்னேற்றத்தின் விளைவாகவும், ஆற்றல் வளங்களை வீணடிப்பதன் மூலமாகவும், முதலாளித்துவ உலகின் நுகர்வின் அமைப்பில் மாற்றங்களாலும் ஆற்றல் வளங்கள் முழுமையையும் தீர்த்து விடக்கூடிய பேரபாயம் இருந்தது. ஆற்றல் நெருக்கடியைத் தவிர, வேறு இயற்கை வளங்களுக்கு வழிவகை ஏற்பாடு செய்வதிலும் நெருக்கடியிருந்தது. இன்னும் உணவுப் பொருட்களின் அளிப்பில் ஒரு பற்றாக் குறை ஏற்படலாம்—குறிப்பாக வளரும் நாடுகளில் ஒரு முற்போக்கான சமுதாய மாற்றம் ஏற்படுத்தப்படா விட்டால், உலக மட்டத்தில் இயற்கை வளங்களைப் பயன் படுத்துவது ஒரு பகுத்தறிவுக்குகந்த முறையில் அமைக்கப் படாதிருந்தால் ஒரு பற்றாக்குறை ஏற்படலாம். உற்பத்தியும், நுகர்வும் வேகமாகவும், தன்னிச்சையாகவும் வளர்ச்சியடைந்துள்ளன. வளர்ந்த முதலாளித்துவ நாடுகளில் உயிரின் வாழ்க்கைச் சூழல் பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளன. இதற்கான தீர்வுகள் சர்வதேச மட்டத்தில் உணர்வு பூர்வமான, ஒன்றிணைக்கப்பட்ட நடவடிக்கைகள் மூலமே—பல சமயங்களில் மிகப்பெரும் பணச் செலவின் மூலமே—தான் காணப்படமுடியும். உலகப் பிரச்சினைகள் தீவிரமடைந்திருப்பது, அதிக அளவு சர்வதேச மயமாக்கப்படுவதினாலும், பரஸ்பரம் ஒருவரை ஒருவர் சார்ந்திருப்பதினாலும் விளைகிற பயன்களின் ஒரு பகுதியே ஆகும். இந்த உலகப் பிரச்சினைகள் சர்வதேச அரசியலில் பரந்த ஒரு பங்கினை வகிக்கின்றன. சர்வதேச நெருக்கடிகளுக்கும் பல சமயங்களில் காரணமாகவும் உள்ளன.

1970 களின் தொடக்கத்தில், உலகப் பொருளாதார சக்திகளின் அணியில் முக்கியமான மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன. இது, சோஷலிசத்தை வலிமைப் படுத்துவதிலும், பல வளரும நாடுகள் சுதந்திரம் பெற்றதிலும் வெளிப்பட்டது. இந்த நாடுகள் அவை களுடைய பொருளாதார சுதந்திரத்தை வலுப்படுத்திக்

கொள்வதற்கான, மிகவும் இன்றியமையாத கொள்கைகளைப் பின்பற்றி வருகின்றன. முதலாளித்துவ நாடுகளில் உள்ள சக்திகளின் தொடர்புகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஜப்பானின் வலிமையான நிர்ப்பந்தத்தின் விளைவாக மேலும், மேலும் பின்வாங்கி வருகிறது. 1950 க்கும் 1977 க்குமிடையில் முதலாளித்துவ உலகின் மொத்த தொழில் பொருள் உற்பத்தியில் அதன் பங்கு 49 சதவிகிதத்திலிருந்து 37 சதவிகிதமாகக் குறைந்துள்ளது. அதே வேளையில், அதே காலத்தில், மொத்தத்தில ஜப்பானிய தொழில் உற்பத்தியின் பங்கு, 1.6 சதவிகிதத்திலிருந்து 10 சதவிகிதம் அதிகமாகி உள்ளது. ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் பங்கு 1950 இல் இருந்ததைப் போலவே 26 சதவிகிதமாகவே இருந்தது.

சர்வதேச வாணிபத்திலும், இம்மாதிரியான மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. 1977 இல் உலக முதலாளித்துவ நாடுகளின் ஏற்றுமதிகளில் யு. எஸ். இன் பங்கு 11.5 சதவிகிதமாக இருந்தது. ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் பங்கு 37.5 சதவிகிதமாகவும், ஜப்பானின் பங்கு 8 சதவிகிதமாகவும் இருந்தது. 1960 களின் பிற்பகுதியில் யு.எஸ். இன் தங்கக் கையிருப்புகள் மிகக்குறைந்த அளவாக ஆக்கப்பட்டு விட்டன. டாலர் தொடர்ந்து அதன் வலிமையை இழந்து வந்ததால் பொருளாதாரத்துறையில் அதற்குப் போட்டிகள் தோன்றின. 1970 களில் முன்னர் வழக்கமாக மூலதனத்தை ஏற்றுமதி செய்துவந்த அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் கிரேட் பிரிட்டனும் வேறு முதலாளித்துவ நாடுகளும் சேர்ந்து கொண்டன. உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தில், பன்னாட்டு இணையங்கள் வளர்ச்சியடைந்தன. "இரண்டு அதிகார பீட அமைப்பு முறை"க்கு வழி வகுத்துள்ளன. அது உலக பொருளாதாரத்திலும், சர்வதேச அரசியலிலும், மிகவும் முக்கியமான விளைவுகளை ஏற்படுத்துவனவாக உள்ளன. 1960 இல் எட்டு முதலாளித்துவ நாடுகளின் முதலீடு

களின் மொத்தம் 56 சதவிகிதமாக இருந்தது. 1973-லிருந்து 1977 க்குள் அது 35 சதவிகிதமாகவே இருந்தது.

உற்பத்தி சோஷலிசத் தன்மையடைந்ததன் விளைவாகவும், விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் விளைவாகவும் இரண்டாவது உலகப் பெரும்போருக்குப் பின் தோன்றி யிருந்த அரசு ஏகபோக முதலாளித்துவம், செயற்கையாகப் பணவீக்கத்தைத் தூண்டிவிட முயன்றது. அவ்வாறு தூண்டி விடப்பட்ட பணவீக்கம் 1960 களிலிருந்து கட்டுப் படுத்துவதற்கு முடியாததாகப் போயிற்று. அரசு ஏகபோக முதலாளித்துவத்தின் வீழ்ச்சிக்கு எடுத்துக்காட்டாக விளங்கிய "தேக்க நிலை பணவீக்கம்" என்ற புதிய ஒரு பண வீக்கத்தால் முதலாளித்துவப் பொருளாதாரம் பாதிக்கப் பட்டது. அரசு ஏகபோக முதலாளித்துவம், அதனுடைய கட்டமைப்பு மாற்றங்களை சமாளிக்க இயலாத நிலையில் தான் இருந்தது என்பதை இது மெய்ப்பித்தது.

அரசு-ஏகபோக முதலாளித்துவ அமைப்பு முறையின் வீழ்ச்சி ஒரு சர்வதேசத்தன்மை கொண்ட பொருளாதார அமைப்புக்கும், செயலாட்சிக்குமான தேவையின் மூலம், முதன் முதலில் வெளிப்பட்டது. தேக்கம் நிறைந்த வளர்ச்சி சுழல் ஏணி போன்று உயர்ந்து செல்லும் பணவீக்கம், வேலையில்லாத் திண்டாட்டத்தின் உயர்ந்த மட்டம், சர்வதேச பொருளாதார சம நிலையின் நிலை குலைவுகள் ஆகியவை முதலாளித்துவ உலகம் முழுமையிலும் ஒரே நேரத்தில் பரவின. அவை அடிப்படையில் முக்கியமாக சர்வதேச பொருளாதார அமைப்பு முறையின் பிரச்சினை களாகவே வெளிப்பட்டன. உலகப் பொருளாதாரத்தை மிக அதிகமான அளவு ஏகபோகத்தன்மை கொண்டதாக ஆக்கிய பன்னாட்டு இணையங்களின் விரிவாக்கம், பணவீக்கத்தை அதிகமாக ஆக்கிய முக்கியமான காரணிகளில் ஒன்றாகும். 1960 களின் பின்பகுதியில் பிரெட்டன் உட்ஸ்நிதி உடன்பாடு முறிந்துவிட்டது. இதற்கும், பணவீக்கத்திற்கும் இடையி லிருந்த தொடர்பு, யூரோ டாலர் சந்தை என வழங்கப்

படுகிற மிக அதிகமான அளவில் இருந்த நிதி மூலதனத்தால் உறுதிப்படுத்தப்படுகிறது.

சென்ற காலத்திலிருந்து மரபு வழியாக வந்திருந்த, காலனி நாடுகளில் காணப்பட்ட இயல்புகளைக் கொண்டிருந்த சர்வதேச வேலைப்பகுப்பு முறையும் ஒரு நெருக்கடி நிலையை எதிர்நோக்கியது. நியாயமான அடிப்படையில் வருமானத்தைப் பகிர்ந்து கொள்வதையும், முன்னேற்றமடையச் செய்யக்கூடிய ஒரு சர்வதேச வேலைப் பகுப்பையும அடிப்படையாகக் கொண்டு வளரும் நாடுகள், சுரண்டப்பட்ட நாடுகளாக இருந்த தங்கள் நிலைமைகளை மாற்ற விரும்பின. இந்த விருப்பங்களின் விளைவாக ஏகாதிபத்திய நாடுகள் ஒரு விலைச்சண்டையை தோற்றுவித்தன. அதுவும் கூட விரைவான பணவீக்கத் திற்கும், சர்வதேச பொருளாதார சம நிலையைச் சீர்குலைக்கவும்தான் உதவியது. ஒருசில வளரும் நாடுகளுக்கே (OP.C உறுப்பினர் நாடுக்கு மட்டுமே) நன்மை பயப்பதாக இந்த விலைக்குண்டு வெடிப்பு உதவியாக இருந்தது. அதிலும் இந்த நாடுகளில், இந்த விலைக்குண்டு வெடிப்பால் உண்மையில் பயன்பெற்றவர்கள் பெரும் பூர்ஷ்வாக்களே.

பூர்ஷ்வா அரசுகளும், ஏகபோக மூலதனமும், இந்த நெருக்கடிகளைத் தீர்ப்பதற்குப் புதிய சூழ்நிலைக்குப் பல்வேறு மட்டங்களில் தங்களைத் தகவமைத்துக் கொள்வதற்கான முயற்சி செய்வதற்காகத் துணிச்சலான பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன

தனி ஏகபோகங்களின் மட்டத்தில் அவை உற்பத்தித் திறன்களை மறுசீரமைக்கவும் விரைவுபடுத்தவும், அளிப்புகளையும், சந்தைகளையும் பெறுவதற்காக வெளிநாட்டு விரிவாக்கத்தைப் பெருக்கவும் சர்வதேச தொழில் கூட்டுறவின் நலன்களைப் பயன்படுத்திக் கொள்ளவும் முயன்று வருகின்றன. 1970 களின் போது வளர்ச்சியுற்ற நாடுகளின் மூலதனத்தைப் "பன்னாட்டுத் தன்மை கொண்டதாக" ஆக்கும் நிகழ்ச்சிப் போக்கு பெருகியது.

இன்னும் வரும் காலத்தில் இந்த நிகழ்ச்சிப் போக்கு மிக விரைவாகத் தொடர்ந்து நடைபெறும் என்று எதிர் பார்க்கலாம். பெரும் ஏகபோகங்களின் முதலீட்டிற்காகக் கூட்டான திட்டங்களிலிருந்து சர்வதேச சந்தைகளைப் பகிர்ந்து கொள்வது மற்றும் ஒரு சில அரசுகளுக்கு எதிரான பொதுவான ஒரு கொள்கையை மேற்கொள்வதுவரை உயர்ந்துள்ளது. பன்னாட்டு இணையங்கள் "தங்கள் நாட்டு" அரசுகளை வெளிநாட்டுச் சந்தைகளையும், முதலீடு களையும், கைப்பற்றிக் கொள்வதற்கு ஏற்றவாறு உடன் பாடுகள் செய்து கொள்ளுமாறு ஊக்குவிக்கின்றன. அதே வேளையில் அவை இயங்கி வருகிற நாடுகளின் அரசு களுக்கு உகந்தவாறு நடந்து கொள்ளவும், குறிப்பாக வளரும் நாடுகளின் அரசுகளுக்கு உகந்தவாறு நடந்து கொள்ளவும் முயல்கின்றன. எனினும் வளர்ந்த நாடு களிலும் வளரும் நாடுகளிலும் உள்ள முற்போக்கு சக்திகள், பன்னாட்டு இணையங்களின் செயல்முறைகளின்மீது, வரம்பு களும், கட்டுப்பாடும் விதிக்கப்பட வேண்டுமெனத் தொடர்ந்து கோரி வருகின்றன.

அரசு ஏகபோக பொருளாதாரக் கொள்கை மட்டத்தில் புதிய சூழ்நிலைக்குத் தகவமைத்துக் கொள்வதற்கு மேலும் அதிகமான அளவு வழிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன முந்திய காலத்தில் முழு அளவு வேலை வாய்ப்புகளும், வேகமான ஒரே சீரான பொருளாதார வளர்ச்சியும், இலட்சியங்களாக இருந்தன. ஆனால், இப்பொழுதுள்ள இலட்சியங்களோ பணவீக்கத்திற் கெதிரான போராட்டமும், சர்வதேசப் பொருளாதார சம நிலையை உறுதிப்படுத்துவதற்கான முயற்சியும் தான். மரபு வழியான நிதி மற்றும் வரவு செலவுத் திட்டக்கொள்கை களுடன் முன்னர் மிகவும் அரிதாகவே பயன்படுத்தப்பட்ட விலைக் கட்டுப்பாடுகளும், வருமானக் கட்டுப்பாடுகளும் இப்பொழுது வழக்கமான ஒரு முறையாகிவிட்டன. சில வேளைகளில் அதனுடைய நேரடியான வடிவங்களில் (விலையை நிர்ணயித்தல் மற்றும் ஊதியக் கட்டுப்பாடு)

முதலாளித்துவ நாடுகளின் அரசுகள் கூட்டமைப்புப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குக் குறிப்பிட்ட அளவு கவனம் செலுத்தி வருகின்றன. பஞ்சாலைப் பொருட்களுக்கும் பேருந்து மற்றும் கம்ப்யூட்டர் தொழில்களுக்கு உதவித் தொகைகளும், திட்டமிடுதலிலும், ஆற்றல் அளிப்பிற்கான நிதி உதவியளித்தலிலும், அவற்றின் பங்கு அண்மையாண்டுகளின் குறிப்பிடத்தகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. நீண்டகாலப் பொருளாதார இலக்குகளிலும், குறுகிய காலப் பொருளாதார இலக்குகளிலும் முரண்பாடுகள் தீவிரமடைந்துள்ளன. அண்மைக்காலத்தில் சரிந்து கொண்டிருக்கும் தொழில்களைக் காப்பாற்றும் முயற்சியில் பயன்படுத்தப்படுகிற காப்புக் கொள்கையின் வளர்ச்சியை நாம் காண்கிறோம். சர்வதேச ஏகபோக மூலதனத்தின் மிக அதிகமான தந்திரத்திறன் வளர்ச்சியின் விளைவாகவும் சர்வதேச பொருளாதாரத்தின் பெருமளவு உற்பத்தியின் உறுதியற்ற தன்மையின் விளைவாகவும் சில அரசுகள் மேற்கொண்டுள்ள பொருளாதார அரசியல் நடவடிக்கைகள் தொடர்பாகத் தனியார் மூலதனம் மேற்கொள்ளும் எதிர்ச் செயலானது மேலும் அதிகமான அளவு முரண்பாடு நிறைந்ததாக ஆகியுள்ளது. எதிர்பார்த்ததற்கு மாறாகப் பல நாடுகளில் தேவைகளைத் தூண்டுவதை நோக்கமாகக் கொண்டு, மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் அரசு ஏகபோக முதலாளித்துவப் பொருளாதாரக் கொள்கையின் பயனுள்ள தன்மையைக் குறைப்பதற்குப் பயன்பட்ட தனியார் பணமுதலீட்டின் உயர்வுடன் இணைந்து தோன்றின.

அரசுகளுக்கிடையேயான மட்டத்தில் 1970 களில் அரசுகளுக்கிடையே கூட்டாக ஆலோசனைகளுக்கான தயாரிப்புகளில் குறிப்பிடத்தக்க அளவு பெருக்கம் ஏற்பட்டுள்ளது. பொருளாதாரத்துறையில் ஒருவரையொருவர் மிகுதியாகச் சார்ந்திருப்பது, ஏகாதிபத்திய நலன்களுக்கு எதிராக உள்ள, உலக சக்திகளின் அணிகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தில் நெருக்கடியின்

வலுவைக் குறைப்பதற்கான முயற்சிகள் ஆகியவை இதில் முக்கியமான பங்கு வகிக்கின்றன. கூட்டான ஆலோசனைகள் மற்றும் ஒன்றிணைப்புகள் ஆகியவற்றிற்கான முயற்சிகள் அரசுகளுக்கு இடையேயான உச்சநிலைக் கூட்டங்களிலும், பல சர்வதேச அமைப்புகள் மூலமாகவும் செய்யப் படுகின்றன.

உதாரணமாக, சர்வதேச வாணிகத்தை சுதந்திர மானதாக ஆக்குவதற்கும், சந்தைகளை விரிவடையச் செய்வதற்கும், முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1973 இல் தொடங்கிய டோக்கியோ சுற்றுப் பேச்சுகள் இன்னும் கூடப் பெருமளவு உதவித் தொகைகளை அடிப்படையாகக் கொண்டதாகவும் சுங்கவரி அல்லாத கட்டுப்பாடுகளையும், நஷ்ட ஈட்டுச் சுங்கவரிகளையும் அடிப்படையாய்க் கொண்ட விவசாயப் பொருட்களை உள்ளடக்கிய சர்வதேச வாணிகத்தைப் பற்றியதாகவும் இருந்தது. கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதற்கான இந்த முயற்சிகள் அனைத்தும், இன்றைய நெருக்கடியின் காரண மாகப் பெருகிக் கொண்டே வருகிற மறைமுகமான காப்புக் கொள்கை நிறைந்த சூழ்நிலையில் செய்யப்பட்டு வருகின்றன 1972 இல் ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகளுக்கும் (EEC), ஐரோப்பிய சுதந்திரமான வாணிக சங்கத்திற்கும் இடையே தொழில் பொருட்கள் பற்றிய தாராள வாணிக உடன்பாடு ஒன்று நடைமுறைக்கு வந்தது. 1975 ல் கையெழுத்தான லோமே கன்வென்ஷனில் இன்று 56 வளரும் நாடுகள் உறுப்பு நாடுகளாக உள்ளன. அவை அனைத்தும் ஐரோப்பிய சமூக நாடுகள் சந்தைகளில். சலுகையாதரவுள்ள நுழைவுரிமையைக் கொண்டுள்ளன ஐரோப்பியப் பொருளாதார சமூக நாடுகள் 110 நாடு களுடன் கட்டுப்பாடற்ற வாணிக மற்றும் சிறப்புரிமை ஒப்பந்தங்களைச் செய்துள்ளன. அது உலக வாணிபத்தில் பெரும் பகுதியைப் பாதிக்கிறது. 1971 க்கும் 1978 க்கும் இடையில் உலக முழுதிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சலுகை யாதரவு படிப்படியாக நடைமுறைக்கு வந்தது. அதன்படி

முதலாளித்துவ நாடுகள வளரும் நாடுகளிலிருந்து வருகிற பதனீட்டுப் பொருட்களுக்குச் சலுகைகள் வழங்கின அதே வேளையில அந்த நாடுகளிடம் அம்மாதிரியான சலுகைகள் எதிர்பார்க்கப்படவில்லை. ஆனால் இது ஒரு தேர்வு முறை மூலமாகச் செய்யப்பட்டது. இவ்வாறு தேர்ந்தெடுப்பதற்குப் பொருளாதாரம் மட்டும் அடிப்படையாக இல்லாமல் அரசியல் நோக்கங்களும் அடிப்படையாக இருந்தன. புதிய சக்திகளின் அணி சேர்க்கையின் அடிப்படையில், வளர்ந்த நாடுகள், வளரும் நாடுகளுக்குச் சில சலுகைகளை வழங்கத் தயாராக உள்ளன. ஆனால் முடிவில் இந்தச் சலுகைகள் அனைத்தும் புதிய அரசுகளிடையே பழைய நிலைகளையும் செல்வாக்கையும் பாதுகாப்பதற்காகத் தகவமைததுக் கொண்ட சாதனங்களாகச் சேவை செய்பவைகளேயாகும்.

சர்வதேச நிதித்துறையில், 'பொன் திட்டம் கைவிடப் பட்டதும், பின்னால் 1971 இல் மதிப்புக் குறைக்கப்பட்டதும், சர்வதேச நிதிபற்றிய பிரெட்டன்வுட்ஸ் ஒப்பந்தம் முறிந்து போனதும், நிலையான நாணயவிகிதத்திலிருந்து "உண்மை யான நாணயவ்கிதத்திற்கு" மாறுவதைப் புகுத்தியது இது அடிக்கடி மாறும் இயல்புடைய, மிதக்கும் விகிதங்களையும் பயன்படுத்துவதை உள்ளடக்கியதாக இருந்தது. சர்வதேச நிதி அமைப்பு முறையிலிருந்து தங்கப், மிகவும் திறமையாக நீக்கப்பட்டு விட்டது. தங்கத்தின் அதிகாரபூர்வமான விலை, நீக்கப்பட்டது. கிங்க்ஸ்டன் (ஜமைக்கா) என்ற இடத்தில் 1976 இல் நடந்த கூட்டத்தில், சர்வதேச நிதி நிறுவனத்தின் தங்கக்கையிருப்பின் மீது விதிக்கப்பட்டிருந்த தடைகளை நீக்குவதற்கான அடித்தளமிடப்பட்டது. அந்தக் கையிருப்பின் மூன்றில் ஒருபகுதி பணமாக மாற்றப்பட்டது அதனுடைய உறுப்பினர்கள் அதன் கையிருப்பில் பாதித் தொகையை வளரும் நாடுகளுக்கு உதவியாக அளிக்கப் பயன் படுத்தலாம் என ஒரு தீர்மானம் செய்தனர். சர்வதேச நிதி நிறுவனத்தைச் சேர்ந்த உறுப்பு நாடுகளிடையில் பன்னாட்டுச் செலுத்தல் நிலை தொடர்ந்து பற்றாக் குறையாக இருந்ததால், 1970 களின் இரண்டாவது அரைப்

பகுதியின் போது, அதனுடைய கடன் வசதிகள் குறிப்பிடத் தக்க அளவு உயர்ந்தது. கடன் வாங்குவதற்கான விதிமுறைகள் தளர்த்தப்பட்டன. அதேவேளையில், கடன் வசதி நிலைமைகள், குறிப்பிடத்தக்க, கண்டறிந்து கொள்ளக் கூடிய அளவு மோசமாகிக் கொண்டு இருந்தது. குறிப்பாகப் பொருளாதார, அரசியல் நடவடிக்கைகள் தொடர்பாக, சர்வதேச நிதி நிறுவனம், அதனிடம் கடன் வாங்கும் நாடுகளிடமிருந்து அதனுடைய பொருளாதார நிலை தொடர்பான விவரமான தகவலைப் பெறவிரும்புகிறது. கடன் கொடுப்பதற்கு ஒரு நிபந்தனையாகச் சில பொருளாதார அரசியல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அது கோரலாம். இம்மாதிரியான கோரிக்கைகள் அண்மைக்காலத்தில் மிக அதிகமாக ஆகியிருக்கின்றன சர்வதேச நிதி நிறுவனத்தின் இது தொடர்பான செயல்களை இத்தாலியிலும், கிரேட்பிரிட்டனிலும் உள்ள முற்போக்கு சக்திகள் தங்களுடைய நாட்டின் உள்விவகாரத்தில் தலையிடுவது எனக்கருதுவதால் இந்த நாடுகளில் எதிரெதிரான அரசியல் புயல்கள் தோற்றுவிக்கப் பட்டுள்ளன.

இவ்வளவு மாற்றங்கள் இருந்த போதிலும் முதலாளித்துவம் சர்வதேச நிதி அமைப்பு முறையில் ஒரு உறுதியான நிலையை அடைவதில் வெற்றி பெறமுடியவில்லை. செய்கையாகப் பெருகச் செய்யப்பட்ட நிதிச் சந்தையைக் கட்டுப்படுத்துவது கடினமானது மேலும் முன்னைப் போலவே இடையிடையே இந்த நாணயத்திலோ அல்லது அந்த நாணயத்திலோ ஊகவாணிகம் வேறு தீவிரமாக நடைபெறுகிறது. ஆனால் அதே சமயத்தில் முதலாளித்துவ நாடுகள் அதிகப்படியான நெகிழ்வுத் தன்மையும், புதிய சூழ்நிலைக்குத் தங்களைத் தகவமைத்துக் கொள்கிறதிறனும் உடையவையாக உள்ளன. பன்னாட்டுச் செலுத்தல் நிலைமையைக் காப்பதற்காக மையவங்கிகள் ஒன்றாக இணைந்து தலையிட்டதற்குப் பல உதாரணங்களை நாம் காணலாம். "நிதியியல் ஒற்றுமை" என்ற

முழக்கத்தை ஒரு சில இலைமறை காயாக உள்ள பொருளுடன் தான் நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் நிதித்துறையில் ஓர் முறிவைத் தவிர்ப்பதற்கான விருப்பம், முக்கியமான முதலாளித்துவ நாடுகளின் நலன்களுக்கு இசைவானதாகும். 1970 களின் தொடக்க காலத்தில், அமெரிக்க ஐக்கிய நாடுகள் சர்வதேச நிதித்துறையில் ஆதிக்கம் செலுத்தியது குறைக்கப்பட்டது. அந்தநாடு தன்னுடைய செயல்முறைகளை, அதனுடைய பங்காளி நாடுகளின் செயல்முறைகளுடன் இணைந்ததாக இருக்குமாறு பார்த்துக் கொள்வது இன்றியமையாததாக ஆயிற்று. சர்வதேசக் கணக்கிடும் முறையிலும், காப்புநிதியை உருவாக்குவதிலும் டாலா தன்னுடைய சர்வதேச நிலையைத் தக்கவைத்துக் கொண்டிருந்தபோதிலும், மதிப்புக் குறைத்தலின் காரணமாகவும், பொன் திட்டத்தைக் கைவிட்டதன் காரணமாகவும், அதனுடைய மதிப்பு பெருமளவு மாற்றத்திற்குள்ளாகியது. வேறு நாணயங்களும் வேறு செலுத்தல் முறைகளும் மார்க்குகள், யென்களும, தனிச்சிறப்பான பணம் பெறும் உரிமைகளும், மிகுந்த கவர்ச்சிகரமானவை ஆயின. 1970 களில், சர்வதேச நிதியியல் அமைப்பு முறை அரசு ஏகபோகக் கட்டுப்பாடு தொடர்பான, அதிகப்படியான முயற்சிகளுக்கான பகுதியாக விளங்கியது.

மேற்கு ஐரோப்பிய நாடுகளின் ஒன்றிணைப்பின் மட்டத்தில், 1960 இல் பல துறைகளில் ஒரு ஒன்றுபட்ட ஐரோப்பிய நாணயத்தைப் பயன்படுத்துவதற்கும், பரந்த பொருளாதார அரசியல் ஒன்றிணைப்புக்கும் ஆன முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் சர்வதேச நிதியியல் நெருக்கடி, 1974-1975 களில் ஏற்பட்ட நெருக்கடி, சுழல் ஏணிபோன்று உயர்ந்து சென்ற பணவீக்கம், சர்வதேச பொருளாதார சமநிலை குலைக்கப்பட்டது ஆகியவை ஒன்றுபட்ட நாணயத்தை ஏற்படுத்தும் திட்டத்திற்கும், பொருளாதார ஒன்றிணைப்பை ஏற்படுத்தும் திட்டத்திற்கும் முடிவு கட்டின. மேலும் ஐரோப்பிய பொருளாதார சமூக

நாடுகளிடையே நிலவிய அரசியல் முரண்பாடுகள் தீவிர மடைந்தன. இது அனைத்துக்கட்சியினருக்கும் பயன்தரக் கூடிய பகுதிகளில்கூட ஒன்றிணைப்பை இயலாததாக ஆக்கியது.

அதே வேளையில் 1970 இல் அரசு ஏகபோக ஒன்றிணைப்பை ஏற்படுத்த பல முயற்சிகள் செய்யப் பட்டன. குறிப்பாக, நாடுகளிடையேயான வேலைப் பகுப்பு தொடர்பான சூழ்நிலைகளை மேம்பாடடையச் செய்வதற்காகப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தனித்தனியாகப் பார்த்தால் இவை முக்கியம் அல்லாதவை தான். ஆனால் மொத்தமாகப் பார்த்தால், இவை பொருளாதார வாழ்வின் அனைத்துப் பகுதிகளிலும் குறைந்த அளவிலோ அல்லது அதிக அளவிலோ சமுதாயக் கட்டுப்பாடு கையாளப்பட்டது, எனக் காட்டுகின்றன. பொருளாதாரக் கொள்கையில் எது விரும்பத்தக்கதோ அந்த உருவரைக்கு அடங்கியதாய் இருந்தாலும், இணைப்பு களின் ஒருமுகப்பாடு தனித்தனியான அரசியல் சூழ்நிலைக் கேற்ப மேற்கொள்ளப்பட்டது. கூட்டான ஒரு விவசாயக் கொள்கையைப் பின்பற்றுவதற்காக உருவாக்கப்பட்ட சூட்சுமங்களை உலகப் பொருளாதார நெருக்கடி நிலை குலையும்படி செய்தது. ஆனால் அம்மாதிரியான கொள்கை இன்று கூடப் பல பெரும் தியாகங்களைச் செய்து கூடப் பேணிக்காக்கப்படுகிறது. 1978 டிசம்பரில் ஒரு ஒன்றிணைந்த நாணயத்திற்கான கருத்து மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டது என்று கருதக்கூடிய ஒரு திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஐரோப்பிய பணவியல் அமைப்பு முறை இணைந்த ஏற்றத் தாழ்வுகளை மட்டும் உள்ளடக்கியிருக்கவில்லை. நாணயங் களின் காப்புக் கையிருப்புக்களின் ஒரு பகுதியைச் சேர்ப்பதையும், கூட்டான நிதி ஒற்றுமையைப் படைப்பதையும் உள்ளடக்கியதாக உள்ளது. இந்த அமைப்பு முறையின் நோக்கம், மண்டலத்திற்குள் செலாவணியின் உறுதியான தன்மையை ஏற்படுத்துவதும், அரசு ஏகபோக

ஒன்றிணைப்பை விரைவு படுத்துவதும், அரசியல் ஒன்றிணைப்பை விரைவு படுத்துவதுமேயாகும். ஆனால் அந்த அமைப்பு முறைக்குள் நிலவுகிற முரண்பாடுகளின் விளைவாக, ஐரோப்பியப் பொருளாதார சமூக நாடுகள் பிரிட்டனை இந்தப் பணவியல் அமைப்பு முறையில் பங்கு கொள்ளுமாறு செய்வதில் வெற்றிபெறவில்லை. அதனுடைய நிலைகளை வலிமைப்படுத்தும் நோக்கங்களுக்கு அமெரிக்கா ஜப்பான் ஆகிய நாடுகளின் நோக்கங்களுக்கு எதிராக ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகள் தங்களுடைய சொந்த உறுப்பினர்களிடையே எவ்வளவு இயலுமோ அவ்வளவு விஷயங்களில் மிக அதிகமான ஒத்துழைப்பைப் பெருக்குவதையே நோக்கமாகக் கொண்டுள்ளன.

பொருளாதாரக் கூட்டுறவு மற்றும் மேம்பாட்டிற்கான அமைப்பிற்குள் அதன் செயல் முறைகளில் ஒரு குறிப்பிட்ட அளவு பெருக்கமும்,விரிவாக்கமும் நெருக்கடி காலத்திலிருந்து காணப்பட்டது. இந்த அமைப்பின் பணிகளைப்பற்றிய தகவலும், அவற்றைப் பகுத்தாராய்வதும், வளர்ந்துள்ளது. உலக பொருளாதார நெருக்கடியின் காரணங்கள் பற்றியும், அதன் இயல்புகள் பற்றியும், அதைச் சமாளிப்பதற்கான நடவடிக்கைகள் பற்றியும் பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன. பல வழிகளில் நிலைமையைப் பற்றிய உண்மையான மதிப்பீட்டிற்கு இந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் வழிவகுத்துள்ளன. பொருளாதாரக் கூட்டுறவு மற்றும் மேம்பாட்டிற்கான அமைப்பு, அதன் உறுப்பு நாடுகளின் அரசுகளின் பொருளாதாரக் கொள்கைகளின் ஒன்றிணைப்புக்கான முயற்சிகளை அதிகப்படுத்தியுள்ளது. 1978 ஜூன் மாதத்தில் 18 மாதங்களுக்கான ஒரு "ஒத்துக் கொள்ளப்பட்ட செயல்திட்ட முறை" மேற் கொள்ளப் பட்டது. அதன்படி ஜெர்மன் கூட்டுக்குடியரசு, பெல்ஜியம், கனடா, பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான், பிரிட்டன், சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளின் அரசுகள், பொருளாதார வளர்ச்சியை விரைவு படுத்தலாம், விலைகளை ஒரே நிலையில் நிறுத்தி வைக்கலாம், உள்நாட்டுச் சந்தைகளை

விரிவாக்கம் செய்வதன் மூலம் தங்களுடைய பன்னாட்டுச் செலுத்தல் நிலையைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்ளலாம் தங்களுடைய உற்பத்தித் திறன்களை முழுவதுமாகத் தாங்களே பயன்படுத்திக் கொள்ளலாம். "ஒத்துக் கொள்ளப்பட்ட செயல்திட்ட முறை" ஒரு குறிப்பிட்ட அளவு பரிந்துரைகளாக இருந்ததே ஒழிய, எந்த அரசையும் கட்டுப்படுத்தும் ஆற்றல் இல்லாததாக இருந்தது. அதன் தலைவிதி தேசிய ஏகபோக மூலதனத்தின் நலன் பல்வேறு உறுப்பினர்கள் நாடுகளிலும் எந்த நிலையில் இருந்தது என்பதைப் பொருத்ததாகவே இருந்தது. பொருளாதாரக் கூட்டுறவுக்கும், மேம்பாட்டிற்குமான அமைப்பு, பன்னாட்டு இணையங்களின் செயல்முறைகளையும், அரசு ஆதரவு பெற்ற ஏற்றுமதிகளையும், ஆற்றல் கொள்கையையும், உணவு உற்பத்திக் கட்டுப்பாட்டையும், சூழ்நிலைப் பாதுகாப்பையும் போன்ற செயல்முறைகளையும் உள்ளிட்டதாக, வரும் சில ஆண்டுகளின் கூட்டான செயல்களுக்கான அடிப்படையைப் பற்றிய பகுப்பாய்வையும், பரிந்துரைகளையும் இப்பொழுது விரிவடையச் செய்துள்ளது.

ஒரு கூட்டான தந்திரத்தை வளர்ப்பதன் ஆதாயத்திற்காகவும், கூட்டான நடவடிக்கைகளின் பயனுள்ள தன்மையை உயர்த்துவதன் ஆதாயத்திற்காகவும் முக்கியமான முதலாளித்துவ நாடுகளின் நெருக்கடிகளைத் தீர்க்க தலைவர்கள், உச்சநிலை மகாநாடுகள் மூலம், முயல்கின்றனர். இம்மாதிரியான முதல் மாநாட்டில் அமெரிக்க ஐக்கியநாடுகள் ஜப்பான், ஜெர்மன் கூட்டுக்குடியரசு, பிரிட்டன், பிரான்சு, இத்தாலி ஆகிய நாடுகள் பங்கு கொண்டன. அது 1975 ராம் பாய்லெட்டில் (பிரான்சு நாட்டில் உள்ள நகரம்) நடைபெற்றது. சர்வதேச ஆற்றல் ஏஜென்சியின் அந்தஸ்தை நிர்ணயிப்பதற்காகப் பாரீசில் கூடிய வடக்கு தெற்கு மாநாட்டின்போது வளரும் நாடுகளை எதிர்த்து உருவாக்கப் பட்ட முன்னணியை வலுப் படுத்துவதே அதன் நோக்கமாகும.

ரோம்பாய்லெட் மாநாட்டில் பங்கு பெற்றோர், உலக முதலாளித்துவப் பொருளாதார முழுமையின் பொருளாதார வளர்ச்சியை அவர்களால் உருவாக்கப்பட்ட நடவடிக்கைகள் மேம்பாட்டைச் செய்யும் என உறுதியளித்தனர். கனடாவும் பங்கு பெற்ற உச்சக் கட்டக்கூட்டம் போர்ட்டோ ரிகோவில் 1976 இல் நடைபெற்றது. அதில் பங்கு ஏற்றவர்களின் முன் நின்ற முக்கியமான பிரச்சினை பணவீக்கம்தான் என அறிவிக்கப்பட்டது. வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினை இரண்டாந்தர முக்கியத்துவமே உடையதாகக் கருதப்பட்டது. 1977 இல் மேற் கொண்டு ஒரு உச்சநிலை மாநாடு இலண்டனில் நடைபெற்றது. இங்குதான் "மூன்று தொடர்வண்டி இயக்குபொறிகள்" கருத்துரு முதன் முதலில் முன்வைக்கப்பட்டது. இதன்படி அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஜெர்மன் கூட்டுக் குடியரசு, ஜப்பான் ஆகிய நாடுகள் தங்களுடைய விரைவான பொருளாதார வளர்ச்சியின் காரணமாக அவர்களுக்குப் பின்னால் உலகமுழுமையிலும் உள்ள முதலாளித்துவ நாடுகளை இழுத்துச் செல்ல வேண்டும். ஜெர்மன் கூட்டுக்குடியரசும், ஜப்பானும், தங்களுடைய வளர்ச்சி விகிதத்தை உயர்த்தும்படியாகக் கேட்டுக் கொள்ளப்பட்டன. அவைகளுடைய நாணயங்களை மீண்டும் மதிப்புப் பெறுமாறு செய்ய வேண்டும் எனவும், அவைகளுடைய கூட்டாளிகளுக்கு நிதி உதவி அளிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டன. பொருளாதாரத் தேக்கநிலை காரணமாக, முக்கியமான இந்த மூன்று நாடுகளில் எதுவும் தங்களுடைய நலன்களுக்குக்கேடு விளைவித்துக் கொண்டு "தொடர்வண்டி இயக்கு பொறியாக" விளங்க முன்வரவில்லை.

நான்காவது உச்சக்கட்ட மாநாடு 1978 இல் பாரீசில் கூடியது. அது, நெருக்கடிகளை எதிர்க்கும் கொள்கைகளின் வளர்ச்சியில் ஒரு திரும்பு முனையாக இருக்குமென எதிர்பார்க்கப்பட்டது. இந்தக் கூட்டம் எந்தவிதமான போற்றத்தகுந்த விளைவுகளையும் ஏற்படுத்தவில்லை என்றாலும், அது ஒரு புதிய வளர்ச்சியால் சிறப்புப் பெற்றது.

உறுப்பு நாடுகளுக்கு நடைமுறைக்கேற்ற பொருளாதார, அரசியல் நடவடிக்கைகளை முன்வைத்தது. அவைகளை நிறைவேற்றுவதற்கான காலமும் நிர்ணயிக்கப்பட்டது. முக்கியமான பகுதிகளில் பின்பற்ற வேண்டிய — வளர்ச்சி, பணவீக்கம், வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவற்றில் பின்பற்றவேண்டிய தந்திரங்களைப் பற்றி ஒரு உடன்பாடு ஏற்பட்டது அமெரிக்க ஐக்கிய நாடுகள் 1980 க்குள்ளாக தன்னுடைய எரிபொருள் விலையை உலக விலைக்கு ஏற்ப குறைக்கும்படியாயிற்று. 1985-க்குள் அதற்குத் தேவையான எண்ணெயின் அளவைக் குறைக்குமாறு கூறப்பட்டது. அதனுடைய நிலக்கரி உற்பத்தியை மூன்றில் இரண்டு மடங்கு அதிகமாக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்பட்டது. டோக்கியோ சுற்றுப் பேச்சுக்களையும் 1978 க்குள் முடிவுறச் செய்ய வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. (எனினும் அவ்வாறு செய்ய இயலவில்லை) ஜப்பான் 1977 மட்டத்திற்குத் தன்னுடைய இறக்குமதியை அதிகரித்துக் கொள்ளவும் அதனுடைய ஏற்றுமதியைக் குறைத்துக் கொள்ளவும், ஒத்துக்கொண்டது. முந்திய வாக்குறுதிகள் எவ்வாறு காப்பாற்றப்படவில்லையோ அவ்வாறே இந்த வாக்குறுதிகளும், எவ்வளவுதான் நிறைவேற்றிவிட்டதாகக் கூறிக்கொண்டாலும், நிறைவேற்றப்படவில்லை. பொருளாதார அரசியல் முடிவுகள் அனைத்தும் அரசுகள் கையில் முன்னைப்போலவேதான் இருந்தன.

இவ்வாறாகப் பல பகுதிகளில் "ஒற்றுமை" அறிவிக்கப்பட்ட போதிலும், கூட்டான தந்திரங்கள் என்றுமே நடைமுறையில் மெய்யாகவில்லை.

முடிவாக, இன்றைய அரசு ஏகபோக முதலாளித்துவம் சர்வதேச அரங்கில் பல்வேறு பணிகளைச் செய்து வருகிறது. பொருளாதாரப் பகுப்பாய்வும், தகவலும், தனியார் மூலதனத்துக்கும், அரசுகளுக்கும், சிக்கலான சூழ்நிலையில் அவை தங்களுடைய இடத்தை அறிந்து கொள்ள உதவுவதுடன், அதைச் சமாளிப்பதற்கான தீர்வுகளையும்

தருகின்றன. பொருளாதாரக் கொள்கையின் பயனுள்ள இணைப்பு அரசுகளுக்குக் கைகூடும் காரியமே ஆகும். குறிப்பாக அவைகளுக்குப் பரஸ்பர நலன்கள் தருவதானால் அவை கைகூடும் காரியமே ஆகும்.

சர்வதேச மூலதனத்தின் முகவர்களால், கையாட்களால், வளரும் நாடுகளுக்கு எதிராகவும், வளர்ந்த நாடுகளில் உள்ள முற்போக்கு சக்திகளுக்கு எதிராகவும் கூட்டான இயக்கங்கள் நடத்தப்படுகின்றன. ஏகாதிபத்திய அமைப்பு முறையில் உள்ள முரண்பாடுகளை இது நீக்காவிட்டாலும், முதலாளித்துவத்திற்கு அதன் ஒத்துக் கொள்ளப்பட்ட நலன்களின் கட்டமைப்பினுள்ளே முதலாளித்துவம் சூழ்ச்சித் திறமுடன் இயங்க உதவியாக உள்ளது. வளர்ந்த முதலாளித்துவ நாடுகள் சில குறிப்பிட்ட பகுதிகளில் ஒரு நெகிழ்வுத் தன்மையுள்ள கொள்கையைப் பின்பற்றித் தங்களைப் புதிய சூழ்நிலைகளுக்குத் தகவமைத்துக் கொள்ள முடியும் என்பதைக் காட்டியுள்ளன.

**பேராசிரியர் வி. என். ஷெனயேவ்**
**முனைவர், விஞ்ஞானம் (பொருளாதாரம்)**

*துறைத்தலைவர்*
*உலகப் பொருளாதாரம் மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய நிறுவனம், சோவியத் ஒன்றிய விஞ்ஞான கலைக்கழகம்*

## விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியும், மூன்று ஏகாதிபத்தியப் போட்டி மையங்களுக்கிடையில் நிலவும் முரண்பாடுகளும்

முதலாளித்துவத்தின் கீழ் பொருளாதாரம் சர்வதேசத் தன்மையடைவது தனியார் ஏகபோகங்களின் மூலமாக நிறைவேற்றப்படுகிறது. பன்னாட்டு ஏகபோகங்கள், அமெரிக்க ஐக்கிய நாடுகள் தவிர, பிற எந்த முதலாளித்துவ நாட்டைக் காட்டிலும் அதிகமாகவே உற்பத்தி செய்கின்றன. அவை உலகத் தொழிற் பொருள் உற்பத்தியின் மொத்தத்தில் ஐந்தில் ஒரு பகுதியை உற்பத்தி செய்கின்றன. அவைகளுடைய வெளிநாட்டு நிறுவனங்கள் மட்டுமே 400,000 மில்லியன் டாலர் பெருமானமுள்ள தொழிற் பொருட்களை உற்பத்தி செய்கின்றன. அவை உலக முதலாளித்துவ வாணிகத்தில் ஐந்தில் மூன்று பங்கிற்கும் பொறுப்பானவைகளாக உள்ளன. அவைகளுடைய விற்று முதலில் அவைகளிடையே நடைபெறும் வாணிகம் மூன்றில் ஒரு பங்காகும். பன்னாட்டு இணையங்கள் ஹாலந்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 70 சதவிகிதத்தையும்,

பிரிட்டனில் 53 சதவிகிதத்தையும், இத்தாலியில் 30 சதவிகிதத்தையும், ஜெர்மன் கூட்டுக் குடியரசில் 28 சதவிகிதத்தையும், பிரான்சில் 20 சதவிகிதத்தையும் உற்பத்தி செய்கின்றன. அவை அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஏற்றுமதியின் 50 சதவ்கிதத்திற்கும், கனடாவின் ஏற்றுமதியில் 51 சதவிகிதத்திற்கும், பிரிட்டிஷ் ஏற்றுமதியில் 30 சதவிகிதத்திற்கும் பொறுப்பானவைகளாக உள்ளன.

ஒரு சில நாடுகள், வேறு சில நாடுகளைக் காட்டிலும் வேகமாக முன்னேறுவதற்கான வாய்ப்புகளைத் தந்திருக்கிற விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி, முதலாளித்துவ நாடுகளிடையே, பொருளாதார வளர்ச்சியிலும், அரசியல் வளர்ச்சியிலும் சரிநிகரற்ற தன்மையைப் பெருக்கியுள்ளது. அது மூன்று ஏகாதிபத்திய மையங்களான அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஜெர்மன் கூட்டுக் குடியரசு, ஜப்பான் ஆகிய ஏகாதிபத்திய நாடுகளிடையேயான போட்டியைத் தீவிரமாக்கியுள்ளது. இந்த ஆராய்ச்சிக் கட்டுரையில், முக்கியமாக மேற்கு ஐரோப்பாவிற்கும், அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குமிடையே விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் விளைவாக சக்திகள் அணி சேர்வதில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை ஆராய்ந்து கூற விரும்புகிறேன்.

ஒரு சீரற்ற வளர்ச்சி பற்றிய விதி, முதலாளித்துவ உலகம் முழுமையிலும், அதன் பல்வேறு பகுதிகளிலும், மையத்தை நோக்கிச் செல்லும் சக்திகளுக்கும், மையத்திலிருந்து விலகிச் செல்லும் சக்திகளுக்கும இடையில் நிகழும் மோதலில் வெளிப்பட்டுக் கொண்டே இருக்கிறது. இந்த மோதலின் இயல்பும், அதன் செயல்திறனும் வளர்ச்சியின் போக்கை நிர்ணயிக்கின்றன. அதாவது ஒரு குறிப்பிட்ட மையத்தை நோக்கிச் செல்லும் சக்தி வலுவானதாக உள்ளதா அல்லது மையத்திலிருந்து விலகிச் செல்லும் சக்தி வலுவானதாக உள்ளதா என்பதை நிர்ணயிக்கின்றன. இவ்வாறாக முதலாளித்துவம் முழுமையிலும் மையத்தை நோக்கிய போக்கையும், மையத்திலிருந்து விலகிச் செல்லும்

போக்கையும் ஆராய்ந்தால் போர் முடிந்த காலத்திலிருந்து 1950 கள் வரை மையத்தை நோக்கிக் குவிகிற போக்கு ஆதிக்கம் செலுத்துவதை நாம் காண முடிகிறது. முதலாளித்துவ உலகம் முழுமையிலும், யு. எஸ். உடைய மிகுதியான அதிகாரத்தில் அது தெளிவாக விளங்குகிறது. இந்தக் காலத்தில்தான் அமெரிக்க ஐக்கிய நாடுகள் முதலாளித்துவத்தின் பொருளாதார அரசியல், இராணுவ மையமாக ஆகி வந்தது. 1950 இல் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் மொத்த தேசிய உற்பத்தி அமெரிக்க ஐக்கிய நாடுகளின் உற்பத்தியில் 64 சதவிகிதமாகவேதான் இருந்தது. இந்த நாடுகளின் தொழில் உற்பத்தி மட்டமும், தொழிலாளர்களின் உற்பத்தித்திறன் மட்டமும், அமெரிக்க மட்டங்களுடன் ஒப்பிட்டால் முறையே 66 சதவிகிதமும், 30 சதவிகிதமுமாக இருந்தன. முதலாளித்துவ உலகின் அதிகார பூர்வமான தங்கக்கையிருப்பின் முக்கால் பங்கை அமெரிக்கா வைத்திருந்தது. அது அமெரிக்காவை 1970 வரை செல்லுபடியாகி வந்த பிரெட்டன்வுட்ஸ் ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை விதிப்பதற்குரிய செல்வாக்குடைய நாடாக ஆக்கியது. இரண்டாவது உலகப் பெரும் போருக்குப் பின்னர் அமெரிக்க ஐக்கிய நாடுகள் கடன் வசதிகளையும், கடன்களையும் முதலாளித்துவ நாடுகளுக்குக் கொடுக்க முன் வந்தது. அவை அரசியல் நிபந்தனைகளுடன் பிணைக்கப்பட்டிருந்தன. குறிப்பாக சோஷலிச நாடுகளைச் சுற்றிலும் யு. எஸ். இராணுவத் தளங்களை அமைப்பது; அவைகளிற் பெரும்பாலானவை இன்றும் உள்ளன.

1960 களில், மையத்திலிருந்து விலகிச் செல்லும் போக்கு முதலாளித்துவ உலகில் மேலோங்கி வந்தது. அதன் விளைவாக அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஏகபோக நிலைகள் பாதிக்கத் தொடங்கின. பொருளாதாரக் கட்டமைப்புகளும், பொருளாதாரச் செயல் திறனும் மிக நெருங்கி வந்தன. மேற்கு ஐரோப்பாவின் பொருளாதார வளர்ச்சி விகிதங்களும், தொழிலாளர்களின் உற்பத்தித் திறனும்

அமெரிக்க ஐக்கிய நாடுகளைக் காட்டிலும் மிகுந்த விரைவானதாக இருந்தன. அதன் விளைவாக 1970 இல் மேற்கு ஐரோப்பாவின் மொத்த தேசிய உற்பத்தி, அமெரிக்காவின் மொத்த தேசிய உற்பத்தியில் 76.1 சதவிகிதமாக இருந்தது. தொழில் உற்பத்தி அமெரிக்க மட்டத்தில் 82.3 சதவிகிதமாக இருந்தது. தொழிலாளர் களின் உற்பத்தித் திறனில் இருந்த இடைவெளியும் குறைக்கப்பட்டது. ஆனால் மேற்கு ஐரோப்பா அதனுடைய வெளிநாட்டு வாணிபத்தின் மட்டத்திலும், விகிதத்திலும் அமெரிக்க ஐக்கிய நாடுகளை மிஞ்சி நின்றது. தலா உற்பத்தியில் மேற்கு ஐரோப்பாவிற்கும் அமெரிக்கா விற்குமிடையே இடைவெளியிருந்த போதிலும் இப்போது முன்னைக்காட்டிலும் நெருங்கி வந்திருந்தது. 1950 களில் 36.5 சதவிகிதமாகவும், 1960 களில் 45.6 சதவிகிதமாகவும் இருந்த உலக ஏற்றுமதியின் பங்கை 1970 இல் 50 சதவிகிதமாக உயர்த்திக் கொண்டது. அதேகாலத்தில் 1950 இல் 1.4 சதவிகிதமாக இருந்த ஜப்பானின் பங்கு 1970 இல் 7.7 சதவிகிதமாக உயர்ந்தது. அதற்கு மாறாக உலக ஏற்றுமதியில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பங்கு 1960 இல் 18.1 சதவிகிதமாக இருந்தது. 1970 இல் 14 சதவிகிதமாகக் குறைந்தது. அதேவேளையில் மேற்கு ஐரோப்பாவிற்குச் சாதகமாகத் தங்கமும், நாணயமும் மறுபகிர்வு செய்யப் பட்டன. மேற்கு ஐரோப்பாவிற்குச் சாதகமாக, கடன் வசதித் துறையிலும், நாணயத்துறையிலும் சக்திகள் அணி சேர்ந்தன.

மேற்கு ஐரோப்பாவிற்குள் நிலவிய மையத்தை நோக்கிய சக்திகளுக்கும், மையத்திலிருந்து விலகிச் செல்லும் சக்தி களுக்கும் இடையேயான இணைப்புப் பற்றிக் கூறும்போது, 1950 களின் பிற்பகுதியில் மையத்தை நோக்கிச் செல்லும் சக்திகள் ஆதிக்கம் செலுத்தின. அவை 1960 களில் மிக உயர்ந்த நிலையை அடைந்தன என்பது குறிப்பிடத்தக்கது ஆகும். அப்போது நிகழ்ந்து கொண்டிருந்த, ஒன்றிணையும் நிகழ்ச்சிப் போக்குடன் நெருங்கிய தொடர்புடையதாக

விளங்கியது. தொழில் மறுஉற்பத்தி நிகழ்ச்சிப் போக்கின் அனைத்துப் படிநிலைகளிலும் பரஸ்பரம் ஒருவரையொருவர் சார்ந்திருப்பது அதிகரித்தது. பொருளாதார மட்டங்கள் மிக நெருக்கமாக ஆகிக் கொண்டிருந்தன. மேற்கு ஐரோப்பா முழுவதிலும் ஒரு சர்வதேசப் பொருளாதாரத் தொகுதி உருவாக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

அதன் விளைவாக முதலாளித்துவ உலகம் முழுமையிலும், அதன் பகுதிகளிலும்-குறிப்பாக மேற்கு ஐரோப்பாவிலும், ஜப்பானிலும், மையத்தை நோக்கிச் செல்லும் சக்திகளின் இயக்கத்திலும், மையத்திலிருந்து விலகிச் செல்லும் சக்திகளின் இயக்கத்திலும், 1960 களில், போக்குகள் எதிர்த்திசையில் நகர்ந்தன; அதன் விளைவாக 1970 களுக்குள்ளாக ஏகாதிபத்தியப் போட்டியின் மூன்று மையங்கள் உருவாக்கப்பட்டு விட்டன; அமெரிக்க ஐக்கிய நாடுகள், மேற்கு ஐரோப்பா, ஜப்பான், முன்னைக் காட்டிலும் இப்பொழுது சக்தி வாய்ந்தவையாகவுள்ள ஏகபோகங்களின் குழுக்கள், பெரிய பொருளாதாரத் தொகுதிகள், ஏகாதிபத்தியங்களுக்கிடையேயான போட்டி மையங்கள் ஆகியவை இந்தப் போராட்டத்தில் ஈடு பட்டிருந்தன. இதுதான் முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் மூன்றாவது படிநிலையில் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின்போது ஏகாதிபத்தியங்களுக்கிடையேயான முரண்பாடுகளின் சிறப்புத் தன்மையாய் விளங்குகிறது.

1970 களில் முதலாளித்துவ உலகம் ஒரு தீவிர நெருக்கடியால் பாதிக்கப்பட்டது. அதில் மிகை உற்பத்தியின் சுழல் நெருக்கடி, கட்டமைப்பு நெருக்கடியுடனும், ஆற்றல் நெருக்கடியுடனும், மூலப்பொருட்கள் நெருக்கடியுடனும், சூழ்நிலைப் பாதுகாப்பு நெருக்கடியுடனும் இணைந்ததாக இருந்தது. இந்த நெருக்கடி அமெரிக்க ஐக்கிய நாடுகளைக் காட்டிலும் மேற்கு ஐரோப்பாவைத்தான் பாதித்தது. ஏகாதிபத்தியங்களுக்கிடையேயான முரண்பாடுகளில் புதிய

கூறுகளைப் புகுத்தியது. மேலே கூறப்பட்ட போட்டி மையங்களின் அணிகளிடையேயும் அது புதிய இயல்புகளைப் புகுத்தியது. எனவே மேற்கு ஐரோப்பாவில் ஒன்றிணைப்பு நிகழ்ச்சிப் போக்கின் வளர்ச்சியில் ஒரு தேக்கம் நிகழ்ந்துள்ளது. உள்முரண்பாடுகள் அதிகரித்துள்ளன. மையததிலிருந்து விலகிச் செல்லும் போக்குகள் வலிமை பெற்றிருந்தன. இந்த விஷயங்கள் அனைத்தும் போர்க் காலத்திலிருந்து வேறு எந்தக் காலத்திலும் தெரியாத அளவு இப்பொழுது மிகவும் தெளிவாகத் தெரிகின்றன. வாணிக மற்றும் நாணயச் செலாவணிப்போர் ஒன்று மூன்று மையங்களிலும் ஒரே நேரத்தில் தொடங்கியுள்ளது. 1971 க்கும் 1973 க்கும் இடையில் இதைப் பின் தொடர்ந்து சர்வதேச நிதி பற்றிய பிரெட்டன்வுட்ஸ் உடன்பாடு முறிவடைந்தது.

மொத்தமாக முதலாளித்துவ உலகில் மேற்கு ஐரோப்பிய நிலை மொத்த உற்பத்தியின் பங்கில் ஒரு குறிப்பிட்ட அளவு குறைவினால் சிறப்புற்றது (1970 இல் 30 சதவிகிதமாக இருந்ததற்குப் பதிலாக 1977 இல் 28.9 சதவிகிதமாக இருந்தது). தொழில் உற்பத்தி (1970 இல் 33.9 சதவிகிதமாக இருந்தது, 1977 இல் 31.8 சதவிகிதமாக இருந்தது.) உலக ஏற்றுமதிகள் (1970 இல் 50.3 சதவிகிதமாக இருந்தது, 1977 இல் 45.7 சதவிகிதமாக இருந்தது) அதே நேரத்தில் அதனுடைய முக்கியமான போட்டியான அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பங்கு குறைந்த அளவானதாக இருந்த போதிலும், கீழ் நோக்கிச் சரிந்தது. அதனுடைய பங்கில் குறைவு என்பது மொத்த உள்நாட்டு உற்பத்தியிலோ, அல்லது தொழிலாளர் உற்பத்தித் திறனிலோ ஒரு பெருங்குறை என்று பொருள் அல்ல. அதற்கு மாறாக 1960 களைக் காட்டிலும் மிகக் குறைந்த அளவே ஆயினும்கூட உயரத்தான் செய்தது.

ஆனால் அளவுஇயல் பண்புகள், சக்திகளின் இணைப்புகளை எப்பொழுதுமே துல்லியமாகப் பிரதிபலிப்பதில்லை; பண்பியல் கூறுகளைப் பற்றியறிவதும் இன்றியமையாதது

ஆகும். 1970 களில் வெளிப்பட்ட இந்தப் புதிய நிகழ்ச்சிகள் வெளிநாட்டு வாணிகத்தின் வளர்ச்சி விகிதத்தில் ஒரு வீழ்ச்சி இருந்த போதிலும், மேற்கு ஐரோப்பா அதனுடைய மூலதன ஏற்றுமதியைப் பெருமளவு உயர்த்திக் கொண்டது. இதில் முக்கியமானது என்னவெனில் ஜெர்மன் கூட்டுக் குடியரசு போன்ற நாட்டின் மூலதன ஏற்றுமதியில் மூன்றில் ஒருபங்கை மேற்கொண்ட அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு இந்த முதலீடுகள் சென்றன. 1974—1975 இல் ஏற்பட்ட உலகப் பொருளாதார நெருக்கடிக்குப் பிறகு வளரும் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட ஐரோப்பிய மூலதனத்தின் பங்கு உயரத்தொடங்கியது. இந்தப் போக்கு 1980 களிலும் கூட தொடர்ந்து நிகழ்வது போலத் தோன்றுகிறது. மேலை நாட்டு மூலதனம் ஜப்பானை இதுவரை ஊடுருவ இயலவில்லை. நேரடியான முதலீடுகளில் பாதிக்கு மேலாக எண்ணெய் மற்றும் இரசாயனத் தொழில்களில் ஈடுபடுத்தப் பட்டுள்ளன. (ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகளின் தேசியப் பொருளாதாரங்கள் 20 சதவிகிதத்தையே மேற்கொள்கின்றன). மூலதன ஏற்றுமதியில் மிக அதிக முக்கியம் வாய்ந்த இடத்தை இயந்திரப் பொறியியலுக்கே கொடுக்க வேண்டும்.

மேற்கு ஐரோப்பிய மூலதனத்தை ஏற்றுமதி செய்வோரிடையே முக்கிய மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. 1960 களில் பிரிட்டன் மற்றும் பெனிலக்ஸ் நாடுகள் நேரடியான முதலீடுகளில் 85 சதவிகிதத்திற்குப் பொறுப்பாக இருந்தபோது, 1970 களின் மத்தியில் மூலதனத்தின் 40 சதவிகிதம், ஜெர்மன் கூட்டுக் குடியரசாலும், ஸ்வீடனாலும், சுவிட்சர்லாந்தாலும் ஏற்றுமதி செய்யப் பட்டது. பிரெட்டன் வுட்ஸ் உடன்படிக்கை முறிவடைந்ததும், மேற்கு ஐரோப்பா, அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பன்னாட்டு வாணிப செலுத்தல் நிலையும் மாற்றுவிகிதங்களும் சீர்குலைந்த நிலையும் மூலதன ஏற்றுமதியின்மீது அதிகமான செல்வாக்குடையனவாக இருந்தன. பிரெட்டன் வுட்ஸ் உடன்பாடு டாலரின் மாற்று

விகிதத்தைச் செயற்கையாக உயர்த்துவதன் மூலம் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலிருந்து மூலதனம் ஏற்றுமதி செய்யப் படுவதைத் தூண்டியது. மேற்கு ஐரோப்பிய நாடுகளில் வெள்ளமென வந்துகுவிந்த மூலதனமும் தொழிலாளர் களும், மிகமலிவான விலையில் கிடைத்த மூலப்பொருட் களும், துறைகளுக்கிடையேயான விகிதங்களைப் பாதுகாத்து, தொழில் மறுசீரமைப்புச் செய்வதைத் தவிர்த்தது. புதிய ஜமய்க்கா சர்வதேச நாணயச் செலாவணி உடன்பாடு 1978 ஏப்ரல் முதல் தேதி நடைமுறைக்கு வந்தது. அது ஏகாதிபத்திய சக்திகளின் அணிகளில் ஏற்பட்டுள்ள மாற்றங் களைப் பிரதிபலிக்கிறது. அது யு. எஸ். மேலாதிக்கத் திற்குப் பதிலாக, பலமையங்களின் ஆதிக்கத்தையும், சமரச இணக்கத்தையும் தனிச் சிறப்பாகக் கொண்டிருந்தது.

1970 களின் பிற்பகுதியிலும், 1980 களிலும், ஒரு வேளை அதற்குப் பின்னரும்கூட, மையத்தை நோக்கிய சக்திகள் மற்றும் மையத்திலிருந்து விலகிச் செல்லும் சக்திகள் ஆகியவற்றின் இணைப்பை நிர்ணயிக்கக்கூடிய ஒரு மாற்றம் நிகழ்ந்தது. மேற்கு ஐரோப்பாவைப் பொருத்தவரை மையத்தை நோக்கிய போக்கு வலிமையுறத் தொடங்கியது. இது குறிப்பாக பொருளாதாரத் துறையில் நிகழ்ந்தது. 1979 மார்ச் 13 இல் ஐரோப்பிய பணவியல் அமைப்பு முறையை நிறுவியபோதும், 1979 ஜூனில் நடந்த ஐரோப்பிய பாராளுமன்றத்திற்கான நேரடியான தேர்தலின்போது நிலவிய அரசியலிலும், பொருளாதாரத்தின் பல்வேறு பகுதி களின் செயல் முறைகளின் ஒன்றிணைப்பிலும், சர்வதேச உறவுகளின் பல்வேறு பகுதிகளின் செயல் முறைகளின் ஒன்றிணைப்பிலும் இது வெளிப்பட்டது. மேற்கு ஐரோப்பாவில் நிலவிய முரண்பாடுகளையெல்லாம் இந்த நடவடிக்கைகள் நீக்கி விட்டன என்று பொருள் அல்ல. எனினும் முதலாளித்துவ உலகிற்குள் மேற்கு ஐரோப்பாவின் நிலையை வலிமையுறச் செய்யக்கூடிய சமரச இணக்கமான முடிவுகள் மேற் கொள்ளப் படுவதற்கான வாய்ப்புகள், நிறைய உள்ளன. உலகப் பொருளாதார மற்றும் சர்வதேச்

உறவுகள் பற்றிய நிறுவனத்தின் முன்னறிவிப்புகள், 1980 களுக்குள், மேற்கு ஐரோப்பா, அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மொத்த தேசிய உற்பத்தி அளவில் 85 சதவிகிதத்தை அடைந்திருக்கும். தொழில் உற்பத்தி யு. எஸ். ஐக் காட்டிலும் 10 சதவிகிதம் அதிகமாகவே இருக்கும்.

மேற்கு ஐரோப்பாவிற்கும், அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குமிடையே நிலவுகிற தொழில் நுட்ப இடைவெளியைப் பொருத்தவரை விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் வளர்ச்சியின் காரணமாக-குறிப்பாக பேருந்து, கட்பல் கட்டுதல், மின்சாதனங்கள், பிளாஸ்டிக் பொருட்கள், நுகர்வோர் பொருளுற்பத்தித் தொழில், அந்த மண்டலத்தின் மரபு வழியான தொழில்கள் ஆகியவற்றில் நிலவிய இடைவெளி மறைந்து போய் விட்டது எனக் கூறலாம்.

1950 களுக்கும் 1960 களுக்கும் இடையில் பெருமளவிற்கு இந்த இடைவெளி, மேற்கு ஐரோப்பா, அமெரிக்க ஐக்கிய நாடுகளிலிருந்து வாங்கிக் கொண்ட உரிமைப் பட்டயங்கள் காரணமாகவும், அனுமதிகள் காரணமாகவும் குறைந்தது. இந்தத் தலைப்பில் செலுத்தல் நிலை இன்னும் ஒருவழிப் பாதையாகவே உள்ளது. 1970 களில் ஒரு குறிப்பிட்ட அளவு எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன என்பது உண்மைதான். ஆனால் அவை அமெரிக்க ஐக்கிய நாடுகள் இன்னும் ஆதிக்கம் வகித்து வருகிற விஞ்ஞானம் அதிக அளவில் பயன்படுத்தப்படும் தொழில்களை எவ்வகையிலும் உட்படுத்தவில்லை.

தொழில் நுட்ப இடைவெளி குறைக்கப்பட்டதற்கு, அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் ஒப்பிடும் போது மேற்கு ஐரோப்பாவில் தொழிலாளர்களின் உற்பத்தித் திறனின் வளர்ச்சி விகிதம் சான்றாகத் திகழ்கிறது. இது இரண்டு மையங்களிலும் தொழிலாளர்களின் உற்பத்தித்திறனின் வளர்ச்சி விகிதங்கள் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வளர்ச்சி விகிதத்தின் 30 சதவிகிதமாகவேயிருந்தது. 1977 இல் இது 48 சதவிகிதமாக உயர்ந்திருந்தது. இந்த நூற்றாண்டின்

இறுதியில் இது 70 சதவிகிதம் உயர்வதற்கான அனைத்து வாய்ப்புகளும் உள்ளன (ஜப்பானைப் பற்றிய விவரங்கள் முறையே 12; 38 மற்றும் 75 சதவிகிதங்கள் ஆகும்).

வரப்போகும் பத்தாண்டுகளில் மேற்கு ஐரோப்பாவுக்கும், அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குமிடையில் உள்ள தொழில் நுட்ப இடைவெளியில் ஏற்படக்கூடிய குறைவுக்கு, அவர்களுடைய நாட்டில் ஆராய்ச்சிக்கும் மேம்பாட்டிற்குமான செலவில் அதே மாதிரியான ஒரு இடைவெளிக் குறைவு ஓர் முக்கியமான அடையாளமாக விளங்கும். இன்று அமெரிக்க ஐக்கிய நாடுகள்தான் இன்னும் அதிக அளவு பணத்தைச் செலவழித்து வருகிறது. எனினும் ஆராய்ச்சிக்கும் மேம்பாட்டிற்குமான செலவுகள் அதிகரித்திருப்பதனாலும், மொத்த தேசிய உற்பத்தி உயர்ந்திருப்பதனாலும், ஆராய்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் செய்யப்படும் செலவு அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும், மேற்கு ஐரோப்பாவிலும் அவைகளுடைய மொத்த தேசிய உற்பத்தியில் சதவிகிதக் கணக்கில் உலகப் பொருளாதாரம் மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய நிறுவனத்தின் புள்ளி விவரத்தின்படி இந்த நூற்றாண்டின் முடிவிற்குள் சரிசமமானதாக ஆகிவிடும்.

ஆனால் அதே வேளையில் தங்களுடைய விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றங்களை நடைமுறையில் பயன்படுத்தக்கூடிய ஒரு இடமாக மேற்கு ஐரோப்பாவைத் தேர்ந்தெடுத்துள்ள யு. எஸ். பன்னாட்டு இணையங்களுக்கு முக்கியமான இடம் கொடுக்க வேண்டும். அவை மேற்கு ஐரோப்பிய நாடுகளைத் தங்களுடைய பகுதிகளாகக் கருதி அவைகளுடன் தங்களுடைய புதிய முன்னேற்றங்களைப் பகிர்ந்து கொள்ளத் தயாராய் இல்லை. இது மேற்கு ஐரோப்பா, அமெரிக்காவிடமிருந்து பெற்றுள்ள உரிமைப் பட்டயங்களிலிருந்தும், அனுமதிகளிலிருந்தும் மிகத் தெளிவாகத் தெரிகிறது. அந்த உரிமைப் பட்டயங்களும், அனுமதிகளும் நீண்ட நாட்களாக அமெரிக்காவில் பயன்பட்டு வந்திருக்கிறது என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன.

யு. எஸ். பன்னாட்டு இணையங்கள் மேற்கு ஐரோப்பாவில் செய்திருக்கும் முதலீடுகளில் 10 சதவிகிதம், மூலதன ஏற்றுமதி மூலந்தான் பெறப்படுகிறது என்பது குறைந்த முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல. மீதமுள்ள 90 சதவிகிதம் மறுமுதலீட்டுத் திட்டத்தின் கீழும், மேற்கு ஐரோப்பியக் கடன் மூலதனத்தின் மூலமாகவும் தான் பெறப்படுகிறது. மேலும் மேற்கு ஐரோப்பாவில் உள்ள அமெரிக்க ஐக்கிய நாட்டு நிறுவனங்களின் கொள்கைகளும், தந்திரங்களும் தலைமை அலுவலகத்திலேயே தான் நிர்ணயிக்கப்படுகின்றன. அவை மேற்கு ஐரோப்பிய நாடுகளின் கட்டுப்பாட்டிற்குள் இல்லை. இது மேற்கு ஐரோப்பாவில் பொருளாதார வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்கு இப்பொழுதேகூட போதுமான அளவு பயனுள்ளதாக இல்லாத அரசு ஏகபோக நடவடிக்கைகளைப் பலமிழக்கச் செய்யவே உதவுகின்றன.

இவ்வாறாக வரும் பத்தாண்டுகளில் மையம் நோக்கிய போக்குகள் மேற்கு ஐரோப்பாவில் செல்வாக்கு மிக்கதாக ஆவதற்குரிய வாய்ப்புகள் மிகுதியாக உள்ளன. உள்முரண்பாடுகள் மிகுதியாக இருப்பினும்கூட மண்டலங்களுக்கிடையே இணைப்புகள் ஏற்படும் வாய்ப்புகளும் மிகுதியாகவுள்ளன. அதே வேளையில் மேற்கு ஐரோப்பாவிற்கும், அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும் இடையேயான பரஸ்பர உறவுகளைப் பொருத்தவரை, அரசியல் துறைகளிலும், பொருளாதாரத் துறைகளிலும் சமரச இணக்கங்களைக் காட்டிலும், அவைகளிடையே நிலவும் முரண்பாடுகள் முதன்மை பெறும் வாய்ப்புகளே காணப்படுகின்றன.

**டாக்டர். ஸ்டாயில் கோட்சேவ்**
**விரிவுரையாளர்**
*சமூக இயல்கள் மற்றும் சமூக மேலாட்சிக் கலைக்கழகம்*
*மத்தியக்கமிட்டி, பல்கேரிய கம்யூனிஸ்ட் கட்சி*

## விஞ்ஞான–தொழில் நுட்பப் புரட்சி: ஏகாதிபத்தியங்களுக்கிடையே நிலவும் முரண்பாடுகளை ஆழப்படுத்துகிற ஒரு காரணி

மேலாட்சிக்காக முயலும் போது தாங்கள் தங்களுடைய பொருளாதார மூலப்பொருட்களை மட்டுமல்லாது, அரசியல் வகை துறைகளையும் பயன்படுத்தும் போது, முதலாளித்துவ நாடுகளில் நிலவுகிற ஏகாதிபத்திய அமைப்பு முறைகளுக்கிடையே முரண்பாடுகள் தொடர்ந்து ஆழமாகிக் கொண்டு வருகின்றன. இன்று நிலவுகின்ற நிலையைப் பற்றிய பகுப்பாய்வு, முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியைத் தீவிரப்படுத்துவதன் விளைவாகத் தோன்றியுள்ள காரணிகள் மீது கவனம் செலுத்த வேண்டும். இவை சோஷலிசம் வலிமையடைந்திருப்பது, காலனி ஆட்சி முறை முடிவாக அழிந்தொழிந்தது, மற்றும் மூன்று மோதிக் கொள்கிற ஏகாதிபத்திய ஆதிக்க மையங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன.

இம்மாதிரியான சூழ்நிலைகளிலும், விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் பின் புலத்திலும், மூலதனம், பொருளாதார வாழ்க்கை ஆகியவை முழுமையையும்

சர்வதேசமயமாக்குவதை நோக்கிய இயல்புகள், புதிய வெளிப்பாடுகளையும், புதிய பரிமாணங்களையும் உடையவையாய் இருக்கின்றன. எனினும் இந்தப் போக்கு முதலாளித்துவத்தின் மொத்த வளர்ச்சியின் ஒரு சீரற்ற தன்மையுடனும், விட்டு விட்டு நடைபெறும் இயல்புகளுடனும் மோதிக் கொள்கிறது. அணிகள் சேர்வதில் ஏற்பட்டுள்ள மாற்றங்களும் முரண்பாடுகள் தீவிரமடைவதற்கு வழி செய்கின்றன. மேலும் அவை சந்தைகளுக்கான போராட்டங்களுக்கும் மூலப்பொருட்களை உத்திரவாதம் செய்வதற்கும், மிகுதியான இலாபங்களைப் பெறுவதற்கும், தங்களின் பொருளாதார-அரசியல் செல்வாக்கைப் பெருக்கிக் கொள்வதற்கும் வழிசெய்கின்றன.

இப்பொழுது தொழில் துறையில் வளர்ச்சி பெற்றுள்ள நாடுகளில், முழு மூச்சாக நிகழ்ந்து வரும் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி இங்கு நிலையற்றதாக ஆக்கும் காரணியாக முக்கியமான பங்கு வகிக்கிறது. மேற்கத்திய ஏகபோகங்கள் விஞ்ஞான-தொழில் நுட்ப வளர்ச்சியின் நலன்களை உச்சநிலைப் படுத்துவதற்கான விருப்பம் கொண்டதானது சக்திகளிடையே நிலவுகிற அணிகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைச் செய்துள்ளது. முதலாளித்துவ நாடுகளிலும், ஏகாதிபத்தியங்களுக்கிடையேயும் குறிப்பிடத்தக்க மாற்றங்களைச் செய்துள்ளது.

ஜப்பான் உலகப் பொருளாதாரத்தில் ஒரு பெரும் சக்தியாகத் தோன்றியுள்ளதும், அதை ஏற்றுக் கொள்ள வேண்டியது இன்றியமையாததாக இருப்பதும், மிகவும் சிறப்பான தன்மை வாய்ந்ததாகவுள்ளது. 1960 இல் ஜப்பான், அமெரிக்க ஐக்கிய நாடுகளைக் காட்டிலும் 95 சதவிகிதம் குறைவாகவும், ஜெர்மன் கூட்டுக் குடியரசைக் காட்டிலும் 75 சதவிகிதம் குறைவாகவும், பிரான்சையும், பிரிட்டனையும் காட்டிலும் 67 சதவிகிதம் குறைவாகவும், பேருந்துகளை உற்பத்தி செய்தது. 1970 இல் ஜப்பானிய பேருந்துத் தொழிற்சாலை, அமெரிக்க ஐக்கிய நாடுகள் போல் மூன்றில் இரண்டு

மடங்கும், ஜெர்மன் கூட்டுக் குடியரசைக் காட்டிலும் ஒன்றரை மடங்கு அதிகமாகவும் உற்பத்தி செய்கிறது. பிரிட்டனையும், பிரான்சையும் காட்டிலும் இரண்டு மடங்கு அதிகமாக உற்பத்தி செய்கிறது. இதே மாதிரியான மாற்றங்கள், வானொலிப் பெட்டிகள், தொலைக் காட்சிப் பெட்டிகள், குளிர்பதன சாதனங்கள், கட்டுமானத்திற்குத் தேவையான இயந்திரங்கள், எஃகுப் பொருட்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதிலும் இது போன்ற பிற பொருட்களை உற்பத்தி செய்வதிலும் ஏற்பட்டிருந்தது. 1950 இல் முதலாளித்துவ உலக உற்பத்தியில் 2 சதவிகிதமாகவே இருந்த ஜப்பானின் உற்பத்தியின் பங்கு 1977 இல் 10 சதவிகிதமாக உயர்ந்தது. அதே காலத்தில் யு. எஸ். உடைய உற்பத்தி 52 சதவிகிதத்திலிருந்து 37.1 சதவிகிதமாகக் குறைந்தது. இதே காலத்தில் உலக முதலாளித்துவத்தின் மொத்த உற்பத்தியில் ஜப்பானின் பங்கு 3.6 சதவிகிதத்திலிருந்து 9.1 சதவிகிதமாக உயர்ந்தது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பங்கு 47.1 சதவிகிதத்திலிருந்து 39 சதவிகிதமாகக் குறைந்தது. அதன் விளைவாக அமெரிக்க ஐக்கிய நாடுகள் முதலாளித்துவ உலகின் மீது கொண்டிருந்த பொருளாதார ஆதிக்கமும், அரசியல் ஆதிக்கமும் குறைக்கப் பட்டன.

1978 இல் போட்டியிடும் முதலாளித்துவ சக்திகளில் முக்கியமானவர்களிடையே நிலவிய முரண்பாடுகள் தீவிர மடைந்தன. ஜப்பானிய ஏகபோகங்களும், வெளிநாட்டுச் சந்தைகளில் குறிப்பாக அமெரிக்க சந்தைகளில் தங்களுடைய விற்பனையைப் பெருக்கின. இதன் விளைவாக 1977 இல் 11,700 மில்லியன் டாலராக இருந்த பன்னாட்டுச் செலுத்தல் நிலை 16,400 மில்லியன் டாலராக பாதகமாக உயர்ந்தது. அதே ஆண்டில் ஜப்பானிய செலுத்தல் நிலை 2,300 மில்லியன் டாலரிலிருந்து 8,200 மில்லியன் டாலர் சாதகயாகவும், ஜெர்மன் கூட்டுக் குடியரசின் செலுத்தல் நிலை 7,900 மில்லியன் டாலரிலிருந்து 10,000 மில்லியன் டாலர் சாதகமாகவும் உயர்ந்தன. அந்த சமயத்தில்

ஐரோப்பிய பொருளாதார சமூகத்தினர் முதலாளித்துவ உலகின் செலாவணி இருப்பில் யு. எஸ். டாலரின் ஆதிக்கத்தைக் குறைக்கத் தங்களுடைய சொந்த செலாவணி இருப்பை மிகைப்படுத்திக் கொள்வதற்குரிய நடவடிக்கை களை மேற்கொண்டன. அதன் விளைவாக டாலர் மேற்கு ஐரோப்பிய சந்தையிலிருந்து வெளியேற்றப்பட்டு விட்டது. மேற்கு ஜெர்மனி, பிரான்ஸ், பிரிட்டிஷ், இத்தாலிய ஏகபோகங்கள் தங்களுடைய கூட்டான காப்புக் கொள்கையில் நம்பிக்கை கொண்டு ஒன்பது நாடுகளுக்கு வெளியில் உள்ள முதலாளித்துவ நாடுகளின் சந்தைக்குள், குறிப்பாக அமெரிக்க சந்தைக்குள் தைரியமாக ஊடுருவி வருகின்றன. உதாரணமாக வோல்க்ஸ் வாகன் நிறுவனத் தால், மெக்சிகோவிலும், பிரேசிலிலும் உற்பத்தி செய்யப் பட்ட பேருந்து வண்டிகள், லத்தீன் அமெரிக்காவில் மட்டுமல்லாது அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் விற்கப்படு கின்றன.

மேற்கு ஐரோப்பாவிற்கும், ஜப்பானுக்கும் இடையில் நிலவுகிற முரண்பாடுகளின் மீது நாம் கவனம் செலுத்துவது இன்றியமையாதது ஆகும். 1960 களின் பிந்திய ஆண்டுகள் வரை ஜப்பானுக்கும், மேற்கு ஐரோப்பாவிற்கும் இடையி லான பொருளாதாரத் தொடர்புகள் மிகக்குறைவானவை யாகவே இருந்தன. ஆனால் 1970 களில் குறிப்பாக முதல் இரண்டுமூன்று ஆண்டுகளில் இந்த இருஏகாதிபத்திய மையங் களுக்கிடையேயான போட்டி இடையிடையே நடைபெற்ற வணிகப் போர்களையும் தோற்றுவித்துக் கொண்டு பெருமளவு தீவிரமானது. ஜப்பானிய ஏகபோக மூலதனம் மேற்கு ஐரோப்பாவை ஊடுருவுவதற்கான தயாரிப்புகள் செய்வதற்கு 15 முதல் 20 ஆண்டுகள் வரை ஆயிற்று. அந்தக் காலத்தில் ஜப்பான் இன்று அடைந்திருக்கும் தொழிலின் திறன்களைக் கட்டியமைத்தது. குறிப்பாக இன்று அது அடைந்திருக்கும் தொழிலின் திறன்களைக் கட்டியமைத்தது. குறிப்பாக கண்ணாடிகள் தொடர்பான பொறியியல், பேருந்துத் தொழில், கப்பல் கட்டும் தொழில், கம்ப்யூட்டர்

உற்பத்தி, படிகள் தயாரிக்கும் இயந்திரங்கள், தொலைக் காட்சிகள் இரசாயனப் பொருட்கள் ஆகிய விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் விளைவுகள் மிகுதியாகவும், தெளிவாகவும் வெளிப்படுகிற பகுதிகளில் கட்டி அமைத்தது. இதன் விளைவாக நிழற்படக் கருவிச் சந்தையிலிருந்து கார்ல் சீயிஸ் (Karl Zeiss) நிறுவனத்தை வெளியேற்றி விட்டு ஜப்பானியக் கம்பெனிகள் காசெட் ரிக்கார்டர்களுக்கும், டிரான்சிஸ்டர் ரேடியோக்களுக்குமான சந்தைகளைப் பிடித்துக் கொண்டன. மேற்கு ஐரோப்பாவில் கறுப்பு வெள்ளை நிறத் தொலைக் காட்சிக் கருவிகளுக்கான சந்தைகளை ஜப்பானியர் பிடித்துக் கொண்டனர். 1975 இல் உலகத்தில் பேருந்து ஏற்றுமதியில் ஜப்பான் முதலிடம் வகித்தது. அது 2 மில்லியன் கார்களை ஏற்றுமதி செய்திருந்தது. ஆனால் ஜப்பான் வாங்கிய ஐரோப்பிய கார்கள் 30,000 மட்டுமேதான்.

ஒரு குறிப்பிட்ட அளவு பொருட்களுக்கான, ஆனால் பெரும் எண்ணிக்கைப் பொருட்களுக்கான மேற்கு ஐரோப்பிய சந்தைகளுக்குள் ஊடுருவி விட்டதனால் ஜப்பானிய ஏகபோகங்கள் தங்கள் நிலைகளை வலுப் படுத்துவதற்கான மேற் கொண்ட நடவடிக்கைகளை எடுத்தன-அதாவது தொழில் தொகுதி அமைப்புகளைக் கட்டுவதில் முதலீடு செய்தல்.

மேலே சொன்ன சக்திகளின் அணியில் மாற்றங்கள் நிகழ்ந்த போதிலும், முதலாளித்துவ உலகில் இன்றுகூட அமெரிக்காதான் வலிமை மிகுந்ததாக விளங்குகிறது. அமெரிக்க ஐக்கிய நாடுகள் அதிகப்படியான விஞ்ஞான-தொழில் நுட்ப செயல்திறன் கொண்டதாக உள்ளது. உற்பத்தி மற்றும் மூலதனம் ஒப்பிட இயலாதவாறு மிக அதிகமான அளவு ஓரிடத்தில் குவிந்துள்ளது. அதனுடைய பொருளாதாரம் மிக அதிகமான அளவு ஏகபோகமயமாக்கப் பட்டிருக்கிறது. தொழில் உற்பத்தியின் பரிமாணத்தில் ஜப்பான், ஐரோப்பியப் பொருளாதார சமூக நாடுகள்

ஆகியவற்றின் தொழிற் பொருள் உற்பத்தியைக் காட்டிலும் அதிகமாகவே உள்ளது. மூலதன ஏற்றுமதி போன்ற பகுதிகளில், வேறு எந்த முதலாளித்துவ நாட்டைக் காட்டிலும், வேறு எந்த முதலாளித்துவ மையங்களைக் காட்டிலும் அது வலிமை வாய்ந்ததாகவுள்ளது. 1970 களின் பிற்பகுதியில் வெளி நாடுகளில் முதலீடு செய்யப்பட்ட அமெரிக்க முதலீட்டின் மொத்த மதிப்பானது 160,000 மில்லியன் டாலராக இருந்தது. யு. எஸ். சுடைய பன்னாட்டு இணையங்கள் வேறு நாடுகளில் உள்ள முக்கியமான கிளைகளைக் கட்டுப்படுத்துகின்றன. முதலாளித்துவ உலகில் போர் தொடர்பான தொழில்களில் யு. எஸ். சுக்குச் சரி நிகரான நாடு வேறு ஏதும் இல்லை. ஐரோப்பியப் பொருளாதார சமூக நாடுகளும், ஜப்பானும் விஞ்ஞான ஆராய்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் செலவு செய்யும் தொகையைப் போன்று இரண்டு மடங்கு தொகையை யு.எஸ். செலவு செய்கிறது. (1978 இல் இந்தப் பகுதிக்கான அரசு செலவு மட்டும் 26,000 மில்லியன் டாலராகும்.) இது அமெரிக்க ஏகபோகங்களுக்குத் தங்களுடன் மோதும் போட்டிகளுடன் போராடுவதற்கான மிக அதிகமான சாதகமான சூழ்நிலைகளை ஏற்படுத்துகிறது.

அமெரிக்க ஏகபோகங்கள் மேற்கு ஐரோப்பாவிற்குள் விரிவடைந்திருப்பது பொருளாதாரத்தின் முக்கியமான கிளைகளில் பணத்தை முதலீடு செல்வதன் மூலம்தானேயன்றி, ஏற்றுமதிகளை அதிகப்படுத்தியதால் அல்ல. ஐரோப்பியப் பொருளாதார சமூக நாடுகளில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் நேரடியாக முதலீடு செய்திருப்பது 30, 000 மில்லியன் டாலரைக் காட்டிலும் அதிகமாகும். அதில் பெருமளவுத் தொகை பிரிட்டனில்தான் முதலீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கு ஐரோப்பிய ஏகபோகங்கள் தங்களுடைய போட்டிகளுடன் மோதுவதற்கு யு. எஸ். மூலதனத்தையே நம்பி இருக்கின்றன. ஆனால் இது அமெரிக்காவிற்கும், மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு மிடையிலான முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு ஏதும் செய்ய

இயலவில்லை. ஐரோப்பியப் பொருளாதார சமூக நாடுகளின் அரசுகளும், அந்த நாடுகளின் பிற சங்கங்களும், அமெரிக்க மூலதனம் தங்கள் நாடுகளில் முதலீடு செய்யப்படுவதற்கு சாதகமாயிருப்பது சோஷலிச சமுதாய நாடுகளின் வலிமை நிறைந்த நிலைகளின் காரணமாக, ஏகாதிபத்திய அரசுகளால் பொருளாதார அரசியல் ஒருங்கிணைப்பு இன்றியமையாதது என உணரப்படுவதால்தான்.

சமூகத்தின் உடைமை என்ற அடிப்படையில் சோஷலிச நாடுகளின் பொருளாதார வெற்றிகளும், விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தின் வளர்ச்சிகளைப் பரந்த அளவில் பயன்படுத்துவதும், இன்றைய உலகில் ஏகாதிபத்தியத்தின் மேற்கொண்ட உறுதியற்ற தன்மைக்குப் புறவயமாக உதவியுள்ள முக்கியமான காரணியாகும்.

**பேராசிரியர். பி. ஐ. க்வாய்நிக்**

*முனைவர் விஞ்ஞா. பொருளாதாரம்*
*தலைமை ஆராய்ச்சியாளர்*
*உலகப் பொருளாதாரம் மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய நிறுவனம்; சோவியத் ஒன்றிய விஞ்ஞான கலைக்கழகம்*

## ஏகாதிபத்தியமும், வளரும் நாடுகளும் : சர்வதேசப் பொருளாதார உறவுகளில் போராட்டத்திற்கான விருப்பத்திற்கும், சமரச இணக்கத்திற்கான விருப்பத்திற்குமிடையில் நிகழும் போராட்டம்.

உற்பத்தி சர்வதேசத் தன்மையடைவதிலும் தேசிய பொருளாதாரங்கள் பரஸ்பரம் ஒன்றை யொன்று சார்ந்திருப்பது வளர்ந்திருப்பதிலும் மிக முக்கியமான காரணியாக விளங்கும் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி, ஏகாதிபத்திய நாடுகளுக்கும், வளரும் நாடுகளுக்கு மிடையிலான பொருளாதார உறவுகளின் இயல்பைப் பெருமளவு வரையறை செய்துள்ளது. உலகில் நிலவும் சக்திகளின் அணிகள் பெரும்பகுதி சோஷலிசத்தின் சார்பிலும், தேசிய விடுதலையின் சார்பிலும் மாறிக் கொண்டிருக்கும் வேளையில், ஆற்றல், மூலப்பொருட்கள், பணவியல், சூழ்நிலைப் பாதுகாப்பு ஆகியவைகளில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளின் சார்பான காரணிகள் ஏகாதிபத்திய சக்திகளுக்கும், விடுதலையடைந்த நாடுகளுக்குமிடையே

நிலவுகிற பொருளாதாரத் தொடர்புகளில் பின்பற்ற வேண்டிய தந்திரங்களிலும், யுக்திகளிலும் ஒரு பெரும் செல்வாக்கு வகிக்கின்றன.

ஏகாதிபத்தியங்களுக்கும், வளரும் நாடுகளுக்குமிடையில் இன்றைய படிநிலையில் பொருளாதாரக் கொள்கைகளில் நடைபெறும் உட்செயல்களின் தனிச் சிறப்பான இயல்புகள் இந்த இரண்டு குழுக்களைச் சேர்ந்த நாடுகளிடையில், அந்தந்த நாடுகளில் உள்ள சக்திகளின் ஒன்றிணைப்புக்கும், அனைத்து நாடுகளுக்கும் இன்றியமையாததாய் விளங்கும் பொருளாதார உறவுகளைப் பற்றிய பேச்சுவார்த்தைகளின் போது ஒரு ஐக்கிய முன்னணியாய்த் தோன்றுவதற்கும் உரிய போக்குதான் ஆகும். இந்தக் கூட்டு அரசியலினுடைய அடிப்படைக் கூற்றுக்களும், நிபந்தனைகளும், உருவங்களும் அந்தக் கூட்டத்திற்கிணையான அடுத்த கூட்டத்தின் சமூக, அரசியல், பொருளாதாரக் கட்டமைப்புக்களையும், அதன் இலட்சியங்களையும், அதன் செயல்திறனையும் சார்ந்த பொதுவான இயல்புகளையும், தனியான இயல்புகளையும், பொருத்ததாக உள்ளன. இந்தக் கூட்டத்தின் அணுகு முறையின் சிறப்பியல்பாக விளங்குவது கூட்டுச் செயல் முறையின் சிறந்த நன்மைகளை மிக அதிகமாக அறிந்திருப்பதேயாகும். அவைகளுடைய ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம் வெற்றியடைய வேண்டுமென்பதற் காகவும் அவைகளுடைய பொருளாதார சுதந்திரத்தை வலுப்படுத்த வேண்டுமென்பதற்காகவும் பொதுவான இலட்சியங்களுடன் அவைகளுடைய நலன்களைச் கூட்டாகப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்பது புறவயமாக இன்றியமையாததாகவுள்ளது விடுதலையடைந்த நாடுகளில், தங்களுடைய பொருளாதார நிலைகளை மீண்டும் சரிசெய்து கொள்வதும், புதிய சூழ்நிலை களுக்கு ஏற்பத் தங்களைத் தகவமைத்துக் கொள்வதும் வளர்ந்த நாடுகளுக்கு மிகவும் இன்றியமையாததாகவுள்ளது.

வளர்ந்து வரும் நாடுகளைப் பொருத்தவரை உலக ஏகாதிபத்தியத்தின் போக்கு, ஒரு ஒன்றிணைந்த

கொள்கையைப் பின்பற்றுவது முன்னரே குறிப்பிடப் பட்டிருந்த போதிலும், சர்வதேச முன்னணியின் அடிப்படையில் ஒன்றிணைக்கப்பட்ட, கூட்டான ஒரு வெளி நாட்டுக் கொள்கையைப் பின்பற்றுவது இன்றைய நாட்களில்தான் தனிச் சிறப்பானதாகியுள்ளது. இது ஒரு குறிப்பிட்ட அளவு வளரும் நாடுகளிடையே மிகுதியாகக் காணப்படும் ஒற்றுமையின் விளைவே எனக் கொள்ளலாம். 77 நாடுகளின் கூட்டத்தினால் முன்வைக்கப்பட்ட பொதுவான கொள்கையின் (ஜெனிவா 1964) அடிப்படையில் ஐ. நா. சபையின் வாணிகம் மற்றும் மேம்பாடுபற்றிய பொருளாதார விஷயங்களைப் பற்றிக் கவனிக்க ஒரு கூட்டத்தை வளரும் நாடுகள் தோற்றுவிக்கத் தொடங்கின. தங்களுடைய ஒற்றுமைக்கான அமைப்பின் அடிப்படையை மேம்பாடடையச் செய்வதற்காகப் புதிய அரசுகளால் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு மேலும், அப்பாலும் தங்களுடைய நலன்களைக் கூட்டாகப் பாதுகாப்பதற்காக, புதிய உருவங்களைத் தேடுமாறு ஏகாதிபத்தியத்தை நிர்ப்பந்தப்படுத்துகிற, முக்கியமான காரணிகள் முதலாளித்துவ மையங்களில் பொருளாதார நிலை பொதுவாக மோசமடைந்துவருவதும், பொருளாதார வாழ்க்கையின் பல பகுதிகளில் அதனுடைய நிலைகள் பொதுவாக பலமிழந்து வருவதும் ஆகும்.

1970 களில் ஏகாதிபத்தியம் ஒரு முழுத் தொகுதியின் வரிசையான பொருளாதார மற்றும் அரசியல் முரண்பாடு களையும், புதிய, தீர்ப்பதற்கு மிகவும் கடினமான பிரச்சினை களையும் சந்தித்தது என்பதை நாம் நினைவில் இருத்திக் கொள்வது இப்போது ஏற்புடையதாக இருக்கும். உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளில் ஏற்பட்ட கட்டமைப்பு நெருக்கடிகளின் உட்செயல்கள் மூலம் மேற்கொண்டு தீவிரமடைந்த போர்க் காலத்திற்கு முன்னால் வரை கண்டும் கேட்டுமிராத அளவு மோசமான பொது பொருளாதார நெருக்கடி, ஆற்றல் மற்றும் மூலப் பொருட்கள் தொடர்பான பிரச்சினைகளை உயர்த்தியது.

நாணயச் செலாவணி முறையைச் சீர்குலைத்தது. பெருமளவு வேலையில்லாத் திண்டாட்டத்தையும், விரைந்தோடும் பணவீக்கத்தையும் ஏற்படுத்தியது. முதலாளித்துவ உலகத்தில் உள்ள மையங்களுக்கும், ஓரங்களுக்குமிடையே யுள்ள பொருளாதார உட்செயல்கள் கேடுறுமாறு செய்தது. புதிதாக விடுதலையடைந்த நாடுகளில் வெளிநாட்டு மூலதனங்கள் நாட்டுடமையாக்கப்பட்டன. வளரும் நாடுகளில் உள்ள இயற்கை வளங்கள் பன்னாட்டு இணையங்களின் ஏகபோகங்களின் கட்டுப்பாட்டின் வழக்கமான நெம்பு கோல்களை இழந்தன — இவையனைத்தும் அது பிழைத்து வாழ்வதற்காக உலக அமைப்பிற்குள், தன்னைப் பேணிக்காப்பாற்றுவதற்காக ஏகாதிபத்தியம் மேற்கொண்ட வழிகளைத் தேடுவதற்கு நிர்ப்பந்தப்படுத்தும் ஒருவிளைவை ஏற்படுத்தியது. இம்மாதிரியான வளர்ச்சியேற்பட்டுள்ள சூழ்நிலையில்தான் பொதுவாகத் தங்களுடைய வெளிநாட்டுப் பொருளாதாரக் கொள்கையை ஒன்றிணைக்கவும், ஒருசீராக்கவும் வளர்ந்த முதலாளித்துவ நாடுகளிடையே மிக அதிக அளவில் வெளிப்பட்டுள்ள போக்குகளை நாம் கருத்தில் கொள்வது ஏற்புடையதாக இருக்கும்.

இம்மாதிரியான செயல்களை ஒன்றிணைப்பது, முன்னர் மேற்கத்திய வல்லரசுகளின் செல்வாக்கு மிகுதியாக இருந்த பொதுச் சந்தை, பொருளாதாரக் கூட்டுறவு மற்றும் மேம்பாட்டிற்கான அமைப்பு, சர்வதேச நிதிநிறுவனம் (IMF) சுங்கம் மற்றும் வாணிபம் பற்றிய பொது உடன்பாடு (GATT) ஆகிய சர்வதேச அமைப்புகள் மூலம் நிறைவேற்றப் பட்டது. ஆனால் இந்த அமைப்புக்களின் திறமை மிக மிகக் குறைவாகவே இருந்தது. இவைகளால் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள் குறிப்பாகப் பொருளாதாரக் கூட்டுறவு மற்றும் மேம்பாட்டிற்கான அமைப்பினால் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள், பரிந்துரைகளாகவோ அல்லது ஆலோசனைகளாகவோதான் இருந்தன. உண்மையில் புதிய காலனி ஆட்சியாளர்களின் யுக்திகள் உருவாக்கப் படுவது பெரிய வணிக நிறுவனங்கள் மற்றும் அரசுகள்,

தேர்ந்தெடுக்கப்பட்ட வல்லுநர்களின் பிரதிநிதிகள் ஆகியோரால், இரகசிய கூட்டங்களில்தான் அதிகார பூர்வமாக அல்லது அரைகுறை அதிகார பூர்வமாக நிறைவேற்றப்பட்டன.

ஆனால், இன்று ஏகாதிபத்திய வெளி நாட்டுப் பொருளாதாரக் கொள்கையின் ஒருங்கிணைப்பில் புதிய படிநிலையின் பண்பியல் அடிப்படையிலான வளர்ச்சியை உறுதியாகக் கூறமுடியும். ஏனெனில் ஏகபோகங்களுக்கு உதவி செய்ய முன்வரக்கூடிய அரசுகளுக்கிடையிலான அதிகார பூர்வமான மட்டத்தில் அது இப்பொழுது நிறுவப் பட்டுள்ளது. முதன்மையாக 1975 - லிருந்து குறிப்பாக பொருளாதார விஷயங்களை விவாதிப்பதற்கெனக் கூட்டப் பெற்ற ஏழு பெரும் நாடுகளின் (அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஜப்பான், ஜெர்மன் கூட்டுக் குடியரசு, பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, கனடா) ஆண்டுதோறும் நடைபெறும் உச்சநிலை மகாநாடுகள் மூலம் இது தெளிவாகிறது. இரண்டாவதாக இந்தப் பெரும் பொருளாதாரக் கூட்டங்களின் போது தொடக்க காலத் தயாரிப்பு உடன்பாடுகளுக்கான முயற்சிகளை மேலை நாடுகள் உயர்த்தின. முந்திய ஆண்டுகளைப் போலல்லாமல் இம்மாதிரியான கூட்டங்கள் பெரும் அளவு முன் கூட்டியே பிரச்சாரம் செய்யப் படுவதும் அதன் விளைவுகள் (இரகசிய உடன்பாடுகளைத் தவிர பிறவற்றை) செய்தித்தாட்கள் மூலம் பெருமளவு பிரசுரிக்கப்பட்டு விளம்பரப் படுத்தப்படுவதும் இப்பொழுதெல்லாம் வழக்கமாகப் போய் விட்டது.

மேலைநாட்டு அரசுகள் தங்களுடைய வெளிநாட்டுப் பொருளாதாரக் கொள்கைகளை மிகுதியான செயலூக்கத்துடன் ஒன்றிணைப்பதற்கான விருப்பம் கொண்டிருப்பதற்கு ஏகாதிபத்தியங்களுக்கிடையிலான முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான வழிகளைக் கண்டுகொண்டன என்பது பொருளல்ல. சர்வதேசப் பொருளாதார மாநாடுகளில் ஒரு ஐக்கிய முன்னணியைப் பற்றிய முரண்பாடு ஏற்பட்ட

பின்னரும் கூட, வளரும் நாடுகளில் உள்ள மூலப்பொருட்களைச் சார்ந்திருப்பதனாலும் தோன்றுகிற சில ஏகாதிபத்தியங்களுக்கிடையே யான நிலைகளில் முக்கியமான வேறுபாடுகள் இன்னும் இருக்கத்தான் செய்கின்றன. ஏகாதிபத்திய அதிகார மையங்களுக்கிடையில் நிலவுகிற முரண்பாடுகளைத் தவிர அவைகளுக்கிடையேயும், வளர்ந்த முதலாளித்துவ நாடுகளில் உள்ள அவைகளுடைய பங்காளிகளிடையேயும் மிகவும் குறிப்பிடத் தகுந்த வேறுபாடுகள் நிலவுகின்றன. மேலைநாட்டு அரசுகள் பல பிரச்சினைகளில் ஒற்றுமையாக இருப்பதைப் போலக் காட்டிக் கொண்டாலும் அவைகளிடையே நிலவுகிற முரண்பாடுகள் மேலும் தெளிவாகவே வெளிப்படுகின்றன. அதன் விளைவாக அவைகளுடைய சாகசங்கள் அனைத்தும் ஒத்து ஆடும் ஒரு தந்திரக் காட்சி போலவே தோன்றுகின்றன.

ஏகாதிபத்தியவாதிகள் தங்களுடைய வெளிநாட்டுப் பொருளாதாரக் கொள்கையைப் பொருத்தமாக்கிக் கொள்ளவும், தங்களுடைய ஒத்துழைப்பையும் ஒன்றிணைப்பையும், வலிமைப்படுத்திக் கொள்ளவும் செய்யும் முயற்சிகள், வளரும் நாடுகள் தங்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்தச் செய்யும் முயற்சிகளுடனும், 77 நாடுகளின் கூட்டத்தை வலிமைப்படுத்த வேண்டுமென்ற முயற்சியுடனும் மோதிக்கொள்கின்றன வளரும் நாடுகளின் ஏகாதிபத்திய எதிர்ப்பு விருப்பங்களை முற்போக்கு சக்திகள் அனைத்தும் ஆதரிக்கின்றன. அவை புதிய சர்வதேசப் பொருளாதார முறைக்கு ஆதரவு தருகின்றன. உண்மையான சமத்துவம், பரஸ்பர நன்மை ஆகியவற்றின் அடிப்படையில் உருவாக்கப்படுவதும், ஜனநாயகக் கோட்பாடுகளின் அடிப்படையில் உருவாக்கப்படுவதுமான சர்வதேசப் பொருளாதார அமைப்பை ஏற்படுத்துவதற்கான திட்ட நிகழ்ச்சிகளுக்கும் ஆதரவு தருகின்றன. மார்க்சீய சிந்தனையாளர்களின் ஆய்வுக்குழுவொன்று அண்மையில் முழுதும் ஆராய்ந்து வெளியிட்ட சர்வதேசப் பொருளாதாரத் தொடர்புகளை முற்போக்கான முறையில் மறுசீரமைப்பது

பற்றிய இயக்கம் தொடர்பான முழுவிவரங்களைப் (உலக மார்க்சிஸ்ட் ரெவ்யூ—1977-எண்-5) பற்றி அதிகமாகப் போகாமல் இந்த மாநாட்டில் வளரும் நாடுகளை ஏகாதிபத்தியத்தின் வெளிநாட்டுப் பொருளாதாரக் கொள்கைகள் பாதிக்கும் சில கூறுகளைப்பற்றி மட்டும் இங்கே நான் கூற விரும்புகிறேன்.

புதிய அரசுகளிடமிருந்து வளர்ந்து வரும் நிர்பந்தத்தின் விளைவாக ஏகாதிபத்தியம் தன்னுடைய அணியை ஒரு முகப் படுத்துவதற்கு வற்புறுத்தப் பட்டிருப்பதோடு மட்டுமல்லாமல் தன்னுடைய தந்திரங்களை மாற்றுவதற்கும் தன்னுடைய நீண்ட கால அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த இலட்சியங்களையடைவதற்கான புதிய வழிகளைத் தேடுவதற்கும் நிர்ப்பந்தப் படுத்தப்பட்டுள்ளது. பிந்தியவை முழுதும் மாறாதிருந்த போதிலும், வெளி நாடுகளில் மரபு வழியான முறையில் பொருளாதார விரிவாக்கம் செய்வதற்கான கடமைகளும், முதலாளித்துவ முறையில் விடுதலையடைந்த நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்தை ஊக்குவிப்பதும், பல புதிய, தனிச் சிறப்பான பொருளாதார இலட்சியங்களுடன் இணைக்கப் பட்டுள்ளன. இவை, எரிபொருள், மற்றும் கனிப்பொருள் தொடர்பான வளங்களின் ஒழுங்கான அளிப்பைப் பேணிக் காப்பதையும், பன்னாட்டு இணையங்களின் நிலையைப் பாதுகாப்பதையும் ஏகாதிபத்திய சக்திகளுக்குச் சாதகமாக இருக்கக்கூடிய திசையில் இயங்குமாறு செய்வதற்கு ஏற்ப வளரும் நாடுகளின் தொழில்மயமாக்குவதைக் கட்டுப் படுத்துவதையும் உள்ளடக்கியதாகவுள்ளன. ஆகவே உலக சக்திகளின் அணி சேரும் முறையில் மோசமான சூழ்நிலை இருந்தாலும் (ஏகாதிபத்தியத்தின்கண்ணோட்டத்திலிருந்து) ஏகாதிபத்தியம், வளரும் நாடுகளுடனான உறவுகளில் எந்த விதப் பயனும்தராத, நேரடியாக மோதிக் கொள்ளும் கொள்கைக்குப் பதிலாக ஒரு சமரச இணக்கமான கொள்கையைப் பின்பற்றவும், ஒரு முரட்டுத் தனமான பிடிவாதமான கொள்கையைப் பின்பற்றுவதற்குப் பதிலாக

பேச்சுவார்த்தை முறையைப் பின்பற்றவும், அடுத்தவர்களின் உரிமைகளைப் பற்றிய கோரிக்கைகளுக்குக் காது கொடுக்காமலிருப்பதற்குப் பதிலாக சில சலுகைகளைக் கொடுப்பதற்கும் முன் வந்துள்ளது.

ஆனால் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சிதான் ஏகாதிபத்திய வட்டாரத்தில் இந்த மாற்றங்களைப் புகுத்துவதற்குப் பெரும்பாலும் காரணமாயிருந்தது என்பது தான் இது தொடர்பாக வற்புறுத்திக் கூறப்பட வேண்டிய ஒன்றாகும் கோட்பாடடிப்படையில் பார்த்தால், விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் இன்றைய நிலை கூட மேற்கத்திய நாடுகளுக்குத் தங்களின் ஆற்றல், நுகர்வு தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளவும், வளரும் நாடுகளிலிருந்து கிடைக்கும் எரிபொருள்கள் மற்றும் கனிப்பொருள்களின் அளிப்பின் மீது சார்ந்திருப்பதையும் அனுமதிக்கத்தான் செய்கிறது. தேசிய அடிப்படையிலும், சர்வதேசிய அடிப்படையிலும் பெரும் அளவு அதிகமான இந்த இலட்சியங்களை அடிப்படையாகக் கொண்ட நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறாக, ஏகாதிபத்தியத்தின் மூலப்பொருட்களைப் பகுத்தறிவுக்குகந்த முறையில் பயன் படுத்துவதற்கான கொள்கை-எரிபொருட்களைப் பயன்படுத்துவதில் மிகுந்த சிக்கனம், உற்பத்தியிலும், நுகர்விலும் அடிப்படையான பொருட்களைப் பயன்படுத்துவதற்கான கண்டிப்பான வரை முறைகளை அறிமுகப்படுத்துதல் ஒப்பீட்டில் குறைந்த ஆற்றலையும், அதிகமான மூலப்பொருட்களைப் பயன் படுத்துகிற முன்னேற்றமடைந்துள்ள தொழில்களை விரைவாக வளரச் செய்வது, மாற்று ஆற்றல் தோற்றுவாய் களை அதிக அளவில் பயன்படுத்துவது, (அணு ஆற்றல், அணு வெப்ப ஆற்றல், நிலத்தடி வெப்ப ஆற்றல், சூரிய ஆற்றல், காற்று மற்றும் அலைகளிலிருந்து எடுக்கப்படும் ஆற்றல், நிலக்கரியிலிருந்து தயாரிக்கப்படும் திரவ ரூப எரிபொருட்கள், மென்மையான களிக்கற்கள், புகை மிகு

மணல்கள், சாராய வகைகள்) கனிப்பொருட்களை வெட்டியெடுப்பதற்கான தொழில் நுட்பத்தை மேம்பாடடையச் செய்தல், முன்னர் குறைவாக இருந்ததனால் மூடப்பெற்ற கனிச்சுரங்கங்களை மீண்டும் தோண்டத் தொடங்குதல், வளர்ந்த நாடுகளுக்குள்ளேயே இதுவரை சென்று அடைய முடியாததாக இருந்த இடங்களுக்குச் சென்று பயன் (அலாஸ்கா, வட கனடா, மத்திய ஆஸ்திரேலியா, ஸ்காண்டிநேவியாவின் சில பகுதிகள்) படுத்துவது. கண்டத்திட்டுக்களுக்கும் உலகப் பெருங்கடல்களின் ஆழமான பகுதிகளுக்கும் சென்று அவற்றைப் பயன்படுத்துவது, உட்சுழல் தொழில் நுட்பத்தைப் புகுத்துவது, தொழில் உற்பத்தியில் பொருட்கள் அதிகமாகப் பயன்படுத்துவதைக் குறைப்பது, ஆகியவற்றை உள்ளடக்கியதாகவுள்ளது. இந்தப் பகுதிகள் அனைத்திலும் முதலாளித்துவ உலகின் வளர்ந்த பகுதிகளுக்குட்பட்டவையாயிருந்தன. நாம் இவைகளின் அற்பமான தன்மையைக் குறிப்பிடும்போதும், இதுபோன்ற வேறு சலுகைகளின் அற்பமான தன்மையைக் குறிப்பிடும் போதும் அவைகளின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிடுவதோ அல்லது அவை முழுவதையும் கவனிக்காமல் விட்டுவிடுவதோ தவறாகும்.

ஆனால், எரிபொருள், மூலப்பொருள் ஆகியவற்றின் உட்புற அம்சங்களில் வைத்த முனைப்பானது வெளிப்புற அம்சங்களைக் கடுமை குறைந்தவையாக்கி விடவில்லை. ஆம்!.... முதலாளித்துவ சக்திகள் அனைத்தினுடையதுமான (சாத்தியமானால்) உட்புற வள ஆதாரங்களுக்கு வலிமையூட்டும் செயலுடன் மாபெரும் பொருளாயத ரீதியான, நிதியியல் ரீதியான, சமுதாய ரீதியான செலவும் இணைந்து நடைபெற வேண்டும். மிக முக்கியம் என்னவென்றால் அதற்குப் போதிய கால அவகாசமும் வேண்டும். இன்றைய உலக முதலாளித்துவப் பொருளாதாரமானது தனது சக்தி உருவாக்கம், சக்தி நுகர்வு ஆகிய அமைப்பை மறுவடிவப் படுத்தும் செயலிலும் கனிமவள ஆதாரங்களை வெட்டியெடுத்துப் பயன்படுத்தும் செயலிலும் திரும்ப முடியாத ஒரு

கட்டத்தின் துவக்கத்தில்தான் இப்போது இருக்கிறது. ஆனால் முதலாளித்துவ அமைப்பானது மூலப்பொருள் வகையில் எழுந்துள்ள புதிய சூழ்நிலைக்கேற்பத் தன்னைத் தகவமைத்துக் கொள்ளாது போகுமானால் ஏகாதிபத்தியம் மூலப்பொருள் வகையில் வளரும் நாடுகளைச் சார்ந்திருக்க வேண்டிய நிலையானது மிகவும் அதிகமாக இருக்கும். அது தனி வகையில் (சார்பு வகையில் இல்லையென்றாலும்) அதிகரிக்கவும் செய்யும். ஆக, ஏகாதிபத்தியமானது வளரும் நாடுகளுடன் தான் கொள்ளும் உறவுகளை மறுவடிவப்படுத்த ஏன் விரும்புகிறது? அத்துடன் நெகிழ்ந்து கொடுக்கும் அயல் துறைக் கொள்கையைப் பின்பற்ற ஏன் நினைக்கிறது? மேலும், சில அரைகுறை சலுகைகளை வழங்கவும் ஏன் முன் வருகிறது? இதற்கெல்லாம் ஒரே காரணம், அது தனது பொருளாதாரத்தை மறுவடிவப்படுத்த அவகாசம் எடுத்துக் கொள்கிறது என்ற ஒன்றே ஒன்றுதான்.

ஆனால் ஒரு விஷயத்தை நாம் கட்டாயமாகக் கவனிக்க வேண்டும். அதாவது விஞ்ஞான, தொழில் நுட்பப் புரட்சியின் வேகம் கூடுகையில், இந்த ஆயுதத்தை வளரும் நாடுகளுக்கு எதிராகப் பயன்படுத்தும் வாய்ப்பும் அதிகரிக்கும் என்பதே அது. ஆகவே, இந்தக் கூற்றிலிருந்து அண்மை எதிர்காலத்திலேயே கூட, ஏகாதிபத்தியம் பிடித்து வைத்திருக்கும் பொருளாதார நிலைகளின் மேலாகவும், உலக பொருளாதாரத் தொடர்புகளின் அமைப்பில் பன்னாட்டு ஏகபோகங்களின் நிலைகளின் மேலாகவும் முற்போக்கு சக்திகள் முன்னேற்றமடைவதற்கான சூழ்நிலைகள் தோன்றும் என்று நமக்குப் புலனாகிறது.

இதுவரையில் வளரும் நாடுகளுடன் மோதலைத் தவிர்ப்பது, எண்ணெய் நாடுகளுடன் கொஞ்சுவது முதலிய நழுவல் தந்திரங்கள் கூடச் சில விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. ஆனாலும் மாற்றப்பட்ட புது காலனிக் கொள்கையோ, வளரும் நாடுகளுக்குச் செய்யப்பட்ட சலுகைகளினால் அவைபெற்ற மனநிறைவோ பலன் தர

வில்லை. எனவே பாரீஸ் கூட்டத்தின் "உரையாடல்" தோற்றது. சுங்கத் தீர்வையைக் குறைத்தல் பற்றிய இரண்டு வட்டப் பேச்சுவார்த்தைகள் வளரும் நாடுகளுக்குச் சிறிது மனநிறைவே தந்தன. சுங்கம், வாணிகம் ஆகியவற்றின் மீதான பொது உடன்படிக்கை என்பதன் கீழாக அந்தப் பேச்சுவார்த்தைகள் நிகழ்ந்தன. அவை கென்னடி வட்டம், டோக்கியோ வட்டம் என்றும் அழைக்கப்பட்டன. வளரும் நாடுகளிலிருந்து வளர்ந்த நாடுகளுக்குள் இறக்குமதி செய்வதற்குத் தரப்படும் முக்கியத்துவங்கள் அதிருப்தியானவைகளாகி விட்டன. ஆப்பிரிக்கா, கரிபியன், பசிபிக் கடல் ஆகியவற்றின் நாடுகள், லோமே கன்வென்ஷனுக்குக் கீழாக, காமன் மார்க்கெட் நாடுகள் பெற்ற லாபங்கள் மிகவும் வரம்புக்குட்பட்டிருந்தன. ஆனால் இவற்றின் முக்கியத்துவமற்ற நிலையை அழுத்திக் கூறுகையிலும், இவற்றைப் போன்ற சலுகைளின் முக்கியத்துவமற்ற நிலையை அழுத்திக் கூறுகையிலும், இவற்றின் முக்கியத்துவத்தையும் மறந்துவிடக் கூடாது. இவற்றை ஆலட்சியப்படுத்திவிடக் கூடாது. இவை ஏகாதிபத்தியவாதிகளை அழுத்திப் பெற்ற சலுகைகள் என்பதை மறந்துவிடவும் கூடாது.

வளரும் நாடுகள் பெற்ற சலுகைகள் எவ்வளவுதான் குறைவானதாக இருப்பினும், குறிப்பிட்ட அளவானதாயினும் புதிய அரசுகளுடைய வெளிநாட்டுப் பொருளாதார நிலைகளின் மேம்பாட்டை நோக்கிய உண்மையான நடவடிக்கைகளாக விளங்குகின்றன என்பது தான் விஷயமாகும். ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடுவது என்ற கண்ணோட்டத்திலிருந்து பார்க்கையில் எல்லாவற்றைக் காட்டிலும் மிகவும் இன்றியமையாததும் மிகவும் அதிக அளவில் அபாயம் நிறைந்ததாக உள்ளதும் என்னவென்றால் வளரும் நாடுகளைப் பாதிக்கிற பிரச்சினைகளைப் படிப்படியாகத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏகாதிபத்தியம் தயாராக இருக்கிறது என்ற தோற்றத்தை உண்டாக்குவதற்காக இந்தச் சிறு சலுகை

களைக் கொடுக்கும் தந்திரம் பின்பற்றப்படுகிறது என்பது தான். இதற்காக மட்டுமல்லாது, இந்த நாடுகளிலிருந்து தோன்றும் நிர்ப்பந்தங்களைத் தவிர்ப்பதற்கும், இந்த நாடு களிடையே காணப்படும் ஒற்றுமையைச் சீர்குலைக்கவும், இந்தத் தந்திரம் பின்பற்றப்படுகிறது. ஏகாதிபத்தியம், வளரும் நாடுகளின் கூட்டத்தைப் பிளவு படுத்துவது என்ற சூதாட்டத்தில் மிகுதியாக ஈடுபட்டுள்ளது. இதற்காக அவை களிடையே காணப்படும் ஒற்றுமையின்மையைப் பெரிதும் பயன்படுத்துகிறது.

இன்று உலகில் உள்ள அனைத்து வளரும் நாடுகளையும் கொண்டதாக இருக்கும் 77 நாடுகளின் கூட்டம் பல்வேறு வகையான சமூக அரசியல் பொருளாதார கட்டமைப்பு களைக் கொண்ட அரசுகளையும் பல்வேறு வகையான இயற்கைச் செல்வங்களையும், பொருளாதாரச் செல்வங் களையும் மனித வளங்களையும் கொண்ட அரசுகளையும், பல்வேறு வளர்ச்சி மட்டங்களைக் கொண்டதாக உள்ள நாடுகளையும் பல்வேறு மட்டங்களில் ஏகாதிபத்தியத்தின் மீது சார்ந்திருக்கிற அரசுகளையும் ஒன்றிணைக்கிறது. சில வேளைகளில் இந்தக் கூட்டத்தினுள் காணப்படும் வேறு பாடுகள், இந்தக் குழு முழுமைக்கும் வளர்ந்த முதலாளித்துவ நாடுகளுக்கும் இடையே காணப்படும் வேறுபாடுகளைக் காட்டிலும் கூர்மையானதாகத் தோன்றுகின்றன. வளரும் நாடுகளிடையே காணப்படும் இந்த மாபெரும் வேறுபாடு களான பல சமயங்களில் சமூக முன்னேற்றத்திற்கான பாதையைப் பற்றிய தெளிவான கருத்து இல்லாதிருப்பது, அவைகளிடையே காணப்படும் பலவகையான அரசியல் வண்ணங்கள் ஆகியவை 77 நாடுகளின் கூட்டத்தில் வெளி நாட்டுப் பொருளாதார அணியில் உள்ள சில பகுதிகளின் உறுதியற்ற தன்மையை நிர்ணயிக்கிற சில காரணிகளாக உள்ளன. புதிய காலனி ஆதிக்க சக்திகளினுடைய புதிய யுக்திகள் இந்த ஒற்றுமையின்மையைக் குறிபார்த்தவையாய் உள்ளன. முதலாளித்துவ சந்தைகளுடனான தொடர்பால் இந்தப் புதிய அரசுகள் கொண்டுள்ள புதிய உறவில் அவை

களுடைய பல்வேறு அளவிலான சார்பு நிலையைப் பயன் படுத்துகின்றன. மேலும் அவை இந்த வளரும் நாடு களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பல சலுகைகளைக் கொடுத்து அதன் மூலம் அந்த நாடுகளைப் பிரிக்க எண்ணு கின்றன. மேலும் சில வளரும் நாடுகள் உண்மை நலன் களைப் பெறுவதற்காக-அவை எவ்வளவு குறைவானதாக இருப்பினும் அவற்றைப் பெறுவதற்காக-ஏகாதிபத்திய சக்திகளை சில சமயங்களில் நீண்டகால அடிப்படையான பிரச்சினைகளைச் சோதித்துப் பார்பபதற்குப் பதிலாக, உடனடியாகத் தோன்றுகிற பிரச்சினைகளுக்குத் தங்களின் கவனத்தைத் திருப்புமாறு செய்கின்றன.

இளம் அரசுகளிடையே ஒற்றுமையைப் பலம் இழக்கும் படி செய்கிற காரணிகளையும், சமரச இணக்கத்திற்கான அடித்தளத்தைத் தந்துதவுகிற காரணிகளையும் நாம் மிகைப்படுத்துதல் கூடாது. ஏனெனில் இந்த ஒற்றுமையின் முக்கியமான வலிமை ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்போரிடையே நிலவுகிற சமுதாய நலன்கள் தேசிய அரசாண்மையைப் பாதுகாத்தல், பொருளாதார சுதந்திரத்தை வலிமையடையச் செய்வது, பன்னாட்டு இணையங்களின் ஆதிக்கத்தைக் களைந்தெறிவது சர்வதேசப் பொருளாதார உறவுகளில் சமத்துவத்தை உத்திரவாதம் அளித்தல் ஆகியவற்றில் அடங்கியிருக்கிறது ஆனால் அந்த விருப்பங்கள் அனைத்தையும் ஒருவெற்றிடத்தி லிருந்து பெற முடியாது என்பது தெளிவு. ஆனால் மேலும், மேலும், நவநாகரிகமாக்கப்பட்டுள்ள ஏகாதிபத்தியத்தின் கொள்கையின் நேரடி மோதல் வளரும் நாடுகளில் சமுதாய மற்றும் அரசியல் வேறுபாடுகளின் போக்கின் மீது கொண்டுள்ள செல்வாக்கைக் குறைத்து மதிப்பிடுவது, மிகைப்படுத்துவதைக் காட்டிலும் தவறானதாக இருக்கும்.

சர்வதேசப் பொருளாதார உறவுகளில் ஏகாதிபத்தியத் திற்கும், வளரும் நாடுகளுக்குமிடையில் மோதலுக்கான வாய்ப்புகளைப் பற்றி ஆராயும் போது ஒவ்வொரு தனித்தனி

நாடுகளில் உள்ள உண்மையான சூழ்நிலைகளின் மீது கவனம் செலுத்துவது பயனுடையதாக இருக்கும். ஏனெனில் ஏகாதிபத்தியத்தின் நிலைகளை பலமிழக்கச் செய்வதை நோக்கிய பொதுவான போக்குகளுக்குள் அன்றைய பொருளாதார மாற்றங்களைச் சார்ந்ததாகவுள்ள பல ஏற்றத்தாழ்வுகள் ஏற்படக் கூடும். இவ்வாறாக ஐ. நா. சபையின் ஆதரவில் தோற்றுவிக்கப்பட்ட புதிய சர்வதேசப் பொருளாதார ஒழுங்கமைப்பு பற்றிய திட்டச் செயல்களுக்கு வழிகோலிய பெரும்பான்மையான வெற்றிகள், எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளால் அவர்களுடைய இயற்கை வளங்களின் மீதான தேசிய அரசாண்மையை மீண்டும் நிலை நிறுத்துவதிலும், அந்நிய நாட்டவர் சொத்துக்களை நாட்டுடைமையாக்கும் பேரவையின் உச்சகட்டத்திலும் தீர்மானமாக மேற் கொள்ளப்பட்ட செயல்கள் மூலம் ஏகாதிபத்திய நாடுகளிடையே ஒரு குறிப்பிட்ட அளவு குழப்பம் நிலவிய காலத்தில் சாதிக்கப்பட்டது என்பது, அவைகளின் வளர்ந்து வரும் வலிமைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது. அதை ஒரு கூர்மையான பொருளாதார நெருக்கடி பின் தொடர்ந்தது. அதன் படுமோசமான விளைவுகள் இன்றுகூட மக்களால் உணரப் படுகின்றன. இவை அனைததும் புதிய அரசுகளின் பல்வேறு கோரிக்கைகளை நிறைவு செய்வதில் மேற்கு நாடுகள் ஒரு கட்டுப்பாடான கண்ணோட்டத்தைத் தோற்றுவிக்க உதவின. மேலும் இந்தக் கண்ணோட்டத்தில் மாற்றம் உள்நாட்டுப் பொருளாதார இன்னல்களால் விளைந்தவை எனக் கூறப்பட்டது.

முடிவில் வளரும் நாடுகளைப் பொருத்தவரையிலான ஏகாதிபத்திய வெளிநாட்டுக் கொள்கையின் இந்தப் புதிய இயல்புகள் அனைத்தும் பல சமயங்களில் படுமோசமான முரணான நோக்குகளால் எதிர்க்கப்படுகிற போக்குகளின் வடிவங்களில் வெளிப்படுத்தப் படுகின்றன என வலியுறுத்திக் கூற வேண்டும். எனினும் ஏகாதிபத்திய சக்திகளைப் பொருத்தவரை ஒன்றிணைந்த செயல்முறைகளை நோக்கிய

போக்குகளின் முரண்பட்ட தன்மையையும், வளரும் நாடுகளின் ஒற்றுமையை வலிமை பெறச் செய்வதற்கு, வெற்றி கொள்ள வேண்டிய, முக்கியமில்லாதது எனக்கருத முடியாத துன்பங்களையும் நாம் அறிந்து கொள்ளும் பொழுதேகூட, தவிர்க்க முடியாத மோதல்களிலும், தற்காலிக சமரச இணக்கங்களிலும் வளரக்கூடிய இந்த இரண்டு சக்திகளின் மோதல்கள், உலக ஏகாதிபத்தியத்தை முடிவில் மேலும் பலமிழக்கச் செய்வதற்கு வழி செய்யும் என நாம் எதிர் பார்க்கலாம்.

ஒருபுறம் தேசிய விடுதலை இயக்கத்திற்கும், மறுபுறம் உலக சோஷலிசத்திற்கும், முற்போக்கு சக்திகளுக்கும் இடையிலான ஒற்றுமையை வலிமைப்படுத்துவதும், ஒரு புதிய சர்வதேசப் பொருளாதார ஒழுங்கமைப்பிற்காக ஏகாதிபத்திய எதிர்ப்பு முழக்கத்தின் முழுச் செயல்திறனை நிறைவேற்றுவதும் இதில் வெற்றி பெறுவதற்கான ஒரு முக்கியமான நிபந்தனையாகும். ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தின் தனிச்சிறப்பான கடமைகளுடன் பொதுவான ஏகாதிபத்திய எதிர்ப்பு இயல்புடைய, பொதுவான, சிறந்த நீண்டகால இலட்சியங்களையும் இணைப்பதில் அத்தகையதாக, அது தோன்றுகிறது. சர்வதேசப் பொருளாதார உறவுகளை முற்போக்கான முறையில் மறுசீரமைப்பதற்கான பரந்த அளவிலான இயக்கத்தின் முக்கியத்துவம் இருக்கும்.

வி. ஜி. பாவ்லோவ்,

வேட்பாளர். விஞ்ஞானம் (பொருளாதாரம்)
துறைத்தலைவர்
உலகப் பொருளாதாரம் மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய நிறுவனம். விஞ்ஞான கலைக்கழகம், சோவியத் ஒன்றியம்

## இயற்கை வளங்கள் பற்றிய உலகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் சோஷலிச நாடுகளின் பங்கு

ஆற்றல், மூலப்பொருட்கள், உணவு ஆகியவற்றிற்கான வளர்ந்து வரும் தேவைகளை நிறைவு செய்வதன் அவசியத்திலிருந்து தோன்றுகிற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான தேவையை இன்றைய உலகம் எதிர் நோக்க வேண்டியதிருக்கிறது. இந்தப் பிரச்சினைகள் உலகம் முழுதும் பரவியுள்ளன. இன்று உலகின் அனைத்துப் பகுதிகளிலும், இயற்கை வளங்களுக்கான தேவை இது வரை கண்டிராத அளவு உயர்ந்துள்ளது. மிகவும் பயனுள்ள முறையில் பயன் படுத்தக்கூடிய மூலப் பொருட்களின் மொத்தத்தில் அல்லது ஒப்பீட்டில்,குறைவு ஏறத்தாழ எல்லா இடங்களிலும் காணப்படுகிறது. தொழிற்சாலையில் பயன்படுத்துவதற்காக எந்த இடங்களில் தேவைப்படுகிறதோ அந்த இடங்களிலேயே கிடைப்பது வழக்கமாக இருக்கிறது என்று சொல்வதைக் காட்டிலும், அவ்வாறிருப்பது விதிவிலக்காகவே உள்ளது என்று கூறவேண்டும்.

விஞ்ஞான-தொழிற் புரட்சியின் காரணமாக மனித சமுதாயத்தின் மீதும், இயற்கையின் மீதும், நல்ல காரணங்

களுக்காயினும், கெட்ட காரணங்களுக்காயினும் அதனுடைய உட்செயல்களின் செல்வாக்கு உலக முழுமையும் பரவி நிற்கிறது.

எனினும், இயற்கை வளங்களுக்கான தேவைகளை நிறைவு செய்வதன் இன்றியமையா நிலையிலிருந்து தோன்றுகிற பிரச்சினைகள் வேறுபட்ட சமூக அமைப்புடைய சமூகங்களில் வேறு வேறு வழிகளில் வெளிப்படுகின்றன. இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முன் தேவைகளும் முறைகளும், சமூக அடிப்படைகளையும், பொருளாதார அடிப்படைகளையும் சார்ந்தனவாக உள்ளன.

இந்த ஆராய்ச்சிக்கட்டுரையில் மேலே விளக்கிக் கூறப் பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதில் சோஷலிச நாடுகளின் பங்கு என்ன என்று ஆராய்ந்து கூற விரும்புகிறேன். ஏனெனில் உலகப் பொருளாதாரத்தின் வருங்கால வளர்ச்சிக்கான வாய்ப்புகளைப் பற்றிய மதிப்பீட்டிற்கும், சர்வதேச உறவுகளைப் பற்றிய மதிப்பீட்டிற்கும் இது குறைந்த முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல.

இன்றைய உலக வளர்ச்சியில் சோஷலிச நாடுகளின் வளர்ந்து வரும் பங்கு, இயற்கை வளங்கள் தொடர்பான உலகளாவிய பிரச்சினைக்கான தீர்வு காண்பதில் உடன் பாடான செல்வாக்கை வலிமையுறச் செய்வதற்கான புறவய அடிப்படையைத் தந்துதவுகிறது. ஒரு பகுததாராயும் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால், இயற்கை வளங்களுடன் தொடர்புள்ள உலகப் பிரச்சினைகளுக்கான தீர்வை சோஷலிச நாடுகள் எந்த வழிகளில் பாதிக்கின்றன என்பது சிறப்பான முக்கியத்துவம் வாய்ந்தவையாக விளங்கும்; அவைகளுடைய செயல்முறைகளின் பல்வேறு பகுதிகளைத் தனிமைப்படுத்திக் காண இயலும். இம்மாதிரியான பகுதிகள் ஐரோப்பிய சோஷலிச சமூகம், மற்றும் தனி சோஷலிச நாடுகள் ஆகியவற்றையும் உலக முழுமையையுமே உள்ளடக்கியதாக இருக்கும்.

உலக மட்டத்திலும் ஐரோப்பாக் கண்டத்தின் மட்டத்திலும் இயற்கை வளங்கள் பற்றிய பிரச்சினைகளைத் தீர்ப்பதை நோக்கி சோஷலிச நாடுகளால் அண்மை ஆண்டுகளில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவை கீழே கொடுக்கப்பட்டவற்றை உள்ளடக்கியதாக இருக்கின்றன.

— விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றங்கள் பற்றிய செய்திகளைப் பரிமாறிக்கொள்ளுதலும், இயற்கை வளங்களைப் பயன்படுத்தும் கொள்கைகளைப் பற்றிய செய்திகளைப் பரிமாறிக் கொள்ளுதலும், அக்கறை கொண்ட அரசுகளுடன் கலந்து பேசுதலும்

— மண்ணியல் ஆராய்ச்சிகளில் கூட்டுறவும், இயற்கை வளங்களைப் பயன்படுத்துவதில் கூட்டுறவும்-குறிப்பாக நுழைந்து செல்வதற்குக் கடினமானதாக உள்ள நிலப் பரப்புக்களின் இயற்கை வளங்களை ஆராய்வதில் கூட்டுறவும், உலகப் பெருங்கடல்களை ஆராய்வதில் கூட்டுறவும்.

— தேசிய எல்லைகளுக்கப்பால் உள்ள உலகப் பெருங் கடல்களின் அடித்தளத்தில் உள்ள கனிவளங்களைச் சட்ட பூர்வமாக ஆராய்வதும், வெட்டியெடுப்பதும் பற்றிய சர்வதேச ஒழுங்கு முறைகளைப் பற்றிய அமைப்புக் கூட்டம் ஒன்றைக் கூட்டுவதும் அதனைத் தொடர்ந்து நிறைவேற்றுவதில் பங்கு பெறுதலும்.

— ஆற்றல் தோற்றுவாய்களை உற்பத்தி செல்வதற்கும், ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எடுத்துச் செல்வதற்குமான பொருளாயத தொழில் நுட்ப அடிப்படையை விரிவாக்கம் செய்வதில் கூட்டுறவும், புதிய மூலப்பொருட்களைக் கண்டு பிடிப்பதற்கான ஆராய்ச்சியும் மேம்பாடும், அவைகளைப் பகுத்தறிவுக்குகந்த முறையில் பயன்படுத்துவதையும், ஐரோப்பிய ஆற்றல் அமைப்புமுறை ஒன்றை நிறுவுவதையும் உள்ளிட்டவற்றில் கூட்டுறவும்.

— குறைந்த அளவே வீணாக்குவது; வீணடித்தல் இல்லாத உற்பத்தித் தொழில் நுட்பத்தை வளர்ப்பது; அதை நடை முறையில் நிறைவேற்றுவது; முன்னரே நிர்ணயிக்கப்பட்ட பண்புகளையுடைய செயற்கையான பொருட்களைப் படைப்பது ஆகியவற்றில் கூட்டுறவு.

— நிலம், உலகப் பெருங்கடல்கள் ஆகியவற்றின் உயிரியல் உற்பத்தித் திறனை வளர்ப்பதில் கூட்டான செயல் முறைகளிலும், விவசாய உற்பத்திப் பொருட்களைப் பகுத்தறிவுக்குகந்த முறையில் பயன்படுத்துவதிலும் ஈடுபடுவது.

— உலக இயற்கை வளங்களின் சந்தைகளில் ஒரு இயல்பான நிலையைத் தோற்றுவிப்பதற்கான செயல் முறைகள் குறிப்பாக மூலப்பொருட்களுக்கான சர்வதேசிய வாணிபத்திற்கு ஒரு உறுதியான சூழ்நிலையைத் தோற்றுவிப்பதற்கென உருவாக்கப்பட்டு ஐ. நா. வாணிகம் மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தினால் (UNCTAD) மேற்கொள்ளப்பட்ட "இயற்கை வளங்களைப் பற்றிய ஒன்றிணைந்த திட்ட நிகழ்ச்சிகளை" முன்னேறச் செய்ய. (அது குறிப்பாக விலைகள் மிகுதியான ஏற்ற, இறக்க முடியாததாக இருப்பது. உற்பத்தியாளருக்கும், நுகர்வோருக்கும் நியாயமானதாகவும், பயனுள்ளதாகவும் இருக்கக்கூடிய மட்டத்தில் இருக்கும்படிப் பார்த்துக் கொள்ளுதல்)

இயற்கை வளங்களுடன் தொடர்புள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதை மேம்பாடடையச் செய்வதற்காக உருவாக்கப்பட்ட உலக முழுவதிலுமான சோஷலிச நாடுகளின் செயல் முறைகளில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது ஒரு பகுதிக்கு மட்டும் தனியுரிமையளிப்பது மிகவும் கடினமானதாக இருக்கும். ஒவ்வொன்றும் அதனதன் துறையில் முக்கியத்துவம் வாய்ந்ததே. ஆனால் இன்று மிகவும் அதிக அளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பது சோஷலிச நாடுகளும், முதலாளித்துவ நாடுகளும்

பங்குகொள்கிற கடலின் அடித்தளம் பற்றிய பேச்சு வார்த்தையே ஆகும். சர்வதேச பொருளாதாரக் கூட்டுறவுக்கான சூழ்நிலையில் பொதுவான முன்னேற்றம் ஏற்படுமாறு செய்வது, தொழிற் சிறப்புப்பெற்ற நாடுகளுக்கும், வளரும் நாடுகளுக்குமிடையில் உள்ள தொழில் பெருக்க வளர்ச்சியில் உள்ள இடைவெளியைக் குறைப்பது, உலக இயற்கை வளம் பற்றிய பிரச்சினையின் மீது ஒரு பயனுள்ள செல்வாக்கைச் செலுத்துவது.

கடல் அடிநிலத்தைப் பயன்படுத்துவது தொடர்பான விஷயங்களை ஆராய்ந்து பார்ப்பதற்கும், ஒரு சர்வதேச பிரதிநிதித்துவம் உள்ள ஒரு அமைப்பை ஏற்படுத்துவதற்கும் உலகப் பெருங்கடல்களின் சர்வதேச மண்டலத்தில் வெட்டியெடுக்கப்படும் கனிப்பொருட்களைக் கண்காணிப்பதற்காகவும், ஒரு உலக அமைப்பை நிறுவவும் அமைக்கப்பட்டுள்ள திட்டங்களைப்பற்றிக் கூறுவது ஏற்புடையது ஆகும். அந்த சர்வதேச அமைப்பிற்கு மாற்றித்தருவதற்கும் ஒரு குறிப்பிட்ட தொகையை வரியாகச் செலுத்துவதற்கும், ஒத்துக் கொண்டால் அவற்றைப் பயன்படுத்தும் உரிமைகளை—அந்த தேசிய தொழில் நிறுவனங்களுக்குக் கொடுக்கும் அதிகாரமும் உரிமையும் உடையதாக அந்த சர்வதேச அமைப்பு ஆக்கப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பெறப்படும் வருமானம் வளரும் நாடுகளின் இன்றியமையாத் தேவைகளையும், ஆவசியங்களையும் மனதில் கொண்டு, மனித இனம் முழுமையின் நலனுக்காக உலகப்பெருங்கடல்களின் வளங்களைப் பயன்படுத்துவதற்குச் செலவிடப்படுவது எனத் தீர்மானிக்கப்பட்டது. இந்தப் பேச்சு வார்த்தைகளில் சோஷலிச நாடுகள் தீவிரமாகப் பங்குகொண்டன. இம்மாதிரியான உலகப் பெருங்கடல்கள் தொடர்பான ஏகபோகங்களின் கொள்கைகளைத் தடைசெய்வதற்கு ஏற்றாற் போன்ற ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் ஒரு நியாயமான, சமமான அடிப்படையில் உலகப் பெருங்கடல்

களின் வளங்களைப் பயன்படுத்தும் வகையை மேம்பாடடையச் செய்வதற்கும் பேருதவியாக இருந்தது.

பரஸ்பரப் பொருளாதார உதவிக்குழுவின் கட்டமைப்பு விதிகளுக்குள் அடங்கி, இயற்கை வளங்களுடன் தொடர்புடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதில் சோஷலிச நாடுகளின் கூட்டான செயல்முறைகளின் முக்கியமான திசைவழி—1978 இல் நடைபெற்ற பரஸ்பர பொருளாதார உதவிக் குழுவின் 32 வது கூட்டத்தொடரில் தேசிய பொருளாதாரக் கட்டமைப்பை நவீனப்படுத்துவது, சோஷலிச சர்வதேச வேலைப்பகுப்பு முறையைத் திறமை மிக்கதாக ஆக்குவது, விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றத்தின் சாதனைகளையும் திறமையும் முழுதும் பயன்படுத்துவது ஆகியவற்றை ஒன்றிணைத்து முன்னேற்றுவதற்கான திட்டச் செயல் முறைகளின் அடிப்படையில் அது மேற்கொள்ளப்பட்டது.

பரஸ்பரப் பொருளாதார உதவிக் குழுவின் 32-வது கூட்டத் தொடரில் ஏற்றுக் கொள்ளப்பட்ட எரிபொருள், ஆற்றல், மற்றும் மூலப்பொருட்கள் துறையிலான நீண்ட காலத் தனிச்சிறப்புத் திட்டச் செயல்களை நிறைவேற்றுவது குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. இந்தத் திட்டச் செயல் முறைகளின் நோக்கம் பரஸ்பரப் பொருளாதார உதவிக்குழுவிற்குள் நிலவுகிற வேலைப் பகுப்பை அடிப்படையாகக் கொண்ட வாய்ப்புகளைக் கருத்தில் கொண்டு உற்பத்தியின் அமைப்பையும், பரிமாணத்தையும் விரைவு படுத்துவது ஆற்றல் மற்றும் மூலபொருட்களின் அளிப்பு, நுகர்வு ஆகியவற்றைப் பெருக்குவதையும் உள்ளடக்கியதாக உள்ளது. ஆற்றல் மற்றும் பொருட்களைச் சேமிக்கும் தொழில் நுட்பத்தைக் கூட்டாகத் திட்டமிடுவதையும் அவற்றை நடைமுறையில் பயன்படுத்துவதையும் இந்த நடவடிக்கைகள் முன்கூட்டியே எதிர்பார்க்கின்றன. இந்த நடவடிக்கைகள் **சி எம் இ ஏ** உறுப்பினர் நாடுகளின் ஆற்றல் மற்றும் மூலப்பொருட்

களின் தேவைகளினால் தோன்றும் இடர்ப்பாடுகளைக் குறைப்பதற்கு உதவுகின்றன. ஆனால் அதே வேளையில் இந்தப் பிரச்சினைகளுக்கு மனநிறைவு ஏற்படத்தக்க தீர்வு காணவேண்டுமாயின், வேறு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் இவை வெட்டியெடுக்கப்படுகிற எரிபொருளின் அளவைப் பெருக்குவது. குறிப்பாக திடஉருவ எரிபொருட்களின் அளவைப் பெருக்குவது; வெட்டியெடுக்கப்பட்ட மூலப்பொருட்களின் அளவைப் பெருக்குவது எங்கெல்லாம் இலாபகரமான தோற்றுவாய்கள் காணப்படுகின்றனவோ அங்கெல்லாம் அதைப் பயன்படுத்தும் அளவை உயர்த்துவது; எண்ணெய் சுத்திகரிப்பதை மேம்பாடடையச் செய்வது; மிக அதிகமான அளவில் இலேசான பெட்ரோலியப் பொருட்களை உற்பத்தி செய்வது; இன்று உள்ள 50 சதவிகிதத்திற்கும் அதிகமாக, 60 முதல் 65 சதவிகிதத்திற்குக் குறையாமல் மிகுதியாக ஆக்குவது) நாடுகளிடையே உலோகங்களுக்குப் பதிலாகத் தாழ்ந்த தரமுடைய கனிப்பொருட்கள் பகுத்தறிவுக் கொவ்வாத முறையில் மிகுதியாகக் குவிவதைக் கட்டுப்படுத்துவது ஆகியவற்றை உள்ளடக்கியதாய் இருக்கிறது

வளரும் நாடுகளில் இயற்கை வளங்களைப் பதனப்படுத்துவதிலும், அவைகளிடையே நீண்ட காலத்திலும், பெரும் அளவிலும் தொழில் கூட்டுறவை நிறுவுவதிலும் கூட்டாகப் பங்கேற்பது மற்றொரு பயனுள்ள போக்காகும். முன்னேற்றமான தொழில் நுட்பத்தை நடைமுறையில் பயன்படுத்துவதில் ஆர்வமுள்ள மேற்கத்திய முதலாளித்துவ நாடுகளுடன் இம்மாதிரியான தொடர்புகளைச் செய்து கொள்வதும் கைகூடும் செயலாகும்.

பரஸ்பரப் பொருளாதார உதவிக்குழு நாடுகளில் உணவுப் பொருட்களைக் கொடுத்துதவுவதுடன் தொடர்புடைய பிரச்சினைகள் பரஸ்பரப் பொருளாதார உதவிக்குழுவின் 32-வது கூட்டத் தொடரில் மேற்கொள்ளப்பட்ட விவசாயம் மற்றும் உணவுப் பொருள் தொழிலில்

நீண்டகால சிறப்புத் துறைகளில் குறிப்பிடத்தக்க கூட்டுறவு பற்றிய செயல் முறைகளில் கூறப்பட்டுள்ளன. இந்தத் திட்டச் செயல் முறைகள் சி எம் இ ஏ உறுப்பு நாடுகளில் அடிட் படையான உணவுத் தேவைகளை நிறைவு செய்வதற்கு வழி செய்கின்றன. குறிப்பாக ஒவ்வொரு தனி உறுப்பு நாடுகளிலும் முக்கியமான விவசாயப் பொருட்களின் தீவிரமான வளர்ச்சி, அதே வேளையில் அந்தத் திட்ட நிகழ்ச்சிகள் உறுப்பு நாடுகளிடையே பழங்கள், காய்கறிகள், சர்க்கரை, பருத்தி, கால்நடை உணவு, புரோட்டீன் மற்றும் வேறு வகையான உற்பத்திப் பொருட்கள் ஆகியவற்றின் அளிப்புகளில் சிறப்புத் திறமை பெறுவதற்கு வழி செய்கிறது. விஞ்ஞான-தொழில் நுட்பக் கூட்டுறவு சிறப்பான பயிர் வகைகளைப் பயிரிடுவதையும், மிக அதிகமான அளவு உறபத்தித்திறன் கொண்ட கால் நடைகளை வளர்ப்பதையும் விவசாயப் பொருட்களை பதனீடு செய்வதற்காக முன்னேற்றமான தொழில் நுட்ப வளர்ச்சியையும் நோக்கமாகக் கொண்டிருக்கிறது.

சோஷலிசப் பொருளாதார ஒன்றிணைப்பு, குறிப்பாக இயற்கைவளங்களைப் பயன்படுத்துவதில், உறுப்பினர் நாடுகளிடையே நடைபெறும் பரஸ்பர உட்செயல்களில் உள்ள குறிப்பிட்ட சிக்கல்கள் இயல்பாகவே பின்தொடர் கின்றது இது பொருளாதாரக் கூட்டுறவு சூட்சுமத்தை - குறிப்பாக கடன் மற்றும் நிதிமுறைகளில் கூட்டுறவை இன்றியமையாததாக ஆக்குகிறது.

தேசியப் பொருளாதார மட்டத்தில், இயற்கை வளங்கள் பற்றிய பிரச்சினைகளைத் தீர்ப்பதில் சோஷலிச நாடுகளின் முயற்சிகள் தொடக்க நிலையில் மூலவளங்களைப்பற்றியும், அதன் இருப்பிடங்களைப் பற்றியும் ஆராய்வதிலிருந்து, நுகர்வு வழியாக மீண்டும் அவற்றைப் பயன்படுத்துவது ஆகிய முழுச் சுழலையும் உள்ளடக்கியதாக இருக்கின்றன

இன்றைய சூழ்நிலையில், இந்த முயற்சிகள் அனைத்தும் ஒருபுறம் அவைகளைப்பற்றித் தெரிந்த, கையாளக்கூடிய

பரிமாணங்கள் இயற்கை வளங்களின் தன்மைகள் மற்றும் வகைகள் பற்றிய தேசியப் பொருளாதாரக் கட்டமைப்பினுடைய திட்டமிடப்பட்ட நீண்டகால அடிப்படையில திறனைப் பெருக்குவதை நோக்கியதாக உள்ளன. மறுபுறம் உற்பத்தியாளர்களாக சர்வதேச உழைப்பின் பகுப்பில் பயனுள்ள முறையில் பங்கெடுப்பதற்கான வாய்ப்பை நோக்கியதாகவும் உள்ளன.

இயற்கை வளங்களை வெட்டியெடுப்பது, பண்படுத்துவது ஆகியவற்றுடன் நேரடியான தொடர்புடைய துறைகளில் கீழ்கண்ட கடமைகள் மிக அதிகமான முக்கியத்துவம் வாய்ந்தன:

— தொழில் நுட்பத்தை மேம்பாடடையச் செய்வதன் மூலம் கனிவளங்களைக் கண்டு பிடிக்கும் திறனை உயர்த்துவது.

— வெட்டியெடுக்கப்படும் தொழில்களின் வளர்ச்சி விகிதங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது ஆய்வு செய்து கண்டுபிடிக்கப்பட்ட கனிப்பொருள் மற்றும் எரிபொருள் ஆகியவற்றின் வளர்ச்சியின் முக்கியத்துவத்தை உறுதிப் படுத்துவது.

— கனிப்பொருட் படிவங்களின் இருப்புகளைப் பகுத்தறிவுக்குகந்த முறையிலும், ஒன்றிணைந்த முறையிலும் பயன்படுத்துவதை-குறிப்பாக இப்பொழுதேகூட கண்டு பிடிக்கப்பட்டு, வெட்டியெடுக்கப் பட்டுக் கொண்டிருக்கும் கனிப்பொருட்களைப் பயன்படுத்துவதை உறுதிப் படுத்துவது.

— வெட்டியெடுப்பதிலும், பயன்படுத்துவதிலும் மிகக் குறைந்த நஷ்டமே ஏற்படும்படி பார்த்துக் கொள்வதும், குறைந்த செலவையும், வீணடிப்பதைக் குறைப்பதையும் உறுதிப்படுத்தும் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துவதும்.

— விவசாயப் பகுதிகளின் பொருளாதாரப் பயனுள்ள தன்மையைப் பெருக்குவது.

இவை அனைத்தும் மிகுதியான சிக்கல்கள் நிறைந்த கடமைகளாகும். பகுத்தறிவுக்குகந்த விஞ்ஞான அடித்தளத்தைக் கவனமாக உருவாக்குவதையும், கனிப் பொருள் வளத்தைப் பாதுகாப்பதையும், அமைப்புகளை மேம்பாடடையச் செய்வதற்கான ஒன்றிணைந்த முறைகளையும், இயற்கை வளங்களை மிகவும் கவனமாகவும், திறமையாகவும் பயன்படுத்துவதற்காகத் திட்டமிடுவதையும் பொருளாதாரத் தூண்டுதல்களைக் கொடுப்பதையும் இவை இன்றியமையாதவையாக்குகின்றன.

இயற்கை வளங்கள் பற்றிய பிரச்சினைகளில் தேசியப் பொருளாதார மட்டத்திலும், சி.எம்.ஈ.ஏ யின் முழுமைக்குள்ளும் சோஷலிச நாடுகளின் பணிகளின் முக்கியத்துவம் சோஷலிச சமுதாயத்தின் கட்டமைப்பிற்கு அப்பாலும் செல்கிறது குறைந்த செலவில் இவ்வகையான பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும், வளர்ந்து வரும் செலவின் சுமையை சமுதாய அடிப்படையில் நியாயமான முறையில் பகிர்ந்து கொள்வதிலும், உறுப்பு நாடுகள் தனித்தனியாகவும், சோஷலிச சமுதாயம் முழுமையும் பெற்றுள்ள அனுபவமும் உலகம் முழுமைக்கும் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தனவாக விளங்குகின்றன. ஏனெனில், அவ்வகை அனுபவங்கள் பொருளாதார வளர்ச்சியில் இன்றியமையாத காரணிகளாக ஆகிவிடுகின்றன.

**ஏ. ஜி. மிலேய்க் கோவ்ஸ்கி**

*சேய்மை உறுப்பினர், துறைத்தலைவர்*
*பொருளாதாரம் மற்றும் சர்வதேச*
*உறவுகள் பற்றிய நிறுவனம், விஞ்ஞான கலைக்கழகம்,*
*சோவியத் ஒன்றியம்*

# பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரமும், விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியும்

இன்று பூர்ஷ்வாப் பொருளாதார வல்லுநர்கள் வருத்தத்துடன் ஒப்புக் கொள்கிற விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி பற்றிய விளக்கத்தை மார்க்சீய-லெனினிய அடிப்படையில் பகுப்பாய்வதும், சீர்தூக்கிப் பார்ப்பதும், மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகவுள்ளன. உலக மட்டத்தில் இரண்டு சமூக அமைப்பு முறைகளுக்கும் இடையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொருளாதார மற்றும் சித்தாந்தப் போட்டியுடன் நேரடியான தொடர்புடையதாகவும் அது உள்ளது.

இந்த நோக்கின் இன்றியமையாமையும், அதற்கு இன்றியமையாத தேவையான விஷயங்களும் ஏராளமான மார்க்சீய சிந்தனையாளர்களின் குழுக்களின் முயற்சிகள் தேவைப்படுகிற இரண்டு காரணிகளின் விளைவாகும். முதலில் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் மிகுதியான செயல்திறனும் அதனுடைய நீண்ட காலப் போக்குகளை முன்னறிவிப்புச் செய்வதில் உள்ள இடர்ப்பாடுகளும்;

இரண்டாவதாக, தொடக்க நிலையிலேயே உள்ள விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சி உலகப் பொருளாதாரத் தொடர்புகளிலும், உலகப் புரட்சிகர நிகழ்ச்சிப் போக்கிலும் மேலும் மேலும் அதிகமான அளவு அதனுடைய செல்வாக்கைச் செலுத்தி வரும் என்பது தொடர்ந்து நிலவுவதும்.

இரண்டாவது உலகப் பெரும் போரின் போது ஏகாதிபத்தியத்தின் முன்னணிப் படையினரான நாஜிகள் தோல்வியுற்றது, உலகப் புரட்சிகர நிகழ்ச்சிப் போக்கின் சிறப்பியல்பாகவும், உலக வளர்ச்சியில் தீர்மானமான பாத்திரம் வகிக்கிற சக்தியாக விளங்குகிற சோஷலிசத்தின் சிறப்பான வெளிப்பாடாகவும் விளங்குகிறது. அது முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியில் ஒரு புதுப் படிநிலையைப் புகுத்தியுள்ளது. போருக்குப் பிந்தியகாலம் உலகப் புரட்சிகர நிகழ்ச்சிப் போக்கினாலும், அதனுடைய மூன்று உட்பகுதிகளின் உலக சோஷலிசம், தொழிலாளர் இயக்கம், தேசிய விடுதலை இயக்கம் உட்செயல்களாலும், விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் வேகமான வளர்ச்சியினாலும் சிறந்து விளங்குகிறது.

முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி ஆழமாக ஆகிக்கொண்டு வருகிறபோது நிலவுகிற பண்டியல் அடிப்படையிலான புதிய சூழ்நிலைகள் பூர்ஷ்வா அரசியல் பொருளாதார வல்லுநர்களை, போருக்கு முந்தியகாலத்தில் உருவாக்கப்பட்ட கினஸ் உடைய கொள்கைகளைப் பெருமளவுக்கு மறுமதிப்பீடு செய்யுமாறு கட்டாயப் படுத்தியுள்ளது. முதலாளித்துவப் பொதுநெருக்கடியின் முதற்படி நிலையில் பின்பற்றப்பட்ட பொருளாதாரக் கொள்கைகளின் வழக்காறற்றுப் போனவை என்று நிகழ்ச்சிகள் தருகின்ற படிப்பினையைக் கொண்டு வந்திருக்கிற "சோஷலிச சவால்" என்று அழைக்கப்படுகிறவற்றிற்குப் பதில் அளிக்க வேண்டுவது மிகவும் தெளிவாகவே இன்றியமையாததாகவுள்ளது. ஆகவேதான் உலகத்தில் நிகழ்ந்து வருகிற மாறுகிற சூழ்நிலைகளுக்கேற்பவும்

இன்றைய மாற்றங்களுக்கேற்பவும் தங்களுடைய கருத்துக் களைத் தகவமைத்துக் கொள்வதற்கு பூர்ஷ்வா அரசியல் பொருளாதார நிபுணர்களிடையே தோன்றியுள்ள விருப்பத்தால் சிறப்படைந்துள்ள அரசு ஏகபோக முதலாளித்துவம் ஒருபுதிய பொருளாதார யுத்தியைத் தேடியலைந்து வருகிறது. இம்மாதிரியான பழைய கொள்கைகளுக்குப் புத்துருவம் கொடுப்பது, விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியின் விதிகளைப்பற்றிய பொய்யான விளக்கத்தினால் கைகூடும் செயலாகிறது.

விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி பற்றிய இம்மாதிரியான விளக்கங்கள் போர்க் காலத்திலிருந்து இரண்டு பூர்ஷ்வா பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்குவதில் தீர்மானமான பங்கு வகித்துள்ளன. வேகமான பொருளாதார வளர்ச்சி விகிதத்தின் இன்றி யமையாத் தன்மையைப்பற்றிக் கூறிய இந்தக் கொள்கை களில் முதலாவது 1960 களில் மேலோங்கி வளர்ந்திருந்தது; பொருளாதார வளர்ச்சி விகிதம் குறைக்கப்பட வேண்டுமென வலியுறுத்திய இரண்டாவது கொள்கை 1970 களில் சிறந்து விளங்கியது.

இந்தக் கொள்கைகளின் மறுஉற்பத்தி அம்சங்கள் முதலாளித்துவப் பேரியல் பொருளாதார நவீனப் படுத்துதலுக்கு அடிப்படையாக விளங்கின. மேலும் அவை களின் சமூகப் பொருளாதார அம்சங்கள், அரசு-ஏகபோக மூலதனத்திற்கு ஒரு புதிய நொண்டிச்சாக்காகப் பயன் படுத்தப்பட்டன.

இந்தக் கொள்கைகளின் நோக்கம் பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரம் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் தேவைகளை நிறைவு செய்ய முடியும் என்பதையும், மார்க்சீய-லெனினிய சிந்தனைகள் பொருளாதார சமூகப் பிரச்சினைகளுக்கு ஒத்திசைவாக இல்லாத "வழக்காறற்ற பயனற்ற" கொள்கை என்பதையும் கூறவேண்டுமென்ற

பூர்ஷ்வா பொருளாதார விற்பன்னர்களது விருப்பமாகும். இது குறைந்த முக்கியத்துவம் வாய்ந்ததல்ல. மார்க்சிய-லெனினிய சிந்தனைகளில் சில விஞ்ஞானக் கூறுகளின் இன்றியமையாத் தன்மையை ஒத்துக் கொள்ளும் பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்களால்கூட இந்தப்பணி மேற்கொள்ளப்படுகிறது.

எனினும் முதலாளித்துவப் பொது நெருக்கடியின் புறவய விதிகளும், மார்க்சியப் பகுப்பாய்வினால் வெளியிடப்பட்டுள்ள உலகப் புரட்சிகர நிகழ்ச்சிப் போக்கும் பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்தின் இரங்கத்தகுந்த கோட்பாட்டை மறுக்கிற, நம்பத்தகுந்த சான்றாக விளங்குகின்றன.

1960 களில் விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் சூழ்நிலையில் ஏகபோக முதலாளித்துவம் அரசு ஏகபோக முதலாளித்துவமாக மிகுதியான அளவு வளர்ச்சியுற்றது. பொருளாதார வளர்ச்சிக் கொள்கையுடன் தொடர்புடைய "தேசிய இலட்சியங்கள்" என்று அழைக்கப்பட்டவற்றை வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் பகுதியாக நிறைவேற்றுவதற்கான முன் தேவைகளைத் தந்துதவியது.

ஆனால் சுழல் முரண்பாடுகளை வெல்ல முடியும் என்ற மாயையைப் பொருளாதார வளர்ச்சிக் கோட்பாடு உண்டாக்கியது ஏன்?

முக்கியமாக இது புதிய பொருட்களை உற்பத்தி செய்வதுடனும் புதிய விற்பனை யுத்திகளைப் புகுத்துவதுடனும் தொடர்புடைய ஏகபோக போட்டி மூலம் சந்தைகளை விரிவு படுத்துவதற்கான வாய்ப்புகளை விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சி தந்துதவியது என்ற காரணத்தால்தான், தங்களுடைய காலனிகளை இழந்துவிட்டிருந்தபோதிலும், ஏகாதிபத்திய நாடுகள் தங்களுடைய நாட்டின் எல்லைக்குள் மட்டுமல்லாமல் மேல்நாட்டு முதலாளித்துவ நாடுகள் அனைத்திலும் ஏகாதிபத்திய

ஒன்றிணைப்பின் அடிப்படையில் தோன்றியிருந்த புதிய சர்வதேச வேலைப்பகிர்வின் விளைவாக, மூலதன மறுஉற்பத்தியைத் தூண்டுவதற்கான புதிய வழிகளைக் கண்டிருந்தன.

1960 களில் முதலாளித்துவ நாடுகளில் அனைவருக்கும் வேலை வாய்ப்பு என்ற மாயை, ஏற்ற கல்வித்தரம் பெற்றிராத தொழிலாளர்களின் பஞ்சத்தால்தான் தோற்று விக்கப்பட்டது. அதே வேளையில் உண்மை வருவாயில் உயர்வுகள் பொருளாதார வளர்ச்சிக் கொள்கைகள் உழைக்கும் மக்களின் சார்பாக வருவாய்களை ஒரு குறிப்பிட்ட மட்டத்திற்குக் கொண்டுவரும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தின.

விஞ்ஞான - தொழில் நுட்ப முன்னேற்றங்களின் மூலம் தொழில் மறுஉற்பத்தியின் சுழல் விதிகளை வெல்வது கைகூடும் என நம்பி எழுந்த இந்தப் பொருளாதார வளர்ச்சிக் கோட்பாட்டின் குறுகிய நோக்கு, முதலாளித்துவத்தின் அடிப்படை விதியான - உபரிமதிப்பு விதியைப் புறக்கணித்ததில்தான் அடங்கியுள்ளது. முதலாளித்துவ அரசுகளால் பின்பற்றப்பட்ட வருமானங்கள் தொடர்பான கொள்கைகள் அவற்றின் வர்க்க இயல்புகளை மிக அதிக அளவில் வெளியிடத் தொடங்கின. மேலும் அது முதலாளித்துவத்தின் மோதல்களுக்குள்ளாகிற முரண் பாடுகள் தீவிரமடைவதற்குத் தவிர்க்க முடியாதவாறு வழி செய்தது. இது 1960 களின் பின்பகுதியில் ஏற்பட்ட சமூக அரசியல் நெருக்கடிகளில் தெளிவாக வெளிப்பட்டது.

ஆனால் 1930 களிலிருந்து முதலாளித்துவ அமைப்பு முறையைப் பாதித்த நெருக்கடிகளிலெல்லாம் மிகவும் மோசமான நெருக்கடியான 1970 களின் மத்தியில் நிகழ்ந்த நெருக்கடி, முடிவாக பொருளாதார வளர்ச்சிக் கொள்கையின் நற்பெயரைக் கெடுத்தது. பூர்ஷ்வா அரசியல் பொருளாதார அறிஞர்கள் "வளர்ச்சிப் பைத்திய"த்தை

மறுப்பதை அடிப்படையாகக் கொண்டு குறைந்த வளர்ச்சி விகிதத்திற்குச் சாதகமான ஒருகொள்கையை உருவாக்கு வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர். இவை "வாழ்க்கையின் பண்பியல்புகளை" உறுதிப்படுத்துவதற்கான நிபந்தனை களைப் படைக்கும் எனக் கருதினர். இந்தக் கொள்கை புதிய சூழ்நிலைப்பாதுகாப்புப் பொருளாதார அமைப்பு முறை ஒன்று செயல்படுவதை எதிர் நோக்கியது. மேலும் அது உற்பத்திக் கட்டமைப்பையும், நுகர்வுக் கட்டமைப்பையும் மட்டுமன்றி சர்வதேச வேலைப் பகுப்பு முறையையும் புதுப்பிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியுடன் தொடர் புடைய தொழில் மறுஉற்பத்தியின் புறவயப் போக்குகளில் எது மெதுவான வளர்ச்சிப் போக்கின் மேம்பாட்டிற்குக் காரணமாயிருந்தது?

முதலில் நம் நிலவுலகில் உள்ள இயற்கை வளங்களின் உண்மையான மட்டத்தைப் பற்றிய கருத்துக்களில் ஒரு மாற்றமும் ஏற்பட்டது. அதனுடைய சூழல் சமநிலையையும், புவியியல் பொருட் சமநிலையையும் பாதுகாக்க வேண்டிய தன் அவசியத்தையும் மக்கள் உணர்ந்தனர். நம் நிலவுலகைப் பற்றிய இந்தப் புதிய கண்ணோட்டம் மனித இனம் முழுமையைப் பற்றிய கண்ணோட்டத்தை மாற்றியுள்ளது. அது விஞ்ஞான வளர்ச்சியின் விளைவாலும், விஞ்ஞானி களிடையே ஏற்பட்டுள்ள சர்வதேசக் கூட்டுறவாலுமேதான். ஆராய்ச்சி தொடர்பான திட்டச் செயல்களில் கம்ப்யூட்டர் களைப் பயன்படுத்துவது குறைந்த அளவேயாக இருப்பினும், பூமியின் மீதுள்ள நிலப்பரப்புகளையும், அதில் உள்ள நீர் வளத்தையும் பண்பியல் அடிப்படையில் சரியாக மதிப்பீடு செய்வதைக் கைகூடும் செயலாக ஆக்கியுள்ளது. மேலும் அது வாயு மண்டலத்தின் செயல் திறன் பற்றியும் அது வெளியுடன் கொண்டுள்ள உட்செயல்கள் பற்றியும் படித்தறிவதற்கு உதவியாக உள்ளது. இப்பொழுது மனிதன் இயற்கை மீது ஆதிக்கம் செலுத்துகிறான் என்ற பழைய நம்பிக்கை

சூழ்நிலைப் பாதுகாப்புக் கோட்பாடுகளுக்கும், விதிகளுக்கும் முரணானதாகவுள்ளது என்பது எந்த அறிவுள்ள மனிதனும் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது மனித இனத்தை எதிர்நோக்கும் முக்கியமான கடமை அதனுடைய ஆழ்ந்த அறிவுத்திறனை இப்பொழுது இந்த நிலவுலகில் கிடைக்கும் இயற்கை வளங்களைப் பகுத்தறிவுக்குகந்த முறையில் பொருளாதார நலன்களுக்காகப் பயன்படுத்துவதோடு மட்டுமல்லாது, அந்த இயற்கை வளங்களைப் பெருக்குவதற்கான செயல்களை மேற்கொள்வதும் ஆகும்.

விஞ்ஞான - தொழில் நுட்பச் சூழ்நிலையில், குறிப்பாக மனிதன் வாழ்கின்ற இடங்களின் மீது அவனுடைய அழிவுச் செயல்கள் தோற்றுவித்துள்ள விளைவுகளே நம் கண்ணுக்குத் தெற்றென விளங்குகின்றன.

முதலாளித்துவ உலகிற்கு உண்மையான அரசியல் பொருளாதாரப் பிரச்சினைகளை இந்தச் சூழ்நிலைப் பாதுகாப்பு நெருக்கடி தோற்றுவித்துள்ளது. மறு உற்பத்தியில் உள்ள முரண்பாடுகள் தீவிரமடைந்துள்ளதாலும், பொருளாதார வளர்ச்சிக் கொள்கை மிகுதியாக ஆதரிக்கப்பட்டுவந்த 1960 களில் தோன்றிய வர்க்கப் போராட்டத்தின் புதிய உருவங்களின் வளர்ச்சியாலும் இது தீவிரமடைந்தது. மனிதனையும், இயற்கையையும் இரக்கமற்ற வெறியுடன் சுரண்டுவதற்கு வழிசெய்து பொருளாதார வளர்ச்சியை முதலாளித்துவம் தனிச்சிறப்பான முறையில் சிதைத்தது. மிகுதியான அளவு தூய்மைக் கேட்டினால் வாழ்க்கைச் சூழ்நிலைகள் வேகமாக மோசமடைந்துவந்த "பெருநகரங்களின் நெருக்கடி," முதலில் தெளிவாக வெளிப்பட்டது. உழைக்கும் மக்களுக்குச் சூழ்நிலைப் பாதுகாப்பு பற்றிய ஒருகொள்கை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக ஆயிற்று. மேலும் அது இல்லாமல் இருப்பது பெருநகரங்களிலிருந்த சேரிகளில் சமூக அமைதியின்மைக்கு மிக முக்கியமான காரணங்களில் ஒன்றாக இருந்தது.

எனினும் விரைவில் இந்தச் சூழ்நிலைப்பாதுகாப்பு இயக்கம் பெரும் நகரங்களின் எல்லையைக் கடந்து சென்றது. ஏகாதிபத்தியத்தின் கெடுபிடிப்போர் யுத்திகளின் விளைவாக அனைத்து மட்டங்களிலும் மிகு தியாக்கப்பட்ட சூழ்நிலைத் தூய்மைக்கேட்டினாலும், உலகத்தின் பல பகுதி களில் கதிரியக்கத்தின் மட்டத்தை உயர்த்திய அணு ஆயுதப் பெருக்கப் போட்டியுடன் தொடர்புள்ள அதனுடைய சோதனைகளைத் தொடர்ந்தும் அது மேலும் பெருகியது. மேலும் அணுசக்தி நிலையங்களைக் கட்டுவதில் தனியார் கொண்டிருந்த கட்டுப்பாடற்ற ஏகபோகமும், சூழ்நிலைப் பாதுகாப்பை முன்னேற்றுவதற்கு ஏதும் செய்யவில்லை. அதன் விளைவாக பரம்பரையை உள்ளிட்ட உயிரியலையும் பாதிக்கக்கூடிய கதிரியக்கப் பொருட்கள் வெளியேற்றப் படுவதனால் ஏற்படும் தூய்மைக்கேடு வருங்கால சந்ததியினருக்கு ஒரு பெரும் பயங்கரமான விளைவைத் தோற்றுவிக்கக்கூடும்.

தொழிலாளி வர்க்கத்தின் நிர்ப்பந்தத்தின் விளைவாகவும், பொது மக்களின் ஜனநாயக இயக்கத்தின் விளைவாகவும், முதலாளித்துவ நாடுகளில் உள்ள அரசுகள், சூழ்நிலை கேடுறுவதைக் கட்டுப்படுத்துவதற்கான கண்டிப்பான நடவடிக்கைகளைப் புகுத்த வேண்டியது இன்றியமையமையாததாயிற்று. மேலும் தொழில் நிறுவனங்கள் அந்தப் பாதுகாப்புகளை நிறைவேற்று வதற்கான தொழில் நுட்பத்தைப் பின்பற்றுவது இன்றியமையாதது என வலியுறுத்தவும் வேண்டியது இன்றியமையாததாயிற்று. இவ்வாறு சூழ்நிலைப் பாது காப்புக் கொள்கை, உற்பத்தித்திறன் குறைந்த துறைகளில் அதிகப் பணமுதலீடு செய்வதற்கு வழி செய்தது. இது மொத்த தேசிய உற்பத்தியின் வளர்ச்சி விகிதங்களைக் குறைப்பதை இன்றியமையாதது ஆக்கியது.

சூழ்நிலைப் பாதுகாப்பிற்குத் தேவையானவற்றை நிறைவேற்றுவதற்கு அதிகரிக்கும் செலவுத் தொகை ஏகபோகங்களுக்குச் சப்பைக் கட்டுபவர்களால், தேசிய

பொருளாதாரத் திறமையைக் குறைப்பதற்கான முக்கியமான காரணியாகக் கருதப்படுகிறது. தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகத் தாங்கள் நடத்தும் போராட்டத்தின் விளைவு எனக் கூறப்படும் வேலையில்லாத் திண்டாட்டத்தால் தாங்கள் பாதிக்கப்படாமலிருக்க உழைக்கும் மக்கள் விரும்பினால் சீரான சூழ்நிலைப் பாதுகாப்பை உருவாக்கும் முயற்சியின் பெரும் பகுதிச் சுமையை அந்த உழைக்கும் மக்களே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று அவர்கள் வற்புறுத்துகிறார்கள். அவர்களுடைய உண்மையான வருமானங்களைக் குறைப்பதால், அவர்களுக்கு வாக்குறுதியளிக்கப்பட்ட ''வாழ்க்கையின் பண்பியல் தரத்'' தில் மேம்பாடு ஏதும் ஏற்படுமென்று தோன்றவில்லை. அதேவேளையில் சூழ்நிலைப் பாதுகாப்பினால் பெரிய நிறுவனங்களுக்கு ஏற்பட்ட செலவுத் தொகை எந்தவகையிலும் அவற்றின் இலாபத்தைப் பாதிக்கவில்லை என்பதைத் தொழிலாளிவர்க்கத்திடம் மறைப்பது மேலும் மேலும் அதிகப்படியான இடர்ப்பாடுடையதாக உள்ளது. இவ்வாறாக மெதுவான பொருளாதார வளர்ச்சி விகிதம் பற்றிய கோட்பாடு அதற்கு முன்னர் நிலவி வந்த வளர்ச்சி பற்றிய கோட்பாட்டைப் போலவே வர்க்க முரண்பாடுகளின் மோதல்களைக் குறைப்பதற்கும, அசுர ஏகபோகக் கம்பெனிகளின் இலாப விகிதங்களை மிகுதியாக உயர்த்துவதற்கான வழிகளைத் தேடுவதற்குமான மற்றொரு நாடகமேயாகும்.

இரண்டாவதாக. பூர்ஷ்வா அரசியல் பொருளாதார நிபுணர்கள் முதலாளித்துவ உலகம் முழுமையிலும், தொழில் துறை மறுஉற்பத்தியில் நிலவுகிற முரண்பாடுகள் தீவிரமடைவதன் விளைவாகத்தான் இந்தக் குறைவளர்ச்சி என்ற கோட்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளனர். இவ்வாறு முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி ஆழமானதன் மூலமே இந்த முரண்பாடுகளிடையேயான மோதல்கள் தீவிரமடைந்தன. இந்தப் பொதுநெருக்கடியே தேசிய விடுதலை இயக்கத்தின் வெற்றிகளுடன் நேரடியான

தொடர்புடையதாக விளங்குகிறது. இந்த தேசிய விடுதலை இயக்கத்தின் வெற்றியின் விளைவாக, வளரும் நாடுகளின் மூலப்பொருள் வளங்களையும், ஆற்றல் வளங்களையும் பயன்படுத்தும் ஏகபோக உரிமையை ஏகாதிபத்தியம் இழந்து விட்டது 1970 களின் தொடக்கத்தில் எண்ணெய் விலையில் ஏற்பட்ட நான்கு மடங்கு உயர்விலும், அதைத் தொடர்ந்து வந்த பிறவகையான எரிபொருட்களின் விலை உயர்விலும் இந்த உண்மை உறுதிப்படுத்தப்பட்டது. முந்திய காலனி நாடுகளிலிருந்து குறைந்த விலையில் மூலப் பொருட்கள் கிடைத்துவந்த சகாப்தம் முற்றுப் பெற்றது. ஏகாதிபத்திய நாடுகளில் வளர்ச்சிக்கான கொள்கைகளை நடைமுறையில் செயல் படுத்துவதற்கு வாய்ப்புகளே இல்லாமல் ஆகியது. அதன் விளைவாக பூர்ஷ்வா அரசியல் பொருளாதார நிபுணர்கள் வளரும் நாடுகளில் "தொழில் அடிப்படையிலான புதிய காலனி ஆட்சிமுறை"யைப் பின்பற்றுவதன் அடிப்படையில் பரந்த முதலாளித்துவ வளர்ச்சிக்கான யுத்தியை மேம்பாடடையச் செய்தனர். இந்த யுத்தியின் சாரம் விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றத்தைப் பயன்படுத்தி வளர்ந்த நாடுகளிலிருந்து வந்த இலாப வீழ்ச்சிப் போக்கை வெல்வதற்கு முயல்வதில் தான் அடங்கியுள்ளது.

நுண்மின்னணுவியல் துறையில ஏற்பட்டுள்ள இன்றைய முன்னேற்றங்கள் உற்பத்திப் பொருட்களைத் தாங்கி விரைந்து செல்லும் பட்டைகளிலும், உற்பத்தி வெளியேறும் வரிசையிலும் தேவைப்படும் ஆட்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கான தானியக்க அலகுகளைக் கட்டுவதைக் கைகூடும் செயலாக ஆக்கியுள்ளன. மேலை நாடுகளின் பெருந்தொழில் நிறுவனங்களின், பெரும் கூடங்களுக்கும் சிறு தொழிற்கூடங்களுக்கும் புதிய இயந்திரங்களின் சிக்கல் நிறைந்த அமைப்புகளை நன்கு அறிந்திருக்கிற, அவற்றை எவ்வாறு பழுது பார்ப்பது என்பதையும் அறிந்திருக்கிற, மிகுந்யான கல்வித் தகுதியுள்ள தொழிலாளர்களே தேவைப் படுகின்றனர். பெரிய தொழில் நிறுவனங்கள், இயக்குநர்கள்

ஆகியோரின் கருத்துப்படி, இந்தத் தானியங்கிகள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதில்லை என்பதே முக்கியமான லாபம் ஆகும். மேலும் அவை ஒரு நாளில் 24 மணி நேரமும் தங்களின் உற்பத்தித்திறனைப் பயன்படுத்த முடியும்; நுண்மின்னணுவியல் மூலம், முதலாளித்துவ நாடுகளில் உள்ள தொழில்களின் பெரும் பகுதியைத் தானியக்கம் கொண்டதாக ஆக்குவதோடல்லாமல் உற்பத்தித்திறனற்ற துறையிலும், இதைப் புகுத்த முடியும் என்பதை வைத்துக் கொண்டு பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்கள் சூதாடுகிறார்கள். அந்த நாடுகளின் சூழ்நிலைப் பாதுகாப்பு மற்றும் பொருளாதாரக் கொள்கையின்படி விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சியின் மீது ஒரு ஏகபோகக் கட்டுப்பாட்டைப் பெற்றுள்ள தொழிற்துறையில் சிறந்து விளங்கும் முதலாளித்துவ நாடுகள் மிகுதியான அளவு நகர்மயமாக்கப்படுவதன் விளைவாகவும், சூழ்நிலை அழிவின் காரணமாகவும் எழும் தங்களுடைய பொருளாதாரத்தின் ஏற்றத் தாழ்வுகளை வெல்வதோடு மட்டுமல்லாமல், வளரும் நாடுகளின் பிற்பட்ட தன்மையை ஒழித்துக்கட்டும் பிரச்சினையை வேகமாகவும், பயனுள்ள முறையிலும் தீர்த்திருக்கவேண்டும். வளரும் நாடுகளில் வழக்கற்றுப் போன கன்வேயர்களையும், உற்பத்தி வரிசைகளையும் அமைத்து இதை சாதிக்க முடியும் எனக் கருதப்படுகிறது. இந்த அமைப்பைக் கையாளக் கற்றுக் கொள்வதற்கு அந்த நாட்டுத் தொழிலாளர்க்குக் குறைந்த கால அவகாசமே போதும்

''தொழில் அடிப்படையிலான புதிய காலனி ஆட்சி முறை'' பற்றிய கருத்து பெருமளவு சூழ்நிலையை மாசுபடுத்தும் தொழில்களை வளரும் நாடுகளுக்கு மாற்றிவிட முடியும் எனக் கருதுகிறது. இம்மாதிரியான வெளிநாடுகளில் உள்ள பன்னாட்டுக் கார்ப்பரேஷன்களால் தோற்றுவிக்கப்படும் தொழிற்பேட்டைகள் முதலாளித்துவ முறைக்கு ஒரு புது வாழ்வளித்து, அதை நிலையான தன்மையுடையதாக ஆக்குமென அதைத்திட்டமிட்டவர்கள் கருதுகிறார்கள்.

இந்தச் சூழ்நிலைப் பாதுகாப்புப் பொருளாதாரக் கோட்பாட்டைத் தோற்றுவித்த பூர்ஷ்வா சிந்தனையாளர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக, இந்தக் கொள்கை எதிர்பாராமலும், படுமோசமாகவும் தோல்வி கண்டது. குறிப்பாக பன்னாட்டு இணையங்கள், பத்திரமாகவும், உறுதியாகவும் தங்களை நிலை நிறுத்திக் கொண்டிருப்பதாகக் கருதப்பட்ட இளம் நாடுகளில் தோல்வி கண்டது. இவ்வாறாக, உதாரணமாக, எத்தியோப்பியாவிலும், ஈரானிலும் நிலப்பிரபுத்துவ மன்னராட்சி முறை வலிமை வாய்ந்த மக்களின் எழுச்சியின் விளைவாக அழிந்தொழிந்தது.

தன்னுடைய சூழ்நிலைப் பாதுகாப்பு-பொருளாதாரக் கொள்கை என்ற முப்பட்டைக் கண்ணாடி வழியாக உலக வளர்ச்சியின் போக்கை நோக்குவதன் மூலம், பூர்ஷ்வா அரசியல் பொருளாதார நிபுணர்கள் மிகப் பெரும் தவறான மதிப்பீடு செய்திருந்தனர். ஏகபோக இலாபங்களைப் பெருக்குவதற்காக மட்டுமே விஞ்ஞான தொழில் நுட்ப சாதனைகளைப் பெருமளவிற்குப் பயன்படுத்துகிற ஆளும் வர்க்கம் உள்ள நாடுகளில் வர்க்கப் போராட்டம் தீவிரமடையுமெனக் கூறுகிற முதலாளித்துவத்தின் அடிப்படை விதியின் உண்மையை அவர்கள் மெய்யாகவே அறிந்து கொள்ளவில்லை. வரலாற்று இயல் பொருள் முதல் வாதத்தின் விதிகளால் ஆட்சி செய்யப்படுகிற - அதாவது புராதனப் பொது உடைமை சமுதாயமும், அடிமை உடைமை சமுதாயமும், 20-வது நூற்றாண்டுவரை தப்பிப் பிழைத்திருந்த நிலப்பிரபுத்துவ சமுதாயமும் முடிவில் அழிந்ததைப் பற்றிக் கூறுகிற, வரலாற்றுப் பொருள் முதல் வாத விதிகளால் ஆட்சி செய்யப்படுகிற வளரும் நாடுகளின் நீண்டகால பரிணாம வளர்ச்சிக்கான வாய்ப்புகளைப் பற்றியும் அவர்களால் அறிந்துகொள்ள இயலவில்லை.

**1974-1975** இல் ஏற்பட்ட நெருக்கடி பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரக் கொள்கைகளின் முக்கியமான சிந்தனை

முறைகளை-கீனஸ் உடைய கொள்கைகள்-பணவியல் முறை-சமூக நிறுவனங்கள் தொடர்பான கோட்பாடுகள் ஆகியவற்றை மறுமதிப்பீடு செய்வதை இன்றியமையாததாக ஆக்கியது. பெருமளவு தகவல்களை விரைவாக ஒன்று சேர்த்துத்தரக்கூடிய திறன்படைத்த கம்ப்யூட்டர்களைத் தன்னுடைய படைக்கலன்களாகப் பொருளாதார இயலுக்குத் தந்துள்ள விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி, தொழில் மறுஉற்பத்திச் செயல்முறையின் மீது பயனுள்ள செல்வாக்கைச் செலுத்தி அதில் தோன்றக்கூடிய எந்த வகையான ஒரு சீரற்றத் தன்மையையும் விரைவாகச் சீர்செய்யும் திறமையைப் பெருமளவில் உயர்த்தியிருக்கிறது என்பதைக் காட்டுவதுதான் இந்தச் சிந்தனைமுறை அனைத்தின் தனிச்சிறப்பான இயல்பு ஆகும். முதலாளித்துவம் அதனுடைய சொந்தத்திட்ட முறைகளின் மூலம் மார்க்சீயத்தை எதிர்த்து நிற்க முடியும் என்று பூர்ஷ்வாக்கள் கொண்டுள்ள நினைப்பு இந்தக் கண்ணோட்டத்துக்கு அடிப்படையாகும்.

கீனஸ்க்குப் பின் வந்தவர்கள் அவரைக் குறைகூறும் அதே வேளையில் அவருடைய உண்மையான மூலக் கருத்துக்கள், அவருடைய கண்ணோட்டம் போன்ற பரந்த கண்ணோட்டமில்லாத அவரது சீடர்களால் சிதைக்கப்பட்டு விட்டன எனக்காட்டி அவருடைய கருத்துக்களைப் புதுப்பிக்க முயல்கிறார்கள். இறுதிநிலை முறையை மறுத்து விட்டு அதே வேளையில் மார்க்ஸ் தன்னுடைய மூலதனத்தின் முதல் பகுதியில், ரிக்கார்டோவின் கோட்பாடுகளை எவ்வாறு பியரோ ஸ்ராஃபா எவ்வித மாற்றமும் இல்லாமல் கையாண்டாரோ, அதைப் போலவே மார்க்சும் கையாண்டுள்ளார், எனவே அது எந்தப் பயனுமில்லாதது ஆகும் என்று காட்டவும் முயல்கின்றனர்.

புதிய மரபு வழிக் கொள்கை அல்லது புதிய மிதவாதப் போக்குகளின் பிரதிநிதிகளாக விளங்கும் பணவியலாளர்கள் அரசு பொருளாதாரத்தில் மிகக்குறைந்த அளவே தலையிட

வேண்டும் என உறுதியாகக் கூறுகின்றனர். அதனால் பன்னாட்டு இணையங்கள் சந்தையின் உண்மையான தேவைகளுக்கு ஒத்திசைவாக, சுதந்திரமாக வளர்வதற்கும், தனிநாடுகளுக்குள் அவற்றின் வளர்ந்து வரும் செல்வாக்கைப் பயன்படுத்துவதோடு மட்டுமல்லாமல், உலக முதலாளித்துவப் பொருளாதார முழுமையிலும் பயன் படுத்துவதற்கும் சுதந்திரமானவைகளாக இருக்கும்.

சமூக-நிறுவன சிந்தனைப் போக்கு, விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியை தொழில் துறையைப் பின் தொடரும் ஒரு சமுதாயத்திற்கு மாறும் நிலையின் மூலம் முதலாளித்துவ அமைப்புக்கு மேன்மைதரக்கூடிய ஒன்றாகக் காண்கிறது. அந்தச் சமுதாயத்தில் பொருளாதாரத்தின் அளவுகோல் என்பது மொத்த தேசிய உற்பத்தியல்ல. ஆனால் 'வாழ்க்கையின் தரம்'' என்பதே அந்த அளவுகோலாகும்.

மார்க்சீய சிந்தனையோடு தங்களுடைய கருத்துக்களின் மோதலின் போது மறுஉற்பத்தியின் விகிதாச்சாரம் பற்றிய பிரச்சினை தொடர்பாகவும், சந்தைச் சமநிலை தொடர்பாகவும், பூர்ஷ்வா அரசியல் பொருளாதார சிந்தனையாளர்கள் தங்களுடைய சொந்த விளக்கங்களை முன்வைக்கும்போது புரட்சிகரமான மார்க்சீய சிந்தனையில் அடிப்படையானது எது என்பதைக் காணாதுவிட முயல்கிறார்கள். எங்கெல்ஸ் குறிப்பிட்டது போல வரலாற்றுப் பொருள் முதல் வாதமும், உபரிமதிப்புவிதியும் தான் மார்க்சின் மிக முக்கியமான கண்டுபிடிப்புகள் ஆகும். இந்த விதிகள் முதலாளித்துவ மறுஉற்பத்தியின் அனைத்து முரண்பாடுகளையும் விளக்குகின்றன. சப்பைக் கட்டுக் கட்டும், கீழ்த்தரமான அரசியல் பொருளாதார சிந்தனையாளர்களின் எந்த விதமான தந்திரக் கண்டு பிடிப்புகளும் இவைகளைத் தவிர்த்துவிட முடியாது.

முதலாளித்துவப் பொருளாதாரத்தைப் பற்றிய ஒரு ஆழ்ந்த விஞ்ஞானப் பகுப்பாய்வுக்கு அதனுடைய எதிரெதிரான முரண்பாடுகளைக் கருத்தில் கொள்வது

இன்றியமையாதது. இது தொடர்பாக புக்காரின் உடைய **பொருளாதாரமும் மாறுகாலமும்** என்ற நூலின் பக்கங்களின் ஓரத்தில் எழுதப்பட்ட லெனினுடைய குறிப்புகள் மிகவும் பயனுள்ளவையாகும். முதலாளித்துவத்தை எதிரெதிரான முரண்பாடுகள் கொண்ட ஓர் அமைப்பு முறை என புக்காரின் வரையறை செய்திருப்பதைப் பற்றி அந்த நூலின் பக்கத்தின் ஒரு ஓரத்தில் "மிக அதிகமான அளவில் பிழையானது. எதிரெதிரானது என்பதும் முரண்பட்டது என்பதும் வேறுவேறானவை. முதலாவது சோஷலிசத்தின் கீழ் மறைந்து விடுகிறது, இரண்டாவது சோஷலிசத்தின் கீழும் நிலவுகிறது"[1] என்று லெனின் எழுதினார்.

முதலாளித்துவத்தின் கீழ் சமரசப் படுத்தக்கூடிய முரண்பாடுகளின் தற்காலிகத் தீர்வுகள், சமரசப்படுத்த முடியாத முரண்பாடுகளை நீக்குவதற்கு வழி செய்யாது, முதலாளித்துவத்தின் அடிப்படை விதியான உபரிமதிப்பு விதியினால் தோற்றுவிக்கப்படுகிற வர்க்கப் போராட்டம், பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்தினால் பரிந்துரைக்கப் பட்டதுபோல, அரசு ஏகபோகப் பொருளாதாரக் கொள்கையை முடிவில் நிர்ணயிக்கிறது. இந்தக் கொள்கை மூலதனத்தின் எதேச்சாதிகாரத்தை நிறுவுவதற்கான இரண்டு முறைகளால்-வன்முறை-சீர்திருத்தம்-நடைமுறைப் படுத்தப்படுகிறது. இந்த இரண்டு முறைகளும் பல்வேறு உருவங்களை மேற்கொள்கின்றன. சரி நுட்பமாக மீண்டும் தோன்றாத வரலாற்றுச் சூழ்நிலைகளால் அவை ஆளப் படுகின்றன. பொருளாதாரத்திலும், சமூக வாழ்விலும் கட்டுப்படுத்துவதை நிறைவேற்றுவதில், அரசு ஏகபோக முறையால் பயன்படுத்தப்படுகிற முறைகளின் தனித்தன்மை யையும், மொத்த வகைகளின் பொதுவான போக்குகளையும் விஞ்ஞான யூகச்சுருக்கங்களின் அடிப்படையில் வெளிப்படச் செய்வதில்தான் மார்க்சீய பொருளாதார சிந்தனையின் கடமையுள்ளது. இந்தப் போக்குகள் பழைய பொருளாதார விதிகளின் செயல் முறைகளைப் பிரதிபலிக்கின்றன. மேலும் அவை விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியினால் தூண்டப

பட்ட வரலாற்று வளர்ச்சியை வழக்கத்திற்கு மாறாக விரைவு படுத்துவதனால் சிறப்புடையதாக விளங்குகிற கால இடைவெளியில், முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்திற்கு மாறு காலத்தில், இன்று தவிர்க்க முடியாததாகவுள்ள புதிய விதிகளின் வளர்ச்சியையும் பிரதிபலிக்கின்றன.

போர் தொடர்பான தொழில்களின் வளர்ச்சியின் மீது விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் விளைவு நம்முடைய பொருளாயத வாழ்விற்கு மிகவும் இன்றியமையாத பிரச்சினைகளை முன்னால் கொண்டு வந்திருப்பதோடு மட்டுமல்லாமல் உயிரியல் வகையான மனித இனத்தின் வாழ்க்கையையே ஒரு பிரச்சினையாக ஆக்கியுள்ளது மேலும் நம்முடைய மூதாதையர்களின் பல பரம்பரையினர் செய்த முயற்சிகளாலும், தியாகங்களாலும் படைக்கப்பட்ட இந்த நாகரிகத்தை நிலை நிறுத்துவது என்ற பிரச்சினையையும் முன்னால் கொண்டு வந்துள்ளது. இலாபத்திற்காக குலைநடுங்கும் கொடிய குற்றங்களைக் கூடச் செய்யத் தயாராகவுள்ள முதலாளிகளின் விருப்பத்தை பயங்கரமான இராணுவத் தொழில் தொகுதி அமைப்புகளைக் கட்டுவதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். அது விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதையும் அதனுடைய முக்கியமான போக்குகளை நிர்ணயிப்பதையும், அரசின் மூலமாக தன்னுடைய கட்டுப்பாட்டிற்குள்ளாகவே வைத்துக் கொள்கிறது. இராணுவத் தொழில் தொகுதிகளால் நடத்தப்படுகிற ஆயுதப் பெருக்கப் போட்டி பற்றிய கண்ணோட்டம்தான் இன்று முக்கியமான அளவு கோலாக விளங்குகிறது. அதுவேதான் பூர்ஷ்வாக்களின் அரசியல் பொருளாதார நிலைகளை வெளிப்படுத்துகிறது. அந்த அளவுகோல் பூர்ஷ்வா பொருளாதார சிந்தனைகளின் பல்வேறு நீரோட்டங்களைப் பற்றிய பகுப்பாய்விற்குப் பயன்படுத்தாமலிருந்தால் அந்தப் பகுப்பாய்வு, பூர்ஷ்வா பொருளாதார சிந்தனைகள் பற்றிய வேறுபட்ட அணுகுமுறையின் இன்றியமையாத்

தன்மையைப் பாராமல் விட்டுவிடுகிறது. ஜான் ஸ்டுவர்ட் மில்லை வேறு பிற கீழ்த்தரமான பூர்ஷ்வா சிந்தனையாளர் களுடன் ஒரே இனமாகச் சேர்ப்பது தவறானதுஎன மார்க்ஸ் கருதினார். ஏனெனில் பிந்தியவர்களைப் போலல்லாமல், பாட்டாளிவர்க்கத்தின் நலன்களைப் பற்றி ஆராய்வதன் அவசியத்தை அவர் உணர்ந்திருந்தார். இதே வகையில் புரட்சிகரமான மார்க்சீய சிந்தனைக் கோட்பாடுகளை மறுக்கிற, ஆனால் அரசு-ஏகபோக முதலாளித்துவத்திற்கு முழுதும் எதிரான வேறுபட்ட சமூக அமைப்புகளையுடைய அரசுகளுக்கிடையே சமாதான சகவாழ்வையும், கூட்டுறவையும் ஆதரிக்கிற பொருளாதார வல்லுநர்களைப் பிற்போக்கான பொருளாதார சிந்தனையாளர்களோடு இணையாக எண்ண முடியாது.

குறிப்பிட்ட வர்க்கங்கள் மற்றும் சமூகக் குழுக்களின் மனப்பாங்குகளை வெளிப்படுத்துவதும், தத்துவார்த்த விளக்கத்திற்கு அப்பாற்பட்ட விதிகளைக் கொண்டதுமான விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியானது மனிதஇனம், சமுதாயம், தனிமனிதன் என்பதைப் பற்றிய அறிவாதார இயல் கருத்துகளின் மீது செல்வாக்கு பெற்றிருக்கிறது. வேறு பட்ட சமுதாய அமைப்பு முறைகளையுடைய அரசு களிடையே சமாதான சகவாழ்வு வாழக்கூடிய சூழ்நிலையில் மனித இனத்தை எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் உதவக்கூடிய தனித்தனியான சமரச உடன்பாடு களைத் தோற்றுவிக்கும் வாய்ப்புகள் இருப்பது பூர்ஷ்வா பொருளாதார-அரசியல் சிந்தனை முறைக்கும், மார்க்சீய சிந்தனை முறைக்கும் இடையேயுள்ள அடிப்படை வேறுபாடு களை மாற்றிவிட முடியாது.

இயற்கை விஞ்ஞானங்களில் அப்போது நிகழ்ந்து கொண்டிருந்த புரட்சி பற்றி லெனின் 1908 இல் அவருடைய பொருள்முதல்வாதமும் அனுபவவாத விமரிசனமும் என்ற நூலில் குறிப்பிட்டிருந்ததை நாம் எக்காலத்திலும் மறத்தல் கூடாது. ''தத்துவம் பற்றிப் பேசும்போது இரசாயனம், வரலாறு அல்லது இயற்பியலுக்குப் பெரும் சேவை செய்யக்

கூடிய திறனுடையவர்களாயுள்ள பேராசிரியர்கள் ஒருவரைக் கூட, ஒரு அணுவின் அணுகூட நம்ப இயலாது. ஏன்? புள்ளி விவரங்கள் மற்றும் தனிச்சிறப்பான ஆய்வு முறைகளின் துறைகளில் பயனுள்ள சிறந்த பணியாற்றக்கூடிய அரசியல் பொருளாதாரப் பேராசிரியர் ஒருவரைக்கூட அரசியல் பொருளாதாரம் பற்றிய பொதுவான கோட்பாடுகள் பற்றிப் பேசும் போது ஒருதுளிகூட நம்புதல் கூடாது. ஏனெனில் இன்றைய சமுதாயத்தில் இந்த அரசியல் பொருளாதாரம்கூட, அறிவாதார முறைஇயல் போலவே ஒரு சார்புடையதாகவே உள்ளது''[2] என்று அவர் எழுதினார்.

மேலே கூறப்பட்ட மேற்கோளில் தனிச்சிறப்பான துறைகளில் போற்றக்கூடிய பணிகளைச் செய்யக்கூடிய பேராசிரியர்களிடம் அவர் கொண்டிருந்த மதிப்பு நிறைந்த மனப்பான்மையை நாம் கருத்தில் கொள்வது அவசியம். அவர்களைப் பொய்யான வேதாந்திகள் என அவர் ஒதுக்கித் தள்ளிவிடவில்லை. அவர்களுடைய வர்க்கக் கண்ணோட்டத்தினால் தோன்றுகிற எல்லைகள் சமரசப் படுத்த இயலாத முரண்பாடுகள் தீர்மானிக்கும் இயல்புகளைக் காணாது விட்டுவிடும்படி செய்வதோடு, சமரசப் படுத்தக்கூடிய முரண்பாடுகள் மீது மட்டுமே அவர்கள் கவனம் செலுத்துமாறு செய்கிறது. சீர்திருத்தத்தை விரும்புகிற பொருளாதார நிபுணர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவது பயனுள்ளதாகவும், இன்றியமையாததாகவும் உள்ளது. ஏனெனில் அவர்களிற்பலர் உலக நிகழ்ச்சிகளை நிர்ணயிக்கிற வரலாற்று உண்மைகளாக மார்க்ஸ்-எங்கெல்ஸ்-லெனின் ஆகியோரின் விஞ்ஞான சோஷலிசத்தால் பெரிதும் ஆட்சி செய்யப்படுகிற நம்முடைய காலத்தின் சிறப்பியல்புகளைப் புரிந்து கொள்ளத் தொடங்கியுள்ளனர்.

## அடிக்குறிப்புகள்

1. லெனின் நூல்களின் சில்லரைத் தொகுப்புகள் XI மாஸ்கோ-1929, பக் 357. (ரஷ்யமொழியில்)
2. வி. இ. லெனின் ''பொருள்முதல்வாதமும், அனுபவவாத விமரிசனமும்'' தொகுப்பு நூல்கள்: பகுதி 14 மாஸ்கோ, 1962. பக் 342.

டாக்டர். மோனிகா செஸ்டக்கோவா

பொருளாதார நிறுவனம்
ஸ்லோவக் விஞ்ஞான கலைக்கழகம்

## ஏகபோக மூலதன மறுஉற்பத்தியின் மீது, விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் செல்வாக்கு தொடர்பான பூர்ஷ்வாக்களின் கருத்துகளைப் பற்றிய திறனாய்வு

பூர்ஷ்வாக்களின் அரசியல்-பொருளாதாரம்-விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி சூழ்நிலையில் ஏகபோக மூலதனத்தின் மறுஉற்பத்தியை முழுதும் விளக்கிக்கூறி அந்த நிகழ்ச்சிப் போக்கின் சிறப்பியல்புகளைப் பகுத்தாய்கிற உண்மையான, ஒன்றிணைந்த கோட்பாடு ஒன்றை உடையதாக இல்லை. எனினும் பூர்ஷ்வாக்களின் பல்வேறு கருத்துக்கள், இந்தச் சிக்கலான நிகழ்ச்சிப் போக்கின் தனிக் கூறுகளைச் சிதைத்து அவற்றைப் பிரதிபலிக்கிறது. விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் கீழ் ஏகபோக மூலதனத்தின் மறுஉற்பத்தி பற்றிய பிரச்சினைகளுக்கு பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்களின் மூன்று அணுகுமுறைகளைப் பற்றி ஆராய்ந்தறிவோம்.

1. ஒரு தனிப்பட்ட ஏகபோகத்தில், மூலதன மறுஉற்பத்தி.

2. மூலதன மறுஉற்பத்தியில் புதிய போக்குகளின் (இன்றைய ஏகபோக முதலாளித்துவத்தின் கீழ் சமூக மூலதனத்தின் மறுஉற்பத்தி) பேரியல் பொருளாதார விளைவுகள்.

3. இன்றைய ஏகபோக மூலதன மறுஉற்பத்தியின் உலகப் பொருளாதாரப் பகுதிகள்.

இன்றைய முதலாளித்துவ மறுஉற்பத்தியின் பொருளாதார சூட்சுமத்தின் பல்வேறு அம்சங்களை விளக்கிக் கூறுவதாக மார்தட்டிக் கொள்கிற "பூர்ஷ்வாக்களின் தூய பொருளாதார பகுப்பாய்வு"டன் இணைக்கக் கூடிய அந்தக் கருத்துக்களை நாம் முதன்முதலில் ஆராய்ந்தறிவோம்.

இந்த பூர்ஷ்வாக் கருத்துக்களை ஆராயும்போது ஏகபோக மூலதன மறுஉற்பத்தி நிகழ்ச்சியின் மீது விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி கொண்டுள்ள ஒரு சார்பான செல்வாக்கைப் பற்றி உண்மையில் நாம் அதிகமாகப் பேசவில்லை. மாறாக விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியினால் தோற்றுவிக்கப் பட்டுள்ள (பொருளாதார சூட்சுமத்தின் மீது) ஏகபோகத்தன்மை உடையதாக ஆக்கப்படுகின்ற நிகழ்ச்சிப் போக்கிற்கும், பெரும்பாலான புறவய சூழ்நிலைகள் அனைத்திற்கும், பொருளாதார சூட்சுமத்தின் மீதுள்ள புதிய கோரிக்கைகளையும் பற்றியேதான் நாம் உண்மையில் பேசுகிறோம் என்பதை மனதில் கொள்ள வேண்டும். ஒருபுறம் விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றங்கள், உற்பத்தியும், மூலதனமும் ஓரிடத்தில் குவிவதைத் தொடர்ச்சியாக வளரச் செய்வதற்கும், முதலாளித்துவப் பொருளாதாரத்தை மேலும் ஏகபோகத்தன்மை கொண்டதாக ஆக்குவதற்கும், ஏகபோக யுத்தியை உருவாக்குவதற்கும், புதிய புறவயச் சூழ்நிலைகளைத் தந்துதவுவதற்கும் உதவுகிற செயலூக்கம் நிறைந்த சக்தியாக விளங்குகிறது. மறுபுறம் ஏகபோகங்களின் கொள்கைகள் (பெரும்பாலான சமயங்களில் அரசின் ஆதரவுடன்) முதலாளித்துவப் பொருளாதாரத்தில் நடைமுறையில் பயன்படுத்துகிற குறிப்பாக செயல்முறை ஆராய்ச்சியிலும் (ஒரு குறிப்பிட்ட அளவிற்கு அடிப்படையான) மற்றும் அதைத் திருத்தியமைப்பதற்கான

யுத்தியிலும் (அல்லது குறிப்பாக சிதைப்பதற்கு) உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்குப் புறவயமாகத் தேவையான தனிச் சிறப்பான உருவங்களின் செல்வாக்கும். முடிவாக இன்றைய முதலாளித்துவச் சூழ்நிலையில் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் பல எதிர்மறையான சமூக-பொருளாதார விளைவுகளின் முக்கியமான காரணமாக விளங்குவது ஏகபோகங்களின் ஆதிக்கமே.

இந்தச் சிக்கலான முரண்பாடுகள் நிறைந்த உட்செயல் களின் ஒரு கூறையோ மற்றொரு கூறையோ முழுமையான தாகக் கருதிக் கொண்டு அவர்கள் காண்கிற போக்குகளை விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றத்தின் இயல்பான விளைவுதான் என அறிவிக்கிறார்கள்.

1. ஒரு தனிப்பட்ட ஏகபோகத்தின் மூலதன மறுஉற்பத்தி பற்றிய பிரச்சினை சென்ற 20 ஆண்டுகளாக பூர்ஷ்வாக்களின் நுண்ணியல் பொருளாதாரப் பகுப்பாய்வில் ஒரு ஆராய்ச்சிக்குரிய விஷயமாகவே பெரும் பாலான சமயங் களில் இருந்து வருகிறது. (புதிய மரபுவழி உருவத்திலும், மற்றும் பெருமளவிற்கு உண்மைக்குகந்த திசைவழி கொண்ட துறை அமைப்புகளின் கோட்பாட்டின் உருவிலும்) சென்ற இருபதாண்டுகளாக புதிய தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்துவதைப் பற்றிய கம்பெனி முடிவுகளைப் பாதிக்கும் காரணிகளைப் பற்றியும், ஆராய்ச்சி, மேம்பாடு ஆகியவற்றிற்கான கம்பெனி செலவுகளை நிர்ணயிக்கும் காரணிகளை நிர்ணயிப்பவை பற்றியும், விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றத்தைப் பற்றியும், சந்தை அமைப்பு களுடன் அதன் உட்செயல்கள் பற்றியும், முடிவுகளை மேற் கொள்ளும் போது இடர்ப்பாடுகளைத் தாங்குவதன் பங்கு பற்றியும்; கம்பெனியின் பருமன் பற்றியும் (அது எவ்வளவு அளவு ஏகபோகமாக்கப்பட்டுள்ளது என்பது) ஆராய்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் பிறவற்றிற்குமான செலவுகள் பற்றியும் ஆராய்கிற கோட்பாட்டடிப்படையிலான ஏராளமான பூர்ஷ்வா நூல்களும், பட்டறிவு அடிப்படையிலான

ஏராளமான பூர்ஷ்வா நூல்களும் வெளி வந்துள்ளன இந்த நூல்கள் அனைத்தும் ஒரே மாதிரியான முடிவுகளுக்கு வரவில்லை. எனினும் (தேர்ந்தெடுக்கப்பட்ட புள்ளி விவரங்கள், ஆராய்ச்சி மேற்கொள்ளப் படுகிற காலம், ஆராய்ச்சியாளர் ஆக்க விரும்பும் மாதிரியின் கட்டமைப்பாக மாற்றப்படுகிற, கோட்பாட்டடிப்படையிலான முதற் கூற்றுகள் ஆகியவற்றின் காரணமாக வேறுபட்ட பெரும் பாலும் முரண்பாடான முடிவுகள் பெறப்படுகின்றன) அவை இன்று விஞ்ஞான - தொழில் நுட்ப முன்னேற்றத்தின் வட்டத்தினுள் ஏகபோகங்களால் பின் பற்றப்படுகிற கொள்கைகளின் உண்மையான பகுதிகளை விளக்க உதவுகின்றன

உதாரணமாக இந்த நூல்களின் ஆசிரியர்கள் தேவையின் பங்கு பற்றியும், உற்பத்தித் திறன்களைப் பயன் படுத்துவதன் முக்கியத்துவம் பற்றியும், புதிய தொழில் நுட்பத்தைப் புகுத்துவதற்கான முடிவுகள் செய்வதைப் பாதிக்கிற பிறகாரணிகளைப் பற்றியும் நம் கவனத்தைக் கவர்ந்துள்ளனர். கூட்டு வாணிக நிறுவனங்களின் முதலீட்டுக் கொள்கைகளுக்கும், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு தொடர்பான கொள்கைகளுக்கும் இடையில் நிலவும் தொடர்புகளைப் பற்றியும் தெளிவாக்கியுள்ளனர். தனியார் துறையில் (திறமையின் அடிப்படையிலிருந்து பார்த்தால் இம்மாதிரியாகக் குவிந்திருப்பது தேவையா என்பது பற்றிய முடிவுகள் வேறுபட்டவையாயிருந்த போதிலும்) உயர்மட்ட அளவில் ஆராய்ச்சிப் பணிகள் குவிந்திருப்பதைப் பற்றி நம் கவனத்தைக் கவர்ந்துள்ளனர். பூர்ஷ்வா நுண்ணியல் பொருளாதாரப் பகுப்பாய்வு போட்டி சூட்சுமத்தில் ஏற்பட்டுள்ள சில மாற்றங்களையும், விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் விளைவாக நிறுவனங்களிடையேயான உறவுகளிலும் ஏற்பட்டுள்ள சில மாற்றங்களையும் பிரதி பலிக்கிறது.

எனினும் இந்த ஆராய்ச்சியின் அறிவாற்றல் திறன் மதிப்பு ஒரு வரம்பிற்குட்பட்டதாகவுள்ளது. முக்கியமாக

ஏகபோக பூர்ஷ்வாக்களின் வரம்புக்குள்ளிருந்து அந்த ஆசிரியர்கள் வெளியில் வர இயலாதவர்களாக உள்ளனர். இந்த நூல்களில் உச்சநிலைக்காகத் தேடுவதில் (உதாரணமாக ஆராய்ச்சிக்கும் மேம்பாட்டிற்குமான உச்சநிலைச் செலவு, தொழில் நுட்ப முன்னேற்றத்தின் நோக்கிலிருந்து, கம்பெனியின் உச்சநிலைப் பருமன்) ஏகபோகத்தன்மை என்னும் அளவுகோலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஆராய்ச்சிக்கும், ஆட்களுக்குப் பயிற்சி யளிப்பதற்கும் நிதி உதவி செய்வதில் அரசின் பங்கு குறிப்பிடப்படவே இல்லை அல்லது அனைத்து கூட்டு வாணிக நிறுவனங்களும் சமமாக அணுகத்தக்கதாக உள்ள, கூட்டு வாணிக நிறுவனங்களின் சூழ்நிலையில் இந்தத் துறையில் அரசின் கொள்கை இயல்பானதாகக் கொள்ளப் பட்டது. இவ்வாறாக ஒருபுறம் கூட்டு வாணிக நிறுவனங் களால் மேற்கொள்ளப்பட்டுவரும் ஆராய்ச்சிப் பணிகளின் உண்மையான முக்கியத்துவம் சிதைக்கப்படுகிறது. (ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான நிதி உதவியளிப்பதில் அரசு மேற்கொள்ளும் பங்கு கருத்தில் கொள்ளப்பட வில்லை. மறுபுறம் பூர்ஷ்வாப் பொருளாதார நிபுணர்கள் அரசால் நிதியுதவி அளிக்கப்படுகிற ஆராய்ச்சிப்பணிகளின் பெரும் பங்கைப் பெரும் ஏகபோக வாணிக இணையங்கள் எடுத்துக் கொள்கின்றன என்ற உண்மையை மறைக்கின்றன. (மேலும் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் கண்டுபிடித்த கருவிகளின் பெரும் பகுதியையும் ஏகபோகங்களே பயன் படுத்துகின்றன)

மேலே கூறப்பட்ட கோட்பாட்டடிப்படையிலான நூல் களிலும், பட்டறிவின் அடிப்படையிலான நூல்களிலும் பெறப்பட்ட முடிவுகளிலிருந்து வேறுதிசையில் திருப்புகிற, முக்கியமான கோட்பாட்டடிப்படையிலான வரம்புகளும், ஆய்வு நெறிமுறை வரம்புகளும்கூட உள்ளன. பூர்ஷ்வா பொருளாதார வல்லுநர்கள் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியுடன் முதலீடு தொடர்பான நுண்ணியல் பொருளாதாரக் கொள்கைகளை இணைத்துச்

(உதாரணமாக விஞ்ஞான-தொழில் நுட்பக் கொள்கை, பல்வகைப்படுத்துவது தொடர்பான யுத்திகள், நிதிக் கொள்கை பற்றிய பிரச்சினைகள் ஆகியவை இன்னும் தீர்க்கப்படாமலேயே இருக்கின்றன) செல்லுமாறு செய்வதில் வெற்றியடையவில்லை. பூர்ஷ்வாக்களின் நுண்ணியல் பொருளாதாரப் பகுப்பாய்வு மேலும் சிறந்த, உண்மையான பேரியல் பொருளாதார மாதிரிகளுக்கான அடிப்படையைத் தந்துதவக்கூடிய விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் கீழ் வாணிக இணையங்களின் முதலீட்டுக் கொள்கை பற்றிய, பொதுமை செய்யப்பட்ட கோட்பாடு பற்றி இன்னும் நினைத்துப் பார்க்கக்கூட முடியாதவர்களாக இருக்கின்றனர்.

2. நுண்ணியல் பொருளாதாரப் பகுப்பாய்வையும், பேரியல் பொருளாதாரப் பகுப்பாய்வையும் இணைக்கும் பிரச்சினை பூர்ஷ்வா அரசியல் பொருளாதார வல்லுநர்களால் இன்னும் தீர்க்கப்படாமலேயே இருந்து வருகின்றன. ஆதிக்கம் செலுத்தி வருகிற பேரியல் பொருளாதாரக் கோட்பாடுகள், இன்றைய முதலாளித்துவப் பொருளாதாரத்தில் நிலவுகிற ஏகபோகத் தன்மையின் மிக உயர்ந்த மட்டத்தைப் பற்றியும், பேரியல் பொருளாதார வட்டத்தில் ஏற்படக்கூடிய அதன் விளைவுகள் பற்றியும் உண்மையில், ஆதிக்கம் செலுத்தி வருகிற பேரியல் பொருளாதாரக் கோட்பாடுகள் கருத்தில் கொள்வதே யில்லை. தொழில் நுட்ப முன்னேற்றங்களைப் புகுத்துவதற்கும் அவற்றைப் பரப்புவதற்கும் தேவையான சூட்சுமம் பற்றிப் பொருளாதார வளர்ச்சிக் கோட்பாட்டைக் கொண்டவர்களின் கருத்துக்கள், முக்கியமாக சந்தையில் உள்ள சக்திகளிடையே சுதந்திரமான போட்டி நிலவுகிறது என்ற ஆதாரக் கூற்றையே அடிப்படையாகக் கொண்டது.

பேரியல் பொருளாதாரக் கோட்பாடுகளுக்குள் ஏகபோக முதலாளித்துவ மறுஉற்பத்தியின் தனிச் சிறப்பியல்புகளைப் புகுத்துவதற்கான முயற்சிகள் ஏகபோக

முதலாளித்துவத்தின் கீழ் உபரி மூலதனத்தைப் பற்றிய அவர்களுடைய கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட பல்வேறு பூர்ஷ்வா, சிறிய பூர்ஷ்வா மற்றும் முற்போக்காளர் களின் தேக்கம் பற்றிய கோட்பாடுகளில் முக்கியமாகக் காண முடியும். எனினும் இந்தக் கோட்பாடுகள், விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றம் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் செல்வாக்கு ஆகியவற்றின் செயலூக்கம் நிறைந்த பங்கைக் கருத்தில் கொள்வதில்லை. ஒரு குறிப்பிடத்தக்க அளவு அவை இன்றைய ஏகபோகங் களின் பன்முகத் தந்திரோபாயங்களை மிகவும் எளிமையானதாக ஆக்குவதோடு, ஏகபோகங்களுக்கிடையே யான போட்டியையும பொருட்படுத்தாது விட்டு விடுகின்றன.

அதற்கு மாறாக ஏகபோகங்களுக்கு வெளிப்படையாகவே சப்பைக்கட்டுக்கட்டி ஆதரவளிப்பவர்கள் ஏகபோக வாணிக இணையங்களை விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றத்தின் விளைவாகவும், அதைப் பேணிக் காப்பதற்கான "உச்சநிலை நிறுவன அமைப்பின்" உருவமாகவும் காண்கிறார்கள். அவர்கள் பெரும் வாணிக இணையங்களின் வலிமையான நிலைகள், உற்பத்தி சக்திகளின் முன்னேற்றத்திற்குத் தோற்றுவிக்கும் தடைகளைக் காணாமல் விட்டு விடுகிறார்கள்.

மறுஉற்பத்தி நிகழ்ச்சியின் போக்கில் இன்றைய முதலாளித்துவம் எதிர் நோக்குகிற கடுமையான இன்னல்கள் ஐயமின்றி இந்தத் துறையில் பட்டறிவின் அடிப்படை யிலான ஆராய்ச்சி நூல்களையும், கோட்பாட்டடிப்படையிலான ஆராய்ச்சி நூல்களையும் எழுதுமாறு பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்களைத் தூண்டும். இந்தப் பிரச்சினை பற்றிய பூர்ஷ்வாக்களின் அணுகுமுறை "தூய பொருளாதார"ப் பகுப்பாய்வு விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் ஒரே ஒரு கூற்றைப் பற்றிய (அது குறிப்பாக மிகுந்த முக்கியத்துவம் உடையதாக இருப்பினும்கூட)

ஆராய்ச்சியாகவே—தொழில் நுட்ப முன்னேற்றம் பற்றிய ஆராய்ச்சியாகவே—ஒரு வரம்பிற்குட்பட்டதாக உள்ளது. அது விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் தேவைகளிலிருந்து எந்தப் பொருளாதார சூட்சுமத்தின் பண்பியல் மாற்றங்கள் தோன்றுகின்றன என்ற கேள்வியைக் கூட எழுப்புவதில்லை. முக்கியமான பிரச்சினையைத் தீர்க்காமல் இன்றைய அரசு ஏகபோகக் கட்டுப்பாடு நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு வழி காண்பது இயலாதது ஆகும்.

3. ஏகபோக மூலதன மறுஉற்பத்தியைப் பற்றிய பகுப்பாய்வு தேசிய பொருளாதாரக் கட்டமைப்புக்குள், அது பெருமளவிலாக இருந்த போதிலும் இனிமேல் கட்டுப்படுத்த இயலாது. இன்றைய சர்வதேச விரிவாக்கச் சூழ்நிலையில் ஏகபோக மூலதன மறுஉற்பத்தியின் பல்வேறு பகுதிகள் அகில உலகத் தன்மையடைந்துள்ளன இதைப்பல பூர்ஷ்வா பொருளாதார அறிஞர்கள் ஒரு குறிப்பிட்ட அளவு ஏற்றுக் கொள்கிறார்கள்.

தனிப்பட்ட ஏகாதிபத்திய அரசுகளின் கண்ணோட்டத்திலிருந்து வெளிநாட்டு ஏகபோக விரிவாக்கம், மறுஉற்பத்தி நிகழ்ச்சிப் போக்கையும் உள்நாட்டுப பொருளாதாரக் கொள்கைகளின் இலக்குகளை அடைவதையும் பாதிக்கிற "வெளிக் காரணிகளில்" ஒன்றே ஒன்றுதான் (இந்த "வெளிக்காரணிகளின்" முக்கியத்துவம் வளர்ந்து வந்த போதிலும் ஆனால் பெரிய சர்வதேச ஏகபோகங்களின் கண்ணோட்டத்திலிருந்து (குறிப்பாக அமெரிக்கப் பன்னாட்டு இணையங்கள்) வெளி நாட்டு முதலீடு ஒரு வெளிநாட்டுக் காரணிமட்டுமல்ல அது அகில உலக தந்திரோபாயத்தில் ஒன்றிணைந்துள்ள ஒரு பகுதியேயாகும்.

சர்வதேச ஏகபோகங்களைப் பற்றிய பூர்ஷ்வாக் கோட்பாடுகளில் விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றம் (விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் பொதுவான விளைவுகள் என நாம் கூறலாம்) ஒரு முக்கியமான பங்கு வகிக்கிறது. இந்த பூர்ஷ்வாக் கோட்பாடுகள் (ஒரு சப்பைக்

கட்டுக்கட்டும் முறையிலும், சிதைந்த உருவிலும் இருந்த போதிலும்) விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் உட்செயல்களின் இரண்டு கூறுகளையும், இன்று முதலாளித்துவத்தின் கீழ் பொருளாதார வாழ்க்கை சர்வதேசத் தன்மையடைவதையும் பிரதிபலிக்கின்றன. ஒரு புறம் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சி சர்வதேச ஏகபோகத் தன்மையின் விரிவாக்கத்திற்குச் செயலூக்கம் நிறைந்த ஒரு சக்தியாகச் செயல்படுகிறது. ஆகவே பெரிய வாணிக இணையங்களின் அகில உலகிற்குமான யுத்திகள் இன்றைய சூழ்நிலையில் சர்வதேச வேலைப் பகுப்பின் உச்சநிலைதான் என அறிவிக்கப்படுகிறது. மறுபுறம் சர்வதேச ஏகபோகங்களின் கோட்பாடுகள், அவர்களுடைய யுத்திகளிலும், சர்வதேச அரங்கில் நிகழும் போட்டியில் போராட்டங்களின் உருவங்களைத் தேர்ந்தெடுப்பதிலும் அவர்களின் பணமுதலீடு தொடர்பான முடிவுகள் செய்வதிலும் மிகுதியாகிவரும், விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றத்தின் பங்கைப் பிரதிபலிக்கிறது.

உலகப் பொருளாதார உறவுகளில் பன்னாட்டு ஏகபோக இணையங்களின் விஞ்ஞான-தொழில் நுட்பக் கொள்கையின் பங்கைப் பற்றிய பூர்ஷ்வாக்களின் கொள்கை அடிப்படையிலான விளக்கத்திற்கு ஒரு சிறந்த உதாரணமாக "தொழில் நுட்ப மாற்றம்" பற்றிய கோட்பாடு விளங்குகிறது. வணிக இணையங்களின் ஏகபோக நிலைகளை அடிப்படையாகக் கொண்டுள்ள இந்தக் கோட்பாடு, உலகம் முழுமையிலும், விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னோடிகளாக பன்னாட்டு இணையங்கள் விளங்குகின்றன எனக் காட்டவும், குறைந்த தொழில்-நுட்ப மட்டத்தையுடைய நாடுகளிலிருந்து ஏகபோகங்களின் மிக அதிகமான இலாபத்தை வெளியேற்றுவதையும் ஏற்புடையவைதான் எனக் காட்டவும் முயல்கிறது. இவ்வாறாக, இது தன்னுடைய சப்பைக் கட்டுச்கட்டும் வேலையைச் சிறப்பாக நிறைவேற்றுகிறது. மேலும்

பன்னாட்டு ஏகபோக இணையங்களால் நிறைவேற்றப் படுவது போன்ற "தொழில் நுட்ப மாற்றம்" மிகப் பெருமளவில் குறைகூறப் படுகிறது குறிப்பாக வளரும் நாடு களால் குறைகூறப் படுகிறது.

ஆராய்ச்சி பற்றியும், மேம்பாடுபற்றியும், புதிய தொழில் நுட்பத்தைப் புகுத்தும்போது முடிவுகள் மேற் கொள்வதற்கான அடிப்படைகளைப் பற்றியும், அதன் அமைவிடத்தின் கட்டமைப்பு பற்றியும், இந்தத் துறையில் பன்னாட்டு ஏகபோக இணையங்களின் நடைமுறைக் கொள்கைகளின் வேறு பகுதிகளைப் பற்றியும் கூறும் ஏராளமான பூர்ஷ்வா அறிஞர்களின் நூல்கள் உள்ளன. இந்த ஆராய்ச்சி நூல்களின் முக்கியமான நோக்கம். விஞ்ஞான ஆராய்ச்சியை ஒன்றிணைப்பதற்கு உதவுவதும், உலகம் முழுவதிலும உள்ள ஏகபோக அமைப்புக்களில் அவற்றைப் பயன்படுத்துவதனால் விளையும் பலன்களை உச்சநிலையை அடையச் செய்வதற்கு உதவுவதுமேயாகும். இந்தக் கொள்கையின் முக்கியமான வர்க்க உள்ளடக்கம் இதுதான். அதே வேளையில் தனி பூர்ஷ்வா அறிஞர்களின் நூல்கள் இன்று பன்னாட்டு ஏகபோக இணையங்களின் தன்மைகள் பற்றியும், பல்வேறு பகுதிகளைப் பற்றியும் ஒரு சிறந்த அறிவைத் தந்துதவக்கூடிய ஏராளமான உண்மையான விஷயங்களைக் கொண்டவையாக உள்ளன.

ஆனால் அரசியல் பொருளாதாரத் துறையில் பன்னாட்டு இணையங்களைப் பற்றிய பூர்ஷ்வாக் கோட்பாடுகள், இன்றைய சர்வதேச ஏகபோகங்களின் பல்வேறு செயல்முறைகளின் விளைவாக முதலாளித்துவ மறுஉற்பத்தி சூட்சுமத்தில் தோன்றியுள்ள (அல்லது ஆழமானதாக ஆகியுள்ள) பிரச்சினைகள் மற்றும் முரண்பாடுகள் நிலவுவதை விளக்க இயலாதவையாக உள்ளன.

சர்வதேசத் தனியார் ஏகபோகத் தொகுதிகளுக்குள் திட்டமிடுவது, பொதுவாக உலக முதலாளித்துவப்

பொருளாதாரத்திலும், பல முதலாளித்துவ நாடுகள் அல்லது மண்டலங்களின் பொருளாதாரத்திலும் தான்தோன்றித் தனத்தையும், உறுதிபற்றதன்மையையும் வலிமையுறச் செய்கிறது. இவ்வாறாக அகில உலகில், பல தேசிய பொருளாதாரத்தின் அரசு ஏகபோகக் கட்டுப்பாட்டில் இம்மாதிரியான பொருளாதாரக் கட்டுப்பாடு அல்லது ஒன்றிணைந்து செயல்படுவதன் இன்றியமையாமை தோன்றுகிறது. ஆனால் இந்த மாதிரியான கட்டுப்பாட்டிற்கோ அல்லது ஒன்றிணைந்து செயல்படுவதற்கோ ஏற்ற நிறுவன அடிப்படை ஏதும் இல்லை. தனியான ஒன்றிணைந்த குழுக்களின் கட்டமைப்பிற்குள், கட்டுப்பாடு குறைந்த அளவே பயனுள்ளதாக இருக்கிறது. தனிப்பட்ட ஏகபோகங்களின் செயல் முறைகளின் மூலம் பொருளாதார நிகழ்ச்சிப்போக்குகளை மிகப் பெரும் அளவு சர்வதேசத் தன்மையடையச் செய்வதன் விளைவாக, உள்நாட்டுத் தொடர்புகளிலும், வெளிநாட்டுத் தொடர்புகளிலும் தோன்றக்கூடிய அனைத்து விளைவுகளையும் பற்றிய (முடிந்தால் ஒரு முன்னறிவிப்பும்கூட) விவரங்களுடன், முக்கியமான பொருளாதாரக் கொள்கைகளுக்கு ஒத்திசைவாக, தீர்க்கப்படாத பிரச்சினைகள் இந்தத் துறையில் ஏராளமாக இருந்த போதிலும், தனிப்பட்ட அரசுகளுக்குள் அரசு ஏகபோகக் கட்டுப்பாட்டின் பயனுள்ள தன்மையை உயர்த்துவதற்கான வெளிநாட்டுப் பொருளாதாரத் தொடர்புகள் மிகவும் திறமையாகக் கட்டுப்படுத்தப் படுவதற்கு இன்றியமையாத நிபந்தனையாகக் கருதப்படலாம்.

அரசு ஏகபோகக் கட்டுப்பாடு பற்றிய இம்மாதிரியான அணுகுமுறை பூர்ஷ்வா பொருளாதாரக் கோட்பாடுகளுக்கு முன் ஏராளமான புதிய கடமைகளை வைக்கிறது. முக்கியமான பேரியல் பொருளாதார இனங்களுடன் (மொத்தப் பணமுதலீடுகளின் பரிமாணத்தின் மீது மொத்தமாக இந்த யுத்திகளின் விளைவுகள் வேலை வாய்ப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி முதலியவற்றின் மீது இவற்றின் செல்வாக்கும்)பகுப்பாய்வுடன் கூடிய பன்னாட்டு

ஏகபோக இணையங்களின் யுத்தியின் பொருளாதார விளைவுகளைப் பற்றிய ஆராய்ச்சியை ஒன்றிணைப்பதன் இன்றியமையாத் தன்மையுள்ளது. சில பூர்ஷுவா பொருளாதார நிபுணர்கள் இம்மாதிரியான அணுகு முறையின் இன்றியமையாமையை உணர்ந்துள்ளனர். இந்தச் செல்வாக்கின் உருவங்களையும், போக்குகளையும், மட்டங் களையும் பற்றியறியாமல், பேரியல் பொருளாதார முறைப் பயனுள்ள கட்டுப்பாட்டிற்கு வேண்டிய காரியங்களை உருவாக்குவது இயலாதது ஆகும். அல்லது ஏகபோகங்களின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதற்கென உருவாக்கப்பட்ட சீர்திருத்தங்களுக்கான கோட்பாட்டடிப் படையிலான அடித்தளத்தை (அல்லது ஏகபோகங்களுக்குச் சப்பைக் கட்டுக்கட்டுபவர்களின் கண்ணோட்டத்திலிருந்து மனப் பூர்வமாக மறுக்கிற)ச் கொடுக்க இயலாதது ஆகும். ஆனால் இம்மாதிரியான, அனைத்தையும் உள்ளடக்கிய அணுகு முறைக்கான முயற்சிகள் கோட்பாட்டடிப்படையிலான மற்றும் ஆய்வியல் நெறிமுறை இயல்புகள் நிறைந்த முக்கியமான தடைகளால் தடுத்து நிறுத்தப்படுகின்றன. ஏனெனில் அவை மரபுவழியான பூர்ஷ்வாப் பொருளாதாரப் பகுப்பாய்வு அணுகுமுறைக்கு எதிரானவையாக விளங்குகின்றன.

இன்றைய முதலாளித்துவ மறுஉற்பத்தியின் பிரச்சினை களையும் முரண்பாடுகளையும் வெல்வதற்குவழி, ஏகபோகங் களின் பொருளாதார வலிமையைக் கட்டுப்படுத்துவதும், பொருளாதாரக் கட்டுப்பாட்டின் ஜனநாயக மாற்று உருவமாக ஆக்குவதற்கான போராட்டத்தின் பகுதியாக பெரும் வாணிகக் கழகங்களை நாட்டுடைமையாக்குவதுமே யாகும்.

கே. பி. கோஸ்லோவா,
வேட்பாளர். விஞ்ஞானம் (பொருளாதாரம்)

முதன்மை ஆராய்ச்சியாளர்
உலக பொருளாதாரம் மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய நிறுவனம், விஞ்ஞான கலைக்கழகம், சோவியத் ஒன்றியம்

# 1970 களில் பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்தில் ஏற்பட்ட நெருக்கடியும், பொருளாதார சிந்தனை வளர்ச்சியில் புதுமையான போக்குகளும்

அதனுடைய அனைத்து சிந்தனை முறைகளையும், போக்குகளையும் உள்ளடக்கியுள்ள பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்தின் இன்றைய நெருக்கடி முதன் முதலாகவும், முக்கியமாகவும் பொருளாதாரக் கோட்பாடு களின் நெறிமுறைகளை மறுமதிப்பீடு செயவதில் வெளிப் படுகிறது.

முதலாளித்துவ அமைப்பு முறையில் உள்ள முரண்பாடுகள் தீவிரமடைவதிலிருந்தும், பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்கள் முன்கூட்டியே அறிந்திராத, இதுவரை சமாளிக்க முடியாததாக இருந்த, சிக்கலான பிரச்சினைகளிலிருந்தும், இந்த நெருக்கடி தோன்றியது. புதிய மரபு வழியான, மற்றும் கீனஸ் உடைய பழமையான சிந்தனை முறைகளை அடிப்படையாகக் கொண்ட, முன்னால் பரிந்துரைக்கப்பட்ட பொருளாதாரம், அரசால் கட்டுப்

படுத்தப்படுவது என்ற நோய் நிவாரணி பயனற்றது எனக் கருதப்பட்டது.

சுழல்களுக்கு எதிரான அரசின் கொள்கைகளும், பொருளாதார வளர்ச்சியை அரசு தூண்டுவதும்,போருக்குப் பிந்திய தொடக்ககால பத்தாண்டுகளில் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் பின் புலத்தில் ஒரு குறிப்பிட்ட அளவு பயனுள்ளதாக இருந்தன. விரைவான பொருளாதார வளர்ச்சிக்கு சாதகமான சூழ்நிலையை உடையதாயிருந்த கால இடைவெளி இப்போது முடிவிற்கு வந்துவிட்டது. உலக முதலாளித்துவ அமைப்பு முறை முழுவதிலும் பொருளாதார மறுஉற்பத்திக்கான சூழ்நிலைகள் தீவிர மடைந்ததால் சிறப்புற்று விளங்குகிற வளர்ச்சியின் ஒரு புதிய படிநிலையின் துவக்கத்தை 1974-1975 இல் ஏற்பட்ட நெருக்கடி குறித்தது.

1950 களிலும் 1960 களிலும் பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்தின் வளர்ச்சி சில இயல்புகளால் சிறப்புற்று விளங்கியது. அரசியல் பொருளாதாரத்தை ஒரு சரி நுட்பமான விஞ்ஞானமாக, தூய விஞ்ஞானத்தன்மை மற்றும் தொழில் வித்தக சிந்தனைமுறைகளால் குறைந்த அளவே ஆதிக்கம் செலுத்தப் பெற்றதாக இருந்ததோடு, பொருளாதாரக் கோட்பாட்டை சமூக-தத்துவார்த்தக் கண்ணோட்டங்களிலிருந்தும், அறநெறி மதிப்பீடுகளி லிருந்தும் சுதந்திரமான உடன்பாடான அறிவின் மொத்தமாகக் குறைக்கவும் செய்திருந்தது.

இந்தக்கால இடைவெளி கீனஸ் உடைய கொள்கைகள் தீவிரமாக வளர்ச்சியடைந்ததையும், பொருளாதார வளர்ச்சி பற்றிய புதிய மரபுவழிக் கொள்கைகளின் தீவிரமான வளர்ச்சியையும் கண்டது. அவை மறுஉற்பத்தியின் தொழில் நுட்பம் மற்றும் பொருளாதாரக் கூறுகளின் முழுதும் கோட்பாட்டடிப்படையிலான பகுப்பாய்வையும், பேரியல் பொருளாதார இனங்களின் அடிப்படையில் ஒன்றை ஒன்று சார்ந்திருப்பதையும், செயலூக்கம் நிறைந்த

சமநிலைக்குத் தேவையான நிபந்தனைகளையும் பற்றிய பகுப்பாய்வையும் தந்தன. இந்த இலட்சியங்களுக்காக உருவாக்கப்பட்ட பொருளாதார வளர்ச்சிக்கான மாதிரிகள் பொருளாதார வளர்ச்சியை நிர்ணயிக்கிற காரணியாக தொழில் நுட்ப முன்னேற்றத்தைச் சுற்றி நிலை கொண்டிருந்தன. மற்றும் அவை மறுஉற்பத்தியின் மீது கொண்டிருந்த செல்வாக்கையும், அதன் விகிதங்களையும், வகைகளையும் சோதித்துப் பார்த்தன.

இந்தச் சிந்தனை முறையின் அடிப்படையிலான நூல்கள் பொருளாதாரப் பகுப்பாய்வின் தேசிய சாதனத்தின் வளர்ச்சிக்கும், அதனுடைய முறைகளுடைய மேம்பாட்டிற்குப், அதற்குத் துணையான சாதனங்களின் மேம்பாட்டிற்கும் வழி செய்தன. மறுஉற்பத்தி பற்றிய கொள்கை தொடர்பான ஆராய்ச்சியிலும, பொருளாதாரத்தை அரசு ஒழுங்கு படுத்தும் முறையிலும் பல்வேறு போக்குகளைத் தூண்டின.

1950களும் 1960 களும் தூயவிஞ்ஞானத் தன்மை மற்றும் தொழில் வித்தகக் கொள்கைகளின் அடிப்படையில் கோட்பாட்டடிப்படையிலான பொருளாதாரங்களின் பல பிரிவுகளின் புரட்சிகரமான வளர்ச்சியைக் கண்டன. பேரளவு முறை நிர்வாகம், சந்தை பற்றிய கோட்பாடு, பெரும் வாணிக இணையங்களின் சந்தைகளை விரிவாக்கம் செய்யும் கொள்கைகளையும் பிற பொருளாதாரத் துறைகளின் கொள்கைகளையும் சுருக்கிக்கூறின. பொருளாதார சிந்தனை முறையின் முன்னேற்றம், விஞ்ஞான - தொழில் நுட்ப முன்னேற்றத்தை ஊக்குவித்துக் கொண்டிருந்த வேளையில் அதன் தேவைகளுக்கு முதலாளித்துவ நிறுவனங்களைத் தகவமைத்துக் கொள்வதற்கு இன்றியமையாததாக இருந்தது.

தூயவிஞ்ஞான மற்றும் தொழில்வித்தகப் பொருளாதார நிபுணர்கள் உயர்ந்த ஒப்பீட்டில் ஒரே சீரான பொருளாதார வளர்ச்சி விகிதங்கள் சமூகப் பிணக்குகளைத் தீர்த்து,

முதலாளித்துவத்திற்குள் நிலவுகிற முரண்பாடுகளை நீக்குவதற்கு உதவும் என உளமார நம்பினர். வளர்ச்சியை ஒரு வணக்கத்திற்குரிய பரம்பொருளாக ஆக்கி, அதன் விளைவாகத் தோன்றக்கூடிய தடையில்லாத, ஒரே சீரான பொருளாதார வளர்ச்சி பற்றிய ஒரு மாயையை ஏற்படுத்தினர். எனினும் "புகழ் வாய்ந்த" பொருளாதார நிபுணர்கள், வளர்ச்சியின் திசைகளையும், குறிகளையும், உள்ளடக்கத்தையும், ஈடுபடுத்தப்படுகிற செலவையும், சமூக விளைவுகளையும் இன்னும் அதனுடன் தொடர்புடைய பிற இன்னல்களையும் காணாது விட்டனர். இவற்றைப் பற்றி ஆராய்ந்து, சிலர் எழுதினால்கூட அவர்களுடைய நூல்கள் உரிய கவனத்தைப் பெறவில்லை.

தூய விஞ்ஞான, மற்றும் தொழில் வித்தகக் கண்ணோட்டங்களின் ஆதிக்கம் "மரபுகளுக்கு மாறான", நிறுவனப் போக்கின் வளர்ச்சியைப் பெரிதும் பாதித்தது. 1950 களிலும் 1960 களிலும் தொழில் சார்ந்த சமுதாயம் பற்றிய கோட்பாடுகள் பரவலாயிற்று. அவை விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பத்தின் பங்கைப் போற்றிப் புகழ்ந்தன. அவர்கள் அவைகளைப் பொருளாதார வளர்ச்சியை நிர்ணயிப்பவைகளாகவும், சமூக முன்னேற்றத்தைத் தூண்டிவிடும் இன்றியமையாக்காரணிகளாகவும் கருதினர் "தொழில் தேவைகள்" இயல்பான விதிகளால் ஆட்சி செய்யப்படுகிற ஒரு சமுதாயப் பரிணாம வளர்ச்சியைத் தோற்றுவிக்கின்றன. அதில் வளர்ந்து வரும் விஞ்ஞானத்தின் செல்வாக்கினால் பொருளாதார சிந்தனைக்குப் பொருந்துமாறு விளங்கக் கூறுவதாலும் பொருளாதார விஷயங்களின் ஒழுக்க முறைகளாலும் அரசியலின் பங்கும், சித்தாந்தங்களின் பங்கும் குறையும். விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியின் எல்லையில்லா வாய்ப்புகளையும், அது திறந்து விட்டுள்ள நீண்ட சாலையைப் பற்றியும், "தொழிற் துறையாளர்" கருத்துக்கள் எதிலும் நலம் காணும் எண்ணங்களைப் பிரதிபலித்தன. அவை, குறிப்பாக அமெரிக்க ஐக்கிய நாடுகளில், அதன்

சமூக-வரலாற்று வளர்ச்சியின் வரலாற்றுச் சிறப்பியல்புகள் காரணமாக, பரவலாகக் காணப்பட்டன.

எனினும் 1970 களின் தொடக்கத்தில் விஞ்ஞான-தொழில் நுட்பப் புரட்சியினால் தோற்றுவிக்கப்பட்ட மிகுதியான வளர்ச்சியுடைய தனியார்துறை, அரசுத் துறைகள், தனியார் ஏகபோகங்கள், சந்தையை அரசு கட்டுப்படுத்துதல் ஆகியவை இணைந்துள்ளதாக விளங்கும் காலம் "கலப்புப் பொருளாதாரத்"தின் உள்ளேயே நிலவுகிற முரண்பாடுகள் தீவிரமடைந்ததால் தனிச்சிறப்பானதாய் விளங்கியது.

அரசால் பொருளாதார வளர்ச்சி ஊக்குவிக்கப்படுவது, உற்பத்தி மூலதனம் ஆகியவற்றை மையப்படுத்தவும், திரட்சியுறச் செய்யவும் உதவியது. இவ்வாறாக அது பகாசுரப் பன்னாட்டு இணையங்கள் தோன்றுவதற்கு வித்திட்டது. இந்தப் பன்னாட்டு இணையங்கள் தங்களின் பொருளாதார வலிமை அதிகரிக்கும் போது இயற்கையின் வளங்களையும், உற்பத்தியின் பரிமாணத்தையும், விலையையும் கட்டுப்படுத்தும் வகைகளைக் கையாள்கின்றன. அவை தேசிய பொருளாதாரத்தை அரசு கட்டுப்படுத்துவதற்கு இடையூறாகவே இருக்கும்.

இந்தப் பணவீக்கம் "கலப்புப் பொருளாதார"த்தின் உடன் பிறந்த ஓரியல்பாகவே விளங்குகிறது. அது தேசிய வருமானத்தைப் பகிர்வதற்கான சமூகப் போராட்டத்தை மிகுதிப்படுத்துகிறது. சந்தையைக் கட்டுப்படுத்தும் தான் தோன்றி சக்திகளின் பங்கை உயர்த்துகிறது. குறிப்பாக பணவியல் அமைப்பு முறையின் பங்கை உயர்த்துகிறது. உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தின் முரண்பாடுகளைத் தீவிரமடையச் செய்கிறது.

அரசு அதிகார அமைப்பு முறையில் நெருக்கடிநிலை தோன்றுவதையும், பணவீக்கம் உயர்வதையும் ஊக்குவிக்கிற அரசின் நிதிகளுக்கு தொடர்ந்து பழுவை ஏற்றும் முறை "கலப்புப் பொருளாதார"த்தின் மற்றொரு இயல்பாகும்.

பொருளாதார வலிமையை விரிவாக்கம் செய்யும் கொள்கை மூலப்பொருட்கள் பிரச்சினைகளையும் தீவிர மடையச் செய்துள்ளது. வாழ்க்கைச் சூழ்நிலைப் பாதுகாப்புச் சமநிலையையும், இயற்கை வளங்களைப் பாதுகாப்பதையும் கேடுறச் செய்துள்ளது.

மறுஉற்பத்தியில் நிலவுகிற முரண்பாடுகளைத் தூண்டி விடுவது பொருளாதார வளர்ச்சி பற்றிய கோட்பாடுகளில் மிகுதியான ஏமாற்றத்தைத் தோற்றுவித்துள்ளது. அரசு பொருளாதாரக் கட்டுப்பாட்டிற்கு மையமாகத் திகழும் ''புதிய மரபுவழிக் கோட்பாடுகளின் ஒன்றிணைப்புகள்''- கோட்பாடு குறையுடையதாகவுள்ளது.

கீனஸ் உடைய பொருளாதாரக் கொள்கைகளின் குறைகள் மேலும் மேலும் தெளிவாகத் தெரியத் தொடங்கி யுள்ளன.

— மொத்தத் தேவையைக் கட்டுப்படுத்துவதற்கான கீனஸ் உடைய நிவாரணி, தேவை, உற்பத்தி, வேலை வாய்ப்பு ஆகிய துறைகளில் காணப்படும் கட்டமைப்புப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது.

— முக்கியமாக நெருக்கடி நிலையை மட்டும் சமாளிப்பதை நோக்கமாகக் கொண்டு பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்துவது ஒரு சார்புடையதாகவும், செப்பமின்மை நிறைந்ததாகவும் உள்ளது. கீனஸ் உடைய கொள்கை வரியாலோ, வரவு செலவுத் திட்டத்தாலோ அல்லது கடன் முறைகளை கசக்கிப் பிழிவதாலோ கட்டுப்படுத்த முடியாத பணவீக்கம் பற்றி ஏதும் செய்யவில்லை.

— தனியார் முதலீட்டிற்கு ஊக்கமளிப்பதற்கு அதிக முக்கியத்துவம் தருகிற கீனஸ் உடைய கொள்கைகள் முதலீட்டுச் சூட்சுமத்தைப் பற்றியவற்றையும், மூலதனம் குவிக்கப்படுவதைக் கட்டுப்படுத்தும் முறைகளையும் அளவிற்கதிகமாக எளிமையானதாக ஆக்கியுள்ளது. சந்தை

மீது அரசு கொண்டுள்ள செல்வாக்கு சிறிது சிறிதாகக் குறைந்து வருகிறது.

முழுமையான போட்டி நிலவுகிறது என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்ட, சந்தைக் கட்டுப்பாடு பற்றிய புது மரபுவழிக் கொள்கையும் அரசின் கடன்-பணவியல் கொள்கை தொடர்பான புது மரபுவழிக் கொள்கையைப் பின்பற்றுவோரின் நோய் நிவாரணியும் இன்றைய பொருளாதார சூழ்நிலைகளுக்குப் பொருந்தாது என நிரூபிக்கப்பட்டு விட்டது.

பொருளாதார நிபுணர்கள், தொழிற்சாலை மட்டத்திலும், சந்தை மட்டத்திலும் உள்ள பொருளாதாரக் கட்டமைப்புப் பிரச்சினைகளுக்குக் கவனம் செலுத்துமாறும், பெரிய வணிக நிறுவனங்களின் சந்தை நடவடிக்கைகளுக்கும், நிலவும் சூழ்நிலைகளை ஆராய்வதற்கும், அவர்களுடைய நீண்டகாலக் கொள்கைகளின் மீது மிகுந்த செல்வாக்குக் கொண்டுள்ள காரணிகளையும் பற்றி ஆராய்வதற்கும் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். அவர்கள் சமூகவியல் மற்றும் அரசியல் காரணிகளின் பங்கையும், கருத்தில் கொள்வதுடன், பொருளாதார வளர்ச்சியின்மீது நிறுவன அமைப்பு முறைகளின் செல்வாக்கையும் கருத்தில் கொள்ள வேண்டியதிருந்தது. இப்பொழுது பேரியல் பொருளாதாரத் துறையும், நுண்ணியல் பொருளாதாரத் துறையும் ஒன்றையொன்று சார்ந்திருக்கிறது என்பதனாலும் பொருளாதார நிகழ்ச்சிப் போக்குகள் சர்வதேசத் தன்மையடைந்துள்ளதால் தேசிய உற்பத்தியும், சர்வதேச உற்பத்தியும் நெருக்கமானதாக ஆகியுள்ளது என்பதனாலும், மரபுவழியான முறைகளும், கருத்துக்களும் மீண்டும் ஆய்வு செய்யப்பட வேண்டியதாகவுள்ளது. தூய பொருளாதாரப் பகுப்பாய்வின் வீச்சு, வாழ்க்கையின் தன்மையுடனும், உற்பத்தி, நுகர்வு ஆகியவற்றிற்கான சந்தையல்லாத பகுதிகளின் தீய துணை விளைவுகளுடனும் தொடர்புடைய புதிய பிரச்சினைகளின் விளைவாக விரிவடைந்து வருகிறது.

1970 களில் பொருளாதாரக் கோட்பாடுகளை நவீன மயமாக்குவதைப் பற்றிய கடுமையான வாதங்கள் நடைபெற்றன. புதிய மரபுவழிச் சிந்தனையாளர்களிடையேயும், கீனஸ் உடைய சிந்தனை முறையைப் பின்பற்றியவர்களிடையேயும், நிறுவனச் சிந்தனை முறையாளர்களிடையேயும் விமரிசனங்களும், சுயவிமரிசனங்களும் மிகுந்திருந்தது. இந்தப் போக்குகளிடையே கண்ணோட்டங்களில் வேறுபாடுகள் மிகுந்தன.

இன்றைய பூர்ஷ்வா அரசியல் பொருளாதார நெருக்கடி நீண்ட காலத்தன்மை கொண்டதாக ஆகக்கூடிய பல புதிய போக்குகளில் வெளிப்பட்டது. அது முதலாளித்துவ உலகில் பொருளாதாரக் கோட்பாடடின் வளர்ச்சியைப் பாதிக்கும்.

முதலாவதாக பல்வேறு ஆய்வியல் நெறிமுறை அணுகு முறைகளை ஒன்றிணைப்பதும், பல நற்கூறுகளைச் சேர்த்துக் கோட்பாட்டடிப்படையிலான கருத்துக்களைக் காண விரும்புகிறார்கள்.

இந்தப் பயன் நாட்டமுடைய போக்கு "ஆக்கபூர்வமான கோட்பாட்டடிப்படையிலான ஒன்றிணைப்பை" உருவாக்கக் கூடிய கூட்டான முயற்சியின் அடிப்படையில் பல்வேறு அரசியல் பொருளாதார சிந்தனை முறைகளைக் குறிப்பிட்ட அளவு நெருக்கமானதாக ஆக்கி வருகிறது. முதன் முதலில் "இணைப்பு" என்பது முன்பெல்லாம் மரபுவழிக் கொள்கையையும், கீனஸ் உடைய கோட்பாடுகளையும் இணைப்பதையே 'புதிய மரபு வழி ஒன்றிணைப்பு' உள்ளடக்கியதாக இருந்தது. நிறுவன அணுகுமுறை, விலை உருவாக்கம், வேலைவாய்ப்பு, பணவீக்கம், நெருக்கடி நிலைகளுக்கெதிரான கொள்கைகள், பொருளாதார வளர்ச்சியை ஒழுங்குபடுத்தல் போன்ற மிக முக்கியமான பிரச்சினைகளைச் சமாளிக்க இன்று இன்றியமையாததாகக் கருதப்படுகிறது.

இரண்டாவது அரசியல் பொருளாதாரத்தில் நிறுவனப் போக்கு செல்வாக்குப் பெற்று வருகிறது 1950 களிலும் 1960 களிலும் உருவாக்கப்பட்ட தொழில் கருத்துக்களை

''அடிப்படையாக்குவது'' பின் தொடர்கிறது. இந்த அணுகு முறை அரசியல் பொருளாதார முழுமையின் மீதும், அரசின் கொள்கைகளின் மீதும் சமுதாயத்தின் பல்வேறு அடுக்கைச் சேர்ந்த மக்களின் கருத்துக்களின் மீதும், முதலாவதாகவும், முக்கியமாகவும் அறிஞர் பெருமக்களிடையே மிகுந்த செல்வாக்குடையதாகவுள்ளது.

இதற்குப் பல்வேறு காரணங்கள் கூறமுடியும். புதிய மரபுவழிக் கொள்கைகளிலும், கீனஸ் உடைய கொள்கைகளிலும் ஒரு நெருக்கடியும், அரசு கட்டுப்பாட்டிற்குக் கொள்கை அடிப்படையிலான அடித்தளத்தை மாற்றுவதும், பொருளாதாரப் பிரச்சினைகளின் பன்முகத்தன்மைகளும், அரசுத்துறையின் பெருகி வரும் பங்கும், பொருளாதார நிகழ்ச்சிப் போக்குகளில் அரசின் பங்கும், சமூக அமைப்பின் மாற்றங்களும், சமூக உளவியல் துறையிலும், அறநெறி முறைகளிலும், பொதுமக்கள் நடத்தையின் ஒரே மாதிரியான தன்மையும்.

1930 களில் இருந்ததுபோல சமூக சீர்திருத்தங்களும், அரசுக்கும் தனி ஏகபோகங்களின் துறைக்குமிடையில் நடைபெறும் உட்செயல்களின் முற்போக்கான மாற்றங்களும் மீண்டும் முன்னணிக்கு வந்துள்ளன. அரசியல் பொருளாதாரத்தில் உள்ள இன்றைய நெருக்கடி ''கட்டுப்படுத்தக்கூடிய பரிணாம வளர்ச்சி'' பற்றிய அவர்களுடைய கோட்பாடுகளை வெளியிட்டு வருகிற ''சோஷலிஸ்ட்களாக பூர்ஷ்வாக்களை இந்தக் காலத்தின் கோலம் மாற்றி வருகிறது செயல்முறை சூட்சுமங்களில் முழுதும் வேறுபட்ட எதிரெதிரான சமூக அமைப்பு முறைகளையும் பொருளாதார வளர்ச்சியையும் உடையனவாக முதலாளித்துவத்தையும், சோஷலிசத்தையும் கருத அவர்கள் மறுக்கிறார்கள்.

மூன்றாவதாக, பொருளாதார சிந்தனையும், கோட்பாடும் மிகவும் தெளிவாக அறிந்து கொள்ளக்கூடிய சமூகவியல் தன்மையைப் பெற்றுள்ளது. அரசியல் பொருளாதாரத்தில் இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடி

பொருளாதாரக் கோட்பாட்டிற்கும், சமூக நடைமுறைக்கு மிடையேயுள்ள தொடர்பின் முக்கியத்துவத்தையும், அறநெறிகளை அமைப்பதிலும், அரசு கொள்கைகளை உருவாக்குவதிலும் பொருளாதார நிபுணர்களின் பங்கை வெளிப்படுத்தியுள்ளது.

நான்காவது போக்கு, உச்சநிலைப் பயன்பாடு, உச்சநிலை உற்பத்தித்திறன் ஆகிய புதிய மரபுவழிக் கோட்பாடுகளை இன்றைய மேலான புனராய்வு முறையைப் பற்றியதாகும். இந்தப் புனராய்வு கீனஸ்க்குப் பிந்திய பொருளாதார நிபுணர்களால் மேற்கொள்ளப்பட்டது. முதன் முதலில் காம்பிரிட்ஜ் பல்கலைக்கழக சிந்தனை முறையைச் சேர்ந்த ஜோன் ராபின்சன், பியரோ ஸ்ராஃப்வா, நிக்காலஸ் கால்டோர் ஆகியோராலும் அவர்களுடைய சீடர் களாலும் தொடங்கப்பட்டது. இந்தப் போக்கை ஆராய்ந்த பொருளாதார வல்லுநர்கள் பல்வேறு அணுகுமுறைகளை ஒன்றிணைத்து, ரிக்கார்டோ, கீனஸ் ஆகியோரின் அணுகு முறை; மார்க்சீய சமூக அணுகுமுறையின் சிலகூறுகள் ஆகியவற்றை ஒன்றிணைத்து மதிப்பு மற்றும் இலாபங்களைப் பற்றிய கோட்பாடுகளையும் மேம்பாடடையச் செய்து வருகின்றனர். அவர்கள் மரபுவழியாக இரண்டு அடிப்படைப் பிரிவுகளாக விளங்கும் பேரியல் பொருளாதாரக் கோட்பாடு களையும், நுண்ணியல் பொருளாதாரக் கோட்பாடுகளையும் நீக்கிவிட்டு பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்தை மறுசீரமைக்கவும் முயன்று வருகின்றனர்.

பூர்ஷ்வா அரசியல் பொருளாதார நெருக்கடியின் ஒரு முக்கியமான விளைவு மார்க்சீய சிந்தனை முறையின் செல்வாக்கு வளர்ந்து வருவதேயாகும். மார்க்சீய சிந்தனை முறையின் செல்வாக்கின் கீழ், இடதுசாரி முற்போக்கான போக்குகள், தோன்றியுள்ளன.

இடதுசாரி முற்போக்கு அரசியல் பொருளாதாரம் 1960 களின் இரண்டாவது பாதிப்பகுதியில் மாணவர் களிடையே ஏற்பட்ட எழுச்சியின் செல்வாக்கினாலும், புதிய

இட துசாரி இயக்கத்தின் செல்வாக்கினாலும் தோன்றி அது அனைத்து முதலாளித்துவ நாடுகளுக்கும் பரவியது. பூர்ஷ்வா அரசியல் பொருளாதார நெருக்கடியைப்பற்றி சில இளம் பல்கலைக்கழகப் பொருளாதார அறிஞர்களுடைய கண்ணோட்டங்களைப் படம் பிடித்துக் காட்டியதோடு, வாழ்க்கையின் அனைத்துப் பகுதிகளிலும் நிலவிய நெருக்கடி நிகழ்ச்சியின் விளைவுகளைப் பிரதிபலித்தது அத்துடன் அது சோஷலிஸ்ட் நாடுகளின் வரலாற்று அனுபவங்களைப் பற்றிப் பரவி வரும் அறிவையும் தெளிவாகக் காட்டியது.

இடதுசாரி முற்போக்குப் பொருளாதார நிபுணர்களின் அணுகுமுறை முதலாளித்துவத்தை முழுவதுமாக மறுத்தல் என்னும் செயலால் சிறப்புற்று விளங்குகிறது. அவர்களுடைய தாக்குதல்கள் பெரும்பாலும் முதலாளித்துவ அமைப்பு முறை முழுவதையும் எதிர்த்துத்தான் தொடுக்கப் பட்டுள்ளனவே தவிர, தனிப்பட்ட நிறுவனங்களையோ அல்லது தனிப்பட்ட முரண்பாடுகளை எதிர்த்தோ தொடுக்கப்படவில்லை. அவர்கள் பூர்ஷ்வாக்கள், சோஷியல் டைமாக்கிரேட்டுகள் ஆகியோரின் சீர்திருத்தங்களில் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. மேலும் அவர்கள் அரசு அதிகாரம், அரசு கட்டுப்பாடுகள் ஆகியவற்றின் சூட்சுமங்களை மேம்பாடடையச் செய்வதன் மூலம், முதலாளித்துவத்தை, ஒரு நிலையான பயனுள்ள பொருளாதார அமைப்பு முறையாக மாற்றியமைக்க முடியும் என்னும் கருத்தை முழுதும் மறுக்கிறார்கள்.

இடதுசாரி முற்போக்குப் பொருளாதாரத்தின் மற்றொரு இயல்பு சோவியத் ஒன்றியத்தில் நிலவுகிற சமூக அமைப்பு முறைக்கும், பிறசோஷலிஸ்ட் நாடுகளில் உள்ள சமுதாய அமைப்பு முறைக்கும் மாற்றாக அவர்கள் கருதுகிற ஒரு சோஷலிஸ்ட் அமைப்பு முறைக்கு முதலாளித்துவம் இடம்கொடுத்து விலகும், என்ற கருத்துத்தான்.

பூர்ஷ்வாக்களின் அரசியல் பொருளாதார நெருக்கடியால் அறநெறிகள் பற்றிய மறுமதிப்பீடு பல்வேறு வகையான

தடைகளால் இடையூறு செய்யப்படுகிற, முரண்பட்ட வேதனை மிகுந்த நிகழ்ச்சிப் போக்காக விளங்குகிறது. முதலாவதாக, சிந்தாந்த இடையூறுகள்; இரண்டாவது, ஒவ்வொரு கொடுக்கப்பட்ட கால இடைவெளியிலும், அறிவின் புறவயக் கட்டுப்பாடுகளிலிருந்து தோன்றுகிற இடையூறுகள்; மூன்றாவது, அகவய இடையூறுகள். பொருளாதார இயலில் ஒரு நிறுவனத்திற்கு அதனுடைய மரபு வழியான கண்ணோட்டங்களை விட்டுக் கொடுப்பது என்பது இயலாத செயல் ஆகும். இதைத்தவிர இப்பொழுது இன்றியாமையாததாக உள்ள அறநெறிகளை மறுமதிப்பீடு செய்வது 1930 களில் கீனஸ் உடைய புரட்சி என அழைக்கப் படுகிறதைக் காட்டிலும் பொருளில் சிறிதும் குறைவில்லாததாக இருக்க வேண்டும், பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்தின் புதிய மரபுவழி நுண்ணியல் பொருளாதார அடித்தளத்தை அப்படியே வைத்துக் கொண்ட கீனஸ் உடைய பேரியல் பொருளாதாரக் கோட்பாடுகளின் தோற்றம்.

இன்றைய அறநெறிகளை மீண்டும் மீண்டும் மதிப்பீடு செய்வது, வீச்சில் ஒரு எல்லைக்குட்பட்டதாயிருப்பினும் உலகின் முன்னேற்றம் ஏற்படும் பொழுது பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்தின் கட்டமைப்பிற்குள் உள்நாட்டுக் கோட்பாடு மற்றும்கொள்கை வேறுபாடுகள் தீவிரமடைந்து பல்வேறு பொருளாதார நிபுணர்களின் கொள்கைகளின் வண்ணங்கள் வளர்ந்துவரும்.

ஐ. எஸ். காரோலேவ்,
வேட்பாளர், விஞ்ஞானம்-பொருளாதாரம்
துறைத்தலைவர், உலகப் பொருளாதாரம் மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய நிறுவனம்.
விஞ்ஞான கலைக்கழகம், சோவியத் ஒன்றியம்.

## பணவியல் உறவுகளின் செயற்களத்தில் அரசு ஏகபோகக் கட்டுப்பாட்டின் நெருக்கடி

1970 களில் பெரும்பாலான முதலாளித்துவ நாடுகள் அனுபவித்த பொருளாதார மற்றும் சமூக இன்னல்கள் அரசுகளுக்கிடையே நிலவுகிற முரண்பாடுகளின் வளர்ச்சியையும் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் வெளிப் பொருளாதார உறவுகள் தொடர்பான துறையில் ஒருபெரும் போட்டியையும், உலகச் சந்தைகளில் போட்டியைத் தீவிரமாக்கியதையும், காப்புக் கொள்கைப் போக்குகளைத் தீவிரப்படுத்துவதையும் தோற்றுவித்தது. இந்த முரண்பாடுகள் மிகவும் தீவிரமாக வெளிநாட்டு வாணிகத்தையும் விஞ்ஞான - தொழில் நுட்பப் பரிமாற்றத்தையும், மூலதனம் ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்படுவது, தொழிலாளர்களின் இடப் பெயர்ச்சி, பொருளாதாரத் துறையின் பிற வெளியுலகத் தொடர்புகளின் பிறஉருவங்கள் ஆகியவற்றின் இடையீட்டுச் சாதனத்தின் சூட்சுமமாகப் பங்காற்றுகிற பணவியல் உறவுகளில் ஒருவேளை இந்த முரண்பாடுகள் தீவிரமாக வெளிப்பட்டன.

பணவியல் உறவுகள் உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தின் மேல் கட்டமைப்பின் ஒரு இனமாகும். அவைகளின் வளர்ச்சி, உற்பத்தியின் தேவைகளாலும், பொருளாதாரப் பரிவர்த்தனைகளின் தேவைகளாலும் நிர்ணயிக்கப் பெறுகின்றன. உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தில் மிக அதிகமான அளவு ஒருசீரற்ற தன்மைக்கு வழி வகுத்த 1970 களில் ஏற்பட்ட நெருக்கடி நிகழ்ச்சி (அனைத்திற்கும் மேலாக ஆற்றல் நெருக்கடி) சர்வதேச நிதிநிலையில் ஒரு உறுதியற்ற தன்மையை மிக அதிக அளவிலும், பலமுதலாளித்துவ நாடுகளிலும், வளரும் நாடுகளிலும் தொடர்ந்து பல ஆண்டுகளில் பாதகமான பன்னாட்டுச் செலுத்தல் நிலைமைக்குப், இதுவரை கண்டிராத சர்வதேசக் கடன் சுமை வளர்ந்து பெருகியதற்கும் வழி வகுத்தது.

அதேவேளையில் பணவியல் உறவுகளே, மறுஉற்பத்தி நிகழ்ச்சிப் போக்கின் போக்கையும், அமைப்பையும், சர்வதேசப் பொருளாதார சுழற்சியின் செயல்திறனையும் பாதிக்கின்றன. 1970 களின் தொடக்கத்தில் இரண்டாவது உலகப் பெரும்போர் முடிந்தவுடன் நிறுவப்பட்ட பிரெட்டன் வுட்ஸ் மாநாட்டின் நிதியியல் முறை தோல்வியடைந்தது. 1971 இல் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மைய வங்கிகள் வைத்திருந்த டாலர்களை எவ்விதத்தடையுமின்றி தங்கமாக மாற்றிக் கொள்வதை நிறுத்தியது, தங்கத்திற்கு நிலையான விலையை ரத்து செய்தது, மிதக்கும் பரிவர்த்தனை முறைக்கு மாறியது ஆகியவற்றால் விளைந்தன). முதலாளித்துவப் பொருளாதாரத்தில் பணவீக்க நிகழ்ச்சிப் போக்கை மிக அதிகமான விரைவாக்கியது. அவை படுமோசமான நிலைகளை தோற்றுவிப்பதற்கு இன்றியமையாத முன் நிபந்தனைகளாக விளங்குகின்றன.

இந்தச் சூழ்நிலைகளில் மேலைநாடுகள், பணவியல் உறவுகளைக் கட்டுப்படுத்தும் புதிய அமைப்பு முறையின்

வளர்ச்சியை விரைவுபடுத்துவது இன்றியமையாததாக ஆயிற்று. 1976 ஜனவரியில் கிங்ஸ்டனில் ஜமெய்க்கா) நடந்த சர்வதேசப் பொருளாதார நிறுவனத்தின் (IMF) இடைக்காலக் கமிட்டியின் கூட்டத்தொடரில் பிரெட்டன் வுட்ஸ் அமைப்பு முறையின் முக்கியமான பல அடிப்படைக் கொள்கைகளைத் திருத்துவது என்று ஏற்றுக் கொள்ளப் பட்டது பின்னர் ஜமெய்க்கா உடன்பாடு என்று அழைக்கப் படுகிற உடன்பாட்டை 1978 ஏப்ரல் 1-ம் தேதியிலிருந்து நிறைவேற்றுவது என்பது முதலாளித்துவத்தின் சர்வதேசப் பணவியல் அமைப்பு முறையின் வளர்ச்சியில் புதிய ஒரு படிநிலையின் தொடக்கமாக விளங்கியது.

ஜமெய்க்கா உடன்பாடு பிரெட்டன்வுட்ஸ் உடன்பாட்டி லிருந்து கீழ்க்கண்ட செயல்முறை பற்றிய கொள்கைகளில் வேறுபட்டதாக உள்ளது. 1. ஜமெய்க்கா அமைப்பு முறை தங்கத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல. 2. சுதந்திரமாக மாறிக் கொண்டேயிருக்கிற பரிவர்த்தனை மதிப்புகளை அது சட்ட பூர்வமாக்கியது. 3. முந்திய முறையைக் காட்டிலும் அதிகமாக இந்தப் புதிய அமைப்புமுறை சர்வதேசக் கணக்குத் தீர்க்கும் முறைகளை வேறுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்ததோடு, சர்வதேசப் பணவியல் அலகுகளைப் பயன்படுத்துவதை (அல்லது "தனிச்சிறப்பான பணம் பெறும் உரிமைகள்") விரிவு படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டிருந்தது. 4. பரிவர்த்தனை விகிதங்களின் மீது சர்வதேசச் செயல் முறைகளின் நெம்புகோல்களை வலிமையுறச் செய்தது.

ஜமெய்க்கா பணவியல் அமைப்பு முறை முக்கியமாக உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தின் மாறிக் கொண்டிருக்கும் சூழ்நிலைக்கு ஒத்திசைவானதாக உள்ளது. அது, அனைத்திற்கும் மேலாக முதலாளித்துவ உலகில் தன்னுடைய ஏகபோக நிலைகளை இழந்து வருகிறது என்பதையும், ஒப்பீட்டில் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் பங்கும் உயர்ந்திருக்கிறது என்பதையும் பிரதிபலிக்கிறது.

இன்றைய முதலாளித்துவ நாடுகளின் நிதியியல் உறவுகள், பணவியல் உறவுகள் ஆகியவற்றின் இன்றைய நிலைமையின் மிகவும் முக்கியமான, தனிச்சிறப்பான இயல்பு இந்தத் துறையில் அரசு ஏகபோகக் கட்டுப்பாடு தீவிரமாக்கப்பட்டிருப்பதுதான். சந்தை முறைகள் பயன் படுத்தப்படுவது, நாணய மாற்று விகிதங்களை ஒரே நிலையில் வைத்திருப்பதற்கு உதவவில்லை மிதக்கும் விகிதங்கள் சூட்சுமம் வெளிநாட்டு நாணய மாற்றுச் சந்தைகளில் குழப்பத்தை அதிகப்படுத்தியது முக்கியமான முதலாளித்துவ நாடுகளிடையே வாணிகப்போட்டி, பணவியல் போட்டி தீவிரமாவதையும், நாணயச் செலாவணிக் கூட்டுக்களை மற்றும் குழுக்களை அமைப்பதையும் ஊக்குவித்தது.

வெளிநாட்டு நாணயமாற்று வட்டத்தில் அரசு-ஏகபோகச் செயல்முறைகளை வலிமையுறச் செய்வது, பெரும்பாலான முதலாளித்துவ நாடுகளில் காணமுடிகிறது. தேசிய சர்வதேசிய மட்டங்கள் இரண்டிலும் அது பயன் படுத்தப்படுகிறது தேசிப மட்டத்தில், வெளிநாட்டு வாணிகத்தில் காப்பு நடவடிக்கைகளில் ஒரு பெருக்கம் ஏற்பட்டுள்ளது மூலதன இடப்பெயர்ச்சிக்குப் புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. பலம் குறைந்த செலாவணி முறையைக் கொண்ட நாடுகள் வெளிநாட்டு மூலதனத்தைக் கவர்வதற்கு, வட்டிவிகிதங்களைப் பயன் படுத்துவதை விரிவாக்கம் செய்துள்ளன.

அதே வேளையில் முதலாளித்துவ நாடுகள் பணவியல் பிரச்சினைகளை கூட்டாகச் சமாளிப்பதற்கான வழிகளைக் காண்பதற்குத் தொடர்ந்து முயன்று வருகின்றன. ஜமெய்க்கா உடன்பாட்டிற்குப் பின்னர், சர்வதேசப் பணவியல் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் கடன் கொடுத்து வாங்கும் வசதிகளைப் பெருக்குவதற்கான பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 1978 செப்டம்பரில் நடந்த சர்வதேச நிதிநிறுவனம், மறுசீரமைத்தல் மற்றும்

மேம்பாட்டிற்கான சர்வதேச வங்கி (JBRD) ஆகியவற்றின் கவர்னர்களின் 33-வது கூட்டத் தொடரில் சர்வதேச நிதி நிறுவனத்தின் உறுப்பினர்கள் பெறக் கூடிய தொகையின் அளவை 50 சதவிகிதமாக அதிகரிப்பது எனத் தீர்மானிக்கப் பட்டது. அதன் பொருள் அதனுடைய மூலதனத்தை 73,000 மில்லியன் டாலராக அல்லது 58,800 டாலர் தனிச் சிறப்பான பணம் பெறும் உரிமையாக (SDR)] ஆக்குவது என முடிவு செய்யப்பட்டது. 1979-ன் தொடக்கத்திலிருந்து விட்டவீன் நிதி, வளரும் நாடுகளுக்கு 7,750 மில்லியன் டாலர் தனிச் சிறப்பான பணம் பெரும் உரிமைகள் மூலதனத்துடன் செயல்படத் தொடங்கியது. மறுசீரமைத்தல் மற்றும் மேம்பாட்டிற்கான சர்வதேச வங்கியின் சொத்துக் களைப் பெருக்குவது பற்றிய உடன்பாடு ஏற்பட்டது. அதனுடைய மூலதனத்தை 80, 000 டாலராக அல்லது ஏறத்தாழ இரண்டு மடங்காக உயர்த்துவது என முடிவு செய்யப்பட்டது. ஒப்பீட்டு விலைகளில் கொடுக்கப்படக் கூடிய கடன்களின் பரிமாணத்தை ஓராண்டிற்கு 5 சதவிகிதம் அதிகப்படும்படி செய்வதற்கு வங்கிகளுக்கு இது உதவி செய்யும். ஒரு குறிப்பிட்ட அளவு இந்த நடவடிக்கைகள் அனைத்தும், புதிய சர்வதேசப் பொருளாதார ஒழுங்கமைப்பின் திட்டச் செயல்களில் சேர்க்கப்பட்டிருந்த வளரும் நாடுகளின் கோரிக்கைகளுக்கு ஏற்ப மேற்கொள்ளப் பட்டன. இந்தக் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்வதில் முதலாளித்துவத்தின் உலகப் பொருளாதார உறவுகளில் இந்த அமைப்புக்களின் கட்டுப்படுத்தும் திறனை உயர்த்து வதில் மேற்கத்திய நாடுகள் பெரிதும் நம்பிக்கை கொண்டிருந்தன.

சர்வதேச அரசு-ஏகபோக பணவியல் கட்டுப்பாட்டைத் தீவிரமாக்கும் இயல்பை சர்வதேசக் கணக்கிடும் நிறுவனங் களின் அலகுகள் அல்லது தனிச்சிறப்பான பணம் பெறும் உரிமைகள் ஆகியவற்றை விரிவாக்கம் செய்வதற்கான முயற்சிகள் காட்டுகின்றன. அவை வெளியிடப் படுவதைப் பற்றிய உடன்பாடு 1969இல் ஏற்பட்டது.

(சர்வதேச நிதி நிறுவனத்தின் முதல் திருத்தங்கள்). தனிச் சிறப்புப் பணம் உரிமைகள் வழங்கப்பட்டுள்ள எந்தநாடும் அதற்குத் தேவைப்படும் செலாவணியை அதனுடைய தனிச் சிறப்புரிமைக்குப் பதிலாக சர்வதேச நிதிநிறுவனத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். தனிச்சிறப்புப் பணம் பெறும் உரிமை மீதான இந்த உடன்பாடு செயல்படும் கால இடைவெளி அவை பணவியல் அமைப்பு முறையில் முக்கியமான இடம் வகிக்கும் என்ற நம்பிக்கையை நியாயப் படுத்தவில்லை. 197௺ டிசம்பர் 31இல் தனிச்சிறப்புப் பணம் பெறும் உரிமைகளின் 9,300 மில்லியன் அலகுகள் வெளியிடப் பட்டன. ஆனால் அவற்றில் 3 மில்லியன் தான் பயன்படுத்தப் பட்டன. அரசு அதிகார பூர்வமான கையிருப்புகளில் அவைகளின் விகிதம் 4 சதவிகிதத்திற்கு மேலாக இல்லை.

தனிச்சிறப்புப் பணம் பெறும் உரிமைகளைப் பயன் படுத்துவதைப் பெருக்குவதற்கான முயற்சிகள் இப்பொழுது மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. 1979 லிருந்து 1981 க்குள் 12,000 மில்லியன் அலகுகளை வெளியிடுவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அவற்றின் பயனின் வீச்சு விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்த உடன்பாட்டை ஏற்றுக் கொண்ட உறுப்பினர் நாடுகளிடையே தனிச் சிறப்பான பணம் பெறும் உரிமைகளை மாற்றிக் கொள்வதை இப்பொழுது சர்வதேச நிதிநிறுவனம் அனுமதிக்கிறது. தனிச்சிறப்பான பணம் பெரும் உரிமைகளில் காப்பு நிதியாக வைத்திருப்பதனால் ஒருவருக்கு ஏற்படும் பலனை உயர்த்துவதற்கு அந்த வைப்புகளுக்குக் கொடுக்கப்படும் வட்டி விகிதம் சந்தையில் நிலவுகிற வட்டி விகிதத்திற்கு ஏறத்தாழ சமமாக ஆக்கப்பட்டுள்ளது. 1979 மார்ச் மாதத்தில் நடந்த சர்வதேச நிதிநிறுவனத்தின் இடைக்காலக் கூட்டத் தொடரில் ஏற்றுக் கொள்ளப்பட்ட முடிவின்படி தனிச்சிறப்பான பணம் பெரும் உரிமைகளில் அரசு கடன் எழுப்ப முடியும்; மற்றும் வெளி நாட்டுக் கடன்களைச் செலுத்த அதைப் பயன்படுத்த முடியும். அவை கடன் களுக்கு ஈடாகக் காட்டப்பட முடியும்.

அதே வேளையில் சர்வதேச நிதிநிறுவனத்தின் விதிகளுக்கு இரண்டாவது தொகுதி திருத்தங்கள் தொடர்பான செயல்களின் தொடக்கத்திற்கு மேல்நாடுகள் பணவியல் உறவுகளைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரு நிரந்தரமான அமைப்பு முறையொன்றை நிறுவுவதில் வெற்றியடைந்து விட்டனர் எனப்பொருள் அல்ல. ஜமெய்க்காவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட அடிப்படையான கொள்கைகள் முரண்பட்டவையாயுள்ளன. அவை முக்கியமான பிரச்சினைகளைத் தீர்த்துவிடவில்லை. அனைத்திற்கும் மேலாக சர்வதேச நாணயங்களைப் பணமாக்குவதை எளிதாகவோ அல்லது நாணய மாற்றை நிலையானதாக ஆக்கவோ இயலவில்லை.

பிரெட்டன்வுட்ஸ் அமைப்பு முறையின் முக்கியமான கோட்பாடுகளில் ஒன்று நாணயங்களின் மதிப்பையும், மாற்றுமதிப்பையும் நிர்ணயிப்பது ஆகும். சர்வதேச நிதி நிறுவனத்தின் உறுப்பினர்கள் அவர்களுடைய நாணயங்களின் பரிவர்த்தனை விகிதம் நிறுவப்பட்ட மாற்று மதிப்பிற்கு 1 சதவிகிதம் கூடுதலாக இருந்தாலும், குறைவாக இருந்தாலும் ஆதரிக்க வேண்டியது இன்றியமையாததாக இருந்தது. நாணயத்தின் மதிப்பில் மற்றும் சர்வதேச நிதி நிறுவனத்தின் உடன்பாட்டினாலேயே அனுமதிக்கப்பட்டது. நிலையான நாணயமாற்று விகிதமுறை 20 ஆண்டுகளுக்கும் மேலாகப் பேணிக்காப்பாற்றப்பட்டு வருகிறது. ஆனால் உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள பெருகிவரும் ஒரு சீரற்ற தன்மையும், பன்னாட்டு செலுத்தல் நிலையில் உயர்ந்து வரும் நிலையற்ற தன்மையும், முதலாளித்துவ நாடுகளை நிலையான விகிதங்களைக் கைவிடும்படி செய்து ''மிதக்கும்'' விகிதமுறைக்கு மாறும்படியாக, அதாவது அவர்களுடைய நாணயங்களின் மாற்று விகிதங்களை ஆதரிக்கும் கடமையைக் கைவிடும்படி செய்துள்ளது.

முக்கியமாக, பொருளாதார அடிப்படையில் கூறினால் நிலையான நாணயமாற்று விகிதமுறை சீர்குலைவதற்கு

இரண்டு காரணிகள் அடிப்படையாகத் திகழ்கின்றன. முதலாவதாக நிலையான நாணயமாற்றுவிகித முறையின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட பணவியல் உறவுகள், உலகப்பொருளாதாரத்தில் மேற்கு ஐரோப்பா, ஜப்பான் ஆகிய நாடுகளின் வளர்ந்துவரும் பங்கின் விளைவாகப் போருக்குப் பிந்திய காலத்தில் நிகழ்ந்துள்ள உலக வாணிகத்திலும், மூலதன இடப்பெயர்ச்சியிலும் நிகழ்ந்துள்ள கட்டமைப்பு மாற்றங்களுக்கு ஒத்திசைவானதாக இல்லை. இந்த மாற்றங்கள் அமெரிக்க ஐக்கிய நாடுகளையும் அமெரிக்க டாலரையும் பெருமளவு பாதித்தன. இரண்டாவதாக 1960 லிருந்து அமெரிக்க ஐக்கிய நாட்டுப் பொருளாதாரத்தில் பணவீக்க நிகழ்ச்சிப் போக்கில் குறிப்பிடத்தக்க வேகம் இருந்தது. அது உலக சந்தைகளில் யு. எஸ். போட்டியிடும் நிலைகளில் மாற்றங்களை ஏற்படுத்தியது. அதன் பன்னாட்டுச் செலுத்தல் நிலையில் ஒரு பாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தியது.

நிலையான நாணயமாற்று வீதமுறை ஒரு குறிப்பிட்ட அளவு முக்கியமான முதலாளித்துவ நாணயமான அமெரிக்க டாலரின், நீண்ட காலம் தொடர்ந்து நிலவிய, அடிப்படையான உறுதியற்ற தன்மையின் காரணமாகவே குலைந்தது. அதனுடைய நிலையின் ஏற்றயிறக்கத்தின் பின்னாலிருந்தவை குறுகிய கால சந்தையால் நிர்ணயிக்கப் பட்ட காரணிகள் அல்ல. ஆனால் சர்வதேசப் போட்டியில் அமெரிக்கத் தொழிலின் வீழ்ச்சியை நோக்கிய நீண்டகால இயல்பும், உற்பத்திக் கருவிகளைப் புதுப்பிப்பதில் (குறிப்பாக மரபு வழியான தொழில்களில்) பிற்பட்ட தன்மையும், தூய மற்றும் நடைமுறையில் பயன்படும் ஆராய்ச்சித்துறையில் அமெரிக்கா கொண்டிருந்த சிறப்பு ஒப்பீட்டில் குறைந்து வந்ததுமே காரணங்களாகும்.

1973 மார்ச்சிலிருந்து 1979 மார்ச்வரை முதலாளித்துவ நாடுகள் மாறுகின்ற நாணயமாற்று விகிதத்திற்கு மாறிய போது "முக்கியமான முதலாளித்துவ நாடுகளின் (சுவிட்சர்

லாந்தையும் உள்ளிட்டு) நாணயங்களுடன் ஒப்பீட்டில் சர்வதேச வெளிநாட்டு நாணயமாற்றுச் சந்தைகளில் டாலர் சராசரி 13 சதவிகிதம் (JMF கணக்குப்படி) மதிப்பில் குறைந்தது. தனித்தனி நாடுகளின் நாணயங்களுடனான மாற்று விகிதத்தில் மாற்றம் ஒரே மாதிரியில்லாதிருந்தது. அதேகாலத்தில் பவுன் ஸ்டெர்லிங், கனடிய டாலர், இத்தாலிய லிரா ஆகிய நாணயங்களுடன் மாற்றிக் கொள்ளும்போது டாலர் மதிப்பில் உயர்ந்திருந்தது. எனினும் "வலிமைமிக்க" நாணயங்களுடன் மாற்றிக் கொள்ளும்போது சுவிட்சர்லாந்து பிராங்க், மேற்கு ஜெர்மன் மார்க், ஜப்பானிய யென்) அது குறிப்பிடத்தக்க அளவு பலமற்றதாகவேயிருந்தது. 1978 இல் மட்டும் மேற்கு ஜெர்மன் மார்க்குடன் ஒப்பிட்டால் 23 சதவிகிதமும், சுவிஸ் பிராங்குடன் ஒப்பிட்டால் 24 சதவிகிதமும், குறைந்தது. டாலரின் சராசரி இயல்பு வீழ்ச்சியுறுவதாகவே இருந்தாலும் தனித்தனிக் காலஇடைவெளிகளில் அதன் நாணயமாற்று விகிதம் கூடத்தான் செய்தது.

முக்கியமான முதலாளித்துவ நாடுகளின் நாணயங்கள் "மாறும்" நாணயமாற்று விகிதத்திற்கு மாறியது புறவயக் காரணிகளால் ஏற்பட்டதேயாகும். முதலாளித்துவ உலகப் பொருளாதாரத்தின் தனித்தனிப் பகுதிகளில் ஏற்பட்ட ஆற்றல் நெருக்கடி, பணவீக்க நிகழ்ச்சிப்போக்கு விரைவு படுத்தப்பட்டது போன்ற சமநிலை கேடுற்ற நிலை உயர்ந் திருந்த சூழ்நிலையில், சர்வதேசக் கணக்குத் தீர்த்தலில், ஒப்பீட்டில் சமநிலையைப் பேணிக்காக்க இதுதான் ஒரே ஒரு வழியாக இருந்தது.

இந்த "மாறும்" நாணயமாற்றுமுறை புகுத்தப்பட்டது பன்னாட்டுச் செலுத்தல் நிலையைத் தானாகவே சரிசெய்து விடும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அது நடைபெற வில்லை என உண்மை நிகழ்ச்சிகள் நிரூபித்தன. மேலும் இந்தப் புதிய முறை சமநிலையை உறுதிப்படுத்தவில்லை. முதலாளித்துவப் பொருளாதாரத்தில் பணவீக்க நிகழ்ச்சிப் போக்கை வலிமையுறச் செய்வதற்கு வழி செய்தது.

அந்த வேளையில் "மாறும்" நாணயமாற்றும் முறை அறிமுகப்படுத்தப்பட்டதன் விளைவாக, நெருங்கிய

வாணிகத் தொடர்பும், பொருளாதார உறவுகளும் கொண்டிருந்த நாடுகளிடையே நாணயக்கூட்டணிகளைத் தோற்றுவிக்கும் ஓரியல்பு எழுந்தது. அது முக்கியமான வாணிக பங்காளிகளாக இருந்த நாடுகளின் நாணயமாற்று விகிதங்களுடன் "இணைப்பதன்" மூலம் ஒரு குறிப்பிட்ட நிலையான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு உதவி செய்தது.

இந்த அடிப்படையில் பல "குழுக்களின் மாறும்" நாணயமாற்று முறைகள் செயல் படுகின்றன. உதாரணமாக சர்வதேச நிதிநிறுவனத்தின் 40 உறுப்பினர் நாடுகள் டாலருடன் தங்களுடைய நாணயத்தை இணைத்துள்ளனர். இந்த நாணயங்கள் ஐரோப்பிய நாணயங்களுடனும், ஜப்பானிய யென்னுடனும் உள்ள மாற்று விகிதத்தில் தொடர்ந்து மாறிக்கொண்டேயிருந்த போதிலும் அவர்களுக்கிடையே நடைபெறும் வாணிகத்திலும், நாணயமாற்று விகிதங்கள் மாறாமலேயேதான் இருந்தன. வேறு 21 நாடுகள் (குறிப்பாக முன்னாள் பிரிட்டிஷ், பிரெஞ்சு, போர்ச்சுகீசிய காலனிகள்) தங்களுடைய நாணயங்களை முறையே பவுன் ஸ்டெர்லிங்கிற்கும், பிரெஞ்சு பிராங்கிற்கும், போர்ச்சுகீசிய எஸ்குடோவிற்கும் "இணைக்கப்பட்டுள்ளன".

அண்மைக் காலத்துப் புதிய நிகழ்ச்சி தேசிய நாணயங்களை சர்வதேசக் கணக்கீட்டலகுகளுடன் "இணைப்பதே" யாகும் (தனிச்சிறப்பான பணம் பெறும் உரிமை அல்லது அடிப்படையான வாணிக பங்காளிகளாக விளங்கும் பிற நாடுகளின் நாணயங்களின் தொகுதிகளுடன்).

நாணயமாற்று விகிதங்களின் நிலையான தன்மை பற்றிய விஷயத்தை முடிவு செய்வதற்கான அடுத்த முயற்சி (பரஸ்பர வாணிக எல்லைகளுக்குள்ளாவதும்) யும், டாலரின் மதிப்புக் குறைவதனால் ஏற்பட்ட எதிர்மறை விளைவுகளைக் குறைப்பதற்கான முயற்சியும் பொதுச் சந்தையால் மேற்கொள்ளப்பட்டது. 1978 ஜுன் 1 இல் பிரெமென்னில் நடந்த ஐரோப்பிய பொருளாதார சமூகத்தைச் சேர்ந்த நாடுகளின் அரசுகளின் தலைவர்களின் கூட்டத்தில் மேற்கு ஜெர்மனியின் தலைவர் ஹெல்மட் ஸ்மிட்டும், பிரான்சு

நாட்டு ஜனாதிப்தி கிஸ்கார்ட் எஸ்டாங்கும் ஐரோப்பிய பணவியல் அமைப்பு முறை ஒன்றை முன்வைத்தனர். அதன்படி ஒருவருடைய நாணயம் பிறநாட்டு நாணயங்களுடன் நாணயமாற்று வீதத்திற்குக் கடுமையான மாறும் அளவுகளை (அதாவது 2 சதவிகிதம் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ) நிர்ணயித்தனர். இந்த இலட்சியத்திற்காக, ஐரோப்பிய பொருளாதார சமூகத்தைச் சேர்ந்த பாங்கிகளால் வெளிநாட்டு நாணயமாற்றுச் சந்தைகளில் பரஸ்பரம் தலையிடுவதன் வட்டத்தின் விரிவாக்கம் ஒன்று எதிர்பார்க்கப்பட்டது. மேலும் ஒரு நிதி நிறுவனம் நிறுவுவதையும், ஒரு புதிய சர்வதேசிய கணக்கீட்டு நாணய அலகைத் தோற்றுவிப்பதையும் (ஐரோப்பிய நாணய அலகு) (ECU) எதிர் நோக்கியது.

1979 இல் இந்தப் புதிய பணவியல் அமைப்பு முறை நடைமுறைக்கு வந்ததற்கு உறுப்பு நாடுகளிடையே நிலவிய படுமோசமான முரண்பாடுகள் நீக்கப்பட்டு விட்டன என்று பொருளல்ல. அது இன்னும் தெளிவற்றதாகவே உள்ளது. உதாரணமாக ஒன்பது நாடுகளின் தேசிய நாணயங்களின் வாங்கும் சக்தியைக் குறைப்பதன் வேகத்தில் இப்போது நிலவுகிற வேறுபாட்டை எவ்வாறு வெல்வது, ஏனெனில் ஒரு மாறாத நாணயவீதம் மட்டுமே, உள்நாட்டு மறுஉற்பத்தி நிகழ்ச்சிப் போக்குகளில் ஆழ்ந்து வேரூன்றியுள்ள பணவீக்கத்தின் காரணத்தை நீக்கிவிட முடியாது. இந்தப் புதிய முறையின் வழக்கமான செயல் முறைகள் இன்று இருப்பதைக் காட்டிலும் நிதியியலிலும், கடன் வசதிகளிலும், வரிமுறையிலும், பொதுச் சந்தையின் வரவு செலவுக் கொள்கைகளிலும், அதிகமான அளவு ஒத்துழைப்பும், வருவாய்களைச் சமனப்படுத்துவதும், நுகர்வின் அமைப்பைச் சமனப் படுத்துவதும் இன்றியமையாததாக உள்ளன.

தனித்தனியாக இந்த ஒன்பது நாடுகளிலும் இம்மாதிரியாக மேற் கொள்ளப்படும் ஒத்துழைப்பின் சமுதாய விளைவுகள் ஒரே தன்மை வாய்ந்தனவாக இராது.

பலம் இல்லாத நாணயங்களையுடைய நாடுகளுக்கு (இத்தாலி, பிரான்ஸ் ஆகிய நாடுகளையும் உள்ளிட்ட) பாதகமான பன்னாட்டுச் செலுத்தல் நிலையை நீக்குவது என்பது தனிநபர் நுகர்வின் தரத்தைக் குறைப்பதை உள்ளடக்கியதாக இருக்கிறது. சாதாரணமாக அதைக் கீழ் மட்டத்தில் உள்ள உழைக்கும் மக்களின் தியாகத்தாலேயே தான் அடைய முடியும். பொருளாதார சமுதாயத்தைச் சேர்ந்த நாடுகளில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள்—தொழிலாளிகளின் தோளின்மீதுதான் நாணயத்தின் உறுதியான தன்மையை பேணிக்காப்பதனால் தோன்றும் சுமை ஏற்றப்படும் என்பதை நன்கறிந்து ஐரோப்பிய பணவியல் அமைப்பு முறையில் பங்கு கொள்வதை எதிர்த்து வருகிறார்கள்.

மேற்கு ஐரோப்பிய ஏகபோகங்களைப் பொருத்தவரை, இந்தப் புதிய பணவியல் முறையில் அவர்கள் கொண்டுள்ள ஆர்வம், அவர்களுடைய தேசிய இணைப்புகள் எவ்வாறிருப்பினும் மிகவும் தெளிவாகவே தெரிகிறது. அதாவது சமுதாயத்திற்குள் மூலதனத்தைப் பரிமாறிக் கொள்வதற்கான சூழ்நிலைகளை மேம்பாடடையச் செய்வதும், வெளிநாட்டு உற்பத்திப் பொருட்களோடு ஒப்பிட்டால், மேற்கு ஐரோப்பிய சந்தையின் போட்டியிடும் தன்மையை மேம்பாடடையச் செய்வதுமேயாகும்.

ஐரோப்பிய பணவியல் முறையை உருவாக்கிய முதலாளித்துவ நாணயத்தின் முரண்பாடுகளின் வளர்ச்சியின் ஒரு புதிய நிலையைத் தொடங்கியுள்ளது இந்தப் படி நிலையின் முக்கியமான இயல்புகளில் ஒன்று முன்னெப் போதைக் காட்டிலும் இப்போது முதலாளித்துவ நாடுகள் தேசியப் பணவியல் கொள்கைகளை நிறைவேற்றுவதில் உள்நாட்டு சமூகப் பொருளாதாரக் காரணிகளுக்கு முன்னிடம் கொடுப்பதற்கு நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். அது வெளிநாட்டுப் பொருளாதார உறவுகள் பற்றிய முக்கிய பிரச்சினைகள் பற்றி, பெரிய முதலாளித்துவ நாடுகளிடையே நிலவுகிற வேறுபாடுகளை மேற்கொண்டு தீவிரமடையச் செய்வதை முன் கூட்டியே எதிர்பார்க்கிறது.

---

Code No. B 254

# எமது சிறந்த நூல்கள்

**யு. ஏ. காரின்**

இயங்கியலின் அடிப்படைகள்

**எல். என். சுவாரோவ்**

லெனினியக் கட்டத்தில்
மார்க்சியத் தத்துவம்

**எஃப். வி. கான்ஸ்டாண்டினோவ்** (தொகுப்பு)

மார்க்சிய லெனினிய தத்துவ ஞானத்தின்
அடிப்படைகள் புத்தகம் 1
புத்தகம் 2

**ஏ. பி. ஷெப்டுலின்**

மார்க்சிய-லெனினிய தத்துவம்

**யு. ஜி. சயுஷ்கின்**

பொருளாதாரப் புவியியல்

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிட்.,**
**சென்னை-600 098.**

மேலட்டை அச்சிட்டோர் :
**பாவை பிரிண்டர்ஸ் (பி) லிமிடெட், சென்னை-14.**